Shri Kanchi Maha Periyava Thiruvadigal Charanam

தெய்வத்தின் குரல்
(eBook)

மூன்றாம் பாகம்

Compiled by: திரு.ரா. கணபதி

E book form by K.Raman
(kramansmail@gmail.com)



CONTENTS

1-மங்களாரம்பம்

1.1-பிள்ளையார்சுழி

எதை எழுத ஆரம்பித்தாலும் முதலிலே பிள்ளையார் சுழி போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்கிறோம். பெரிய காவியமாகத்தான் இருக்கவேணும் என்றில்லை; ஒரு போஸ்ட் கார்டானாலும் ஸரி, கடை ஸாமான் லிஸ்டானாலும் ஸரி, முதலில் பிள்ளையார் சுழி போட்டு விட்டுத்தான் எழுத ஆரம்பிக்கிறோம். எழுதுவது மட்டுமில்லாமல் எந்தக் காரியமானாலும் ஆரம்பிக்கிற போது அது விக்நமில்லாமல் பூர்த்தியாவதற்கு மஹாகணபதியைக் கொண்டு வந்துதான் ஆகணும். அவரைக் ஸ்மரிக்காமல் எந்தக் காரியமுமே இல்லையானாலும், இந்த எழுத்துக் காரியத்தில் அவரை ஸ்மரிக்கிறோம் என்பது **Written proof** –ஆகவே (எழுத்து மூல நிரூபணமாகவே) பிள்ளையார் சுழியில் தெரிகிறது.

பின்னாடி நாம் எழுதுகிற விஷயம் 'சுழித்து'ப் போகாமலிருப்பதற்காக முன்னாடி பிள்ளையார் சுழி போட்டு விடுகிறோம்.

பிள்ளையார் சுழி போடாமல் 'ஓம்' போடுகிறவர்களும் கிரந்தம், தமிழ் இரண்டிலுமே அந்த ஓமுக்கும் சுழித்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமில்லை, இந்த ப்ரணவ ஸ்வரூபமும் பிள்ளையார்தானே?

சுழி என்பது வளைசல்; 'வக்ரம்' என்பார்கள். பிள்ளையாரின் தும்பிக்கை நுனி வளைந்து சுருட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் 'வக்ரதுண்டர்' என்றே அவருக்கு ஒரு பேர். பிள்ளையார் சுழி போடுவதில் பாதியாக இருக்கிற வளைசல் பூர்ணமாகிவிட்டால் முழு வட்டம். பூலோகமும், பல லோகங்களும், நக்ஷத்ர மண்டலங்கள் அடங்கியுள்ள பிரம்மாண்டமும் எல்லாமே வட்டமானவைதான். 'அண்டம்' என்றாலே முட்டை என்றுதான் அர்த்தம். முட்டை வட்ட வடிவந்தானே?

இந்தப் பூர்ணரூபத்தையே ஸைஃபருக்கும் சொல்வதுதான் ஆச்சரியம்! ‘பரீக்ஷையில் கோழி முட்டை’ என்கிறோம். ‘பூர்ணமும் பிள்ளையார்தான், சூன்யமும் பிள்ளையார்தான். உள்ளது, அல்லது எல்லாம் பரமாத்மாதான்’ என்கிற மஹா தத்துவத்தையே சுழி காட்டுகிறது. காரியத்தை ஸஃபைர் பண்ணிக்கொண்டு வருகிறவனை, ”என்னடா சுழி!” என்று ப்ரக்ருதத்திலும் [நடைமுறையிலும்] சொல்கிறோம். கையிலிருக்கிற மோதகத்தில் தித்திப்புப் பூர்ணத்தை வைத்துக்கொண்டு தன்னுடைய பூர்ணத்வத்தை ‘டெமான்ஸ்ட்ரேட்’ பண்ணும் பிள்ளையாருக்கே சுழி போடுகிறோம். இந்தச் சுழி மற்றச் சுழியையெல்லாம் முழுசாகப் பண்ணிவிடுவது.

வளைசலான கொம்போடு ஆரம்பிக்கிற பிள்ளையார் சுழி, கொஞ்சம்கூட வளையாத நேர்கோட்டோடு முடிகிறது. பிள்ளையார் பூர்ணம், சூன்யம் இரண்டுமாக ஆனாற்போலவே வக்ரமானதும் அவர்தான், ஆர்ஜவமானதும் [நேரானதும்] அவர்தான் என்பது தாத்பரியம். வக்ர குணத்துக்கு நேரெதிரானதை ஆர்ஜவம் என்பார்கள். தமிழில் இதைத்தான் நேர்மை என்பது. இங்கிலீஷிலும் straightness, straight- forward என்கிறார்கள். குணம் குணஹீனம் எல்லாம் ஒரே நிர்குண பரமாத்மாவின் வேஷங்கள்தான்.

‘உ’ என்பது ப்ரணவத்தின் இரண்டாவதான நடு அக்ஷரம். அ-உ-ம என்ற மூன்றும் சேர்ந்தே ‘ஓம்’ காரமான ப்ரணவம். விஷயம் தெரிந்தவர்கள் இதை இங்கிலீஷில் **Om** என்று எழுதாமல் **Aum** என்றே எழுதுவார்கள். **‘அ’** என்பது ஸ்ருஷ்டி; பிரம்மா. **‘உ’** என்பது பரிபாலனம்; விஷ்ணு. **‘ம’**ஸம்ஹாரம்; ஈச்வரன். த்ரிமூர்த்திகளும் தோன்றியது ஏக பராசக்தியால்தான். அதனால் அவள் ப்ரணவ ஸ்வரூபிணி. ஆனாலும் ஓமை தேவீ ப்ரணவம் என்று சொல்வதில்லை. ‘உமா’ என்பதே தேவீ ப்ரணவம் என்பார்கள். அ-உ-ம என்ற சப்தங்களே மாறி ‘உமா’ வில் உ-ம-அ என்ற இருக்கின்றன அல்லவா? ஓமில் ஸ்ருஷ்டி பீஜமான **‘அ’** முதல் எழுத்தாயிருக்க, ‘உமா’விலோ ஸ்திதி [பரிபாலன] **பீ**ஜமான **‘உ’**என்பது முதல் எழுத்தாயிருப்பதால்தான், அன்போடு ரக்ஷித்து, காத்து, பரிபாலனம் பண்ணும் அம்பாளின் ப்ரணவம் **‘உ’**வில்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று காரணம் சொல்லி, இதனாலேயே ‘உமா’ என்பதை அம்பாளுடைய ப்ரணவமாகக் கூறுகிறார்கள்.

அ-உ-மவில் ஹ்ருதயம் மாதிரி நடுவேயிருப்பது 'உ'. அதுவே கருணாமயமாகக் காப்பாற்றுகிற தேவீ ப்ரணவத்தில் ப்ரதம ஸ்தானத்திலிருக்கிறது. ப்ரணவ ஸ்வரூபப் பிள்ளையார் 'அ'வும் 'ம'வும் சேராமல் இந்த 'உ'காரமாக மட்டுமே பிள்ளையார் சுழியில் இருப்பதைப் பார்க்கும்போது ஒன்று தோன்றுகிறது. அதாவது அவர் "தாயைப் போலப் பிள்ளை" மட்டுமில்லை; தாயாருக்கும் ஒரு படி மேலே என்று தோன்றுகிறது. எப்படி?அவளும் ரக்ஷிக்கிற 'உ'வுக்குப் பின்னாடியாவது ஸம்ஹார 'ம' ஸ்ருஷ்டி 'அ' இவற்றையும் வைத்தக் கொண்டிருக்கிறாள். ஆனால் பிள்ளையோ எப்போது பார்த்தாலும் எல்லாரையும் ரக்ஷிப்பது தவிர வேறு ஜோலியே வைத்துக்கொள்ளாத பூர்ண கருணாமூர்த்தியாக இருந்துகொண்டு 'உ' ஒன்றோடேயே நின்றுவிடுகிறார்.

ப்ரணவத்தில் 'உ' விஷ்ணுவின் ரூபம். உமாவும் விஷ்ணு ரூபிணியாக, நாராயண ஸஹோதரியாக, 'விஷ்ணு மாயா விலாஸினி'யாக, 'நாராயணி' என்றே பெயர் படைத்தவளாயிருக்கிறாள். பிள்ளையாரைப்பற்றி ஸகலரும், ஸகல கார்ய ஆரம்பத்திலும் சொல்லும் ஸ்லோகத்திலும் "சுக்லாம்பரதரம் **விஷ்ணும்**" என்றே வருகிறது. (இங்கே விஷ்ணு என்றால் ஸர்வ வியாபகமானவர் என்று அர்த்தம்.) 'உ' என்பது சிவ-சக்தி புத்ரனை விஷ்ணுவோடும் ஸம்பந்தப்படுத்தி, சைவ வைஷ்ணவத்தை ஸமரஸம் பண்ணி விடுகிறது!

வளைசலும் நேர்கோடுமாக இருக்கிற பிள்ளையார் சுழியில் நிறையத் தத்வார்த்தம் இருக்கிறது. சக்ராகாரமாக எந்த ஒன்று சுற்றினாலும் அதற்கு மத்தியில் அதற்கு ஆதாரமாக, அச்சாக (**axis-**ஆக) நேரான (**straight-**ஆன) ஒன்று இருந்தாக வேண்டும். விஷ்ணு தன் விரலையே நேராக நிமிர்த்திக்கொண்டு அதிலேதான் சக்ராயுதத்தைக் கோத்துக் கொண்டு சுற்றுகிறதாகவே விக்ரஹங்களில் காட்டியிருக்கும். சுற்றச் சுற்றப் பொறிப் பொறியாகக் கொட்டுகிற கார்த்திகை வாணமானாலும் ஸரி (இது ஒளி) – விரலிலே மாட்டிக்கொண்டு சுற்றிச் சுற்றி டபடபவென்று அடிக்கிற கிரிச்சட்டியானாலும் ஸரி (இது ஒலி) – இதுகளின் வட்டமான சுழற்சிகளுக்கு ஆதாரமாகக் கையோ, குச்சியோ எதுவோ ஒன்று நேர்கோடாக இருக்க

வேண்டியிருக்கிறது. யுனிவர்ஸில் லோகங்களெல்லாம் ஸர்குலராகத்தான் சுற்றிக்கொண்டிருக்கின்றன என்கிறபோது இவற்றுக்கும்கூட **straight line**-ஆக ஒரு ஆதார **axis** நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் **energy** [சக்தி] ரூபத்தில் இருக்கத்தான் வேண்டும். வட்டமாகச் சுற்றுகிற ஸகலப் பிரபஞ்சத்தையும் அதற்கு ஆதார சக்தியான கோட்டையும் சேர்த்துத்தான் பிள்ளையார் சுழியில் வட்டமாகவும் நேர்கோட்டு பாகமாகவும் போடுகிறோம்.

எங்கேயோ படித்த, அல்லது கேட்ட, ஞாபகம், எனர்ஜி உண்டாகிறதே பிள்ளையார் சுழி ரூபத்தில்தான் என்று. தாரை கொட்டி அதிலிருந்து எலெக்ட்ரிஸிடி எடுக்கிறபோது ரொடேஷனிலிருந்து [வட்டத்திலிருந்து] நேர்கோடாகத்தான் மின்ஸாரம் புறப்படுகிறதென்று எடுத்துக்காட்டியிருந்தது. பிள்ளையார் சுழியில் கொம்பு தான் ரொடேஷன்; கோடு அதிலிருந்து சக்தி உத்பவம். இந்த இரண்டையும் சிவ-சக்தி ஸ்வரூபமான நாத-பிந்துக்களாகக்கூடச் சொல்லிக்கொண்டு போகலாம். அதெல்லாம் ஸூக்ஷ்மமான விஷயம்.

ஆரம்பித்த இடத்துக்கே வந்து முடிந்துவிடுகிற வட்டம் ஏகமான பிரம்மத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். வட்டத்தில் ஆரம்பித்து அரை வட்டத்துக்கு அப்புறம் நேர்கோடாகிற பிள்ளையார் சுழி, ஏகமான பிரம்மத்தை ஸங்கேதமாகக் காட்டிவிட்டு அதிலிருந்து அநேகமான ஸ்ருஷ்டி தோன்றினதையும் சேர்த்துத் தெரிவிக்கிறது என்று சொல்லலாம். பிரம்மமும் பூர்ணம். பிரபஞ்சமும் பூர்ணம். பிரம்ம பூர்ணத்திலிருந்து பிரபஞ்ச பூர்ணம் உண்டாயிற்று என்று உபநிஷத்தில் சாந்தி மந்திரம் சொல்கிறோம்*. ஆரம்ப ஸ்வாமியின் அடையாளமாக எதன் ஆரம்பத்திலும் போடும் பிள்ளையார் சுழி, பிரம்ம பூர்ணத்தை வளைசல் கொம்பாலும், பிரபஞ்ச பூர்ணத்தை நேர் கோட்டாலும் காட்டி, முதலில் கொம்பு அப்புறம் கோடு என்பதால் பிரம்மத்திலிருந்துதான் பிரபஞ்சம் உண்டாச்சு என்றும் தெரிவிக்கிறது.

கொம்பு, கோடு என்று இரண்டு வார்த்தைகள் சொன்னேன். வேடிக்கையாக இரண்டுமே பிள்ளையாரின் தந்தத்துக்குப் பேராயிருக்கின்றன. ‘ஏக தந்தர்’ என்பதை ‘ஒற்றைக் கொம்பன் ‘என்பார்கள். ”பெரும்பாரக்கோடும்”,

"கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே" என்றெல்லாம் அவ்வைப் பாட்டி சொல்லும்போது 'கோடு' என்றாலும் தந்தந்தான். எப்பொழுதும் குழந்தையாயிருக்கிற ஸ்வாமியை வேண்டிக்கொண்டதாலேயே குழந்தைப் பிராயத்தில் கிழவியாகிவிட்ட அவ்வை சொன்ன 'கொடுவினை' என்பதுதான் ஜன்மாந்தர பாபங்களான பிராரப்த கர்மா. அந்தக் கர்மா எப்படியெப்படி நம்மைப் பழிவாங்க வேண்டும் என்று பிரம்மா நம் தலையில் எழுதியிருக்கிறாரென்று, சொல்லி, இதை பிரம்மலிபி என்பார்கள். 'தலைச்சுழி' என்பதும் இதைத்தான். இந்த தலைச் சுழியையும் கழித்து விடுவது பிள்ளையார் சுழி. "கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே!"

1.3-வலம்புரியானை வலம் புரிவோம்!

குட்டிக்கொள்வது, தோப்புக்கரணம் போடுவது, சிதறு தேங்காய் உடைப்பது, எருக்கும் அருகும் அர்ச்சனை பண்ணுவது, மோதகம் நிவேதிப்பது இவையெல்லாம் பிள்ளையார் வழிபாட்டில் விசேஷமாயிருக்கிறாற்போலவே அவரைப் பலமுறை பிரதக்ஷிணம் பண்ணுவதும் ஒரு விசேஷமாகும். பிள்ளையார் சுழி போடுகிறபோதும் பிரதக்ஷிணக் கிரமத்தில்தான் கொம்பை ஆரம்பிக்கிறோம்! பிள்ளையாரை குறைந்தது, மூன்று தடவை பிரதக்ஷிணம் பண்ணுவது வழக்கம். இருபத்தியோரு தடவை, நூற்றியெட்டுத் தடவை என்றெல்லாம் சுற்றிச் சுற்றி வருவார்கள். பார்வதி பரமேஸ்வரர்களை ஸர்வ பிரபஞ்சமாகவும் புரிந்து கொண்டு வலம் வந்து பலம் (பழம்) பெற்ற விக்னேஸ்வரரை நாமும் வலம் வந்தால் ஸகல பலனும் பெறலாம். அவருடைய தொப்பை வயிறே உருண்டையாகப் பிரபஞ்சம் மாதிரிதானே இருக்கிறது? அவரை வலம் வருவதே நமக்கு பலமுமாகும் – தேஹபலம், புத்திபலம் எல்லாம்!

அவரே வலம்புரி விநாயகராகவும் இருக்கிறார். விக்னேஸ்வரர் மூர்த்தத்தில் ஏகப்பட்ட ரூப பேதங்ளிருந்தாலும் பொதுவாக நாம் பார்க்கிற பிள்ளையார்கள் தும்பிக்கையை இடது பக்கமாகச் சுழித்துக் கொண்டிருப்பவையாகவே

இருக்கும். அபூர்வமாகச் சில இடங்களில் வலது பக்கம் தும்பிக்கையைச் சுழித்துக் கொண்டிருப்பார். இவரைத்தான் வலம்புரி விநாயகர் என்பது. தக்ஷிணா வர்த்தமாக உள்ள சங்கை எப்படி வலம்புரிச் சங்கு என்று சிறப்பிக்கிறோமோ அப்படியே வலம்புரி விநாயகருக்கும் விசேஷமான அனுக்ரஹ சக்தி இருப்பதாக ஆகமத்தில் சிறப்பித்திருக்கிறது. இப்படித் தும்பிக்கை வலமாகச் சுழித்திருக்கிறபோதுதான் (இது பிள்ளையாரே போடும் சுழி! தம்முடைய ஒரு அங்கத்தாலேயே போடுகிற சுழி!) அவருடைய வாயின் வலது ஓரத்தில் ஆரம்பித்து, கன்னம், மஸ்தகம் [சிரஸ்] இவற்றைச் சுற்றிக்கொண்டு, இடது பக்கம் தும்பிக்கை வழியாக இறங்கி, அதன் சுழித்த முடிவுக்கு வந்தால், இந்த அவுட்லைன், க்ரந்தாக்ஷர 'ஓம்' (தமிழ் 'ஓ' மாதிரி) இருக்கும். இடது பக்கம் தும்பிக்கையைச் சுழித்த பிள்ளையார் ரூபத்தில் இப்படி ப்ரணவ ஸ்வரூபம் கிடைக்காது. இது வலம்புரியின் விசேஷம்.

வலம்புரி விநாயக க்ஷேத்ரங்களில் கும்பகோணத்துக்குக் கிட்டேயிருக்கிற 'திருவலஞ்சுழி' என்றே பெயர் பெற்ற ஸ்தலம் விசேஷமானது. அதனுடைய மஹிமையைக் காட்ட ஒன்று சொல்கிறேன்.

மஹாராஷ்டிராவில் கணபதி உபாஸனை அதிகம். ஆரம்ப ஸ்வாமியான பிள்ளையார், முடிவிலே வரும் ஸ்வாமியான ஆஞ்ஜநேயர் ஆகிய இருவருக்கும் அங்கே ரொம்ப வழிபாடு நடக்கிறது. பிரிட்டிஷ் கெடுபிடியின் போது நம் ஜனங்களை ஒன்று கூட்டவே, திலகர் பிள்ளையாரை வைத்துத்தான் வழி கண்டுபிடித்தார். பிள்ளையார் சதுர்த்தியன்று பெரிசு பெரிசாக, கலர் கலராகப் பிள்ளையார் பொம்மைகளை பண்ணி ஊர்வலம் விடுகிறது என்று ஆரம்பித்து, இதனாலேயே பதினாயிரக் கணக்கான ஜனங்களைக் கூட்டம் கூட்டினார். மத விஷயம் என்பதால் வெள்ளைக்கார ராஜாங்கம் இதில் தலையிடவில்லை. (நம்முடைய 'சொந்த 'ராஜாங்கம் என்று சொல்லப்படுவது ஏற்பட்ட அப்புறந்தான் ஹிந்து மதம் ஒன்றின் விஷயத்தில் மட்டும் ஸர்க்கார் பிரவேசித்து என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்று இருக்கிறது. அது வேறு விஷயம்.) திலகர் நாளில் இப்படி "கணேஷ் சதுர்த்தி" என்ற பெயரில் ஜனங்களை கூட்டிய பின் அவர்களுக்கு ஸ்வதந்திரப் பற்றை ஊட்டி தேசத் தலைவர்கள் பேசுவார்களாம்! இப்போதும் பம்பாய் மாதிரி

ஊர்களில் பிள்ளையார் சதுர்த்தியென்றால் ஒரே அல்லோல கல்லோலந்தான். இப்படிப்பட்ட மஹாராஷ்டிராவில் காணபதர்கள் பூர்வத்தில் நிறைய இருந்திருக்கிறார்கள்.

காணபத்யம் என்பதாக கணபதியையே முழுமுதற் கடவுளாக வழிபடுகிற மார்க்கத்தைச் சேர்ந்தவர்களே காணபதர்கள். ஒரே வேதாந்த ஸமயத்தில் ஆறு பிரிவுகள். ஒரே நதியில் ஆறு துறைகள் மாதிரி. இதில் கணபதி உபாஸனையையே மோக்ஷ உபயமாகச் சொல்வது காணபத்யம். குமாரஸ்வாமி (முருகன்) உபாஸனையைச் சொல்வது கௌமாரம். அம்பாள் சக்தியின் உபாஸனையைச் சொல்வது சாக்தம். ஸூர்யனையே பரம்பொருளாகச் சொல்வது ஸௌரம். விஷ்ணுவைச் சொல்வது வைஷ்ணவமென்றும், சிவனைச் சொல்வது சைவமென்றும் தெரிந்திருக்கும். ஷண்மதங்கள் என்ற இந்த ஆறு உபாஸனாக்ரமங்களையும் சுத்தப்படுத்தி வைதிகமாக நிலைநாட்டியதாலேயே பகவத்பாதாளுக்கு [ஆதி சங்கரருக்கு] ஷண்மதப்ரதிஷ்டாபனாசார்யர் என்று பெயர்.

இதில் ஒன்றான காணபத்யம் அதிகம் அநுஷ்டானத்திலிருந்த மஹாராஷ்டிராவில் 'அஷ்ட விநாயகர்'கள் என்ற எட்டுப் பிள்ளையார்களுக்கான எட்டு க்ஷேத்ரங்கள் இருக்கின்றன. அவர்களில் 'மயூரேசர்' என்ற பிள்ளையாருக்கும் அவர் இருக்கிற 'மோர்காம்' க்ஷேத்ரத்துக்கும் பிரஸித்தி ஜாஸ்தி. 'மோர்காம்' என்பது 'மயூரக்ராமம்' என்பதன் திரிபு. பிள்ளையாரைச் சுற்றி அவருடைய பரிவார தேவதைகள் இருக்க வேண்டிய க்ரமத்திலேயே மோர்காமைச் சுற்றிப் பரிவார தெய்வங்களின் கோயில்கள் இருக்கின்றன.

மயூரம் என்பது தமிழில் மயில் என்றும், வடக்கத்தி பாஷைகளில் மோர் என்றும் இருக்கிறது. ஸுப்ரம்மண்யர் தான் மயில் வாஹனர் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். புராணங்களின்படியும் தந்த்ர சாஸ்திரங்களின்படியும், நாம் மூஷிகவாஹனராகவே நினைக்கிற பிள்ளையாருக்கும் மயில் வாஹனத்தோடு ஒரு அவஸரம் (ரூப பேதம்) உண்டு. அவர்தான் மயூரேசர்.

மயூரேச க்ஷேத்ரமான மஹாராஷ்டிர மோர்காமின் க்ஷேத்ர புராணத்தில் நம் தமிழ்நாட்டுத் திருவலஞ்சுழியை உசத்திச் சொல்லியிருக்கிறது! 'தசஷிணாவர்த்தம்' என்று இதற்கு அங்கே பெயர் கொடுத்திருக்கிறது. 'தக்ஷிண'-வல; `ஆவர்த்தம்'-சுழி. இந்த 'தக்ஷிணாவர்த்தம்'தான் பிள்ளையாருடைய ராஜதானி, அதாவது Capital என்று சொல்லியிருக்கிறது.

திருவலஞ்சுழியில் சிவன் கோயிலில் ஒரு ஸந்நிதியாகத்தான் வலம்புரிப் பிள்ளையார் இருக்கிறார். அது தவிர கோவிலுக்கு வெளியே தனியாக ஒரு வெள்ளைப் பிள்ளையார் இருக்கிறார். அவர் இடம்புரிக்காரர்தான். ஆனாலும் ஏக ப்ரஸித்தியோடிருக்கிறார். இந்த ஸ்தலத்து ஈஸ்வரனை ஞானஸம்பந்தரும் அப்பரும் பாடியிருக்கிறார்கள். ஆனால் பிரஸித்தியெல்லாம் வெள்ளை பிள்ளையாருக்கே இருக்கிறது! அவர் இருக்கும் மண்டபம் ரொம்பவும் வேலைப்பாடு அமைந்தது. குறிப்பாக, அங்கேயிருக்கிற ஸலவைக்கல் பலகணியைச் சொல்ல வேண்டும்.

பழைய காலத்தில் கோயில் நிர்மாணிக்கிற சில்பிகள் வேலை ஒப்புக்கொண்டு முச்சிலிக்கா எழுதித்தருகிறபோது, ஐந்து தினுஸான நிர்மாணங்கள் தவிர பாக்கியெல்லாம் தாங்கள் செய்து தருவதாகக் குறிப்பிடுவார்களாம். அந்த ஐந்து மட்டும் தங்கள் திறமைக்கு அப்பாற்பட்டது என்று விட்டுவிட்டதாக அர்த்தம். ஆவுடையார்கோயில் கொடுங்கை, கடாரங் கொண்டான் மதில், தஞ்சாவூர் கோபுரம், திருவீழிமிழலை வௌவால் ஒட்டி மண்டபம் என்ற நாலோடு திருவலஞ்சுழிப் பலகணியும் ஐந்தாவதாக இந்த அற்புதங்களில் ஒன்றாக அந்த ஸ்தபதிகளால் சொல்லப்பட்டிருக்கிறது!

பதினாறு துளைகள் போட்டு, நுட்பமாக வேலைப்பாடு செய்து இந்தப் பலகணி அமைக்கப்பட்டிருக்கிறது. 'ஷோடச கணபதி 'என்று பிள்ளையார் மூர்த்தங்களில் பதினாறைச் சொல்வதற்கேற்ப இங்கே பதினாறு த்வாரங்கள் இருக்கின்றன. பதினாறுதான் பூர்ணத்வம். ஷோடச கலாபூர்ணம் என்பது.

பூர்ணமான ப்ரணவ ஸ்வரூபமாக விளங்கும் இந்த வெள்ளை விநாயகரை தேவேந்திரன் பூஜை பண்ணியதால் தான் க்ஷீரஸாகரத்தில் அம்ருதம் திரண்டு வந்ததாம். அந்த ஸாகரத்தின் பால் ஏட்டினாலேயே அவரைப்

பண்ணியதால்தான் வெள்ளை வெளேரென்று இருக்கிறார். வெண்மை நிறத்தைக் கொண்டே அவருக்கு 'ச்வேத விநாயகர்' என்று பெயர். அவரைத் தொடாமலே பூஜை பண்ண வேண்டும். அங்கே பிரம்மோத்ஸவமே அவருக்குத்தான்; ஈஸ்வரனுக்கு இல்லை.

திருவலஞ்சுழியில் இன்னொரு விசேஷம். கோவிலுக்குள்ளே ஒரு விநாயகர் தும்பிக்கையை வலது பக்கம் சுழித்துக் கொண்டிருப்பது போலவே இங்கே காவேரியும் திரும்பி வலது பக்கமாக சுழித்து ஓடுகிறது!

காவேரிக்கும் விக்னேஸ்வரருக்கும் கிட்டின ஸம்பந்தமுண்டு. குடகு தேசத்தில், ஸஹ்ய பர்வதத்தில் அகஸ்தியர் கமண்டுலுவுக்குள் பொத்திப் பொத்தி வைத்துக் கொண்டிருந்த காவேரியைப் பிள்ளையார்தான் காக்காய் ரூபத்தில் வந்து கவிழ்த்துவிட்டு, லோகோபகாரமான புண்ய நதியாக ஓட வைத்தார். நம் தமிழ் நாட்டின் உடம்பு, உள்ளம் இரண்டையும் வளர்க்கிற காவேரியைக் கொடுத்தவர் என்பதற்காகப் பிள்ளையாரிடம் நாம் விசேஷமாக பக்தி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குடகிலிருந்து கர்நாடக தேசத்தைத் தாண்டித் தமிழ்நாட்டில் பாய்ந்த காவேரி கும்பகோணம் தாண்டினதும் ஒரு பிலத்துக்குள் மறைந்துவிட்டாளாம். அப்போது ஹேரண்டர் என்ற மஹரிஷி பரம கருணையோடு தம்மையே பலி கொடுத்துக்கொண்டாராம். உடனே காவேரி பிலத்துக்குள்ளேயிருந்து பொங்கிக் கொண்டு வெளியிலே வந்து இந்தப் பிள்ளையார் க்ஷேத்ரத்தைப் பிரதக்ஷிணமாக, வலப் பக்கம் சுழித்துக் கொண்டு மேலே ஓடினாளாம்.

தலைக்காவேரியில் கன்னங்கரேலென்று காக்காயாக வந்தவர் இங்கே வெள்ளை வெளேரென்று காட்சி தருகிறார்!

"ப்ரணவ ஸ்வரூப வக்ர துண்டம்" என்கிறபடி இங்கேயே இன்னொரு மூர்த்தி வலம்புரியாக இருக்க, தீர்த்தமும் வலப்பக்கமாக ஓடுகிற பெருமை திருவலஞ்சுழிக்கு இருக்கிறது.

வலம்புரி விநாயகரை – அவர் இடம்புரியாகக் கோயில் கொண்டிருக்கிற இடங்களிலும் ப்ரணவ ஸ்வரூபி என்றே புரிந்துகொண்டு – நாம் வலம் வந்து வணங்கி எல்லா நலமும் பெறுவோமாக!

2-குரு

2.1-குரு, ஆசார்யர்

குரு, ஆசார்யார் என்ற இரண்டு வார்த்தைகளைப் பொதுவாக ஒரே அர்த்தத்தில் சொல்கிறோம். ஆனால் இதில் ஒன்றுக்கொன்று கொஞ்சம் வித்யாஸமும் வித்வான்களால் சொல்லப்படுகிறது.

2.2-ஆசார்ய இலக்கணம்

ஆசார்யர் என்பதில் ஆசரணம், ஆசாரம், சர என்ற வார்த்தைகளின் ஸம்பந்தம் இருக்கிறது. 'சர' என்றால் நடப்பது. சரிதம், சரித்ரம் என்றால் நடத்தை **(Conduct)** . பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடப்பதால் தேச சரித்ரம், ஜீவ்ய சரித்ரம் என்றெல்லாம் சொல்கிறோம். நின்றபடியில்லாமல் ஒரு ஒழுங்கில் தொடர்ந்து போவது தானே 'நடை'? இப்படி ஒரு வழிப்படி நடப்பதுதான் சரித்ரம். ஒரு வழியில் 'ஒழுகுவது' என்று தமிழில் சொல்வார்கள். ஜலம் ஒழுகுகிறபோது தாரையாக ஒரு தொடராகத்தானே விழுகிறது? இப்படிச் சில விதிகளின் படியே, அதைப் பின்பற்றிப் போவதுதான் 'ஒழுகுவது'. 'ஒழுக்கம்' என்பது இதிலிருந்துதான் வந்தது. 'சர' தாதுவின் மேல் இதுவே ஸம்ஸ்க்ருதத்தில் 'ஆசாரம்' என்று இருக்கிறது. சாஸ்திர விதிப்பிரகாரம் ஒழுகுவது, தர்ம நூல்களின் ஒழுக்கம்தான் ஆசாரம். இப்படி நடப்பது ஆசரணம்.

ஆசார்யனுக்கு முக்கியம் இப்படி ஒரு ஒழுங்குமுறையில் நடந்து காட்டுவது. **Basic** –ஆக (அடிப்படையாக) ஸகல ஜனங்களுக்கும் ஸாதாரண தர்மங்கள் என்பதாக அஹிம்ஸை, ஸத்யம் முதலிய ஒழுக்கங்கள் இருப்பதோடு நம் ஹிந்து மதம் ஒன்றுக்குள்ளேயே அநேக

ஸம்ப்ரதாயங்களுக்குத் தனி சாஸ்திரங்கள் ஏற்பட்டு, அவற்றில் தனித்தனி ஒழுக்கங்களும் சொல்லியிருக்கிறது. வைஷ்ணவர்களுக்கென்று ஒரு ஆசாரம்; மாத்வர்களுக்கென்று ஒன்று; சைதன்யர், நிம்பார்க்கர் இப்படிப் பல பெயரில் தனித்தனி ஒழுக்கங்களும், பழக்கங்களும், வழக்கங்களும் இருக்கின்றன. சைவர்களுக்கென்று தனி சாஸ்திரங்கள், அவர்கள் இன்னின்ன இப்படி யிப்படிப் பண்ண வேண்டும் என்ற விதிகள் இருக்கின்றன. சைவத்திலேயே ஸித்தாந்த சைவம், வீரசைவம், காஷ்மீரி சைவம், பாசுபாதம் என்று பல பிரிவுகள். வைஷ்ணவத்துக்குள்ளேயும் இப்படி ஏகாந்திகள், பாஞ்சராத்ரிகள், வைகாநஸர்கள் என்று **sub-sections** உண்டு. ஒவ்வொன் றுக்கும் ஒரு **set of rules** [விதியமைப்பு முறை] இருக்கிறது. அத்வைதிகளுக்கு ஒரிஜனலாக ஸ்மிருதிகள் சொன்ன ரூல்கள் இருக்கின்றன.

இப்படி ஏதாவது ஒரு ஸம்ப்ரதாயத்தை சாஸ்த்ரோக்தமாகத் தானே அனுஷ்டித்துக் காட்டுகின்றவன் தான் ஆசார்யன்.

'ஆசார்ய' பதத்துக்கு **definition** [லக்ஷணம்] சொல்கிற ஸ்லோகம் சில பேர் கேள்விப்பட்டிருக்கலாம்.

ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்தாத்
ஆசாரே ஸ்தாபயத்யபி |
ஸ்வயம் ஆசரதே யச்ச
தம் ஆசார்யம் ப்ரசக்ஷதே ||

எவன் சாஸ்திரத்தின் அர்த்தங்களை ஆராய்ந்து, ('பிறருக்கு அதை போதித்து' என்பது இங்கே **understood:** சொல்லாமல் சொன்னது,) பிறரை அந்த சாஸ்த்ரங்களின் விதிப்பிரகாரம் நடக்கப் பண்ணுகிறார்களோ, (இப்படி 'பிறத்தியாரை ஒரு ஆசாரத்தில் நிலைநாட்டுவது மட்டுமல்லாமல்' என்பதும் **understood**) தானே அந்த வழிப்படி நடந்து காட்டுகிறானோ அவனே ஆசார்யன் எனப்படுகிறான் – என்று அர்த்தம்.**"Precept, practice** இரண்டிலும்" என்று சொல்வது இதைத்தான்- அதாவது வாய் உபதேசத்தால் மட்டுமில்லாமல் (அல்லது கையால் புஸ்தகம் எழுதுவது

மட்டுமில்லாமல்) தன்னுடைய வாழ்க்கை உதாரணத்தாலேயே ஒரு ஸம்ப்ரதாயத்துக்கான ரூல்களை நடத்திக் காட்டுகிறவனே ஆசார்யன்.

ஆசார-அனுஷ்டானம் என்று இரண்டைச் சேர்த்துச் சொல்கிறோம். சாஸ்த்ரம்-ஸம்ப்ரதாயம் என்று இரண்டைச் சொல்கிறோம். தமிழில் பழக்க-வழக்க-ஒழுக்கம் என்று மூன்றைச் சேர்த்துச் சொல்கிறோம். இந்த எல்லாமே **inter-connected:** ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது. சாஸ்திரத்தில் அநேக இடங்களில் சொல்லியிருக்கிற ரூல்களை வாழ்க்கையில் அனுஷ்டித்துக் காட்டுவதற்கு ஏற்ற விதத்தில் **codify**பண்ணியே ஒவ்வொரு ஸம்ப்ரதாயமும் உண்டாயிருக்கிறது. சாஸ்திரங்களில் பல தினுஸான கொள்கைகள் இருக்கிறபோது ஒவ்வொரு விதமான கொள்கையை மட்டும் அவற்றிலிருந்து பிரித்து ரூபம் கொடுத்து ஸம்ப்ரதாயங்கள் ஏற்படுகின்றன. ஒரே வேத மதத்தில் இப்படி சங்கர ஸம்ப்ரதாயம், ராமாநுஜ ஸம்ப்ரதாயம் என்றெல்லாம் பல வந்திருக்கின்றன.

சாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம் என்று சாதாரணமாகச் சொல்லும்போது வேறு விதமான ஒரு பாகுபாடும் நினைக்கப்படுகிறது. அதாவது, 'சாஸ்த்ரம் என்பது சட்ட புஸ்தகமாக எழுதி நிலையாக வைத்துவிட்டது; ஸம்ப்ரதாயம் என்பது இப்படிச் சட்டமாக நாட்டப்படாவிட்டாலும் சாஸ்த்ரக்ஞர்கள் உள்பட ஸமூஹத்தார் எல்லாராலும் பின்பற்றப்படுகிற விஷயங்கள்' என்று நினைக்கப்படுகிறது. சாஸ்த்ரம் என்பது **scripture** , ஸம்பரதாயம் என்பது **tradition, usage** — 'மரபு' என்பது. சாஸ்த்ரமாக எழுதி வைத்தது எல்லாருக்கும் பொதுவாயிருக்கும். ஸம்ப்ரதாயமாகப் பழக்கத்தில் வந்தது ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் மாறலாம்; 'குலாசாரம்', 'தேசாசாரம்' என்று குடும்பங்களுக்கிடையில், பல சீமைகளுக்கிடையில் மாறுதலாயிருக்கலாம்.

ஒரு வழியைச் சட்டதிட்டங்களால் காட்டிக் கொடுத்து அது ஜனங்களுக்கிடையில் நீண்டகாலம் 'வழங்க'ப்படும் போது 'வழக்க'மாகிறது. ஜனங்கள் இதற்குப் 'பழகி' ப் போகிறபோது 'பழக்கம்' எனப்படுகிறது. பழக்க-வழக்கங்கள் என்று பொதுவாக இருப்பவற்றை ஒரு **individual** (தனி நபர்) பற்றி 'ஒழுகும்' போது – அதாவது அனுஷ்டிக்கும் போது – அது இவனுக்கு

உண்டாக்குகிற சீலமே 'ஒழுக்கம்' என்பது. சாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களின் ஆசார அனுஷ்டானங்களான பழக்க வழக்கங்களைப் பின்பற்றி ஒழுக்கமாக – **disciplined** –ஆக வாழ்கிறவனே ஆசார்யன். அவனே ஜெனரலாக எல்லாருக்கும் ஏற்பட்ட தர்ம நியதிகளோடு கூட, ஒரு குறிப்பிட்ட ஸம்ப்ரதாயத்தின் சாஸ்திரங்களை அறிந்து அனுஷ்டித்துக் காட்டுபவனாக இருக்க வேண்டும். தன்னளவில் இப்படியிருக்கிறவனை மட்டும் ஆசார்யன் என்று சொல்லிவிட முடியாது. உங்களுக்குகே தெரியுமே, ஆசார்யன் என்றால் உடனே சிஷ்யன் என்பவனும் இருந்தாக வேண்டும். அதாவது இவன் பிறத்தியானையும் சிஷ்யனாக்கிக் கொண்டு அவனுக்கு இந்த தர்மாசாரங்களை போதனை பண்ணி, அதன்படியே அவன் நடக்கும்படிப் பண்ண வேண்டும். போதனை செய்ய வேண்டுமென்பதால், அவன் கற்றறிந்த வித்வானாக இருந்தாக வேண்டும். அப்போதுதான் ஸந்தேஹங்களைப் போக்கவும், எதிர்வாதத்தைக் கண்டனம் பண்ணவும் முடியும். இவனிடம் ஒரு சிஷ்யன் நீண்ட காலம் பயிற்சி பெற்றதால்தான் இவ்வளவும் கற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் காலத்தில் ஆசார்யர்கள் என்பவர்களின் இடத்தில் ஆசிரியர்கள் (பள்ளிக்கூட டீச்சர்களும் காலேஜ் ப்ரொ·பஸர்களும்) இருக்கிறார்கள். ஆனால் இங்கே சொந்த வாழ்க்கையிலும் ஸரி, போதிப்பதிலும் ஸரி, தர்மங்களின் ஸம்பந்தமேயில்லாமலிருக்கிறது!

பழைய காலத்திலும் பௌதிக வித்யைகளையும் கலைகளையும் சொல்லித் தருகிற ஆசாரியர்கள் இருக்கத்தான் செய்தார்கள். க்ருபாச்சாரியார், த்ரோணாச்சாரியார், என்று தனுர்வேதம் – வெறும் ஆயுதப் பயிற்சி – சொல்லிக் கொடுத்தவர்களையும் அந்த நாளிலேயே 'ஆசார்யர்' என்று சொல்லியும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும்கூட தர்மசாஸ்திர-ஸம்ப்ரதாயங்களை அறிந்தவர்களாகவும், சொந்த வாழ்க்கையில் பின்பற்றி, தங்களுடைய வித்வத், திறமை இவற்றுக்காக மட்டுமின்றி, நடத்தைக்காகவும் (ஆசரணைக்காகவும்) மதிப்புப் பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

2.3-‘குரு’ இலக்கணம்

ஆசார்யரிடம் வஸித்து, வித்தையை அப்யாஸம் பண்ணுவதற்கு ‘குருகுலவாஸம்’ என்று பெயர். ‘ஆசார்ய குல வாஸம்’ என்றில்லை. இதைப் பார்த்தால் ஆசார்யர், குரு இரண்டும் ஒன்றேதான் என்று தோன்றும். **ஜகத்குரு சங்கராசார்யார்** என்பதால் ஒருத்தரே குரு ஆச்சார்யார் இரண்டுமாக இருக்கிறார் என்று ஏற்படுகிறது. இப்படியிருப்பதாலேயே இரண்டும் கொஞ்சம் வேறாயிருக்கலாமோ என்றும் தோன்றுகிறது.

‘குரு’ என்றால் நேர் அர்த்தம் என்ன? ‘ஆசார்யார்’ என்ற வார்த்தைக்கு**definition** சொன்னதுபோல ‘குரு’ வுக்கு என்ன சொல்வது?

‘குரு’ என்றால் ‘கனமானது’, ‘பெரிசு’ என்று அர்த்தம். அதாவது பெருமை உடையவர், மஹிமை பொருந்தியவர் என்று அர்த்தம். பெரியவர்களை கனவான், மஹாகனம் என்கிறோமல்லவா? (‘ரைட் ஆனரபிள்’ என்ற பட்டத்தை ‘மஹாகனம்’ என்றே சொல்வார்கள்.) ‘பெரியவர்கள்’ என்று இங்கே நான் சொன்னதே பெரிசை வைத்துத்தான். ‘குரு’ என்கிற மாதிரியே ‘ப்ரஹ்மம்’ என்றாலும் பெரிசு என்றுதான் அர்த்தம். கனமானவர், பெரியவர் என்றால் எதைக்கொண்டு இப்படிச் சொல்கிறது? கனமென்றால் **Weight** ஜாஸ்தி என்று அர்த்தமா? பெரியவரென்றால் வாட்டசாட்டமாக இருப்பதாக அர்த்தமா? மஹான், மஹான் என்றாலும் பெரிசானவர், பெரியவர் என்றுதான் அர்த்தம். எதில் பெரிசு? என்னை குரு என்கிறீர்கள். பெரியவா என்கிறீர்கள். இன்னும் கொஞ்சம் அபிமானம் ஜாஸ்தியானால் மஹான் என்றும் சொல்கிறீர்கள். [**Weight** , வாட்டசாட்டம் இவற்றைப் பார்த்தால்] என்னை இப்படிச் சொல்ல நியாயமில்லை. அதனால் இப்படியெல்லாம் சொல்லும்போது ஒருத்தர் உள்ளுக்குள்ளேயே அறிவாலோ, அநுபவத்தாலோ, அருளாலோ கனம் வாய்ந்தவர், பெருமை பெற்றவர் என்றுதான் அர்த்தம். பகவத்பாதாளின் பெயர் என்னிடம் ஒட்டிக் கொண்டிருக்கிற ஒரே காரணத்துக்காக, எனக்கு இதெல்லாம் இருப்பதாக ஏமாந்து குரு, பெரியவா, மஹான் இன்னம் என்னென்ன ஸ்தோத்ரமாக உண்டோ அத்தனையும் சொல்கிறீர்கள்.

ஆக, குரு என்றால் அவர் உள்ளுக்குள்ளே ரொம்பப் பெருமை படைத்தவராக யிருக்க வேண்டும். ஆசாரியர் என்பவர் வெளியிலே படிப்பிலே பெரியவர், வெளியிலே போதனை பண்ணுவதில் சதுரர், வெளியிலே நடத்தையால் வழிகாட்டுவதிலே சிறந்தவர். அவருடைய உள் சீலம் (**Character**) தான் வெளிநடத்தையாக (**conduct**) ஆக வெளிப்படுகிறதே தவிர, வெளியே அவர் போலியாக உத்தமர் போல நடித்துக் காட்டுபவரல்ல என்பது நிஜமானாலுங்கூட அவரை வெளி லோகத்துடன் பொருத்தியே வைத்திருக்கிறது – உலகத்துக்கு அவர் தாம் உபதேசிக்கிற ஐடியல்களை வாழ்ந்து காட்ட வேண்டும்.

குரு ஸமாசாரம் என்ன? அவர் வெளியிலே எதுவுமே பண்ண வேண்டுமென்றில்லை. அவருக்கு வெளிப்படிப்பு, வித்வத் வேண்டும் என்றில்லை. அவர் சாஸ்திரங்களைப் படித்துக் கரை கண்டிருக்க வேண்டுமென்றில்லை. அவர் எந்த சாஸ்த்ரத்தையோ ஸம்ப்ரதாயத்தையோ ஆசார்யரைப்போல வழுவறப் பற்றி ஒழுகிக்காட்ட வேண்டுமென்பதில்லை. ஏன், அவர் வாயைத் திறந்து போதனைப் பண்ணணும், உபதேசிக்கணும் என்றுகூட இல்லை. மௌனகுரு என்றே இருந்திருக்கிறார்களே!

தன்னில் தானாக நிறைந்து ஒருத்தர் எங்கேயாவது தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தால்கூட அவருடைய உள்பிரபாவம் தெரிந்தவர்கள் அவரை குருவாக வரிக்கிறார்கள். அதற்காக அவர் இவர்களுக்கு சாஸ்த்ரபாடம் சொல்ல வேண்டும் என்பது இல்லை. ஆனாலும் அவரை குருவாக வரித்தவரிடம் அவருடைய அநுக்ரஹ சக்தியே வேலை செய்து விடுகிறது. அவர் இவரை 'சிஷ்யர்' என்றுகூட நினைத்திருக்கமாட்டார். ஆனாலும் தம்மை அவருக்கு சிஷ்யராக நினைத்தவர் எதை நாடி அவரிடம் போனாரோ அது ஸித்தித்துவிடுகிறது.

படிப்பு என்றால் என்ன என்றே தெரியாமல் இப்படிப் பல குருக்கள். பாடம் நடத்தாமல் எத்தனையோ குருக்கள். வாயையே திறக்காத தக்ஷிணாமூர்த்திதான் ஆதிகுருவே! சாஸ்திர விதிகள் எதற்கும் கட்டுப்படாமல் பேய் மாதிரி, பிசாசு மாதிரி, பைத்தியம் மாதிரி, உன்மத்தம் மாதிரித் திரிந்த

அதிவர்ணாச்ரமிகள் பலர் குருமார்களாக இருந்திருக்கிறார்கள். திகம்பரமாக இப்படித் திரிந்த தத்தாத்ரேயரைத்தான் அவதூத குரு என்று ரொம்பவும் ஏற்றம் கொடுத்துச் சொல்கிறோம்.

ஆசாரியன் என்பவர் எல்லாவற்றிலும் 'ஸிஸ்டம்' உள்ளவர். அவர் ஏதாவது ஒரு ஸிஸ்டத்துக்கு (சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்துக்கு) பிரதிநிதியாக இருக்க வேண்டும். அதன் புஸ்தகங்களை, விஷயங்களை அவர் 'ஸிஸ்டமாடிக்' காகக் கற்றும் கேட்டும் அறிந்திருக்க வேண்டும். இதை மற்றவர்களுக்கும் 'ஸிஸ்டமாடிக்'காக 'டீச்' பண்ணணும். எல்லாவற்றுக்கும் மேலே தாமும் 'ஸிஸ்டமாடிக்' காக வாழ்ந்து காட்ட வேண்டும்.

குருவுக்கு இப்படியெல்லாம் இருந்துதான் ஆக வேண்டும் என்று நிபந்தனை எதுவும் இல்லை. அவர் உள் அநுபவி. அவருடைய அநுபவத்தின் பெருமையாலேயே அவரை மஹான் என்பது. அதன் கனத்தாலேயே குரு என்பது. **Character, Conduct** (சீலம், நடத்தை) என்பதற்கெல்லாம் அவர் மேலே போனவர். பகவானின் காரெக்டர், கான்டக்ட் எப்படி என்று யாராவது பார்ப்போமா? அப்படித்தான் இதுவும். சாஸ்திரத்தைப் பார்த்துப் பண்ண வேண்டும் என்பதும் குருமார்களுக்கு இல்லை. ஆத்மா அல்லது பிரம்மம் என்பதோடு சேர்ந்த ஞானிகளாக அவர்கள் இருப்பார்கள்; அல்லது ஈஸ்வரன், பகவான் என்கிற மஹாசக்தியுடன் 'டச்' உள்ளவர்ளாக இருப்பார்கள்; அல்லது மனஸை அடக்கி ஸமாதியிலிருக்கிற யோகிகளாக இருப்பார்கள்.

உள்ளே இப்படியிருக்கிறவர்களே வெளியில் ஆசார்யர்களாகவும் வித்வத்துடன் பிரகாசித்துக் கொண்டு, சிஷ்யர்களுக்குப் போதனை பண்ணிக்கொண்டு, தாங்களே சாஸ்த்ரப் ப்ரகாரம் கார்யங்கள் செய்துகொண்டும் இருக்கலாம். பகவத்பாதாளும் மற்ற மதாசார்யர்களும் இப்படியே குரு, ஆசார்யன் இரண்டுமாக இருந்திருக்கிறார்கள்.

ஆத்ம ஸாக்ஷாத்காரம், ஈஸ்வர ஸாக்ஷாத்காரம், யோக ஸமாதி என்கிற அளவுக்குப் போகாவிட்டாலும் முன்னாளில் வித்யாப்யாஸம் செய்வித்த ஆசார்யர்கள் எல்லோருமே உள்ளூர ஒரு பெருமை படைத்தவர்களாயிருந்ததால்தான் அவர்களை குரு என்றும், அவர்களிடம்

போய்ப் படிப்பதை குருகுலவாஸம் என்றும் சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஸிஸ்டத்தில் கட்டுப்படாதவராகயிருந்தாலுங்கூட சொந்தமாகவும், சாஸ்திரங்களைக் காட்டியும் நிறைய உபதேசம் செய்த குருக்களும் உண்டு. அவர் சொன்னபோது அவை குறிப்பிட்ட சாஸ்திர ஸிஸ்டமாக இல்லாவிட்டாலும், அவருக்குப் பிற்பாடு அவை அவர் பேரிலேயே ஒரு**Systematised** சாஸ்திரமாகி, அவரே அதற்கு மூல **ஆசார்யர்** என்றாகிவிடுவார். வெளியிலே ஸிஸ்டப்படி இருந்த அநேக ஆசார்யர்கள், உள்ளே தனக்குத்தானே ஒரு பெருமை படைத்த குருவாக இருந்திருக்கிறார்கள்; குருவாக இருந்த பலர் எந்த ஸிஸ்டத்திலும் வராமலும் இருந்திருக்கிறார்கள்.

2.4-உள் குருவுக்கும் வெளித் தொடர்பு

ஸிஸ்டமாடிக்காக டீச் பண்ண வேண்டும் என்று நினைக்காவிட்டாலும், அநுக்ரஹம் பண்ண வேண்டும் என்ற எண்ணம் எந்த குருவுக்கும் இருந்திருக்கிறது. "தன்னை இவன் சிஷ்யனாக ஆச்ரயித்திருக்கிறான்; இவனுக்கு நாம் அநுக்ரஹிக்க வேண்டும்" என்ற எண்ணத்தையும் கடந்து ஒரு மஹாத்மா இருந்தாலும், அப்போது, "இவரை நம்பி வந்தவனை நாம் கைவிடப்படாது" என்று ஸாக்ஷாத் ஈஸ்வரனே அவர் மூலமாக அவனுக்கு அநுக்ரஹம் பண்ணி விடுவான்.

ஆகையால் குரு என்பவர் தாமாக 'குருத்வ' த்தைத் தேடாவிட்டாலும் சிஷ்யன் என்று ஒருத்தன் வந்து சேர்ந்தால் அவனிடம் அநுக்ரஹ ஸம்பந்தம் அவருக்கு ஏற்படவே செய்கிறது. இங்கேதான் 'குரு' என்கிற வார்த்தைக்குச் சொல்கிற இன்னொரு அர்த்தம் பொருந்துகிறது.

ஒரு அர்த்தம் சொன்னேன்; வெளி ஸம்பந்தமில்லாத உள் கனம், பெருமை உள்ளவரே குரு என்று. உள் விஷயமானதால் இங்கே கார்யம் ஒன்றும் இல்லை. இன்னொரு அர்த்தம் என்ன? `கு' என்பது இருட்டு; `ரு' என்பது

போக்குவதைக் குறிக்கும்; `குரு' என்றால் இருட்டைப் போக்குபவர் என்று சொல்கிறார்கள். 'கும்மிருட்டு' என்று ரொம்பவும் இருட்டாயிருப்பதைச் சொல்லும் போது 'கு' என்பது இருட்டைக் குறிப்பதுதான். இருட்டைப் போக்கடிப்பவர் என்பதே குருவுக்கு அர்த்தமாகிறது. 'தேவ' என்றாலும் பிரகாச ரூபி என்றே அர்த்தம். இருட்டு என்றால் அஞ்ஞானம்தான். **தமஸோ மா ஜ்யோதிர் கமய**என்கிறபோது தமஸ் (இருட்டு) என்பது அஞ்ஞானமே; ஜ்யோதி என்பது ஞானம்; அஞ்ஞான மாயை இருள், ஞான ஒளி என்றே சொல்வது வழக்கம். ஆத்ம ஞானமும் மாயா அஞ்ஞானமுந்தான் என்றில்லை; எந்த ஒரு விஷயமோ வித்தையோ ஆனாலும் அது தெரியாத நிலையில் அதை அறிவின் இருட்டு என்றும், தெரிந்த நிலையை அறிவு வெளிச்சம் (புத்தி பிரகாசம்) என்றும் சொல்வதே வழக்கம். இப்படி புத்திக்கு ஒரு விஷயத்தைப் பிரகாசிப்பிக்கிறவர் குரு; முக்கியமாக முடிவாக ஞானப் பிரகாசத்தைக் கொடுக்கிறவர். சாஸ்திரம் படிக்காத, சாஸ்திரப்படி பண்ணாத, சாஸ்திரங்களை உபதேசிக்காதவரானாலும் ஒரு மஹானை குரு என்று ஒருத்தன் நாடிப்போய் ஆச்ரயித்துவிட்டானானால் அவர் அவனுடைய உள் இருட்டைப் போக்கி ஞானம் தந்துவிடுவார். இவனுக்கு தெரியாத வேறு விஷயங்கள், வித்யைகள் கூட அவருடைய அநுக்ரஹ சக்தியால் வெளிச்சமாகிவிடும்.

`இருட்டைப் போக்குபவர்' என்று குருவை **define** செய்கிறபோது அவருக்குப் 'போக்குவது' என்ற கார்யம் ஏற்பட்டுவிடுகிறது. இவருடைய உள் பெருமை இப்போது கார்யமாக வெளியிலே வேலை செய்கிறது. தனித்து இருக்காமல் இப்போது இவர் இன்னொருத்தனுடன் கார்யத்தால் ஸம்பந்தப்பட்டு விடுகிறார். வாயால், வாழ்க்கையால் உபதேசித்தோ, அல்லது வெறும் அநுக்ரஹ சக்தியாலோ, அல்லது அந்த அநுக்ரஹத்தையுங்கூட இவர் **conscious** -ஆக (புத்தி பூர்வமாக)ப் பண்ணாமல் ஈஸ்வரனே இவர் மூலம் பண்ணியோ, எப்படியோ ஒரு விதத்தில் இவர் சிஷ்யன் என்னும் இன்னொருத்தனுடைய அறியாமையை (சின்ன விஷயங்களில் அறியாமை, ஆத்ம ஸம்பந்மான அறியாமை எதுவோ ஒன்றை, அல்லது இரண்டையும்) நிவ்ருத்தி செய்கிறவராகிவிடுகிறார்.

இப்படி ஒரு கார்யம் இவரால், இவரைக் கொண்டு சிஷ்யன் பொருட்டு ஏற்படுகிறது என்றால் அப்போது இவருக்கும் சிஷ்யனுக்கும் ஒரு **link**(தொடர்பு) உண்டாக வேண்டும். பவர்ஹவுஸிலிருக்கும் எலெக்ட் ரிஸிட்டி நம் அகத்து பல்பில் எரிகிறது என்றால் அதையும் இதையும் கனெக்ட் பண்ண ஒயர் இருந்தாக வேண்டும். ரெட்ஹில்ஸ் ஜலம் நம் அகத்தில் கொட்டுகிறது என்றால் இரண்டையும் கனெக்ட் செய்ய பைப்-லைன் இருந்தாகணும். இப்படியே குருவினால் சிஷ்யனுக்கு புத்திப் பிரகாசம், அறிவு தாரை உண்டாகிறது என்றால் அவரையும் இவரையும் சேர்த்து வைக்க ஒரு 'லிங்க்' இருக்கத்தானே வேண்டும்?

குரு வாயால் விஷயங்களை விளக்கினால் அந்தப் பேச்சு ஒரு 'லிங்க்'. வாழ்க்கை உதாரணத்தால் புரிய வைத்தால் இதுவும் ஒருவித கம்யூனிகேஷன்தானே? அதோடு, அதைவிட, அவருடைய அநுக்ரஹ சக்தி என்பதன் ரேடியேஷனையும் சொல்லவேண்டும். இதையும் ஒரு**link** என்று சொல்ல வேண்டும். வெளிப்படத் தெரிவித்தாலும், உள்ளர்த்தமாகக் காட்டினாலும் சிஷ்யனுடைய அறியாமை போவதற்காக குரு பண்ணுகிற எதையும் உபதேசம் என்றே சொல்ல வேண்டும். உபதேசமாகப் பிரஸங்கம் பண்ணாமல் வாழ்க்கை உதாரணத்தாலேயே உபதேசித்து விடுவதைத்தான் **"verbal message**இல்லை; அவருடைய **life** –ஏ **message"** என்று செல்வது.

ஆக ஸ்தூலமாகவோ ஸூக்ஷ்மமாகவோ குருவுக்கும் சிஷ்யனுக்கும் 'லிங்க்'காக உபதேசம் என்பது இருக்கிறது.

வாய் வார்த்தையாலும், வாழும் வாழ்க்கையாலும் உபதேசித்தேயாக வேண்டும் என்ற 'ட்யூட்டி' உள்ளவரைத் தான் 'ஆச்சார்யர்' என்று ஆரம்பத்தில் சொன்னேன். குரு என்பவர் இப்படி வார்த்தையாலும், வாழ்க்கையாலும் உபதேசிக்க வேண்டுமென்றில்லா விட்டாலும் அநுக்ரஹம் என்கிற ரூபத்தில் அவருக்கும் சிஷ்யனுக்கும் ஏற்படுகிற கனெக்ஷனும் உபதேசம்தான் என்றேன் – அறியாமையைப் போக்கி அறிவொளியை ஏற்படுத்துகிற எதுவும் உபதேசம்தான் என்பதால்.

பொதுவாக, பெரும்பாலாக, குருவின் அநுக்ரஹ சக்தி சிஷ்யனுக்கு மந்த்ர உபதேசம் என்ற ‘லிங்க்’ மூலமே பாய்கிறது. வாயால் ப்ரஸங்கம் பண்ணி, எக்ஸ்ப்ளெயின் செய்யாதவராக இருக்கிற மஹாத்மாக்கள் கூட ‘மந்த்ரோபதேசம்’ என்ற ஒன்றை மாத்திரம் பண்ணிவிடுவதே பெரும்பாலும் நாம் பார்ப்பது. கதைகளில் படிக்கிறோம்; ஒரு மஹானால் தனக்கு உய்வு கிடைக்காதா என்று அவரிடம் போய் அநேக சிஷ்யர்கள் காத்துக் கிடப்பார்கள். அப்புறம் என்றைக்காவது ஒரு நாள் அவர் சிஷ்யனுக்கு ஒரு மந்த்ரம் உபதேசித்து விடுவார். அதிலிருந்து இவனுக்கு ஞானம் பிரகாசமாகத் தொடங்கிவிடும். எப்படியாவது இம்மாதிரி குரு வாயிலிருந்து மந்த்ரோபதேசம் வாங்கிக் கொண்டுவிட வேண்டும் என்பதற்காகத் தபஸ் இருந்து, தந்திரம் பண்ணினவர்கள் கூட உண்டு.

கபீர்தாஸுக்கு ராமாநந்தர் என்ற மஹானிடமிருந்து ஸ்ரீராம மந்த்ர உபதேசம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆசை. இவரோ முஸ்லீம், ஹிந்துவாகப் பிறந்து முஸ்லீம் வீட்டில் முஸ்லீமாகவே வளந்தவர் என்பார்கள். அதனால் தமக்கு ராமாநந்தர் உபதேசம் பண்ணமாட்டாரோ என்று இவருக்குப் பயம். இதனால் ஒரு யுக்தி பண்ணினார். என்ன யுக்தி என்றால், ப்ராம்ம முஹூர்த்த* இருட்டிலே, கங்கையின் படித்துறையிலே, ராமாநந்தர் வருகிற வழியில் போய்ப் படுத்துக் கொண்டு விட்டார். உஷத்கால ஸ்நானத்துக்கு வந்த ராமாநந்தர் கவனிக்காமல் படியிலே கிடந்தவரை மிதித்து விட்டார். இதையே பாத தீக்ஷை என்று கபீர் எடுத்துக் கொண்டார். (‘தீக்ஷை’ விஷயத்துக்கு அப்புறம் வருகிறேன்) மிதித்தவுடன் அது ஒரு மனுஷ்ய சரீரம் என்று ராமாநந்தருக்குப் புரிந்துவிட்டது. அபசாரமாக ஒன்றைப் பண்ணிவிட்டால் உடனே பிராயச்சித்தமாக "சிவ சிவ" என்றோ "ராம ராம" என்றோ சொல்வதுதானே வழக்கம்? இவர் பேரே ராமாநந்தராயிற்றே! ஒரு ஜீவனைக் காலால் மித்தித்துவிட்டோமே என்று பதறினவர், "ராம ராம" என்று சத்தம் போட்டுச் சொல்லிவிட்டார். கபீர்தாஸ் அதையே உபதேசமாக எடுத்துக் கொண்டுவிட்டார். தன் நிமித்தமாக அவரை எப்படியாவது ராம நாம தாரக மந்த்ரத்தைச் சொல்ல வைத்துவிட்டால் அதுவே தனக்கு உபதேசம்

என்றுதான் இப்படி வேண்டுமென்றே அவர் மிதிக்கும்படியாக வந்து இவர் படியிலே கிடந்தது!

எதற்குச் சொன்னேனென்றால் குரு வாய் வார்த்தை சொல்ல வேண்டுமென்றில்லாவிட்டாலும் அநேகமாக இப்படிப்பட்டவருக்குக் கூடச் சிஷ்யரிடம் மந்த்ரோபதேசம் என்ற ஒன்றினால்தான் ஒரு ஜீவ ஸம்பந்தமுண்டாகிறது. இந்த மந்த்ரோபதேசத்தைத்தான் 'வார்த்தை', 'திருவார்த்தை' என்றெல்லாம் சொல்வார்கள். 'ஒரு வார்த்தை' என்றும் பாடல்களில் வரும் – அதாவது வேறே வார்த்தைகள் எதுவும் உபதேசத்துக்கு வேண்டாவிட்டாலும் மந்த்ரம் என்கிற ஒரே ஒரு வார்த்தை மட்டும் வேண்டும் என்று அர்த்தம். "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்கினர்க் (கு) **ஓர் வார்த்தை** சொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமானவர் இதைத்தான் சொல்கிறார்.

ஆகையினாலே மந்த்ரம் உபதேசிக்கிறவர் குரு என்று ஏற்பட்டிருக்கிறது. உள்பெருமை உள்ள ஒரு மஹானை குரு என்பது அவர் வெளியில் ஒரு சிஷ்யனுடன் ஸம்பந்தப்படும் போதுதான். இந்த ஸம்பந்தம் முக்யமாக மந்த்ரோபதேசத்தாலேயே ஏற்படுகிறது. குரு என்பவர் ஒரு ஸமயத்தில் மந்த்ரத்தை உபதேசித்துவிட்டால் போதும். அப்புறம் கூடவே சிஷ்யனை உட்கார்த்தி வைத்துக்கொண்டு, அவனுக்கு விஸ்தாரம் பண்ணி, அவனை அப்யஸிக்கப் பண்ண வேண்டும் என்றில்லை. இப்படி **long-term training** கொடுப்பதென்பது ஆசார்யனுக்குத்தான் ஏற்பட்ட பொறுப்பு. மஹானான குரு அகஸ்மாத்தாகச் செய்கிறது போலக்கூட ஒரு மந்த்ரத்தைச் சொல்லிவிட்டு, அவர் பாட்டுக்குப் போய்விடுவார். ஆனாலும் அதனாலேயே ஸூக்ஷ்மமாக அவருக்கும் சிஷ்யனுக்கும் 'லிங்க்' ஏற்பட்டு, மந்த்ரத்தின் மூலமாக அநுக்ரஹ சக்தி (அநுக்ரஹத்தின் மூலமாக மந்த்ர சக்தி என்றும் சொல்லலாம்) சிஷ்யனுக்குள் வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

ரொம்பவும் உசந்த குருவாயிருந்தால், அல்லது சிஷ்யன் ரொம்ப பக்வியாக (பக்குவமானவனாக) இருந்தால் இந்த மந்த்ர ரூபமான வாயுபதேசம் கூட வேண்டியதில்லை. ஆனாலும் ஏதோ ஒரு தினுஸில் 'லிங்க்' இருக்க

வேண்டுமென்றேனே, அது இங்கே வேறெப்படி ஏற்படும்? குரு இவனை ஒரு பார்வை பார்த்து விட்டாலே போதும். அதுவே உபதேசந்தான். அந்தக் கடாக்ஷம் இவனுக்கு உள்ளே போய் வேலை செய்ய ஆரம்பித்துவிடும் அல்லது அவர் இவனைத் தொட்டுவிட்டால் அந்த ஸ்பரிசமே உபதேசமாகிவிடும். இதெல்லாங்கூட வேண்டாம், 'இந்தக் குழந்தை நன்.....னா இருக்கணும்' என்று அவர் நினைத்துவிட்டாலே போதும்; அதுவே உபதேச "லிங்க்" தான்.

---

*ஸூர்யோதயத்துக்கு முற்பட்ட முஹூர்த்தம். முஹூர்த்த காலம் என்பது இரண்டு நாழிகை (48 மினிட்) ஆயினும், பிராம்ம முஹூர்த்தம் என்பது பொதுவில் ஐந்து நாழிகை (இரண்டு மணி) கொண்டதாகக் கருதப்படுகிறது. ஆறு மணிக்கு ஸூர்யோதயமெனில் நாலு மணியிலிருந்து பிராம்ம முஹூர்த்தம்.

2.5-தீக்ஷை

இப்படி குரு-சிஷ்யாளுக்கு இடையில் ஏற்படும் தொடர்பை நான் "உபதேசம" என்று சொன்னாலும் சாஸ்த்ரத்தில் இதற்குச் சொல்லியிருக்கிற வார்த்தை (**technical term**) "தீக்ஷை" என்பதேயாகும். 'தீக்கை' என்று தமிழில் சொல்லியிருக்கும். 'இனிஷியேஷன்' என்கிறார்கள். குருவிடமிருந்து எது புறப்பட்டுப் போய், சிஷ்யனுக்குள்ளே புகுந்து, அவனை ஒரு மார்க்கத்தில் தீவிரமாக தூண்டிச் செலுத்துகிறதோ அதற்கு "தீக்ஷை" என்று பெயர். இப்படி ஒரு மார்க்கத்தில் சிஷ்யன் பிரவேசிப்பதற்கு ஆரம்ப சக்தியாக இருப்பதால்தான் 'இனிஷியேட்' பண்ணுவது என்கிறார்கள். ஆனால் ஆரம்பித்து வைத்துவிடுவதோடு (இனிஷியேட் பண்ணுவதோடு) அந்த சக்தி தீர்ந்து போய்விடுவதில்லை. ஆரம்பித்து வைத்த பிறகு வழி நெடுகவும் கூட வந்து துணை செய்து, மேலே மேலே போகப் பண்ணி, லக்ஷ்யத்தை அடைந்து ஸித்தி பெறவும் வைக்கிறது.

மந்த்ர ரூபமாகவோ, ஒரு கடாக்ஷமாகவோ, ஸ்பர்சமாகவோ, அநுக்ரஹ ஸ்மரணத்தினாலோ க்ஷண காலம் இப்படி ஒரு குரு ஒருத்தனோடு 'லிங்க்' பண்ணிக் கொண்டு விட்டாலும், அதுவே சாஸ்வதமாக அவருடைய அநுக்ரஹத்தை இவனுக்குக் கொடுத்துக் கொண்டு 'பெர்மனென்ட் கனெக்க்ஷ'னாக இருக்கும் – ஒரு தடவை ஸ்விட்சைத் தட்டிவிட்டு விட்டால் பல்ப் அது பாட்டுக்கு எரிந்து கொண்டேயிருக்கிறாற்போல! 'கைவல்ய நவநீதம்' முதலான புஸ்தகங்களில் இந்த ஸ்பர்ச, கடாக்ஷ, ஸ்மரண தீக்ஷைகளை [முறையே] ஹஸ்த, நயன, மானஸ தீக்ஷைகள் என்று சொல்லியிருக்கிறது.

ஆசார்யர் என்பவர் ஸ்தூலமாக சிஷ்யனிடம் **long-term contact**(நீண்டகாலத் தொடர்பு) வைத்துக் கொண்டு அவனைப் படிப்பிலும் நடத்தையிலும் **train** பண்ண வேண்டியவர். குருவுக்கோ சிஷ்யனிடம் ஸ்தூலத் தொடர்பு ரொம்பவும் கொஞ்சகாலம் இருந்தால் போதும்; அல்லது அதுவுங்கூட இல்லாமலுமிருக்கலாம். ஆனால் தீக்ஷையின் மூலமாக அவருக்கும் சிஷ்யனுக்கும் ஏற்பட்ட ஸூக்ஷ்மமான **contact** –ஓ(தொடர்போ) **long term** க்கும் மேலே; அது **life -long** ஆனது [வாழ்க்கை முழுதற்குமானது] ; **life circle** எல்லாம் போய், ஜன்மங்கள் எல்லாம் தீர்ந்து சிஷ்யன் ஸித்தி பெறுகிற வரையில் நீடிக்கிற **contact** இது.

இப்படி தீக்ஷை தருகிறதுதான் குருவுக்கு முக்யமான லக்ஷணமாய் நினைக்கப்படுகிறது. தீக்ஷா குரு, குருதீக்ஷை என்றே சொல்கிறது வழக்கம். தீக்ஷை கொடுப்பவரையே குரு என்பது வழக்காயிருக்கிறது. பழையகால இதிஹாஸம், புராணம், காவியம் இவைகளைப் பார்த்தால் தகப்பனாரையே குரு என்று சொல்லியிருக்கும். தகப்பனாராக இருக்கப்பட்டவனுக்கு குருவுக்கு இருக்க வேண்டிய உள்பெருமை, கனம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், புத்ரனைப் பொறுத்தமட்டில் பிதா தெய்வத்துக்கு ஸமானமல்லவா? "முன்னறி தெய்வம்" அல்லவா? அதனால் இப்படி அவரை குரு என்று உயர்த்திச் சொல்லியிருக்கலாம். இதே மாதிரி, பாடம் சொல்லிக் கொடுக்கிற வாத்தியாரும், ***"எழுத்தறிவித்தவன் இறைவன்"*** என்கிறாற்போல தெய்வமாக நினைக்கப்பட வேண்டியவர்; ***"பித்ரு தேவோ பவ"*** வுக்கு அடுத்தே "ஆசார்ய

தேவோ பவ" என்றும் வேதம் ஆக்ஞை செய்திருக்கிறது! அதனால் இவரையும் 'குரு' என்று பெருமைப்படுத்துவதாக ஏற்பட்டிருக்கலாம். பிதாவை குரு என்பதற்கு இன்னொரு காரணமும் தோன்றுகிறது. ஒரு ஜீவனுக்கு முதல் உபதேசம் எது? காயத்ரீதான். அந்த மந்த்ரத்தை உபதேசம் (ப்ரஹ்மோபதேசம்) செய்வது பிதா தானே? அதாவது காயத்ரீ மந்த்ர தீக்ஷை அப்பாதான் பண்ணுகிறார். இப்படி தீக்ஷை தருவதாலேயே அவரை 'குரு' என்கிற வழக்கம் உண்டாயிருக்கலாம். காயத்ரீ உபதேசத்தில் அதிகாரமில்லாதவர்களுக்கும்கூட அக்ஷராப்யாஸம் என்பது இருக்கிறது. அப்போது அஷ்டாக்ஷரமோ, பஞ்சாக்ஷரமோ உபதேசித்து அப்பன்காரன்தான் பிள்ளையை 'ஆனா' எழுத வைக்கிறான். இந்த மந்த்ரோபதேசத்தாலேயே குரு ஆகிவிடுகிறான்.

உள்ளநுபவ கனமும் பெருமையும் இல்லாதவனான தகப்பனாரையோ, வாத்தியாரையோ குருவாக நினைத்து சரணாகதி செய்து விட்டாலும், அந்த சரணாகதியின் கனத்தாலும் பெருமையாலுமே இப்படிப்பட்ட யோக்யதைக் குறைச்சலான குருவிடமிருந்தும் ஞானத்தைப் பெற்றுவிடலாம். அதாவது அநுக்ரஹிக்க வேண்டும் என்ற எண்ணங்கூட இல்லாத மஹா அநுபவியான குரு மூலம் அநுக்ரஹத்தைச் செய்கிற அந்த பகவானே, கொஞ்சங்கூட அநுக்ரஹ சக்தி இல்லாத இந்த குரு மூலமாகவும் சிஷ்யனுடைய சரணாகதியை மெச்சி அருள் புரிந்து விடுவான்*. குரு என்று ஆச்ரயிக்கப்படுபவர் அபாத்ரராயினும் அவரிடம் அந்தரங்க விஸ்வாஸம் வைத்து, அவர் என்ன செய்தாலும் அவருடைய பெருமைக்குக் குறைவாகப் பேசாமலும் நடக்காமலும் ஒரு சிஷ்யன் இருந்துவிட்டால், அந்த குரு உய்வு பெற்றாலும் பெறாவிட்டாலும், இந்த சிஷ்யன் உய்வு பெற்று விடுவான்.

இப்படிப்பட்ட குரு பக்தியை நினைக்கும்போது எனக்கு ஒரு ஸம்பவம் ஞாபகம் வருகிறது. ஒரு தரம் மடத்துப் பாடசாலைப் பசங்கள் – சின்ன வயசுப் பசங்கள் – இரண்டு பேரிடம், வாத்தியார் வந்துவிட்டாரா என்று கேட்டேன். ஒரு பையன் வரவில்லை என்றான். மற்றவன் வந்துவிட்டார் என்றான். அப்புறம் முதல் பையன் சொன்னதுதான் நிஜம் என்று தெரிந்தது. நான் இரண்டாவது பையனிடம், "ஏன் பொய் சொன்னே? பொய் சொன்னா தப்பில்லையா?" என்று கேட்டேன். அதற்கு அவன் தைரியமாக, "பாட நேரம்

வந்தும் வாஸ்தவத்தில் வாத்தியார் வராமலிருந்தாரென்றாலும், அவர் வரவில்லை என்று சொன்னால் குருவின் தப்பை வெளியிலே சொன்னதாகும். பொய் சொல்வதைவிட இப்படி குருவுக்குத் தப்பு சொல்வதுதான் பெரிய தப்பு என்பதாலேயே அப்படிச் சொன்னேன்" என்றான். நானும் அவன் பண்ணினதை ஸரி என்று ஒப்புக் கொண்டேன். குரு பக்தி விசேஷத்துக்காகச் சொன்னேன். குரு எப்படியிருந்தாலும் அவருக்கு ஆத்மார்ப்பணம் பண்ணிவிட்டால், குருவால் எது கிடைக்க வேண்டுமோ அது ஈஸ்வர ப்ரஸாதமாகச் கிடைத்துவிடும்.

நாமே ஒன்றைப் படித்துத் தெரிந்துகொள்ளும் போது அதில் இந்த சரணாகதி, ஸமர்ப்பண புத்தி **surrender** பண்ணுவதில் இருக்கிற **humility**(விநயம்) இதெல்லாம் இல்லை. நாமாகவே படித்துப் புரிந்து கொள்வதில் இதற்கெல்லாம் நேர்மாறாக அஹங்காரமே உண்டாக இடமிருக்கிறது. வித்யை நிஜமான வித்யையாக இருந்தால் அஹங்காரத்தைப் போக்கத்தான் வேண்டும். அதனால்தான், தானே ஒரு வித்தையைக் கற்பது, தானே ஒரு மந்த்ரத்தை எடுத்துக் கொள்வது, தானே ஒரு புண்ய கர்மாவைப் பண்ணுவது எல்லாம் சாஸ்திரத்தில் விலக்கப்பட்டு, குரு முகமாக உபதேசம் வாங்கிக் கொண்டே இவற்றைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தானாகவே படித்தும் தெரிந்து கொள்ளலாம் தான்; ஆனாலும் இந்த அறிவு ஆத்மாபிவிருத்திக்குப் பிரயோஜனப்படாது என்பதை ஒரு உபமானத்தால் சுரீலென்றே மனஸில் தைக்கிறாற்போலச் சொல்லியிருக்கிறது – இது ஜாரபுருஷனிடம் புத்ரனைப் பெற்றுக் கொள்கிற மாதிரி; புத்ரன்தான் என்றாலும் அவன் வைதிக கர்மா எதற்கும் உதவாதது போல என்று.

பூர்ண யோக்யதை பெற்ற குரு -அதாவது கனமான உள்ளநுபவம் பெற்றவர் – எந்த விதமான தீக்ஷையும் தரவேண்டுமென்றில்லா விட்டாலுங்கூட **rare exception** [அஸாதரணமான விதிவிலக்கு] தவிர அவராலும் ஏதாவது ஒரு தீக்ஷை நடக்கிறதென்று சொன்னேன் அல்லவா? இதில் வாக்கால் கொடுக்கிற தீக்ஷைதான் மந்த்ரோபதேசம்; மந்த்ர தீக்ஷை என்பது. த்ருஷ்டியால் (பார்வையால்) தீக்ஷை தருவது சக்ஷு தீக்ஷை; நயன தீக்ஷை என்றும்

சொல்வார்கள். தொடுவதால் தீக்ஷை தருவது ஸ்பர்ச தீக்ஷை. ஹஸ்த தீக்ஷை என்று சொல்வது இதைத்தான்.

இதிலே பல வகை உண்டு. குரு சிஷ்யனின் தலையைத் தம் கையால் தொட்டுத் தம் **spiritual energy** –யை [ஆத்ம சக்தியை] அவனுக்குள் செலுத்துவதற்கு ஹஸ்த மஸ்தக தீக்ஷை என்று பெயர். (எல்லா தீக்ஷையிலுமே குரு தம்முடைய அநுபவ சக்தியை சிஷ்யனுக்கு ஊட்டுகிற தியாகத்தைதான் செய்கிறார்.) பாதத்தால் சிஷ்யனை ஸ்பர்சிப்பது பாத தீக்ஷை. (கபீர்தாஸ் ராமாநந்தரிடம் பாத தீக்ஷை, மந்த்ர தீக்ஷை இரண்டும் பெற்றதாகிறது!) குரு தம்முடைய பாதத்தை சிஷ்யனுடைய அங்கங்களில் குறிப்பாக சிரஸில் வைப்பதைத்தான் ரொம்பப் பெரியப் பேறாகக் கருதுவது. 'திருவடி தீக்கை' என்று இதைச் சொல்வார்கள். குருபாதம் எப்போதுமே சிரஸில் இருப்பதாக தியானம் செய்ய வேண்டும். இது வெறும் வார்த்தையாக, பாவனையாக இல்லாமல், எல்லா குருவுக்கும் மூலகுருவான ஈசனின் இணையடிகள் தங்கள் தலையிலேயே இருப்பதை அநுபவித்து அறிந்தவர்களைத் தான் "அடியார்" என்பது; `பாதர்', `ஸ்ரீசரணர்' என்று ஸம்ஸ்க்ருதத்திலும் சொல்கிறது வழக்கம். 'பகவத்பாதர்' என்றால் பகவானின் பாதத்தை தரித்து அதுவாகவே ஆனவர். அதனால் அந்த பகவத்பாதரையே நாம் சிரஸில் தரிக்கணும்.

ரொம்ப உயர்ந்த, பக்வ நிலையில் குரு நேரே வாயால் உபதேசிக்க வேண்டாம், பார்க்க வேண்டாம், தொடவேண்டாம், அவர் எங்கேயோ இருந்துகொண்டு ஒருத்தனை நினைத்துவிட்டாலே அது மானஸ தீக்ஷையாகி இவனைத் தூக்கிவிட்டு விடும்.

---

*"தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியிலுள்ள "சரணாகதியே முக்கியம்" என்ற உரை பார்க்க.

2.6-அம்பிகை அருளும் தீக்ஷைகள்

அம்பாள்தான் ஞானம். ஸத்-சித்-ஆனந்தம் என்று அடிக்கடி கேள்விபடுகிறோமே, அதில் சித் என்கிற பேரறிவான ஞானம் அம்பிகைதான். சைதன்ய ரூபிணி என்பார்கள். "சிதேக ரஸ ரூபிணி" என்று [லலிதா] ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. காளஹஸ்தியில் ஞானாம்பாள் என்றே அவள் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள்.

அம்பாள்தான் குரு ரூபத்தில் வருபவள் என்று பெரியவர்கள் அநுபவத்தில் சொல்லியிருக்கிறார்கள். காளிதாஸன் ['நவரத்ந மாலிகா'வில்] **"தேசிக ரூபேண தர்சிதாப்யுதயாம்"** என்கிறார். அம்பாள் தன்னுடைய காருண்ய விலாஸத்தை குரு ஸ்வரூபமாக வந்தே காட்டுகிறவள் என்று அர்த்தம். 'தேசிக' என்பதும் குரு, ஆசார்ய என்பவை போல நம்மை நல்ல வழிக்கு நடத்திக் கொண்டு போகிறவரைக் குறிக்கும் இன்னொரு வார்த்தை. [வைஷ்ணவர்களில்] வடகடலை ஸம்ப்ரதாயத்துக்கு மூலபுருஷரை வேதாந்த **தேசிகர்**என்றே சொல்கிறோம். அந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் தேசிகர் என்று 'ர்' போடாமல், தேசிகன் என்று 'ன்' போட்டே சொல்வார்கள். ரொம்பவும் மரியாதை முற்றி அன்பு மேலிடுகிறபோது ஏகவசனம்தான் வந்துவிடும். பகவானையே 'நீ' என்றுதான் சொல்கிறோம்; `நீங்கள்' என்பதில்லை. அப்படி தேசிகரை தேசிகன் என்றே அவரை அநுஸரிப்பவர்கள் பிரேமையினால் சொல்வார்கள். நம் பகவத்பாதாளை அவர் காலத்திலேயே அவருடைய நேர் சிஷ்யரான தோடாகாசார்யார் ஸ்தோத்திரித்தபோது, ***"சங்கர தேசிக மே சரணம்"*** என்றே ஒவ்வொரு அடியிலும் முடித்திருக்கிறார்*.

அம்பாள் தேசிக ரூபத்தில் வந்து ஞானம் தருவதாகச் சொல்லியிருக்கிறது. குறிப்பாக ஸ்பர்ச தீக்ஷை, நயன தீக்ஷை, மானஸ தீக்ஷை ஆகியற்றில் ஒவ்வொன்றையும் அவள் ஒவ்வொரு ரூபத்தில் செய்வதாகச் சொல்வார்கள்.

இங்கே இன்னொன்று சொல்ல வேண்டும். ஸ்பரிச தீக்ஷைக்குக் 'குக்குட தீக்ஷை' என்று இன்னொரு பெயர். 'கோழி தீக்ஷை' என்று அர்த்தம். நயன தீக்ஷைக்கு 'மத்ஸ்ய தீக்ஷை' [மீன் தீக்ஷை] என்றும் பேர். மானஸ தீக்ஷைக்குக் 'கமட தீக்ஷை' என்று பேர். 'கமடம்' என்றால் ஆமை.

கோழி, மீன், ஆமை என்று தீக்ஷைகளைச் சொல்வது வேடிக்கையா யிருக்கிறது. ஆனால் வேடிக்கைக்குள்ளே தத்வார்த்தம் நிரம்ப இருக்கிறது.

ஒரு தீக்ஷையானது நிஜமான சக்தி வாய்ந்ததாக இருந்தால், சிஷ்யனுக்கு இதுவரை இருந்த அசட்டு வாழ்க்கை அதோடு முடிந்து, அவன் பாரமார்த்திகமாக ஒரு புது வாழ்க்கை ஆரம்பித்துவிடுவான். அதாவது அது உசந்ததாகப் புனர்ஜன்மா எடுக்கிற மாதிரியாகும். காயத்ரீ தீக்ஷையானவுடன் இப்படித்தான் ஒருவன் பிராம்மணனாக இரண்டாம் ஜன்மா எடுக்கிறானென்ற அர்த்தத்தில், அவனுக்கு 'த்விஜன்' என்றும், `இருபிறப்பாளன்' என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது.

இப்படி தீக்ஷைக்கு முன்னாலே ஒரு ஜன்மா, அப்புறம் முற்றிலும் வேறான இன்னொரு ஜன்மா என்று சொல்வது அவ்வளவு ஸரியில்லை என்கிற அபிப்ராயத்தில் இன்னொரு விதமாகவும் சொல்கிறதுண்டு. இதன்படி, இப்போது ஒருத்தன் எடுத்திருக்கிற ஜன்மாவிலே அவன் அசட்டு அஞ்ஞான ஸ்திதியிலிருந்தாலும் இப்போதுங்கூட உள்ளுக்குள்ளே பிரம்மத்தோடு பேதமில்லாத ஆத்மாவாகத்தானிருக்கிறான். ஆனால் இப்போது இது இவனுக்குத் தெரியாமல் ஒரு கருவை அது முட்டையாயிருக்கும்போது ஓடு மறைக்கிறது போல, அஞ்ஞான ஓடு மூடி மறைத்திருக்கிறது. குரு என்பவர் தீக்ஷை என்பதன் மூலம், தாய்ப் பறவை முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரிப்பது போல, இவனுடைய அஞ்ஞான ஓடு பிளந்து, இவன் தன் ஸத்ய நிலையை உணர்ந்த பக்ஷியாகப் பிறக்கச் செய்கிறார் என்பார்கள். அதாவது இரண்டு வெவ்வேறு ஜன்மாக்கள் இல்லை; தீக்ஷைக்கு முன்னே முட்டைக்கரு போல முடங்கிக் கிடந்த நிலை; அதற்குப் பிற்பாடு அதுவே ஸ்வதந்திரமாகப் பறக்கும் நிலை.

தாய், முட்டையைக் குஞ்சு பொரிப்பதில் மூன்றுவகை சொல்கிறார்கள். இங்கேதான் கோழி, மீன், ஆமை மூன்றும் வருகின்றன. தாய்க்கோழி என்ன செய்கிறது? முட்டையின் மேலேயே உட்கார்ந்து, அதாவது அதன் மேல் தன் ஸ்பரிசம் நன்றாகப் படும்படி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது. இதுதான் ஸ்பரிச தீக்ஷை – குரு சிஷ்யனைத் தொட்டு அவனுடைய அறியாமை ஓட்டைப் பிளக்கப் பண்ணுவது. குக்குட தீக்ஷை என்ற பெயர் இப்போது புரிகிறதல்லவா? மீன் ஜலத்துக்குள் முட்டை போடுகிறது. பிரவாஹத்தில் மீன் ஒரு இடமாக நிற்காமல் சஞ்சாரம் செய்துகொண்டேயிருக்கும். முட்டையும் ஓடுகிற ஜலத்தில் ஒரு இடத்தில் நிற்காமல் மிதந்துகொண்டே இருக்கும். தாய் மீன் முட்டையின் மேலே உட்கார்ந்து குஞ்சு பொரிப்பதில்லை. பின்னே என்ன செய்கிறது? இதைப்பற்றி பயாலஜி, ஜூவாலஜியில் என்ன சொல்வார்களோ, நம் சாஸ்திரங்களும் காவியங்களும் ஒரு மரபாகச் சொல்லி வருவதை நானும் ஒப்பிக்கிறேன். தாய் மீன் என்ன செய்யுமென்றால், முட்டையைத் தன் கண்ணால் தீக்ஷண்யமாகப் பார்க்குமாம். உடனே முட்டையை உடைத்துக் கொண்டு மீன் குஞ்சு வெளியில் வந்து விடுமாம். குரு கடாக்ஷம் செய்கிற நயன தீக்ஷையை மத்ஸ்ய தீக்ஷை என்பது இதனால்தான். கமட தீக்ஷை, அதாவது ஆமை தீக்ஷை என்றேனே அது என்ன? ஜலத்திலே இருந்து தாய் ஆமை கரைக்கு வந்து முட்டையிட்டுவிட்டு, அப்புறம் ஜலத்துக்குள்ளேயே எங்கேயோ போய் விடுமாம். முட்டை ஒரு இடத்தில் கிடக்க, தாயோ எங்கேயோ போயிருக்குமாம். ஆனாலும் அது முட்டை குஞ்சு ரூபமாக நல்லபடி பொரிய வேண்டுமே என்ற சிந்தனையாகவே இருக்குமாம். அதனுடைய அந்தத் தீவிர நினைப்பின் சக்தியிலேயே இங்கே முட்டை வெடித்துக் குஞ்சு வெளியே வந்துவிடுமாம். இதுதான் குரு செய்கிற மானஸ-அல்லது கமட தீக்ஷை. அம்பாள் இந்த மூன்று தீக்ஷைகளை அளிப்பது எப்படி?

அம்பாளுக்கு கண்ணழகை, கடாக்ஷ விசேஷத்தை வைத்து மூன்று பிரஸித்த க்ஷேத்ரங்களில் மூன்று விதமான ரூபங்கள் இருக்கின்றன. காமாக்ஷி, மீனாக்ஷி, விசாலாக்ஷி என்னும் ரூபங்கள். காஞ்சீபுரத்தில் காமாக்ஷியாகவும், மதுரையில் மீனாக்ஷியாகவும், காசியில் விசாலாக்ஷியாகவும் இருக்கிறாள்.

மூன்றிலும் கண்ணழகு, கடாக்ஷ விசேஷம் என்று சொன்னாலும் மூன்றிலுமே நயன தீக்ஷை தருகிறாள் என்று சொல்வதில்லை. மீன்தானே நயன தீக்ஷைக்குச் சொன்னது? மீனாக்ஷி என்ற பெயரிலேயே மீன் இருக்கிறதே! இதனால் அவளைத்தான் கடாக்ஷத்தாலேயே ஞான தீக்ஷை தந்துவிடும் குருவாகச் சொல்லியிருக்கிறது. இது மத்ஸ்ய தீக்ஷை. காமாக்ஷி பக்தனை ஸ்பரிசித்து, அவன் தலையிலே பாதத்தை வைத்து ஞானியாக்கிவிடுபவள். **"ஸௌந்தர்யலஹரி"** ஸ்தோத்திரிக்கிற மூர்த்தி காமாக்ஷி தான்-கரும்பு வில், புஷ்ப பாணம், பாச அங்குசத்தோடு சதுர்புஜையாக இருக்கிற மூர்த்தி. அதிலே ஒரு ஸ்லோகத்தில்*ஆசார்யாள் அம்பாளிடம், "வேதங்கள் உபநிஷத்து என்கிற தங்களுடைய சிரஸிலே தாங்கிக் கொண்டிருக்கிறவையான உன்னுடைய திருவடிகளை என் தலையில்கூட தயையினால் வையம்மா!" என்று பிரார்த்திக்கிறார்.

ச்ருதீநாம் மூர்தாநோ தததி தவ யௌ சேகரதயா
மமாப்யேதௌ மாத : சிரஸி தயயா தேஹி சரணௌ |

உபநிஷத்துக்கள்தான் வேதாந்தம் என்பது. ஆசார்யாளின் அத்வைதமான ஞானமார்க்கத்துக்கு வேதாந்த ஸம்ப்ரதாயம் என்றே பெயர். அதனால் இங்கே ஆசார்யாள் ஞான குரு ரூபிணியாகவே அம்பாளை பாவித்துத் திருவடி தீக்ஷை வேண்டுகிறார் என்று ஆகிறது. அதற்குக் காமாக்ஷியிடம் ஸ்பர்சமான குக்குடதீக்ஷை கேட்டிருக்கிறார். காசியிலே இருக்கப்பட்ட விசாலாக்ஷி பக்தர்களை அநுக்ரஹ சிந்தையோடு மனஸால் நினைத்தே ஞானம் அளித்துவிடும் கமட தீக்ஷை குருவாயிருப்பவள்.

---

*ஒரு தேசத்தின் எல்லா இடங்களையும் அறிந்து பிறருக்கு வழிகாட்டுபவருக்கு தேசிகன் எனப் பெயரென்றும், இதுவே உவமையாகு பெயராக ஒரு சாஸ்திரத்தின் எல்லா நுட்பங்களையும் அறிந்து அம்மார்க்கத்தில் பிறருக்கு வழி காட்டியாயிருக்கும் ஆசாரியருக்கும் பொருத்தப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

* "ச்ருதிநாம் மூர்தாநோ" என்று தொடங்கும் 84-வது ஸ்லோகம். இது குறித்த சில விவரங்கள் "தெய்வத்தின் குரல்" முதற் பகுதியில் "ஆசாரியாள் காட்டும் அம்பாள்" என்ற உரையில் காணலாம்.

2.7-ஒரே நிறைவுக்குப் பல மார்க்கங்கள்

இப்படி தீக்ஷையில் பல விதம். தீக்ஷையினால் சிஷ்யனைச் செலுத்துகிற மார்க்கங்களும் பல விதம். கடைசியில் போய் சேருகிற இடம் ஒன்றேயானாலும், ஆரம்பத்தில் தீக்ஷையால் தூண்டிவிடுகிற போது – 'இனிஷியேட்' பண்ணுகிறபோது – பல மார்க்கங்களில் பல குருமார்கள் செலுத்துகிறார்கள். ஒரே குருவேகூட வெவ்வேறு சிஷ்யர்களை வெவ்வேறு மார்கங்களில் இனிஷியேட் பண்ணுவதுமுண்டு. ஆனால் ஆசார்யர் என்றால் அவர் ஒரு ஸிஸ்டத்தில்தான் பண்ணுவார். ஒரு குரு ஒரே [சிஷ்யனுக்குக்கூட அவனுடைய மனோவ்ருத்தியை [மனப்போக்கை]ப் பொருத்தும், ஸாதனையில் அவனுடைய அபிவ்ருத்தியைப் பொருத்தும் வேறு வேறு காலங்களில் வெவ்வேறு மார்க்கங்களில் தீக்ஷை கொடுத்துக் கொண்டே போகலாம்.

இப்படி மந்த்ர சாஸ்திரம், தந்த்ர சாஸ்திரம், யோக சாஸ்திரம், த்வைத-அத்வைத சாஸ்திரங்கள் என்று பலவற்றில் தீக்ஷை தருகிற குருமார்கள் இருக்கிறார்கள். தாயுமானவர் இப்படி எல்லா குருவாகவும் இருந்ததாக தம்முடைய ஒரே குருவைச் சொல்லி முடிவாக, *"மூலன்மரபில் வரு மௌனகுருவே!"* என்று முடிக்கிறார். 'திருமந்திரம்' செய்த திருமூலர் அந்த நூலில் எல்லா மார்க்கத்தையுந்தான் சொல்லி யோக-ஞானங்களில் முடிக்கிறார். அவரிலிருந்து ஆரம்பித்தது ஒரு குரு பரம்பரை. அவர்களில் திருச்சிராப்பள்ளியில் மடம் ஏற்படுத்திக் கொண்ட ஸாரமா முனிவர் ஒருவர். இந்த மடத்தில் பட்டத்துக்கு வந்தவர்களில் ஒருவரான மௌன குரு ஸ்வாமிகள் என்பவர்தான் தாயுமானவருக்கு குரு. தாயுமானவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு. (மௌன குரு ஸ்வாமிகளுக்குப் பிறகு அந்த மடம் தர்மபுர ஆதீனத்தின் பராமரிப்பில் வந்துவிட்டது.)

தாயுமானவர் இங்கே தம்முடைய நேர் குருவான மௌன குருவைச் சொன்னாலும், அவர் சொல்வது மற்ற எல்லா மார்க்கமும் மௌனத்தில்தான் கொண்டுவிடுகிறது என்று சொல்லி, இப்படி மௌன உபதேசத்தாலேயே பரம அத்வைதத்தை அநுக்ரஹிக்கும் தக்ஷிணாமூர்த்தியை ஸ்தோத்திரிக்கிறாற் போலவும் த்வனிக்கிறது. இவரே ***"சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே, சின்மயானந்த குருவே"*** என்றும் நிறையப் பாடி வைத்திருக்கிறார்.

அந்த மௌனந்தான் நம்முடைய நிஜமான இயல்பு. ஆனால் அதைத்தான், நம்முடைய நிஜமான நம்மையேதான், நாம் இழந்து, மறந்துவிட்டு, இல்லாத அவஸ்தைகளிலெல்லாம் மாட்டிக் கொண்டிருக்கிறோம். இதை மாயை என்கிறார்கள். மாயைதான் அம்பாள் என்கிறார்கள். அந்த அம்பாளே மாயையைப் போக்கடிக்க ஞானாம்பிகையாகவும் வருகிறாள். குருவாக வந்து ஞானத்தைப் புகட்டுகிறாள். தாயாரே குருவாகி ஞானப்பாலை ஊட்டுகிறாள். அவள் எல்லாவற்றிலும் தினுஸு தினுஸாகப் பண்ணிப் பார்த்து ஸந்தோஷிக்கிறாள். பக்ஷி என்றால் பல தினுஸு. மிருகங்களில் பல தினுஸு. புஷ்பம் என்று எடுத்துக் கொண்டால் அதில் முடிவே இல்லாமல் எத்தனை கலர் வகை, வாஸனை வகை, எத்தனைவிதமான 'ஷேப்'? இப்படியே மநுஷ்ய மனஸிலும் விசித்ர விசித்ரமாக எத்தனையோ ரகம். அது ஒவ்வொன்றுக்கும் 'ஸூட்' ஆகிறதற்காகத்தான் ஞானகுரு ஆசாரியர்களிலும் பலவிதமானவர்களை, பலவித ஸம்பிரதாயங்களைக் காட்டுபவர்களாக வைத்திருக்கிறாள். எத்தனை பேச்சு, வாதம், எழுத்து, க்ரியைகள் உண்டோ அத்தனையும் உள்ள குருவிலிருந்து மௌனகுரு வரையில் பல வகையாகக் காட்டுகிறாள். ஆனால் உள்ளே இத்தனை பேரும் ஒரே குருத்வத்தைதான் உடையவர்களாக இருப்பார்கள். ஸத்யம் ஒன்றாகத்தானே இருக்க முடியும்?

2.8-குரு-ஆசார்ய அபேதம்

ஆக, மொத்தத்தில் நான் சொன்னது; நமக்கு ஞானம் தருவதற்காக ஏற்பட்டவர் களையே குரு, ஆசார்யர் என்று இரண்டு பெயரில் சொல்வது. உள் பெருமையை வைத்து ஒருத்தரை குரு என்கிறோம். வெளிநடத்தை, படிப்பு,

வெளி மநுஷ்யர்களை **train** பண்ணுவது ஆகியவற்றில் இருக்கிற பெருமையை வைத்து இன்னொருத்தரை ஆசார்யர் என்கிறோம். ஒருத்தர் ஸிஸ்டத்துக்கு அதீதமானவர். இன்னொருத்தர் ஸிஸ்டத்திலேயே வருகிறவர். ஒருத்தர் அநுக்ரஹத்தாலேயே முக்யமாக ஞானம் தருகிறவர். மற்றவர் சாஸ்த்ர, ஸம்ப்ரதாய, ஆசார அநுஷ்டானம், வித்வத் இவற்றின் மூலம் ஞானம் பெற உதவி பண்ணுகிறவர்.

இப்படி இரண்டு பேராகச் சொன்னாலும், ஆசார்யர் என்பவர் பூர்ண யோக்யதை உள்ளவராக இருந்தாரானால் தாமே குருவாகவும் இருப்பார். அதாவது, தம்மைப் பொருத்தமட்டில் உள்ளுக்குள்ளே ஸிஸ்டம்கள் கடந்தவராக, ப்ரத்யக்ஷமாக ஈஸ்வரானுபவமும் ஆத்மானுபவமும் பெற்ற பெருமை வாய்ந்தவராக, அநுக்ரஹ சக்தி கூடியவராக இருந்துகொண்டே, வெளிநடத்தை படிப்பு இவற்றிலும் சிறந்தவராக இருந்துகொண்டு, ஒரு ஸிஸ்டத்துக்குக் கட்டுப்பட்டாற்போல் வாழ்ந்து காட்டிக் கொண்டு மற்றவர்களுக்கு வித்யை, ஆசரணை இவற்றை போதனை பண்ணி அவர்கள் அவற்றைப் பின்பற்றுமாறு செய்வார். நம்முடைய ஆசார்ய புருஷர்கள் யாவரும் இப்படி இருந்தவர்கள்தான். குருவின் க்ஷணகால அநுக்ரஹத்தாலேயே சுத்தியும் ஞானமும் பெறுகிற யோக்யதை உள்ளவர்கள் ரொம்பவும் ஸ்வல்பமே இருப்பார்களாதலால் இப்படி ஆசார்யனாக நீண்ட கால போதனை ஸிஸ்டமாடிக்காகச் செய்பவராகவே பொது ஸமூஹத்திற்காக ஒரு குரு இருப்பது வழக்கம்.

ஸரியாகப் புரிந்து கொண்டோமானால் ஒரு நிஜமான ஆசார்யன் குருவாக இல்லாமலிருக்க முடியாது. உள்ளுக்குள்ளே பெருமை இல்லாத ஒருத்தன் எப்படி வெளியிலே பெரியவனாக இருக்க முடியும்?

கட்டுப்பாடு என்ற feeling-ஓடு, அதாவது கட்டுப்பட்டிருக்கிறோம் என்ற feeling-ஓடு ஒரு ஆசார்யான் ஒரு ஸம்ப்ரதாயத்துக்கு – அதாவது தார்மிகமான ஸிஸ்டதுக்கு – அடங்கி, அதில், சொல்லியிருக்கிறபடி ஸதாசாரத்துடன், நன்னடத்தையுடன் வாழ்கிறானென்றால் அப்போது அவன் ஆசார்யனில்லை, மாணாக்கன்தான். எப்போது ஒழுக்கமான நடத்தை என்பது ஒரு சட்டமாக

வெளியிலிருந்து வந்து கட்டுப்படுத்தாமல், தன்னியல்பாகப் பின்பற்றபடுகிறதோ அப்போதுதான் அது சுத்தமான பூர்ண ரூபத்தில் பிரகாசிக்கும். கம்பல்ஸரியாக இல்லாமல் நாச்சுரலாக ஒழுக்க வாழ்வு வாழ்கிற போதுதான் அதில் ஸ்வதந்த்ரத்துக்கே உரிய ஸௌக்யமும் நிறைவும் இருக்கும். மனம்போனபடி திரிகிற நாம் முதலில் ஒரு கம்பல்ஷனின் கீழ்தான் ஒழுக்க நெறிக்கு உட்பட்டு நடக்க ஆரம்பிக்க வேண்டும். ஆனால் இப்படி கம்பல்ஷன் இருக்கிற வரையில் நாம் மாணவனாக, சிஷ்யனாக இருப்பவர்கள்தான். போகப் போக, எதை நிர்ப்பந்தமாக ஏற்றுச் செய்ய ஆரம்பித்தோமோ அதையே ஸ்வதந்த்ரமாக, நம் ஸ்வபாவமாக ஆக்கிக் கொண்டு செய்யத் தொடங்கி விடுவோம். இப்படி ஒழுக்கத்தை ஸ்வாபாவிகமாக்கிக் கொண்டு ஸ்வதந்த்ர ஸௌக்யத்துடனேயே ஒருத்தன் பின்பற்றுகிற போதுதான் அவனுடைய வாழ்க்கைக்கு மற்றவர்களையும் follow பண்ண வைக்கிற சக்தி உண்டாகும். இப்படிப்பட்ட நிலையிலிருந்துகொண்டு ஒருத்தன் போதனை பண்ணினால்தான் அது பிறரிடம் ஆழமாகப் பதிந்து அவர்களையும் அப்படியிருக்கத் தூண்டும்.

இப்போது ஆசார்யர்களின் இடத்திலிருக்கிற ஆசிரியர்களுக்கு அறிவு மட்டும் இருந்தால் போதும், அவர்களுடைய அநுஷ்டானத்தைப் பற்றிக் கவலையில்லை என்பதாயிருக்கிறது. பழைய நாளில் அநுஷ்டானமும் சேர்ந்தே ஒருத்தனை 'ஆசார்யன்' என்ற ஸ்தானத்துக்குத் தக்கவனாக ஆக்கிற்று. இந்த அநுஷ்டானம் என்பதும் முடிந்த முடிவு இல்லை; இது வெளிநடத்தைதான். அநுஷ்டானமும் பூர்த்தியாகிற இன்னொரு இடம் உண்டு. அந்த இடம்தான் அநுபவம், ஸ்வாநுபூதி. அந்த அநுபவம் ஏற்பட்டால்தான் நன்னடத்தை என்பது ஸ்வபாவமாக அமையும். அதாவது வெறும் அறிவு எப்படி அநுஷ்டானத்தின் ஆதாரத்தில்தான் முழுமை பெறுகிறதோ, அப்படியே அநுஷ்டானமும் அநுபவத்தின் அஸ்திவாரத்தில்தான் பலமும் பூர்ண ரூபமும் பெறுகிறது. ஆகையால் அநுபவியாக இருக்கிறவன் குரு, அநுஷ்டாதாவாக இருப்பவன் ஆசார்யன் என்று 'டிஸ்டிங்க்ஷன்' சொல்வது ஸரியான விஷய ஞானத்தோடு செய்கிற பாகுபாடே இல்லை. ஆசார்யன் அரைகுறை அநுஷ்டாதாவாக இருக்க முடியாது. அநுபவம் வருகிறவரையில் அவன்

அரைகுறைதான் – ஒரு நிர்ப்பந்தத்தின் மேலேயே அநுஷ்டானம் பண்ணுபவனாகத் தானே இப்போது இருக்கிறான்? இதில் நிறை ஏது? குறைதான் இருக்கும்! எனவே அநுபவியாகவும் இருந்து கொண்டே அநுஷ்டாதாவாகவும் வாழ்ந்து காட்டுகிறவன்தான் நிஜமான ஆசார்யன் என்று ஏற்படுகிறது. எவன் உள்ளே வெளியிலே அநுஷ்டாதாவான ஆசார்யனாகவும் இருப்பது. எவன் உள்ளே ஸிஸ்டத்துக்கு அதீதமாயிருக்கிறானோ, அவனேதான் இஷ்டப்படி திரிகிறவர்களை ஒரு கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, அதற்குத் தானே மாடலாக வெளியிலே ஸிஸ்டப்படி இருக்கிறான். உள்ளே மௌனமாயிருந்து கொண்டே வெளியில் நிறைய உபதேசம், உபந்நியாஸம் செய்கிறான்.

குருவும் ஆசார்யனும் ஒரே ஆஸாமிதான். நிஜமான ஆசார்யன் என்றால் அவன் குருவாக இல்லாமலிருக்க முடியாது. விஷயமே தெரியாத நிலையில் நாம் குரு, ஆசார்யன் இரண்டையும் ஒன்றாக நினைத்துதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ”அப்படியில்லை; விஷயம் தெரிந்தவர்கள் இந்த இரண்டுக்கும் கொஞ்சம் வித்யாஸம் சொல்கிறார்கள்” என்று ஆரம்பித்தேன். அந்த வித்யாஸங்களையும் சொன்னேன். அப்புறம் விஷயம் தெரிந்தவர்களாக மட்டுமில்லாமல், அதன் ஆழத்துக்குப் போய்ப் புரிந்து கொள்ளப் பார்த்தால், மறுபடியும், ”வித்யாஸமே இல்லை. இரண்டும் ஒன்றுதான்” என்று தெளிவாவதை இப்போது பார்க்கிறோம்!

ஆதியிலிருந்தே, இப்படி குருவுக்கும் ஆசார்யனுக்கும் பேதம் கற்பிக்காததால்தான் இரண்டு வார்த்தைகளையும் synonymous-ஆக (ஒரே பொருள் உள்ளதாக)க் கருதி உபயோகித்திருக்கிறார்கள். வேதத்தின் சிரஸான உபநிஷத்தில், ”ஆசார்ய தேவோ பவ” என்றும், வித்யாப்யாஸ முடிவில் ‘ஆசார்ய’னுக்குப் பிரியமான தக்ஷிணையைத் தர வேண்டுமென்றும், எவன் ஆசார்யானை உடைய ‘ஆசார்யவானா’க இருக்கிறானோ அவனுக்கே ஞானமுண்டாகிறதென்றும் - எல்லா இடத்திலும் ‘ஆசார்ய’ சப்தமே சொல்லப்பட்டிருக்கிறது;’ குரு’என்று இல்லை. ஆனாலும் சிஷ்யர்கள் ஆசார்யனிடத்தில் போய் வஸித்து வித்யாப்யாஸம் பண்ணுவதற்கு ‘குருகுலவாஸம்’ என்றே பெயர் இருந்திருக்கிறது. ‘ஆசார்ய குருகுலவாஸம்’

என்று கேள்விப்பட்டதில்லை. ஆசார்யர்களுக்கு நன்றி தெரிவித்து ஆராதிக்கிற தினத்தை 'குரு பூர்ணிமை' என்று தான் சொல்கிறோம். வ்யாஸாசார்யாள், சுகாசார்யாள், கௌடபாதாசார்யாள், கோவிந்தபாதாசார்யாள், (சங்கர) ஆசார்யாள், ஸுரேச்வராசார்யாள், தோடகாசார்யாள், என்றெல்லாம் இருக்கும் ஆசார்யார்களைச் சேர்த்துச் சொல்கிற போது 'குரு பரம்பரா' என்று சொல்கிறோம். இப்படியே ராமாநுஜாசார்யார், வல்லபாசார்யார், மத்வாசார்யாரை சேர்ந்தவர்களும் சொல்கிறார்கள். ஆசார்ய புருஷர்களுக்கு நமஸ்காரம் பண்ணுவதை 'குரு வந்தனம்' என்றே சொல்கிறோம்.

பண்டைத் தமிழ் வழக்கு பூர்ணமாக வைதிகத்தை அநுஸரித்துதான் இருக்கும். ஆனதால் "மாத்ரு, பித்ரு, ஆசார்ய தேவோ பவ" என்ற வேத வாக்யத்தையொட்டித் தமிழில் "மாதா, பிதா, குரு, தெய்வம்' 'என்று சொல்கிற வழக்கம் ஏற்பட்டிருக்கிறதென்றால், ஆசார்யன் என்பவனே குருவாக இருந்திருக்கிறான் என்று தீர்மானிக்கிறது. (ஆசார்யன் என்பதை 'ஆசான்' என்று தமிழில் சொல்லியிருக்கும்.) ஸித்தாந்த சைவத்தில் மெய்கண்டாச்சாரியார், ஸமயாசாரியார், ஸந்தனாசாரியார், சிவாசாரியார் என்றெல்லாம் 'ஆசார்யப்' பெயரே கொடுத்துச் சொல்லுகிறார்களென்றாலும், இவர்களுடைய ஆராதனையை (நினைவு நாள் வழிபாட்டை) 'குரு' பூஜை என்று குறிப்பிடுகிறார்கள்.

2.9-ஆசானை ஈசனாக

ஆகையால், நம்மைப்போல பந்த நிலையிலில்லாமல் விடுபட்டு ஸ்வதந்திர புருஷராக இருக்கிற குருவேதான் நம்மை ஒரு ஒழுங்கிலே கட்டுப்படுத்துவதற்காகத் தாமும் அந்த ஒழுக்கத்தில் கட்டுப்பட்டு வாழ்ந்து காட்டி நமக்கு போதனை செய்கிற ஆசார்யராக இருக்கிறார் என்று புரிந்து கொண்டு நம்முடைய ஆசார்ய புருஷர்களிடம் பக்தி செலுத்த வேண்டும். ஈஸ்வரனேதான் இப்படி குரு, ஆசார்யர் என்ற ரூபத்தில் வந்து ஞானாநுக்ரஹம் செய்கிறான் என்று நினைத்து பக்தி பண்ணினால் பலன் சீக்கிரத்தில் கிடைக்கும். ஈஸ்வரன்தானே எல்லாமுமாகி இருப்பது? கல்லு,

மண்ணு எல்லாங்கூட அவன்தான். அதனால் ஆசார்ய ஸ்வரூபமாக, குரு வடிவாக இருப்பவன் அவன்தான் என்பதில் என்ன ஆக்ஷேபணை?

இப்படிப் பார்த்தால், நாம் மட்டும் அவனில்லாமல் யார் என்று கேள்வி வருகிறது. நாமே ஈஸ்வரன் என்கிறபோது ஆசார்யன் என்று இன்னொருத்தனை எதற்காக ஈஸ்வரனாக உபாஸிக்க வேண்டும் என்பது அடுத்த கேள்வி.

எல்லாம் அவன்தான் என்றாலும் ஒன்றுக்கும் தன்னுடைய ஈஸ்வரத்வம் தெரியவில்லையே! நமக்கு நம் ஈஸ்வரத்வம் கொஞ்சமாவது தெரிகிறதா? தெரிந்தால் இத்தனை ஆசை, கோபம், பயம், அழுகை, பொய், பாபம் இருக்குமா? அதனால் எல்லாம் அவன் என்றாலும், பூர்ணமான அவனாகத் தன்னைத் தெரிந்துகொள்ளாமல் அவனே போட்டுக் கொண்ட வேஷங்களாகத்தான் இருக்கின்றன. நாமெல்லாம் நன்றாக அஞ்ஞான வேஷம் போட்டுக்கொண்டு, மூல ஆஸாமியை அடையாளமே கண்டுகொள்ள முடியாதபடி ஆனவர்களாக இருக்கிறோம். ஆசார்யர் என்பவர் இத்தனை கோணா-மாணா வேஷமாக இல்லை. அவரிடம் ஆஸாமியை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. அதனால் அவரிடம் ஈஸ்வரத்வத்தை நாம் பக்தி பண்ணினால் கண்டு அநுபவிக்கலாம். நம்மிடமே தெரிந்து கொள்ள முடியாத தெய்வத்தன்மையை அவரிடம் ஸுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். பல தினுஸாக வேஷம் போடுகிற ஒரே ஈஸ்வரன்தான், ரொம்பவும் அசட்டு வேஷமான நம்மை சமர்த்தாக்குவதற்கே, ஸ்பெஷலாக ஆசார்ய வேஷத்தில் வந்திருக்கிறான். இப்படி உணர்ந்து அவரிடம் பக்தி பண்ணினால் அப்புறம் அங்கே வேஷத்தை முழுசாகவே கலைத்துவிட்டுத் தன்னையே தெரியப்படுத்திக் கொண்டு விடுவான். அப்புறம், அப்புறந்தான் - நம் வேஷத்தின் அசட்டுதனங்களையும் போக்கி, அப்புறம் இந்த வேஷத்தையும் கலைத்து, நாமும் அவனேதான் என்று அறிந்து அநுபவிக்குமாறு அருள் செய்வான்.

முடிந்த முடிவான அந்த நிலைக்குப் போக இப்போது நாம் செய்ய வேண்டியது ஆசார்யரை ஈஸ்வரனாக நினைத்து அவர் உபதேசிக்கிறபடி நடப்பதுதான்.

2.10-குலவழக்கையே கொள்க!

நம்முடைய பிறப்பு பூர்வ கர்மாவை அநுஸரித்து ஈஸ்வரனாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதே சாஸ்திரம். அதனால் நாம் ஏதோ ஒரு மதத்தில், ஸம்ப்ரதாயத்தில் பிறந்திருக்கிறோமென்றால், அதுவே கர்மவசாத் ஈஸ்வரனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று அதை வரவேற்று, இதைக் கொண்டே நாம் கர்மாவைப் போக்கிக் கொண்டு நம்மை மேம்படுத்திக் கொள்ள முயல வேண்டும். அவரவர்கள் தாங்கள் பிறந்த ஸம்ப்ரதாயத்தையும் குலாசாரத்தையும் ரக்ஷிக்கிற ஆசார்யார்களின் உபதேசப்படி நடந்தாலே போதும். அதன் தத்வங்கள் அபூர்ணமாக இருந்தால்கூடப் பரவாயில்லை. கர்ம சேஷத்தினால் அபூர்ணமாக இருக்கிற இந்த ஜீவனுக்கு அந்த சேஷம் தீர இந்த அபூர்ண ஸமயாசாரமே உதவி பண்ணிவிடும். ஈஸ்வரன் என்று ஒருத்தனிடம் அசையாத நம்பிக்கையும், பக்திவிஸ்வாஸமும் வைத்து, "நீ இப்படி ஜன்மா தந்ததால் இந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஆசார்யரை ஆச்ரயிக்கிறேன்" என்று அவனிடம் விட்டுவிட்டுத் தன் குலாசாரத்தை அநுஷ்டித்தால் அவன் ஒரு நாளும் கைவிடமாட்டான். எப்படி, எப்போது, எந்த தினஸில் பூர்ண தத்வத்தை இவனுக்குக் கொடுக்க வேண்டுமோ அப்படித் தானே பண்ணி விடுவான். ஆசார்யன் ஈஸ்வர ஸ்வரூபமே என்ற நம்பிக்கை மட்டும் நமக்கு இருந்து விட்டால் போதும். எந்த குருவிடம் நாம் பிரபத்தி செய்தாலும் (சரணாகதி அடைந்தாலும்) ஈஸ்வரனிடம் பிரபத்தி செய்ததாக ஏற்பட்டு, பலன் ஸித்தித்துவிடும். உபநிஷத் சாந்தி பாட க்ரமத்தில் இதுதான் சொல்லிக் கொடுத்திருக்கிறது.

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாச்ச ப்ரஹிணோதி தஸ்மை |

தம் ஹ தேவம் ஆத்ம புத்தி ப்ரகாசம்
*முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ||**

ஒரு 'ஸிஸ்ட'த்துக்குக் கட்டுப்படாவிட்டால் ஒரு மேதாவியின் ஸாமர்த்தியத்தாலே அனர்த்தம்தான் ஏற்படும். இப்படிப்பட்ட மேதாவியால்தான் முட்டாளை விட ஜாஸ்திக் கெடுதல் உண்டாகும். இதை நம் ஆசார்யாள் "உபதேச ஸாஹஸ்ரீ" யிலே சொல்லி, ஒரு ஸம்பிரதாயத்தில் வராத எவனும் மூர்க்கனுக்கு ஸமம்தான் என்கிறார். அதாவது ஞானத்துக்குப் புஸ்தகப் படிப்பைவிட குருபக்தி தான் முக்கியம்.

---

* கருத்து: எவன் ஆதியில் பிரம்மாவைப் படைத்து அவருக்கு வேதங்களைக் கொடுத்தானோ அந்த தேவ தேவனே நம் புத்தியைப் பிரகாசிக்கச் செய்பவன். முக்தி நெறியில் விழைவு கொண்ட நான் அவனையே சரண் புகுகிறேன்.

3-மஹான்கள் காட்டும் குருபக்தி

3.1-தெய்வங்களும் சீடர்களாக

நமக்கெல்லாம் குருபக்தி போதமாட்டேனென்கிறது. ஆனால் நம் ஸம்பிரதாயங்களுக்கு மூலமான குருமார்களாகவும் முக்யமான குருமார்களாகவும் இருந்த மஹா பெரியவர்களோ தாங்களே தங்கள் குருமார்களிடம் அபாரமான பக்தி செலுத்தியிருக்கிறார்கள்.

ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தி. அவருக்கும்கூட ஒரு குருவிடம் தாம் பணிவாக இருந்து, சிஷ்யனாகி, உபதேசம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று இருந்திருக்கிறது. பரமேஸ்வரனான அவரே தம் சொந்தக் குழந்தையிடம், கைகட்டி, வாய் பொத்திப் பிரணவோபதேசம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

ஞானமே வடிவானவள் அம்பாள். அவளும் பதியான ஈஸ்வரனிடம் சிஷ்யையாகி உபதேசங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறாள். அநேக ஆகம, தந்த்ரங்கள் ஈஸ்வரன் அம்பாளுக்கு உபதேசம் பண்ணினவைதான்.

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே |
ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வராநநே ||

என்பதாக (மும்முறை ராமநாமா சொன்னால் அது ஸஹஸ்ர நாமம் சொன்னதற்கு ஸமானம் என்று) ராம நாம மஹிமையைச் சொல்லும் ஸ்லோகம் அம்பாளுக்கு ஈஸ்வரன் உபதேசித்ததுதான் என்று 'விஷ்ணு ஸஹஸ்ர நாமம்'அறிந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஜம்புகேஸ்வரம் (திருவானைக்கா) போன்ற பல க்ஷேத்ரங்களில் அம்பாள் ஈஸ்வரனிடம் உபதேசம் வாங்கிக் கொள்வதாக ஸ்தல புராணங்களில் இருக்கிறது.

மஹாவிஷ்ணு ராம, க்ருஷ்ண அவதாரங்களில் வஸிஷ்டர், ஸாந்தீபினி ஆகியவர்களிடம் பரம விநயத்தோடு குருகுலவாஸம் செய்திருக்கிறார். க்ருஷ்ண பரமாத்மா ஸுதாமா (குசேலர்) என்கிற ஸப்ரஹ்மசாரியுடன் (கூடப் படித்த மாணவருடன்) காட்டுக்குப் போய் இடி மழையில் ஸாந்தீபனி குருவுக்காக ஸமித்து (சுள்ளி) பொறுக்கிக் கொண்டு வந்திருக்கிறார். ராமர் வஸிஷ்டர் சொன்ன ப்ரகாரமேதான் ராஜ்யபாரம் பண்ணினார். "ராஜ்யபாரம் பண்ண வரமாட்டேன்"என்று சித்ரகூட பர்வதத்தில் அவர் பரதனோடு வந்த வஸிஷ்டரிடம் மறுத்தபோதுகூட, அவரிடம் எத்தனை பணிவுடன் தெரிவிக்கலாமோ அப்படியே செய்து அவருடைய ஸம்மதத்தைப் பெற்றபின் தான் அந்த முடிவை நடத்திக் காட்டினார்.

குரு பரம்பரையில் தத்தாத்ரேயருக்கு ரொம்பவும் உன்னதமான ஸ்தானம் உண்டு. அப்படிப்பட்டவரோ மண்ணு, தண்ணி, மலைப்பாம்பு, குளவி, ஒரு தாஸி, ஒரு வேடன், ஒரு சின்னக் குழந்தை இவை உள்பட இருப்பது நாலு பேரைத் தம்முடைய குரு என்று சொல்லிக் கொண்டு அவர்களிடமிருந்து தாம் இன்னின்ன பாடம் கற்றேன் என்று (பாகவதத்தில்) சொல்கிறார்.

3.2-ஆதிசங்கரரின் ஆசார்ய பக்தி

"ஆசார்யாள்" என்ற மாத்திரத்தில் லோகமெல்லாம் நினைத்துப் போற்றும் நம் பகவத்பாதாளுக்கு இருந்த குருபக்தி சொல்லி முடியாது. பத்ரிநாத்தில் அவர் தம்முடைய குருவான கோவிந்த பகவத்பாதரையும், பரமகுரு (குருவுக்கு குரு) வான கௌடபாதரையும் ஸாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாகவே பார்த்து, அப்போதுதான் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் சொல்லி, அடிக்கு அடி அவர்களை நமஸ்காரம் பண்ணினார், என்று சொல்கிறதுண்டு. இவரே அந்த தக்ஷிணாமூர்த்தியின் அவதாரந்தான். குருவின் மஹிமையை ஆசார்யாள் ஒரு இடத்தில் ச்லாகித்துச் சொல்லும்போது, "பித்தளையைக் கூடப் பொன்னாக்குகிற ஸ்பர்சவேதி மாதிரி குருவானவர் பித்தளை மனஸுக்கரார்களையும் மாற்றித் தங்கமாக ஜ்வலிக்கச் செய்பவர் என்று சொன்னால்கூட குரு மஹிமையை உள்ளபடி சொன்னதாகாது. ஏனென்றால் ஸ்பர்சவேதியில் இருந்த பித்தளை தான் மட்டுமே ஸ்வர்ணமாக ஆகுமே தவிர, மற்ற பித்தளை வஸ்துக்களை ஸ்வர்ணமாக்குகிற ஸ்பர்சவேதியாக மாறாது. ஆனால் குருவை ஆச்ரயித்த சிஷ்யனோ, தான் பூர்ணத்வம் பெறுவதோடு மட்டுமின்றி, தானும் குருவாகி மற்றவர்களுக்குப் பூர்ணத்வம் தருபவனாகி விடுகிறான். அதனால் குரு ஸ்பரிசவேதிக்கும் மேலே" என்கிறார்*. காசியில் பரமேஸ்வரனே சண்டாள வேஷத்தில் வந்துபோது, "ஆத்ம ஞானியான ஒருத்தன் பிராம்மணனாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை;அவன் சண்டாளனாகப் பிறந்தவனாயிருந்தாலும் ஸரி, அவனே எனக்கு குரு" என்று பரம விநயமாகச் சொன்னார் - ஜகதாசார்யர் என்று பிருதம் பெற்றவர் இப்படி நடுவீதியில் சொன்னார்*.

---

* 1. 'சதச்லோகீ' முதல் ஸ்லோகம்

* 2. ஸ்ரீ ஆதிசங்கரரின் குரு பக்தி குறித்து மேலும் சில விவரங்கள் "தெய்வத்தின் குரல்" : இரண்டாம் பகுதியில் "குரு பக்தி" என்ற உரையில் காண்க.

3.3-ராமாநுஜரின் குருபக்தி

ராமாநுஜாசாரியார் திருக்கோட்டியூர் நம்பி என்கிற தம்முடைய ஒரு குருவின் வார்த்தையை உல்லங்கனம் பண்ணி (மீறி) எல்லா ஜனங்களுக்கும் உபதேசம் செய்தார் என்று பலர் கேட்டிருப்பீர்கள். ஆனால் அவரே இதே நம்பியிடம் எத்தனை அடக்கத்தோடு நடந்து காட்டியிருக்கிறாரென்றும் வைஷ்ணவ குரு பரம்பரா கதைகள் சொல்கின்றன. உபதேசம் தருவதற்கு முந்தித் திருகோட்டியூர் நம்பி ராமாநுஜாசாரியாரைப் பதினெட்டு தடவை ஸ்ரீரங்கத்திலிருந்து திருகோட்டியூருக்கு நடக்கப் பண்ணிவிட்டே கடைசியில் உபதேசம் கொடுத்தாராம். ராமாநுஜர் கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் இப்படி நடையாக நடந்தாராம்.

ஸ்மார்த்தர்கள் ஆசார்யனுக்கு நாலு தரம் நமஸ்காரம் பண்ணுவது வழக்கம். வைஷ்ணவர்கள் ஆசார்யன் போதும் போதும் என்கிற வரையில் பண்ணிக் கொண்டேயிருப்பார்கள். ஒரு தரம் ஸ்ரீரங்கத்துக்கு வந்த திருகோட்டியூர் நம்பி ஜில்லென்று காவேரி ஜலத்திலே (அல்லது படித்துறை மண்டபமாயிருக்கலாம்) நின்று கொண்டிருந்தாராம். வெளியிலே ஆற்றங்கரை மணலோ நல்ல வெயிலில் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருந்ததாம். அப்படிப்பட்ட மண்ணில் ராமாநுஜர் உடம்பு கன்றிப் போவதையும் பொருட்படுத்தாமல் நமஸ்காரம் பண்ணிக் கொண்டேயிருந்தாராம். அவருடைய குரு பக்தியை சோதனை பண்ணவேண்டும் என்று இப்படிச் செய்த நம்பி அப்புறம் மனஸ் தாங்காமல் அவரை நிறுத்தினாராம்.

3.4-சங்கரரின் சீடர்கள்

இதேபோல (சங்கர) ஆசார்யாள், ராமாநுஜர் ஆகியவர்களுடைய நேர் சிஷ்யர்களும் தாங்களே மஹா பெரியவர்களாயிருந்தபோதிலும் தங்கள் தங்கள் ஆசாரியரிடத்தில் அஸாத்யமான பக்தி வைத்திருக்கிறார்கள். ஆசார்யாளின் சிஷ்யர்களில் ஒருவரான தோடகாசார்யார் அவரை

"நீங்களேதான் பரமேஸ்வரன்" **(பவ ஏவ பவான்)** , "விருஷபத்வஜர் நீங்களே" **(புங்கவ கேதன)** என்று ஈஸ்வர ஸ்வரூபமாகவே தெரிந்து கொண்டு ஸ்துதித்திருக்கிறார். இன்னொரு சிஷ்யரான பத்மபாதரும், ஆசார்யாளிடம் வ்யாஸர் வ்ருத்த ப்ராம்மண வேஷத்தில் வந்து வாதம் நடத்தினபோது, "இதென்ன இப்படி இவர்கள் முடிவே இல்லாமல் வாதம் நடத்திகிறார்களே!" என்று ஆச்சர்யப்பட்டு, இப்பேர்ப்பட்ட பண்டித ஸிம்ஹங்கள் யாராயிருக்க முடியும் என்று பக்தியோடு த்யானித்துப் பார்த்து, **"சங்கர : சங்கரஸ் ஸாக்ஷாத் வ்யாஸோ நாராயண ஸ்வயம்"** – "சங்கரர் ஸாக்ஷாத் சிவ பெருமானான சங்கரனே, வ்யாஸரோ மஹாவிஷ்ணு அவதாரம்"என்று சொல்லியிருக்கிறார். வ்யாஸர் செய்த பிரம்ம ஸூத்ரத்துக்கு ஆசார்யாள் செய்த பாஷ்யத்தைப் பற்றித்தான் இப்படி வ்யாஸரே மாறு, வேஷத்தில் வந்து வாதம் நடத்தினார். கடைசியில் பத்மபாதர் இப்படி, `அவர்தான் விஷ்ணு; ஆசார்யர்களோ பரமசிவன்'என்றவுடன் அவர் தம்முடைய வ்யாஸ ரூபத்தைக் காட்டி, ஆசார்ய பாஷ்யம் தம்முடைய அபிப்ராயத்தையே பூர்ணமாக அநுஸரிக்கிறது என்று மெச்சினார். பிற்காலத்தில் இந்த பத்மபாதரே வ்யாஸ ஸூத்ரத்துக்கு ஆசார்யாள் செய்த பாஷ்யத்தை மேலும் விஸ்தாரப்படுத்தி உரை எழுதினார். அதில் முதல் ஐந்து பாதங்கள் மட்டுமே நமக்குக் கிடைத்திருப்பதால், "பஞ்சபாதிகா' 'என்கிறோம். அதிலும் பத்மபாதர் குரு வந்தனம் சொல்லும் போது ஆசார்யாளைப் பரமேஸ்வரனாகவே "அபூர்வ சங்கரம்" என்று சொல்லியிருக்கிறார்.

அவருடைய குரு பக்தி மஹிமையால்தான் அவருக்குப் "பத்மபாதர்" என்ற பெயரே வந்தது. அதற்கு முந்தி அவருக்கு ஸநந்தனர் என்று பெயர். அவர் தமிழ் தேசத்துப் பிராம்மணர்; சோணாட்டவர் (சோழ நாட்டுக்காரர்) . ஆசார்யாள் தம்முடைய 'மிஷனை' (ஜீவதப் பணியை)க் காசியில் ஆரம்பித்த காலத்திலேயே, அதாவது அவருக்குப் பதினாறு வயஸ் பூர்த்தியாகுமுன்பே ஸநந்தனர் அவரிடம் வந்து சிஷ்யராகச் சேர்ந்து விட்டார். ஆசார்யாள் தம்முடைய பதினாறாவது வயஸிலேயே பாஷ்யமெல்லாம் பண்ணி முடித்துவிட்டு, அதோடு சரீரயாத்ரையையும் முடித்துவிட நினைத்தார். அப்போதுதான் வ்யாஸர் வந்து வாதம் பண்ணி அவரை வாழ்த்தி, அவர்

பாஷ்யம் பண்ணினது மட்டும் போதாது, அவரேதான் அதை தேசம் பூராவும் வித்வான்களுடன் வாதம் பண்ணிப் பிரசாரம் செய்து நிலைநாட்டவும் வேண்டும் என்று சொல்லி, அவருக்கு இன்னொரு பதினாறு வருஷம் ஆயுள் கொடுத்தார். அந்த விஷயம் இருக்கட்டும்.

ஆசார்யாள் காசியில் வாஸம் செய்த அப்போது ஒருநாள் அவர் கங்கைக்கு இக்கரையிலும், ஸநந்தனர் அக்கரையிலுமாக இருந்தார்கள். ஆசார்யாளின் வஸ்திரங்களைக் காயப்போட்டு ஸநந்தனர் வைத்துக் கொண்டிருந்தார். ஆசார்யாள் அப்போது சிஷ்யருடைய குரு பக்தியை லோகத்துக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று நினைத்தார். அதனால் தாம் இருந்த கரையைச் சேரவே ஸ்நானம் பண்ணிவிட்டு, ஈர வஸ்திரத்துடன் நின்றுகொண்டு, அக்கரையிலிருந்த சிஷ்யரிடம் "காய்ந்த வஸ்திரம் கொண்டு வா" என்றார்.

ஆசார்யன் ஒன்று சொல்லிவிட்டால் அதை உடனே பண்ணியாக வேண்டும் என்ற பக்தி வேகம் ஸநந்தனருக்கு வந்து விட்டது. ஆசார்யாள் சொட்டச் சொட்ட ஈரக் காஷாயத்தோடு நிற்கிறாரே என்று அவருக்கு மனஸ் பறந்தது. ஆவேசமாக அன்பு, பக்தி வந்துவிட்டால் அங்கே rational thinking (அறிவுப் பூர்வமான சிந்தனை) எல்லாம் நிற்காது. அதனால் படகு பிடித்துக்கொண்டு போக வேண்டும் என்று ஸநந்தனரால் காத்துக் கொண்டிருக்க முடியவில்லை. எதிரே, அன்னை பெரிசாக, ஆழமாக அலை வீசிக்கொண்டு கங்கா நதி என்று ஒன்று இருப்பதே அவருக்குத் தெரியவில்லையே! அப்புறம் படகைப் பற்றி எப்படி நினைப்பார்? கொஞ்சம் தூரத்தில் ஆசார்யமூர்த்தி ஈரத்துணியுடன் நிற்கிறார், காய்ந்த வஸ்திரம் கேட்டு அவர் ஆக்ஞை பண்ணிவிட்டார் என்பது மாத்திரம்தான் அவர் புத்தியில் 'டோட்ட'லாக வியாபித்திருந்தது. அதனால் எதிரே ஏதோ ஸம பூமி, கட்டாந்தரை இருக்கிறது போல, அவர் பாட்டுக்கு கங்கைப் பிரவாஹத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டார். கங்கையின் ஆழத்தில் முழுகிப் போவோமே, முழுகாமல் நீந்தினால் கூட வஸ்திரம் நனைந்து போய் குருநாதன் போட்ட ஆக்ஞையின் 'பர்பஸே' கெட்டுப்போய் விடுமே என்பதெதுவும் அப்போது அவருக்குத் தெரியவில்லை.

இப்படி ஒரு பக்தி பரவசம் ஏற்பட்டபோது, ஈஸ்வரன் (அந்த ஈஸ்வரன்தான் ஆசார்ய ரூபத்தில் வந்து நின்று கொண்டிருப்பதும்) அதற்கான பெருமையைத் தரமால் போவானா? அதனால் அப்போது ஒரு அதிசயம் நடந்தது. பத்மபாதர் பாட்டுக்குப் பிரவாஹத்தின் மீது நடக்க அவர் அடுத்த அடி வைக்க வேண்டிய இடத்தில் கங்காதேவி நீரோட்டத்துக்கு மேலாக ஒவ்வொரு பெரிய தாமரைப் பூவாகப் புஷ்பித்துக் கொண்டே போனாள். இந்த பத்மங்களில் காலை வைத்துக் கொண்டே ஸநந்தனரும் கங்கையின் மேலே நடந்து போனார். ஆனால் அவருக்கு இப்படித் தாமரைகள் முளைத்துத் தம் அடிவைப்பைத் தாங்குவதும் தெரியாது. தீமிதியில் நெருப்புத் தெரியாது என்றால் இவருக்கு ஜில்லென்று, மெத்தென்று புஷ்பம் இருப்பது தெரியவில்லை.

எல்லாரும் பார்த்து அவருடைய குருபக்தி விசேஷத்தைச் வியந்து கொண்டிருக்கும்போதே, இப்படி அந்தப் பெரிய நதியைத் தாண்டி இக்கரைக்கு வந்து குருமூர்த்திக்கு வஸ்திரத்தை ஸமர்ப்பித்தார்.

"எப்படியப்பா நீ கங்கையைத் தாண்டி வந்தே?" என்று ஆசாரியாள் வேடிக்கையாகக் கேட்டார்.

அப்போதுகூட ஸநந்தனர் ஆற்றைத் திரும்பிப் பார்த்து பத்மங்கள் முளைத்ததைத் தெரிந்து கொள்ள நினைக்கவில்லை. 'ஆக்ஞை பண்ணினது ஆசார்யன். அவர் ஆக்ஞை பண்ணி விட்டு அது எப்படி நிறைவேறாமல் போகும்? அவர் அநுக்ரஹமே நம்மை அங்கேயிருந்து இங்கே உருட்டிக் கொண்டு வந்துவிட்டது' என்று அவருக்கு நிச்சயம்.

அதனால், தங்களை ஸ்மரித்தால் கடக்க முடியாத ஸம்ஸார ஸாகரமே 'முழங்கால் மட்டும்' ஜலமாகிவிடும்போது, தாங்களே வாயைத் திறந்து ஆக்ஞை பண்ணியிருக்கையில் நான் கங்கையைத் தாண்டினது என்ன பிரமாதம்?" என்றார்.

அப்புறம்தான் ஆசார்யாளே அவருக்குப் பத்மங்கள் புஷ்பித்ததைக் காட்டி, அவை இவருடைய பாதத்தை தரித்ததால் "பத்மபாதர்" என்ற பெயரை இவருக்கு வைத்தார்.

ஈஸ்வரனாகவே ஒரு நிலையில் இருந்தாலும், இன்னொரு நிலையில் அவனுடைய பாதபத்மமாக நினைக்கப்படும் பகவத்பாதருக்குப் பொருத்தமாக இப்படி சிஷ்யரும் பத்மபாதராக அமைந்தார்.

3.5-ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில்

ராமாநுஜாசார்யாரின் சிஷ்யர்களிலும் இப்படி ஆவேசம், வெறி என்று சொல்லக்கூடிய தீவ்ர குருபக்தி உள்ளவர்கள் உண்டு.

வைஷ்ணவர்களுக்குப் பொதுவாகவே நைச்ய பாவம் (தன்னை ரொம்பவும் தாழ்த்தியாக நினைப்பது) முக்கியம். அதனால் எல்லோரிடத்திலுமே அவர்கள் ரொம்பவும் மரியாதையாக நடப்பார்கள்; பேசுவார்கள். நாம் (வைஷ்ணவரல்லாதார்) "நீங்கள்" என்று சொல்கிற இடத்தில் அவர்கள் "தேவரீர்" என்பார்கள். தங்களை "தாஸன்", "தாஸன்" என்றே எவரிடமும் சொல்லிக் கொள்வார்கள். "ஸேவிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணுவார்கள். ஸ்ரீவைஷ்ணவர்களைத் தவிர மற்ற ஸம்ப்ரதாயப் பெரியவர்களை "ஸ்வாமி" என்று சொல்வார்கள்; தங்கள் ஸம்ப்ரதாயத்தில் தங்களைவிடப் பெரியவராயிருக்கிற எல்லாரையும் "பெருமாள்" என்றே சொல்வார்கள். வார்த்தை மரியாதை அவர்களுக்கு ரொம்ப ஜாஸ்தி. வேடிக்கையாகச் சொல்வதுண்டு குருவைத் தீர்த்துக் கட்டிவிட்டு, தானே பட்டத்துக்கு வரவேண்டுமென்று சிஷ்யன் அவருக்காகக் குழிவெட்டி வைத்திருந்தானாம். அப்போதுகூட, "தேவரீரே ஏள்றீரா? தாஸன் ஏளப்பண்ணட்டுமா?" (தேவரீர் தாமாகவே குழிக்குள் எழுந்தருளுகிறீர்களா? இல்லாவிட்டால் அடியேன் அப்படி எழுந்தருளபண்ணட்டுமா?") என்று மரியாதையாகத்தான் விக்ஞாபித்துக் கொண்டானாம்!

குரு பரம்பரைக் கதைகள் என்று வைஷ்ணவர்கள் போற்றிப் பாராயணம் பண்ணும் விருத்தாந்தங்களில் நம் நெஞ்சைத் தொடுகிற ஏராளமான குருபக்தி சரித்திரங்களைப் பார்க்கிறோம். பெருமாள் கோயில்களிலும் பாருங்கள், ஆழ்வார்கள் ஸந்நிதி, முக்யமாக ஆண்டாள் ஸந்நிதி, தென்கலைக் கோயிலானால் மணவாள மாமுனிகள், பிள்ளை லோகாசார்யார் முதலியவர்

களின் ஸந்நதி, வடகலைக் கோயிலானால் வேதாந்த தேசிகரின் ஸந்நிதி ஆகியவற்றில் எத்தனை பக்தியோடு, விமரிசையோடு ஆராதனை நடத்துகிறார்கள்? ராமாநுஜருடைய ஜன்ம ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் பெருமாளே இரண்டாம் பக்ஷம்தான்;' உடையவர், உடையவர்' என்று தங்களுடைய ஆசார்ய புருஷருக்கு ஏற்றம் தந்து, அவருக்குத்தான் நித்யப்படி பூஜை, பத்து நாள் உத்ஸவமெல்லாம் ரொம்பவும் பெரிய ஸ்கேலில் செய்கிறார்கள். உடையவர் ஸந்நிதிக்கு மேலே தங்கத்திலேயே விமானம் வேய்ந்திருக்கிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரில் இப்படித்தான் ஆண்டாளுக்கே பிரதான்யம். 'கோதை, கோதை நாயகி' என்று கொண்டாடுவார்கள். மதுரையில் மீனாக்ஷிக்கே பிரதான்யம், 'மீனாக்ஷி கோயில்' என்று சொல்வது, ஸுந்தரேஸ்வரர் அவளுக்கு அப்புறம் தான் என்பதுபோல், இங்கே ரங்கமன்னாரை (கண்ணனை) இரண்டாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு ஆண்டாளைத்தான் முதலில் வைத்து 'ஆண்டாள் கோயில்' என்றே சொல்கிறார்கள். நம்மாழ்வார் அவதாரம் பண்ணின ஊருக்கு ஆதியில் 'குருகூர்' என்று பெயர். அப்புறம் அவருடைய ஜன்ம ஸ்தலமானதால் அதற்கு 'ஆழ்வார் திருநகரி' என்றே பெயரை மாற்றி விட்டார்கள். அங்கே அவருக்கு நடக்கிற உத்ஸவமும் ரொம்ப விசேஷமானது. இப்படியே ஒவ்வொரு ஆழ்வாருக்கும் செய்கிறார்கள்.

ராமாநுஜருக்கு முன்னும் பின்னும் வந்த ஸம்ப்ரதாய முக்யஸ்தர்களான நாதமுனிகள், ஆளவந்தார், மணக்கால் நம்பி, திருகச்சி நம்பி, கூரத்தாழ்வார், பட்டர், நஞ்சீயர் முதலான பலருக்கு விக்ரஹங்கள், பூஜையெல்லாம் அநேக ஆலயங்களில் பார்க்கிறோம்.

இந்த அளவுக்கு சிவாலயங்களில் நாயன்மார்கள், மாணிக்கவாசகர், சைவமதக் கோட்பாடுகளையும் புஸ்தகங்களையும் தந்த ஸ்ரீகண்டாசார்யார், மெய்கண்ட சிவம், உமாபதி சிவாசார்யார் முதலியவர்களுக்குச் சிறப்புக் கொடுக்கவில்லை தான்!

(சங்கர) ஆசார்யாளையும் அவருக்கு முன்னும் பின்னும் வந்த அத்வைத ஸம்பிரதாயப் பெரியவர்களையும் எடுத்துக் கொண்டாலோ ஆலய விக்ரஹம்,

வழிபாடு இவற்றில் ஸை॰ப்ர் என்றே சொல்ல வேண்டும். ஆசார்யாளுக்கு மட்டும் அபூர்வமாகச் சில கோயில்களில் பிம்பமிருக்கிறது. காஞ்சீபுரத்திலும் சுற்றுபுறங்களிலும் மாத்திரம் இது கொஞ்சம் நிறையவே இருக்கிறது. மாங்காடு, திருவொற்றியூர் இப்படிச் சில ஸ்தலங்களிலும் ஆசார்ய பிம்பங்கள் இருக்கின்றன. ஆனாலும் மொத்தத்தில், நான் அடிக்கடி சொல்வது போல, கோயில் விக்ரஹங்களின் 'ஸென்ஸஸ்' பார்த்து ஒரு ஸித்தாந்தத்தின் 'இன்॰ப்ளுயென்'ஸை கணிப்பது என்றால், இந்தியா தேசத்திலே அத்வைதம் என்று ஒரு வைதிக மதம் இல்லவேயில்லை என்றுதான் முடிவாகும்!

இதற்குக் காரணம் அத்வைதிகள் சைவம், வைஷ்ணவம் இரண்டையும் சேராத, ஆனால் இரண்டையும் ஒரு அளவுவரை ஒப்புக் கொள்கிற ஸ்மார்த்தர்களாக இருப்பதுதான்.*

நான் சொல்லவந்த விஷயம் ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில் மதாசார்யர் களிடத்தில் விசேஷ பக்தி காட்டுகிறார்கள் என்பது.

ராமாநுஜருடைய நேர் சிஷ்யர்கள் அவரிடம் வைத்திருந்த பக்தி அஸாத்யமானது. உயிரையே கொடுப்பது என்கிறதற்கேற்க, கூரத்தாழ்வார் என்பவர் ராமாநுஜருக்காகப் பிராணத் தியாகமும் பண்ணத் தயாராயிருந்திருக்கிறார். இவர் காஞ்சீபுரத்துக்குப் பக்கத்திலுள்ள கூரம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். மரியாதை வாசகத்துக்குப் பெயரெடுத்த வைஷ்ணவர்களே பக்தி முதிர்ச்சியில், தாங்கள் ரொம்பவும் பெரியவராக நினைக்கிற வேதாந்த தேசிகரை "தேசிகன்" என்று ஒருமையில் அழைப்பதாகச் சொன்னேனல்லவா? அதுபோலவே கூரத்தாழ்வாரைக் "கூரத்தாழ்வான்" என்றுதான் சொல்வார்கள். வெறுமனே 'ஆழ்வான்' என்று வைஷ்ணவர்கள் சொன்னாலே அது கூரத்தாழ்வார்தான். ('ஆழ்வார்' என்று 'ர்'போட்டுச் சொன்னால் அது நம்மாழ்வார்தான்)

ராமாநுஜர் காலத்தில் ராஜாவாக இருந்த சோழன் தீவிர சிவபக்தன். ராமாநுஜரோ, "விஷ்ணு ஒருத்தருக்குத் தான் "ஏகாந்தி"களாகப் பூஜை பண்ண வேண்டும். சிவனுக்கு பண்ணக் கூடாது" என்கிற ஸித்தாந்தத்தைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். அதனால் சோழராஜா, "எந்த ஆதாரத்தைக் கொண்டு

விஷ்ணு தவிர சிவன் முதலான தேவதாந்தரங்களை வழிபடக்கூடாது என்று நிர்த்தாரணம் பண்ணுகிறீர்?" என்று ராமாநுஜரைக் கேட்டு வாதம் நடத்துவதற்காக ஒரு வித்வத் ஸதஸைக் கூட்டினான். அப்போது கங்கைகொண்ட சோழபுரம் ராஜ்யத் தலைநகராயிருந்தது. அங்கே அந்த ஸதஸைக் கூட்ட நிச்சயித்து, ராமாநுஜாசார்யாரை அழைத்துக்கொண்டு வருவதற்காக ஆள் அனுப்பினான். அப்போது அவர் ஸ்ரீரங்கத்தில் இருந்தார்.

ராஜஸேவகரைப் பார்த்ததும் கூரத்தாழ்வாருக்கு விசாரம் உண்டாய்விட்டது. 'ராஜாவோ சைவன்; அவனே நிறைய சிவாலயங்கள் கட்டியிருக்கிறான். நம்முடைய குருவானால் சிவாராதனை கூடாது என்கிறார். அதனால் அவருக்கு இவரிடம் த்வேஷம் இருக்கும். இப்போது வித்வத ஸதஸ் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போய் இவரை என்ன பண்ணுவானோ? ராஜாவானதால் என்னவும் பண்ணிவிடமுடியும். நம்முடைய அருமை ஆசார்யருக்கு அவன் ப்ராணஹானி விளைவித்துவிட்டால் என்ன செய்வது?' என்று ரொம்பவும் பயமும் கவலையும்பட்டார்.

அப்போதுதான் அவர் குருவுக்காகத் தம் உயிரையும் தியாகம் செய்ய முன்வந்தது. அதாவது குருவின் காஷாயத்தைத் தாம் உடுத்திக் கொண்டு, தம்மையே ராமாநுஜாசார்யார் என்று சொல்லிக்கொண்டு ராஜஸபைக்குப் போய்விடுவது என்று தீர்மானித்து விட்டார். "வருகிற ஆபத்து எனக்கே வரட்டும். தங்களுக்காக இந்த ஸேவை செய்கிற பாக்யத்தை எனக்கு மறுக்காமல் அருள வேண்டும்" என்று ராமாநுஜரிடம் பிரார்த்தித்து, அவரை ஸம்மதிக்கப் பண்ணினார். ராமாநுஜர் வெள்ளை வேஷ்டி கட்டிக் கொண்டு, சோழ ராஜ்யத்தையே விட்டு, கர்நாடகத்திலுள்ள மேல்கோட்டை என்னும் திருநாராயணபுரத்துக்குப் போய்விட்டார். அங்கே இப்போதும் "வெள்ளை சாத்துப்படி" என்று அவருக்கு உத்ஸவம் நடத்துகிறார்கள்.

கூரத்தாழ்வார் காஷாயம் தரித்துக்கொண்டு ராமாநுஜராக கங்கை கொண்ட சோழபுரத்துக்குப் போனார். அங்கே வித்வஸ் ஸதஸ் நடந்தது. இவர் சிவபரத்வத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார்*. அதனால் இவர் நினைத்தப்படியே ராஜதண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் ராஜா கொலைத்தண்டனை

தரவில்லை. இவருடைய கண்ணைப் பிடுங்கும்படியாக உத்தரவு போட்டுவிட்டான்.

குருவுக்கு ஏற்பட இருந்த இந்த கொடுமை நமக்கு வாய்த்ததே என்று கூரத்தாழ்வார் தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். குருடராக ஆனார்.

அப்புறம் அந்த ராஜா காலமானபின் ராமாநுஜாசாரியார் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்தார். தமக்காக சிஷ்யர் கண்ணை இழந்துவிட்டாரே என்று துக்கப்பட்டார்.

ராமாநுஜர் பிற்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்தபோதிலும், ஆரம்பத்தில் காஞ்சீபுரத்தில் வஸித்துக் கொண்டு வரதராஜ ஸ்வாமிக்குத்தான் தீர்த்த கைங்கர்யம் செய்துகொண்டு, அவரையே இஷ்ட தெய்வமாக உபாஸித்து வந்தார். ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தின் ஆராதனை க்ரமங்களை அமைத்துக்கொடுத்து அங்கே இவர் இருந்த காலத்திலும் கூட வரதராஜாவிடம் ஒரு தனியான பற்று வைத்திருந்தார். அதனால் இப்போது கூரத்தாழ்வாரிடம், "எனக்காக உன் கண் போயிற்று. அதனால் உனக்காகப் பார்வை மீள வேண்டும் என்று இல்லாவிட்டாலும் என் மனஸ் ஆறுவதற்காக நீ வரதராஜாவை வேண்டிக்கணும்" என்றார். கூரத்தாழ்வாரும் அப்படியே காஞ்சீபுரம் பெருமாளிடம் ஸ்தோத்ரம் பண்ணி வேண்டிக் கொண்டார். அவருக்கு த்ருஷ்டி திரும்பணும் என்று நிஜமாகவே ஆசை இல்லை. 'எல்லா இந்த்ரியங்களையும் அடக்கினால்தான் ஈஸ்வர தர்சனம் கிடைக்கும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. நமக்கோ ராஜசிக்ஷை ரூபத்தில் கண் போனதில் இந்த ஒரு இந்திரியமாவது கண்டதைப் பார்த்துக் கெட்டுப் போகாமலிருக்கும் அநுக்ரஹம் கிடைத்திருக்கிறது. இதைப் மாற்றப்பண்ணி மறுபடியும் லோகக் காட்சி பார்த்து என்ன ஆக வேண்டும்?' என்றே நினைத்தார். ஆனாலும், 'ஆசார்யன் ஆக்ஞைக்குக் கீழ்படிந்தாகவும் வேண்டுமே! அவர் பச்சாத்தாபம் படும்படியாக விடக்கூடாதே!' என்று யோசித்தார். யோசித்து ஸ்வாமியிடம், "எனக்குப் பார்வையை தா. ஆனால் எல்லா விஷயங்களையும் நான் பார்க்க வேண்டியதில்லை. என் ஆசார்யனுடைய திவ்யரூபத்தை தர்சனம்

பண்ணுவதற்கும், உன் மங்கள விக்ரஹத்தை தர்சிப்பதற்கும் மட்டுமே கண்ணுக்குச் சக்தி தா" என்று கேட்டார். வரதராஜாவும் அப்படியே வரம் கொடுத்தாராம்.

ராமாநுஜருக்கு முந்தி இருந்த பெரியவரான ஆளவந்தார் திருநாட்டை அலங்கரிக்க முடியாமல் (சரீரயாத்ரை முடிந்து பரமபதம் சேர்வதைத் "திருநாட்டை அலங்கரிப்பது" என்றே வைஷ்ணவர்கள் சொல்வார்கள்) அவருடைய ப்ராரப்தம் 'டிலே' பண்ணினபோது, பெரிய த்யாகமாக சிஷ்யர் ஒருத்தரே* அந்தக் கர்மசேஷத்தை ராஜபிளவை என்ற பயங்கரக் கட்டி ரூபத்தில் ஏற்று அநுபவித்துத் தீர்த்தார் என்றும் ஒரு கதை இருக்கிறது.

ரஸத்தோடு, ஹாஸ்ய ரஸனையோடு கூடியதாக இன்னொரு குரு பரம்பரைக் கதை உண்டு. ராமாநுஜரின் சிஷ்யர்களில் ஒருத்தர். அவர் ஒருநாள் உள்ளே ஆசார்யருக்காகப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். வாசலில் ஸ்ரீரங்கநாதர் ஊர்வலம் வந்தது. "தர்சனம் பண்ண வா, வா!"என்று ராமாநுஜாசார்யார் வாசலிலிருந்து சிஷ்யரைக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தார். ஆனால் சிஷ்யர் போகாமல் பாலையே கவனித்துக் கொண்டிருந்தார். ஸ்வாமி அந்த இடத்தைத் தாண்டிப் போய்விட்டது. ராமாநுஜர் உள்ளே வந்து, "வாசலிலியே பெருமாள் ஸேவை ஸாத்திகிறபோது ஸேவிக்காமல் நீ இப்படிப் பண்ணலாமா?" என்று கோபித்துக் கொண்டார். அதற்கு அந்த சிஷ்யர், "உங்கள் பெருமாளை நீங்கள் ஸேவித்தது ஸரிதான்! அது நீங்கள் பண்ண வேண்டியதுதான். ஆனால் அதற்காக நான் என் பெருமாளுக்குப் பண்ணும் பால் ஸேவையை ஏன் பாதியில் விட்டுவிட்டு வரணும்?" என்று கேட்டாராம்!

குருவுக்காக எந்தக் கஷ்டத்தையும் ஸந்தோஷத்தோடு பொறுத்துக் கொள்கிற அளவுக்கு பக்தியானது சக்தி தந்திருக்கிறது. க்ஷத்ரியர்களை த்வேஷித்த பரசுராமரிடம் பிராம்மண த்வேஷம் போட்டுக் கொண்டு வந்து வில்வித்தை கற்றுக்கொண்ட கர்ணனை, ஒருநாள் இவன் மடியில் அவர் தலை வைத்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு வண்டு கொட்டித் தீர்த்து விட்டது! அசைந்து கொடுத்த அதை விரட்டினால் குருவின் நித்திரைக்கு பங்கம் வந்துவிடுமே என்று கர்ணன் ஆடாமல் அசையாமல் அத்தனை

கொட்டையும் ஸஹித்துக் கொண்டான் என்ற கதை கேட்டிருப்பீர்கள். அப்புறம் அந்தக் கதை வேறு விதமாய்ப் போய்விடுகிறது.

குருவை எந்த வித்யைக்காக ஆச்ரயித்தானோ, அந்த வித்யையையே சிஷ்யன் அப்யஸிக்க முடியாதபடி ரொம்பக் கடுமையாக, கொடுமையாக குருவானவர் தக்ஷிணை கேட்டபோது தயங்காமல் கொடுத்த ஏகலைவன் கதையையும் இன்றுவரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆழ்வார்களில் மதுரகவி என்று ஒருத்தர். அவர் பாடினது (பதினோறு அடிகள் கொண்ட) ஒரே ஒரு பாசுரந்தான். அதுவும் மஹாவிஷ்ணுவைப் பற்றியதில்லை. ஆனாலும் அதை நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலே சேர்த்து, மதுரகவியையும் ஒரு ஆழ்வாராக உயர்த்தி வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் அவருடைய குருபக்தி விசேஷத்துக்காகத்தான். அவர் பாடினது நம்மாழ்வாரைப் பற்றி. ராமாநுஜ ஸித்தாந்தத்தில் ஆழ்வார்களுக்கெல்லாம் ஆசார்ய ஸ்தானம் மாதிரியான சிறப்பு உண்டு. அந்த ஆழ்வார்களுக்குள்ளேயும் நம்மாழ்வாருக்கு "ப்ரபன்ன ஜன கூடஸ்தர்" என்பதாக விசேஷ ஸ்தானம் தந்திருக்கிறது.

நம்மாழ்வார் அப்பிராம்மணர். மதுரகவியோ நல்ல பிராம்மணர். அவர் வடதேசங்களில் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந்தபோது தெற்கேயிருந்து ஒரு ஜ்யோதி ரச்மி (ஒளிக்கதிர்) அவருக்குத் தெரிந்தது. அந்த ரச்மியையே பின்தொடர்ந்து ஆயிரம் மைலுக்கு மேலே வந்து திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கிற திருக்குருகூரை (இப்போது 'ஆழ்வார் திருநகரி' என்கிறோம்) அடைந்தார். அங்கே ஒரு புளியமரப் பொந்துக்குள் ரச்மி ஐக்கியமாகிவிட்டது. அதற்குள்ளேதான் நம்மாழ்வார் எத்தனையோ காலமாக அப்படியே நிஷ்டையிலிருந்து கொண்டிருந்தார். அவரை மதுரகவி நிஷ்டையிலிருந்து எழுப்பி ஆத்ம ஸம்பந்தமாக ஸங்கேத பாஷையில் கேள்வி கேட்டாரென்றும், நம்மாழ்வாரும் அதே போல ஸங்கேத பாஷையில் பதில் சொன்னாரென்றும் கதை. (அந்தக் கேள்வியையும் பதிலையும் நான் சொன்னால் அப்புறம் 'எக்ஸ்ப்ளெயின்' பண்ணாமலிருக்க முடியாது. ரொம்ப நாழி ஆகும். அப்படியும் புரியுமோ புரியாதோ, ஸந்தேஹம். அதனாலே

இத்தனை தத்வார்த்தத்துக்கும் மேலே எதுவோ அந்த குருபக்திதானே நம் ஸப்ஜெக்ட்? அதற்கே போகிறேன்.) அந்தப் பதில் மதுரகவிக்கு மந்த்ரோபதேசம் மாதிரி ஞானத்தைக் கொடுத்துவிட்டது. அவர் 'ப்ரபன்ன ஜன கூடஸ்த'ரான நம்மாழ்வாரிடமே ப்ரபத்தி (பூர்ண சரணாகதி) பண்ணி அவரை ஸ்தோத்திரம் செய்து பாசுரம் பாட ஆரம்பித்துவிட்டார். அதிலே நம்மாழ்வாரைத் தவிர தனக்கு வேறே ஸ்வாமியே கிடையாது -**"தேவு மற்றறியேன்**' – என்று பிரமாணம் மாதிரிப் பண்ணுகிறார். "நம்மாழ்வார் மஹாவிஷ்ணுவை ஸ்வாமி என்று வழிபட்டால் வழிபட்டுவிட்டுப் போகட்டும்; எனக்கு நம்மாழ்வாரேதான் ஸ்வாமி. அவரைப்பற்றித் தான் பாடுவேன். பெருமாளைக்கூட பாடமாட்டேன்"என்று குருவிடம் பரம பக்தியில் பாடிவிட்டார்.

'நம்முடைய ஸித்தாந்தத்தில் ஆசார்ய புருஷர்களுக்கு மேலேயும், பெருமாளுக்கு அடுத்ததாகவும் இருக்கிற ஆழ்வார்களில் பிரதானமாயுள்ள நம்மாழ்வாரிடம் ஏகாந்த பக்தி வைத்து மதுரகவி பாடியிருப்பதும் பெருமாள் மேலேயே 'அருளிச் செயல்' என்னும் பிரபந்தம் பாடினமாதிரிதான்'என்றே அந்த ஸம்பிரதாயத்துப் பெரியவர்கள் இதை நாலாயிரத்திலே சேர்த்து, அவருக்கும் ஆழ்வார் என்று ஏற்றம் கொடுத்திருக்கிறார்கள்.

"தேவு மற்றறியேன்" என்று இவர் சொன்ன மாதிரியே தான் வேதாந்த தேசிகரும் ***"ஆசார்யாத் இஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே"*** என்று சொல்லியிருக்கிறார்.

---

* இவ்விஷயம் குறித்த விஸ்தாரமான விளக்கம் "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியிலுள்ள "சங்கர சம்பிரதாயம்" என்ற உரையில் பார்க்க

* இது விஷயமான மேல் விபரங்கள் "சிவநாம மஹிமை" என்ற உரையில் காணலாம்.

* மாறனேர் நம்பி என்ற தீண்டாதார். அடுத்ததாகக் கூறப்படும் 'ரஸ' மான வரலாற்றில் குறிப்பிடப்படும் சீடர் வடுகநம்பி.

3.6-ஸிக்கியரின் குருபக்தி

ஆசார்யன் கிடைத்துவிட்டால் போதும், ஸ்வாமிகூட வேண்டாம்; ஸ்வாமிகூட ஆசார்யனுக்கு ஸமதையில்லை என்று பக்தி பண்ணினவர்கள் எல்லா ஸம்பிரதாயத்திலும் உண்டு. குரு என்றால் கூடவே இருந்தாக வேண்டிய 'சிஷ்யன்'-'சிக்ஷை' என்பதை வைத்துத்தான் 'சிக்கிய' மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

அதில் குரு கோவிந்த ஸிங் என்பவர் 'கல்ஸா' என்கிற அவர்களுடைய ஸ்தாபனத்தை ஏற்படுத்தும்போது, நரபலி வேண்டும் என்று கேட்டாராம். உடனேயே ஒருத்தர் எழுந்திருந்து தன் தலையையே கொடுப்பதற்காக அவரோடு போனாராம். அவரை அழைத்துக் கொண்டு போன கோவிந்த ஸிங் கொஞ்ச நாழிக்கு அப்புறம் ரத்தம் சொட்டும் கத்தியோடு திரும்பி வந்து இன்னொரு பலி வேண்டும் என்றாராம். உடனே இன்னொருத்தர் எழுந்திருந்து அவரோடு போனாராம். மறுபடியும் அவர் ரத்தம் சொட்டுகிற கத்தியோடு திரும்பி வந்தாராம். இப்படியே ஐந்து தடவை அவர் பலி கேட்க ஐந்து பேர் ஸந்தோஷமாக குரு வார்த்தைக்காகப் பிராணத் தியாகம் பண்ணுவதும் பெரிசில்லை. என்று அவர் பின்னோடு போனார்களாம். அப்புறம் அவர் அந்த ஐந்து பேரையுமே ஸபைக்கு அழைத்துக் கொண்டு வந்து, தம்மைச் சேர்ந்தவர்களின் பக்தி விஸ்வாஸத்தை சோதனை பண்ணுவதற்காகவே இப்படி விளையாட்டாக பலி கேட்டதாகவும் வாஸ்தவத்தில் எவரையும் கொல்லாமல் ஏதோ ஆட்டு ரத்தத்தைத்தான் காட்டியதாகவும் சொல்லி, உயிரைத் திருணமாக நினைத்து பலியாவதற்கு வந்த அந்த ஐந்து பேரையும் கல்ஸாவில் முக்கியஸ்தர்களாக நியமித்தாரம்.

இப்படி எல்லா மதங்களிலும் அவற்றில் தோன்றிய மஹான்களை தெய்வமாக விச்வாஸித்த சிஷ்யர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த குருபக்தியாலேயே அவர்களும் குருவைப் போன்ற யோக்யதை ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; இப்படி ஒரு **Spiritual Status** (ஆத்மிக அந்தஸ்து)

வந்துவிட்டும் தங்களை மேலே கொண்டுவந்த மஹானையே உயர்த்திச் சொல்லிப் பணிந்து வந்திருக்கிறார்கள்.

4-ஸமூஹ, தனிவாழ்க்கை நெறிகள்,பரோபகாரம்

4.1-"அனைவருக்கும் உரிய அஸ்வமேதம்"

இந்தக் காலத்தில் இருக்கிற நாமெல்லோரும் அச்வமேத யாகம் செய்ய முடியுமா?

'இதென்ன கேள்வி? ஸ்வாமிகள் சரியாகத்தான் பேசுகிறாரா?' என்று தோன்றும். 'இந்தக் காலத்திலாவது? அச்வமேதமாவது? பழைய காலத்திலேயே க்ஷத்ரிய வர்ணத்தில் பிறந்த மஹாராஜாக்கள் இரண்டொருத்தர் தான் அச்வமேதம் செய்ய முடிந்திருக்கிறது. ஒரு ராஜ்யத்து அரசனாகப் பட்டாபிஷேகம் ஆனபின், சதுரங்க ஸேனா பலத்தோடுகூடச் சொந்தமாகவும் வீரதீர பராக்ரமங்கள் படைத்த ஒரு ராஜாதான் அச்வத்தை ஸகல தேசங்களுக்கும் ஓட்டி, அந்தத் தேசங்களையெல்லாம் ஜயித்து, திக்விஜயம் பண்ணிச் சக்ரவர்த்தி என்ற பிருதத்தை அடைந்து அச்வமேதம் பண்ணமுடியும். இப்போது நம்மில் யார் அப்படிச் செய்ய முடியும்?' என்று தோன்றும் நம்மில் யாரவது அச்வமேதம் செய்ய முடியுமா என்று கேட்காமல் (இப்படிக் கேட்டாலே அஸம்பாவிதம்தான்!) நாம் எல்லோரும் அச்வமேத யாகம் செய்ய முடியுமா என்று கேட்கிறேனே என்று ஒரே குழப்பமாகத் தோன்றும்.

முடியுமா, முடியாதா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். எதற்காக அச்வமேதம் செய்ய வேண்டும்? நம் பதவியையும் பவிஷையும் அது காட்டுகிறதே என்பதற்கா? அச்வமேதம் செய்தல் இந்திரலோகம் கிடைக்கும் என்பதற்கா? இதற்காகவெல்லாம் என்றால் அச்வமேதம் செய்யவே வேண்டாம். பதவி, பவிஷு, தேவலோக ஸௌக்கியம் எல்லாமே அஹங்காரத்தை வளர்த்துக் கொள்கிற காரியங்கள்தாம்! நம்மிடம் கொஞ்சநஞ்ச ஞானம்கூடச்

சேரவொட்டாமல் இடைஞ்சல் செய்கிறவைதாம். பின் எதற்காக அச்வமேதம் என்றால்:

ஹயமேத ஸமர்ச்சிதா

என்று அம்பாளுக்கு லலிதா த்ரிசதியில் ஒரு நாமா சொல்லியிருக்கிறது.

'த்ரிசதி' என்பது முந்நூறு பெயர்கள் கொண்ட நாமாவளி. அர்ச்சனையில் பிரயோஜனமாவது 'ருத்ர த்ரிசதி' என்பது வேதத்திலிருந்தே எடுத்தது. 'லலிதா த்ரிசதி' வேதத்தில் இல்லாவிட்டாலுங்கூட அதற்கு ஸமதையான கௌரவம் பெற்றிருக்கிறது. ஹயக்ரீவரிடமிருந்து 'லலிதா ஸஹஸ்ரநாம' உபதேசம் பெற்றுங்கூட மனசாந்தி அடையாத அகஸ்தியர் இந்த த்ரிசதியைக் கேட்டுத்தான் தெளிவை அடைந்தார். ஆசார்யாளே பாஷ்யம் பண்ணியிருக்கிற பெருமையும் இந்த த்ரிசதிக்கு இருக்கிறது. லலிதா த்ரிசதி, லலிதா ஸஹஸ்ர நாமம் இரண்டுமே ரொம்ப மந்த்ரவத்தானபடியால் இவற்றை உரிய நியமங்களோடு ரஹஸ்யமாகவே ரக்ஷிக்க வேண்டும்.

ஹயக்ரீவர் உபதேசித்த இந்த த்ரிசதியில் "ஹயமேத ஸமர்ச்சிதா" என்று ஒரு நாமா இருக்கிறது. ஹயம் ஹயம் என்றால் அச்வம், குதிரை என்று அர்த்தம். கழுத்துக்கு மேலே குதிரை முகம் படைத்த மஹாவிஷ்ணுவின் அவதாரமாக இருப்பவரே ஹய-க்ரீவர். ஹயமேதம் என்றாலும் அச்வமேதம் என்றாலும் ஒரே அர்த்தந்தான். "ஸமர்ச்சிதா" என்றால் நன்றாக, பூர்ணமாக ஆராதிக்கப்படுபவள் என்று அர்த்தம். "ஹயமேத ஸமர்ச்சிதா"- அச்வமேத யாகத்தால் நன்கு ஆராதிக்கப்படுபவள்.

அதாவது ஒருத்தன் அச்வமேதம் செய்தால், அதுவே அவன் அம்பாளுக்குச் செய்கிற விசேஷமான ஆராதனையாகி விடுகிறது. வெறும் யஜ்ஞம் என்றால் அதற்கென புத்ர ப்ராப்தி, தன லாபம், பதவி, ஸ்வர்க வாஸம் மாதிரியான பலன்கள்தான் உண்டு. இந்தப் பலன்களோடு, இவற்றைவிட முக்யமாக, அநேகக் கட்டுப்பாடுகளோடும், ஐகாக்ரியத்தோடும் **(one-pointed concentration)** ஒரு யாகத்தைச் செய்வதால் "சித்த சுத்தி' 'என்கிற மஹா பெரிய பலனும் ஏற்படுகிறது. ஒரு யாகம் அம்பாள் ஆராதனையாகிறபோதோ

அதற்குச் சின்னச் சின்னப் பலன்களாக இல்லாமல் ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய சக்தி உண்டாகிறது. ஸாக்ஷாத் பரதேவதை ப்ரீதி அடைந்தால் எதைத்தான் தரமாட்டாள்? பதவி, பவிஷு, இந்திர லோகம் எல்லாவற்றுக்கும் மேலாக பரம ஞானத்தை, ஸம்ஸார நிவிருத்தியை, மோக்ஷ ஸாம்ராஜ்ய லக்ஷ்மியையே அம்பாள் மனசு குளிர்ந்தால் அநுக்கிரஹித்துவிடுவாள். ஆனதால், அச்வமேதம் பண்ணிவிட்டால், அதனால் அம்பாளை ஆராதித்ததாகி விடுமாதலால், இம்மை மறுமைக்கு வேண்டியதில் பாக்கியில்லாமல் ஸகல சிரேயஸ்களையும் பெற்று விடலாம். எதற்காக அச்வமேதம் செய்ய வேண்டும் என்று முதலில் ஒரு கேள்வி போட்டேனே, அதற்கு இது பதில்.

ஆனால் ஒரு ஸஹஸ்ரநாமம், த்ரிசதி மாதரியானவற்றுக்கு நியமங்கள் இருக்கின்றன என்றால் அச்வமேதம் செய்வதற்கோ ஏகப்பட்ட கட்டுப்பாடுகள், ஆயிரம் தினுசான நியமங்கள், கெடுபிடிகள் சொல்லியிருக்கிறது. இந்தக் காலத்தில் இதெல்லாம் ஸாத்யமே இல்லை.

ஸரி, அப்படியானல் நாம் அச்வமேதம் செய்வதற்கே இல்லை என்று விட்டுவிட வேண்டியது தானா?

இல்லை நம் அனைவருக்கும் ஸாத்யமான ஓர் அச்வமேதத்தை சாஸ்திரங்களிலேயே சொல்லியிருக்கிறது. ஜீவகாருண்யத்தின்மேல் செய்யவேண்டிய அநேக பரோபகாரங்களைச் சொல்லிக்கொண்டே போய், அவற்றுக்கெல்லாம் சிகரம் மாதிரி ஒன்றைச் சொல்லி அதுவே அச்வமேதத்தின் பலனை அளிக்கக் கூடியது என்கிறது.

4.2-"என் கடன் பணி செய்து கிடப்பதே"

இப்போது நான் "ஜீவகாருண்யம்", "பரோபகாரம்" என்று இரண்டு வார்த்தைகள் சொன்னேன். யோசித்துப் பார்த்தால் இந்த இரண்டு வார்த்தையுமே தப்புத்தான் ஏனென்றால்:

காருண்யம் - கருனை காட்டுவது - என்றால் இப்படிக் கருணை காட்டுகிறவர் ஒரு படி உயர நிற்கிற மாதிரியும், கருணைக்குப் பாத்திரமாகிறவர் ஒரு படி கீழே நிற்கிற மாதிரியும் தொக்கி நிற்கிறது. "நாம் உசந்த ஸ்தானத்தில் இருக்கிறோம், நம் உதவியைப் பெறுகிறவர் நம்மைவிடத் தாழ்த்தியாக இருக்கிறார், நாம் 'கருணை' காட்டுகிறோம்" என்று நினைக்கிறபோதே நாம் செய்கிற உபகாரம் அசுத்தமாகிவிடுகிறது. உபகாரம் செய்வதன் பயனாக நமக்கு எளிமை, அடக்கம், அஹங்கார நீக்கம் ஆகியன உண்டாக வேண்டும். மாறாக நாம் உபகாரம் பண்ணும்போது, போனால் போகிறது என்றும் யாருக்கோ கருணை காட்டுகிற மாதிரி நினைத்தோமானால், இது ஆணவ அஹங்காரங்களுக்கு இடமாகிவிடுகிறது. உபகாரத்தால் நம் ஆதமாவை உயர்த்திக் கொள்வதற்கு நேர்மாறாக ஆத்மஹானியே உண்டாகிவிடும்.

கருணை, காருண்யம் என்கிற வார்த்தையைச் சொல்வதைவிட அன்பு என்று சொல்லிவிட்டால் இந்த ஏற்றத் தாழ்வு தொனிக்காமல் இருக்கும். அன்பு என்பது நம்மவர்களிடமே நாம் ஸ்வபாவமாகச் செய்கிற காரியம். இதிலே போனால் போகிறதென்று யாரோ அந்நியருக்கு இரக்கம் காட்டுகிற மாதிரியான அஹங்கார எண்ணம் இல்லை.

ஆனாலுங்கூட நடைமுறை உலகில் இப்படி நம்மவர், அசலார் என்கிற பேதமேயில்லாமல் ஸகலரையும் ஒரே போல் பாவித்து, தாரதம்மியம் இல்லாமல் ஸவாபாவிகமான அன்பைச் செலுத்துவது என்றால் அது ஆரம்ப காலத்தில் ஸாத்யம் இல்லாமல்தான் இருக்கிறது. இந்தப் பொது இயற்கையை ஒப்புக் கொள்கிறது போலத் தான் திருவள்ளுவர்கூட அன்பு, அருள் (அருள் என்பதைக் கருணை என்று வைத்துக்கொள்ளலாம்) என்று பிரித்து **distinction** சொல்லியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார்? அருள் என்னும் அன்பீன் குழவி என்கிறார். அன்பு ஈன்ற குழந்தையே அருள் என்று அர்த்தம்.

இப்போது நமக்கு வேண்டியவர்கள் என்று சிலரை மட்டும் நினைத்துக் கொண்டு அன்பு செல்லுத்துகிறோம் அல்லவா? இந்த 'வேண்டியவர்'களை நம் ஊரார், தேசத்தார், உலகத்தார் என்று மேலே விஸ்தரித்துக் கொண்டே

போனால், அன்பிலிருந்தே படிப்படியாக அருள் பிறக்கிறது. அப்புறம் இப்படி அருள் பண்ணுகிறவனைப் பொருத்த மட்டும் அது 'அருள்' 'கருணை' என்றெல்லாம் உயர்வு விஷயமாக இல்லாமல், ஸ்வபாவமான, ஹைஜமான அன்பாகவே ஆகிவிடுகிறது. ஆனாலும் இந்த அன்பைப் பெறுகிறவர்களோ அது ஸாதாரனமாக நண்பர்களிடையே பந்துக்களிடையே இருக்கிற அன்புமாதிரி இல்லாமல், நல்ல கனிவு பெற்று தெய்விகமான சக்தி பெற்றிருப்பதாக உணர்கிறார்கள். இந்த பக்குவமான, திவ்யசக்தி வாய்ந்த அன்பை 'அருள், அருள்' என்கிறார்கள்.

`எல்லா உயிர்களும் ஒன்றே; எல்லாவற்றிலும் ஈஸ்வரன் இருக்கிறான்'என்று ஒருத்தன் உணர்கிறபோது தான் அவனுக்கு அருள் உண்டாகிறது. இவன் தன் மநுஷ்யர்களுடன் ஸமமான நிலையில் இருந்துகொண்டு பிரியம் காட்டுவதைவிட இன்னும் ஒருபடி கிழே இறங்கி தன்னைக் குறைத்துக்கொண்டு, மற்றவனை ஈஸ்வரனாக நினைத்துதான் ஸேவை செய்கிறான். 'நைச்சியம்' என்று இதை வைஷ்ணவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். தன்னைத் தாழ்ந்தவானக, நீசனாக நினைத்து இன்னொருத்தனுக்கு ஸேவை செய்வதுதான் 'நைச்சியம்'. இப்படி இவன் தன்னைக் குறைத்துக் கொள்கிறபோதுதான் இவனுடைய அன்பு வெறும் பேச்சாக, எண்ணமாக மட்டுமில்லாமல் அதற்குக் காரிய ரூபத்திலேயே தெய்விகமான சக்தி உண்டாகி, அது 'அருளாக' ஆகிவிடுகிறது! கொஞ்சங்கூட மமதையே இல்லாமல் "நாம் பெரியவர், உபகாரம் பண்ணுகிறோம்" என்ற அகந்தையே இல்லாமல் இவன் ஸமஸ்தப் பிராணிகளிடம் ஈஸ்வர ஆராதனையாக அன்பைச் செலுத்துகிறபோது, அதுவே இவனை ஸகல பிராணிகளுக்கும் மேலே உயர்த்தி விடுகிறது. இவனுடைய அன்பு வெறும் பேச்சாகவும் எண்ணமாகவும் மட்டுமில்லாமல், காரியத்திலேயே ஈஸ்வராநுக்ரஹத்தை வாங்கித் தரக்கூடிய அருட் சக்தியைப் பெற்றுவிடுகிறது.

இவனுடைய ஜீவகாருண்யத்தால் இப்படி இவனே உயர்வதுதான் பெரிய பிரயோஜனமாகிறது. ஒருத்தன் உபகாரம் என்று நினைத்து இன்னொருத்தனுக்குச் செய்வது அவனுக்கு அபகாரமாக ஆனாலும் ஆகலாம்;

அல்லது இவனுடைய உபகாரத்தை அவன் விரும்பாமலும் இருக்கலாம். அதாவது பிறத்தியானைப் பொருத்தமட்டில் இவனுடைய ஸேவை வீணாகவே போனாலும் போகலாம். ஆனால் இவனையே பொருத்தமட்டில் இவனுடைய அஹங்காரத்தைக் கரைத்து, இவனை (ஆத்மிகத்தில்) உயர்த்திவிடுகிறது.

இதனால்தான் 'ஜீவகாருண்யம்' என்கிற மாதிரியே 'பரோபகாரம்' என்ற வார்த்தையும் ஒரு தினுஸில் தப்புதான் என்றேன். பரனுக்கு (பிறத்தியானுக்கு) இவனுடைய ஸேவை உபகாரமாக இல்லாவிட்டாலும்கூட, ஸ்வயமாக இவனுக்கே சித்த பரிசுத்தியை உண்டாக்குவதால், இதை 'ஸ்வய உபகாரம்' என்றுதான் சொல்லவேண்டும்.

இது வேடிக்கையாக இருக்கிறது. அதாவது நாம் கருணை பண்ணுகிறோம், அருள் காட்டுகிறோம் என்ற எண்ணமே இல்லாதபோதுதான், இவனுக்கு தெய்விகமான 'அருளுடைமை'யே உண்டாகிறது. இப்படியே இவன் ஸ்வய நலனைக் கொஞ்சம்கூட நினைக்காமல் பரோபகார ஸேவை செய்வதுதான் உண்மையில் ஆத்ம லாபம் என்கிற பெரிய 'ஸ்வயோபகாரமாக'இருக்கிறது.

நல்ல அத்வைத திருஷ்டி வந்துவிட்டால் ஸ்வயம், பரம் என்கிற பேதமே இல்லாமல், எல்லாம் ஈஸ்வர ஸ்வரூபமாகப் பார்த்து, பல தினுஸில் கஷ்டப்படுகிறவர்களுக்கும் ஒருத்தன் தன்னுடைய இயற்கையான தர்மமாகவே ஆனந்தமாகப் பணி செய்து கொண்டிருப்பான். இப்போதும் 'பர உபகாரம்' என்ற **phrase** தப்பாகி விடுகிறது! தனக்குப் பரமாகத்தான் இவனுக்கு எதுவுமில்லையே! "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்னது இந்த நிலையில்தான்.

"நம் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதுதான் நம் வாழ்க்கையின் குறிக்கோளாக, **Motto** – வாக் இருக்க வேண்டும்.

கடன் என்றால், `கடனே என்று செய்தேன்', `கடனிழவே என்று செய்தேன்' என்றெல்லாம் சொல்லுகிறோமே, அந்த மாதிரி வேண்டா வெறுப்பாகச்

செய்வது என்று அர்த்தமில்லை. கடன் என்றால் கடமை,**Duty** .அதை அன்போடு, ஆர்வத்தோடு ஹ்ருதய பூர்வமாகச் செய்ய வேண்டும்.

லோகத்தில் இத்தனை ஜீவராசிகள், பசு பக்ஷிகள், தாவர வர்க்கங்கள் இருக்கிறோமே, இதில் ஒன்றுக்கொன்று வாழ்வுக்கு அவசியமானவைகளைப் பரஸ்பரம் கொடுத்துக் கொண்டுதான் ஜீவிக்கிறோம். இதிலே மநுஷ்யர்களான நாம், நம் போன்ற ஸஹ மநஷ்யர்களிடமிருந்தும், மிருகங்கள், பக்ஷிகள், தாவரங்கள், இன்னும்**inanimate** என்கிற ஜடவஸ்துக்களிடமிருந்துங்கூட எத்தனையோ உதவி பெறுவதால்தான் ஜீவ யாத்திரையை நடத்திக்கொள்ள முடிகிறது. இதனால்தான் ஜடம் என்று நினைக்கிற பூமி, ஜலம், அக்னி இவற்றுக்குக்கூட நாம் செய்கிற பிரதியாக வைதிக மதத்தில் பலவிதமான சடங்குகள் இருக்கின்றன.

தாவரங்களுக்கு உயிர் இருக்கிறது, உணர்ச்சிகள் இருக்கின்றன என்று ஜகதீஷ்சந்திர போஸ்தான் கண்டு பிடித்தார் என்றில்லை. வனஸ்பதி, அச்வத்தம் என்கிற மாதிரியாக அதுகளையும் உயிரும் உணர்ச்சியும் கொண்டதாகப் பார்த்து மந்திரபூர்வமாக அவற்றுக்கும் நம் ப்ரத்யுபகாரமாக பூஜைகளைப் பண்ண சாஸ்த்திரம் இருக்கிறது. 'தூர்வா ஸூக்தம்', 'ம்ருத்திகா ஸூக்தம்' என்றெல்லாம் அருகம்புல், மண் முதலானவற்றிலிருக்கிற தெய்வ சக்தியைக்கூட ஆராதிக்க வேத மந்திரங்கள் இருக்கின்றன. தினமும் செய்கிற 'ப்ரஹ்ம யஜ்ஞ'த்தில் சேதன-அசேதனங்கள் அத்தனையிலும் இருக்கிற சைதன்ய சக்திக்கு நம் நன்றியறிதலாகத் தர்ப்பனம் சொல்லியிருக்கிறது.

ஒரு காக்கை இருக்கிறது. எங்கேயோ ஒரு பழத்தைச் சாப்பிட்டுவிட்டு நம் தோட்டத்திலே வந்து எச்சமிடுகிறது. அந்தப் பழத்தின் கொட்டை இங்கே நம் வீட்டுத் தோட்டத்தில் விழுந்து மரமாகிறது. அந்தக் காக்கை நமக்கு ஓர் உபகாரம் பண்ணிவிட்டது. நாய் காவல் காக்கிறது. குதிரையை வண்டியில் கட்டி ஸவாரி பண்ணுகிறோம். கோமாதா நமக்கு பௌதிகமாகவும் ஆத்மார்தமாகவும் பண்ணுகிற உபகாரம் கொஞ்சநஞ்சமில்லை. இப்படி எல்லாரிடமும் உபகாரம் பெற்றுவிட்டு, மநுஷ்ய ஜன்மா எடுத்துள்ள நாம் பிரதி உபகாரம் பண்ணாமல் இருந்தால் பாபம் அல்லவா? "நன்றி மறப்பது

நன்றன்று", "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றெல்லாம் மஹா பெரியவர், வள்ளுவர், இன்னும் மநு, வியாஸர் எல்லாரும் சொல்கிறார்களே!

மந்த்ரவத்தாகவும், கிராம ஜனங்களின் வழக்கத்தில் வந்துள்ளதுமான அநேக சடங்குகளைப் பண்ணினாலே அசேதனம் **(inanimate)** என்று நாம் நினைக்கிறவற்றின் அதிதேவதைகள் திருப்தி அடைந்து விடுகிறார்கள். இது தவிர தாவரங்களுக்கு ஜலம் கொட்ட வேண்டும். மிருகங்களிடம் அன்பு பாரட்ட வேண்டும். அவற்றிக்குக் கொடுமை செய்யவே கூடாது. "வாயில்லா ஜீவன்" என்றே அவைகளை ரொம்பவும் பரிவொடு சொல்வது வழக்கம். முன்காலத்தில் ஊருக்குள் மட்டுமின்றி, வெளியே மாடுகள் மேய்ச்சலுக்குப் போகிற இடங்களில் கூட அவற்றுக்கெனவே குளம் வெட்டி வைப்பார்கள். ஒரு பசுவுக்கு கழுத்திலே அரிக்கிறது. நம்மைப்போல் அதற்குக் கையா இருக்கிறது, சொரிந்து கொள்ள?" எனக்கு அரிக்கிறது" என்று சொல்ல அதற்கு வாய் கூட இல்லையே!அதன் கஷ்டத்தை உணர்ந்து, பசு சொரிந்து கொள்வதற்கென்றே அங்கங்கே கற்களை நாட்டி வைத்தார்கள். "ஆதீண்டு குற்றி நிறுவுதல்' 'என்று இதை ஒரு பெரிய தர்மமமாக நீதி நூல்களில் சொல்லியிருக்கிறது. கடைசியில் நம் மாதிரியான மநுஷ்யர்களிடத்தில் வந்தால், ஸ்ருஷ்டியில் பாக்கியுள்ள அத்தனை ஜீவ இனங்களுக்கும் எத்தனை கஷ்டம் இருக்குமோ அத்தனையும் சேர்த்து வைத்து ஒவ்வொரு மநுஷ்யனுக்கும் இருக்கிறது!இது இவனுடைய அலாதி புத்தியினால் இவனே ஸம்பாதித்துக் கொண்ட சொத்து!இவனைப்போல**problem** (பிரச்னை) வேறு எதற்கும் இல்லை. இதிலே முக்கால்வாசி இவனே கல்பித்துக்கொண்டதுதான்!இதைச் சரிப்படுத்துகிற மஹாபெரிய பரோபகாரத்தைத்தான் மஹான்கள் செய்கிறார்கள்.

இது தவிரவும் வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், ஏழை விடுதிகள், அநாதாசிரமங்கள், விதவா இல்லங்கள், பிச்சைக்காரர் விடுதிகள் முதலியவற்றைப் போய்ப் பார்த்தால் தெரியும், மநுஷ்யர்கள் எத்தனை தினுஸான கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் என்பது. இவற்றை மஹான்கள்தான் என்றில்லை. ஸாதாரண ஜனங்களான நாமும் ஓரளவுக்குத்

தீர்த்து வைக்கமுடியும். இம்மாதிரியான இடங்களைப் போய்ப் பார்த்தால் நம் போன்றவர்களின் உபகாரத்தைக்கூட ஈஸ்வரன் எத்தனை ரூபங்களில் வந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று தெரியும்.

நாம் செய்யவேண்டியது என்னவென்றால், ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், துக்கம் எங்கே உண்டோ, அங்கே நாம் வலுவில் போய், அந்த துக்க நிவிருத்திக்கு நம்மால் ஆகக்கூடியதையெல்லாம் பண்ண முயலுவதேயாகும். பணத்தாலோ, சரீரத்தாலோ, வாக்காலோ நம்மால் முடிந்த உதவியைப் பண்ண வேண்டியது நம் கடன், கடமை, **Duty.**

இதைத்தான் தர்மம், அறம் என்று சொல்வது. முதலிலேயே நான் சொன்னபடி, இதைச் செய்வதால் எதிராளிக்கு வாஸ்தவத்தில் எந்த அளவுக்கு துக்கநிவிருத்தி உண்டாகுமோ அதற்கு நாம் 'காரன்டி' சொல்லமுடியாது. அதற்கு நாம் ஜவாப்தாரியும் அல்ல. ஆனால் இப்படிச் செய்வதால் நமக்குச் சித்தசுத்தி நிச்சயமாக ஸித்திக்கிறது. அதாவது மனமாசு அகல்கிறது. திருவள்ளுவர்கூட தர்மத்துக்கு **definition**(லக்ஷணம்) சொல்லும்போது மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் என்றுதான் சொல்கிறார்.

4.3-அந்தரங்க சுத்தம் அவசியம்

'*அனைத்து அறன்*', அதாவது ஸர்வ தர்மமும் என்னவென்றால் அவரவரும் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்', அதாவது, தங்கள் மனஸைத் தாங்களே துளிகூட அழுக்கில்லாமல் நிர்மலமாக சுத்தம் செய்துகொள்வதுதான் என்கிறார் திருவள்ளுவர். கர்மாநுஷ்டானத்தால் அவரவரும் சித்தசுத்தி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற வைதிக ஸம்பிரதாயத்தைத்தான் இங்கே திருக்குறளும் சொல்கிறது. முதலில் இவன் தன்னைத்தானே சுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். இது இல்லாமல் பரோபகாரம், ஸோஷல் ஸர்வீஸ் என்று கிளம்பினால் அது வெற்றுக் காரியம்தான்.

தான் அடங்கியிருக்க வேண்டும்; பக்தியோடு ஈஸ்வர ஸேவை என்று நினைத்து ஸமூஹ ஸேவை செய்ய வேண்டும். அப்போதுதான் அது

பலனளிக்கும். அந்தரங்க சுத்தமில்லாமல் செய்கிற காரியங்கள் வெறும் படாடோபமாகவும், `ஷோ'வாகவுமே முடிந்து போகும். இந்த படாடோபத்தால் 'ஸேவை' என்று செய்கிறவனுக்கு அஹங்காரம் மேலும் ஜாஸ்தியாகத்தான் செய்யும். அஹங்காரம் தொலைவதற்கு உதவவேண்டிய ஸேவையை அடக்குமும் பணிவும் பக்தியும் அன்பும் இல்லாமல் செய்தால் அஹங்காரத்தை அதிகமாக்கிவிடும். குளிக்க வேண்டும் என்று போய்ச் சேற்றை வாரிப் பூசிக்கொண்டதாகிவிடும்.

"தான் சுத்தமாவதுதான் ஸர்வ தர்மமும்" என்றால் இது ஸ்வயநலம் மாதிரி அல்லவா இருக்கிறது என்று தோன்றலாம். ஆனால் இது நாம் லோக ரீதியில் நினைக்கிற மாதிரியான ஸ்வயநலம் இல்லை. பிறத்தியாரைக் கஷ்டப்படுத்தியாவது நம் இந்திரிய ஸுகங்களைப் பூர்த்தி பண்ணிக் கொள்வதுதான் தப்பான ஸ்வயநலம். மனஸை சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டுமானால் நாம் கஷ்டப்பட்டாவது நல்லதே பண்ண வேண்டியதாகிறது. இது இந்த்ரிய ஸௌக்கியங்களிலிருந்து நம் மனஸை மீட்டு சாச்வதமான பேரின்பத்தில் சேர்ப்பதற்கு உதவுகிறது. 'உபகாரம்' என்றால் பிறத்தியாருக்குச் செய்தால் மட்டும் போதுமா? இதோ நமக்கென்று ஈஸ்வரன் ஓர் உயிரைக் கொடுத்த மாதிரி கொஞ்சம் வெளியே அவிழ்த்து விட்டிருக்கிறானே, மனஸ் என்ற ஒன்றைக் கொடுத்து அதை நல்லது கெட்டது இரண்டிலும் ஆடுகிற மாதிரி விட்டிருக்கிறானே! இந்த நம் உயிருக்கு ஜீவாத்மா என்கிறார்களே அதற்கு, மட்டும் நாம் உபகாரம் பண்ணாமல் இருக்கலாமா? மனஸை நல்லதிலேயே செலுத்தி, பகவான் தந்திருக்கிற வாக்கு, சரீரம் எல்லாவற்றையும் நல்ல பேச்சு, நல்ல காரியங்கள் இவற்றிலேயே பிரயோஜனப்படுத்தி இந்த உயிரைப் பேரின்ப நெறியில் சேர்க்க நாம் கடமைப்பட்டிருக்கவில்லையா? சின்னதான ஸ்வயநலத்தைவிட்டு, இந்தப் பெரிய 'ஸ்வயநல'த்துக்கு எல்லோரும் பாடுபடத்தான் வேண்டும்.

இப்படிச் செய்வதற்குப் பரநலப் பணிகளே ரொம்பவும் ஸஹாயம் செய்கிறது. இதிலே ஒரு வேடிக்கை - இவன் மனஸ் சுத்தமாக இருந்தால்தான் பரோபகாரம் நிஜமாக நடக்கிறது, பலன் தருகிறது; பரோபகாரத்தால் தான்

இவன் மனஸே சுத்தமாகத் தொடங்குகிறது என்றால் **contradiction** (முரண்) மாதிரித்தானே இருக்கிறது? ஆனால் முரண்பாடு இல்லை. முதலில் இவனுக்கு மனஸ் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற தாபம் இருந்தாலே போதும். மனஸ் லேசில் கட்டுப்பட்டு வரத்தான் வராது. இந்திரிய ஸௌக்யத்தையே நினைத்து அது திரும்பத் திரும்ப ஓடிக்கொண்டுதான் இருக்கும். அப்போது, `ஐயோ, இது திருந்த வேண்டுமே! 'என்ற உண்மையான கவலை இருந்தால் இந்த விசாரத்துக்கே ஒரு நல்ல சக்தி (**effect**) உண்டு. இப்படி ஒரு தாபத்தோடு பரோபகார காரியங்கள் என்ற லகானைப் போட்டு அப்போதப்போதும் ஓடுகிற மனஸை இழுத்து ஒரு பொதுத் தொண்டில் செலுத்த வேண்டும். ஒன்றுக்கொன்று போஷித்து இட்டு நிரப்புவது, **complementary**என்கிறார்களே, அப்படிப், பரோபகாரப் பணி மனஸைக் கொஞ்சம் கொஞ்சமாக சுத்தம் பண்ணப் பணண, அந்தச் சித்த சுத்தியால் நாம் செய்கிற தொண்டும் கொஞ்சம் கொஞ்சமாக சுத்தமாகிக் கொண்டு சக்தியோடு பலன் தர ஆரம்பிக்கிறது. இப்படிப் பரோபகாரமும் ஆத்மாபிவிருத்தியும் ஒன்றுக்கொன்று கைகோத்துக் கொண்டு, பரஸ்பரம் பலம் தந்து கொண்டு வளர்கின்றன.

என்ன சொன்னாலும் வெளி உலகத்தை நாம் முழுக்க ஸரி பண்ணுவது நம் கையில் இல்லை. பல பேர் பல தினுஸான கர்மாவால் கஷ்டப்படும்போது நாம் எத்தனை ஸேவை செய்தாலும், அவர்கள் கர்மா குறுக்கே நின்று வெளியிலே பலன் இல்லாமலும் போகலாம். ஆனால் பிடிவாதமாக நாம் இந்தக் காரியத்தைச் செய்து கொண்டே வந்தால், அது நிச்சயமாக நம் கர்மாவைக் கழுவத்தான் செய்யும்;கர்ம வாஸனையால் ஏற்ப்பட்ட நம் உள் அழுக்குகளை அலம்பத்தான் செய்யும். இதனால்தான் திருவள்ளுவர், "வெளியில் உன் தொண்டு பலன் தந்ததா என்று **proof** (நிரூபணம்) தேடாதே! உன் மனஸிலே அழுக்கு போச்சா, மனத்துக்கண் மாசிலன் ஆனாயா என்று பார்த்துக்கொள். இந்த உள் **proof** – இதை யாரும் உன்னிடமிருந்து ஒளிக்க முடியாது - கிடைத்துவிட்டால் நீ பண்ணின தர்மம், அறன் பலித்துவிட்டது என்று அர்த்தம்" என்று சொல்கிற மாதிரி குறளைப் பண்ணியிருக்கிறார்.

4.4-வைதிக மதமும் உலகப் பணியும்

இப்போதெல்லாம் ரொம்பப் பேருக்கு ஒரு தப்பு அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது 'புத்தர், ஜீஸஸ், நபி எல்லோரும் அஹிம்ஸை, அன்பு, ஸஹோதரத்வம் ஆகியவற்றைச் சொன்ன மாதிரி வைதிக மதத்தில் சொல்லவில்லை. வைதிக மதத்தில் எப்போது பார்த்தாலும் கர்மாநுஷ்டானம் என்று ஏதாவது யாகம், யஜ்ஞம், திவஸம், தர்ப்பணம் இந்த மாதிரியும், பெரிய பெரிய பூஜை உத்ஸாவதிகளும், விரதம், யோகம், ஞான விசாரம் இதுகளும்தான் சொல்லியிருக்கிறதே தவிர, ஜீவகாருண்யத்தைப்பற்றி ஒன்றுமே இல்லை' என்று ஓர் அபிப்ராயம் இருக்கிறது. நல்ல வைதிகமாக ஆசாரமாக இருக்கிறவர்களைப் பார்த்தாலும், என்னவோ வறட்டு வறட்டு என்று ஏதாவது சடங்குகளைப் பண்ணிக்கொண்டு, 'மாடி' கொண்டாடிக் கொண்டு ஒதுங்கி ஒதுங்கித்தான் இருக்கிறார்களே தவிர, ஒரு மிஷனரி ஆர்வம் காட்டுகிற மாதிரிப் பரோபகாரப் பணிகளில் ஈடுபடுவர்களாக இல்லையே என்றுதான் தோன்றுகிறது.

வாஸ்தவத்தில் நம் சாஸ்திரங்களில் வர்ணாச்ரமப் படி அவரவருக்கான அநுஷ்டானங்களை, ஸம்ஸ்காரங்களைச் சொல்வதற்கு முன் ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்க வேண்டிய எட்டு ஆத்ம குணங்களைச் சொல்லியிருக்கிறது; ஸாமான்ய தர்மங்கள் என்ற பெயரில் சில ஒழுக்க நெறிகளைச் சொல்லியிருக்கிறது. ஸாமான்ய தர்மங்களில் முதலாவதே அஹிம்ஸைதான். ஸத்யம்கூட இதற்கு அப்புறம்தான் வருகிறது. அந்த ஸத்யத்துக்கும் definition (லக்ஷணம்) கொடுக்கிறபோது,

ஸத்யம் பூதஹிதம் ப்ரியம்

அதாவது, ஸத்யம் என்பது வெறுமனே நடந்ததை நடந்தபடி வாயால் சொல்திறது மட்டுமில்லை, எது ஜீவராசிகளுக்கு ஹிதமானதாக, பிரியமானதாக இருக்கிறதோ அதுவே ஸத்யம் என்றுதான் சொல்லியிருக்கிறது.

இப்படியே நாற்பது ஸம்ஸ்காரங்களுக்கு முந்திச் சொல்லியிருக்கிற அஷ்டகுணங்களில் முதலாவதாக,

தயா ஸர்வ பூதேஷு

"எல்லா ஜீவராசிகளிடமும் அருள் இருக்க வேண்டும்"என்று அன்புக்கே முக்யத்வம் தந்திருக்கிறது.

அன்புடைமை, அருளுடைமை இத்யாதிகளை ஒருத்தன் தான் அப்யாஸம் பண்ணாமல் பகவான் மட்டும் தனக்கு அருள் பண்ண வேண்டும் என்று நினைத்து எத்தனை பூஜை, யாகம் இதுகள் செய்தும் பிரயோஜனமில்லைதான். இவனுக்குத் தன் மாதிரி இருக்கப்பட்ட மற்றவர்களிடம் ஒரு தயை, தாக்ஷிண்யம், ஈவு, இரக்கம் இவை இல்லாவிட்டால், தன்னிடம் மட்டும் பகவான் தயை காட்டவேண்டும் என்று கேட்க வாய் ஏது? முன்னாலேயே நான் சொன்ன மாதிரி பரோபகாரம், ஆத்மாபிவிருத்திக்கான ஸம்ஸ்காரங்கள், பூஜை முதலான ஸாதனங்கள் எல்லாம் கலந்து, கலந்து ஒன்றையன்று இட்டு நிரப்பிக் கொண்டு (Complementary) பரஸ்பரம் ஒன்றால் ஒன்று பரிசுத்தமாக்கப்பட்டுத்தான் அநுஷ்டிக்கப்பட வேண்டும்.

நடுவாந்தரத்தில் ஈஸ்ட் இண்டியா கம்பெனி வந்து, கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளைக்கார ராஜ்யம் ஏற்பட்டு இங்கே இங்கிலீஷ்காரர்களின் வழக்கங்கள் புகுந்தபின்தான் நல்ல வைதிக ஆசாரத்துடன் இருப்பவர்களுக்கும் பொது ஸமூஹ ஸேவைக்கும் ஒரு பிரிவினை மாதிரி ஏற்பட்டிருக்கிறதே தவிர, அதற்கு முந்தியெல்லாம் பரமசிஷ்டர்களும் கூட ஸகல ஸமூஹத்தின் அன்பையும் மதிப்பையும் பெற்று அவர்களுக்கு உபகாரம் செய்துதான் வந்திருக்கிறார்கள். அப்பைய தீக்ஷிதர், கோவிந்த தீக்ஷிதர், திருவிசநல்லூர் அய்யாவாள் மாதிரியான பெரியவர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் அவர்கள் சேரி ஜனங்கள் உள்பட எல்லாருக்கும் உபகாரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது.

லோக க்ஷேமார்த்தம் தொழில்களைப் பாரம்பரியமாகப் பங்கீடு பண்ணிக் கொண்டு, அந்தந்தத் தொழிலைப் பொருத்து அநுஷ்டானங்களும்

ஆசாரங்களும் ஏற்படுவதால் இவற்றில் குழறுபடி உண்டாகி லோக க்ஷேமம் கெட்டுப் போகக்கூடாது என்பதற்காகவே பிரிந்து வாழ்ந்தாலும்கூட, பரோபகாரத்துக்கு அப்போது குறைச்சலே இருக்கவில்லை. இப்போது"ஸோஷல் ஸர்வீஸ்" என்று பேச்சில் ரொம்பவும் அடிப்பட்டு, நியூஸ் பேப்பரில் ஃபோட்டோக்கள் போடுவதுபோல் அப்போது செய்யாவிட்டாலும், வாஸ்தவமான ஸமூஹ ஸேவை அப்போது ஸ்வபாவமாகவே செய்யப்பட்டு வந்தது.

வெள்ளைக்காரர்களோடு town- life (நகர வாழ்க்கை) என்று ஒன்று வந்து நம் ஆசாரங்களுக்கெல்லாமே ஹானியாக எல்லாரையும் போட்டுப் பலபட்டையாகக் குழப்புகிற நிலைமை ஏற்ப்பட்டபின் ரொம்பவும் ஆசார சீலர்கள் இந்தப் படையெடுப்புக்குப் பயந்து ஸமூஹத்திலிருந்தே ஒதுங்கிப் போன மாதிரி விலக வேண்டி வந்தது. அதனால்தான் சாஸ்திரோக்தமாக இருக்கிறவர்களுக்குப் பொதுத்தொண்டு மனப்பான்மை இல்லாதமாதிரி ஏற்பட்டுவிட்டது.

ரொம்பவும் கலந்து போகவும் கூடாது;ஒரேயடியாகப் பிரிந்தும் இருக்கக்கூடாது; அவரவரின் ஸ்வதர்மப்படியான காரியத்தில் பிரிந்திருக்க வேண்டும்; ஆனால் மனஸிலே ஒன்று சேர்ந்து அனைவரும் 'அரன் குடிமக்களாக' ஐக்கியப்பட்டு இருக்க வேண்டும் என்ற உத்க்ருஷ்டமான ஏற்பாடு இதற்கப்புறம் வீணாய்ப் போக ஆரம்பித்து விட்டது. ஒரு பக்கம் சீர்திருத்தக்காரர்கள் ஆசார அநுஷ்டானங்களையே கண்டனம் செய்தார்களென்றால், இன்னொரு பக்கம் ஆசாரக்காரர்களும் இந்த ஸமத்வம் என்கிற குழப்படிக்கு பயந்து ஒதுங்கி ஒதுங்கித் தனியாகப் போனதால், அவர்களுக்குப் பொதுவான ஸமூஹ உணர்ச்சியே குறைந்து பொதுத் தொண்டிலிருந்து விலகி விலகிப் போக ஆரம்பித்து விட்டார்கள். இப்படி ரொம்பவும் விலகிப் போகிறபோது மனஸில் அன்பு, ஐக்கிய பாவம் எல்லாம் குறையத்தான் செய்யும். இதனால்தான் ஒருவேளை இப்போது ஆசாரக்காரர்கள் என்றாலே மநுஷாபிமானம் இல்லாமல் வறண்டு போனவர்கள் என்று மற்றவர்கள் நினைக்கிற மாதிரி ஆகியிருக்கலாம். ஆனால் நம் ஸநாதன தர்மத்தை உள்ளபடி பின்பற்றுவதானால் அதற்கு

ஸம்ஸ்காரங்கள் எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் ஆத்மகுண அபிவிருத்தியும். அப்படிப்பட்ட குணங்களில் முதலில் அருளுடைமையைத்தான் சொல்லியிருக்கிறது. யாக-யஜ்ஞாதிகள் யதேஷ்டமாகச் செய்த ரந்திதேவனைவிட இதற்கு வேறு உதாரணம் வேண்டாம். அவன் கதை கொஞ்சம் சொல்கிறேன்.

4.5-ரந்தி தேவன்

ரந்திதேவன் என்பவன் சந்திர வம்சத்தில் வந்த ராஜா. இவன் ஏகப்பட்ட யாகயஜ்ஞாதிகளைச் செய்த விஷயம் மஹாபாரதத்தில் வருகிறது. இப்படிக் கர்மாநுஷ்டத்திலேயே ஈடுபட்டிருந்ததால் இவனுக்கு ஜீவகாருண்யம் வற்றிவிடவில்லை என்கிற கதையை ஸ்ரீமத் பாகவதம் சொல்கிறது.

பழைய சாஸ்திரங்களில் 'இஷ்டம்', 'பூர்த்தம்', என்று ஜனங்கள் அநுஷ்டிக்க வேண்டிய இரண்டு விஷயங்களைச் சொல்லியிருக்கிறது. இவற்றில் 'இஷ்டம்' அல்லது 'இஷ்டி' என்பது யாக யஜ்ஞாதிகள். தசரதன் புத்ர காமேஷ்டி பண்ணினான் என்கிறோமே, அது புத்ர காம இஷ்டி தான் - அதாவது பிள்ளையை விரும்பிச் செய்த இஷ்டி (யாகம்) .

'பூர்த்தம்' என்பது என்னவென்றால், அதுதான் தற்காலத்தில் ரொம்பப் பேர் நம் மதத்தில் இல்லாதது என்று நினைக்கிற ஸோஷல் ஸர்வீஸ். கிணறு-குளம் வெட்டுவது, ரோடு போடுவது, கோயில் கட்டுவது முதலிய ஸமூஹப் பணிகளுக்குப் 'பூர்த்தம்' என்று பேர். இஷ்டம் செய்யச் சில பேருக்குத்தான் அதிகாரம் உண்டு. அது ரொம்பக் கஷ்டம்கூட! நியமங்கள் ஜாஸ்தி. பூர்த்தம் இப்படியில்லை. பாமர ஜனங்களிலிருந்து ச்ரௌதிகள் வரையில் ஏழை-பணக்காரன், அந்த-ஜாதிக்காரன் இந்த ஜாதிக்காரன் என்கிற பேதம் கொஞ்சம்கூட இல்லாமல் ஸகல ஜனங்களும் ஒன்று சேர்ந்து பண்ண வேண்டியதே பூர்த்தம். பூர்த்தத்தைப் பற்றிப் பின்னால் இன்னும் சொல்கிறேன். இப்போது ரந்திதேவன் கதையைப் பார்க்கலாம்.

இந்த ரந்திதேவன் யஜ்ஞங்கள் செய்து ஏகமாக தக்ஷிணை கொடுத்து, தானம் பண்ணினான். அவனுடைய கஜானா முழுக்கக் காலியாகி விட்டது. ஒரு செல்லாக் காசு பாக்கியில்லை. அப்படி வாரி வாரி, "தேஹி" என்று வந்தவர்களுக்கெல்லாம் "நாஸ்தி" என்று சொல்லாமல் தானம் பண்ணிவிட்டான்.

அப்போது பகவான், மஹாவிஷ்ணு, ஒரு சோதனை பண்ணினார். ராஜ்யத்திலே பெரிய பஞ்சம் வரும்படியாகப் பண்ணிவிட்டார். நியாயமாகப் பார்த்தால் யஜ்ஞம் செய்வதே மழை, தான்ய ஸம்ருத்திக்காகத்தான், இப்போது நேர்மாறாக ஒரே பஞ்சமாகிவிட்டது.

அப்போதும் ரந்திதேவன் தன்னுடைய உடைமைகளையெல்லாம் ஒவ்வொன்றாக தானம் பண்ணிக் கொண்டே வந்தான். கடைசியில் ராஜாவான அவனுக்கும், அவனுடைய ராஜ குடும்பத்துக்குமே ஒரு வேளை கூழுக்குக் கூட கதியில்லை என்கிற நிலைமை வந்து விட்டது. ஆனால் கொடுத்தே பழகிய அவன் யாசகம் பண்ணவில்லை. நாற்பத்தெட்டு நாள் - ஒரு மண்டலம் - குடும்பத்தோடு சுத்த உபவாஸம் இருந்து விட்டான். அப்பறம் எப்படியோ வெளியிலே ராஜ குடும்பம் பட்டினி கிடக்கிறது என்று தெரிந்து விட்டது. ஆனானப்பட்ட ராஜா - வள்ளலாகப் பிரஜைகளை ரக்ஷித்தவன் - குடும்பத்தோடு வயிறு காயக் கிடக்கிறான் என்றவுடன் யாரோ எப்படியோ கொஞ்சம் கோதுமைக் கஞ்சியும் தண்ணீரும் சேகரம் பண்ணி நாற்பத்தொன்பதாவது நாளன்று அவனுக்கும் அவனுடைய பத்தினி புத்தரர்களுக்குமாக அனுப்பிவைத்தார்கள்.

முதுகோடு வயிறு ஒட்டிக்கொள்கிற மாதிரிக் காய்ந்து கிடந்த ஸ்திதியில் இது தேவாம்ருதமாக வந்தது. ஆசையோடு அந்தக் கஞ்சியை ராஜகுடும்பத்தினர் வாயில் விட்டுக் கொள்ளப் போகிற ஸமயம். அப்போது பார்த்து ஒரு பிராம்மணன் அங்கே வந்து சேர்ந்தான், "பிக்ஷாம் தேஹி"! என்று.

துளி அன்னம் விழுமா விழுமா என்று வயிறு தபித்து ஏங்கிக் கொண்டிருந்த ஸமயம். ராஜாவாக பஞ்ச பக்ஷ்யம் சாப்பிட்டவன் பஞ்சத்தில் அடிப்பட்டு துடித்துக் கொண்டிருக்கும்போது கடைசியில் கொஞ்சம் கஞ்சி

கிடைத்ததென்றால், சொல்லி வைத்தாற்போல் அப்போது யாசகர் வந்து விட்டார்.

ரந்திதேவன் யாசகரைப் பார்த்தான். எப்படிப் பார்த்தான்?' சனியன் பிடித்தவன் எங்கே வந்தான்?' என்றா? இல்லை. ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனாகவே அந்தப் பிராம்மணனைப் பார்த்தான்.

'நல்லவேளை, இதை நானே சாப்பிடாமல் இந்த க்ஷணத்தில் இவர் வந்தாரே! நான் பகவதபசாரம் செய்யாமல் காப்பாற்றினாரே! என்று ஸந்தோஷப்பட்டான்.

அவனுடைய பத்தினி புத்திரர்களும் உதார குணத்தில் அவனுக்குக் குறையாதவர்கள். எல்லாரும் தங்களிடமிருந்ததைப் பங்கு போட்டுப் பிராம்மணனுக்கும் கொடுத்தார்கள். அது இவர்களுக்கே போதும் போதாததாகத்தான் இருந்தது. ஆனால் அதிலே கணிசமாக ஒரு பங்கு யாசகருக்குக் கொடுத்து அவரைத் திருப்திப்படுத்தி அனுப்பினார்கள்.

பாக்கியை ராஜ குடும்பத்தினர் சாப்பிட இருந்தபோது மறுபடியும் ஒரு யாசகன் முளைத்தான். இப்போது வந்தவன் நாலாம் வர்ணத்தவன். பசிக்கும் கருணைக்கும் வர்ணம், ஜாதி என்ற பேதங்கள் உண்டா என்ன? இவர்கள் ஏற்கனவே குறைந்து போய்விட்ட கஞ்சியிலிருந்தும், தாங்கள் கால் வயிறு சாப்பிட்டால் போதும் என்று கொஞ்சமே வைத்துக் கொண்டு, பாக்கியை அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்து விட்டார்கள். ராஜாவின் கண்ணில் இவனும் விஷ்ணுவாகத்தான் தெரிந்தான்.

மிச்சமிருந்த கஞ்சியில் மற்றவர்கள் தங்கள் பங்கைக் குடித்தார்கள். ரந்திதேவன் மாத்திரம் இந்த ஸமயத்திலும் இரண்டு ஜீவன்களுக்கு உபகாரம் பண்ணும்படியாக பகவான் அநுக்ரஹம் செய்ததையே நினைத்துக் கொண்டோ என்னவோ, சாப்பிடாமல் யோசனையில் இருந்தான்.

இவனுக்கு சாப்பிடுகிற எண்ணம் வந்த அதே ஸமயத்தில் மறுபடியும் ஒரு தீனக்குரல் வந்தது. மநுஷக் குரலோடு நாய்கள் குரைப்பு வேறு! நாய்களைப் பிடித்துக் கொண்டு ஒரு வேடன் வந்து நிற்கிறான். இந்தக் கஞ்சிக்குத்தான் போட்டியாக வந்திருக்கிறான்!

நாய்கள், நாய்க்காரான் எல்லோருமே ரந்திதேவனுக்கு நாராயண ஸ்வரூபமாகத்தான் தெரிந்தார்கள். வேதத்தில் ஸ்ரீருத்ரத்தில் பரமேஸ்வரனை 'நாய்களின் உருவத்தில் இருக்கிறவன்; நாய்களை வைத்திருக்கிற வேடனாக இருக்கிறவன்' என்று சொல்லியிருக்கிறது. ரந்திதேவன் வாஸ்தவத்திலேயே அப்படி ஈஸ்வர ரூபமாகப் பார்த்தான்.

ரந்திதேவனுக்கு அப்படிப்பட்ட த்ருஷ்டி இருந்தது. 'நாராயணன்தான் இப்படி நாய்களாகவும் அதைப் பிடித்துக்கொண்டு வருபவனுமாக வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறான். தனக்குப் பசியிருப்பதாக வேஷம் போடுகிறான். அதைத் தணிப்பதுதான் பகவத் ஆராதனம்' என்று நினைத்தான். கொஞ்சம்கூட மனஸ் கலங்காமல் தன் பங்கில் பாக்கியிருந்த கஞ்சி முழுவதையும் அவர்களுக்கு முன்னால் வைத்துவிட்டான். 'நாய்க்கு நமஸ்காரம், நாயின் யஜமானுக்கு நமஸ்காரம்' என்று ருத்ரம் சொல்கிற மாதிரியே அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணினான்.

இப்போது அவனிடம் இருந்ததெல்லாம் வெறும் தீர்த்தம்தான். ஒரே வறட்சிக் காலமாதலால் அந்தத் தீர்த்தம் கிடைப்பதுகூட ரொம்ப துர்லபமாகத்தான் இருந்தது. அதையாவது பானம் பண்ணினால்தான் இவனுடைய ஜீவன் உடம்பிலே நிற்கும் என்கிற ஸ்திதி.

இப்போதும் பகவான் சோதனையை நிறுத்தவில்லை. ஜலத்தையாவது குடித்துப் பிராணனை ரக்ஷித்துக் கொள்ளலாம் என்று இவன் பார்க்கிறபோது, மறுபடியும் "சாமீ, தாஹம், தாஹம்!" என்று பிரலாபம் வந்தது.

"அந்தத் தண்ணீரையாவது ஊத்து சாமீ" என்று சொல்லிக் கொண்டு ஒரு பஞ்சமன் (புலையன்) வந்து நின்றான்.

அப்போது ரந்திதேவன் சொன்னதாக பாகவதத்தில் இரண்டு ஸ்லோகங்கள் வருகின்றன. இரண்டும் இரண்டு ரத்னங்கள். த்யாகத்துக்கு, பரோபகாரத்துக்கு இதைவிடப் பெரிய மந்திரமில்லை என்று சொல்லலாம். அதை அவன் சொன்ன வார்த்தையிலேயே சொல்கிறேன். அப்புறம் தமிழில் அர்த்தம் சொல்கிறேன்.

ந காமயே (அ) ஹம் கதிம் ஈஸ்வராத் பராம்
அஷ்டர்த்தி யுக்தாம் அபுநர்பவம் வா
ஆர்த்திம் ப்ரபத்யே (அ) கில தேஹ பாஜாம்
அந்தஸ்திதோ யேன பவந்த்யது:கா: ||

ருத்தி என்றால் ஸித்தி என்றே அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். அற்புத சக்திகளை (miracle -கள் செய்கிற சக்திகளை) எட்டு ஸித்திகள் அல்லது ருத்திகள் என்று சொல்வார்கள். இந்த 'அஷ்ட ருத்தி' தான் 'அஷ்டர்த்தி' என்று ஸ்லோகத்தில் வருகிறது. இவை இருந்துவிட்டால் ஸர்வ லோகத்தையும் ஆட்டிப்படைத்து ஆளலாம். ரந்திதேவன் என்ன சொல்கிறான் என்றால், "(பராம்-)உயர்ந்ததான இந்த ஸித்திகளைப் பெறுகிற (கதிம்-) வழியைக் கூட நான் (ஈஸ்வராத்-) ஈஸ்வரனிடமிருந்து (ந காமயே-) இச்சிக்கவில்லை; ப்ரார்த்திக்கவில்லை. எனக்கு மகா சக்திகள் வேண்டுமென்றுகூடப் பிரார்த்தனை பண்ணவில்லை". சரி, அப்படியானால் இந்த சக்தி எல்லாம் அடங்கி அப்படியே பரம சாந்தமாக ஆடாமல் அசையாமல் இருக்கிற ஸமாதி நிலையை, மோக்ஷத்தைப் பிரார்த்திக்கிறானா? மறுபடியும் மறுபடியும் பிறவா நெறியான 'அபுனர்பவம்' என்ற முக்தியை விரும்புகிறானா?" அதுவும் எனக்கு வேண்டாம்; **ந காமயே (அ) ஹம் அபுனர்பவம் வா".** பின்னே ஈஸ்வரனிடமிருனந்து எதைத்தான் இவன் இச்சித்துப் பிரார்த்திக்கிறானாம்?

புழுவாகவோ, பூச்சியாகவோ, பக்ஷியாகவோ, மிருகமாகவோ, மநிஷ்யனாகவோ சரீரம் என்று ஒன்றை வைத்துக்கொண்டு இத்தனை ஜீவராசிகள் இருக்கின்றவே, இந்த (அகில-) அனைத்து (தேஹ பாஜாம்-) சரீரம் படைத்த பிராணிகளுக்கும் ஏதாவது துன்பம் இருக்கிறதல்லவா? `ஆர்த்தி' என்றால் துன்பம், துக்கம். அந்தத் துன்பத்தை ஒவ்வொருவருக்கும் உள்ளே இருக்கிற உள்ளம்தானே உணர்கிறது? உள்ளேயிருப்பதால் தான் அதற்கு உள்ளம் என்று பேர். "அந்த:"- உள்ளே, "ஸ்தித:"- இருப்பது அந்த உள்ளம்தான். "எப்படியோ ஒரு தினுஸில் என்னால் மட்டும் அந்த உள்ளங்களுக்குள் இருக்க முடிந்துவிட்டால், ஜீவராசிகளின் துன்பம் எல்லாம் என்னிடம் வந்து சேர்ந்துவிடுமல்லவா? இப்படி ஸகல ஜீவர்களின் கஷ்டத்தையும் வாங்கிக் கொண்டு அநுபவிக்கிற சக்தியைத்தான், ஈஸ்வரா, உன்னிடம் நான் விரும்பிப்

பிரார்த்திக்கிறேன். (யேன-) எதனால் பிராணிகள் (அது:கா:) துக்கமற்றவையாக (பவந்தி-) ஆகுமோ, அதைத்தான் உன்னிடம் வேண்டுகிறேன்"என்கிறான்.

துக்கம் என்பது பாப கர்மாவினால்தான் வருகிறது. ஒருத்தருடைய பாபத்தை இன்னொருத்தர் வாங்கிக் கொண்டு அநுபவிப்பதை vicarious suffering என்று சொல்வார்கள். ஜீஸஸ் இப்படித்தான் லோகம் பூராவின் பாபத்தையும் வாங்கிக்கொண்டு தீர்ப்பதற்கே சிலுவையில் அறைபட்டதாகச் சொல்வார்கள். அந்த உத்க்ருஷ்டமான தியாக சிந்தனை நம் மதத்துக்குப் புதிதானதல்ல. ரந்திதேவன் வேண்டினது இதைத்தான். **"அகில தேஹ பாஜாம் ஆர்த்திம் ப்ரபத்யே** – ஸகல உயிரினத்துடையவும் கஷ்டங்களை ஏற்றுக் கொள்கிறேன்"என்று இதைத்தான் வேண்டினான்.

இதில் 'ப்ரபத்யே' என்று ஒரு வார்த்தை வருகிறது. அநேக ஸ்தோத்ரங்களில் - முக்யமாக ஸ்ரீவைஷ்ணவ க்ரதங்களில் - "சரணம் ப்ரபத்யே, சரணம் ப்ரபத்யே" என்று வருவதைக் கேட்டிருப்பீர்கள். வேதத்திலேயே இருக்கப்பட்ட ஸ்ரீஸூக்தத்திலும் துர்கா ஸூக்தத்திலும் "சரணம் ப்ரபத்யே"என்று வருகிறது. 'ப்ரபத்யே'என்றால் 'அடைக்கலம் புகுகிறேன்', 'சரணாகதி பண்ணுகிறேன்'என்று அர்த்தம். ஒன்றிடம் ஸர்வஸங்க பரித்யாகம் (total surrender) பண்ணிவிடுவதுதான் ப்ரபத்தி. அதாவது 'ஸரண்டர்' பண்ணுகிறவன் தன்னை அடியோடு ஸை:பராக்கிக் கொண்டுவிட வேண்டும். அப்போது எதனிடம் இவன் 'ஸரண்டர்' பண்ணுகிறானோ, அது இவனை ஆட்கொண்டு, அப்படியே ரொப்பி விடும். இப்படியே பகவானிடம் தன்னை அடியோடு ஸை:பராக்கிக் கொண்டு அவனாலேயே பூராவும் ரொப்பப்படுகிற நிலையைத்தான் பொதுவாக நாம் பார்க்கிற ஸ்தோத்ரங்கள், மந்தரங்கள் எல்லாவற்றிலும் 'ப்ரபத்யே', 'ப்ரபத்யே' என்று சொல்லியிருக்கிறது. மஹாலக்ஷ்மியை, துர்காதேவியை சரணடைகிறேன் என்று வேத ஸூக்தத்தில் வருகிற மாதிரி, மற்ற ஸ்தோத்ரங்களில் "இந்த ஸ்வாமியை சரணடைகிறேன்," "அந்த ஸ்வாமியை சரணடைகிறேன்", என்று ஒவ்வொரு ஸ்வாமி பெயரைச் சொல்லி வரும். உபநிஷத்தை சாந்தி பாடக்ரமத்தில் ஆரம்பிக்கும்போது, "மோக்ஷத்தில் நாட்டமுடைய முமுக்ஷுவான நான் புத்தியைப் பிரகாசிக்கப் பண்ணும் பரமாத்மாவை அடைக்கலம் புகுகிறேன்" என்கிறபோதும் இந்த "சரணம்

ப்ரபத்யே" வருகிறது. ஆனால் ரந்திதேவன் என்ன சொன்னான்? " ஆர்த்திம் ப்ரபத்யே" என்றான்!'ஆர்த்தி'என்றால் துன்பம், இன்னல், கஷ்டம். பரமாத்மா என்னை அப்படியே ஆட்கொள்ளட்டும் என்று சொல்லாமல், "ஜீவலோகத்தின் ஸகல கஷ்டமும் என்னைப் பூராவாக ஆட்கொண்டு என்னிடமே வந்து சேரட்டும். நான் லோகத்தின் கஷ்டத்துக்கு சரணாகதி பண்ணுகிறேன்" என்று பரம த்யாக நிலையில் இருந்துகொண்டு சொல்கிறான்!

எல்லாரும் பொதுவாக என்ன வேண்டுவோம்? எல்லா இன்பமும் எனக்குக் கிடைக்கட்டும் என்றுதான். ரந்திதேவனோ "எல்லார் துன்பமும் எனக்கு வந்து சேரட்டும்"என்றான். "எல்லா ஜீவராசிகளின் கஷ்டங்கள் அனைத்தையும் நான் எடுத்துக்கொண்டு அநுபவிக்கிறேன். அதனால் அவற்றின் துக்கம் தீரட்டும்"என்றான்.

இன்னொரு ஸ்லோகம் சொன்னான்.

க்ஷுத்-த்ருட்-ச்ரமோ காத்ர பரிப்ரமச்ச
தைன்யம் க்லம:சோக விஷாத மோஹா: |
ஸர்வே நிவ்ருத்தா: க்ருபணஸ்ய ஜந்தோ:
ஜிஜீவிஷோ ஜீவ ஜலார்ப்பணாத் மே ||

பெரிய ச்ரௌதிக்ளுக்கு தானம் பண்ணுகிறபோது மந்த்ரம் சொல்லிக்கொண்டு தீர்த்தம் போடுகிற மாதிரி, அந்தப் பஞ்சமனுக்குத் தன்னிடம் எஞ்சியிருந்த தீர்த்தத்தையும் தத்தம் செய்துகொண்டு ரந்திதேவன் இந்த ஸ்லோகத்தைச் சொன்னான். இதற்கு என்ன அர்த்தம்?" இதோ இந்த ஜலத்தைக் கொடுக்கிறேனே, இது இந்தப் பஞ்சமன் ஒருத்தனுக்கு மட்டும் தாக சாந்தி, தாப சாந்தி பண்ணுவதா? இல்லை. ஸர்வபூத அந்தராத்மாவான நாராயணனாக இவனை நினைத்தல்லவோ இதை இவனுக்கு அர்ப்பணம் பண்ணுகிறேன்? அதனால் இந்த ஜலமே ஸகல உயிர்களுக்கும் தாக சாந்தியை, துக்க நிவ்ருத்தியைக் கொடுக்கட்டும்."

(ஜீவ ஜிஜீவிஷோ-) உயிர்வாழ வேண்டுமென்று விரும்பும், (க்ருபணஸ்ய-) நிராதரவான (ஜந்தோ:-) ஸகல ப்ராணிகளும் (மே-) நான் கொடுக்கிற இந்த (ஜலார்ப்பணாத்-) தீர்த்த தானத்தால் (க்ஷுத்-) பசி (த்ருட்-) தாகம் இவற்றால்

ஏற்படும் (ச்ரம:-) ச்ரமத்திலிருந்தும் (காத்ர பரிப்ரமச்ச-) வியாதி வக்கை மாதிரியான சரீரக் கஷ்டங்களிலிருந்தும் (தைன்யம்-) மனஸின் கஷ்டமான தீனநிலை, (க்லம:-) மனத்தளர்ச்சி, (சோக-விஷாத-மோஹா:-) துக்கம், கலக்கம் (dejection), மயக்கம் (ஸர்வே-) முதலிய எல்லாத் துன்பங்களிலிருந்தும் (நிவ்ருத்தா:-) நிவாரணம் பெறட்டும்.

ஒரே ஒருதனுக்குத் தருகிற கொஞ்சம் தீர்த்தம் இப்படி ஸர்வ ஜீவன்களின் கஷ்டத்தையும் போக்குமா என்றால்:

த்ரௌபதி அலம்பி வைத்திருந்த அக்ஷய பாத்திரத்தில் துளிப்போல ஒட்டிக் கொண்டிருந்த கீரையை க்ருஷ்ண பரமாத்மா சாப்பிட்டார்; உடனேயே துர்வாஸருக்கும் அவருடைய பதினாயிரம் சிஷ்யர்களுக்கும் பெரிய ஸமாராதனை சாப்பிட்ட மாதிரி வயிறு நிரம்பி விட்டது என்று படிக்கிறோமல்லவா? அந்த மாதிரிதான் இதுவும். 'இவன் யாரோ ஒரு பஞ்சமன்' என்று நினைக்காமல் பரமாத்ம ஸ்வரூபமாகவே அவனைப் புரிந்து கொண்டு அவனுக்குக் கொடுக்கிறபோது, அந்த பரமாத்மாவுக்குள்ளேயே அடங்கியிருக்கிற ஸகல ப்ரபஞ்சமும் அதனால் த்ருப்தியாகிறது. பாவம் நிஜமாக இருக்கவேண்டும். அதுதான் முக்யம்.

த்யாகத்தின் உச்சநிலையில் இருந்துகொண்டு இப்படி ரந்திதேவன் தன் ப்ராணனை ரக்ஷிப்பதற்கு அத்யாவச்யமாயிருந்த தீர்த்தத்தையும் புலையனுக்குக் கொடுத்தானோ இல்லையோ, உடனே முதலில் வந்த பிராம்மணன், அப்புறம் வந்த நாலாம் வர்ணத்தவன், அதற்குப் பின்னால் நாய்களோடு வந்த நாய்க்காரன், கடைசியில் வந்த பஞ்சமன் எல்லோரும் விஷ்ணு தூதர்களாக அவன் முன் தங்கள் நிஜ ரூபத்தைக் காட்டினார்கள்.*

"அவன் அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு நாராயண த்யானத்தில் மூழ்கிவிட்டான். இந்த மாய வாழ்க்கை ஒரு கனா மாதிரி அவனிடமிருந்து மறைந்தே போய்விட்டது" என்று பாகவத்தில் இந்த புண்ய சரித்திரம் முடிகிறது.

சாதரணமாக நம் புராணங்களிலோ, மற்ற காவிய நாடகங்களிலோ கூட முக்கியமான பாத்திரம் (Hero) செத்துப் போனதாக முடியாது. 'ட்ராஜெடி' நம் ஸம்பிரதாயத்திலில்லை. மங்களமாக முடிய வேண்டும் என்று, லோக ரீதியிலே ஸந்தோஷமாக ஒரு கல்யாணம், ஒரு பட்டாபிஷேகம் என்றிப்படி முடிப்பதுதான் வழக்கம். ராமாயணம், மஹாபாரதம் இவற்றில் ஸ்ரீராமனும், பஞ்சபாண்டவர்களும் வைகுண்ட ஆரோஹணம், ஸ்வர்க ஆரோஹணம் பண்ணுவதாகவே வால்மீகியும், வியாஸாசாரியாளும் மூல க்ரந்தத்தில் முடிந்த்திருந்தும்கூட, இப்போதும் ஒரு ஹரிகதை, அல்லது உபந்யாஸம் என்று நடக்கிறபோது ஸ்ரீராம பட்டாபிஷேகம், தர்மராஜ பட்டாபிஷேகம் இவற்றோடு பூர்த்தி பண்ணி, அதற்கு மேற்பட்ட அந்திமக் கதையைச் சொல்லாமலே விட்டு விடுவதைத்தான் பார்க்கிறோம். த்ருவன், ப்ரஹ்லாதன் மாதிரியானவர்கள் பகவான் ப்ரத்யக்ஷமானதும் அவனோடேயே முக்தி அடைந்துவிட வேண்டும் என்று ப்ரார்த்தித்தாலும்கூட, பகவான்"அதெல்லாம் கூடாது"என்று சொல்லி, அவர்களுக்குப் பட்டாபிஷேகம் பண்ணினதாகத்தான் பாகவத புராணத்திலேயே சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த ரந்திதேவன் கதையில் மட்டும் விஷ்ணு தூதர்கள் வந்தார்கள் என்று சொன்னபின், 'உடனே பஞ்சமெல்லாம் தீர்ந்துவிட்டது; ரந்திதேவனின் பசி, தாகம் எல்லாம் தீர்ந்து நெடுங்காலம் ராஜ்யபாரம் பண்ணினான்' என்று சொல்லாமல், "மாயையே ஒரு ஸொப்பனம் மாதிரி அவனைவிட்டு ஓடிப்போயிற்று"பரலோகம், பரமபதம் என்கிறார்களே, அதற்குப் போய் விட்டான் என்றுதான் அர்த்தம் ஏற்படுகிறது. அவனுடைய மஹா த்யாகம் நம் மனஸில் நன்றாக உறைப்பதற்காகவே இப்படி மங்கள முடிவை மாற்றிச் சொல்லியிருக்கிறாற் போல் தோன்றுகிறது.,

இந்த லோகத்தின் ஸந்தோஷம் எப்படியும் சாஸ்வதமில்லை. கல்யாணம், பட்டாபிஷேகம் எல்லாம் தாற்காலிக ஸந்தோஷம்தான். பகவானிடம் போய்ச் சேருவதுதான் நிரந்தரமான மங்களம். அப்படிப் பார்த்தால் ரந்திதேவன் கதைக்குத்தான் நிஜமான மங்கள முடிவு.

ரந்திதேவன் கதை மாதிரி இன்னொன்று பாரதத்தில் வருகிறது.

*ஸ்ரீ பெரியவர்களின் உரையாடல்களிலிருந்து ஒரு பக்தர் எடுத்த குறிப்புகளிலிருந்து இப்பகுதி உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் "விஷ்ணு தூதர்கள்" என்றே காண்கிறது ஆனால் ஸ்ரீமத் பாகவதத்திலோ மூவுலகின் அதீச்வரர்கள் என்று உள்ளது. பிரம்ம, விஷ்ணு, ருத்ரர்களாகிய திரிமூர்த்தியரையே பாகவதம் மூவுலக அதீசராகக் கூறுமாதலால், பாகவத வ்யாக்யாதாக்கள் மும்மூர்த்தியார் ரந்திதேவனுக்கு தரிசனம் தந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் முதலில் பிராமணன், பிறகு நான்காம் வர்ணத்தவன், அப்புறம் நாய்க்காரன், கடைசியில் தீண்டாதான் என நால்வரைச் சொல்லிவிட்டு அவர்களை மூன்று மூர்த்திகளாகக் குறிப்பிடுவது எப்படிப் பொருந்துமெனப் புரியவில்லை. நாயைப் பிடித்து வந்தவன், நீர் கேட்டவன் ஆகிய இருவரும் ஒருவனாகவே இருக்கலாம். ஸ்ரீ பெரியவர்கள் "விஷ்ணு தூதர்கள்" என்று கூறியிருப்பாரேயாகில் இவ்வித சங்கைகளுக்கு இடமில்லை.

4.6-விசித்தரக் கீரிப்பிள்ளை

தர்மபுத்ரர் அஸ்வமேத யாகத்துக்கு அங்கமாக ஏராளமான அன்னதானம் பண்ணினார். அந்த மாதிரி ஸகல ஜனங்களுக்கும் வயிறும் மனஸும் ரொம்பிப் போகிற முறையில் எவருமே அன்னதானம் பண்ணினதில்லை என்று எல்லோரும் ஏகமாகக் கொண்டாடினார்கள். வயிறு ரொம்பப் போட்டு விடலாம். அது பெரிசில்லை அதே ஸமயத்தில் மனஸும் ரொம்புகிற மாதிரி பரம அன்போடு போடுவதுதான் விசேஷம். 'இது யாகத்தின் அங்கம். இதைப் பண்ணினால்தான் தனக்குப் பலன் கிடைக்கும்' என்று காரியார்த்தமாக மட்டுமில்லாமல், கடனே என்று இராமல், நிஜமான பரிவோடு பாண்டவர்கள் இப்படிப் பெரிய அன்னதானம் செய்து லோகமெல்லாம் ஸ்தோத்திரம் பண்ணுகிறபோது, இதனால் அவர்களுக்கு கர்வம் வந்துவிடக் கூடாதே என்று பகவான் பார்த்தார். கர்வம் வந்ததோ அத்தனை தர்மமும் அதிலே "ஸ்வாஹா" ஆகிவிட வேண்டியதுதான்! அதனால் இந்த ஸமயத்தில் அவர்களைக் கொஞ்சம் மட்டம் தட்டினாலும் நல்லதுதான் என்று பகவான் நினைத்தார். வெறுமனே மட்டம் தட்டினால் மட்டும் போதாது; அதோடு ஸர்வ லோகத்துக்கும் தானத்தின் உத்க்ருஷ்டமான தத்வம் தெரியும்படியாகவும்

பண்ண வேண்டும் என்றும் நினைத்தார். இந்த இரண்டு லக்ஷ்யங்களையும் பூர்த்தி பண்ணுகிற ஒரு ஸம்பவம் அப்போது பகவத் ஸங்கல்பத்தால் நடந்தது.

ஏகப்பட்ட ஜனங்கள் சேர்ந்து தர்மபுத்ரரை ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டிருந்த அந்த ஸந்தர்ப்பத்தில் அங்கே திடீரென்று ஒரு விசித்திரமான கீரிப்பிள்ளை தோன்றிற்று. விசித்ரம் என்னவென்றால் அந்தக் கீரிப்பிள்ளையின் உடம்பில் சரியாக ஒரு பாதி மட்டும் பளபளவென்று தங்கம் மாதிரி பிரகாசித்தது.

அந்தக் கீரிப்பிள்ளை போஜனசாலையில் சிந்தியிருந்த அன்னாதிகளின்மேல் புரண்டுவிட்டு, மநுஷக் குரலில், "இது என்ன பெரிய தானம்? இதென்ன பெரிய யாகம்? அந்தக் குருக்ஷேத்திரத்து உஞ்சவ்ருத்தி பிராம்மணர் பண்ணின தானத்துக்கு இது வீசம்கூடக் காணாது" என்று தூக்கி எறிந்து பேசிற்று.

பார்வைக்கே பாதித் தங்கமாக அது விசித்ரமாக இருந்தது என்றால், மநுஷக் குரலில் பேசினது அதைவிட விசித்ரம். பேசிய விஷயமோ எல்லாவற்றையும் விட விசித்ரமாக இருந்தது. லோகம் முழுவதையும் கட்டி ஆள்கிற ஸார்வபௌமரான தர்மபுத்ரர் செய்ததைவிடப் பெரிய தானத்தை உஞ்சவ்ருத்தி பிராம்மணன் எப்படிப் பண்ண முடியும்?

உஞ்சவ்ருத்தி என்றால் தற்காலத்தில் பிச்சை எடுப்பது, வீடு வீடாகப் போய்த் தான்ய பிக்ஷை வாங்குவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி தெருத் தெருவாகப் போய் அக்ஷதை வாங்குவதை உஞ்சவ்ருத்தி பஜனை என்றுகூட பஜனை ஸம்ப்ரதாயத்தில் சொல்கிற ஒரு பழக்கம் வந்துவிட்டது. ஆனால் ஆதி காலத்தில், நம் தர்ம சாஸ்திரங்களின்படி பார்த்தால், உஞ்சவ்ருத்தி என்பதற்கு அர்த்தமே வேறே. சாஸ்த்ரப்படி, களத்திலே நெல்லடித்து, சொந்தக்காரன் அந்த தான்யத்தைக் கொண்டு போகிறபோது, அடிவரைக்கும் வழித்து வாரிக்கொண்டு போகாமல், கொஞ்சத்தை அப்படியே களத்திலேயே விட்டுவிட வேண்டும். இதைத்தான் சோற்றுக்கு வேறு வழி இல்லாத பிராம்மணர்கள் பொறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். 'உஞ்சம்' என்றால் 'சிதறிப் போனதைத் திரட்டி எடுப்பது' என்றே அர்த்தம்.

கீரிப்பிள்ளை உஞ்சவ்ருத்திப் பிராம்மணனை ஓஹோ என்று புகழ்ந்ததும் ஸபையில் கூடியிருந்தவர்கள் அதனிடம், "நீ யார்? நீ சொல்கிற உஞ்சவ்ருத்தி பிராம்மணன் யார்? அவன் பண்ணின மஹா பெரிய தானம் என்ன?" என்று கேட்டார்கள்.

கீரிப்பிள்ளை கதை சொல்ல ஆரம்பித்தது. அந்தக் கீரி ரொம்ப வயஸானது. அதனால் எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் நடந்த கதையைச் சொல்லிற்று.

அப்போது குருக்ஷேத்திரத்தில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. பெரிய பெரிய ப்ரபுக்களே அன்னத்துக்குப் பரிதவிக்கும்படியான ஸ்திதி ஏற்பட்டது. அப்போது உஞ்சவ்ருத்தி பிராம்மணன் நிலை எப்படி இருக்கும்? எப்போதோ எங்கேயோ பொறுக்கி வந்த கோதுமையில் தான் கொஞ்சம் குப்பையும் கூளமுமாக மட்கி, நாற்றமெடுத்துக் கை வசம் இருந்தது. அதை மாவாக அரைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். அவனுடைய குடும்பத்திலே நாலு ஜீவன்கள். பிராம்மணன், அவனுடைய பத்னி, பிள்ளை, மாட்டுப்பெண் - இந்த நாலு பேருக்கு ஒரு வேளைக்குத்தான் இந்த மாவு போதும். 'ஏதோ இந்த வேளையை இப்படித் தள்ளுவோம்; அடுத்த வேளை இதுவும் இல்லாமல் ப்ராணன் போக வேண்டியதுதான்' என்று நினைத்து நாலு பேரும் வெறும் மாவை ஆளுக்கு ஒரு பிடி தின்னலாம் என்று உட்கார்ந்தார்கள்.

இந்த ஸமயம் பார்த்து "தேஹி!" என்று சொல்லிக்கொண்டு ஒரு யாசகர் அங்கு வந்து சேர்ந்தார்.

'கலத்திலே சோற்றை இட்டுக் கைப்பிடித்து இழுப்பது' என்பார்களே, அந்த மாதிரியான ஸந்தர்ப்பம்.

அந்த ஸந்தர்ப்பத்திலுங்கூட அந்தக் குடும்பத்தில் ஒருத்தராவது விருந்தோம்பல் பண்பில் பின்வாங்கவில்லை. பிராம்மணன், அவனுடைய பத்னி, புத்திரன், மாட்டுப்பெண் ஆகிய நாலு பேருமே போட்டி போட்டுக்கொண்டு அதிதிக்குத் தங்கள் பங்கு மாவைக் கொடுக்க முன்வந்தார்கள்.

அதிதி ஸத்காரம் - அதாவது விருந்தோம்பல் - என்பது ஸமூஹ தர்மம், social duty . இதோடு குடும்ப தர்மம், domestic duty என்றும் ஒன்று இருக்கிறது. ஒரு குடும்பத்தில் இன்னின்னார் இன்னின்ன கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நிர்ணயிக்கிற தர்மம் இது. நாலு பேருமாக ஸோஷல் ட்யூட்டியைப் பண்ண முன்வருகிறபோதே, தங்களுக்குள் டொமெஸ்டிக் ட்யூட்டியை எடுத்துக் காட்டிக் கொண்டார்கள். "புருஷன் இல்லாமல் ஒரு பத்னி இருப்பாளா? உங்கள் பங்கைக் கொடுத்துவிட்டு நீங்கள் உயிர் விட நான் பார்ப்பேனா? அதனால் என் பங்கை நான் தருகிறேன்" என்று பத்னி பிடிவாதம் பிடித்தாள். பிள்ளையோ, "ப்ரத்யக்ஷ தெய்வமான மாதா பிதாக்களுக்குப் பிராணாபத்து என்கிறபோது ஒரு புத்ரன் அதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா?" என்று அவர்களைத் தடுத்து, அதிதிக்குத் தன் பங்கைத் தரப்போனான். உஞ்சவ்ருத்தி பிராம்மணனிடம் அவனுடைய பத்னி எந்தப் பதிவிரதா தர்மத்தை எடுத்துச் சொன்னாளோ, அதையே மாட்டுப்பெண் பிள்ளையிடம் சொல்லி, "நான்தான் என் பங்கைத் தருவேன்" என்று பிடிவாதம் பண்ணினாள்.

நாமாக இருந்தால் ஏதாவது ஒரு வஸ்து நமக்குக் கிடைக்கிறதென்றால் நான் முந்தி, நீ பிந்தி என்று போட்டி போடுவோம். கொடுக்கிறதென்றால் அவரவரும் பின் வாங்கத்தான் செய்வோம். இந்த ஏழை பிராம்மணக் குடும்பத்திலோ உயிரையே கொடுப்பதற்கு, பிராணத்யாகத்துக்குப் போட்டி போட்டார்கள். த்யாகம், தானம் எல்லாம் பணக்காரர்களால்தான் முடியும் என்றில்லை! பரம ஏழைகளாலும் முடியும். பெரிய ராஜாவான ரந்திதேவன் குடும்பத்தினர் செய்த அதே த்யாகத்தைத்தான் இப்போது பரம தரித்திரர்களான இவர்களும் செய்கிறார்கள்!

கடைசியில் பிராம்மணன் மற்றவர்களை அடக்கிவிட்டு, "குடும்பத் தலைவன் என்று பேர் வைத்துக் கொண்டிருக்கிற என் கடமை உங்கள் மூவரையும் ரக்ஷிப்பது. மனஸறிந்து உங்களில் எவரையும் பட்டினி போட்டு மரணத்துக்கு ஆளாக்கினால் நான் ப்ரஷ்டனாகி விடுவேன்" என்று தீர்மானமாகச் சொல்லித் தன் பங்கு மாவை யாசகருக்கு அன்போடு தானம் செய்தான்.

அவர் அதைச் சாப்பிட்டுவிட்டுப் பசி தீரவில்லை என்றார்.

உடனே பத்னி தன் பங்கை அவருக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தாள்.

அதையும் சாப்பிட்டுவிட்டு, 'இன்னமும் கொண்டா!' என்று உட்கார்ந்துவிட்டார் அதிதி.

கொஞ்சம்கூடக் கோபமே இல்லாமல் பிள்ளையும் தன் பங்கு மாவை அவருக்குக் கொடுத்தான்.

அதையும் ஏப்பம் விட்டுவிட்டு, இன்னும் வந்தாலும் கொள்ளும் என்று உட்கார்ந்துவிட்டார் அதிதி.

கடைசியில் மாட்டுப்பெண்ணும் அவருக்கு மனஸாரத் தன் பங்கு மாவைக் கொடுத்தாள்.

அதிதி அதைச் சாப்பிட்டு முடித்தாரோ இல்லையோ, ஆளைக் காணவில்லை!

அந்த நாலு பேர் மேலே ஆகாசத்திலிருந்து புஷ்ப வ்ருஷ்டி பொழிந்தது.

"நான்தான் தர்மதேவதை. உங்களைப் பரிசோதிக்கவே யாசகப் பிராம்மணனாக வந்தேன். பரீக்ஷையில் நீங்கள் அற்புதமாக ஜயித்துவிட்டீர்கள். உயிரைக் கொடுத்தாவது விரும்தோம்பலை நடத்திக் காட்டுவதில் உங்கள் குடும்பத்தைப்போல் எங்குமே கண்டதில்லை. அவரவரும் கொடுத்த பிடி மாவு உங்களுக்கு ஸ்வர்கத்திலேயே இடம் 'பிடி'த்துக் கொடுத்துவிட்டது. எல்லாரும் ஆனந்தமயமான தேவலோகத்துக்கு வந்து சேர்வீர்களாக" என்று அசரீரி கூறிற்று.

(அசரீரி கேட்டதா, தர்மதேவதை நேரில் வந்ததா என்று ஸரியாக நினைவில்லை. தாத்பர்யம் இதுதான்.)

உடனே தேவர்கள் அங்கே அலங்கார விமானத்தோடு வந்தார்கள். உஞ்சவ்ருத்தி பிராம்மணக் குடும்பத்தினர் அதிலே ஏறிக்கொண்டு ஸ்வர்கத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஸ்வர்கத்துக்குப் போனார்கள் என்றால் இந்த லோகத்தில் ப்ராணனை விட்டார்கள் என்று அர்த்தம். குசேலர் மாதிரி இந்த லோகத்திலேயே

அவர்களுக்கு ஸகல ஸம்பத்தும் வந்ததாகச் சொல்லவில்லை. இவர்கள் ஸ்வர்கவாஸம் கிட்டும் என்று அபேக்ஷித்து தானம் செய்யவில்லை. விருந்தோம்பல் பண்புக்காகவே உயிரைவிட்டார்கள். தானாக ஸ்வர்க்கம் ஸித்தித்தது.

இந்தக் கதையைச் சொன்ன கீரிப்பிள்ளை, "அந்த மையத்தில் நான் குருக்ஷேத்திரத்தில் அந்த வீட்டில்தான் இருந்தேன். அவர்கள் தானம் கொடுத்த மாவு ஏதோ துளித் துளி கீழே சிந்தியிருந்தது. நான் அந்த இடத்துக்கு மேலாக ஓடுகிறபோது என் சரீரத்தின் இந்தப் பக்கத்தில் அந்த மாவு பட்டதனால்தான் இந்தப் பக்கமே ஸ்வர்ண வர்ணமாகி விட்டது"....

இப்போது கூட ரொம்ப நல்லவர்களைத் 'தங்கமான மனஸு' என்றுதான் சொல்கிறோம். இங்கிலீஷில்கூட 'Golden hearted' என்கிறார்கள் அல்லவா? தங்க மனஸு படைத்த த்யாகக் குடும்பம் செய்த தானத்தில் இது ஸ்தூலமாகவே நிஜமாயிருக்கிறது!

"அதற்கப்புறம், இப்படி ஒரு பக்கம் மட்டும் தங்கமாக இருக்கிறதே, இதே மாதிரி வேறெங்காவது பரம உத்க்ருஷ்டமான தானம் நடக்கிற இடத்தில் சிந்திப்போனது இன்னொரு பக்கத்தில் பட்டால் அதுவும் தங்கமாகி, முழுக்கத் தங்கமாகலாமே என்கிற ஆசையில் நானும் பெரிய பெரிய ஸந்தர்ப்பணைகள், அன்னசாலைகள், தர்மசத்திரங்களுக்கெல்லாம் போனபடிதான் இருக்கிறேன். ஆனால் என் மறுபாதி தங்கமாக மாறவேயில்லை. தர்ம புத்ரர் மஹா பெரிய யாகம் பண்ணி, அன்னதானம் செய்கிறாரே இங்கே சிந்திப் போனதிலாவது என் சரீரத்தின் பாக்கி பாதி தங்கமாகுமாக்கும் என்றுதான் இங்கும் வந்து புரண்டு பார்த்தேன். இங்கேயும் பலனைக் காணோம்!"என்று கீரிப்பிள்ளை முடித்தது.

4.7-தர்மங்களில் தலையானது தானமே!

ரந்தி தேவன் கதையிலிருந்தும், உஞ்சவ்ருத்திப் பிராம்மணன் கதையிலிருந்தும் என்ன தெரிகிறதென்றால் தனக்கென்று ஒன்றுமே

வைத்துக்கொள்ளாமல் தானம் பண்ண வேண்டும்;தன் ப்ராணனே போனாலும் ஸரி, இன்னொரு ஜீவனை நம் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும் என்ற த்யாக தத்வம் தெரிகிறது. இன்னொன்று என்ன தெரிகிறதென்றால், ஒருத்தர் கஷ்டத்தில் இருக்கிறபோது அவர் என்ன ஜாதி, என்ன மதம், நல்லவரா - கெட்டவரா என்று இதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்காமல், யாராயிருந்தாலும், எப்படிப் பட்டவராயிருந்தாலும் நம்மாலான உபகாரத்தைப் பண்ணி, கஷ்டம் நிவ்ருத்தியாவதற்கு ஸஹாயம் பண்ண வேண்டும் என்பது.

வித்யாஸங்கள் பார்க்கவேண்டிய இடத்தில் பார்த்துத்தான் ஆகவேண்டும். சாஸ்த்ரப்படி லோக க்ஷேமத்துக்காக ஏற்பட்ட அதிகார பேதங்களைக் காப்பாற்றத்தான் வேண்டும். ஆனால் கஷ்டம், துக்கம் என்று வருகிற போது வித்யாஸமே பார்க்கக் கூடாது.

குறிப்பாக, அன்னதானத்தைப் பற்றிச் சொல்கிறபோது **' யார்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின் '** என்றே திருமந்திரத்தில் சொல்லியிருக்கிறது.

"யாரானாலும் எவரானாலும், நாராயண ஸ்வரூபம்" என்று ரந்திதேவன் அன்னதானம் செய்தான். மஹாதாரித்ரியத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இளையான் குடிமாற நாயனாரிடம் ஒரு சிவனடியார் பிக்ஷை கேட்டு வந்தபோது அவர், ஈஸ்வரனே இப்படி வந்திருக்கிறான் என்று நினைத்தார். கொட்டுகிற மழையிலே வயலுக்குப் போய் அங்கே விதைத்திருந்த நெல்லையே மறுபடி பொறுக்கி எடுத்துக்கொண்டு வந்து சிவனடியாருக்கு பிக்ஷை பண்ணினார். வாஸ்தவத்திலேயே அந்த சிவனடியார் பரமேஸ்வரன்தான். அப்படியே காட்சி கொடுத்தார். இது பெரியபுராணக் கதை.

எல்லா தானங்களிலும் அன்னதானம் விசேஷம். பகவானும் கீதையில் (3.13) எவன் தனக்காக மட்டும் ஆஹாரம் தேடிச் சாப்பிட்டுக் கொள்கிறானோ அவனுடைய பாபத்தையும் முழுக்க அவனேதான் அநுபவித்தாக வேண்டும்; வேறு யாரும் அதில் பங்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்கிறார். பிறனுக்குப் போடாமல், தான் மட்டுமே தின்கிறவன் சாதம் சாப்பிடவில்லை, பாபத்தையே புஜிக்கிறான் என்கிற மாதிரிச் சொல்கிறார்.

அன்னதானத்துக்கு என்ன விசேஷம் என்றால் **இதிலேதான் ஒருத்தரைப் பூர்ணமாகத் திருப்திப்படுத்த முடியும்.** பணம், காசு, வஸ்த்ரம், நகை, பூமி, வீடு இந்த மாதிரியானவற்றை எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறவன் அதற்குமேல் தந்தாலும், 'வேண்டாம்' என்று சொல்லமாட்டான். அன்னம் போடுகிற போதுதான் ஒருத்தன் என்னதான் முட்ட முட்டச் சாப்பிட்டாலும், ஓர் அளவுக்கு மேல் சாப்பிட முடியாது. 'த்ருப்தோஸ்மி: போதும்' என்று சொல்கிறான். அந்த அளவுக்கு மேல் போய் விட்டால், "ஐயையோ! இனிமேல் போடாதீர்கள்" என்று மன்றாடவே செய்கிறான். இம்மாதிரி ஒருத்தன் பூர்ண மனஸோடு திருப்தி தெரிவிக்கிறபோதுதான் தாதாவுக்கும் தானத்தின் பலன் பூர்ணமாகக் கிடைக்கும்.

நேராக உயிரோடு உடம்பைச் சேர்த்து வைத்து ரக்ஷிப்பதும் அன்னம்தான். அதனால்தான் **' உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தாரே '** என்று சொல்லியிருக்கிறது. மணிமேகலையில் இப்படி அன்னதான விசேஷத்தைச் சொல்லியிருக்கிறது. இது பௌத்த ஸம்பந்தமான காப்பியம். பௌத்தம், ஜைனம் எல்லாமே கலந்தாங்கட்டியாக வைதிக ஸம்பிரதாயங்களோடு சேர்ந்திருப்பதாகவே தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களிலிருந்து தெரிகிறது. மணிமேகலைக்கு காஞ்சீபுரத்தில் அக்ஷயபாத்திரம் கிடைத்து, அதை அவள் வைத்துக்கொண்டு ஸகல ஜனங்களின் பசிப்பிணியையும் போக்கினாள். இதற்கு அநேக யுகங்கள் முந்தியே இதே காஞ்சீபுரத்தில் ஸாக்ஷாத் அம்பாளும் இதே அன்னதானத்தைப் பண்ணியிருக்கிறாள். ஜகன்மாதா இங்கே, 'இரு நாழி நெல் கொண்டு எண் நான்கு அறம் இயற்றினாள்' என்று சொல்லியிருக்கிறது.

எண் நான்கு அறம் என்றால் முப்பத்திரண்டு தர்மங்கள். தர்மம் என்றால் மநுஷ்ய வாழ்க்கை நெறிகள் எல்லாமும்தான் என்றாலும், பொது வழக்கில் 'தானம்' என்ற ஒன்றுக்குமட்டுமே வந்துவிட்டது 'தர்மம்' என்ற பேரும் வந்துவிட்டது. தர்மங்களில் இது அத்தனை உசத்தியான இடத்தைப் பெற்றுவிட்டது! 'தான-தர்மம்' என்று சேர்த்தே சொல்கிறோம். 'தர்மம் போடு தாயே!' என்றுதான் பிச்சைக்காரர்கள் கூடச் சொல்கிறார்கள். தர்மசாலை என்றாலே அன்னசத்திரந்தான். வேதப் பிரமாணத்துக்கு ஸமதையான சிறப்புப்

பெற்ற அவ்வை வசனத்திலும் **' ஈதல் அறம் '** என்று தானத்தையே தர்மம் என்று equate பண்ணியிருக்கிறது.

இதிலே ஒரு வேடிக்கை, அதாவது பரஸ்பர விருத்தம் (முரண்பாடு) மாதிரி ஒரு அம்சம். தானம் என்று பண்ணினால் அதை வாங்கிக் கொள்ளவும் ஒருத்தன் இருந்தாகணும். Donor இருந்தால் Donee -யும் இருக்கணும். ஆனால் தானம் கொடுப்பதை ரொம்பவும் சிறப்பித்துச் சொல்கிற அதே சாஸ்திரங்களே தானம் வாங்குவதை மிகவும் தாழ்வானதாகச் சொல்லியிருக்கின்றன. "நான் கொடுக்கிறவனாகவே எப்போதும் இருக்கணும்; வாங்குகிறவனாக ஒருபோதும் இருக்கக்கூடாது"- ***யாசிதாரச்ச நஸ்ஸந்து மா ஸ்ம யாசிஷ்ம கஞ்சந***– என்றே பிரார்த்தனை இருக்கிறது. ஆத்திசூடியிலும் ***" ஈவது விலக்கேல் "*** என்றவுடனேயே **" ஏற்பது இகழ்ச்சி "** என்றும் வருகிறது. ஏற்பதற்கு ஒருத்தன் இல்லாவிட்டால் எப்படி ஈவது? யாசகன் இல்லாமல் தாதா ஏது?

அக்ஷர-த்வய-மப்யஸ்தம் நாஸ்தி நாஸ்தீதி யத் புரா |
ததேவ தேஹி தேஹீதி விபரீத-முபஸ்திதம் ||

என்று ஸ்லோகமிருக்கிறது. "நாஸ்தி, நாஸ்தி" (இல்லை, இல்லை) என்கிற இரண்டு எழுத்துக்களை*எவன் முன் ஜன்மாவில் சொல்லி யாசகர்களை விரட்டி அடித்தானோ, அவனே மறு ஜன்மாவில் "தேஹி தேஹி" என்கிற இரண்டு எழுத்துக்களை சொல்லிக்கொண்டு பிச்சைக்காக அலைகிறான் என்று அர்த்தம். இங்கே ஈகையின் சிறப்பு, ஏற்பதன் இகழ்ச்சி இரண்டும் தெரிகிறது. பகவானே யாசகம் கேட்கவேண்டி வந்ததே என்று 'உடம்பைக் குறுக்கிக் கொண்டு' தான் வாமனரூபமாக ஆகி மஹாபலியிடம் போனான் என்கிறார்கள்.

இப்படி யாசகம் வாங்குவதை ரொம்பவும் இழிவாகச் சொன்னதற்குக் காரணம் அத்யாவசியமிருந்தாலொழிய பிறத்தியானைப் பிடுங்கக் கூடாது என்பதால்தான். ஸம்பாத்தியம் அவனவனும் உடம்பாலோ புத்தியாலோ உழைத்துப் பெறத்தான் பாடுபடணும். அவனவனுடைய வீட்டின் நல்லது கெட்டத்துகளுக்கான செலவுகளையும் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு அவனவனேதான் ஸேமித்துக் கொள்ளணும். தவிர்க்கமுடியாத

unemployment, வியாதி வக்கை, நிராதரவான நிலையில்தான் யாசகம் வாங்க வேண்டும்.

***ஸம்ஸ்க்ருதத்தில் 'ஸ்தி' என்பது ஒரே எழுத்தாகும்.**

பொதுக்காரியங்களுக்கு யாசகம் வாங்கித்தான் ஆக வேண்டியிருக்கும். இங்கே தாதா என்று individual -ஆக (தனி நபராக) ஒருத்தன் இருந்தாலும், 'யாசகன்' என்று individual -ஆக எவனும் கீழ்ஸ்திதியில் இல்லை. ஆனால் இந்தமாதிரி பொதுப் பணிகளில்கூட, ஒரு ஆஸ்பத்திரி கட்டுவது, ஆலயத் திருப்பணி செய்வது என்றால்கூட அத்யாவசியத்துக்கு அதிகமாக ஓஹோ என்று plan போடாமல், கலெக்ஷன் என்று பறக்காமல், பல பேரைப் பிடுங்கி எடுக்காமல், அளவாகத் திட்டம் போட்டுக் கொண்டு, கூடிய மட்டும் பஹிரங்கப்படுத்தாமல், அவரவர்கள் தங்களுக்குள்ளேயே செலவுகளைப் பகிர்ந்து கொள்ளப் பார்க்கிறதே சிலாக்யம்.

முன்னாளில் வேதமும் யஜ்ஞமும் பூஜையும் தியானமும் வித்யாதானமுமே ஒரு ப்ராம்மணனின் 24 மணி 'ஆகுபேஷன்' ஆகிவிட்டதால், அவனுடைய குடும்ப போஷணைக்காக மற்றவர்கள் தானம் தருவதை வாங்கிக் கொள்ள அவனுக்கு அதிகாரமிருந்தது. ஸந்நியாஸி ஸதாகாலமும் ஸாதனை பண்ணணும்;அதோடு அவனுக்கு பிக்ஷை விதித்திருக்கிறது. மற்றபடி யாசக விருத்தி ரொம்பவும் நிஷித்தந்தான்........

முப்பத்திரண்டு வகையான அறங்களை, அதாவது தானங்களை சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. முதலில் ஜனங்களுக்கு "உணவீதல்", அப்புறம் பசுக்களுக்கு இரை கொடுப்பது, இப்படியே சொல்லிக்கொண்டு போய் தர்ம சத்திரம் கட்டுவது, நந்தவனம் வைப்பது, வைத்யசாலை வைப்பது, குளம் வெட்டுவது என்றெல்லாம் சொல்லிக் கடைசியில் ரொம்பக் குறைச்சலான திரவியச் செலவில் செய்கிற தண்ணீர்ப் பந்தல் கைங்கர்யத்தோடு முடித்திருக்கிறது. சிரமும் இதில்தான் குறைச்சல். சிரமமும் செலவும் குறைச்சல் என்றாலும், வாயும் தொண்டையும் வற்றி வருகிறவர்களுக்கு ஜில்லென்று புனர்ஜீவன் தருகிற மாதிரி தண்ணீர்ப்பந்தல் வைத்து மோர்த் தீர்த்தம் தருவது மஹா பெரிய புண்யமாகும். நம் பெரியவர்கள்

தலைமுறைத் தத்வமாகச் செய்து வந்த இம்மாதிரியான நல்ல விஷயங்களை, சின்னச் சின்ன ஸூக்ஷ்மமான தர்மங்களையெல்லாம் இப்போது நாம் மறந்து விட்டோம்.

காஞ்சீபுரத்தில் அம்பாள் தானே இந்த தர்மங்களையெல்லாம் நடத்தி நமக்கு வழி காட்டியிருக்கிறாள். அங்கே காமாக்ஷியம்மன் கோயிலில் அன்னபூர்ணிக்கு ஒரு ஸந்நிதி இருக்கிறது. இது தவிர காமாக்ஷியே அன்னதானம் மட்டும் இல்லாமல் முப்பத்திரண்டு தர்மங்களையும் செய்திருக்கிறாள். திருவையாற்றிலும் அம்பாள் தர்மஸம்வர்த்தனியாக, அறம் வளர்த்த நாயகியாக இருக்கிறாள்.

மநுஷ்யர்களுக்குள் ஜாதி, யோக்யதை முதலானவைகளைப் பார்க்காமல் உபகாரம் பண்ண வேண்டும் என்பது மட்டுமில்லை. இம்மாதிரி மனித இனம் மட்டுமின்றி, ஸகல ஜீவராசிகளுக்கும் சிரமங்கள் தீரவேண்டும் என்று சொல்லித்தான் ரந்திதேவன் பஞ்சமனுக்குத் தீர்த்தத்தை வார்த்தான்.

இதேபோல் ஸகல ஜீவராசிகளின் க்ஷேமத்தையும் கோருகிற இன்னொரு ஸ்லோகம் உண்டு. இங்கே ரந்திதேவன், ”இந்த ஜலம் எல்லா ஜீவராசிகளின் கஷ்டத்தையும் போக்கட்டும்” என்று சொன்ன மாதிரி, அந்த இன்னொரு ஸ்லோகத்தில், ”இந்த தீப ப்ரகாசம் பட்டு எல்லா உயிரினங்களும் க்ஷேமத்தை அடையட்டும்” என்று சொல்லியிருக்கிறது இப்படி ”எல்லா உயிரினமும்” என்று ஒட்டு மொத்தமாகச் சொல்லாமல் ஒவ்வோர் இனமாகப் பிரித்தே சொல்லியிருக்கிறது. ரந்திதேவனின் ஸ்லோகத்தில் தண்ணீரைச் சொல்லியிருக்கிறது. இந்த இன்னொரு ஸ்லோகத்தில் அக்னியின் ப்ரகாசத்தைச் சொல்லியிருக்கிறது. அக்னி விஷயமான அந்த ஸ்லோகம் கார்த்திகை தீபத்தோடு ஸம்பந்தப்பட்டது. அதைச் சொல்கிறேன்.

4.8-கார்த்திகை தீப தத்வம்

கார்த்திகைப் பண்டிகையன்று நிறைய அகல் ஏற்றி வைக்கிறோமல்லவா? இப்படி தீபத்தை ஏற்றும்போது ஒரு ஸ்லோகம் சொல்ல வேண்டும் என்று தர்மசாஸ்த்ரத்தில் விதித்திருக்கிறது.

கீடா பதங்கா மசகாச்ச வ்ருக்ஷா
ஜலே ஸ்தலே யே நிவஸந்தி ஜீவா |
த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜன்ம பாஜா
பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா ||

"புழுக்களோ, பக்ஷிகளோ, அல்லது ஒரு கொசுவாகத்தான் இருக்கட்டும், அந்தக் கொசுவோ, நம்மாதிரி உயிரில்லை என்று நினைக்கப்படுகிற வ்ருக்ஷமோ, இன்னும் ஜலத்திலும், பூமியிலும் எத்தனை தினுஸான ஜீவராசிகள் இருக்கின்றனவோ அவற்றில் எதுவானாலும் அதுவோ, மநுஷ்யங்களுக்குள்ளேயே பேதம் இல்லாமல் பிராம்மணனோ பஞ்சமனோ எவனானாலும் ஸரி, எதுவானாலும் ஸரி, இந்த தீபத்தைப் பார்த்துவிட்டால் அந்த ஜீவனுடைய ஸகல பாபங்களும் நிவ்ருத்தியாகி, இன்னொரு ஜன்மா எடுக்காமல் நித்யானந்தத்தில் சேரட்டும்" என்று இந்த ஸ்லோகத்துக்கு அர்த்தம்.

ஜலத்திலும் பூமியிலும் இருக்கிற ப்ராணிகள் மட்டும்தானா என்றால் அப்படி இல்லை. முதலிலேயே பக்ஷிகளையும் **(பதங்கா:**)கொசுக்களையும் (**மசகா:** - **மசகம்** என்றால் கொசு. 'மஸ்கிடோ' இதிலிருந்து வந்ததுதான்!) சொல்லிவிட்டதால் ஆகாசத்தில் பறக்கிற பிராணிகளையும் சொல்லிவிட்டதாக அர்த்தம். ஆகாசத்தில் பறந்தாலும் இந்தக் கொசு ஜலத்தில்தான் முட்டை இடுகிறது. பக்ஷி கிளைகளில்தான் வாழ்ந்து கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கிறது. மீன் ஜலத்தில் மட்டும்தான் இருக்கும். தவளை ஜலத்திலும் இருக்கும், பூமியிலும் இருக்கும். அநேக பிராணிகளால் பூமியில் மட்டும்தான் வசிக்க முடியும். இப்படியெல்லாம் பல தினுஸில் பிரித்துப் பிரித்துச் சொல்லி, அத்தனை உயிரினங்களும் பாபம் நிவ்ருத்தியாகி ஸம்ஸாரத்தைத் தாண்ட வேண்டும் என்று இந்த ஸ்லோகம் ப்ரார்த்திக்கிறது.

இந்த கார்த்திகை தீபத்தை எந்தப் பிராணி பார்த்தாலும் அதற்கு நித்ய ச்ரேயஸ் உண்டாகட்டும் என்று சொல்லியிருக்கிறது. 'த்ருஷ்ட்வா' என்று ஸ்லோகத்தில் வருவதற்கு'பார்த்தால்'என்று அர்த்தம். வ்ருக்ஷம் - மரம் எப்படிப் பார்க்க முடியும்?நம் மாதிரி அதற்குக் கண், பார்வையெல்லாம் உண்டா?தாவரத்துக்கும் பலவிதமான உணர்ச்சிகள் இருப்பதாக இப்போது

ஸயன்ஸ்படியே சொன்னாலும் அதற்குப் பார்வை உண்டா என்று தெரியவில்லை. அதனால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. 'பார்த்தால்'என்று ஸ்லோகத்தில் சொல்லியிருந்தாலும், "பார்க்காவிட்டாலும் பரவாயில்லை; மரம் மாதிரிப் பார்க்க சக்தியில்லாவிட்டாலும் பரவாயில்லை; அல்லது பார்க்கிற சக்திவாய்ந்த பிராணிகளாக இருந்தும்கூட இந்த தீபத்தைப் பார்க்காவிட்டாலும் பாதகமில்லை;இந்த தீபத்தின் ப்ரகாசமானது அதைப் பார்க்கிறவர், பார்க்காதவர் எல்லார் மேலும் படுகிறதோ இல்லையோ?அம்மாதிரி இதன் ப்ரகாசம் படுகிற எல்லைக்குள் இருக்கிற ஸகல ஜீவராசிகளுக்கும் பாப நிவ்ருத்தி, ஜன்ம நிவ்ருத்தி, சாஸ்வதமான ச்ரேயஸ் கிடைக்க வேண்டும்"- என்றிப்படி அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

தீபத்தின் ஒளி எப்படி வித்யாஸம் பார்க்காமல், பிராம்மணன், பஞ்சமன், புழு, பக்ஷி, கொசு, மரம், மற்ற நீர்வாழ் ப்ராணிகள், நிலம் வாழ் விலங்கினங்கள் இவற்றின் மீது படுகிறதோ அப்படியே நம் மனஸிலிருந்து அன்பு ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாகப் பிராகாசிக்க வேண்டும். இப்படிப்பட்ட அகவொளியோடு, புற ஒளியாக தீபத்தை ஏற்றி மேலே சொன்னது போல் ப்ரார்த்திக்க வேண்டும்.

முன்பெல்லாம் சொக்கப்பானை என்று ஆலயத்திலிருந்து தீபத்தைக் கொண்டுவந்து பெரிதாக ஏற்றினார்களே, திருவண்ணாமலையில் இப்போதும் மலை உச்சியில் மஹா பெரிய ஜோதியாக தீபம் ஏற்றுகிறார்களே, இதன் உள்ளர்த்தம் என்ன?சின்ன அகலமாக இருந்தால், அதன் ப்ரகாசம் கொஞ்ச தூரம்தான் பரவும். சொக்கப்பானை என்றால் அதன் ப்ரகாசம் ரொம்ப தூரத்துக்குத் தெரியும். அண்ணாமலை தீபம் மாதிரி மலையில் ஏற்றி வைத்துவிட்டாலோ, அது எத்தனையோ ஊர்கள் தாண்டிக்கூடத் தெரியும். அத்தனை பெரிய எல்லைக்குள் இருக்கிற ஸகல ஜீவஜந்துக்களின் மீதும் இந்தப் பிரகாசம் பட்டு அவற்றின் பாபங்கள் போகவேண்டும் என்ற உத்தமமான சிந்தனையில்தான் சொக்கப்பானை, அண்ணாமலை தீபம் என்றெல்லாம் நம் பூர்விகர்கள் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

ஸாதரணமாக இரண்டு கால் ப்ராணி, நாற்கால் ப்ராணிகள்தான் அதிகம். வண்டுக்கு ஆறு கால். சிலந்திக்கு எட்டுக் கால்கள். மரவட்டை, கம்பளிப் பூச்சி என்று எடுத்துக் கொண்டால் அதற்கு எண்ணி முடியாத கால்கள். வேதத்தில் அடிக்கடி 'த்விபாத்" சதுஷ்பாத்' என்று இருகால், நாற்கால் ப்ராணிகள் க்ஷேமத்தைக் கோருகிற மாதிரியே எத்தனை காலுள்ள ப்ராணிகளானாலும் அவற்றுக்கும், இன்னும் பாம்பு மாதிரி, மீன் மாதிரி காலே இல்லாத ப்ராணிகளுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும் என்று மந்திரங்கள் இருக்கின்றன.

பரம ஞானிக்கு பிராம்மணன் பஞ்சமன் (ப்ராம்மணே … ச்வபாகே) என்ற வித்யாஸம் தெரியாது என்று கீதையில் (5.18) சொல்லியிருக்கிறது. நமக்கும்கூட, காரியத்தில் பேதத்தைப் பார்த்தாலும் மனஸில் சுரக்கும் அன்பில் வித்யாஸமே கூடாது என்கிற மாதிரிதான் ரந்திதேவன் முதலில் பிராம்மணனுக்கும் கடைசியில் பஞ்சமனுக்கும் தானம் பண்ணியிருக்கிறான். இந்தக் கார்த்திகை தீப ஸ்லோகத்திலும் "ஸ்வபசா ஹி விப்ரா:என்று பஞ்சமன், ப்ராம்மணன் இருவரையும் சொல்லியிருக்கிறது. க்ஷேமத்தைக் கோரும்போது ஜாதி வித்யாஸமே இல்லை. நல்லவன் கெட்டவன் என்றும் வித்யாஸம் பார்க்கக் கூடாது. மஹாபாபத்தைச் செய்துவிட்டு நரகவாஸிகளாயிருப்பவர்களிடமும் அன்பு பாராட்டி, அவர்களுக்கும் உபகாரம் செய்யச் சொல்வது நம் சாஸ்த்ரம். அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

4.9-நரகவாஸிக்கும் நலன்

நரகத்தில் இருப்பவர்களுக்குக்கூட, நம் சாஸ்திரப்படி பரோபகாரம் நடக்கிறது.

திவஸமும், தர்ப்பணமும் செய்கிறபோது பூலோகத்திலோ வேறு எங்கோ, எந்த ரூபத்திலோ பிறந்திருக்கிற நம் மூதாதைகளுக்கு அது க்ஷேமத்தைக் கொடுக்கிறது. இங்கே நாம் கொடுக்கிற எள், தண்ணீர், பிண்டம் முதலானவைகளைப் பித்ரு தேவதைகள் நம் மூதாதைகள் எந்த ரூபத்தில் எங்கே பிறந்திருந்தாலும், அதற்கேற்ற ஆஹாரமாக மாற்றி அங்கே கிடைக்கச் செய்து விடுவார்கள். நம் நாட்டு ரூபாயை வெளிதேசக் கரன்ஸியாக்க

எக்ஸ்சேஞ்ச் பாங்க் இருக்கிற மாதிரி பித்ரு தேவதைகள் இப்படி ஆஹாரத்தை மாற்றிக் கொடுக்கிறார்கள்.

இந்த தேசாசாரம் ஜனங்களின் ரத்தத்தில் அடியோடு வற்றிப் போய்விடாததால் இன்னமும் அநேகமாக எல்லாரும் ரொம்பச் சுருக்கமாகவாவது பித்ரு கார்யங்கள் திவஸம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து வருகிறார்கள். ஆனால் சிரத்தைதான் போய்விட்டது. பித்ரு காரியங்களுக்கு 'ச்ராத்தம்' என்று பேர் இருப்பதே அதற்கு ச்ரத்தை முக்யம் என்பதால்தான். ச்ரத்தை இருந்தால் இப்படி சுருக்கமாகவும், குறுக்கியும், ச்ராத்தகாலம் தப்பியும் பண்ணுவது போலில்லாமல் யதோக்தமாக, புஷ்களமாக நடக்கும். பலனும் ப்ரத்யக்ஷமாகத் தெரியும். என்ன பலன் என்றால் சொல்கிறேன். இப்போது பெரும்பாலோர் ஏதோ ஒப்புக்குத்தான் பித்ரு கார்யங்கள் பண்ணுகிறார்கள். பாக்கியிருப்பவர்களோ மேலும் துணிந்து 'ஸூப்பர்ஸ்டிஷன்' என்றே இவற்றை அடியோடு நிறுத்தியிருக்கிறார்கள். இதன் விபரீத பலன் எனக்குத்தான் தெரியும். அநேக வீடுகளில் சித்தப்பிரமம், அபஸ்மாரம் (காக்காய் வலிப்பு) , இன்னும் போன தலைமுறைகளில் கேள்வியே படாத அநேக ரத்த வியாதிகள், nervous disease- களுடன் அநேகர் அவஸ்தைப் பட்டுக் கொண்டு ஜோஸ்யர், ஆரூடக்காரர், மாந்த்ரிகர் எல்லாரிடமும் போய்விட்டு என்னிடம் வருகிறார்களே - இந்த கஷ்டங்களுக்குப் பெரும்பாலும் காரணம் பித்ரு கார்யங்களை விட்டு விட்டதுதான். "மாதா பிதாக்கள் உயிர் போனபின் அவர்களுக்காக மக்கள் செய்யாதது மக்களைத் தாக்கும்" என்றும் புரிந்து கொள்ள வேண்டும். அப்பாவும், அம்மாவும் மற்ற வம்ச முதல்வர்களும் எங்கேயாவது கோபித்துக் கொண்டு சபிப்பார்களா என்று கேட்கக் கூடாது. பித்ருக்கள் சபிக்காமலிருக்கலாம். ஆனால் பித்ரு தேவதைகள் இருக்கிறார்களே, அவர்கள் இந்தப் பின் தலைமுறையினர் தங்கள் மூலமாக முன்னோர்களுக்கு எள்ளோ, தண்ணியோ, அன்னமோ அளிக்கவில்லையே என்பதைப் பார்த்துச் சபித்துவிடுவார்கள். ஆனபடியால் நாமும் நம் பின்ஸந்ததியும் நன்றாயிருக்கவே முன் தலைமுறையினருக்கு திவஸ தர்ப்பணாதிகள்

பண்ணத் தான் வேண்டும். அதாவது இங்கே பரோபகாரத்தோடு ஸ்வய உபகாரமும் சேருகிறது.

செத்துப் போனவுடனேயே எல்லாரும் மறுபடியும் இந்த பூலோகத்திலேயே பிறந்து விடுவதில்லை. நன்றாக வேலை செய்தால் இன்க்ரிமென்ட் மட்டுமல்லாமல் போனஸும் தருகிறார்கள் அல்லவா?ரொம்ப நன்றாகச் செய்தாலோ ப்ரமோஷனே கொடுத்து மேலே தூக்கி விடுகிறார்கள். வேலையில் தப்புப் பண்ணினால் இன்கிரிமென்டை நிறுத்தி விடுகிறார்கள். பெனல்டி (அபராதம்) விதிக்கிறார்கள். ரொம்ப மோசமாகப் பண்ணினால் கீழே வேலைக்கே தள்ளி விடுகிறார்கள். இதேபோல், புண்யம் பண்ணினவர்களுக்கு, இன்கிரிமென்ட் மாதிரி இந்த பூலோகத்தில் ஸௌக்கியமான இன்னொரு ஜன்மா கிடைப்பதற்கு முன்னாடி ஒரு போனஸ் கிடைக்கிறது. ஸ்வர்க வாஸம்தான் இந்த போனஸ். ரொம்பப் புண்யம் பண்ணியிருந்தால் ஸ்வர்க்க லோகத்துக்கே நிரந்தரமான ப்ரமோஷன். இப்படியே பாபம் பண்ணினவர்கள் முதலில் பெனல்டியாக நரக லோகத்தில் வஸிக்க வேண்டும். அப்புறம் இன்க்ரிமென்ட் இல்லாத மாதிரி பூலோகத்தில் கஷ்டத்திலே பிறக்க வேண்டும். ரொம்பப் பாபம் பண்ணினால் கீழ் வேலைக்கே போகவேண்டியது - நிரந்தர நரகவாஸம்.

தர்ப்பணம், திவஸம் இவற்றின் பலன் நரகலோகம் தவிர மற்ற லோகங்களில் உள்ளவர்களையே சேரும். ஸ்வர்க்கத்திலேயே பல தினுஸுகள்; பல லோகங்கள். தேவலோகம், கந்தர்வ லோகம், வித்யாதர லோகம் என்று இப்படி நரகத்திலும் தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், புத், ரௌரவம் என்று பல உண்டு. நாம் இறைக்கிற எள்ளும் தண்ணீரும், கொடுக்கிற பிண்டமும் இப்படிப்பட்ட லோகங்களிலுள்ள நரகவாஸிகளுக்குப் போய்ச் சேராது.

ஒரு தேசத்துக்கும் இன்னொரு தேசத்துக்கும் சண்டை ஏற்பட்டுவிட்டால், அப்போது பணம் எக்ஸ்சேஞ்ச் பண்ணி எதிரி தேசத்துக்கு அனுப்பவே முடிவதில்லையல்லவா? இப்படி நரகவாஸிகளுக்காகப் பித்ரு தேவதைகள் ஆஹார எக்ஸ்சேஞ்ச் பண்ணுவதில்லை.

இப்படிப்பட்ட நரகவாஸிகளான மஹா பாபிகளிடமும் நம்முடைய ரிஷிகளுக்கு மனஸ் உருகி, அவர்களுக்கும் க்ஷேமம் உண்டாக்குவதற்காக மந்த்ர பூர்வமாக சில வஸ்துக்களைக் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். சுத்தமான வஸ்துக்களை அவர்களுக்கு நாம் சேர்க்க முடியாது. ஆனால் சில அசுத்த வஸ்துக்களே அவர்களுடைய மஹா கஷ்ட நிலையில் ஆஹாரமாக அவர்களுக்குக் கிடைக்கலாம் என்று பகவான் வைத்திருக்கிறான்;நாம் வேஷ்டியை பிழிகிற அழுக்கு ஜலம், குளிக்கிறபோது நம் சிகை வழியாக வருகிற ஜலம் இவை எல்லாம் நரகத்திலுள்ளவர்களுக்கு ஆஹாரமாக மாறி, அவர்களுடைய மஹா கஷ்டத்தில் கொஞ்சம் கொஞ்சம் ஸுகம் தருகின்றன. அவர்களை உத்தேசித்து நாம் அன்பான பாவனையோடு துணியைப் பிழிந்தால், குடுமி ஜலத்தைப் பிழிந்தால், இந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்கும். மந்த்ரமும் சொல்லி இந்தக் காரியங்களைச் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் அப்படியே செய்ய வேண்டும். சாப்பிட்டு முடிந்தபின் எச்சில் கை ஜலத்தை இலைக்கு வலது பக்கத்தில் மந்த்ரம் சொல்லி விட்டால் அது நரகங்களிலேயே ரொம்பக் கொடூரமாக ரௌரவத்தில் எத்தனையோ கோடி வருஷங்களாக இருப்பவர்களின் தாஹத்தை தீர்க்க உத்வுகிறது. ஆந்திரர்கள் உத்தராபோஜனத்துக்குப் பின் இதைத் தவறாமல் பண்ணுகிறார்கள். இப்படி எச்சிலையும், அழுக்கு ஜலத்தையும் ஒருவருக்குத் தருவதா என்று நினைக்க வேண்டாம். நரக வாஸத்தில் அவர்கள் இருக்கிற ஸ்திதியில் இதுவேதான் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்கும். நம் லோகத்திலேயே வராஹத்தைப் பார்க்கவில்லையா? கரப்பான்பூச்சி முதலானவை அழுக்குகளையே தின்னவில்லையா?

நாம் பண்ணும் பாபத்தையெல்லாம் எத்தனையோ கருணையோடு மன்னிக்கும் பகவான் இப்படி ஒருத்தரை ரௌரவத்தில் போட்டு வதைக்கிறான் என்றால் அவர்கள் செய்திருக்கிற பாபம் ரொம்பவும் பயங்கரமாயிருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குங்கூட தாஹம் தீரட்டும், தாபம் தணியட்டும் என்று நினைத்து அதற்கான வழியைச் சொல்கிறது. நம் தர்ம சாஸ்த்ரம்.

பௌத்த மதம், கிறிஸ்தவ மதம் மாதிரி நம் மதத்தில் ஜீவகாருண்யத்துக்கு முக்கியத்துவம் தரவில்லை என்று தப்பாக நினைக்கிறவர்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

4.10-வேத சாஸ்த்ரங்களில் தானதர்மம்

'எண் நான்கு அறம்' என்று முன்னே சொன்ன முப்பத்திரண்டு மட்டுமில்லாமல் வேத சாஸ்திரங்களில் ஏராளமான தானங்களைச் சொல்லியிருக்கிறது. ராஷ்ட்ரகூட ராஜ்யத்தில் முக்யமான ஸ்தானத்தில் இருந்த ஹேமாத்ரி என்றவர் இந்த தானங்களையெல்லாம் தொகுத்து ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். "தான ஹேமாத்ரி" என்றே அதற்குப் பெயர். எழுநூறு வருஷங்களுக்கு முன் எழுதிய இந்தப் புஸ்தகத்துக்கு ஆதாரம் அதற்கும் இருநூறு வருஷங்கள் முந்தி லக்ஷ்மீதரர் எழுதிய 'க்ருத்ய கல்பதரு'. இப்போது 'கனோஜ்' என்கிற கான்யகுப்ஜத்தில் வஸித்தவர் இந்த லக்ஷ்மீதரர். அதிலே சொல்லாத தானமே இல்லை. 'வித்யா தானம்' என்று படிப்புத் தருவது, அணைகள் கட்டி ஜனங்களுக்கு உபகாரம் பண்ணுவது முதலான ஸோஷல் ஸர்வீஸ் எல்லாவற்றையுமே அதில் தானம் பண்ணுவது என்று சொல்லியிருக்கிறது.

வேதத்திலும் தான மஹிமை எங்கு பார்த்தாலும் சொல்லியிருக்கிறது. வேத சிரஸான உபநிஷத்துக்களில் ரொம்பப் பெரிசானது 'ப்ருஹதாரண்யகம்'- அந்தப் பேருக்கு அர்த்தமே 'பெரிய காடு' என்பது. அப்படிக் காடாக விரிந்த அந்த உபநிஷத்தில் (5.2) ஒரு கதை வருகிறது. உபநிஷத்துக்களில் தத்வங்கள் (ஃபிலாஸஃபி) அப்படியே கொட்டிக் கிடப்பது மட்டுமில்லை;நடுநடுவே ரஸமான கதைகள் வரும். இந்தக் கதைகளின் மூலமும் ஒரு பெரிய தத்வம் பிரகாசிக்கும். அப்படி 'ப்ருஹதாரண்யக'த்தில் கொடையைப் பற்றி ஒரு கதை வருகிறது.

தேவர்கள், அஸுரர்கள், மநுஷ்யர்கள் எல்லாருமே பிரம்மாவுக்கு ஒரே மாதிரி குழந்தைகள்தாம். பரமாத்மாவுக்கு பல தினுஸான லீலை வேண்டியிருக்கிறது. நல்லது கெட்டதுகளை மோதவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கிறது.

அதற்காக அவர் பிரம்மாவைக் கொண்டு தேவஜாதி, அஸுரஜாதி, மநுஷ்யஜாதி முதலானவைகளை ஸ்ருஷ்டிக்கச் செய்கிறார். இந்த மூன்று ஜாதிக்கும் நல்லதைச் சொல்ல பிரம்மா கடமைப்பட்டிருக்கிறார்.

ஒரு ஸமயம் தேவர்கள் எல்லோரும் பிரம்மாவிடம் போய், "எங்களுக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் பண்ணுங்கள்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

ப்ரம்மா,"த"என்ற ஒரே ஒரு அக்ஷரத்தை மட்டும் சொல்லிவிட்டு, "இதுதான் உபதேசம். இதற்கு அர்த்தம் புரிந்து கொண்டீர்களா?" என்றார்.

நம்மிடத்திலே இருக்கிற தப்பு நமக்கே நன்றாகத் தெரியுமானதால் யாராவது ரொம்ப ஸூக்ஷ்மமாக, ஸூசனையாக எடுத்துக் காட்டினால்கூட உடனே புரிந்து கொண்டு விடுவோம்.

இந்த ரீதியில் தேவர்களுக்கு, ப்ரம்மா "த" என்று சொன்னவுடனேயே அதற்கு இன்னதுதான் அர்த்தமாக இருக்கும் என்று புரிந்துவிட்டது. தேவர்களிடம் இருக்கிற பெரிய கோளாறு இந்த்ரிய நிக்ரஹம் (புலனடக்கம்) இல்லாததுதான். தேலோகம் ஆனந்த லோகமல்லவா? அங்கே ஸுகவாஸிகளாக மனம்போனபடி இருப்பது தேவர்களின் வழக்கம். ஆனபடியால், "இந்த்ரியங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுதான் ப்ரம்மா பண்ணுகிறார் (குறிப்பால் உணர்த்துகிறார்) என்று புரிந்து கொண்டார்கள்.

"புரிந்துவிட்டது. '**தா**ம்யத' என்று தாங்கள் உபதேசித்துவிட்டீர்கள்" என்று பிரம்மாவிடம் சொன்னார்கள்.

தமம், சமம் என்று இரண்டு உண்டு. இரண்டும் அடக்கத்தைக் குறிப்பது. புலனடக்கம், மனஸடக்கம் என்ற இரண்டைக் குறிப்பிட தமம், சமம் என்று ஒரே 'அடக்க'த்திற்கான இரண்டு வார்த்தைகளைச் சொல்வது. சமம் தமம் முதலான ஆறு குணங்களை "சமாதி ஷட்க ஸம்பத்" என்று பெயரிட்டு ஸாதகர்களுக்கெல்லாம் நம் பகவத்பாதாள் விதித்திருக்கிறார். சமத்தோடு கூடிய நிலைதான் சாந்தி. தமத்தில் அடங்கியிருப்பது தாந்தி. ஒன்றை மட்டும் சொன்னால் அதுவே இரணடுவித அடக்கத்தையும் குறிக்கும்.

"தாம்யத" என்றால் "தமத்தைச் செய்யுங்கள். அதாவது இந்த்ரியங்களையும் மனஸையும் கட்டுப்பாடு (control) பண்ணிக் கொள்ளுங்கள்" என்று அர்த்தம்.

ப்ரும்மா **"த"**என்று சொன்னது 'தாம்யத'வுக்கு abbreviation (சுருக்கம்) என்று தேவர்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

ஒரு முழு வார்த்தையைச் சொல்வதைவிட அதில் முதல் எழுத்தை மட்டும் சொன்னால் அதற்கு ஜாஸ்தி சக்தி இருக்கிறது. சர்ச்சில்கூட **"வி" ஃபார் விக்டரி** " என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் அந்த 'வி'யை மந்த்ரம் மாதிரிப் பரப்பினார்.

"நீங்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டது ஸரிதான்" என்று சொல்லி ப்ரம்மா தேவர்களை அனுப்பினார்.

மநுஷ்யர்களுக்கும் இதேமாதிரி உபதேசம் வாங்கிக் கொள்கிற ஆசை வந்தது.

அவர்களும் பூர்வகாலத்தில் ப்ரம்மாவை நெருங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அதனால் அவரிடம் போய், "உபதேசம் பண்ணுங்கள்"என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுபடியும் ப்ரம்மா "த"என்ற அதே சப்தத்தை மட்டும் சொன்னார்.

மநுஷ்யர்களுக்கும் தங்கள் குற்றம் உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்ததால், தங்களுக்கு அத்யாவச்யமான உபதேசம் இன்னது என்று பளிச்சென்று புரிந்து கொண்டார்கள்.

"அர்த்தம் தெரிந்ததா?"என்று ப்ரம்மா கேட்டவுடன்,

"தெரிந்து கொண்டோம் - 'தத்த' என்று உபதேசம் பண்ணியிருக்கிறீர்கள்" என்றனர்.

"தத்த" என்றால் "கொடு", "தானம் பண்ணு"என்று அர்த்தம். 'தத்தம் பண்ணுவது', தத்து கொடுப்பது'முதலான வார்த்தைகள் வழக்கத்தில்கூட இருக்கின்றனவே!

"ஆமாம், நீங்கள் ஸரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று ப்ரம்மா மநுஷ்ய ஜாதியிடம் சொல்லி அனுப்பி வைத்தார்.

தேவர்களும் மநுஷ்யர்களும் உபதேசம் வாங்கிக் கொண்டால் அஸுரர்கள் மட்டும் சும்மாயிருப்பார்களா? அவர்களும் ப்ரம்மாவிடம் வந்து உபதேசம் கேட்டார்கள். அவரும் பழையபடி அந்த 'க்ரிப்டிக்' (சுருக்கமான) "த" உபதேசத்தை பண்ணினார். "புரிந்ததா?" என்று கேட்டார்.

அஸுரர்களும் உடனே, "புரிந்து விட்டது 'தயத்வம்' என்று உபதேசம் பண்ணிவிட்டீர்கள்" என்றனர்.

ப்ரம்மாவும், "ஆமாம்" என்றார்.

'தயத்வம்' என்றால் 'தயையோடு இருங்கள்' என்று அர்த்தம்.

இரக்கமில்லாதவர்களைத்தானே அரக்கர் என்று சொல்லியிருக்கிறது? கொஞ்சம்கூட தயா தாக்ஷிண்யம் இல்லாத க்ரூர ஸ்வபாவம்தான் அஸுரர்களின் இயற்கை. அதனால் 'த'வுக்கு இப்படி அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

இடி இடிக்கிறபோது **"ததத"**என்கிற மாதிரி சப்தம் கேட்கும். "தாம்யத - தத்த - தயத்வம்" என்பதுதான் அந்த மூன்று 'த'. இது ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் வருகிற கதை.

நம் சங்கர பகவத் பாதாள் இதற்கு பாஷ்யம் எழுதுகிறபோது, "இங்கே தேவர் அஸுரர் என்று சொன்னதெல்லாமும், மநுஷ்யர்களுக்கு வேறல்லர். மனிதர்களிலேயே எல்லா நல்ல குணமும் இருந்தும் புலனடக்கம் இல்லாதவர்கள் தேவர்கள்; கொடுக்கிற ஸ்பாவமேயில்லாமல் லோப குணத்தோடு இருப்பவர்கள் அஸல் மநுஷ்யர்கள்; ஹிம்ஸை பண்ணிக்கொண்டு க்ரூரமாக இருக்கிற மனிதர்களே அஸுரர்கள். ஆனதால் மூன்று உபதேசங்ளும் நமக்கே ஏற்பட்டவை என்றுதான் நாம் அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

வாஸ்தவந்தான். ஆனாலும் இங்கே சொல்லியிருப்பதிலிருந்து மனிதவர்க்கத்துக்கு என்று ப்ரத்யேகமாக இருக்கிற பெரிய குறைபாடு லோபித்தனம்தான் என்று தெரிகிறது. இந்த்ரிய மனோ நிக்ரஹம் பண்ணினவர்களாகவும், க்ரூர ஸ்வபாவம் துளிக்கூட இல்லாமலும்கூட மனிதர்கள் தங்களை உயர்த்திக்கொண்டு விடலாம். ஆனால் இப்படிப்பட்டவர்கள்கூடப் பொருளை எடுத்துக் கொடுப்பது, தானம் செய்வது என்றால் கொஞ்சம் பின்னேதான் நிற்கிறார்கள். பொருளில் பற்றை விடுவது தான் மநுஷ்யனுக்கு மஹா கஷ்டமாக இருக்கிறது. இதனால்தான் மனிதனுக்கு முக்யமாக " தத்த - தானம் பண்ணு " என்று வேதத்தின் முடிவில் இருக்கப்பட்ட உபநிஷத்தே உபதேசம் பண்ணுகிறது.

நம்மில் ஒவ்வொருவர் ஒவ்வொரு மந்த்ரத்தை உபதேசம் வாங்கிக் கொள்கிறோம். சிலர் (சிவ) பஞ்சாக்ஷரீ எடுத்துக் கொள்கிறார்கள். சிலர் (நாராயண) அஷ்டாக்ஷரீ எடுத்துக் கொள்கிறார்கள். இப்படியே (முருகனுக்கான) ஷடக்ஷரீ, ராம மந்த்ரம், க்ருஷ்ண மந்த்ரம், அம்பாள் மந்த்ரங்கள் என்று பல இருக்கின்றன. இவற்றை அவரவர் தங்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்கிறார்கள். ஆனாலும் நம் அத்தனை பேருக்கும், மநுஷ்ய ஜன்மா எடுத்த ஸகலருக்கும், வேத சிரஸான உபநிஷத்திலேயே உபதேசித்துள்ள மந்த்ரம் " தத்த : - தானம் பண்ணு; நல்ல கொடையாளியாக இரு"என்பதுதான். நம் இஷ்டம், இஷ்டமில்லை என்பதற்கெல்லாம் இடமில்லாமல், இது நமக்கு வேதம் போட்டிருக்கிற ஆஜ்ஞை!மற்ற மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். இந்த "தத்த" மந்த்ரத்தைக் காரியத்தில் பண்ணிக் காட்ட வேண்டும்.

இந்த உபதேசம் வருகிற ப்ருஹதாரண்யக உபநிஷத் என்பது சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்தது. நாலு வேதங்களுக்குள் இன்று தேசம் முழுக்க ரொம்பவும் அநுஷ்டானத்திலிருப்பது யஜுர்வேதம்தான். அதில் சுக்லம், க்ருஷ்ணம் என்று இரண்டு பிரிவு உண்டு. வட இந்தியா முழுவதிலும் பெரும்பாலும் அநுஷ்டானத்தில் இருப்பது சுக்ல யஜுஸ்;தென்னிந்தியாவில் ரொம்பவும் அநுஸரிக்கப்படுவது க்ருஷ்ணயஜுஸ். சுக்ல யஜுஸைச் சேர்ந்த ப்ருஹதாரண்யக உபநிஷத்திலிருந்து தானத்தைப் பற்றி சொன்னேன்.

இதேமாதிரி க்ருஷ்ண யஜுஸில் உள்ள தைத்திரீயோபநிஷத்திலும் (1.11.3) தானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.

அது என்ன சொல்கிறது? "சிரத்தையோடு தானம் கொடுக்க வேண்டும். அசிரத்தையோடு கொடுக்கக் கூடாது" என்கிறது. ஸ்ரீயை (அதாவது செல்வத்தை)க் கொடுக்கும்போதே மனஸை ஸ்ரீயாக (லக்ஷ்மீகரமாக, மங்களமாக, ஸந்தோஷமாக) வைத்துக்கொண்டு கொடுக்க வேண்டும் என்கிறது. முகத்தைச் சுளிக்காமல் கொடுக்க வேண்டும். ஸ்ரீயின் நிறைவுதான் 'ச்ரேயஸ்' என்பது. மனஸில் ஸ்ரீயுடன், மனமலர்ச்சியுடன், கொடுத்தால் இந்த தானத்தின் பலனாக 'ச்ரேயஸ்' கிடைக்கிறது. இன்னம் ஜாஸ்தி கொடுப்பதற்கு நம்மால் முடியவில்லையே என்று வெட்கத்தோடு கொடுக்க வேண்டும். ஹ்ரீயுடன் கொடு என்கிறது உபநிஷத். 'ஹ்ரீ' என்றால் வெட்கம், லஜ்ஜை என்று அர்த்தம். புருஷ ஸூக்தத்தில் பகவானுக்கு ஹ்ரீ , ஸ்ரீ (லக்ஷ்மி) என்று இரண்டு பத்னிகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. இங்கேயும் லக்ஷ்மியை, அதாவது பொருளைத் தரும்போது, "ஸ்ரீயோடு கொடு", "ஹ்ரீயோடு கொடு" என்று சொல்லியிருக்கிறது. வெட்கம் இரண்டு காரணத்துக்காக. ஒன்று, இன்னும் ஜாஸ்தி தரமுடியவில்லையே என்று; இரண்டாவது, தானம் பண்ணுவது வெளியிலேயே தெரியக்கூடாது என்ற கௌரவமான கூச்சம். வெளியில் தெரிந்தால் மற்றவர்களும் 'தேஹி' என்று பிடுங்குவார்களோ என்பதால் அல்ல. இவன் தர்மிஷ்டன் என்று நாலு பேருக்குத் தெரிந்து நம்மை ஸ்தோத்ரம் பண்ண ஆரம்பித்தால் நமக்கு அஹம்பாவம் வந்துவிடும். அது தானத்தின் பலனையெல்லாம் சாப்பிட்டு விட்டுப் போய்விடும்.

தானம் பண்ணிவிட்டு நாம் நம் பெயரைப் பேப்பரில் போட்டுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும், 'எப்படியாவது நாலு பேருக்கு நாம் தானம் பண்ணினதை நைஸாகத் தெரியப்படுத்த வேண்டும்' என்கிற எண்ணம் உள்ளூர இருந்தால் அதுவும் தோஷம்தான். அந்த நாலுபேர் நாம் தானம் பண்ணினதற்காக ஒரு பங்கு கொண்டாடினால், அதோடு, "பண்ணின தானத்தை வெளியிலேயே தெரிவிக்காமல் எத்தனை உத்தமமான குணம்!" என்று பத்து பங்கு ஸ்தோத்திரம் பண்ணுவார்கள். மனஸுக்குள் நாம் இந்த ஸ்தோத்திரத்துக்கு ஆசைப்பட்டுவிட்டால், பேப்பரில் போட்டுக்

கொள்வதைவிட இதுவே பெரிய தோஷமாகிவிடும். ஆனாலும் இப்படியெல்லாம் ஆசை, கீசை தலைதூக்கிக்கொண்டுதானே இருக்கிறது? அது தலையைத் தூக்கவொட்டாமல் அமுத்தி வைக்க என்ன பண்ணலாம்? ஒன்று பண்ணலாம் என்று தோன்றுகிறது. அதாவது, `தானம் வாங்குகிறவன் நமக்கு அந்நியன் இல்லை; நம்மவனேதான்' என்ற உணர்ச்சியை நன்றாக வளர்த்துக்கொண்டுவிட்டால் கொடுத்ததை வெளியில் சொல்லவே தோன்றாது. நம் குழந்தைக்கு அல்லது நெருங்கிய பந்துக்களுக்கு நாம் ஏதாவது செய்தால் அதை வெளியில் விளம்பரம் செய்து கொள்வோமா? அதே மாதிரிதான் எவரும் நமக்கு பந்துதான். ஸகல ஜந்துக்களும் ஒரே பார்வதி பரமேஸ்வராளின் குழந்தைகள்தான். அதனால் நாம் 'தானம் கொடுக்கிறோம்' என்ற வார்த்தையைச் சொல்வதுகூடத் தப்புதான். 'பகவான் நம்மைக் கொடுக்கும்படி வைத்தான். கொடுத்தோம்' என்று அடங்கி, பவ்யமாகக் கொடுக்க வேண்டும். எங்கே இதிலும் ஓர் அஹங்காரம் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டு கொடுக்க வேண்டும். " பியா தேயம் " என்கிறது உபநிஷதம். "பியா" என்றால், 'பயந்துகொண்டு' என்று அர்த்தம். ஸாதாரணமாக, வாங்குகிறவன்தான் பயந்து கொண்டு நிற்பான்;கொடுக்கிறவன் அதட்டிக்கொண்டு கொடுப்பான். வாஸ்தவத்தில் கொடுக்கிறவன்தான் பயப்பட வேண்டும் என்கிறது உபநிஷத். கடைசியாக, `ஞானத்தோடு' கொடுக்க வேண்டும் என்று முடிக்கிறது. 'ஸம்வித்துடன் என்று சொல்கிறது. 'ஸம்வித்' என்றால் 'நிறைந்த ஞானம்' கொடுக்கிறவன், வாங்கிக் கொள்கிறவன் இரண்டு பேர்வழிகளும் வாஸ்தவத்தில் ஒருவனேதான் என்ற அறிவுதான் அந்த 'ஸம்வித்'.

வேதத்தில் கொடையைப் பற்றி இவ்வளவு சொல்லியிருக்கிற மாதிரியே கீதையிலும் (அத்.17) பகவான் சொல்லியிருக்கிறார். அவர் தானத்தில் மூன்று தினுஸு சொல்லியிருக்கிறார். ஒன்று ஸாத்விகம் - உத்தமமானது;இரண்டாவது ராஜஸம் - மத்யமமானது;மூன்றாவது தாமஸம் - அதமமானது. துளிக்கூட ப்ரதி உபகாரத்தை எதிர்பார்க்காமல், தகுந்த பாத்திரத்துக்குத் தகுந்த இடத்தில், தகுந்த காலத்தில் தருவதுதான் 'ஸாத்விகம்'. தானம் செய்வதால் கிடைக்கிற புண்ய பலனையும், தானம்

வாங்கினவன் செய்கிற ப்ரதி உபகாரத்தையும் நினைத்துக்கொண்டு, பொருளில் பற்றுப் போகாததால் உள்ளுக்குள் கொஞ்சம் கஷ்டப்பட்டுக் கொண்டே கொடுக்கிற தானம் 'ராஜஸம்'என்ற வகையைச் சேர்ந்தது. பாத்திரமில்லாதவர்களுக்குத் தகாத இடத்தில், தகாத காலத்தில், அவமானப் படுத்திக் கொடுப்பது 'தாமஸம்' இப்படி க்ருஷ்ண பரமாத்மா தானத்திலேயே distinguish (பாகுபாடு) பண்ணுகிறார்.

புராணங்களிலும் எங்கு பார்த்தாலும் தானத்தின் மஹிமை சொல்லியிருக்கிறது. இன்ன மாஸத்தில், இன்ன இடத்தில், இன்னாருக்கு இன்ன தானம் பண்ணினால் இன்ன பலன் என்று நிறையைச் சொல்லியிருக்கிறது - துலா மாஸத்தில் தானம் விசேஷம்;கங்காதீரத்தில் தானம் விசேஷம் என்கிறாற்போல தர்ம சாஸ்த்ரங்ளிலும், திருக்குறள், ஆத்திசூடி முதலான நீதி நூல்களிலும் அப்படியே ஈகையின் சிறப்பை விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறது. ஈகை, தானம் என்பதெல்லாம் என்ன? பரோபகாரத்தின் ஒரு ரூபம் தானே?

ஆனபடியால், `ஹிந்து மதத்தில் பரோபகாரத்தைப் பற்றி ஒன்றுமில்லை - ஆசாரம், அநுஷ்டானம், பூஜை, யோகம், ஆத்மவிசாரம் இதுகள்தான் உண்டு' என்று நினைப்பது கொஞ்சம்கூட ஸரியில்லை.

4.11-விதி விலக்கானவர்கள்

வைதிகக் குடுக்கைகள், மடிஸஞ்சிகள் என்று மற்றவர்கள் திட்டுகிற மாதிரி சிலர் ஜீவகாருண்யம் இல்லாமல் வெறுமே கர்மா, பக்தி என்று பண்ணிக் கொண்டிருந்தால் அது ஸரியில்லைதான். ஆனாலும்கூட இவர்கள் உணர்ந்தாலும், உணராவிட்டாலும், இந்த யாகயஜ்ஞும், திவஸம், தர்ப்பணம், பூஜை எல்லாமும்கூட, அததன் உள்ளர்த்தத்தைக் கவனித்தால் ஸோஷல் ஸர்வீஸ்தான். லோகத்தின் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் க்ஷேமத்தை உண்டாக்கிக் கொடுப்பதுதான் யாக மந்த்ரங்கள், சடங்குகள் ஆகியவற்றின் தாத்பர்யம். இந்த லோகத்தில் உள்ள ஜீவராசிகளில் செத்துப்போன நம் பித்ருக்களும் எங்கேயோ பிறந்துதானே இருக்கிறார்கள்?அவர்கள் எந்த

இடத்தில் எந்த ரூபத்தில் பிறந்திருந்தாலும் அவர்களுக்கு க்ஷேமம் உண்டாவதற்குத்தான் பித்ரு தேவதைகளுக்குத் தர்ப்பணாதி, சிராத்தம் முதலானதுகளைச் செய்கிறோம்.

லோக க்ஷேமத்துக்காவேதான் பகவானைப் பூஜை பண்ணுவதும்."ஜகத்ஹிதாய க்ருஷ்ணாய" அதாவது, உலகமெல்லாம் கஷ்டம் தீர்ந்து ஸந்தோஷமாக இருக்க ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவைப் ப்ரார்த்தித்துத்தான் பூஜையை ஆரம்பித்து, முடிக்கிறபோது "லோகா:ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" அதாவது, வையகமும் துயர் தீர்கவே!' என்று முடிக்கிறோம்.

யோகம், ஞானம் என்று ஜனங்களையே விட்டுவிட்டு எங்கேயோ குகையில் உட்கார்ந்துகொண்டு மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிறானே அவன் கதை என்ன? `இப்படிப்பட்டவனுக்கு பிக்ஷை போடாதே. அவன் ஸோஷல் ஸர்வீஸ் என்ன செய்கிறான்? ஸமூஹத்தைப் பிடுங்கி தின்கிறான் (parasite) என்றெல்லாம்கூட இந்த நாளில் கோஷம் போடுகிறார்கள். ஆண்டி, பண்டாரம், ஸந்நியாஸி என்று கிளம்பியிருப்பவர்களில் வேஷம் போடுபவர்களும் இருப்பார்கள்தான். அது வேறு விஷயம். ஆனால் வாஸ்தவமாகவே ஒருத்தன் ஆத்ம அபிவிருத்தி அடைவதற்காக ஏகாந்தமாக, ஸமூஹத்தை விட்டு, ஒரு தொழிலும் செய்யாமல் இருக்கிறான் என்றால் அவன் ஸமூஹத்துக்குப் பிரயோஜனம் இல்லாதவன்தானா?

இப்படி நினைப்பது முழுப் பிசகு. ஒவ்வொரு ஜீவனும் தன் மனஸை சுத்தப்படுத்திக்கொண்டு, அதை ஈஸ்வரனோடு ஈஸ்வரனாகச் சேர்த்துக் கறைக்கிற அளவுக்கு உயர்வதற்காகப் பாடுபடத்தான் வேண்டும். மற்ற ஜீவராசிகளுக்குச் செய்கிற பரோபகாரங்கூட அவர்களையும் கடைசியில் இப்படி ஆத்மார்த்தமாக உயர்த்தாவிட்டால், அத்தனை உபகாரத்தாலும் ப்ரயோஜனம் ஒன்றுமில்லை. ஆகையினால் நம்மில் ஒருத்தன் அப்படி உயரப் பாடுபடுகிறான் என்றால் அதுவே நமக்கு ஸந்தோஷம் தரத்தான் வேண்டும். நம் மாதிரி ஸம்ஸாரத்தில் உழன்றுகொண்டு கஷ்டப்படாமல், இதிலிருந்து தப்பிக்கிறதற்கு ஒரு தீரன் முயற்சி பண்ணுகிறான் என்றால் அவனைப் பார்த்து நாம் பெருமைதான் படவேண்டும். அவனுடைய சரீர யாத்திரை

நடப்பதற்கு அத்யாவச்யமான ஸஹாயத்தை நாம் செய்து கொடுக்கத்தான் வேண்டும். அப்புறம் அவன் நல்ல பக்குவம் அடைந்து யோக ஸித்தனாக, அல்லது பூர்ண ஞானியாக ஆகிவிட்டான் என்றால், அதன்பின்னும் அவன் கார்யத்தில் ஸோஷல் ஸர்வீஸ் என்று பண்ணவே வேண்டாம். தன்னாலேயே அவனிடமிருந்து ஜனங்களின் தாபங்களையெல்லாம் தீர்க்கிற சக்தி வெளிப்படும்; radiate ஆகும். ஜனங்களின் மனஸுக்குத் தாப சாந்தி உண்டாக்குவதை விடப்பெரிய ஸமூஹ ஸேவை எதுவும் இல்லை. ஒரு மஹானின் தர்சனத்தால் கிடைக்கிற இந்த சாந்தி, விச்ராந்தி தாற்காலிகமாக இருந்தால்கூட, அது பெரிய ஸோஷல் ஸர்வீஸ்தான். அப்படிப் பார்த்தால் எந்த ஸோஷல் ஸர்வீஸ்தான் சாச்வதமாயிருக்கிறது? எல்லாமே தாற்காலிகம்தான். தர்ம ஆஸ்பத்திரி வைத்து ஒரு வியாதிக்கு மருந்து கொடுத்து ஸரி பண்ணினாலும் அப்புறம் இன்னொரு வியாதி வரத்தான் வருகிறது. அன்ன சத்திரம் வைத்து ஒருவேளை சாதம் போட்டால், அடுத்தவேளை பசிக்கத்தான் பசிக்கிறது. அதனால் இந்த லோகத்தில் எல்லாமே தாற்காலிகம்தான்.

ஒருத்தன் பூர்ணத்வம் அடைந்துவிட்டால் மற்றவர்களின் மனஸின் கஷ்டத்தைப் போக்குவது, அதை சுத்தப்படுத்துவது தவிர, அவன் அவர்களுடைய லௌகிகமான வேண்டுதல்களைக்கூட நிறைவேற்றுகிற அநுக்ரஹ சக்தியும் பெற்றுவிடுகிறான்.

எந்த விதி (rule) இருந்தாலும், அதற்கு ஒரு விலக்கு (exception) இருக்கத்தான் செய்யும். அம்மாதிரி அத்யாத்ம மார்க்கத்தில் போகிறவர்களை - பக்தி, யோகம், ஆத்ம விசாரம் என்று தீவிரமாக இருக்கிறவர்களை - ஸோஷல் ஸர்வீஸில் இழுக்கக்கூடாது; அவர்களை 'பாரஸைட்' என்று திட்டக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

4.12-தான எண்ணத்தையும் தானம் செய்க

வேதம் என்றாலே முதலில் ஞாபகம் வருவது யாகம்தான். யாகமும் த்யாகமும் ஒன்றுதான். இங்கிலீஷில்கூட யாகம், த்யாகம் இரண்டையும்

‘ஸாக்ரி∴பைஸ்’ என்றுதானே சொல்கிறார்கள்? ஆனதால், வைதிகம் என்பது தன்னலமே கருதுவது என்கிற அபிப்ராயம் அடியோடு பிசகு. தன்னலத்தை முழுக்க த்யாகம் பண்ணுவதுதான் ஸநாதன தர்மத்தின் லக்ஷ்யம். இங்கே ‘தர்மம்’என்பதே மதம். வேத தர்மம், ஹிந்து தர்மம் என்றாலே வேதமதம், ஹிந்து மதம் என்றுதான் அர்த்தம். இதே ‘தர்மம்’ பரோபகாரங்களில் ஒன்றான ஈகையாக நினைக்கப்படுவதை முன்பே சொன்னேன். அதனால் நம் மதமே பரோபகாரமானதுதான்.

யாகத்திலே நெருப்பில் வஸ்துக்களை, உடைமைகளைப் போட்டு த்யாகம் பண்ணினால் தேவ சக்திகளுக்கு ப்ரீதி உண்டாகிறது. அவர்கள் லோகத்துக்கு மழை, ஸுபிக்ஷம் நல்ல எண்ணம் எல்லாவற்றையும் அநுக்ரஹம் பண்ணுகிறார்கள். ஒருவன் தன் உடைமையை வேள்வித் தீயில் த்யாகம் பண்ணி இப்படி லோக க்ஷேமத்தைச் செய்ய வேண்டும்.

சொத்து ஸ்வதந்திரங்களை நாமே வைத்துக்கொண்டு அநுபவிப்பதில் பெறுகிற ஸுகம் ரொம்பவும் தாற்காலிகமானது இந்தத் தாற்காலிக ஸுகம் நித்ய ஸௌக்கியமான ஆத்மாபிவிருத்திக்கு ஹானியாகவும் ஆகிறது. ஆனால் இதே உடைமைகளை நாம் வைத்துக்கொண்டு அநுபவிப்பதைவிட, கொடுத்து அநுபவித்தால், இதுவே பரம ஆனந்தத்தை தருகிறது; சாஸ்வத ஸௌக்யத்துக்கும் வழிகோலுகிறது. இதனால்தான் உபநிஷத்துக்களில் முதலாவதான ”ஈசாவாஸ்ய” த்தில் முதல் மந்த்ரத்திலேயே, ”த்யாகம் பண்ணி அநுபவி” என்று சொல்லியிருக்கிறது. காந்திகூட இதில்தான் தம்முடைய ∴பிலாஸ∴பி முழுக்க இருக்கிறது என்று சொல்லி, இந்த உபநிஷத்தை தலைக்கு மேலே வைத்துக்கொண்டு ஸ்லோகித்து வந்தார்.

கொடுக்க வேண்டும். அதுதான் த்யாகம். அதைத்தான் வேதம் எங்கே பார்த்தாலும் வற்புறுத்துகிறது. எந்தக் கர்மாவும் செய்து முடிக்கும்போது, ”நான் தான் கர்த்தா என்பதால் இதன் ப்ரயோஜனம் முழுதும் எனக்கே வந்துவிடப் போகிறதே! அப்படி என் ஒருத்தனுக்கு மட்டும் பலன் கிடைத்துவிடக் கூடாது” என்கிற பரம த்யாக புத்தியில் ”ந மம” -

”எனதில்லை; எனக்கில்லை” என்று அதன் பலனை லோக க்ஷேமார்த்தம் த்யாகம் பண்ணச் சொல்கிறது நம்முடைய மதம்.

மற்ற வஸ்துக்களை கொடுத்துவிட்டு, ”நான் கொடுத்தேன்” என்ற எண்ணத்தை மட்டும் வைத்துக்கொண்டே இருந்தால் இந்த அஹங்காரமானது த்யாகத்தாலும் தானத்தாலும் கிடைக்கிற ஆத்மாபிவிருத்தியை அப்படியே ஏப்பம் விட்டுவிடும். த்யாகம் பண்ணவேண்டும்; அதைவிட முக்யமாக த்யாகம் பண்ணினேன் என்ற எண்ணத்தையும் த்யாகம் பண்ணிவிட வேண்டும்.

மஹாபலி நிறையக் கொடுத்தான்; வாரி வாரிக் கொடுத்தான். ஆனால் தான் கொடுக்கிறோம் என்ற அஹங்காரத்தை அவன் பகவானுக்கு பலி கொடுக்கவில்லை. இதானால்தான் பகவானே அவனிடம் இந்த அஹங்காரத்தை யாசகமாகப் பெற்று,அஹங்கார நாசத்துக்கு அடையாளமாகத் தலையிலே கால் வைத்தான்.

”ஸோஷல் ஸர்வீஸ் பண்ணுகிறேன்” என்று சொல்லிக்கொண்டு வெளியில் ஏதேதோ பண்ணிக் கொண்டு அஹங்காரத்தைக் கரைக்காமல் இருந்தால் இவனுக்கும் ப்ரயோஜனமில்லை; இவனுடைய ஸர்வீஸால் லோகத்துக்கும் ப்ரயோஜனமிராது. தாற்காலிகமாக ஏதோ நன்மை நடந்ததுபோல் படாடோபமாகத் தெரியலாம்; ஆனால் அது நின்று நிலைத்து விளங்காது.

4.13-புறாவின் த்யாகம்

”என்பும் உரியர் பிறர்க்கு” என்று குறள் சொன்ன மாதிரி, தங்களுடைய ஸர்வத்தையும் பரோபகாரமாக த்யாகம் பண்ணவேண்டும். சிபியின் கதை எல்லோருக்கும் தெரியும். ஒரு புறாவுக்காகத் தன் சரீரத்தையே, ப்ராணனையே த்யாகம் செய்ய முற்பட்ட மஹாபுருஷன் அவன். நம் மதத்தில் ஜீவகாருண்யத்துக்குத் தந்திருக்கிற முக்யமான ஸ்தானத்துக்கு சிபி கதை ஒன்றே போதும். வேத பூமியான இந்த பாரத பூமியின் விசேஷம் மநுஷ்யனுக்காக மட்டுமில்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கும், பூச்சி

பொட்டுகளுக்குங்கூட க்ஷேமத்தைக் கோரி த்யாகம் பண்ணச் சொல்வது. இதில் இன்னொரு பக்கம், இந்த மண்ணின் விசேஷத்தால் மற்ற ஜீவராசிகளுக்குங்கூட இப்படிப்பட்ட பரோபகார சிந்தனையும், த்யாக புத்தியும் இருப்பதாகச் சொல்கிற புராண விருத்தாந்தங்களைப் பார்க்கிறோம். புறாவுக்காக த்யாகம் செய்த சிபியைப் பற்றிச் சொன்னேன். புறாக்களே செய்த பரம த்யாகத்தைக் 'கபோத உபாக்யானம்' சொல்லுகிறது. 'கபோதம்' என்றால் புறா என்று அர்த்தம். 'உபாக்யானம்' என்றால் சின்னக்கதை என்று அர்த்தம். இந்தப் புறாக்களின் கதை மனஸை ரொம்பவும் உருக்குவது.

வேடன் ஒருத்தன் இருந்தான். அவன் காட்டிலே வலை வீசி ஒரு பெண் புறாவைப் பிடித்தான். அப்போது ஒரே இடியும் மழையுமாக வந்தது. இந்தப் புறாவும் அதன் ஜோடியான ஆண் புறாவும் வஸித்த மரத்தடியிலேயே அவன் ஒண்டிக்கொண்டான். மழை நின்றபோது நல்ல இருட்டாகி விட்டது. ஒரே குளிர் வேறு. வேடனால் அங்கிருந்து புறப்பட முடியவில்லை. குளிரில் உடம்பெல்லாம் நடுங்க அங்கேயே ஒடுங்கி உட்கார்ந்து விட்டான்.

இதைப் பார்த்த மரத்தின் மேலிருந்த ஆண் புறா தன்னுடைய ப்ரிய பத்னியைப் பிடித்த பாபி நன்றாக அவஸ்தைப் படட்டும் என்று நினைக்கவில்லை. நேர் மாறாக, நம் தேசத்தின் விருந்தோம்பல் பண்பு முழுதும் அந்தச் சின்ன பக்ஷியிடம் திரண்டு வந்துவிட்டது. நாம் வஸிக்கிற மரத்தின் கீழ் இவன் வந்துவிட்டான். அதனால் இவன் நம் வீட்டுக்கு வந்துவிட்ட மாதிரி 'அதிதி தேவோ பவ'- விருந்தாளியை தெய்வமாக நினை' என்பது வேத ஆக்ஞை. எனவே, இந்த அதிதிக்குத் தன்னாலான ஒத்தாசையைச் செய்ய வேண்டும்' என்று நினைத்தது.

முதலில், குளிரில் நடுங்குகிறவனுக்குக் கணப்பு மூட்ட வேண்டும் என்று நினைத்தது. தன் கூட்டையே பிரித்து அதிலிருந்த காய்ந்த குச்சிகளை வேடனுக்கு முன்னால் கொண்டு வந்து போட்டது. தன் வீடு போனாலும் ஸரி, அவனுக்கு ஸௌகர்யம் பண்ணித் தர வேண்டும் என்ற உத்தமமான எண்ணம்.

'சிகிமுகி' கல் என்று ஒன்று உண்டு. 'சிக்கிமுக்கி' என்று பேச்சு வழக்கில் சொல்லுகிறார்கள். 'சிகி' என்றால் நெருப்பு என்று அர்த்தம். 'சிகை' உள்ளதெல்லாம் 'சிகி' தான். சிகையை விரித்துக் கொண்டு ஆடுகிற மாதிரிதானே நெருப்பு ஜ்வாலை நாக்குகளை நீட்டிக்கொண்டு கொழுந்து விட்டு எரிகிறது? 'முகம்' என்றால் வாய். வாயில் நெருப்பை உடைய கல்தான், அதாவது தேய்த்தால் நெருப்பை உமிழ்கிற கல்தான் 'சிகிமுகி'. இப்படிப்பட்ட சிகிமுகிக் கற்களைப் புறா தேடிக்கொண்டு வந்து போட்டது.

வேடன் அவற்றை ஒன்றோடொன்று தட்டி நெருப்பு உண்டாக்கி அந்த நெருப்பில் சுள்ளிகளைப் பற்ற வைத்துக் குளிர் காய்ந்தான்.

தனக்குப் புறா இத்தனை உபகாரம் செய்ததும் வேடனுடைய க்ரூர ஸ்வபாவம்கூட மாறி மனஸ் இளகிவிட்டது. தான் பிடித்திருந்த அதனுடைய பேடையை விட்டு விட்டான்.

'விருந்தோம்பல் என்றால் முக்யமாக அதிதிக்குச் சாப்பாடு போடுவதுதான். இந்த வேடன் இங்கே நம் விருந்தாளியாக வந்து விட்டுப் பட்டினி கிடந்தால் அதனால் நமக்கு மஹாபாபம் ஏற்படும். இவனுடைய பசியை ஆற்றுவதே நம் முதல் தர்மம்'என்று பெண் புறா நினைத்தது.

அவனுடைய ஆஹாரத்துக்காக அது வேறு எங்கேயோ போய்த் தேடவில்லை. தானே இருக்கும்போது வேறு ஆஹாரம் தேடுவானேன் என்று நினைத்தது. உடனேயே கொஞ்சங்கூட யோசிக்காமல், பரம ஸந்தோஷத்தோடு, அந்த அக்னியில் தானே விழுந்து ப்ராணத்தாயகம் பண்ணி விட்டது. நெருப்பில் வெந்து பக்வமான தன்னை அவன் புஜிக்கட்டும் என்ற உத்தம சிந்தை.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அதனுடைய ஜோடிப் பக்ஷியும் அந்த நெருப்பிலேயே விழுந்து தன்னை வதக்கிக் கொண்டது.

" என்பும் உரியர் பிறர்க்கு " என்ற மாதிரி இப்படி உயிரையே தந்தாவது இன்னொருத்தருக்கு உபகரிக்க வேண்டும் என்ற தத்துவத்தை நம் மத க்ரதங்களிலெல்லாம் நிறையச் சொல்லியிருக்கிறது.

4.14-யமனும் அஞ்சினான்!

அதிதியை தெய்வமாக நினைப்பது, அவனைக் கவனிக்காவிட்டால் தெய்வக் குற்றம் செய்த மாதிரி பயப்படுவது, இதெல்லாம் நம் மதத்தின் முக்யமான அம்சங்களாகும். யமன் என்றால் நாம் எல்லோரும் கதி கலங்குகிறோம். அப்படிப்பட்ட யமனே கதிகலங்கி விட்டதாகக் கடோபநிஷத்தில் ஒரு கதையில் வருகிறது. அவன் யாரிடம் பயப்பட்டான்? ஒரு சின்ன பிராம்மணப் பிள்ளையிடம் தான் பயப்பட்டான்! ஏன் பயப்பட்டான்? இந்தப் பையன் யமனுடைய க்ருஹத்துக்கு வந்து மூன்று நாட்கள் எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடந்துவிட்டான்! (அவன் ஏன் வந்தான் என்பது வேறு கதை) அதிதியொருவனின் வயிற்றுக்குப் போடாவிட்டால் அது மஹா அபசாரமாகுமே என்றுதான் ஸாக்ஷாத் யமனே பயந்து விட்டான். ஸர்வ லோகத்தையும் நடுங்கச் செய்கிறவன் இந்த வாண்டுப் பயலிடம் நடுங்கிக் கொண்டு வந்து, "என் க்ருஹத்தில் நீ மூன்று ராத்திரி சாப்பிடாமல் இருந்து விட்டாய். இதனால் எனக்கு தோஷம் உண்டாகமல் இருக்க உனக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன் அப்பா. ஒவ்வொரு நாள் பட்டினி இருந்ததற்கும் ஈடாக ஒவ்வொரு வரம் வீதம் என்னிடம் நீ மூன்று வரம் வாங்கிக் கொள்" என்று ப்ரார்த்தித்ததாக உபநிஷத் சொல்கிறது.

இங்கெல்லாம் 'பரோபகாரம்' என்று செய்கிறபோது இருக்கக்கூடிய 'ஸுபீரியாரிடி' மனப்பான்மை இல்லாமல், உபகாரத்துக்குப் பாத்திரனாகிறவனிடம் பயந்து பயந்து தாழ்ந்து, தெய்வத்துக்குப் பூஜை செய்கிற மாதிரி அவனுக்கானதைச் செய்வதையே பார்க்கிறோம்.

பரோபகாரத்தில் ஒரு முக்யமான அங்கமான ஈகையில் சிறந்தவர்களை நம் தர்மத்தில் தலைக்குமேல் வைத்துக் கொண்டு கொண்டாடுகிறோம். எத்தனையோ துர்குணங்கள் இருந்தால்கூட கர்ணன் போன்றவர்களைக் கொடைக்காகவே போற்றுகிறோம்.

4.15-தமிழ்நாட்டு வள்ளல்கள்

தமிழ் தேசத்திலும் வள்ளல்கள் என்று இவர்களை தெய்வத்துக்கு ஸமானமாகக் கொண்டாடுகிற வழக்கம் தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது. "முதலெழு-இடையெழு-கடையெழு வள்ளல்கள்" என்று குமணன், அதியமான் முதலான 21பேரை ச்லாகித்துச் சொல்லியிருக்கிறது.

காரி, பாரி ஓரி என்றெல்லாம் ஏழு பேரைக் கடையெழு வள்ளல்கள் என்பார்கள். பாரி வள்ளல் முல்லைக் கொடி படருவதற்காகத் தன் தேரையே கொடுத்த கதை எல்லோருக்கும் தெரியும். இன்னொருத்தன் (பேகன்) மயில் குளிரில் நடுங்குகிறதே என்று தன் உத்தரீயத்தையே எடுத்து அதற்குப் போர்த்தினானாம்.

அதியமானுக்கு சிரஞ்ஜீவித்வத்தைத் தரக்கூடிய நெல்லிக்கனி கிடைத்தது. 'நாம் சிரஞ்ஜீவியாக இருந்து என்ன ஸாதிக்கப் போகிறோம்? அவ்வைப் பாட்டி இருக்கிறாளே, ஸதாவும் லோக க்ஷேமத்தைப் பண்ணிக் கொண்டு, ஊர் ஊராக ஓடி குழந்தைகளுக்கு உபதேசம் செய்து வருகிறாளே, அவள் திடகாத்திரத்தோடு எத்தனை ஆயசு இருந்தாலும் அதுதான் லோகத்துக்கு நல்லது' என்று அவன் நினைத்து அவளுக்கே அந்த நெல்லிக்கனியை தானம் பண்ணிவிட்டான்.

`அதியமான் பண்ணியது புத்திசாலித்தனமாக இருக்கிறது. ஆனால் முல்லைக்குத் தேராவது? மயிலுக்கு எங்கேயாவது குளிருமா? அதற்குப் பட்டுப் பீதாம்பரத்தைப் போர்த்தவாவது? இதெல்லாம் புத்தி இல்லாத கார்யமாக அல்லவா இருக்கிறது?' என்று கேட்கலாம். என்னைக் கேட்டால், இப்படி புத்திக்கு வேலையே இல்லாமல் முட்டாள்தனம் மாதிரி கூடத் தோன்றுகிற கார்யங்களைச் செய்வதுதான் நிஜமான அன்பை, நிஜமான த்யாகத்தைக் காட்டுகிறது என்பேன். அன்பு பீறிக்கொண்டு வருகிறபோது மூளையினால் அதற்கு நியாய அநியாயங்கள் பார்க்க முடியாது. இப்படித்தான், நாயன்மார்களைப் பார்த்தால் பெண்டாட்டியையே ஒருத்தர் தானம் பண்ணினார், இன்னொருத்தர் பிள்ளையையே கறி பண்ணிப் போட்டார்

என்கிறபோது, இதெல்லாம் மூடத்தனம், உணர்ச்சிக் கட்டுப்பாடில்லாத கார்யம் என்று சொல்லக்கூடாது. அவர்களுக்கு எப்படிப்பட்ட த்யாக சிந்தனை இருந்தது என்பதுதான் முக்யம். மூளையால் ஸமாதானம் சொல்ல வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் உருட்டிப் புரட்டிக் கொண்டு வந்துவிட்ட த்யாகம்தான் நிஜமான த்யாகம் என்று என் அபிப்ராயம்.

இம்மாதிரி ஆவேசமாகப் பரோபகாரம் பண்ணின பெரியவர்கள் நம் தேசத்தில் ஆதிகாலத்திலிருந்து அவிச்சின்னமாக (தொடர் முறியாமல்) வந்து கொண்டே இருந்திருக்கிறார்கள்.

4.16-ஸநாதன தர்ம ஸாரம்

வைதிக தர்மத்துக்கு ஸாரமாக இருப்பது பஞ்ச மஹாயஜ்ஞங்கள் என்ற ஐந்து வேள்விகள். இவற்றில் 'ப்ரம்மயஜ்ஞம்' என்பது வேதம் ஓதுதல், ஓதுவித்தல். இதுவே நிஜமான வித்யா தானமாகிய பெரிய பரோபகாரம். 'பித்ரு யஜ்ஞம்' என்பது முன்னமே சொன்னாற்போல் மூதாதைகளுக்குச் செய்யும் தர்ப்பணம். 'தேவ யஜ்ஞம்' என்பது ஈஸ்வர ஆராதனம். இது தான் மற்ற எல்லா தான தர்மங்களுக்கும் பூர்த்தி ஸ்தானம். 'பூத யஜ்ஞம்' என்பது நாயும், காக்கையும் உள்பட எல்லா ஜீவராசிகளுக்கும் பலி போடுவது. 'ந்ரு யஜ்ஞம்' என்பது அதிதியை உபசாரம் பண்ணுவது. பஞ்ச மஹாயஜ்ஞங்களைப் பார்த்தால் நம் வேத மதத்தைப் போல் பரோபகாரத்தைக் கார்யத்தில் கட்டாயமாக விதித்திருக்கிற மதம் வேறு இல்லை என்றே தோன்றுகிறது. ஸ்ருஷ்டியில் ஒரு பிரிவைக்கூட விடாமல் உபகாரம் பண்ணி வைப்பது பஞ்ச மஹா யஜ்ஞம்.

இது தவிர 'பூர்த்தம்' என்ற பெயரில் ஸோஷல் ஸர்வீஸைப் பற்றி தர்ம சாஸ்திரங்களில் நிறையச் சொல்லியிருக்கிறது.

4.17-"பூர்த்த தர்மம்"; பலர் கூடிப் பொதுப்பணி

பூர்த்தம் காதாதி கர்ம யத் என்று ஸம்ஸ்க்ருத டிக்ஷனரியான 'அமர'த்தில் சொல்லியிருக்கிறது. 'காதம்' முதலான கர்மாக்கள் பூர்த்தம் ஆகும் என்று அர்த்தம்.

காதம் என்றால் வெட்டுவது; அதாவது குளமோ, கிணறோ, வாய்க்காலோ வெட்டி உபகாரம் பண்ணுவது. சாஸ்திரங்களில் விசேஷித்துச் சொல்லியிருக்கிற இந்தப் பூர்த்த தர்மத்தை மறந்தால்தான் ஜலக்கஷ்டம் (Water scarcity) என்று ஓயாமல் அவஸ்தைப் படுகிறோம். அந்தக் காலத்தில் இந்தக் கார்யம் ரொம்பவும் முக்யமாகக் கருதப்பட்டதால்தான் நாம் கூப்பிட்டு ஒருத்தன் வரவில்லை என்றால், "அவன் அங்கே என்ன வெட்டிக் கொண்டிருக்கிறானோ?" என்று கேட்கிற வழக்கம் வந்திருக்கிறது. அதாவது அவன் வெட்டிக் கொண்டிருந்தால் மட்டும் நாம் எத்தனை அவஸரத்தில் கூப்பிட்டாலும் வராமலிருக்கலாம் என்று அர்த்தமாகிறது!

இப்போது வெட்டுகிற கார்யம் போய், தூர்ப்பது தான் முக்யமான கார்யமாக இருக்கிறது! குழாயில் தண்ணீர் நின்றுவிட்டாலோ அல்லது பூச்சியும் புழுவுமாகக் குழாய் ஜலம் வரும்போதோ, "ஏண்டா குளத்தைத் தூர்த்தோம், கிணற்றை மூடினோம்?" என்று துக்கமாக வருகிறது.

முன்பெல்லாம் ஒரு குளம் என்றால் வாய்க்கால்கள், வடிகால்கள் என்றெல்லாம் போட்டு வெகு சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். கிணறு என்றால் இழுக்கத் தெரிந்த மநுஷ்யனுக்கு மட்டும்தான் அது ப்ரயோஜனமாகும். குளமானாலோ வாயில்லா ப்ராணிகளுக்கும்-காக்காய், குருவி முதற்கொண்டு ஸகல ஜீவராசிகளுக்கும்-அது பயன்படும்.

பாதை போடுவது ஒரு தர்மம். வ்ருக்ஷம் வைப்பது இன்னொரு தர்மம். புதிதாக வைப்பதோடு, இருக்கும் வ்ருக்ஷங்களை வெட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். புதிதாக வைக்கிற செடிக்கு தினம் ஜலம் விட்டு, அது வ்ருக்ஷமாக வளரப் பண்ண வேண்டும். "வனமஹோத்ஸவம்" என்று இன்றைக்குப் பெரிய மநுஷர்கள் வந்து செடி நட்டுவிட்டு நாளைக்கே அதற்கு ஜலம் விட ஆள் இல்லாமல் அது பட்டுப்போனால் என்ன ப்ரயோஜனம்? இதுமாதிரி டெமான்ஸ்ட்ரேஷன், வெளிவேஷம் நமக்கும் உதவாது,

லோகத்துக்கும் உதவாது. இதற்குப் பதில் யாருக்கும் தெரியாமல் ஒருத்தன் ஏதோ ஒரு ஒற்றையடிப் பாதையில் உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால், அதுவே மற்றவர்களுக்கு வழியை சுத்தி பண்ணுவதோடு இவனுக்கும் சித்த சுத்தியைக் கொடுத்துவிடும்.

ஒவ்வோர் அவயவத்தாலும் ஏற்படக்கூடிய தோஷத்தைப் போக்கிக்கொள்ள அந்த அவயவத்தாலேயே செய்யக்கூடிய புண்ய கர்மாக்கள் இருக்கின்றன. குப்பைத் தொட்டியான மனஸை சுத்தம் பண்ண அந்த மனஸாலேயே த்யானம் செய்ய முடிகிறது. கண்டதைப் பேசுகிற நாக்கை சுத்தப்படுத்திக் கொள்ள அந்த நாக்காலேயே பகவந்நாமாவைச் சொல்ல முடிகிறது. குயுக்தி எல்லாம் பண்ணும் மூளையை சுத்தமாக்கிக் கொள்ள அந்த மூளையாலேயே தத்வ ஆராய்ச்சி பண்ண முடிகிறது. இப்படியே, இந்த சரீரத்தால் - கையாலும், காலாலும், உடம்பாலும் எத்தனையோ தப்பு தண்டா பண்ணுகிறோமல்லவா? அதை இந்த சரீரத்தாலேயே தான் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். சரீரப் பிரயாஸையாலேயே பண்ணிக்கொள்ளும் இந்த சுத்திதான் பொதுக்கார்யங்களான பூர்த்த தர்மங்கள்-ஸோஷல் ஸர்வீஸ்-அத்தனையும், சரீரப் பிரயாஸையாலேயே இது சித்த சுத்தியையும் தரக்கூடியது. ஏனென்றால் சரீரத்தால் செய்கிற இந்தக் கார்யங்களுக்கு மூலமாகப் பரோபகாரம் என்ற எண்ணம் நம் சித்தத்தில் இருப்பதுதான்.

தயை என்பது ஒவ்வொருவர் மனஸிலும் இருக்க வேண்டிய உயர்ந்த குணம். அந்த தயைக்கு உருக்கொடுக்கும்படியான ஒரு கார்யத்தை சரீரத்தினாலும் அவசியம் செய்ய வேண்டும்.

* * *

விநோபா 'ச்ரம்தான்' (ச்ரம தானம்) என்று சொல்லி வருகிறாரே, இதைத்தான் பூர்த்த தர்மம் என்று நம் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. வாரத்தில் ஒரு நாளாவது இந்த சரீர கைங்கர்யத்தை ஸகல ஜனங்களும் பண்ண வேண்டும் என்பது என் ஆசை. யாராயிருந்தாலும் வாரத்துக்கு ஒரு நாள் ஹாலிடே (விடுமுறை) இருக்கிறதல்லவா? அன்றைக்கு லோகோபகாரமாக

சரீரத்தால் ஒரு பொதுப்பணி செய்ய வேண்டும். மனப்பூர்த்தியுடன், அல்லது மனப் பூர்த்திக்காக பூர்த்த தர்மம் பண்ண வேண்டும்.

அவரவருக்கும் எத்தனையோ குடும்பக் கார்யங்கள் இருக்கும் என்பது வாஸ்தவம்தான். இந்தக் கார்யங்களை லீவு நாளில் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் வைத்திருப்பார்கள். ஆனாலும் இதோடுகூட பார்வதீ-பரமேஸ்வராளின் பெரிய லோக குடும்பத்துக்கும் தன்னாலானதை ஒரு 'ட்யூட்டி'யாக செய்யத்தான் வேண்டும். இதற்காக அதையும் விடக்கூடாது. அதற்காக இதையும் விடக்கூடாது. கொஞ்ச நேரமாவது இந்தப் பரோபகாரப் பணி புரிய வேண்டும்.

சரீர கைங்கர்யம் உடம்புக்கே ஒரு நல்ல exercise (அப்யாஸம்) . அதோடு பரோபகாரமாகப் பண்ணுகிற போது மனஸுக்கும் அலாதியான உத்ஸாஹம் இருக்கும். முடிவில் சித்த சுத்தியைத் தரும்.

ஸங்கமாகச் செய்ய வேண்டும். உதிரி உதிரியாக அவரவர்கள் செய்வதைவிட எல்லாரும் சேர்ந்து செய்தால் ஜாஸ்தி உபகாரம் பண்ண முடியும்.

அதுவும் இந்தக் கலிகாலத்தில் பலர் கூடிப் பண்ணுவதுதான் பலன் தரும்-கலௌ ஸங்கே சக்தி: என்றே வசனமிருக்கிறது. முன் யுகங்களில் individual - ஆக ஒவ்வொருத்தனுக்கும் தேஹ, மனோ சக்திகள் அதிகமிருந்தன. இப்போது அது போய்விட்டது. அதனால்தான் நாமும் பார்க்கிறோம், எல்லா mass movement -களாகவே (வெகுஜன இயக்கங்களாகவே) இருப்பதை அநேகமாக, 'கலி' என்றாலே சண்டை, சச்சரவு என்று அர்த்தமிருப்பதற்குப் பொருத்தமாக இந்த ஸங்க சக்தி மறியல் 'ஒழிக' ஊர்வலம் நடத்துவது, ரயிலைக் கொளுத்துவது முதலான காரியங்களுக்குத்தான் பிரயோஜனப்படுகிறது!

இந்த ஸங்க சக்தியை இனிமேலாவது நாம் நல்லதற்கு channelise பண்ணி ஸமூஹப் பணிகளை விருத்தி செய்ய வேண்டும்.

ஸங்கமாகச் சேர்ந்து தொண்டு செய்கிறவர்களுக்கு அத்யாவசியமாயிருக்க வேண்டிய யோக்யதாம்சங்கள்: அவர்களுக்குக் கட்டுப்பாடு (நியமம்) ரொம்பவும் தேவை. எடுத்துக்கொண்ட வேலையில் கொஞ்சம்கூடப் பொறுப்பு

குறையக்கூடாது. ஸத்தியமும், அந்தரங்க சுத்தமும் இதுபோலத் தேவை. அன்போடு மதுரமாகப் பேசவும் பழகவும் வேண்டும். பணத்தைக் கையாளுவதில் அப்பழுக்கில்லாதவர்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணக்கூடியவர்களாக இருக்கணும். நியாயமாக ஸந்தேஹப்படுபவர்களிடம் பொறுப்பில்லாமலோ, பொறுமையிழந்தோ பதில் சொல்லக்கூடாது. அதே ஸமயத்தில் அநேக ஸந்தேஹப் பிராணிகள் ஏதாவது ரூமர் கிளப்பிக் கொண்டிருக்கிறார்களே என்பதற்காக "நமக்கென்னத்துக்கு ஊரான் பாடு?" என்று பொதுத் தொண்டை விட்டு விடவும் கூடாது. அதாவது ஸ்வயமான அவமானங்களை பாராட்டிக் கொண்டிராத மனப்பான்மை வேண்டும். நகரமானால் ஒரு பேட்டையில் இருப்பவர்களெல்லாம் சேர்ந்து செய்யலாம். க்ராமமானால் நாலு க்ராமத்து ஜனங்கள் ஒன்றுகூடிப் பண்ணலாம்.

ந ஹி ஜானபதம் து : கம் ஏக : சோசிதும் அர்ஹதி

என்று ஒரு வசனம் இருக்கிறது. "ஊர்க் கஷ்டத்தைப் பற்றி ஒருத்தன் விசாரப்பட்டுப் பிரயோஜனமில்லை" என்று இதற்கு அர்த்தம் பண்ணிக்கொண்டு, நம் மதத்தில் ஸமூஹ ஸேவா உணர்ச்சியை இல்லை என்று சொல்கிறார்கள். இது ஸரியில்லை. வாஸ்தவத்தில் இதன் அர்த்தம் இப்படியில்லை. " ஏக : - ஒருத்தன்" என்ற வார்த்தைதான் இங்கே முக்யமானது. தனி ஒருத்தனாக இருந்துகொண்டு ஊர்க் கஷ்டத்தைப் பார்த்துவிட்டு இவனும் அவர்களோடு சேர்ந்து அழுவதில் ப்ரயோஜனம் இல்லை; **பல பேராகச்** சேர்ந்து அந்தக் கஷ்டத்தை நிவ்ருத்தி பண்ணக் கார்ய ரூபத்தில் முயற்சி செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். ஒன்று, வெறுமே விசாரம் மட்டும் படக்கூடாது; கார்யத்தில் இறங்க வேண்டும். இரண்டாவது, தனியாகப் பண்ணினால் எடுபடாது. பலர் ஸங்கமாகச் சேர வேண்டும்.

பிறத்தியானைக் கஷ்டப்படுத்தியாவது ஸ்வயகார்யத்தை ஸாதித்துக் கொள்வதென்பதே பொதுத் குணமாக உள்ள நாம் இப்படிப் பலருக்குமான கார்யத்தைப் பலரோடு சேர்ந்து ஸ்வய ச்ரமத்தைப் பாராமல் அன்பினால் ஒன்றுபட்டுச் செய்கிறபோது அடைகிற தூய ஆனந்தம் தனியானது. கார்யம்

நிற்கிறதும் நிற்காததும் ஒரு பக்கம் இருக்கட்டும். அதைச் செய்யும் போது பலர் ப்ரேமையில் ஒன்று கூடும் இன்பம் இருக்கிறதே, அதுவே ஒரு பெரிய பயன்.

4.18-தீர்த்த தர்மம்

பூர்த்த தர்மத்தில் தீர்த்த தர்மத்தை விசேஷமாகச் சொன்னேன். ரொம்ப ஜலக் கஷ்டமுள்ள இடத்தில் கிணறு, குளம் வெட்டுவதை ரொம்பவும் பெரிய தர்மமாக ஆதிநாளிலிருந்து ஸ்லாகித்துச் சொல்லியிருக்கிறது. இப்போது ராஜஸ்தான் ஸ்டேட்டில் சேர்ந்துவிட்ட ராஜபுதனம் ஒரே பாலைவனப் பிரதேசம் அல்லவா? அங்கே ஏழெட்டு மைலுக்கு ஒரு இடத்தில்தான் எவனாவது ராஜாவோ பிரபுவோ கிணறு வெட்டியிருப்பான். ரொம்ப ஆழத்தில், 'ஆதிசேஷன் தலைவரைக்கும்' என்பார்களே, அப்படிப் பாதாளம் வரைக்கும் தோண்டிக்கொண்டே போய்தான் இப்படி அபூர்வமாக எங்கேயாவது கிணறு வெட்டியிருக்கும். அந்தக் கிணற்றுக் கட்டைகளில் இந்த மஹா பெரிய தர்மத்தை இன்னான், இன்ன ராஜா காலத்தில் பண்ணினான் என்கிற details எல்லாம் ஸம்ஸ்க்ருதத்தில் கல்வெட்டுகளாகப் பொறித்திருக்கும். நம்முடைய ஹிஸ்டரி, கல்ச்சர் இவற்றை 'ஷேப்' பண்ணுவதற்கு ரொம்பவும் உதவியாயுள்ள இந்தக் கல்வெட்டுக்களுக்கு 'வாபீ ப்ரசஸ்தி' என்று பேர். 'வாபீ' என்றால் கிணறு; 'ப்ரசஸ்தி' என்றால் புகழ்மொழி. இப்போதும் ராஜஸ்தானியர்களான மார்வாரிகள் - அவர்களுக்கு ஜலக்கஷ்டம் நன்றாகத் தெரியுமாதலால் - கிணறு வெட்டும் தர்மத்தில் விசேஷமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

க்ராமப் புறங்களில் எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டலாம். இருக்கிற குளங்களைத் தூர் வாரி சுத்தம் பண்ணலாம். பெரியவன் சிறியவன் என்றில்லாமல் எல்லோரும் சேர்ந்து பண்ணுவது முக்யம். கோடீஸ்வரனானாலும், பெரிய பண்ணையாரானாலும் அவனும் மண் வெட்டிக் கொண்டு வந்து போட வேண்டும். சாஸ்த்ரங்களில் அப்படித்தான் எழுதியிருக்கிறது. அஸ்திவாரக் கல் நாட்டுவது, டேப் வெட்டுவது

முதலானதுகள் சாஸ்த்ரத்தில் இல்லை. எத்தனை பெரியவனானாலும் அவனும் வாஸ்தவமாகவே உடம்பு வேர்க்க மற்றவர்களோடு ஸரி ஸமமாகப் பூர்த்த தர்மம் பண்ணவேண்டும். ரதோத்ஸவத்தில் எல்லா ஜாதிக்காரர்களும் ஒன்றாகச் சேர்ந்து வடம் பிடித்து இழுக்கிற மாதிரிதான் இதுவும்.

4.19-தெய்வப் பணியும் மக்கட் பணியும்

ரதோத்ஸவத்தை விட்டுவிட்டு ஸோஷல் ஸர்வீஸுக்கு வாருங்கள் என்று சொல்வது தப்பு. நமக்கு இரண்டும் வேண்டும். இப்போதெல்லாம் தெய்வ கார்யத்தை விட்டு விட்டு ஸமூஹ ஸேவை செய்ய வேண்டும் என்பவர்கள் திருமூலர் திருமந்திரத்தை மேற்கோள் காட்டுகிறார்கள்.

நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே.
என்ற திருமந்திரத்தை quote செய்கிறார்கள்.

'மக்களுக்குச் செய்கிற தான தர்மங்கள் பகவானுக்குப் பண்ணுகிற பூஜையாகும்' என்று இதற்கு அர்த்தம் . ஸ்ரீமத்பாகவதத்திலும் பகவான். லோகத்தையெல்லாம் பகவத் ஸ்வரூபமாக பார்த்து ஸேவை செய்வதும் பூஜைதான் என்கிறார்*.

இப்படிச் சொன்னதால் பூஜை கூடாது, உத்ஸவம் கூடாது என்று அர்த்தமில்லை. பரோபகாரம் பண்ணி ஜனங்களுக்கு சாப்பாடும், துணியும் மற்ற ஸௌகர்யங்களும் கிடைக்கிற மாதிரி செய்துவிட்டு, அவர்கள் தின்று தின்று என்றைக்கோ ஒருநாள் பரமார்த்த ஸத்யத்தைத் தெரிந்து கொள்ளாமலே சாகிற மாதிரி விட்டு விட்டால் என்ன ப்ரயோஜனம்? திருமூலரோ, க்ருஷ்ணரோ இப்படி விட்டு விடவேண்டும் என்று அபிப்ராயப்படுகிறவர்கள் அல்ல. சாச்வத ப்ரயோஜனம் பகவானைக் காட்டிக் கொடுப்பதுதான். இந்த உடம்புக்கு சோறு போட்டு, இதற்கு வியாதி வந்தால் சிகித்ஸை பண்ணி, அறிவை வளர்க்கும் படியான கல்வியைத் தந்து உபகாரம் பண்ணுவதெல்லாம். ஆலய தர்சனம், உத்ஸவாதிகள் முதலியவற்றை

நன்றாக அநுபவித்துப் பயன் அடைவதற்குத்தான் மற்ற ஸோஷல் ஸர்வீஸ் எல்லாமே. "நாஸ்திகனுக்கு வைத்யம் பண்ணி ஆயுஸை நீடிக்கப்பண்ணினால் அவன் மேலும் நாஸ்திக பாபத்தை வ்ருத்தி செய்துகொள்ள இடம் தருவதாக ஆவதால் அவனுக்கு வைத்யம் பண்ணாதே!" என்று ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆனபடியால் மக்கள் பணியெல்லாம் அந்த மக்களை பகவானிடம் சேர்ப்பதற்குத்தான். அதனால், எல்லோருமாகச் சேர்ந்து ஆலயத் திருப்பணி செய்தால் மெய் வருத்தி ஒரு கோயிலுக்கு மதில் கட்டினால், அதுதான் ஜனங்களுக்கான மஹா பெரிய ச்ரமதானம்.

ஆத்மார்த்தமாகவே சில ஸமூஹ ஸேவைகள் உண்டு. உதாரணமாக, மஹான்களுடைய நூல்கள், மஹான்களைப் பற்றிய நூல்கள், புராணங்கள், ஸ்தோத்ர க்ரந்தங்கள், துதிப்பாடல்கள் முதலியவற்றை அச்சிட்டு ஜெயிலில் இருக்கிறவர்களுக்கும் ஆஸ்பத்திரியில் இருக்கிறவர்களுக்கும் இலவசமாகக் கொடுப்பது ஒரு பெரிய பரோபகாரம். அந்தந்த அதாரிடி (நிர்வாகிகள்) அனுமதித்தால் இந்த இடங்களில் மத ஸம்பந்தமான பேச்சு, பஜனை, காலக்ஷேபம் இதெல்லாம் நடத்தலாம்.

---

*உ-ம் கபில அவதாரத்தில் உபதேசம் (111.29)

4.20-தொண்டின் உட்பயன்கள்; 'திரு'ப்பணி

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய ஸஹாயம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது - ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு

செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetime-ல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரிசாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலியில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகம-சில்ப-வ்யாஸ பாரத-கிராமகலா-வித்வத்-ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடுகூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் **நம்முடைய** மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூஹத்தில் ஸௌஜன்யம் உண்டாகும். எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வரானுக்ரஹமும் வரும்.

அநாதைக் குழந்தைகளின் ஸம்ரக்ஷணை, திக்கற்ற ஏழைகளுக்கு ஸேவாஸதனம் வைப்பது, ப்ராணி வதையைத் தடுப்பது பசு வளர்ப்பது, பசிக்கஷ்டம் யாருக்கும் வராமல் உபசரிப்பது என்றிப்படி எந்தெந்த விதத்தில்

முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

ஈஸ்வரானுக்ரஹம் எங்கேயும் ப்ரவாஹம் மாதிரி ஓடிக்கொண்டேன்தான் இருக்கிறது. ஆனால் நம் மனஸ் கல்லாக இருந்தால், கல்லுக்குள் ஜலம் ஊறாத மாதிரி அநுக்ரஹத்தை நம்மால் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அதுவே ஒரு துணியை வெள்ளத்தில் போட்டால் அதுதானே விரிந்து ஜலத்தை இழுத்துக் கொள்கிறது. துணியை வெளியே இழுத்துப் பிழிந்தால் ஜலம் கொடுக்கிறது. கல் மனஸைப் பரோபகாரத்தில் இப்படி லேசாகத் துணி மாதிரி ஆக்கிக் கொண்டால் எப்போதும் நம்மைச் சூழ்ந்திருக்கிற அநுக்ரஹத்தை நன்றாக உறிஞ்சிக் கொள்ளலாம். ஜீவனுக்குச் செய்கிற பெரிய உபகாரம் அவனுக்குக் கருணாமூர்த்தியான ஈசனிடம் பிடிப்பு ஏற்படுத்தித் தருகிற திருப்பணிதான்.

பணி என்றால் ஸர்வீஸ். ஸ்கூல் வைப்பது, ஆஸ்பத்திரி கட்டுவது, ஜல வஸதி பண்ணித் தருவது எல்லாம் ஸர்வீஸ்தான். நாம் ஸோஷல் ஸர்வீஸ்-ஸமூஹப் பணி-என்றாலே இதுகளைத்தான் நினைக்கிறோம். ஆனால் இந்தப் பணியெல்லாம் இறைபணியில் கொண்டு சேர்த்தால்தான் நிறைவுள்ளதாகும் என்று நமக்குப் புரிய வைக்கிறதற்காகத்தான் ஈஸ்வர ஸம்பந்தமான பணிக்கே 'திரு' என்று அடைமொழி கொடுத்து 'திருப்பணி' என்று பேர் வைத்திருக்கிறார்கள். 'திருப்பணி' என்கிற வார்த்தை எல்லா ஸர்வீஸுக்கும் உச்சி அதுதான் என்று அர்த்தம் கொடுக்கிறது.

ஏழை இந்தியாவிலுள்ள இத்தனை பிரம்மாண்டமான கோயில்களைச் சம்பளத்துக்காக ஜனங்கள் கட்டவில்லை. ராஜாக்கள் கோயில் கட்டின தொழிலாளிகளுக்கு நிறையக் கொடுத்தது வாஸ்தவம். ஆனால் இவர்கள் ஸர்வீஸாகத்தான் செய்தார்கள். இவர்களுடைய காலக்ஷேபம் நடக்க வேண்டும் என்று ராஜா தானாகப் பொருள் கொடுத்தான். அந்த நாள் ஸொஸைட்டியின் ஸெட்-அப், எகானமி எல்லாமே வேறே. ஜனத்தொகை குறைச்சல், சோற்றுக்கும் துணிக்கும், ஜாகைக்கும் கஷ்டமேயில்லை. அத்யாவசியங்கள் தவிர லக்ஷுரிகள், சினிமா, அது இது என்று

செலவுமில்லை. இன்றைக்கு மாதிரி ஃபாக்டரிகளும், டாம்களும் கட்டவேண்டிய அவசியம் ராஜாங்கத்துக்கு இல்லை. ஸைன்யத்தை வைத்து ரக்ஷிக்கிற ஒரு செலவு தவிர, மற்றபடி Welfare State என்று இப்போது ஸமூஹ அபிவிருத்திக்குச் செலவழிக்கிற அநேகச் செலவினங்கள் ராஜாவுக்கு இல்லை. அதனால் இன்றைக்கு உள்ள ஃபாக்டரி, டாம் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துக் கோயில் கோயிலாகக் கட்டினான். புதிதாகக் கட்டுவது, பழசை விஸ்தரிப்பது என்று ஜனங்களுக்கு ஓயாமல் வேலை கொடுத்து, சம்பளமும் கொடுத்து வாழ வைப்பதற்குக் கோயில் திருப்பணிதான் முக்யமாக நடந்து வந்தது. இதனால் வேலை செய்கிற ஜனங்களின் மனஸும் ஈஸ்வர பரமாகப் போனதில் அவர்கள் நல்ல பக்தியோடு, சாந்தர்களாக இருந்து வந்தார்கள். தேசமே க்ஷேமமாக இருந்தது. வெறும் பணியாக இல்லாமல் திருப்பணியாக இருந்ததால், 'ரைட்'கேட்பது, 'ஸ்ட்ரைக்' பண்ணுவது என்பதெல்லாம் இல்லாமல், மனப்பூர்வமாக உழைத்தார்கள். கார்யம் ஒழுங்காக நடந்து, இன்றைக்கும் லோகமே ப்ரமிக்கும் படியாக எங்கே பார்த்தாலும் கோயிலும் கோபுரமுமாக இருக்கிறது! இப்போது இத்தனை ஜனங்கள், என்ஜினீயரிங் முன்னேற்றம் எல்லாம் இருந்தும், அவற்றைப் பழுதுபார்க்கக்கூட நமக்கு சக்தியில்லை! "மக்களுக்குச் செய்வதே மஹேசனுக்குச் செய்வது" என்று வெறும் வாய்ப் பேச்சாகச் சொல்லிக்கொண்டு, மஹேசனை மறந்து இப்போது கார்யங்களைப் பண்ணும்போது என்ன ஆயிருக்கிறது? தெய்வ ஸம்பந்தமில்லாமல் பணியைக் கத்தரித்து விட்டிருப்பதால், நல்ல குறிக்கோளோடு பண்ணுவதெல்லாமே அனர்த்தங்களைக் கொண்டு வந்து விடுகிறது.

பழைய நாளில் பக்தியால் தேசத்தில் கன்யாகுமாரியிலிருந்து காஷ்மீர் வரை எல்லா ஜனங்களும் ஏகோபித்திருந்ததால், வடக்கே கோயில் கட்டுகிறார்களா, தெற்கே கோயில் கட்டுகிறார்களா என்று சண்டை போடாமல், வடக்கத்திக்காரன் தென்தேசத்துக் கோயில்களுக்கும், தெற்கத்திக்காரன் வடதேசக் கோயில்களுக்கும் போனான். இப்போதோ ராஜாங்கம் எந்த டாம் கட்டட்டும், எந்த ஃபாக்டரி வைக்கட்டும், உடனே அத்தனை

ஸ்டேட்காரர்களும், தங்கள் தங்கள் ஸ்டேட்டில் தான் அதைக் கட்ட வேண்டும் என்று சண்டைக்கு ஆரம்பிக்கிறார்கள்.

எல்லாருக்கும் படிப்பு என்று சொல்லிக் கொடுக்கிறார்கள் நல்ல எண்ணத்தில்தான் செய்கிறார்கள். ஆனால் 'தெய்வ ஸம்பந்தமே இருக்கக்கூடாது; அப்படியிருந்தால் நம் ஸெக்யூலரிஸத்துக்கு (மதச்சார்பின்மைக்கு) களங்கமாய்விடும்'என்று நினைத்து வெறும் அறிவு வ்ருத்தியை மட்டும் படிப்பினால் உண்டாக்கித் தருகிறார்கள். இதனால் படிப்பறிவில்லாவிட்டால் ஸாது ஜனங்களாக இருக்கக் கூடியவர்களுக்கும் ஃபோர்ஜரி மாதிரி அநேக தப்புத் தண்டாக்களையும், புத்திசாலித்தனத்தால் செய்யக்கூடிய அநேக ஒழுங்கீனங்களையும் கற்றுக் கொடுத்ததாகவே ஆகிறது.

எங்கே பார்த்தாலும் ஆஸ்பத்திரி என்று வைத்து அதே ஸமயத்தில் மதாநுஷ்டானத்தாலேயே உண்டாகிற கட்டுப்பாடுகள் இல்லாமல் ஜனங்களை அவிழ்த்து விட்டிருப்பதாலும் அனர்த்தங்கள் உண்டாகின்றன. 'குடிக்கலாம், எதை வேண்டுமானாலும் தின்னலாம். 'அபார்ஷன்' மாதிரி இன்னும் பெரிய தப்புகளும் பண்ணலாம் - இதனாலெல்லாம் கெடுதி வராமல் வைத்யம் பண்ணிக்கொண்டு விடலாம்' என்று ஜனங்களுக்குத் துணிச்சல் கொடுத்துப் போகிறது.

ஸமூஹ நலன் என்று க்ராமம் க்ராமமாக பாங்குகள் வைத்து தாராளமாகக் கடன் தருகிறார்களென்றால், உடனே அதை வாங்குவதற்கு எத்தனை பொய் பித்தலாட்டம் உண்டோ அத்தனையிலும் ஜனங்களை இழுத்து விடுவதாகவும் ஆகிறது. இப்படிப் பலபேர் அப்ளிகேஷன் போடுவதில், சிலருக்குத்தான் ஸாதகமாகிறது என்கிற போது அதிகாரிகள் லஞ்ச ஊழல், பாரபக்ஷம் எல்லாம் சேர்கிறது.

தப்பிப் போனவர்களுக்கு ஸகல வசதிகளுடன் ஸேவாஸதனம் வைக்கிறதென்பதே, மனக்கட்டுப்பாடு போதாதவர்களை இன்னமும் தளர்ந்து கொடுக்கத் துணிச்சல் அடையுமாறு செய்யலாம்.

ஆகையால் தெய்வப் பணியை விட்டுவிட்டு தேசப்பணி, மக்கட்பணி என்று புறப்படுவது தப்பு.

இதிலே நமக்கெல்லாம் வழிகாட்டினவர் அப்பர் ஸ்வாமிகள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அவர் என்ன செய்தார்?' பாடும் பணி'யினால் ஸகல ஜனங்களின் நெஞ்சமும் உருகிப் பரமேஸ்வரனிடம் சேருமாறு பண்ணிவைத்தது அவர் செய்த வாக் கைங்கர்யம். அது தவிர சரீர கைங்கர்யமாக, ஒரு உழவாரப்படையை வைத்துக்கொண்டு கோயில் கோயிலாய்ப் போய் அங்கே ப்ராகாரத்தில் முளைத்திருந்த புல்லைச் செதுக்கிக் கொண்டிருந்திருக்கிறார். உலகத்திலுள்ள ஜீவர்களுக்குச் செய்கிற தொண்டிலேயே, உலக ஜீவர் எல்லோருக்கும் அம்மையப்பனான பரம்பொருளுக்குச் செய்கிற தொண்டையும் சேர்த்து ஜனங்களின் உய்நெறிக்கு உபகாரம் பண்ணியதே அப்பரின் பெருமை.

அப்பர் காட்டிக் கொடுத்தபடி அம்மையப்பரிடம் பக்தி வைத்து, எல்லாரும் அந்த ஒருவனின் குழந்தைகள் என்கிற அன்பில் ஒன்றுபட்டுச் சேர்ந்து ஸேவை செய்கிற போதுதான் த்வேஷம், கட்சிச்சண்டை, ஏமாற்று, வெறும் நடிப்பான 'இன்டக்ரேஷன்' (ஒருமைப்பாடு) இவை இன்றி களங்கமில்லாத பரிசுத்த ஒற்றுமையும், உத்ஸாஹத்தோடு உழைக்கிற மனப்பான்மையும் ஏற்படும். பெரிய பெரிய கார்யங்களையெல்லாம் ஸுலபமாக ஸாதிக்கலாம். அந்தச் சூழ்நிலையிலேயே ஆனந்தத்தின் ஸுகந்தத் தென்றல் வீசும். கெட்டதுகளின் வாடையே அங்கு தலை காட்டாது.

ஆசாரங்களையும், தர்ம சாஸ்த்ரக் கட்டுப்பாடுகளையும் விட்டு விலகி விலகிப் போகிறதுதான் ஸோஷல் ஸர்வீஸ் என்றில்லாமல், அவற்றில் இன்னம் கிட்டே கிட்டே போய் ஒட்டிக்கொள்கிற மாதிரி தெய்வ ஸம்பந்தத்துடன்தான் தேசப்பணி செய்ய வேண்டும்.

தங்களுக்கும் ஸமூஹத்துக்கும் ஒன்று செய்துகொள்வதற்கு முன்னால், பகவானுக்கு எல்லாரும் சேர்ந்து செய்ய வேண்டும். தீபாவளி என்றால் தாங்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வது, புது வஸ்த்ரம் கட்டிக் கொள்வதோடு ஏழை பாழைகளுக்கும் எண்ணெய், சீயக்காய், துணி கொடுக்க

வேண்டும். அது மட்டும் போதாது. எல்லாரும் சேர்ந்து முதலில் கோயிலில் உள்ள அறுபத்து மூவர் உள்பட எல்லா மூர்த்திகளுக்கும் தைலம் சாத்தி, புது வஸ்த்ரம் அணிவிப்பதில்தான் கொண்டாட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இப்படியே பொங்கல் என்றால் அவரவர் வீட்டுக்குச் சுண்ணாம்பு அடித்து சுத்தப்படுத்துவதோடு, வசதியில்லாதவர்களுக்கும் இந்த உதவியைப் பண்ணுவதோடு, வசதியுள்ளவர், வசதியில்லாதவர் எல்லாருமே ஒன்று கூடிப் பக்கத்திலுள்ள ஆலயங்களில் களை பிடுங்கி, தேய்த்து மெழுகி அலம்பிவிட்டு, பொக்கை பொறைகளை அடைக்க வேண்டும்.

இப்போது நமக்கு உள்ளே இருக்கிற அழுக்கும் முள்ளுந்தான் கோயிலில் அழுக்காகவும் முள்ளாகவும் ரூபம் எடுத்திருக்கிறது! கோயிலில் செதுக்கி, மெழுகி சுத்தப்படுத்துகிறபோது நம் மனஸின் முள்ளையும் அழுக்கையும் அகற்றித் துப்புரவாக்கிக் கொண்டு விடுவோம். அப்போது நம் மனஸே தங்கமாகிவிடும். அந்தக் கனகஸபையில் அன்பே உருவான சிவம் வந்து குடிகொண்டு நாமே ஆலயமாகி விடுவோம்.

நடமாடும் மனிதருக்குச் செய்வதே படமாடும் பரமனுக்குச் செய்ததாகும் என்று சொல்லும் அதே திருமூலர் முதலில் ஈஸ்வரனுக்கு பத்ர அர்ச்சனையைச் சொல்லிவிட்டு அப்புறம்தான் பசுவுக்குப் புல், பிற்பாடு (இப்போது நான் பிடியரிசித்* திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேனே அம்மாதிரி) ஏழை ஜனங்களுக்கு ஒரு கவளம் அன்னம் இவற்றைச் சொல்லிவிட்டு முடிவாக, இப்படிக் கையால் பொருளாக உபகாரம் பண்ணாவிட்டாலும், வாயாலாவது ஸகலரிடமும் மதுரமாகப் பேசி உபகாரம் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் (கு) இன்னுரை தானே.

ஆக ஈஸ்வர ஸேவையில்லாமல் மநுஷ்ய ஸேவை என்பதில்லை.

ஸமூஹ ஸேவையும் தெய்வப்பணியும் கைகோர்த்து நடக்க வேண்டுமென்றுதான் ஸ்ரீமட தொண்டு ஸபை என்பதாக மத ஸம்பந்தமாகத் துண்டுப் பிரசுரம் போடுபவர்களையும் பொதுத்தொண்டு செய்யும் ஸ்ரீமட முத்ராதிகாரிகளோடு சேர்த்து விட்டது.

"பகவான் நம்மைக் கண் திறந்து பார்க்க வேண்டும்" என்று எல்லாரும் குறைபட்டுக் கொள்கிறோம். கருணைக்கடலான ஈஸ்வரன் கண்ணைத் திறந்து பார்த்துக்கொண்டேதான் இருக்கிறான். ஏன் அவன் நாம் இஷ்டப்படுகிற மாதிரி நமக்கு ஸௌபாக்யங்களைத் தரவில்லை என்றால், நாம் கண்ணைத் திறந்து லோகத்தின் கஷ்டங்களைப் பார்த்துஅது நிவ்ருத்தியாவதற்கு நம்மாலான உபகாரத்தைப் பண்ணாமலிருப்பதால்தான் நம் மனஸ் மற்றவர்களிடம் தயையால் நிரம்பினால், உடனே கருணையே உருவமான ஈஸ்வரனும் நமக்குத் தயை புரிவான். ஆனதால், கண்ணைத் திறந்து பார்க்க வேண்டியது நாம்தான்; பகவானல்ல.

கண்ணைத் திறந்து பல தினுஸாகக் கஷ்டப்படுபவர்களையும் பார்த்து நம்மாலானவரையில் அதை நிவ்ருத்தி பண்ண வேண்டும். அது மட்டும் போதாது. அவர்களும் தங்கள் கண்ணைத் திறந்துகொண்டு, இத்தனை கஷ்ட நிவ்ருத்திக்கும் எவன்தான் மூலகாரணமோ, எவனுடைய கருவி மாத்திரமாகவேதான் நாம் தொண்டு செய்வதல்லாமோ - அவனைப் பார்த்து, இந்தக் கஷ்டம் ஸுகம் எல்லாவற்றையும்விடப் பெரிசு அவனை அடைவதுதான் என்று உணரும்படியாகப் பண்ண வேண்டியதே நம்முடைய தலையாய பணி.

நம் மதத்தில் பொதுத்தொண்டு உண்டா என்று கேட்பவர்கள் கேட்டுவிட்டுப் போகட்டும். நான் சொல்கிறேன்: **இப்போது நம் மதத்துக்கே தொண்டால்தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.**ஹிந்துமதம் வேலி இல்லாத தர்காஸ்து நிலம் மாதிரிக் கிடக்கிறது. இந்த நிலைமை மாறி இந்த மதத்தைக் கவனிக்க மநுஷ்யர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும். **ஸ்வய மரியாதையுடன் நம் மதத்தில் இருக்கலாம் என்று ஸகல வகுப்பினருக்கும் நம்பிக்கையை உண்டுபண்ணுவது எல்லோரும்**

ஸங்கமாகக் கூடிச் செய்கிற பொதுத்தொண்டு தான். இந்தத் தொண்டுகளை அப்புறம் சொல்கிறேன். இப்படி ஸகல ஹிந்துக்களும் சேர்ந்து கொண்டு, செய்வதே நம் மதத்துக்கு வேலியாகி, இது 'தர்காஸ்து' நிலமில்லை என்று ஆக்கும். 'நம்முடைய சொந்த மதம்' என்ற அபிமானம் எல்லா வகுப்பாருக்கும் உண்டாகி விடுமாதலால் வேறு யார் வேண்டுமானாலும் இதிலிருக்கிறவர்களை ஸ்வாதீனம் பண்ணிக்கொள்ளலாம் என்ற நிலைமை போகும். மதமாற்றம் ஏற்படாமல் ஹிந்துக்களின் நிலைமையை மாற்ற நாம் எதிர் பிரசாரம் பண்ணிச் சண்டை உண்டாக்க வேண்டியதில்லை. நம்முடைய அசட்டையும், கடினமும் போய் நாம் மனமாற்றம் அடைந்து நம் ஜனங்களையெல்லாம் பரோபகாரத்தில் அணைத்துக் கொண்டாலே மதமாற்றம் நின்று போய்விடும். இதுதான் ஹிந்து ஸமூஹத்தை ஹிந்து ஸமூஹமாகவே வைத்துக் காப்பாற்றுவதற்கு சாந்தமான வழி. மதத்துக்காக ulterior motive-ஓடு (உள் நோக்கத்தோடு) நாம் பரோபகாரம் பண்ணாமல் அன்பின் நிறைவுக்காகவே பண்ணி, side by side மதத்தையும் ரக்ஷிக்க வேண்டும். எனக்கு உபசாரம் பண்ணிப் பூர்ணகும்பம் கொடுத்து மாலை போடுவதைவிட இப்படி ஹிந்துக்கள் அனைவரும் தொண்டினால் ஒன்று சேர்ந்து மதத்தை ரக்ஷித்துத் தருவதுதான் எனக்கு நீங்கள் பண்ணுகிற பெரிய உபசாரம், உபகாரம் எல்லாமும்.

---

* "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் "பரோபகாரம்" என்ற உரை.

4.20-தொண்டின் உட்பயன்கள்; 'திரு'ப்பணி

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய ஸஹாயம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது - ஸ்ரீராமனின் கருணையை, கர

ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetime-ல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரிசாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலியில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகம-சில்ப-வ்யாஸ பாரத-கிராமகலா-வித்வத்-ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடுகூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் **நம்முடைய** மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூஹத்தில் ஸௌஜன்யம் உண்டாகும். எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

அநாதைக் குழந்தைகளின் ஸம்ரக்ஷணை, திக்கற்ற ஏழைகளுக்கு ஸேவாஸதனம் வைப்பது, ப்ராணி வதையைத் தடுப்பது பசு வளர்ப்பது, பசிக்கஷ்டம் யாருக்கும் வராமல் உபசரிப்பது என்றிப்படி எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

ஈஸ்வராநுக்ரஹம் எங்கேயும் ப்ரவாஹம் மாதிரி ஓடிக்கொண்டேன்தான் இருக்கிறது. ஆனால் நம் மனஸ் கல்லாக இருந்தால், கல்லுக்குள் ஜலம் ஊறாத மாதிரி அநுக்ரஹத்தை நம்மால் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அதுவே ஒரு துணியை வெள்ளத்தில் போட்டால் அதுதானே விரிந்து ஜலத்தை இழுத்துக் கொள்கிறது. துணியை வெளியே இழுத்துப் பிழிந்தால் ஜலம் கொடுக்கிறது. கல் மனஸைப் பரோபகாரத்தில் இப்படி லேசாகத் துணி மாதிரி ஆக்கிக் கொண்டால் எப்போதும் நம்மைச் சூழ்ந்திருக்கிற அநுக்ரஹத்தை நன்றாக உறிஞ்சிக் கொள்ளலாம். ஜீவனுக்குச் செய்கிற பெரிய உபகாரம் அவனுக்குக் கருணாமூர்த்தியான ஈசனிடம் பிடிப்பு ஏற்படுத்தித் தருகிற திருப்பணிதான்.

பணி என்றால் ஸர்வீஸ். ஸ்கூல் வைப்பது, ஆஸ்பத்திரி கட்டுவது, ஜல வஸதி பண்ணித் தருவது எல்லாம் ஸர்வீஸ்தான். நாம் ஸோஷல் ஸர்வீஸ்-ஸமூஹப் பணி-என்றாலே இதுகளைத்தான் நினைக்கிறோம். ஆனால் இந்தப் பணியெல்லாம் இறைபணியில் கொண்டு சேர்த்தால்தான் நிறைவுள்ளதாகும் என்று நமக்குப் புரிய வைக்கிறதற்காகத்தான் ஈஸ்வர ஸம்பந்தமான பணிக்கே 'திரு' என்று அடைமொழி கொடுத்து 'திருப்பணி' என்று பேர் வைத்திருக்கிறார்கள். 'திருப்பணி' என்கிற வார்த்தை எல்லா ஸர்வீஸுக்கும் உச்சி அதுதான் என்று அர்த்தம் கொடுக்கிறது.

ஏழை இந்தியாவிலுள்ள இத்தனை பிரம்மாண்டமான கோயில்களைச் சம்பளத்துக்காக ஜனங்கள் கட்டவில்லை. ராஜாக்கள் கோயில் கட்டின தொழிலாளிகளுக்கு நிறையக் கொடுத்தது வாஸ்தவம். ஆனால் இவர்கள் ஸர்வீஸாகத்தான் செய்தார்கள். இவர்களுடைய காலக்ஷேபம் நடக்க வேண்டும் என்று ராஜா தானாகப் பொருள் கொடுத்தான். அந்த நாள்

ஸொஸைட்டியின் ஸெட்-அப், எகானமி எல்லாமே வேறே. ஜனத்தொகை குறைச்சல், சோற்றுக்கும் துணிக்கும், ஜாகைக்கும் கஷ்டமேயில்லை. அத்யாவசியங்கள் தவிர லக்ஷுரிகள், சினிமா, அது இது என்று செலவுமில்லை. இன்றைக்கு மாதிரி ஃபாக்டரிகளும், டாம்களும் கட்டவேண்டிய அவசியம் ராஜாங்கத்துக்கு இல்லை. ஸைன்யத்தை வைத்து ரக்ஷிக்கிற ஒரு செலவு தவிர, மற்றபடி Welfare State என்று இப்போது ஸமூஹ அபிவிருத்திக்குச் செலவழிக்கிற அநேகச் செலவினங்கள் ராஜாவுக்கு இல்லை. அதனால் இன்றைக்கு உள்ள ஃபாக்டரி, டாம் எல்லாவற்றையும் சேர்த்து வைத்துக் கோயில் கோயிலாகக் கட்டினான். புதிதாகக் கட்டுவது, பழசை விஸ்தரிப்பது என்று ஜனங்களுக்கு ஓயாமல் வேலை கொடுத்து, சம்பளமும் கொடுத்து வாழ வைப்பதற்குக் கோயில் திருப்பணிதான் முக்யமாக நடந்து வந்தது. இதனால் வேலை செய்கிற ஜனங்களின் மனஸும் ஈஸ்வர பரமாகப் போனதில் அவர்கள் நல்ல பக்தியோடு, சாந்தர்களாக இருந்து வந்தார்கள். தேசமே க்ஷேமமாக இருந்தது. வெறும் பணியாக இல்லாமல் திருப்பணியாக இருந்ததால், 'ரைட்'கேட்பது, 'ஸ்ட்ரைக்' பண்ணுவது என்பதெல்லாம் இல்லாமல், மனப்பூர்வமாக உழைத்தார்கள். கார்யம் ஒழுங்காக நடந்து, இன்றைக்கும் லோகமே ப்ரமிக்கும் படியாக எங்கே பார்த்தாலும் கோயிலும் கோபுரமுமாக இருக்கிறது! இப்போது இத்தனை ஜனங்கள், என்ஜினீயரிங் முன்னேற்றம் எல்லாம் இருந்தும், அவற்றைப் பழுதுபார்க்கக்கூட நமக்கு சக்தியில்லை! ***"மக்களுக்குச் செய்வதே மஹேசனுக்குச் செய்வது"*** என்று வெறும் வாய்ப் பேச்சாகச் சொல்லிக்கொண்டு, மஹேசனை மறந்து இப்போது கார்யங்களைப் பண்ணும்போது என்ன ஆயிருக்கிறது? தெய்வ ஸம்பந்தமில்லாமல் பணியைக் கத்தரித்து விட்டிருப்பதால், நல்ல குறிக்கோளோடு பண்ணுவதெல்லாமே அனர்த்தங்களைக் கொண்டு வந்து விடுகிறது.

பழைய நாளில் பக்தியால் தேசத்தில் கன்யாகுமாரியிலிருந்து காஷ்மீர் வரை எல்லா ஜனங்களும் ஏகோபித்திருந்ததால், வடக்கே கோயில் கட்டுகிறார்களா, தெற்கே கோயில் கட்டுகிறார்களா என்று சண்டை போடாமல், வடக்கத்திக்காரன் தென்தேசத்துக் கோயில்களுக்கும், தெற்கத்திக்காரன்

வடதேசக் கோயில்களுக்கும் போனான். இப்போதோ ராஜாங்கம் எந்த டாம் கட்டட்டும், எந்த ஃபாக்டரி வைக்கட்டும், உடனே அத்தனை ஸ்டேட்காரர்களும், தங்கள் தங்கள் ஸ்டேட்டில் தான் அதைக் கட்ட வேண்டும் என்று சண்டைக்கு ஆரம்பிக்கிறார்கள்.

எல்லாருக்கும் படிப்பு என்று சொல்லிக் கொடுக்கிறார்கள் நல்ல எண்ணத்தில்தான் செய்கிறார்கள். ஆனால் 'தெய்வ ஸம்பந்தமே இருக்கக்கூடாது; அப்படியிருந்தால் நம் ஸெக்யூலரிஸத்துக்கு (மதச்சார்பின்மைக்கு) களங்கமாய்விடும்'என்று நினைத்து வெறும் அறிவு வ்ருத்தியை மட்டும் படிப்பினால் உண்டாக்கித் தருகிறார்கள். இதனால் படிப்பறிவில்லாவிட்டால் ஸாது ஜனங்களாக இருக்கக் கூடியவர்களுக்கும் ஃபோர்ஜரி மாதிரி அநேக தப்புத் தண்டாக்களையும், புத்திசாலித்தனத்தால் செய்யக்கூடிய அநேக ஒழுங்கீனங்களையும் கற்றுக் கொடுத்ததாகவே ஆகிறது.

எங்கே பார்த்தாலும் ஆஸ்பத்திரி என்று வைத்து அதே ஸமயத்தில் மதாநுஷ்டானத்தாலேயே உண்டாகிற கட்டுப்பாடுகள் இல்லாமல் ஜனங்களை அவிழ்த்து விட்டிருப்பதாலும் அனர்த்தங்கள் உண்டாகின்றன. 'குடிக்கலாம், எதை வேண்டுமானாலும் தின்னலாம். 'அபார்ஷன்' மாதிரி இன்னும் பெரிய தப்புகளும் பண்ணலாம் - இதனாலெல்லாம் கெடுதி வராமல் வைத்யம் பண்ணிக்கொண்டு விடலாம்' என்று ஜனங்களுக்குத் துணிச்சல் கொடுத்துப் போகிறது.

ஸமூஹ நலன் என்று க்ராமம் க்ராமமாக பாங்குகள் வைத்து தாராளமாகக் கடன் தருகிறார்களென்றால், உடனே அதை வாங்குவதற்கு எத்தனை பொய் பித்தலாட்டம் உண்டோ அத்தனையிலும் ஜனங்களை இழுத்து விடுவதாகவும் ஆகிறது. இப்படிப் பலபேர் அப்ளிகேஷன் போடுவதில், சிலருக்குத்தான் ஸாதகமாகிறது என்கிற போது அதிகாரிகள் லஞ்ச ஊழல், பாரபக்ஷம் எல்லாம் சேர்கிறது.

தப்பிப் போனவர்களுக்கு ஸகல வசதிகளுடன் ஸேவாஸதனம் வைக்கிறதென்பதே, மனக்கட்டுப்பாடு போதாதவர்களை இன்னமும் தளர்ந்து கொடுக்கத் துணிச்சல் அடையுமாறு செய்யலாம்.

ஆகையால் தெய்வப் பணியை விட்டுவிட்டு தேசப்பணி, மக்கட்பணி என்று புறப்படுவது தப்பு.

இதிலே நமக்கெல்லாம் வழிகாட்டினவர் அப்பர் ஸ்வாமிகள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அவர் என்ன செய்தார்?' பாடும் பணி'யினால் ஸகல ஜனங்களின் நெஞ்சமும் உருகிப் பரமேஸ்வரனிடம் சேருமாறு பண்ணிவைத்தது அவர் செய்த வாக் கைங்கர்யம். அது தவிர சரீர கைங்கர்யமாக, ஒரு உழவாரப்படையை வைத்துக்கொண்டு கோயில் கோயிலாய்ப் போய் அங்கே ப்ராகாரத்தில் முளைத்திருந்த புல்லைச் செதுக்கிக் கொண்டிருந்திருக்கிறார். உலகத்திலுள்ள ஜீவர்களுக்குச் செய்கிற தொண்டிலேயே, உலக ஜீவர் எல்லோருக்கும் அம்மையப்பனான பரம்பொருளுக்குச் செய்கிற தொண்டையும் சேர்த்து ஜனங்களின் உய்நெறிக்கு உபகாரம் பண்ணியதே அப்பரின் பெருமை.

அப்பர் காட்டிக் கொடுத்தபடி அம்மையப்பரிடம் பக்தி வைத்து, எல்லாரும் அந்த ஒருவனின் குழந்தைகள் என்கிற அன்பில் ஒன்றுபட்டுச் சேர்ந்து ஸேவை செய்கிற போதுதான் த்வேஷம், கட்சிச்சண்டை, ஏமாற்று, வெறும் நடிப்பான 'இன்டக்ரேஷன்' (ஒருமைப்பாடு) இவை இன்றி களங்கமில்லாத பரிசுத்த ஒற்றுமையும், உத்ஸாஹத்தோடு உழைக்கிற மனப்பான்மையும் ஏற்படும். பெரிய பெரிய கார்யங்களையெல்லாம் ஸுலபமாக ஸாதிக்கலாம். அந்தச் சூழ்நிலையிலேயே ஆனந்தத்தின் ஸுகந்தத் தென்றல் வீசும். கெட்டதுகளின் வாடையே அங்கு தலை காட்டாது.

ஆசாரங்களையும், தர்ம சாஸ்த்ரக் கட்டுப்பாடுகளையும் விட்டு விலகி விலகிப் போகிறதுதான் ஸோஷல் ஸர்வீஸ் என்றில்லாமல், அவற்றில் இன்னம் கிட்டே கிட்டே போய் ஒட்டிக்கொள்கிற மாதிரி தெய்வ ஸம்பந்தத்துடன்தான் தேசப்பணி செய்ய வேண்டும்.

தங்களுக்கும் ஸமூஹத்துக்கும் ஒன்று செய்துகொள்வதற்கு முன்னால், பகவானுக்கு எல்லாரும் சேர்ந்து செய்ய வேண்டும். தீபாவளி என்றால் தாங்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வது, புது வஸ்த்ரம் கட்டிக் கொள்வதோடு ஏழை பாழைகளுக்கும் எண்ணெய், சீயக்காய், துணி கொடுக்க வேண்டும். அது மட்டும் போதாது. எல்லாரும் சேர்ந்து முதலில் கோயிலில் உள்ள அறுபத்து மூவர் உள்பட எல்லா மூர்த்திகளுக்கும் தைலம் சாத்தி, புது வஸ்த்ரம் அணிவிப்பதில்தான் கொண்டாட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இப்படியே பொங்கல் என்றால் அவரவர் வீட்டுக்குச் சுண்ணாம்பு அடித்து சுத்தப்படுத்துவதோடு, வசதியில்லாதவர்களுக்கும் இந்த உதவியைப் பண்ணுவதோடு, வசதியுள்ளவர், வசதியில்லாதவர் எல்லாருமே ஒன்று கூடிப் பக்கத்திலுள்ள ஆலயங்களில் களை பிடுங்கி, தேய்த்து மெழுகி அலம்பிவிட்டு, பொக்கை பொறைகளை அடைக்க வேண்டும்.

இப்போது நமக்கு உள்ளே இருக்கிற அழுக்கும் முள்ளுந்தான் கோயிலில் அழுக்காகவும் முள்ளாகவும் ரூபம் எடுத்திருக்கிறது! கோயிலில் செதுக்கி, மெழுகி சுத்தப்படுத்துகிறபோது நம் மனஸின் முள்ளையும் அழுக்கையும் அகற்றித் துப்புரவாக்கிக் கொண்டு விடுவோம். அப்போது நம் மனஸே தங்கமாகிவிடும். அந்தக் கனகஸபையில் அன்பே உருவான சிவம் வந்து குடிகொண்டு நாமே ஆலயமாகி விடுவோம்.

நடமாடும் மனிதருக்குச் செய்வதே படமாடும் பரமனுக்குச் செய்ததாகும் என்று சொல்லும் அதே திருமூலர் முதலில் ஈஸ்வரனுக்கு பத்ர அர்ச்சனையைச் சொல்லிவிட்டு அப்புறம்தான் பசுவுக்குப் புல், பிற்பாடு (இப்போது நான் பிடியரிசித்* திட்டம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேனே அம்மாதிரி) ஏழை ஜனங்களுக்கு ஒரு கவளம் அன்னம் இவற்றைச் சொல்லிவிட்டு முடிவாக, இப்படிக் கையால் பொருளாக உபகாரம் பண்ணாவிட்டாலும், வாயாலாவது ஸகலரிடமும் மதுரமாகப் பேசி உபகாரம் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்.

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் (கு) இன்னுரை தானே.
ஆக ஈஸ்வர ஸேவையில்லாமல் மநுஷ்ய ஸேவை என்பதில்லை.

ஸமூஹ ஸேவையும் தெய்வப்பணியும் கைகோர்த்து நடக்க வேண்டுமென்றுதான் ஸ்ரீமட தொண்டு ஸபை என்பதாக மத ஸம்பந்தமாகத் துண்டுப் பிரசுரம் போடுபவர்களையும் பொதுத்தொண்டு செய்யும் ஸ்ரீமட முத்ராதிகாரிகளோடு சேர்த்து விட்டது.

"பகவான் நம்மைக் கண் திறந்து பார்க்க வேண்டும்" என்று எல்லாரும் குறைபட்டுக் கொள்கிறோம். கருணைக்கடலான ஈஸ்வரன் கண்ணைத் திறந்து பார்த்துக்கொண்டேதான் இருக்கிறான். ஏன் அவன் நாம் இஷ்டப்படுகிற மாதிரி நமக்கு ஸௌபாக்யங்களைத் தரவில்லை என்றால், நாம் கண்ணைத் திறந்து லோகத்தின் கஷ்டங்களைப் பார்த்துஅது நிவ்ருத்தியாவதற்கு நம்மாலான உபகாரத்தைப் பண்ணாமலிருப்பதால்தான் நம் மனஸ் மற்றவர்களிடம் தயையால் நிரம்பினால், உடனே கருணையே உருவமான ஈஸ்வரனும் நமக்குத் தயை புரிவான். ஆனதால், கண்ணைத் திறந்து பார்க்க வேண்டியது நாம்தான்; பகவானல்ல.

கண்ணைத் திறந்து பல தினுஸாகக் கஷ்டப்படுபவர்களையும் பார்த்து நம்மாலானவரையில் அதை நிவ்ருத்தி பண்ண வேண்டும். அது மட்டும் போதாது. அவர்களும் தங்கள் கண்ணைத் திறந்துகொண்டு, இத்தனை கஷ்ட நிவ்ருத்திக்கும் எவன்தான் மூலகாரணமோ, எவனுடைய கருவி மாத்திரமாகவேதான் நாம் தொண்டு செய்வதல்லாமோ - அவனைப் பார்த்து, இந்தக் கஷ்டம் ஸுகம் எல்லாவற்றையும்விடப் பெரிசு அவனை அடைவதுதான் என்று உணரும்படியாகப் பண்ண வேண்டியதே நம்முடைய தலையாய பணி.

நம் மதத்தில் பொதுத்தொண்டு உண்டா என்று கேட்பவர்கள் கேட்டுவிட்டுப் போகட்டும். நான் சொல்கிறேன்: **இப்போது நம் மதத்துக்கே**

தொண்டால்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். ஹிந்துமதம் வேலி இல்லாத தர்காஸ்து நிலம் மாதிரிக் கிடக்கிறது. இந்த நிலைமை மாறி இந்த மதத்தைக் கவனிக்க மநுஷ்யர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும். ***ஸ்வய மரியாதையுடன் நம் மதத்தில் இருக்கலாம் என்று ஸகல வகுப்பினருக்கும் நம்பிக்கையை உண்டுபண்ணுவது எல்லோரும் ஸங்கமாகக் கூடிச் செய்கிற பொதுத்தொண்டு தான்.*** இந்தத் தொண்டுகளை அப்புறம் சொல்கிறேன். இப்படி ஸகல ஹிந்துக்களும் சேர்ந்து கொண்டு, செய்வதே நம் மதத்துக்கு வேலியாகி, இது 'தர்காஸ்து' நிலமில்லை என்று ஆக்கும். 'நம்முடைய சொந்த மதம்' என்ற அபிமானம் எல்லா வகுப்பாருக்கும் உண்டாகி விடுமாதலால் வேறு யார் வேண்டுமானாலும் இதிலிருக்கிறவர்களை ஸ்வாதீனம் பண்ணிக்கொள்ளலாம் என்ற நிலைமை போகும். மதமாற்றம் ஏற்படாமல் ஹிந்துக்களின் நிலைமையை மாற்ற நாம் எதிர் பிரசாரம் பண்ணிச் சண்டை உண்டாக்க வேண்டியதில்லை. நம்முடைய அசட்டையும், கடினமும் போய் நாம் மனமாற்றம் அடைந்து நம் ஜனங்களையெல்லாம் பரோபகாரத்தில் அணைத்துக் கொண்டாலே மதமாற்றம் நின்று போய்விடும். இதுதான் ஹிந்து ஸமூஹத்தை ஹிந்து ஸமூஹமாகவே வைத்துக் காப்பாற்றுவதற்கு சாந்தமான வழி. மதத்துக்காக ulterior motive-ஓடு (உள் நோக்கத்தோடு) நாம் பரோபகாரம் பண்ணாமல் அன்பின் நிறைவுக்காகவே பண்ணி, side by side மதத்தையும் ரக்ஷிக்க வேண்டும். எனக்கு உபசாரம் பண்ணிப் பூர்ணகும்பம் கொடுத்து மாலை போடுவதைவிட இப்படி ஹிந்துக்கள் அனைவரும் தொண்டினால் ஒன்று சேர்ந்து மதத்தை ரக்ஷித்துத் தருவதுதான் எனக்கு நீங்கள் பண்ணுகிற பெரிய உபசாரம், உபகாரம் எல்லாமும்.

---

* "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் "பரோபகாரம்" என்ற உரை

4.21-முத்ராதிகாரித் திட்டம்

ஒருத்தன் ஸரியானபடி ஸநாதன தர்மத்தைப் புரிந்து கொண்டு, அநுஷ்டித்துக் காட்டினால் அவனுடைய ஆசாரம், அநுஷ்டானம், விரதம் ஸம்பாத்யம் முதலான எதுவுமே தன்னலனுக்காக இல்லை. ஆனால் இந்த உயர்ந்த தத்துவம்-வெறும் தத்வமாக புஸ்தகத்திலும் மூளையிலும் மட்டும் இருந்து கொண்டிருக்காமல் வாழ்க்கையிலே ப்ரகாசித்துக் கொண்டிருந்த தர்மம் - எப்படியோ பிற்காலத்தில் வீணாகிவிட்டது. இதை மறுபடி புத்துயிரூட்ட வேண்டும். இந்த உத்தேசத்தோடுதான் 1940லிருந்து 'முத்ராதிகாரிகள்'என்று தஞ்சாவூர் ஜில்லாவில் அநேகமாக எல்லா க்ராமங்களிலும் நம் மடத்திலேயே ஒவ்வொருத்தருக்கு அதிகாரம் தந்து அவர் முயற்சியில் ஜனங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பொதுநலப் பணிகள் செய்ய ஏற்பாடு செய்தோம். அதிலே பூர்த்த தர்மம் என்று மேலே சொன்ன குளம், கிணறு வெட்டுகிற காரியங்களோடு, இந்த தர்மமெல்லாம் பூர்த்தியாகிற பகவத் கைங்கர்யங்களாகிற தேவலாயப் பாதுகாப்பு, ஏகாதசி புராண படனம் முதலியனவும் நன்றாக நடந்து வந்தன. கோயில் கோபுரங்களிலும் மண்டபங்களிலும் முளைத்திருக்கும் மரம், செடிகளைப் பிடுங்குவது, ப்ராகாரத்தில் நெடுஞ்சிமுள் முதலானதுகளை அப்புறப்படுத்துவது முதலான கார்யங்கள் தேவலாயப் பாதுகாப்பாகச் செய்யப்பட்டன.

4.22-கோ ஸம்ரக்ஷணை

ஹிந்துவாகப் பிறந்த ஒவ்வொருவனும் ஒவ்வொரு நாளும் ஒரு பசுக்காவது ஒரு பிடி புல் கொடுக்க வேண்டும்; தோட்டம் உள்ள எல்லோரும் அதில் கொஞ்சமாவது மாட்டுக்கேற்ற அகத்திக்கீரை போடவேண்டும் என்றெல்லாம் ஏற்பாடு செய்து அதன்படியே ரொம்பப் பேர் நடத்தி வந்தார்கள். மாட்டுக்கு ஒரு பிடி என்பதை ***"கோ க்ராஸம்"*** என்று சொல்லியிருக்கிறது. இதிலிருந்துதான் இங்கிலீஷில் புல்லுக்கு "க்ராஸ்" என்று பேர் வந்ததோ என்னவோ? மேய்ச்சல் நிலமெல்லாம் குடியமைப்பாயும், தார் ரோடாயும் மாறி

வருவதால் நம் கொல்லையிலேயே துண்டு இடமிருந்தால் அதில் ஆத்தி, அறுகு வைத்துக் கால்நடைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

இதற்கெல்லாமாவது கொஞ்சம் செலவு, த்யாகம் பண்ண வேண்டியிருக்கிறது. இதுகூட இல்லாமல், நம் அகத்தில் கறிகாய் முதலியவற்றை நறுக்கும் போது தோலை வீணாகத்தானே போடுகிறோம்? அப்படிப்போடாமல், சிலர் வீடுவீடாகப்போய் இந்தத் தோலை எல்லாம் 'கலெக்ட்' பண்ணி மாடுகளுக்குப் போட ஏற்பாடு பண்ணினோம். நான் திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி அநேக இடங்களில் இந்தக் கார்யம் நடந்தது. இப்போதும்கூடப் பல இடங்களில் தொடர்ந்து நடக்கிறது.

உண்டி வாயிலே மெகானிகலாகப் பணத்தைப் போடுவது பெரிசில்லை. அதுவும் இப்போது இருக்கிற inflation -ல் எவரும் ஏதோ கொஞ்சம் உண்டியில் போட்டு விட்டுப் போய்விடலாம். அதுவும் பண்ணவேண்டியது தான். ஆனாலும் இப்படி மெகானிகலாக உண்டி வாயில் போடுவதைவிட, ஒரு செலவும் நமக்கு இல்லாமலே கறிகாய்த் தோல்களை நேரே உயிருள்ள ஒரு பசு வாய்க்குப் போட்டு, அது தின்பதைப் பார்த்தால், இதில் நமக்குக் கிடைக்கிற உள்ள நிறைவே அலாதி என்று தெரியும். ஸேவையிலே இதுதான் முக்யமான அம்சம்;அதில் பணமும் உழைப்பும் பேசுவதைவிட ஜீவனோடு ஜீவன் பேச வேண்டும்.

ஸேவை செய்கிறவர்கள் ஸங்கமாக ஒன்று கூடும்போது இப்படி உயிர்த் தொடர்பு ஏற்படுவது மட்டுமின்றி, ஸேவைக்குப் பாத்திரமாகிறவர்களையும் நேரே தங்களோடு தொடர்பு படுத்திக்கொள்ள வேண்டும். ஒரே ஈஸ்வரன்தானே இத்தனை ஜீவன்களுமாகியிருப்பது? ஜீவலோகத்துக்குச் சொரிகிற அன்பினால், ஸேவையால் அந்த ஈஸ்வரத்வத்தை அநுபவித்து அவனுக்கு வழிபாடாகவே இதைச் செய்வதுதான் ஸேவையின் ஸாரம்.

கறவை நின்ற மாடுகளை அடிமாட்டுக்காக விற்காமல் ஜீவிய காலம்வரை அவற்றைக் காப்பாற்ற வழி செய்யவேண்டியதும் நம் ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை - தாயாருக்குச் செய்யவேண்டிய கடமைக்கு ஸமதையான கடமை. பகவத் ஸ்ருஷ்டியிலேயே தன் கன்றுக்கு வேண்டியதைவிட

உபரியாக மற்றவர்களுக்கென்றும் பாலைச் சுரக்கிற பசு நமக்கெல்லாம் தாயார்தான்.

ஆஃப்கானிஸ்தான் மாதிரியான துருக்க ராஜ்யங்களில் கூடப் பல வருஷங்கள் முன்பே கோஹத்தியை ban செய்திருக்கிறார்கள். நம் தேசத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இதில் வேண்டுமென்றே மத த்வேஷங்களைத் தூண்டி விட்டிருந்தார்கள். எந்த ஸர்க்கார் இருந்தாலும், எந்தச் சட்டம் வந்தாலும், வராவிட்டாலும் பசுக்கள் கசாப்புக் கடைக்குப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் புனிதமான கடமை என்று நாம் இருந்தோமானால் கோமாதாவுக்கு ஹானி இல்லை. இதிலே நாம் குஜராத்தி, மார்வாரிகளைப் பார்த்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். கோபாலக்ருஷ்ணன் வாஸம் பண்ணின பிரதேசமானதால் போலிருக்கிறது இவர்களுக்கு கோ ரக்ஷணத்தில் அலாதிப்பற்று இருக்கிறது!

முன்காலங்களில் ‘ பசு மடம் ‘ என்று வைத்து நம் க்ராமமெல்லாம் போஷிக்கப்பட்ட இந்த தர்மத்தில் பிற்பாடு நாம் ச்ரத்தை இழந்துவிட்டோம். ஆனால் “பிஞ்சரபோல்”, கோசாலா என்று வைத்து இந்த வடக்கத்திக்காரர்கள் எத்தனை வாத்ஸல்யத்தோடு பக்தியோடு பசுக்களைப் பராமரிக்கிறார்கள்?

கோவதை கூடாது என்று சட்டம் பண்ணிவிடலாம். ஆனால் கறவைக்கும் உழவுக்கும் ப்ரயோஜனமில்லாத மாடுகளைப் பராமரிக்க மக்களான நாம் தக்க ஏற்பாடு பண்ணாவிட்டால் அவை வயிறு காய்ந்து குற்றுயிரும் குலை உயிருமாகக் கஷ்டப்பட வேண்டித்தான் வரும். கோ-ரக்ஷணம் என்பது ஜீவகாருண்யத்துக்கு ஜீவகாருண்யம்; அதுவே ஒரு பெரிய லக்ஷ்மி பூஜையும் ஆகும்.

4.23-குளம் வெட்டும் பணி

முதலில் நான் சொன்னமாதிரி, நானே க்ராமம் க்ராமமாகப் போய் இந்தக் காரியங்களை emphasize செய்தபோது, நல்ல response இருந்தது. அதுவும், இவற்றில் குளம் வெட்டுகிற கைங்கர்யத்தைப் பார்க்கும்போது எனக்கே ரொம்ப நிறைவாக இருந்தது. கூலிக்கு வேலையாக இல்லாமல் அன்புப்

பணியாக இது நடக்க வேண்டும் என்றுதான் ஏற்பாடு. ஆனால் ரொம்பவும் ஏழைகளாக இருக்கப்பட்ட குடியான ஜனங்களுக்குச் சாப்பாடு போடுவது என்று வைத்திருந்தோம். இருந்தாலும், அநேக இடங்களில் அந்தப் பரம ஏழைகள்கூடத் தாங்களே சோறு கட்டிக் கொண்டுவந்து உத்ஸாஹத்தோடு குளம் வெட்டியதைப் பார்க்கிறபோது, 'நம் தேச ஏழைகளுக்கு இன்னம் நல்ல பண்புகள் போகவில்லை; நாம்தான் அதை ஸரியாகக் கார்யத்தில் கொண்டு வரவில்லை' என்று தெரிந்தது. ரதோத்ஸவம் மாதிரி, பெரிய பெரிய மிராஸ்தாரிலிருந்து அந்த மிராஸில் கடைசியாக நிற்கிற பண்ணையாள் வரையில், ச்ரௌதிகளின் பத்தினியிலிருந்து புல்லுக் கட்டுக்காரி வரையில் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பூர்த்த தர்மம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. "அப்புறம் நடக்கிற பரோபகாரம் இருக்கட்டும்; இப்போது இப்படி ஸமூஹம் முழுக்க ஐக்யமாகச் சேர்ந்திருக்கிறதே, இதுவே போதும்; என்று இருந்தது. ஒரு தடவை நல்ல பௌர்ணமி ராத்திரி. அந்த நிலா வெளிச்சத்திலே மாயவரத்துக்குக் கிட்டே இப்படித்தான் ஸகல ஜனங்களும் ஒரு மனஸாகச் சேர்ந்து குளம் வெட்டினார்கள். நானே போய்க் கூட இருந்து பார்த்துக் கொண்டேன். வெட்டுவது ஜில்லென்று குளம்; சந்திரிகையும் ஜில்லென்று வர்ஷித்துக் கொண்டிருந்தது; தொண்டு ரூபமாக அத்தனை உள்ளங்களும் ஜில்லென்று அன்பை வர்ஷித்துக் கொண்டிருந்தன. இப்போது நினைத்தாலும் நெஞ்சு குளிர்கிறது. அப்புறம் நான் நூறாயிரம் கார்யத்தை வைத்துக்கொண்டு எங்கெங்கோ சுற்றப்போனதில் அவர்களுக்கு உத்ஸாஹம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிட்டது. இதை விட்டு விட்டுப் போனது என் தப்புத்தான்.

தஞ்சாவூர் ஜில்லாவில் மாத்திரம் இரண்டாயிரம் ஸங்கங்கள் போல் நிறுவி, ஒவ்வொன்றுக்கும் ஒரு முத்திராதிகாரிகளையும் உப முத்திராதிகாரியையும் தொண்டர்களையும் நியமனம் பண்ணியிருந்தோம். தாலுகா கமிட்டி, கோட்டகக் கமிட்டி, க்ராமச் சங்கம் என்று இதை மூன்றாகப் பிரித்திருந்தோம். (நாலு க்ராமம் சேர்ந்து ஒரு கோஷ்டம், அல்லது கோட்டகம் என்று வைத்திருந்தோம்) பட்டணங்களில் தெருவுக்கு ஒரு முத்திராதிகாரிகூடப் போட்டோம். அநேகமாக தஞ்சாவூர் ஜில்லா க்ராமங்களில் எல்லாம்

மடத்துக்கென்றே பட்டயமான்யம் என்று ஒரு துண்டு நிலம் இருக்கும். அவற்றின் வருமானத்தை எல்லாம் முத்திராதிகாரிகளிடமே ஒப்படைத்து இந்த ஜீவாத்ம கைங்கர்ய தர்மங்களைப் பண்ணச் செய்தோம். சுமார் 5000 தொண்டர்கள் சேர்ந்து, ரொம்ப ஈடுபாட்டோடு பணிகள் செய்து வந்தார்கள். ஸூர்யோதயத்திலிருந்து ஸூர்யாஸ்தமனம் வரை, பௌர்ணமியானால் ராத்திரி பூராவும் ஊர்ஜனங்கள் எல்லாரும் ஏக மனஸாக பகவந் நாமாவைச் சொல்லிக் கொண்டு குளம் வெட்டியது இப்போது கூடக் கண் முன்னால் நிற்கிறது.

ஒவ்வொரு க்ராமத்திலும் இருக்கிறவர்கள் ஒன்று சேர்ந்தது மட்டுமில்லை. நாலு நாலு க்ராம ஜனங்களாகச் சேர்ந்து ஒரு வருஷம் ஒரு க்ராமத்தில் குளம் வெட்ட வேண்டும் இருக்கிற குளத்தை தூர் வார வேண்டும்; அடுத்த வருஷம் இவர்கள் அந்த நாலில் இன்னொரு க்ராமத்தில் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்; அதற்கடுத்த வருஷம் மூன்றாவது க்ராமத்தில், அதற்கும் அடுத்த வருஷத்தில் நாலாவது க்ராமத்தில் பண்ண வேண்டும் என்று வைத்ததால் கோட்டக ஜனங்களுக்குள்ளே ஒற்றுமை, ஒத்துழைப்பு உண்டானதோடு, அது தாற்கலிகமாய் இருந்து பிசுபிசுத்து விடாமல், நாலு வருஷமாவது உயிரோடு நீடித்து வந்தது. தஞ்சாவூர் ஜில்லாவில் நாலு ஐந்து மாஸம் ஜலம் இருக்காதாதலால் 'காதம்' என்கிற இந்தக் குளம் வெட்டுகிற பணிக்கு நிறைய அவசியம் உண்டு. சேரியிலும் வெட்ட வேண்டும், இன்னும் ஜனங்களுக்கு என்றே இல்லாமல் ஆடு மாடுகளாக்காகவும் ஊருக்கு வெளியில் மேய்ச்சல் பூமியில் வெட்ட வேண்டும் என்றெல்லாம் ஏற்பாடு பண்ணி அப்படியே நடந்து வந்தது. வெயிலில் கஷ்டப்படுகிற வாயில்லா ஜீவன்களுக்குத் தண்ணீர் கைகங்கர்யம் செய்வது உத்தமமான தர்மம்.

சாஸ்திரத்தில், குளிக்கப் போகிற ஒவ்வொருவனும் குளத்திலிருந்து நாலு கை மண் அள்ளிப்போட்டு விட்டுக் குளிக்க வேண்டும் என்று ஸூக்ஷ்மமாகச் சொல்லியிருக்கிற ஸ்வல்ப தர்மத்தைப் பின்பற்றினால் ஜலக் கஷ்டம் எவ்வளவோ குறையும்.

கோனேரிராஜபுரத்தில் ஒரு ப்ராம்மண குடும்பம். அவர்கள் எங்கே குளம் வெட்டினாலும் அதற்குப் பாதிப் பணம் கொடுப்பார்கள். ஆனால் ஒரு கண்டிஷன் சொல்வார்கள். அதாவது, குளத்துக்கு ஒரு பக்கம் படித்துறை கட்டாமல், நிலத்தையே ஜல மட்டம் வரை சரித்துவிட வேண்டும் என்பார்கள். ஏனென்றால், ஆடு மாடுகளுக்குப் படிகளில் ஸௌகர்யமாக இறங்கிவந்து நின்று ஜலம் குடிக்கத் தெரியாது. எனக்கு ஆசை, ஹரிஜனங்களும் குடியான ஜனங்களும் நம்ம மடத்துப் பிரதிநிதிகளாகக் கோட்டகம் தோறும் கால்நடைகளுக்கென்று குளம் வெட்டவேண்டும் என்று.

பட்டுக்கோட்டை தாலுகா தவிர ஜில்லா முழுக்க இப்படி நிறையச் செய்தோம். பட்டுக்கோட்டையில் ஒவ்வொரு வீடுமே ஒரு காடாக இருக்கும். இடுப்பளவு வெட்டினாலே ஜலமும் வந்தவிடும். ஒரு பண்ணையார் வீடு என்றால் பண்ணையாள் வீடு உள்பட எல்லாம் அந்த வேலிக்குள்ளே இருக்கும். அதனால் அவனவன் பாட்டுக்கு ஜலம் உள்ளேயே கிடைக்கும். இதனால் அங்கே மட்டும் 'காத'த் திருப்பணி செய்யாமல் எல்லோருமாக சேர்ந்து ரோடு போட்டார்கள்.

பொதுவாக, முத்ராதிகாரிகள் திட்டத்தில் மாஸத்தில் இரண்டு ஏகாதசியும் புராண படனம், வருஷத்தில் ஒரு கோட்டகத்தில் ஒரு குளம் வெட்டுவது என்ற இரண்டும் நன்றாக நடைபெற்றன.

பிற்பாடு ஸமூஹத்துக்கு ஒரு நன்மை கிடைப்பது பிற்பாடு இந்த மாதிரி உழைப்பே ஒருத்தனுக்கு சித்தசுத்தி தருவது எல்லாவற்றுக்கும் மேலாக, அப்போதே இம்மாதிரிக் கார்யங்கள் பல ஜனங்களை ஜாதி, 'ஸ்டேடஸ்' சண்டைகளில்லாமல் ஒரு குடும்பமாகச் சேர்த்து வைத்ததைப் பார்த்ததிலிருந்து தனித்தனியாகப் பரோபகாரம் செய்வதைவிடப் பலர் சேர்ந்து ஸங்கமாகச் செய்வது ரொம்ப விசேஷமானது என்று தெரிந்தது. கழகம், கம்யூனிஸம் எல்லாவற்றுக்கும் பெரிய மாற்று மருந்து, கொஞ்சங்கூட அரசியல் வாடையே இல்லாத பொதுநலப் பணிதான் என்றும் தெரிந்தது.

பலர் சேரவேண்டும் என்பதற்காக இதை ஒரு அஸோஸியேஷன் என்று சொல்லி ரிஜிஸ்டர் பண்ணி, சேர்மன், ஸெக்ரடரி, கவர்னிங் பாடி அது இது

என்று சொல்லிக்கொண்டு, 'ஸ்தானங்கள்', அதற்காக சண்டை போட்டி என்று ஆகிவிடக்கூடாது. பரோபகாரத்தின் பெரிய பலனாக அஹம்பாவ நாசமே இதனால் அடிப்பட்டுப் போய்விடும். அதனால் இதிலே 'ஆஃபீஸ்' எதையும் உள்ளே விடக்கூடாது.

4.24-வார வழிபாடு

'வார வழிபாட்டுச் சங்கம்' என்று ஊருக்கு ஊர் இருக்க வேண்டும் என்று நான் ஓயாமல் சொல்லி வருவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். வாரத்தில் ஒருநாள் ஜனங்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கோயிலில் வழிபாடு நடத்த வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். இதர மதஸ்தர்கள் அத்தனைபேரும் இதை யாரும் சொல்லாமலே தாங்களாகச் செய்து வருகிறார்கள். இதன் ப்ரத்யக்ஷ சக்தியால்தான் அவர்களுக்குப் புது ஸ்வதந்திர தேசமே முதற்கொண்டு கிடைக்கிறது! நமக்கோ லோகம் முழுக்க ஏற்கனவே இருந்த கௌரவமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டிருக்கிறது! நம் ஜனங்கள் எல்லாரும் வாரத்தில் ஒரு நாளாவது ஒன்று சேர்ந்து தங்கள் கோணா மாணாவையெல்லாம் விட்டுவிட்டு பகவானிடம் கொஞ்சம் மனஸைக் கரைத்தால்தான் இந்த தேசத்துக்கு ஏதாவது நல்லது பிறக்க முடியும் என்றுதான் 'வார வழிபாட்டுச் சங்கம்' நிறுவச் சொல்லி அநேக இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களே மேலே சொன்ன மற்ற பரோபகார, ஜீவாத்ம கைங்கர்யப் பணிகளையும் எடுத்து நடத்த வேண்டும். தனி ஆர்கனைஸேஷன் எதுவும் வேண்டாம்.

மாயவரத்திலிருக்கிற திருப்பாவை-திருவெம்பாவைக் குழு இம்மாதிரி அநேகப் பணிகளைத் திட்டம் போட்டுச் செய்து வருகிறது. அதன் முக்ய நோக்கம் பாவை மஹாநாடு நடத்துவதும், பாவைப் புஸ்தகங்களைப் பள்ளிக்கூடப் பசங்களுக்கு ஃப்ரீயாக டிஸ்ட்ரிப்யூட் செய்து பரீக்ஷை பண்ணி, ப்ரைஸ் தருவதும்தான். இவற்றோடுகூட (1) ஜெயில் கைதிகளுக்கு பக்தி நூல்கள் கொடுப்பது; அவர்களை பஜனை பண்ண வைப்பது, (2) ஆஸ்பத்திரி நோயாளிகளுக்குப் பிரஸாதமும், ஸ்தோத்ரப் புஸ்தகங்களும் விநியோகிப்பது,

(3) ஸத்ஸங்கம் யார் ஏற்படுத்தித் தெரிவித்தாலும் அவர்களுக்கு மத ஸம்பந்தமான பிரசுரங்கள் அனுப்புவது, (4) அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் பண்ணுவது, (5) வெட்ட வெளியில் கோயிலில்லாமல் இருக்கிற மூர்த்திகளுக்கும், இடிந்து பாழான கோயிலிலுள்ள மூர்த்திகளுக்கும் கொட்டகை போட்டு, அங்கே, பூஜைக்கு ஏற்பாடு பண்ண முடியாவிட்டாலும், ஒரு அகலையாவது ஏற்றி வைக்கப் பண்ணுவது, (6) , கோயில் நந்தவனங்களைப் பராமரிப்பது, (7) பசுக்களுக்கு மேய்ச்சல் திடல் வளர்ப்பது; அதுகள் சொறிந்து கொள்ளக் கல் நாட்டுவது, (8) சுமைதாங்கி நாட்டுவது, (9) வார வழிபாடு என்கிறனே, அதன்படி பிரதிவாரமும் ஒரு கிழமையில் பகவந் நாம பஜனையுடன் உள்ளூரிலோ, வெளியூரிலோ அருகேயுள்ள ஒரு கோயிலுக்குப் போய்ப் பிரதக்ஷிணம் பண்ணி கோபுர வாசலில் கொஞ்சம் கொஞ்சம் நாழி மௌனம், த்யானம், நாம ஸ்மரணம், ஸங்கீர்த்தனம், பிரவசனம் முதலியன பண்ணுவது - என்று பல காரியங்களை செய்கிறார்கள்.

"வாரத்தில் ஒரு நாள் கூட்டு வழிபாடு, வாரத்தில் ஒரு நாள் பொதுப்பணி என்றால் எப்படி முடியும்? ஒரு நாள் தானே 'லீவ்' இருக்கிறது?" என்று கேட்பீர்கள். அந்த ஒரு நாளிலேயேதான் இரண்டையும் சேர்த்துச் செய்யச் சொல்கிறேன். தெய்வப்பணி, ஸமூஹப்பணி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஞாயிற்றுக்கிழமை தோறும் செய்ய வேண்டும்.

முதலில் கோவில் வாசலில் எல்லா ஜனங்களும் சேர்ந்து வழிபட்டு, அத்தனை பேரும் அந்த ஒரே பராசக்தியின் குழந்தைகளாகச் சேர்ந்து பகவந் நாமத்துடனயே கோவிலைப் பிரதக்ஷிணம் பண்ணிக் கொண்டு போய்க் குளம் வெட்டுவதையோ, ரோடு போடுவதையோ, நந்தவனம் வளர்ப்பதையோ செய்ய வேண்டும். வேலையெல்லாம் முடிந்த பின்னும் கோவிலுக்கே திரும்பிவந்து, "உன் க்ருபையால் இன்றைக்கு கொஞ்சம் பாபத்தைக் கழுவிக் கொள்ள முடிந்தது;சரீரம் எடுத்ததற்குப் பயனாக ஓர் உபகாரம் பண்ண முடிந்தது" என்று நமஸ்காரம் செய்ய வேண்டும். கொஞ்சம் பஜனை - ஒரு பத்து நிமிஷம் இருந்தால் கூடப் போதும் - கொஞ்சம் உபந்யாஸம் நடத்தி விட்டு எல்லாரும் கலைய வேண்டும். அறுபத்திமூவர் அல்லது ஆழ்வாராதிகள் அல்லது பக்த விஜயத்தில் வரும் மஹான்கள் இவர்களைப் பற்றிய

உபந்யாஸமாக இருந்தால், நம் மாதிரி மனிதர்களாக இருந்தவர்களே எப்படியெல்லாம் த்யாகத்தாலும், ப்ரேமையாலும் தெய்வமாக உயர்ந்திருக்கிறார்கள் என்று மனஸில் ஆழப் பதியும்.

4.25-செலவு விஷயம்; ஜாக்ரதை தேவை

செலவுக்கு என்ன செய்வதென்றால், பணக்காரனைத் தான் நம்பிக் கொண்டிருப்பது என்றில்லாமல், அவனவனும் ஒரு காலணாவாவது கொடுக்க வேண்டும். பணக்காரனும் சரீரத்தால் உழைக்க வேண்டும்; ஏழையும் திரவியத்தால் துளி உதவி பண்ண வேண்டும். இதுதான் நிஜமான த்யாகம். பணக்காரனை அதிகப் பணம் கேட்கவே கூடாது என்று எனக்கு அபிப்ராயம். காரணம் சொல்கிறேன்.

யோசித்துப் பார்த்தால் பணக்காரன் பாடுதான் ரொம்ப கஷ்டம் என்று தோன்றுகிறது. அந்தஸ்து (status), பேர் இவற்றுக்காக அவன் அநேக கார்யங்களை இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் செய்யவேண்டியதாக இருக்கிறது. இது ஒவ்வொன்றுக்காகவும் தண்டம் அழவேண்டியிருக்கிறது. பெரிய மநுஷன் என்று தெரிய வேண்டுமானால் அதற்கு அநேக 'கிளப்'களில் மெம்பராக வேண்டும். அதற்காக 'ஸப்ஸ்கிருப்ஷன்' செலவுகள். அப்புறம் ஏதாவது இரண்டு ஸ்கூல், காலேஜிலாவது எண்டோமென்ட் வைத்து ப்ரைஸ் கொடுக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கப்புறம் டைட்டில், கிய்ட்டில் வாங்குவதற்காக (நேரே அப்படித் தெரியுமால்) பல தினுஸுகளில் செலவு செய்ய வேண்டும். கார், பங்களா டிரஸ், பொழுதுபோக்குச் செலவுகள் வேறு. இவனுடைய கம்பெனியோ பண்ணையோ நன்றாக நடக்க வேண்டுமே, அதை உத்தேசித்து வெளியில் சொல்லக் கூடியதும் சொல்லக் கூடாததுமாகப் பலவிதங்களில் செலவு செய்ய வேண்டும். இது ஓரளவுக்குக் கடமை மாதிரியே ஆகிவிடுகிறது. இதெல்லாம் போதாது என்று (அரசியல்) கட்சிகள் வேறு டொனேஷனுக்கு வருகின்றன. அதிலும் இவனுக்கு வாஸ்தவத்திலேயே ஒரு கட்சியிடந்தான் அபிமானம், அது இருந்தால்தான் தனக்கு நல்லது என்று தோன்றினால்கூட அதற்கு மட்டும் டொனேஷன்

கொடுப்பதோடு போக மாட்டேன் என்கிறது. இவனுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும், ஒரு ஸமயத்தில் யாரிடம் நிர்வாஹம் இருக்கிறதோ, அவர்கள் இவன் தலையில் கை வைக்காமலிருப்பதற்காக அந்தக் கட்சிக்கும் நிறையக் கொடுத்துத் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது! இன்னும் அகத்தில் கல்யாணம், கார்த்திகை, ஃபீஸ்ட், அது இது என்றும் வாரிவிட வேண்டியிருக்கிறது. வரிகள் வேறு!செலவு செய்வதற்கும், தானம் (gift) பண்ணுவதற்கும் கூட வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பாவம், மனஸார இவன் எந்த நல பணிகளுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறானோ, அதற்குத்தான் ரொம்பக் குறைச்சலாகக் கொடுக்கும்படியாக ஆகிறது. பேர், புகழ், மாதிரியான ஸமாசாரங்கள், "பிஸினஸ் இன்டரஸ்ட்" முதலானதுகள் அத்யாவசியமாகி விடுகின்றன. இப்படி இருக்க வேண்டாமே!' என்று நாம் சொல்லிப் பிரயோஜனமில்லை. நாமே அந்தப் பணக்காரனாக இருந்தாலும் இப்படித்தான் செய்வோம். இம்மாதிரி வேண்டாததற்குச் செலவழித்துவிட்டு, வேண்டியதற்குச் செலவு செய்ய முடியாதபோது, அவனுக்கே guilty -யாகத் தான் இருக்கும். 'இந்த ஸமயத்தில் நாம் வேறு போய் அவனிடம் யாசகம் கேட்டு அவனைக் கஷ்டப்படுத்துவானேன்? தனக்குப் பிடித்த கார்யத்துக்கே மனஸாரக் கொடுக்க முடியாத பரிதாபமான ஸ்திதியில் அவனைக் கொண்டுபோய் நாம் வைப்பானேன்?' என்று எனக்குத் தோன்றுகிறது.

ஸமூஹக் கார்யங்கள் என்றால் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் இந்தக் கார்யங்களுக்கு பேட்ரனாக இருக்கக்கூடிய பணக்காரர்கள் யார் என்று பார்த்தால் ஒவ்வொரு ஊர் அல்லது பேட்டையிலும் ஒரு பத்து, பன்னிரண்டு பேர்தான் இருப்பார்கள். இவர்களிடமே ஒவ்வொரு கார்யத்துக்கும் ரசீதுப் புஸ்தகத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினால் அவர்களுந்தான் என்ன செய்வார்கள்? ஒன்று, வேண்டா வெறுப்பாகக் கொடுப்பார்கள். அல்லது விருப்பம் இருந்தும்கூட நிறையக் கொடுக்க முடியவில்லையே என்று துக்கப்படுவார்கள்.

நமக்கும் யோசனை வருகிறது; அந்தப் பணம் கணக்கில் வந்ததா, வராததா; கணக்கில் வராதது என்றால் அந்த மாதிரிப் பணத்தை தர்மத்துக்குப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாமா என்றெல்லாம் யோசனை வருகிறது.

ஆனதால், பணக்காரர்களை நம்பித்தான் ஸோஷல் ஸர்வீஸ் என்று வைத்துக் கொள்ளவே கூடாது. அவர்களாகவே காதில் விழுந்து கூப்பிட்டுக் கொடுத்தால் தாராளமாகவே வாங்கிக் கொள்ளலாம். நாமாகப் போய் பிடுங்கி எடுக்கக் கூடாது என்று தோன்றுகிறது.

இதில் இன்னொன்றுகூட. சில பணக்காரர்களே அதிகப் பங்கு செலவு ஏற்கிறார்கள் என்றால் அதனாலேயே அவர்களுக்கு ஸங்கத்தில் அதிக 'ரைட்'உண்டாகிவிடும். அவர்களுக்கு மற்றவர்கள் பவ்யப்படும்படியாக ஆகும். எதிலும் அவர்கள் சொல்லுவதுதான் முடிவு என்றாகிவிடும். இது கூடாது.

பொதுவாகவே பணத்தின் 'டச்' (ஸ்பரிசம்) வந்து விட்டால் அதோடு ஒரு காரியத்தில் அநேகக் கெடுதல்களும் வந்துவிடும். பொதுத்தொண்டு செய்யப் புறப்படுகிறவர்கள் பணவிஷயத்தில் ரொம்பவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நல்ல ஆதரவு திரவிய ஸஹாயமாகவும் நம் கார்யத்துக்குக் கிடைத்தால்கூட அதனால் over-enthusiastic ஆகி (அதீத உத்ஸாஹம் அடைந்து) , இப்போது இந்தியா கவர்மென்ட் செய்கிற மாதிரி ambitious planning (அதி ஆசைத் திட்டம்) போட்டுப் நிறையப் பணம் 'கலெக்ட்'பண்ண ஆரம்பிக்கக் கூடாது. இப்படி ஆரம்பித்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. இதனாலே பரோபகாரம் என்கிற அன்பு எண்ணத்தையும், அதில் அங்கமாகச் செய்கிற தேவாலய கைங்கர்யங்களின் பக்தி எண்ணத்தையுங்கூட 'வசூல் எண்ணம்'முழுங்கிவிடும். எப்போது பார்த்தாலும் ரசீது புஸ்தகமும் கையுமாக அலைவதும், `பேப்பர்காரர்களைப் பிடித்து அப்பீல் பண்ணலாமா, அட்வர்டைஸ்மென்ட் பிடித்து ஸோவனீர் போடலாமா?'என்பதே சிந்தையாகத் தவித்துக் கொண்டிருக்கும்படியும் ஆகும். நிறையப் பணம் சேர்ந்து அதைக் கையாள வேண்டியிருக்கும்போது நாமே எப்படி மாறிப் போய்விடுவோமோ என்ற பயம் ஸதாவும் இருக்கணும். அதுவுமில்லாமல், ரொம்பவும் பணம் சேர்ந்தால் ஊரிலிருப்பவர்களுக்கும் அது ஸரியாகப் பிரயோஜனமாகிறதா

என்ற ஸந்தேஹம் எழும்பும். இதோடுகூட, சற்றுமுன் சொன்ன மாதிரி, இஷ்டமில்லாதவனையும் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதும், இப்படி வாங்கிவிட்டதால் அப்புறம் அவனிடம் பவ்யப்பட்டு நிற்பதும் நம் பணியையே அசுத்தம் செய்துவிடும். ஆனதால் எந்த நல்ல காரியமானாலும் 'அதி'யாக அதைக் கொண்டுபோய்விடாமல் அவசியத்தோடு நிறுத்திக்கொண்டு, செட்டும் கட்டும் சிக்கனமுமாகவே அதற்கான வரவு செலவுகளை நிர்வஹிக்க வேண்டும்.

பொதுத் தொண்டுக்கு மூல பலம் பணம் இல்லை, ஐக்யப்பட்ட மனம்தான் என்று புரிந்துகொள்ள வேண்டும். பணம் கொடுத்தவன் என்று எவனையும் பிரகடனப்படுத்தி, அதனால் அவனுடைய புண்யபலன் போய்விடும்படியாகச் செய்து விடக்கூடாது. திருப்பூந்துறை அய்யனார் கோயிலில் குளம் வெட்டினபோது பணம் வசூலித்து, கூலி கொடுத்து, `காமகோடி' பத்திரிகையிலும் நன்கொடைக்காரர்களின் பெயரைப் போட்டு விட்டார்கள். அடுத்த 'இஷ்யூ'விலேயே நான் கொட்டை எழுத்தில், "இனிமேல் இப்படிப் பண பலத்தில் பண்ணாமல், ஆட்களின் அன்பு பலத்திலேயே பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிப் போட்டோம்" என்று நாசூக்காக மன்னிப்பு, பச்சாத்தாபம் தெரிவிக்கிற மாதிரி 'பப்ளிஷ்' பண்ண வைத்தேன்.

4.26-திரவியம், தேஹம் இரண்டாலும்

கால் காசு ஐவேஜியில்லாமல்தான் சிவன் ஸமீபத்தில் இருந்திருக்கிறார். ஆனால் அவர் பெயரிலேயே 'அன்னதான' என்பது ஒட்டிக்கொள்கிற மாதிரி, மஹா க்ஷேத்திரங்களில் நடந்த மஹோத்ஸவங்களிலெல்லாம் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு முட்ட முட்ட விருந்துச் சாப்பாடு போட்டிருக்கிறார். பரம த்யாகியாக இருந்து கொண்டு, கட்டின துண்டோடு ஊர் ஊராகப் போய் இவர் தனிகர்களை, மிராஸ்தார்களை, பண்ணையார்களைப் பார்த்து, "இத்தனை மூட்டை அரிசி அனுப்பு; இத்தனை தூக்கு புளி அனுப்பு" என்று சொன்னால் அதை ஒரு பாக்யமாக, ஆக்ஞையாக நினைத்து அவர்களும் அனுப்பி விடுவார்கள். உத்ஸவத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம்

வயிறார அன்னதானம் பண்ணி விடுவார். ஆனால் அவர் தாம் மாத்திரம் இந்த விருந்துச் சாப்பாட்டைத் தொடவே மாட்டார். ஏதோ கொஞ்சம் பழையதைத்தான் நாலு வாய் உருட்டிப் போட்டுக் கொள்வார். அதனால்தான் அவர் சாமான்களைக் கொடுத்த தனிகர்களுக்கு பவ்யப்படாமல் இருக்க முடிந்தது. அவர்கள் இவரிடம் கை கட்டிக்கொண்டு நின்றார்கள். பரோபகாரம் என்று வரும்போது பணத்தைக் காட்டி ஒரு ஸுபீரியாரிடி ஏற்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ரொம்பவும் அவச்யம் என்பதற்காகச் சொன்னேன்.

பணக்காரர்கள் பரம த்யாகிகளாக, trustees (தர்மகர்த்தாக்கள்) மாதிரி, தங்கள் பணத்தை ஸமூஹக் காரியங்களுக்காகத்தான் ப்ரயோஜனப்படுத்த வேண்டும் என்பதே நம் தர்மம். மநு, திருவள்ளுவர் நாளிலிருந்து காந்திவரை இப்படித்தான் சொல்லி வந்திருக்கிறார்கள். இது வாஸ்தவத்தில் நடந்தால் கம்யூனிஸம், ரெவல்யூஷன் எதுவுமே இல்லாமல் லோகமெல்லாம் ஸந்தோஷமாக சாந்தமாக இருக்கும். இதெல்லாம் எனக்குத் தெரியாமல் போகவில்லை. ஆனாலும் அவர்கள் தாங்களாக தர்ம சிந்தையை வளர்த்துக்கொண்டு, பிரியப்பட்டு உபகாரம் செய்யத்தான் நாம் தூண்டுதலாகப் பிரசாரம் செய்ய வேண்டுமே தவிர அவர்களைப் போய் நிர்ப்பந்தப்படுத்த வேண்டாம். என்று தோன்றியதால் சொன்னேன். பாதி ஸீரியஸாகவும் பாதி விளையாட்டாகவும் சொன்னேன்.

இன்னொன்றுகூட நான் விளையாட்டாகச் சொல்வதுண்டு. பொதுக் கார்யம் செய்கிறவர்கள் இப்போது முதலில் இன்னின்னார் நிறைய உதவக்கூடும் என்று 'லிஸ்ட்' போட்டுக்கொண்டு அந்த வரிசைப்படி கலெக்ஷனுக்குப் போகிறார்கள் அல்லவா? இதில் அநேகமாக ஏமாற்றங்கள்தான் உண்டாகின்றன. நாம் ரொம்பவும் தாரளாமாகக் கொடுப்பான் என்று நினைக்கிறவனுக்கு ஏதாவது ச்ரமமிருக்கிறது. அல்லது மனஸில்லை. கையை விரித்துவிடுகிறான். அல்லது மூக்கால் அழுதுகொண்டு சுஷ்கமாகக் கொடுக்கிறான். உடனே நமக்குப் பணியிலேயே உத்ஸாஹம் குறைந்துவிடுகிறது. அந்த ஆசாமியைத் தூற்ற ஆரம்பிக்கிறோம். இதற்குப் பதிலாக நான் என்ன சொல்கிறேன் என்றால், யாரார் நன்கொடை தர

மாட்டார்கள் என்று தோன்றுகிறதோ அவர்களை ஒரு லிஸ்ட் போட்டுக் கொள்ளுங்கள், முதலில் இப்படிப்பட்டவர்களைப் போய்ப் பாருங்கள். அவர்கள் கையை விரித்து விட்டால் அதற்காக நமக்கு மனஸ் தளரப் போவதில்லை. ஏனென்றால் இது நாமே எதிர்பார்த்தது தானே? மாறாக அவர்கள் ஏதோ கொடுத்தாலும் கொடுக்கலாம். சில சமயம் அள்ளியும் கொடுக்கலாம். இப்படிக் கொடுக்க நேரிட்டால் நமக்கு உத்ஸாஹம் கரைகடந்துவிடும்! பணியில் இன்னும் தீவிரமாக இறங்குவோம். இப்படி என் வார்த்தைப்படி, கொடுக்காமல் இருக்கக்கூடியவர்களின் லிஸ்டைப் போட்டுக்கொண்டு முதலில் அவர்களிடம் வசூலுக்குப் போய், அப்புறம் கொடுக்கக் கூடியவர்களைப் பார்த்தவர்கள், பிற்பாடு என்னிடம் வந்து 'ஸைகலாஜிக'லாக இதில் தங்களுக்கு ரொம்பவும் த்ருப்தியும், உத்ஸாஹமும் உண்டானதாகச் சொல்லியிருக்கிறார்கள். யாசகக் கலையில் இப்படிப் பல 'ட்ரிக்கு'கள் இருக்கின்றன!

நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஏழையோ, பாழையோ, ஸமூஹத்தில் உள்ள அத்தனை பேரும் ஒரு காலணா அரையணாவாவது போட்டு எல்லோருமாகச் சேர்ந்தே பொதுக் காரியங்களுக்கான செலவுகளை ஏற்க வேண்டும். பணக்காரன் பணம் மட்டும் கொடுத்துவிட்டு, சரீரத்தால் உழைக்காமலிருந்தான் என்று இருக்கக்கூடாது; ஏழை சரீரத்தால் மட்டும் உழைத்து விட்டுப் பணம் கொடுக்காமலிருந்தான் என்றும் இருக்கக் கூடாது. பணக்காரன் ரூபாய் தருவதும், ஏழை சரீர கைங்கர்யம் செய்வதும் பெரிய த்யாகமில்லை. பணக்காரன் ஏழைகளோடு வந்து நின்றுகொண்டு மண்வெட்டி எடுத்து வெட்ட வேண்டும்; ஏழை தன் கூழுக்கு ஒரு மிளகாய் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாக காலணா டொனேஷன் கொடுக்க வேண்டும். அதுதான் பெரிசு. ஸோஷல் ஸர்வீஸ் பண்ணும்போதே பண்ணுகிறவர்கள் மனஸில் உயர்ந்து வளர வேண்டுமானால் செலவு, உழைப்பு இரண்டிலுமே ஒவ்வொருத்தனுக்கும் பங்கு இருக்க வேண்டும். ச்ரமதானத்துக்கு பலஹீனர்கள் மட்டும் எக்ஸெப்ஷன் (விதிவிலக்கு) .

எனக்கு தெரிந்த ஒரு ப்ராம்மணர். இரண்டே இரண்டு தென்ன மரம் உள்ள பூமிதான் அவருக்கு ஆரம்பத்தில் இருந்தது. அதில் தானே மண்வெட்டி பிடித்து வேலை பண்ணினார். சாஸ்தரப் பிரகாரம் பண்ண வேண்டியது

எதையும் இதற்காக விட்டுவிடவில்லை. காலையில் எழுந்து அக்னி ஹோத்ரம், பூஜை எல்லாம் செய்வார். அப்புறம் மண்வெட்டியும் கையுமாகப் போய் வேலை ஆரம்பித்து விடுவார். அந்த வேலை முடிந்த அப்புறம் மாத்யான்ஹிக ஸ்நானம் செய்து, பாக்கி கர்மாநுஷ்டானங்களும் பண்ணிவிட்டுச் சாப்பிடுவார். இப்படி தன் கையாலேயே உழைத்து இரட்டைத் தென்ன மர பூமியைத் தென்னந் தோப்பாகவே மாற்றிவிட்டார் பசங்களுக்கு இப்படி நல்ல பூ ஸ்திதி தேடி வைத்தார். நல்ல விருத்தாப்யம் வந்த பிற்பாடும், எண்பது எண்பத்தைந்து வயஸு வரைக்கும்கூடத் தோப்புக்குத் தினமும் போய்த் தன் கையால் வெட்டி கொத்தி வேலை செய்வதை அவர் நிறுத்தவில்லை. இப்போது திரவிய ஸௌகர்யம் ஏற்பட்டு, இவர் உழைத்துத்தான் ஆக வேண்டும் என்று இல்லாவிட்டாலுங்கூட, ”இந்தக் கார்யம்தானே நமக்கு இத்தனை அபிவ்ருத்தியைத் தந்தது? இதை விடப்படாது” என்று சரீர உழைப்பில் பக்தி விச்வாஸம் வைத்து சாகிறவரை பண்ணி வந்தார்.

அவர் சொந்த நிலத்தில் வேலை செய்து அடைந்த ஸந்தோஷத்தைவிட ஜாஸ்தியாகவே பொதுத்தொண்டுகளில் சரீரத்தை சிரமப்படுத்தி வேலை பண்ணுவதில் நிறைவு கிடைக்கும். பண்ணிப் பார்த்தால் தெரியும்.

கொஞ்ச நேரமாவது குளம் வெட்டுவது, ஆலயத்தில் நந்தவனம் வைப்பது என்கிற மாதிரி ஏதோ ஒன்றில் தேஹத்தை ஈடுபடுத்த வேண்டும். கொஞ்சம் காசாவது இம்மாதிரி கார்யங்களுக்குச் செலவழிக்க வேண்டும். ஏழை வித்யார்த்திக்கு ஒரு பலப்பம் வாங்கிக் கொடுக்கலாம்; நாலு பிச்சைகாரர்களுக்குக் கூழ் வார்க்கலாம்; மோர்த் தண்ணியாவது நம் செலவில் கொடுக்கலாம்.

எந்த ஆஃபீஸானாலும் ஃபாக்டரியானாலும் வாரத்தில் ஒருநாள் லீவ் இருக்கிறதல்லவா? பள்ளிக்கூடம், கோர்ட் முதலியவற்றில் வாரத்துக்கு இரண்டு நாள் லீவ்கூட இருக்கிறது. இந்த லீவ் நாட்களெல்லாம் பொதுத் தொண்டுக்கு என்றே பகவான் கொடுத்திருப்பது என்று நினைத்து, கூட்டாகச்

சேர்ந்து ஸேவை செய்யவேண்டும். மனஸ் மட்டும் இருந்துவிட்டால், செய்வதற்கு எத்தனையோ பணிகள் இருக்கின்றன.

4.27-ஜாதி அம்சமில்லாத ஸேவை தேவை

நான் சொன்ன அநேக பரோபகாரப் பணிகளுக்குப் பணம் வேண்டும், உழைப்பு வேண்டும். அதோடு மத ஸம்பந்தமான விஷயம் தெரிந்தவர்கள் வேண்டும். அவர்கள் தங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். பஜனை பண்ணத் தெரிந்தவர்கள் மற்றவர்களையும் கூட்டி, பகவந்நாமாவைப் பாடப் பண்ண வேண்டும்.

இப்போது ஊருக்கு ஊர், பேட்டைக்குப் பேட்டை பஜனை கோஷ்டி இருக்கிறது. இந்த கோஷ்டிக்காரர்களே வார வழிபாட்டையும் மற்ற பரோபகார கார்யங்களையும் எடுத்த நடத்த வேண்டும். ச்ரத்தையாக உழைக்க கூடியவர்கள், பணவிஷயத்தில் நாணயமாக இருக்கக் கூடியவர்கள், 'இவர்கள் சுத்தமானவர்கள்' என்று ஸமூஹத்துக்கு நம்பகமாக இருக்கிறவர்கள் ஒரு பத்து பேர் அங்கங்கே சேர்ந்து விட்டால் போதும். ஊர் உலகத்தில் ஒரு குறைவில்லாமல் பொதுநலக் கார்யங்கள் ஜாம் ஜாம் என்று நடந்துவிடும்.

பணியில் சேர்கிறவர்கள், பணியால் பயனடைகிறவர்கள் (beneficiaries) இரண்டிலும் 'ஜாதி' என்ற அம்சமே இருக்கக் கூடாது. பணக்காரன்-ஏழை, படித்தவன்-படிக்காதவன் எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்கிற முறையில் இது ஒன்றிலாவது நேராகவோ, மறைமுகவோ 'கம்யூனல் ரெப்ரஸென்டேஷன்' (ஜாதிவாரிப் பிரதிநிதித்வம்) இல்லாமல் கார்யம் நடக்க வேண்டும்.

ஜாதிகளையெல்லாம் ஒன்றாக்க வேண்டும் என்று ஆரம்பித்தால்தான் சண்டை ஜாஸ்தியாகிறது! ஆரியன்-திராவிடன் பேதமில்லை என்று சொல்லி ஸௌஜன்யத்தை உண்டாக்க வேண்டும் என்று நல்லெண்ணத்தோடு ஆரம்பித்தால்கூட, உடனே இதற்கு ஹிஸ்டாரிகலாக (சரித்திர பூர்வமாக) , எத்னாலாஜிகலாக (இன-இயல்-ரீதியில்) ஆக்ஷேபணைகள் வந்து ஒரே வாதச்

சண்டையாகிறது!ஆனதால் வர்தத்தால் ஒற்றுமையை ஸ்தாபிக்க யத்தனம் செய்யமால், ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறோம் என்றுகூட இல்லாமல், இப்படிப் பல பொதுக் கார்யங்களை எடுத்துப் போட்டுக் கொண்டு எல்லாரும் சேர்ந்து அவற்றைச் செய்தாலே தன்னால் ஒற்றுமையும் அன்பும் ஸௌஜன்யமும் உண்டாகிவிடும்.

4.28-ஜீவனோபாயத்தொழிலை தர்ம உபாயமாக்குக!

ஸங்கமாகச் செய்வதோடு தனித்தனியாக அவரவரால் முடிந்த உபகாரங்களைச் செய்ய வேண்டும். ஸர்க்கார் உத்யோகம், கம்பெனி உத்யோகம் என்றிராமல் ஸ்வதந்திரமாக அநேகம் பேர் எதை வருத்தியாக (ஜீவனோபாயத் தொழிலாக) வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அதையே ஸம்பாத்யமில்லாமல், கொஞ்சம் இலவசமாகவும் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. முடிகிற தொழில்களில் உத்யோகஸ்தர்களும்கூட ப்ஃரீ ஸர்வீஸ் பண்ண வேண்டும்.

யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம்

என்று ஆசார்யாள் ('பஜகோவிந்த'த்தில்) சொல்லியிருக்கிறார். அதாவது, 'தனக்கென்று ஏற்பட்ட தொழிலால் என்ன ஸம்பாதிக்கிறாயோ, அதனால் (உடம்பை வளர்த்துக் கொள்வது மட்டுமின்றி, தானதர்மங்கள் பண்ணி) உள்ளத்தையும் உயர்த்திக்கொள்'என்கிறார்.

இது ஒரு ஐடியல் இது அநுஷ்டிக்கப்பட வேண்டியதே. அவரவர் தொழிலே இதில் ஆத்மாபிவ்ருத்திக்குப் பிரயோஜனமாகிறது. ஆனால் இப்போது காலத்தின் கோளாற்றில், அநேகத் தொழில்களிலேயே தவிர்க்க முடியாமல் பாபமும் தோஷமும் வந்து சேருகிறதே! 'ஸோஷல் லைஃபி'ன் எல்லா அம்சங்களிலும் கலிதோஷம் 'கரப்ஷ'னாக (லஞ்ச ஊழலாக) வந்து புகுந்து கொண்டு இப்படி ஆகியிருக்கிறதே! இப்படியாக, ஸம்பாதித்த திரவியத்திலேயே தோஷமும் கொஞ்சமாவது ஒட்டிக் கொண்டிருக்கிறபோது, இந்த திரவியத்தால் தான தர்மம் செய்துவிட்டால் மட்டும் போதுமா? அதுவே

tainted money-யாகவும் (களங்கமுற்ற பணமாகவும்) கொஞ்சமாவது இருக்கிறதே! ஆசார்யாள் அருள் மனஸோடு, `உனக்கான தொழிலைப் பண்ணுவதில் ஸம்பாதி; அதிலே தப்பு இல்லை; ஆனால் ஸம்பாதியத்தை ஆத்ம ச்ரேயஸுக்குப் பிரயோஜனமாக்கிக் கொள்'என்றபோது, இப்படி அதிலேயே ஒரு கரப்ஷன் அம்சம் வந்து சேரும் என்று நினைத்திருக்கமாட்டார். இந்த தோஷத்துக்கு எனக்கு ஒரு பரிஹாரந்தான் தோன்றுகிறது. அதாவது அவரவர் தொழிலுக்குரிய ஸம்பாத்யத்தைப் பெறுவதில் தப்பில்லை என்று ஆசார்யாள் சொன்னாலும், இப்போதைய கரப்ஷன் ஸெட்-அப்பில் அவரவரும் கொஞ்சமாவது ஸம்பாத்யமே இல்லாமல், தகுந்த பாத்திரத்துக்காக ஃப்ரீ ஸர்வீஸ் பண்ணுவதுதான் பரிஹாரம் என்று நினைக்கிறேன். தொழிலால் ஸம்பாதித்து அப்புறம் அந்த ஸம்பாத்யத்தால் தானதர்மம் பண்ணுவதோடுகூட, தொழிலையே ஸம்பாத்யமில்லாமலும் கொஞ்சம் இலவசமாகச் செய்ய வேண்டும் என்கிறேன். ஒரு தொழிலில் ஏற்படுகிற கரப்ஷன் களங்கத்துக்குப் பிராயச்சித்தமாக அந்தத் தொழிலையே தான் கொஞ்சம் தியாகமாக, பரோபகாரமகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். கரப்ஷன் ஸம்பந்தமேயில்லாமல் சுத்தமாகத் தொழில் செய்கிறவர்களும் அதை ஓரளவாவது திரவிய லாப அம்சமே கலக்காமல் உபகாரமாகப் பண்ணினால் அத்தனைக்கத்தனை புண்ணியந்தான்.

நீ ஒரு டாக்டரா? நீ ஃபீஸ் வாங்கிக்கொண்டு வைத்யம் பண்ணுவதும் பரோபகாரம்தான். ஆனால் இதில் உனக்கே ஸ்வயோபகாரமான ஆத்மசுத்தி கிடைக்காது. அதுமட்டுமில்லை தவிர்க்க முடியாமல் சில பேர் 'ஸிக் லீவ்' கேட்கிறபோது, நீ பொய் ஸர்டிஃபிகேட் தரும்படி ஆகியிருக்கலாம். இப்படியே பொய்யாக 'மெடிகல் ஃபிட்னெஸ் ஸர்டிஃபிகேட்'டும் சில பேருக்குக் கொடுத்திருப்பாய். இதனாலெல்லாம் ஆத்மா சுத்தி பெறாதது மட்டுமில்லாமல் அதில் புது அழுக்கும் படிந்திருக்கும். த்யாக ஸேவைதான் இந்த அழுக்கை அலம்பிட முடியும். ஆகையால் தினமும் ஒரு ஏழைக்காவது இனாமாக வைத்யம் பண்ணு. உன் ஜன்மாவில் ஒருவனுக்காவது, வீட்டில்

கற்றுக்கொடுக்கக் கூடிய அளவில் நீ பழகிய வைத்ய முறையைக் கற்றுக் கொடு. அவன் அதை முடிந்த வரையில் ப்ரயோஜனப்படுத்திக் கொள்ளட்டும்.

நீ யாரப்பா? வக்கீலா? ஸரி. மாஸத்துக்கு ஒரு கேஸாவது தர்ம நியாயமுள்ளதாகப் பார்த்து, தகுந்த பாத்திரத்துக்காக ஃப்ரீயாக நடத்து. அதே மாதிரி ஒரு வியாஜ்யமேனும் கோர்ட்டுக்கு வெளியிலேயே ராஜியாகும் படிப் பண்ணு. வக்கீல் தொழிலில் ஏற்படுகிற தப்புக்களால் உனக்குப் பாபமுண்டாகாமல் தப்பிக்க இப்படிப் பரோபகாரம் பண்ணு. பாபம் போவது மட்டுமின்றி, இந்தமாதிரிச் சில வருஷம் நியமத்துடன் செய்து வந்தாயானால், உனக்கு பப்ளிக்கில் நல்ல பெயர் ஏற்படும். அந்த நல்ல பெயரினாலும் அநேக பொதுநலக் காரியங்களுக்கு உதவி பண்ணிப் புண்யம் ஸம்பாதிக்கலாம்.

நீ ஒரு ஸங்கீத வித்வான் என்றால் தர்மக் கச்சேரி பண்ணி ஒரு பணிக்குப் பணம் வசூலாக உதவலாம். எழுத்தாளனானால் ஸமய ஸ்தாபனங்களுக்கு ஸத் விஷயங்கள் கொஞ்சம் இலவசமாக எழுதிக் கொடுக்கலாம். புஸ்தக பப்ளிஷர் என்றால் ஏழை மாணவர்களுக்குப் புஸ்தகங்கள் இலவசமாகத் தரலாம்;அல்லது உத்தமமான க்ரதங்கள் ஒன்றிரண்டையாவது (ஃப்ரீயாக இல்லாவிட்டாலும்) அடக்க விலைக்கு விற்கலாம். ஸத் விஷயமாக துண்டுப் பிரசுரங்கள் இனாமாகவே அச்சிட்டு விநியோகிக்கலாம். இப்படி எந்தத் தொழிலானாலும் அதை வ்ருத்தி (vritti)க்காக இல்லாமல் ஆத்ம அபிவ்ருத்தி (vriddhi)க்காகவும் ஓரளவு ப்ரயோஜனப்படுத்த வேண்டும்.

”நான் ரொம்பவும் ஸாதாரணப்பட்ட டைப்பிஸ்ட் ஆச்சே!” என்கிறாயா? பரவாயில்லை. உன்னாலும் தொழில் ரீதியில் மற்றவர்களை விடவும்கூட அதிகமாகவே பரோபகாரம் பண்ண முடியும். உத்யோகமில்லாமல் எத்தனை ஏழைப் பசங்கள் திண்டாடுகிறதுகள்`? அவர்களில் ஆறு மாஸத்துக்கு ஒரு பையன் வீதம் ஓரளவு ‘ஒர்கிங் நாலெட்ஜ்’ பெறுகிற மாதிரி டைப் அடிக்க ட்ரெயின் பண்ணு. இந்த உதவியை இனாமகப் பண்ணு. இதனால் அவர்களுக்கு ஆயுஸ்காலம் பூராவுக்கும் ஜீவனோபாயம் கிடைக்க வழி ஏற்படும். அவர்களுடைய நன்றியும் வாழ்த்தும் உன்னை இம்மையிலும் மறுமையிலும் ரக்ஷிக்கும்.

இப்படி அவரவரும் ஏதாவது ஒரு தினுஸில் தனித்த முறையில் தங்கள் தொழிலைக்கொண்டு உபகாரம் பண்ண முடியும். கார்யத்தால், திரவியத்தால் ஒன்றுமே பண்ண முடியாவிட்டாலும், குறைந்த பக்ஷம் திருமூலர் சொன்னாற்போல், "யாவர்க்கும் இன்னுரை" என்றபடி ப்ரியமாகப் பேசிக் கஷ்டத்தில் ஆறுதல் தருகிற உதவியையாவது பண்ணுங்கள்.

4.29-ரிடையர் ஆனவர்களுக்கு

"நாங்கள் 'ரிடையர்' ஆன கிழங்களாச்சே!தொழிலை விட்டு விட்டவர்களாச்சே! எங்களால் என்ன உதவி பண்ண முடியும்?" என்கிறீர்களா? உங்களால் முடியாதா? உங்களால்தான் ஜாஸ்தி முடியும் என்று உங்களைத்தான் இத்தனை நாழி எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நீங்கள் உங்களைப் பட்டுப் போன மரம் என்று நினைக்க வேண்டாம். மனஸ் வைத்தால் நீங்கள் தான் இந்த தேசத்தை தேவலோகமாக்கக் கூடிய கல்பக வ்ருக்ஷங்கள் என்று நான் நினைக்கிறேன். தெய்வ பலத்தை தனக்காக இல்லாமல், உலகத்துக்காகச் செய்தால் கிழத்தனத்தின் பலஹீனமும் ஓய்ச்சலும் இல்லாமல் யுவர்களைவிட உத்ஸாஹமாகப் பண்ணலாம். கிழவன் நானே சொல்கிறேன்.

மற்றவர்கள் ஆ∴பீஸ் காரியம் போக மிஞ்சிய கொஞ்சம் போதில்தான் பொதுத்தொண்டு பண்ண முடியுமென்றால் ரிடையரான நீங்களோ புல் டைமும் ஸோஷல் ஸர்வீஸ் பண்ணுகிற பாக்யம் பெற்றிருக்கிறீர்கள். ஆ∴பீஸுக்குப் போய்வந்த காலத்தில் உங்களுக்குக் குடும்ப பொறுப்பும் அதிகம் இருந்தது. இப்போது அதுகளைக் கூடியவரையில் குறைத்துக் கொள்ள வேண்டும். அநேகமாக ரிடையர் ஆகிற வயஸில் ஒருத்தனுக்கு நேர் பொறுப்பு உள்ள பிள்ளைகளின் படிப்பு, பெண்ணின் விவாஹம் முதலான கார்யங்கள் முடிந்திருக்கும்.அதற்கப்புறமும் பேரன் படிப்பு, பேத்தி கல்யாணம் என்றெல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டேயிருந்தால் அதற்கு முடிவே இருக்காது. ரிடையரானவர்களும் குடும்ப விசாரம் என்று அழுது கொண்டிருந்தால், மற்றவர்களும் இதையே நினைத்துக் கொண்டு ப்ரலாபிக்க வேண்டியதுதான். ஓரளவு வயஸான பிற்பாடாவது விவேக

வைராக்யாதிகளைப் பழக வேண்டாமா? கொஞ்சமாவது வானப்ரஸ்தாச்ரமிகளைப் போல, வீட்டுப் பொறுப்புக்களைஅடுத்த தலைமுறைக்கு விட்டு விட்டுத் தங்கள் தங்கள் ஆத்மாவை கவனித்துக் கொள்ள வோண்டும். உத்யோக காலம் முடிந்த பின் சொந்த பிஸினஸ் பண்ணலாமா, ஃபாக்டரி வைக்கலாமா, ஃபார்ம் வைக்கலாமா, எக்ஸ்டென்ஷனுக்கு 'ட்ரை' பண்ணலாமா என்று தவித்துக் கொண்டிருக்காமல், தன்னைக் கடைத்தேற்றிக் கொள்வதற்கான வழிகளைத் தேட வேண்டும். ஸ்வயோபகாரமில்லாமல் பரோபகாரமில்லை என்றேனே! அதனால், இதற்கு முன்னால் தெரிந்து கொண்டு, அவற்றின்படி இதுவரை பண்ணாத அநுஷ்டானங்களை இப்போதாவது பண்ண ஆரம்பிக்க வேண்டும்.

இதெல்லாம் பண்ணினாலும் உச்சிப்பொழுதுக்கு அப்புறம் நிறைய அவகாசம் இருக்கும். அதில் பரோபகாரங்கள் பண்ண வேண்டும்.

இருக்கிற ஓய்வை நன்றாகப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு ஸத் விஷயங்களைத் தாங்கள் படித்தும் கேட்டும் தெரிந்து கொள்வதோடு மற்றவர்களுக்கும் அவற்றை எடுத்துச் சொல்வது பெரிய உபகாரம்.

அது தவிர நீங்கள் எந்தத் தொழில் செய்தீர்களோ, அதை நாலு ஏழை இளைஞருக்கு ஃப்ரீயாகச் சொல்லிக் கொடுத்து அந்த உத்யோகத்துக்கான பரீக்ஷைகளுக்கு அவர்கள் போகிறதற்கு உதவி செய்யுங்கள். கொஞ்சம் வசதியாகப் பென்ஷன் வாங்குகிறவர்களாயிருந்தால் இப்படி வித்யாதானம் செய்வது மாத்திரமில்லாமல் அவர்களில் ஓரிரண்டு பேருக்காவது அன்னதானமும் சேர்த்துப் பண்ணுங்கள். சொந்தக் குடும்பத்துக்கு சொத்துச் சேர்த்து வைத்தால் மட்டும் போதாது. வெளி மநுஷ்யாள் இரண்டு பேர் வயிறும் குளிரப் பண்ணுங்கள். இப்படி ஆதரவில்லாதவர்களுக்கு ஸமூஹத்திலேயே திருட்டு, புரட்டு எவ்வளவோ குறையும். இல்லாமையால்தான் (வசதியிருக்கிறவர்களுக்கு மனமில்லாமையாலுந்தான்!) அநேகர் ஏமாற்றுக்காரர்களாகவும் திருடர்களாகவும் ஆகிறார்கள்.

4.30-ஆசாரத்தைக் காக்க உதவி

நான் சொல்கிறது எல்லோருக்கும்தான் என்றாலும் ப்ராம்மணர்களில் வசதியுள்ள பென்ஷனர்களுக்கு இதைக் குறிப்பாகச் சொல்கிறேன். மற்ற ஸமூஹங்களில் நிராதரவான இளைஞர்களை ஆதரிக்க அந்தந்த ஸமூஹத்தில் வசதியுள்ளவர்கள் நிரம்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். ப்ராமணர்களுக்குத்தான் அந்த 'ஸ்பிரிட்' இல்லை. காலேஜ் அட்மிஷன், உத்யோகம் பெறுவது எல்லாவற்றிலுமே கம்யூனல் ஜீ.ஓ. வந்த நாளாக ப்ராம்மணப் பசங்கள் அதிகக் கஷ்ட தசையில் இருக்கிற இப்போதும் அந்த ஸமூஹத்தில் ஸௌகர்யமுள்ளவர்கள் இதை கவனிக்காமலிருப்பது நியாயமில்லை.

ஒரு காலத்தில் ப்ராம்மணப் பசங்களை காலேஜ் அட்மிஷன், அப்பாயின்ட்மென்ட் எல்லாவற்றிலும் ஸர்க்கார் கழித்துக் கட்டுவதைப் பார்த்து நான் ஸந்தோஷப்பட்டதுகூட உண்டு. ஆமாம், ஸந்தோஷந்தான் பட்டேன்! ஏனென்றால், "இவன் தனக்கான வேத வித்யையையும், எளிய வாழ்க்கையையும் விட்டுவிட்டுப் பணமே குறியாக துராசாரத்தில் இறங்கியிருப்பதற்கு இந்த இங்கிலீஷ் படிப்பும், உத்யோகமும்தானே காரணம்? இவனாக இதுகளை விடாவிட்டாலும், மற்றவர்களும் ஸர்க்காரும் சேர்ந்து இவனுக்கு இதுகள் கிடையாது என்று விரட்டி அடிப்பதால், இப்போதாவது வேறு வழியில்லை என்று அத்யயனத்துக்குத் திரும்பி, உள்ளதே போதும் என்று த்ருப்தனாக ப்ராம்மண லக்ஷணப்படி க்ராமத்தோடு இருந்துகொண்டு ஸிம்பிகளாக வாழ ஆரம்பிப்பானல்லவா?" என்று மனப்பால் குடித்துத்தான் ஸந்தோஷப்பட்டேன்.

ஆனால் நடந்தது என்ன என்றால், இவனுக்கு மேல் படிப்பில்லை, அழுக்குப்படாத உத்யோகமில்லை என்றதும், இவன் தன் ப்ராசீன ஜீவித முறைக்குத் திரும்பாமல், இன்னம் படுமோசமாகத் துராசாரத்திலேயே இறங்க ஆரம்பித்து விட்டான். ஸினிமாவில் சேர்வது, மிலிடரியில் சேர்ந்து மது மாம்ஸாதிகளைச் சாப்பிடுவது, ஹோட்டலில் சேர்ந்து கொஞ்சம்கூட ஆஹார

சுத்தமில்லாமல் தின்பது என்றெல்லாம் ஆரம்பித்து விட்டான். இதைப் பார்த்த பின்தான் எனக்கு இதைவிட இவனை வேறு விதத்தில் இங்கிலீஷ் படிப்பும் லௌகிகமான தொழிலும் பெறும்படிப் பண்ணிவிட்டு, **அதோடு கூடத்தான் முடிந்த மட்டும் ப்ராம்மண** தர்மங்களை அநுஷ்டிக்கச் செய்ய வேண்டும் என்று தோன்றியிருக்கிறது. இதில்தான் பென்ஷனர்களின் ஸஹாயத்தைக் கேட்கிறேன். முதலில் ப்ராம்மணன் தலையில் கைவைத்தது பரவிப் பரவி இப்போது 'ஃபார்வர்ட் கம்யூனிடீஸ்' என்று பேர் வைக்கப்பட்ட செட்டிமார், முதலியார், பிள்ளைமார் என்று ஒவ்வொரு ஸமூஹமாகக் காலேஜ் அட்மிஷன், ஸர்க்கார் உத்யோகம் எல்லாவற்றிலும் பின்னால் தள்ளப்படுவதில் முடிந்திருக்கிறபடியால், இவர்கள் எல்லாரும் எதிர்காலத் தலைமுறைகள் விஷயத்தில் விழிப்போடு ஏற்பாடு செய்ய வேண்டும். பின்தங்கிய வகுப்பினர் என்பவர்களுக்கும் நம்மாலான ஸகல உபகாரமும் செய்யத்தான் வேண்டும். பரோபகாரத்தில் மேல் ஜாதி, கீழ் ஜாதி என்கிற எண்ணமே தப்பு என்பதுதான் நம் motto-வாக [லக்ஷிய வாசகமாக] இருக்க வேண்டுமாயினும், இந்த படிப்பு, உத்யோகம் ஆகிய விஷயங்களில், சில வகுப்பாருக்கு உரியதையும் புறக்கணித்து ஸர்க்காரே பிற்பட்ட வகுப்பாருக்கு அதிகப்படி சலுகை காட்டுவதால்தான், இந்த விஷயத்தில் மட்டும் நான் கொஞ்சம் கம்யூனல்-பேஸிஸில் (வகுப்பு அடிப்படையில்) பேசியாக வேண்டியிருக்கிறது. Depressed என்று சொல்கிறார்களே, அந்த தாழ்த்தப்பட்டவர்களை நியாயமாக முன்னேற்றுவதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் இப்படிச் சொல்லிக்கொண்டு செய்கிற காரியங்கள் மற்றவர்களை depress பண்ணித் தாழ்த்தி வைப்பதற்காக ஆகிறபோது இவர்கள் தாங்களாகவே மேலே எழும்புவதற்கு முயற்சி பண்ண வேண்டும் என்கிறேன். இந்த இனத்தில் மட்டும் தங்கள் வகுப்புக்குத் தனியாக உபகாரம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்கிறேன்.

அதாவது ஸர்க்காரும் கைவிட்டு, சொந்த ஸமூஹத்திலும் போதிய ஆதரவு இதுவரை பெறாத ப்ராம்மணப் பசங்களுக்குக் குறிப்பாகவும், மற்ற முன்னேறிய வகுப்பினர் எல்லோருக்குமே பொதுவாகவும் இந்த ஸமூஹங்களைச் சேர்ந்த பென்ஷனர்கள் ஒன்று சேர்ந்து ட்யூடோரியல்

காலேஜ் வைத்துப் பலவிதமான தொழில்களும் சொல்லிக்கொடுக்க வேண்டும். பென்ஷனர்கள் தங்களுக்குச் சம்பளம் வாங்கிக் கொள்ளாமல் இவற்றில் ஆசிரியர்களாகச் சொல்லிக் கொடுத்தால் விசேஷம். ஆனாலும், ஒரு காலேஜ் என்று நடத்தினால் இதர செலவுகள், maintenance charges ஆகுமல்லவா? அதனால், அவசியச் செலவுக்கு மட்டும் கட்டுப்படி ஆகிறமாதிரி குறைச்சல் ஃபீஸ் வாங்கலாம். இதன்மூலம் முன்னேறியதாகச் சொல்லப்படும் ஜாதிக்காரப் பிள்ளைகள், இவ்வளவு தூரம் தங்களை பஹிஷ்கரிக்காத ஸென்ட்ரல் ஸர்வீஸ், பாங்கு, கம்பெனிகள் ஆகியவற்றில் வேலைக்குப் போவதற்கோ, ஸ்வதந்திரமாக ஒரு தொழில் செய்து பிழைத்துப் போகவோ வழிசெய்ததாகும். ட்யூடோரியல் காலேஜில் படித்தால் அப்புறம் ப்ரைவேட்டாக அநேக யூனிவர்ஸிடிகளில் பரிக்ஷை எழுதி டிகிரி வாங்கலாமல்லவா? ரெகுலர் காலேஜ்களில்தான் ஸர்க்கார் ஸீட் ரிஸர்வேஷன் வைத்து இவர்களை விரட்டுகிறதே!அதனால்தான் இந்த யோசனை.

பல துறைகளில் அநுபவஸ்தர்களான பெரியவர்கள் ரிடையராகி ஓய்வில் இருக்கிறீர்களல்லவா? நீங்கள் ஒன்று சேர்ந்து கணிதம், ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, மற்றும் புது ஸயன்ஸ்கள், என்ஜினீயரிங், அக்கவுன்டன்ஸி. இன்னம் இப்போது ஏற்பட்டிருக்கிற அநேக டெக்னலாஜிகல் ஸப்ஜெக்ட்கள், வீவிங் (நெசவு) போன்றவை கூடத்தான், ஸங்கீத வாத்யங்கள் வாசிப்பதைக் கூடச் சேர்த்துக் கொள்ளலாம்-இந்த எல்லாவற்றிலும் பயிற்சி தருவதற்குப் பிரைவேட்டாக ட்யூட்டோரியல் காலேஜ் ஆரம்பியுங்கள்* போதகர், போஷகர் இரண்டாகவும் இவற்றில் பணிசெய்து இரட்டிப்புப் புண்யம் பெறுங்கள். கற்ற வித்தையை, உங்களுக்கு இத்தனை நாள் ஸம்பாத்யமும் இப்போது பென்ஷனும் வாங்கிக் கொடுக்கிற வித்தையை, தினம் ஒருமணி இரண்டுமணி பிறருக்கு உபகாரமாகச் சொல்லித் தரக்கூடாதா? இதனால் ஒரு பெரிய ஸமூஹ ப்ரச்னை தீரவும் உதவி செய்ததாகிறது.

வெறுமனே தொழிலுக்கான படிப்பாக மாத்திரமில்லாமல், இந்த ட்யூடோரியல் காலேஜ்களில் அவரவர் குலாசார முறைப்படிக் கொஞ்சம் ஸமயக் கல்வியும், அநுஷ்டான போதனையுங்கூடக் கொடுக்கலாம்.

இந்த ஸமயக் கல்வி போதனையில் பிற்பட்ட வகுப்புக்காரர்களுக்கும் முன்னேறிய வகுப்புக்காரர்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும். ஸர்க்காரின் ஏற்பாட்டில் அவர்களுக்கு தெய்வபக்தி உண்டாக்க எதுவுமில்லை. அது மட்டுமில்லாமல் அவர்களுக்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொள்கிற நாஸ்திகக் கட்சிகளின் வலையிலும் அவர்கள் விழப் பார்க்கிறார்கள். இதே ஸமயத்தில் அவர்களைப் படிப்பு, பதவி, இவற்றிலும் தூக்கிவிட்டு, உரிமை, ஸ்ட்ரைக், ஒத்துழையாமை என்றெல்லாம் வேறு சொல்லிக் கொடுப்பதால், தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு வந்தருக்கிற ஸ்வபாவமான பக்தியும், அடக்கப் பண்பும் மறைந்துபோய் அவர்கள் தறிகெட்டுப் போகும்படியான நிலை உண்டாகியிருக்கிறது. ஆனபடியால் அவர்களையும் தெய்வத்தின் பக்கம் திருப்ப வேண்டிய கடமை ஜன ஸமுதாயம் முழுவதற்குமே இருக்கிறது. அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இங்கே என்ன சொன்னேனென்றால், ஸம வாய்ப்பு இழந்து விட்டவர்களுக்காக வைக்கிற ட்யூட்டோரியல் காலேஜ்களில் அவரவர் குலாசாரப்படி ஸமயக்கல்வி, அநுஷ்டானங்களையும் போதிக்கலாம் என்பது. இப்போது லோகம் இருக்கிற இருப்பில், இதை 'கம்பல்ஸரி'யாகப் பண்ணினால், இம்மாதிரி காலேஜில் சேர வருகிறவர்களே குறைந்து போய்விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது! ஆனபடியால் இதை 'ஆப்ஷன'லாக வைக்கலாம். கட்டாயப் பாடமாக இல்லாததாலேயே 'இதில் என்னதான் இருக்கு? பார்ப்போமே!' என்று பலருக்கு ஆர்வம் ஏற்பட்டு இஷ்ட பாடமாக எடுத்துக் கொள்ளலாம்.

காளைப் பருவத்தில் ஆஹார சுத்தி இல்லாமல் கண்டபடிச் சாப்பிட்டு மாணவர்கள் மனஸ் விகாரப்படுவதைத் தடுப்பதாக, இந்தக் காலேஜ்களில் சாஸ்திர ஸம்ப்ரதாயப்படியான ஹாஸ்டல்களும் வைக்கலாம்.

ஆஹாரசுத்தி ஆத்ம சுத்திக்கே அஸ்திவாரம் மாதிரி. அது இப்போது ரொம்பவும் சீர்கெட்டுப் போயிருக்கிறது. கண்டதைத் தின்பதற்குக் கண்ட இடமெல்லாம் ஹோட்டல் மயமாயிருக்கிறது. முன்னே ஹோட்டல் என்பதே என்னவென்று நம் ஸமூஹத்துக்குத் தெரியாது. ஹோட்டல் வைத்துக் காசு

வாங்கிக் கொண்டு அன்ன விக்ரயம செய்வது (உணவை விற்பது) நம் சாஸ்திரப்படி பாபமேயாகும். முன்னெல்லாம் ஊருக்கு ஊர் இதனால்தான் யாத்ரிகர்களுக்காக சத்திரம் என்று தர்மசாலை இருந்தது. அதிலே சாஸ்திரப்படியான ஆஹாரமே, நாள் கிழமைகளிலும் வ்ரத உபவாஸ தினங்களிலும் எப்படிப் போடணுமோ அப்படியே போட்டு வந்தார்கள். யாத்ரிகர்கள் இம்மாதிரி போஜனம் பண்ணுவதில் அவர்களுக்கு "ஏற்பது இகழ்ச்சி" என்பது இல்லாமலே, சத்திரம் நடத்துகிறவர்களுக்கு மட்டும் ஈகையின் புண்யம் கிடைத்து வந்தது!

மற்றவர்களை விடவும், வித்யாப்யாஸம் செய்கிற இளம் பருவத்திலிப்பவர்களை வயோ சேஷ்டையால் புத்தி விகாரப்படாமல் ரக்ஷிக்க வேண்டியது ரொம்பவும் அவசியமானதால் அவர்களுக்காக சாஸ்த்ரீயமான ஹாஸ்டல்கள் வைத்து சுத்தமான ஆஹாரம் போடுவதை முக்யமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் கடைசி ஸ்திதியில் இருக்கும் பென்ஷனர்களான நீங்களே யோசித்துப் பாருங்கள். எத்தனையோ ஆயிரம் வருஷமாக நம் பெரியோர்கள் ரக்ஷித்துக்கொடுத்த ஆசார, ஆஹார சுத்திகள் இன்னவென்றே தெரியாமல் இளந்ததலைமுறையினரால் தாரை வார்க்கப்பட விடலாமா? விடக்கூடாது என்றால், யாரைக் கொண்டு இதைப் பண்ணுவது? ராஜாதான் முன்காலங்களில் தர்ம ரக்ஷணத்தை கவனித்துக் கொண்டது. ஆனால் இப்போதுள்ள ஸர்க்காரைக் கொண்டு ஆசார அபிவிருத்திக்கு 'ரூல்' போடப் பண்ண நினைப்பதே பரிஹாஸம் அல்லவா? நேராக இந்த ஆசாரங்களைத் தாங்களே நாசம் பண்ணுவதோ அல்லது பிறர் நாசம் பண்ணும் போதாவது 'ஆஹா' என்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதோதான் நம் தேசத்தில் 'முற்போக்குக்காரர்'களின் கொள்கையாக இருக்கிறது. அவர்களை மீறி நம்முடைய 'ஸெக்யூலர்'ராஜாங்கமும் போகாது. ஆகையால் நம்முடைய புராதன தர்மங்களைக் காப்பாற்ற நாமேதான் ஆனதைச் செய்ய வேண்டும் எனவே உங்களில் கற்றறிந்து, அநேக இடங்களில் நல்ல பதவிகள் வகித்து ஓரளவு செல்வமும் செல்வாக்கும் பெற்று தற்போது நிறைய ஸாவகாசம்

பெற்றுள்ள பென்ஷர்களான பெரியோர்களே இந்த விஷயத்தில் தங்களாலியன்ற பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

---

* கம்ப்யூட்டர் சகாப்தம் பிறப்பதற்கு முன் கூறியது. எனவே அந்தப் பயிற்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4.31-பள்ளிப்படிப்போடு பண்டைய சாஸ்த்ரங்கள்

இலவசமாக வேத சாஸ்த்ரம் கற்றுக் கொடுக்கிறோம் என்று ஆரம்பித்தால்கூட அதற்கு ரெஸ்பான்ஸ் (வரவேற்பு) இல்லை. வேத சாஸ்த்ரம் மட்டுமில்லை திருக்குறள், தேவார-திவ்ய ப்ரபந்தம், அல்லது நம் தேசத்தில் நீண்டகாலமாக இருந்து இப்போது நசித்துவரும் ஸித்தர் சாஸ்த்ரம் முதலானவற்றில்கூட இலவச வகுப்பு நடத்தச் சில பெரியோர்கள் எடுத்த நல்ல முயற்சிகள் பலன் தரவில்லை. இந்தப் படிப்பிலே போனால், உத்யோகத்துக்கு உதவி செய்கிற ஸ்கூல் படிப்புக்கு பாதகமாகிறது என்று ஜனங்கள் இவற்றை ஆதரிக்காமலே விட்டுவிடுகிறார்கள். அதனால் எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் ஸ்கூல் பாடத்தை விடாமல், அதோடேயே வேதாப்யாஸத்துக்கு உரியவர்களுக்கு வேதத்தையும், மற்றவர்களுக்கு இதர புராதன சாஸ்த்ரங்கள், கலைகள் இவற்றையும் சேர்த்துக் கற்றுக் கொடுப்பதற்காக ப்ரைவேட் ஸ்கூல்கள் ஆரம்பிக்கலாம். தினமும் அரை மணி, ஒரு மணி ஸ்கூல் டயத்தை நீட்டி, லீவ் நாட்களையும் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் இந்த மாதிரி ரெகுலர் ஸிலபஸோடு கூடவே சாஸ்த்ரங்கள், தேசியக் கலைகள் இவற்றையும் சொல்லிக் கொடுக்க முடியும். இப்படிப் பசங்களைத் தயார் பண்ணிக் கால விரயமில்லாமலே 'மெட்ரிக்'பரீக்ஷைக்கு அனுப்புவதாக ஏற்பாடு செய்தால் அநேகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்படிப்பட்ட ஸ்கூல்களில் சேர்க்க முன் வருவார்கள்.

பென்ஷனர்கள் மாத்திரந்தான் இதைச் செய்ய வேண்டுமென்பதில்லை. எல்லாரும் சேர்ந்து செய்யலாம். மனப்பூர்வமாக ஈடுபட்டு, "பிற்பாடு டிக்ரி,

டிப்ளமோவுக்கு ஹானியில்லாமலே, நம்முடைய புராதன சாஸ்த்ரங்கள், பக்தி நூல்கள், நீதி நூல்கள், கலைகள் ஆகியவை அழிந்து போகாமல் சொல்லிக் கொடுக்கிறோம்" என்று பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னால், அவர்கள் நிச்சயம் தங்கள் பிள்ளைகளை இப்பள்ளிக்கூடங்களில் சேர்ப்பார்கள். நம்முடைய தொன்று தொட்ட மஹத்தான நாகரிகத்துக்கு வாரிசாக வருங்காலப் பிரஜைகளை உருவாக்குகிற பேருபகாரம் இது.

இந்த நாகரிகத்துக்கு அடிவேரில் ஜலம் விடுகிற மாதிரியான தர்மம் எதுவென்றால் வேதம் படிக்க விருப்பமுள்ளவர்களுக்கும், கற்றுக்கொடுக்க முன் வருகிறவர்களுக்கும் கஷ்டமில்லாமல் ஜீவனம் நடத்துவதற்கான ஸௌகர்யங்களைப் பண்ணித் தருவதாகும்.

எவரும் தன்னாலான எந்த தர்மத்தையும் செய்ய வேண்டும் என்பது பொது விதியானாலும், குறிப்பாக வித்யாதானம் ப்ராம்மணருக்கும், கோஸம்ரக்ஷணை வைச்யர்களுக்கும் அவசியக் கடமையே ஆகிறது.

வித்யாதானம் என்கிறபோது, நம்முடைய தேச வாழ்வுக்கு உயிர்நிலையாக உள்ள வேத வித்யைக்கும், நம்முடைய மதத்துக்கு முக்ய பாஷையாக இருக்கிற ஸம்ஸ்கிருதப் படிப்புக்கும் முதல் இடம் கொடுத்து உதவி புரிய வேண்டும். எனக்கு ஒன்று தோன்றுகிறது. கன்யாதானத்தையும், வித்யாதானத்தையும் விசேஷமாகச் சொல்கிறார்கள் அல்லவா?கன்யாதான விஷயம் அப்புறம் சொல்கிறேன். இந்த இரண்டுக்காகவும் நம் மடத்தில் அபிமானமுள்ளவர்கள் இன்ஷ¨ரன்ஸ் பாலிஸிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்காகக் 'கன்யாதான ட்ரஸ்ட்', 'வேத ரக்ஷண நீதி ட்ரஸ்ட்'என்று இரண்டு ட்ரஸ்ட் ஆரம்பிக்கிறோம். இவற்றின் ட்ரஸ்டிகளை நியமிக்க இந்த மடத்தின் ஸ்வாமிகளுக்கு அதிகாரமிருக்கும். மடத்துக்கு ட்ரஸ்டிகள் கணக்குக் காட்டுவார்கள். மற்றபடி ட்ரஸ்ட்கள் ஸ்வேயேச்சையாகவே நடக்கும். இந்த ட்ரஸ்ட்களை nominee -களாக (தொகை பெறுபவர்களாக)ப் போட்டு மடத்து பக்தர்கள் இன்ஷூரன்ஸ் பாலிஸிகள் எடுத்துக் கொள்ளலாம். முழுத் தொகையும் ட்ரஸ்டைச் சேரும்படியாகப் போட வேண்டும் என்பதில்லை. பாதித்தொகை

இன்ஷூரன்ஸ் எடுத்துக் கொண்டவரின் குடும்பத்துக்குச் சேரும்படியாகவும், மீதிப் பாதி ட்ரஸ்டைச் சேரும்படியாகவும் பண்ணினால் போதும். குழந்தைகள் இருக்கிறவர்கள் தங்கள் பெண் குழந்தையின் பேரில் கன்யாதான பாலிஸியும் ஆண் குழந்தையின் பேரில் வேதவித்யாதான பாலிஸியும் எடுத்துக் கொள்ளலாம். ட்ரஸ்டின் மூலம் வேறு யாரோ ஒரு கன்யாக் குழந்தைக்குக் கல்யாணமும், வேறு யாரோ ஒரு பிள்ளைக்கு வேதஞானமும் ஏற்படுகிற புண்யம் பாலிஸி ஹோல்டர்களான குழந்தைகளைச் சேரும். இதனால் நிஜத்தில் ப்ரீமியம் கட்டுகிற தகப்பனார் தான் அந்தப் பெண்குழந்தையை ரிதுமதியாவதற்கு முன்பே கன்யா தானம் பண்ணிக் கொடுக்காத தோஷத்துக்கும், அந்தப் பிள்ளையை அத்யயனத்துக்கு விடாத தோஷத்துக்கும் கொஞ்சம் பரிஹாரம் செய்து கொண்டதாகவும் ஆகும். தங்கள் குழந்தைகளுக்கு சாஸ்திரோக்தமாகச் செய்ய வேண்டியதைச் செய்தவர்களுக்கும் இந்தக் கன்யா, வித்யா தானங்களைச் செய்தால் இரட்டிப்புப் புண்யம்!

4.32-'டிக்ரி' இல்லாமலே மதிப்புப் பெற

ரிடையரானவர்கள் தங்களை மட்கப் பண்ணிக் கொண்டு உட்காராமல், கிளுகிளுவென்று கல்பக வ்ருக்ஷங்களாகி, ஸமூஹத்துக்கு நிழலும் பழமும் கொடுத்து ஆதரிக்க முடியும், ஆதரிக்க வேண்டும் என்று சொல்ல வந்தேன். ஒரு ரிடையர்ட் என்ஜீனியர் இரண்டு பையன்களுக்கு ஓவர்ஸீயர் படிப்புக்கு ஸமமாக வீட்டிலேயே (முடிந்தால் அன்னமும் போட்டு) படிக்கக் கற்றுக் கொடுத்தால், அவர்கள் டிக்ரி வாங்க வேண்டுமென்பதுகூட இல்லை; இன்ன பெரியவரிடம் படித்தார்கள் என்பதாலேயே அவருடைய ஸர்டிஃபிகேட்டைப் பார்த்தே, ப்ரைவேட் கான்ட்ராக்டர்கள் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள். என்ஜீனியரீங் காலேஜில் தனக்கு இடம் கிடைக்கவில்லையே என்று forward community மாணவன் அழ இடமிருக்காது. இப்போது ஸங்கீதத்தில் ஒருத்தனின் டிக்ரியையோ டிப்ளோமாவையோ பார்க்காமல், இன்னார் சிஷ்யன் என்றுதானே கச்சேரிக்கு ஸபாக்காரர்கள் கூப்பிடுகிறார்கள்? அப்படியே forward community-ஐச் சேர்ந்த வாலிபர்கள் மற்றத் துறைகளிலும்

காலேஜ் படிப்பை எதிர்பார்க்காமல் இன்னாருடைய சிக்ஷையில் கற்றுக்கொண்டான் என்பதாலேயே ப்ரைவேட் ஃபாக்டரிகள், கம்பெனிகள் ஆகியவற்றில் உத்யோகம் பெறக்கூடிய மஹா உபகாரம் நன்மதிப்பு பெற்ற அநுபவஸ்தர்களான பென்ஷனர்கள் ஒன்றுகூடி வித்யாதானம் செய்வதால் ஏற்படும். இப்போது ஸீ.ஏ., அந்த 'டெக்', இந்த 'டெக்' என்று எத்தனை படிப்புகள் தனியார் ஸ்தாபனங்களால் நடத்தப்பட்ட போதிலும் யூனிவர்ஸிடி டிக்ரிகளைவிட உசத்தியாக ஸர்க்கார் உள்பட எல்லாராலும் நினைக்கப்படுகின்றன? அம்மாதிரி இதுவும் வ்ருத்தியாக முடியும்.

4.33-பெண்களுக்கான பணிகள்

பெண்கள் பகலில் ஒழிவு இருக்கிறபோது சேர்ந்து நல்ல மத நூல்களைப் படித்து மற்ற ஸ்திரீகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் நமக்கு இருக்கிற ஸ்தோத்ரங்கள் யதேஷ்டம். பெண்கள் ஒன்று சேர்ந்து இவற்றைப் பாடம் பண்ணலாம். மடம், கோயில் மாதிரியானவற்றுக்கு சுத்தமான மஞ்சள் குங்குமம் பண்ணிக் கொடுக்கலாம்.

[குங்குமம் எப்படிச் செய்வது என்பதற்கு ஒருமுறை ஸ்ரீ பெரியவர்களே கொடுத்த குறிப்பு: முப்பது தோலா கெட்டியான உருண்டை மஞ்சள் எடுத்துச் சிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்க. இதற்கு ஸம எடை எலுமிச்சம் பழச்சாறு விதையில்லாமல் வடிகட்டி எடுத்துக் கொள்க. (மஞ்சள் முதலியன கடையில் தோலாக் கணக்கில் எடைபோட்டு வாங்குவதுபோல், எலுமிச்சஞ் சாற்றுக்கு வீட்டில் எடை பார்ப்பது முடியாது. அதனால் முகத்தல் அளவையில் வீட்டில் இருக்கக்கூடிய அவுன்ஸ் க்ளாஸில் அளந்து போடுகிற விதத்தில் சொன்னால், பதினாறு அவுன்ஸ் எலுமிச்சம் பழச்சாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.) இந்தப் பழச்சாற்றில் நன்றாகப் பொடித்த வெங்காரமும் படிக்காரமும் ஒவ்வொன்றும் மூன்று தோலா போட்டுக் கரைக்கவும். மஞ்சள் துண்டங்களை இதில் போட்டுக் கலக்கிக் கொள்ளவும். வாயகன்ற, ஈயம் பூசிய பாத்திரத்தில் வைப்பது உத்தமம். இதை ஒருநாளில் மூன்று தடவை நன்றாகக் கிளறவும். பழச்சாறு மஞ்சளில் சேர்ந்து சுண்டியபிறகு நிழலிலேயே

நன்றாகக் காய வைக்கவும். அப்புறம் உரலில் இடித்து வஸ்திராயணம் செய்யவும். (மெல்லிய துணியில் பொடியை வடிகட்டுவதே வஸ்திராயணம் அல்லது வஸ்திரகாயம்.) இப்படி விழுகிற சுத்தமான மஞ்சட் குங்குமத்தை வாயகன்ற ஜாடியில் பத்திரப்படுத்தவும். குங்குமத்தில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி (tea-spoon) சுத்த பசு நெய்விட்டு, கட்டி தட்டாமல், நன்றாகக் கலக்கச் செய்து வைத்தால் காப்பும் (preservative) ஆகும்; புனிதமும் ஆகும். சுத்தமான பசுநெய் கிடைத்தால் மட்டுமே சேர்க்கவும். சரக்கைப்பற்றிக் கொஞ்சம் ஸந்தேஹமிருந்தால்கூட நெய்யே சேர்க்காவிட்டாலும் பாதகமில்லை.]

ஸ்வாமி தீபத்துக்கு அகத்திலேயே சுத்தமாக வெண்ணெய் காய்ச்சி, பசும் நெய் எடுத்துத் தரலாம். முனைமுறியாத அக்ஷதைகள் பொறுக்கி அனுப்பி வைக்கலாம். "அக்ஷதை" என்றாலே "முறியாதது" என்று அர்த்தம். ஆனால் இப்போது மந்த்ராக்ஷதை என்று போடுவதில் பாதி நொய் மாதிரி தூளாகத்தானே இருக்கிறது? மந்த்ராக்ஷதை முழுசாக இருந்தால்தான் அதனால் மங்களம் கிடைக்கும். எங்கிருந்தோ. 'டின்'னில் அடைத்து வருகிற நெய்யில் ஏதாவது கொழுப்புக் கலந்திருந்தால், அதை ஸ்வாமி தீபத்துக்குப் போடும் போது உத்தேசித்த க்ஷேமம் உண்டாகாமலே போய்விடும். நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: முன்பெல்லாம் யாராவது ஒரு ஹோமம், யஜ்ஞம் என்று செய்தால் விரோதிகள் அதை நிஷ்பலனாக்குவதற்கு ஒரு தந்திரம் பண்ணுவார்களாம். அதாவது ஹோமம் பண்ணுகிறவனிடம் ரொம்பவும் ஸ்நேஹம் வந்துவிட்டது போல் நடிப்பார்களாம். 'ஹோமத்துக்கு நாங்கள் நெய் கைங்கர்யம் செய்கிறோம்' என்று சொல்லிக்கொண்டு நெய்யில் கொஞ்சம் பன்றிக் கொழுப்பைக் கலந்து கொடுத்துவிடுவார்களாம். அவ்வளவுதான்! இந்த மாதிரி அசுத்த நெய்யினால் ஹோமம் பண்ணினால் பண்ணுகிறவர்களுக்கு நல்ல பலன் கிடைக்காமல் போய்விடும் என்பதோடு, விபரீத பலன் வேறு உண்டாகும். ஹோமம் அல்லது ஸ்வாமி தீபத்துக்கான நெய், மந்த்ராக்ஷதை, குங்குமம் முதலியவை சுத்தமாக இருக்கவேண்டும். இவற்றில் கடைச் சரக்குகளை நம்புவதைவிடப் பெண்கள் சேர்ந்து கைங்கர்யமாகச் செய்தால் ச்லாக்யமாக இருக்கும்.

மற்ற ஸோஷல் ஸர்வீஸ்களைவிட தெய்வ ஸம்பந்தமான, மத ஸம்பந்தமான இப்படிப்பட்ட பணிகளைப் பெண்கள் முக்யமாகச் செய்யலாம்.

பட்டுப்புடவை, வைரம் இன்னும் வேறு 'தாம்தூம்' செலவுகள் செய்யாமலிருப்பதற்கு ஸ்திரீகள் ஒரு ப்ரதிக்ஞை பண்ணிக் கொண்டால் அதுவே பெரிய உபகாரமாகும். பட்டுத்துணி வேண்டாம் என்று வைப்பதால், லக்ஷக்கணக்கான பட்டுப்பூச்சிகளைச் சாகாமல் காப்பாற்றிய புண்யம் கிடைக்கும். அதோடு, 'இருக்கிறவர்'கள் இப்படிச் செலவு செய்வதைப் பார்த்து, 'இல்லாதவர்'களுக்கும் ஆசை உண்டாகிறதே; கடன் கஸ்தி வாங்கியாவது அவர்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்கிறார்களே, இப்படி அவர்களுக்குத் தப்பான வழிகாட்டி அபகாரம் பண்ணாமலிருப்பதே உபகாரந்தான். இந்த ஆடம்பரங்கள் போய், காப்பிக்குப் பதில் மோர்க்கஞ்சி சாப்பிடுவது என்றாகிவிட்டால் எல்லாக் குடும்பத்திலும் பாதிச் செலவு மிஞ்சும். கடன் வாங்கிக் குடித்தனம் செய்பவர்கள் கடன் வாங்காமல் காலம் தள்ளலாம்.

4.34-பெண்களும் சிரமதானமும்

பெண்ணாகப் பிறந்தவர்கள் வீட்டு வேலைகளைக் குனிந்து நிமிர்ந்து பண்ணினால் போதுமானது. ஆபீஸ் வேலை அவர்களுக்குக் கூடாது என்பதே என் அபிப்ராயம். என் அபிப்ராயமென்றால் என்ன? நம்முடைய தர்ம சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ அதை அநுஸரித்துத்தான் சொல்கிறேன். இப்போது இந்த விஷயத்தை நிறுத்திக் கொள்கிறேன். நான் சொல்ல வந்தது, ஒரு ஸ்த்ரீயானவள் ஒழுங்காகப் பொறுப்பாகப் வீட்டு வேலைகளைப் பண்ணுவதென்றால், சமைத்துப்போட்டு, குழந்தைகளைக் கவனித்து, புருஷனுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்வதென்றால் அதற்கே நாள் பூராவும் ஆகிவிடும். குடும்பங்கள் சேர்ந்துதான் தேசம்; வீடுகள் சேர்ந்துதான் நாடு. ஆனதால் பொம்மனாட்டிகள் அவரவர் வீடுகளை வீடாக வைத்துக் கொள்வதற்கானவற்றைப் பண்ணினால் அதுவே நாட்டுப்பணி; உலகத்தொண்டுதான்; பரோபகாரம்தான். இதற்கு மிஞ்சிப் பொழுதும் சக்தியும் இருந்தால் பொதுப்பணிகளும் செய்யலாம். இவை ஸ்த்ரீ லக்ஷணத்துக்கு

உரியதாக, 'பெண்மை' என்று ஒன்றை வார்த்தையாகவாவது இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அதற்கு ஏற்றபடியான தொண்டுகளாக இருக்க வேண்டும். அதாவது அடக்கத்துடன் செய்வதாக இருக்க வேண்டும். தேஹ ச்ரமமும் அதிகம் இருக்கக்கூடாது. கோயில்களில் கட்டுக் கட்டாகக் கோலம் போடுவது; பஜனை - ஸந்தர்ப்பணை நடக்கிற இடத்தில் பெருக்கி, மெழுகி, பாத்திரம் தேய்த்து உபகாரம் பண்ணுவது; பிரஸவ ஆஸ்பத்திரி மாதிரியான பெண்களுக்கு மட்டுமே உரிய இடங்களில் பிரஸாதங்கள் விநியோகம் பண்ணுவது; அநாதைக் குழந்தைகளைப் பராமரிக்கிற இடங்களுக்குப் போய் அதுகளுக்குப் புது வஸ்திரம், பக்ஷணம் கொடுத்து ஏதோ கொஞ்சம் பஜனை, ஸ்தோத்ரம் சொல்லித் தருவது என்று இப்படிப்பட்டப் பணிகளைப் பெண்கள் செய்யலாம்.

ஸமுதாயம் அடங்கலும் ஒன்றுபட வேண்டும் என்பதற்காகக் குளம் வெட்டுகிற வேலையில் மட்டும், அது கொஞ்சம் ச்ரமமானதாக இருந்தாலுங்கூட, நானே பெண்களையும் ஈடுபடுத்தியிருக்கிறேன்.

இருந்தாலும் பொதுவாக 'ச்ரமம்தான்' என்பதில் கடும் சரீர உழைப்புத் தேவைப்படுகிற தொண்டுகளைப் பெண்களிடம் காட்டாமல் புருஷர்களே பண்ணுவதுதான் உசிதம்.

4.35-சரீர உழைப்பும் ஸந்ததியும்

புருஷர்கள் சரீர உழைப்பைக் குறைத்துக் கொண்டதிலிருந்துதான் ஆண் பிரஜைகள் பிறப்பது குறைந்து வருகிறது. இப்படிக் குறைந்தால்தான், சரக்கு அதிகம் கிடைக்காவிட்டால் விலை கூடிவிடும் என்ற பொருளாதார விதிப்படி, வரதக்ஷிணை, சீர் என்று பிள்ளை வீட்டுக்காரன் ஏகமாக வாங்குவதாகவும், அதனால் நம் ஸமூஹ தர்மமே குளறிப் போவதாகவும் ஸம்பவித்திருக்கிறது. எக்னாமிக்ஸ்படி 'கிராக்கி' யாகிவிட்ட ஆணுக்கு dowry கொடுப்பதென்பது நம் மதத்துக்கே ஹானியில் கொண்டு விட்டிருக்கிறது.

முன்னெல்லாம், பிராம்மணனின் நித்யகர்மாநுஷ்டானங்களும், மற்ற ஜாதியார்களின் பாரம்பர்யத் தொழில்களும் நன்றாக அவர்கள் இடுப்பை முறித்துவிடும். 'முறித்துவிடும்' என்று தோன்றினாலும் அதுவே உண்மையில் பலம் தந்தது! அந்த நாள் ஆஹாரத்திலும் ஸத்து ஜாஸ்தி.

பிற்பாடுதான், முதலில் பிராம்மணனும் அப்புறம் இவனைப் பார்த்து மற்றவர்களும் white-collared job,sedentary job என்கிறார்களே, அப்படி அழுக்குப்பட்டுக் கொள்ளாமல் ஆபீஸில் பங்க்காவுக்குக் கீழே உட்கார்ந்து கொண்டு வேலை பார்ப்பதுதான் பெருமை என்று ஆனது. இதனால் ஏற்பட்ட மற்ற அனர்த்தங்கள் இருக்கட்டும். வேதவித்யையும் வைதிகாநுஷ்டானமும் வர்ணாச்ரமமும் போய், ஏகப்பட்ட போட்டி, பொறாமை, ஜாதி த்வேஷம், இன த்வேஷம் எல்லாம் வந்ததற்கே இப்படி ஸர்க்கார் உத்யோக மோஹத்தில் பிராம்மணன் கிராமத்தை விட்டு ஓடி வந்தது தான் விதை போட்டது அந்தப் பெரிய அனர்த்தம் ஒரு பக்கம் இருக்கட்டும் – இப்படி சரீரத்தால் செய்யும் வேலையைக் குறைத்துக் கொண்டதன் இன்னொரு அனர்த்தம் பௌருஷம் நஷ்டமானது. இப்போது ஆஹாரமும் புஷ்டிக்கானதாக இல்லை. கெமிகல் ஃபெர்டிலைஸர் விளைச்சலை ஜாஸ்தியாக்கலாம்; ஆனால் விளைபொருளின் ஸத்து இதில் ரொம்பக் குறைந்து விடுகிறது. போதாததற்கு ஆரோக்யத்துக்கு ஹானி பண்ணி, நரம்புத் தளர்ச்சியை உண்டுபண்ணுகிற காபி முதலிய பானங்கள் வேறு வந்து சேர்ந்திருக்கின்றன. மூளைக்கு வேலை ஜாஸ்தியாகியிருக்கிறது; 'பேனா உழவு' ஜாஸ்தியாகியிருக்கிறது. இது ஸரியாய் நடக்க வேண்டுமானால் புத்தி சுத்தமாகவும், ஸத்வமாகவும், சாந்தமாகவும் இருந்தாக வேண்டும். ஆனால் சூழ்நிலையோ ஸினிமாக்கள், நாவல்கள், பத்திரிகைகள் ஆகியவற்றால் மநுஷ்யனைக் காம வேகத்திலும்; பாலிடிக்ஸாலும் பலவித வர்க்கப் போராட்டங்களாலும் க்ரோத வேகத்திலும் தள்ளி இவனுடைய புத்தியையும் நரம்பையும் ரொம்ப பலஹீனப்படுத்துவதாயிருக்கின்றன. பதினைந்து வயஸாகிவிட்டால் மூக்குக் கண்ணாடி வேண்டும், நாற்பது வயஸு ஆனால் blood pressure-குத் தப்பிக்கிறவன் எவனோ ஒருத்தன்தான் என்கிற மாதிரி அநாரோக்யம் ஸர்வவியாபகமாக ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில், ஓடியாடி உழைக்காமல்

உட்கார்ந்து வேலை செய்ததில் பௌருஷம் போய்விட்டது. அதனால், பிறக்கிற குழந்தைகளிலும் புருஷ ப்ரஜைகள் குறைந்துவிட்டன.

4.36-உடலுழைப்பாலேயே ஆண்மை

சரீர உழைப்பால் தேஹ சக்தியை விருத்தி செய்து கொண்டு பௌருஷம் பெறுவதே மனஸின் பௌருஷத்துக்கும் காரணமாக ஆகும். இப்போது பேப்பரைப் படித்து விட்டுக் காரஸாரமாக வாய் வார்த்தையில் அக்ரமங்களைக் கண்டிக்கிறோமே தவிர, நிஜமான ஆண்மையோடு நம் தர்மத்தைக் காப்பாற்றுவதற்காக உயிரை வேண்டுமானாலும் கொடுப்பது என்று கார்யத்தில் இறங்குகிற தீரம் போய் விட்டிருக்கிறது. இப்படி, ஒரு பக்கம் ஸ்த்ரீகள் புருஷர்களாகிக் கொண்டு வரும்போதே இன்னொரு பக்கம் புருஷர்களுக்கு ஸ்த்ரீத்வம் விருத்தியாகி வருகிறது!

நல்ல ஸத் விஷயங்களில் பிடிமானம், படிப்பு, பயிற்சி, பக்தி, பூஜை, த்யானம் உள்ளவர்களைத் தவிர மற்ற பெரும்பாலாரின் மனஸு கெட்டதுகளில் போகாமல் தடுப்பதற்குச் சரீர உழைப்புதான் ஸாதனமாகிறது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ எழுதுகிறோம், யோசனை பண்ணுகிறோமென்றால் அப்போதும் மனஸ் அது பாட்டுக்கு அவ்வப்போது இதை விட்டுவிட்டு ஓடிக் கொண்டுதானிருக்கும். அதுவே சரீரத்தால் கார்யம் செய்கிறோமென்றால் அப்போது அப்படிப்பட்ட கார்யத்திலேயே மனஸ் அதிகம் ஈடுபட்டுவிடுகிறது. அதனால் கண்ட கண்ட நினைப்புகளுக்கு ஓடாமலிருக்கிறது. அதாவது சரீர உழைப்பால் சித்தம் கெட்டதில் போகவில்லையே தவிர, நல்லதில் ஈடுபட்டு உத்தம அநுபவங்களைப் 'பாஸிடிவ்'-ஆகப் பெறவில்லைதான். ஆனால் முதலில் இந்த நெகடிவ் ஸ்டெப்பில் அடி வைத்துத் தான் பாஸிடிக்குப் போயாகவேண்டியிருக்கிறது. ஆசார்யாள் அதனால்தான் முதலில் கர்மாநுஷ்டானம், அப்புறம் இதனால் ஏற்படும் சித்தசுத்தியினால் மனஸ் உத்தமமாகவே போகிற பக்தி, அதற்கப்புறம் மனஸே போய்விடுகிற ஞானம் என்று படிவரிசை போட்டுக் கொடுத்தார்.

4.37-சரீரஸாதனை, ஆத்ம ஸாதனை இரண்டும் வேண்டும்

ஜன்மா பூரா ஒருத்தன் ஏதோ மாடுமாதிரி தேஹத்தால் அலைந்து திரிந்து, கையையும் காலையும் ஆட்டிக் கொண்டிருந்துவிட்டு, சாந்தமாக ஸௌக்கியமாக ஈஸ்வர பரமான, ஆத்மார்த்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமலும் பக்தி, தியானம் எதுவுமே இல்லாமலும் ஜீவனை விட்டானென்றால் அவன் மநுஷ்ய ஜன்மா எடுத்தே ப்ரயோஜனமில்லைதான். ஆனால் செய்ய வேண்டிய நிலையில் சரீர உழைப்புப் பண்ணியேயாக வேண்டும். பொதுவாக இப்பபோது ஜனங்கள் இருக்கிற லோகாயதமான, அபக்வமான ஸ்திதியில் அவர்களில் பெரும்பாலார் நீண்ட காலத்துக்கு சரீரத்தால் உழைத்து உழைத்தே சித்தசுத்தி பெற வேண்டியவர்களாக்காதான் இருக்கிறார்கள்.

மூளையால் மட்டும் வேலை செய்கிறவனுக்கும், பேனா வேலைகாரனுக்கும் சரீரத்தால் உழைப்பவனைப் போல அசந்து தூக்கம் வருகிறதோ? தூக்கம் வராவிட்டால் மனஸ் எங்கேயாவது திரிந்துகொண்டே அழுக்கைச் சேர்த்துக்கொள்கிறது. நன்றாக உழைத்துவிட்டு வந்தவன் இப்படியெல்லாம் கெட்ட சிந்தனைகளில் போகாமல் நன்றாகத் தூங்குகிறான். அதனால் தேஹ பலம், புத்தி பலம் இரண்டும் உண்டாகிறது. தேஹத்தையும் புத்தியையும் 'கனெக்ட்' பண்ணுகிற nervous system-ஐ அவன் பாழ் பண்ணிக்கொள்கிறதில்லை.

சரீர உழைப்பில்தான் ஆரம்பித்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் சரீரத்தோடு நின்றுவிடாமல் அந்த ஆரம்ப நாளிலிருந்தே ஈஸ்வரபரமான விஷயகங்ளிலும் 'டச்' வைத்துக் கொண்டேயாக வேண்டும். போகப் போக 'டச்' பண்ணினால் மட்டும் போதாது, `டச்' பண்ணுவதை கையில் பிடித்து வைத்துக்கொள்ளவும் ப்ரயத்னப்பட வேண்டும். அத்யாத்ம ஸமாசாரங்களில் அதிகம் ஈடுபட வேண்டும். ஆனால் இப்போதும், இவன் ஆத்மாபிவிருத்தியில் உச்சாணிக் கொம்புக்கே போய்விட்டாலும் அப்போதுங்கூட, சரீரப் பணியில் இவன்

'டச்'சை அடியோடு விட்டுவிடக் கூடாது. ஜீவன்முக்தன் என்று என்னவோ சொல்கிறார்களே, நமக்கெல்லாம் அப்படிப்பட்ட ஸ்திதி புரிவதுகூடக் கஷ்டமாயிருக்கிறதே, அந்த ஸ்திதி வந்து நமக்கென்று மனஸில்லை, எண்ணமில்லை, 'ப்ளான்' இல்லை என்று ஆகிறமட்டும், நாமாக உடற்தொண்டை அடியோடு விட்டோமென்று இருக்கவே கூடாது. அதனால்தான் பெரியோர்கள், "ஒரு கையால் ஈஸ்வரனைப் பிடித்துக்கொண்டே இன்னொரு கையால் லோக கார்யங்களைப் பண்ணு" எண்ணுகிறார்கள்.

முதலில் சரீர வேலை ஜாஸ்தி, ஆத்மார்த்த சிந்தனை குறைச்சல்; பிறகு இரண்டும் ஸமம்; அப்புறம் ஆத்மார்த்தம் ஜாஸ்தி, சரீர வேலை குறைச்சல் என்று அதாவது எல்லா ஸ்டேஜிலும் இரண்டில் எந்த ஒன்றுமே இல்லை என்று இல்லாமல் இருக்க வேண்டும். இதற்கும் அப்புறம் ஈஸ்வரனே நம்மை நடத்தி வைப்பது தெரியும். அந்த ஸ்திதியில் பரமஞானிகளாக இருந்து கொண்டே ஓயாமல் ஒழியாமல் காரியம் பண்ணினவர்களும் உண்டு. லோகமே தெரியாமல் கல்லு மாதிரிக் கிடந்தவர்களும் உண்டு. அங்கே போகிற மட்டும் மெய் வருந்திப் பரோபகாரமாக எல்லாரும் உழைக்கத்தான் வேண்டும். பலஹீனர்கள் தவிர மற்ற எல்லாரும் சரீர கைங்கர்யம் நிறையப் பண்ணத் தான் வேண்டும். பலஹீனர்கள் இதற்கு ஈடாக மற்ற தினுசுகளில் பொதுப்பணி செய்ய வேண்டும்.

4.38-பதி-பத்தினி ஒத்துழைப்பு

ச்ரமதானம் மாதிரியே எல்லாரும் 'ஸம்பத்தி தான்' என்கிற பண தானமும் துளியாவது பண்ண வேண்டும். எத்தனை குறைச்சல் வருமானமானாலும் அதிலும் ஒரு காலணாவாவது தனக்கென்று இல்லாமல் தர்மத்துக்குப் போகணும். இதிலே ஸ்திரீகளால் ஆகக்கூடியது நிறைய இருக்கிறது. நகை, துணி, ஸினிமாச் செலவு, வரதக்ஷிணை சீர் செனத்தி ஆசை இவற்றால் ஸ்த்ரீகள்தான் புருஷர்களை விட தான தர்மம் முடியாத ஸ்திதியை ஏற்படுத்தி விடுகிறார்கள். ரேஸ், சீட்டு, குடி, ஸிகரெட் முதலான துன்மார்க்கச்

செலவுகள் புருஷர்கள்தான் செய்கிறார்களென்று எனக்குத் தெரியுமானாலும், அவர்களை விடவும் பெண் ஜன்மா எடுத்தவர்கள்தான் எல்லா உயிர்களுக்கும் தாயாக, தியாகிகளாக உபகரிப்பதில் உதாரணமாக இருக்க வேண்டும் என்பதால் சொல்கிறேன் அகமுடையான், பெண்டாட்டி இருவரும் ஒத்துழைத்து, தர்மம் செய்வதற்கென்றே மற்றச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு கொஞ்சமாவது மிச்சம் பிடிக்க வேண்டும்.

இருக்கிறவர்'களும் இதற்கெல்லாம் ஆகிற செலவைச் சேமித்துப் பரோபகாரத்துக்குப் பயனாக்க வேண்டும்.

4.39-தனக்கு மிஞ்சித் தர்மம்

"தனக்குத் மிஞ்சித் தர்மம்" என்பதற்கு நான் புது வியாக்யானம் செய்கிறேன்: எது உயிர் வாழ்வதற்கு அத்யாவச்யமோ, எதெல்லாம் இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாதோ, அந்த bare necessities-க்குத் தேவயானதைத் தான் 'தனக்கு' என்று இங்கே சொல்லியிருப்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், 'தனக்கு' என்று சொல்லிக்கொண்டு, ஆடம்பரச் செலவுகள் பண்ணிக் கொண்டே போய் எத்தனை வருமானம் வந்தாலும் தானம் பண்ண ஒன்றுமே இல்லாமல் ஆக்கிக் கொள்வதாகத்தான் முடியும். ஸொந்தச் செலவுகளை அவசியத்திற்கு அதிகமாக எவரும் வைத்துக்கொள்ளாவிட்டால்தான் தனக்கு மிஞ்சிக் கையில் தர்மத்துக்குப் பணமே இருக்கும். முடிவில்லாமல் தனக்கென்று ஆடம்பர போக்யங்களை (லக்ஷரிகளை)ப் பெருக்கிக் கொண்டே போய்விட்டு, "தனக்கு மிஞ்சித் தர்மம் பண்ண எதுவுமே இல்லை" என்று கைவிரித்தால் அது நியாயமில்லை. ஆனதால், தனக்கென்று எவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடியுமோ, அப்படி எளிமையாக வாழ்ந்து, மிச்சம் பிடித்து, அதைத் தர்மத்துக்குச் செலவழிப்பதுதான் "தனக்கு மிஞ்சித் தர்மம்". "தர்மம் பண்ணியே ஆகவேண்டுமே! வேதத்தில் 'தர்மம் சர' என்றும், படிப்பு ஆரம்பத்திலேயே அவ்வை 'அறம் செய விரும்பு' என்றும் சொல்லியிருப்பதைச் செய்தேயாக வேண்டுமே! ஆனதால், நமக்கு வரும்படி எவ்வளவு குறைச்சலாயிருந்தாலும்

அதற்குள் தர்மம் பண்ணும்படியாகவும் செலவைக் கட்டுப்படுத்திக்கொண்டு 'தனக்கு மிஞ்சும்' படிப் பண்ண வேண்டும்" என்றே இந்த வசனத்தை அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும்* அப்படிச் செய்தால் எவனுமே தர்மத்துக்காகச் சேமித்துத்தான் ஆகவேண்டும் என்றாகும். அதாவது, எவனுமே கடன்படமாட்டான்! இது ஒரு பெரிய ஸ்வய உபகாரம்!

இப்போது ஸர்க்காரே கடன் வாங்குவதாக ஆகிவிட்டிருக்கிறது! அதே வழியில் வேண்டாத வஸ்துக்களையெல்லாம் ஜனங்களும் அத்யாவச்யமாக்கிக் கொண்டால் எல்லாரும் கடனாளியாக வேண்டியதுதான். கடன் வாங்காமலிருப்பதே பெரிய உபகாரம். ஏனென்றால் நாம் கடன் வாங்கிச் செலவழிக்கிறபோது, நாம் தர்மம் பண்ண முடியாது என்பதோடு மற்றவர்களையும் கடன் வாங்கி டாம்பீகம் செய்யத் தூண்டுகிறோம். பிறத்தியாருக்கும் ஸாத்யமில்லாத ஆசைகளைக் கிளப்பிவிடுகிற விதத்தில் எவனொருத்தனும் டாம்பீகமாக வாழ்கிறதுதான் பெரிய ஸமூஹ த்ரோஹமான கார்யம். அநாதியான நம் சாஸ்த்ரங்களிலிருந்து நேற்று காந்தி வரையில் சொல்லி வந்த எளிய வாழ்க்கையை (simple living) வசதியுள்ளவர்களும் மேற்கொண்டால் எந்தக் கம்யூனிஸமும், வர்க்கப் போராட்டமும் வரவே வராது. எளிய வாழ்க்கையால் இவன் நிறைய மிச்சம் பிடித்து தர்மமும் பரோபகாரமும் செய்வது ஒரு பக்கம்; இதைவிட முக்யமாக மற்றவர்களுக்கு ஆசை அஸூயை, கடன் இவற்றை ஏற்படுத்தாமல் இருக்கிறானே, இதுதான் பெரிய உபகாரம். 'வரவே சிறுத்து, செலவே பெருகினால் அது திருடு' என்றே ஆன்றோர் மொழி இருக்கிறது. கடன் வாங்கின பணம் இன்னொருத்தனுடையதுதானே? அந்தப் பணம் தனக்கு வருமா, வருமா என்று இவன் திருப்பிக் கொடுக்கிற வரையில் அவன் திருட்டுக் கொடுத்துவிட்டது போல அவஸ்தைப் பட்டுக் கொண்டுதானே இருப்பான்? அதனால்தான் இதைத் திருடு என்றே சொல்லியிருக்கிறது. "கடன் பட்டார் நெஞ்சம்" மட்டுமில்லாமல் "கடன் கொடுத்தார் நெஞ்ச"மும் கலங்கும்படியாக இப்படி இரண்டு சாராருக்கும் அபகாரம் பண்ணுகிற இரவல் பழக்கத்தை விடுவதே பெரிய உபகாரந்தான்.

---

* இதே வசனத்திற்கு வேறோரு விதமான விளக்கம் ‘சிக்கனமும் பரோபகாரம்’ என்ற உரையில் ‘தனக்கு மிஞ்சி’ என்ற பிரிவில் காண்க.

4.40-வரதக்ஷிணை பெரும் கொடுமை

நாம் ஊதாரித்தனமாக செலவு செய்து பிறரையும் இந்த வழியில் போவதற்குச் சபலப்படுத்திக் கடனாளியாக்குவது தப்பு என்றால், நாம் எந்தச் செலவும் செய்யமால், இன்னொருத்தனை நம் பொருட்டாகவே பெரிய செலவுக்கு ஆட்படுத்திக் கடனாளியாக்குவதோ அதை விடத் தப்பு; பாபம் என்றே சொல்லணும். வரதக்ஷிணையாலும் படாடோபக் கல்யாணத்தாலும் எத்தனையோ குடும்பங்களைக் கடனாளியாகப் பண்ணியிருப்பது நம் ஸமுதாயத்துக்கே பெரிய அவமானம். வைதிக அம்சங்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் தந்து கல்யாணச் செலவை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அப்படிப் பண்ணி, டாம்பீகமே இல்லாமல் ஸிம்ப்ளி ஃபை செய்ய வேண்டும் என்று நானும் ஓயாமல் சொல்லிக் கொண்டேதானிருக்கிறேன். கேட்கிறவர்கள்தான் அபூர்வமாயிருக்கிறார்கள் வரதக்ஷிணையும் சீர் சௌத்தியும் கேட்பது பாபம் என்கிற உணர்ச்சி பிள்ளையைப் பெற்றவர்களுக்கு உண்டாக வேண்டும். ஒரு பெண்ணின் கல்யாணம் என்றால் இப்படிப் பதினாயிரக் கணக்கில் செலவழிக்க வேண்டியிருப்பதால்தான், அந்தப் பெண்களையே வேலைக்கு விடுவது என்று ஆரம்பித்து, அப்புறம் இதுவே ஃபாஷனாகி, நம்முடைய ஸ்திரீ தர்மத்துக்கே ரொம்பவும் கெடுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு ஆயுஸ்கால ஸேமிப்பும் போதாமல் கடன் கஸ்தி வாங்கித்தான் கல்யாணம் பண்ண வேண்டும் என்ற நிலையில் அநேகக் குடும்பங்களை வைத்திருக்கிற வரையில் நமக்கு மற்ற பரோபகாரத் தொண்டுகள், ஜீவாத்ம கைங்கர்யங்களைப் பற்றிப் பேசவே லாயக்கில்லை என்று தோன்றுகிறது.

வெயில் காலத்தில் விசிறி, குடை தானம்; குளிர் காலத்தில் கம்பளிதானம்; பஞ்சகாலத்தில் அன்னதானம் என்றெல்லாம் சாஸ்திரங்களில் சிறப்பித்துச் சொல்லியிருக்கிற எல்லா தானங்களயும்விட, ‘வரதக்ஷிணை’ என்று அதிகாரப்

பிச்சையாக தானம் வாங்குவதை நிறுத்துவதுதான் பெரிய தானம் என்று எனக்குத் தோன்றுகிறது. மற்றதெல்லாம் ஒரு பீரியடுக்கு [கால கட்டத்துக்கு] மட்டும்தான் பயனாவது. வரதக்ஷிணையோ இன்றைக்கு ஒருத்தனுடைய வாழ்நாள் முழுவதையும் (பெண்ணைப் பெற்றவனைத்தான் சொல்கிறேன்) பாதிப்பதோடு, எதிர்காலம் பூராவுக்கும் நம்முடைய சாஸ்திரீயமான வாழ்க்கை முறையையும், சாச்வதமான ஸ்த்ரீ தர்மத்தையும் பாதிப்பதாக இருக்கிறது. ஆனபடியால் வரதக்ஷிணை வாங்காமலிருப்பது நிரந்தர தர்மதானம் என்று சொல்லலாம்.

ஒரு பக்கம் ஆடம்பரக் கல்யாணம், இன்னொரு பக்கம் கல்யாணத்துக்கு பணமில்லை என்பதால் பெண்களை வேலைக்கு விடுவது, கடன்படுவது என்கிற மாதிரிக் கஷ்டம் ஏற்படவிட்டிப்பது கொஞ்சங்கூட நியாயமில்லை.

இதற்காகத்தான் சற்றுமுன் கன்யாதான ட்ரஸ்ட் என்று ஒன்றைச் சொல்லி, அதில் தங்கள் இன்ஷுரன்ஸ் mature ஆகும்போது பாதித்தொகை சேரும்படியாகப் பாலிஸி எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னேன். அந்தத் தொகையை ஒரு ஏழைப் பெண்ணைக் கூடியமட்டில் எந்த சின்ன வயஸில் கல்யாணம் செய்து கொடுக்க முடியுமோ அப்படிக் கொடுக்கிற பெற்றோர் அல்லது கார்டியனிடம் விவாஹச் செலவுக்காக ட்ரஸ்டிக்கள் கொடுப்பார்கள். Marriageable age (திருமணத்துக்குரிய வயது) என்று ஸர்க்கார் நிர்ணயம் செய்யும் வயசு வந்தபின்தான் வரனே தேட ஆரம்பிப்பது என்று வைத்துக்கொண்டால், வரன் திகையவே அதற்கப்புறம் ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று ஆகிறது. இதற்குள் அவள் வெறுமனே இருப்பானேன் என்று காலேஜில் படிக்க வைப்பதில், அவளுக்கு மேலே போஸ்ட் க்ராஜுவேட், அல்லது பிஹெச்.டி பண்ணின வரனாகத் தேடுவது, அதற்காக மேலும் ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆவதற்குள் இவளைச் சும்மா அகத்தில் உட்கார்த்தி வைப்பானேன் என்று உத்யோகத்துக்கு அனுப்புவது; அதனால் அந்த பிஹெச்.டிக்காரன் இவளுக்கு மேலே பெரிய ஆபீஸராகவும் இருக்க வேண்டுமென்று மறுபடியும் வரன் தேடுவது என்றிப்படிப் போவதில் 'கன்னிகை' என்பவள் மாமியே ஆகிவிடுகிறாள்! இப்படியெல்லாமில்லாமல் சட்டப்படி நிர்ணயிக்கப்படும் மினிமம் வயஸுக்கு இரண்டு வருஷம்

முன்னாலிருந்தே வரன்தேட ஆரம்பித்தால் அந்த லிமிட்டைப் பெண் க்ராஸ் பண்ணினவுடனேயாவது கல்யாணத்தைச் செய்து விடலாம்.

ரொம்பவும் வயஸேறிப் போன பெண்ணுக்குக் கல்யாணமாவதே சிரமமாகிறது; இப்படி விடுவதால்தான் எனக்கு சொல்லவே கஷ்டமாயிருக்கிறது … இந்த தேசத்திலே, நடு ஸபையிலே, ஆசார்யபீடம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கும் நான் சொல்லவா என்று இருக்கிறது … delinquent, வழுக்கி விழுந்தவா, சறுக்கி விழுந்தவா என்று என்னென்னவோ சொல்கிறார்களே, அப்படியெல்லாம் ஏற்பட்டு நம்முடைய புராதன தர்மத்துக்குப் பெரிய களங்கம் உண்டாகிறது. வசதியில்லாதவர்கள் முடிந்தமட்டும் ஸரியான வயஸில் கல்யாணம் செய்வதற்காக grant, இன்ஷூரன்ஸ் என்றெல்லாம் கொஞ்சம் கணிசமாகவே நான் கேட்கிறேன் என்று தோன்றலாம். ஆனால் இந்தச் செலவு செய்தால் மேலே சொன்னேனே, அப்படிப்பட்டவர்களுக்காக அநேக ஸேவாஸதனங்கள் வைத்துப் பராமரிக்கிற செலவு பெருமளவு குறைந்துவிடும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தப்பு வழியிலே போகிறவர்களிடமும் தயவு காட்டத்தான் வேண்டும். பகவானுக்கே பதித பாவனன் என்பதுதான் பெருமை. ஆனாலும் ரொம்பவும் தட்டிக் கொடுத்து, ஸௌகர்யம் செய்து தந்து ஸேவா ஸதனங்களில் வைத்து போஷணை பண்ணுவது; நவயுக எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொண்டு தப்பிப் போவதற்கே ஸைகாலஜி, ஹ்யூமனிஸம் என்கிற பெயர்களில் நியாயம் கற்பித்து எழுதுவது – இதனாலெல்லாம் தப்பு பண்ணுவதற்கே 'இன்ஸென்டிவ்' கொடுத்த மாதிரி இப்போது முறைகெட்டு நடக்கிறது. இதுகளுக்கு எதிராக இந்தக் கன்யாதன விஷயத்தில் மடத்தை ஆச்ரயித்தவர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

இதிலேயும் ஸரி, மற்ற பல விஷயங்களிலும் ஸரி, 'மிடில் க்ளாஸ்' (மத்யதர வகுப்பு) ஜனங்கள்தான் கஷ்டப்படுகிறார்கள். பணக்காரர்கள் கல்யாணத்தில் ஆடம்பரம் செய்தால் ஹானி அடைவதில்லை. அவர்கள் "நாங்கள் ஸிம்பிள் மாரேஜ் செய்கிறோம்" என்று ஆரம்பித்தாலும் ஸமூஹம் அவர்களைக் கொண்டாடுகிறது. ரொம்பவும் ஏழைக்கு எவனோ உதவி பண்ணிவிட்டுப் போகிறான். அவன் எத்தனை ஸிம்பிளாகப் பண்ணினாலும், "ஐயோ பாவம்,

அவனால் முடிந்தது அதுதான்” என்று லோகம் அநுதாபப்படுகிறது. மிடில் க்ளாஸ்காரன்தான் இரண்டுங்கெட்டானாக, ஆடம்பரம் செய்யவும் வசதியில்லாமல், ஸிம்பிளாகச் செய்தாலும் மற்றவர்களின் திட்டை வாங்கிக்கொண்டு அவஸ்தைப்படுகிறான். இவன் மட்டும், ”திட்டினால் திட்டட்டும்” என்று பொய் அந்தஸ்து கொண்டாடிக் கொள்ளாமல், எளிமையாகத்தான் இருப்பது என்று ஆரம்பித்துவிட்டால் எல்லாம் ஸரியாய்விடும்.

4.41-எளிய வாழ்க்கை

‘நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்’ என்று நினைப்பது உத்தமமான எண்ணம். ஆனால் எண்ணம் உத்தமமாயிருந்து விட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து, அமெரிக்கா மாதிரி எல்லாரும் ‘லக்ஷுரியஸாக’ வாழ முடிந்தாலும் அது நல்லதுதானா? லௌகிகமான ஸௌக்யங்கள் ஜாஸ்தியாக ஆக ஆத்மாபிவிருத்திக்கே வழியில்லாமல் தானே ஆகியிருக்கிறது? எத்தனை போட்டாலும் த்ருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரித்தான் இந்த ஆசை என்பது. அது எவ்வளவு ஸௌகர்யம் இருந்தாலும் த்ருப்திப்படாமல் இன்னும் புதிசு புதிசாக ஸௌக்ய ஸாதனங்களைத் தேடிக் கொண்டுதான் இருக்கும். அத்ருப்தி, குற்றங்கள் இத்யாதியைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம். ஸௌக்ய ஸாதனங்கள் என்று நினைக்கிறவைகளை விட்டால்தான் சாந்தி கிடைக்கும் என்று அங்கே புத்திசாலிகளாக இருக்கப்பட்டவர்கள் புரிந்துகொண்டுதான் த்யானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.

மநுஷ்யனின் ஆத்மாபிவிருத்திக்கு ப்ரதிகூலமாக வெறும் லௌகிக ரீதியில் செய்கிற எந்த உபகாரமும் உபகாரமேயில்லை, அபகாரம்தான். எத்தனைக்கெத்தனை எளிமையாக வாழ்கிறோமோ அத்தனைக்கத்தனை ஆத்மக்ஷேமம். ஆனதால் மற்றவர்கள் எளிய வாழ்க்கையில்

இருக்கும்படியாகப் பண்ணுவதுதான் நிஜமான உபகாரம். இதை எப்படிப் பண்ணுவது? நாம் டாம்பீகமாக வாழ்ந்து கொண்டு அவர்களுக்கு உபதேசம் செய்தால் நடக்குமா? ஆகையால் நாமே எளிமையாக வாழ்ந்துகாட்ட வேண்டும். அதாவது, 'நாம் எப்படி வாழ்கிறோமோ, அப்படியே பிறரும் வாழவேண்டும்' என்று நினைப்பதற்கு முந்தி, நாம் எப்படி வாழவேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும். 'ஏழைகள் உள்பட மற்றவர்கள் எல்லோரும் எப்படி வாழ முடியுமோ, எப்படி வாழ்ந்தால்தான் ஆத்மாபிவிருத்திக்கு நல்லதோ, அப்படித்தான் நாமும் வாழவேண்டும்; அதாவது ரொம்ப ஸிம்பிளாக வாழவேண்டும்'என்று முதலில் தீர்மானம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

வயிறு ரொம்பச் சாப்பாடு, மானத்தைக் காப்பாற்றத் துணி, இருப்பதற்கு ஒரு குச்சு வீடு – இம்மாதிரியான அடிப்படை (basic) தேவைகள் எல்லோருக்கும் பூர்த்தியாக வேண்டும். இதற்குமேல் ஆசைக்குமேல் ஆசை, தேவைக்குமேல் தேவை என்று பறக்க வேண்டியதில்லை. அப்படி மற்றவர்களைப் பறக்காமல் இருக்கச் செய்வதற்காக நாமும் எளிமையாக வாழவேண்டும்.

4.42-உற்றமும் சுற்றமும்

ஏழையோ, பணக்காரனோ எல்லார் குடும்பத்திலும் கல்யாணம் மாதிரியான சுப காரியங்கள், சாவு மாதிரியான அசுப காரியங்கள் வருகின்றன. இவற்றுக்காக எவனும் கடன்படுகிற மாதிரி நாம் விட்டால் அது நமக்குப் பெரிய தோஷம். அவரவரும் தன்னாலானதை ஐந்தோ, பத்தோ ஏழைப்பட்ட பந்துக்களின் சுபாசுப கார்யங்களுக்கு உதவ வேண்டியது ஒரு பெரிய கடமை. இதை முன்காலங்களிலெல்லாம் ஸஹஜமாகச் செய்து வந்தார்கள். 'பரோபகாரம்' என்று யாரோ மூன்றாம் மனிதர்களுக்குச் செய்வதற்கு முன்னால், 'பந்துத்வ'த்தோடு நம்முடைய ஏழைப்பட்ட உறவினர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இரண்டு தலைமுறைக்கு முந்தி இதைச் சொல்ல வேண்டிய அவச்யமே இருக்கவில்லை.

அப்போது ‘கிழவர் பராமரிப்பு இல்லம்” விதவை விடுதி’ என்றெல்லாம் வைக்க வேண்டிய அவச்யமே இல்லாதிருந்ததற்கு என்ன காரணம்? பந்துக்களே இவர்களைப் பராமரித்து வந்ததுதான். அநேகமாக எல்லா வீடுகளிலும் ஒரு அத்தைப் பாட்டி, மூன்று தலைமுறை விட்டு ஒரு மாமா தாத்தா என்கிற மாதிரி கிழங்கள் இருக்கும்! தற்காலத்தில் ரொம்பவும் பணக்காரர்களும்கூட வெறும் ‘ஷோ’வாக பார்ட்டியும் ஃபீஸ்டும் கொடுக்கிறார்கள் அல்லது பேப்பரில் போடுகிற மாதிரி டொனேஷன் கொடுக்கிறார்கள்; ஆனால் பந்துத்வத்தோடு தங்கள் குடும்பத்திலேயே வசதி இல்லாதவர்களை ஸம்ரக்ஷிப்பது என்பது இப்போது அநேகமாகப் போயே போய்விட்டது.

அவிபக்த குடும்பமுறை (Joint- family system) போனபின் அண்ணன் தம்பி என்பதே போய்விட்டது. முன்பெல்லாம் இப்படி ஜாயின்ட்-ஃபாமிலியாக இருக்கும்போது, தாயார்-தகப்பனார், சிற்றப்பா பெரியப்பாமார்கள், அவர்களுடைய பத்னிகள், பிள்ளைகள், மாட்டுப்பெண்கள், பேரக்குழந்தைகள் என்று ஒரு வீட்டிலேயே 20, 25 பேர் இருப்பார்கள். இவ்வளவு பேர் இருக்கிறபோது, அநாதரவான தூர பந்துக்கள் நாலைந்து பேரைக் கூட வைத்துக்கொண்டு சோறு போடுவது ஒரு பாரமாகவே தெரியவில்லை. இப்போதோ அவனவனும் பெண்டாட்டியோடு கத்திரித்துக்கொண்டு தனிக்குடித்தனம் என்று போவதால் கூட ஒருத்தரை வைத்துக்கொள்வது என்றால்கூடச் சுமையாகத் தெரிகிறது. எத்தனையோ ஆயிரம், பதினாயிரம் வருஷங்களாக இருந்து வந்த ஏற்பாடுகள் இந்த இரண்டு, மூன்று தலைமுறைகளில் வீணாகப்போய், இங்கிலீஷ் ஃபாஷன் வந்ததில், உயர்ந்த தர்மங்கள் எல்லாம் நசித்துப் போய்விட்டன.

முதலில் ஏழையான பந்துக்களைக் கவனிக்க வேண்டும். சுபாசுப கார்யங்களுக்கு நாம் செலவழித்துக்கொண்டு நேரில் போகவேண்டும் என்பது கூட இல்லை. இந்தச் செலவையும் சேர்த்து அந்த வசதி இல்லாத உறவுக்காரனுக்கு அனுப்பி வைத்தால் அவனுக்கு எத்தனையோ உதவியாக இருக்கும்.

கல்யாணத்தில் நாம் பண்ணுகிற ஆடம்பரங்களையெல்லாம், 'வேஸ்ட்'களையெல்லாம் குறைக்க வேண்டும். இப்போது ஒரு கல்யாணம் என்றால் அதற்கு அவச்யமான வைதிக தக்ஷிணைகளுக்குக் கொடுப்பதில்தான் சுஷ்கம் பிடிக்கிறோம்! பாட்டுக் கச்சேரி, டான்ஸ் கச்சேரி, நாயனம், பான்ட் ஊர்வலம் என்று வேண்டாத விஷயங்களுக்கு வாரிவிடுகிறோம்.

4.43-வைதிக முறைகள் வளர உபகாரம்

கல்யாணம், உபநயனம் முதலியவற்றில் குறைவில்லாமல் தக்ஷிணை தருவது மட்டுமின்றிப் பொதுவாகவே வைதிகர்களுக்கு உபகாரம் செய்கிற எண்ணம் வளர வேண்டும். இது இல்லாததால்தான் அடுத்த தலைமுறைக்கு வைதிக கார்யம் செய்து வைக்கவே ஆள் கிடைக்காத மாதிரிச் செய்திருக்கிறோம். வேத ஸம்பந்தமான கார்யங்கள் லோகத்தில் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்கும்படி பண்ணுவதைவிட ஜன ஸமூஹத்துக்குப் பெரிய பரோபகாரம் எதுவும் இல்லை. இப்போது விநோபா 'பூதான்' என்று சொல்வதற்கு முன்னோடி பழைய காலத்தில் ராஜாக்களும், பிரபுக்களும் வேத வித்துக்களுக்கு நிலம் மானியம் பண்ணினதுதான்.

பரம தரித்ரர்களும் சாஸ்தரப் பிரகாரம் சுபாசுபங்களைச் செய்ய நாம் உபகரிக்க வேண்டும். 'ஷோ' இல்லாமல் சாஸ்த்ரப்படி மட்டும் செய்வதற்கு நிறையச் செலவே இராது.

என் பரோபகார லிஸ்ட் நீண்டுக்கொண்டே வருகிறது. அதிலே ஒவ்வொரு 'லொகாலிடி'யிலும் பரம ஏழைகளும் சொற்ப வாடகையில் பெறுமாறு ஒரு கல்யாண மண்டபம், ஒரு அபர காரிய ஸ்தலம் [உத்ர க்ரியைகள் செய்யுமிடம்] ஏற்படுத்துவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4.44-நீத்தார் கடன்

திவஸம், தர்ப்பணம் முதலான பித்ரு காரியங்களும் பரோபகாரத்தைச் சேர்ந்தவைதான் என்று நிறையச் சொல்லியாயிற்று. சிராத்தம் முதலானவை பித்ருக்கள் எங்கே, எப்படிப்பட்ட ஜன்மா எடுத்திருந்தாலும் அங்கே அவர்களுக்கு த்ருப்தி உண்டாக்கும் என்று சொன்னேன்.

ஒருத்தர் செத்துப் போனவுடனேயே பித்ரு லோகம்போய் விடுவதில்லை; இன்னொரு ஜன்மா எடுத்து விடுவதில்லை; இறந்து போனவனின் ஜீவன் ஒரு வருஷம் பிரயாணம் பண்ணித்தான் பித்ரு ஸ்தானத்தை அடைகிறது. இதை நம் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிற மாதிரியே க்ரீக் மைதாலஜி முதலான மதாந்தரங்களிலும் சொல்லியிருக்கிறது. ஜீவன் வைதரணி நதியைக் கடந்து யம பட்டணம் போகவேண்டும் என்று நாம் சொல்கிற மாதிரியே அவர்களும் ஒரு நதியை (Styx) சொல்லி அதைத் தாண்டி மறுலோகத்துக்கு (Hades) போக வேண்டும் என்கிறார்கள். நாம் சொல்கிற மாதிரியே யம பட்டணத்தில் இருக்கிற காவல் நாய்போல அவர்களும் ஒன்றை [Cerberus] சொல்கிறார்கள். ஒரு ஜீவன் பரலோகம் செல்வதற்குப் பிடிக்கிற இந்த ஒரு வருஷத்தில்தான் அதன் த்ருப்திக்காக மாஸா மாஸம் சில சடங்குகளைச் செய்வது. இம்மாதிரி பரலோக யாத்திரையில் வழிக்குணவு தருவதைக்கூட இதர மதங்களிலும் சொல்லியிருப்பதாகக் கேட்டிருக்கிறேன். Viaticum என்று கிறிஸ்துவர்கள் சொல்வது இதுதான் போலிருக்கிறது. பிள்ளை குட்டி இல்லாதவர்களுக்கும் நாம் கயை, பத்ரி போன்ற இடங்களில் பிண்டம் போடுவது போலவே, கிறிஸ்துவர்கள் All-Souls' Day என்று ஒரு நாளில் எல்லா ஆத்மாக்களின் த்ருப்திக்காகவும் வழிபாடு நடத்துகிறார்கள். லோகம் பூராவும் இப்படி ஒரு நம்பிக்கை, அபிப்ராயம் இருக்கிறது என்றால் அது ஸத்யமாகத்தான் இருக்க வேண்டும்.

பித்ரு காரியங்கள், 'உத்தரக்ரியை' என்ற பேரில் எல்லா ஜாதிக்காரர்களும் செய்யும் அபர காரியங்கள் ஆகியன யதோக்தமாக நடக்க ஸௌகர்யம் செய்து தரவேண்டும். இதிலே முதலில் வருவது ப்ரேத ஸம்ஸ்காரம். அதாவது இறந்து போனவரின் உடலை அவரவர் குலாசாரப்படி தஹனமோ, அடக்கமோ செய்வது. இது ரொம்பவும் அவச்யமான கர்மா.

4.45-ப்ரேத ஸம்ஸ்காரம்: சரீரத்தின் சிறப்பு

ஒரு கேள்வி தோன்றும், உடம்பை விட்டுப் போன ஜீவனின் த்ருப்திக்காக ச்ராத்தம் முதலானவை செய்வது பரோபகாரம் என்றால் ஸரிதான். ஆனால் ஜீவன் (உயிர்) போன இந்த வெறும் உடம்புக்கு எதற்கு ஸம்ஸ்காரம் என்று தோன்றலாம்.

"உயிரோடு இருக்கிறவர்களுக்கே உபகாரம் பண்ணமுடியாமலிருக்கிறது. செத்துப்போனபின் பிணத்துக்கு என்ன ஸேவை வேண்டிக் கிடக்கிறது? ஏதோ ஸம்பிரதாயம் என்று வந்துவிட்டதால், அதை விடுவதற்கு பயமாயிருப்பதால் அவாளவாள் வீட்டில் மரணம் நடந்தால் ப்ரேத ஸம்ஸ்காரம் பண்ணத்தான் வேண்டியிருக்கிறது. இது போதாதென்று, யாரோ அநாதை போய்விட்டானென்றால், அவன் உடம்பை முனிஸிபாலிடிக்காரர்கள் அடக்கம் செய்யப் போகும்போது, நாமெதற்கு வலுவிலே தடுத்து, 'ஸம்ஸ்காரம்' பண்ணுகிறேன் என்று இழுத்து விட்டுக்கொள்ள வேண்டும்? பிரேதமென்றாலே ஒரு பயம், கூச்சம் இருக்கிறது. இதில் ஸம்பந்தமில்லாததை எதற்காக நாமாக எடுத்துப்போட்டுக் கொள்ளவேண்டும்? உயிர்போன வெறும் கட்டையான உடம்புக்கு என்ன பரோபகாரம் வேண்டியிருக்கிறது?" என்று கேட்கலாம்.

சாஸ்திரங்களைக் கூர்ந்து பார்த்தால் ஒரு ஜீவன் சரீரத்தை விட்டுப் போய்விட்டாலும், அதன் அங்கங்களில் கண்ணில் ஸூர்யன், வாயில் அக்னி, கையில் இந்திரன் என்றெல்லாம்மிருக்கும் தேவாம்சங்கள் உடனே அதனதன் மூலஸ்தானத்துக்குப் போய்விடவில்லை என்று தெரிகிறது. பிரேத ஸம்ஸ்காரத்தின் மூலம்தான் அவற்றை அதனதன் ஸ்தானத்துக்கு அனுப்பி வைக்கிறோம். அபர மந்த்ரங்களைப் பார்த்தால் தெரியும்.

ஜீவாத்மா என்கிற புருஷன் பதினாறு கலை உள்ளவன் என்பார்கள். இதில் பதினைந்து கலைகள் மட்டுமே உயிராக இருப்பது என்றும், உடம்பும் ஒரு கலை என்றும், எனவே உயிர் போன பின்னும் ஒரு கலை உள்ள அந்த

உடலை ஈஸ்வரார்ப்பணமாக்கவே பிரேத ஸம்ஸ்காரம் தேவைப்படுகிறது என்றும் ஒரு அபிப்ராயம் உண்டு.

சாஸ்த்ரங்களில் தஹனம் பண்ணுவதை 'அந்த்யேஷ்டி'- அந்திய இஷ்டி - அதாவது 'இறுதியான வேள்வி' என்றே ரொம்பவும் உயர்த்திச் சொல்லியிருக்கிறது. கர்ப்பம் தரிப்பிலிருந்து ஒரு ஜீவனை ஒவ்வொரு பருவத்திலும் எப்படி சுத்தி பண்ண வேண்டும் என்பதற்காக சாஸ்த்ரங்களில் நாற்பது ஸம்ஸ்காரங்களைச் சொல்லியிருக்கிறது.*'ஸம்ஸ்காரம்'என்றால் 'நன்றாக ஆக்குவது' என்று அர்த்தம். ('நன்றாக ஆக்கப்பட்ட' பாஷைதான் 'ஸம்ஸ்க்ருதம்'.) உபநயனம், விவாஹம் ஆகிய எல்லாமே ஜீவனை அந்தந்த நிலையில் பக்குவப்படுத்துவதற்காக ஏற்பட்ட ஸம்ஸ்காரங்கள்தான். வாழ்நாள் கர்மா முழுவதையும் வேள்வியாக ஈஸ்வரனிடம் ஆஹூதி செய்துகொண்டே இருக்கிற ரீதியில் இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி வாழ்க்கையையே யாகமாகச் செய்த ஒருத்தனுக்கு, வாழ்க்கை முடிந்தபிறகு கடைசியில் மற்றவர்கள் செய்கிற யாகம்தான் - அதாவது அந்திய இஷ்டியே ப்ரேத ஸம்ஸ்காரமாகும். எந்த உடம்பை வைத்துக்கொண்டு பாக்கி யஜ்ஞங்களை ஒருத்தன் பண்ணினானோ, அந்த உடம்பையே சிதாக்னி [சிதைத் தீ] யில் ஹோமம் பண்ணிவிடுவதுதான் இது. ப்ரேத ஸம்ஸ்கார மந்த்ரங்களில் அப்படித்தான் சொல்லியிருக்கிறது. ஹோமத்துக்குரிய மற்ற வஸ்துக்களை நெய்யினால் சுத்தி செய்து அக்னியில் போடுகிற மாதிரித்தான் ப்ரேதத்தையும் சுத்தம் பண்ணி, தஹனம் செய்யச் சொல்லியிருக்கிறது. உடம்பு ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. மண்ணில் அடக்கம் பண்ணுவதானாலும் ஈஸ்வரார்ப்பணமே ஆகிறது.

இதைப்பற்றி இன்னும் கொஞ்சம் சொல்கிறேன்.

'தேஹம் ரொம்ப இழிவானது. இதிலிருந்து விடுபடவேண்டும்' என்று பெரியவர்கள் பாடி வைத்திருப்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இன்னொரு நிலையில் பார்த்தால் இந்த தேஹம் என்பது ஒரு மஹா அத்புதமான மெஷினாக இருக்கிறது. ஒரே மெஷினில் ஒவ்வொரு பாகம் ஒவ்வொரு தினுஸான கார்யத்தைச் செய்கிறது. கண் என்று ஒன்று வெளிச்சத்தையும்,

வர்ணங்களையும் பார்க்கிறது. காது என்று ஒன்று சப்தங்களைக் கேட்கிறது. இருக்கிறதெல்லாம் ஒரே ஆத்மா - இத்தனை அவயவங்களுக்குள்ளேயும் ஒரே ஜீவன்தான் இருக்கிறது என்றாலும், கண்ணும், காதும் கிட்டக்கிட்ட இருந்துங்கூட கண்ணால் கேட்க முடிவதில்லை; காதால் பார்க்க முடிவதில்லை! பக்கத்திலேயே வாய் என்று ஒன்று அதற்குத்தான் ருசி தெரிகிறது. பேசுகிற சக்தியும் அதற்கே இருக்கிறது. தொண்டையில் பல தினுஸாகக் காற்றைப் புரட்டி அழகாக கானம் செய்ய முடிகிறது. பல வஸ்துக்களைப் பிடிப்பதற்கு ஏற்றமாதிரி கையும் விரல்களும் அமைந்திருக்கின்றன. இந்த அமைப்பு கொஞ்சம் வேறுவிதமாக இருந்தாலும் இப்போது நாம் பண்ணுகிற கார்யங்களைப் பண்ண முடியாது. அடி எடுத்து வைத்து மேலே போவதற்கு வசதியாகக் காலின் அமைப்பு இருக்கிறது. நடக்கிறபோது கூடியமட்டும் ஜீவராசிகள் நசுங்காதபடி, பூரான் மாதிரியானவற்றின் மேலேயே நாம் பாதத்தை வைத்தால்கூட அவை நெளிந்துகொண்டு ஓட வசதியாக உள்ளங்கால்களில் குழித்தாற்போன்ற ஏற்பாடு, சப்பணம் கூட்டி உட்கார வசதியாக முழங்காலில் எலும்பு நரம்புகளின் அமைப்பு - என்று இப்படி ஒவ்வொன்றைப் பார்த்தாலும் பராசக்தி எத்தனை ஸூக்ஷ்மமான கல்பனையோடு ஒரு சரீரத்தைப் பண்ணியிருக்கிறாள் என்று ஆச்சரியமாக இருக்கிறது! ஆஹாரத்தை ஜெரிக்க ஒரு அங்கம், ஜெரித்ததை ரத்தமாக்க ஒரு அங்கம். மூச்சுவிட ஒன்று, ரத்தத்தை 'பம்ப்' பண்ண ஒன்று-எல்லாவற்றுக்கும் மேலே ஸகல கார்யங்களையும் டைரக்ட் பண்ணி கன்ட்ரோல் பண்ணும் மூளை - என்றெல்லாம் விசித்ர விசித்ரமாக பகவான் சரீரத்தைக் கல்பித்திருக்கிறான். சதை, ரத்தம், மஸில்ஸ், நரம்பு, எலும்பு என்ற ஒவ்வொன்றுக்கும் ஒரு 'பர்பஸ்'இருக்கிறது. எலும்புக்குள்ளேகூட மஜ்ஜை என்ற ஜீவஸத்து ஓடுவது ஒரு அதிசயம். மனித சரீரத்தில் இருக்கும் கோடிக்கணக்கான ஸெல்களில் ஒவ்வொன்றும் ஒரு அத்புத லோகம். இப்படித் தனித்தனியாக ஒவ்வொரு பாகமும் ஒரு அத்புதமான மெஷினாக இருப்பதோடு மட்டுமல்லாமல், எல்லாமாக ஒன்றுக்கொன்று இசைவாக ஸஹாயம் செய்து போஷித்துக் கொள்வதும் மஹா அதிசயமாக இருக்கிறது. ஆனபடியால், எவனோ லக்ஷத்தில் ஒருவன் தேஹம் பொய், மனஸ் பொய் என்று புரிந்துகொள்ளும்

ஞானியாக ஆனாலும், பாக்கி எல்லாரும் பகவான் தந்திருக்கிற இந்த அத்புதமான மெஷினை வைத்துக்கொண்டு தர்மமாக வாழத்தான் முயற்சி பண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த தர்ம வாழ்க்கையிலிருந்துதான் அப்புறம் ஞானத்துக்குப்போக வேண்டியவர்களாயிருக்கிறோம்.

யோசித்துப்பார்த்தால், சரீரத்தை ஏன் மட்டம் என்று திட்டவேண்டும்? அது என்ன பண்ணுகிறது? அது மனஸின் கருவி மட்டும்தானே? கையையும் காலையும் கண்ணையும் வாயையும் மனஸ் நல்லபடி ஏவினால் சரீரம் நல்லதே செய்யும். கை பரோபகாரம் பண்ணும்; அல்லது அர்ச்சனை பண்ணும். கால் கோயிலுக்குப் போகும். கண் ஸ்வாமி தர்சனம் பண்ணும், வாய் ஸ்தோத்ரம் சொல்லும், அல்லது எல்லோருக்கும் ப்ரிய வசனம் சொல்லும். ஆனதால் 'நிஷித்தம்' என்று சரீரத்தைக் திட்டுவதுகூட தப்புத்தான். "தர்மத்தைச் செய்ய சரீரம்தானே ஸாதனமாயிருக்கிறது?"– சரீரம் ஆத்யம் கலு தர்ம ஸாதனம் – என்று வசனமே இருக்கிறது. " தேஹோ தேவாலய: ப்ரோக்தா" உள்ளே இருக்கிற பரமாத்மாவுக்கு இந்த உடம்பே ஆலயம் என்கிறோம். ' காயமே கோயிலாக ' என்று அப்பரும் சொன்னார். திருமூலரும் இப்படியே, "முன்னே உடம்பு ரொம்ப நிஷித்தம் என்று மட்டமாக நினைத்தேன். அப்புறம் அதற்குள்தான் ஈஸ்வரன் குடிகொண்டிருக்கிறான் என்று தெரிந்துகொண்டதும், உடம்பை ஓம்பலானேன்" என்று திருமந்திரத்தில் சொல்கிறார்*.

ஆனதால் இப்படிப்பட்ட அத்பதமான, பகவான் கொடுத்த மெஷினை விட்டு உயிர் போனதும் அதைக் கன்னாபின்னா என்று 'டிஸ்போஸ்' பண்ணக்கூடாதுதான். மஹா ச்மாசானவாஸியான பரமேஸ்வரனுக்குத்தான் அதை ஆஹுதி பண்ண வேண்டும். எவன் இந்த உடம்பைக் கொடுத்தானோ அவனுக்கே அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். உலகத்தில் எந்த தேசத்திலுமுள்ள காட்டுக்குடிகள் உள்பட எல்லோரும் ஏதோ ஒரு தினுஸில் இதைத்தெரிந்து கொண்டிருப்பதால்தான் எங்கே பார்த்தாலும் ப்ரேத ஸம்ஸ்காரம் என்பது ஒரு பெரிய ஸமயச் சடங்காக இருக்கிறது.

செத்துப்போனபின் ஒரு உடம்புக்குள் தேவதாம்சங்கள் ஒட்டிக்கொண்டிருப்பதாக நம்பாவிட்டாலுங்கூட ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். இத்தனை நாள் அதற்குள் இருந்த ஜீவன் ஈஸ்வர சைதன்யத்தின் ஒரு திவலையல்லவா? எப்போதோ ஸ்வாமி விக்ரஹம் வைத்த புறை என்றால்கூட, இப்போதும் அதில் கண்ட கண்டதுகளை வைக்காமல் ஒரு அகலை ஏற்றிவைக்க வேண்டும் என்று தானே தோன்றுகிறது? அப்படியிருக்க ஈஸ்வர சைதன்யத்தின் அம்சம் இருந்த body-ஐ மரியாதை தந்து மந்த்ரபூர்வமாகதானே dispose செய்ய வேண்டும்?

ஒருத்தன் தன்னுடைய சரீரத்தால் அநேக நன்மைகளைச் செய்தானென்றால், உயிர்போன பின்னும் அந்த சரீரத்துக்கு மரியாதை பண்ணத்தான் வேண்டும். நாஸ்திகர்கள்கூடத் தங்கள் தலைவர்களின் ம்ருத சரீரத்துக்கு மலர்வளையம் வைக்கிறார்களே! ஒருவன் சரீரத்தைக் கெட்டத்திற்கே பயன்படுத்தினான் என்றாலும்கூட, அவனுக்கு அந்த சரீரத்தை இயக்கியது ஈஸ்வர சக்தி என்று தெரியாவிட்டாலும் நமக்குத் தெரிவதால் அதற்குரிய ஸம்ஸ்கார மரியாதையைப் பண்ணத்தான் வேண்டும். "அவனாக இந்த சரீரத்தைக் கொண்டு ஈஸ்வரார்ப்பணமாக எந்த நல்லதும் செய்யாமல் போய்விட்டாலும், அதற்கும் ஈடாக, ப்ராயச்சித்தமாக இப்போது நாமாவது இதையே ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் செய்வோம்" என்ற எண்ணத்துடன் ஸம்ஸ்காரம் பண்ணவேண்டும்.

சைவ ஸித்தாந்தத்தில் ஈஸ்வரன்தான் ஜீவனுக்குத் தநு, கரண, புவன, போகங்களைத் தருகிறான் என்பார்கள். லோகத்தை (புவனத்தை) படைத்து, அதிலுள்ள போகங்களை அநுபவிப்பதற்காகவே மநுஷ்ய சரீரத்தை (தநுவை) ஸ்ருஷ்டிசெய்து அதில் கரணங்கள் என்ற இந்திரியங்களை அவன் வைத்திருக்கிறான். கர்மாவைத் தீர்த்துக்கொள்ளும்வரை போகங்களை அநுபவித்துத்தான் ஆகவேண்டும் என்று இப்படி வைத்திருக்கிறான். எனவே அவனுடைய பிரஸாதமான தநுவைக் கரணங்கள் ஓய்ந்த பிற்பாடும் அதற்குரிய கௌரவத்தைக் கொடுத்து ஸம்ஸ்கரித்துத்தான் அவனிடம் வேள்விப்பொருளாகத் திரும்பக்கொடுக்க வேண்டும்.

இதிலே ஒரு வித்யாஸம். மற்ற வேள்விகளை, இஷ்டிகளை ஒரு ஜீவன், தானே பண்ணுகிறான். ஆனால் செத்துப்போன பிறகு உடம்பை பகவானுக்குக் கொடுக்கிற இந்த அந்திய 'இஷ்டி'யை அவன் பண்ணமுடியாது. மற்ற ஸம்ஸ்காரங்களைப் பண்ணுவதும், பண்ணாததும், அதனால் புண்ய பாபங்களை ஸம்பாதிப்பதும் அந்தந்த ஜீவனுடைய கார்யந்தான். இவற்றில் மற்றவர்களுக்கு பொறுப்பு இல்லை. ஆனால் ப்ரேத ஸம்ஸ்காரம் மற்றவர்களே செய்ய வேண்டியது அல்லவா? அதனால் அதில் பொறுப்பு மற்றவர்களுக்குத்தான். எனவே இதை ஸரியாகச் செய்யாவிட்டால் நமக்குத்தான் பாபம்.

'உயிரோடு இருக்கிறவரையில் உபகாரம் பண்ண வேண்டியதுதான்; போன உயிரும் வேறு எங்கோ இருக்குமாதலால் அதற்கு ச்ராத்தாதிகள் பண்ண வேண்டியதுதான்; ஆனால் உயிர்போன உடலுக்கு எதற்கு ஸம்ஸ்காரம்?' என்று முதலில் கேட்டுக்கொண்டோம். இப்போது அலசிப் பார்த்துக் கொண்டதிலோ பகவானின் பராமத்புத ஸ்ருஷ்டியான சரீரம் உயிரற்ற பிறகுங்கூட அதற்கான மரியாதையைப் பெற்று பகவானிடமே சேர்ப்பிக்கப்பட வேண்டும்; உடம்புக்குச் செய்கிற இந்த ஸம்ஸ்காரந்தான் முழுக்க நம் பொறுப்பில் இருப்பது; அதனால் இதைச் செய்யாவிட்டாலே நமக்குப் பெரிய தோஷம் என்று தெரிகிறது!

---

*"தெய்வத்தின் குரல்", இரண்டாம் பகுதியில் "நாற்பது நமஸ்காரம்" என்றே முகுடமிட்ட கட்டுரையில் விவரங்கள் காணப்படும்.

*_உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்_
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.

4.46-அநாதைப் பிரேதம்

உறவுக்காரர்கள் என்றால் அபர கார்யம் ஏதோ ஒரு தினுஸில் செய்துவிடுகிறோம். செய்வதில் குறையிருக்கலாம். ஆனால் அடியோடு செய்யாமலே விடுவதில்லை அமாவாஸைத் தர்ப்பணம், ச்ராத்தம் முதலியவற்றை நிறுத்திவிட்டவர்களாக இருந்தாலும், ஹிந்துக்களாகப் பிறந்தவர்களில் நாஸ்திகர்களைத் தவிர எவரும் பந்துக்களுக்கு ப்ரேத ஸம்ஸ்காரம் (அவரவர் குலாசாரப்படி தஹனமோ, அடக்கமோ) செய்ய மட்டும் தவறுவதில்லை.

ஸரி, உறவுக்காரர்கள் இல்லாமல் நிராதரவாக இருக்கிறவர்களின், இறக்கிறவர்களின் கதி என்ன? அநாதைகள் செத்துப்போகும்போது, அவர்களுடைய சரீரம் என்கிற பகவான் படைத்த மெஷினின் கதி என்னவாகிறது? ஸமூஹமேதான் இவர்களுடைய ப்ரேத ஸம்ஸ்காரத்துக்கு ஏற்பாடு பண்ணவேண்டும் என்பது சாஸ்த்ரம்.

இவ்விஷயத்தில் நம் ஹிந்து மதத்தின் அவல நிலைமை எனக்கு வேதனையாக இருக்கிறது. இப்போது நான் சொல்லிச் சொல்லிக் கொஞ்சம் வேதனை தணியும்படியான ஏற்பாடுகள் அங்கங்கே நடந்தாலும், இது போதாது. முன்னெல்லாம் எனக்கு இன்னமும் ரொம்ப வேதனையாக இருந்திருக்கிறது. அப்போதெல்லாம் ஆஸ்பத்திரியிலோ, ஜெயிலிலோ அல்லது நடுத்தெரு ஒன்றிலோ ஒரு ஹிந்து அநாதை செத்துப்போனான் என்றால், எடுத்து ஸம்ஸ்காரம் செய்ய எந்த ஏற்பாடும் இல்லாமல் இருந்தது. இப்போதுகூட அநேக ஊர்களில் இப்படித்தான் இருக்கிறது. ஆஸ்பத்திரிக்காரர்களே போஸ்ட் மார்டம் பண்ணி, ஆராய்ச்சிக்காகப் பண்ண வேண்டியதைப் பண்ணிப் புதைத்துவிடுவது, முனிஸிபாலிடி அல்லது பஞ்சாயத்துக்காரர்கள் கொண்டுபோய்ப் புதைத்துவிடுவது என்றுதான் நடந்துவருகிறது. சாஸ்த்ர ப்ரகாரமான ஸம்ஸ்காரமில்லாமல் இப்படி ஒரு சரீரத்தை விடுவது நம் ஸமூஹத்துக்கே களங்கம், பாபம்.

இதர மதஸ்தர்கள் இந்த விஷயத்தில் தக்க ஏற்பாடுகள் பண்ணியிருக்கிறார்கள். அவர்களுடைய சாஸ்த்ரப்படி பகவானிடம் ஒரு

சரீரத்தை ஒப்பிக்காமல் விடுகிற தோஷம் அந்த ஸமூஹங்களுக்கு வருவதேயில்லை.

4.47-ஹிந்து ஸமூஹத்தின் தோஷம்

எந்த கட்டுப்பாடும் இல்லாத ஹிந்து ஸமூஹந்தான் இந்தப்பெரிய தோஷத்துக்குப் பாத்திரமாகிக் கொண்டிருக்கிறது. மற்ற மதஸ்தருக்கு சக்தி வாய்ந்த ஆர்கனைஸேஷன்கள் இருக்கிறமாதிரி நம் ஸமூஹத்தை கவனிக்க யார் இருக்கிறார்கள்? மடம் என்று வைத்துக் கொண்டு உங்கள் பணத்தையெல்லாம் வாங்கிக்கொண்டு, குரு ஸ்தானம் கொண்டாடிக் கொண்டிருக்கிற என்னால்தான் என்ன ப்ரயோஜனம்? ஆஸேது ஹிமாசலம், இந்த தேசத்தில் எங்கே ஒரு அநாதை ஹிந்து செத்துப்போனாலும் அவன் சரீரத்தை சாஸ்த்ரப்படி ஸம்ஸ்காரம் பண்ணுவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய எனக்குக் கையாலாகவில்லை. ஆனாலும், இதில் குரு ஸ்தானம் என்ற பெத்த பேர் எனக்கு இருப்பதால், பொறுப்பு எனக்குத்தான் ஜாஸ்தி என்றாவது தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னால் முடிந்தது, நம் ஸமூஹத்தின் நிலைமை இப்படி இருக்கிறதே என்று நிஜமாக துக்கப்படுகிறேன். என் வார்த்தையைக் கேட்கக்கூடியவர்கள் என்று தோன்றுகிற உங்களிடம் என்னால் முடிந்தமட்டும் சொல்கிறேன்.

நீங்கள் பாபம் பண்ணினால், அது உங்களைத் திருத்தாமலே 'குரு' என்று பேர் மட்டும் வைத்துக் கொண்டிருக்கிற என்னைத்தான் சேரும். எனக்கு நீங்கள் நமஸ்காரம் பண்ணுகிறீர்கள் அல்லவா? அதனால் உங்கள் பாபத்தைப் போக்குகிற பொறுப்பையும் என்னிடந்தான் ஒப்படைக்கிறீர்கள்.

'அநாதை ப்ரேதம்' ஒரு பக்கம் இருக்கட்டும் – ஹிந்து ஸமூஹமே அநாதையாக இருக்கிற இப்போது, இந்த ஸமூஹத்தை நாதனுள்ளதாக்கி, அது சாஸ்த்ரப்படி புனிதமாக விளங்கும்படிப் பண்ணவேண்டிய கடமையை நான்தான் கண்ணும் கருத்துமாக ஆற்றியாக வேண்டும்.

இந்த அநாதை ப்ரேத ஸம்ஸ்காரத்துக்காகத்தான் ஒவ்வோர் ஊரிலும் 'ஹிந்துமத ஜீவாத்ம கைங்கர்ய ஸங்கம்' என்று ஆரம்பிக்கச் சொல்லி வந்தேன். அநேக ஊர்களில் அப்படி ஏற்பாடு பண்ணி நன்றாக உருவாகியும் இருக்கிறது. முக்யமாக கும்பகோணத்தில் இந்த ஸங்கம் ரொம்பவும் நன்றாக நடந்து வருகிறது. ஆஸ்பத்திரிக்காரர்களும், முனிஸிபாலிடிகாரர்களும், ஜெயில் அதிகாரிகளுமே இந்த ஸங்கத்துகாரர்களைக் கூப்பிட்டுத் தங்களிடம் சேரும் அநாதை ப்ரேதத்தை ஒப்பிக்கிற அளவுக்கு அங்கே இந்த உத்தமமான தொண்டு வேர் பிடித்துவிட்டது.

இதற்காகத் தனி ஸங்கம் இல்லாவிட்டாலும், அந்தந்த ஊர் பஜனை கோஷ்டிகளே வாரவழிபாடும், மற்ற பொதுநலப்பணிகளும் பண்ணுவதோடு அநாதை ப்ரேத ஸம்ஸ்காரத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். நூறோடு நூற்றியொன்று என்று இல்லாமல், தாங்கள் செய்கிற மற்ற எல்லாப் பணிகளையும்விட இதுவே உத்க்ருஷ்டமானது என்ற உணர்வோடு செய்ய வேண்டும்.

4.48-இதுதான் அஸ்வமேதம்

பரோபகாரத்தைப் பற்றி லெக்சர் அடிக்க ஆரம்பித்தபோது, 'நம் எல்லோராலும் அஸ்வமேத யாகம் பண்ணமுடியுமா?' என்று ஒரு கேள்வி கேட்டேன். அப்புறம் 'எதற்காக அஸ்வமேதம்?' என்று கேட்டேன். " **ஹயமேத ஸமர்ச்சிதா**" – "அஸ்வமேதத்தால் விசேஷமாக வழிபடப்படுபவள்" என்று அம்பாளுக்கு ஒரு பெயர் இருக்கிறது. ஆனதால் அம்பிகையின் பூர்ண அநுக்ரஹத்தைப் பெறுவதற்காகவே அஸ்வமேதம் செய்யவேண்டும் என்று பதில் சொன்னேன். .ஆனால் இந்தக் கலிகாலத்தில், ரொம்பவும் நியமங்கள் தேவைப்படும் அஸ்வமேதம் செய்வது அஸாத்யமாயிற்றே, இதற்கு என்ன பண்ணுவது என்று கேட்டேன். பரோபகாரங்களில் ஒன்றை பண்ணினால் அதுவே அஸ்வமேதத்துக்கு ஸமானம் என்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது என்றும் ஆகையால் இந்தப் பரோபகாரத்தைப் பண்ணிவிட்டால் நாம் அம்பாளின் பூர்ணாநுக்ரஹத்தைப் பெற்றுவிட முடியும்

என்று இதற்கு பதில் சொன்னேன். அப்புறம் பரோபகாரங்கள், ஜீவகாருண்யப் பணிகள் பலவற்றைப் பற்றிக் கதை அளந்துகொண்டே போனேன். ஆனால் இதுவரை அஸ்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற அந்த ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும்விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால் அதுதான் அநாதை ப்ரேத ஸம்ஸ்காரம்.

அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்
அஸ்வமேத பலம் லபேத்
என்பது சாஸ்த்ர வசனம்.

பர-உபகாரமாக, செத்துப்போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும்போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கும் உபகாரம் பண்ணிக்கொள்கிறோம்.

டாக்டர் ஒருத்தர் கேட்டார், "Unclaimed bodies ஆகச் சில அநாதைப் பிரேதங்கள் கிடைப்பதிலும் ஒரு உபகாரம் இருக்கிறது. இந்தமாதிரிப் பிணங்களைத்தான் நாங்கள் போஸ்ட்-மார்ட்டம் பண்ணி, பரிசோதனைக்காக உறுப்புக்களை எடுத்துக்கொள்ள முடிகிறது. மெடிகல் காலேஜ், மெடிகல் எக்ஸிபிஷன் முதலானவற்றில் anatomy (தேக இயல்) -ஐ விளக்க இந்தப் பிரேதங்கள்தான் உதவுகின்றன. இவற்றையும் உங்கள் ஜீவாத்ம கைங்கர்யக்காரர்கள் வாங்கிக்கொண்டு போய்விட்டால் மெடிகல் ஸயன்ஸ் அபிவிருத்தி என்ன ஆவது?" என்று கேட்டார். அப்படியானால் டாக்டர்கள் வேண்டுமானால் தாங்கள் போன பிற்பாடு தங்கள் சரீரத்தைப் போஸ்ட் மார்டத்துக்குக் கொடுத்துவிடலாம் என்று பதில் சொன்னேன். சாஸ்த்ரோக்தமாக இதில் கொஞ்சம் தோஷமிருந்தாலும், இதிலே ஒருத்தன் மனமறிந்து, மனப்பூர்வமாகச் செய்கிற தியாகம் இருப்பதால் தோஷ நிவ்ருத்தி என்று வைத்துக்கொள்ளலாம். அதோடுகூட, முன்னே, அவனவன் தன் தொழிலில் ஏற்படுகிற தோஷம் போக அந்தத் தொழிலாலேயே தியாக ரூபமாக உதவி செய்ய வேண்டுமென்றேனே, அதில் மேலும் ஒருபடியாக, தொழிலால் பிறருக்கு உபகரித்து மட்டுமில்லாமல், சாவிலும் தன் தொழிலுக்கு மூலமான வித்யைக்கே உபகரித்ததாகவும் இது இருக்கும்.

`இதர மதஸ்தர்கள் ஜெயிலிலும், ஆஸ்பத்திரியிலும், நடுத்தெருவிலும் ஸம்பவிக்கும் அநாதை மரணங்களில் ஒன்றுகூட விட்டுப்போகாமல், தங்கள் தங்கள் மதப்படி ஸம்ஸ்காரம் செய்கிறார்கள்; இப்படிப்பட்ட ஹிந்து ப்ரேதங்கள் மாத்திரம் பெரும்பாலும் ஸர்க்கார் சிப்பந்திகளாலேயே ஒருவிதமான சடங்கும் இல்லாமல் புதைக்கப்படுகின்றன' என்கிற பாபமும், அவமானமும் நம்மைச் சேராமலிருக்க இப்போதாவது எல்லா ஊர்களிலும் தகுந்த ஏற்பாடு பண்ணியாக வேண்டும்.

4.49-ராமனும் கண்ணனும் காட்டிய வழி

தர்மத்தை நமக்கெல்லாம் நடத்திக்காட்ட வந்த ஸ்ரீராமசந்த்ரமூர்த்தியே இந்த ப்ரேத ஸம்ஸ்காரத்தை விசேஷமாகச் செய்து காட்டியிருக்கிறார். ஜடாயு மாதிரியான ஒரு பக்ஷிக்குக்கூட அவரே ஸம்ஸ்காரம் செய்திருக்கிறார். அதுமட்டுமில்லை, வாலியையும் பரம வைரியான ராவணனையுங்கூட அவர் வதைத்தவுடன் அங்கதனையும் விபீஷணனையும் கொண்டு அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாமல் தஹனம் பண்ணச் செய்திருக்கிறார். ஏனென்றால் அந்த சரீரங்களுக்குள் இருந்த மனஸ்தான் அவற்றை துஷ்டத்தனமாக நடத்திற்று. உயிரோடுகூட அந்த மனஸ் வெளியேறிய அப்புறம் ஸ்வயமாகக் கெடுதல் இல்லாத, பகவானுடைய அத்புத ஸ்ருஷ்டியான அந்த உடம்புகளுக்கும் உரிய மரியாதையைச் செய்வதில் ராமரே கண்ணும் கருத்துமாக இருந்து, யதோக்தமாக ஸம்ஸ்காரம் பண்ணுவித்திருக்கிறார். க்ருஷ்ண பரமாத்மாவும் கௌரவர்கள் உள்பட எல்லாருக்கும் குருக்ஷேத்ரத்தில் அந்திம ஸம்ஸ்காரம் பண்ணுவித்து, அப்புறம் த்ருதராஷ்ட்ரனையும் பாண்டவர்களையும் கங்காதீரத்துக்கு அழைத்துக் கொண்டு போய் தர்ப்பணாதிகள் செய்வித்திருக்கிறார்.

ஆனதால், அநாதை ப்ரேத ஸம்ஸ்கார விஷயத்தில் கவனக்குறைவாக இருப்பது நம்முடைய ஹிந்து ஸமூஹத்துக்கு உள்ள பெரிய தோஷம் – மன்னிக்க முடியாத தோஷம். இனிமேலாவது இதற்கு ஒரு ஏற்பாடு பண்ணிப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ள வேண்டும்.

அநாதையாக ஒருவன் செத்துப்போனதாகத் தெரிந்தால், அவன் என்ன ஜாதியாக இருந்தாலும், தீண்டாதவனாக இருந்தாலும், அவனுடைய குலாசாரப்படி, அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு, யதோக்தமாக ஸம்ஸ்காரம் செய்வதற்குப் பொருளுதவி பண்ண வேண்டும். இதற்காகப் பலர் சேர்ந்து பணம் போட்டு மனஸாரப் பணி புரிய வேண்டும். ஏகதேசமாகச் செய்ய சக்தியுள்ள தனிகர்கள் இதைப் பெரிய தர்மம் என்று புரிந்துகொண்டு விசேஷமாக உதவி செய்ய வேண்டும். அநேக தர்ம ஸ்தாபனங்கள், ட்ரஸ்ட்டுகள் நம் ஹிந்து ஸமூஹத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களும் அநாதை ப்ரேத ஸம்ஸ்காரம் உத்தமமான கைங்கர்யம் என்று 'ஸ்பெஷல் இன்டரெஸ்ட்' எடுத்துக்கொண்டு, இதற்காக தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டும்.

4.50-சிலரது கஷ்டம் பலருக்குப் பரீக்ஷை

லோகத்தில் சிலபேர் ஏன் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள் என்றால், மற்றவர்கள் அவர்களுக்குப் பரோபகாரம் செய்கிறார்களா என்று பார்ப்பதற்காகத்தான் ஈஸ்வரன் இப்படிப் பரீக்ஷை பண்ணுகிறான் என்று சொல்வதுண்டு. 'அவனவன் தன் கர்மாவுக்காகக் கஷ்டப்படுகிறான்; நாம் உதவி பண்ணினாலுங்கூட அவன் பலன் அடைய முடியாதபடி கர்மா குறுக்கே நிற்கலாம்' என்பதும் வாஸ்தவம்தான். ஆனால், நம் உபகாரத்தால் அவர் கர்மா தீருகிறதோ, தீரவில்லையோ, நம்மாலான ப்ரயாஸையை நாம் பண்ணுவதுதான் மநுஷ்ய தர்மம். ஒருத்தனைக் கர்மாவுக்காக தண்டிக்கிறபோதே ஈஸ்வரன் மற்றவர்களுடைய பரோபகார சித்தத்துக்கும் அதை ஒரு 'டெஸ்ட்'டாக வைக்கிறான் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் உபகாரம் பண்ணியும் அது அவனுக்கு ப்ரயோஜனமாகாவிட்டால்தான், கஷ்டம் என்பது அவன் கர்மாவுக்குத் தண்டனை என்று சொல்லலாம். அநேக ஸமயங்களில் பரோபகாரத்தினால் பிறத்தியார் கஷ்டத்தைப் போக்கவும் முடிகிறதே! இப்படியானால் என்ன அர்த்தம்? நாம் பரோபகாரம் பண்ணி அவன் கஷ்டத்தைப் போக்குகிறோமா என்று பகவான் 'டெஸ்ட்' பண்ணியதாகத்தானே அர்த்தம்?

இதே மாதிரிதான், தனி மனிதனுக்குக் கஷ்டம் வருகிறதுபோலவே, ஒரு ஜன ஸமுதாயத்துக்கே பஞ்சம், வெள்ளம், எரிமலை, பூகம்பம், தீவிபத்து முதலான உத்பாதங்கள் ஏற்படுவதிலும் மற்றவர்களுடைய பரோபகார சிந்தனைக்கு பகவான் வைக்கிற பரீக்ஷையும் சேர்ந்திருக்கும். இம்மாதிரி நிவாரணப் பணிகளைப்பற்றி நான் இதுவரை சொல்லவில்லை. விசேஷமாக இதைபற்றிச் சொல்லி வற்புறுத்த வேண்டியதுமில்லை. இப்படி ஒரு பெரிய கஷ்டம் பலபேருக்கு ஏற்படுகிறது என்றால், யாரும் சொல்லாமலே பணத்தாலோ, சரீரத்தாலோ உதவிபண்ண வேண்டும் என்ற எண்ணம் அவரவர்க்கும் பொங்கிக்கொண்டு வரவேண்டும். ஸர்க்கார், ரெட் க்ராஸ், ராமக்ருஷ்ணா மிஷன் முதலானவர்களோடோ, அல்லது தாங்களாகவே ஸங்கமாகச் சேர்ந்தோ, அல்லது தனிப்பட்ட முறையிலோ, எப்படியானாலும் இந்த மாதிரியான calamity-களில் ஒவ்வொருவரும் பணிசெய்ய வேண்டியது அவசியம்*. தனி மனிதனின் கஷ்டத்துக்கு மூலகாரணம் அவனுடைய பூர்வ கர்மா என்கிறாற்போலவே, இப்படிப்பட்ட விபத்துக்களையும் "Natural calamity", "இயற்கையின் சீற்றம்" என்று இந்த நாளில் எழுதினாலும், இதெல்லாம் பொதுவாக மநுஷ்ய ஸமூஹம் முழுதுமே பண்ணும் பாபத்துக்காக பகவான் தருகிற தண்டனைதான் என்று சாஸ்த்ரம் சொல்லும். தண்டனையாகப் பெற்று வருத்தப்பட்டுக்கொண்டேதான் அந்தப் பாபத்தை நாம் தீர்க்க வேண்டும் என்றில்லை. இம்மாதிரி ஸமயங்களில் நாம் பண்ணுகிற மனப்பூர்வமான கஷ்ட நிவாரணத் தொண்டாலும் பாபத்தில் பாக்கியிருப்பதைப் போக்கிக்கொண்டு விடலாம். இப்படித் தொண்டு செய்யாமல் கருங்கல் மாதிரி இருந்தால் அதுவே ஒரு பாபம். இன்றைக்கு ஜன ஸமூஹத்தின் பிரதிநிதியாக இன்னொருத்தன் வாங்கிக்கொண்ட தண்டனை, கல்மாதிரி இருக்கிற நமக்கே நாளைக்கு வரும்.

ஒருத்தனுடைய கஷ்டத்தில் இப்படி இன்னொருத்தனுக்கு டெஸ்ட் இருக்கிறது. அதிலே பாஸ் பண்ணினால் ப்ரைஸ் கிடைக்கும். சிலபேர் ரொம்பவும் பரிதாபகரமாக. கேட்பார் யாருமின்றி அநாதையாகச் சாவதிலேயே மற்றவர்களுக்கு ஒரு பரீக்ஷை வைக்கிறான் பகவான். "இவர்கள் தன்னால் படைக்கப்பட்ட அந்த அத்புதமான சரீர மெஷினை அதற்குள்ள மரியாதை

கொடுத்து, ஸம்ஸ்காரம் பண்ணித் தன்னிடம் சேர்க்கிறார்களா?" என்று பரமேஸ்வரன் பார்க்கிறான். பரீக்ஷைக்குப் பரிசு என்னவென்றால் பரதேவதையின் கடாக்ஷம்.

அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்
அச்வமேத பலம் லபேத்

என்கிறபோது, ஓர் அநாதை ப்ரேதத்துக்கு ஸம்ஸ்காரம் பண்ணுவிக்கிறவனுக்கு ஈஸ்வரன் ஓர் அஸ்வமேதம் பண்ணினால் எவ்வளவு புண்ணியமோ அவ்வளவு புண்யத்தை ப்ரைஸாகக் கொடுத்துவிடுகிறார் என்று நேர் அர்த்தமானாலும் இந்த அஸ்வமேதமே அம்பாளுக்கு ஆராதனை என்று 'த்ரிசதி'சொல்லுவதால் அவளுடைய பரமகிருபையே பலனாகக் கிடைக்கிறது என்றும் அர்த்தமாகிறது.

நமக்கு வேண்டிய பெரிய ப்ரைஸ் ஸாக்ஷாத் அம்பாளின் அநுக்ரஹம்தான். அஸ்வமேத புண்யபலனாக தேவலோகத்துக்கோ ப்ரம்மலோகத்துக்கோ போய் நமக்கு ஒன்றும் ஆகவேண்டாம். அங்கெல்லாம் போனாலும் புண்யம் தீர்ந்த பின் – ரூபாய் செலவழிகிற மாதிரி, செலவழித்த பின் – பூலோகத்துக்குத் திரும்பி வந்துதான் ஆகவேண்டும். ஆனால் அம்பாளின் சரணார விந்தங்களுக்குப் போனோமானால் திரும்பவே வேண்டாம். நித்யானந்தம் என்ற சாஸ்வத ஸௌக்யம் அதுதான்.

அந்த அம்பாள் எப்படி இருக்கிறாள்?' த்ரிசதி' வாக்கியபடி ' **ஹயமேத ஸமர்ச்சிதா** ' வாக இருக்கிறாள். அதாவது அஸ்வமேதம் செய்தால் அதையே தனக்குப் பெரிய ஆராதனையாக எடுத்துக்கொண்டு அநுக்ரஹம் பண்ணுகிறவளாக இருக்கிறாள். நமக்குத்தான் ஸுலபமான அஸ்வமேதமாக அநாத ப்ரேத ஸம்ஸ்காரம் இருக்கிறதே! இதனால் கிடைக்கிற பலனை அம்பாளின் அநுக்ரஹமாக எக்ஸேசேஞ்ச் பண்ணிக்கொண்டால் அது ஒருநாளும் செலவழியாத புண்யக் கரன்ஸியாக, அக்ஷயமாக இருந்துகொண்டு நம்மை இந்த லோகத்துக்கு மறுபடியும் அனுப்பாமல் காப்பாற்றும். இன்னொருத்தனுக்குச் செய்கிற மரண ஸம்ஸ்காரமே நம்மை ஜனன மரணங்களிலிருந்து விடுவிக்கக் கை கொடுக்கும்.

ஆனதால், அநாத ப்ரேத ஸம்ஸ்காரத்தில் நாம் அலக்ஷ்யமாக இருக்கிறோமென்றால் நாம் அசடு என்று அர்த்தம். பரமாத்மா ரொம்ப ஸுலபமாக ஒரு பரீக்ஷை வைத்து அஸ்வமேத பலனை, அம்பாளின் ப்ரீதியை நாம் அடைவோமா என்று பார்க்கிறபோது, நாம் இதைக் கோட்டை விட்டுவிட்டு நின்றால் அசடு என்றுதானே அர்த்தம்?

ஆகையால் எந்த ஜாதியானாலும் அநாதை ப்ரேதங்களைப் பற்றி நமக்குத் தெரிய வந்தால், "இந்தக் கைங்கர்யம் நமக்குக் கிடைத்ததே!" என்று அதற்குரிய ஸம்ஸ்காரத்தைப் பண்ணுவித்து, ஒரு பெரிய அஸ்வமேத யாக பலனை அடையும் ஸந்தர்ப்பத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இனிமேல் ஒரு ஹிந்து ப்ரேதத்தை ராஜாங்க ஸேவகர்கள் ஒரு சடங்குமில்லாமல் புதைத்தார்கள் என்ற அபக்யாதி நமக்கு இருக்கக்கூடாது. செத்துப்போன உடம்புக்கு என்ன முக்யம் என்றில்லாமல், இந்த ஸம்ஸ்காரமே எல்லாப் பரோபகாரத்துக்கும் அஸ்திவாரம் என்ற உணர்வோடு இதிலே அக்கறை காட்ட வேண்டும்.

'ஹயமேத ஸமர்ச்சிதா' என்று 'த்ரிசதி' யில் அம்பாளுக்குப் பெயர் இருப்பதுபோல் 'ஸஹஸ்ர நாம'த்தில் **"வர்ணாச்ரம விதாயினீ"** என்று ஒரு பேர் இருக்கிறது. இதன்படி அந்தந்த ஜீவனின் குலதர்மப்படி அதன் சரீரம் ஸம்ஸ்காரம் ஆகும்படி செய்தாலே அம்பாளின் ப்ரீதிக்குப் பாத்திரமாவோம். ஸ்ரீமாதாவின் க்ருபையால் அவளுடைய குழந்தைகளான எல்லா ஜாதி, வர்ண, குல, ஆச்ரமங்களைச் சேர்ந்த ஜீவகோடிகள் எல்லோருக்கும் பரஸ்பரம் உண்மையான ஸஹோதர மனப்பான்மை ஏற்பட்டு அதன் மூலம் உலகத்தில் அன்பும், பொருளும், அருளும் குறையாது வளரவேண்டும்.

---

*இம்மாதிரிப் பெரிய உத்பாதங்களில் ஸ்ரீபெரியவர்களின் திருஉளப்படி காஞ்சி ஸ்ரீமடம் ஆற்றி வந்துள்ள அரும்பணிகள் அனந்தம். 1924லேயே காவிரி வெள்ளம் ஏற்பட்டபோது கஷ்ட நிவாரணப்பணியில் நமது மடம்தான் முன் நின்றது. 1961–ல் ஏற்பட்ட காவிரி வெள்ளத்தின்போது மடம் அற்புதப்பணி

புரிந்தது மட்டுமின்றி, இப்பணியில் உதவிய மற்ற ஸ்தாபனங்களுக்கு ஆசி வழங்கிய ஆசாரியர்கள், இதிலே பங்குகொண்ட தி.க., திமுக.வையும் குறிப்பிட்டு நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்கள். பாலி பூகம்பத்திலும் 'உடுக்கை இழந்தவன் கை'யாக உடனுக்குடன் ஸ்ரீமடத்தின் உதவியை அளித்திருக்கிறார்கள்.

4.51-ஆவி பிரியும் காலத்தில்

உயிர் போனபிறகு உடம்புக்குப் பண்ண வேண்டிய கார்யத்தைச் சொன்னேன். உயிர் போகிற சமயத்தில் செய்யவேண்டிய பணி ஒன்றும் இருக்கிறது. இதைவிட ஒரு ஜீவனுக்குச் செய்யக்கூடிய பெரிய பரோபகாரம் எதுவுமில்லை. அது என்ன?

க்ருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம், "உடம்பு போனாலும் ஆத்மா சாகிறதில்லை. அதனால் ஒரு பெரிய தர்மத்தை உத்தேசித்து நீ யுத்தம் பண்ணவேண்டிய கடமை, ஸ்வதர்மம் இருக்கிறபோது, 'பந்துமித்ரர்களைக் கொல்லமாட்டேன்' என்று பின் வாங்குவது ஸரியில்லை" என்று உபதேசம் பண்ணினார். அந்த உபதேசந்தான் பகவத்கீதை. ஸரி, ஆத்மா செத்துப்போகவில்லை. உடம்பு போன பிறகு அது என்ன ஆகிறது? எல்லா உ.யிர்களும் உடனே பரமாத்மாவிடம் ஐக்கியமாகி விடுகிறதா? க்ருஷ்ண பரமாத்மா அப்படிச் சொல்லவில்லை. அந்த உயிர் அதன் கர்மத்தைப் பொறுத்து இன்னோர் உடம்பில் புனர்ஜன்மம் எடுக்கிறது என்றுதான் சொல்கிறார். 'மஹா புண்யசாலிகள் ஸ்வர்க்கத்துக்குப் போய்ப் புண்யப்பலனை அநுபவித்து விட்டு, அது தீர்ந்ததும் மறுபடியும் இந்த பூமியிலேயே மநுஷ்யர்களாகப் பிறக்கிறார்கள் (9.21); த்வேஷமும், க்ரூரமும் கொண்ட நர அதமர்களைத் திரும்பத் திரும்ப அஸுரப் பிறப்பெடுக்குமாறு நானே தள்ளுகிறேன்' (16.19) என்றெல்லாம் சொல்கிறார். அப்படியானால் இந்த ஜனன மரண சக்கரத்திலிருந்து மீட்சியே இல்லையா? இருக்கிறது. அதையும் சொல்கிறார்.

பக்தி யோகத்தாலோ ஞான யோகத்தாலோ தன்னை உபாஸிப்பவர்களை மறுபடி இந்த லோகத்துக்குத் தள்ளாமல் பரமாத்மாவான தன்னிடமே அடக்கம் பண்ணிக்கொண்டு விடுவதாக பகவான் சொல்கிறார். பக்தன் ஞானியாகிவிட்டால் செத்துப்போன அப்புறம்தான் பரமாத்மாவிடம் ஐக்யமாகவேண்டும் என்றில்லை. அவன் இந்த லோகத்தில் இருக்கிற மாதிரி பிறத்தியாருக்குத் தோன்றும்போதே மோக்ஷத்தில்தான் இருந்து கொண்டிருப்பான். ஸகல துக்கங்களிலிருந்தும் விடுபட்ட ஸதானந்த நிலைதான் மோக்ஷம். இப்படி பக்தியோகம், ஞானயோகம் அப்யாஸம் பண்ணுவதற்கு பகவான் அத்யாயம் அத்யாயமாக வழி சொல்லிக் கொடுத்துக்கொண்டே போகிறார். ஆனால் இந்தமாதிரிப் பண்ணி ஜயித்து மீளுகிறவன் எங்கேயாவது கோடியில் ஒருத்தன்தான் இருப்பான். இதையும் அவரே சொல்கிறார். 'மநுஷ்யர்களில் ஆயிரத்தில் ஒருத்தன்தான் ஸித்திக்கு முயற்சியே பண்ணுவான். அதிலும் அபூர்வமாக எவனோதான் முயற்சியில் ஜயித்து என்னை வந்தடைகிறான்' என்கிறார் (7.3) .

இப்படியானால் என்ன பண்ணுவது? எல்லாவற்றுக்கும் ஒரு குறுக்குவழி இருக்கிறதே, அந்தமாதிரி ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்கு short-cut இல்லையா?

ஒன்றே ஒன்று இருக்கிற மாதிரி பகவானே சொல்லியிருக்கிறார் 'ஒருத்தன் செத்துப்போகிற ஸமயத்தில் எதை நினைத்துக்கொண்டு உடலை விடுகிறானோ, அதையே மறுஜன்மாவில் அடைகிறான். என்னையே ஸ்மரித்துக்கொண்டு எவன் சரீரத்தை விடுகிறானோ. அவன் என்னை அடைந்துவிடுகிறான்' என்று சொல்லி " நாஸ்தி அத்ர ஸம்சய :" - "இதில் ஸந்தேஹமே இல்லை" என்று 'காரன்டி' கொடுத்திருக்கிறார்!

'ரொம்ப ஸுலபமான வழியாக இருக்கே வாழ்க்கை முழுக்க எப்படிக் குட்டிச்சுவராக நடத்தினாலும் அந்திம ஸமயத்தில் மட்டும பகவானை நினைத்துக் கொண்டால் போதுமாமே! அதனாலேயே இந்த ஜனன-மரணச் சக்கரத்திலிருந்து தப்பித்துக்கொண்டு விடமுடியுமாமே!' என்று தோன்றுகிறது.

ஆனால் பகவான் இங்கே 'பொடி' வைத்துப் பேசுகிறார். 'கடைசிக் காலத்தில் என்னை நினைத்துக் கொண்டு' என்பதற்கு **' அந்தகாலே மாம் ஸ்மரன்** ' என்று சொன்னால் போதும். ஆனால் பகவான் அப்படிச் சொல்லவில்லை. 'அந்த காலே **ச மாம் ஏவ ஸ்மரன்**' என்று ஒரு **'ச'**வும்**'ஏவ'**வும் போட்டு ஸம்ஸார நிவ்ருத்தி இத்தனை ஸுலபமில்லையப்பா என்று ஆக்கியிருக்கிறார்! இந்த **' ச** ' வுக்கும் **' ஏவ** ' வுக்கும் என்ன அர்த்தம்?' அந்த காலே **' ச** ' என்றால் 'சாகிற ஸமயத்திலும்' என்று அர்த்தம். 'மாம் **ஏவ**' என்றால் 'என்னை' என்று மட்டும் அர்த்தமில்லை; 'என்னை மட்டுமே' என்று அர்த்தம்.

அவரை மட்டுமே அந்திமத்திலும் 'ஸ்டெடி'யாக ஸ்மரிக்க வேண்டும். அப்போதுதான் மோக்ஷம்.

நம் மனஸ் லகான் இல்லாத குதிரையாக ஓடுகிற ஓட்டம் நமக்குத் தெரியும். ஏதோ இந்த க்ஷணம் அது அப்படியே பரமாத்மாவிலேயே தோய்ந்து விட்டாற்போல இருக்கும். பார்த்தால் அடுத்த க்ஷணமே அது பிய்த்துக் கொண்டு ஏதாவது குப்பைத் தொட்டிக்குப் போயிருக்கும். நமக்கே ஆச்சர்யமாக, தாங்கமுடியாத வ்யஸனமாக இருக்கும் - 'அவ்வளவு நல்ல சாந்த நிலையில் இருந்தோமே; இது எப்படி அங்கேயிருந்து அறுத்துக்கொண்டு கிளம்பிற்று? என்று. இங்கிலீஷில் fraction of a second என்கிறார்களே, அதுமாதிரி, ஒரு ஸெகண்டில் வீசம் பாகங்கூட இந்த மனஸ் ஒன்றில் நிலைத்து நிற்க மாட்டேன் என்கிறது. எனவே, 'மாம் ஏவ ஸ்மரன்'- பகவானை மாத்திரமே நினைப்பது - என்பது ரொம்பக் கஷ்டம்தான்.

சாகத்தான் போகிறோம் என்று முதலில் தெரியவேண்டும். அதற்கப்புறம் அதற்காக பயந்து நடுங்காமல், புத்தியை நன்றாகத் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தெளிவோடு, இந்த க்ஷணம் உயிர் போகிறது என்றால்கூட அந்த ஒரு க்ஷணத்திலாவது ஜாக்ரியத்தோடு (ஒரு முகமான சிந்தனையோடு) பகவானை மட்டுமே நினைக்க வேண்டும். அப்படி ஒரே க்ஷணத்தில் ப்ராணன் போய்விட்டால் நல்லது. பகவானை விட்டு ஸ்மரணை நகராதபோதே உயிரைவிட்டு, அவனிடமே போய்ச்சேரலாம். ஆனால் இப்படி

யாரும் சாகக்காணோமே!குண்டு போட்டுச் சுட்டால்கூட ஒரு ஐந்து பத்து நிமிஷத்துக்கு அப்புறம்தானே உயிர் போகிறது அத்தனை நாழி -அந்த ஐந்து, பத்து நிமிஷமும் ப்ராண ப்ரயாணத்தின் மஹா அவஸ்தைகளை மறந்து பகவானை ஸ்டெடியாக நினைத்துக்கொண்டு அப்படியே ப்ராணனை அதன் மூலத்தில் கரைக்கிறது ஸாத்யமா?' எலக்ட்ரிக் ஷாக்' மாதிரி அடித்து உடனே instantaneous சாவு வருகிறது என்றால், அந்த 'இன்ஸ்டன்ட்'டில் பகவான் நினைவு வந்துவிட்டால் போதும். ஆனால் வரவேண்டுமே! வராவிட்டால்? பயம் வரக்கூடாதே! அல்லது, அப்படியே உணர்ச்சி மரத்துப்போய் ப்ரக்ஞையில்லாமலும் சாகக்கூடாதே!

உடனே ப்ராணண் போகாமல் எந்த க்ஷணமும் போகலாம் என்று அது பாட்டுக்கு இழுத்துப் பறித்துக் கொண்டிருந்தால், அத்தனை நாழியும் (அது நாள் கணக்கில் கூட இருக்கலாம்) பகவானையே நினைத்தாக வேண்டும்; அல்லது நினைக்கிறதற்குக்கூட அவகாசம் தராத விதத்தில் மஹா பீதியையே துளியூண்டு நாழிகைக்குள் தருகிற விதத்தில் - எலெக்ட்ரிக் ஷாக் மாதிரி அடித்துச் சாவதானாலும், அந்த fraction of a second -லும் பகவத் ஸ்மரணை பூர்ணமாக ரொம்பிக்கொண்டு வந்து நிற்க வேண்டும்.

இது தானாக, அந்த ப்ராணாவஸ்தை ஸமயத்தில் கைகூடுகிற விஷயமா? இல்லை. அதனாலேதான் 'அந்த காலே ச'என்று ஒரு 'ச' போட்டார். இதைப்பற்றி மேலேயும் சொல்கிறார்.

4.52-ஆயுள் முழுதும் செய்வதே அந்திமத்தில் வரும்

வாழ்நாள் பூராவும் ஏதாவது ஒன்றில் நம் மனஸ் அழுத்தமாக ஆழமாக ஈடுபட்டிருந்தால்தான் அந்த விஷயமே ப்ராணன் போகிற ஸமயத்திலும் கிளம்பி வந்து நம் மனஸ் முழுவதையும் ரொப்பி வியாபித்துக் கொள்ளும். நாம் அதை நினைக்கிறோம் என்பதில்லை. அதுவே முட்டிக்கொண்டு வந்து தன்னை நினைக்கும்படியாகப் பண்ணும்.

இப்போது ஸைகாலஜியில் சொல்கிறார்கள், நமக்கே தெரியாமல் நாம் எப்பொழுதோ ஆழமாக, அழுத்தமாக நினைத்த விஷயங்கள்தான் தாமாக மனஸின் மேல்மட்டத்துக்கு எழும்பி வருகிறது என்கிறார்கள். குறிப்பாக வெளி வியாபாரமில்லாமல் தூங்குகிறபோது இம்மாதிரி பழைய ஸ்டாக் கிளம்பி வந்து ஸ்வப்னமாகிறது என்கிறார்கள். தூக்கந்தான் என்றில்லை. கார்யமில்லாமல் இருக்கிற போதுகளிலெல்லாம், ஒரு த்யானம் என்று உட்கார்ந்தால்கூட, ஜலத்துக்கடியே கையினால் அழுத்தி வைக்கிற கார்க், கையை எடுத்தவுடன் மேலே கிர்ரென்று வருகிறமாதிரி, உள் நினைப்புகள் மேலே வந்து நம்மைப் பிடித்துக் கொள்கின்றன. சாஸ்த்ரங்களிலும் பூர்வ வாஸனை என்று இதுகளைச் சொல்லி, இவற்றை அடியோடு இல்லாமல் வாஸனாக்ஷயம் பண்ணிக் கொண்டால்தான் மனஸ் பரமதெளிவாகத் தெளிந்து நின்று அதில் ஆத்ம ஜ்யோதிஸ் பளீரென்று அடிக்கும் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் நாம் "போ, போ"என்று பிடித்துத் தள்ளினாலும் அது போகுமா?போகாது. அதைப் போகப் பண்ணுவதற்கு வழி நம்மால் எவ்வளவு முடியுமோ அத்தனை பாடும் பட்டு ஸ்த்விஷயங்களை, ஸத்துக்களிலெல்லாம் பரம ஸத்தான - 'ஏகம் ஸத்'தான - பரமாத்மாவை நினைத்துக் கொண்டேயிருப்பதுதான். இந்த நல்ல வாஸனையை 'வா, வா' என்று-சொல்லிக் கொண்டேயிருந்து வரவழைத்து மனஸுக்குள் உட்கார்த்தி வைத்துக்கொண்டால்தான், கெட்ட வாஸனைகள் தங்களுக்கு இடமில்லை என்று ஓடிப்போகும். அமேத்யத்தை எவ்வளவு தேய்த்து அலம்பி விட்டாலும் நாற்றம் போகமாட்டேன் என்கிறது. ஒரு ஊதுவர்த்தியை ஏற்றிவைத்து விட்டால் அது இருந்த இடம் தெரியாமல் போகிறது.

கடைசியில் நல்ல வாஸனைகளும் போக வேண்டும் மனஸே போக வேண்டும். அதெல்லாம் ரொம்பப் பின்னாடி வருகிற நிலை.

4.53-பகவத் ஸ்மரணம்

இப்போதும், எப்போதும் - இதுவரை செய்யாவிட்டாலும் இப்போதிருந்தாவது - நாம் செய்ய வேண்டியது பகவத் ஸ்மரணையை அழுத்தமாக, ஆழமாக

ஏற்படுத்திக் கொள்வதுதான். அப்படி வாழ்நாள் பூரா, வெளியில் எத்தனை கார்யம் செய்து கொண்டிருந்தாலும், உள்ளூர ஓர் இழை பரமாத்மாவிடமே சித்தம் ஒட்டிக் கொண்டிருந்தால்தான் அந்திம காலத்தில் கன்னாபின்னா நினைப்புகள் வராமல் அவன் நினைவு மட்டும் - மாம் ஏவ என்ற மாதிரி அது மாத்திரமே - இருந்து கொண்டிருக்கும். இழுத்துப் பறித்துக்கொண்டு கிடந்தாலும் அத்தனை இழுபறியிலும் விடாமல் பகவத் ஸ்மரணமே இருக்கும். அல்லது அநாயாஸ மரணமாக இயற்கையாக ஸம்பவிக்கும்போதும் அவனையே நினைக்கத் தோன்றி அந்த ஒரு சில க்ஷணங்களானாலும் அதிலேயே ஜகாக்ரியத்தோடு முழுகிவிட முடியும். அல்லது திடீரென்று ஒரு புலி வந்து அடித்துப் போட்டாலோ, அல்லது கரென்ட் ஷாக் அடித்தாலோ அப்போதுகூட பயமோ, அதிர்ச்சியோ இல்லாமல், ப்ரக்ஞை போய்விடாமல், 'டாண்' என்று பகவத் ஸ்மரணம் வந்து நிற்கும்.

' ப்ராண ப்ரயாண ஸமயே கபாவத பித்தை: — உயிரின் நெடும் ப்ரயாண ஸமயத்தில் கபாவத பித்தங்கள் கட்டியிழுக்கிறபோது உன்னை எப்படி நினைப்பேனோ?[1] என்று குலசேகரர் மாதிரிப் பெரியவர்களே பயப்படுகிறார்கள். பகவத் பாதாளும் இந்த 'ப்ராண ப்ரயாண'பதப்பிரயோகம் பண்ணியிருக்கிறார்.

ப்ராண ப்ரயாண பவபீதி ஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம்[2]

உயிர் கிளம்புகிற ஸமயத்தில் ஏற்படுகிற பயத்தைப் போக்க, ஸகல பயத்தையும் நிவ்ருத்தி பண்ணும் லக்ஷ்மிநரஸிம்ம மூர்த்திதான் கைப்பிடிப்பாக (கர அவலம்பம்) வந்து ரக்ஷிக்க வேண்டும் என்கிறார். இதேமாதிரி ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்திலும், **'ப்ரயாணேன்முகே மயி அநாதே**'– 'அநாதையான நான் நெடும் பயணம் கிளம்பும்போது, அப்பா குஹனே! தயாளுவே! நீ முன்னே வந்து நிற்கவேண்டும் என்கிறார். இதையே அச்சடித்த மாதிரி 'திருப்புகழி'லும் சொல்லியிருக்கிறது. அது மஹான்கள் எப்போதும் பகவத் ஸ்மரணம் அல்லது ஆத்மாநுஸந்தானத்தில் இருந்தவர்கள். அதனால் நிஜமாக அவர்களுக்கு இந்த பயம் இல்லை. நம்மை உத்தேசித்து, நமக்குப் பிரார்த்திக்கக் கற்றுக்கொடுக்கத்தான் இப்படியெல்லாம் பாடி வைத்திருக்கிறார்கள்.

பெரியாழ்வார் இன்னும் கொஞ்சம் ஸ்வாதீனமாகக்கூட பகவானிடம் சொல்கிறார்: **" அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் ".** " சாகிற ஸமயத்தில் உன்னை நான் நினைக்காமலும் போகலாம். அதற்காக நி என்னை விட்டுவிடாதே. இப்போது உன்னை என்னால் நினைக்க முடிகிறது. அதனால் இப்போது செய்கிற இந்த 'ஸ்மரணை'யையே அப்போதைக்கென்று 'ரிஸர்வ்' பண்ணினதாக வைத்துக்கொள்" என்கிறார்!

ஆனால் கீதா வாக்யத்தைப் பார்த்தால், இப்படி என்றைக்கோ செய்த ஸ்மரணத்தை பகவான் 'ரிஸர்வேஷ'னாக நினைக்கவில்லை; கடைசிக் காலத்தில் நினைக்கத்தான் சொல்லுகிறார். 'ச'போட்டு 'கடைசிக் காலத்திலும்'என்கிறார். அதாவது வாணாள் பூராவும் என்னை நினைத்துக் கடைசியிலும் நினை என்று இந்த ஸ்லோகத்தில் சொல்லாமல் சொல்கிறார். மேலே இரண்டு ஸ்லோகம் தள்ளி, ஸ்பஷ்டமாகவே சொல்கிறார்.

" தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாம் அநுஸ்மர"

ஆனபடியால் என்னை ஸர்வகாலங்களிலும், எப்போதும் நினைத்துக்கொண்டே இரு என்கிறார். இப்படி எப்போதும் நினைத்தால்தான் முடிவில் அந்த நினைவு வரும்.

[1.] **'முகுந்தமாலா'**

[2]**லக்ஷ்மீந்ருஸிம்ஹ** கராவலம்ப ஸ்தோத்ரம்.

4.54-அந்திம நினைப்பின் முக்யத்வம்

ஆனாலும் அந்திமத்தில் நினைப்பதற்கு ஏன் இந்த முக்யத்வம்? இப்படி அந்திமத்தில் பகவானை ஸ்மரிப்பதற்கும் நான் இங்கே எடுத்துக்கொண்ட பரோபகாரம் என்ற விஷயத்துக்கும் என்ன ஸம்பந்தம்?

'மரணம் என்பது ஆத்மாவைக் கொஞ்சங்கூட பாதிப்பதில்லை. உடம்புக்குத்தான் சாவு உண்டு, ஆத்மாவுக்குக் கிடையாது. ஒரு சட்டை கிழிந்தால் அதோடு சட்டைப் போட்டுக் கொள்கிறவனும் அழிந்து போய்விடுகிறானா என்ன? இல்லை. ஒரு சட்டை போனால் அவன் இன்னொரு சட்டையை எடுத்துப்போட்டுக் கொள்கிறமாதிரி ஒரு சரீரம் அழிந்து போனாலும், ஆத்மா அழியாமல் இன்னொரு சரீரச் சட்டைக்குள் புகுந்து கொள்கிறது' என்று பகவான் கீதையில் (2.22) சொல்லியிருக்கிறார். 'இப்படி எத்தனை சட்டைகள் கிழிந்து கிழிந்து, இன்னொன்று, அதற்கப்புறம் இன்னும் ஒன்று என்று இந்த ஆத்மா புகுந்து புகுந்து அல்லாடிக்கொண்டிருக்க வேண்டும்? இதற்கு ஒரு முடிவு கிடையாதா?' என்று கேட்டால், 'ஞானியாகிவிட்டால் ப்ரம்ம நிர்வாணம் அடைந்து விடலாம். என்னிடமே பக்திபண்ணிக் கொண்டிருந்தால் என்னை நினைத்துக் கொண்டே உயிரை விட்டால்கூடப் போதும். அப்புறம் இன்னொரு சட்டை போட்டுக்கொள்ள வேண்டாம்' என்கிறார்.

'சாவு ஒன்றும் பெரிய விஷயமில்லை; சட்டை கிழிகிற மாதிரிதான்'என்றுசொல்லிவிட்டு, 'சாகிற ஸமயத்தில் என்னை நினைத்தால் என்னிடமே வந்து அடுத்த ஜன்மா இல்லாமல் ஆக்கிக் கொள்ளலாம்' என்று சொன்னால், சாவு ஒரு பெரிய விஷயம் மாதிரிதானே இருக்கிறது? அந்த ஸமயத்தில் நினைப்பதற்கு என்ன இத்தனை முக்யத்வம்!

ஆத்மா என்ற மாறாத ஸத்யத்தின் நிலையிலிருந்து பார்க்கிறபோது சரீரமும் சாவும் துச்சம்தான்; அவை ஒன்றுமே இல்லை. ஆனால் நாம் மாறாத ஆத்மா என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களாகத்தானே இருக்கிறோம்? நமக்குத் தெரிந்தது மாறிக்கொண்டே இருக்கிற இந்த மனஸும், மாறிக்கொண்டே இருக்கிற இந்த ப்ரபஞ்சமும்தானே? சாவு உண்டாகி அடுத்த ஜன்மா ஏற்படுகிறபோது இந்த ஜன்மாவிலே இந்த ப்ரபஞ்சத்திலே நமக்கு இருந்த தொடர்புகளெல்லாம் துண்டித்துப்போய், வேறு புதுத் தொடர்புகள் உண்டாகின்றன. இதே இடத்தில் இதே குடும்பத்தில் நாம் மறுபடியும் பிறந்தால்கூட நமக்கு அது தெரியப்போவதில்லை. ஆனால் இப்படி இங்கேயேதான் பிறப்போம் என்று சொல்ல முடியாது. வேறே சூழ்நிலையில்,

வேறு தினுஸான மதத்தில், நாகரிகத்தில், ஸம்ப்ரதாயத்தில் போய்ப் பிறந்தாலும் பிறப்போம்.

ஆத்மா மாறாதது என்றாலும் நமக்கு அது தெரியாத விஷயம். மனஸின் ஆட்டங்கள்தான் நமக்குத் தெரிந்ததெல்லாம். அந்த மனஸின் வளர்ச்சி - அது நல்ல வளர்ச்சியாக இருந்தாலும் ஸரி, கெட்ட வளர்ச்சியாக இருந்தாலும் ஸரி - பெரிய அளவுக்கு சூழ்நிலையினால் உருவாக்கப்படுகிறது. இந்த ஆயுஸ் பூராவும் நாம் ஒருமாதிரி சூழ்நிலையில் பழகி வளர்ந்து விட்டோம். குறிப்பிட்ட ஸம்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டு விட்டோம். குறிப்பிட்ட ஸம்ப்ரதாயங்களை அநுஸரித்து அவற்றில் ஒட்டிக் கொண்டு விட்டோம். இதெல்லாம் சாவோடு கத்தரித்துப் போகிறது என்பதைப் பார்க்கிறபோது, (சாவு ஆத்மாவைக் கொஞ்சம்கூட பாதிப்பதில்லை என்றாலும்) ஆத்மாவாக இருக்கத் தெரியாத நம்மை ரொம்பவும் பாதிக்கத்கதானே செய்கிறது?' அடுத்த ஜன்மாவில் எந்த மாதிரிப்பிறவி ஏற்படுமோ? எந்த மாதிரிச் சூழ்நிலையில் பிறப்போமோ?' என்று பெரிய கேள்வியாகத்தானே இருக்கிறது? ' இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? *என்று பெரிய பெரிய மஹான்களே பயப்பட்டிருக்கிறார்களே!

இதனால் பகவான் ஒரு ஜீவனுடைய தொடர்புகள் அடியோடு மாற இருக்கிற அந்த மரண ஸமயத்தில் "ஐயோ, பாவம்! இந்த ஜீவன் மறுபடியும் ஜன்மா இல்லாமல் பண்ணிக்கொள்ளாமலேயே உயிரை விடுகிறது. இப்பொழுது முழுக்க வேறு தினுஸான சூழ்நிலையில் பிறந்து, 'அடியைப் பிடிடா பாரதபட்டா' என்று ஆத்மாபிவிருத்திக்கான கார்யத்தை இது ஆரம்பித்தாக வேண்டும். இந்த ஜன்மாவின் கர்மாதான் அடுத்த ஜன்மாவிலும் துரத்திக்கொண்டு வரும் என்பது வாஸ்தவமானாலும், அடுத்த ஜன்மாவில் சூழ்நிலை வேறுதானே? அதிலே இது பழைய கர்மாவைக் கழித்துக்கொண்டு மேலே போகுமா அல்லது இன்னும் கெட்ட கர்மாவைப்பண்ணி வீணாகுமோ?' என்று பரம கருணையோடு நினைப்பான போலிருக்கிறது. இப்படி பகவானே இரக்கப்பட்டுத்தான் ரொம்பவும் பெரிய மனஸோடு, "ஸரி, இந்தச் சாகிற ஸமயத்தில் இது நம்மை நினைத்துவிடட்டும். அது போதும். இதற்கு

மறுபடியும் ஜன்மா இல்லாமல் நாமே எடுத்துக்கொண்டு விடலாம்" என்று பெரிய 'கன்ஸெஷன்' தந்திருக்கிறான் என்று தோன்றுகிறது.

---

* தாயுமானவரின் ' சித்தர் கணம் '. பாடல் 4.

4.55-தெய்வ நினைப்புடன் தூக்கம்

வாழ்நாள் முழுக்க எதன் நினைப்பு ஒருத்தன் மனஸில் ஜாஸ்தியாக இருக்கிறதோ, அதைப்பற்றிய சிந்தனைதான் அந்திமத்தில் வரும். இப்படி நமக்குக் கடைசியில் பகவத் ஸ்மரணம் வருமா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஒரு பரீக்ஷை வைத்துக் கொள்ளலாம் அதாவது:

அன்றன்றைக்கும் நாம் தூங்குகிறோம் அல்லவா? இதையும் ஒரு சாவு மாதிரி என்றுதான் சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. தூங்குகிறபோது கட்டைபோல ஒன்றும் தெரியாமல், ஞானமே இல்லாமல்தானே கிடக்கிறோம்? இதனால்தான் இப்படிச் சொல்லியிருக்கிறது. 'நித்யப் பிரளயம்' என்று தூக்கத்தைச் சொல்வார்கள். இப்படி தினமும் நாம் 'சாகிற' போது பகவானையே ஸ்மரித்துக்கொண்டு 'சாக' முடிகிறதா என்று அப்யாஸம் பண்ணிப் பார்க்கலாம். தூங்குகிறதற்கு முன்னால் நம் இஷ்ட தேவதையையே ஸ்மரித்துப் பார்க்க வேண்டும். அந்த நினைப்போடேயே தூக்கத்தில் ஆழ்ந்துவிட வேண்டும். வேறே நினைப்பு வரக்கூடாது. சொல்லும்போது ஸுலபமாக இருக்கும். ஆனால் பண்ணிப் பார்த்தால் எத்தனை கஷ்டம் என்று தெரியும். காமாக்ஷியோ, நடராஜாவோ, தக்ஷிணாமூர்த்தியோ, வேங்கடரமண ஸ்வாமியோ, முருகனோ - எந்தத் தெய்வமாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த இஷ்ட தெய்வத்தையே அல்லது தெய்வத்துக்கு ஸமானமாக நமக்கு சாந்தியும் ஸந்துஷ்டியும் தருகிற ஒரு குரு, அல்லது மஹானையோ வேறே நினைப்பு வராமல் ஸ்மரிப்பதென்றால், 'இதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? மனஸுக்கு ரம்யமாகவும் ஆறுதலாகவும் இருக்கப்பட்ட இந்த ரூபங்களை நினைப்பதில் என்ன ச்ரமம்?' என்றுதான் தோன்றும்.

ஆனால் எதனாலோ, சிறிது நேரமானால் இத்தனை நல்ல, திவ்யமான ஸ்மரணையை விட்டுவிட்டு மனஸ் வேறேங்கேயாவதுதான் போய் விழும்; அப்படியே கண்ணை அசக்கித் தூக்கத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். இப்படி ஏமாறாமல் பழக்கிக் கொண்டால் சாகிற ஸமயத்திலும் பகவானை விடாமல் நினைக்க முடியும் என்ற நிச்சயத்தைப் பெறலாம். எல்லாம் அப்யாஸத்தில், விடாமுயற்சில்தான் இருக்கிறது. நம்முடைய ச்ரத்தையைப் பொறுத்து பரமாத்மாவே கை கொடுப்பார்.

4.56-மோக்ஷத்துக்குக் குறுக்கு வழி

ஆக வாழ்நாள் பூராவும் எதிலே ரொம்பவும் ஈடுபாடு இருக்கிறதோ, அதுதான் அந்திமத்திலும் ஒருத்தனை இழுக்கும். வாழ்நாள் முழுவதும் பகவத் சிந்தனையோடு இருந்தால்தான் கடைசியிலும் அது ஸித்திக்கும். ஸரி, அது தானாகவே ஸித்தித்துவிட்டுப் போகிறது. ஒருவன் ஜீவியகாலம் முழுவதும் ஈஸ்வர பக்தி பண்ணிக்கொண்டேயிருந்தால், கடைசியில் இவன் படுக்கையில் விழும்போதும் தானே, `ஆடோமாடிக்'-ஆக அதே ஸ்மரணந்தான் இருக்கப்போகிறது. ஆனதால் "ஸர்வகாலத்திலும் என்னை நினை" என்று சொன்ன க்ருஷ்ண பரமாத்மா "அந்திமத்திலும் என்னை நினை" என்று ஒன்றைச் சேர்த்திருக்க வேண்டாமே? ஸர்வகால ஸ்மரணை தானாக அந்திமத்திலும் வந்துவிட்டுப் போகிறது!

இங்கேதான் மோக்ஷத்துக்குக் கொஞ்சம் குறுக்கு வழி (short-cut) சொன்னமாதிரி இருக்கிறது. 'ஒருத்தன் அந்திமத்தில் எதை எதை நினைத்துக்கொண்டு உடம்பை விட்டாலும் அதையே போய் அடைகிறான்' என்று கீதையில் ஸ்பஷ்டமாகச் சொல்கிறார்.

யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்யந்தே களேவரம் |
தம் தம் ஏவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித: ||

இப்படிச் சொல்கிறபோது, வாழ்நாள் முழுக்க நினைக்காத ஒன்றை ஒருத்தன் அந்திமத்தில் நினைத்துவிட்டாலும் ஸரி, அந்திமத்தில் நினைத்த அதையே

மரணத்துக்குப்பின் அடைந்து விடுவான் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ள இடம் இருக்கிறது.

வாழ்நாள் முழுதும் நினைப்பதுதான் அந்திமத்தில் நினைவுவரும் என்பது பொதுவாக வாஸ்தவம். ஆனால் இப்படியில்லாமல், அஸாதாரணமாக, வாழ்நாள் பூரா நினைக்காத ஒன்று ப்ராணன் போகிறபோது நினைப்புக்கு வந்துவிட்டால்? இப்படியானாலும் அந்தக் கடைசி நேரத்தில் எதை நினைத்தானோ அதை இவனுக்கு ஸ்வாமி கொடுத்துவிடுகிறார். 'இதற்கு முன்னாடி நீ அதை நினைக்கவில்லையே!' என்று இவனைக் கேட்பதில்லை. கீதா வாக்யத்திலிருந்து இப்படித்தான் அர்த்தமாகிறது.

வாழ்க்கையில் அவ்வளவாக பக்தி பண்ணாவிட்டாலும் கூட, சாகிற ஸமயத்திலே ஈஸ்வர ஸ்மரணத்தோடு மூச்சை விட்டால்போதும்; அவனை அடைந்துவிடலாம் என்று கீதை சொல்வதாக ஏற்படுகிறது. இது ரொம்ப 'ஷார்ட்-கட்' தானே?

ஆனால் வாழ்நாள் முழுக்க நினைத்ததுதானே அந்திமத்தில் வரும்? அதெப்படி வேறு ஒரு நினைப்பு அப்போது வரும்? இது எப்படி 'ஷார்ட்-கட்'? சும்மாவுக்காக 'ஷார்ட்-கட்' மாதிரி பகவான் ஏமாற்றுகிறாரா?

4.57-உயிர் பிரிகிறவனுக்கு உயர் உதவி

இங்கேதான் சாகிற ஸ்திதியில் இருக்கிற ஒரு ஜீவனுக்கு மற்றவர்கள் பண்ணுகிற பெரிய பரோபகாரம் வருகிறது; அந்த ஜீவனைப் பரமாத்மாவிடம் அனுப்பி வைக்கிற பரம உத்க்ருஷ்டமான பரோபகாரம்!

இயற்கையாக ஒருத்தனுக்கு அந்திமத்தில் ஏதாவது கன்னாபின்னா நினைப்புகளே வரலாம். ரொம்பப் பேருக்கு அப்படித்தான் வருகிறது-அல்லது ஸ்மரணையே தப்பிப் போய்விடலாம். ஆனால் இந்த மாதிரி சமயத்தில் பக்கத்தில் இருக்கிறவர்கள் பகவந்நாமாவையே கோஷித்துக் கொண்டிருந்தால் அது அவனை மற்ற நினைப்பிலிருந்து இழுத்துக்கொண்டே இருக்கும். ஸ்மரணை ஏதோ லவலேசம் ஒட்டிகொண்டிருந்தால்கூட, அந்த உள்

பிரக்ஞையில் ஒருவேளை ஈஸ்வர நாமா சுரீல் என்று ஒரு தைப்பு தைத்தாலும் தைக்கும். அவனுக்குத் தானாக பகவான் நினைவு வராமல், வாழ்நாள் முழுதும் நினைத்த விஷயங்கள்தான் அந்திமத்திலும் நினைவுக்கு வந்தாலும், மற்றவர்கள் இப்படி நாமோச்சாரணம் பண்ணினால் அதனாலேயே அவனுக்கு மற்ற நினைவுகள் அமுங்கி பகவானின் நினைப்பு ஏற்படும்படிப் பண்ணலாம்.

நாம் எங்கேயோ ஒரு பீச்சுக்குப் போகிறோம்; அல்லது ஸினிமாவுக்குப் போகிறோம். கண்டதை நினைத்துக்கொண்டு அரட்டை அடித்துக்கொண்டுதான் போகிறோம். ஆனால் போகிற வழியில் ஏதாவது ஒரு ஸத்ஸங்கத்திலிருந்து "ஹர ஹர மஹாதேவா", "ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே" என்கிற மாதிரி ஒரு கோஷம் வந்தால் சட்டென்று நம்முடைய கன்னாபின்னா நினைப்புப்போய், பகவந்நாமா க்ஷணகாலம் மனஸுக்குள் போய் நம்மைக் கொஞ்சம் உருக்கிவிடுகிறது. நாமாவுக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது. ஆனதால் வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவிலே ஒரு ஜீவாத்மா உயிருக்காகப் போராடிக் கொண்டு மனஸ் நாலா திசையிலும் அலைபாய்கிறபோது, அல்லது ஸ்மரணை தப்பிக் கொண்டிருக்கிறபோது பக்கத்திலே இருக்கிறவர்கள் பகவந்நாமாவை கோஷித்துக்கொண்டிருந்தால் அது அந்த ஜீவாத்மாவை அதன்மூலமான பரமாத்மாவிடம் இழுப்பதற்கு ரொம்பவும் சக்திகரமான (effective) வழியாக இருக்கும். ஒருத்தன் எத்தனை துன்மார்க்கத்தில் போனவனாயிருந்தாலும், அந்தக் கடைசி நாழியில் இந்த ஸம்ஸாரத்திலிருந்து தப்புவதற்கு பகவானைப் பிடித்துக் கொள்ளத் தவிக்கத்தான் செய்வான். அவனுக்குத் தானாக அந்தத் தாபம் வராவிட்டால்கூட நாம் உண்டாக்கிச் தந்து விட்டால் பிடித்துக்கொண்டு விடுவான். இப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.

உற்றார் ஆர் உளரோ ? உயிர்கொண்டு போம் பொழுது ?
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக் (கு) உற்றார் ஆர்உளரோ ? *
என்ற மாதிரி, அந்த அந்திம ஸமயத்தில் எல்லா பந்துமித்ரர்களையும் விட்டுவிட்டுப் புறப்பட்டேயாகவேண்டும் என்னும்போது அவன் ஒருத்தனே பந்து என்று எந்த ஜீவனும் புரிந்துகொள்ளத்தான் செய்யும். புரிய வைக்காமல்

கர்ம வாஸனை அதை நாலா தினுஸில் பிய்த்துப் பிடுங்கலாம். ஆனால் அந்த ஸமயத்தில், சுற்றியிருப்பவர்கள் பகவந்நாமாவைச் சொல்லிக் கொண்டிருந்தால், சட்டென்று அது ஒரு லகான் போட்டு அநதச் சாகிற ஜீவனின் நினைப்பை பகவானிடம் திரும்பும்படிப் பண்ணலாம். அந்த ஸமயத்திலேயே ப்ராணன் ஒடுங்கிவிட்டால் அவனை பரமாத்மா எடுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். கீதையில் அவர் அப்படி வாக்குக்கொடுத்திருக்கிறார். வாழ்நாள் முழுவதும் நினைக்கிறானா, நினைக்கவில்லையா என்பதைப் பாராட்டாமல் irrespective -ஆக "கடைசியில் எதெதை நினைத்தாலும் அததை அடைகிறான்" என்று அவர் சொல்லி விட்டதால், இந்த ஜீவன் எப்படி வாழ்க்கை நடத்தியிருந்தாலும், கடைசியில் அவரை நினைத்துவிட்டதற்காக அதை அவர் எடுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். கடைசி நேரத்தில் அடியோடு நிராதரவான ஒரு ஜீவனுக்கு உண்டாகிற தாபத்தோடு, சுற்றியிருக்கிற நமக்கும் அது கடைத்தேற வேண்டுமே என்பதில் ஹ்ருதய பூர்வமான கவலை இருந்து பகவானை ப்ரார்த்தித்துக்கொண்டு நாமாவைச் சொன்னால் அதற்குப் பலன் இராமல் போகாது.

எல்லா பரோபகாரங்களையும்விட உத்தமமானது ஒரு ஜீவனைப் பரமாத்மாவிடம் சேர்க்கிறதுதான். ஆகையால் நாம் செய்கிற நாம உச்சாரணத்தால் அந்திமத்தில் ஒரு ஜீவன் பகவானை நினைக்கும்படியாகப் பண்ணி, அதனால் பகவான் அந்த ஜீவனை எடுத்துக்கொள்ளச் செய்துவிட்டால் அதைப்போன்ற உபகாரம் வேறே எதுவும் இல்லை.

கடைசிகால ஈஸ்வர ஸ்மரணை ஜன்மாவை அப்படியே அழித்துவிடாவிட்டால்கூடப் பாவாயில்லை. நிச்சயம் அது பாபத்தைப் பெரிய அளவுக்கு அலம்பி விட்டுவிடும். இதைப்பற்றி ஸந்தேஹமில்லை. பகவந்நாமா மனஸுக்கு உள்ளே ஊறிவிடுகிறபோது பாபத்தை நிச்சயம் கழுவிவிடும். ஆனதால், பகவந்நாமாவோடு கண்ணை மூடுகிறவன் ஜன்மாவே இல்லாமல் விடுபட்டு விடுகிறான் என்று வைத்துக்கொள்ளாவிட்டாலும், மறுபடியும் பாபஜன்மா எடுக்கவே மாட்டான்;நல்ல புண்ய ஜன்மாவாக எடுப்பான் என்பது நிச்சயம்.

புண்ய ஜன்மா என்றால் பணம், காசு, அழகு, உசந்த ஜாதி, இதுகளா?இல்லை இந்த ஜன்மா முடிவிலே வந்த பகவத் ஸ்மரணை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து அடுத்த ஜன்மாவிலும் எப்போது பார்த்தாலும் இருக்கும்படியான சூழ்நிலையும் மனநிலையும் கொண்டதுதான் புண்யஜன்மா. அப்படி எடுத்து அடுத்த ஜன்மத்தோடாவது சொந்த முயற்சியினாலேயே ஸம்ஸார நிவர்த்தியை ஸம்பாத்தித்துக்கொள்ள ஒரு ஜீவனுக்கு இந்த ஜன்மத்திலேயே அந்திம நேரத்தில் நாம் நம்மாலான ஸஹாயத்தைப் பண்ண வேண்டும்.

இந்த மஹா பெரிய தர்மத்தை, ஈடில்லாத உபகாரத்தை, முதலில் சொன்னேனே, வாரவழிபாடு, ஜீவாத்ம கைங்கர்யம், மற்ற பரோபகாரங்களுக்காக ஸங்கமாகச் சேரவேண்டும் என்று, இந்த ஸங்கத்துக்காரர்கள் தவறாமல் செய்ய வேண்டும்.

---

* அப்பர் சுவாமிகள், 'திரு அங்க மாலை'

4.58-செய்யவேண்டிய பணி

தங்கள் க்ராமத்தில் அல்லது பேட்டையில் ஒருத்தன் சாகிற நிலையில் இருக்கிறான் என்று தெரிந்தால் அங்கே ஸங்கத்திலிருந்து ஒருத்தரோ சிலரோ போக வேண்டும். வீட்டிலே இல்லாமல் ஆஸ்பத்திரியிலோ ஜெயிலிலோ உயிரை விடுகிறவர்ளும் உண்டு. எனவே இப்பேர்ப்பட்ட இடங்ளுக்கும் தங்களை அனுமதிக்கும் படியாக அந்தந்த அதிகாரிகளிடம் பெர்மிஷன் வாங்கி வைத்திருக்க வேண்டும். அங்கே வெறும் கையோடு போகக்கூடாது. நாமம்தான் ஸர்வரோக நிவாரணி என்பது வாஸ்தவமே. அதற்கு வெளி வஸ்து ஒன்றும் வேண்டியதில்லைதான். ஆனால் ஸ்தூலமாக ப்ரஸாதம் என்று ஒன்றைக்கொண்டுபோய்க் கொடுத்தால் அதற்கும் ஒரு தனி உத்ஸாஹ சக்தி உண்டுதான்; அது சாகிற ஜீவனுக்கு ஜாஸ்தி ஆறுதலாக இருக்கும். ஆனதால், முதலிலேயே கையில் சிவன்கோவில் விபூதி, பெருமாள் கோயில் துளசி 'ஸ்டாக்' வைத்திருக்கவேண்டும். அம்பாள் கோயில் குங்குமம், முருகன்

அல்லது பிள்ளையார் கோயில் விபூதி என்று எது இருந்தாலும் ஸரி. சிவபரமாகவும், விஷ்ணுபரமாகவும், ஏதாவது இரண்டு கோயில் ப்ரஸாதம் ஸ்டாக் இருக்கவேண்டும். கங்கா ஜலம் ஸர்வ பாப சமனம் ஆனதால் சங்கா தீர்த்தமும் வைத்திருக்க வேண்டும். மரணமடைகிற ஜீவன் சைவ மதமோ, வைஷ்ணவ மதமோ அதைப்பொறுத்து அந்தந்த ப்ரஸாதத்தை எடுத்துப்போக வேண்டும். கங்கா தீர்த்தம் எல்லோருக்கும் பொது. அநேக சைவர்கள் துளஸி ப்ரஸாதத்தையும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். இப்போதெல்லாம் வைஷ்ணவர்கள்கூட, ஈஸ்வரன் கோயில் ப்ரஸாதம் என்றால் விபூதி ப்ரஸாதம் கேட்டு வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஆனால் நாம் அவரவர் அபிப்ராயத்துக்கு அநுகூலமாகத்தான் ப்ரஸாதத்தைத் தரவேண்டும். மரண ஸமயத்திலே ஓர் இடத்தில் போய் ஸித்தாந்தச் சண்டைகளைக் கிளப்பக் கூடாது. யாருக்கு எது ஹிதமாக இருக்குமோ, அப்படிப்பட்ட ப்ரஸாதமாக எடுத்துப்போக வேண்டும்.

விபூதிப்ரஸாதம் என்பது சிவன் கோயிலில் இருக்கும் தக்ஷிணாமூர்த்திக்கோ, அல்லது தனிக் கோயிலில் இருக்கிற பிள்ளையாருக்கோ, ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கோ அபிஷேகம் பண்ணப்பட்ட விபூதியாக இருக்க வேண்டும். ஸாக்ஷாத் பராசக்தியான அம்பாள் பாதத்தில் அபிஷேகம் செய்யப்பட்ட தீர்த்தமும் கங்கா ஜலத்துடனோ, கங்கா ஜலம் கிடைக்காவிட்டால் அதற்குப் பதிலாகவோ வைத்திருந்து, மரிக்கிறவனுக்குக் கொடுக்கலாம். இதேபோல் விஷ்ணுபரமாக, பெருமாளுக்கு அர்ச்சனை செய்த துளஸியைக்கொண்டு வந்து உலர்த்தி ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டும். பெருமாள் பாதத்தில் அபிஷேகமான தீர்த்தமும் கொடுக்கலாம். கங்கை கிடைக்காவிட்டால், அதற்கு பதில் வைஷ்ணவர்களுக்குப் பெருமாள் பாத தீர்த்தம் தரவேண்டும். பெருமாளுக்கு நித்யப்படி முழு அபிஷேகம் இராது. திருமஞ்சனம் என்று சில நாட்களில்தான் செய்வார்கள். அதனால் மூர்த்தியின் பாதத்தில் மட்டும் அபிஷேகம் பண்ணுவித்து அந்தத் தீர்த்தத்தை வாங்கி ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டும். எதற்கும் கங்கை கைவசம் இருப்பது நல்லது.

சாவு என்றால் எவனுக்கும் பயம்தான். ஆயுஸ் முழுக்க நாஸ்திகனாக இருந்தவன்கூட அந்திம காலத்தில் ஏதோ ஒரு பெரிய சக்தியின்கையில்

தானிருக்கிறோம் என்று கொஞ்சமாவது தெரிந்து கொள்ளாமலிருக்கமாட்டான். அந்த நேரத்திலே பயத்தைப்போக்க அந்த சக்திதான் கதி என்ற எண்ணம் எவனுக்கும் வராமல் இருக்காது. எவனுமே ஈஸ்வர த்யானத்தோடுதான் சாக விரும்புவான் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனதால், நாம் அவனுக்கு உபகரிப்பதை அவன் நிச்சயம் ஏற்றுக்கொள்வான். அவனுடைய பந்துக்களும் இந்தக் கைங்கர்யத்தை வரவேற்பார்கள். சில கிழம் கட்டைகள் போகாதா என்று இருக்கும்போது, வைத்யம் பார்க்கிறோம் என்று நாம் போனால் ஒருக்கால் பந்துக்கள் அசட்டை பண்ணக்கூடும் ஆனால் 'புறப்பாடு' நன்றாக நடப்பதற்கே நாம் உபகாரம் பண்ணுகிறோம் என்றால் எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள்! அதிலும் நாம் அவர்களுக்குச் எந்தச் செலவும் சிரமமும் வைக்காததால் நிச்சயம் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் ஆனதால் நாம் இப்படிப்பட்ட தொண்டு செய்கிறோம் என்று தெரிந்துவிட்டால், அவர்களே நம்மைக் கூப்பிடுவார்கள். கூப்பிடாவிட்டாலும் நாம் போகவேண்டும். அவர்கள் கடும் நாஸ்திகர்களாக இருந்து ஆக்ஷேபித்தால் கொஞ்சம் எடுத்துச் சொல்லிப் பார்க்கலாம். அப்படியும் கேட்காவிட்டால் திரும்பிவிடலாம். ஆனால் அப்போதுகூடக் கோபம் இல்லாமல் சாகிற ஜீவனுக்கான ப்ராத்தனையை நமக்குள் செய்துகொள்ள வேண்டும். மொத்தத்தில் மான, அவமானம் பார்க்காமல் நம்மால் முடிந்த தொண்டைச் செய்யப் பாடுபட வேண்டும். மான அவமானம் பார்க்க ஆரம்பித்துவிட்டால் அது தொண்டே இல்லை.

செய்யவேண்டியது என்னவென்றால், ப்ராணா வஸ்தையில் இருக்கிறவர்களிடம் கோயில் ப்ரஸாதத்துடன் போகவேண்டும். அவர்களுக்கு கங்கா தீர்த்தம் கொடுக்க வேண்டும். விபூதி இடவேண்டும். துளஸியை வாயில் போடவேண்டும். அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு 'சிவ சிவ சிவ சிவ' என்றோ 'ராம ராம ராம ராம' என்றோ உரக்கச் சொல்ல வேண்டும். உரக்கச் சொல்லவேண்டியது அவசியம். ஜீவன் காதிலே அதுபட்டு மனஸைத் திருப்ப வேண்டுமாதலால், உயிர்போகும் வரையில் இப்படி நாம ஜபம் செய்வதுதான் ச்ரேஷ்டம். ஆனால் ப்ராணாவஸ்தையிலேயே ஒரு ஜீவன் மணிக்கணகாகக இழுத்துக் கொண்டிருந்தால் என்ன பண்ணுவது? நமக்கு

மற்றக் கார்யம் இருக்கத்தானே செய்யும்? அதனால் பக்கத்திலே பந்துக்களில் யாராவது ஒருத்தர் முறைபோட்டுக்கொண்டு உட்கார்ந்து நாம ஜபம் பண்ணும்படியாக ஏற்பாடு செய்துவிட்டு நாம், `நம் கடமையைக் கொஞ்சமாவது செய்தோம்' என்று புறப்பட வேண்டும். குறைந்த பக்ஷம் சிவநாமாவோ, ராமநாமவோ 1008 தடவையவது நாம் ஒரு ஜீவனுக்காகச் சொல்லவேண்டும். இப்படிப் பலபேர் சொன்னது அந்த ஜீவனுக்குள்ளே போய் தானாக அது உள்நினைவில் பகவானை நினைத்துக்கொண்டிருக்கும் படியாகப் பண்ணியிருக்கும் என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் இது இரண்டாம் பக்ஷந்தான். நாம் கடைசிவரை இருக்கமுடியாமல் வந்துவிட்டாலும்கூட, ஒரு ஜீவன் பிரிகிறபோது அங்கு பகவந்நாம சப்தம் இருக்கும்படியாக அவனுடைய பந்துக்களையாவது ஜபிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு வருவதே ச்லாக்யம்.

4.59-திவ்யஸ்மரணைக்குப் பின் திவஸம் ஏன்?

ஒரு ஜீவன் இருக்கும்போதும், இறக்கும்போதும், இறந்தபின்பும் செய்யவேண்டிய தொண்டுகளை நிறையச் சொல்லிக்கொண்டே போயிருக்கிறேன். 'இறக்கும்போது நாம் செய்கிற பணியினால் அந்த ஜீவன் பகவத் ஸ்மரணையோடு உயிரை விட்டால் அது பகவானை அடைந்துவிடுமல்லவா? இதற்கப்புறம் அதற்கு இறந்தபின் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம், திவஸம், திங்கள் எல்லாம் எதற்குச் செய்யவேண்டும்?' என்று கேட்டுவிடக்கூடாது. ஏனென்றால் நமக்குத் தெரிவது அந்த ஜீவனின் அந்திம காலத்தில் அது பகவானை நினைக்கும்படியான முயற்சியை நாம் பண்ணுகிறோம் என்பதுதான். அந்த முயற்சி எவ்வளவு பலித்தது என்பது நமக்குத் தீர்மானமாகத் தெரியாதது. நாம் கங்கா தீர்த்தம், விபூதி, துளஸி கொடுத்து நாமோச்சாரணம் பண்ணுவதை அந்த ஜீவன் எந்த அளவுக்கு மனஸுக்குள் வாங்கிக்கொண்டது என்பது நமக்குத் தெரியாது. அது பகவத் ஸ்மரணையோடுதான் உயிரை விட்டதா என்பது நமக்குத் தெரியாத விஷயம். ஆனதால், அது பகவானிடந்தான் போய்விட்டது என்று நாமாகத் தீர்மானம் பண்ணிக்கொண்டு அபரகார்யம், ச்ராத்தம் முதலானவைகளை நிறுத்திவிடக்கூடாது.

4.60-சரீர-சித்த பரிசுத்தி

ஏகப்பட்டதாகப் பரோபகாரங்களைச் சொல்லிக் கொண்டே போயிருக்கிறேன். பொதுவாகப் பரோபகாரம் என்றே நினைக்காத சில விஷயங்களைக்கூட இந்தப் பெரிய 'லிஸ்ட்'டில் சேர்த்துச் சொல்லியிருக்கிறேன்.

இம்மாதிரி இன்னொன்று அவனவனும்: தன் உடம்பையும் புத்தியையும் சுத்தமாக வைத்துக்கொள்வதே பெரிய பரோபகாரம்தான். துர்ப்பழக்கங்களால் ஒருத்தன் வியாதியை ஸம்பாதித்துக் கொள்கிறான் என்றால், அப்புறம் அவனால் எப்படிப் பரோபகாரம் பண்ண முடியும்? இது மட்டுமில்லை. இவனுடைய வியாதி பிறத்தியாருக்குப் பரவக்கூடும். அதனால் நம் அஜாக்ரதையால், துர்ப்பழக்கத்தால் வியாதியை வரவழைத்துக்கொள்கிறபோது பர அபகாரமும் பண்ணிவிடுகிறோம். நம்மை மீறி வந்தால் அது வேறே விஷயம்.

இந்தக் காலத்தில் எல்லோரும் நோயும் நொடியுமாக அவஸ்தைப்படுகிற மாதிரி நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முந்தியெல்லாம் இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அநேகருக்கு மனஸில் நெறியில்லாமல் இருப்பதும், அநேக துராசாரங்கள் வந்திருப்பதும்தான். **" சாஸ்த்ராய ச ஸுகாய ச** "என்பார்கள் - அதாவது சாஸ்த்ர ப்ரகாரம் நெறியோடு, ஆசாரத்தோடு இருப்பதுதான் ஸௌக்யமாக, ஆரோக்கியமாக இருக்கவும் உதவுவது என்று அர்த்தம். இப்போது எச்சில் தீண்டல் பார்காததாலேயே அநேக வியாதிகள், தொத்து நோய்கள் பரவிக்கொண்டு வருகின்றன. இப்படி வியாதிக்குக் காரணமாயிருக்கிற அநாசாரத்தை ஃபாஷன் என்ற பெயரில் ஸ்வீகரித்துக்கொண்டிருக்கிறோம்!

சரீர வியாதிதான் தொத்துகிறது என்றில்லை. எண்ணங்களும் பிறத்தியாரை பாதிக்கவே செய்கின்றன. இப்போது ஸயன்ஸில்கூடச் சொல்கிறார்கள், 'மூளை எண்ணங்களாக வேலை செய்வதுகூட ஒரு எலெக்ட்ரிக் கரென்ட்தான்; சிந்தனா சக்திக்குப் (thought-power) பிறரையும் பாதிக்கிற தன்மை இருக்கிறது' என்று. அதனால் நாம் சரீரத்தையும், புத்தியையும்

சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதாலும் பிறரின் தேக மன ஆரோக்கயங்களுக்கு உபகாரம் பண்ணியவர்களாக (அபகாரம் பண்ணாதவர்களாகவாவது) ஆகிறோம்.

நேராக மூளையை சுத்தப்படுத்திக் கொள்கிறேன் என்று உட்காருவதைவிட, நான் சொன்ன அநேக தினுஸான பரோபகாரங்களை - எல்லாவற்றையுமோ, சிலவற்றையோ நிறையச்செய்து கொண்டிருந்தாலே, தானாகச் சித்தம் சுத்தமாகிவிடும்.

பரோபகாரம் சித்தசுத்திக்கு உதவ வேண்டுமானால் அதற்கு உயிர்நிலை அஹங்காரம் என்பது லவலேசங்கூட இல்லாமல் தொண்டு செய்வதுதான். 'நாம் பெரியவர்; உபகாரம் பண்ணுகிறோம்' என்ற நினைப்பை தலையெடுக்கவே விடக்கூடாது. கொஞ்சம் அப்படி நினைத்தாலும் அது உபகாரம் பண்ணுவதன் பலனை - சித்த சுத்தியை - சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடும். இரண்டாவது, (அதிலேயே இதுவும் அடக்கம்தான்) ப்ரதி ப்ரயோஜனத்தை துளிக்கூட எதிர்பார்க்கக்கூடாது. உபகாரம் செய்தால் நமக்கு ஸித்திக்கிற சித்த சுத்தியேதான் பெரிய ப்ரயோஜனம்.

அவரவரும் தம் நிலையில் தம் வருமானம், குணம், சரீர வசதி, ஆற்றல் இவைகளுக்கு ஏற்றபடி எவ்விதங்களில் பரோபகாரம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்யவேண்டும். உடம்பிலே எந்த அவயவத்துக்குத் துன்பம் வந்தாலும் கண் அழுகிறது அல்லவா? அதைப்போல், உலகத்தில் எங்கே, யாருக்குத் துன்பம் உண்டானாலும் நாம் மனம் கசிந்து, ஒவ்வொருவரும் நம்மாலான உதவியைச் செய்ய வேண்டியது நம் கடமை. இதில் பெருமைக்காகச் செய்வது எதுவும் இல்லை. பிறத்தியாரின் வற்புறுத்தலுக்காகவும் செய்ய வேண்டியதில்லை. லோகம் முழுக்க பகவத் ஸ்வரூபம் என்று மனஸில் வாங்கிக்கொண்டால், தன்னால், ஸ்வபாவமாக, பிறர் துயரத்தை நிவ்ருத்தி செய்வதில் ஈடுபடுவோம். இதிலே நமக்கு ச்ரமம் வந்தால்கூட, அது ச்ரமமாகவே தெரியாது. எத்தனை த்யாகம் செய்தாலும் அதுவே பரமானந்தமாக இருக்கும். இப்படி த்யாகம் பண்ணுவதற்கு எல்லையே இல்லை. உபகரிக்கப்பட்டவன் முகத்தில் மகிழ்ச்சி தவழப்

பார்க்கிறோமே, அந்த ஆனந்தத்துக்கு எத்தனை த்யாகமும் ஈடாகாது என்றுதான் தோன்றும்.

4.61-பணியாற்ற நாள் பாழே!

தினமும் தூங்கப்போகுமுன்பு இன்று ஜன ஸமுதாயத்துக்கு நாம் ஏதாவது கைங்கர்யம் பண்ணினோமா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். ஈஸ்வரனைப் பற்றிப் " **பேசாத நாளெல்லாம் பிறவா நாளே** " என்று தேவாரத்தில் சொல்லியிருக்கிறது. அந்த மாதிரி நாம் பரோபகாரம் பண்ணாமலே ஒருநாள் போயிற்று என்றால், அது நாம் பிறவா நாளே – அன்றைக்கு நாம் செத்துப் போனதற்கு ஸமம்தான் – என்று வருத்தப்பட வேண்டும். பந்துக்கள் செத்துப்போனால் நமக்கு தீட்டு என்று, ஒரு புண்ய கார்யத்துக்கும் உதவாமல் ஒதுக்கிவிடுகிறார்கள். நாமே செத்த மாதிரி என்றால் இதுதான் பெரிய தீட்டு; பரோபகாரம் செய்யாத ஒரு தினத்தில் புண்யத்தின் பக்கத்திலேயே நாம் போகவில்லை, தீட்டுக்காரர்களாகி விட்டோம் என்று feel பண்ணவேண்டும்.

நாம் எத்தனை சின்னவர்களாக இருந்தாலும் நம்மாலும் முடியக்கூடிய சின்னத் தொண்டு இல்லாமலில்லை. இப்படி அவரவரும் தனியாகவோ, ஸங்கமாகச் சேர்ந்தோ ஏதாவது பொது நலக்கைங்கர்யம் பண்ணியே ஆகவேண்டும். தண்ணீரில்லாத ஊரில் ஒரு பத்து பேர் சேர்ந்து கிணறு வெட்டுவது; ஏதோ ஒரு பிள்ளையார் கோயில் மதில் இடிந்திருந்தால் அதை நாலு பேராகச் சேர்ந்து கட்டுவது;பூஜை நின்று போன ஒரு க்ராமக் கோயிலில் ஒரு காலப் பூஜைக்காவது நாலு பேரை யாசித்து மூலதனம் சேகரித்து வைப்பது;பசுக்கள் சொறிந்து கொள்வதற்கு ஒரு கல்லேனும் நாட்டுவது; நாம் படித்த நல்ல விஷயங்களை நாலுபேருக்குச் சொல்லுவது, எழுதுவது இரண்டு ஸ்லோகமாவது பாசுரமாவது நாமாவளியாவது பாடி நாலு பேர் மனஸில் பகவானைப் பற்றிய நினைப்பை உண்டாக்குவது; குப்பை கூளங்களைப் பெருக்குவது – இந்தமாதிரி ஏதாவது தொண்டு அன்றன்றும் செய்யவேண்டும். ஓசைப்படாமல் செய்ய வேண்டும் என்பது முக்யம்.

குடும்பக் கடமைகளை விட்டுவிட்டு ஸோஷல் ஸர்வீஸ் என்று கிளம்ப வேண்டியதில்லை. அதையும் விடாமலே, இதுவும் கடமை என்ற உணர்வோடு சேர்த்துக்கொண்டு செய்ய வேண்டும்.

4.62-இதுவே வேத தர்மம்

மேல் நாடுகளில் பெரிதாக ஸ்தாபன ரீதியில் institutionalise செய்து பரோபகாரப் பணிகள் செய்கிறார்கள். இப்படித் தனி ஸ்தாபனங்கள் இல்லாமலே தனி மனிதர்களாகவும், ஸங்கமாகவும் பொதுநலப்பணி புரிவது நமது வைதிக தர்மத்துக்கு ஆதாரமான ஓர் அம்சமாக ஆதியிலிருந்து இருந்து வந்திருக்கிறது.

'இன்ஸ்டிட்யூஷனலைஸ்' செய்யாமல் தன்னியல்பாக நம் வாழ்முறையிலேயே கண்ணுக்குத் தெரியாமல், ஒட்டிக்கொண்டு பரோபகாரம் நடைபெறுதில் ஒரு உத்தமமான அம்சம் என்ன என்றால் இங்கேதான் அஹங்காரம் தலைதூக்கவே இடமில்லாமலிருக்கிறது. 'இன்ஸ்டிட்யூஷன்' என்றால் office-bearers (அதில் பதவி வகிப்பவர்கள்) எலெக்ஷ்ன், போட்டா போட்டி, ப்பளிஸிடி எல்லாமும் வந்துதான் சேரும். அதனால்தான் நான் ஸங்கமாகச் செய்ய வேண்டிய அநேகப் பணிகளைச் சொல்கிறபோதுகூட, இதற்காகத் தனி ஆர்கனைஸேஷனும் office-bearers-உம் வேண்டாம். ஏற்கனவே இருக்கிற வார வழிபாட்டுக் கழகம், பாவை கமிட்டி, பஜனை கோஷ்டி, ஸத்ஸங்கம் ஏதாவது ஒன்றின் மேற்பார்வையிலும் பொறுப்பிலும் இந்தப் பணிகளையும் கொண்டுவந்து விடுங்கள் என்கிறேன். ரொம்பப் பெரிசாக திட்டம் போடவேண்டாம், அவசியத்துக்கு அதிகமாக வசூல் பண்ணவேண்டாம் என்றெல்லாம் நான் எச்சரிப்பதற்கும் காரணம், இப்படிப் பெரிசாகக் கால் வைத்தால் முதலில் இதைச் செய்யும் நம் ஸ்தாபனத்துக்கு பப்ளிஸிடி தேடவேண்டிவரும். அது அப்படியே வழுக்கி விட்டு ஸ்தாபனத்தில் ஈடுபட்டிருக்கிற நமக்கும் self-publicity தேடிக்கொள்கிற சபலத்தில் கொண்டுவிடும். ஆண்டு விழாவில் நாம் வரவேற்பு சொல்ல மாட்டோமோ, வந்தனோபசாரம் சொல்ல மாட்டோமோ, வருகிற முக்கியஸ்தர்களுக்கு

மாலையாவது போடமாட்டோமா, ஃபோட்டோவிலாவது தெரியும்படி நிற்கமாட்டோமா என்று இப்படியெல்லாம் மனஸை அலையச்செய்யும். **அதாதவது அஹங்காரத்தை அழித்துக்கொள்ளவே ஏற்பட்ட பொதுத்தொண்டு, நேர்மாறாக அஹங்காரத்தை விருத்தி செய்கிறதாக விபரீத ரூபம் எடுத்துவிடும்.** தான் இருக்கிற இடமே தெரியாமல், தன் காரியம் மட்டுமே தெரிவதுதான் தொண்டின் லக்ஷணம். இதனால்தான் ***'தர்மே க்ஷரதி கீர்த்தநாத்'*** என்று சொல்கிறது. அதாவது, பாபம் பண்ணிவிட்டேன் என்று ஒருத்தன் வெளியில் சொன்னாலே எப்படி அவனுடைய பாபம் நசித்துவிடுமோ, அப்படி "தர்மம் பண்ணுகிறேன்" என்று தண்டோரா போட்டுக்கொண்டால் அதனால் ஒருத்தனுக்குக் கிடைக்கிற புண்யமும் நசித்துவிடுமாம்!ஸம்ஸ்க்ருதத்தில் subtle -ஆக (நுட்பம் மிக்கதாக) "தர்ம த்வஜன்" என்பார்கள். தர்ம த்வஜன் என்றால் தர்மக்கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பவன் என்று அர்த்தம். இது பாராட்டுகிற டைட்டில் மாதிரி தொனித்தாலும் இதற்கு உள்ளர்த்தம் "போலி தர்மவான்" என்பதே! தன் தர்மத்தை உசத்திக் காட்டுவதாலேயே அதை இவன் போக்கிக் கொண்டுவிடுகிறான் என்பது தாத்பர்யம்!

'இன்ஸ்டிட்யூஷனலைஸ்' பண்ணுவதுபற்றிச் சொல்ல வந்தேன்.

மேல்நாடுகளில் Orphan-home (அநாதை இல்லம்) என்று தனியாக வைக்கிறார்களென்றால், நம் சாஸ்த்ரப்படி ஒவ்வொரு இல்லத்திலும் அநாதைக்கும் அதிதிக்கும் இடமுண்டு. மேல் நாட்டுக்காரர்களின் வீட்டுக்குள் அநாதைகளோ அதிதிகளோ நுழையக்கூட முடியாமல் நாய் கட்டியிருக்கும்!அவன் வாழ்க்கையோடு, ரத்தத்தோடு அதிதி ஸத்காரமும், அநாதை பராமரிப்பும் ஒட்டாமல் அவைபாட்டுக்கு மெகானிகலாக ஸ்தாபன ரீதியில் நடக்கும். (எல்லாரும் இப்படி என்று நான் சொல்லவில்லை. எந்த தேசத்திலும் உத்தமர்கள், பரோபகாரிகள், த்யாகிகள் உண்டு. அப்படியே ஸ்வயநலக்காரர்களும் உண்டு. பொதுவாகச் சொன்னேன்.) மேல்நாட்டானைக் காப்பியடித்து, ***"அதிதி தேவோ பவ"*** என்ற கொள்கையைக் கொண்ட நம் தேசத்திலும் வீட்டு வாசல்களில் "நாய் ஜாக்கிரதை!" போர்டு தொங்குவதைப் பார்த்தால் வேதனையாயிருக்கிறது. "வா வா" என்று வழிப்போக்கர்களைக்

கூப்பிட்டுப் படுக்க வைத்துக்கொள்ளவே 'திண்ணை' என்பது நம்முடைய வைதிகமான க்ருஹ சில்பத்தில் இருந்தது. இப்போது அதெல்லாம் போச்சு. இப்படியே அன்றன்றும் வைச்வதேவ பலியில் தெருவில் போகிற எவனோ பஞ்சமன் சாப்பிடக்கூட ஒரு பங்கு அன்னம் போடப்பட்டு வந்த இந்த தேசத்தில் இம்மாதிரி அநுஷ்டானங்களை 'ஸூபர்ஸ்டிஷன்' என்று தள்ளி வைத்து விட்டதும் மனஸுக்கு க்லேசமாயிருக்கிறது.

மேல்நாட்டு மோஸ்தரில் இங்கேயும் தனி மநுஷ்யனின் குடும்பம் தனக்கே என்று ஆனபிறகு, இங்கேயும் அங்கே மாதிரி ஸமூஹப் பணிகளை இன்ஸ்டிட்யூஷனலைஸ் செய்வதாகவும், **'Welfare State'**என்பதாக ராஜாங்கமே அநாதையில்லம், வயஸானவர் பென்ஷன் என்றெல்லாம் நடத்துவதுமாக ஆகிவிட்டது. இன்றைய 'ஸெட் அப்' பில் இதுவுமில்லாவிட்டால் நிராதரவானவர்களின் பாடு ரொம்பவும் கஷ்டமாகத்தான் ஆகிவிடும். ஆனாலும் பூர்வத்தில் ஒவ்வொருவரும் **'வஸுதைவ குடும்பகம்'** (லோகம் முழுக்க ஒரு குடும்பம்) என்ற அன்பான எண்ணத்தோடு தாங்களே ஆதரவற்றவர்களைத் தாங்கி தரித்த முறையோடு பார்த்தால் இப்போது ராஜாங்க ரீதியில் ஆபீஸாக ஸமூஹ காரியங்களை நடத்துவது இரண்டாம் பக்ஷம்தான்.

சுருக்கமாக வேத தர்மம் என்பது நம்மிடத்தில் இருக்கும்படியான எல்லா சக்திகளும் ஈஸ்வர சக்தியில் துளித்துளிதான். இந்த சக்திகளை ஈஸ்வரனுக்கே அர்ப்பணிக்க வேண்டும். நாவினாலே அவன் நாமாவைச் சொல்வது, மனஸினாலே த்யானம் பண்ணுவது, சரீரத்தாலே பூஜை பண்ணுவது என்று எல்லாம் ஈஸ்வர ஸம்பந்தமாக்க வேண்டும். பூஜை என்பதில் கர்மாவைச் செய்வதும், கடமையைச் செய்வதும் அடக்கந்தான். ஆசார்யாள் முடிவாக உபதேசித்த ஸோபான பஞ்சகத்தில் கர்மாவைப் பண்ணுவதுதான் ஈஸ்வர பூஜை என்று நிர்த்தாரணம் செய்திருக்கிறார். ஸ்வதர்மப்படி அவரவருக்கு ஏற்பட்ட கர்மாவோடு, ஸர்வஜனங்களுக்கும் ஏற்பட்ட ஸாதாரண தர்மங்களைச் சேர்ந்த ஒரு முக்யமான கர்மா இந்தப் பரோபகாரம் என்பது.

அதனால் நாக்கால் நாமா சொல்கிறதோடு ஜனங்களுக்கு நல்லதாக, மதுரமாக நாலு வார்த்தை சொல்லவேண்டும். மனஸால் த்யானம் பண்ணுவதோடு, 'லோகமெல்லாம் க்ஷேமமாயிருக்கணும்' என்று ஒவ்வொரு நாளும் நாலு க்ஷணமாவது அன்போடு நினைக்க வேண்டும். சரீரத்தால் பூஜை, ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் செய்வதோடு கொஞ்ச நேரமாவது வெட்டியோ கொத்தியோ வேறு தினுஸிலோ ஒரு பொதுத்தொண்டு பண்ணவேண்டும். திரவ்யத்தையும் இப்படியே தேங்காய், பழம், புஷ்பம் வாங்குவதோடு தான தர்மத்துக்கும் கொஞ்சமாவது செலவழிக்க வேண்டும். இவற்றையும் ஈஸ்வர ப்ரீதிக்காக ஈஸ்வர பூஜையாக நினைத்தே செய்ய வேண்டும். இதுவே நம் பூர்விகர்கள் போன வழி. அதாவது தெய்வகார்யம், ஸமூஹ கார்யம் இரண்டில் ஒன்றையும் விடாமல் பண்ண வேண்டும்.

பரோபகாரம் நம் மதத்தில் சொல்லப்படவில்லை என்ற தப்பான பிரசாரத்தை நம்பக்கூடாது. குழந்தையாக இருக்கிறபோதே 'ஸுபாஷிதம்', நீதி சாஸ்திரம்'என்றெல்லாம் சொல்லிக் கொடுப்பார்கள். அதிலேயே பரோபகாரத்தைப் பற்றிய அநேக போதனையிருக்கிறது. ' **பரோபகாரார்த்தம் இதம் சரீரம்** ' – 'உலகத் தொண்டு பண்ணவே இந்த உடம்பு வாய்த்திருக்கிறது' என்று அப்போதே கற்றுக் கொடுத்து விடுவார்கள். இன்னொன்றும் சொல்வதுண்டு, '***பரோபகாராய ஸதாம் விபூதய:*** – 'நன்மைகளின் ஸகல சக்திகளும், உடைமைகளும் பரோபகாரத்துக்காகவே ஏற்பட்டவைதான்' என்று அர்த்தம். இதை இரண்டு விதத்தில் சொல்லி இளமனஸில் ஆழமாகப் பதிப்பிப்பார்கள். ஒன்று:பிறருக்குப் பிரயோஜனமாவதற்குத்தான் மரம் பழுக்கிறது ***(பரோபகாரார்த்தம் பலந்தி வ்ருக்ஷா:)*** **;**பிறருக்குப் பிரயோஜனமாவதற்குத்தான் ஆறுகள் ஜலத்தைச் சுமந்து ஓடுகின்றன ***(பரோபகாரார்த்தம் வஹந்தி நத்ய:)*** **;** பிறருக்குப் பயனாவதற்கேதான் பசுக்கள் பால் கொடுக்கின்றன ***(பரோபகாரார்த்தம் துகந்தி காவ:)*** **;**அப்படியே இந்த மநுஷ்ய காயம் ஏற்பட்டிருப்பதும் பிறருக்கு உதவும் பொருட்டே ***(பரோபகாரார்த்தம் இதம் சரீரம்)*** .இன்னொன்று : இப்போது சொன்னதையே இன்னும் கொஞ்சம் நயத்தோடு சொல்வது - மரம் தன் பழத்தைத் தானே சாப்பிட்டுக் கொள்வதில்லை ***(காதந்தி ந ஸ்வாது பலாநி வ்ருக்ஷா :*** **;** ஆறு

தன் ஜலத்தைத் தானே குடித்துக் கொள்வதில்லை ***(பிபந்தி நத்ய: ஸ்வயமேவ நாம்ப:)*** **;** மேகம் தன் மழையாலுண்டாகிற பயிரைத் தானே சாப்பிடுவதில்லை ***(பயோதரா:ஸஸ்யமதந்தி நைவ)*;** இதேபோல ஸஜ்ஜனங்களின் (நல்லோரின்) எல்லாத் திறமைகளும், செல்வமும் பரோபகாரத்திற்குத்தான் ***(பரோபகாரய ஸதாம் விபூதய :)*** .

படிக்கிற காலத்திலேயே, "உன்னை சாச்வதமாக உயிர்வாழ்கிற தேவஜாதியாக நினைத்துக்கொண்டு கல்வியையும் பொருளையும் நிறுத்தாமல் மேலே மேலே ஸம்பாதித்துக்கொண்டே போ" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு, அதே மூச்சில், அந்த ஸ்லோகத்திலேயே, "தர்மம் பண்ணுவதில் மட்டும் அப்புறம் என்று ஒத்திப்போடாமல், எப்போதும் யமன் உன் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டேயிருக்கிறான் என்று நினைத்து, உடனுக்குடனே பண்ணிவிடு" என்று சொல்லிக் கொடுத்தார்கள்:

அஜராமரவத் ப்ராஜ்ஞ : வித்யாம் அர்த்தம் ச ஸாதயேத் |
க்ருஹீத இவ கேசேஷு ம்ருத்யுநா தர்மம் ஆசரேத் |

வியாஸர் பதினெட்டு புராணங்களையும் பண்ணி முடித்தபின் சிஷ்யர்கள் அவற்றின் ஸாராம்சத்தை ஒன்றிரண்டு ச்லோகங்களில், ஸுலபமாக நினைவில் வைத்துக்கொள்ளும்படியாகச் சுருக்கித் தரும்படிப் பிரார்த்தித்தார்களாம். உடனே அவர் "ஒன்றிரண்டு ச்லோகம் எதற்கு? இந்தப் பதினெட்டுப் புராணம் மட்டுமின்றி மொத்தமிருக்கிற கோடிப் புஸ்தகங்களின் ஸாரத்தையும் அரை ச்லோகத்திலேயே சொல்கிறேன்"**"ச்லோகார்தேந ப்ரவக்யாமி யதுக்தம் க்ரந்த கோடிஷு |"** என்று ஒரு ச்லோகத்தின் முதல் பாதியாகச் சொல்லிவிட்டு மற்ற பாதியில் அந்த ஸாரமான தத்துவத்தைச் சொன்னாராம்:

" பரோபகார : புண்யாய பாபாய பரபீடநம் ||"

இருக்கிற அத்தனைகோடி மத சாஸ்திர புஸ்தகங்களுக்கும் உயிர் நிலையான தத்வம் என்னவென்றால், "புண்யம் ஸம்பாதிக்க வேண்டுமானால் பரோபகாரம் பண்ணு;பாபத்தை மூட்டை கட்டிக் கொள்வதனால் மற்ற ஜீவன்களுக்குக் கஷ்டத்தைக் கொடு" என்பதுதான் - என்று இதற்கு அர்த்தம்.

பாபது என்று தெரிந்துகொண்டு அதை விலக்குவதற்கும், புண்யம் எது என்று தெரிந்துகொண்டு அதைப் பண்ணுவதற்குந்தான் மதம் என்பதே இருக்கிறது. இங்கே நம் மதத்துக்கு முக்யமான மூல புருஷர்களில் முதன்மையாயிருக்கிற வ்யாஸாசார்யாள் பர உபகாரம் தான் புண்யம், பர அபகாரம்தான் பாபம் என்று சொல்கிறாரென்றால், அதற்கப்புறம் நம் மதத்தில் பரோபகாரத்துக்கு இடமுண்டா என்ற வாதத்துக்கே இடமில்லை.

'ஆத்மார்த்தமாக, ஒருத்தன் தனக்குப் பண்ணிக் கொள்வதைப்பற்றித்தான், வேத மதத்தில் நிறைய இருக்கிறது. பிறத்தியாருக்குப் பண்ணுவதைப்பற்றி இல்லை' என்று சில பேர் criticise பண்ணினாலும் இப்படி இவன் ஸ்வய உபகாரம் பண்ணிக்கொண்டு தன்னை சுத்தப்படுத்திக் கொண்டாலன்றி இவன் செய்கிற பரோபகாரத்துக்கு effect இருப்பதில்லை என்பதால்தான், தன்னுடைய spiritual power (ஆத்ம சக்தி) -ஐக் கொண்டு ஒருத்தன் 'ஸோஷல் ஸர்வீஸ்' பண்ணணும்;அந்த 'ஸோஷல் ஸர்வீஸா'லேயே இந்தப் 'பவரை' விருத்தி செய்து கொள்ளணும் என்பதாக இரண்டையும் கைகோர்த்துக் கொண்டு, ஒன்றால் மற்றது புஷ்டி பெறுகிற ரீதியில், நம்முடைய மதத்திலே அமைத்துக் கொடுத்திருக்கிறது.

வேத தர்மத்தைப் பூர்ண ஜீவசக்தியுடன் ப்ரகாசமாகத் தூண்டிவிட்ட ஆசார்யள் வினா-விடை ரூபத்திலே 'ப்ரச்நோத்தர ரத்நமாலிகா' என்று அநுக்ரஹித்திருக்கிறார் அதிலே ஒரு கேள்வி:

" கிம் மநுஜேஷு இஷ்டதமம் ?"

"மநுஷ்யனாகப் பிறந்தவன் விரும்ப வேண்டியவற்றில் தலை சிறந்தது எது?"என்பது கேள்வி.

" ஸ்வ பர ஹிதாய உத்யதம் ஜந்ம " என்பது இதற்குப் பதில். 'ஸ்வஹிதம்' - தனக்கு நன்மையானது அதாவது ஸ்வயோபகாரம் இதோடு 'ப்ரஹிதம்' என்கிற பரோபகாரம். இரண்டுக்காகவும் பாடுபடும் வாழ்க்கைதான் மநுஷ்யன் வேண்டத் தக்கவற்றில் உச்சியானது என்று பதில் சொல்கிறார். இங்கே

ஆசார்யாள் நவீனர்களின் 'க்ரிடிஸிஸ'த்துக்கு ஆணி அடித்தாற்போல் விடை சொல்லியிருக்கிறார்.

இதே க்ரந்தத்தில் இன்னோரிடத்தில் சந்திர கிரணத்துக்கு ஸமானமான மனிதர்கள் ஸஜ்ஜனங்களே என்கிறார். சந்திர கிரணம் லோகத்துக்கெல்லாம் தாப சமனம் தருகிறது. சந்திரனுக்கு இப்படி உலகத்துக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஆசை இருந்து, இதற்காக அது ப்ரயத்தனப்படவேண்டும் என்று இல்லை. தன்னியல்பாகவே அது லோக ஹிதத்தை உண்டாக்குகிறது. அதேபோல லஜ்ஜனங்கள் என்கிற ஸாதுக்கள் "ஸோஷல் ஸர்வீஸ் பண்ணணும்" என்று அரிப்புப் பட்டுக்கொண்டு, தண்டாரோ போட்டுச் செய்யணும் என்றே இல்லை. அவர்கள் தங்களுடைய 'நேச்சர்' படி இருப்பதே, நடப்பதே லோகஹிதமாக, பரோபகாரமாகத்தானிருக்கும். இதையேதான் ஸஜ்ஜனங்களுக்கெல்லாம் சிகரமாகப் பரம சாந்தர்களாக, மஹாந்தர்களாக இருக்கப்பட்ட ஜீவன் முக்தர்களின் லக்ஷணமாகவும் (ஆசார்யாள்) "விவேக சூடாமணி"யில் சொல்கிறார். இங்கே 'சந்திர கிரணம் மாதிரி' என்றவர் அங்கே "வஸந்த காலம் மாதிரி" என்கிறார்.

வஸந்தவத் லோகஹிதம் ச்ரந்த :

வஸந்தகாலம் போல உலக நலனைப் பண்ணியபடி உலாவுகிறார்களாம் மஹான்கள். வஸந்தம் என்று ஒன்று கண்ணுக்குத் தெரிகிறதோ? சந்திரனாவது தெரிகிறது. மஹான்கள் தங்களை இப்படிக் காட்டிக் கொள்வதுகூட இல்லை! ஆனாலும் வஸந்தம் வந்தால் தன்னால் தென்றல் ஹிதமாக வீசுகிறது. புஷ்ப ஜாதிகள், மல்லிகை முக்யமாக, எங்கே பார்த்தாலும் மலர்ந்து கம்மென்று வாசனை வீசுகின்றன. மா முதலான பழங்கள் குலுங்க ஆரம்பிக்கின்றன. சிசிர ருது என்கிற பின்பனிகாலத்தில் இலையை உதிர்த்துவிட்டு நின்ற மரமெல்லாம் வஸந்தம் வந்ததும், அதற்குப் பச்சைக்கொடி காட்டுகிறதுபோல பச்சைப்பசேல் என்று தளிர் விடுகின்றன இப்படித்தான் இந்த சரீரத்திலிருக்கும்போதே 'தான் பிரம்மம்' என்று தெரிந்துகொண்டுவிட்ட ஜீவன்முக்தனும்கூட un conscious -ஆக (தன்னுடைய புத்தி பூர்வமாக இல்லாமலே) , unnoticed ஆக (தன்னைக் காட்டிக்

கொள்ளாமலே) லோக ஹிதத்தை உண்டாக்குகிறான் என்று இப்படி இருந்து காட்டிய ஆசார்யாளே, unself- conscious ஆக (தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்கிறோம் என்ற நினைப்பேயில்லாமல்) சொல்லியிருக்கிறார்!

"பொதுவாகவே ஹிந்து மதத்தில் பரோபகாரம் கிடையாது. அதிலும் அந்த மதத்தில் உள்ள அத்வைதத்தில் லோகமே மாயை; ஆத்மாவைத் தவிரப் பிறத்தியானென்றே இல்லை'என்று சொல்லித் துளிக்கூடப் பரோபகார ப்ரக்ஞைக்கு இடமேயில்லாமல் அடைத்து விட்டிருக்கிறது" என்று ஒரு criticism இருந்தாலும், அத்வைத ஆசார்யாளே அத்வைத ஸித்தியை அடைந்து விட்டவனும் லோக ஹிதத்துக்காகத்தான் உலகத்தில் உலாவிக் கொண்டிருக்கிறான் என்கிறார்.

பகவானும் (ஸ்ரீ கிருஷ்ணரும்) ஜீவன்முக்தர்களான ஜனகாதியர்கூட 'லோக ஸங்க்ரஹ'த்துக்காக கார்யம் பண்ணிக்கொண்டு தானிருக்கிறார்கள் என்று (கீதையில்) சொல்கிறார். 'ஸங்க்ரஹம்' என்றால் அன்போடு வழிகாட்டி உசத்துவது. தன்னில்தானே ஸகல ஸாதனைகளுக்கும் லஷ்ய ஸ்தானமாயிருந்தபோதிலும், தான் பண்ண வேண்டிய ஸாதனையோ, அடைய வேண்டிய லக்ஷ்யமோ எதுவும் இல்லாதபோதிலும், பகவானான தாமும் லோகத்தார் எப்படி வாழவேண்டும் என்ற 'ஐடிய'லை அவர்களுக்குக் காட்டிகொடுப்பதற்காகவே ஓயாமல் ஒழியாமல் கார்யங்கள் பண்ணிக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார். எதுவும் ஸாதிக்க வேண்டாத பகவானும் பரோபகாரத்தை ஸாதிக்கிறார்! இதையேதான் "ப்ரச்னோத்தர ரத்நமாலிகா"விலும் (ஆசார்யாள்) , ***"கிம் ஸாத்யம்?"–*** "ஸாதிக்கத் தக்கது என்ன?" என்று கேட்டு, ***"பூத ஹிதம்"*** –' 'உயிர்க்குலத்துக்கு நன்மை செய்வது" என்று பதிலாகக் கொடுக்கிறார்.

'டாப் லெவ'லில் இருப்பவனுக்கே பரோபகாரத்தைச் சொன்ன அத்வைத ஆசார்யாள் ஸாதாரண மநுஷ்யனுக்கும் அந்த லெவலுக்கு ஏறுகிற வழியில் இதை அங்கமாகச் சொல்லித்தானிருக்கிறார். "பணம் ஸம்பாதிக்கிறாயா? ஸம்பாதித்துவிட்டுப்போ. ஆனால் அதை தார்மிகமாக

ப்ரயோஜனப்படுத்தினாயானால் அதுவே உன் சித்தத்தைப் பரிசுத்தி பண்ண உதவும்"-

யல்லபஸே நிஜ கர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம்

என்று 'பஜகோவிந்த'த்தில் சொல்கிறார். அதிலேயே ஆத்ம ஸம்பந்தமாக, பகவத் ஸம்பந்தமாக, "கீதையைச் சொல்லு, ஸஹஸ்ரநாமம் சொல்லு, விடாமல் லக்ஷ்மிபதியான மஹாவிஷ்ணுவை த்யானம் பண்ணு, ஸத்ஸங்கத்திலேயே மனஸை ஈடுபடுத்து"

என்றெல்லாம் சொல்லிவிட்டு, முடிவாக "ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் பண்ணு" என்று பரோபகாரத்தோடு முடிக்கிறார்:

கேயம் கீதா நாம ஸஹஸ்ரம்
த்யேயம் ஸ்ரீபதிரூபம் அஜஸ்ரம் |
நேயம் ஸஜ்ஜன ஸங்கே சித்தம்
தேயம் தீநஜநாய ச வித்தம் ||

ஆனதால் வேத தர்மம் (லோகம், ஜீவன் எல்லாம் மாயை என்கிற அத்வைதமும்கூட) ஜீவாத்ம கைங்கர்யங்களை ஈஸ்வர ஸம்பந்தத்துடனே சேர்த்துச் சேர்த்து எல்லாரும் பண்ணியாக வேண்டுமென்று கொடுத்திருப்பதைப் புரிந்து கொண்டு அப்படியே செய்ய வேண்டும். நம் பூர்விகர்கள் போனவழி அதுதான். அதிலேயே நாமும் போய் அத்வைத த்ருஷ்டியில் எல்லா உயிர்களையும் ஈஸ்வர ஸ்வரூபமாகப் பார்த்துத் தொண்டு செய்து ஈஸ்வர ப்ரஸாதத்தை அடைய வேண்டும்.

ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து |
லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து |

5-தன் கையே தனக்குதவி

5.1-ஸ்தோத்திரமும் கண்டனமும்

இன்றைக்கு[*1] ஒரே விஷயமாக இரண்டு தினுஸான அபிப்ராயங்கள் என்னிடம் வந்தன. ஒன்று எனக்கு ஸ்தோத்ரம் இன்னொன்று வசவு. கௌரவமாக, நாஸூக்காக வைதார்கள். வைதார்கள் என்று நான் குற்றம் சொல்லவில்லை. அவர்கள் வைததில் எனக்கு புத்திமதி இருப்பதாகவே தெரிந்துகொள்கிறேன்.

ஸ்தோத்ரத்தைவிட வசவுதான் எப்போதுமே ஒருத்தனுக்கு நல்லது பண்ணுவது. ஸ்தோத்ரம் கர்வத்தில் கொண்டுவிட்டு ஆத்மஹானிக்குத்தான் வழி செய்கிறது. ஒருத்தர் வைகிறபோதுதான் நமக்கு நம் தப்புத் தெரிய இடமேற்படுகிறது. அதனால் அதைத் திருத்திக்கொண்டு ஆத்மாவை சுத்தி பண்ணிக்கொள்ள வழி உண்டாகிறது. ஆகையால் நமக்கு நல்லது செய்வது யார் என்றால் நம்மை ஸ்தோத்ரம் செய்கிறவனில்லை நாம் பண்ணுகிற தப்பைச் சொல்கிறவன்தான். சொல்கிறதுண்டு: "சிரிக்கச் சிரிக்கச் சொல்கிறவர் மற்றபேர்; அழ அழச் சொல்கிறவர் உற்றபேர்."

ஒரே விஷயமாக இப்படி இரண்டு வித உபசாரங்களும் – நான் கர்வப்படும்படி ஸ்தோத்ர உபதாரமும், எனக்கு புத்தி வரும்படி கண்டன மஹா உபசாரமும் – கிடைத்தன.

எப்பொழுதெப்பொழுதோ, எங்கெங்கேயோ நான் ஸோஷல் ஸர்வீஸ் பற்றிச் சொன்னதை இப்போது போட்டுக் கொண்டிருக்கிறார்களோல்லியோ?[*2] அதை இப்போதுதான் நான் புதிசாக எழுதுகிறேனாக்கும் என்று நினைத்துக் கொண்டுதான் ஒருத்தர் வந்து அதற்காக என்னை ஸ்தோத்ரம் பண்ணிவிட்டுப் போனார்.

அதனால் எனக்கு கர்வம் வந்தவிடப் போகிறதே என்று அம்பாளே அனுப்பி வைத்தமாதிரி, தம்பதியாக இரண்டு பேர் வந்து இதைப்பற்றிய வேறே தினுஸான அபிப்ராயம் சொல்லிவிட்டுப் போனார்கள். அவர்களில் அகமுடையான் கொஞ்சம் எடுத்துக்கொடுத்தவுடன் பெண்டாட்டியும் சேர்ந்து கொண்டுவிட்டாள். 'வசவு, வசவு' என்று நான் சொன்னாலும் அவர்கள் தாபத்தை ரொம்ப அடக்கிக்கொண்டு, வார்த்தையில் கொஞ்சம்கூடப் பதட்டப்படாமல், மரியாதைக் குறைவாக ஒரு சொல்கூடச் சொல்லாமல்தான் பேசினார்கள். கோபப்பட வேண்டிய இடத்தில் துக்கப்பட்டுக்கொண்டே

சொன்னார்கள். ஆனாலும் அதை வசவு என்று வைத்துக் கொண்டால்தான் எனக்கு ரோஷம் வந்து கொஞ்சம் deep – ஆக என்னை நானே அலசிப் பார்த்துக்கொள்வேன் என்று தோன்றியதால் ”வசவு, வசவு” என்று சொல்கிறேன்.

---

*1.1976-ம் ஆண்டு பிற்பகுதியில் ஒரு தினம்.
*2. 'கல்கி'யில் அச்சமயம் வெளியாகி வந்த 'ஜீவகாருண்யம்' என்ற ஸ்ரீ பெரியவர்களின் உரைத்தொகுப்புத் தொடர் குறிப்பிடப்படுகிறது. இத்தொடர் நமது இந்நூலின் முந்தைய உரையான 'பரோபகாரம்' என்பதில் அடங்கும்.

5.2-பொதுத் தொண்டும், குடும்பப் பணியும்

ஸோஷல் ஸர்வீஸ் பற்றி நான் சொன்னதில் அவர்களுக்கு என்ன ஆக்ஷேபம்? ஸோஷல் ஸர்வீஸ் என்பதை நான் over-emphasize பண்ணி (மிகையாக அழுத்தங் கொடுத்து)ச் சொன்னதால் ஸெல்ஃப் ஸர்வீஸ் (அவனவன் தனக்குச் செய்து கொள்ள வேண்டியது) , டொமெஸ்டிக் ஸர்வீஸ் [குடும்பத்துக்கான பணி] ஆகியவையெல்லாம் கெட்டுப் போகும்படியாகப் பண்ணியிருக்கிறேன் என்றுதான் ஆக்ஷேபம். அவர்கள் 'ஆக்ஷேபம்' என்று சொல்லிச் சண்டை போடாமல் அழுது விட்டுத்தான் போனார்களென்றாலும் இதுதான் அதற்கு அர்த்தம்.

நான் எப்பொழுது எதைச் சொன்னேனோ? [பத்திரிகைக்காரர்கள்] இப்பொழுது அதில் எதைப் போடுகிறார்களோ? **அவனவன் தனக்குத்தானே பண்ணிக்கொள்ள வேண்டிய கார்யங்களையும், தன் வீட்டுக்குப் பண்ணவேண்டிய ட்யூட்டிகளையும் விட்டு விட்டு பரோபகாரம்** என்று போக வேண்டும் என்று நான் நினைத்ததேயில்லை. அப்படி நான் 'அட்வைஸ்' பண்ணவும்மாட்டேன் ஆனாலும் உபந்நியாஸம் என்று செய்கிறபோது இதைப்பற்றி விசேஷமாகச் சொல்லாமலிருந்திருக்கிறேன் போலிருக்கிறது. தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஒருவன் செய்துகொள்வது சொந்தமாக

ஏற்பட்ட ஸ்வபாவமான ஸமாசாரம். இதைப்பற்றி வெளி மநுஷ்யர்கள் விசேஷமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில்லை. ஸமூஹம் முழுவதற்கும் நல்லதற்கானதைச் சொல்லவும், அதற்காகத் திட்டங்களைப் போட்டுக் கார்யங்கள் பண்ணவுந்தான் நாங்கள் (ஆசார்ய பீடங்கள்) ஏற்பட்டிருக்கிறோம். அதனால் ஸோஷல் ஸர்வீஸை stress பண்ணியிருப்பேன்.

5.3-ஹிந்து மதமும் தனிமனிதனும்

இதனால் individual [தனி நபர்], family [குடும்பம்] இதுகளை நாங்கள் இரண்டாம் பக்ஷமாய் வைத்துவிட்டோம் என்று அர்த்தமேயில்லை. நான் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன் - ஹிந்து மதம் individual -ஐ சுத்தி செய்கிறதற்குத்தான் முதல் இடம் கொடுக்கிறது. மற்ற மதங்கள் மாதிரி அதில் social spirit [ஸமூஹ உணர்வு] இல்லை என்று அந்த மற்றவர்கள் கண்டனம் செய்கிறபோது, நாமும் இப்படி ஒரு மதம் இருந்தால் அது உசந்தநிலைதான் என்று தப்பாக நினைத்துக்கொண்டு அவர்களிடம், "அதெல்லாமில்லை, எங்கள் மதத்தில் பரோபகாரத்தைப் பற்றி எவ்வளவு இருக்கிறது பாருங்கள், அதுதான் எங்களுக்கு முக்கியம்" என்று defensive -ல் [தற்காப்பில்] argue பண்ணவே வேண்டாம். ஏனென்றால் வாஸ்தவத்திலேயே ஸொஸைட்டியைவிட நம் மதத்துக்கு இன்டிவிஜுவல் தான் முக்கியம். அவனவனும் தன்னுடைய ஆசார அநுஷ்டானத்தால் அவனவனை சுத்தி செய்து கொள்வதுதான் நம் மதத்துக்கே உயிர்நிலை என்பது என் அபிப்பிராயம். இன்டிவிஜுவல்களின் ஸ்வய அநுஷ்டான பலத்தினாலும், அவர்களுடைய பரிசுத்தியின் சக்தியினாலுந்தான் இந்த மதம், மற்ற எந்த மதமும் தோன்றுவதற்கும் முன்னாலிருந்து பதினாயிரம், லக்ஷம் வருஷங்களாக அந்த எல்லா மதங்களும் இதன்மேல் படையெடுத்து வந்ததையும் மீறி, இன்றைக்கு எந்த மதமுமில்லாத நாஸ்திக்யம் கரைபுரண்டு வந்துங்கூட ஸமாளித்து ஜீவனோடு இருக்கிறது என்பதே என் அபிப்பிராயம்.

ஹிந்துக்களின் மதத்துக்கு உயிர்நிலை தனி மநுஷ்யனின் ஸ்வதர்மப்படியான சுத்த வாழ்க்கை;கிறிஸ்தவர்கள் மதத்துக்கு உயிர்நிலை பரோபகாரம்; துருக்கர்கள் மதத்துக்கு உயிர்நிலை கட்டுப்பாடு என்பது என் அபிப்ராயம். பொதுவில் ஹிந்து மதம் தவிர மற்ற எல்லா மதத்தினருமே ரொம்பவும் organised -ஆக இருப்பார்கள். நமக்கு ஆர்கனைஸேஷன் போதாது; இங்கே தனி மநுஷ்ய சக்தியாலேயே மதம் ஜீவிக்கிறது.

5.4-மற்ற மதங்களுடன் வித்யாஸம்

"ஸங்கம் சரணம் கச்சாமி" என்பதாக புத்தர் பல பேர் சேர்ந்து ஆர்கனைஸேஷனாக மதத்தைக் காப்பாற்றும்படிப் பண்ணினார். கிறிஸ்டியானிடியிலும் mass,congregation என்று எல்லாரும் சேர்ந்துதான் செய்கிறார்கள். மசூதியிலும் இப்படித்தான். இஸ்லாம்காரர்களுக்குள் இருக்கிற ஆர்கனைஸேஷனல் கட்டுப்பாடு சொல்லிமுடியாது. ஸிக்குகள், பார்ஸிக்காரர்கள் மாதிரி எண்ணிக்கையிலே குறைச்சலா யிருக்கிறவர்களைப் பார்த்தாலோ, அங்கேதான் எண்ணிக்கைக்கு எதிர் proportion -ல் ஆர்கனைஸேஷன், கட்டுப்பாடு இன்னும் ஜாஸ்தியாயிருக்கிறது. தங்களுடைய சின்ன ஸமூஹம் சிதறிவிடக்கூடாது என்பதாலேயே அவர்கள் ஸமய ரீதியில் ஸமூஹம் முழுவதும் பிரியாமல் ஒட்டிக்கொண்டிருக்கும் படி வைத்து நடத்துகிறார்கள்.

ஹிந்துமதம் தவிர மற்றவை எல்லாமே social based [ஸமூஹத்தை அடிப்படையாகக் கொண்டவை] என்கிறபடிதான் அவற்றின் மத வழிபாடு அமைந்திருக்கிறது. தனியாக அவனவனும் meditate பண்ணுவது (தியானிப்பது) என்பது எந்த மதத்திலும் இல்லாமலில்லை. புத்தமதத்தில் குறிப்பாக இது விசேஷ ஸ்தானம் பெற்றுத்தான் இருக்கிறது. ஆனாலுங்கூட கூட்டுப்பூஜை தவிர வீட்டுப்பூஜை என்று மற்ற மதங்களில் இல்லை. எல்லோரும் சேர்ந்து கூட்டு வழிபாடு, வர்ண-ஆச்ரமங்களால் ஏற்படும் தனித்தனி அநுஷ்டானமில்லாமல் எல்லாருக்கும் ஒரேவிதமான அநுஷ்டானங்கள் என்பவைதான் மற்ற மதங்களில் முக்யமாக இருக்கின்றன.

"மற்றவர்கள் சர்ச்சில், மசூதியில், குருத்வாராவில் கூட்டு வழிபாடு பண்ணுகிறார்களென்றால் நாமும்தானே கோயிலில் சேர்ந்து உத்ஸவாதிகள் பண்ணுகிறோம்?" என்று கேட்கலாம். வாஸ்தவந்தான். ஆனால் அவர்கள் மாஸ், நமாஸ் பண்ணுவது போலக் கோயில்களில் நாம் கூட்டுப் பிரார்த்தனை ஒன்றும் செய்வதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கோயில்கள்தான் நம் வேத பாரம்பர்யத்துக்கே backbone [முதுகெலும்பு] -ஆக இந்த நாகரித்தைக் காப்பாற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிறதென்றாலும், கோயில் மூலமாக நமக்குக் கிடைக்கிற ஈஸ்வர ப்ரஸாதத்தை இன்டிவிஜுவல் அநுஷ்டானத்தால் விருத்தி பண்ணிக் கொள்ளும்படியாகவே நம் மதம் அமைந்திருக்கிறது.

5.5-நமது ஆலய வழிபாட்டின் நோக்கம்

ஆலயங்களில் ரிஷிகளின் தபஸை டெபாஸிட் மாதிரிப் போட்டு வைத்திருந்து அதிலுருந்து நாம் எடுத்துக் கொள்வது நிஜம். மூர்த்திகளிலிருந்து தெய்வாநுக்ரஹம் கிடைப்பது நிஜம். மந்த்ர பூர்வமான ஆராதனைகளால் நமக்கு ஆலயத்திலிருந்து ஆத்மார்த்தமான நன்மை நிறைய உண்டாவதும் நிஜம். இத்தனையும் இருந்தாலும் ஆலய வழிபாடும் நாம் தனிப்பட நம்மை உருப்பட வைத்துக் கொள்வதற்கு அங்கம்தானேயன்றி, community salvation -காக [ஒரு ஸமூஹம் முழுதும் மோக்ஷம் பெறுவதற்காக] அல்ல.

கோயிலில் பலபேர் சேர்ந்து பூஜைகள், உத்ஸவங்கள், கும்பாபிஷேகங்கள் செய்து, பொன்னையும் பொருளையும். கந்தம், புஷ்பம், நைவேத்யம், மேளதாளம் எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணுகிறோமென்றால் இதற்குப் பர்பஸே [நோக்கமே] வேறு. இப்படிப்பட்ட கூட்டுப்பணிதான் மதத்தின் முடிவு என்ற அபிப்பிராயத்தில் இதைச் செய்யவில்லை. ஆனால், community thanks giving -ஆகவே இதைச் செய்கிறோம். ஈஸ்வரனிடமிருந்து ஸமூஹம் முழுதும் பலவிதமான அநுக்ரஹங்கள் பெறுகிறதல்லவா? அதற்காக ஸமூஹம் முழுவதும் சேர்ந்து அவனுக்கு நன்றி தெரிவ்ப்பதற்கு அடையாளமாக, நன்றிக்கும் அன்புக்கும் ஸ்தூலமான அடையாளமாக, அவன்

நமக்குக் கொடுத்திலிருந்தே திரும்ப அவனுக்கு வஸ்திரம், நைவேத்யம், வாஹனம் என்றெல்லாம் அர்ப்பணிப்பதுதான் நம்முடைய கூட்டு ஆலயப்பணியின் பர்பஸ்.

'ஸால்வேஷ'னுக்கு [விடுதலைக்கு] இதோடு நின்றுவிட்டால் போதாது. ஈஸ்வரனின் பரம க்ருபையில் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தும், அந்த மூர்த்திகளில் அப்படியே உள்ளம் சொக்கி பக்தி பண்ணியுமே மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்கும் போனவர்கள் உண்டுதான். ஆனாலும் இங்கேயுங்கூட அது அவர்கள் இன்டிவிஜுவலாக [தம்மளவில் மட்டும்] செய்து கொண்டதுதானே? பொதுவில் ஆலயத்திலிருந்து பெறுகிற சக்தியைத் தனி வாழ்க்கையின் அநுஷ்டான சுத்தத்தால் விருத்தி செய்து கொள்வதாகவே நம் மதம் இருக்கிறது. அவனவன் இப்படி சுத்தமாக அநுஷ்டானம் பண்ணித் தன்னைத்தானே கடைத்தேற்றிக் கொள்வதற்கான சக்தியையும் கோயிலுக்குப் போய்ப்போய், வேண்டி வேண்டியே பெறலாம்.

ரொம்பவும் controversial -ஆன [சர்ச்சைக் கிடமான] புஸ்தகம் எழுதின ஒரு வெள்ளைக்காரர்* என்னிடம், "உங்கள் கோயில்களில் என்ன இப்படி ஒரே சத்தமும் கூச்சலுமாயிருக்கே?' 'என்று கேட்டபோது நான் இதைத்தான் சொன்னேன். "சர்ச்சில், மசூதியில் புத்தவிஹாரத்தில் silent prayer செய்கிறதுபோலக் கோயிலில் செய்யணும் என்பது முக்ய உத்தேசமில்லை; எங்களுக்கு ஏகாந்தத்தில் த்யானம்தான் முக்யம். த்யானம், congregational worship [கூடிப் பிரார்த்தனை சொல்லி வழிபடுவது] ஆகியவற்றிற்காகக் கோயில் இல்லை. ராஜா நம்மை ரக்ஷிக்கிறான் என்பதற்காக அவனுக்கு அரண்மனை, அலங்காரம், பரிவாரம், படாடோபம் எல்லாம் கொடுக்கிறோம்; வரியும் கொடுக்கிறோம் அல்லவா? அதே மாதிரி ஸர்வலோக ராஜாவாக, ஸர்வ கால ரக்ஷகனாக இருக்கப்பட்ட பகவானுக்குப் பொன்னையும் பூஷணத்தையும் கொடுத்து பெரிசாகக் கோயில் கட்டி வைத்து, மேளதாள விமரிசைகளோடு உத்ஸவம் செய்யவே, community thanks- giving -ஆக (ஸமூஹ நனறியறிவிப்பாக) collective offering -ஆக [கூடிக் காணிக்கை செலுத்துவதாக] எங்கள் ஆலய வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. இங்கே அமைதியை எதிர்பார்க்க முடியாது. அமர்க்களம், ஆரவாரம், மேளதாளம்,

கண்டாமணி அதிர்வேட்டு இருக்கத்தானிருக்கும். அமைதியாக த்யானம் பண்ண அவரவர் வீட்டிலும் பூஜாக்ருஹமுண்டு. ஆற்றங்கரை, குளத்தங்கரை உண்டு" என்று சொன்னேன்.

இப்படிச் சொன்னதால் கோயிலில் அவரவர்களும் இரைச்சல் போட்டுக்கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டிருப்பதற்கு லைஸென்ஸ் தந்ததாக அர்த்தமில்லை. **சாஸ்த்ரோக்தாக அநுமதிக்கப்பட்டிருக்கும் ஓசைகளை**- மணி அடிப்பது, வேத கோஷம், தேவாரம், பஜனை, மேளம், புறப்பாட்டில் வெடி இவற்றைத்தான் - நான் சொன்னது.

இந்த மாதிரி சாஸ்த்ரோக்தமான சப்தங்களுக்கே மௌன த்யானத்தில் ஒருத்தனை ஈடுபடுத்துகிற அபூர்வமான சக்தி உண்டு. இம்மாதிரி சப்தங்களுக்கு நடுவிலேயே ஸந்நிதானத்தில் சிறிது கண்ணை மூடிக்கொண்டால், அல்லது தக்ஷிணாமூர்த்திக்கு எதிரே ஜபம் பண்ண உட்கார்ந்துவிட்டால், சட்டென்று ஒரு லயிப்பு உண்டாகிவிடும்.

தனி மநுஷ்யன் தன்னைத் தனக்குரிய அநுஷ்டானத்தால் சுத்தப்படுத்திக்கொண்டு தன் வாழ்க்கை உதாரணத்தாலேயே மற்றர்களுக்கும் வழிகாட்டுவதுதான் ஹிந்து மதத்தின் உயிர்நிலை.சிறு வயஸில் இதை குருகுலத்திலும் விருத்தாப்பியத்தில் ஸந்நியாசியாக ஏதாவது மடம் அல்லது ஆச்ரமத்திலும் அப்யாஸம் பண்ணுவதுபோக, மீதம், வாழ்க்கையின் மிகப்பெரிய பாகம் இவன் க்ருஹஸ்தனாக வீட்டில்தான் இருக்க வேண்டும். இதனாலேயே நம் தர்ம சாஸ்த்ரத்தில் இவனால் கிருஹத்தில் இதரர்களுக்குச் செய்யப்பட வேண்டிய கடமைகள் பற்றியும், இவனுக்குப் பத்தினி, புத்ரர் முதலான அந்த இதரர்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றியும் வேறு இல்லாத அளவுக்கு நிறையச் சொல்லியிருக்கிறது. ஆத்மாபிவிருத்தி பெரும்பாலும் வீட்டிலேயே ஏற்படவேண்டியிருப்பதால் க்ருஹஸ்த தர்மம் என்று ஏகப்பட்டதாகச் சொல்லியிருக்கிறது.

* ஆர்தர் கீஸ்லரும் அவர் எழுதிய "Darkness at Noon" என்ற நூலும் குறிப்பிடப் பெறுகின்றன.

5.6-முரணுக்குக் காரணம்

இந்தக் கதையெல்லாம் இப்போது எதற்கு அளக்கிறேனென்றால், நான் நம் ஹிந்து தர்மப்படி பரோபகாரம் செய்ய வேண்டும் என்பதை emphazise பண்ணினதில் தனி ஆள், குடும்பம் இவற்றின் கார்யம் கெட்டுபோகும்படிப் பண்ணிவிட்டேன் என்று ஒரு 'கம்ப்ளெய்ன்ட்'வந்திருக்கிறென்றால், இதற்கு நேர்மாறாக, நம் மதத்துக்கே தனி ஆளும், அவனை உருவாக்குகிறதும் அவனால் உருவாக்கப்படுவதுமான அவனுடைய குடும்பமுந்தான் அச்சாணியாயிருக்கிறதே யொழிய, பொதுப்படையான ஜன ஸமூஹமல்ல என்றும் ஒரு 'கம்ப்ளெய்ன்ட்'இருக்கிறது என்று காட்டத்தான்!பரோபகாரத்தை விஷயமாக எடுத்துக்கொண்டபோது நான் தனி ஆளின் கடமை, குடும்பக் கடமை இவற்றை neglect பண்ணிவிட்டேன் என்கிறமாதிரியே, நம்முடைய ஸமயசாரங்களைப்பற்றி நான் பேசுவதை மட்டும் கேட்டுவிட்டு ஸொஸைட்டியை நான் ignore பண்ணினதாகச் சண்டை போட்டவர்களும் உண்டு. சண்டை என்றால் சண்டை இல்லை. வசவு என்று நான் சொன்னதை கௌரமான முறையிலேயே அவர்கள் பண்ணினார்கள் என்பதைப்போல, சண்டையும் மரியாதையாகத்தான் போட்டார்கள். நான்தான் அதில் இருக்கக்கூடிய நியாயம் எனக்கு நன்றாக உறைப்பதற்காகச் 'சண்டை'என்று சொல்லிக்கொள்கிறேன்.

நான் சொன்னது எல்லாவற்றையும் பேப்பர்காரர்கள் போடவில்லை என்று ஸமாதானம் சொல்லி நான் தப்பித்துக்கொள்ள இஷ்டப்படவில்லை அந்தந்த ஸமயத்தில் எந்த விஷயத்தை எடுத்துக் கொள்கிறேனோ அதில் கேட்பவர்களுக்குக் கெட்டியான பிடிமானம் உண்டாகவேண்டும் என்றே அதைக் கொஞ்சம் ஜாஸ்தியாக stress செய்துவிடுகிறேன் என்று தோன்றுகிறது. இப்படிச் சொன்னால்கூடப் பிறத்தியாரை உத்தேசித்துத்தான் இப்படி செய்கிறேன் என்று காட்டி எனக்கு நல்லபேர் கேட்கிற மாதிரி

இருக்கிறது. அதனால் இப்படியெல்லாம் நியாயம் கல்பித்துக் கொள்ளாமல் எந்த ஸப்ஜெக்டை எடுத்துக்கொள்கிறேனோ அதுவே என்னைக் கொஞ்சம் இழுத்துக்கொண்டு போய்விடுகிறது, அதன் பக்ஷமாகவே என் கண்ணைத் திருப்பிவிட்டு விடுகிறது என்று வேண்டுமானால் ஒப்புக்கொண்டு விடுகிறேன்.

என் விஷயம் இருக்கட்டும். இப்போது பொது விஷயத்தைப் பார்க்கலாம். வைதிக ஸமயாநுஷ்டானம் என்பதைப்பார்த்தால் அது முக்யமாக தனி மநுஷ்யனைத்தான் centre -ல் வைத்திருக்கிறது. அதில் ஒரு ஸமூஹப்பணி. ஸமூஹத்தை நலமடையச் செய்யும்போதே, அப்படிச் செய்வதாலேயே இந்தத் தனி மநுஷ்யன் ஆத்ம பரிபக்குவம் அடைவதுதான் இந்தப் பரோபகாரத்துக்கும் குறிக்கோள்*. ஸேவைக்குப் பாத்திரமாகிறவனும், அதாவது தானம் பெறுகிற தீனன், சிகித்ஸை பெறுகிற நோயாளி, வித்யாதானத்தால் ப்ரயோஜனமடையும் மாணவன், இப்படியாகப் பலவித பரோபகாரங்களுக்கும். பாத்ரமாக இருக்கப்பட்டவனும் இந்த லௌகிக உபகாரங்களைப் பெற்றதோடு த்ருப்தி பெற்று நின்றுவிடக்கூடாது. இவனும் தன்னுடைய இந்த லௌகிகமான problem தீர்ந்தது, இதற்கான விசாரம் இனி இல்லாமல் ஆத்மா பக்கம் விச்ராந்தியாகத் திரும்புவதற்குத்தான் என்று புரிந்து கொண்டு அந்த வழியில் போக வேண்டும். வெறுமே லௌகிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரோபகாரம் நின்றுவிடுமானால் அது செய்தவனுக்குத் தான் சித்த சுத்தி என்ற பெரிய லாபத்தைக் கொடுப்பதாகுமேயொழிய உபகாரம் பெற்றவனுக்கு சாச்வதமான லாபம் தரவில்லை என்றேயாகும். நான் ஸோஷல் ஸர்வீஸ் பற்றியும் பேசியிருக்கிறேன்;தனி மநுஷ்யனின் அநுஷ்டானங்கள் பற்றியும் பேசியிருக்கிறேன். ஸோஷல் ஸர்வீஸில் அநேக லௌகிகமான உபகாரங்களைச் சொல்லியிருக்கிறேன். அன்னதானம் செய்வது, வைத்யசாலை வைப்பது, வித்யாதானம் (ஸெக்யூலர் எஜுகேஷனையும் சொல்லியிருக்கிறேன்) , வேலையில்லாதவர்களுக்கு உத்தயோக வசதி பண்ணித்தருவது, ஏழைகளுக்கு விவாஹத்துக்கு உதவி செய்வது என்று நான் சொன்ன அநேக விஷயங்கள் லௌகிகமானவைதான். இவை நேரே ஆத்மாபிவிருத்திக்கு உதவுகிற பணிகளல்ல.

ஆனால் ஒரு இன்டிவிஜுவலின் ஆத்மாபிவிருத்திக்காக நான் அநுஷ்டானங்களைப் பற்றிச் சொல்லும்போது ஜெனரலாக க்ருஹஸ்த தர்மம், ஸ்த்ரீ தர்மம் என்றெல்லாம் சொன்னாலும், லௌகிக அம்சங்களை விஸ்தாரப்படுத்திச் சொன்னதில்லை. ஆத்மாபிவிருத்தியை aim -ஆக [லக்ஷியமாக] வைத்தே அதற்காக ஸ்த்ரீ புருஷர்கள் தனி வாழ்க்கையிலும் குடும்பத்திலும் என்ன செய்ய வேண்டும். என்பதை மாத்திரந்தான் சொல்லி வந்திருக்கிறேன். மற்றபடி 'ஒரு ஏழைக்குக் காசுபோடு' என்கிற மாதிரி 'உனக்குக் காசு தேடிக்கோ' என்று சொன்னதில்லை. கதியில்லாத ஒரு வியாதியஸ்தனுக்குச் சிகித்ஸை பண்ணு' என்று சொன்ன மாதிரி, 'உனக்கோ, வீட்டு மநுஷ்யர்களுக்கோ உடம்பு ஸரியில்லாவிட்டால் டாக்டரிடம் காட்டு' என்று நான் சொன்னதில்லை;' ஏழைப்பிள்ளை ஒருத்தனுக்குப் படிப்புக் கொடு;வேலை பண்ணி வை'என்று சொல்லியிருக்கிறேனே தவிர 'உன் பிள்ளையை நன்றாகப் படிக்க வைத்து நல்ல உத்யோகமாக ஸம்பாதித்துக்கொடு' என்று சொன்னதில்லைதான்!' எவனோ ஒரு ஏழையின் பெண்ணுக்குக் கன்னிகாதான ஸஹாயம் பண்ணு' என்பேனே தவிர, 'உன் பெண்ணுக்கு வரன் பார்த்துக் கல்யாணம் பண்ணு' என்பதில்லை. 'ஊருக்குக் குளம் வெட்டு' என்பேனே தவிர 'உன் வீட்டுக்குக் குழாய் போட்டுக்கொள்' என்று சொன்னதில்லை.

ஏன்? இந்த லௌகிக உதவிகளை இன்னொருத்தனுக்குப் பண்ணுவதே இவனுக்கு ஆத்மிகமாக உதவி பண்ணுகிறது இவனுடைய சித்த சுத்திக்கு ஸஹாயம் செய்கிறது. ஆனால் இதே லௌகிக விஷயங்களைத் தனக்கும் தன்னைச் சேர்ந்த குடும்பத்தவர்களுக்கும் பண்ணிக்கொள்கிறபோது அதிலே ஆத்ம ஸம்பந்தமாக எந்த லாபமும் சேராமலே போகிறது. காரணம் - தான், தன் மநுஷ்யர் என்பவர்களுக்குச் செய்வது தனக்கே பண்ணிக்கொள்ளும் உபகாரந்தான். அதாவது லௌகிகமான லாபம் இவனுக்கே கிட்டுகிறது. நிறையப்பணம் நஷ்டப்பட்டுப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிப் பெரிய இடத்தில் ஒப்படைக்கிறான் என்றாலுங்கூட அதிலும் நம் பெண் நல்ல இடமாகப் போய் அடைந்தாளே என்ற ஸ்வய பாச திருப்தி என்ற லௌகிகமான ஸ்வய லாபம் இருக்கத்தான் செய்கிறது. லௌகிக லாபத்தைப்

பிறத்தியானுக்குக் கிட்டப் பண்ணினால் அதற்குப் பிரதியாக இவனுக்கு ஆத்மலாபம் கிடைப்பதே நியாயம். லௌகிக லாபமே நேராக இவனுக்குக் கிடைக்கிறபோது அதற்கு குட்டிப் போட்டுக்கொண்டு ஆத்ம லாபமும் எப்படி கிடைக்கும்?

---

* இவ்விஷயம் 'பரோபகாரம்' என்ற உரையிலேயே விளக்கப்பட்டிருக்கிறது.

5.7-சொந்தப் பணியைச் சொல்லாததேன்?

ஆத்ம லாபத்துக்கு உதவாத விஷயம் என்பதால்தான் இதுகளைப் பற்றி நான் சொல்வதில்லை. உபதேசம் செய்கிற எவருமே சொல்வதில்லை. சொல்லாமலே அவனவனும் இவைகளைச் செய்து கொண்டுதானிருக்கிறான். லோகமெல்லாம் நன்றாயிருக்ககணும் என்று பிரார்த்திக்க வேண்டுமென்றுதான் யாரும் உபதேசிப்பார்களே தவிர, `நான் நன்றாயிருக்கணும்; என் மநுஷ்யாள் நன்றாயிருக்கணும்'என்று பிரார்த்தித்துக் கொள்ளும்படிச் சொல்வதில்லையே!யாரும் சொல்லிக் கொடுக்காமல் அவனவனும் தானாகவே இப்படித் தன்நலத்தை, தன் குடும்ப நலத்தைப் பிரார்த்தித்தபடிதான் இருக்கிறான். அந்த நலம் ஆத்மாவைப் பொருத்ததாயிருந்தால் இப்படிப்பட்ட பிரார்த்தனை நியாயமானது தான். லௌகிகமாகவும் ஜீவனத்துக்கு அவசியமான அளவுக்கு மட்டும் வேண்டிக்கொண்டால் தப்பில்லைதான். ஆனால் எல்லாரும் இந்த லௌகிக 'நலம்'என்பதையே ஆத்மாவுக்கு ஹானி உண்டாக்குகிற அளவுக்குப் பிரார்த்திக்கிறார்கள். பிரார்த்திப்பதோடு அதற்கான முயற்சிகளை ஓயாமல் பண்ணியபடி இருக்கிறார்கள். இதிலேயே ஓவராக ஈடுபட்டு பாசத்தினால் தர்மாதர்மங்களைக்கூட மறந்து, தப்பு வழியில் போயும் இம்மாதிரி லௌகிக அபிவிருத்தியிலேயேதான் அநேகமாக எல்லாரும் கண்ணாயிருக்கிறார்கள். இதனாலேயே பரோபகாரத்துக்குப் பொழுதோ, மனஸோ, த்ரவ்யமோ எதுவும் கொடுக்காதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனதால் இப்படிப்பட்டவர்களை

ஸ்வய விஷயம், ஸ்வய குடும்ப விஷயம் இவற்றைக் குறைத்துக்கொண்டு ஸமூஹ க்ஷேமத்துக்கானவற்றைக் கவனிக்கும்படித் திருப்ப வேண்டியதுதான் எங்களைப் போன்றவர்களின் கடமையாயிருக்கிறது. ஆனதால், நான் மட்டுமில்லை, ஜனங்களை நல்ல வழியில் திருப்புவதற்குப் பிரயத்தனப்படுகிற பொறுப்பு கொண்டே எவருமே, "சொந்த விஷயங்களை கவனித்துக்கொள்; வீட்டுக் கார்யங்களை கவனித்துக்கொள்" என்று உபதேசம் பண்ணுவதில்லையென்பது மட்டுமில்லாமல், "சொந்த விஷயங்களையே கவனித்துக் கொண்டிருந்தால் போதாது. இப்படிப்பட்ட ஆசைகளை, தேவைகளைக் குறைத்துக்கொண்டு, அதனால் லௌகிக உழலலையும் குறைத்துக்கொண்டு, கொஞ்சமாவது ஆத்மாவை கவனித்துக் கொள்ளுங்கள்; அதற்கு வழியாக, ஒரு அங்கமாக ஸமூஹத்தை, லோகத்தை கவனித்துத் தொண்டு செய்யுங்கள்"- என்றே சொல்லும்படியிருக்கிறது.

5.8-என் ஜாக்ரதைக் குறைவு

ஆனால் இப்படி 'அட்வைஸ்' பண்ணுவதிலுங்கூட நான இன்னம் கொஞ்சம் ஜாக்ரதையாகத்தான் இருக்க வேண்டும் என்று எனக்கு புத்தி சொல்லித் திருந்துகிற மாதிரி இன்றைக்கு அந்த தம்பதி வந்து, (நான் வசவு என்று சொன்னாலும்) வ்யஸனத்தோடு விஞ்ஞாபனம் பண்ணிக் கொண்டு போனார்கள் எனக்குத் தெரிந்தோ தெரியாமலோ என் ஜாக்ரதைக் குறைவால், நான் பரோபகாரத்தைச் சொல்லும்போது அதற்கு ஒரு qualifying clause [நிபந்தனைப் பிரிவு] போடாமலே இருந்துவிட்டேன் என்பதற்காக என்னை வையத்தான் வேண்டும். அதனால் அவர்களுக்கு ரொம்பவும் கஷ்டம் யதார்த்தத்தில் ஏற்பட்டுவிட்டதால் திட்டித்தானிருக்க வேண்டும். ஆனால் வயஸு, லாயக்கிருக்கோ இல்லையோ அதுவாக வந்து சேர்ந்துவிட்ட 'குரு ஸ்தானம்', இதுகளை உத்தேசித்துத் திட்டாமல் மரியாதையாகவே சொல்லிவிட்டுப் போனார்கள்.

அவர்களுக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் வீட்டுப் பிள்ளை, பிரம்மசாரிப் பையன், வேலையிலிருக்கிறவன், என் பரோகார

உபதேசங்களைப் படித்துவிட்டு அதிலேயே ஓவராக ஈடுபட்டு விட்டானாம். தன் கார்யம், வீட்டுக் கார்யம் எதையும் கவனிப்பதில்லையாயம். ஆபீஸ் கார்யம்கூட ச்ரத்தையாகப் பண்ணுகிறானோ இல்லையோ என்று பயமாயிருக்கிறதாம். எப்போர்து பார்த்தாலும் பிடி அரிசி கலெக்ஷன், [மாடுகளுக்காக] காய்கறித் தோல் கலெக்ஷன், இப்படி ஒரு பக்கம் கலெக்ஷன், இன்னொரு பக்கம் டிஸ்ட்ரிப்யூஷன் - ஆஸ்பத்திரியில் பிரஸாத டிஸ்ட்ரிப்யூஷன் மாதிரி, என்றிப்படி ஓயாமல் ஒழியாமல் அலைந்து கொண்டிருக்கிறானாம். "தான் கட்டிக்கொண்ட துணியைக்கூடத் தோய்க்கிறதில்லை; இவள்தான் தோய்த்துப்போட வேண்டியிருக்கு" என்று அந்த மநுஷ்யர் கம்ப்ளெயின் பண்ணினார். உடனே அவர் behalf -ல் அந்த அம்மாள் பரிந்துகொண்டு, "வீட்டுக்கு ஒரு ஸாமான், காய்கறி பார்த்து வாங்கிப் போடுகிறதில்லை. சொன்னால்கூடக் காதில் போட்டுக்கொள் வதில்லை இத்தனை வயஸுக்கு இவரேதான் பண்ணும்படி இருக்கிறது" என்று சொன்னாள். "ஊர் வெயில் மழை எல்லாம் அவன் மேலேதான். உடம்பு வீணாய்ப் போயிடுத்து. கையை விட்டுச் செலவும் நிறையப் பண்ணுகிறான். நாங்கள் கேட்கிறோமென்பதால் எரிச்சல், கோபம். ஏதோ கொஞ்சம் அகத்தில் தலைகாட்டுவதையும் நிறுத்திவிடப் போகிறானே என்று முடிந்த மட்டும் நாங்களும் வாயைத் திறப்பதில்லை. இருந்தாலும் மநுஷ்யர்கள்தானே? சொல்லாமலேயும் இருக்க முடியவில்லை. நீங்கள்தான் அவனுக்கு நல்ல புத்தி வரப்பண்ணணும்" என்று சொன்னார்கள். பெற்ற மனஸு!

அவர்கள் அப்படிப் பிரார்த்தனை பண்ணிக்கொண்ட போதிலும், "இந்தக் கஷ்டம் உண்டாக நீதானே ஜவாப்தாரி? நீதான் இதை ஸரி பண்ணணும்"என்று அவர்கள் இடித்துக் காட்டினதாகவே நான் நினைத்துக் கொள்கிறேன்.

இனிமேலே எனக்குப் பிரஸங்கம் பண்ணுகிற உத்தேசமில்லை*. ஆனாலும் இப்போதுதான் என்னைப் பார்க்க வருகிறவர்களும், அட்வைஸ் கேட்கிறவர்களும் ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிறார்கள். அதனால் இனிமேல் பிரஸங்கம் பண்ணாவிட்டாலும், என்னிடம் வருகிறவர்களிடம் பேசுகிறபோது, நல்லதைச் சொல்கிறபோது, ஒவ்வொருவனும் பொதுத்தொண்டு ஏதேனும் அத்யாவச்யமாகப் பண்ணித்தானாக வேண்டும் என்று சொல்லும்போதே,

"without prejudice to" (இன்னதற்கு ஹானி இன்னியில்) என்று அநேக ஒப்பந்தங்களில் qualifying clause போடுகிறார்களே, அந்த மாதிரி இதற்கும் ஒரு நிபந்தனை, 'தன் கார்யம், குடும்பக் கடமைகளைக் கொஞ்சங்கூட விடாமல்' என்றும் போடவேண்டுமென்று தீர்மானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். பிற்பாடு இது ஸமயத்தில் நினைவு வந்து சொல்வேனோ மாட்டேனோ, அந்த [பரோபகார] ஸப்ஜெக்டே என்னை இழுத்துக்கொண்டு போய்விடுமோ என்னவோ, எப்படியானாலும், இன்றைக்கேனும் அந்தத் தாயார் தகப்பனார் படுகிற கஷ்டத்தைப் பார்த்ததில் இப்படிச் சொல்கிற ஞானம் எனக்கு உண்டாயிருக்கிறது.

"தான் அவிழ்த்துப்போட்ட துணியைத் தாயார்க்காரி தோய்க்கணும்; வயஸுக் காலத்தில் அப்பன்காரன் கடை கண்ணி ஏறி இறங்கணும்" என்று விட்டு விட்டு ஒருத்தன் ஸோஷல் ஸர்வீஸுக்கு கிளம்பணும் என்று நான் நினைத்ததேயில்லை. நினைக்காவிட்டாலும் இதை வாய்விட்டு நான் சொல்லாதது தப்புத்தான். இதனால், இன்றைக்கு இங்கே வந்து போனவர்கள் மாதிரி இன்னும் எத்தனை பேர் வீட்டில் அனர்த்தத்தை உண்டாக்கியிருக் கிறேனோ? எல்லாருக்கும் என்னிடத்தில் வந்து சொல்லிக்கொள்ள முடியுமா? "சொல்லிக்கொள்வதே 'பெரியவா' மேலே குறை சொல்கிற மாதிரித்தானே ஆகும்? அப்படிப் பண்ணலாமா?" என்றே பலபேர், பாவம், வாயை மூடிக்கொண்டு என்னால் ஏற்பட்ட கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கலாம்.

இன்றைக்கு வந்தவர்கள் எனக்கு என்ன உபதேசம் பண்ணியிருக்கிறார்கள்? 'வசவு', 'வசவு' என்று இத்தனை நாழி நான் சொன்னதை 'உபதேசம்' என்று சொல்லியிருக்கலாம். வசவானால்தான் feeling -ஐக் கிளப்பிவிடும் என்று அப்படிச் சொன்னேன். அதனால் உண்மையை அலசிப் பார்த்துத் தெரிந்துகொள்ள வழி ஏற்படுமென்றேன். அதைவிட 'உபதேசம்' என்று அடக்கமாக எடுத்துக்கொண்டு விட்டால் இன்னம் ச்லாக்யம் என்று தோன்றுகிறது. ஸ்வய ஸமாசாரங்களிலேயே ஒருத்தன் அதியாக ஈடுபட்டுப் பொதுக் கார்யங்களை கவனிக்காமலிருப்பதுதான் 'ஜெனரல் ரூல்' என்றாலும், எதிர்த்திசையில் சில பேர் அத்யாவசியமான சொந்தக் கார்யம்,

கடமைகளையும் விட்டு விட்டுப் பொதுக் கார்யம் என்று பறந்துகொண்டு, வீட்டு மநுஷ்யர்களுக்கு ச்ரமம் உண்டாக்கவும் கூடும் என்பதை நான் மறக்கக்கூடாது. அதனால், ”சொந்தக் கார்யம் என்பதையே கவனித்துக் கொண்டிருந்தால், அலை ஓய்ந்துதான் ஸமுத்ர ஸ்நானம் என்கிற மாதிரி பொதுக் கார்யங்களை எவருமே எப்போதுமே செய்ய முடியாது" என்று நான் அட்வைஸ் பண்ணும்போதே, அதை qualify பண்ணி, ”அதற்காக, அத்யாவச்யமான சொந்த வேலைகளை, அகத்து ட்யூட்டிகளை ஒருநாளும் விடக்கூடாது" என்றும் எடுத்துச் சொல்லிவிட வேண்டும். இதுதான் எனக்குக் கிடைத்திருக்கும் உபதேசம்.

---

* இந்த உரையும் பொதுப் பிரஸங்கமல்ல; ஒரு சில அடியாருடன் நிகழ்த்திய உரையாடல்தான்.

5.9-மோசடி; போலித்தனம்

தன் வேலையை இன்னொருத்தனிடம் விட்டுவிட்டு தான் 'ஊரானுக்குத் தொண்டு செய்கிறேன்' என்று போனால் அது பரிஹாஸந்தான், fraud[மோசடி] தான். தாயார், தகப்பனார், ஸஹோதரர், பத்னி, புத்ரர் இருந்தால் அவர்கள் - ஆகியவர்களுக்குச் செய்ய வேண்டிய ட்யூட்டிகளைச் செய்யாமல் லோகத்துக்கு உபகாரம் செய்கிறேன் என்றால் அது 'ஹிபாக்ரிஸி' [போலி வேஷம்] தான். இப்படியெல்லாம் பண்ணிவிட்டு பந்துக்கள் எடுத்துக்காட்டினால் கோபம் வருகிறது, எரிச்சல் வருகிறது என்றால் பரோபகாரத்தால் இவனுக்கு எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம். 'எல்லாரிடமும் அன்பாயிருக்கணும், மதுரமாய்ப் பழகணும்' என்பதுதான் தொண்டு செய்கிறவனுக்கு லக்ஷணம். பொதுத்தொண்டு என்பதற்காகவே வீட்டு மநுஷ்யர்களிடம் அன்பு போய், எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் இவன் தொண்டு செய்து என்ன புண்யம்?

இவனுக்கு என்ன சித்த சுத்தி ஏற்பட முடியும்? குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிற மாதிரி பண்ணிக்கொள்ளக் கூடாது.

தன் லிமிடேஷனை எவனும் எப்போதும் உணர வேண்டும். மநுஷ்யராய்ப் பிறந்துவிட்டோம். அதனால் நாம் பல திநுஸில் கட்டுப்பட்டுதான் கிடக்கிறோம். ஆசைகள், ஆஸ்தைகள் பெரிசாய் இருக்கலாம். அவை நல்லதாகவும் இருக்கலாம். லோகத்துக்கு நல்லது பண்ணணும் என்றே ஆர்வமிருந்தாலும் நமக்கும் நம் குடும்பத்துக்கும் செய்தேயாக வேண்டும் என்ற நிர்பந்தம் இருப்பதை உணர்ந்து இந்த ட்யூட்டிக்கு ஹானியில்லாமல்தான் லோக ஸேவை செய்ய வேண்டும்.

"தன்னைப்பெற்ற தாயார் கிண்ணிப்பிச்சை எடுக்கிறபோது கோதானம் பண்ணினானாம்" என்று சொல்வதுண்டு. முதலில் தன் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும். **தன் சொந்தக் கார்யங்களை ஒருகாலும் பிறத்தியாரிடம் காட்டிக்கொடுக்கவே கூடாது. இதுதான் சாஸ்திரம்.** அவனவன் தன் வஸ்திரத்தை தானேதான் தோய்துக்கொள்ள வேண்டும். 'டயார்க்கி'யில் [இரட்டையாட்சியில்] ராஜகோபலாச்சாரி மெட்றாஸ் ப்ரஸிடென்ஸிக்கு ப்ரைம் மினிஸ்டராக (அப்போது டில்லியில் ப்ரைம் மினிஸ்டர் இல்லாததால் ப்ரெஸிடென்ஸியில் பிரதான மந்திரியாக இருக்கப்பட்டவரை ப்ரைம் மினிஸ்டர் என்று சொல்வார்கள். இப்போது பிரெஸிடென்ஸியை ஸ்டேட் என்றும், இதன் ப்ரைம் மினிஸ்டரை சீ∴ப் மினிஸ்டர் என்றும் சொல்கிறார்கள். இப்படி அவர் ப்ரைம் மினிஸ்டராக) இருந்துபோதுகூடத் தன் துணியைத் தானேதான் தோய்த்துக் கொண்டார். இப்படியே பல பேர் பெரிய ஸ்தானத்திலிருந்தபோதுகூடத் தன் பூட்ஸுக்குத் தானேதான் பாலிஷ் போட்டுக்கொண்டார்கள் என்று சொல்கிறார்கள். நம் கார்யத்தை நாமே செய்து கொள்கிறதிலே கௌரவக் குறைச்சலே இல்லை. பிறத்தியாரிடம் இவற்றை விடுவதுதான் கௌரவக் குறைச்சல். நாம் பரோபகாரி என்று வெளியிலே 'ஷோ' பண்ணிக்கொண்டு ஊராரிடம் நல்ல பேர் வாங்கிக் கொள்வதற்காக வீட்டுக்காரர்களெல்லாம் நமக்கு பரோபகாரம் பண்ணும்படியாகத் தாழந்து போய் அவர்களுக்கு ச்ரமத்தைக் கொடுத்து

நல்லெண்ணத்தையும் போக்கிக் கொள்வது நமக்கே நாம் பண்ணிக்கொள்கிற கௌரவக் குறைச்சல்தானே?

5.10-சாஸ்திரக் கட்டளை

சாஸ்திரத்தில் அவனவனும் தன் வஸ்திரத்தைத் தானே தோய்த்துப் போட்டுக்கொள்ளணும், தன் சாதத்தை தானே களைந்து வைத்துப் பொங்கித் தின்ன வேண்டும். (ஸ்வயபாகம் என்பது இதுதான்) என்றெல்லாந்தான் சொல்லியிருக்கிறது. "கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்கிறபோது கட்டிக் கொள்வது மட்டும் இவன் என்றில்லை; 'கசக்க' வேண்டியவனும் இவன்தான்! 'அம்மாவையோ வேறு யாரையோ கசக்கும்படி பண்ணி (மனஸும் கசக்கும்படிப் பண்ணி) நீ கட்டிக்கொள்' என்று இல்லை.

ஒருத்தனுடைய நித்ய சர்யைகளை [அன்றாட நடவடிக்கைகளை] தர்ம சாஸ்திரத்தில் சொல்கிறபோது அவன் கார்யம் முழுவதையும் அவனே பார்த்துக் கொள்ளும்படிதான் வைத்திருக்கிறது. பூஜைக்குப் புஷ்பம், பத்ரங்கூட அவனவனேதான் பறித்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஆனாலும் குரு மாதிரி ஸ்தானத்திலிருக்கிற ஒரு பெரியவர், வயோதிகர், மாதா பிதாக்கள் ஆகியவர்களுக்குக் கைங்கர்யம் செய்வது புண்யமென்பதால் இப்படிப்பட்டவர்களுக்காக சிஷ்ய ஸ்தானத்தில், புத்ர ஸ்தானத்திலிருப் பவர்கள் வஸ்திரம் தோய்த்துப் போடுவது, புஷ்பம் பறித்து வருவது, பூஜா கைங்கர்யம் பண்ணுவது என்றெல்லாம் ஏற்பட்டிருக்கிறது.

5.11-பெரியோர்கள் உதாரணம்

பெரிய ஆசார்ய ஸ்தானத்திலிருந்தவர்களில் கூடத் தங்கள் காரியத்தை சிஷ்யர்களிடம் விடாமல் தாங்களே செய்துகொண்டவர்களுண்டு. வேதாந்த தேசிகன் ஒரு பெரிய ஸம்பிரதாயத்துக்கே மூல புருஷராயிருந்தபோதிலும் தம்முடைய ஆஹாரத்துக்குத் தாமேதான் உஞ்சவ்ருத்தி செய்திருக்கிறார். திருவையாற்றில் தியாகராஜ ஸ்வாமிகளும் இப்படிப் பண்ணியிருக்கிறார்.

இவர்களுக்கு எத்தனையோ பேர் ஸத்காரம், ராஜோபசாரமே பண்ணக் காத்துக் கொண்டிருப்பார்கள்! Mahomet [முஹமது நபி] கூட religious head ஆக [மதத் தலைவராக] மட்டுமின்றி temporal power [ஆட்சியதிகாரம்] பூராவும் வைத்துக்கொண்டுடிருந்தாலும் தம் கார்யம் முழுவதையும் தாமே பண்ணிக்கொண்டார் என்கிறார்கள்.

நாமதேவர், கோராகும்பர், திருநீலகண்ட நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் போன்ற மஹா பாகவதர்களும் சிவனடியார்களும் தங்கள் குடும்ப ட்யூட்டிக்காக தையல்வேலை, குசவுவேலை, ஏகாலித் தொழில் இவைகளை விடாமலே பண்ணி வந்திருக்கிறார்கள்.

சிவாஜி தன் ராஜ்யத்தையே ஸமர்த்த ராமதாஸின் காலடியில் குருதக்ஷிணையாகப் போட்டு விட்டு, அவர் பெயரில்தான் ராஜ்யபாரம் பண்ணினான். அப்படியிருந்தும் ராமதாஸ் 'மாதுகரி' பிக்ஷைதான் வைத்துக் கொண்டிந்தார்*

தங்கள் பொருட்டுப் பிறத்தியாரை ச்ரமப்படுத்தக் கூடாது என்ற உசந்த கொள்கைதான் இதற்குக் காரணம்.

ஆகவே வெளியிலே ஸோஷல் ஸர்வீஸ் செய்பவனாகப் பேர் வாங்கிவிட்டு, வீட்டிலே இவன் மற்றவர்களின் ஸர்வீஸை வாங்கிக்கொள்கிறானென்றால் அது 'ஹம்பக்' தான்.

ஆனால் வீட்டுக் கார்யம், சொந்தக் கார்யம் என்பதும் சாஸ்த்ர ஸம்மதமானதாக இருக்க வேண்டும். இப்போது ஒவ்வொருத்தனுக்கும், அவனுடைய குடும்பத்துக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பேராசைகளையெல்லாம் பூர்த்தி செய்வதை 'ட்யூட்டி' என்று சொல்ல முடியாததுதான். இத்தனையையும் கவனித்து விட்டுத்தான் ஒருத்தன் பொதுத்தொண்டுக்குப் போகலாம் என்றால் பொதுத்தொண்டே நடக்காது. வீட்டு மநுஷ்யர்கள் அப்படி சொல்வதைக் கேட்கவேண்டுமென்பதில்லை.

---

* ‘மதுகரம்’ என்றால் வண்டு. வண்டு பல புஷ்பங்களிலிருநது துளித்துளியாகத் தேன் எடுத்துக்கொள்வதுபோல் எந்த ஒரு கிருஹஸ்தருக்கும் அதிக ச்ரமம் தராமல் ஒரு குடும்பத்திலிருந்து ஒரு கவளம் வீதம் பல குடும்பங்களில் பிக்ஷை வாங்கி உண்பதே ‘மாதுகரி பிக்ஷை’. ஐந்தே குடும்பங்களில் மாதுகரி பிக்ஷை பெற வேண்டும் என்றும் நியமமுண்டு.

5.12-மாதா-பிதா விஷயம்

ஆனாலுங்கூட மாதா பிதாக்களை இம்மாதிரி விஷயங்களில் ஒருத்தனால் சாந்தமாக எடுத்துச் சொல்லிக் ‘கன்வின்ஸ்’ பண்ண முடியவில்லை என்றால் அப்போது அவர்களிடம் சண்டைக்குப் போகப்படாது. அவர்களை மீறியும் செய்யக்கூடாது. சாஸ்த்ரப்படி மாதா பிதா வாக்ய பரிபாலனத்துக்கு அப்புறந்தான் எந்த தர்மமும். அதனால் அவர்கள் தப்பாகச் சொன்னாலும் அவர்களுக்குத் தெளிவு தரவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்க வேண்டுமே தவிர மீறிச் செய்யக்கூடாது. அதன் பாபமோ புண்யமோ அவர்களைச் சேர்ந்தது என்று விட்டுவிட வேண்டும். இப்போது இந்த நிமிஷம், இந்த மாதா பிதாக்களின் கஷ்டத்தைப் பார்த்ததில் இப்படித்தான் கொஞ்சம் கடுமையாகவே சொல்லத் தோன்றுகிறது.

5.13-மனைவி மக்கள் விஷயம்

பத்னி, புத்ரர் விஷயம் வேறு. அவர்கள் நம்மைவிட ஸ்தானத்தில் சின்னவர்கள். அதனால் நியாயமாக அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பூர்த்தியாகப் பண்ணுவதற்கு மேலாக அவர்கள் நம்மைத் தங்கள் ஸமாசாரங்களிலேயே இழுத்து லோகஸேவை செய்யவொட்டாமல் தடை பண்ணினால் அதற்குக் காது கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதை மீறியும் நம்மாலான லோகப்பணிகளைச் செய்யத்தான் வேண்டும். சாஸ்த்ரப்படி நம் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பவர்களான பத்னி, புத்ரர்களையும்

நாம் பொதுத் தொண்டுகளில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் எந்தப் பக்கமானாலும் அதில் மிகையாகப் போய்விடக்கூடாது. பெண்டாட்டி, பிள்ளைகுட்டிகளைக் கவனிக்காமல் பரோபகாரம் என்று புறப்படக்கூடாது.

5.14-நோக்கத்துக்கே குந்தகம்

இதிலே ஸைகலாஜிகலாக ஒன்று கவனிக்க வேண்டும். ஒருத்தன் தன் வேலை, வீட்டு வேலைகளை மற்றவர்களிடம் விட்டுவிட்டுப் பொதுப்பணிக்குப் போகிறான் என்னும்போது, வீட்டின் மற்ற பேருக்கு இவனிடம் ஏற்படுகிற அதிருப்தியில் ஸமூஹத்தொண்டே பிடிக்காமல் போய்விடுகிறது. "போதும், இன்னொருத்தன் ஊர்க்கார்யம் என்று உழப்பறித்துக்கொண்டு அகத்துக் காரியத்தை விட்டிருப்பது. நமக்கு இந்த ஸேவையும் கீவையும் வேண்டாம்" என்று அவர்களுக்கு ஒதுங்கிப்போகத் தோன்றிவிடும். அதுவே அவன் அளவறிந்து அகத்துக் காரியத்தையும் கவனித்துக் கொண்டு பொதுக் காரியமும் பண்ணினானென்றால் அப்போது வீட்டின் மற்ற மநுஷ்யர்களும் இவனோடுகூட வெளித்தொண்டுக்கு வந்து தங்களாலானதைச் செய்வார்கள் வீட்டுக் காரியத்தைக் கவனிப்பதால் இவனொருத்தன் செய்யும் ஸோஷல் ஸர்வீஸ் குறைந்து போகிறதென்றால், இப்போது அதைவிட ஜாஸ்தியாக மற்றவர்களின் ஸர்வீஸ் ஸொஸைட்டிக்குக் கிடைத்துவிடும். இவன் அதியாகப் போய் வீட்டு மநுஷ்யர்களின் அதிருப்தியை ஸம்பாதித்துக் கொள்ளும்போதோ, தன் நோக்கத்துக்கே பாதகமாக, அவர்களால் ஏற்படக்கூடிய ஸோஷல் ஸர்வீஸைத் தடுத்துவிடுகிறான்!

தொண்டுக்குப் போகிறவர்களுக்கு ஒரு 'ட்ரிக்' சொல்லித் தருகிறேன். அன்போடு பதவிசாக நடப்பதுதான் 'ட்ரிக்'! வெளி மநுஷ்யர்களிடம் மட்டுமில்லை, அகத்துப் பேரிடமும் இப்படிப் பரிவாக, பணிவாக இருந்தானானால் அவர்களே, "நாம்தான் வீட்டையே கட்டிக்கொண்டு அழுகிறோம். இவனாவது லோகத்துக்குப் பண்ணி, நமக்கும் சேர்த்துப் புண்யம்

ஸம்பாத்தித்து தரட்டும்" என்று நினைத்து அவனிடம் வீட்டு வேலைகளைக் கூடிய மட்டும் காட்டாமல் தாங்களே பண்ணுவார்கள்.

5.15-வீட்டுக்குப் பின்பே வெளியுலகு

ஒருத்தன் ஸந்நியாஸாச்ரமத்துக்குப் பாத்ரமான உத்தமாதிகாரியாக இருந்தால்கூட, ஏக புத்ரனானால் தாயார், தகப்பனார் ஸம்மதமில்லாவிட்டால் அவனுக்கு ஆச்ரமம் தரமாட்டார்கள்; இப்படியே க்ருஹஸ்தனானால் பெண்டாட்டி பிள்ளை-குட்டிகளை நிர்கதியாக விட்டுவிட்டு வந்தவனுக்கும் எத்தனை யோக்யதை இருந்தாலும் ஸந்நியாசம் தருவதில்லை. அதாவது சொந்தக் கடமையை, குடும்பப் பொறுப்பை விட்டவனுக்கு பாரமார்க்கத்திலேயே மூழ்கிவிடுவதற்குகூட 'ரைட்' இல்லை என்று வைத்திருக்கும்போது, ஆத்ம, ஞானத்துக்கு முதல் 'ஸ்டெப்' மட்டுமேயான லோக ஸேவைக்காக ட்யூட்டியை, ரெஸ்பான்ஸிபிலிடியை விடுவதென்பதைக் கொஞ்சங்கூட ஆமோதிக்கிறதற்கில்லை.

இதைப்பற்றி நான் இதுவரை அழுத்தமாகச் சொல்லாதது தப்புத்தான். இப்போது இதற்காக நான் மறுபடி 'லெக்சர்' அடிக்கிற வழக்கத்தை ஆரம்பிக்கிறதாகவும் இல்லை. ஆனாலும் என்னிடம் இப்போதும் வருகிறவர்கள் போகிறவர்களிடத்தில் இதைச் சொல்லணும் என்று நினைத்துக் கொள்கிறேன். நான் எல்லவற்றையும் விடணும் என்று நினைத்த அப்புறமும், வருகிறது வந்து சேர்ந்துகொண்டுதானிருக்கிறது! இப்போதுதான் நான் சொல்கிறதையெல்லாம் - சொல்லாததையெல்லாம்கூட - ஜாஸ்திப் பிரசாரம் பண்ணுவதாகவும் ஏற்பட்டிருக்கிறது! அப்படி இந்த அபிப்ராயமும் - சொந்தக் கார்யத்தையும் டொமெஸ்டிக் ஸர்வீஸையும் விட்டுவிட்டு ஸோஷல் ஸர்வீஸூக்குப் போகப்படாது என்று சொல்வதும் - பரவினால் பரவட்டும்.

இப்போது இந்த தம்பதி வந்து அழுததுதான் என்றில்லை. அவ்வப்பொழுது இப்படி ஏற்பட்டிருக்கிறது. கடிதாசுகளும் வந்திருக்கின்றன. ஒரு பிராம்மணர். அவர் வக்கீலாக ப்ராக்டிஸ் பண்ணிக் கொண்டிருந்தார். அவரை நான் என்

ஸ்வய கார்யத்தில் ஒரேயடியாக இழுத்துவிட்டேன். இந்த தேசம் பூராவும் எங்கெங்கே என்ன வேத சாகை இருக்கிறது என்று அவரை அலைந்து திரிந்து ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்துவரப் பண்ணினேன்; பாடசாலை பாடசாலையாக ஏறி இறங்க வைத்தேன். இதனால் அவருடைய பத்னியும், ஒரே பெண்ணும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தை என்னோடு சண்டையே போட்டிருக்கிறது. சண்டை என்று சொல்வது தப்பு - உபதேசம் பண்ணிற்று என்று சொல்லணும். "அப்பா ப்ராக்டிஸ் போயிடுத்து உடம்பும் வீணாப்போயிடுத்து. நாங்களும் நிராதரவாகப் போய்விட்டோம். எனக்கு அப்பா யார் என்று அடையாளமே மறந்து போய்விடுகிற அளவுக்கு இப்படி அவரைப் பிடித்து வைத்துக்கொண்டு ஊர் ஊராக அலையப் பண்ணுகிறீர்களே!" என்று அந்தப்பெண் கேட்கும். அப்படியும் நான் பாட்டுக்கு, `அவர்கள் விசாரம் அவர்களுடைய ஸமாசாரம்; என் கார்யம்தான் எனக்கு'என்று அந்த மநுஷ்யரை அப்படியே அல்லாட விட்டுக் கொண்டிருந்தேன். அப்புறம் அவர்களே "இதுதான் நமக்கு விதி' 'என்று ஓய்ந்து போய்விட்டார்கள். ஒரு பக்கம் என்னிடம் இப்படி அவர்களுக்கு வருத்தம் இருந்த போதிலும் பக்தியும் உண்டு. அதனால் தங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட அநேக நல்லதுகளுக்கு என் அநுக்ரஹம்தான் காரணம் என்று நினைத்துக்கொண்டு என்னிடம் மரியாதை விச்வாஸங்களோடேயே இருக்கிறார்கள்.

ஒருவன் எப்படியிருந்தாலும் பத்னி புத்ராள் ஸஹித்துக்கொள்ளத்தான் வேண்டும். என்கிற சாஸ்திரப்படி, நான் இப்படிச் சும்மாவே இருந்ததற்கு ஸமாதானம் சொல்லிவிடலாம். ஆனால் இப்போது ஒரு மாதாபிதாக்கள் துக்கப்பட்டுக்கொண்டபோது - மாதா, பிதாவுக்கு அப்புறந்தானே குரு என்று நான் வருகிறேன்?- நான் சொல்லிக்கொள்ள ஸமாதானம் எதுவும் இல்லை என்று நியாயம் உறைத்து, இதையெல்லாம் சொல்கிறேன்.

5.16-உச்சநிலை உதாரணமாகாது

பிரஸங்கம் பண்ணின நாளில், "ஊர்க்குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்" என்று அடிக்கடி quote பண்ணித்தான் இருக்கிறேன்.

அதாவது உன் குழந்தையைப் பட்டினி போட்டுவிட்டாவது போய் ஊர்க் குழந்தையை ஸவரக்ஷணை பண்ணு என்று சொல்லித்தான் வந்திருக்கிறேன். அப்படிப் பழமொழி இருப்பதும் வாஸ்தவம். ஸத்யமாக இல்லாத ஒன்று பழமொழியாக ஆகிறதில்லை. ஆனால் இந்தப் பழமொழி ரொம்ப உசந்த நிலையில், தொண்டு மனப்பான்மையில் அப்படியே ஊறிப்போனவர்களைக் குறித்து ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள் மனஸறிந்து தன் குழந்தையைக் கதற விட்டுவிட்டு ஊர்க் குழந்தையைச் சீராட்டினார்களென்று அர்த்தமில்லை. பரோபகாரத்தில் அவர்களுக்குள்ள தீவிர உணர்ச்சி வேகம் அவர்களை இப்படி அடித்துக்கொண்டு போயிருக்கிறது. பக்தி வெறியில் ஒவ்வொரு நாயன்மார் லோக தர்மங்களுக்கு விரோதமாகக்கூடப் பண்ணவில்லையா? அப்படி இதுவும் ஒரு பரவச நிலையில் பண்ணுவது. அப்படி இவர்கள் தங்களுக்கு அதீதமான ஒரு சக்தியின் கீழ் ஊரிலே உள்ள அநாதைக் குழந்தைகளின் நலனுக்கே தங்களை அர்ப்பணம் பண்ணிக்கொண்டபோது, ஈஸ்வர பிரஸாதமாக வீட்டிலே இவர்களுடைய குழந்தைகள் கவனிப்பு இல்லாமலே (அல்லது ஈஸ்வரனின் கவனிப்பிலேயே) நன்றாக வளர்ந்திருக்கும். இது ஸாதாரணமாக லோகத்திலிருக்கப்பட்டவர்களுக்கு 'எக்ஸாம்பிள்' ஆகாது.

தன் குழந்தையைக் கவனிக்காமல் ஊர்க் குழந்தையைச் சீராட்டுவது பற்றி வேடிக்கையாக ஒருத்தர் சொன்னது கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் காலத்தில் ஸ்த்ரீகள் ஸோஷல் ஸர்வீஸ் என்று கிளம்பியிருப்பது பற்றிக் கேலியாக அவர் சொன்னாராம்: ஒரு பணக்கார வீட்டு அம்மாள் பெட்ரோலைச் செலழித்துகொண்டு ஏதோ ஒரு சேரிக்குப் போய், எநத தேசத்திலிருந்தோ வந்திருக்கிற பவுடர் பாலைக் கரைத்து அங்கே ஒரு குழந்தைக்குப் போட்டி [புகட்டி] விட்டு வருவாளாம். இங்கே இவளுடைய வீட்டில், இவள் எந்தக் குழந்தைக்கு பால் போட்டினாளோ அதனுடைய அம்மாக்காரியே இவளுடைய குழந்தைக்கு ஆயாவாகப் பால் கரைத்துப் போட்டிக் கொண்டிருப்பாளாம்!

அதாவது ஸோஷல் ஸர்வீஸ் செய்கிறோமென்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டுவிடக்கூடாது.

5.17-கடமை தவறுவதற்குத் தண்டனை

இதற்கெல்லாம் basic -ஆக ஒரு ஞானம் இருந்துவிட்டால் போதும். அதாவது நம்முடைய லோக ஸேவையால்தான் லோகம் நடக்கிறது என்ற பிரமை ஒருகாலும் இருக்கக்கூடாது. மரம் வைத்தவன் தண்ணீர் விடுகிறான். லோகத்தைப் பண்ணின ஒருத்தன் இருக்கிறானே அவனே அதை ரக்ஷித்துவிட்டுப் போவான். அதற்கு நாம் ஒரு கருவிதான். நம்முடைய பாப கர்மா கழியவே பரோபகாரமே தவிர நாமில்லாவிட்டால் அந்த உபகாரம் லோகத்துக்குக் கிடைக்காமல் போய்விடாது என்ற ஞானம் இருந்தால் அளவோடு நிற்போம். ஜீவனத்துக்கு அவச்யமான சொந்தக் கார்யங்கள், குடும்பக் கடமைகள் இவற்றைப் பண்ணிக் கொள்வதிலும் கர்மநாசம், சித்த சுத்தி ஏற்படத்தான் செய்யும். ஈஸ்வராநுக்ரஹத்தில் இப்படிப்பட்ட பொறுப்புகள் அதிகமில்லாதவர்கள் நிரம்பப் பரோபகாரப் பணிகளில் ஈடுபட்டே ஆத்மாவைப் பரிசுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும்; அப்படிப்பட்டவர்களுக்கு இதுவே ட்யூட்டி ஆகிறது. டொமெஸ்டிக் ட்யூட்டிபோல ஸோஷல் ட்யூட்டியும் உண்டுதான். எத்தனை டொமெஸ்டிக் ட்யூட்டி இருந்தாலும், அதைப்பண்ணிவிட்டு, அதைப் பண்ணின அப்புறந்தான் ஸோஷல் ட்யூட்டியும் செய்ய வேண்டும். ரொம்ப அதிகம் குடும்பப்பொறுப்பு இருக்கிற ஒருசிலரைத் தவிர மற்ற எல்லோருக்குமே நியாயமான சொந்தக் கடமைகளைப் பண்ணிவிட்டும் ஸமூஹக் கடமை பண்ண அவகாசம் இருக்கவேசெய்யும். எப்படியானாலும் தன் காரியத்தைப் பிறர் கையில் விட்டுவிட்டும், அகத்து வேலையைக் கவனிக்காமலும் ஊர்க் காரியம் என்று போவதில் பிரயோஜனமில்லை. இப்படிப் போனதில் அந்தப் பையன், வீடு என்றாலே எரிச்சல் படுகிறான் என்றார்கள். இப்படிக் கோபமும் தாபமும்தான் பரோபகாரம் பண்ணினதில் ஒருத்தனுக்கு மிஞ்சினது என்று ஏற்பட்டால் அது சித்த சுத்திக்குப் பதில் சித்த அசுத்திக்குத்தான் வழி பண்ணியிருக்கிறது என்றே ஆகிறது. அதாவது பரோபகாரம் நல்ல பலன் தராதது மட்டுமில்லாமல், விபரீத பலனே உண்டாக்கியிருக்கிறது! சாஸ்த்ர ரீதியான கடமையை விட்டதற்காக இப்படி நல்லதே தண்டனையாக ஆகிறது!

5.18-தொண்டு மனத்தின் தன்மை

இரண்டு மூன்று பழமொழி சொன்னேன். முடிவாக இன்னொன்று தோன்றுகிறது: "தன் கையே தனக்கு உதவி" தன் கை பிறருக்கும் உதவியாகப் பரோபகாரப் பணிகளைச் செய்யத்தான் வேண்டும். ஆனால் தன் கை தன் கார்யத்துக்கு உதவியாக இல்லாமல், தன் கார்யத்துக்கு அகத்தின் மற்ற மநுஷ்யர்களின் கையை எதிர்பார்த்துக்கொண்டு அவர்கள் கையில் நம் கார்யப் பொறுப்பை போட்டுவிட்டு, நாம் ஊருக்கு உபகாரம் பண்ணுவது என்பது தப்பு.

ஊருக்குப் பண்ணினால் நாலு பேர் நம்மைக் கொண்டாடுவார்கள். வீட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்காக, வீட்டார் நம்மைக் கொண்டாடமாட்டார்கள்தான். வீட்டுக்குப் பண்ணாமல், தன் சொந்தக் கார்யத்தைப் பண்ணிக்கொள்ளாமல், ஊருக்கு ஒருத்தன் பண்ணுகிறான்;அதற்கு இடைஞ்சலாகச் சொல்கிறார்களே என்று வீட்டுக்காரர்களிடம் எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் அவனுக்கு வாஸ்தவமான தொண்டு உள்ளமே இல்லை, பேர் வாங்குவதற்காகத்தான் ஸோஷல் ஸர்வீஸ் என்று பண்ணுகிறான் என்றே அர்த்தம்.

தொண்டு உள்ளத்துக்கு லக்ஷணம் அன்பும் அடக்குமும்தான். "தொண்டர் தம் பெருமை"என்று அதைப் பெரியதற்கெல்லாம் பெரியதாக மற்றவர்கள் கொண்டாடலாமேயொழிய, தொண்டு செய்கிறவனுக்குத் 'தான் பெரியவன்'என்ற எண்ணம்லவலேசங்கூட இருக்கக்கூடாது. தான் ரொம்பவும் சின்னவன் என்ற எண்ணமே இருக்க வேண்டும். பேருக்கு ஆசைப்பட்டுக் கொண்டு தொண்டு செய்வதென்றால் அந்தத் தொண்டையே அழுக்குப் பண்ணினதாகத்தான் அர்த்தம். அடக்கமும் அன்பும் இருந்தால் வீட்டிலே இருக்கிறவர்களை எதிர்த்துக் கொண்டும் அவர்களிடம் எரிந்து விழுந்து கொண்டும் எவனும் வெளியிலே தொண்டு செய்யப் போகமாட்டான்.

தான் பிறர் பாரத்தைத் தாங்குகிறவனாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, தன் பாரத்தை இன்னொருவரிடம் தள்ளினால் அது தனக்கு அவமானம்;தன் கை பிறருக்கு உதவுவதாக இருக்க வேண்டுமேயொழியத் தானே இன்னொரு

கையை உதவிக்கு எதிர்பார்த்தால் அது தனக்கு ரொம்பவும் கௌரவஹீனம் என்ற உணர்ச்சி பரோபகாரத்தில் ஈடுபடுகிற எவனுக்கும் basic -ஆக ஏற்பட்டுவிட்டால் இப்போது கம்ப்ளெய்ன்ட் வந்தது போலக் கோளாறாக ஆகவே ஆகாது. லோக ஸேவைக்குப் போகிறவர்கள்***,'என் கார்யம் பூராவையும் நானே பார்த்துக் கொண்டுதான் பொதுத்தொண்டுக்குப் போவேன்'*** என்று **பிரதிக்ஞை** பண்ணிக் கொண்டுவிட்டால் எல்லாம் ஸரியாய்விடும்.

தன் கார்யம் என்பதில் தன் வீட்டுக் கார்யம், மாதா-பிதா-பத்னி-புத்ரர்-ஸஹோதரர் முதலான வீட்டு மநுஷ்யர்களின் கார்யம் அடக்கந்தான்.

என் கடமையில் தப்பாமல், குடும்பத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்துகொண்டே உன் குடும்பமான – ***வஸுதைவ குடும்பகம்***: லோகமெல்லாம் ஒரு குடும்பம் என்கிறபடி – ஸகல மக்களுக்கும் என்னாலான பணியைச் செய்ய அருள் பண்ணப்பா" என்று ஈஸ்வரனைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டால் அவன் அப்படி அனுக்ரஹம் செய்வான். அதுதான் நாம் பண்ணிக்கொள்ள வேண்டிய வேண்டுதல்.

5.19-கண்டனமே பாராட்டு

நம் மதத்தைப் பற்றி இரண்டு 'க்ரிடிஸிஸம்' சொல்கிறார்கள். ஏகம் ஸத், ப்ரம்மம் ஒன்றுதான்; இந்த ஜீவன்கூட அதுதான் என்று ஒரு பக்கம் சொல்கிறோம். ஜீவனே ப்ரம்மம் என்பதால் ஈச்வர பூஜை, பக்தி எல்லாவற்றையுங்கூட ஞானம் உண்டாகிறபோது மூட்டை கட்டி வைத்துவிட வேண்டுமென்கிறோம். இன்னொரு பக்கம் பார்த்தால் இங்கேதான் மற்ற எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு ஏகப்பட்ட சாமிகள், ஒன்றொன்றுக்கும் அகமுடையான், பெண்டாட்டி, பிள்ளை-குட்டிகள் என்றெல்லாம் வேறு ஒரு பட்டாளமே வைத்துக்கொண்டு நூறாயிரம் ஸந்நிதி, புராணக் கதை, ஒவ்வொன்றுக்கும் ஒரு பண்டிகை, வ்ரதம், மந்த்ரம் என்று பண்ணிக்கொண்டிருக்கிறோம். இதர மதஸ்தர்கள் ஒரே பரமாத்மா, அவனிடம் பக்தி, பிரார்த்தனை, த்யானம் என்று தீர்மானமாக வைத்துக் கொண்டிருக்கிற

மாதிரியில்லாமல், ப்ரமாதமாக அத்வைதத்தைச் சொல்கிற நாம்தான் ஏகப்பட்ட சாமிகள் வைத்துக்கொண்டு திண்டாடுகிறோம்! கிறிஸ்துவர்களுக்கு க்ரைஸ்ட்டும் [கிறிஸ்துவும்], துருக்கர்களுக்கு நபியும், இப்படியே ஸிக்குகளுக்கு நானக் என்றும் அந்தந்த மதஸ்தருக்குத் தங்கள் மதஸ்தாபகரிடம் மட்டும் ஈச்வரனுக்கு ஸமதையான பக்தி இருக்கிறதென்றால் அது நியாயம். தங்களை ஈச்வரனிடம் கொண்டு சேர்க்க வழி போட்டுக் கொடுத்தவர்கள் என்று குருபக்தி மாதிரி அவர்களுக்கு ஏற்பட்டிருப்பது நியாயம். பௌத்தத்திலும் ஜைனத்திலும் ஈச்வரனே கிடையாது. ஆனாலும் தத்வ ரீதியில் அவர்கள் சொல்லும் மோக்ஷ நிலையை ஸ்வயமாக அடைந்து, அப்படிப்பட்ட ஸ்திதியிலிருப்பவன் எப்படியிருப்பான் என்று ப்ரத்யக்ஷமாக புத்தரும், ஜினரும் காட்டுகிறார்கள் என்பதால் அவர்களைப் பக்தியோடு பூஜிக்கிறார்கள். புத்தரை, ஜினரை ஸ்ருஷ்டிகர்த்தா, ஸ்வாமி என்று அந்த மதஸ்தர்கள் சொல்லவே மாட்டார்கள். புத்தரை அவதாரம் என்றுகூட நாம்தான் சொல்கிறோமே தவிர, பௌத்தர்கள் அப்படிச் சொல்வதில்லை. பூர்ண ஞானி என்றே புத்தரை, ஜினரை அந்த மதக்காரர்கள் பூஜை பண்ணுகிறார்கள். இந்த இரண்டு மதங்களுக்கு ஸ்வாமி இல்லாவிட்டாலும் கர்மா- theoryயிலும் எனவே ஜன்மாந்தரத்திலும், நம்பிக்கை உண்டு. நிர்வாணம், கைவல்யம் என்கிற மோக்ஷ ஸ்திதிலபிக்கிற வரையில், லோகம் என்று ஒன்று நடக்கிறபோது அது கர்மாபடியே பலன் தருகிறது என்கிறார்கள். இப்படி லோகம் உள்ளவரையில் தேவதைகள், க்ரஹங்கள் எல்லாமும் உண்டு. அவற்றுக்கு உள்ள ஒவ்வொரு சக்தியால் ஒவ்வொரு வித அநுக்ரஹம் பண்ணுகின்றன என்று வைத்துக்கொண்டு நம் மாதிரியே பூஜை, பரிஹாரம் செய்கிறார்கள். தங்களைவிட ஜாஸ்தி ஞானம் படைத்தவர்கள் என்பதற்காக புத்தரை, ஜினரைப் பூஜை பண்ணுகிறதுபோலவே, தங்களுக்கு இல்லாத சில சக்திகள் படைத்தவர் என்பதால் தேவதைகளுக்குப் பூஜை செய்கிறார்கள். ஸ்வாமி என்று நினைத்தல்ல.

ஹிந்துக்கள் மட்டும் ஸ்வாமி, ஸ்வாமி என்று நினைத்துக்கொண்டே ஏகப்பட்ட தெய்வங்களைப் பூஜை பண்ணுகிறார்கள் என்பது முதல் க்ரிடிஸிஸம்.

இன்னொன்று : "இதாவது [மேலே சொன்ன பல தெய்வ வழிபாடாவது] தொலைகிறது! தப்பாகவோ ரைட்டாகவோ ஒன்றையோ பலவற்றையோ ஸ்வாமி என்று வைத்துக்கொண்டுவிட்டால் அப்புறம் அதை பூஜை பண்ணத்தான் வேண்டும். ஆனால் இம்மாதிரிகூட ஸ்வாமி ஸம்பந்தமேயில்லாத அநேக கார்யங்களைத்தானே உங்கள் மதத்தில் அதிகம் சொல்லி அதைத்தானே பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். பித்ரு கார்யம் முதலானவற்றைத்தான் சொல்கிறார்கள்.

க்ரிடிஸிஸம் வாஸ்தவமாகத்தான் தோன்றுகிறது. மற்ற மதங்களில் ஒரு ஸ்வாமியிடம் பக்தி இருந்தால் போதும்; அவரை த்யானம், ப்ரார்த்தனை பண்ணினால் போதும் என்று இருக்க, "அஹம் ப்ரஹ்மாஸ்மி", "தத்வமஸி" சொல்கிற நம் மதத்தில்தான் ஸ்வாமியையோ அல்லது ஒரு தேவதையையோகூட உத்தேசிக்காமல் பித்ருக்களை உத்தேசித்தே ரொம்பப் பெரியக் கார்யங்களைப் பண்ணுகிறோம். பத்து நிமிஷம் பூஜைகூடப் பண்ணாதவனும் மணிக்கணக்காக திவஸம் பண்ணுகிறான். 'ஸெரிமனி' என்றாலே திவஸம் என்கிற அளவுக்கு இதற்கு முக்யத்வம் தந்திருக்கிறோம். லீவு போடுவதற்கு ஏதாவது காரணம் சொல்வதென்றால்கூட, 'ஸெரிமனி' என்று சொல்லிவிட்டால், கார்யாலயத்தார் ஆக்ஷேபிக்க மாட்டார்கள் என்பதால் அப்படிச் சொல்கிறதாமே! தாயார் தகப்பனார் 'போய்' விட்டால் பத்து நாள், பதின்மூன்று நாள் ஏகப்பட்ட கார்யம். அப்புறம் மாஸா மாஸம் வேறு. இவர்களுக்கு முன் தலைமுறைகளுக்கும் தர்ப்பணம். இப்படியெல்லாம் வைத்திருக்கிறது. ஒருத்தர் 'போய்' எத்தனையோ வருஷம் கழித்தும் "தாத்தா வரார்", "பாட்டி வரா" என்று சொல்லிக்கொண்டு ச்ராத்தம் பண்ணும்படி வைத்திருக்கிறது. இது அநேகமாக முன் தலைமுறைக்குப் பண்ணுவது. கூடப்பிறந்தவர்கள், வயிற்றில் பிறந்தவர்கள் ஆகியவர்களுக்கு அபர கார்யாதிகள் செய்வதாக அதிகம் ஏற்படுவதில்லை.

இது தவிரத் தனக்கும், தன் பின் தலைமுறைக்கும் பண்ணுவதாகவும் அநேக கார்யங்களை மதமே கொடுத்திருக்கிறது. மற்ற மதத்தில் தனக்கோ, அகத்து மநுஷ்யர்களுக்கோ பிறந்த நாள் என்றால் candle, cake என்று சுருக்கமாகக் கார்யம் முடிந்துபோகிறது. கல்யாணமும் ரொம்ப ஸிம்பிள் சடங்குதான்.

இங்கேயா கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகர்மம், வித்யாப்யாஸம், உபநயனம், ஒவ்வொரு வருஷமும் ஆயுஷ்ஹோமம், கல்யாணமென்றால் நாலுநாள் ஔபாஸனம் (அதை நிறுத்திவிட்டார்களே என்று அத்வைத குரு, நான், "கூ கூ" என்று கத்துகிறேன்!) - இப்படி ரொம்பவும் elaborate-ஆகக் கார்யங்களை வைத்திருக்கிறது. இதிலெல்லாம் தெய்வ ஸம்பந்தமிருக்கிறது என்றாலும் தெய்வத்துக்காக தெய்வ ஸம்பந்தமில்லை. 'நான் நன்றாக இருக்க வேண்டும், எனக்கு நல்ல பிள்ளையாகப் பிறக்க வேண்டும், பிறந்த பிறகு அந்தப் பிள்ளை நல்ல ஆயுஸோடு இருக்கணும், நன்றாகப் படிக்கணும் என்று எல்லாம் ஒரு சின்ன மநுஷ்ய ஸர்க்கிளை ஸென்டராக வைத்து அதை உத்தேசித்துச் செய்வதாகவே இருக்கிறது.

வைதிகாநுஷ்டானத்துக்கே முதுகெலும்பு என்று சொல்கிற பஞ்ச மஹாயஜ்ஞங்களில்2 இப்படியே வேதாந்தமாக தியானம் செய்வதோ, ஒரே ஈச்வரனிடம் பக்தியிலே உருகிப்போவதோ காணவில்லை. யாகங்கள் எல்லாமும் இப்படித்தான். மொத்தத்தில் அநேக தேவதைகள், ஊர்த்தேவதை மாதிரிச் சில்லுண்டி சாமிகள், பூத ப்ரேத பிராசங்கள் உள்படப் பலவற்றுக்கும் பூஜை பலி இவைதானே அதிகமாயிருக்கின்றன?

இப்படி இரண்டு க்ரிடிஸிஸம் - ஒன்று "ஒரே பரமாத்மா என்று வைத்துக்கொண்டு அதனிடமே ஐகாக்ரிய பக்தி பண்ணாமல் நூறாயிரம் சாமியிடம் புத்தியைச் சிதற விடுகிறீர்களே!" என்பது. இன்னொன்று, "கண் முன்னாடி இருப்பவர்களுக்குத் தொண்டு - ஸோஷல் ஸர்வீஸ் - செய்வதற்குப் பொழுது இல்லாதபடி, எப்போதோ செத்துப் போனவர்களுக்காக ஏன் இப்படி ச்ராத்தாதிகள்? 'நான் நன்றாயிருக்கணும்' என்றே selfish ஆக எதற்கு இத்தனை சடங்கு? 'எனக்கு உடம்பு ஸரியாகப் போகணும். அதற்காக நவக்ரஹ சாந்தி. பிள்ளைக்குப் படிப்பு வரணும். அதற்காக மேதா தக்ஷிணாமூர்த்திக்குப் பூஜை. அகத்தில் வேறு ஏதோ இடைஞ்சல் போகணும். அதற்காக குல தெய்வம், ஏதோ ஔ காட்டேரிக்கோ, கருப்பண்ணசாமிக்கோ படையல். க்ரஹபீடை போகணும், ராஹுவுக்கு, கேதுவுக்கு, சனிக்கு ஹோமம் - எள்ளு, கொள்ளு, ஏதோ நைவேத்யம். எல்லாம் selfish-ஆக பக்தியே இல்லாமல் business, அதில் கூட லஞ்சம் மாதிரி இருக்கிறதே!"

இப்படியெல்லாம் கேள்வி கேட்டால் நமக்கும் நம் மதம் நம்மை இப்படி ஹீனமாக வைத்திருக்கிறதே, அந்த மதங்களிலிருக்கிறவர்களுக்கு, `ஒரு பகவான் இருக்கிறான். அவனுக்கு ஸிம்பிளாக ஒரு பிரார்த்தனை பண்ணிக்கொள்வோம்' என்று இருக்கிற பக்வ புத்தி நமக்கு இல்லையே என்றுதானிருக்கிறது. "காட்டேரியிலிருந்து நிர்குண நிஷ்கள நிராமயமென்கிற பரப்ரஹ்மம் வரை எல்லாவற்றையும் போட்டு அவியல் பண்ணிக்கொண்டிருக்கிறோமே!" என்று தோன்றுகிறது.

"ஸரியாக நம் மதத்தைப் புரிந்துகொண்டால் அதில் இப்படியெல்லாம் இல்லவேயில்லை" என்று நம்மிலேயேஅறிவாளிகளாக, ஃபிலாஸஃபர்களாக இருக்கிறவர்கள் சொல்கிறார்கள். "பரமாத்மா த்யானம், இல்லாவிட்டால் ஸர்வ சக்தியாக இருக்கப்பட்ட ஏக வஸ்துவிடம் காரண காரியமில்லாத பக்தி - இதுதான் நம் மதக் கோட்பாடு. வயலில் களை வந்து சேர்ந்து பயிரையே நாசம் பண்ணிவிட்டு ஒரேயடியாக விருத்தியாகிறதுபோல, மற்ற விஷயங்களும் சடங்குகளும் நம் மதத்தில் களையாக வந்துசேர்ந்து வளர்ந்து விட்டன. முக்யமாக priest-hood-ன் vested interest-னால் இப்படி ஆகிவிட்டது" என்கிறார்கள். "பார்ப்பான் தக்ஷிணை தக்ஷிணை என்று தண்டிக்கொள்வதற்காகவே இப்படியெல்லாம் சடங்கு என்று வைத்து ஏமாற்றுகிறான்" என்பதைத்தான் இப்படி கௌரவமாக priest-hood-ன் vested interest என்கிறார்கள்!

நான் இவர்களோடு சேர்ந்துகொண்டு 'நம்முடைய ரிலிஜன் என்பது ஹை ஃபிலாஸபிதான். அதில் நூறாயிரம் சாமி, பித்ரு ஸமாசாரம், சடங்கு எல்லாம் களையாக வந்து சேர்ந்துவிட்டது' என்று சொல்லப்போவதில்லை.

க்ரிடிஸைஸ் பண்ணுகிறவர்களோடு சேர்ந்து கொண்டு "ஏக பரமாத்மாவைப் பற்றிய தியானத்தைவிட, அல்லது ஈச்வரன் என்ற ஒரே ஒருத்தனிடம் ஐகாக்ரிய பக்தியைவிட, திவஸமும், தினுஸு தினுஸான ஹோமமும் பூஜையும் வேண்டுதலுந்தான் நம் மதத்தில் ஜாஸ்தியாயிருக்கின்றன" என்றுதான் சொல்லப்போகிறேன்.

ஆனால் இதை க்ரிடிஸிஸமாகச் சொல்லப்போவதில்லை. “இப்படித்தான் இந்த மதம் இருக்கிறது. அதனால் காட்டேரிக்குப் படையல் போடுங்கள்; நவக்ரஹ சாந்தி, ம்ருத்யுஞ்ஜயஹோமம் எல்லாம் பண்ணுங்கள்; பஞ்சம யஹாயஞ்ஞும் பண்ணுங்கள்; திவஸம் திங்கள் இப்போது நேரம் தப்பி ஸம்க்ஷேபமாக [சுருக்கி] பண்ணுகிறது போல இல்லாமல் சாஸ்த்ரோக்தமாக இன்னம் ஸாங்கோபாங்கமாகச் செய்யுங்கள்; priest-hood-க்கு (இன்னம் கொஞ்சம் மட்டமாக priest-craft என்றும் சொல்லப்படுகிறவர்களுக்கு) இப்போது போல் இல்லாமல் நிறைய வாரி வாரி தக்ஷிணை கொடுங்கள்” என்றுதான் சொல்லப்போகிறேன்.

அவர்கள் கண்டனம் என்று நினைத்து என்ன என்னவற்றைச் சொல்கிறார்களோ அவை நம் மதத்தில் இல்லவேயில்லை என்று நான் சொல்லப்போவதில்லை. இருக்கத்தான் இருக்கின்றன என்று அழுத்தமாகச் சொல்லப்போகிறேன். இதை வருத்ததோடு apologetic-ஆகச்சொல்லப்போவதில்லை. “ஆமாம்; இபடித்தானையா எங்கள் ம்\மதத்தில் இருக்கிறது! இப்படியிருப்பதுதான் ஸரி” என்று பெருமையோடு சொல்லப்போகிறேன்.

“ஒரே ஸ்வாமியை நினைப்பதுதானே உசத்தி?”

ஆமாம், அதுதான் உசத்தி!

“திரும்பித் திரும்பி, தான் தன் பித்ரு, புத்ராதிகள் என்றில்லாமல் humanity முழுதற்கும் ஸர்வீஸ் பண்ணுவதுதானே உசத்தி?”

ஆமாம், ஒப்புக்கொள்கிறேன்.

“பின்னே எப்படித் தன்னைச் சேர்ந்த இதுகளுக்காகவே பண்ணுவதை - யஜ்ஞ ஹோமங்களிலிருந்து படையல்வரை எல்லாவற்றையும் -ஸரியென்றுசொல்லி ஆதரிக்கிறீர்கள்?”

ஏன் ஆதரிக்கிறேன் தெரியுமா? இதுகள் எல்லாவற்றிலும் கூட ஏக பரமாத்மாவுக்கான வழிபாடுதான் உள்ளே ஓடுகிறது. இதுகளிலும்

பரோபகாரம், ஆத்மோபகாரமான சித்தசுத்தி ஆகிய உயர்ந்த லக்ஷ்யங்களே பூர்த்தியாகின்றன.

"அதெப்படி? கொஞ்சங்கூடப் புரியவில்லையே!"

அப்படித்தான் ஹிந்துக்களில் ரொம்பப் பேரும் புரிந்துகொள்ளாமலேதான் இவற்றைப்பண்ணுகிறார்கள். அல்லது புரிந்து கொள்ளாததாலேயேதான் விட்டுவிடுகிறார்கள். ஸரியாகப் புரிந்து கொண்டால் இது எல்லாவற்றிலும் ஏக பரமாத்ம சிந்தனை உள்ளூர இழையோடிக் கொண்டுதானிருக்கிறது. பரோபகாரமோ வேறெந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இவற்றில்தான் ப்ராகாசிக்கிறது.

"எப்படி?"

இருக்கிறது ஒரு பரமாத்மாதான் என்கிறது வாஸ்தவம். அதைத்தவிர வேறேயேகிடையாது. மநுஷ்யன், மிருகம், பூச்சி, பொட்டு எல்லாம்கூட அதுதான் என்பதை ஹிந்து மதம் மாதிரிச் சொல்கிற மதம் வேறு ஒன்றும் இல்லை. ஆனாலும் அதை அநுபவத்தில் தெரிந்து கொள்வது லேசில்லை. மற்ற மதககாரர்கள் ஒரே God அல்லது நிர்வாணம், அல்லது கைவல்யம் என்று சொன்னாலும் அவர்களைக் கேளுங்கள்: "நீங்கள் அந்த ஒன்றைத்தான் த்யானமோ ப்ரார்த்தனையோ பண்ணுகிறீர்கள் என்பது வாஸ்தவமானால், நீங்கள் வாஸ்தவத்திலேயே அதைத் தெரிந்து கொண்டுவிட்டீர்களா? Realise பண்ணிவிட்டீர்களா (ப்ரத்யக்ஷமாக அநுபவித்து விட்டீர்களா)?" என்று அடித்துக்கேட்டால் அவர்களில், "Realise பண்ணி விட்டேன்" என்று பதில் சொல்லக்கூடியவர்கள் லக்ஷத்தில் ஒருவர்தான் இருக்கலாம்.

ஆத்ம ஸம்பந்தமோ, ஈச்வர ஸம்பந்தமோ இல்லாததாகத் தோன்றும் இத்தனை காரியங்களில் மாட்டிக் கொண்டுள்ள நம் மதஸ்தர்களிலோ, நிச்சயமாக அவர்களைவிட ஜாஸ்தி அநுபூதிமான்கள் - realised souls – இருந்திருக்கிறார்கள். இது நான் சொல்வதில்லை. அவர்களே இந்தியாவைத்தான் Land of Saints and Sages என்று ச்லாகிக்கிறார்கள். இன்றைக்கும் நாம் லௌகிக ஸௌர்யங்களுக்காகவே அவர்களுடைய

தேசங்களுக்கு ஓடுவதாகவும், அவர்கள் ஆத்மாபிவிருத்திக்காக நம் தேசத்துக்கு வந்து சேருவதாகவும் இருப்பது யதார்த்த உண்மை.

காரணம் என்ன?

ஸ்வயநலனாக இவன் செய்துகொள்வதாகத் தோன்றுகிற பலவித ஹோமம், பூஜை முதலியவற்றிலுங்கூட ஆத்ம பரிசுத்திக்கான மருந்தும் இருப்பதுதான். எல்லாம் பரமாத்மாவானாலும் லோகத்தின் நடைமுறையில் ஒன்றுக்கொன்று வித்யாஸமான ஜீவன்கள் என்று வைத்துத்தான் கார்யங்கள் நடந்தாக வேண்டியிருக்கிறது. நாம் எல்லோருமே ஸ்வயஞ்ஜ்யோதியான ஆத்மாதான் என்றாலும் அது நமக்கே தெரியாதபடி கர்மா மேகமாக மறைக்கிறது. கர்மா மூடிய ஜீவனை அதிலிருந்து வெளியிலே கொண்டுவர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்மை லோகத்தில் வெறுமனே தனியாக விட்டு வைத்திருக்கவில்லை. பெண்டாட்டி, பிள்ளை குட்டி என்று சேர்த்து வைத்திருக்கிறது. இதுவும் கர்மாவால் ஏற்பட்டதுதான். கர்மவாஸனை ஒரு பக்கம் நம் மனஸுக்குள் அழுக்குகளை ஏற்றி ஆத்மாவை உணர முடியாமல் பண்ணுகிறதென்றால், கர்ம பந்தம் பல கடமைகளைப் பண்ண வைக்கிறது. உடம்பு என்ற வீட்டுக்குள் இருக்கும் ஜீவன், அப்புறம் அந்த ஜீவனுக்கு பந்துக்கள் என்பவர்களால் ஏற்பட்டிருக்கும் வீடு இவற்றுக்கு ஒருத்தன் பண்ண வேண்டிய கடமைகளைப் பண்ணினாலன்றி கர்மாவைத் தீர்க்க முடியாது. இத்தனை பழைய கர்ம பாக்கியை வைத்துக்கொண்டு இப்போதே ஆத்மா தெரியணும், ஈச்வரன் தெரியணும் என்றால் தெரியாது. ஸத் கர்மாவால் பாப கர்மாவைப் போக்கிக்கொண்ட பின்தான் மேகம் விலகி ஸூர்யப்பிரகாசம் தெரியும். இந்த ஸத்கர்மா பலவிதமான கடமைகள் ரூபத்தில் இருக்கிறது. ஆத்ம ஞானம் அல்லது ஈச்வர பக்தி என்று ஒரே ஆவேசமாகப் போகிற அபூர்வமான சில பேர்களுக்குத்தான் ஒரே flash-ல் கர்மா அறுந்து விழுமே தவிர, மெஜாரிடி ஜனங்களுக்கு ட்யூட்டிகளைசுத்தமாகப் பண்ணிப் பண்ணி ரொம்பவும் gradual-ஆகத்தான் கர்மாவைப் போக்கிக் கொள்ள முடியும். "இருவினை ஒப்பு" என்று [சைவ] ஸித்தாந்திகள் சொல்வதுபோல ஜன்ம ஜன்மாந்தரங்களாகப் பண்ணிய பாப கர்ம பாரத்தால் ஒரு தராசுத் தட்டு

ரொம்பவும் கீழே போயிருக்கிறதென்றால் அந்த அளவுக்கு ஸத் கர்மாவைப் பண்ணியே இரண்டு தட்டுக்களையும் ஸமமாகச் செய்ய வேண்டும்.

இந்த ட்யூட்டிகளில், "சரீரமாவது, வீடாவது?" என்று ஒரே வைராக்யத்தில் மனஸைக் கெட்டியாக வைத்துக்கொண்டிருக்கிற யாரோ ஒரு சிலரைத் தவிர மற்றவர்களெல்லாரும், சரீரத்திலும் வீட்டிலும் இருக்கிறபோதேதான் அவற்றுக்கான கடமைகளைப் பண்ணி அதனாலேயே கர்மா மூட்டையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த ஜீவன் இந்த சரீரத்திலிருக்கிறபோதேதான் ஸத் கர்மா பண்ண வேண்டும், ட்யூட்டிகளைப் பண்ணவேண்டும் என்பதால் ஓரளவு வரைக்கும் சரீர போஷணை, வியாதி வந்தால் அதற்கு சாந்தி, குடும்பக் கார்யங்களுக்காக ஸம்பாத்ய அபிவிருத்திக்குப் பிரார்த்தனை என்றிப்படி selfishஆகத் தோன்றுகிறவைகளையும் செய்யத் தான் வேண்டும். அதியாக எதிலுமே போகக்கூடாதுதான். ஆனால் இப்போது 'ஸெல்ஃபிஷ்' என்று தோன்றுகிற பல சாஸ்த்ரோக்தமான கார்யங்கள் ஒரு ஸாமான்ய ஜீவன் தன் கடமையைப் பண்ணுவதற்கு அங்கமாகவே செய்துகொள்ள வேண்டியவைதான். இப்படியே கர்மாவால் நமக்கு வந்து வாய்த்து, நாம் அவர்களுக்குப்பட்ட ஜன்மாந்தர [கர்மக்] கடனை இப்போது நாம் செய்யும் ட்யூட்டி ரூபமான கர்மாவால் தீர்த்து வைக்கும் தார புத்ராதிகளுக்கானா பல சாஸ்த்ரோக்த காரியங்களைப் பண்ணுவதற்கும் 'ஸெல்ஃபிஷ்' என்று வெட்கப்பட வேண்டியதில்லை.

மந்த்ரபூர்வமாக இப்படிப்பட்ட சாஸ்த்ரோக்தக் காரியங்களைப் பண்ணும்போது அந்த மந்த்ரங்கள் லௌகிகமாக ஒரு பலனைத் தருவதோடு, சித்தா சுத்தியையும் தருகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். வெறும் கர்மாவே சித்த சுத்தி தருவது என்றால் மந்த்ரத்தோடு சேர்ந்து வரும்போது சித்தப் பரிசுத்திகர சக்தி இன்னம் ஜாஸ்தியாகிறது.

ஒரு பிண்டத்துக்குப் பும்ஸவனம் பண்ணும்போது ஒரு பிறந்த குழந்தைக்கு ஜாத கர்மம் பண்ணும்போது, அது வளர்ந்துவிட்ட உபநயன ஸம்ஸ்காரம் பண்ணும்போது அந்த ஜீவனின் ஆத்ம பரிசுத்தியை முக்யமாக உத்தேசித்தே இந்தக் கார்யங்கள் செய்யப்படுகின்றன.

நம் [பொறுப்பில் ஈச்வரன் விட்டிருக்கிற இந்த நம்முடைய சொந்த ஜீவன், அப்புறம் பெண்டாட்டி பிள்ளை குட்டி என்கிற ஜீவர்கள் ஆகியவர்களுக்கு நியாயமாக லோகத்தில் என்ன நல்லது கிடைக்க வேண்டுமோ அதற்கும், இவர்களுடைய ஆத்ம பரிசுத்திக்காகவும் ஒருத்தன் செய்யும் கார்யங்களும் ஒரு தினுஸில் ஜீவாத்ம கைங்கர்யந்தானே? பரோபகாரம்தானே?

'இதுவே எல்லாம்' என்று வெளி லோகத்திலிருக்கிற கஷ்டங்களைப் பார்க்காமல், அதற்காக எந்தத் தொண்டும் செய்யாமலிருந்தால் அதுதான் தப்பு.

அளவறிந்து இந்த சொந்தக் கார்யங்களைப் பண்ணும்போது வெளிக் கார்யத்துக்கு, லோக ஸேவைக்குப் பொழுது இல்லாமல் போகவே போகாது.

நம்முடைய ஜீவன், நம் பந்துக்களின் ஜீவன்கள் ஆகியவற்றுக்கும் உபகரிக்கத்தான் வேண்டும். அதனாலேயே இந்த ஜீவனை சரீர பந்தத்திலிருந்தும் விடுவித்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதே ஸமயத்தில் ஈச்வரன் நம்மை ஒரு உடம்பில், ஒரு வீட்டில் மட்டுமில்லாமல், ஒரு உலகத்திலும் விட்டு வைத்திருப்பதால் அந்த உலகத்துக்கும் நாம் செய்ய வேண்டிய பரோபகார ட்யூட்டி உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த லோகத்துக்கு மட்டுமில்லாமல் கண்ணுக்குத் தெரியாத லோகங்களில் இருக்கிறவர்களுக்கும் நம் ட்யூட்டி இருக்கிறது. செத்துப்போனவுடன் ஜீவன் சந்த்ரலோகம், பித்ரு லோகம், நரக லோகம் என்று எங்கெங்கேயோ போகிறதென்கிறார்களே அங்கேயும்,அப்புறம் அந்த ஜீவன்கள் திரும்பி இந்த லோகத்திலேயே எங்கே எந்த ரூபத்தில் புனர் ஜன்மாவாக வந்திருந்தாலும் அங்கேயும் வேண்டியவைகளை போய்ச் சேருவதற்காகத்தான் அபர கார்யங்கள், திவஸம், தர்ப்பணம் எல்லாம். இதுவும் பரோபகாரத்தைச் சேர்ந்ததுதான்.

பல சாமி எதற்கு என்கிறார்களே, இதுவுங்கூடப் பரோபகாரம்தான் என்று நான் சொன்னால் உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும். கண்ணுக்குத் தெரியாத லோகங்களில் மநுஷ்ய இனம் போலவே பலவித தேவஜாதிகள் இருக்கின்றன. துர்த்தேவதைகள், க்ஷுத்ர தேவதைகள் (சில்லுண்டி சாமிகள்)

எல்லாம் இருக்கின்றன. எல்லாம் பரமாத்மா என்றாலும், [மநுஷ்யர்களான] நமக்கு எப்படி அது [அநுபவத்தில்] தெரியவில்லையோ அப்படியே இந்த தேவதைகள் பலவற்றுக்கும் தெரியாது. ஈச்வரன், விஷ்ணு, அம்பாள், பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர், ஸரஸ்வதி, லக்ஷ்மி, ஸூர்யன் இம்மாதிரி தேவதா மூர்த்திகள் பரமாத்மாவாகவே தங்களைத் தெரிந்து கொண்டும், வெளியிலே தங்களுக்கென்று ஒரு தனி ரூபம், தனியான தொழில் என்றிருக்கிற மாதிரி மற்ற எல்லா தேவதைகளும் இல்லை[3]. அவை ஈச்வரனின் ஸர்வலோக ஸர்க்காரில் இருக்கிற கோடாநு கோடிச் சிப்பந்திகளாக மட்டுமேயிருக்கின்றன. இயற்கை, இயற்கை என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பதன் ஏராளமான சக்திகளில் கொஞ்சம் கொஞ்சம் அவற்றின் த்வாரா நிர்வஹிக்கப்படுகிறது.

மநுஷ்ய ஜீவர்களில் கெட்டவர்கள், நல்லவர்கள் என்று இருவிதமாகவும் இருக்கிறோமோல்லியோ? மிருகங்களிலும் துஷ்ட மிருகங்கள், ஸாதுவானவை என்று இருக்கின்றனவோல்லியோ? இப்படியே நல்ல தேவதை, துர்த்தேவதை, பெரும்பாலான ஜனங்களைப்போல நல்லதும் கேட்டதும் கலந்த தேவதை எல்லாமுண்டு. ஆராதித்தால் நல்லது செய்வது, ஆராதிக்காவிட்டால் நல்லது செய்யாமல் வெறுமனே இருப்பது, வெறுமனே மட்டுமில்லம்மால் கெட்டதே செய்வது, ஸாதவிக ஆராதனையால் ஸந்தோஷப்படுவது, ராஜஸ தாமஸ வழிபாடுகளாலேயே ப்ரிதீயுறுவது, மந்த்ரபூர்வமாகப் பிடிபடுவது, பூசாரியின் அநுஷ்டானத்தில்பிடிபடுவது என்றெல்லாம் பலவிதமான தேவ சக்திகள் இருக்கின்றன. காத்தாயி, காட்டேரி, கருப்பண்ணசாமி, வீரன், முனி, இருளன், அய்யனார் எல்லாம் இருக்கிறது. இவற்றில் ஸாத்விக ஸ்டஜில் இருப்பவர்களுக்கு ஸாத்விக தேவதையாக இருந்துகொண்டு, தாமஸமான ஜனங்களுக்கு தாமஸமாக இருக்கிறவையும் உண்டு. நைவேத்தியத்திலும் இவற்றின் தரத்தைப் பொறுத்து வித்யாஸம் உண்டு. பலி, கிலி முதலியவற்றாலேயே த்ருப்தியாகிற தேவதைகளும் உண்டு.

நாம் மட்டும் நல்லது அடைவதற்காகத்தான் இவற்றை வழிபடுகிறோம் என்றால்தான் அது selfish. ஆனால் நம் கிராமம், ஊர், உலகம் எல்லாமே

இவை த்ருப்தியாக இருந்தால்தான் நன்றாயிருக்கும் என்பதற்காக இவற்றை வழிபட்டால் அஹு லோக க்ஷேமார்த்தம் செய்கிற பரோபகாரத்தில் சேர்ந்ததுதான்.

இன்னம் ஒருபடி மேலே போய்ச் சொல்கிறேன். நம் சொந்த நலன், உலகத்தார் நலன் ஆயயவற்றை மட்டும் polytheism என்று ஸரியாகவோ தப்பாகவோ சொல்லப்படுகிற இந்த 'பல சாமி பூஜை' பூர்த்தி பண்ணுவதோடு நிற்கவில்லை. அந்த தேவதைகளின் நலனையும் பூர்த்தி பண்ணுகிறது. அவற்றில் பெரும்பாலானவை பூர்ணத்வம் பெறாதவையே என்று சொன்னேனல்லவா? அவையும் ஈச்வர ஸ்ருஷ்டியைச் சேர்ந்த ஜீவன்கள், நம்மைவிட அதிக சக்தி படைத்த ஜீவன்களானாலும் நம்மைப் போலவே அவற்றுக்கும் ஆசைகள், தேவைகள் உண்டு. அதுகளை நாம் பூர்த்தி பண்ணித் தருவதும் பரோபகாரம்தானே?

மற்ற மதங்கள் இந்த லோகத்திலேயிருக்கிற, கண்ணுக்குத் தெரிகிற, மநுஷ்ய மிருகாதிகளுக்குப் பிரீதி பண்ணுவதை மட்டுமே பரோபகாரமென்று சொல்கின்றனவென்றால், நம் மதம்தான் அதற்கும் மேலே போய், இந்த லோகத்தைச் சேராத, லோகாந்தரங்களைச் சேர்ந்த invisible ஜீவன்களுக்கும் பிரீதியாக இப்படி வைதிக ஹோமத்திலிருந்து பூசாரியின் படையல் வரையில் அநேக வழிபாடுகளை வைத்துப் பரோபகார எல்லையை இன்னமும் விஸ்தாரம் பண்ணியிருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது. பஞ்ச மஹா யஜ்ஞங்களில் வரும் ஹோமம், பலி, மந்த்ர அத்யயனம், தர்ப்பணம் எல்லாமே பலவிதமான ஸ்ருஷ்டிகளுக்கும் உதவி பண்ணுவதுதான்!

ஏக பரமாத்மாதான் இத்தனை வித ஜீவராசிகளாகவும் தேவதைகளாகவும், இவற்றைப் பூஜை பண்ணும் மநுஷ்யர்களாகவும் ஆகியிருப்பதை நம் மதம் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறது. இந்த நினைப்பு அடியோடு துண்டித்துவிடக் கூடாதென்றுதான் எந்த தேவதையை வழிபட்டாலும் அதுவே ஸ்வாமி என்கிற மாதிரி ஸர்வ சக்தி, ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்றெல்லாம் சொல்வது. அந்த தேவதைக்கே 'நான் பரமாத்மா'

என்பது தெரியாமலிருந்தாலுங்கூட, நாம் அது பரமாத்மா என்பதை முழுக்க மறந்து போய்விடக்கூடாது என்பதே தாத்பர்யம். அதாவது "பல சாமி" இல்லை - ஒரே ஸ்வாமியைத்தான் ஒவ்வொரு ரூபத்துக்குள்ளும் அந்தர்யாமியாக நினைக்கிற பாவமே இது. எந்த தேவதையும் பரமாத்மாவின் ரூபமே என்றாலும், இதை மறக்காமல் நினைப்பூட்டிக் கொண்டாலும், அதை ஒரு தனி தேவதையென்றே அதற்குரிய வழிபாட்டால்தான் உபாஸிக்க வேண்டும் என்று நம் மதம் சொல்கிறது. ஏனிப்படி என்று கேட்டால் - மநுஷ்யர்கள் மட்டும் யார்? அவர்களும் பரமாத்மாவின் ரூபங்கள்தானே? மத நம்பிக்கையில்லாத பொதுத் தொண்டுக்காரர்கள்கூட மக்களுக்குச் செய்வதே மஹேசனுக்காகும் என்கிறார்களே! இப்படி எல்லாரும் ஒரே ஈச்வரன் என்றாலும் அவர்களுக்கான ஸேவை அவரவர்களைத் தனி மநுஷ்யர்களென்று வைத்து, ஒவ்வொருவரின் தேவையை அநுஸரித்துத்தானே பண்ணவேண்டியதாயிருக்கிறது? வியாதியஸ்தனுக்கு சிகித்ஸை, அதிலும் இன்ன வ்யாதிக்காரனுக்கு இன்ன சிகித்ஸை, உத்யோகமில்லாதவனுக்கு வேலை, படிப்பில்லாதவனுக்கு படிப்பு, பசித்தவனுக்கு அன்னம் என்று வித்யாஸமாகத்தானே பரோபகாரம் பண்ணுகிறோம்? இவ்வாறே தேவதைகளிலும் ஒன்றொன்றின் தனி ரூபத்துக்கும் எந்தவிதமான ஆராதனை உரியதோ அந்தப்படித்தான் செய்ய வேண்டும். ஆனாலும் எல்லா பரமாத்மா என்பதையும் முழுக்க மறந்துவிடக்கூடாது.

எல்லாம் பரமாத்மா என்ற நினைப்பு ஒருத்தனுக்கு அநுபவமாக ஆவது பெரிய விஷயம். அப்படி ஆவதற்கு முன் அவனுக்குச் சித்தசுத்தி ஏற்படவேண்டும். இந்த சுத்தி ஏற்படவே அநேக கார்யங்களைக் கொடுத்திருக்கிறது. இதில் ஒவ்வொரு தேவதையையும் அதற்குரியபடி பூஜிக்கிற காரியமும் அங்கம்தான். இது தவிர "யஜ்ஞேன தானேன தப்ஸா" என்று பரமாத்மா தத்துவத்தைச் சொல்லும் உபநிஷத்தே அந்தத் தத்வத்தைப் பிடிப்பதற்குப் பூர்வாங்கமாகவே பலவிதமான கார்யங்களை விதித்திருக்கிறது[4]. "தானேன" என்பது தனத்தால் செய்கிற தானம் மட்டுமில்லை. மனத்தால், வாக்கால், சரீரத்தால் செய்யும் எல்லா உபகாரமும் தானம்தான்.

இதேபோல, "பிதாவுமில்லை; புத்ரனுமில்லை; தேவதையுமில்லை; உபாஸிக்கிறவனுமில்லை" என்ற உச்சிக்கோடிக்கு அழைத்துப்போகிற உபநிஷத்துக்களே, இந்த உச்சிக்கு வழியாகவே **"தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்"** என்கிறது. "ஏகப்பட்ட தேவதைகளுக்குப் பண்ணவேண்டிய கார்யங்களை, ஏகப்பட்ட பித்ரு கார்யங்களைக் கொஞ்சங்கூட, மறந்து கிறந்து விட்டு விடாதே" என்கிறது.

தத்வார்த்தமாக, symbolical-ஆக தேவதைக புருஷன், பெண்டாட்டி, பிள்ளை, குட்டி என்று வைத்திருப்பது மட்டுமில்லை. வாஸ்தவமாகவே தேவஜாதியைச் சேர்ந்த பல ஸ்ருஷ்டிகள் மநுஷ்ய ஜீவன்களைப் போலவே இப்படிப்பட்ட உறவுகளில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன.

லோகத்தில் எதுவும் நமக்கு வேண்டாம், ஏக பரமாத்மா ஒன்றைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது மாத்திரமே நம் லக்ஷ்யமாக ஆகிறபோது அந்தப் பரமாத்மாவின் தேவதா ரூபங்களை விடத்தான் செய்வோம். அதேபோல லோகத்திலிருக்கிறவர்களுக்கு ஸேவை பண்ணவேண்டும் என்கிற எண்ணமும் அப்போது விட்டுப்போய்விடும். இதனால் ஒருத்தன் பரோபகாரமில்லாமல் கல்லு மாதிரி ஆகிவிட்டானென்று அர்த்தமில்லை. பரமாத்ம ஞானத்தை இவன் அடைந்து விட்டானென்றால், பரமாத்மாவிடம் பக்தியினாலோ ஞானத்தினாலோ கலந்து வாழ்கிறானென்றால் அப்போது இவன் உத்தேசிக்காமல் தன்னாலேயே ஸகல ஜீவன்களுக்கும் சாந்தி தருவதான மஹா பெரிய உபகாரம் இவனால் நடந்துகொண்டேதானிருக்கும்.

மற்ற மதங்கள் இப்படிப் பல தேவதை ப்ரீதியைச் சொல்லவில்லையாதலால் அவர்களுக்கு ஒரே ஈச்வரனிடம் பிடிப்பு நன்றாக உண்டாகிறது என்பது வாதமாக மட்டுமே நிற்கிறதே ஒழிய, வாஸ்தவத்தில் அப்படி அவர்களில் அதிகம் பேருக்கு ஈச்வரானுபவம் உண்டாகாமல் அவர்களும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்களென்பதுதான் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பது. அவர்களில் இருப்பதைவிட நம்மில்தான் ஜாஸ்தி மஹான்கள் தோன்றியிருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள் என்றும் அவர்களே சொல்லவும் சொல்கிறார்கள்.

இதனால் எனக்கு இன்னொன்றுகூடக் கொஞ்சம் வேடிக்கையாகத் தோன்றுகிறது.

பெரிய ஸ்வயநலம், தன்னலம் எது? தனக்கு உண்டாகக்கூடிய பெரிய நன்மை எது? பரமாத்மாவைச் சேருவதுதானே? "எத்தனை தேவதைகளும், பித்ருக்களும் இருந்தாலும் ஸரி, எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்; நீதான் வேண்டும், அவையெல்லாமும் உன் ஸ்ருஷ்டிதானே? அவற்றுக்கு என்ன தேவை இருந்தாலும் அதைப் பூர்த்தி பண்ணவேண்டியது உன் பொறுப்புத்தான். மரம் வைத்த நீதான் தண்ணி விடணும். விடு, விடாமல் பொ, அது உன் கார்யம். எனக்கு தேவதையும் வேண்டாம், பித்ருக்களும் வேண்டாம். உன்னைத்தான் பிடித்துக் கொள்கிறேன். அதற்காக அவை கோபித்துக்கொண்டு என்னைக் கஷ்டப்படுத்தினவென்றால் அது உனக்குத்தான் அவமானம். எல்லாவற்றுக்கும் மேலேயிருக்கிற உன்னை நான் பிடித்துக் கொள்கிறேன் என்பதற்காக ஏதோ குட்டி சக்திகள் என்ன ஹிம்ஸை பண்ணி, நீ பேசாமல் இருந்தால் அது உனக்குத்தான் அபக்யாதி' - என்றிப்படி எல்லாரையும் நினைக்கச் சொல்லி நம் மதம் நம்முடைய பெரிய ஸ்வயநலத்தை மட்டும் கவனித்திருக்கலாம். ஆனாலும் ஸ்வயநல மதம் என்று சொல்லப்படுகிற இதுதான், இவன் ஒரே பரமாத்மாவைப் பிடித்துக்கொள்வதில் உள்ள ஐகாக்ரியம் [ஒருமுக சிந்தனை] என்கிற உத்தமமான ஸ்திதி சிதறிப்போகும்படியாகப் பல தேவ-பித்ரு கர்மாக்களைக் கொடுத்து ஸ்வயநலத்தைத் தியாகம் பண்ண வைத்து, கண்ணுக்குத் தெரியாத சின்னச் சின்ன சக்திகளுக்கும் இவனைப் பரோபகாரம் பண்ண வைக்கிறது. இப்படி இவன் தியாகமும் பரோபகாரமும் செய்வதனாலேயே பகவான் இவனை மெச்சி இவனுக்கு இதர மதங்களிலிருப்பவர்களுக்கு முன்னாள் ஞானத்தை அநுக்ரஹித்து விடுகிறான். அதனால்தான் இந்த மதத்திலேயே ஜாஸ்தி மஹான்களும் ஞானிகளும் பக்த சிரேஷ்டர்களும் தோன்றுகிறார்கள் - என்று தோன்றுகிறது.

இன்னொரு தினுஸாகச் சொல்வதென்றால் அது ஸமூஹத்தில் பெரும்பாலோர் இப்படிப் பரமாத்மாவைத் 'தியாகம்' பண்ணிவிட்டுக் குட்டி சாமி பூதப் படைகளைப் பிரீதி பண்ணுகிற பரோபகார புண்யத்துக்காகத்தான்

இந்த மதத்திலேயே “சிறு தெய்வம் சேரேன்” என்று அவனையே பிடித்துக்கொள்ளும் மஹான்களையும் பரமாத்மா நிறையப் படைக்கிறார்!

வேடிக்கை இருக்கட்டும். யதார்த்தமாகச் சொன்னாலும் ஈச்வரன்தான் ராஜா. தவர்கள், பித்ருக்கள் எல்லாம் அவனுடைய ராஜாங்கத்தில் சிப்பந்திகள் என்றாலும், பிரஜைகள் சிப்பந்திகள் மூலம் நடக்க வேண்டியதற்கு அவர்களிடம் போகவேண்டுமென்றுதான் ராஜா நினைப்பானே தவிர, அவர்களை விட்டுவிட்டுத் தன்னைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பானா? மநுஷ்ய ராஜாக்களைப் போல இல்லாமல் எல்லா ஜனங்களுக்கான எல்லாக் காரியங்களையும் தான் ஒருத்தனாகவே கவனிப்பதற்கு ஈச்வரனுக்கு சக்தி இருக்கத்தானிருக்கிறது என்றாலும், ஏதோ ஒரு காரணத்துக்காக, லீலைக்காக, அவர்தானே இப்படிக் கொஞ்சங் கொஞ்சம் அதிகாரம் கொடுத்து அநேக தேவஜாதிகள் இந்த லோக நிர்வாஹத்தை கவனித்துக் கொள்ளும்படியாக வைத்திருக்கிறார்? லோகத்தையும் நேச்சரையும் ஒருவன் தாண்டிப்போகிற வரையில், இவன் ஸம்பந்தமாகவே அவர் நியமித்திருக்கிற இந்த அதிகாரிகளை அவன் ஆச்ரயிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்றுதானே இதற்கு அர்த்தம்? கீதையில் பகவானே இந்த விஷயத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். “எல்லா தர்மத்தையும் மூட்டை கட்டிவிட்டு என் ஒருத்தனையே பிடிச்சுக்கோ; என்கிட்டேயே சரணாகதி பண்ணு” என்று அவர் சொன்னது மட்டும் பிரஸித்தி யாயிருக்கிறது. ஆனால் இப்படிச் சொன்னது கடைசியில்தான்[5]. அதற்கு முந்தி[6], "பல தினுஸான ஆசைகள் உள்ளவர்கள் அந்தந்த ஆசைகளைப் பூர்த்தி பண்ணும் அநேக தேவதைகளை உபாஸனை ண்ணுகிறார்கள். அப்போது அவர்களுக்கு அந்த தேவதைகளிடம் ஸ்திரமான ஈடுபாட்டை நானேதான் உண்டுபண்ணுகிறேன். ஆனாலும் அந்த தேவதைகளுடனேயே நின்றுவிடாமல், அதுகளுக்கும் அந்தர்யாமியாக நாந்தான் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறேன் என்ற தத்துவத்தை மறந்து அந்த தேவதைகளே எல்லாம் என்று நினைத்துவிடக்கூடாது. இப்படி நினைக்கிறவன் அவை தருகிற அல்ப இச்சா பூர்த்திகளோடையே நின்றுவிடுகிறான். என் நினைவை விடாமல்,

அவற்றை உபாஸிக்கிறவன் நாளாவட்டத்தில் என்னிடமே வந்து சேருகிறான்" என்று சொல்கிறார்.

கீதையின் கடைசியில் சொன்னது ரொம்பவும் பகவியாக இருப்பவனாலேயே முடியும். இங்கே, நடுவில் சொன்னது நடுவாந்தர ஸ்திதியிலிருக்கிறவனுக்கு. அவ்வளவுகூடப் போகாத நம் மாதிரியான பெரும்பாலருக்கு இதற்கும் முந்தி, 'ஆரம்பத்திலேயே[7] சொல்லும்போது அநேக தேவதைகள் மூலமும் தானே அந்தர்யாமியாகக் கார்யம் பண்ணுவதைகூடச் சொல்லாமலேதான் பேசுகிறார். என்ன சொல்கிறாரென்றால் : "பூர்வத்தில் ஸ்ருஷ்டியின்போதே ப்ரம்மா தேவ ஜாதி, மநுஷ்ய ஜாதி இரண்டையும்தான் படைத்தார். இந்த இரண்டு ஜாதிகளும் ஒன்றையொன்று ஆதரித்துக்கொண்டு, ஆராதித்துக் கொண்டு (**"பரஸ்பரம் பாவயந்த:"** என்கிறார்), இரண்டு பேரும் அதனால் உசந்த க்ஷேமத்தை (**"ச்ரேய:பரம்"** என்று இருக்கிறது) அடையவேண்டும் என்று அப்போதே பிரம்மா அவர்களுக்கு நியமனம் பண்ணி, இப்படி மநுஷ்யர்கள் தேவதைகளை உபாஸிப்பதற்கே யஜ்ஞங்களை ஏற்பாடு பண்ணிக்கொடுத்தார்" என்கிறார். லோக ஜீவனத்துக்கான மழை, இன்னம் அநேக போகங்களை தேவதைகள்தான் தருகிறார்கள். நாம் செய்யும் யஜ்ஞத்தினால் தேவதைகளின் தேவைகளைப் பூர்த்தி பண்ணி, நம்முடைய வாழ்வுக்கு வேண்டியதை அவர்களிடமிருந்து பிரதியாக வாங்கிக் கொள்ள வேண்டும். "தேவதைகளுக்கு யஜ்ஞ ஆராதனை பண்ணாமல் தாங்கள் மட்டும் சாப்பிடுகிறவர்கள் திருடர்கள்தான்; அவர்கள் சாதத்தைச் சாப்பிடவில்லை, பாபத்தையே சாப்பிடுகிறார்கள்" என்றெல்லாம் "மாம் ஏகம்" என்று முடித்த கிருஷ்ண பரமாத்மாவே ஏகப்பட்ட சாமிபூஜையை பலமாக விதிக்கிறார்!

யாரார் எந்தெந்த ஸ்டேஜில் எப்படிப்பட்ட பக்குவ ஸ்திதிகளிலிருப்பார்கள், அந்த ஸ்டேஜில் அவர்கள் என்ன பண்ணினால் நிறைவு பெறுவார்கள், ஆனால் இந்த நிறைவே நிறைந்த நிறைவு என்று நின்றுவிடாமல் மேலே போவார்கள் என்று ரொம்பவும் understanding-உடன் கவனித்து ஒரு ஜீவனைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே கொண்டுபோவதற்காகவே, முடிவிலே ஜீவ-ப்ரம்ம அபேதத்தை சொன்ன ஹிந்து மதம் அடியிலே அநேக தேவதைகள், பித்ருக்கள் உபாஸனையைச் சொல்லியிருக்கிறது என்று

புரிந்துகொள்ளாததால் ‘க்ரிடிஸைஸ்’ செய்கிறார்கள். அநேக ஜன்மாந்தர வாஸனைகளோடு பிறந்திருக்கிற பெருவாரியான ஜனங்களை இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக, gradual-ஆகத்தான் முன்னேற முடியும். அப்படியில்லாமல் முதலிலேயே மேலே ஆரம்பித்தால் அது பிடிபடாமல் கீழே விழும்படியாகத் தான் ஆகும் என்பதற்கு proof-ஆகவே மற்ற மதஸ்தர்களை விட நம்மிலேயே வெகு அதிகமாக மஹான்களும் ஸாதுக்களும் தோன்றியிருக்கிறார்கள்.

நாம் ரொம்பவும் அல்ப சக்தர்கள் என்ற அடக்கம் இருந்துவிட்டால் எல்லாம் ஸரியாய்விடும். நம் மனஸ் எதையும் நினைக்கிறது, நம் புத்தியானது பிரமிக்கும்படியான விஷயங்களைத் தெரிந்து கொள்கிறது என்கிறதில் தலை கனத்துப் போகக்கூடாது. புத்தி ப்ரகாசம் மநுஷ்ய ஜாதிக்கு நிறைய இருக்கலாம். ஆனால் புத்திக்கு மீறிய சக்திகளிடம் இந்த ஸாமர்த்தியத்தைக் காட்டி நாம் ஜயிக்க முடியாது. வேதப் பிரதிபாத்யமான, ஸாத்விகமான தெய்வ சக்திகள் மட்டுந்தானென்றில்லை. காத்து (காற்று), கருப்பு என்று அநேக ஆவி லோக சேஷ்டைகளைச் சொல்கிறார்களே, இதெல்லாம் நுழையவிடாமல் காபாற்றுகிற காத்தவராயன், கருப்பண்ணன் முதலானவற்றுக்குக்கூட நாம் அடங்கினவர்கள் என்பதால்தான் பிராம்மணர்கள் கூட பூசாரி பூஜை செய்யும் கிராம தேவதைகளுக்கும் வருஷத்தில் ஒரு நாளோ, தங்கள் வீட்டில் கல்யாணம், கார்த்திகை என்றாலோ வழிபாடு நடத்தும் வழக்கம் தொன்றுதொட்டு ஏற்பட்டிருக்கிறது. [8]ஸ்ம்ருதியிலேயே [தர்ம சாஸ்திரத்திலேயே] ரிஷிகள், ‘இங்கே சொன்னதோடு எல்லாம் முடிந்துவிடவில்லை; பாக்கி பண்ண வேண்டியவைகளை ஸ்த்ரீகளிடமிருந்தும், நாலாம் வர்ணத்தவர்களிட மிருந்தும் தெரிந்து கொள்ளுங்கள்’ என்று சொல்லியிருப்பது கிராமதேவதை வழிபாடும் சாஸ்திர ஸம்மதம்தான் என்பதற்கு ஆதரவாயிருக்கிறது.

ஈச்வர ஸ்ருஷ்டியில் உள்ள எல்லாவிதமான உயிர்களுக்கும் பிரீதியை உண்டுபண்ணி, அவற்றில் ஸௌம்யமானவை மேலும் ஸௌம்யஆகி லோகத்துக்கு நன்மை செய்யுமாறும், உக்ரமானவை சாந்தமாகி ஆவி சேஷ்டை, அம்மை நோய் முதலிய க்ஷாமங்களை உண்டாக்கமலிருக்குமாறும்

செய்வது உத்தமமான காரியந்தான். விஷயம் தெரியாதவர்கள் 'க்ரிடிஸைஸ்' செய்வதால் இதெல்லாம் ரொம்பத் தாழ்ந்த ஸ்திதிக்கு மதத்தை இறக்கிவிடுகிறது என்று தப்பாக நினைத்து, விட்டுவிடக்கூடாது.

க்ரிடிஸிஸம் என்று நினைத்து அவர்கள் சொல்வதே பாராட்டி ஸர்ட்டி்ஃபிகேட் கொடுப்பதாகத் தான் எனக்கு தோன்றுகிறது. அத்வைதத்தைச் சொல்கிற மதமே அநேக தேவ-பித்ரு கர்மாக்களைச் சொல்வதுதான் நம் மதத்தின் பெருமை. இதனால்தான் அது ஸகலவிதமான லெவல்களிலிருப்பவர்களையும் ஒரே அமைப்பில் அரவணைத்துக்கொண்டு போகிறது என்பது ஒரு பெருமை. இதனால்தான் பரோபகாரம் என்பதை மநுஷ்ய லோகத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், மற்ற லோகத்து ஜீவர்களுக்குப் போஷணை தருவதகாவும் விஸ்தரித்து, அவர்களைக் கொண்டு நம் லோகத்துக்கும் நல்லதைப் பெற்றுத்தர முடிகிறது என்பது இன்னொரு பெருமை.

---

1. பரோபாகாரத்திலேயே இவ்வுரையின் தாத்பரியம் முடிவதால் இதனை இப்பிரிவில் சேர்த்துள்ளோம்.

2. பிரம்ம யஜ்ஞும், தேவ யஜ்ஞும், பித்ரு யஜ்ஞும், மநுஷ்ய யஜ்ஞும், பூத யஜ்ஞும் என்பன. இவைப்பற்றி "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் 'எள்ளும் தண்ணீரும் எங்கே போயின?', `பரோபகாரம்', `எல்லா உயிர்களின் திருப்திக்காக' என்ற உரைகள் பார்க்கவும்.

3. ஒரே பரமாத்மாவை பல மூர்த்திகளில் உபாஸிப்பது குறித்து "தெய்வத்தின் குரல்", முதற்பகுதியிலுள்ள "இஷ்ட தேவதை", இரண்டாம் பகுதியில் "புராணம்" என்ற உரையிலுள்ள தெய்வங்களுள் பேதம் ஏன்?", "ஒன்றே பலவாக" ஆகிய உட்பிரிவுகளும், தேவதைகள் குறித்து முதற்பகுதியில் "தேவர்கள்" என்ற உரையும் பார்க்க. அங்கு கூறிய விஷயங்கள் விடுத்து இங்கு மேலே சொல்கிறோம்.

4. ப்ருஹதாரண்யகம் 4.4.2

5. கீதை பதினெட்டாவது அத்யாயத்தில்.

6. ஏழாவது அத்யாயத்தில்.

7. கீதை மூன்றாவது அத்யாயத்தில்.

8. இவ்விஷயமாக "தெய்வத்தின் குரல்" - இரண்டாம் பகுதியில் 'தர்ம சாஸ்திரம்' என்ற உரையில் பார்க்க.

6-சிக்கனமும் பரோபகாரமும்

6.1-பரோபகாரத்துக்காகவே சிக்கனம்

சொந்த வாழ்க்கையில் சிக்கனமாக இருந்தால் தான் பிறத்தியாருக்கு உதவியாக திரவிய ஸஹாயம் செய்ய முடியும். அநாவசியங்களையெல்லாம் அத்யாவசியமாக்கிக் கொண்டு மேல்நாடுகளைப் பார்த்து material comfort, luxury என்று மேலே மேலே போய்க் கொண்டிருந்தால் தனக்கும் ஒரு நாளும் த்ருப்தி இராது;பிறத்தியாருக்கும் தான தர்மம் பண்ண முடியாது. மோட்டார் ஸைகிளுக்கு மேலே கார் வேணும், அப்புறம் அந்தக் காரிலும் இன்னம் பெரிசாக வேணும், அதற்கப்புறம் அதையே ஏர்-கன்டிஷன் பண்ணணும் என்கிறது போல, ஸிமென்ட் மொஸெய்க் ஆகணும், மொஸெய்க் மார்பிள் ஆகணும் என்கிறதிபோல ஒன்றுக்கு மேல் ஒன்று ஸௌகர்யத்தைத் தேடிக் கொண்டேயிருப்பதால் எப்போது பார்த்தாலும் அதிருப்தி என்ற பெரிய அஸௌகர்யத்திலேதான் ஒருத்தன் இருந்து கொண்டிருப்பான்! அது மட்டுமில்லை. எத்தனை ஸம்பாத்யம் வந்தாலும் போதவும் போதாது. அதனால்தான் இன்றைக்கு அத்தனை பணக்காரர்களும் கடனாளியாக - கடன் என்கிறதையே ஓவர்-ட்ராஃட் என்று கௌரவமான பெயரில் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இவனே கடனாளியாக இருந்தால் மற்றவர்களுக்கு எங்கேயிருந்து தர்மம் பண்ணுவது?

இப்போது பொதுவாக உள்ள பரிதாப நிலை என்னவென்றால், ஒன்று, சிக்னமாக இருப்பவன் தானும் அநுபவிக்காமல் பிறத்தியானுக்கும் உதவி பண்ணாமல் கருமியாக இருக்கிறான்; செலவாளியாக இருப்பவனோ

ஸௌகர்யம், இன்னும் ஸௌகர்யம்' என்று பறப்பதில் தனக்கே போதாமல் கடனாளியாக நிற்பதால் இவனாலும் பரோபகாரம் நடப்பதில்லை.

பிறருக்குச் செய்வதற்காகவே சொந்த விஷயத்தில் சிக்கனமாயிருக்க வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையை ஒவ்வொருவனும் கடைப்பிடித்தால் எவ்வளவோ புண்யத்துக்குப் புண்யம், நிம்மதிக்கு நிம்மதி, எத்தனையோ தீனர்களும் க்ஷேமமடைவார்கள்.

சிக்கனமாயிருந்தாலொழிய, இப்போது இருக்கிற போக போக்ய இழுப்பில், எவனுக்குமே மிச்சம் பிடிக்க முடியாது. அதனால் சிக்கன வாழ்க்கை நடத்தினால்தான் 'தனக்கு மிஞ்சி'தர்மம் பண்ண முடியும். அதாவது எத்தனை சிக்கனமாயிருக்க முடியுமோ அப்படியிருந்து தனக்கு மிஞ்சும்படியாகப் பண்ணிக்கொண்டு தர்மம் பண்ணணும்.

கீதை முதல் ஸ்லோகத்தில் வருகிற தர்ம க்ஷேத்ரம் என்பது இந்த சரீரம்தான். ஒரு வயல் என்றால் அதில் விளைச்சல் பண்ணுவதற்கு பூஸாரம் வேண்டும்; அப்புறம் ஒவ்வொரு தானியத்துக்குரிய பருவகாலம் பார்க்க வேண்டும். க்ஷேத்ரம் என்றால் வயல். நம்முடைய சரீர வயலுக்கு எது பூஸாரம்? புத்தி பிரஸன்னமாயிருப்பது; இந்திரியங்கள் பழுதாகாமல் சுத்தமாயிருப்பது; விஷயங்களைக் கிரஹித்துக் கொள்ளும் ஞானேந்திரியங்கள், கார்யங்கள் பண்ணும் கர்மேந்திரியங்கள் இரண்டும் தீக்ஷண்யமாயிருப்பது – இதுதான் பூஸாரம். ஓடியாடவும் தளர்ச்சியில்லாமல் ஆலோசிக்கவும் சக்தி இருப்பதுதான் பருவ காலம். இதையெல்லாம் பொருத்து இந்த சரீர வயலில் தர்மப் பயிரை வளர்த்து, தர்ம க்ஷேத்ரமாக்க வேண்டும். அந்தப் பயிரை வளர வொட்டாமல் ஹானி செய்கிற களைதான் தனக்காக அவசியத்துக்கு மீறிச் செலவழிப்பது. வயல் நிறையக் களை மண்டியிருப்பதைப் பார்த்து நல்ல விளைச்சலென்று ஸந்தோஷிப்பது போலத்தான், தனக்காகச் செலவழித்து அதில் ஏற்படும் ஸௌகர்யங்களைப் பார்த்து ஸந்தோஸிப்பது! களை பிடுங்குவதில் எத்தனை கவனமாயிருக்கிறோமோ அத்தனை கவனமாக அத்யாவச்யத்துக்கு மேலான செலவுகளைப் பிடுங்கிப் போட வேண்டும்.

* சிக்கன வாழ்க்கை பற்றி "தெய்வத்தின் குரல்"முதற் பகுதியில் "சமூக விஷயங்கள்"என்ற பகுதியிலுள்ள 'வாழ்க்கைத் தரம்', 'எளிய வாழ்வு', 'கணக்காயிருக்கணும்' என்ற உரைகளில் காண்க. இங்கு காணும் இவ்வுரையிலுள்ள சில விஷயங்கள் இப்பகுதியிலுள்ள 'பரோபகாரம்' என்ற உரையிலும் கூறப்பட்டிருப்பினும், விஷய முக்யத்வத்தினால் இங்கு பூர்ண உருவில் தனியே கொடுக்கப்பட்டிருக்கிறது.

6.2-கடன் அனைவருக்கும் தீங்கு

சிக்கனம் தன் சேமிப்புக்காக அல்ல, பரோபகாரத்துக்காகவே என்பது போலவே, கடன் வாங்காமலிருப்பதும் தன் நன்மையைக் கருதி மட்டுமில்லாமல் பரோபகார உத்தேசத்தின்மீதே இருக்க வேண்டும். கடன் பட்டுவிட்டால் அதை அடைப்பதற்கே பாடுபடுவது; ஒரு கடன் அடைந்த பிறகு ஏற்கெனவே கடன் வாங்கின பழக்கத்தில் மறுபடி மறுபடி கடனுக்குப் போவது என்றுதான் அனர்த்தமாகப் போய்க்கொண்டிருக்கும். இப்படி தனக்கே இல்லாத நிலையை உண்டாக்கிக் கொண்டால் பிறருக்கு எப்படிச் செய்வது?

ஆசார்யாள் 'ப்ரச்நோத்தர ரத்ன மாலிகா' என்று கேள்வியும் பதிலுமாக ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அதிலே ஒரு கேள்வி, "உலகத்தில் தீட்டாக ஆவது எது? " என்பது: **"கிமிஹ ஆசௌசம் பவேத்?"**

சுசி என்றால் சுத்தம். அசுசி [என்றால்] அசுத்தம். அசுசியுள்ளது ஆசௌசம். தேவ கார்யங்களுக்கு உதவாத படி ஆக்குகிற சாவுத் தீட்டு, பிரஸவத் தீட்டு முதலானவற்றையே சாஸ்திரங்களில் ஆசௌசம் என்று சொல்லியிருக்கிறது. இங்கே, சிஷ்யன் "ஆசௌசம் எது?" என்று கேட்பதாகவும், அதற்கு குரு பதில் சொல்வதாகவும் ஆசார்யாள் சொல்லுகிறார். அந்தப் பதில் என்ன?

ருணம் ந்ருணாம்

"ந்ருணாம்" என்றால் "மநுஷ்யனுக்கு", "மநுஷ்யனாகப் பிறந்த எல்லாருக்கும்" என்று அர்த்தம். "ருணம்" என்றால் 'கடன்', "மநுஷ்ய ஜன்மா எடுத்தவனுக்குப் பெரிய தீட்டு கடன் படுவதுதான்" என்று ஆசார்யாள் சொல்கிறார். ஏன் அப்படிச் சொன்னார்?

தீட்டு வந்தால் என்ன பண்ணுகிறோம்? இந்தக் காலத்தில் ஒன்றும் பண்ணுவதில்லை. "தீட்டாவது, துடக்காவது? எல்லாம் ஸூபர்ஸ்டிஷன்" என்று ஆலய ஸந்நிதானம் உள்பட எல்லா இடத்திலும் ஆசௌசங்களைக் கலந்து கொண்டிருக்கிறோம். பலனாகத்தான் துர்பிக்ஷம், நூதன நூதன வியாதிகள், மஹாக்ஷேத்ரங்களிலேயே விபத்துக்கள் என்று ஏற்பட்டுக் கொண்டிருக் கின்றன. ஆகையால் ஐம்பது வருஷத்துக்கு முன்வரை இருந்த நடைமுறையை வைத்தே, ஆசார்யாள் எழுதினதற்கு அர்த்தம் சொல்கிறேன். இரண்டாயிரம் வருஷம் முந்தி அவர் இருந்தபோதும், அவருக்கும் எத்தனையோ ஆயிரம் வருஷம் முந்தியும் இதே ஆசார - ஆசௌசங்கள்தானே அநுஷ்டானத்திலிருந்திருக்கின்றன? ஒருத்தனுக்குத் தீட்டு ஸம்பவித்துவிட்டால் அந்த நாளில் என்ன பண்ணுவார்கள்? மற்றவர்கள் அவன் கிட்டேயே வரமாட்டார்கள். மேலே பட்டு விடப்போகிறான் என்று தள்ளித் தள்ளியே போவார்கள். கடனாளியாக இருக்கிறவனைக் கண்டும் பயந்து, "எங்கே நம்மைக் கேட்டுவிடுவானோ?" என்று மற்றவர்கள் ஒதுங்கித்தானே ஓடுகிறார்கள்! இவனும் கடன் கொடுத்தவன் எங்கே எதிர்ப்பட்டு விடுவானோ என்று பயந்துகொண்டு ஜன ஸமூஹத்தின் கண்ணில் படாமல் ஒளிந்துகொண்டுதான் போவான். தலையில் துணியைப் போட்டுக்கொண்டு போவது என்பார்கள், அடையாளம் தெரியாமலிருப்பதற்கு தன்னைத்தானே இப்படிப் பெரிய ஆசௌசம் ஏற்பட்டு விட்டதுபோலக் கடனாளி ஸமூஹ ப்ரஷ்டம் செய்து கொண்டுவிடுகிறான்.

ஒருத்தன் கடன் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வதால் அத்தனை பேருக்கும் கஷ்டம். "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான்" என்று கம்பரே சொன்னபடி, கடன் வாங்கிவிட்டவன் கொடுத்தவனை நினைத்து எப்போதும் பயந்துகொண்டு கஷ்டப்படுகிறான்; தப்பித்துக்கொள்வதற்காகப் பொய் சொல்கிறான்; மிஞ்சினால் கடனை அடைப்பதற்காகத் திருடவும் துணிகிறான்.

கடன் பட்டாரைப் போல, அல்லது அதை விடவும், ”கடன் கொடுத்தார் நெஞ்சமும்” கலங்கிக் கொண்டுதான் இருக்கம் - பணத்தை அழுதவன் இவன் தானே? அது திரும்பி வருமா வராதா என்று எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பான். கடன் கொடுத்தவனான இவனுக்கு எத்தனை எரிச்சலும் மனக் கொதிப்பும் உண்டாயிருக்கிறது என்பது ”கடன்காரன், கடன்காரி” என்று வசவு ஏற்பட்டிருப்பதிலிருநந்தே தெரிகிறது.

கடன்காரன் என்றால் கடன் கொடுத்தவன், வாங்கினவன் என்று இரண்டு தினுஸாகவும் அர்த்தம் பண்ணிக்கொள்ள இடமிருக்கிறது!வளர்ந்த குழந்தைகள் செத்துப்போனால், ”கடன்காரன் (கடன்காரி) போயிட்டானே (போயிட்டாளே) ”என்று தாயாக இருக்கப்பட்டவள் மனஸ் நொந்து பிரலாபிப்பதுண்டு. இங்கே கடன்காரன் என்றால் பூர்வ ஜன்மத்தில் நமக்குப் பணமாகவோ உழைப்பாகவோ கொடுத்தவன் என்று அர்த்தம். அப்படிக் கொடுத்ததை, கடனைத் திருப்பி வாங்கிக்கொள்கிற மாதிரி வாங்கிக்கொள்ளவே இப்போது பிள்ளையாகப் பிறக்கிறான். பெற்றவர்களுக்குச் செலவு, தேஹ ச்ரமம் எல்லாம் வைக்கிறான். இவற்றில் தான் முன் ஜன்மாவில் கொடுத்த அளவுக்குத் திரும்ப அவர்களிடம் வாங்கிக் கொண்டவுடன் கடன் தீர்ந்தாயிற்று என்று கண்ணை மூடிக்கொண்டு போய்விடுகிறான்.

”ஜன்மாந்தர கடன்காரன்” என்று சொல்கிற போதும் பூர்வஜன்மத்தில் நாம் ஒருத்தனால் பெற்றதைத் திரும்ப நம்மிடமிருந்து வாங்கிக்கொள்ள அவன் வந்திருக்கிறான் என்றே அர்த்தம்.

ஒருத்தன் கடன் படுவதனால், கடன் படுகிறவன் மட்டுமில்லாமல் கடன் தருகிறவனும் கஷ்டத்துக்கு ஆளாகிறான் என்று சொல்ல வந்தேன். இப்போது நவீன ‘ஐடியாலஜி’ போய்க்கொண்டிருக்கிற போக்கில் கடன் கொடுத்தவர்தான் அதிகக் கஷ்டத்துக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. ஸர்க்காரே கடன் வாங்கிப் பெரிய பெரிய திட்டம் போடுவதாக இருப்பதால் போலிருக்கிறது, கடன்பட்டவர்களுக்குத்தான் இப்போது ஸர்க்காரில் எல்லா சலுகையும் !வெளி தேசங்களில் உள்ள லக்ஷுரிகள்தான் இப்போது நம் ஸர்க்காருக்கு ‘டார்கெட்’

(குறிக்கோள்)! வாஸ்தவத்தில் தேசத்தில் திருப்தியும் ஆத்யாத்மிகமான அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமானால், ஜனங்களுக்கு இடையில் பொறாமையும் போட்டிகளும் போகவேண்டுமானால், 'வாழ்க்கைத் தரம்' என்று சொல்வதைக் குறைப்பதற்குத் தான் திட்டம் போடவேண்டும். ஆனால் வாழ்க்கைத் தரத்தை மேல் நாடுகளின் தரத்துக்கு உயர்த்தியே தீரவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு வேண்டாத வஸ்துக்களை அத்யாவசியத் தேவையாக ஆக்குவதற்கே ஸர்க்கார் திட்டம், திட்டம் என்று ஓயாமல் போட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக, இந்த தேசத்திலுள்ள எல்லா ஜனங்களின் கடனையும் சேர்த்து வைத்து ஸர்க்காரே ஒன்றுக்கப்புறம் எத்தனையோ ஸைஃபர்கள் போடுகிற தொகை லோகம் பூராவும் கடன்பட்டிருக்கிறது. வேண்டாத வஸ்துக்களில் ஜனங்களுக்கு அபிருசியை உண்டாக்கி விட்டு, அதனாலேயே அவர்களை சம்பள உயர்வுக்காக எப்போது பார்த்தாலும் சண்டை, ஸ்டிரைக் என்று இறங்குவதற்குத் தூண்டிக்கொண்டிருக்கிறது. 'திட்டம்' என்ற பெயரில் திட்டமில்லாமல் செய்கிற காரியத்தால் ஏற்பட்டிருக்கிற inflation -ல் [பணவீக்கத்தில்] என்ன [வருமானம்] வந்தாலும் போதமாட்டேனென்கிறது. ஜனங்கள் கடனாளியாக வேண்டியிருக்கிறது. இதற்கு ஸர்க்காரே 'இன்ஸென்டிவ்' தருவதாக இருக்கிறது! ஜனங்களைக் கடன் வாங்குவதற்கு நன்றாகப் பழக்கி வைக்கிற ரீதியில் கிராமத்துக்கு கிராமம் பாங்குகள் திறந்து அநேக ஜனங்களுக்கு 'லோன்' கொடுக்கிறது. இதனாலே எத்தனையோ பொய், மோசடி, கரப்ஷன், பாங்கு சொல்கிற இனத்துக்காக் கடன் வாங்குவதாகச் சொல்லிக்கொண்டு அதை வேறு காரியங்களுக்குப் பிரயோஜனப்படுத்துவது, அதற்காக inspection staff -க்கு 'அழுவது' முதலில் பல பேர் மனுப்போடும் போட்டியில் 'லோன்' வாங்குவதற்கே அதிகாரிகளுக்கு 'நைவேத்யம் பண்ணுவது' என்றெல்லாம் ரொம்பக் குழறுபடியாகப் போய்க்கொண்டிருக்கிறது. அப்புறம் கடனைத் திருப்பி வசூலிப்பதும் கஷ்டமாகிறது. கட்டாயப்படுத்தி வாங்கினால் 'வோட்' போய்விடப் போகிறதே என்ற பயத்தில் கடனை write off பண்ணி விடுகிறார்கள்! சொந்தப் பணமா என்ன, ஜனங்கள் வரி முதலானவைகளைக் கொடுத்துதானே என்பதால் ஸுலபமாகக் கடனை வஜா செய்துவிட்டு நல்ல பெயரும், வோட்டும் ஸம்பாதிக்கப் பார்க்கிறார்கள். அதோடு போகவில்லை.

சொந்தப் பணத்தைக் கடனாகக் கொடுத்தவன் அல்லது குத்தகைப் பணம் பெற வேண்டியவன் முதலியவர்களெல்லாருங்கூடத் தங்கள் பணத்தை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும் என்பதாக அவர்களை வயிறெரிய வைத்து, 'மொரடோரியம்' என்று 'ஆர்டினன்ஸ்' போட்டு விடுகிறார்கள்.

ஏழைகளுக்கு வாஸ்தவமாக நன்மை பண்ணுவதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் பொதுவாக அடக்கப் பண்பும் எளிமையும் உள்ள நம் ஏழை ஜனங்களை வீண் டாம்பீகத்திலும், பலவிதமான பொய் பித்தாலாட்டங்களிலும் தூண்டிவிட்டு, 'பட்ட கடனைத் தீர்க்கத்தான் வேண்டும் என்ற பெரிய தர்மத்துக்கு விரோதமாக நாம் போனாலும் ஸர்க்கார் நமக்குத்தான் ஆதரவாக இருக்கும்'என்று துணிச்சல் கொள்ள வைப்பது நன்மை இல்லவே இல்லை; தீமைதான். 'வோட்டுப் பெட்டி பலம் நமக்குத் தானிருக்கிறது' என்று அவர்களை எண்ண வைத்து, அதற்காக தர்ம பலத்தையும் தெய்வ பலத்தையும் அவர்கள் இழக்கும்படிச் செய்வது அவர்களுக்குச் செய்கிற தீமைதான்.

கடன் கொடுத்தவன் எப்படியெல்லாம் கடின சித்தனாகிக் கொடுமை பண்ணுகிறான் எனபதும் எனக்குத் தெரியாமலில்லை. அநியாய வட்டி வாங்குவது, எத்தனை திருப்பினாலும் அசலில் கழித்துக் கொள்ளாமல் வட்டியிலேயே கழித்துக் கொள்வது என்று அவர்களும் அநேக அக்ரமங்கள் பண்ணத்தான் பண்ணுகிறார்கள்.

கடன் வாங்குவது என்ற தப்பை ஒருவன் பண்ணுவதால்தான் இப்படி இன்னொருத்தன் (கடன் கொடுப்பவன்) பாவம் செய்பவனாக ஆகிறான். கடைசியில் ஸர்க்கார் அவனுக்கு நாமம் போடுகிறபோது அவனும் கஷ்டப்படுகிறான்.

ஆதலால், அடிமுதலில் எவனானாலும் கடன் என்றே போகாமல் தன் வருவாயில்தான் காலம் தள்ளுவது என்று ஆக்கிக்கொள்ள வேண்டும்.

கடன் கஸ்தியால்தான் அநேகர் திருடர்களாவது போலி ஸந்நியாஸிகளாகி ஊரை ஏமாற்றுவது. மானஸ்தர்களில் பலர் குடும்பத்தோடு பிராணஹானி

பண்ணிக் கொள்வதாகவும் அவ்வப்போது பேப்பரில் பார்க்கும்போது மனஸ் வேதனைப்படுகிறது.

முன்னயே சொன்ன மாதிரி கடன் கொடுத்தவன், கடன் பட்டவன் என்ற இரண்டு பேர் மட்டுமில்லாமல் ஊரார் எல்லாருமே ஒருவன் கடனாளி என்றால் "அவன் எங்கே நம்மை உபத்ரவம் பண்ண வருவானோ?" என்று ஓடும்படியிருக்கிறது.

கடன் பழக்கத்தினால் இப்படி லோகம் முழுக்க சிரமங்கள் ஏற்படுவதால்தான், இந்த லோகத்திலேயே அதுதான் பெரிய தீட்டு என்று ஆசார்யாள் தீர்ப்புப் பண்ணிவிட்டார். பரோபகாரம் என்பதைச் சொல்லும்போது, உபகாரம் பண்ணாவிட்டாலும் பர அபகாரம் எப்படியெப்படிப் பண்ணாமலிருக்க வேண்டும் என்றும் சொல்ல வேண்டுமல்லவா? Ten Commandments [கிறிஸ்தவர்களின் பத்துக் கட்டளைகள்] கூட எல்லாமே negative -ஆகத்தானே (இன்னின்னவற்றை செய்ய வேண்டும் என்பதற்குப் பதில் கூடாது என்பதாகத்தானே) இருக்கின்றன! வைதிகமான ஸாமான்ய தர்மங்களிலுள்ள அஸ்தேயம் (திருடாமை) , யோக சாஸ்திரத்திலுள்ள அபரிக்ரஹம் (பொருள் சேர்த்துக்கொள்ளாமை) என்பதாக 'நெகடிவ்'ஆக உள்ள இரண்டுமே பரோபகாரத்துக்கு அங்கம்தான். இந்த இரண்டையும் பின்பற்றினால் கருமித்தனம், ஊதாரித்தனம், கடன் வாங்குவது எல்லாமே போய்விடும்.

6.3-பரோபகாரமே ஒரு "கடன்"

இப்போது நான் விசித்ரமாக ஒன்று சொல்லப்போகிறேன். பரோபகாரம் பண்ண வேண்டுமென்பதே நமக்கு உண்டான ஒரு 'கடன்'தான்! பிதிர்கடன் என்கிறோம். சாஸ்திரத்திலேயே 'ருண த்ரயம்' என்று மூன்று கடன்களைச் சொல்லியிருக்கிறது. பிராம்மண ஜன்மா எடுத்தவன் ரிஷிகளிடமும், தேவர்களிடமும், பித்ருக்களிடமும் கடன்பட்டிருக்கிறானென்றும் வேதாத்யனத்தால் ரிஷிக் கடன் தீர்கிறதென்றும், புத்ர ஸந்ததி உண்டுபண்ணுவதால் பிதிர் கடன் தீர்கிறதென்றும் சொல்லியிருக்கிறது. வேத சாஸ்திரங்களிலேயே சொன்ன பஞ்ச மஹா யஜ்ஞங்களில் ***'ந்ரு யஜ்யம்'***

என்பதாக மற்ற மனிதர்களுக்குப் பண்ணவேண்டியதும், `பூத யஜ்ஞம்' என்பதாக எல்லா உயிரினங்களுக்குமே பண்ண வேண்டியதும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதனால், மநுஷ்யர்கள் மிருகங்கள் பக்ஷிகள் எல்லாவற்றுக்கும் நாம் ஆற்ற வேண்டிய பரோபகாரத்தையும் 'கடன்' என்றே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நாமாக ஒருத்தனுக்கு தானம் பண்ணாமல் இருக்கலாம். எவனோ கடன் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்லலாம். "கொடுத்தா வைத்திருக்கிறீர்? என் பணம். கொடுப்பதும் கொடுக்காததும் என் இஷ்டம்" என்று சொல்லலாம். ஆனால் நாம் கடன் பட்டிருக்கும் போது கடன் கொடுத்தவன் திருப்பிக் கேட்டால் இப்படிச் சொல்ல முடியுமா? முடிகிறதோ இல்லையோ எப்பாடு பட்டாவது அவனுக்குக் கொடுத்துத் தீர்க்கத்தானே வேண்டும்? இப்படித்தான் நாம் கடன் பட்டிருப்பவர்களுக்காக வேதம் பஞ்ச மஹா யஜ்ஞங்களை விதித்திருக்கிறது. கடன் என்றால் திருப்பித்தானே ஆகவேண்டும்? ஆகவே இதைச் செய்யமாட்டேன் என்று சொல்ல நமக்கு 'ரைட்'டே கிடையாது. நம் போன்ற மநுஷ்யர்களுக்கும், பசு பக்ஷிகளுக்கும் உபகாரம் என்ற ரூபத்தில் யஜ்ஞம் செய்து அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டியது நம் கடமை. 'கடன்' என்பதிலிருந்தே 'கடமை' என்பது வந்திருக்கிறது. ஈஸ்வரன் இந்தப் பிரபஞ்சத்திலே ஒரு ஜீவனைப் பிறப்பித்து, அந்தப் பிரபஞ்சத்தால் அவன் பலவிதமான ஸௌக்கியங்களை அடைய வேண்டுமென்று வைத்திருக்கிறபோதே அதைச் சேர்ந்த எல்லா வகை ஜீவ இனங்களுக்கும் - பூச்சி பொட்டிலிருந்து ஆரம்பித்து தேவ, ரிஷிகள் வரைக்கும் - தன்னலான தொண்டை அவன் செய்ய வேண்டும் என்று வேதத்தின் மூலம் ஆர்டர் போட்டிருக்கிறான். ஆதலால் இதைக் கடனாக, கடமையாகச் செய்தேயாக வேண்டும். 'கடனே' என்று செய்யாமல் அன்பைக் கலந்து, உபகாரத்துக்குப் பாத்திரமாகிற எல்லாரையும் அந்த ஈஸ்வர ஸ்வரூபாகவே பாவித்து அடக்கத்தோடு பணி செய்ய வேண்டும்.

6.4-தனக்கு மிஞ்சி

இந்த உணர்ச்சி வந்து விட்டால் - பரோபகாரம் என்பது ஈஸ்வரனின் கட்டளையான கடன் என்று புரிந்து கொண்டு விட்டால் - நாம் எத்தனை கஷ்ட தசையிலிருந்தாலும் பரோபகாரத்தை விட்டுவிடாமல் செய்வோம். ”தனக்கு மிஞ்சி தர்மம் என்றுதானே சொல்லியிருக்கு? நீயே ச்ரம தசையிலிருக்கிறபோது மற்றவர்களுக்காக வேறு ஏன் ச்ரமப்படுகிறாய்?” என்று கேட்கத்தான் கேட்பார்கள். அப்போது, ”நான் ச்ரம தசையில் இருக்கிறேன் என்றால் பூர்வ ஜன்மாவில் ஈஸ்வராக்ஞைகளை ஸரியாகப் பண்ணாததற்கு இது தண்டனை என்றே அர்த்தம். போன ஜன்மத்தில் நான் பிறத்தியாருக்கு எந்த உபகாரமும், தொண்டும் பண்ணாததால் இப்போது கஷ்டப்படுகிறேன். அதனாலேயே இப்போதுதான் நிச்சயமாக நான் பரோபகாரம் செய்தாக வேண்டும். தனக்கு மிஞ்சி - போன ஜன்மாவின் [கர்ம] பாக்கியாக, அப்போதைய உடம்பு போன பிறகும் மிஞ்சி - இப்போது வந்து சேர்ந்திருக்கும் இந்தக் கஷ்டம்தான், ‘தனக்கு மிஞ்சி’. இது தீருவதற்காகவே தர்மம் செய்தாக வேண்டும். அதுதான் ‘தனக்கு மிஞ்சி தர்மம்’. நீர் அதற்கு வேறேதோ தப்பர்த்தம் பண்ணிக் கொண்டிருக்கிறீர். இப்போது நான் தன்னையும் மிஞ்சி - அதாவது என் சொந்தக் கஷ்டத்தையும் மிஞ்சி - தர்மம் பண்ணினால்தான் வருங்காலத்திலாவது நன்றாயிருப்பேன்” என்று பதில் சொல்ல வேண்டும்.

எத்தனையோ கஷ்டத்திலும் இளையான்குடிமாற நாயனாரைப் போலப் பரோபகாரம் பண்ணினவர்களின் ஞாபகம் நமக்குப் போகக்கூடாது.

தான் எத்தனை கஷ்டப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் அதற்கு மேம்பட்டு வெளியிலே வருவதுதான் தனக்கு மிஞ்சுவது. இப்படி வந்து லோகத்துக்கு உபகரிப்பதுதான் ”தனக்கு மிஞ்சி தர்மம்” என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

இது ரொம்ப ஹை லெவலில் [உயர் மட்டத்தில்]. லோயர் லெவலில் [அதற்கு கீழ்ப்பட்ட நிலையில்] பிறருக்கு திரவிய ஸஹாயம் செய்வதற்காகவே தான் மிச்சம் பிடிக்கும் விதத்தில் வரவுக்குள் செலவை அடக்கி, கடன் கஸ்தி இல்லாமல் சிக்கனமாக வாழவேண்டும்.

6.5-சேமிப்புக்கு வழி

சோற்றுச் செலவைவிட ஜாஸ்தியாகும் காபியை நிறுத்துவது; பட்டுத் துணி வேண்டாம் என்று விடுவது; ஸ்வயம்பாக நியமத்தால் (தன் சாப்பாட்டைத் தன் கையாலேயே சமைத்துச் சாப்பிடுவது என்ற நெறியால்) ஹோட்டல் செலவை அடியோடு குறைப்பது; ஸினிமாவுக்குப் போவதை நிறுத்துவது என்ற இந்த நாலை மட்டும் செய்து விட்டால் போதும். எவனும் கடன் கஸ்திப்படாமலிருப்பதோடு, பிறத்தியாருக்கும் திரவிய ரூபத்தில் ஏதோ கொஞ்சமாவது உபகரிக்க முடியும். இதெல்லாம் ஒரு குடும்பத்தில் தினப்படி ஸமாசாரங்கள். இவற்றோடு ஸமூஹ ப்ரச்னையாகிவிட்ட வரதக்ஷிணையையும், ஆடம்பரக் கல்யாணத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். வரதக்ஷிணை இல்லை, கல்யாணத்துக்காக ஆயிரம் பதினாயிரம் என்று செலவழிப்பதில்லை என்றால் எந்தக் குடும்பத்திலும் பணமுடை, கடன் உபத்ரவம் ஏற்படவே ஏற்படாது. பொதுப் பணிகளுக்கு உதவ ஸம்ருத்தியாகக் கிடைக்கும்.

எது இன்றியமையாதது, எதெது இல்லா விட்டாலும் வாழ்க்கை நடத்த முடியும்; எதெதுகள் இல்லாமலும் நம் அப்பன் பாட்டனெல்லாரும் ஸந்தோஷமாகவே வாழ்ந்தார்கள் என்று ஆலோசித்துப் பார்த்துத் தேவைகளைக் குறைத்துக் கொண்டு வாழவேண்டும். முதலில் சிரமமாக இருக்கும். சபலங்கள் இழுத்துக்கொண்டு தான் இருக்கும். இருந்தாலும் தாயான அம்பாளை வேண்டிக்கொண்டு, அநுக்ரஹ பலத்தில் தேறித் தெளிந்து ஜயிக்க வேண்டும். அப்புறம் தெரியும், அந்த எளிய வாழ்க்கையில்தான் எத்தனை நிம்மதி இருக்கிறதென்று!போக்ய வஸ்துக்களைத் தேவை தேவை என்று சேர்த்துக் கொண்டே போனால் அப்புறம் வீடு பெரிசாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனால் வாடகைச் செலவு ஏறுகிறது. இப்படி ஒன்றிலிருந்து ஒன்றாக நமக்கே வருமானம் போதாமல் ஆக்கிக்கொண்டால் பரோபகாரம் பண்ணி நம் கர்மாவைக் கழுவிக் கொள்வதெப்படி? அநாவசியங்களை எல்லாம் கழித்துக் கட்டிவிட்டால் நமக்கும் நிம்மதியாக, பிறருக்கும் உதவியாக ஜன்மாவை உயர்த்திக் கொள்ளலாம். அம்பாள் தாயாக,

அந்த ஒரே தாயாருக்கு நாம் அத்தனை பேரும் குழந்தைகளாக, ஒரு குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் இருந்தால் அவை ஒட்டிக் கொண்டு இருக்கிறாற்போல், ஒருத்தருக்கொருத்தர் உபகாரம் பண்ணிக்கொண்டு வாழலாம். இந்த உபகாரம்தான் என்று generalise பண்ணவேண்டியதில்லை; அவாவாள் ஸ்திதியில் எது ஸாத்யமோ அந்த உபகாரத்தைச் செய்து கொண்டு ஆனந்தமாக வாழலாம்.

7-ஆசாரம்

7.1-வஜ்ரம் பாய்ந்த விருக்ஷம்

பூர்விகர்கள் ஒழுகிய வழியில் போவதற்கே 'ஆசாரம்' என்று பெயர். ஆசார-வ்யவஹாரங்கள் என்று சொல்வதுண்டு. வ்யவஹாரம் என்பது நிகழ்கால நடப்பாக மட்டும் இருப்பது. ஆசாரம் என்பது பூர்வத்தில் நெடுங்காலமாக நம் முன்னோர்கள் தங்கள் நன்னடத்தைக்கு ஆதாரமாக என்ன செய்தார்களோ அது. அதற்கு நீண்ட காலம் நிலைத்து நின்றதால், நெடுங்கால மரத்தில் உண்டாகிற வஜ்ரம் போன்ற உறுதி உண்டு. அந்த உறுதியான அஸ்திவாரத்தின் மேல் நாமும் நம் வாழ்முறையை எழுப்பிக்கொண்டால்தான் நமது வாழ்க்கை ஸ்திரமாக இருக்கும்.

நம் பூர்விகர்கள் எப்படிப்பட்ட நெறிகளைக் கைக் கொண்டிருந்தார்களென்றால், நம் சாஸ்திரங்களிலும் ஸம்பிரதாயங்களிலும் என்னென்ன உண்டோ அவற்றைத் தான். அவற்றை அவர்கள் அநுஷ்டித்த சிறப்பினால்தான் நம் தேசமே தொன்றுதொட்டுப் பாரமார்த்திகத்திலும், ஞானத்திலும், பக்தியிலும், அது மட்டுமின்றி எல்லாக் கலைகளிலுங்கூட லோகத்திலேயே முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. இன்றைக்கு நாம் இவ்வளவு சீரழிந்துவிட்ட பிறகுங்கூட நாம்தான் ஆத்யாத்மிகத்தில் தங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று மற்ற தேசத்தவர்கள், மற்ற மதஸ்தர்கள் இங்கே உள்ள ஆச்ரமங்களுக்குக் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது பூர்வாசாரம் 'பெடல்' பண்ணிவிட்ட வேகத்தின் எஞ்சிய பலத்தால்தான்!

இந்த ஆசாரங்களில் பெரும்பாலானவற்றை விட்டுவிட வேண்டுமென்றுதான் ஸமீப காலமாக, ஓரிரு நூற்றாண்டாக, நம் நாட்டில் சீர்திருத்தக்காரர்கள் சொல்லி வருகிறார்கள். ஒவ்வொரு சீர்திருத்தக்காரரும் வரும்போது, நம்முடைய மதம் என்னும் வயலில் இதுதான் களை, இதை எடுத்துவிட்டால் போதும், பயிர் நன்றாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இப்படி அவரவருக்குத் தோன்றுகிறபடி ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டுக் கொண்டேயிருந்தால் பயிர் என்றே ஒன்றும் மிஞ்சாது! ஆனதால் நம்மைவிட அறிவிலும், அருளிலும், அநுக்ரஹ சக்தியிலும் எவ்வளவோ மேல் நிலையிலுள்ள ரிஷிகள் தர்ம சாஸ்திரங்களில் என்னென்ன சொல்லியிருக்கிறார்களோ அவற்றைப் பூர்ணமாக அநுஸரிப்பதற்குத்தான் நாம் ப்ரயத்தனப்பட வேண்டும். அதற்கான மன உறுதியைத் தரும்படி பகவானிடம் பிரார்த்திக்க வேண்டும்.

இன்னொன்று யோசித்துப் பார்க்க வேண்டும். இத்தனை சீர்திருத்தத் தலைவர்கள் வந்து இவ்வளவு சீர்திருத்த இயக்கங்களை ஆரம்பித்தும் இவற்றிலிருந்து நாம் மஹானாக ஞானியாக எத்தனை பேரைப் பெறமுடிந்திருக்கிறது? யாரை வேண்டுமானாலும் ரிஷி, அவதாரம், Messenger of God என்று சொல்லிவிடலாம். ஆனால் வாஸ்தவத்தில் ஜனங்களின் தாபத்தை சமனம் செய்கிற அநுக்ரஹ சக்தி இவர்களுக்கு இருக்கிறதா என்பதே கேள்வி. ஸம்பிரதாயமாக வருகிற குரு உபதேசத்தால் இப்போதும் பலபேர் பெற்று வருகிற அநுக்ரஹமும் ஸ்வாநுபூதியும் இந்த reform-காரர்களிடமிருந்து வருமா? நேற்றைக்கொன்று, இன்றைக்கொன்று என்று சொல்லிக் கொண்டிருக்கும் இவர்களுக்காக tradition என்ற வஜ்ரம் பாய்ந்த ஸம்பிரதாய விருக்ஷத்தை வெட்டி விடுவதா? இப்படி நான் கேட்கவில்லை. பத்துப் பன்னிரண்டு வெள்ளைக்காரர்களே - அவர்கள் ஆத்ம ஸம்பந்தமாக நிறையப் படித்து ரொம்பவும் ஸாதனைகளும் செய்தவர்கள் - என்னிடம் வந்து இப்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். "Tradition என்கிற சாஸ்திர மரபு, அதன்படியே சொந்த வாழ்க்கையை நடத்தினதால் பரிசுத்தி பெற்ற குருமார்கள், அப்படிப்பட்டவர்களின் அநுபவத்தில் ஊறிப் பக்குவமாகி வருகிற உபதேசம் தீக்ஷை முதலானவை, இவை சிஷ்யனுக்குள்ளேயும் போய்

அவனை சுத்தி பண்ணுவது - என்றிப்படியில்லாமல் ஆத்மாநுபவம் எப்படி வர முடியும்? எத்தனையோ மதங்கள், reform-கள் வந்துவிட்டாலும் பூர்வாசாரத்தில் ஊறிய ஆசார்யர்களைப் பின்பற்றா விட்டால் ஆத்மாபிவிருத்தி என்பது மிகவும் துர்லபமாகத் தானே இருக்கிறது?" என்று அவர்கள் கேட்டார்கள்.

அநுபவிகளுக்குள்ளேயே வித்யாஸம் உண்டுதான். அதனால்தான் அநேகமாகப் பெரிய மத ஸ்தாபகர்கள் எல்லாரும் அநுபவிகளாயிருந்தாலும் ஸமயாசாரங்கள் வித்யாஸப்படுகின்றன. ஆனாலும் எவனொருவன் எங்கே பிறந்திருந்தாலும் அந்த மதத்துக்கான ஆசாரங்களைப் பின்பற்றினால் அவனுடைய ஆத்மா கடைத்தேறிவிடும். ஆத்மா கடைத்தேறச் சீர்திருத்தக்காரர்களை நம்பிப் பிரயோஜனம் இல்லை. அநேகமாக இந்த reformer-கள் ஸமத்வம், அது, இது என்று சொல்லி, இந்த லோக வாழ்க்கையில் எல்லோருக்கும் பெருமையான ஸ்தானம் வாங்கித் தருபவர்களாயிருக்கிறார்களே தவிர, ஆத்ம லோகத்தில் இவர்களால் ஒன்றும் ப்ரயோஜனமில்லை என்பதுதான் அந்த வெள்ளைக்காரர்கள் கட்சி.

எனக்கு எந்தக் கட்சியும் கிடையாது. ஒரு ஜட்ஜை எந்தக் கட்சி என்று கேட்டால் என்ன சொல்வது? 'லா'வை (சட்ட புத்தகத்தை) ப் பார்த்து, சொந்த அபிப்ராயமில்லாமல், அதன் பிரகாரம் சொல்லத்தான் ஜட்ஜ் இருக்கிறார். 'எடர்னல் லா' (ஸநாதன தர்மம்) என்கிற சாஸ்திரங்களைப் பார்த்து அதிலிருப்பதைச் சொல்லவும், என்னால் முடிந்தமட்டும் அப்படிச் சொல்லியிருப்பதன் பிரகாரமே நடக்கப் பிரயத்னப்படவுந்தான் நான் இருக்கிறேன். அந்த சாஸ்திரங்களில் சொல்லியுள்ள ஆசாரங்களின்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியதுதான் ஆசார்யாளின் சின்னப் பிரதிநிதியாக இருக்கிற என் பொறுப்பு. நான் சொல்வது உங்களுக்கு ஏறுவதும் ஏறாததும் நானே அந்த சாஸ்திரப்படி எவ்வளவுக்குச் செய்கிறானோ, செய்யவில்லையோ அதைப் பொறுத்ததுதான். எனக்கு அநுஷ்டான சக்தி இருந்தால் தான் என் சொல்லுக்கு அதன்படி சாஸ்திர ரீதியாக உங்களை நடக்கப் பண்ணுவிக்கிற சக்தி இருக்கும்.

வெவ்வேறு மதங்களுக்கிடையிலேதான் ஆசாரங்களில் வித்யாஸம் இருக்கிறதென்றில்லை. ஒரு மதத்திலேயேகூட பல கிளை ஸம்பிரதாயங்கள் உண்டாகி மாறுபட்ட ஆசாரங்கள் இருக்கின்றன. பௌத்தத்திலேயே ஹீனயானம், மஹாயானம், Zen என்றெல்லாம் வெவ்வேறு ஆசாரங்கள் இருக்கின்றன. கிறிஸ்டியானிடியில் காதலிக், ப்ராடெஸ்டென்ட், க்ரீக் சர்ச் என்று இருக்கின்றன. இஸ்லாத்தில் ஸியா, ஸுன்னி, அஹமதீயா என்று மூன்று பிரிவு உண்டு. ஹிந்து மதத்திலும் சைவம், வைஷ்ணவம், வைதிகம், தாந்த்ரிகம் என்றெல்லாம் பல இருக்கின்றன.

தேச வித்யாஸத்தாலும் ஆசார வித்யாஸம் ஏற்படுவதுண்டு. நம் தேசத்திலேயே வடக்கே குளிர்காலத்தில் ஜலமெல்லாம் ஐஸாகப் போகிற ஊர்கள் இருக்கின்றன. அதனால் அங்கே பண்டா சட்டை போட்டுக்கொண்டே பூஜை பண்ணுவான். அங்கங்கே கிடைக்கும் தான்யாதிகளைப் பொருத்து நைவேத்யம், போஜன ஆசாரம் முதலியன கொஞ்சம் மாறும்.

7.2-பிறந்த குலாசாரமே உய்நெறி

தெல்லாம் எப்படியானாலும் ஸரி, எந்த இடத்தில் எந்த மதத்தில், கிளை மதத்தில், ஒருவன் பிறந்திருந்தாலும் அந்த இடத்திலிருந்த அந்த மதத்து, கிளை மதத்து, பூர்விகப் பெரியவர்கள் எப்படிப்பட்ட வாழ்முறையை, வாழ்க்கை நெறியை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்களோ, அதுவே தனக்கான ஆசாரம் எனக் கொண்டு பின்பற்றவேண்டும். இப்படி அவனவனும் தன்னுடைய மூதாதைகள் போன வழியில்தான் போக வேண்டும்; இல்லாவிட்டால் அவன் பதிதனாகிவிடுகிறான் என்று சொல்லியிருக்கிறது.

சிகாம் ஸூத்ரம் ச புண்ட்ரம் ச ஸமயாசாரமேவ ச |
பூர்வைராசரித: குர்யாத் அந்யதா பதிதோ பவேத் ||

சிகாம்: சிகை எப்படியிருக்க வேண்டும்? துருக்கர்கள் மொட்டை அடித்துக் கொள்கிறார்கள். ஸிக்கியர்கள் முடி, தாடி வளர்க்கிறார்கள். கிறிஸ்தவர்கள் க்ராப் பண்ணிக் கொள்கிறார்கள். ஹிந்துக்கள் குடுமி வைத்துக்கொள்வது சாஸ்திரத்தில் மந்த்ர பூர்வமாகச் சொல்லியுள்ள ஒரு சடங்கு. இதிலும் பல

வித்யாஸம். சோழியன், நம்பூதிரி, சிதம்பரம் தீக்ஷிதர்கள், மற்றவர்கள் ஆகியோருக்குள் குடுமியை முடிந்துகொள்வதில் வித்யாஸங்கள் இருக்கின்றன. சிலர் ஊர்த்வ சிகை என்பதாக உச்சியில் முடிந்துகொள்கிறார்கள். சிலர் பூர்வ சிகை என்று தலைக்கு முன்பக்கமாக முடிந்து கொள்கிறார்கள். "இவற்றில் நீ பிறந்த மரபிலே எப்படி சிகை வைத்துக் கொண்டார்களோ அப்படியே நீயும் பண்ணு" என்று சாஸ்திரம் சொல்கிறது.

சிகைக்கு அப்புறம் 'ஸூத்ரம்' என்றது பூணூலை அல்ல. ஏனென்றால் பூணூல் விஷயத்தில் அத்தனை குலசாரங்களுக்கும் ஒரே விதிதான். என்னென்ன அநுஷ்டானம் செய்ய வேண்டுமென்று விரிவாக codify செய்து ஆச்வலாயன ஸூத்ரம், ஆபஸ்தம்ப ஸூத்ரம், போதாயன ஸூத்ரம் என்றெல்லாந்தான் வெவ்வேறு பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் நாம் பிறந்த குடும்பத்தாருக்கு எது ஸூத்ரமோ அதில் சொல்லியிருப்பவற்றையே எடுத்துக் கொள்ளவேண்டும்.

'புண்ட்ரம்' என்று சொன்னது நெற்றிக்கு இட்டுக் கொள்வதை. விபூதி, கோபி சந்தனம், நாமம், கரிப்பொட்டு, இவற்றிலும் வெவ்வேறு வகைகள் என்று இருப்பதில் குலாசாரப்படி இட்டுக்கொள்ள வேண்டும்.

'ஸமயாசாரம்' என்பது மதாநுஷ்டானம். ஹிந்து மதத்துக்குள் உள்ள அநேக ஸம்பிரதாயங்களுக்குள் நீ பிறந்திருக்கிற குடும்பம் எதைச் சேர்ந்ததோ அதற்கான ஆசாரத்தையே பின்பற்று. இந்த தேசத்தில், இந்த ஊரில், இந்தக் குடும்பத்தில் நீ பிறந்திருக்கிறாயென்றால் இது தற்செயலாக (accidental-ஆக) நேர்ந்ததில்லை; உன் பூர்வ கர்மாவைப் பார்த்து, அதை அநுபவிக்கும்போதே நீ தர்ம ரீதியாகப் போனால் எதனால் உனக்கு ஆத்மாபிவிருத்தி ஏற்பட முடியும் என்று திட்டம் பண்ணி ஈஸ்வரனேதான் உன்னை இந்தக் குடும்பத்தில் பிறக்க வைத்திருக்கிறார். அதனால் அதன் ஸமயாசாரத்தையே நீ அநுஷ்டி.

"பூர்வை: ஆசரித: குர்யாத்" என்றால் "உன்னுடைய பூர்விகர்கள் எப்படிப் பண்ணினார்களோ, அப்படியே நீயும் பண்ணு" என்று அர்த்தம். அதாவது முன்னே சொன்ன சிகை, ஸூத்ரம், புண்ட்ரம், ஸமயாசாரம் எல்லாவற்றிலும்

உன் மூதாதைகள் கடைப்பிடித்த ஆசாரங்களையே நீயும் கைக்கொள்ளு என்று அர்த்தம்.

அந்யதா பதிதோ பவேத்

இப்படிச் செய்யாமல், அதாவது தன் குலமுன்னோர் வழக்கைப் பின்பற்றாமல், வேறு மார்க்கத்தில் போனால் வேறுவித வாழ்க்கை முறைகளையும் வெளி அடையாளங்களையும் மேற்கொண்டால், அதாவது தன் மதத்திலிருந்தும் கிளை ஸம்பிரதாயத்திலுருந்தும் வேறொன்றுக்குப் போனால் அப்படிச் செய்கிறவன் பதிதன் ஆகிவிடுவான் என்று சொல்லியிருக்கிறது.

பதனம் என்றால் விழுவது. பதிதன் என்றால் 'விழுந்தவன்' என்று அர்த்தம். அதாவது ஸன்மார்க்கத்தில் நடந்து போகாமல், அதோகதியில் விழுந்து விட்டவன் என்று அர்த்தம். பாதிவ்ரத்யத்தில் (கற்பு நெறியில்) தப்பாகப் போனவர்களைப் பதிதை என்பார்கள். அதைத்தான் சறுக்கிக்கொண்டு விழுந்தவள் என்ற அர்த்தத்தில் 'சறுக்கி', `சிறுக்கி' என்பது. "வழுக்கி விழுந்தவர்கள்" என்று நவீன எழுத்தாளர்கள் சொல்கிறார்கள். இவள் புருஷனுக்கு த்ரஹோம் செய்கிற மாதிரி ஈஸ்வரனுக்கு, பரமபுருஷனுக்கு த்ரோஹம் செய்து கீழ்லோகத்துக்கும், இப்போதைவிட ரொம்ப ஹீன ஜன்மாவுக்கும் விழுந்துவிடுகிறவன்தான் பதிதன். பூர்விகர்களின் ஆசாரப்படி செய்யாதவன் இப்படிப்பட்ட பதிதன் ஆகிவிடுகிறான். லௌகிகத்திலும் பல தினுஸில் கஷ்டப்பட்டுக்கொண்டு, ஆத்மாவையும் உசத்திக்கொள்ள முடியாத கஷ்ட ஜீவனமாகவே அவனுடைய வாழ்க்கை இருக்கும்.

பகவான் நம்மை ஏதோ ஒரு இடத்தில் ஒரு ஸமூஹ தர்மத்தில், குலாசாரத்தில் பிறப்பித்திருக்கிறான். என்ன அர்த்தம்? புருஷனை அநுஸரித்துப் பத்தினி கடைத்தேற வேண்டுமென்பதுபோல், ஜீவன் இவ்வாறு தனக்குப் பிறப்பால் எந்த சாஸ்திரமும் ஸம்பிரதாயமும் ஏற்பட்டிருக்கிறதோ அதை அநுஸரித்து ச்ரேயஸ் அடைய வேண்டுமென்றுதான் அர்த்தம். "மாட்டேன்; இந்த ஆசாரப்படி செய்ய முடியாது" என்றால் அது பதியைத் திரஸ்காரம் பண்ணுவது போன்ற பெரிய தோஷந்தான். "இந்த ஸமயாசாரத்தை விட்டு இன்னொன்றுக்குப் போவேன்; வேறே மதத்தில்

சேருவேன்" என்றால் இன்னம் தப்பு. அது பதியை விட்டு விட்டுப் பரபுருஷனிடம் போகிறது போல, அதனால்தான் "பதிதோ பவேத்" என்றது.

இப்படி ஆகாமல் தப்புவதுதான் நமக்கு முக்கியம். சீர்திருத்தவாதி ஏதோ இந்த லோகத்துக்கு, இப்போது நடத்துகிற வாழ்க்கை உயர்வுக்கானவற்றை மட்டும் பார்த்து மதுரமாகச் சொல்கிறாரென்பதால் அதன்படிச் செய்து நரக விஷத்தில் போய் விழக்கூடாது. ஆசாரம் ஒருவனை விழாமல் காப்பது மட்டுமில்லை; அவனை இப்போதைய ஸ்திதியிலிருந்து இன்னமும் தூக்கிவிட்டு ஈஸ்வர ஸந்நிதானத்தில் கொண்டு நிறுத்திவிடும்.

7.3-அநுபவ கனம்

தலைமுறை தலைமுறையாக வந்த அநுபவ weight ஆசாரத்துக்குத்தான் இருக்கிறது.

Tradition (மரபு) என்று ஒன்றை மதித்து அதன்படிச் செய்கிறபோதுதான் நம் மனஸை, இந்திரியங்களை, போக்குகளை, கார்யங்களை ஒரு நெறியில் சீராகக் கட்டுப்படுத்திக் கொண்டு வருகிற discipline-ம் ஏற்படுகிறது. இதுதான் மோக்ஷ த்வாரத்துக்கு முதல் வாசலான 'சித்த சுத்தி' என்பதைத் திறந்துவிடுவது. நன்றாக ஸ்திரப்பட்டுவிட்ட established tradition-ஐ [நன்கு நிலைப்பட்ட மரபை] மதிக்காமல், அதை நம்பாமல், அதில் ஏன் அது இப்படி, இது இப்படி என்று கேள்வி கேட்டுக்கொண்டிருந்தால், கேள்வி கேட்டுக் கொண்டேயிருப்பதோடு முடிந்து போகிறதே தவிர, பதிலாக, இப்போது இருக்கிற ஆசாரங்களை எடுத்து விட்டதற்குப் பதிலாக 'வெயிட்' உள்ள 'டிஸிப்ளின்' எதையும் நிலைநாட்ட முடியவில்லை. காந்தி மாதிரி தன்னளவில் சுத்தராக இருந்துகொண்டு, ஈஸ்வர பக்தியும் பண்ணிக்கொண்டு, பழைய இந்திய வழக்கப்படியே எளிய வாழ்க்கை, தேஹ உழைப்பு இவற்றை மேற்கொண்டு இருந்தவர்களே பழைய ஆசாரங்களில் சிலவற்றை எடுத்துவிட்டு, பழசில் மீதி சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும், புதிதாகத் தாங்களே பண்ணின சீர்த்திருத்தக் கோட்பாடுகளையும் கலந்து தங்கள் ஆச்ரமங்களில் ஏற்பாடு பண்ணி, கண்குத்திப் பாம்பாக நேராகத் தாங்களே

நிர்வாஹத்தைக் கவனித்து வரும் போதுகூட, ஒழுங்குத் தப்பான கார்யங்கள் நடந்து. அதற்காகத் தாங்களே பஹிரங்க கண்டனம் பண்ணிப் பட்டினி கிடக்கும்படியாக ஆகிறது.

7.4-சீர்திருத்தத்தால் கட்டுப்பாட்டுக் குலைவு

என்ன காரணமென்றால், established-ஆக [நன்கு நிலைப்பட்டதாக] உள்ள சாஸ்திர ஆசாரங்களில் கை வைத்துக் கொஞ்சமோ நஞ்சமோ மாற்றிச் 'சீர் திருத்தம்' பண்ணலாம் என்கிற எண்ணம் வந்தவுடனேயே ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்ற அடக்க குணம் போக ஆரம்பித்து விடுகிறது. பழையதான ஒரு ஒழுங்கு முறையை, "இது மநுஷ்ய ஸ்வதந்திரத்தை நெரிக்கிறது" என்று சொல்லி ஒரு சீர்திருத்த தலைவர் மாற்றியவுடனேயே, அவரைச் சேர்ந்தவர்களுக்கு அவரே போடுகிற புது ஒழுக்க நெறிகள் உள்பட எல்லாக் கட்டுப்பாட்டையும் உடைத்து விட்டு மனம் போனபடி ஸ்வந்திரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. ஒரு தலைவர், "பழைய ஆசாரக் கெடுபிடியிலிருந்து உங்களை விடுவிக்கிறேன்" என்று ஸ்வயமாசார்யராக, தாமே தம்மை ஒரு 'ஸேவியராக' [ரக்ஷகராக] ஆக்கிக்கொண்டு உதவ வருகிறாரென்றால், அவரைச் சேர்ந்தவர்கள் கொஞ்ச நாளிலிலேயே, "நீங்கள் பழைய ஆசாரக் கெடுபிடிகளிலிருந்து எங்களுக்கு விடுதலை கொடுத்தீர்களானால், இப்போது நீங்கள் புதிதாகப் போடுகிற கெடுபிடிகளிலிருந்தும் நாங்களே விடுபடுகிறோம்" என்று வெளியே கிளம்பிவிடுகிறார்கள்!

அதனால்தான் எந்தக் கட்டுபாடுமில்லாமல் ஜனங்களை அவிழ்த்துவிட்டிருக்கிற சீர்திருத்த இயக்கங்களைச் சேர்ந்தவர்களைப் போலவே, கட்டுப்பாடுகளை வற்புறுத்தும் சீர்திருத்தத் தலைவரைப் பின்பற்றுகிறவர்களும் கொஞ்ச காலத்திலேயே அவரவர் இஷ்டப்படி செய்பவர்களாகிறார்கள். தேசபக்தி, நேர்மை, ஸ்வதேசியம், த்யாகம் முதலியவற்றை எத்தனையோ கட்டுப்பாட்டோடு காத்து வந்த

ஸ்தாபனத்துக்காரர்கள் இப்போது எப்படியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோமல்லவா?

[7.5-கீதையின் கட்டளை]

இதனால்தான் பகவான் [கீதையில்] பூர்வாசாரத்தில் ஏதேனும் ஒன்றிரண்டு ஸரியில்லாமலிருந்தால்கூட அதில் கைவைத்து, அறியாமை நிலையிலே இருக்கிற பெரும்பாலான ஜனங்களுக்குப் புத்திக் கலகத்தை உண்டுபண்ணவே கூடாது என்று அடித்துச் சொல்லியிருக்கிறார். 'சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி தான் ஸமூஹத் தலைவர்களாக இருக்கப்பட்ட அறிவாளிகள் எல்லாக் காரியமும் செய்யவேண்டும். தங்களுக்கு அந்தக் கார்யங்கள் தேவையில்லை, அதற்கு மேல் ஸ்திதிக்குப் போயாச்சு என்றால்கூட, இப்படித் தாங்கள் சாஸ்திரத்தை மீறிப் பண்ணினால் மற்றவர்களும் கட்டுப்பாட்டை இழந்து புத்தி மாறாட்டத்தில் குழறுபடியாகச் செய்ய ஆரம்பிப்பார்களே என்பதால் தாங்களும் வழிகாட்டிகளாக சாஸ்திர கர்மாக்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்' என்கிறார்.

ந புத்திபேதம் ஜனயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் |
ஜோஷயேத் ஸர்வகர்மானி வித்வான் யுக்தஸ் ஸமாசரன் || [3.26]

"கீதை கீதை" என்று இப்போது எல்லோரும் சொன்னாலும் இது மாதிரியான ஸ்லோகங்களை முழுங்கி விடுகிறார்கள்! இப்படியேதான் இன்னோரிடத்திலும், "எது செய்யலாம் எது செய்யகூடாது என்று வியவஸ்தை பண்ணுவதற்கு உனக்கு சொந்தமாக அதிகாரம் கிடையாது. சாஸ்திரத்தைப் பார். அதுதான் 'அதாரிடி'. அதில் செய் என்று சொன்னதைச் செய்; செய்யாதே என்பதைச் செய்யாதே" என்று ஒரு அத்யாயத்தில் முடிந்த முடிவாகச் சொல்லியிருக்கிறார்.

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ |[16.24]

ரி:பார்ம் செய்பவர்களுக்கு கீதை வேண்டியிருக்கிறது. ஆனால் இம்மாதிரி விஷயங்களை அப்படியே மறைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். அல்லது

இன்னம் ஒருபடி மேலே போய் இதெல்லாம் interpolation (இடைச் செருகல்) என்று சொல்லி விடுவார்கள்!

7.6-சீர்திருத்தத் தலைவர்கள்

ரி∴பார்ம், ரி∴பார்ம் என்று சொல்வதெல்லாம் கடைசியில் அவரவரும் மனஸ் போனபடி, ஒரு டிஸிப்ளினும் இல்லாமலிருக்கலாம் என்று அவிழ்த்து விடுவதில்தான் முடிந்திருக்கிறது. ரி∴பார்ம்களை ஆரம்பித்துவைத்திருக்கிற எல்லா லீடர்களையும் ஒழுங்கு தப்பினவர்கள் என்று சொல்வதற்கில்லைதான். சாஸ்த்ர, ஸம்ப்ரதாய விதிகளாகிற ஒழுங்குகளில் பலதை இவர்களும் விட்டவர்கள்தான் என்பதால் இவர்களை ஸநாதன தர்ம பீடங்களான மட ஸ்தாபனங்களிலிருக்கிற நாங்கள் ஒப்புக் கொள்ளத்தான் இல்லை. என்றாலும் இவர்கள் personal life–ல் [தனி வாழ்க்கையில்] ஸத்யம், நேர்மை, ஒழுக்கம், த்யாகம், அன்பு போன்ற பலவற்றைக் கடைப்பிடித்தவர்கள் என்பதை ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஓரளவுக்குப் படிப்பு, விஷயஞானம் எல்லாம் உள்ளவர்களாகவும், ஜனங்களை நல்லதில் கொண்டு போகவேண்டும் என்பதில் நிஜமான அக்கரை கொண்டவர்களாகவுமே இந்தச் சீர்திருத்தத் தலைவர்களில் பலர் இருந்திருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். ஆனாலும் இவர்கள் பண்ணுகிற பெரிய தப்பு என்னவென்றால் தங்கள் புத்திக்கு ஸரியாகத் தோன்றுவது தான் ஸரி, பாக்கி எல்லாம் தப்பு என்று நினைப்பதுதான். தாங்கள் சுத்தர்கள்தான், விஷயம் தெரிந்தவர்கள்தான் என்றாலும் தர்ம சாஸ்திரங்களை வேத வழிப்பிரகாரம் பண்ணிவைத்த ரிஷிகளும், மநு முதலிய பெரியவர்களும் தங்களைவிடவும் எவ்வளவோ சுத்தர்கள், எவ்வளவோ விஷயம் தெரிந்தவர்கள் என்று உணர்கிற மரியாதை இவர்களுக்கு இல்லை. இன்னொன்று, 'அத்ருஷ்ட பலன்' என்பதாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதை நம்பாமல் வெள்ளைக்காரர்கள் எண்ணப்போக்குப்படி இவர்களும் practial result என்று உடனுக்குடனே லோகத்தில் வெளிப்படையாகத் தெரியும் பலன்களை மட்டுமே கருதிக் கார்யம் செய்வதுதான். யதார்த்தத்துக்கு மேல், யதார்த்தத்துக்குப் பிடிபடாத தெய்வ சக்தி ஒன்று இருக்கிறது. அது அப்போதைக்கப்போது கண்ணுக்குத்

தெரியும்படியாக மட்டும் ரிஸல்டைக் காட்டிவிடுவதில்லை. நம் கார்யங்கள், எண்ணங்கள் இவற்றின் பலன் உடனே இங்கேயே தெரியாமல், ஏதோ காலத்தில், ஏதோ ஜன்மாந்தரத்தில், ஏதோ லோகாந்தரத்தில்கூட விளையும் படியாகத்தான் விஸ்தாரமான அளவிலே லீலை பண்ணிக் கொண்டிருக்கிறது. இப்படி உடனுக்குடனே பலன் தெரியாமல் எப்போதோ விளைய இருப்பதைத்தான் 'அத்ருஷ்ட பலன்' என்பது. இதிலே இந்த ரிஃபார்மர்களுக்கு அநேகமாக நம்பிக்கையே கிடையாது. அவர்களுடைய படிப்பு, பார்வை எல்லாம் வெள்ளைக்காரர்களின் வழியிலேதான் இருக்கிறது. அதனால்தான் லோகத்தில் அநேக வித்யாஸங்கள் இருப்பதெல்லாம் ஜன்மாந்த்ர கர்மாப்படி அவரவரும் ஆத்மாபிவிருத்தி அடைவதற்காக ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்ளாமல், ஸமத்வம், அபேதவாதம் என்று எதையோ சொல்லிக்கொண்டு எல்லாவற்றையும் பலபட்டடையாகப் போட்டுக் குழப்ப வேண்டும் என்கிறார்கள். இப்படியே லோகாந்தரங்களிலும் அத்ருஷ்ட பலன் ஏற்படுவதைப் புரிந்து கொள்ளாததால் தேவதைகளுக்கான யஜ்ஞாதி கர்மாக்கள், பித்ருக்களுக்கான திவஸ தர்ப்பணாதிகள் ஆகியவற்றை வீண்கார்யம், ஸூபர்ஸ்டிஷன் என்று கேலி செய்கிறார்கள். லோகந்த்ர, ஜன்மாந்தரங்களில் பலனைத் தருபவனாக ஈஸ்வரனொருவன் இருக்கிறானென்பதை மறந்து, தாங்களே அதிகாரி, தாங்களே கர்த்தா என்று நினைத்துக்கொண்டு, இவர்கள் விரும்புகிற சீர்திருத்தம் முன்னேற்றம் எல்லாம் தங்கள் வாழ்நாளிலேயே நடந்து பார்த்தாக வேண்டும் –"In my life time"– என்கிறார்கள். இவர்களில் சிலர் கொஞ்சம்கூட அடக்கமில்லா மலிருக்கும்போது ***"தம்ப-மான-மதான்விதா:"*** என்று (கீதையில்) சொல்லியிருப்பது போல[1]த் தாங்களே எதையும் ஸாதித்துவிட முடியும் என்று தற்பெருமையில் மதம்பிடித்து டம்பபாகத் திட்டங்களை போட்டு, 'லோகத்தையே மாற்றிவிடப் போகிறேனாக்கும்' என்று கிளம்புகிறார்கள். இவர்களைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல பகவான்.

"இதமத்ய மயா லப்தம் இமம் ப்ராப்ஸ்யே மநோரதம்" -

"இன்றைக்கு இதை ஸாதித்து விட்டேனாக்கும். இன்னமும் பெரிசாக நாளைக்கு ஸாதிப்பேன்" என்று வெறும் லௌகிகமாகவே எதெதையோ

பண்ணிப் பூரித்துப் போகிறார்கள் என்கிறார்[2]. இப்படியெல்லாம் செய்கிறவர்களிடத்தில் சாஸ்திரப்படி சொல்லப்படும் சௌசம் (தூய்மை, மடி-விழுப்பு பார்ப்பது) இருக்காது, எந்த ஆசாரமுமே இருக்காது: ***"ந சௌசம் ந அபி ச (ஆ)சார:"*** என்கிறார்[3].

உபநிஷத்திலும், **"ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்ய மானா:"** என்று "நானே மஹா புத்திசாலி, மஹா பண்டிதன்" என்று பரலோக விஷயங்களைப் புரிந்து கொள்ளாமல் கிளம்புகிறவர்களையும், அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு பின்னே போகிறவர்களையும் சொல்லி, இவர்கள் எல்லாரும் குருடர்களால் வழிகாட்டப்பட்ட குருடர்கள் மாதிரி சுற்றிச் சுற்றித் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது[4].

---

1. 16.10

2. 16.13

3. 16.7

4. கடோபநிஷத் 1.2.5; முண்டகோபனிஷத் 1.2.8

7.7-தலைவர்களும், பின்பற்றுகிறவர்களும்

ரி.ஃபார்ம் லீடர்களுக்கும் ஃபாலோயர்களுக்கும் [அவர்களைப் பின்பற்றுவோருக்கும்] இடையே ஒரு வித்யாஸம். இதைக் கொஞ்சம் பார்க்கலாம்.

இந்த நாளில் மதம் விதிக்கிற சீலங்கள் (religious virutes) மத ஸம்பந்தமில்லாத வெறும் ethical excellences (நன்னெறிப் பண்புகள்) என்று ஒரு விசித்ரமான பாகுபாடு பண்ணுவது வழக்கமாயிருக்கிறது. மத ஸம்பந்தம் அதாவது ஈஸ்வரப் பிரேரணையான [மத] சாஸ்திர ஸம்பந்தம் என்பது இல்லாமல் நன்னெறி, ethics,morality என்று எதுவுமே இல்லை. ஆனாலும் இப்படி 'சாஸ்திரம்' என்று பூர்விகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி

நடக்கிறோம் என்றால் அது இந்தக் காலத்தவருக்கு அவமானமாக, தங்கள் கௌரவத்தைக் குறைத்துக் கொள்வதாக இருக்கிறது. சாஸ்திரங்களில் கண்ணுக்குத் தெரியாத 'அத்ருஷ்ட' தத்வங்களை base பண்ணியே அநேக தர்மங்களையும், அந்த தர்மங்களை நடைமுறையில் காட்டுவதற்கான கர்மங்களையும் சொல்லியிருப்பதெல்லாம் 'ஸுபர்ஸ்டிஷன்' என்று மேல்நாட்டுக்காரர்கள் சொல்வதால் இதையெல்லாம் நாம் ஏன் அநுஸரிக்க வேண்டும் என்று அவமானமாயிருக்கிறது. நம் சாஸ்திரத்தை நாம் ஸரியாகப் புரிந்துகொண்டு அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும் என்றில்லாமல், அவர்கள் தங்களுடைய பார்வையில் பட்டபடி இதைப்பற்றிச் தப்பாகச் சொல்வதையெல்லாம் நம்மவர்களே எடுத்துக்கொண்டு ஃபாஷனாக ரிஃபார்ம் பண்ணிவிட வேண்டுமென்று ஆரம்பிக்கிறார்கள்.

கொஞ்ச காலமாக, நாம் எடுத்துச் சொல்லாமலே, வெள்ளைக்காரர்கள் தாங்களாக ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் பண்ணி ஏற்கனவே தாங்கள் பரிஹாஸம் பண்ணின அநேக ஸமாசாரங்களைப் பெரிசாகக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஹோமம் பண்ணுவதில் பலன் இருக்கிறது. மந்திரத்தில் பலன் இருக்கிறது, லோகாந்தரங்கள் இருக்கின்றன என்றெல்லாம் அவர்களே ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் ஸர்ட்டிஃபிகேட்டின் மீது நம்மவர்களும் இவற்றைக் கொஞ்சம் ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

ரிஃபார்ம் லீடர்கள் மதசீலம், நெறிக் கோட்பாடு என்று இரண்டாகப் பிரித்ததில் முதலாவதில் பலவற்றை ஆக்ஷேபித்தாலும், பின்னதில் (நெறிகளில்) பலவற்றைப் பின்பற்றுவதால் தங்களைப் பொறுத்தமட்டில் ஏதோ ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இந்த ஒழுங்குகளையும், பழைய ஆசாரங்களை மாற்றிச் சீர்திருத்தம் என்ற பெயரில் இவர்கள் செய்கிற புது விதிகளையும் சேர்த்து இவர்களே புது மதங்களை (அப்படிச் சொல்லிக் கொள்ளாவிட்டாலும்) ஸ்ருஷ்டிக்கிறார்கள். Leader -கள் விஷயம் இப்படியிருக்கட்டும். இவர்களுடைய follower-கள் விஷயம் என்ன?பழைய கட்டுப்பாட்டிலிருந்து அவிழ்த்து விடுகிறார்களே, இப்போதே லௌகிகமாக நமக்குப் பலன் தருகிற ஏற்பாடுகளைச் சொல்கிறார்களே என்றுதான்

இவர்களை follow பண்ண ஆள் சேர்கிறது. ஸ்வாதந்திரியமாக இஷ்டப்படிப் பண்ணலாம் என்பதற்காகத்தான் பிராசீனமான ஸமயாசாரத்தை விட்டு இதற்கு வருகிறார்கள். லீடர்களுக்கு ஏதோ ஒரு பக்வம், படிப்பு, அநுபவம், கொள்கைப் பிடிமானம் எல்லாம் இருப்பதால் இவர்கள் மதாசாரங்களை விட்டாலும் தாங்களாகச் சில ஒழுக்க நெறிகளுக்காவது கட்டுப்பட்டிருக்கிறார்களென்றால் ஃபாலோ பண்ணும் பொது ஜனங்களுக்கு இந்த யோக்யதாம்சங்கள் எப்படி விசேஷமாக இருக்க முடியும்? அதனால், இவர்கள் (லீடர்கள்) religious virtues-ஐ [மதசீலங்களை] மட்டும் விட்டார்களென்றால் தாங்களோ எந்தக் கட்டுப்பாடுமே வேண்டாம் என்று ethical virtues-ஐயும் [நன்னெறிகளையும்] விட்டுவிட ஆரம்பிக்கிறார்கள்.

"ஸமயாசார வேலியை நீ உடைக்கலாம்" என்று சீர்திருத்தத் தலைவர் முதலில் சொல்லிக் கொடுத்தால் அப்படி உடைத்து ஸ்வதந்த்ரத்தில் ருசி கண்ட ஜனங்கள் " நீ போட்டிருக்கும் 'மாரல்' வேலியையும் உடைப்பேன்" என்று பிற்பாடு அவரிடமே திருப்பிக் கொள்கிறார்கள்! பார்க்கவில்லையா – சடங்கும் ஆலய பூஜையும் ஸம்ஸ்கிருதத்தில் மட்டும் ஏன் பண்ண வேண்டும் என்று கேட்பதற்கு தேசத் தலைவர்கள் முதலில் ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்; அப்புறம் ஜனங்கள் அவர்களிடமே திருப்பிக்கொண்டு ஹிந்தி மாத்திரம் ஏன் நேஷனல் லாங்க்வேஜாக இருக்க வேண்டும் என்று கேட்டுப் பெரிய கலஹமாகவே ரயிலைக் கவிழ்த்தும் பஸ்ஸைக் கொளுத்தியும் எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். ஸத்யாக்ரஹம், 'ஸிவில்டிஸ்-ஓபீடியன்ஸ்', மறியல் என்று எதையெல்லாம் அந்நிய ராஜாங்கத்தை எதிர்த்து ரொம்ப முக்யமான விஷயங்களுக்காக ஆதியில் சொல்லிக் கொடுத்தார்களோ, அவற்றையே இப்போது உப்புப் போதாத விஷயங்களுக்காக இவர்களை எதிர்த்தே ஜனங்கள் செய்கிறார்கள். ஸாதாரண ஜனங்களைக் கிளப்பி விடும்போது எத்தனை முன்யோசனை வேண்டும் என்று நினைக்காததன் பலனை அநுபவிக்கிறோம்.

கதை சொல்வார்கள். பிரதிவாதி கடனைத் திருப்பித் தரவில்லை என்று வாதி பிராது போட்டானாம். பிரதிவாதியின் வக்கீல் தன் கட்சிக்காரர்களிடம், " நீ கோர்ட்டில் பைத்தியக்காரன் மாதிரி நடி; என்ன கேள்வி கேட்டாலும்

'பெப்பே"பெப்பே' என்று பேத்திக் கொண்டிரு. 'சித்தப்பிரமம் பிடித்தவன்; இவன் மேல் கேஸ் போட்டது தப்பு' என்று ஜட்ஜ் தள்ளுபடி பண்ணி விடுவார்" என்று சொல்லிக் கொடுத்தாராம். பிரதிவாதியும் அதே மாதரிப் பண்ணி வியாஜம் தோற்றுப் போகும்படிச் செய்துவிட்டானாம். கோர்ட்டுக்கு வெளியிலே வந்தவுடன் வக்கீல் அவனிடம் ஃபீஸ் கேட்டாராம். உடனே அவன் அவரிடமும் அவர் சொல்லிக் கொடுத்த தந்த்ரத்தையே திருப்பினானாம். "பெப்பே பெப்பே" என்றானாம்!" என்ன? என்கிட்டேயுமா இப்படிப் பண்ணுகிறாய்?" என்று வக்கீல் கேட்க, "உன்கிட்டே மட்டுமென்ன? உன் அப்பன், பாட்டன் வந்தாலும் இதேதான் நடக்கும்" என்று அர்த்தம் தொனிக்க "உனக்கும் பெப்பே! உங்க அப்பனுக்கும் பெப்பே!" என்றானாம்.

இப்படித்தான் ரிஃபார்மர்கள் "சாஸ்திரம் சொல்கிற ஒழுங்குகள் வேண்டாம். நாங்கள் சொல்கிற ஒழுங்குகளைக் கடைபிடியுங்கள்" என்றால், ஃபாலோயர்கள் முதலில் பிரதிவாதி வக்கீல் துணையில் கேஸை ஸாதகமாக்கிக் கொண்டதுபோல, இந்த லீடர்களின் ஸஹாயத்தில் தங்களுக்கு ஸமூஹத்தில் அநேக ஆதாயங்களை அடைந்துவிட்டு, கொஞ்ச நாள் ஆன அப்புறம், "சாஸ்த்ர ரூலுக்கும் பெப்பே; உன் ரூலுக்கும் பெப்பே" என்று, எந்த ஒழுங்குமில்லாமல் போக ஆரம்பிக்கின்றார்கள். இம்மாதிரி ஸந்தர்ப்பதில் தன்னளவில் ஓரளவு நன்றாகவே சுத்தராகவுள்ள லீடர்கள் தங்களைச் சேர்ந்தவர்களையே கண்டித்துவிட்டுத் தாங்களும் பட்டினி கிடப்பது போல ஏதாவது பிராயச்சித்தம் பண்ணிக் கொள்கிறார்கள். மற்ற தலைவர்களுக்குத் தங்களைச் சேர்ந்தவர்கள் விட்டு விட்டுப் போகிறார்கள் என்றால் அவமானமாயிருக்கிறது. அதனால் கண்டும் காணாமலும் ஏதோ தட்டிக் கொடுத்துக் கொண்டு போகிறார்கள். ரொம்பவும் மிஞ்சிப் போனால்தான் 'எக்ஸ்பெல்' பண்ணுகிறார்கள் [ஸ்தாபனத்திலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள்] அநேகமாக அந்தத் துணிச்சல் இவர்களுக்கு வருவதற்குள், இவர்களிடம் அபிப்பிராய பேதப்பட்டவர்களே பலமடைந்து தாங்கள் மட்டும் சேர்ந்து இன்னொரு சீர்திருத்த இயக்கம் ஆரம்பிக்கிற ஸ்திதிக்கு வந்துவிடுகிறார்கள். அதனால், "நீங்கள் என்ன 'எக்ஸ்பெல்' பண்ணுவது? நாங்களே முழுக்குப் போட்டுவிட்டு வெளியில் வந்துவிட்டோம்" என்கிறார்கள்.

7.8-பிரத்யக்ஷச் சான்று

இந்த நூற்றாண்டில் பிரத்யக்ஷமாகத் திரும்பத் திரும்பப் பார்த்த விஷயம் சொல்கிறேன். தர்மசாஸ்திர ஆசாரங்கள் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகப் பிளவுபடாமலே இருந்திருக்கின்றன. அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றெல்லாம் தத்வரீதியில் பிரிந்த போதுங்கூட இவர்கள் புதுப்புது தர்ம சாஸ்திரங்களை எழுதி வைத்துக்கொண்டு விடவில்லை. பழைய சாஸ்திரங்களின்படியேதான் பெரும்பாலான ஆசாரங்கள் இருந்தன. ஆதியிலிருந்த ஆபஸ்தம்ப, ஆச்வலாயனாதி ஸூத்ரங்களும், மநுதர்ம சாஸ்திரம், நிபந்தன க்ரந்தங்கள் முதலியனவுந்தான் எல்லா ஸித்தாந்திகளுக்கும் பொதுவாகத் தொடர்ந்து இருந்திருக்கின்றன. இவற்றுக்குள்ளேயேதான் சில ஸித்தாந்திகள் சிலதை விட்டும் சிலதைச் சேர்த்தும், சிலதைக் கூட்டியும் சிலதைக் குறைத்தும் பண்ணுகிறார்கள். இப்படி வைதிகாசாரமானது ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஒரே மாதிரியாக இருந்துவந்திருக்க, ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே அநேகமாக ஹிந்துமதச் சீர்திருத்த இயக்கங்களாகத் தோன்றிய எல்லாவற்றிலும் பிளவுகள் ஏற்பட்டு வெவ்வேறு "க்ருப்"கள் தோன்றி விட்டன!

மதச் சீர்திருத்த அம்சங்களையே நிறையக் கொண்ட அரசியல் கட்சிகளிலும் இப்படியே ஒவ்வொன்றும் இரண்டாக, மூன்றாக உடைந்து போயிருக்கின்றன. இப்படி இதுகளுக்கு stability (ஸ்திரத்தன்மை) போதாததே இவற்றிலே ஸத்ய பலம் குறைச்சல், இவற்றை ஆரம்பித்தவர்களுக்கு (அவர்கள் நல்லவர்களாகவும், நல்ல நோக்கமுள்ளவர்களாகவும் இருந்தாலும்) தபோ பலம் குறைச்சல் என்பதற்கு அழுத்தமான proof -ஆக இருக்கிறது. கொள்கைகளின் ஸத்யமும், அவற்றைச் சொன்ன ரிஷிகளின் தபோ பலமும்தான் வைதிக ஸமயாசாரத்தை யுகயுகாந்தரங்களாகக் காப்பாற்றியிருக்கிறது. இன்றைக்கு இத்தனை சீர்திருத்த மத இயக்கங்கள் ஏற்பட்ட பின்னும் முக்கால்வாசிக்கு மேலான ஜனங்கள் இவற்றில் சேராமல் மூலமான ஹிந்து மதத்தில்தான் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வெளியிலே ஆசாரத்துக்கு மாறாகச் சொல்கிறவர்கள் கூட உள்ளூர [அதற்குக்] கொஞ்சம் பயப்படத்தான் செய்கிறார்கள். தங்கள் சொந்த விஷயத்தில் ரஹஸ்யமாக அநேக 'ஸுபர்ஸ்டிஷன்'களை அநுஸரித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்! இப்படி அநேகம் என்னிடம் அற்றுபடியாகிக் கொண்டிருக்கின்றன! எலெக்க்ஷனுக்கு டெபாஸிட் கட்டுவதென்றால் எத்தனை ரேஷனலிஸ்டானாலும் நாள், நக்ஷத்ரம் பார்த்துத்தான் செய்கிறார்கள் என்று கேள்வி!

7.9-ஒரு பரீக்ஷை போதும்

பழைய ஆசாரம் வேணுமா, சீர்திருத்தம் வேணுமா என்பதற்கு ஒரு 'டெஸ்ட்' போதும். ஒழுங்கீனம், லஞ்சம், திருட்டுப்புரட்டு, மோசடி, கொலை, வியபசாரம் இத்யாதிகள் நாம் 'ஸுபர்ஸ்டீஷிய'ஸாக இருந்தபோது ஜாஸ்தியிருந்ததா, இப்போது 'என்லைடன்' ஆகிவிட்ட பிறகு ['அறிவுப் பிரகாசம்' அடைந்த பிறகு] ஜாஸ்தியாகியிருக்கிறதா என்று பார்த்து விட்டால் போதும்!இத்தனை அனர்த்த பரம்பரையோடுதான் நாம் 'சீர்திருந்தி'யிருக்க முடியுமென்றால், இதைவிட மூட நம்பிக்கைகளைக் கட்டிக்கொண்டு அழுவதேமேல் என்றுதான் தோன்றுகிறது.

7.10-மனத் தூய்மையும் வெளிக் காரியமும்

அநேக ஸமயாசாரங்களை, சடங்குகளைச் சீர்திருத்தக்காரர்கள் ஒதுக்குவதற்கு ஈஸியாக ஒரு காரணம் சொல்லி விடுகிறார்கள்: "மனஸு சுத்தமாக இருக்க வேண்டியதுதானே முக்யம்? 'ரிசுவல்' [சடங்கு] எதற்கு? இந்த 'ஃபார்மாலிடீஸ்' எதற்கு?" என்கிறார்கள்.

மனஸைத் தனியாக விட்டால் அது கட்டுப்படாமல் கெட்ட வழிகளில்தான் போய்க் கொண்டிருக்கும். எவனாவது ஆயிரம், பதினாயிரத்தில் ஒருத்தனுக்குத்தான் காரியத்தில் போகாத போதும் மனஸ் கட்டுப்பட்டு நல்லதிலேயே போய்க் கொண்டிருக்கும். மற்றவர்களுக்கு ஒரு காரியத்தைக்

கொடுத்து, `கார்ய த்வாரா' மனஸை பகவானிடமோ, ஜனஸேவையிலோ திருப்பி விட்டால்தான் உண்டு. இதைக் கவனித்துத் தான் ஆசார அநுஷ்டானங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன.

மனஸைத் தனியாக விட்டால் என்று மட்டுமில்லை; அதை நாம ஜபம், ஸ்தோத்ரம் என்று வாக்குடன் சேர்த்துவிட்டாலுங்கூடக் கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் அது பிய்த்துக் கொள்கிறது. அதனால் மனோ-வாக்-காயம் என்றபடி மனஸை வாக்கு மட்டுமின்றி, சரீர கார்யத்தோடும் பிணைத்தே சடங்குகளைக் கொடுத்திருக்கிறது. மந்திரங்களை வாக்கால் சொன்னபடியே ஹோமம் என்ற காரியத்தைப் பண்ணுவது ஸஹஸ்ரநாமத்தை வாக்கால் சொன்னபடியே அர்ச்சனை என்ற கார்யத்தைப் பண்ணுவது – என்று வைத்திருக்கிறது.

கேசவ, நாராயண, த்ரவிக்ரம என்று வாயால் சொன்னால்கூட பகவான் மஹிமையில் மனஸ் நன்றாக ஈடுபடுமாட்டேன் என்கிறதே! அதற்காக, "அந்தப் பன்னிரண்டு நாமங்களைச் சொல்லிக்கொண்டே உடம்பில் பன்னிரண்டு நாமங்களைத் திருமண்ணால் போட்டுக் கொள்ளு" என்று பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள். த்ரவிக்ரமன்தான் உலகளந்தான். உலகத்தை அளந்தவனே அதை ச்வேத வராஹமாக அவதாரம் பண்ணி வெள்ளைவெளேரென்ற தெற்றிப் பல்லிலே தூக்கி நிறுத்தினான். பல்பட்ட இடத்தில்தான் `ச்வேத ம்ருத்திகை' என்ற வெளுப்பு மண்கட்டி கிடைக்கிறது. `திருமண்' என்பது அதுதான். துளஸிக்கு அடிமண்ணும் இப்படி விசேஷமானது. இப்படிப்பட்ட மண்ணைக் குழைத்து ஒரு காரியமாக்கி உடம்பிலே போட்டுக் கொண்டால், அப்போதுதான் `த்ரிவிக்ரம' என்கிறபோது, "அப்பா, உன் ஸ்பரிசம் பெற்ற மண்ணை என் சரீரத்திலும் தாரணம் பண்ணிக் கொள்கிறேன்" என்கிற மனக் குழைவு உண்டாகும்.

ஆத்மாபிவிருத்தியில் ஓரளவுக்கு மேலே போகப்போக மனஸின் ஒருமுக தியானத்துக்கு வாக்கு, கார்யம் ஆகியவையே இடைஞ்சலாகத்தான் ஆகும். கார்யம் ஸ்தோத்ரம், மந்திரம் எல்லாமே அப்போது நின்று போய்விடும். ஆனால் இது தானாகவே விடப்போகிற ஸமாசாரம். தவளையை

உதராணமாகச் சொல்வது வழக்கம். தவளை ஜலத்தில்தான் முட்டை போடும். அப்புறம் முட்டையிலிருந்து வெளியே வந்தவிட்டும் சிலகாலம் மீன் மாதிரி ஜலத்தில் மட்டும்தான் இருக்கும். அந்த ஸ்டேஜில் அதற்கு நிலத்திலே ச்வாஸிப்பதற்கு வேண்டிய லங்ஸ் கிடையாது. மீன் மாதிரி ஜலத்தில் கரைந்திருக்கிற ஆக்ஸிஜனை தனக்குள்ளே இழுத்துக் கொள்ளும் gills என்ற உறுப்பு மட்டுந்தான் அப்போது தவளைக்கு உண்டு. அப்புறந்தான் அது வளர வளர இந்த உறுப்பு எப்படி மறைந்தது என்றே தெரியாமல் தானாக மறைந்து, அதற்கு நிலத்திலே இருந்து கொண்டு, காற்றிலேயுள்ள ஆக்ஸிஜனை ச்வாஸிக்கக்கூடிய லங்ஸ் உண்டாகிறது. இப்படி ஹையர் ஸ்டேஜுக்குப் போகும்போது தானாகச் சடங்கு, மந்த்ரம் எல்லாம் நின்று போகும். அதற்காக ஆரம்பத்திலேயே இதெல்லாம் வேண்டாம், மனஸ் சுத்தம் போதுமென்றால், அது தவளை முதலில் ஜலத்திலிருக்கும்போதே லங்ஸ்தான் வேண்டும் என்று தனக்கு இருக்கிற ச்வாஸ அவயவத்தையும் விட்டு விட்டு … விட்டால் என்ன ஆகும்? உயிரையும் விட வேண்டியதுதான்!

வெளிச்சின்னங்கள், வெளிக்கார்யங்கள், வெளிவித்யாஸங்கள், இவற்றின் மூலந்தான் உள்ளே ஒரு அடையாளமும், காரியமும், பேதமும் இல்லாமல் ஆகிற நிலைமையை அடைய முடியும்*. முதலிலேயே கார்யத்தைக் கொடுக்காமல் மனஸை மட்டும் வைத்துக்கொண்டு தியானம் பண்ணு என்றால் மனஸ் மட்டும் வைத்துக்கொண்டு தியானம் பண்ணு என்றால் மனஸ் ரொம்ப நேரம் கண்டபடி ஓடிவிட்டு, அப்புறம் எழுந்துவிடத்தான் வைக்கும். அல்லது களைத்துத் தூக்கத்தில் கொண்டுவிடும்.

மனஸ் சுத்தம் டிஸிப்ளின் இல்லாமல் வராது. உள் டிஸிப்ளின் வெளி டிஸிப்ளின் இல்லாமல் வராது. ரூல்களும், ஃபார்மாலிடிகளும், வெளிக் கார்யங்களும், அந்தக் கார்யங்களைப் பொறுத்த அநேக வித்தியாஸங்களுமில்லாமல் வெளி டிஸிப்ளின் இல்லவேயில்லை.

"மனஸ் சுத்தத்தை மட்டுந்தான் கவனிப்போம்" என்று நவீனர்கள் சொன்னாலும், இதில் யாரோ ஒன்று இரண்டு தலைவர்கள் மட்டும் வேண்டுமானால் அப்படியிருக்கக்கூடுமே தவிர மற்றவர்கள், "மனம்

போனபடிதான் இருப்போம்” என்று ஆவதாகவே முடிந்திருக்கிறது! இதற்கு நான் தொண்டை தண்ணீர் போக இத்தனை சொல்ல வேண்டியதேயில்லை. ரி∴பார்ம், ரி∴பார்ம் என்று ஆரம்பித்த பின் தேசத்தில் டிஸிப்ளினே இல்லை என்பது எல்லாருக்கும் பட்டவர்த்தனமாகத் தெரிகிற விஷயம். ஆனாலும் ‘அதனால்தான் இது’ [சீர்திருத்தம் என்ற காரணத்தால்தான் கட்டுப்பாட்டுக் குலைவு என்ற விளைவு] என்பதை ஒப்புக்கொள்ள யாருக்கும் மனஸு வரவில்லை.

நாஸ்திகர்கள் என்று போகிறவர்களை விட்டு விடலாம். அவர்கள் ரொம்பக் கொஞ்சம் பேர்தான். ”ரிலிஜன்” என்று போற்றிச் சொல்லி, ”நாங்கள்தான் வேதத்தின் ஸ்பிரிட்டை ஸரியாகப் புரிந்து கொண்டு இன்டர்ப்ரெட் பண்ணுகிறோம்”, ”அதை ‘ஆர்த்தடாக்ஸி’யின் ஆதிக்யத்திலிருந்து மீட்டு உள்ளபடி ப்ரகாசம் பண்ணுகிறோம்.” என்று சொல்லிக் கொண்டே ரி∴பார்ம்காரர்கள் அநாதிகாலமாய் ஒழுங்காயிருந்து வந்த ஸமுதாயத்தைக் கட்டுப்பாடேயில்லாமல் ‘டி∴பார்ம்’ [உருக்குலைவு] பண்ணுகிறார்களே என்பதுதான் துக்கமாயிருக்கிறது. ஆயிரலக்ஷம் ஆசாபாசங்கள், அழுக்குகள் இருக்கிறவர்களை எடுத்த எடுப்பில் உச்சாணிக் கொம்பிலுள்ள மனஸ் சுத்தத்துக்கு ஏறுங்கள் என்று, சொல்லி தாங்கள் இங்கேயுமில்லாமல் அங்கேயுமில்லாமல் திரிசங்கு லோகத்தில் தொங்குவது போதாது என்று, மற்றவர்களையும் அவர்கள் ஏற்கனவே இருந்த இடத்துக்கும் கீழே உருட்டி விடுகிறார்களேயென்று துக்கம் துக்கமாக வருகிறது. வேறே ஒன்றும் தெரியாவிட்டாலும், ஈஸ்வரன் என்று ஒருத்தனுக்கு பயந்து தர்ம நியாயமாக நடக்கவேண்டும்; பெரியவர்கள், முன்னோர்கள் காட்டும் வழியில் போகவேண்டும் என்பதால் இதுவரை ஜனங்களுக்கு இருந்த ஒழுக்கத்தையும் பணிவையும்கூட இந்தச் சீர்திருத்தங்கள் போகப் பண்ணிவிட்டன. **ஸ்வதந்திரம், ஸ்வதந்திரம் என்று சொல்லி எல்லோரையும் - ஸ்வபாவமாக விநயகுணம் உள்ள நம்முடைய, நல்ல பொது ஜனங்களை - மமதையில் கொண்டு தள்ளியிருப்பதுதான் சீர்திருத்தவாதிகள் செய்திருக்கிற கைங்கர்யம்.** யாரும் யாருக்கும் அடங்க

மாட்டோம் என்று ஆக்கியிருக்கிறார்கள். எல்லாருக்கும் ஸ்வயநலம்தான் - ரைட் ரைட் என்ற பெயரில் - ஸகலமுமாகி விட்டது.

ஆனபடியால், "நாங்கள் ஹிந்து மத அபிமானிகள் தான்; நாங்கள்தான் நிஜமான ஹிந்துமதத்தின் அபிமானிகள்; we are for religion " என்று சொல்லிக்கொண்டே, இவர்கள் "கார்யத்தில் சாஸ்த்ர விரோதமாக எதை வேண்டுமானாலும் செய்வோம்" என்று போகிறவரையில் இவர்கள் பிரசாரம் செய்வது irreligion [மத விரோதம்] தான். 'சாஸ்திரம் வேண்டாம், சடங்கு வேண்டாம், மனஸ் தான்' என்று இருக்கிறவன் ஒன்றுக்கும் உதவாதவன்தான்.

---

*இவ்விஷயம் 'தெய்வத்தின் குரல்' முதற்பகுதியில் கர்ம மார்க்கம் என்ற பிரிவிலுள்ள பல உரைகளிலும், முதல் இரு பகுதிகளிலும் வர்ண தர்மம் பற்றியுள்ள அநேக உரைகளிலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

7.11-நவீன "ஸூபர்ஸ்டிஷன்"கள்

அத்ருஷ்ட பலனை நம்பால் பிரத்யக்ஷ பலனை மட்டும் பார்த்து அநேக விஷயங்களை ஸுபர்ஸ்டிஷன் என்று தள்ளுகிறார்கள் என்றாலும் இவர்களுடைய பகுத்தறிவு ('ரீஸன்') படி பதில் சொல்ல முடியாத அநேக ஸுபர்ஸ்டிஷனை இவர்களே உண்டாக்கிக் கொண்டும், பின்பற்றிக் கொண்டும்தான் இருக்கிறார்கள்! 'ஜேய் ஹிந்த்' என்று சத்தம் போட்டு விட்டால் அதில் என்ன பிரத்யக்ஷ பலன்? இப்படிக் கத்துவதால் தேசம் ஸுபிக்ஷமாய்விடுமா என்ன? ஆனாலும் "மந்த்ராஸ்" என்று கேலி பண்ணுகிற பிரதம மந்திரியே* பிரஸங்கம் பண்ணி முடித்தவுடன், "ஜேய் ஹிந்த் கோஷிக்க வேண்டும்; இன்னும் பலமாக கோஷிக்கணும்; இது கூடப்போதாது" என்று மூன்று நாலு தரம் ஜனங்கள் தொண்டை கொண்ட மட்டும் கத்தச் சொல்கிறாராம்!

நம் தேசத்தில் மட்டுந்தான் என்றில்லை Faith-ஐ (நம்பிக்கையை)க் குலைத்து அதனிடத்தில் reason-ஐ (பகுத்தறிவு என்கிற வெறும் புத்தி தர்க்கத்தை)

வைத்து, நம்மையும் இப்படியிழுத்து விட்டிருக்கிற எல்லா தேசத்திலுமே இப்படியிருக்கிறது. Rational -ஆகப் பார்த்தால் flag (கொடி) என்பது என்ன? ஏதோ ஒரு துணிதானே! அதன் மீது துப்பினால் அது தேசத்ரோகம் என்றால் இது த்ருஷ்ட பலனா என்ன? ஆனாலும் இப்படிப் பண்ணுகிறவனுக்கு த்ருஷ்ட பலனாகவே ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள்! மந்த்ரபூர்வமாய் ஒரு ப்ரதிமையில் தெய்வத்தை ஆவாஹனம் பண்ணிப் பூஜை பண்ணுவதைக் கேலி செய்துவிட்டு, ஒரு துணிதான் தேசத்துக்கு ஸிம்பல் என்றால் அது எப்படி? புண்யகாலமாவது, புண்ய க்ஷேத்ரமாவது என்று சொல்லிவிட்டு நாஸ்திகப் பிரசார விழாக்களைக்கூட புத்தர், அம்பேத்கர் பிறந்த நாளில் பண்ணுகிறார்கள்! ஈரோட்டில், காஞ்சீபுரத்தில்தான் ஆரம்பவிழா என்கிறார்கள்! அதாவது அவர்களும் ஏதோ ஒரு 'புண்ய' – இப்படிச் சொல்வது எனக்கே வேடிக்கையாகத்தான் இருக்கிறது! – புண்யகாலம், க்ஷேத்ரம் இவற்றில் நம்பிக்கை வைத்துத்தானிருக்கிறார்கள்! ரொம்ப விசித்ரம், 'ஸமாதி', 'ஸமாதி' என்கிற பேர் வைத்து (நாம் ஏதோ வருஷத்தில் ஒருநாள் திருவையாறு, நெரூர் மாதிரி இடங்களில் *ஆராதனை நடத்துகிறோம் என்றால்) அவர்களோ நித்தியப்படி ஆராதனையே பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்! ஆஸ்திகர்களாயிருக்கிற சட்டசபைக்காரர்கள் பதவிப் பிரமாணத்துக்கு முந்தி கோயிலுக்குப் போகாமலிருந்தாலும் இருப்பார்கள்; போய்விட்டு வந்தாலுங்கூடச் சொல்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு இருந்தாலும் இருப்பார்கள்; ஆனால் இவர்கள் [பகுத்தறிவாளர் என்று சொல்லிக் கொள்கிறவர்கள்] 'ஸமாதி' என்கிறார்களே, அதற்கு ஊர்வலமாகப் போய் மரியாதை பண்ணிவிட்டு வராமல் swearing-in செய்வதேயில்லை.

வெறும் ரீஸன் என்று மட்டும் எடுத்துக் கொண்டால் அதற்குப் பொருந்தாத அநேக விஷயங்களை எவருமே பண்ணத்தான் வேண்டியிருக்கிறது; அப்போதுதான் நம்முடைய லக்ஷ்யத்தில் நமக்கு ஒரு ஆர்வத்தை, ஈடுபாட்டை எழுப்பி அதற்கு மற்றவர்களின் ஆதரவையும் திரட்டமுடிகிறது. இதற்குச் சின்னங்களும் காரியமும் இருந்தேயாக வேண்டியிருக்கிறது. இப்படி கறுப்பு-சிவப்பு அல்லது கதர் போட்டுக் கொண்டு கொடியையும் ஸ்லோகன் அட்டையையும் தூக்கிக் கொண்டு பாத யாத்திரை, ஸைகிள் ஊர்வலம்,

மாட்டுவண்டி ஊர்வலம் என்று நடத்தும்போது இதில் பகுத்தறிவுக்குச் சேராத எத்தனை விஷயம் இருக்கிறது என்று பார்ப்பதில்லை. அதுவே பஞ்சகச்சம், பரிவட்டம், ஜாலரா, நாமசங்கீர்த்தனம் என்று பஜனை கோஷ்டி போனால் பரிஹாசமாகிறது. பொலிடிகல் இன்டரஸ்ட் (அரசியல் ஈடுபாடு), லேபர் இன்டரஸ்ட் என்பதுபோல இந்த லோகத்தை மட்டுமே சேர்ந்த விஷயங்களுக்காக இப்படி ரீசனை விட்டு விட்டு, மண்ணெண்ணையை கொட்டி கொளுத்திக்கொண்டு உயிரைவிடுகிற அளவுக்குப் போனால் martyr [தியாகி] பட்டம் கொடுக்கிறார்கள்! அதுவே சாச்வதமான தர்மத்துக்காக, மதத்துக்காக விட்டால் 'ஸூபர்ஸ்டிஷியஸ்','அசடு'என்று மட்டம் தட்டுகிறார்கள்.

7.12-தெய்வமும் மதமும் தர்மமும்

தெய்வ ஸம்பந்தம் போச்சோ இல்லையோ தர்ம ஸம்பந்தமும் போய்விட்டது. 'நாங்களும் தெய்வத்தை நம்புகிறவர்கள்தான், ஆத்மாவை நம்புகிறவர்கள்தான்' என்று மதச் சீர்திருத்தக்காரர்கள் சொல்லிப் பிரயோஜனமில்லை. தெய்வமானாலும், ஆத்மாவானாலும், எதுவானாலும் நேராக அந்த தெய்வ சக்தியினாலேயே inspiration பெற்று [உள் உந்துதல் பெற்று]ப் பரமத் தியாகிகளான ரிஷிகள், அல்லது மதாந்தரங்களின் மூல புருஷர்களாயிருக்கப்பட்ட Prophet-கள் ஒரு சாஸ்திரம் அல்லது பைபிள் அல்லது கொரான் என்று கொடுத்து அதுவும் அநுபவிகளான பல பூர்விகர்களால் அநுஷ்டிக்கப்பட்டு ஒரு tradition என்கிற weight-ஐப் பெற்றிருந்தால் அப்போது அதன்படியே நடந்தால்தான் தர்மமும், ஒழுக்கமும் இருக்கிறது. அந்தந்த தேசத்திலிருக்கிறவர்கள், "இதுதான் ஈஸ்வரன் நமக்கேயென்று கொடுத்திருக்கிற மார்க்கம். எந்த மார்க்கத்தில் போனாலும், ஒரு மார்க்கத்திலுமே போகாவிட்டாலும்கூட அவனைப் பிடித்து விடலாம் என்பது நிஜம் என்றே வைத்துக் கொண்டாலும், அவன் எப்போது எத்தனையோ ப்ளானோடு, ஆர்டரோடு பிரபஞ்ச வியவஹாரங்களை நடத்துவதில் நம்மை இன்ன இடத்தில் இன்ன ஸமயாசாரத்தில் பிறக்கப் பண்ணியிக்கிறானோ, அப்போது இங்கே அவன் கட்டளையாக எந்த சாஸ்திரம்

இருக்கிறதோ அதை நாம் அநுஷ்டானம் செய்ய வேண்டுமென்பதுதான் அவன் சித்தம்" என்று புரிந்துகொண்டு (இப்படிப் புரிந்து கொள்வதுதான் நிஜமான விழிப்பு) அந்தப்படியே பண்ண வேண்டும். இப்படி அவரவருடைய பூர்விகர் போன ஆசார வழியில் போவதைத்தான், ***"ஸமயாசாரமேவ ச பூர்வை: ஆசரித: குர்யாத்:*** என்று சொன்னது. இவ்வாறு பண்ணாமாற்போனால் – ***"அந்யதா"***, அதாவது வேறே வழியில் போனால் – ***"பதிதோ பவேத்":*** விழுந்து விடுகிறான். விழுகிறான் என்றால் எப்படி? ஏணியின் நடுவில் ஏதோ ஒரு கட்டையில் நின்று கொண்டிருக்கிறான். படிப்படியாக மேலே கொண்டு போவதற்கு சாஸ்திரம் இருக்கிறது. ரி்ஃபார்ம்காரர்," இப்படி இன்ச் இன்ச்சாக நீ ஏறுவதென்றால் ரொம்ப நாள் ஹீனஸ்திதியில் இருந்து கொண்டிருக்கணும், ஒரே தாவாக மேலே தாவு" என்று கிளப்பிவிட்டு இவன் நிற்கிற கட்டையை உடைத்து விடுகிறார். இவனுக்கா மேலே தாவுகிற சக்தி இல்லை. என்ன ஆகும்? இருக்கிற ஸ்திதியிலிருந்து இன்னம் கீழே விழவேண்டியதாகவே ஆகிறது. **அந்யதா பதிதோ பவேத்** : பதிதனாக, விழுந்தவனாக ஆகிறான்.

7.13-தலைவர் கடமை: கீதை உபதேசம்

பகவான் கீதையில் நன்றாக எச்சரிக்கை பண்ணியிருக்கிறார். "லோகாசாரங்களுக்கு, உலக வழக்குகளுக்கு வித்யாஸமாக நீ போனாயானால் (உன்னளவில் நீ அவற்றை விட்டு விடலாமென்றாலுங்கூட) நீ ஜனங்களுக்குத் தப்பான வழிகாட்டியாகி விடுவாய். உன்னைப் பார்த்து அவர்களும் அவற்றை விட்டு விடுவார்கள். ஆனால் நீ உன்னுடைய பக்வ விசேஷத்தால் இப்போது விட்டதைவிட உசந்த வழிக்குப் போகக்கூடுமென்றாலும், ஸாதாரண ஜனங்கள் தற்போது இருக்கிற ஸ்தானத்தை விட்டதோடு மட்டும் இருக்குமே தவிர, விட்டபின் இதைவிட உசத்தியான ஒன்றைப் பிடித்துக் கொள்ள அவர்களுக்கு சக்தியும், ஸம்ஸ்காரமும் போதாது. இருக்கிற பிடிப்பையும் விட்டு விட்டு இன்னம் கீழே விழுந்து விடுவார்கள்" என்ற இவ்வளவு அபிப்ராயங்களையும் அடக்கித்தான், அடைத்து வைத்துத்தான்

ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத |
குர்யாத் வித்வாம்ஸ்ததா (அ)ஸக்த சிகீர்ஷுர் லோகஸங்க்ரஹம் ||
ந புத்தி பேதம் ஜநயேத் அஜ்ஞானாம் கர்ம ஸங்கிநாம்
என்றார் [3.25-26].

ஜனங்கள் பொதுவாக “கர்மஸங்கி”களே. அதாவது கார்யத்தில்தான் கட்டுப்பட்டிருப்பவர்கள். அவர்களிடம் வெறுமனே ஆத்மா, த்யானம் என்று ஐடியல் நிலையைச் சொல்லிப் பிரயோஜனமில்லை. சாஸ்திரங்களில் அவர்களுக்கு அநேகக் காரியங்களைக் கொடுத்து அதற்கு த்ருஷ்டமாகவோ அத்ருஷ்டமாகவோ இன்னின்ன பலன் என்று சொல்லியிருக்கிறது. வேதத்தில் சொல்லியிருக்கப்பட்ட அநேக யாக யஜ்ஞங்களுக்கு இப்படிப்பட்ட பலன்களைத்தான் சொல்லியிருக்கிறது. இந்த தேசத்திலேயே மழை பெய்து தான்யஸம்ருத்தி உண்டாகும்; அல்லது மேதாவிலாஸம், ஸதஸில் வாக் விலாஸம் உண்டாகும்; முடிவாக ஸ்வர்க்கவாஸம் கிடைக்கும் என்றே சொல்லியிருக்கும். இந்திரியங்களால் இன்பங்களை அடையும் ஸ்வர்க்க வாஸத்தைத்தான் சொல்லியிருக்குமே தவிர, இந்திரிய பந்தமெல்லாம் தெறித்துப்போன மோக்ஷமான ஜீவ-ப்ரம்ம ஐக்கியத்தைக் கர்மாவுக்குப் பலனாக சொல்லியிருக்கவில்லை. ஏனென்றால் முதலிலேயே மோக்ஷம் என்றால் யாரும் அதை நாடமாட்டார்கள் என்று அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்வர்காதி ஸௌக்கியங்களுக்காகவே கர்மாவைக் கொடுத்து அந்தக் கர்மாவினால் இவனுக்கு உண்டாகிற கட்டுப்பாட்டிலிருந்து, இவனறியாமலும், **உத்தேசிக்காமலும், விரும்பாமலுமேகூட இவனுக்குச் சித்தசுத்தி தந்து இவனைப் பாரமார்த்திகமாகத் திருப்பத்தான்** இப்படிச் செய்திருக்கிறது. பிற்காலத்தில் மதம் என்பதில் யஜ்ஞகர்மா குறைந்துவிட்டது. ஆனாலும் லௌகிக லாபங்களுக்காகவே வேறுவித அநுஷ்டானங்களைக் காரியமாக கொடுப்பது தொடர்ந்திருக்கிறது. “ராமேஸ்வரத்துக்குப் போ, அரச மரத்தைச் சுற்று, பிள்ளை பிறக்கும். ஸூர்ய நமஸ்காரம் பண்ணு, நேத்ர ரோகம் ஸரியாகப் போகும். கனகதாராஸ்தவம், சொல்லு ரூபாய் வரும்” என்றெல்லாம் லௌகிக பலன்களுக்காகவே பல காரியங்களை சாஸ்த்ரம் சொல்கிறது. இந்தப் பலனில் உள்ள பற்றினாலேயே பெரும்பாலான ஜனங்கள்

இதுகளைப் பண்ணுகிறார்கள். இவர்கள் வாஸ்தவத்தில் உயர்ந்த அறிவு பெறாத 'அவித்வான்'கள்தான். இவர்களைத்தான் ***"ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ"*** என்கிறார். இவர்களிடம் "இப்படி அல்ப பலனையெல்லாம் நினைக்காதீர்கள். ஈஸ்வரானுபவம் என்ற உசந்த லக்ஷ்யத்தையே நினையுங்கள்" என்று உபதேசம் பண்ணினால் எடுபடாது. அவர்களுடைய ஸம்ஸ்காரக் குறைவு காரணமாக, அவர்களை இப்போது இருக்கிற இடத்திலிருந்தே அவர்களுடைய மனஸை அநுஸரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மேலே கொண்டு போக வேண்டும். இதற்கு அவர்களைப் பக்குவப்படுத்துவதற்காகத்தான் சாஸ்திரங்களே அவர்களுக்கு இப்படிப்பட்ட ஆத்ம ஸம்பந்தமில்லாத காரியங்களையும் கொடுக்கிறது. பலனுக்காகத்தான் அவர்கள் இவற்றைப் பண்ணுகிறார்கள். பண்ணிவிட்டுப் போகட்டும். ஆனால் இப்படிக் காரியம் பண்ணுவதால் என்ன ஏற்படுகிறதென்றால் இவர்கள் உத்தேசித்த பலன் உண்டாவதோடு கூட, இவர்கள் உத்தேசிக்காமேலே கொஞ்சங் கொஞ்சமாகச் சித்தசுத்தி என்ற பெரிய பலன் உண்டாக ஆரம்பிக்கிறது.

லௌகிக பலனை நினைத்தே கார்யம் பண்ணினாலும் சித்த சுத்தி உண்டாகிறது என்று இப்போதுசொல்லுகிறேன். இத்தனை நாழி என்ன சொன்னேன்? இம்மாதிரி லௌகிகமான ஸமத்துவம், 'ரைட்' இவற்றுக்காகவே மதத்தை மாற்ற முயல்வது சித்தத்தை மேலும் அசுத்தம்தான் செய்திருக்கிறது என்று சொன்னேன். இது ஒன்றுக்கொன்று மாறாக இருக்கிறது. கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்கலாம்.

7.14-மூன்று விதமான கொள்கைகள்

மூன்று கட்சிகள். ஒன்று, மதமே ஒரு ஸ்டேஜ் வரையில் உலக ஸம்பந்தமான ஸௌக்யங்களையும் ஆதரித்துக் காரியங்களைக் கொடுப்பது. இன்னொன்று: மதம் ரொம்ப உசந்த லக்ஷ்யத்துக்காக, ஸ்வச்சமான ஆத்மா என்கிற ஹை லெவலை மட்டுமே சேர்ந்ததாக இருக்க வேண்டும்; ஆதலால் அதிலிருந்து சடங்கு, சின்னம், கர்மா எல்லாவற்றையும் அப்படியே உருவி விட்டு அதைச் சீர்திருத்த வேண்டுமென்பது. மூன்றாவது: லௌகிகமான

அபிவிருத்திகள், ஸ்வய மரியாதை, ஸயன்டி∴பிக் அவுட்லுக் (இதை 'ரீஸன்' என்றும் சொல்கிறார்கள்; அதாவது புத்தியின் தர்க்கத்துக்குப் புரிபடுவதாக இருக்க வேண்டும் என்பது அபிப்பிராயம்) இவற்றுக்கு மதசாரங்கள் ஹானி செய்வதால் அப்படிப்பட்ட அம்சங்களை மாற்றிச் சீர்திருத்த வேண்டுமென்பது. அதாவது சீர்திருத்தத்திலேயே இரண்டு கட்சி. ஒன்று, இது அநேகமாகப் பொலிடிகலாக இருப்பது - ஆத்ம ஸம்பந்தமே அடியோடு இல்லாமல் லோக வாழ்க்கைக்காகவே சீர்திருத்தம் பண்ண வேண்டுமென்பது. இன்னொன்று ரொம்ப உயர்ந்த ஆத்மாநுபவங்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்திலேயே மதத்தைச் சீர்படுத்தச் சொல்வது. லௌகிகமாக மநுஷனுக்கு மநுஷன் வித்யாஸம் இருக்கப்படாது என்ற ஸமத்வத்தைச் சொல்வதில் இரண்டு தினுஸான சீர்திருத்தவாதிகளும் ஒத்துப்போகிறார்கள்.

இதுவரை நான் சீர்திருத்தக்காரர்கள் என்றபோது இரண்டு கோஷ்டிகளையும் கலந்து கலந்து சொல்லிக் கொண்டு வந்துவிட்டேன். அதனால் கொஞ்சம் குளறிப் போயிருக்கும். இப்போது, என்னமோ இப்படிப் பேச ஆரம்பித்ததில் எனக்கே துளித் துளி புரிந்து கொண்டு வருவதால் உங்களுக்கும் கொஞ்சம் தெளிவு பண்ணப் பார்க்கிறேன்.

இரண்டு கோஷ்டிகளும் மதச் சீர்திருத்தம் வேண்டும் என்று சொன்னாலும், இரண்டு பேரும் social equality -ஐச் (ஸமூஹச் ஸமத்துவத்தை) சொன்னாலும், ஒரு கோஷ்டி ஆத்ம லக்ஷியத்துக்காகவே ஆசாரத்தை மாற்றச் சொல்கிறது; இன்னொரு கோஷ்டி லௌகிக லக்ஷியம் ஒன்றுக்காக மாத்திரம் ஆசாரத்தைவிடச் சொல்கிறது.

7.15-லௌகிக லக்ஷியச் சீர்திருத்தம்

பின்னாடி சொன்னவர்கள் பொலிடிகல் லீடர்களாக இருக்கிறார்கள். லேபர், ஸ்டூடன்ட் மூவ்மெண்ட், ஸ்திரீ ஸ்வதந்திரம் என்றெல்லாம் சொன்னாலும் இதெல்லாம் ஒரு மாதிரிப் பொலிடிக்லாகவேதான் இருக்கின்றன. ஸோஷல், பொலிடிகல் என்று வார்த்தை வித்தியாஸத்துக்காகப் பிரித்துப் பேசுகிறார்களென்றாலுங்கூட நம் தேசத்தில் எல்லாமே தெரிந்தும்

தெரியாமலும் பொலிடிகலாகத்தான் ஆகியிருப்பது நம்முடைய துர்த்தசை. ரிலிஜனில்கூட பாலிடிக்ஸ்தான்! இது இருக்கட்டும். இந்த ஸோஷல் ரி∴பார்மர்கள் பூர்வாசாரங்களை, பரம்பரையாக ஜனங்களுக்கு ஏற்பட்ட கார்யங்களை எடுத்துவிட்டு, அவர்களை வெறும் வாழ்க்கை முன்னேற்றத்தில் மட்டும் வெறிப்படுத்தி அதற்கான காரியங்களில் ஈடுபடுத்துகிறார்கள். இதில் அங்கமாகவே ஸ்ட்ரைக், டெமான்ஸ்ட்ரேஷன், அடிதடி, ரகளை எல்லாமும் நிறையக் கிளறிவிடப்பட்டிருக்கின்றன.

இதெல்லாமும் கார்யம், சாஸ்திரத்தில் பிள்ளை பிறப்பதற்கும் பண ஸம்பாதனைக்கும் சொன்னதும் கார்யம்தான் என்றாலும் இரண்டையும் செய்வதிலே எத்தனை வித்யாஸமிருக்கிறது? இரண்டுக்கும் லக்ஷ்யம் லௌகிகம்தான். இருக்கட்டும். ஆனாலும் மதத்திலே ஒரு கார்யத்தைச் சொல்லியிருக்கும்போது அதை தெய்வ பரமான லக்ஷ்யமாக இல்லாமல் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவே பண்ணும்போதுகூட தெய்வத்தின் நினைப்பு இருக்கிற விதத்திலேயே செய்திருக்கிறது. ஈஸ்வரனுக்கு, தேவதைகளுக்கு, சாஸ்திரங்களுக்கு, பெரியவர்களுக்கு அடங்கி பக்தியுடனே, 'நாம் வேண்டுகிற வாழ்க்கை நலத்தை நம்மைவிடப் பெரிய ஒரு சக்திதான் தருகிறது' என்ற நம்பிக்கையில்தான் இந்தக் கார்யங்களைப் பண்ணுகிறோம். அதாவது, ... கொஞ்சம் விசித்திரமாகத் தான் இருகிகிறது ... உலக ஸம்பந்தமான உபாயங்களைக் கொண்டே உலகுக்கு அப்பாற்பட்ட சக்தியைப் பிடிப்பதற்குத்தான் மதாசாரம் என்பது ஒரு பக்கம் உண்மையென்றால், இங்கேயோ ஒருவிதத்தில் அந்த ஈஸ்வர சக்தியை உபாயமாக வைத்துக்கொண்டு, உலக வாழ்க்கையிலே நன்மை பெறக் கார்யங்களைப் பண்ணுகிறோம்! இப்படிப்பட்ட கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டுப் பண்ணு என்று சாஸ்திரம் சொல்கிறபடி கட்டுப்பட்டு ஒழுங்கோடு பண்ணுகிறோம். இப்படி இதிலே தொக்கி நிற்கிற தெய்வ பக்தி, நம்பிக்கை ஆகியவற்றாலும், side effect-ஆக உண்டாகிற அடக்கம், ஒழுங்குமுறை இவற்றினாலும், நாம் கேட்காமலே நமக்குக் கொஞ்சம் இவற்றினாலும், நாம் கேட்காமலே நமக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்த சுத்தியும் உண்டாக ஆரம்பிக்கிறது. அதிலே மேலே மேலே தேறிப் போகிறபோதுதான் தன்னாலே இதுபோன்ற அல்ப

பலன்களுக்காக இல்லாமல் ஈஸ்வரனுக்காகவே மதாநுஷ்டானங்கள் பண்ண வேண்டும் என்ற பக்வம் உண்டாகிறது.

இப்படி ஏதோ ஒரு விதத்தில் தெய்வ சிந்தனை, பூர்விக ஆசாரத்தில் ஒரு சிரத்தை இவற்றோடு கார்யம் பண்ணுவதற்கும், அடிமுதல் நுனிவரை எங்கேயும் தெய்வத்திற்கோ, ட்ரெடிஷனுக்கோ கட்டுப்படாமல், முழுக்க லௌகிகமாக தற்குறியாக, தறிகெட்டுக் கார்யம் பண்ணுவதற்கும் ரொம்ப வித்தியாஸமிருக்கிறது. அதனால் தான் லோக வாழ்க்கைக்கானதையே பண்ணும்போதுகூட, மத ஸம்பந்தமானவை ஒருத்தனுக்கு சித்த சுத்தியைக் கொடுக்க ஆரம்பிக்கிறதென்றால், வேறு விதமாகச் செய்வது சித்தத்தில் மேலும் அழுக்கையேற்றி அஹங்காரத் தடிப்பை ஜாஸ்தி பண்ணுகிறது.

ஒரு சின்ன த்ருஷ்டாந்தம் சொல்கிறேன். பலனை உத்தேசித்துத்தான் அநேகச் சடங்குகள் பண்ணுகிறோம். ஆனால் உத்தேசித்தபடி பணம் வரவில்லை, பிள்ளை பிறக்கவில்லை. என்ன பண்ணுகிறோம்? அப்போதைக்கு ஒரு ஏமாற்றம் உண்டாகத்தான் செய்கிறது. ஆனால் அது ஆழமாகப் போய்விடுவதில்லை. என்ன இருந்தாலும் சாஸ்திரத்தை நம்பித்தானே செய்தோம்? அந்த சாஸ்திரத்தின் ஆணிவேரான கொள்கை என்ன கர்மாப்படி நடக்கும் என்பதுதானே ஈஸ்வராநுக்ரஹ பலத்தால் அந்தக் கர்மாவை நமக்குக் கொஞ்சம் ஸாதகமாக்கிக் கொள்ளலாமென்றுதான் சாஸ்திரம் சொன்ன ஏதோ ஒன்றைப் பண்ணினோம். பலிக்கவில்லை. பலிக்காவிட்டாலும் அந்த சாஸ்திரமே நம்மை, "கர்மா! அநுபவித்துத்தானாகணும்!" என்று தேற்றிக்கொள்ளும்படி பண்ணுகிறது. நாம் எதையோ உத்தேசித்து தெய்வ ஸம்பந்தமான ஒன்றைச் செய்தோமென்றாலும், உத்தேசம் ஃபெயில் ஆனபிற்பாடும் அந்த தெய்வ ஸம்பந்தத்தையும், சாஸ்திர ஆசரணையையும் அதோடு விட்டு விடுவதற்கு மனஸு வருதில்லை. இப்படிக் கொஞ்சங் கொஞ்சமாக நல்ல வழியிலேயே திருப்பிவிடப் படுகிறோம். நெருங்கின பந்துக்களின் ஆயுஸுக்காக எத்தனையோ பிரார்த்தனை, ஹோமங்கள் செய்து அது பலிக்காமல் பெரிய சோகம் ஏற்பட்டு விட்டது என்பதில்கூட frustrate -ஆகி [ஏமாற்றத்தில் மனம் சிதைந்து] நாஸ்திகர்களாகப் போனவர்கள் அபூர்வமாகவே இருப்பார்கள்.

ஆனால் இதுவே ஸோஷல் அல்லது பொலிடிகல் ரீதியில் ஒரு கார்யத்தைப் பண்ணி (கார்யம் என்றாலே இந்த நாளில் 'போராட்டம்'தான்!) அது தோற்றுப் போனால் என்ன நடக்கிறது? "நம் கர்மா"என்று சொல்லிக் கொண்டு எவராவது பேசாமல் இருப்பார்களா? உடனே இன்னம் பெரிய போராட்டம், கிளர்ச்சி என்று ஊரை இரண்டாக்குகிறார்கள், த்வேஷம் நாளுக்கு நாள் ஜாஸ்தி தான் ஆகிறது. இது சித்தத்துக்கு அழுக்குதானே?

கார்யம் தோற்றுப் போகாமல் ஜயித்தாலும் இதே வித்தியாஸத்தைப் பார்க்கலாம். சாஸ்திரப்படி பண்ணி ஒரு லாபத்தை அடைந்து விட்டால், மறுபடி அதே லாபத்துக்காக பகவானிடம் போவதற்குத் தன்னாலேயே ஒரு லஜ்ஜை உண்டாகிறது. "அவன் இத்தனை பண்ணினதே பெரிசு" என்று அவனைச் சும்மா சும்மா வேண்டிக் கொண்டு தொந்தரவு பண்ணாமல், "அன்பாக பக்தி பண்ணணும், நாம் இப்படிப்பட்ட ஆசைகளைக் குறைத்துக் கொள்ளணும்" என்ற அறிவு துளித் துளியாவது வருகிறது. அந்த அளவுக்கு அது சித்த சுத்தி. 'போராட்டம்' நடத்தி கார்யத்தை ஸாதித்துக் கொள்ளும்போது என்ன ஆகிறது? "நாம் சக்தியைக் காட்டினால் பயப்பட்டுக்கொண்டு, கேட்டதைப் பண்ணுகிறார்களல்லவா? இன்னம் கொஞ்சம் மிரட்டிப் பார்ப்போம்" என்று புதுப்புது ரைட்கள் கொண்டாடிக் கொண்டு, மேலே மேலே டிமான்ட் செய்வதையே பார்க்கிறோம். தோற்றால் த்வேஷம் ஜாஸ்தியாகிறது என்றால், ஜயித்தாலோ ஆசையும் அஹங்காரமும் ஜாஸ்தியாகிறது. இதுவும் அழுக்குத்தான்.

7.16-ஆத்மிக லக்ஷியச் சீர்திருத்தம்

இதுவரை ஸோஷல் ரி∴பார்ம் மட்டும் சொன்னேன். ஆத்ம ஸம்பந்தமாக ஜனங்களை உயர்த்த வேண்டும் என்கிற லக்ஷியத்தில் ஏற்பட்டுள்ள ரிலிஜியஸ் ரி∴பார்ம் மூவ்மென்ட்கள் விஷயம் என்ன? இவையும் equality (ஸமத்வம்) என்ற பெயரில் யாரும் எதையும் செய்யலாம் என்கிற ஸ்வதந்திரதைதயும் அதனாலேயே ஓரளவு விநயக்குறைவையும் உண்டாக்கி விடுகின்றன. ஆர்த்தடாக்ஸி, ஸூபர்ஸ்டிஷன் என்று ஏதாவது பேரைச்

சொல்லி ட்ரெடிஷனை break பண்ணலாம் என்று இந்தத் தலைவர்கள் சொல்வது, எதையுமே break பண்ணும் துணிச்சலை ஃபாலோயர்களுக்குக் கொடுத்து விடுகிறது. அந்தந்த மூவ்மென்டுக்கு என்று புதிதாக பண்ணியிருக்கிற ஒழுங்கு விதிகளையும் புதிதாக ஏற்படுத்தியிருக்கிற 'சடங்கு'களையும் organised-ஆகச் சில சில இடங்களில் அதன் ஃபாலோயர்கள் நன்றாகவே அநுஸரித்து வருகிறார்களென்பது உண்மைதான். ஆனாலுங்கூட இப்படி ஒரு காலனியாக இல்லாமல் தனித்தனியாக இருக்கப்பட்டவர்கள் அந்தப் புது ஒழுங்கிலும் வராமல் வீணாகத்தான் போகிறார்கள். இன்னொரு வேடிக்கை:இப்படிப்பட்ட மூவ்மென்ட்களின் தலைவர்கள் அல்லது மூலபுருஷர்களின் பிறந்த தினம், நூற்றாண்டு என்று கொண்டாடும்போது ராஜாங்கத் தலைவர்கள், அறிவாளிகள், பத்திரிகைகள் எல்லாம் அவர்களைப் பற்றி ஏராளமாக எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். ஸ்டாம்ப் போடுவது, 'ஸ்டாச்சு' வைப்பது எல்லாம் பெரிய சடங்காய் நடக்கின்றன. ஆனாலும் இந்த இயக்கங்களுக்கே dedicate பண்ணிக்கொண்ட மெம்பர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், காலத்துக்கு ஒவ்வாத அசட்டு, முரட்டு ஒரிஜினல் ஹிந்து மதத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்களென்று பார்த்தால், நூற்றுக்கு தொண்ணூறு பேர் புதிய புத்திசாலி கோஷ்டிகளுக்குப் போவதற்குப் எதனாலோ தயங்கிக் கொண்டு பழைய பத்தாம் பசலி மதத்தில்தான் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இப்படி நான் பெருமையடித்துக் கொள்ளும் போதே இதுதான் வருத்தப்பட வேண்டிய விஷயம், அவமானப்பட வேண்டிய விஷயமென்றும் தெரிகிறது. ட்ரெடிஷனலான ஹிந்து மதத்தில் இருந்துகொண்டே புதிய ரிஃபார்ம்களை ஆதரித்து அதற்கும் “ஜே” போடுகிறார்கள்; இதில் இருந்துகொண்டேதான் ரிஃபார்ம்காரர்களையும் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்களென்றால் என்ன அர்த்தம்? இப்படி இருக்கவும் மனப்பூர்வமான பிடிமானம் இல்லை;அப்படிப் போகவும் தைரியம் இல்லை; மொத்தத்தில் ஒருவித கன்விக்ஷனுமில்லை என்றுதானே ஆகிறது? ட்ரெடிஷனலான மதத்தில் இருக்கிற மாதிரி இருந்து கொண்டே அதிலே புல்லுருவி மாதிரித் தோன்றும் ஆசார

ஹீனப்போக்குகளைப் போஷிக்கிறதென்றால் அது தாய் மதத்துக்குச் செய்கிற ஹானிதானே?

இந்தத் தப்பைப் பொது ஜனங்கள் மட்டுந்தான் பண்ணுகிறார்கள் என்றில்லை. மஹான், தெய்வாம்சமே இருக்கிறவர் என்று நினைத்துக்கொண்டு ஜனங்கள் போகிற நவீனகால மதத்தலைவர்கள்-லீடர்கள் சிலரும் தெரிந்தோ தெரியாமலோ இதற்குக் காரணமாயிருக்கிறார்கள்.

7.17-தனிப் பிரிவாகாத நவீன மதத் தலைவர்கள்

ஸநாதனமான ஆசார்யபீடமொன்றில் நான் இருப்பதால் நான் இந்த விஷயத்தைச் சொன்னால் உடனே vested interest [ஸ்வய நல நோக்கம்] எனற கண்டனம் வரும். வந்தாலும் வரட்டும் என்றுதான், மனஸில் படுவதைச் சொல்லாவிட்டால் தோஷம் என்பதால் சொல்கிறேன். இப்போது அநேக ஸ்வாமியார்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் ஹிந்துமதம் என்ற parent body -யிலிருந்து, மூலஸ்தானத்திலிருந்து தாங்கள் பிரிந்து போய்ச் சீர்திருத்த மதம் தனியாக ஆரம்பித்திருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை. அதாவது இவர்கள் பெயரிலும் ஸ்தாபனம், மிஷன் ஏதாவது இருந்தாலும் அதை ஹிந்து மதத்தின் main stream–கு வெளியாக பிரம்ம ஸமாஜ், ஆர்ய ஸமாஜ் என்று அநேகச் சீர்திருத்த இயக்கங்கள் தனியாக இருப்பது போலக் காட்டிக் கொள்வதில்லை ஸம்ப்ரதாயமாக வந்துள்ளதும், இன்றும் பெரும்பாலான ஜனங்கள் விட்டுப் போகத் தைரியமில்லாமல் ஒட்டிக் கொண்டிருக்கிற மாதிரி இருப்பதுமான traditional ஹிந்து மதத்தின் பிரதிநிதிகளாகவே தங்களை இந்த ஸ்வாமிஜிகள் சொல்லிக் கொள்கிறார்கள். நம்முடைய வேதாந்தம், இதிஹாஸம் இவற்றைப் பற்றி நன்றாகப் பிரஸங்கம் செய்தும் புஸ்தகம் போட்டும் பிரசாரம் பண்ணுகிறார்கள். நம்முடைய பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். பஜனையிலிருந்து யோகம் வரையில் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது traditional-ஆக வந்துள்ள எங்களைப் போன்ற தர்ம பீடங்களை விடக்கூட இவர்கள்தான் மதப்பிரசாரத்துக்காக நிறையப் பண்ணி,

"மறுமலர்ச்சி" என்கிறார்களே அப்படி ஸமய விஷயத்தில் ஜனங்களைச் சக்தியோடு திருப்பி வருகிறார்கள் என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட கூட்டம் இவர்களிடம் சேருகிறது. இவர்களில் சிலருக்கு விசேஷ வாக்குவன்மை இருக்கிறது. ஆத்மார்த்தமான விஷயங்களைப் பொது ஜனங்கள் ரஸித்துக் கேட்கும் விதத்தில் அழகாகவும் மனஸில் பதியும்படியும் எடுத்துச் சொல்கிறார்கள். இன்னம் சில பேருக்கு வியாதி, வக்கை, வேறே ஏதோ கஷ்டம், ஆபத்து என்றால் அதைத் தீர்த்து வைக்கிற சக்தி இருக்கிறதென்று போகிறார்கள். ஸித்திகள் உள்ளவர்களாக இப்படிச் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் போகிறவர்கள் இம்மாதிரி லாபங்களைப் பெறுவது மட்டுமில்லாமல் சில ஸமயாநுஷ்டானங்களையும் பின்பற்ற ஆரம்பிக்கிறார்கள்.

ஆகையால் பிராசீனமான தர்ம பீடங்களில் இல்லாமல் தனியாகத் தோன்றியிருக்கிற ஸ்வாமியார்களாலும் மதத்துக்கு நல்லது நடந்துதான் வருகிறது. மனஸ் விட்டுச் சொன்னேனானால், எங்களைப் போன்ற ஸநாதன ஆசார பீடங்களைக் கட்டுப்பெட்டி என்று படிப்பாளிகளும், தேசத்தலைவர்களும் திருப்பித் திருப்பிச் சொல்லி, புது ஜெனரேஷன்களுக்கு ஒரு ப்ரெஜுடிஸே உண்டாக்கியிருந்த ஸந்தர்ப்பத்தில், ஜனங்கள் அடி நாஸ்திகமாகப் போகாமல் ஏதோ கொஞ்சமாவது மத விச்வாஸம் பெற்றதற்குக் காரணமே இந்தத் தனி ஸ்வாமிஜிகள்தான் என்று கூடச் சொல்லலாம். சித்தாகத்தான் இருக்கட்டும், வேறு ஏதோ சக்தியாகத்தான் இருக்கட்டும்; நாலு பேருக்கு கஷ்டத்தைப் போக்குகிறார்கள், அதோடு அவர்களைக் கொஞ்சம் பயபக்தியில் தூண்டிவிடுகிறார்கள், ஆத்ம விஷயங்களைப் பேசியும் எழுதியும் பிரசாரம் பண்ணுகிறார்களென்பதற்காக இவர்களைப் பற்றி நல்லதாகத்தான் நினைக்க வேண்டும்.

இது ஒரு நல்ல தொழிலாயிருக்கிறதே என்று போலிகளும் கிளம்பியிருக்கலாம் ஜனங்கள் அவர்களிடம் ஏமாந்தும் போகலாம். தடுக்கி விழுந்த இடமெல்லாம் ஒரு Divine Messenger [திவ்ய தூதர்] , Messiah [இறைவன் அனுப்பி வைத்த லோக ரக்ஷகர்] , தெய்வாம்சமே பெற்றவர் என்று ஏதாவதொன்று சொல்லிக் கொண்டு பலபேர் இருந்தால் genuine -ஆக

இருக்க முடியுமா என்று ஜனங்களுக்கும் கலக்கம். ஆனாலும் 'எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்?' என்று பாவம், அங்கேயும் ஓடுகிறார்கள். இப்படியே ஒரு பக்கம் வெளிதேசத்தவர்களும் Gurudom, Swamidom என்று கேலி பண்ணிக் கொண்டே, இன்னொரு பக்கம் கூட்டம் கூட்டமாக இவர்களிடம் வந்து சிஷ்யர்களாகிறார்கள்.

போலி இருக்கலாம் என்பதற்காக, எல்லாம் போலி என்று சொல்லிவிட முடியாது. வேறே எது போலியோ இல்லையோ, ஒரு ஸ்வாமிஜியிடம் போகிறான், ஏதோ ஒரு கஷ்டம் தீர்கிறது என்றால், வாஸ்தவத்தில் அவர் அதைத் தீர்த்து வைக்காவிட்டால்கூட, இவனுக்கு ஒரு தாப சாந்தி உண்டாவது போலியில்லையே? நிஜந்தானே? பிரஸங்கம் பண்ணுகிறபடி அவர் [சொந்த வாழ்க்கையில்] இல்லாவிட்டாலும் போகட்டும், அதைக் கேட்டதில் இவனுக்கு ஒரு தெளிவு வந்தது நிஜந்தானே? அவர் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும் - இவன் நல்லது என்று நினைத்துப் போனான், தன் அஹங்கார மமகாரங்களை விட்டு நமஸ்காரம் பண்ணினான். ஏதோ நல்லதையும் அடைந்தான். முடிவில் கொஞ்சமாவது தெய்வ பக்தி பெற்று ஏதோ கொஞ்சம் மதாநுஷ்டானத்தையும் எடுத்துக்கொள்கிறான். இந்த மட்டில் நல்லதுதான்.

ஆனாலும் 'ஸமயாசாரம்' என்று பார்க்கும்போது என்ன ஆகிறது? இந்த ஸ்வாமிஜிக்கள் அநேகமாக சாஸ்திர ஆசாரங்களில் பெரும்பாலானவற்றைக் கழித்துக் கட்டி விடுகிறார்கள். இவர்களில் முக்காலே மூணுவீசம் பேரும் அதிகார பேதத்தை* ஆதரிக்காதவர்கள்தான். வேறு பல ஆசார அநுஷ்டானங்களையும் காலத்துக்குப் பொருந்தாது என்று எடுத்துப் போட்டுவிட்டார்கள்தான். சாறு - சக்கை, தானியம் - உமி என்று சொல்லிக்கொண்டு, ஸமயாசார அநுஷ்டானங்களில் அவரவருக்கு எது ஸரியென்று தோன்றுகிறதோ, எது இஷ்டமாயிருக்கிறதோ, ஸௌகரியமாயிருக்கிறதோ அது மட்டுமே சாறு, அதுதான் தானியம் என்று வைத்துக்கொண்டு பாக்கியெல்லாமே சக்கை, உமி என்று விட்டு விடுகிறார்கள். எங்களைப் போன்ற ஸநாதனிகள் ஆசாரம் ஆசாரம் என்று சொல்லிக் கொண்டு, ஸ்பிரிட்டை [உயிரை] விட்டு விட்டு ஸ்கெலிடனை

[எலும்புக்கூட்டை] மட்டும் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று இவர்கள் சொல்லி, ட்ரெடிஷனல் மதத்தில் தொண்ணூறு பெர்ஸென்டாக இருக்கும் ஆசார அநுஷ்டானாதிகளை விட்டு விட்டிருக்கிறார்கள். ஆனாலும் ஹிந்துமத parent body -யிலிருந்து வெளியேறித் தனியான சீர்திருத்த இயக்கமாகவும் இல்லாமல் இதிலேயே இருந்துகொண்டு, இவர்கள் அநுஷ்டிப்பதுதான் ஸரியான ஹிந்துமதம் என்று ஜனங்கள் பிரமை கொள்ளும்படிப் பண்ணுகிறார்கள்.

இந்த இடத்திலே தான் நான் பிரிந்துபோகிற சீர்திருத்த இயக்கங்களே தேவலையென்று நினைக்கிறேன். அபிப்ராய பேதமிருந்தால் நன்றாக ஆலோசித்து பேதத்தைப்

---

* வர்ண-ஆச்ரமங்களை பொறுத்து எவரெவர் என்னென்ன செய்யலாம், செய்யக்கூடாது என்னும் சாஸ்திர பாகுபாடு.

7.18-'நவீன வேதாந்தி'கள்

ரி ஃபார்ம் ரிலிஜன் என்று தனியாகப் போகாமல் நம்முடைய மதத்துடைய 'நிஜ ஸ்பரூப'த்தின் custodians [காவலர்] தாங்கள்தான் என்கிறவர்களில் இன்னொரு வகையினர் "வேதாந்தா, வேதாந்தா" என்று சொல்லிக் கொண்டு, ஃபிலாஸபியைத் தவிர கர்மாக்களாக இருக்கிற எல்லாமே நம் மதத்தின் சக்கைதான் என்று தூக்கிப்போடச் சொல்கிறார்கள். வாஸ்தவத்தில் ஸாமானிய மநுஷ்யனின் தரத்தை உயர்த்தக் கர்மா இல்லாமல் முடியவே முடியாது. அதனால்தான் வைதிகாநுஷ்டானங்களை விலக்கி விட்டவர்களும் ராட்டையைச் சுற்ற வேண்டும், handicrafts செய்ய வேண்டும் என்று ஓயாமல் ஏதாவது வேலை வாங்கினார்கள். திருப்பித் திருப்பிச் சொன்னதையே, எத்தனை தரம் சொன்னாலும் போதாது என்று, மறுபடியும் சொல்கிறேன் : காரியம், ஓயாத உழைப்பு இல்லாமல் சித்த சுத்தி ஸாத்யமேயில்லை.

சாஸ்திரத்தில் முதலில் இவன் மனஸை அநுஸரித்து இஹ லோக, ஸ்வர்க்க லோக லாபங்களுக்காகவே, அதாவது இந்திரிய ஸௌக்யங்களுக்காகவே கர்மாவைக் கொடுத்திருக்கிறது. ஆனால் இந்தக் கர்மாக்காளைச் செய்வதாலேயே இந்திரியங்களின் இழுப்பு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைகிறது. சித்தம் சுத்தமாகி மனஸானது [கார்யமில்லாமலே] தியானம் செய்யப் பழக்கப் படுத்தப்படுகிறது. கார்யமே வேண்டாம், "வேதாந்தா","த்யானா" என்றால் என்ன ஆகிறது? இதை நான் சொல்வதைவிடக் கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கில் சொல்கிறேன்:

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் |
இந்த்ரியார்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ||
[கீதை: 3.6]

அதாவது "காரியத்திலா ஞானம் இருக்கிறது? அதெல்லாம் வேண்டாம்" என்று கை, கால் முதலான கர்மேந்திரியங்களுக்கு வேலை கொடுக்காமல் நிறுத்திவிட்டு நேராக மனஸை சுத்தமான தியானத்தில் நிறுத்துவதற்கு ஆரம்பித்தால் என்ன ஆகிறது அந்த மனஸ் பரமாத்மாவையா நினைக்கிறது? இல்லை.

இந்த்ரியார்தான் மநஸா ஸ்மரந் -

இந்திரியங்களுக்கு வேண்டிய அல்ப ஸுகங்களைத்தான் மனஸு நினைக்கிறது. கர்மாவால் கர்மேந்த்ரியங்களை அழுக்கெடுத்து சுத்தப்படுத்திக் கொள்ளாதபோது மனஸும் அழுக்கைவிட்டு மேலே போகாதுதான். வெளியிலே இவன் பெரிய ஃபிலாஸபர், தத்வஞானி, ரிஷிஎன்றேகூட (இப்போது பத்திரிகைகள் நிறைய ஏற்பட்டபின் எல்லாவற்றுக்கும் அதிசயோக்தி தான்!) பெத்தப் பெயர் இருந்தாலும், லெக்சரிலும் புஸ்தகத்திலும் இவன் எவ்வளவு சோபித்தாலும், இப்படி மனஸிலே அழுக்கை வைத்துக் கொண்டிருப்பவனை பகவான்**விமூடாத்மா** - 'மஹா மூடன்' என்றுதான் சொல்கிறார். 'மூளையில்லாமல் காரியங்களைக் கட்டிக் கொண்டு அழச் சொல்கிறவர்களிடமிருந்து நம்மையும் நம் மதத்தையுமே ரக்ஷிக்கிற இவர்தான் மஹா புத்திமான்' என்று லோகத்தார் எவரைக்

கொண்டாடுகிறார்களோ, அவரையே பகவான் “விமூடாத்மா” என்கிறார். அதற்கும் மேலே இன்னொரு வார்த்தை சொல்கிறார்.

மித்யாசார: -

மித்யா என்றால் நிஜம் போல இருந்து கொண்டே பொய்யாகப் போகிற வேஷம் என்று அர்த்தம். ஆசாரமே வேண்டாமென்று இருக்கிற வாய் வேதாந்தியை ‘மித்யாசாரன்’ என்கிறார். இவன் கர்மாவை விட்டு விட்டான். ‘மனஸ் சுத்தம்தானே எல்லாம்?’ என்கிறான். ஆனாலும் இவன் மனஸ் அழுக்கிலேயே கிடக்கிறது. வெளியே வேதாந்தி போல வேஷம் போடுகிறான். இப்படி வெளியே ஒன்றாகவும் உள்ளே வேறாகவும், உயர்ந்த லக்ஷ்யத்தைப் பேசிக்கொண்டும் கீழான ஒழக்கத்தில் போய்க்கொண்டும் இருப்பதால் ‘மித்யாசாரன்’ என்கிறார். ‘மித்யாசாரன்’ என்பதற்கு ஸரியான வார்த்தை hypocrite. காரியம் பண்ணப் பிடிக்காத சோம்பேறித்தனம், ஒரு ஒழுக்கத்தில் கட்டுப்பட்டிருக்கப் பிரியமில்லாமை - இதற்காகவேதான் “Vedanta, Vedanta” என்று சாஸ்திர கர்மாவிலிருந்து பிரித்துப் பேசுகிறார்கள். உள்ளே பார்த்தால் - இதைச் சொல்ல ரொம்ப வருத்தமாயிருக்கிறது - எந்தக் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் இவர்கள் போயிருப்பதால் அநேக lapses* இருப்பது தெரிகிறது. ஆசாரக்காரர்கள் மூடர்களாயிருக்கட்டும், ஸ்வயநலக் கும்பலாயிருக்கட்டும், இரக்கமேயில்லாத துஷ்டர்களாகத்தான் இருக்கட்டும். ஆனால் அவர்களிடம் இப்படிப்பட்ட lapses இருப்பதில்லையல்லவா? அதுதான் discipline (நெறி) என்பதன் சக்தி.

---

* தமிழில் சொன்னால் கடுமையாய் தொனிக்குமென்றே ஸ்ரீ பெரியவாள் “lapses” என்று சொன்னதாகத் தோன்றுவதால் நாமும் தமிழ்ப்படுத்தவில்லை.

7.19-நிகர விளைவு

ஆகக்கூடி பலவிதமான ஆசாரச் சீர்திருத்தங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்தோமேயானால் பழைய ஒழுக்கத்தையும் காரியங்களையும்

எடுத்துவிட்டுப் புதியதை வைத்தால், பழசை மீறிய பழக்கத்தில் புதிசையும் மீறிக் கட்டுப்பாடில்லாமல் போகிறார்கள். இவர்கள் காரியம் என்று பண்ணுவதெல்லாம் ஸ்வயலாபம், `தான்' என்கிறதை வளர்த்துக்கொள்வது என்பதற்காகத்தான் ஆகிறது. ஆசாரங்கள் கடுமையாக இருக்கிறதென்று இளக்கி, ஃபாஷன் பண்ணினால் பலனும் இளகி ஓடியே விடுகிறது. சித்த சுத்தி ஏறப்பட மாட்டேன் என்கிறது. "கார்யத்தில் ஒன்றுமில்லை; வேதாந்தா" என்றால் வெறும் சோம்பேறியாகப் போகிறான்; அப்போது மனஸ் சுத்தமாகாமல் போகிறது என்பது மட்டுமின்றி, இருக்கிற சுத்தமும் போய் அழுக்கைச் சேர்த்துக் கொள்கிறது. ஆசாரமில்லாமலிருக்கிற அநாசாரம்; ஆசாரக் கட்டுப்பாடு போனதால் கண்டதைத் தின்பது, குடிப்பது, கலஹம் செய்வது, இன்னும் மஹாபாபங்களைப் பண்ணுவது என்கிற துராசாரம்; உள்ளொன்றும் புறமொன்றுமாக ஹிபாக்ரிஸி செய்யும் மித்யாசாரம் என்பவைதான் மொத்தத்தில் விருத்தியாகின்றன.

7.20-அறிந்தவனும், அறியாதாரும்

இப்படி எல்லா ஜனங்களையும் அதர்மப் பிரவாஹத்தில் அவிழ்த்துவிடக் கூடாது என்றுதான் பகவான் அர்ஜுனனை 'வார்ன்' பண்ணுகிறான். அதில்தான் ஆரம்பித்தேன். அப்புறம் 'ஸப்ஜெக்ட்' எங்கெங்கேயோ - ஆனால் எல்லாமும் ஸமயாசார ஸம்பந்தமுள்ளதாகவே - போய்விட்டது. ஜனங்கள் 'கர்மஸங்கிகள்' தான் - பலனில் ஆசைவைத்து கர்மாக்களைப் பண்ணுவதில் ஈடுபாடு கொண்டவர்கள் தான். நிஷ்காம்யம், நைஷ்கர்ம்யம், த்யானம், ஞானம் என்றால், அவர்கள் இருக்கிற நிலையில் எடுபடாது என்று பகவான் சொன்னதைச் சொன்னேன். இவர்களை நல்லறிவு பெறாத 'அவித்வாம்ஸ:' என்றே சொல்லியிருப்பதையும் சொன்னேன்.

ஸரி, நல்லறிவு பெற்ற 'வித்வான்' என்ன பண்ண வேண்டும்? இப்போது சீர்திருத்தக்காரர்கள் பண்ணுகிற மாதிரி காரியங்களைக் குறைத்து ஈஸியாக்கித்தர வேண்டுமா? "கர்மா எல்லாம் யூஸ்லெஸ்; மனஸின் purity தான் முக்கியம்; அதனால் ஞானத்துக்கு வாருங்கள்" என்று உபதேசிக்க

வேண்டுமா? முடிவிலே பகவான் இப்படித்தான் கர்மஸந்நியாஸத்தை உபதேசித்து, ஞானத்தில் எல்லாக் கர்மாவையும் பஸ்மீகரமாக்கச் சொல்கிறார். ஆனால் முடிவிலேதான்; ஆரம்பத்திலே அல்ல. ஆரம்பத்தில் வித்வான் என்ன பண்ண வேண்டுமென்கிறார்?

… அவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத குர்யாத் வித்வாம்-ஸ்ததா…

"பாரத!" என்று அர்ஜுனனைக் கூப்பிட்டு, "**யதா அவித்வாம்ஸ: குர்வந்தி ததா வித்வான் குர்யாத்**" என்கிறார். ரொம்ப விசித்ரமாகச் சொல்கிறார். வித்வான் - அதாவது விஷயம் தெரிந்த ஞானி - எப்படிப் பண்ணுகிறானோ அந்த வழியிலேயே அவித்வானான அஞ்ஞானியும் பண்ணிப் பார்க்க வேண்டுமென்றுதான் பொதுவாக லோகமெல்லாம் சொல்வது. ஆனால் பகவான் சொல்வதற்கு அர்த்தமோ இதற்கு அப்படியே நேர்மாறாக இருக்கிறது; **யதா** – எவ்வாறு, **அவித்வாம்ஸ:** – அஞ்ஞானிகளான பொது ஜனங்கள், **குர்வந்தி** - செய்கிறார்களோ, **ததா** – அவ்வாறே, **வித்வான்** – ஞானியும், **குர்யாத்** – செய்ய வேண்டும்.

அஞ்ஞானி பண்ணுகிற மாதிரிதான் ஞானியும் பண்ண வேண்டும் என்று ஸ்பஷ்டமாகச் சொல்கிறார்!

அஞ்ஞானிக்கு இச்சா லாபத்திலேயே பற்று; அதற்காகவே சாஸ்திர கர்மாக்களைச் செய்கிறான். "அந்த சாஸ்திர கர்மங்களையே ஞானியும் பண்ணணுமப்பா" என்கிறார். "ஞானிக்கு இப்படிப்பட்ட இச்சை, ஆசைப்பற்று இருக்கலாமா? அதுதானே நரக த்வாரத்துக்கு வழி?" என்று கேட்டால், "நான் அப்படிச் சொன்னேனா? ஞானியும் கர்மா பண்ணணும் என்றேனே தவிர, தன்னுடைய இச்சா பூர்த்திக்காப் பண்ணணும் என்று சொல்லவில்லையே! ஸந்தேஹமிருந்தால் இப்போதே qualifying clause போட்டு விடுகிறேன்:

"குர்யாத் வித்வான் ததா அஸக்த:"

என்று 'அஸக்த:' வைச் சேர்க்கிறார். "அஸ்கத:" என்றால் 'பற்றில்லாதவனாக' என்று அர்த்தம். முதலில் அஞ்ஞானியைச் சொல்லும்போது முதல் வார்த்தையாகவே "ஸக்தா:" என்றார். "பற்றுள்ளவர்களான" என்று

ஆரம்பித்தார். சிறியதான இந்திரிய இன்பப் பயன்களில் பற்றுக் கொண்டவர்களாக அவித்வான்கள் எந்தெந்த கர்மாக்களைச் செய்கிறார்களோ அவற்றையே வித்வானும் இப்படிப்பட்ட பற்று இல்லாமல் செய்ய வேண்டும் என்கிறார்.

"எதற்காக? ஞானி என்றால் ஞானம் அடைந்து விட்டவன் என்று அர்த்தம். ஞானத்துக்கு அப்புறம் அவன் அடைய வேண்டியது எதுவுமில்லை. அவனுக்கு எந்தப் பலனும் தேவைப்படாதபோது இந்தக் கர்மாக்கள் எதற்காக?"

"அதுவா? அவன் தனக்காக இப்படிச் செய்ய வேண்டும் என்று நான் சொன்னேனா என்ன? பின்னே ஏன் செய்ய வேண்டுமென்றால் -

சிகீர்ஷு: லோக ஸங்க்ரஹம்".

"ஸங்க்ரஹம்" என்றால் நன்றாகப் பிடித்துக் கொள்வது; அதாவது கட்டிப் பிடித்துக் காப்பாற்றுவது. "லோக ஸங்க்ரஹம்" என்றால் லோகத்தை இப்படிப் பரம அன்போடு கட்டிக்காப்பது - நல்வழிப்படுத்துவது. லோகம் என்றால் அஞ்ஞானிகள்தான். ஞானி லோகத்துக்கு மேலே போனவன்.

"சிகீர்ஷு:"– விரும்பி;"லோகஸங்க்ரஹம் சிகீர்ஷு:"– உலகத்தை உயர்ந்த மார்க்கத்தில் கொண்டு போக வேண்டுமென்று விரும்பி.

ஞானிக்கு ஆசை இருக்கக் கூடாதுதான் என்றாலும் பகவானே அவன் மனஸு கருணை சுரக்கும்படிப் பண்ணி, "ஐயோ, லோகம் இப்படிக் கெட்டுப்போய் கஷ்டப்படுகிறதே; இதை ஸங்க்ரஹம் பண்ண வேண்டும்" என்று ஆசைப்பட வைக்கிறான்.

அதாவது ஜனங்களை மேலே கொண்டு போவதற்காகவேதான் ஞானியும் அவர்களைப் போல சாஸ்திர கர்மாக்களைப் பண்ணிக் காட்ட வேண்டும். தன்னுடைய உச்ச நிலைக்கு அவர்களை அழைத்துக் கொண்டு போவதற்காகவே அவர்கள் இருக்கிற ஏணிப்படிக்கு இறங்கி வந்து, அவர்களுடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'ஸம்-க்ரஹம்' என்றபடி நன்றாக இறுக்கிப் பிடித்து மேலே ஏற்றிக் கொண்டு போக வேண்டும்.

சாஸ்திரோக்தமாக ஸாதாரண ஜனங்கள் என்னென்ன கர்மா செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் ஞானியே மாடலாக இருந்து பண்ணிக் காட்டி, அவர்களையும் பண்ண வைக்க வேண்டும். அவனுடைய ஞானத்தையும் பக்தியையும் அப்புறந்தான் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். இப்போது அவர்களுக்கு அதில் ருசி வராது. அதனால் முதலில் அவர்கள் சாஸ்திரோக்த கர்மாக்களைப் பண்ணுவதற்கே, தன்னளவில் அவற்றைக் கடந்துவிட்ட ஞானியும் (ஞானி என்றால் பக்திமானும் தான்) இவற்றைச் செய்து ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் இவன் மாதிரி ஆவதற்காகவே முதலில் அவர்கள் மாதிரி இவன் ஆக வேண்டும். மேல்நிலையில் இருக்கிற அவன் வாஸ்தவத்தில் கர்மாவில் ஒட்டாவிட்டாலும் அப்படி நடக்க வேண்டும். (இதற்கு நேர்மாறாகத்தான் இப்போது நிஜமாக வேதாந்தத்தில் ஒட்டிக் கொண்டிருந்தவர்களும் அப்படி நடிக்கிறார்கள்!)

அப்படியானால் ஞானிக்கு மட்டும் உள்ளன்றும் புறமொன்றுமாக இருக்கிற "மித்யாசார தோஷம்" ஒட்டாதா?

ஒட்டாது. வாஸ்தவத்தில்தான் அவனுக்கு உள் - புறம் என்ற பேதமேயில்லையே! எதிலும் ஒட்டாத நிலைதானே ஞானம்? அதில் தோஷம் மட்டும் எப்படி ஒட்டும்? இன்னொரு எக்ஸ்ப்ளனேஷன்: இவன் வேதாந்தி-வேஷம் போடுகிறவனைப் போலத் தன்னைப் பற்றி லோகம் உசத்தியாக நினைக்கவேண்டுமென்றா துராசையில் இப்படிச் செய்கிறான்? கர்மாவைச் செய்யப் பிடிக்காத அடங்காக் குணத்தாலே அவன் ஞானி வேஷம் போடுகிறானென்றால், இவனோ நிச்சிந்தையான நிஷ்க்ரிய ஞான நிலையின் நிம்மதிலேயே தான் பாட்டுக்குக் கிடக்கலாம் என்றில்லாமல் பாமர ஜனங்களிடம் பரம கருணையாலல்லவா கர்மி மாதிரித் தன்னைக் குறைத்துக் காட்டிக்கொண்டு, தனக்கு வேண்டியே யில்லாத கார்யங்களை இழுத்துப் போட்டுக்கொள்கிறான்? இது தியாகமே தவிர, மித்யாசாரமாக எப்படி ஆகும்?

ஸரி, இவன் எதற்காக இந்த சாஸ்திர கர்மாக்களைச் செய்ய வேண்டும்?

இவனை லோகம் ச்ரேஷ்டன் என்று நினைக்கிறது. இவனைப்போல உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறவர்கள் எப்படி நடக்கிறார்களோ அப்படி நடந்து பார்க்க வேண்டுமென்று ஜனங்களுக்கு உள்ளூர ஒரு ஆசையுண்டு.

யத் யத் ஆசரதி ச்ரேஷ்ட: தத் தத் ஏவ இதரோ ஜந: **।** (3.21)

ஆசை உண்டே தவிர, ச்ரேஷ்டர்கள் நடப்பது ரொம்பவும் உயர்ந்த மாதிரி இருந்தால், இவர்களால் பின்பற்ற முடியாமல், அதை அநுஸரிக்க முடியாமல் தோற்றுப் போவார்கள்; தோற்றுப்போவது தெரியக்கூடாது என்று போலியாக வேஷம் போடுவார்கள். அதனால் ச்ரேஷ்டனாயிருக்கப்பட்டவனே ஸாதாரண ஜனங்கள் இருக்க வேண்டிய, இருக்கக்கூடிய கீழ் லெவலுக்கு வந்து, அந்த லெவலின் ஒழுங்குகளை நடத்திக் காட்டுகிறான். ஞானிக்கு அது கீழ் லெவல் என்றாலும் ஸாதாரண மநுஷ்யனுக்கு அவனால் முடியக் கூடியதான சற்று உயர்ந்த லெவல்தான். சாஸ்த்ரோக்த கர்மா என்ற இந்த லெவலை விட்டால்தான் அவன் இன்னம் கீழ் லெவலில் பாழாய் விடுவான். இந்திரியம் இழுத்தபடிச் சிற்றின்பக் காரியங்களை மட்டுமே செய்தால் பாமர ஜனங்கள் அந்தச் சேற்றிலேயே புதைந்து போய், அப்புறம் ச்ரேஷ்டனாலுங் கூட அவர்களைத் தூக்கிவிட முடியாமல் போய்விடும். அதனால் சின்ன லாபங்களையே ஒரு நிலையில் தருவதாயிருந்தாலும், இதற்காக இந்திரியங்களை தெறிகெட்டுப் போகவிடாமல் அவற்றுக்கு இஷ்டமான பலன்களை ஒரு பக்கம் கட்டுப்படுத்தி சுத்தி பண்ணிக்கொண்டுமிருப்பதான சாஸ்திர கர்மாக்களை ச்ரேஷ்டன் பற்றில்லாமல், பட்டுக் கொள்ளாமல் அநுஷ்டித்துக் காட்ட வேண்டும். இவனைப் பார்த்து இவன் மாதிரியே பண்ண விரும்பும் ஜனங்களாலும் இவற்றை அநுஸரிக்க முடியும். த்யானம், ஆத்மவிசாரணை பண்ண முடியாது என்கிற மாதிரிக் கர்மாக்களைப் பண்ண முடியாது என்று இல்லை. எல்லாரும் பண்ணுவார்கள். அதற்கு goal-ம் மோக்ஷம், ஸம்ஸார நிவிருத்தி என்பது போல் அவர்களுக்கு அப்பீலாகாத ஏதோ ஒன்றாயில்லாமல், அவர்கள் ஆசைப்படும் லாபங்களாகவே இருப்பதால் இந்தக் கர்மாக்களைப் பண்ணுவதில் ச்ரமங்கள் நியமங்கள் இருந்தாலுங்கூடப் பொறுத்துக் கொண்டு பண்ணுவார்கள். இப்படி ச்ரமப்பட்டும், நியமத்துக்குக் கட்டுப்பட்டும் பண்ணுவதாலேயே கர்மாவானது இவர்கள் உத்தேசித்த

பலனைத் தருவதோடு, உத்தேசிக்காத பலனாக இவர்களுடைய உள்ளத்தின் அழுக்குகளை அலம்பி, இவர்களுடைய ஆசைப்பற்றுக்களையும் குறைக்க ஆரம்பிக்கும். அப்புறம் ஐஹிகமான [இஹலோகத்து] பலனுக்காக இல்லாமல், ஸமூஹம் ஒரு ஒழுங்கில் நடக்க வேண்டும், குடும்பம் ஒரு ஒழுங்கில் நடக்க வேண்டும், தனி ஆள் ஒரு கட்டுப்பாட்டில் சீராக அபிவிருத்தியாக வேண்டும் என்பதற்காகவே சாஸ்திர கர்மாக்களைத் தொடர்ந்து பண்ணிக் கொண்டிருப்பார்கள். நிஷ்காம்யகர்மா என்பது இதுதான். அதற்கு போவதற்கு வழி காம்யமாக சாஸ்திர கர்மா பண்ணுவதுதான். பலனில் ஆசையோடு பண்ணுவதே காம்யம்.

மேல்நிலையில் உள்ளவன் - "ச்ரேஷ்டன்" என்று சொல்லப்பட்டவன் - ஸாதாரண ஜீவனைக் காம்யமாகவாவது சாஸ்திர ஆசாரங்களுக்குக் கட்டுப்பட்டு கர்மா பண்ண வைப்பதற்காகத்தான் அவற்றைத் தானும் நிஷ்காம்யமாகப் பண்ணி வழிகாட்ட வேண்டும் என்று பகவான் உத்தரவு போடுகிறார். பாமரஜனங்கள் 'ஸக்தர்'களாகப் பண்ணுவது என்று அவர் சொன்னதே காம்யம்; அதை வித்வான் 'அஸக்த'னாகப் பண்ண வேண்டுமென்பதே நிஷ்காம்யம்.

வித்வான் பண்ணிக் காட்டாவிட்டாலும் பொது ஜனங்கள் ஏதாவது கர்மா பண்ணிக் கொண்டேதான் இருப்பார்கள் - காம்யமாக, "அது வேணும், இது வேணும்" என்று எதையாவது கார்யத்தைப் பண்ணிக் கொண்டிருக்காமல் எவனும் க்ஷணங்கூடச் சும்மா இருப்பதில்லை; **ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்-யகர்மக்ருத்.** ஏனென்றால் பிரகிருதி என்ற மாயை இப்படித்தான் ஸத்வ-ரஜோ-தமோ குணங்களால் ஜீவனைக் கட்டி அவனறியாமலே எதையாவது பண்ணிக் கொண்டிருக்கும்படி ஆட்டி வைக்கிறது : **கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை: (3.5) .**

ஆதலால் வித்வான் என்கிற ச்ரேஷடன் முன்னுதாரணமாகச் செய்து காட்டாவிட்டாலுங்கூட ஸாதாரண ஜனங்கள் தாங்களாகவே ஆசைப் பூர்த்திக்காக எதையாவது செய்துகொண்டுதானிருப்பார்கள். இதையேதான் இவர்கள் சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுச் செய்யுமாறு வித்வான் தன்

எக்ஸாம்பிளால் தூண்டுதல் தருகிறான். காம்ய கர்மாதான் 'ஆப்ஜெக்டிவ்', அதாவது லக்ஷ்யம் என்றாலும்கூட அதற்குப் போகிற வழி, means, தன்னிஷ்டப்படியில்லாமல் சாஸ்திரோக்தமாக மாற்றி அமைக்கப்படும்போது அதன் தன்மையே அடியோடு மாறிப்போகிறது! மட்டமாக இருப்பதே உத்தமமாக மாற்றப்படுகிறது. இச்சா பூர்த்திக்காகவே பண்ணுவதென்கிற போதும் சாஸ்திர கர்மா என்றால், "இத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும், ஸ்நானம் பண்ண வேண்டும், ஸத்வமாக இன்ன ஆஹாரந்தான் இத்தனை மணிக்கு அப்புறம் சாப்பிட வேண்டும், வேர்க்க விருவிருக்க ஹோமம் பண்ண வேண்டும், மணியடிக்க வேண்டும்" என்றெல்லாம் எத்தனை கட்டுப்பாடுகள் இருக்கின்றன? இதெல்லாம் சாஸ்திரோக்தமாகயில்லாமல் தன்னிஷ்டப்படி செய்யும் போது இல்லை அல்லவா? நெறியில்லாமல் செய்வதாலேயே ஆசையும் அழுக்கும் அதிகமாகின்றன. அதையே நெறியோடு செய்தால் சாந்தியும், சுத்தியும் ஏற்பட ஆரம்பிக்கின்றன. தன்னிஷ்டப்படியே செய்யும்போது அஹங்காரந்தான் அதிகமாகிறது; பயபக்திக்கு அங்கே இடமேயில்லை. சாஸ்திர கர்மாவினால் இஷ்ட பலனைத் தருபவனும் ஒரு ஈஸ்வரன்தான் என்று காட்டி, அவனைப் பிரார்த்தித்து அவனுக்கு அடங்கியே காம்யமானதைக் கேட்டுப் பெறச் சொல்லும்போது பயபக்தி உண்டாகி இவனை சுத்தி செய்கிறது.

7.21-சர்க்கரை பூசிய மாத்திரை

காம்ய பலனுக்காவே சாஸ்திர கர்மாவைக் காட்டி ஜீவனை நல்ல வழியில் 'தாஜா' பண்ணிக்கொண்டு வருவதற்கு sugar-coated pills-ஐ [சர்க்கரை தடவிய மாத்திரையை] உதாரணமாகச் சொல்லலாம். இஷ்ட பலன்தான் சர்க்கரை மாதிரி ஜீவனுக்குத் தித்திக்கிறது. அவன் குழந்தையைப் போல அறியாதவனாயிருக்கிறான். சர்க்கரை உடம்புக்குச் சூடு என்று குழந்தைக்குத் தெரியாததுபோல இந்த ஐஹிக ஸௌக்யங்கள் ஆத்மாவுக்குக் கெடுதி என்று அவனுக்குத் தெரியவில்லை. சாஸ்திரகாரர்களான ரிஷிகளுக்கு இந்தக் குழந்தையிடமும் கருணை. அதனால் அது கேட்கிற பெப்பர்மின்டைக் கொடுக்க நினைக்கிறார்கள். குழந்தை பெப்பர்மின்ட் என்றே நினைத்தாலும்

அது உள்ளுக்குள்ளே மருந்து. உள்ளே மருந்தை வைத்து மேலே சர்க்கரையைப் பூசியிருக்கிறது. சூட்டைத் தணிக்கிற மருந்துச் சரக்கு உள்ளே நிறைய இருக்கிறது; மேலே மட்டும் கொஞ்சூண்டு சூடு பண்ணும் சர்க்கரை தடவியிருக்கிறது. இதுதான் சாஸ்திரோக்த கர்மா. இஷ்ட பூர்த்தி என்று வெளியிலே தித்திப்பாகத் தெரிகிறது. உள்ளே இந்த இஷ்டமெல்லாம் கஷ்டம்தான் என்று புரியவைத்து இஷ்டப்படி செய்யாமல் நல்ல நெறியில் கட்டுப்படுத்துகிற விவேக மருந்து இருக்கிறது. மருந்து இருப்பது தெரியாமலேதான் குழந்தை சாப்பிடுகிறது. ஆனால் அது பலிக்காமல் போய்விடுமா என்ன?

இன்னொன்று : காம்ய கர்மாவைத்தான் பகவான் இங்கே சொல்கிறாரென்றாலும், சாஸ்த்ரோக்தமாகப் பண்ண ஆரம்பிக்கும்போதே, காம்ய கர்மாக்களோடு நிஷ்காம்யமாகவும் சில காரியங்களைக் கொடுத்துத்தானிருக்கிறது. ஸந்த்யாவந்தனம் போன்றவற்றைப் பண்ணுவதால் காம்யமாக இன்ன லாபம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கவில்லை; இவற்றைப் பண்ணாமல் விட்டால் பாவம், தோஷம் என்று சொல்லி, அதற்குப் பயந்துதான் பண்ண வைத்திருக்கிறது. காம்யபலன் வேண்டும் என்ற ஆசையினால் அதற்கான சாஸ்த்ரோக்த கர்மாக்களைச் செய்யும் ஜீவன் அதோடுகூடச் சொன்ன இம்மாதிரி நிஷ்காம்யமான கர்மாக்கள் ஒன்றிரண்டையும் செய்கிறான். இது இவன் சித்த சுத்தியில் பக்வப்படுவதற்கு மேலும் ஸஹாயம் செய்கிறது.

7.22-அன்று கண்ட அபிவிருத்தியும் இன்று காணும் சீரழிவும்

இப்போது சில சீர்திருத்தக்காரர்கள் சொல்வது பாமர ஜனங்கள் உள்பட எவருமே சாஸ்திரோக்த கர்மாக்களைப் பண்ணாமல் ஞானி மாதிரி தத்வ விசாரம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமென்பது; பகவானும் சாஸ்திரங்களும் சொல்வதோ, ஞானி கூடப் பாமரன் மாதிரி சாஸ்திர

கர்மாவைப் பண்ணி ஆசார அநுஷ்டானாதிகளை நடத்திக் காட்ட வேண்டுமென்பது.

எது ஸரி என்பதற்கு ஹிஸ்டரியையும், யதார்த்தத்தையும் பார்த்தால் போதும். பகவான் சொன்னபடி செய்து கொண்டிருந்தவரையில் நம் தேசம் லோகத்துக்கே மாடலாக ஸத்ய தர்மங்களிலும், பக்தியிலும் ஞானத்திலும், கலாசார நாகரிகத்திலும், ஸமூஹம் பூராவின் சீரான ஒழுங்கிலும் தலைசிறந்து இருந்திருப்பதை ஹிஸ்டரி காட்டுகிறது. இப்போது ரிஃபார்மர்கள் அபிப்ராயப்படி செய்ய ஆரம்பித்தபின் எப்படியிருக்கிறோம் என்பது தெரிந்ததே. கீதை சொன்னபடி மேலே இருந்தவனும் கீழே இருக்கிறவனைப் போலச் செய்து காட்டிக் கொண்டிருந்த வரையில் எல்லாரும் மேலே போனார்கள்; இப்போது கீழே இருக்கிறவனும் மேலே போய் விட்ட மாதிரி பாவித்துக்கொண்டிருப்பதில் எல்லாரும் அதல பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம்! கட்டெல்லாம் விட்ட பரம ஸ்வதந்த்ர நிலையிருந்த ஞானியும் சாஸ்திரக் கட்டுப்பாட்டுப்படிச் செய்து மற்றவர்களையும் அதேபோலச் செய்வித்துக் கொண்டிருந்தபோதே தேசம் ஆத்மிகமாக மட்டுமில்லாமல், இப்போது ஸயன்ஸ் என்பதில் வரும் அநேக வித்யைகள், வியாபாரம் (கடல் கடந்தெல்லாம் கூடப் போய் வாணிபம் பண்ணியிருக்கிறார்கள்) எல்லாவற்றிலும் உன்னதமாயிருக்கிறது. "லோகம் பொய்; ஆத்மா, ஆத்மா" என்று சொல்லிக் கொண்டு ஸயன்ஸிலும், பொருளாதாரத்திலும் நாம் பிற்பட்டு நின்றதாகச் சொல்வதற்கு கொஞ்சங்கூட ஆதாரமில்லை. துருக்கர்கள், பிரிட்டிஷ்காரர்கள் ஆகியவர்களுடைய ஆதிக்கத்தில்தான் ஹிந்து ஸமுதாயம் ஒடுங்கி இவற்றில் backward state வந்ததே தவிர அதனுடைய மதாசாரத்தாலும் ஃபிலாஸஃபியாலும் அல்ல*. கட்டுப்பட்டிருந்தாலே சுத்தியாகக்கூடிய ஸாமானிய ஜனங்களையும் ஸ்வதந்திரம் என்று அவிழ்த்து விட்டிருக்கும் இப்போதோ எல்லாவற்றிலும் கீழேதான் போய்க்கொண்டிருக்கிறோம். "பாரமார்த்திமாகக் கீழே போகிறோம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள்; ஸயன்ஸில், காமர்ஸில் அபிவிருத்திதான் ஆகியிருக்கிறோம். Atom research, electronics எல்லாங்கூட கரைத்துக் குடித்து விட்டோமாக்கும்" என்று சொல்லலாம். ஆனால்

நம்முடைய moral standard கீழே போய்விட்டதென்று மற்ற தேசத்தார் - இதுவரை நம் தேசத்தை தர்மபூமி என்று கொண்டாடிக் கொண்டிருந்தவர்கள் - அபிப்ராயப்பட ஆரம்பித்தபின் இவற்றில் நாம் முன்னேறி என்ன பிரயோஜனம்? 'காமர்ஸ்' ஜாஸ்தியாச்சு என்று நாம் பெருமைப்பட்டாலும் இறக்குமதி செய்கிற அந்நியர்கள் சொல்வதைக் கேட்டால் அவமானமாயிருக்கிறது. "இந்த இந்தியர்கள் முதலில் காட்டுகிற 'ஸாம்பிள்' ஒன்றாயிருக்கிறது; அப்புறம் அனுப்பி வைக்கிற சரக்கு வேறாயிருக்கிறதே!நாணயமில்லாமல் நடக்கிறார்களே!" என்கிறார்கள். ஸயன்ஸ் அபிவிருத்தியில் பரஸ்பரம் தெரியாததைத் தெரிந்துகொண்டு, கூடச் சேர்ந்து ஆராய்ச்சி பண்ணுவதற்கும் நம்மை அவ்வளவாக நம்பமாட்டேனென்கிறார்கள் என்று கேள்வி. முன் நாளில் கட்டுப்பாட்டால் ஏற்பட்ட தர்மபலம் என்கிற அஸ்திவாரத்தின் மேலேயே விஞ்ஞான வித்யைகள், வியாபாரம் எல்லாம் நல்ல பெயரோடு விருத்தியாயின. அஸ்திவார பலம் இல்லாமல் இப்போது இவற்றில் ஏற்படுவதாகச் சொல்லப்படும் முன்னேற்றம [நிலைத்து] நிற்காது.

பூர்வாசாரங்கள் வேண்டியதில்லை என்று ஸுலபமாகச் சொல்லி, ஜனங்கள் இதை வேத வாக்காக (வேத வழி வேண்டாம் என்பதையே வேத வாக்காக) நம்பச் செய்து விட்டார்களே என்று மிகவும் துக்கமாக இருக்கிறது. வேணுமா, வேண்டாமா என்பதற்கு அதிகமாக வாதப் பிரதிவாதம் எதுவும் செய்ய வேண்டியதில்லை. நான் இத்தனை நேரம் சொன்னதெல்லாங்கூட அவசியமில்லை தான். ஒரு சின்ன விஷயத்தைக் கொண்டே முடிவு செய்து விடலாம். வியாதியஸ்தன் மருந்து சாப்பிட வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு விவாதம் பெரிசாகப் பண்ண வேண்டுமா? மருந்தைக் கொடுத்துப் பார்த்தால் என்ன நடக்கிறது, கொடுக்காவிட்டால் என்ன நடக்கிறது என்று பார்த்தால் போதாதா? மருந்து கொடுக்கிற மட்டில் வியாதி குறைகிறது, விட்டு விட்டால் ஜாஸ்தியாகிறது என்று பிரத்யக்ஷத்தில் தெரிகிறது. அப்போது மருந்து வேண்டத் தான் வேண்டும் என்றுதானே அர்த்தம்? பூர்வாசாரங்கள் இருந்தவரையில் தேசத்தில் எல்லாத் துறையிலும் அபிவிருத்தி இருந்தது. இதற்கு மேலாக ஒழுக்கமும் ஒற்றுமையும் இருந்தன. அவற்றை ஒழிக்க

ஆரம்பத்ததிலிருந்து இவற்றையெல்லாமும் விரட்டியாகிறது என்பதிலிருந்தே அந்த மருந்து இல்லாவிட்டால் ஆத்மாவுக்கு வியாதிதான் என்று தெரியத்தானே வேண்டும்? ஒருவேளை சாப்பாட்டை நிறுத்தினால், உடனே ஓய்ச்சலாக வந்தால் சாப்பிட வேண்டும் என்று தெரிகிறதோ இல்லையோ? சாஸ்திரத்தை விட்டபின் தனி வாழ்க்கை, ஸமுதாய வாழ்க்கை இரண்டிலும் நிம்மதி போன பிற்பாடும் பூர்வாசாரம் வேண்டும் என்று தெரிந்து கொள்ள மாட்டோமென்றால் என்ன பண்ணுவது? தலைவர்களாயிருக்கப்பட்டவர்கள் மாட்டேனென்கிறார்கள்.

தப்புப் பண்ணிவிட்டோமென்று ஒப்புக்கொள்வது கஷ்டந்தான் என்றாலும் ஒரேயடியாகப் முழுகிப் போகிற நிலை வந்தபோதாவது, ஒப்புக்கொண்டு வெளியே வரவும் மற்றவர்கள் வெளியில் இழுத்துப் போடவும் முயலத்தானே வேண்டும்? இன்னம் முழுகியே போய்விடவில்லை. அதனால்தான் இதை நான் சொல்லி, நீங்கள் கேட்டுக் கொண்டாவது உட்கார்ந்திருப்பது! கேட்டது போதாது. புயல் வருகிறது என்று weather forecast கேட்டால் மட்டும் பிரயோஜனமில்லை. அது நம்மை பாதிக்காமலிருக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். Weather proof ஆக, தர்ம ரக்ஷையாக, கவசமாக இருப்பது பூர்விகர்களின் ஸமயாசாரம் தான். ஆகையால் இதைக் கேட்டதற்கு லக்ஷணம் இனிமேலாவது கேட்டபடிப் போவதற்குப் பிரயத்தனப்படுவதுதான்.

சிகாம் ஸூத்ரம் ச புண்ட்ரம் ச ஸமயாசாரமேவ ச |
பூர்வைராசரித: குர்யாத் அந்யதா பதிதோ பவேத் ||

பதிதபாவனன் என்று பகவானைச் சொல்கிறோம். “பதிதபாவன ஸீதாராம்” என்பதாவது காந்தியால் நின்றிருக்கிறது. அந்த ராமன் ஸகல கார்யமும் சாஸ்திரத்தைப் பார்த்துப் பார்த்தேதான் செய்தான். அந்த வழியிலிருந்து நாம் அடியோடு வழுக்கி விழுந்து பதிதர்களான பின் அவன் நம்மை பாவனப்படுத்துவது என்றில்லாமல், அவனை நாம் அவ்வளவு வேலை வாங்காமல், இப்போதிலிருந்தே நம்மை முன்னோர்களின் நெறியில் அவன் தூக்கி விட்டு ரக்ஷிக்கும்படியாகப் பிரார்த்தனை செய்வோம்.

7.23-ஒற்றையடிப்பாதை

இன்னார், இன்ன காலத்தில் ஏற்படுத்தினார்கள் என்றே தெரியாமல் நம்முடைய ஆசாரங்கள் வந்திருக்கின்றன. ராமாநுஜர், மத்வர், சைதன்யர் என்று நமக்குப் பெயர் தெரிந்தவர்கள் ஓரொரு காலத்தில் ஏற்படுத்தின ஸம்பிரதாயத்திலிருப்பவர்களும் பின்பற்றுகிற ஆசாரங்களில் பெரும்பாலானவை இப்படிக் காலம் தெரியாததாக, கர்த்தா தெரியாதவராகத்தான் இருக்கின்றன. மற்ற மதங்களைப் பற்றித் திட்டவட்டமாக இன்னார் இன்ன காலத்தில் ஏற்படுத்தின ஆசாரம் என்று தெரிவதுபோல நமக்கு இல்லை.

அந்த மதங்கள் இந்த இன்ஜினீயர் இந்த வருஷத்திலே போட்டார் என்று சொல்லக்கூடிய தார் ரோடுகள் மாதிரியிருக்கின்றனவென்றால், நம் மதம்?

இது ஒற்றையடிப் பாதை மாதிரியிருக்கிறது! ஒற்றையடிப் பாதையை யார் எப்போது போட்டார்கள்? சொல்லத் தெரியவில்லை. மேல் பார்வைக்குத் தார் ரோட் உசத்தியாயிருக்கிறது. ஆனால் யோசனை பண்ணிப் பார்த்தால் தார் ரோடைவிட ஒற்றையடிப்பாதைதான் பல விஷயங்களில் மேல் என்று தெரிகிறது. தார் ரோடும் கொண்டு விடாத இடத்துக்கு இந்த ஒற்றையடிப் பாதை தானே கொண்டு சேர்க்கிறது? ஜனங்கள் நடக்க நடக்கத் தார் ரோட் ரிப்பேராகி வருஷா வருஷம் மராமத்து பண்ண வேண்டியிருக்கிறது. ஒற்றையடிப் பாதையோ நடக்க நடக்கத்தான் இன்னம் நன்றாக ஆகிறது. ரிப்பேர் என்ற பேச்சே கிடையாது. அதேபோல ஆக்ஸிடென்டும் தார் ரோட்டில் தானேயன்றி, ஒற்றையடிப்பாதையில் உண்டோ? மேலே வழியில்லை என்று blind alley -யாகச் சிலர் தார் ரோட் மொட்டையாக முடிகிற மாதிரி எந்த ஒற்றையடிப் பாதையாவது முடியுமா? நன்றாகத் திறந்து விட்ட மார்க்கம், கூட்டங், கூட்டமாகப் பூர்விகர்கள் போயே புல் பூண்டு இல்லாமல் பாலிஷ் ஆன மார்க்கம், ஆக்ஸிடென்டே இல்லாத மார்க்கம், தார் ரோட் மாதிரிப் பார்க்கப் பகட்டு இல்லாவிட்டாலும், பரம ஸௌகர்யமாக, நிதானமாகக் கால் நடையிலேயே பரமாத்மாவிடம் கொண்டு விடுகிற மார்க்கம் - இப்படிப்பட்ட

ஒற்றையடிப் பாதைதான் நம்முடைய பூர்வாசாரம். 'தார் ரோடானால் கார் ஸவாரி பண்ணிச் சுருக்க [விரைவில்] போய்ச் சேர்ந்து விடாலமே' என்றால், ஒற்றையடிப் பாதையிலோ அப்படிச் சுற்றிக் கொண்டு போகாததால், குறுக்கு வழியில் நடந்தே, அதே நேரத்தில் ஆக்ஸிடென்ட் எதுவுமில்லாமல் போய்ச் சேர்ந்து விடலாம். ரோடே போட முடியாத இடங்களில் - காட்டிலே, மலையிலே கூட - இதுதான் மார்க்கமாயிருக்கிறது.

7.24-மனநெறி இயற்கை நெறியை ஆள்வது

ஆசாரத்தால்தான் டிஸிப்ளின் எனும் மனநெறி ஏற்படுகிறது. ஆசாரம் வெளிவிஷயம் என்பது சுத்தப் பிசகு. அதனால்தான் மனஸில் உத்தமமான பண்பும், உயர்ந்த கட்டுப்பாடும் உண்டாகிறது. மநுஷ்யனின் மனநெறி நன்றாயிருந்து விட்டால் அதன் சக்தி ஸாமான்ய மானதில்லை. அது இவனுடைய 'நேச்சர் 'என்னும் இந்திரிய வேகங்களை அடக்கியாள்வது மட்டுமில்லை; வெளி 'நேச்சரை'யே அடக்கியாண்டு விடுகிறது. பிராம்மணன் அத்யயன ஆசாரத்தை அநுஷ்டித்தால் அதற்காகவே மும்மாரிகளில் ஒன்று பெய்கிறது என்பது தமிழ் மூதுரை; வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை.

இப்படியே பதிவ்ரதைகளின் கற்பு நெறியினால் இயற்கை இன்னொரு மழையைப் பெய்கிறது என்று சொல்கிறது: மாதர் கற்புடை மங்கையர்க்கோர் மழை.

இதையே இப்போது பகுத்தறிவாளர்களும் கொண்டாடும் திருக்குறளும் சொல்கிறது:

தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

ராஜா நீதி நெறிப்படி ஆட்சி பண்ணுவதும் ஒரு மழையை வரவழைத்துவிடும் :

நீதி மன்னர் நெறியினர்க்கோர் மழை

இதற்கு மறுதிசையில், இவர்கள் நெறி தப்பினால் இயற்கையும் கன்னா பின்னா என்ற பண்ண ஆரம்பிக்கும்.

வள்ளுவரே சொல்கிறார்: ராஜா நீதிமுறை தப்பினால் பிராம்மணனும் தன் ஆசாரமமான அத்யயனத்தை மறந்துவிடுவான் –**அறுதொழிலோர் நூல் மறப்பர்**. ஒருத்தன் முறை தப்பினால் மற்றவர்களும் முறை தப்பிப் போய்விடுவார்களென்று எச்சரிக்கிறார். இப்படி மநுஷ்யனுக்கு மநுஷ்யன் மனநெறி கெட்டுப்போவதால் பாதகமான பலன் தொடர்ந்து போவது மட்டுமில்லை. ராஜா தன் ஆசாரத்தை விட்டால் பால் வளமும் குன்றிவிடும்: **ஆ பயன் குன்றும்**என்று 'தெய்வப்புலவர்' என்னும் திருவள்ளுவர் சொல்கிறார். இதற்குப் பகுத்தறிவு பதில் சொல்ல முடியாது.

மாற்ற முடியாதவை என்கிற Natural Forces -ம் (இயற்கைச் சக்திகளும்) மநுஷ்யனின் மனநெறிக்கு அடங்கியவைதான்.

ஒரே ஈச்வரனின் தர்ம ஸ்வரூபந்தான் [வெளி] இயற்கையில் இருக்கிற மஹத்தான ஒழுங்குக் கட்டுப்பாடு, மநுஷ்ய மனஸின் தர்மக் கட்டுப்பாடு இரண்டாகவும் ஆகியிருப்பது. இதிலே மநுஷ்யன்தான் மனமறிந்து மனஸின் தர்மத்தை உண்டாக்கிக் கொண்டு, அதில் ஈச்வர ஸாந்நித்யத்தை வரவழைத்துக் கொள்ள முடியும். அந்த திவ்ய சக்தியால்தான் [வெளி] இயற்கையும் இவன் கட்டியாள முடிவது.

நெறிதான் ஸுூர்யனை, சந்திரனை, வாயுவை, gravity-ஐ ஆர்டரில் நிறுத்தி வைத்திருக்கிறது. 'ஃபிஸிக்ஸ்' மட்டுமில்லை. மனஸ் நன்றாயிருந்தால்தான் இவை லோகாநுகூலமாக நன்றாயிருக்கும். ஜனங்கள் மனஸ் கெட்டுப் போனால் இயற்கையிலும் உத்பாதங்கள் ஜாஸ்தியாகும் என்று 'சரக ஸம்ஹிதை' என்ற ஆயுர்வேத சாஸ்த்ரம் சொல்கிறது.

நெறியில் சிறந்தவர்கள் என்னென்ன அற்புதங்கள் பண்ணினார்கள் என்று கதை புராணங்களில் எத்தனையோ பார்க்கிறோம். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்கிற மாதிரியே 'பாய் எனப் பாயும் அக்கினி'யைப் பற்றி கண்ணகி கதை சொல்கிறது. அதே மதுரையில் ஞான ஸம்பந்தரும் அவர் தங்கியிருந்த

மடத்திற்குச் சமணர்கள் வைத்த நெருப்பு, அவர்களை ஆதரித்த பாண்டிய ராஜாவையே (இறுதியில் அவன் நல்வழிப்படுவதற்கு ஆரம்ப தண்டனையாக) தாக்கவேண்டும் என்று ஈஸ்வரனைப் பிரார்த்தித்தவுடன் அவனிடம் வெப்பு நோய் உருவில் போய்ச் சேர்ந்தது.

Action and reaction are equal and opposite [செயலும் பிரதிச் செயலும் ஸமசக்தி வாய்ந்ததாகவும் எதிரிடையானதாகவுமிருக்கும்] என்ற 'ந்யூடன் லா' எல்லாக் கார்யங்களையும் பற்றின 'கர்மா தியரி'யை அடிப்படையாகக் கொண்டது என்பது மட்டுமில்லை; எண்ணத்தின் பிரதிபலனையும், மன நெறியின் சக்தி மற்ற மனங்களின் மீது மட்டுமின்றி 'நேச்சுரல் ஃபோர்ஸஸ்' மீதும் பிரதி விளைவுகளை உண்டாக்குவதையும் அடிப்படையாகக் கொண்டதுதான். Mental plane, metaphysical plane, physical plane [மன மட்டம், பௌதிகாதீதமான ஆத்மிய மட்டம், பௌதிக மட்டம்] மூன்றையும் கோத்து நம் மதத்தில் சொன்னதை physical plane-ல் [பௌதிக மட்டத்தில்] மட்டும் சொல்வதே ந்யூடன் லா. 'ரியாக்க்ஷன் ஆப்போஸிட்'டானது [பிரதிச் செயல் எதிரிடையானது] என்று அவர் சொன்னது நல்லதற்கு எதிர் விளைவாகக் கெட்டதும், புண்யத்துக்குப் பிரதியாகப் பாபமும் உண்டாகும் என்று அர்த்தம் கொடுக்காது. பின்னே 'ஆப்போஸிட்' என்று ஏன் சொன்னாரென்றால், ஒரு பந்தைச் சுவர் மேல் எறிந்தால் அது அதே விசையுடன் 'ஆப்போஸிட் டைரக்க்ஷ'னில் [எதிர் திசையில்] திரும்பி வருகிறாற்போலத்தான் physical plane-ல் எல்லா ரியாக்க்ஷனும் இருப்பாதலேயே! நாம் செய்த நல்லது (புண்யம்) எப்படி வெளியிலே பரவுகிறதோ அப்படியே வெளியிலிருந்து நமக்கு நல்லது (புண்யம்) திரும்புகிறது; கெட்டதும் (பாபமும்) இப்படியே என்றுதான் அதற்கு அர்த்தம்.

வெறும் physical plane-லேயே ஜட இயற்கை என்கிற வெளிநேச்சர் அடங்கியிருந்ததானால் ஸூர்யன் எப்போதோ குளிர்ந்து போயிருக்கும் என்று ஸயன்ஸ்டிஸ்டுகளே சொல்கிறார்கள். எப்படியோ அதில் உஷ்ண சக்தி ஊறிக் கொண்டேயிருக்கிறது என்று சொல்லி இதன் காரணத்தைப் பலவிதமாக ஊஹம் செய்கிறார்கள். ஆதி காரணம் ஈஸ்வர சக்திதான். அதுதான் இந்த பிரபஞ்ச தர்மத்துக்காக, லோகங்களின் நெறியான போக்குக்காகவும்

வாழ்க்கைக்காகவும் ஸூர்யனில் குறையாத உஷ்ண சக்தியை ஊட்டிக் கொண்டேயிருக்கிறது. ஸயன்டிஸ்ட்கள் ஒன்றொன்றாகக் கேள்வி கேட்டுக் கொண்டு காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டே போனாலும் கடைசியில் ஸயன்ஸினால் காரணம் சொல்ல முடியாத ஒரு 'ஆரிஜினி'ல் [தோற்றுவாயில்] தான் போய் முட்டிக் கொண்டு நிற்கிறார்கள். ஐன்ஸ்டைன் மாதிரி ரொம்பப் பெரியவர்கள் அதுதான் ஈஸ்வர சக்தி என்று நமஸ்காரம் பண்ணுகிறார்கள். மநுஷ்ய மனநெறி, மனித வாழ்வின் ஒழுங்கு ஆகியனவும் அதே சக்தியுடைய தர்மத்துக்கு இன்னொரு ரூபந்தானாகையால், மனநெறியே இயற்கையையும் ஸாதகமாகவோ பாதகமகவோ ஆக்குகிறது.

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் 'பல ச்ருதி'யில் பகவானை நேச்சர் என்கிற ஜடப் பிரபஞ்ச தர்மம், மநுஷ்ய மனநெறியை உண்டாக்கும் மதாசார தர்மம் ஆகிய இரண்டுக்கும் மூலமாக ரொம்ப அழகாகச் சொல்லியிருக்கிறது. தரிப்பது (தாங்குவது) தர்மம் வெட்ட வெளியிலே விழாமல் தொங்கிக் கொண்டிருக்கிற நக்ஷத்ரங்களையும், திக்குகளையும், பூமியையும், உருண்டையான பூமியிலிருந்து வழியாமல் கொட்டாமல் ஸமுத்ரத்தையும் ஸூக்ஷ்மமாக தரிக்கும் தர்ம ஸ்வரூபம் பகவானே என்று அதில் ஒரு ஸ்லோகத்தில் சொல்லியிருக்கிறது.

த்யௌ ஸ சந்த்ரார்க-நக்ஷத்ரா கம் திசோ பூர்-மஹோததி: |
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: ||

வாஸுதேவனுடைய வீர்யம்தான் அண்ட கோளத்தையும், பூகோளத்து ஸமுத்ரத்தையும் தாங்கித் தரிக்கிறது என்று இங்கே சொல்லிவிட்டு, அப்புறம் மநுஷ்யன் என்ற சைதன்யப் பிரபஞ்சத்தைச் சேர்ந்த இந்த்ரியம், மனஸ் புத்தி, பிரத்யேக குணம், தேஜஸ், பலம், தைர்யம், க்ஷேத்ரம் என்ற சரீரம் அதில் அறிவாயிருக்கிற க்ஷேத்ரஜ்ஞன் என்ற ஆத்மா எல்லாமே வாஸுதேவ மயமானது என்று வர்ணிக்கப்படுகிறது.

இந்த்ரியாணி மநோ புத்தி: ஸத்-த்வம் தேஜோ பலம் த்ருதி: |
வஸுதேவாத்மகான்-யாஹு: க்ஷேத்ரம்க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச ||

ஜடப் பிரபஞ்ச வஸ்துக்களை பகவானே நேராகச் சேர்த்துப் பிடித்து ஸம்பந்தப்படுத்தி தர்ம நெறியில் வைத்திருக்கிறான். சைதன்யமான ஜீவப் பிரபஞ்சத்திலோ மனஸ் என்று ஒன்றைத் தந்து, அதற்கு ஸ்வதந்திரம் தந்து ஆட்டம் போட்டுவிட்டு, ஜீவன் தானாகவே அதை நெறிப்படுத்திக் கொள்கிற ரீதியில் சாஸ்திரங்களையும் கொடுத்து அதில் ஆசாரத்தை முதலாவதாக வைத்திருக்கிறான் என்பதை அடுத்த ஸ்லோகம் உணர்த்துகிறது. இத்தனை நாழி நான் சொன்ன 'ஆசாரம்' என்ற விஷயத்துக்கு முத்தாய்ப்பு வைப்பதாக அந்த ஸ்லோகம் இருக்கிறது:

ஸர்வாகமாநாம் ஆசார: ப்ரதமம் பரிகல்பதே |
ஆசார-ப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபு-ரச்யுத: ||

'ஸர்வ ஆகமங்கள்' என்கிற ஸகல சாஸ்திரத்துக்கும் ஆசாரமே முதலானதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ஆசாரத்திலிருந்து உண்டாவதே தர்மம்: அந்த தர்மத்துக்குப் பிரபு அச்யுதனான பகவான் - என்று அர்த்தம். அச்யுதன் என்றால் அசங்காமல் 'ஸ்டெடி'யாக இருக்கிறவன். தர்மம் என்ற அறநெறி ஸ்டெடியாக இருக்க வேண்டியதல்லவா?

ஜீவப் பிரபஞ்சத்தின் ஆசார வழியாய் உண்டாகும் தர்ம நெறியையும் ஜடப் பிரபஞ்சத்தின் சீரான ஒழுங்கையும் இப்படி இணைத்துக் கொடுத்திருக்கிறது. அதாவது நம்முடைய ஆசாரத்தால்தான் நம் சொந்த வாழ்க்கை, நம் ஸமூஹ வாழ்க்கை இவை மட்டுமின்றி லோக வாழ்க்கையே நல்ல முறையில் அமையும். இதை நவீன மனப்பான்மையுள்ளவர்கள் எல்லாரும் புரிந்து கொள்ளும்படி அந்த பகவான், வாஸுதேவன், அச்யுதன் அருள் செய்ய வேண்டும். ஆசாரங்களிலேயே தர்மம் பிறப்பதால் தர்மத்தின் பிரபுவான பகவான் ஸதாசாரம் தழைக்கும்படியாக அநுக்ரஹிக்க வேண்டும்.

8-மதாசாரத்தின் உட்பிரிவுகள்

8.1-முந்தைய உரைத் தொடர்பாக ஒரு விளக்கம்

'சிகாம், புண்ட்ரம், ஸூத்ரம்' என்று சொன்ன[2] மூன்று விஷயங்களும் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவைதான். மதாந்தரங்களில் இவையில்லை. ஆனதால் ஹிந்து மதத்துக்குள்ளேயே வெவ்வேறாயுள்ள பிரிவுகளை ஒப்புக்கொண்டு, இவற்றில் பிறந்தவர்கள் தங்கள் முன்னோரின் பிரிவுக்குரிய ஆசாரத்தையே பின்பற்ற வேண்டும் என்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது.

அப்போது ஒரு கேள்வி வருகிறது. ஹிந்து மதம் வேதமதம்தான். அதற்கு முதல் ஆதாரம் ச்ருதி என்ற வேதம்; அடுத்தபடியான ஆதாரம் அந்த வேதத்தை ஆதாரமாகக்கொண்டே அதில் சுருக்கமாகவும், மறைமுகமாகவும், குறிப்பாகவும் (hint-ஆகவும்) சொல்லியுள்ளவற்றை விளக்கி வைக்கிற ஸ்ம்ருதி என்ற தர்ம சாஸ்திரம். ஆக, வேதம்தான் [இந்த மதத்துக்கு] மூச்சு. இந்த வேதத்தின் பரமதாத்பரியம் என்ன என்பதிலே ஏற்பட்ட வித்யாஸத்தால்தான் இதற்குள் பல பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. த்வைதம் என்று ஒருத்தர் நிர்தாரணம் பண்ணுகிறார்; அத்வைதம் என்று இன்னொருத்தர், இரண்டுமில்லை விசிஷ்டாத்வைதம், சுத்தாத்வைதம், த்வைதாத்வைதம் என்றெல்லாம் பலபேர் பல விதமாக முடிவு பண்ணுகிறார்கள். வைதிக மதத்தில் எல்லா தெய்வமும் ஒரே பரமாத்மாதான் என்று ஒருத்தர் சொல்கிறார். இன்னொருத்தர் விஷ்ணுதான் பரமாத்மா மற்ற தெய்வங்களில்லை என்கிறார். வேறொருவர் இதே மாதிரி சிவனைச் சொல்கிறார். எல்லாரும் தாங்கள் சொல்வதுதான் வேதத்தின் ஸரியான அபிப்ராயமென்கிறார்கள், 'த்வைதம், அத்வைதம் என்றெல்லாம் பெயர் கொடுத்தாலும் இது sub-title தான். நாங்கள் வேதமதம் என்பதுதான் title' என்று அவரவரும் சொல்கிறார்கள்.

இதிலிருந்துதான் கேள்வி வருகிறது. வேதமதத்தை விட்டு வேறு மதத்துக்குப் போனால்தான் தப்பா? பதிதனாகிறானா? அல்லது ஒரே வேத மதத்திலேயே இருக்கிற ஒரு பிரிவிலிருந்து அதிலே பிறந்தவன் இன்னொரு பிரிவுக்குப் போனாலும் பதிதனாகிற தோஷம் வருமா?

ஸ்லோகத்தில் வைதிக ஸமயத்தில் மட்டுமேயுள்ள சிகை, புண்ட்ரம், ஸூ¨த்ரம் இவற்றைச் சொல்லி, அப்புறம் ஸமயசாரத்தையும் சொல்லி,

இவையெல்லாவற்றிலும் ஒருவன் பூர்விகரின் ஆசாரத்தைத்தான் கடைபிடிக்க வேணடும்; இல்லாவிட்டால் பதிதனாகிறான் என்று ஸ்பஷ்டமாக இருக்கிறபோது, ஹிந்து மதத்திலேயே ஒரு பிரிவிலிருந்து இன்னொன்றுக்குப் போகலாமா என்று கேட்பது ஸரியில்லைதான். ஆனாலும் இப்படிக் கேட்பது அடியோடு தப்பான விதண்டாவாதம் என்று தள்ளிவிட முடியாது. கேட்பவர்களின் ஆர்க்யுமென்டிலும் நியாயமிருக்கிற மாதிரித் தோன்றுகிறது. அதனால் அதைக் கேட்டு, தீர்க்கமாக ஆலோசனை செய்துதான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆர்க்யுமென்ட் என்ன? "மதாந்தரங்கள் என்றால் அவை வேதத்தை ஆதாரமாக, ப்ராமண நூலாகக் கொள்ளாதவை. பைபிள், கொரான், த்ரிபிடகம், ஃஜென்டோவஸ்தா, க்ரந்த ஸாஹேப், ஓல்ட் டெஸ்ட்மென்ட்*1 என்று ஏதோ ஒன்றைத்தான் அவை ஆதார க்ரந்தமாகக் கொண்டிருக்கின்றன. ஆகையால் வேத மதம் என்பதில் பிறந்துள்ள நாம் அவற்றிலொன்றுக்குப் போவது தப்பு. ஆனால் நாம் இந்த வேத மதத்தை விடாமலே இதில் ஒரு பிரிவிலிருந்து இன்னொன்றுக்குப் போனால் எப்படித் தப்பு? இந்தப் பிரிவுகள் தோன்றுவதற்கு முந்தி எப்படியிருந்தது? நீங்களே இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறீர்கள்? 'மாறுபட்ட எல்லா ஹிந்துமத ஸித்தாந்தங்களின் அபிப்ராயத்துக்கும் வேதம் ஒவ்வொரு ஸ்டேஜில் இடம் கொடுக்கிறது. த்வைதம் விசிஷ்டாத்வைதம்-அத்வைதம், சைவம் வைஷ்ணவம் என்றெல்லாம் தனித்தனி ஸம்ப்ரதாயங்களாகப் பிரிவதற்கு முன்னாலும் தன்னுடைய பக்குவ ஸ்திதியில் ஒருவர் எந்த ஸ்டேஜில் இருந்தாரோ அதைப் பொறுத்துத் தத்வரீதியில் த்வைதியாகவோ, அத்வைதியாகவோ, இன்னொன்றாகவோ, இதே மாதிரி தெய்வ உபாஸனை என்று வரும்போது சிவ பக்தராகவோ, விஷ்ணு பக்தராகவோ, அம்பாள் பக்தராகவோ, தம் பாட்டுக்கு இருந்து கொண்டுதான் இருந்தார். ச்ருதி, ஸ்ம்ருதிகளைப் பார்த்தால் இது ஒன்றுதான் தத்வம், இது ஒன்றுதான் தெய்வம் என்று முடிவுகட்டி எல்லாருக்கும் பொதுவாக எதையும் சொல்லியிருக்கவில்லை. ஆதலால் பிரிந்து போகாமலே தமக்குக் 'கன்விக்ஷன்' உள்ள தத்வத்தை அநுஸரித்துக் கொண்டும், தமக்கு 'அப்பீலா'கிற தெய்வத்தை உபாஸித்துக் கொண்டும் ஒரே

ஸம்பிரதாயமாகத்தான் ஹிந்துக்கள் எல்லாரும் இருந்திருக்கிறார்கள். ஸம்ஸ்காரங்களிலும், ஆசாரங்களிலும் எல்லாரும் தர்ம சாஸ்திரப்படி ஒரே மாதிரிதான் அநுஷ்டித்து வந்திருக்கிறார்கள். ஒரே குடும்பத்திலேயே கூட இருந்தவர்கூட வெவ்வேறு தத்வ ஸித்தாந்தத்தை அநுஸரித்துக் கொண்டும், அவர்களில் ஒருவர் சிவபூஜை பண்ணுகிறவராகவும், இன்னொருவர் விஷ்ணு பூஜை பண்ணுகிறவராகவும் இருந்திருக்கிறார்கள். ச்ரௌத ஸ்மார்த்த*2 கர்மாக்களான பஞ்ச மஹா யஜ்ஞங்கள், நாற்பது ஸம்ஸ்காரங்கள், ஸந்த்யாவந்தனம் முதலியவற்றில் வித்யாஸமில்லாமல் எல்லாரும் ஒரே போலப் பண்ணி வந்தார்கள். பிற்காலத்தில்தான் ஸித்தாந்தம், தெய்வம் என்பதற்காக வேறுவேறு பிரிவுகளானது'என்றெல்லாம் நீங்களே சொல்லியிருக்கிறீர்களே! ஆகையால் இப்போது த்வைதியாகப் பிறந்திருக்கிற ஒருத்தனுக்கு அத்வைதத்தில்தான் 'கன்விக்ஷன்' என்றால் அவன் அப்படி மாறக் கூடாதா? சிவபூஜையே பண்ணி வருகிற ஒரு குடும்பத்தில் பிறந்த ஒருவனுக்கு விஷ்ணுவிடம் தான் பக்தியிருக்கிதென்றால் அவன் அகத்துப் பூஜையை விட்டு விட்டு விஷ்ணுவைப் பூஜை பண்ணினால் தப்பா? இந்தப் பிரிவுகள் பிற்காலத்தில் ஏற்படுவதற்கு முன்னால் ஒருவனுக்கு இப்படிப்பட்ட ஸ்வதந்திரம் இருந்தது என்பதால் இப்போதும் இப்படி வேத மதத்துக்கு விரோதமாகப் போகாமல். அதற்குள்ளேயே மனஸ்ஸாக்ஷிப் படி குலாசாரத்தை விட்டு வேறுவிதமாகச் செய்தால் அது எப்படித் தப்பாகும்?"

இதற்கு மேலேயும் கேள்வி போகிறது நானே சொன்னதை வைத்தே என்னை மடக்குகிறார்கள்! "சங்கராசார்யார் தம் ஸித்தாந்தப்படிப் போகிறவர்களை வேத ஸம்பிரதாயத்தில் புதுப் பிரிவு என்றே நினைக்கவுமில்லை, வைக்கவுமில்லை. இதற்கு அத்தாட்சியாக அதுவரை ஹிந்துக்களுக்கு இருந்து வந்திருக்கிற பொதுப் பெயரான 'ஸ்மார்த்தர்' என்பதேதான் இன்றுவரை அவரை ஆசார்யராகக் கொண்டிருக்கிறவர்களுக்கும் பெயராக இருக்கிறது. ராமாநுஜரைச் சேர்ந்தவருக்கு ஸ்ரீவைஷ்ணவர் என்றும், மத்வரைச் சேர்ந்தவர்களுக்கு மாத்வர் என்றும், இப்படியே மற்ற ஸம்பிரதாயஸ்தர்களுக்கு ஒவ்வொரு தனிப்பெயரும் ஏற்பட்டிருப்பதுபோல்

சங்கரரைச் சேர்ந்தவர்களுக்கு இல்லாமல், 'ஹிந்துவாகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவான தர்ம சாஸ்திரங்களைப் பின்பற்றுகிறவன்' என்று அர்த்தம் கொண்ட 'ஸ்மார்த்தர்' என்பதுதான் பெயராயிருக்கிறது. அவர் அவருக்கு முற்பட்ட சாஸ்திரங்களில் சொல்லியுள்ள ஆசார, அநுஷ்டான, ஸம்ஸ்காரங்களையேதான் அவலம்பித்தாரே [நிலைநாட்டினாரே] தவிர அவற்றில் மாறுதல் எதுவும் செய்யவில்லை. பிற்பாடு மற்ற ஆசார்யர்கள் வந்த போதுதான் தங்கள் தங்கள் ஸம்பிரதாயத்துக்குத் தனிப் பெயர் தந்தது; இவர்களும் ஆசார, அநுஷ்டான, ஸம்ஸ்காரங்களில் பூர்விகமான தர்ம சாஸ்திரங்களைத் தான் பெரும்பாலும் பின்பற்றினார்களென்றாலும், அவற்றோடு தங்களுடைய புதிய பிரிவைத் தழுவுவதற்கு அடையாளமாக அதிகப்படியான சிலவற்றையும் (ஸமாச்ரயணம், முத்ராதாரணம் முதலியவற்றைப் போன்றவை) சேர்த்தார்கள். ச்ரௌத ஸ்மார்த்த கர்மாவுக்குக் கொஞ்சம் முக்யத்தைக் குறைத்து புராணாதிகளுக்கு அதிகம் முக்யம் தருவது போன்ற சில மாறுபாடுகளையும் செய்தார்கள். புண்ட்ரத்திலும் [நெற்றிக்கு விடுவதிலும்] புது விதமாக வைத்தார்கள்" என்றெல்லாம் நான் சொல்லியிருக்கிறேனல்லவா?*3 இதை வைத்தே கேட்கிறார்கள்: "நீங்கள் சொல்லியிருப்பதிலிருந்தே, பிற்கால ஆசார்ய புருஷர்களாக இருக்கப்பட்டவர்களே அதுவரை இருந்து வந்த அவர்களுடைய குலாசாரத்துக்கு வித்யாஸமாகப் பண்ணியிருக்கிறார்களென்று ஆகிறதே! அப்படியானால் இப்போதும் அப்படியே ஒருத்தன் ஹிந்துவாகவே இருந்துகொண்டு ஸ்மார்த்தத்திலிருந்து வைஷ்ணவத்துக்கோ, மத்வ மதத்திலிருந்து ஸ்மார்த்தத்துக்கோ போனால் என்ன?" – இப்படி ஆர்க்யுமென்ட் போகிறது.

இதில் நியாயம் இருப்பதாகப்பட்டாலும் சாஸ்திர அபிப்ராயத்தைத்தான் நான் சொல்ல வேண்டும், பூர்விகர் வழிதான் போகவேண்டும் என்று உங்களுக்கெல்லாம் உபதேசித்துவிட்டு நானே பூர்விகர் அபிப்ராயத்துக்கு மாறாகச் சொல்லக்கூடாது என்பதால், அவரவரும் தாங்கள் பிறந்திருக்கிற குலாசாரப்படித்தான் நடக்க வேண்டும் என்றே சொல்கிறேன். சாஸ்திரத்தை நம்ப வேண்டுமென்றால் அப்புறம் ஆர்க்யுமென்டுக்கு வால்யூ இல்லை

ஆர்க்யுமென்டில் எத்தனை நியாயம் இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டு அதன்படிதான் செய்ய வேண்டும். நம்பிக்கை (faith) என்னும்போதே அது புத்தியால் மட்டும் புரிந்துகொள்ளக் கூடியதல்ல என்று தானே அர்த்தம்? புத்திக்குப் புரிவதைத் தீர்மானமாக நாமே தெரிந்துகொண்டு விடுவோமாதலால், இதிலே 'நம்ப' என்ன இருக்கிறது? தெரியாததைத்தான் நம்ப வேண்டும். இதோ எதிரே 'மைக்' இருக்கிறது என்று கண்ணுக்குத் தெரிவதைச் சொன்னால் அதிலே 'நம்புவதற்கு 'என்ன இருக்கிறது? ஆனபடியால் மத நம்பிக்கை, சாஸ்திர நம்பிக்கை, தெய்வ நம்பிக்கை என்றெல்லாம் வார்த்தைகள் இருப்பதாலேயே - மதத்துக்குப் பேரே Faith என்று வைத்திருப்பதாலேயே - அதில் எல்லாவற்றையும் புத்தி தர்க்கத்தால் விளக்கிக் கொள்ள முடியாது என்றுதான் அர்த்தம்.

ஆனாலும் இப்படிச் சொல்லி அடியோடு விட்டுவிடாமல் [ஹிந்து மதப்பிரிவுகளுக்குள்ளும் பிறப்பின் படி அமைந்த பிரிவுக்கான பூர்வாசாரப்படித்தான் பண்ண வேண்டும் என்பதற்கு] கொஞ்சம் காரணமும் சொல்கிறேன்.

முதல் கேள்வி: தத்வத்தில் 'கன்விக்ஷன்' [உண்மை என்ற உறுதிப்பாடு] என்பதற்காக த்வைதத்திலிருந்து அத்வைதத்துக்கு அல்லது அத்வைதத்திலிருந்து விசிஷ்டாத்வைதத்துக்கு மாறலாமா? இதற்காகக் குலாசாரத்தை விடலாமா?- என்பது.

தத்வத்தில் 'கன்விக்ஷன்' என்பது முழுக்க ஒருத்தனின் உள்விஷயம். மனம் போனபடி ஏதோ ஒன்றைப் பிடித்துக் கொள்ளாமல், நன்றாகக் கற்றறிந்து ஆலோசித்து ஏற்பட்டதாகவோ, அல்லது நல்ல உள்ளநுபவத்தில் ஏற்பட்டதாகவோயிருந்தால் அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். கன்விக்ஷன் மேம்போக்காக இருக்கக்கூடாது. ஆழமாகப் போயிருக்க வேண்டும். ஏன் அந்த ஸித்தாந்தத்திலே பற்று என்பதற்குக் காரணம் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். காரணமில்லாமலே ஆழ்ந்த பற்று என்றால், அப்போது ஸம்ஸ்கார விசேஷத்தால் அப்படி ஏற்பட்டிருக்கும்; அப்போது அறிவால் சொல்லத் தெரியாதது அநுபவத்தில் பேச ஆரம்பிக்கும்.

எப்படியாயினும் ஒரு தத்வத்திலே, ஸித்தாந்தத்திலே ஒருவனுக்குப் பற்று மேலெழுந்தவாரியாயில்லாமல் உறுதியாக இருக்கிறது என்றால் அந்த உள்விஷயத்தை யாரும் ஆக்ஷேபிப்பதற்கும், இப்படி மாறக்கூடாது என்று சொல்வதற்கும் இல்லை. ஆனால் - இப்போது நான் சொல்லப் போகிறது ரொம்ப முக்கியமான பாயின்ட் -**ஒருத்தனுக்குப் பூர்விகர்களின் ஸித்தாந்தத்துக்கு வித்யாஸமாக இன்னொன்றில்தான் ஆழமான விச்வாஸமிருக்கிறது என்கிறதற்காக அவன் குலாசார அநுஷ்டானங்களை மாற்றிக் கொள்ள வேண்டியதேயில்லை.**

"இதென்ன? தத்வத்தில் வேறேயாகப் போவதை ஒப்புக்கொள்ளலாம், ஆனால் ஸமயாசாரத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்றால் குழப்பமாயிருக்கிறதே!" என்று தோன்றும். இதை நன்றாக அலசி, ஆலோசித்துப் பார்ப்போம். பார்த்தால் தத்வத்தைப் பற்றின உள்ளநுபவத்துக்கும் ஆசார அநுஷ்டானம் என்பதான வெளிக்கார்யம், வெளிச் சின்னங்களுக்கும் **நேர் ஸம்பந்தம் இருக்கவில்லை** என்று தெரியும். நேர் ஸம்பந்தம் இல்லாவிட்டாலும் சுற்றி வளைத்து நிச்சயமாய் ஸம்பந்தம் இருக்கிறது. அடியோடு**ஸம்பந்தமேயில்லாமலில்லை.** "ஸித்தாந்தம் அநுபவ விஷயம்; அதற்கு வெளி ஸமாசாரமான ரிசுவல் எதற்கு, ஆசாரம் எதற்கு?" என்று கேட்கிற ரிஃபார்ம்காரர்களோடு நான் சேர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் வெளிக் கார்யம், சின்னத்துக்கும் உள்ளே அநுபவம் உண்டாவதற்கும் அடியோடு ஸம்பந்தமில்லை என்று தப்பாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் நினைப்பதில் தப்பு என்ன என்பதைத்தான் இவ்வளவு நாழி எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

இப்போது என்ன சொல்கிறேனென்றால்: ஆசார அநுஷ்டானங்களில் பொரும்பாலானவற்றுக்கும் ஸித்தாந்தத்துக்கும் நேர் ஸம்பந்தம் அதிகம் கிடையாது என்கிறேன். ஸமயாசாரங்களும் கர்மாக்களும் எதற்காக என்று திருப்பித் திருப்பிச் சொன்னேன்? ஒரு ஜீவனுடைய சித்த சுத்திக்காக என்றுதானே சொன்னேன்? ஒரு ஜீவன் முடிவான லக்ஷ்யமாக ஏதோ ஒரு தத்வத்தின், ஸித்தாந்தத்தின் ஸத்யத்தைப் பிரத்ய அநுபவமாக்கிக் கொள்வதற்கு நேர் உபயமாகவே சாஸ்திர கர்மாவைப் பண்ணவேண்டும்

என்று சொல்லவில்லையே? கிருஷ்ண பரமாத்மாவும் ஸரி, சங்கர ராமாநுஜ மத்வாதி ஆசார்யர்களும் ஸரி, கர்மாக்கள் ரூபத்திலும் வெளிச் சின்னங்களாகவும் இருக்கிற ஆசார அநுஷ்டானங்களைச் சொன்னதெல்லாம் சித்த சுத்திக்காகத்தானேயொழிய முடிவான லக்ஷ்யமான தத்வ ஞான ஸ்வாநுபூதிக்காக அல்ல. (ஞானம் என்று இங்கே நான் சொல்வது பக்தி ஸித்தாந்தங்களில் பக்தி என்ன தத்வத்தை உள்ளபடி அறிந்துகொள்வதையும் குறிக்கும்.) எந்த ஸித்தாந்தமானாலும் அதன் ஸத்யத்வத்தை ஒருவன் தெரிந்து கொள்கிற பக்வம் வரவேண்டுமானால் அவனுடைய மனஸு அழுக்கிலாமலிருந்தால்தான் முடியும். சித்தம் என்ற கண்ணாடி அழுக்காகவும் ஆடிக்கொண்டும் இருக்கிற வரையில் அதில் எந்த ஸித்தாந்தத்தின் உண்மையும் தெளிவாகவோ, ஸ்திரமாகவோ பிரதிபலிக்காது. ஆகையால் ஸித்தாந்தம் வேறே வேறேயானாலும் அதைப் பெறுவதற்கு முந்தி எல்லாரும் common -ஆகப் பெற வேண்டியது சித்த சுத்தி. இப்படி சுத்தி ஏற்படவே ஆசார அநுஷ்டானம் என்பதே மறுபடி மறுபடி சொன்ன விஷயம். அதாவது ஸித்தாந்தத்தில் ஸித்தி என்ற முடிவான லக்ஷியத்துக்கு நேர் உபாயமான சித்த சுத்தி என்ற பூர்வாங்கமான லக்ஷ்யம் ஸித்திப்பதற்கு உபாயமாகத்தான் ஆசார அநுஷ்டான ரூபமான கர்மாக்களை வைத்திருக்கிறது. ஸித்தாந்தத்துக்கும் கார்யத்துக்கும் டைரக்ட் ஸம்பந்தம் கிடையாது.

ஆலோசனை பண்ணிப் பார்த்தால் தெரியும். லோகத்தில் எத்தனையோ ஸித்தாந்தங்களிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் ஏற்பட்டிருக்கிற கார்யங்களோ ஏறக்குறைய ஒரே மாதிரிதான் இருக்கின்றன. நாம் தீபாராதனை பண்ணினால் இன்னொருத்தன் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கிறான்; நாம் சாந்த்ராயண விரதம் என்றால் வேறே ஒருத்தன் ரம்ஜான் fasting என்கிறான். நம்முடைய தேவாலயங்களில் எப்படி பூஜை நடக்கிறதோ அப்படியேதான் பௌத்த, ஜைன ஆலயங்களிலும் நடக்கிறது. நமக்குள்ளேயே எடுத்துக் கொண்டால் ஒரேபோல தப்த சின்னங்களை தரித்துக் கொள்கிறதில் [சூடு போட்டு முத்திரை பதித்துக்கொள்கிறதில்] த்வைத அநுபவம், விசிஷ்டாத்வைத அநுபவம் என்று வேறேவேறாயாக வருகின்றனவா என்ன அத்வைதத்துக்கு, இப்போது "வேதாந்தா" லெக்சர் பண்ணுபவர்கள் சொல்கிறபடி, எந்த ஆசார

அநுஷ்டானமுமே இருக்கக்கூடாதுதான். ஆனால் அத்வைத ஆசார்யர்களும், மடங்களும் விதித்திருக்கிறபடி இந்த ஸித்தாந்திகளும் மற்றவர்களைப் போலவே ஸ்நான பானம், பூஜை, தீர்த்த யாத்திரை, திவஸ தர்ப்பணம் என்றுதானே பண்ணுகிறார்கள்? சைவன் எப்படி அபிஷேகம், அர்ச்சனை, கந்த, புஷ்ப உபசாரங்கள் செய்கிறானோ அப்படியேதான் வைஷ்ணவனும் செய்கிறான். ஸாளக்ராமமும் லிங்கமும் வேறேயாக இருக்கட்டும். இவன் போடுகிற துளஸியும் அவன் போடுகிற வில்வமும் வேறேயாக இருக்கட்டும். புளியோதரையும் சம்பாப் பட்டையும் வேறாக இருக்கட்டும். அவன் வைகுண்ட ஏகாதசிக்குக் கண்விழித்துப் பட்டினி கிடக்கிறானென்றால் இவன் சிவராத்திரிக்குத்தான் அப்படிச் செய்வது என்றே இருக்கட்டும். ஆகக்கூடி கார்யம் ஒன்றுதானே? இப்படியே சின்னங்களும்; சாந்துப்பொட்டு, திருமண், விபூதி ஏதோ ஒன்று, ஆக நெற்றியில் சின்னம் இருந்தாக வேண்டும். மடிசார்ப் புடவை வலது பக்கம், இடது பக்கம், வெளியிலே கச்சம் தெரிவது, தெரியாதது - எதுவானாலும் கச்சம் என்ற சின்னம் பொது. ஸந்நியாஸியாகிவிட்டால்கூட ஏக தண்டம், த்ரி தண்டம் என்று ஏதோ ரூபத்தில் தண்டம் என்ற சின்னம் இருந்தாகணும்.

ஒரே மாதிரி ஸந்தியாவந்தனம், ஒரே மாதிரி பூஜை, பஜனை, விரத உபவாஸங்கள், க்ஷேத்ராடன தீர்த்தாடனங்கள், திவஸம் முதலியன பண்ணிக்கொண்டே வெவ்வேறே ஸித்தாந்தங்களில் ஸித்திக்காக முயற்சி பண்ணுவது என்றால் என்ன அர்த்தம்? **ஒன்று, எந்த ஸித்தாந்தமானாலும் இவை வேண்டத்தான் வேண்டும் என்பது. இன்னொன்று, வேறு வேறு மாதிரியான ஸித்தாந்தங்களுக்கும் ஒரே மாதிரியான ஆசாரணை என்பதால் ஆசாரமும் ஸித்தாந்தமும் நேராக ஸம்பந்தப்பட்டவையல்ல என்பது.** ஆசாரமில்லாமல் தத்வ ஞானமோ, ஏதோ ஒரு ஸித்தாந்தத்தில் ஸித்தியோ வராது. ஒரு ஜீவனின் பழைய மூட்டை[*4]யெல்லாம் தீர்க்கிற அளவுக்கு அவனுக்கு ஓயாமல் நிறையக் கர்மாக்களைக் கொடுத்து அழுக்கு மூட்டையை சுத்தம் பண்ணுகிறதாகவே எல்லா ஸம்பிரதாயத்து ஸமயாசாரமும் இருக்கிறபடியால், அதில் இதைத்தான் பண்ண வேண்டும் என்றில்லாமல், எதைப் பண்ணினாலும், ஆனால் நிச்சயமாகப் பண்ணத்தான்

வேண்டும் என்று வழுவறப் பண்ணினால் இவனுக்குப் பிடிமானமுள்ள ஸித்தாந்தத்திலேயே ஸ்வானுபூதி அடைய அதுவே இவனுக்கு ஸஹாயம் செய்துவிடும். ஆகையால் ஒருத்தன் தத்வத்தில் தான் பிறந்த குடும்பத்துக்கு வேறாக கன்விக்ஷன் இருக்கிறது என்பதற்காக அதன் ஸமயாசாரத்தைவிட வேண்டியதில்லை. "பூர்வைராசரித:குர்யாத்" என்ற உத்தரவை மீறிப் பதிதனாகப் போக வேண்டியதில்லை.

அப்படியானால் பூர்விகர்களின் ஸித்தாந்தத்துக்கு வேறாக ஒன்றில் மட்டும் பற்று வைக்கலாமா, அப்போது மாத்திரம் பதிதனாகிவிட மாட்டானா என்றால், இப்படிப் பண்ணுவது தப்பு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எப்படி சொல்லலாம் என்றால் நான் சொன்ன ஸ்லோகமே **" சிகாம் , புண்ட்ரம்** " என்று வெளிச் சின்னங்களையும் "ஸூத்ரம்" என்று கர்மாக்களைச் சொல்லும் ச்ரௌத, ஸ்மார்த்த ஸுத்ரங்களையும், **"ஸமயாசாரமேவ"** என்று, ஒரு ஸமயத்துக்கு அநுகூலமானது என்று வெளி நடத்தையாக வைத்த ஆசாரங்களையும்தான், **"** ***பூர்வை : ஆசரித் : குர்யாத்*** "முன்னோர்களின் ஆசரணைப்படியே பண்ண வேண்டும் என்கிறதே தவிர, தத்வ நம்பிக்கை பற்றிச் சொல்லவில்லை.

தத்வம் அநுபவத்தில் ஸித்திக்க வேண்டுமென்றால் முதல் படியாக மனஸ் கன்னா பின்னா என்று போகாமல் அதை நன்றாக ஏதோ ஒரு நெறியால் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். உனக்கு ஜன்மா வாய்த்தபடி எந்த குலாசாரம் வந்திருக்கிறதோ அதுவே இதைப் பண்ணிவிடும். அதனால் இதை விடாதே; பதிதனாய்ப் போகாதே.

"சில ஸமயாசாரங்களே கொஞ்சம் 'லீனியன்ட்'டாக இருந்துகொண்டு, மனஸைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஆசார அநுஷ்டானங்களை கொஞ்சம் விட்டுக்கொடுத்து விடுகின்றனவே! காயக் காய உபவாஸமிருந்தால்தான் கர்மா போகும்; வயிற்றிலே ஆஹாரமில்லாமலிருந்தால்தான் நன்றாகப் பிராணாயாமம், த்யானம் பண்ண முடிகிறது என்று பார்த்தால் கோவிலேயே 'திருப்பக்ஷி' ('திருப்பள்ளி எழுச்சி' என்பது தான் இப்படியாயிருக்கிறது!) என்று அக்கார அடிசிலும்

புளியோதரையும், ததியோரையும் போடுகிறார்களே! ப்ரஸாதமானதால் "வேண்டாம்" என்றாலும் தோஷமாகுமே"! என்றால் … பரவாயில்லைப்பா! அதைச் சாப்பிடு. உன் மனஸு பகவானுக்குத் தெரியும். உனக்குச் சாப்பாட்டில் ஆசையில்லாவிட்டாலுங்கூட, அது வேண்டாம் என்றே இருந்தாலும்கூட, பகவான் பிறப்பித்த படி நமக்கென்று ஏற்பட்ட பெரியார்கள் பண்ணி வைத்த வழிக்கு அடங்கி நடக்க வேண்டுமென்றுதான் பிரஸாதத்தைச் சாப்பிடுகிறாய் என்பது ஸ்வாமிக்குத் தெரியும். அந்த மனப்பான்மையை மெச்சியே அவன் வெறும் வயிற்றில் செய்யும் த்யானத்தினால் ஏற்படுகிற பலனைக் கொடுத்துவிடுவான். ப்ராணாயாமம் என்று நீயாகப் பண்ணுவதை பகவானின் கிருபை பண்ணிவிடும். அல்லது ப்ரஸாதத்தை வாங்கிக்கொள்; ஆனால் உடனேயே சாப்பிடாமல், வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோய் உன் தியானம் முடிந்தபின் சாப்பிடு. பூர்வாசாரத்தை விடப்படாது என்ற உறுதியிருந்தால் எப்படியாவது 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொண்டுவிடலாம்.

நீ உன் பூர்விகர்களின் ஸித்தாந்தத்தை விட்டு விட்டாய் என்று கூட வெளியில் தெரியவேண்டியதில்லை. நீ பாட்டுக்கு ஸம்ஸ்கார பலத்தால், படிப்பால், அநுபவத்தால், பகவதநுக்ரஹத்தால் அந்த உன் உள் விஷயத்தில் போய்க் கொண்டிரு. வெளியிலே குலாசாரப்படியே பண்ணு. அதனால் சித்தத்தை சுத்திப் படுத்திக் கொண்டு ஸித்தாந்தத்தின் அந்தத்துக்குப் போ. அப்புறமும் கூடப் பூர்வாசாரத்தை விடாதே. சித்த சுத்தி ஸித்தித்து, ஸித்தாந்தமும் அநுபவமாகிவிட்ட பின் உன்னளவில் பூர்வாசாரமோ, பிற ஆசாரமோ எதுவுமே வேண்டாந்தான் என்றாலும் லோகத்திலுள்ள மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்காக முன்னோர் கைக்கொண்ட ஆசார, அநுஷ்டானங்களை விடாமல் பண்ணிக்கொண்டிரு. இதுதான் பகவான் போட்டிருக்கும் [கீதைக்] கட்டளை.

ஜன்மாப்படி வாய்த்த ஒரு ஸமயாசாரத்தில் இருந்துகொண்டே வேறொரு ஸித்தாந்தில் முன்னேற முடியும் என்பது வெறும் possibility தானா? யதார்த்தத்தில் அப்படிக் காட்ட முடியுமா? காட்டினால்தானே நம்பிக்கை வரும்? காட்டமுடியும். ஏ.வி. கோபாலாசாரியார் என்று ஒருவர் இருக்கிறார்[*5]. வைஷ்ணவ ஸம்ப்ரதாயப்படிதான் எல்லாம் செய்து வருகிறார். வைஷ்ணவ

ஸித்தாந்தத்துக்குமேகூட நிறையத் தொண்டு செய்து வருகிறார். நல்ல பாண்டித்யம் உள்ளவர். வித்வத் ஸதஸுகள் நடத்துகிறார். ஆனாலும் நம்முடைய [சங்கர] ஆசார்ய பாஷ்யங்களிலும் அத்வைதத்திலும் அபாரமான பற்று வைத்திருக்கிறார். ராமகிருஷ்ணா மிஷனோடு நெருங்கி ஸம்பந்தப்பட்டிருந்தாலும் 'அண்ணா' என்கிறவர் வைதிகாசாரங்களின்படியே அநுஷ்டானம் செய்து வருகிறார். இங்கே வர ஆரம்பித்திருக்கிற வெள்ளைக்காரர்களையே பார்த்தால், சர்ச்சுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள், க்றைஸ்டிடம்தான் நிறைந்த பக்தி வைத்திருக்கிறார்கள். ஆனாலும் [அத்வைத] வேதாந்தத்திலேயே விச்வாஸமுடையவர்களாக இருக்கிறார்கள். Converse -ஆக இந்த ஸ்மார்த்த மடத்தில் விதிக்கப்பட்டிருக்கிறபடி ஆசார, அநுஷ்டானங்களை நன்றாகச் செய்துகொண்டே, என்னிடம் அபிமானம் மரியாதையும், ஆசார்யாளிடம் பக்தியும் செலுத்திக்கொண்டே, ஆனாலும் என்னிடமே, "நீங்கள் என்னதான் சொன்னாலும் எங்களுக்கு அத்வைதத்தைவிட பக்திதான் பிடிச்சிருக்கு; அம்பாள் பூஜைதான் பிடிச்சிருக்கு; அவளே 'அத்வைதமாக ஐக்யம் பண்ணிக்கொண்டு விடுகிறேன்' என்று சொன்னால்கூட, 'வேண்டாம்! உன் பக்திதான் வேண்டும்' என்றுதான் சொல்ல வேண்டும் போலிருக்கிறது என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். இதுவும் எந்த ஒரு ஸமயாசாரமும் ஒரு தனி மநுஷ்யரின் ஸித்தாந்தத்துக்கு பாதகமாகச் செய்து விடவில்லை என்பதற்கு நிரூபணமாகிறது.

இன்னொரு கேள்விக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். இது வரையில் நான் தத்வம் என்பதை தனிப்பட்ட தெய்வ உபாஸனையோடு சேர்க்காமல் பிரித்தே பேசி வந்திருக்கிறேன். நம்முடைய மதத்திலோ philosophical -ஆக இருக்கிற தத்வ ஸித்தாந்தத்தோடேயே theological -ஆக வருகிற விஷயமான மூர்த்தி உபாஸனையும் சேர்ந்திருக்கிறதது. இங்கேயும் பூர்வாசாரப்படியே ஒருவன் ஜன்மாவை பொருத்துச் செய்ய வேண்டுமென்றால் ஜாஸ்தி மோதல் ஏற்படும் போலிருக்கிறது. அதாவது: விசிஷ்டாத்வைதி என்கிறவன் வெறும் ஃபிலாஸஃபியாக, 'எல்லாருக்கும் பொதுவான ஒரு பரமாத்மாதான் ஜீவாத்மாவின் அந்தர்யாமியாக உள்ளே புகுந்து ஆட்டிக் கொண்டும்

இருக்கிறது. ஜீவனானவன் முக்தியிலும்கூட அதோடு ஒன்றாகப் போய்விடாமல், தான் அதன் ஒரு அம்சமே என்பதைப் புரிந்துகொண்டு, பக்தியோடு அதன் ஆளுகைக்குக் கீழே தனியாகத்தானிருக்க வேண்டும்' என்று சொல்லிப் பொதுப்படையான ஒரு பரமாத்மாவோடு நிறுத்திவிடவில்லை. 'அந்தப் பரமாத்மா விஷ்ணுதான்; சிவன் இல்லை. அவனுக்கு இன்ன நிறம், இத்தனை கை, அவனுக்கு நிறைய அலங்காரம் பண்ணி ஆராதிக்க வேண்டும்' என்றெல்லாமும் சொல்கிறான். இப்படியே சைவ ஸித்தாந்தியும் இன்னொரு தத்வ சாஸ்திரத்தைச் சொல்கிறான். அது விசிஷ்டாத்வைதத்தைவிட அத்வைதத்துக்குக் கிட்டே போகிறது. என்றாலும் இதிலும் அத்வைத ஐக்யம் இல்லை. இவனும், பெயரே **சைவ** ஸித்தாந்தம் என்றிருப்பதற்கேற்க, பொதுவாக ஏதோ ஒரு பரமாத்மா என்று சொல்லாமல், 'அவர் சிவன் என்ற மூர்த்திதான்; விஷ்ணு இல்லை. அவர் 'இப்படியிப்படியிருக்கிறார். அவருக்கு ஆராதனையாக ஓயாமல் அபிஷேகம் செய்யவேண்டும்' என்றெல்லாம் சொல்கிறான். அத்வைதி அந்தப் பரமாத்மாவை வித்யாஸமில்லாமல் எல்லா மூர்த்திகளிலும் உபாஸிக்க வேண்டுமென்றிருந்தாலும், நடைமுறையில் [அத்வைதிகளான] ஸ்மார்த்தர் குடும்பங்களில் எத்தனையோ தலைமுறையாக சிவபூஜைதான் பண்ணுவது, [விஷ்ணுவுக்கான] ஸாளக்ராம பூஜைதான் பண்ணுவது, [அம்பாளுக்கான] ஸ்ரீ வித்யா பூஜைதான் பண்ணுவது என்றெல்லாம் வந்திருக்கிறது.

கேள்வி என்னவென்றால்: "எந்த ஸித்தாந்தமானாலும் உன் நம்பிக்கைப்படி வைத்துக்கொள்ளு, அதற்காகக் குலாசாரத்தை மாற்றாதே என்று சொன்னீர்கள். ஸரி. ஆனால் நமக்கு மூர்த்தி உபாஸனை, இஷ்ட தெய்வம் என்பதும் முக்கியமாயிருக்கிறதே! நம்முடைய மதத்தில் இத்தனை தெய்வங்களைச் சொல்லி, ஒவ்வொன்றுக்கும் புராணம், ஸ்தோத்ரம், க்ஷேத்ரம் என்று வைத்திருப்பதால் அவற்றில் ஒவ்வொருவனுக்கும் ஏதாவது ஒன்றில் விசேஷப் பிடிப்பு ஏற்படுகிறதே! இப்படியிருப்பதில், நான் விசிஷ்டாத்வைத வைஷ்ணவாகப் பிறந்தாலும் எனக்கு அத்வைதத்திலும் சிவனிடத்திலுமே பிடிப்பு இருக்கிதென்றால், உங்கள் உபதேசப்படி அத்வைதத்துக்காக விசிஷ்டாத்வைத பூர்வாசாரத்தை விட வேண்டியதில்லைதான் என்று

பார்த்தால், இதுவே என் பக்தி உபாஸனையில் குறுக்கே வந்து மோதுகிறதே!எனக்கு சிவனிடம்தான் ஸ்வாபாவிகமாக பக்தி என்றாலும் விஷ்ணுவை அல்லவா பூஜை பண்ணியாச வேண்டியிருக்கிறது? எந்தக் கர்மாவானாலும் ஸித்தாந்த அநுபவத்துக்குப் பூர்வாங்மான சித்த சுத்திக்குப் பிரயோஜனமாகிறது என்று மனஸை ஸரிப்படுத்திக் கொண்டு செய்கிறது போல, விஷ்ணுவை வைத்துப் பூஜை பண்ணினால் அது சிவபூஜைதான் என்று மனஸை எப்படி ஸமாதானப்படுத்திக் கொள்வது?" -என்று கேட்டால் என்ன பதில்?

அல்லது சைவராகப் பிறந்த ஒருவருக்கு விஷ்ணுவிடம்தான் பக்தி என்று அவர் இதே போலக் கேட்டால் என்ன சொல்வது? ஸ்மார்த்தர் ஒருவர், "சிவ பூஜைதான் அகத்தில் இருந்து வந்திருக்கிறது. எனக்கு [அம்பாளின்] ஸ்ரீசக்ர பூஜையில்தான் ஈடுபாடு இருக்கிறது; அல்லது முருகனிடந்தான் தன்னால் பக்தி வருகிறது. நான் என்ன?" பண்ண என்று கேட்டால் என்ன செய்வது?

பூர்விகர் ஆசாரப்படிதான் செய்ய வேண்டும் என்பதை மாற்றிச் சொல்லலாமா? இல்லாவிட்டால் இவர்கள் ரொம்பவும் மனஸு நொந்து கஷ்டப்படுவார்கள் போலிருக்கிறதே! இவர்கள் நாஸ்திகர்களாகப் போகவில்லை. பூஜை பண்ணமாட்டோமென்று சொல்லவில்லை. நம் மதத்திலேயே சொல்லியிருக்கிற ஸ்வாமிகளில் ஒன்றைத் தான் பூஜிக்க ஆசைப்படுவதாகச் சொல்கிறார்கள். இவர்களை இன்ன குலத்தில் ஈஸ்வரன் பிறப்பித்ததால் இவர்கள் அதில் முன்னே இருந்தவர்கள் எப்படிச் செய்தார்களோ அப்படித்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்திச் சொல்லலாமென்றால், அதே ஈஸ்வரன் தானே இவர்களுக்குத் தன்னுடைய வேறு ஒரு மூர்த்தியில் விசேஷ பக்தியை உண்டு பண்ணியிருக்கிறான்? ஆகையால், "கர்மா-பக்தி-ஞானம் என்று வருகிற மூன்றில் மற்ற சாஸ்திர கர்மாக்களைப் பூர்வாசாரப்படி பண்ணு!பக்தி மட்டும், பக்தி கர்மாவான பூஜையை மட்டும் உன் இஷ்ட தேவதைக்கே பண்ணப்பா! ஞானம் என்ற ஸித்தாந்த ஸமாசாரத்தைத்தான் முன்னேயே சொல்லியாச்சு" என்று பதில் சொல்லி விடலாமா?

இதுவும் ஸமாதானப்பட மாட்டேன் என்கிறது. மற்ற சாஸ்திர கர்மா, பக்தி கர்மா என்று பிரிக்க முடியாமல் சேர்த்துப் பிசைந்தல்லவா வைத்திருக்கிறது? எல்லாருக்கும் பொதுவான ஸந்தியாவந்தனத்தில் கூட ஒருத்தர் “பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம்” என்றால் இன்னொருத்தர் “ஈஸ்வர” சப்தம் சிவனை ஞாபகமூட்டுகிறதேயென்பதால் (“ஈஸ்வரன்”, “பகவான்”என்ற இரண்டும் ஒரே பரமாத்மாவைத்தான் சொல்கிறதென்றாலும்), மஹா விஷ்ணுவின் ப்ரீதிக்காகவே என்று ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டுமென்று நினைத்து “ஈஸ்வர” என்கிற இடத்தில் “பகவத்” என்கிறார்! சைவனாகப் பிறந்து விஷ்ணு பக்தி பண்ண வேண்டுமென்றிருக்கிற ஒருவனுக்கு, “கேசவ, நாராயண” என்று சொல்லிக் கொண்டு நாமத்தைக் குழைத்துப் போட்டுக் கொண்டால் தான் மனநிறைவு இருக்கலாம். இவனை விபூதிதான் இட்டுக் கொள்ள வேண்டுமென்றால் அவன் [சிவ] பஞ்சாக்ஷரம் சொல்லித் தானே அதைக் குழைத்து இட்டுக் கொள்ளவேண்டியிருக்கும்? சிகை, ஸூத்ரம் ஆகியவற்றோடு ‘புண்ட்ரம்’ என்று நெற்றிக்கிட்டுக் கொள்வதிலும் பூர்வாசாரப்படிதான் பண்ண வேண்டும் என்றிருப்பதால், தெய்வத்தையும் மாற்றிக் கொள்ளக் கூடாது என்று வைத்துக்கொண்டால், அது ஸ்வபாவமான பக்திக்கு இடையூறாக ஆகிறதே! இப்படியாக வெளிச் சின்னம், நேராக பக்தி பூஜையில்லாத வைதிக கார்யம் இவற்றிலெல்லாங்கூட பூர்விகர்களின் ஸம்பிரதாயத்தில் நிலை நாட்டப்பட்டுள்ள ஏதோ ஒரு தெய்வத்தை ஸம்பந்தப்படுத்தியிருக்கிறதே!

அதனால், “நான் இவ்வளவு நேரம் சொன்னதை வாபஸ் பண்ணிவிடுகிறேன். பூர்வாசாரமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். நீ எப்படியும் பகவானை நம்புகிறாய், அவனை மனஸார ஒரு ரூபத்தில் உபாஸிக்க வேண்டும் என்று தாபப்படுகிறாய் அதனால் உன்னை அவனே பார்த்துக்கொள்வான். பூர்விகர் ஆசாரத்தைப் பற்றிக் கவலைப்படாதேயப்பா” என்று சொல்லி விடலாமா?

இதுவும் நிம்மதிப்படமாட்டேனென்கிறது. எங்கே கட்டறுத்துக்கொண்டு போகலாமென்று ஜனங்கள் ஒரே இந்திரிய ஆட்டத்திலும் நாஸ்திகத்திலும் போய்க் கொண்டிருக்கிற இந்த ஸமயத்திலே ஏதோ கொஞ்சம் தர்மம், பக்தி, ஆத்மார்த்தமான தத்வம் என்று நாட்டம் உள்ளவர்களையும் குல

வழக்கத்திலிருந்து அவிழ்த்து ஸ்வதந்திரமாக விடுவதென்றால், இப்போது நல்ல லக்ஷ்யத்துக்காகவே இவர்கள் ஸ்வதந்திரம் கேட்டாலும், அப்புறம் அதன் பழக்கத்தாலேயே மற்றவற்றிலும் ஸ்வதந்த்ரமாகத் தெறிகெட்டுப்போக ஆரம்பித்துவிட்டால் என்ன பண்ணுவது என்று இருக்கிறது.

அநேக இடங்களில் இப்படி நடந்துமிருக்கிறது. பக்தி, தர்மம், தத்வம் என்ற அபிலாஷைகளிருக்கும் மற்ற ஜனங்களும் இவர்களைப் பார்த்து இவர்கள் குலாசாரத்தை விடுகிறார்களென்பதால் தாங்களும் விடலாம் என்பதற்குத் தானே ஊக்கம் பெறுவார்கள்? இதையெல்லாம் பார்த்தால், பகவானே என்ன சொன்னார், ரொம்ப நிர்தாக்ஷிண்யமாகத்தானே சொன்னார், அப்படித்தான் நாமும் குலாசாரத்தை ஒரு நாளும் விடப்படாது என்று சொல்லிவிடுவோமென்று தோன்றுகிறது.

குலதர்மம் என்பதற்காக யுத்தம் பண்ணிப் பிதாமஹர், பந்து, மித்ரர்களையெல்லாம் கொல்லுவதாவது என்று வில்லைப் போட்டுவிட்டு உட்கார்ந்த அர்ஜுனனிடம் பகவான் இப்படித்தானே சொன்னார் "உனக்கு சாஸ்திரம் இந்த ஸ்வதர்மத்தைத்தானே கொடுத்திருக்கிறது? ஒரு பிராம்மணனிடம் போய் நான் 'சண்டை போடு' என்று சொல்வேனா? உன்னை ஈஸ்வரன் க்ஷத்திரியனாகப் படைத்திருக்கிறானோ இல்லையோ? அப்படியானால் அந்தக் குலாசாரப்படிதான் நீ பண்ண வேண்டுமென்றே அர்த்தம். 'அதன்படி பண்ணினால் குலமே போயிடும்; குலஸ்த்ரீகள் பாழாய்ப் போவார்கள்' என்றெல்லாம் நீ அழுது அடம் பண்ணிப் பிரயோஜனமில்லை. பலனைப் பார்க்காதே. ஈஸ்வரன் இப்படி ஜன்மா கொடுத்தானென்றால் அதற்கு சாஸ்திரம் எந்த வழியைக் காட்டுகிறதோ அப்படித்தான் போகணும். மற்றவர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்குகிறோமே என்று பார்க்காதே. அல்லது உனக்கே இதனால் கஷ்டம், மனவேதனை, guilty conscience இருந்தாலும் இதுகளையும் பார்க்காதே' என்று இப்படிச் சொல்லிக்கொண்டே போய், "இதற்கெல்லாம் மேலாக உன் பிராணனே போகிறதா? போகட்டும்! ஸ்வதர்மத்தின்படியே இருந்து கொண்டிருந்தால், அதற்காகச் செத்தாலும் மேல்,

ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:"

என்று ஒரே முடிவாகச் சொல்லிவிட்டார்!

"உன்னுடைய ஸ்வதர்மம் அதாவது பிறப்பாலேற்பட்ட குலதர்மம் குணமில்லாததாக, நல்ல அம்சங்களில்லாததாக இருந்து, இன்னொரு குலதர்மம் உசத்தியான அநுஷ்டானங்களுள்ளதாக இருந்தாலுங்கூட, நீ அதை எடுத்துக் கொள்ளப்படாது. ஸ்வதர்மந்தான் ச்ரேயஸ்" என்று பகவான் தீர்மானிக்கச் சொல்லி,

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்

என்று அடித்துச் சொல்லி, அதற்கும் மேலே கடுமையாக

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய:

"தன் குலதர்மத்திலே இருந்து கொண்டு சாவே ஏற்பட்டாலும் சிரேயஸ்" :

பரதர்மோ பயாவஹ:

"பிறத்தியான் தர்மம் மஹா பயங்கரமாய் முடியும் என்கிறார்[*6].

ஸரி, பகவானே சொன்ன இந்த முடிவை அது எத்தனை கடுமையாய்த் தோன்றினாலும் பகவான் சொன்னதென்பதால் அதற்கு மேல் க்ஷேமமில்லையென்று நாமும் முடிவாகச் சொல்லிவிடலாமென்றால், முடியவில்லை.

ஏன்? பூர்வாசாரத்தை விடலாமா என்று கேட்கிறவர்களின் இன்னொரு கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டியிருப்பதால் முடியவில்லை. இதுவும் நானே சொல்லிக்கொடுத்ததை வைத்துக்கொண்டு என்னையே வளைக்கிற கேள்விதான்!

நம்முடைய பூர்விகர்கள் என்று எட்டு, பத்து, இருபது தலைமுறைகளாகச் செய்து வருவதை இப்போது நாம் பூர்வாசாரமென்று சொல்லி அதைத்தான் அநுஸரிக்க வேண்டுமென்கிறோம். அவர்களுக்கு முந்தி இன்னம் அநேகத் தலைமுறைகளுக்கு முன்னாலிருந்த 'பூர்விகப் பூர்விகர்'கள் செய்து

வந்ததையும் இவர்கள் செய்து வந்ததையும் பார்த்தாலோ அதற்கு இது கொஞ்சம் மாறுதலாகவும், சிலதைக் கூட்டியும் குறைத்தும் காணப்படுகிறது. நானே சொன்ன விஷயந்தான்; அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முந்தி வரையில் ஸ்மார்த்த ஆசாரம் என்பதுதான் பொதுவாயிருந்து வந்திருக்கிறது. அப்புறம் தான் பல ஸம்ப்ரதாயங்கள் ஏற்பட்டு, ஆசார அநுஷ்டானங்களில் மாறுதல், கூடுதல், குறைதல் பண்ணியிருக்கிறது. அதற்கு அப்புறம் இந்தப் பிரிவுகளுக்கென்று அதனதன் ஆசார்ய புருஷர்கள் செய்த இந்தப் புதிய ஆசாரங்கள் (புதுசு என்றால் முழுக்கப் புதுசு இல்லை. முக்கால்வாசி பழைய வைதிகாசாரமாக இருப்பதுதான்; கால்வாசி வித்யாஸமாயிருக்கும் - இப்படிப்பட்ட ஆசாரங்கள்) தலைமுறை தலைமுறையாக வந்து இதுகளும் உறுதிப்பட்டுவிட்ட ஸமயாசாரங்களாக இப்போது ஆகிவிட்டிருக்கின்றன. "இப்போது இந்த ஸமயாசாரங்களையும் யாரும் மீறக் கூடாது என்கிறீர்கள். அது ஸரி. ஆனால் பொதுவான ஸ்மார்த்த ஸம்பிரதாயத்திலிருந்து ஒரு பிரிவாக ஒன்றை வைத்தபோது அந்தந்த ஆசார்ய புருஷர்களே அதுவரையிருந்த பூர்வாசாரத்தில் மாறுதல்கள் பண்ணித்தானேயிருக் கிறார்கள்? அப்போது அவர்களே பூர்வாசாரப்படி 'ஸ்ட்ரிக்ட்'டாகப் பண்ணவில்லை என்றுதானே ஆகிறது?" இதற்கு மேலே இன்னொன்று என்னை நன்றாக மடக்குகிறதாகக் கேட்கலாம்: "நாங்கள் பூர்விகர் ஆசாரத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று எதற்காகச் சொல்கிறோம் இஷ்ட தேவதா உபாஸனைக்காகத்தான். நாங்கள் நாஸ்திகமாகப் போகவில்லை. ஸித்தாந்தத்துக்காகவோ இஷ்ட தெய்வத்துக்காகவோ மாறலமா என்றுதான் கேட்டோம். ஸித்தாந்தத்துக்காக ஆசாரத்தை மாற்றவேண்டாமென்று காரணம் சொல்லி விட்டீர்கள். இப்போது இஷ்ட தெய்வ விஷயம் மட்டும் நிற்கிறது. இதிலும் பூர்வாசாரப்படிதான் போகவேண்டும் என்று சொல்லி விடலாமென்று நீங்கள் பார்க்கிறீர்கள். ஆனால் நமக்கு நேராகப் பூர்விர்களாக இருக்கிறவர்கள், அவர்களுக்கும் பூர்விகர்களாக இருக்கிறவர்கள் என்று பாகுபாடு செய்து ஆராய்ந்து பார்த்தால், நம் நேர் பூர்விகர்களே ஆதி பூர்விகர்களுக்கு வித்யாஸமாகப் போயிருக்கிறார்களென்றும், இந்த **இஷ்ட தெய்வ ஸமசாரத்தில் வேத காலத்திலிருந்து ஆயிரம் வருஷத்துக்கு முன்வரை வந்த நெடுங்காலப் பூர்வாசாரம் எங்களுக்கு ஆதரவாகத்தானிருக்**

கிறதென்றும் தெளிவாகத் தெரிகிறது.வேதத்திலோ, ஸ்மிருதிகளிலோ, இந்த ஸ்வாமிதான் உசத்தி என்று எந்த ஒன்றையும் பரதெய்வம் என்று நிர்தாரணம் பண்ணி வைத்திருக்கவில்லை. எல்லாவற்றையும் ஒரே பரமாத்மாவாகச் சொல்லி, ஆனாலும் எவரெவருக்கு எந்த மூர்த்தியில் அபிருசியோ, மனஸு லயிக்கிறதோ அதை இஷ்ட தெய்வமென்று வழிபட இடம் கொடுத்திருக்கிறது; தனக்கு ஒன்றில்தான் கவர்ச்சியிருக்கிறது என்பதற்காக அதை பக்தி செய்தாலும், மற்ற தெய்வங்களை நிந்திக்கக் கூடாது என்று வைத்திருக்கிறது; இதற்காகவே பஞ்சாயதன பூஜை*7என்று ஏற்படுத்தி, இஷ்ட தெய்வத்தை அதில் பிரதானமாக வைத்தாலும் மற்றவற்றையும் பரிவாரங்களாக வைத்துப் பூஜை செய்து ஸமரஸ பாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது -இதையெல்லாம் நீங்களே உபந்யாஸம் செய்திருக்கிறீர்கள். ஆகையால் அதற்கப்புறம் நடுவாந்தரத்தில் வந்த ஆசார்ய புருஷர்கள் சிவன்தான் உசத்தி, விஷ்ணுதான் உசத்தி என்று ஏதோ ஒன்றை வைத்து அது எங்கள் குலாசாரமாக வந்திருக்கிறபோது, பிராசீனமான வைதிக தர்மத்துக்கு வித்யாஸமாகப் போய்விட்ட இந்தக் குலாசாரத்தை நாங்கள் மாற்றி, பிராசீன வழிப்படியே உபாஸனா விஷயத்தில் போனால் அது எப்படித் தப்பு? நாங்கள் சீர்திருத்தகாரர்களைப் போல வேதத்தின் கர்ம காண்டம், ச்ரௌத-ஸ்மார்த்த ஸூத்ரங்கள், தர்ம சாஸ்திரங்கள் இவற்றையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, வேதாந்தந்தான் ஸாரம், பாக்கியெல்லாம் சக்கை என்று சொன்னால் தப்பு. இவை எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டே, 'இஷ்ட தெய்வ உபாஸனை இவற்றுக்கு ஸம்மதமானதுதான். இன்னும் சொல்லப் போனால் ஒரு தெய்வத்துக்கு மட்டுமே பரத்வம் சொல்வதுதான் ஒரிஜினலான சாஸ்திரங்களுக்கு சம்மதமாயிருக்காது' என்றே, இப்போது கட்டாயமாக ஏதோ ஒரு ஸ்வாமியிடம்தான் பக்தியாயிருக்க வேண்டும் என்கிற குலாசார ஏற்பாட்டிலிருந்து ஸ்வதந்திரம் கேட்கிறோம். கொஞ்சங்கூட வைதிக சாஸ்திரத்துக்கு விரோதமாக இல்லாத இந்த ஆசையை எப்படி நிராகரிக்கலாம்?" என்று கேட்கலாம்.

” `ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:” என்றால், `ஸ்வதர்மம்’ என்று இப்போது வந்திருக்கிற குலதர்மமே ஆதியிலிருந்த ஸ்வதர்மத்துக்கு இந்த அம்சத்தில் வித்யாஸமானதாகத்தானே இருக்கிறது?ஆகையால் அதைப் பழையபடியே - அதாவது ஒரிஜினலான ஸ்வதர்மமாக - மாற்றிக் கொண்டால் இது எப்படி தோஷமாகும்? க்ஷத்ரியன் தர்மத்துக்காக யுத்தம் பண்ணத்தான் வேண்டுமென்று ஆதியிலிருந்து அன்றைக்கு வரையில் இருந்த ஸ்வதர்மத்தைப் பற்றி பகவான் சொன்னதை, ஆதியிலிருந்து ஒரு விதமாகவும் பிற்பாடு வேறு விதமாகவும் குலாசாரம் மாறியிருக்கிற நிலையில் எப்படிப் பொருத்தலாம்?” என்று கேட்டுவிட்டால் என்ன பண்ணுவேன்? பகவான் சொன்ன பதிலை (மரணமே ஸம்பவித்தாலும் குலாசாரத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற பதிலை) வற்புறுத்த முடியாமல் என் வாயைக் கட்டித்தான் போடுகிறது.

ஏற்கனவே கட்டு விட்டுக் கெட்டுப்போனது போதாது என்று புதிதாக எந்தக் கட்டுப்பாட்டையும் தளர்த்தி விடக்கூடாது என்கிற நியாயமும் இன்னொரு பக்கம் என்னைக் கட்டுப்படுத்துகிறது.

அதனால் ஒரு ‘காம்ப்ரமைஸ்’ பண்ணி வைக்கத் தோன்றுகிறது. இதைவிட்டால் வழியில்லையென்று, இரண்டையும் ராஜி பண்ணி ஒரு யோசனை சொல்கிறேன்:

இப்போது குலாசாரமாக எது வந்திருக்கிறதோ அதன்படியே பண்ணு; அதோடு கூட உனக்கு இஷ்டமானதாகவும் ஆதி வைதிகாசாரத்துக்கு விரோதமில்லாமல் எது இருக்கிறதோ அதையும் சேர்த்துக் கொள். அப்பா, தாத்தா பண்ணின மாதிரியே சிவ பூஜையோ, விஷ்ணு பூஜையோ பண்ணு. அதோடுகூட உன் இஷ்டதேவதை எதுவோ அதையும் சேர்த்துக் கொள்ளு. முடியுமானால் பஞ்சாயதன பூஜையாகவே பண்ணு. உன் இஷ்ட தேவதைக்குக் கொஞ்சம் ஜாஸ்தி அர்ச்சனை, அபிஷேகம், அலங்காரம் வேண்டுமானால் பண்ணிக் கொண்டு போ. எப்படியானாலும் இப்போது உனக்கு வாய்த்திருக்கிற குலாசாரத்தை விடாதேயப்பா! அதற்கு கௌரவம் கொடுத்து ரக்ஷிக்காமலிருக்காதேயப்பா! இந்த ஸம்பிரதாயத்துக்கு ஆசார்ய

புருஷர்களாக வந்தவர்கள் தங்களுக்கு முன்னேயிருந்த பதினாயிரங்கால ஏற்பாட்டில் வித்யாஸங்களைக் கொண்டு வந்திருக்கிறார்களேயென்று அவர்களைக் கண்டனம் செய்யாதே, மரியாதைக் குறைச்சலாகப் பேசாதே, அவர்களை இந்தக் கால ரிஃபார்மர்களோடு சேர்த்து வைத்துவிடாதே. புதுச் சீர்திருத்தக்காரர்கள் பழசில் நூற்றுக்குத் தொண்ணூறைத் தூக்கிப் போட்டுவிட வேண்டுமென்கிறார்கள். ஆனால் ஸமீப நூற்றுண்டுகளுக்கு முன் வந்த வெவ்வேறு ஸம்பிரதாய ஆசார்யர்களும் கொஞ்சம் மாறுபாடாகப் போயிருந்தாலும் ஆதியிலிருந்ததில் நூற்றுக்குத் தொண்ணூறை ஒப்புக் கொண்டு, தங்களை அநுஸரிப்பவர்கள் தொடர்ந்து அநுஷ்டிக்கும்படிச் செய்திருக்கிறார்கள். முக்யமாக, வைதிகமான நித்ய கர்மாநுஷ்டானங்களை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஸநாதன தர்மத்துக்கு முதுகெலும்பாக உள்ள வர்ணாச்ரம விபாகங்களை, அதனால் ஏற்பட்ட அதிகார பேதத்தை இவர்களெல்லாரும் ஒப்புக் கொண்டேயிருக்கிறார்கள். இதிலேகூடச் சிலபேர் சற்று 'ரிஃபார்ம்' மனப்போக்கு காட்டியிருக்கிறார் களென்றாலுங்கூட, தனி மநுஷ்யன் ஒருத்தன் பிரேமையினாலும் நைச்யத்தாலும் ஸம பாவனையாலும் வித்யாஸம் பார்க்காமலிருப்பதைத் தான் ஆதரித்திருக்கிறார்களே தவிர, ஸமூஹத்திலேயே இப்படிப்பட்ட பிரிவுகள் இருக்கக்கூடாது என்று எடுத்துப் போட்டுவிடவில்லை என்பதை கவனிக்க வேண்டும். தங்களுக்கு முற்பட்ட சாஸ்திரத்தில் ஏன் கூடுதல் குறைச்சல் பண்ணினார்களென்றால், அந்தந்தக் காலத்தில் வேறே சிலபேர் இதற்கு எதிர்த்திசையில் ரொம்ப தூரம் பூர்வ சாஸ்திரத்திரத்துக்கு விரோதமாக இன்னொரு விதமாகப் போயிருக்கலாம். அந்தச் சூழ்நிலையில் மறுதிசையில் கொஞ்சம் கூடுதலாகவே போனால்தான் தாக்குப் பிடித்து நிற்க முடியும் என்று [இந்த ஆசார்யர்கள்] இப்படிச் செய்திருக்கலாம். விஷ்ணுதான் நிஜமான ஸ்வாமி என்று ஒருத்தர் ஸித்தாந்தம் செய்தாரென்றால், அந்தக் காலத்தில் வேறே யாரோ விஷ்ணுவை ரொம்ப மட்டந்தட்டியிருக்கலாம். அப்பைய தீக்ஷிதர் இருக்கிறார். பரம அத்வைதி, அதாவது அத்வைத லெக்சர் மட்டும் பண்ணுபவரில்லை, அநுபூதிமான். ஈஸ்வரன், அம்பாள், மஹாவிஷ்ணு ஒவ்வொருவருமே ஸாக்ஷாத் பரமாத்ம ஸ்வரூபம்தான் - இவர்கள் **ரத்ன த்ரயம்** – மும்மணிகள் -என்று எழுதியிருப்பவர். அப்படிப்பட்டவரே

பரமேஸ்வரனைப் பற்றி மற்ற தெய்வங்களைவிட ரொம்ப அதிகமாக எழுதி, சிவ மஹிமையையே விசேஷமாக நிலைநாட்டியிருக்கிறார். காரணம் என்னவென்றால் அந்தக் காலத்தில் வீர வைஷ்ணவர்களின் செல்வாக்கு மித மிஞ்சிப் போயிருந்தது. Counteract பண்ணுவதற்காகவே இவர் சிவபரமாக அதிகம் செய்ய வேண்டியிருந்தது. இப்படி ஒவ்வொரு ஆசாரியரின் காலத்தில் பூர்வாசாரத்துக்கு ரொம்பவும் விரோமாக ஒரு போக்கு ஏற்பட்டிருந்தது என்பதாலேயே அதற்கு opposite direction-ல் இவர்களும் அதற்கு கொஞ்சம் வித்யாஸமாகப் போகும்படி ஏற்பட்டிருக்கலாம். தன் தெய்வம் உசந்தது என்பதனால் அவர்கள் இன்னொன்றை மட்டம் தட்டினார்கள், நிந்தித்தார்கள் என்பதற்காக நீ அப்படிப் பண்ணாதே. நிந்திக்கிறார்களே என்று அவர்களையும் நிந்திக்காதேயப்பா! பயமோ விநயமோ இல்லாமல் சாஸ்திரக் கட்டுப்பாடுகளை மீறுகிற நம் காலத்தவரைப் போலில்லாமல், பழைய ஏற்பாடுகளில் நிரம்ப ச்ரத்தா பக்திகளுடன் ஜனங்கள் அடங்கியேயிருந்த அந்த நாளிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சற்று வித்யாஸமாகப் போன இந்த ஆசார்ய புருஷர்களை அநுஸரித்துப் போயிருக்கிறார்களென்பதிலிருந்தே அவர்களிடத்தலே ஒரு ஸத்யத்தின் சக்தி இருந்திருக்கிற தென்று தெரிகிறது. இப்போதைய ரிஃபார்மர்களைவிட நிச்சயமாக ஸொந்த வாழ்க்கையில் அவர்கள் ரொம்பப் பெரியவர்களாகவும் சீலமுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அது மட்டுமில்லை. இப்போது சில ரிஃபார்ம்களின் காரண புருஷர்கள் சீலமுள்ளவர்களாயிருந்தாலும், அப்புறம் அந்த மூவ்மெண்டில் அப்படிப்பட்டவர்களை அபூர்வமாகத்தான் பார்க்க முடிகிறது. நம் மதத்துக்குப் பெருமையே ஆதியிலிருந்து இங்கேதான் கூட்டங் கூட்டமாக மஹான்களும், ஸாதுக்களும் தோன்றி வந்திருக்கிறார்களென்பதுதான். லோகத்தில் வேறெங்கும் இல்லாத விதத்தில் நம் தேசத்தில் தான் ஆசார அநுஷ்டானங்கள் வெகு கட்டுப்பாட்டுடன் அநுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன; இங்கேயேதான் லோகத்தில் வேறெங்கேயும் பார்க்க முடியாத அளவுக்கு மஹான்களும் தோன்றியிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இந்த ஆசார அநுஷ்டானம்தான் சீலத்தின் உயர்வுக்குக் காரணம் என்று தெளிவாகத்தெரிகிறது, இந்த அபிப்ராயத்துக்கு பலமூட்டுவதாகவே பூர்வாசாரங்களை விட்டுவிட்ட சீர்திருத்த இயக்கங்களில் உத்தமர்கள்

பெருவாரியாக வரவில்லை என்று பார்க்கிறோம். வைதீக சாஸ்திரங்களில் பெரும்பாலானவற்றை அநுஸரித்து. மற்றவற்றை மட்டும் மாற்றியிருக்கிற ஸம்பிரதாயங்களைப் பார்த்தாலோ இவற்றில் முதல் ஆசார்ய புருஷருக்குப் பிற்பாடும் ஏகப்பட்ட பெரியவர்கள், நிரம்ப யோக்யதையுள்ளவர்களாகவும். பகவானின் அநுக்ரகத்தைப் பிரத்யக்ஷமாகப் பெற்றவர்களாகவும், தங்களை ஆச்ரயித்தவர்களுக்கு அநுக்ரஹம் செய்யச் சக்தி வாய்ந்தவர்களாகவும் தோன்றியிருப்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கும் அவற்றில் நிறைய அனுஷ்டாதாக்கள் இருப்பதையும் பார்க்கிறோம். வாய்ப்பேச்சு என்றில்லாமல் நல்ல கண்டிப்பான அநுஷ்டானம் செய்த ஆயிரக்கணக்கானவர்களின் அநுபவபலம் என்பது, ஒவ்வொரு ஸம்பிரதாயத்திலும் அதன் ஆசாரியரின் நாளிலிருந்து இன்றுவரை தலைமுறை தலைமுறையாக வந்து அவை ஒவ்வொன்றுக்கும் உரமூட்டியிருக்கிறது. தாய்மரத்திலிரந்து கொஞ்சம் பிரிந்தே வந்த விழுதும் அப்புறம் மரமாகி வஜ்ரம் பாய்ந்து உறுதிப்பட்டுவிட்டதைப்போல, இப்போது இந்த ஸம்பிரதாயங்கள் எல்லாவற்றிலுமே அதற்கான ஸமயாசாரமென்பது நன்றாக ஸாரத்துடன் கெட்டிப்பட்டிருக்கிறது. ஸொந்த கன்விக்ஷன் இருக்கிறதா இல்லையா என்பதையே நினைக்காமல், `அப்படி நினைக்கிறதே பாபம்; நமக்கென்று ஏற்பட்ட ஸமயாசாரம் இதுதான்; ஒரு அப்பா அம்மாவுக்குப் பிறந்தோமென்றால் அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களையே தெய்வமாகக் கொள்வதுபோல, நாம் இந்த ஸம்பிரதாயத்தில் பிறந்து விட்டதால் இதுதான் நமக்கு தெய்வம் மாதிரி' என்கிற விஸ்வாஸத்துடன், தியாக புத்தியுடன் இவ்வழிகளைப் பின்பற்றினால் முன்னோர்களின் அநுஷ்டான பலம் இன்றைக்கும் இவற்றில் போகிறவர்களைத் காப்பாற்றும்.

ஆனபடியால் ஸமீபத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்திருத்த மதங்களோடு இவற்றைச் சேர்த்து விடாமல், சீர்திருத்த மதங்கள் மாதிரியில்லாமல் ச்ருதி, ஸ்ம்ருதி, புராணம் எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளும் ஸம்பிரதாயங்களில் பிறந்தவர்கள் அவற்றின் ஆசரணைகளை விடுவது விரும்பத்தக்கதல்ல. அவற்றுக்கு அதிகமாக, ஆதி வைதிக மரபுக்கு ஸம்மதமானதாகத் தாங்கள் இஷ்டப்படுகின்றவைகளையும் சேர்த்துக்கொண்டு செய்யவேண்டும். இதில்

முடிந்த மட்டும் ஸொந்த இஷ்டத்தை விட்டுக் கொடுத்து, தியாகம் பண்ணி, அந்தந்த ஸமயாசாரத்தையே பின்பற்ற வேண்டும்.

இந்தத் தியாக பலனாகவே ஈஸ்வரன் நாம் விரும்புகிற நிறைவை அநுக்ரஹித்து விடுவான். 'என்ன கர்மா பண்ணினோமோ, அதனாலேயே பகவான் இப்படி மனஸ் பூர்ணமாக ஏற்றுக் கொள்ள முடியாத குலாசாரத்திலே பிறக்கப் பண்ணியிருக்கிறான் ஆனதால் அப்படியே அநுபவித்துத் தீர்த்து விடுவோம்' என்ற புத்தியை முடிந்த மட்டும் வளர்த்துக் கொள்ள வேண்டும். கட்டு விட்டுப் போன பிறகு தேசத்தில் ஏற்பட்டிருக்கிற அனர்த்ததைப் பார்த்து, இதற்கு நாமும் பலம் கொடுத்து விடக்கூடாது என்ற தீர்மானத்தின்மேலே, நம் ஸொந்த அபிலாக்ஷைகளையும் லக்ஷ்யங்களையுங் கூட முடிந்த மட்டும் ஒதுக்கிவிட்டு, ஒரு கட்டுப்பாட்டிலே ஒட்டிக் கொண்டிருப்பதைத்தான் இப்போது ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்கிற எல்லாரும் தலையான கடனாகக் கொள்ள வேண்டும்.

பழைய வழிக்கு ரொம்பவும் விரோதமில்லாமலே நடுவில் உண்டான குல ஸம்பிரதாயங்களுக்கு மாறாக பக்தி பண்ண விரும்புகிறவர்கள் இஷ்ட தெய்வக் கொள்கைக்கு வைதிகாசாரம் இடம் தருகிறது என்பதோடு, தெய்வ பேதமில்லாத ஸமரஸ மனப்பான்மையே நம் ஸநாதன மதத்தின் தாத்பரியம் என்பதையும் நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டுவிட்டால் எல்லாம் ஸரியாகிவிடும். இப்படிச் செய்துவிட்டால் சிவ பக்தியுள்ள ஒரு வைஷ்ணவனுக்குத் திருமண்ணுக்குப் பதில் விபூதி இட்டுக் கொள்ளத் தோன்றாது. அந்தச் சாம்பலிலே வருகிற பரமேஸ்வரன் இந்த மண்ணிலும் வருவான் என்ற பக்குவம் வந்துவிடும். "கேசவ நாராயண" என்று நாமத்தைப் போட்டுக் கொள்ளும்போது சிவ நாமாவைச் சொல்வதில் இவனுக்கு உண்டாகக் கூடிய ஆனந்தம் இல்லாவிட்டாலுங்கூட, இந்த நாமங்களைச் சொல்வதிலும் வெறுப்பு இருக்காது. வைஷ்ணவனாகப் பண்ணவேண்டியதையெல்லாம் பண்ணிக்கொண்டே அதிலேயே ஓரளவுக்குத் தன் ஈஸ்வரனை பாவித்துக்கொண்டு, அதற்கு அதிகாமாகவும் தனியாக சிவனை பக்தி செய்வான். இவன் இப்படி விசால மனஸோடு இருந்தாலே குடும்பத்தாரும் பூஜையில் ஸாளக்ராமத்தோடு இவன் ஒரு

சிவலிங்கத்தையும் சேர்த்துக் கொண்டால் ஆக்ஷேபிக்காமல் இருப்பார்கள். ஆக்ஷேபிக்கிறார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அவர்களுடைய நம்பிக்கையை எதிர்த்து சண்டை போட வேண்டாம். பாவம், அவர்களுக்கு சிவனையும், தெரியாது, விஷ்ணுவையும் தெரியாது. அதனால் சிவனிடம் விரோத பாவம் என்றால்கூட அது தானாக இவர்கள் ஏற்படுத்திக் கொண்டதல்ல. இதுதான் நம் குலாசாரம் என்று நினைத்து (அது தப்போ, ரைட்டோ, அது வேறே விஷயம்; இப்படி நினைத்து) அந்த மரபுக்கு வித்யாஸமாகப் போகக்கூடாது என்ற பயபக்தியில்தான் விரோதம் கொண்டாடுகிறார்கள். அதை நாம் குலைக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு நல்லபடியாக வேண்டுமானால் எடுத்துச் சொல்லிப் பார்ப்போம். அந்த ஈஸ்வரனிடமே இதற்காகப் பிரார்த்தனை செய்வோம். நாம் சொல்லி அவர்கள் கன்வின்ஸ் ஆனபின்னுங்கூட, "ஆனாலும் நம் அகத்தில், நம் ஜாதியில் இப்படி லிங்க பூஜை பண்ணுவதில்லையே" என்றால், இந்த ஸமூஹக் கட்டுப்பாட்டுணர்ச்சியை நாம் மதித்து ஒப்புக்கொள்வோம். வீட்டுப் பூஜையில், இல்லாததைச் சேர்க்கக்கூட வேண்டாம். மானஸிகமாக சிவ ஸ்தோத்ரங்களைச் சொல்லிக்கொண்டு உபாஸனை செய்வோம்; சிவன் கோவிலுக்குப் போவோம்;அங்கு மனஸார சிவ தர்சனம் பண்ணி நமஸ்காரம் செய்வோம்; சிவ ஸம்பந்தமான உபந்யாஸம், பாராயணம் இவற்றில் மனஸைக் கொடுத்து ஈடுபடுவோம். இதுவுங்கூடக் கூடாது என்று அகத்துப் பெரியவர்கள், ஜாதிப் பெரியவர்கள் சொன்னால் கேட்கவேண்டுமென்பதில்லை. ஆனால் சண்டையும் போட வேண்டாம்.

வீட்டில் முருகன் உபாஸனை, உனக்கு அம்பாளிடம் பக்தி, அதனால் யாரோ பெரியவரை அழைத்து ஸ்ரீசக்ர பூஜை நடத்தவேண்டுமென்று ஆசையிருந்தால் முதலில் வீட்டிலே ஸுப்ரம்மண்யருக்கு ஷஷ்டி பூஜையோ கிருத்திகை விரதமோ மாவிளக்கோ காவடியோ என்ன செய்வார்களோ அதை செய்து விட்டு அப்புறம் ஸ்ரீசக்ர பூஜைக்கு ஏற்பாடு பண்ணு.

நீ வைஷ்ணவன்; உனக்கு அத்வைதத்தில் பற்று இருக்கிறது; ஆசார்யாளுக்குக் கைங்கர்யம் பண்ண வேண்டுமென்றிருக்கிறது; அதனால் எனக்கு பிக்ஷை செய்து வைக்க வருகிறேனென்றால் வா. தாராளமாக வா. ஆனால் அத்வைத

மடத்துக்கு பிக்ஷை பண்ணுவதற்கு முன்னாடி உனக்கென்று ஜன்மாப்படி ஏற்பட்டிருக்கிற ஜீயர் யாரோ அவருக்கு பிக்ஷை நடத்திவிட்டு அப்புறம் இங்கே வா.

குலாசாரத்தை 'மாக்ஸிமம்' அநுஸரி. அதற்கு அதிகமாக உன் ஸொந்த உள்ளநுபவத்துக்கும் மனப்பான்மைக்கும் அநுகூலமாக உள்ளதைச் செய். **இப்படி அதிகமாகச் செய்வது குலாசாரத்தையும்விட, மூல வைதிக ஆசாரத்துக்கு ஸம்மதமானதாயிருக்க வேண்டுமேயன்றி குலாசாரத்தை விடவும் ஆதிவழியிலிருந்து விலகிப்போய் விட்ட ஸமீபகாலச் சீர்திருத்தங்களைச் சேர்ந்ததாயிருக்கக் கூடாது** என்பது முக்கியம்

"நடுவாந்தரத்தில் ஏற்பட்ட குலாசாரங்களைவிட இன்னும் க்ளோஸாக மூலமான ஸ்ம்ருதிகளின்படிச் செய்யத்தானே நாங்கள் ஆசைப்படுகிறோம்? இது எப்படித் தப்பு?" என்கிற வாதத்தில் ஒரு குறை இருக்கிறது மூலமான ஸ்ம்ருதியிலேயேதான் ***"சிகாம் புண்ட்ரம் ச ஸூத்ரம் ச ஸமயாசாரமேவ ச | பூர்வை : ஆசரிதம் குர்யாத் அந்யதா பதிதோ பவேத் ||"*** என்றும் சொல்லியிருக்கிறது. அதாவது அந்த மூல ஸ்ம்ருதிகளே, "நாங்கள் ஜெனரலாகத்தான் ரூல்களைக் கொடுத்திருக்கிறோம். இந்த அமைப்புக்குள்ளே அவரவரும் பர்டிகுலராக அவர்களுடைய குலாசாரப்படியுள்ள ரூல்களைத்தான் சிகை, ஸூத்ரம், நெற்றிக்கிடுவது, மதத்தின் மற்ற ஆசரணை ஆகியவற்றில் பின்பற்றவேண்டும்' என்று சொல்வதாக அர்த்தமாகிறது. எனவே குலாசாரத்துக்கு வித்யாஸமாகப் போயும் மூல ஸ்ம்ருதிக்கு க்ளோஸாகப் போவது என்பதை ஸ்ம்ருதியே ஒப்புக் கொள்வதாகத் தோன்றவில்லை. ஸ்ம்ருதி வாழ்க்கையே பூர்ணமாகப் புத்துயிர் தந்து நிலைப்படுத்திய பகவத்பாதாளும், 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகாவி'ல் "உயிரைவிடப் பிரியமானதாக எதை ரக்ஷிக்க வேண்டும்?" என்ற கேள்விக்கு, "குல தர்மத்தை" என்றே பதில் சொல்லியிருக்கிறார். வேத தர்மம், ஸ்ம்ருதி வழியான ஸ்மார்த்த தர்மம் என்காமல் அவரவருடைய குலதர்மத்தையே சொல்லியிருக்கிறார்: ***"ப்ராணாத் அபி கோ ரம்ய?" "குல தர்ம:".***

---

1. இது முந்தைய உரையோடு தொடர்ந்து பெரியவர்கள் அருளியது. எனினும் அனைவரும் முன்னோர் வழி செல்ல இறைவனைப் பிரார்த்தித்தவுடன் அதோடு உரை பூர்த்தியானது போல நிறுத்திவிட்டு, மீண்டும் ஏதோ தோன்றியது போலவே தொடர்ந்தார்கள். முதலில் நிறுத்திய இடத்திலேயே உரை வடிவத்துக்கு ஒரு நிறைவு ஏற்பட்டுவிட்டதால் அதோடு முந்தைய கட்டுரையை முடித்துத் தொடர்ச்சியை இங்கே தனியாகத் தருகிறோம்.

2. முந்தைய உரையில் 'பிறந்த குலாசாரமே உய்நெறி' என்ற பிரிவில்.

*1. முறையே கிறஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், பார்ஸி மதம், ஸீக்கியர் மதம், யூதர் மதம் முதலியவற்றின் ஆதார சாஸ்திரங்கள்.

*2. ச்ருதியைத் தழுவுவது ச்ரௌதம்; ஸ்ம்ருதியைத் தழுவுவது ஸ்மார்த்தம்.

*3. தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியிலுள்ள "சங்கர ஸம்பிரதாய"த்தில் இவ்விஷயங்கள் பலவற்றைக் காணலாம்.

*4. பூர்வகர்ம வாஸனைச் சுமையான சித்தமலம்.

*5. தற்போது மறைந்துவிட்டார்

*6. கீதை 3.35

*7. தெய்வத்தின் குரல் முதற் பகுதியில், பொதுவான தர்மங்கள் என்ற பிரிவிலுள்ள என்ற பார்க்கவும்.

8.2-விதி விலக்கான மஹான்கள்

அதீத நிலையில் குலாசாரத்தை மீறிப்போன மஹான்களை நமக்கு மாடலாக நினைத்துக்கொண்டு விடக்கூடாது. அவர்களுடைய அஸாதாரண உள்ளநுபவத்தின் 'அதாரிடி'யிலேயே அவர்கள் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இப்படிச் செய்தார்கள். அப்படிப்பட்ட அநுபவம் நமக்கு வந்துவிட்டதாக பிரமை கொண்டு விடக்கூடாது.

ஸித்தாந்தம் பண்ணி வாதித்து ஜயிக்கத் தெரியாதவர்களும் இப்படி அதீத அநுபவத்தின்மேல் குலாசாரத்துக்கு வித்யாஸமாக பண்ணினதுண்டு. ரண சண்டிகையை உபாஸிக்கிற ராஜபுத்ரர்களில் இப்படித்தான் மீராபாய் கிருஷ்ணபக்தி என்று, அதுவும் பாதிவ்ரயத்துக்குக்கூட வித்யாஸம் மாதிரித் தெரியும் நாயிகா பாவத்தில் பண்ணிக் கொண்டிருந்தாள். இவள் பண்ணினது பக்தி வழியிலேயும் குலாசாரத்துக்கு வித்யாஸம்; பொது ஸமூஹத்தின் ஸ்திரீதர்மத்துக்கும் வித்யாஸம். பாரத தேசம் பூராவுக்குமே பாதிவ்ரத்யம் முக்யமென்றாலும், ராஜபுத்ர ஸ்திரீகள் அதிலே ரொம்பத் தீவிரமாகப் போனவர்கள் துருக்கர்களோடு யுத்தம் பண்ணி ராஜபுத்ர வீரர்கள் ரணபூமியில் மரணமடைந்த ஸமயங்களில் அவர்களுடைய பத்னிமார் கூட்டங் கூட்டமாக அப்படியே நெருப்பை மூட்டிக் கொண்டு அக்னிப் பிரவேசம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசத்தில்தான் மீராபாய் புருஷன் அபிப்ராயத்துக்கு வித்யாஸமாகப் போனது மட்டுமில்லாமல், கிரிதரகோபாலனுக்கே தான் பத்னி என்ற பாவத்தில் பரவசமாகப் பாடியிருக்கிறாள். அவளை விஷங்கூட ஒன்றும் பண்ணவில்லை; அவள் பாட்டுக்கு அதையும் சிரித்துக்கொண்டே சாப்பிட்டாள் என்று கேட்கிறோம். அப்படி நாமும் விஷத்தைச் சாப்பிட்டு அது நம்மையும் ஒன்றும் செய்யாது என்றால் நாமும் அவள் மாதிரிப் பண்ணலாம்! 'விஷங்கூட என்னை ஒன்றும் செய்யாதக்கும்'என்று சாலெஞ்சாக அவள் அதைப் பானம் பண்ணவுமில்லை! தன்னை அது பாதிக்காமல் கிரிதரகோபாலன் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கவுமில்லை! தனக்கே தெரியாத ஒரு ஆவேசத்தின் மேலே இப்படி மீராபாயைப்போல ஆசாரத்துக்கு வேறேயாகப் போனவர்கள் நமக்கு மாடல் இல்லை.

நன்றாக ஸித்தாந்தங்களை அறிந்து தர்க்கம் பண்ணி நிலைநாட்டுகிற ஸாமர்த்தியத்தையும் இப்பேர்ப்பட்ட அதீத அநுபவத்தோடு பெற்றிருந்த சில மஹான்களும் குலாசாரத்துக்கு வேறேயாகப் போயிருக்கிறார்கள். பிற்காலத்தில் ஹரதத்த சிவாசாரியார் என்று சைவத்தில் உயர்ந்த ஸ்தானம் பெற்ற ஒருவர் கஞ்சனூர் என்ற ஊரில் வைஷ்ணவராகப் பிறந்தவர்தான். ஆனால் அவர் கொதிக்கிற மழுவைக் கையில் பிடித்துக் கொண்டு சிவ

உத்கர்ஷத்தை [மேன்மையை] ஸ்தாபித்து, சைவராக மாறியிருக்கிறார். திருமழிசையாழ்வார் என்கிறவர் சிவ வாக்கியர் என்றே பெயர் வைத்துக்கொண்டு, சிவபரமாகப் பாடின ஸித்தர்தான் என்றும், அப்புறம் பன்னிரண்டு ஆழ்வார்களிலேயே ஒருத்தராகிவிடுகிற அளவுக்குப் பெரிய விஷ்ணுபக்தராய்ப் போய்விட்டார் என்றும் கதை இருக்கிறது. இதெல்லாம் ஜெனரல் ரூல் இல்லை எக்ஸெப்ஷன்தான். அது ரொம்பவும் அபூர்வமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது. இப்போது அதை நமக்கு எக்ஸாம்பிள் என்று எடுத்துக் கொண்டால் எக்ஸெப்ஷன்தான் ரூல் என்றாகிவிடும்!

குமாரிலபட்டர் இருந்தார்* அவர் ஒரு ஸந்தர்ப்பத்தில் பௌத்தர்களோடேயே இருந்து அவர்கள் மாதிரியே வாழ வேண்டியிருந்தபோதுகூட அத்யாவசியமான (வைதிக) நித்ய கர்மாக்களை மட்டும் ரஹஸ்யமாகப் பண்ணிக் கொண்டிருந்தாராம். கூன் பாண்டியன் சமணனாகி விட்டபோது அவனுடைய பத்னி மங்கையர்க்கரசி ரஹஸ்யமாகவே வஸ்திரத்துக்குள்ளே விபூதி இட்டுக் கொள்வாளாம் முழுக்க நம்முடைய மதத்திலேயே அவர்கள் கன்விக்ஷன் உள்ளவர்களாயிருந்தாலும் force of circumstance-ல் [சூழ்நிலையின் நெரிசலில்] மதாந்தரத்தை அநுஸரிப்பவர்களைப்போல வெளியில் காட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் பிற்காலத்தில் இவர்களே ஹிந்து மதம் புது ஜீவனோடு எழும்புவதற்குக் காரணமாயிருந்திருக்கிறார்கள். நம் தேசத்தில் வடக்கே பௌத்தம் தலைசாய்வதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் குமாரிலப்பட்டர். அவர் குமாரஸ்வாமியின் அம்சம். அதேபோலத் தென்தேசத்தில் ஜைனம் நலிந்து வைதிக மதம் புத்துயிர் பெறக் காரணமாயிருந்த ஸுப்ரம்மண்ய அவதாரந்தான் ஞானஸம்பந்தரென்றால், அந்த ஞானஸம்பந்தர் இப்படிப்பட்ட பெருமையை கொள்வதற்குக் காரணமாக அவரை மதுரைக்கு வரவழைத்தது மங்கையர்க்கரசிதான். அவளை அறுபத்துமூன்று நாயன்மார்களிலேயே ஒன்றாகச் சேர்த்திருக்கிறது. அதாவது குமாரிலபட்டர், மங்கையர்க்கரசி ஆகியவர்களும் நம் லெவலுக்கு ரொம்பவும் மேலேயிருந்தவர்கள். ஆனாலும் குமாரிலபட்டர் குலாசாரத்தை விட்டு பௌத்தர்களின் ஆசாரத்தைக் கொஞ்சகாலம் அநுஸரித்தாரென்றால் அது அவர்களுடைய ஸித்தாந்தங்களை

ஒன்றுவிடாமல் தெரிந்து கொண்டு, அப்புறம் அதற்குப் பதிலுக்குப் பதில் சொல்லி, ஹிந்து மதத்தை - அதாவது குலாசாரத்தை - இன்னும் நன்றாக நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவே நல்ல உத்தேசத்தோடேயே இப்படிச் செய்ததுங்கூடப் பாபம் என்று நினைத்து, ஸுப்ரம்மண்ய அம்சமேயான அவ்வளவு பெரியவர் பிற்காலத்தில் பிராயச்சித்தமாக தம்மைச் சுற்றி உமியைக் கருக்கிக்கொண்டு அதிலேயே கொஞ்சங் கொஞ்சமாகப் பிராணத் தியாகம் செய்தார். குலாசாரத்தை விட்டதால் பதிதனாவதற்குப் பதில் இப்படி கோர மரணம் ஏற்படுத்திக் கொள்வதே மேல் என்று அவர் காட்டினது தான் நமக்குப் படிப்பினையே தவிர, நடுவிலே அதை விட்டது அல்ல. மங்கையர்க்கரசி புருஷன் வழியைப் பத்னி மீறவே கூடாது என்பதற்காகத்தான் அவன் ஜைனனாகி விட்டபோது, தானும் நம்முடைய குலாசாரத்தைத் தைரியமாக வெளிப்பட அநுஸரிக்காமலிருந்தது; தன் இஷ்டப்படி நடக்கவேண்டும் என்று அல்ல.

---

* " தெய்வத்தின் குரல்" முதற்பகுதியிலுள்ள 'முருகனின் வடநாட்டு அவதாரம்' என்ற உரை பார்க்க.

8.3-மதாபிமானிகளின் கடமை

இப்போது நாம் என்ன பண்ணவேண்டுமென்றால், ஹிந்து மதத்திலேயே உள்ள பிரிவுகளில் ஏற்பட்டிருக்கிற குலாசாரங்களில் நமக்குப் பிறப்பினால் எது அமைந்திருக்கிறதோ அதில் நிறைவு ஏற்படாமல் இதே வைதிக மரபில் இன்னொரு விதமான ஆசாரத்தில்தான் நிறைவடைகிறோம் என்றாலுங்கூட, எப்படிக் குமாரிலபட்டரும் மங்கையர்க்கரசியும் வெளிப்பட அன்ய மதங்களை அநுஸரித்தாற்போலிருந்துகொண்டு, உள்ளுக்குள் ஸொந்த மதத்திலேயே பற்றோடிருந்தார்களோ, அப்படி, வெளிப்பட குலாசாரத்தையே பின்பற்றிக் கொண்டு மனஸுக்குள் மட்டும் நமக்கு இஷ்டமான உபாஸனையை வைத்துக்கொள்ளவே பிரயத்னம் செய்ய வேண்டும். நம்முடைய உள்மனஸின் பற்றுதல் ஆழமானதாக, உண்மையானதாக இருந்தால் நிச்சயம்

அந்த இரண்டு பேரையும் போல நாமே ஜயசாலிகளாகி தைரியமாய் நம் 'கன்விக்ஷன்' படி நடக்கிற நாள் வரும்.

"அதுவரை கன்விக்ஷன்படி தைரியமாய் நடக்கக் கூடாதா? இப்படி உள்ளொன்றும் புறமொன்றுமாக நடக்கும்படி உபதேசிப்பதற்கா நீங்கள் ஆசார்யன் என்று பேர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இது மட்டும் மித்யாசாரமில்லையா?"என்றால்-

ஒன்றைத் தப்பு என்பது எதற்காக? ஸ்வய நலனுக்காப் பண்ணினால்தானே அல்லது ஒருத்தனைக் கெடுத்து இன்னொருத்தனுக்கு நன்மை பண்ணுவதுதானே தப்பு? இதிலே அந்த மாதிரித் தப்புகள் ஒன்றும் இல்லையே! 'ஒருத்தனையும் கெடுத்து விடக் கூடாது; ஏற்கனவே ஸ்வாதந்திரியம் என்று சொல்லிக் கொண்டு குலாசாரங்களை விட்டுக் கெட்டுப் போய்க்கொண்டிருப்பவர்களுக்கு மதாபிமானம் உள்ள நாமும் வலுத் தந்து விடக் கூடாது. எவனையும் நாம் கெடுத்துவிடக் கூடாது. நமக்குப் பிரியமானது போனாலும் போகட்டும்' என்கிற தியாகத்தின் மேல் தானே இப்படிச் செய்யச் சொல்கிறேன்? அதனால் தப்பு இல்லை.

அதனால், வைதிகாசாரங்களையே விட்டு மதாந்தரங்களுக்கு மாறினால்தான் தப்பு என்றும், வைதிகாசாரங்களிலேயே ஒரு ஸம்பிரதாயத்திலிருந்து இன்னொன்றுக்குப் போனால் தப்பில்லை என்றும் நினைக்காமல், முடிந்த மட்டும் அவரவரும் குலாசாரப்படியே நடக்கத்தான் பாடுபடவேண்டும். '[பிறப்பால் ஏற்பட்ட மதத்தை] விட்டவன் பதிதனாகிறான் என்பது இவனுக்குப் பொருந்துமா, விட்டதோடு நாஸ்திகனாகவோ இதர மதமொன்றுக்கோ போகாமல் வைதிகாசாரத்திலேயே இன்னொன்றுக்குத்தானே போகிறான்?' என்றால், இவனளவில் ஒன்றை விட்டு விட்டு நல்ல வழியில் இன்னொன்றைப் பிடித்துக் கொள்கிறானென்றாலும், இந்த ஸ்வதந்திர யுகத்திலே மற்றவர்கள் இவனைப் பார்த்து [குலாசாரத்தை] விடுவதில் மட்டும் துணிச்சலடைந்து, இன்னொரு ஆசாரத்தில் போகாமல், தப்பு வழியிலல்லவா போவார்கள்? அதாவது இவன் மற்றவர்கள் பதிதர்களாகப் போகத் தூண்டுதல்

கொடுத்து விடுகிறானல்லவா? இப்படிப் பண்ணினவனை மட்டும் பதிதனாகிற தோஷம் விடுமா?

'உலகத்தில் ஏற்கெனவே கட்டு விட்டுப்போச்சு; அதனால் கெட்டுப் போச்சு; இதற்கு நாமும் உடந்தையாகவோ, ஊக்கம் தருபவராகவோ இருந்துவிடக் கூடாது' என்பதைத்தான் இன்றைக்கு மதாபிமானமுள்ளவர்களெல்லாரும் எல்லாவற்றுக்கும் மேலான தர்மமாக, கடமையாக நினைக்க வேண்டும். அப்படி நினைத்து, நம் அந்தரங்கத்திலே இப்படிக் குலாசாரத்துக்கு வித்தியாஸமான ஒரு விச்வாஸத்தை உண்டாக்கியிருக்கும் பகவானே அதை எப்படியாவது பூர்த்தி பண்ணி விடுவான் என்ற நம்பிக்கையோடுகூட, அவரவரும் தங்கள் குலாசாரப்படியே செய்து வந்தால் பகவான் நம் மூலம் உலகுக்கு க்ஷேமம் உண்டாக்கி, முடிவில் நமக்கும் நம் மனஸ் எப்படி நிறையுமோ அப்படிப்பட்ட நிறைவு உண்டாகும்படி அநுக்ரஹம் பண்ணுவான்.

9-ஆசார விஷயங்கள்

9.1-ஆசாரம் என்பதன் இலக்கணம்

ஸமயாசாரம், மதாசாரம் என்று சொல்லும்போது ஒரு மதத்தின் நெறி முழுவதையும் "ஆசாரம்" என்பது குறிப்பிடுகிறது. ஆனால் பொதுவிலே ஒருத்தர் ஆசாரமாயிருக்கிறார். என்றால், மடி-விழுப்பு என்று இரண்டு சொல்லிக் கொண்டிருக்கிறோமே (வார்த்தையிலாவது இன்றைக்கு வரையில் இருக்கிற 'மடி' அடியோடு மறந்து போய்விடக் கூடாதென்றுதான் இந்த உபந்நியாஸமெல்லாம் பண்ணுவது) அதிலே மடியாயிருப்பது என்றுதான் வைத்துக் கொண்டிருக்கிறோம். மடி, விழுப்பு பார்க்கிறதுதான் ஆசாரம்; சாஸ்திரத்தில் சொன்ன பிரகாரம் ஒருத்தர் சிகை வைத்துக் கொண்டிருக்கிறார். கச்சம் போட்டு வேஷ்டி கட்டிக் கொண்டிருக்கிறார். புண்ட்ர தாரணம் [நெற்றிக்கிடுதல்] பண்ணிக் கொண்டிருக்கிறார், நாள் நக்ஷத்ரம் பார்த்துக் காரியம் பண்ணுகிறார், க்ளப்புக்கு [ஹோட்டலுக்கு]ப் போவதில்லை,

எவர்ஸில்வரில் சாப்பிடுவதில்லை என்றால் அவரை ஆசாரமாயிருக்கிறார், orthodox என்கிறோம்.

இப்படியாக ஒரு மதத்தின் எல்லா நெறிகளுமே அதன் ஆசாரந்தானென்றாலும், வெளி வாழ்க்கையில் அதன் கட்டுப்பாட்டுபடி நடந்து கொண்டு, அதில் சொல்லியிருக்கிற வெளியடையாளங்களான சின்னங்கள் முதலியவற்றை மேற்கொண்டு நடந்து காட்டுவதே குறிப்பாக ஆசாரம், ஆசாரம் என்று வழங்குகிறது.

ஆனால் ஆசாரம் என்பது முழுக்க வெளி விஷயந்தான் என்று நினைத்து விட்டால் அது தப்பு. வெளி ஸமாசாரங்களாலேயே உள் ஸமாசாரங்களை, உள்ளத்தை உயர்த்திக் கொள்ள உதவுகிறதுதான் ஆசாரம்*. அதோடுகூட நேராக உள்ளத்தின் ஸமாசாரங்களையும், வாழ்க்கை நெறிகளையுங்கூட ஆசார சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறது.

'ஆசாரம்' என்பதைத் தமிழிலே நேராக 'ஒழுக்கம்' என்று சொல்லிவிடலாம். "உயிரினும் ஓம்பப்படும்" என்று திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கிறாரோ, அப்படி நம் பிராணனைவிட உசந்ததாகக் கருதி எதை ரக்ஷிக்க வேண்டுமோ அந்த தர்ம வழியே ஆசாரம். தர்மம் என்கிறது அகம், புறம் எல்லாவற்றிலும் எல்லா அம்சங்களையும் தழுவுகிற விஷயமல்லவா?

இங்கிலீஷில் ' character' என்பதாக ஒருத்தனின் உள் ஸமாசாரமான குணத்தையும், 'conduct' என்று அவனுடைய வெளி ஸமாசாரமான நடத்தையையும் சொல்கிறார்கள். ஆசாரம் என்பதும் ஒழுக்கம் என்பதும் காரெக்டர், கான்டக்ட் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கிச் சேர்த்துக் கொடுப்பது. இது வெறுமனே morality,ethics என்று சொல்கிற இஹ வாழ்க்கைக்கான நன்னெறிகளாக மட்டுமில்லாமல் பர லோகத்துக்கும் உதவுவதான காரியங்களை ஸம்ஸ்காரங்களை, சினனங்களை, விதி நிஷேதங்களை (இன்ன செய்யலாம், இன்ன செய்யக்கூடாது என்பவற்றை) யும் சொல்கிறது.

புற விஷயம் மாதிரியிருந்தாலும் அக விஷயத்துக்கும் உபகாரம் பண்ணும்படியாகவும், இம்மைக்கு மட்டுமில்லாமல் மறுமைக்கும்

உதவுவதாகவும் நம்முடைய ஆன்றோர்கள் வகுத்துத் தந்திருக்கிற முறையே ‘ஆசாரம்’.

---

* “தெய்வத்தின் குரல்” முதற்பகுதியிலுள்ள ‘உள்ளும் புறமும்’, ‘சடங்குகள்’ என்ற உரைகளும், இரண்டாம் பகுதியிலுள்ள ‘தர்மசாஸ்திரம்’ என்ற உரையில் ‘சின்னங்கள்’ என்ற பிரிவும் பார்க்கவும்.

9.2-புறத்திலிருந்து அகத்துக்கு

புறம் என்று எடுத்துக்கொண்டால், ரொம்பவும் ஃபிலஸாஃபிகலாக, வேதாந்தமாகப் போகிறபோது எல்லாவற்றுக்கும் புறத்தில், வெளியில் இருப்பது சரீரம். அன்னமயகோசம் என்று ஐந்து கோசங்களில் அதைத்தான் ஆத்மாவுக்கு ரொம்ப தூரத்தில் வைத்துச் சொல்லியிருக்கிறது. அது எப்படிப் போனால் என்ன என்று ரொம்பவும் உதாஸீனமாகத்தான் மஹா ஞானிகள் இருந்திருக்கிறார்கள். அநேக மஹான்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். மல மூத்ராதிகளைப் பூசிக்கொண்டு, புழுத்துப் போனதைத் தின்றுகொண்டு, ஸ்நானம் கிடையாது, பல் தேய்க்கிறதில்லை என்று, எங்கேயோ குப்பை கூளத்திலே கிடந்தார்கள் என்று. இதற்கெல்லாம் மாறாக ஒருத்தன் சரீர சுத்தியை இப்படியிப்படி உண்டாக்கிக் கொள்ள வேண்டும், ஆஹாரம் இப்படியிப்படி சுத்தமாயிருக்கணும், அவன் வஸிக்கின்ற இடத்தில் இப்படியாகப்பட்ட சுத்தமான அம்சங்களெல்லாம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம், ரொம்பவும் ‘புற’த்திலேயிருந்து கொண்டு ஆசார சாஸ்திரங்களில் நிறையச் சொல்லியிருக்கிறது. நாம் இருக்கிற நிலையில் இப்படிப் புறசுத்தியில் கண்டிப்பும் கறாருமாக இருந்து ஆரம்பித்தால்தான், அப்புறம் என்றைக்கோ ஒருநாள் அந்த ஞானிகளுடைய நிலைக்குப் போகலாம். என்பதற்காகவே, **அதாவது முடிவிலே முழுக்க ஆத்ம லோகம் என்கிற அகவாழ்விலே சேர்கிறதை லக்ஷ்யமாகக் கொண்டே சரீரம், வீடு, சுற்றுப்புறம் முதலான புற விஷயங்களின் சுத்தத்திலிருந்து ஆரம்பித்து ஆசாரங்கள்** விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வெளிவிஷயங்களில் என்ன கட்டுப்பாடு வேண்டிக் கிடந்தது என்று நாம் இஷ்டப்படி பண்ணினால், எல்லாம் மனஸ் இழுத்துக்கொண்டு போகிறபடி போய், அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்றுதான் முடியும். ஆசாரம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை உண்டாக்கி விடவில்லை என்று இந்த நாள் வேதாந்திகள் சொல்கிறது நிஜந்தான். அதாவது, உடனே, நேர்பலனாக உண்டாக்கவில்லை என்பது நிஜந்தான். ஆனால் **என்றைக்கோ ஒரு நாளாவது** நாம் நிஜமான வேதாந்திகளாக ஆக வேண்டுமானால், அதற்கு இப்போது நமக்கு இருக்கிற சரீர-குடும்ப-ஸமூஹ அபிமானங்களில் ஆரம்பித்து இவற்றை எப்படி ஆசார ரீதியில் சுத்தப்படுத்திக் கொள்வது என்பதில் கவனம் செலுத்தி அப்படி பண்ணிக்கொண்டு போனால்தான் முடியும். ஆசாரமேயில்லாமல் ஆத்ம ஸம்பத்தை ஸம்பாதித்துக் கொள்வது என்பது எந்த ஒரு நாளுமே அந்த 'ஐடியல்' நிலைக்குப் போக முடியாமல், நம்மைக் கெடுப்பதில்தான் முடியும்.

" ஆசார ஹீநம் ந புநந்தி வேதா :"- அதாவது, ஆசாரமில்லாமல் எத்தனைதான் வேதத்தைப் படித்தாலும் அதனால் ஒருத்தனை வேதம் சுத்தனாக்கி விடாது என்று சொல்லியிருக்கிறது. எப்பேர்ப்பட்ட புண்ய தீர்த்தமானாலும் மண்டையோட்டிலே கொண்டு வந்தால் எப்படிப் பிரயோஜனப்படாதோ, எத்தனை நல்ல பசும் பாலானாலும் நாய்த்தோற் பையில் வைத்திருந்தால் எப்படிப் பானயோக்யமாகாதோ அப்படியே ஆசாரஹீனன் எவ்வளவு வேத சாஸ்திரங்களெல்லாம் படித்தவனாயிருந்தாலும் அவனிடமுள்ள வித்யை அவனுக்கும் உதவாமல் லோகத்துக்கும் உதவாமலே போகும் என்று சாஸ்திரத்திலிருக்கிறது. வேதத்தைப்பற்றி, உபநிஷத்தைப் பற்றி நன்றாகப் பிரஸங்கம் பண்ணுகிறார்கள், ரொம்ப ஆராய்ச்சி பண்ணிப் புஸ்தகங்கள் எழுதுகிறார்கள் என்பதால் அப்படிப்பட்டவர்கள் சுத்தர்கள் என்று ஆகிவிடாது. தாங்கள் ஆசாரங்களை விட்டு விட்டதால் மற்றவர்களும் விடவேண்டும் என்று இவர்கள் சொல்வதற்கும் 'வால்யூ' கிடையாது. சுத்தர்கள் எப்படி வாழ்கிறார்களோ, தங்கள் வாழ்க்கை யுதாரணத்தாலேயே என்ன உபதேசிக்கிறார்களோ அதற்குத்தான் மதிப்பு உண்டு. தலைமுறை தலைமுறையாக அநேக சுத்தர்கள் ஆசாரங்களை அநுஷ்டித்து

வந்திருப்பதால்தான் அதற்கு ஸதாசாரம், சிஷ்டாசாரம் என்ற பெயர்கள் வந்திருக்கின்றன. ஸத்துக்கள் அநுஷ்டிப்பது ஸதாசாரம். ஸத்துக்கள் என்றால் நல்லவர்கள், உத்தமர்கள். சிஷ்டர்கள் என்றால் உசந்த குணமும் தோஷமில்லாத வாழ்க்கையும் உள்ளவர்கள்; 'சான்றோர்', 'மேலோர்' எனப்படுகிறவர்கள். அப்படிப்பட்டவர்கள் சாஸ்திரப்படியான ஆசாரங்களை நன்றாக அநுஸரித்துத்தான் வந்திருக்கிறார்கள். ஞானத்திலே போய் ஆத்ம ஸாக்ஷ£த்காரம் பெறுவது, பக்தியினாலே ஈஸ்வராநுபவம் அடைவது என்ற இரண்டும் ஜீவனின் உள் குணத்தை மாற்றிக் கொள்வதாகவேயிருக்க, ஆசாரமெல்லாம் சர்மா, சின்னங்கள் முதலிய வெளி விஷயம் பற்றினதாயிருக்கிறது என்று சொல்பவர்கள் சொன்னாலும் இதை விட்டால் அதற்குப் போக வழியில்லை*. "

*தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற உரையிலுள்ள 'வேதமும் வேதாந்தமும் முரணானவையா? என்னும் பிரிவும், "நாற்பது சம்ஸ்காரங்கள்" என்ற உரையிலுள்ள 'குணமும் காரியமும்' என்னும் பிரிவும் இவ்விஷயமாக தெளிவு தரும்.

9.3-ஆசாரத்தில் ஸாமான்ய தர்மங்கள்

வெளித்தூய்மையான 'சௌச'த்தையே ஆசாரம் என்பது முக்கியமாகக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. மடி-விழுப்புதான் ஆசாரத்தில் முக்கியமாயிருக்கிறது என்பதால் சௌசம் இதில் பிரதானம் என்பது வாஸ்தவந்தான். இந்த 'சௌசம்' ஐந்து ஸாமானிய தர்மங்களில் நாலாவதாக வருகிறது. எல்லா ஜாதியாருக்கும், ஸகல ஜனங்களுக்குமான பொது அறங்களை மநுஸ்மிருதி 'ஸாமான்ய தர்மங்கள்' என்ற ஐந்தாகச் சொல்லி, இவற்றில் முதலில் அஹிம்ஸை, அப்புறம் ஸத்யம், மூன்றாவதாக அஸ்தேயம் (திருடாமலிருப்பது, அதாவது பொருளாசை பிடித்தலையாமலிருப்பது) என்பவற்றையும், அப்புறம் 'சௌசம்' என்கிற தூய்மையையும் சொல்லிவிட்டு, ஐந்தாவதாக இந்திரிய நிக்ரஹத்தை (புலனடக்கத்தை) விதித்திருக்கிறது*. ஆசாரம் என்பது பெரும்பாலும் இதில்

'சௌச'த்தின் கீழ் வருவதாகவே தோன்றினாலும், சாஸ்திரங்களை ஆராய்ந்து ஆலோசித்துப் பார்த்தால் ஐந்து தர்மங்களையுமே ஆசாரம் என்பது தழுவுகிறது என்று தெரியும். எப்படியென்று பார்க்கலாம்.

ஆஹார சுத்தியைப் பற்றி ஆசாரத்தில் சொல்கிற போது மாம்ஸ போஜனம் கூடாது என்கிறது. இதனால் ஸாமான்ய தர்மங்களில் முதலாவதான அஹிம்ஸையை ஆசாரமும் சொல்வதாக ஆகிறது. **" ஸத்யான் நாஸ்தி பரோ தர்ம** :" என்று தர்மங்களின் உச்சியில் ஸத்யத்தை வைத்திருப்பதால் ஸத்யமும் ஆசாரமாய் விடுகிறது ஆசாரத்திலேயே ஸத்யமும் இருக்கிறது என்பதற்கு இன்னொன்றும் சொல்கிறேன். ராஜதண்டனைக்கு ஆளாகி ஒருத்தன் ஜெயிலுக்குப் போனால் அவன் தோஷியாகி விடுகிறான் (தோஷமுள்ளவனாகி விடுகிறான்); பிராயசித்தம் பண்ணிக்கொண்டாலொழிய அவனை ஸமூஹ ப்ரஷ்டம் செய்துவிட வேண்டுமென்பது ஒரு ஆசாரவிதி. தர்மராஜ்யம் நடந்துவரும் காலத்தில் - சாஸ்திர காலங்களில் அப்படித்தான் நடந்து வந்தது - வாஸ்தவமாகவே குற்றம் பண்ணினவன்தான் தண்டனை பெற்று ஜெயிலுக்குப் போவான். குற்றம் இரண்டு தினுஸு - ஸிவில், கிரிமினல் என்று. ஸிவில் வியாஜ்யங்கள் என்பவை அநேகமாக ஏமாற்று, மோசடி முதலானவற்றைச் சேர்ந்தவைதான். அதாவது அஸத்யத்துக்காத்தான் ஸிவில் வியாஜ்யங்களின் பேரில் ஒருத்தன் ஜெயிலுக்குப் போவது. இதனாலேயே, ஒருத்தன் ஆசார சாஸ்திரப்படி ஜெயிலுக்குப் போகாமலிருக்க வேண்டுமென்றால் அவன் ஸாமானிய தர்மங்களில் இன்னொன்றான ஸத்யத்தைக் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும். அநேகமாக இப்படி அஸத்யமாக ஏமாற்றுப் பண்ணுவது இன்னொருத்தனுடைய சொத்தை ஏப்பம் விடுவதற்காகத்தானிருக்கும். வாங்கின கடனைத் திருப்பித் தரமாலிருப்பது, பொய்பத்திரம் எழுதி இன்னொருத்தன் பணத்துக்கு பாத்யதை கொண்டாடுவது, குத்தகைப் பணம் கட்டாமலிருப்பது ஆகிய இதெல்லாம் ஸாமானிய தர்மங்களில் மூன்றாவதாயிருக்கிற அஸ்தேயத்தின் கீழ் வந்து விடுகின்றன. கிரிமினல் கேஸ்கள் அடிதடி பண்ணிக் கொலை-கொள்ளை பண்ணுவதற்காக ஜெயில் தண்டனை கொடுக்கின்றன. அடிதடி, கொலை கூடாது என்பதால் அஹிம்ஸையையும் ஆசாரத்தில் implied -ஆக [உட்கிடையாக] க் கொண்டு

வந்தாகி விடுகிறது. கொள்ளை, திருட்டு எல்லாம்தான் ஸ்தேயம். இவற்றைச் செய்யாதிருப்பது அஸ்தேயம். பெண்களை மானபங்கப்படுத்துவது, வியபசாரம் முதலானவையும் ஸிவிலாகவோ, கிரிமினலாகவோ குற்றங்களில் வருவதால், ஜெயிலுக்குப் போகக் கூடாது என்ற ஆசாரவிதியே ஐந்தாவது ஸாமான்ய தர்மமான இந்திரிய நிக்ரஹத்தையும் வலியுறுத்துவதாக ஆகிவிடுகிறது. இதுவும் தவிர [இந்திரிய] ஒழுக்கங்கெட்டவர் எந்த சாஸ்திர கர்மாவுக்குமே அனர்ஹர் [தகுதியில்லாதவர்] என்று வியக்தமாகவே அவர்களை ஆசார முறையானது ஒதுக்கி வைத்திருக்கிறது. இதேமாதிரி சௌச விதிகளோடு கூடவே ஸத்யம், தயை, தியாகம், லோப குணமில்லாமை, அஹிம்ஸை முதலானவற்றையும் நேரடியகாவே ஆசார நூல்கள் சிறப்பித்துப் பேசுகிற இடங்களுண்டு இன்னம் அநேக இடங்களில், `இன்ன ஆசாரத்தை அநுஷ்டிக்காதவன் வாக்குப் பிரமாணம் தவறினால் என்ன பாபமோ, ஆயிரம் பொய் சொன்னால் என்ன பாபமோ, ஜீவஹிம்ஸை பண்ணினால் என்ன பாபமோ, ஸ்வர்ணஸ்தேயம் [பொன்னைத் திருடுவது] பண்ணினால் என்ன பாபமோ, பரதார கமனம் பண்ணினால் என்ன பாபமோ அப்பேர்ப்பட்ட பாபத்தை அநுபவிப்பான்' என்று சொல்லியிருக்கும். இங்கே சொன்ன பாப லிஸ்டைப் பார்த்தால் சௌசத்தின் கீழ் வருவதாகவே பெரும்பாலும் தோன்றுகிற ஆசாரமானது அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம், இந்திரிய நிக்ரஹம் ஆகிய மற்ற நாலு ஸாமானிய தர்மங்களையும் அவலம்பித்து விடுகிறது (நிலைநாட்டி விடுகிறது) என்பது தெரிகிறது.

வித்யாப்யாஸம் செய்கிறவனுக்கு அந்தக் காலம் பூராவும் பிரம்மசர்யத்தை விதித்து (அந்த ஆச்ரமத்துக்கே 'பிரம்மசர்ய ஆச்ரமம்' என்றுதான் பெயர் வைத்திருக்கிறது) அப்புறம் கல்யாணமான பின்னால் இன்னின்ன நாளில்தான் தம்பதிகள் ஸங்கமனம் செய்யலாம், பித்ருதிமனம், விரதகாலம் போன்றவற்றில் கூடாது என்றெல்லாம் ஆசார நூல்கள் விதிப்பதால் இந்திரிய நிக்ரஹ விஷயத்தில் அவை ஸ்பெஷல் எம்ஃபஸிஸ் [தனியான அழுத்தம்] கொடுப்பது தெரியும்.

முடிவிலே இந்த ஆசாரம் எல்லாமே சித்த சுத்தியைத்தான் லக்ஷ்யமாகக் கொண்டவை சித்தமலம் நீங்க வழி இந்திரியங்களை அழுக்கு எடுத்து

ஒழுக்கத்தில் கொண்டு வருவதன்றி வேறில்லை. தன்னிஷ்டப்படி திரிகிற இந்திரியங்களை ஒரு நெறியில் அடக்கிக் கொண்டு வரவே ஆசாரம் என்பதால் இந்திரிய நிக்ரஹமும் அதுவும் ஒன்றேதான்.

இப்படியாக எல்லா தர்மங்களும் ஆசாரத்துக்குள் வந்து விடுகின்றன.

---

*." தெய்வத்தின் குரல்" முதற் பகுதியில் "ஸாமான்ய தர்மங்கள்: அனைவருக்கும் பொதுவானவை" என்ற உரை பார்க்க.

9.4-தர்மத்துக்கும் ஆசாரத்துக்கும் தொடர்பு

இன்னொரு தினுஸாயும் சொல்வதுண்டு அதாவது தர்மம் என்ற மருந்துக்கு ஆசாரம் பத்தியம் என்பார்கள். வியாதி தீர மருந்து மட்டும் சாப்பிட்டால் போதுமா? பத்தியமும் இருக்கணுமல்லவா? நல்ல ஜ்வரம் என்றால் மருந்து சாப்பிட்டுக் கொண்டே இன்னொரு பக்கம் பழையது சாப்பிட்டால் என்னவாகும்? மருந்தின் எ.்.பெக்ட் போய்விடுமல்லவா? அப்படித்தான் குணத்தையும் நடத்தையையும் பொறுத்த தர்ம மருந்தானது வெளித் தூய்மை, சின்னம் முதலானதைக் கொண்ட ஆசாரம் என்ற பத்தியமில்லாமல் பலிக்காது ..... வாஸ்தவத்தில் ஆசாரத்தின் சௌசம் வெளித்தூய்மை மட்டுமில்லாமல் உள்தூய்மைக்குமானதுதான். ஆனாலும் 'பாபுலர் கன்ஸெப்ஷ'னை (பஹுஜன அபிப்ராயத்தை) யொட்டி இப்படிச் சொன்னேன் ...... தர்ம மருந்துக்கு ஆசாரம் எப்படிப் பத்தியம் என்று ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறேன்: பித்ரு தர்ப்பணம் பண்ணவேண்டியது எல்லா ஜாதியாருக்குமான தர்மம். மூதாதையரை ஸ்மரித்து வேதமந்திரங்களையோ, ஸ்லோக ரூபமான மந்திரங்களையோ சொல்லி எள்ளும் தண்ணீரும் இறைக்க வேண்டுமென்பது நம்முடைய பித்ருகடன் தீருவதற்கு மருந்து. இதைப் பண்ணும்போது ஸ்நானம் செய்து, வேஷ்டியைக் கச்சமாய் உடுத்துக் கொண்டு, தெற்கு முகமாகச் செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்கிற ஆசார விதிகள் பத்தியம். குளிக்காமல் உபவீதமாகப் பூணூலைப்

போட்டுக்கொண்டு வடக்கு முகமாகத் தர்ப்பணம் பண்ணினால் பலனே கிடைக்காது.

`தர்மத்துக்கு ஆசாரம் அங்கம்', `தர்மமே ஆசாரம்', ஆசரத்திலிருந்துதான் தர்மம் பிறக்கிறது **(ஆசார: ப்ரபவோ தர்ம:*)** என்றெல்லாம் சொல்லும்படியாக தர்மமும் ஆசாரமும் ஒன்றேடொன்று பின்னிக் கொண்டிருக்கின்றன.

தர்மத்தை அநுஸரிப்பவர்களே ஸத்புருஷர்கள் சிஷ்டர்கள் எனப்படுகிறவர்கள், அதனால் ஆசாரத்தை ஸதாசாரம், சிஷ்டாசாரம் என்று சொல்கிறோம். ஆசாரமில்லாமலிருப்பது அநாசாரம்; ஆசாரத்துக்கு விரோதமாகப் பண்ணுவது துராசாரம். ஸஜ்ஜனங்கள் அநுஷ்டிப்பது ஸதாசாரம் என்கிறாற்போல் துர்ஜனங்கள் போகிற வழி துராசாரம் என்றும் சொல்லலாம்.

---

* விஷ்ணு ஸஹஸ்ரநாம பலச்ருதி

9.5-அனைத்தும் அடங்குவது

ஆசாரம் என்பதில் எல்லா ஸாமான்ய தர்மங்களும் அடக்கம் என்கிற மாதிரியே இன்னம் அநேக ஸமாசாரங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. 'ஹெல்த்'துக்காக, `ஹைஜீனுக்'காக ஆன ஸுகாதார விஷயங்கள், வைத்ய சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்கள், ஸைகலாஜிகலான விஷயங்கள், `மொராலிடி', அன்பு முதலானவற்றின் மீதான ஸமாசாரங்கள் எல்லாமே நம் ஆசாரங்களில் வந்து விடுகின்றன. இது அத்தனையையும் ஆத்ம ஸம்பந்தமாக உசத்திக் கொடுப்பதுதான் அதன் சிறப்பு.

9.6-த்ருஷ்ட-அத்ருஷ்ட பலன்கள்

நமக்குப் புரிகிற ஸயன்ஸ், நமக்குப் பிடிக்கிற 'எதிக்ஸ்' [நன்னெறிக் கோட்பாடு] இவற்றுக்கு அநுஸரணையாயிருக்கிற ஆசாரங்களை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை 'ஸூபர்ஸ்டிஷன்' (மூட நம்பிக்கை) என்று

தள்ளுவது தப்பு. நமக்குப் புரிகிறதும் பிடிக்கிறதும் நேருக்கு நேர் பலன் தருகிறவை. பல் தேய்க்காவிட்டால் துர்கந்தமாயிருக்கிறது. பல்லில் வியாதி வருகிறது என்று பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. மது பானம் பண்ணினால் புத்தி கெட்டுப் போகிறது, குடி மோஹத்தில் குடும்ப வாழ்க்கையிலே அநேக அனர்த்தங்கள் ஏற்படுகின்றன என்றெல்லாம் நமக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. அதனால் பல் தேய்க்கணும், மதுபானம் பண்ணக்கூடாது என்றெல்லாம் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் ஆசாரங்களை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் எல்லா ஆசாரமே இப்படிக் நம் ப்ராக்டிகல் லைஃபில் [நடைமுறை வாழ்க்கையில்] ப்ரூவ் ஆவதாக இருந்தால்தான் ஒப்புக் கொள்வோம் என்றால் அது தப்பு.

ஏனென்றால் த்ருஷ்ட பலன் என்பதாகப் பிரத்யக்ஷத்தில் பலனைக் கொடுக்கிறவற்றோடு, நேராகத் தெரியாமல் ஒவ்வொரு கார்யமும் அத்ருஷ்டமாகவும் புண்ய-பாபங்கள் என்றாகிப் பலன் தருகின்றன. அத்ருஷ்டம் என்றால் இங்கே luck என்று அர்த்தமில்லை. அத்ருஷ்டம் என்றால் கண்ணுக்குத் தெரியாதது, அதாவது சிற்றறிவுக்குப் புரியாதது என்று அர்த்தம். ஒரு கார்யம் இந்த ஜன்மத்திலோ, ஜன்மாந்தரத்திலோ, அல்லது ஜன்மா இல்லாமலாக்கிப் பராமாத்மாவிடம் சேர்ப்பதிலோ கொடுக்கிற பலன்களையும் ஆசாரங்கள் சொல்கின்றன. இதற்கு 'அத்ருஷ்ட பலன்' என்று பெயர்.

'ப்ராத: ஸ்நானம் ப்ரசம்ஸந்தி த்ருஷ்டாத்ருஷ்ட பலம் ஹி தத்' என்று சாஸ்திர வசனம். இங்கே இரண்டுவிதமான பலன்களும் ப்ராத ஸ்நானத்தினால் விளைவதாகச் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. "த்ருஷ்டபலன், அத்ருஷ்டபலன் இரண்டையும் ப்ராத ஸ்நானம் கொடுக்கிறது என்று அதைப் புகழ்கிறார்கள்" என்று அர்த்தம்.

ஸூர்யோதயத்துக்கு முந்தைய மூன்றே முக்கால் நாழிகை (ஒரு நாழிகை என்பது 24 மினிட்) க்குப் பிராதக்காலம் என்று பேர். அருணோதயம் என்றும் சொல்வதுண்டு. அந்தக் காலத்தில் பச்சை ஜலத்தில் குளிப்பதற்கு பிராதஸ்நானம் என்று பெயர். ஆற்றில், குளத்தில் செய்தாலும் சரி, அகத்தில்

மொண்டுவிட்டுக் கொண்டு செய்தாலும் சரி, தலைக்கும் ஜலம் விட்டுக் கொள்ள வேண்டும். (தலைக்கு தினமும் ஜலம் விட்டுக் கொள்வது ஸ்திரீகளுக்கு அவசியமில்லை. விரததினம், பித்ருதினம் தவிர மற்ற நாட்களில் அவர்கள் தலைக்கு மஞ்சள் ஜலம் புரோக்ஷித்துக் கொண்டாலே போதும்) பொதுவாகத் தலையோடு கால் பச்சை ஜலத்தில் காலங்கார்த்தாலேயே குளித்துவிட வேண்டும். இதன் த்ருஷ்ட பலன், அதாவது ப்ரத்யக்ஷ விளைவு முதலாவதாக தேஹ சுத்தி, உடம்பின் அழுக்கு போகிறதென்று நேரே தெரிகிறது. அதோடு அந்த வேளையில் குளித்து விடுவதால் தூங்குமூஞ்சித்தனம், சோம்பல் எல்லாம் போய், உத்ஸாஹமும் சுருசுருப்பும் உண்டாகின்றன. புத்தித் தெளிவும் ஏற்படுகிறது. இன்னம் மெடிகல் ஸயன்ஸ்படி சொல்லும்போது, இந்தப் பிராத ஸ்நானத்தினால் நரம்பு மண்டலமே உறுதியடைந்து, இப்போது 'நெர்வஸ் டிஸீஸ்' என்று பல ரூபத்தில் பரவிவருதெல்லாம் க்ஷீணித்துவிடும் என்கிறார்கள். அந்த வேளையில் ஸ்நானம் செய்வது உணர்ச்சிகளையும் குளிரப்பண்ணி சமனமாக்குகிறதென்பது இதன் ஸைகலாஜிகல் எஃபெக்ட்.

ஆனால் இந்த ஹைஜீன், மெடிகல் வால்யூ ஸைகாலஜி எல்லாவற்றையும் விட முக்யம் இந்தப் பிராதஸ்நானம் சாஸ்திரவத்தாக மந்திரடத்துடனோ, கோவிந்த நாம பூர்வமாகவோ பண்ணப் பட்டால் அது வெளி அழுக்கைப் போக்குவதோடு ஆத்மாவையும் சுத்தி செய்யப் பிரயோஜனப்படுகிறதென்பதுதான். சரீர அழுக்கு போகிறதும், மனஸிலே அப்போதைக்கு ஒரு குளிர்ச்சி ஏற்படுவதும் உடனே த்ருஷ்டமாகத் தெரிகிறது. 'நெர்வஸ் ஸிஸ்டம் ஸ்ட்ரெங்க்தன்' ஆவது போகப் போகத் தெரியும் ஆத்ம சுத்தி ரொம்ப நிதானமாகத்தான் தெரியும். பிராத ஸ்நானமே மந்திர பூர்வமாக, அல்லது பகவந் நாம பூர்வமாக விதிப்படி பண்ணப்படும்போது அதனால் நமக்கு ஏற்படுகிற புண்யத்தின் விளைவுகள், இதனால்தான் அது [பிராத ஸ்நானத்தின் புண்யத்தினால்தான் இந்த பலன் நமக்கு வாய்க்கிறது] என்று டைரக்டாகத் தெரியாமல் என்றைக்கோதான் உண்டாகும். இந்த ஜன்மாவிலோ இந்த லோகத்திலோகூட இல்லாமல் அது உண்டாகலாம். அந்த அத்ருஷ்ட

பலன்தான் ஆசாரங்களின் லக்ஷ்யம். த்ருஷ்டத்தில் எத்தனை நன்மைகள் உண்டானாலும் அதெல்லாம் இரண்டாம் பக்ஷந்தான்.

இந்தக் காரியத்துக்கு இந்த விளைவு என்று டைரக்டாக நாம் கண்டுகொள்ள முடியாமலிருப்பவை அத்ருஷ்ட பலன்கள். அவை ஸாக்ஷாத் பரமேஸ்வரனின் சித்தப்படி நடக்கிற விளைவுகள். அவன் எல்லாவற்றையும் மூடி மறைத்து ஆட்டம் போடுகிறவன். இப்படி மாயை பண்ணுவதுதான் அவன் தொழில். அந்த மாயாவியே மஹா கருணையோடு மஹான்களாக, ரிஷிகளாக இருக்கப்பட்டவர்களுக்குத் தன்னுடைய திவ்ய சித்தத்தைக் கொஞ்சம் திறந்து காட்டுகிறான். அதனால்தான் நமக்கு ரஹஸ்யமாக இருக்கிற உண்மைகள் அவர்களுக்குத் தெரிகின்றன. பரம கருணையோடு அவற்றை லோகமும் உஜ்ஜீவித்துவிட்டுப் போகட்டும் என்று அவர்கள் சாஸ்திரங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படித்தான் அத்ருஷ்ட பலனைத் தருகிற ஸமாசாரங்களைப் பற்றி நமக்கு ஆசார விதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இதில் நமக்குப் பிரத்யக்ஷ நிரூபணம் (practical proof) இல்லை, அல்லது இதற்கு scientific basis [விஞ்ஞான ரீதி அடிப்படை] இல்லை, அல்லது இது நம்முடைய social ideology -க்கு [ஸமூஹ வாழ்க்கைக் கொள்கைக்கு] ஒத்து வரவில்லை என்று சொல்லி அலக்ஷ்யம் செய்வது கொஞ்சங்கூட புத்திசாலித்தனமாகாது. நம் புத்தியின் நேர் proof -க்கு வராத விஷயங்களும் ஈஸ்வரனுடைய மஹா புத்தியில் இருக்க முடியும்; அவற்றை அவனோடு அவனாகக் கலந்திருந்த மஹான்கள் அறிந்து நமக்குச் சொல்ல முடியும் என்பதில் பக்தியும் சிரத்தையும் இருக்க வேண்டியது அவசியம். ஆசாரமென்பது மெகானிகலாக ஏதோ ஒரு ரொடீனை அநுஸரிப்பது மட்டுமில்லை. சரீர காரியத்தோடு இதில் மனஸின் பக்தி சிரத்தையும் கலக்க வேண்டியது ரொம்ப அவசியம். இல்லாது போனால் பலன் ஏற்படாது.

9.7-செயல்களை ஈஸ்வரபரமாக்குவது

இப்படி மனஸையும் காரியத்தின்போதே ஈஸ்வரனிடம், நேராகவே அவனிடம், அல்லது அவனது சிப்பந்திகளாக, அம்சங்களாக இருக்கிற அநேக

தேவதைகளிடம் கலக்கும்படிப் பண்ணத்தான் மந்த்ரங்களைக் கொடுத்திருக்கிறது.

பிராத ஸ்நானத்தை இப்படி தேஹத்துக்காக மாத்திரமில்லாமல் ஆத்மார்த்தமானதாக ஆக்கிக் கொடுக்கும்போது, முதலில் அருகம் புல்லையும் கொஞ்சம் சுத்தமான ம்ருத்திகையையும் [மண்ணையும்] தலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அந்த அருகம் புல்லையும் ஈஸ்வரசக்தியின் ஒரு அம்சமான தேவதை என்று பக்தியோடு புரிந்துகொண்டு, அதை ஸ்துதித்து 'தூர்வா ஸூக்தம்' என்கிற மந்த்ரங்களைச் சொல்ல வேண்டும். 'அல்பப் புல்' என்கிறோமே அதைக்கூட ஈஸ்வராம்சம் என்று வேதமே ஸ்தோத்திரிக்கும் ஸூக்தத்தைச் சொல்ல வேண்டும். 'மண்ணாங்கட்டி' என்று ரொம்ப மட்டமாகச் சொல்கிறோமே, அந்த மண்ணையும் இப்படியே ஸாக்ஷாத் நாராயண பத்னியான பூப்பிராட்டியாகப் புரிந்து கொண்டு 'ம்ருத்திகா ஸூக்தம்' சொல்லிப் புல்லோடு தலையில் வைத்துக்கொண்டு குளிக்க ஆரம்பிக்க வேண்டும். ஸ்நானம் செய்யும்போது சொல்ல 'அகமர்ஷண ஸூக்தம்' என்று ஒன்று இருக்கிறது. இங்கே தேஹத்தின் ஸ்நானமே ஆத்மாவின் அழுக்கையும் அலம்பிவிட மந்திரங்கள் இருக்கின்றன. ஆத்மாவின் அழுக்கு என்பது அதன்மேல் படிந்திருக்கிற நம் பாபங்கள். 'அகம்' என்றால் பாபம். தேய்த்து அப்புறப்படுத்துவது 'மர்ஷணம்'. உடம்பைத் தேய்த்து ஸ்நானம் பண்ணும்போதே இப்படிப் பாபத்தையும் தேய்த்துக் கழுவி விடுவதற்கு 'அக மர்ஷண ஸூக்தம்'. வேத மந்திரங்கள் சொல்ல அதிகாரமில்லாதவர்கள் "கோவிந்தா கோவிந்தா!" என்று ஸ்நானம் செய்யவேண்டும். ***"கோவிந்தேதி ஸதா ஸ்நானம்"*** என்று இருக்கிறது. கோவிந்த நாமாவே ஆத்மாவுக்குப் புண்ய தீர்த்த ஸ்நானம்தான்.

கோவிந்த நாமாவே புண்ய தீர்த்தம் என்றதால் ஸ்நானமே பண்ணாமல் கோவிந்தா கோவிந்தா என்று சொல்லிவிட்டு, விழுப்போடேயே சாப்பிட்டுவிடலாம் என்று குதர்க்கம் பண்ணிக் கொள்ளக்கூடாது. வாஸ்தவத்தில் ஒரு ஜீவன் பண்ணியிருக்கிற ஏகப்பட்ட கர்மாக்களிலிருந்து அவன் தப்பித்து, தன் பாப மூட்டை பூராவையும் கரைக்க வேண்டுமானால் அதற்கு சரீரத்தை சக்கையாகப் பிழிந்து ஸத்காரியங்களை ஏராளமாகப்

பண்ணித்தான் ஆகவேண்டும். இதனால்தான் சாஸ்திரங்களில் நூறாயிரம் காரியங்களை, விதிகளைக் கொடுத்து இவனைக் கட்டிப் போட்டிருக்கிறது. இருந்தாலும் அதே பகவான் ஒரு ஜட்ஜாக மட்டும் ஸ்ட்ரிக்டாக இல்லாமல், நமக்கு அம்மையும் அப்பனுமாக உள்ள காருணிகன் ஆனதால், நாம் சாஸ்திரப்படியே செய்ய மனப்பூர்வமாக ஸர்வப் பிரயத்தனமும் பண்ணி அப்படியே கண்டிப்போடு ஆசார அநுஷ்டானங்களை விதி வழுவாமல் அப்யாஸம் செய்து வரும்போது, எங்கேயாவது நம்மால் கொஞ்சம் முடியாமல் போய்விட்டால் அப்போது - அப்போது மட்டுந்தான் - இத்தனை கண்டிப்பான விதிமுறையோ கடினமான காரியமோ இல்லாமல், மனஸார அவனை ஸ்மரித்தாலே போதும், அவன் நாமாவைச் சொன்னாலே போதும், அவன் இவ்வளவு தூரம் பண்ணின குழந்தைகளை மன்னித்து விடுவான் என்று ஆசார, அநுஷ்டானங்களையும் தளர்த்தி அநுக்ரஹம் பண்ணுகிறான் என்று வழிகாட்டியிருக்கிறார்கள். இதை ஒரு சாக்காகக் காட்டி, "எந்த ஆசாரமும் இல்லாமலிருப்பேன். 'ஹரே ராமா' என்று பஜனை பண்ணினால் போதும்" என்று இருந்தால் அப்படிப்பட்ட கட்டுப்படாத சோம்பேறிக்கு பகவான் ஏமாந்து போய் அநுக்ரஹம் பண்ணிவிட மாட்டான். நிஜமாகவே "ஹரே ராமா" என்று அவனிடமே ஹ்ருதயத்தை அர்ப்பணம் பண்ணி, உருகத் தெரிந்து விட்டால் அப்படிப்பட்டவனுக்கு எந்த ஆசாரமும், எந்த சாஸ்திரமும் வேண்டாந்தான். அப்படிப்பட்டவர்கள் ஒரு நாமாவைச் சொல்லியே எத்தனையோ அற்புதங்களைப் பண்ணியிருப்பதும் வாஸ்தவம். ஆனால் அந்த ஸ்திதியில் நாம் இருக்கிறோமா என்பது நமக்கே தெரியும்.

வேத மந்திரங்களின் வீர்யம் குறையாமல் அவற்றை ரக்ஷித்துத் தருகிற பொறுப்புப் பெற்றவர்களும், புத்திவேலை அதிகமுள்ளவர்களுமான ஜாதியாருக்குக் காரியமும் வேண்டும். ஆசாரக் கட்டுப்பாடும் அதிகம் வேண்டுமென்றுதான் சாஸ்திரத்தில் அவர்களுக்கு மந்திர பூர்வமாக இத்தனை அநுஷ்டானங்களை வைத்திருக்கிறது. மற்ற விதத்தில் தேஹத்தில் அநேக காரியங்களைச் செய்து ஸமூஹத்துக்கு உபகரித்து, இதன் மூலமே தங்கள் கர்மாவை அநுபவித்துத் தீர்த்துச் சித்த சுத்தி பெறுகிற இதர ஜாதிக்காரர்களுக்கு இத்தனை கடுமையான ஆசாரமில்லை மந்திரங்களுக்குப்

பதில் அவர்கள் பகவந் நாமாவை அல்லது ஸ்தோத்ரங்களை, துதிப்பாடல்களைச் சொன்னாலே போதுமானது.

என்ன சொல்லிக் கொண்டிருந்தேனென்றால், த்ருஷ்டமான லௌகிக பலனோடு, அத்ருஷ்டமான ஆத்மார்த்த பலனையும் பெறவே சாஸ்திர ஆசாரங்கள். அவற்றில் த்ருஷ்டமாகத் தெரிவதை மட்டும் எடுத்துக் கொண்டு, அத்ருஷ்டத்தைத் தள்ளுவது பிசகு.

9.8-ஆசார சாஸ்திரங்களில் விஞ்ஞான நுணுக்கம்

ஸமீப காலமாக நம் ஆசாரங்களைப் பற்றி இதற்கு முந்திய தலைமுறைக்கு இருந்ததைவிடக் கொஞ்சம் கௌரவ புத்தி உண்டாயிருப்பதைப் பார்க்கிறேன். முன்னே இங்கிலீஷ் படித்தவர்களென்றால் நம் ஆசாரம் அவ்வளவுமே பேத்தல் என்று நினைப்பவர்களாயிருந்தார்கள். ஆனால் நான் கொஞ்ச நாளாக ஒரு வேடிக்கை பார்க்கிறேன் - ஸயன்ஸும் ஸ்பிரிசுவாலிடியும் [ஆத்மிகமும்] ஒன்றுக்கொன்று விரோதமானதுபோல் தோன்றினாலும் ஸயனஸ் அபிவிருத்தியாகிக் கொண்டு வருவதாலேயே, புதிசு புதிசாக டிஸ்கவரி செய்யும்போது, "இதென்னடா ஆச்சர்யமாயிருக்கிறது! நாம் ரொம்பவும் அறிவிலே பின் தள்ளி நின்றவர்கள் என்று நினைத்த ஆதிகால இந்தியர்கள் இந்த விஞ்ஞான உண்மைகளை, நமக்கு இருக்கிற லாபரட்டரியும் இன்ஸ்ட்ருமென்டுகளும் இல்லாமலே எப்படியோ கண்டுபிடித்து அவர்களுடைய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறதே!" என்று அதிசயப்படுகிறார்கள். கொஞ்சநாள் முந்தி [பத்திரிகைகளில்] பார்த்திருப்பீர்கள். ரஷ்யாக்காரன் கம்யூனிஸ்ட், நிரீச்வரவாதி. ஆனால் இங்கே நாம், "இதென்ன ஹோமம் என்று சொல்லிக்கொண்டு வீட்டையெல்லாம் புகையாக்கிக் கொண்டு, கண்ணும் கரிக்கக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது?" என்றால், ரஷ்யா தேச ஸயன்டிஸ்ட்கள் வறட்டிப் புகையினால் அடாமிக் ரேடியேஷன் [அணுச் சிதைவின் கதிரியக்கம்] உள்படப் பலவித பொல்யூஷன்களைப் போக்கிக்கொண்டு விடலாமென்று சொல்லி, நம்முடைய ஹோமத்தைப் புகழ்ந்திருக்கிறார்கள். இதேபோல ஹோமத்தில் போடப்படும் பலவிதமான

ஸமித்துக்களின் புகை பரவுவதும் க்ருமி நாசினியாக (antiseptic) உதவுகிறது என்று முன்னே டாக்டர்கள் சொன்னதுண்டு. தர்ப்பை, துளஸி, வில்வம் என்றிப்படி நம் சாஸ்திர காரியம், பூஜை இவற்றில் பிரயோஜனமாகின்றவற்றுக்கெல்லாம் வைத்ய ரீதியிலோ, மற்ற ஸயன்ஸ்களின் ரீதியிலோ sound basis [அழுத்தமான அடிப்படை] இருக்கிறது எனகிறார்கள். க்ரஹண காலத்தில் எல்லாவற்றிலும் தர்ப்பையைப் போட்டு வைக்க வேண்டுமென்றால் முன்னே பரிஹாஸம் செய்தார்கள். "ஸூரியனைப் பாம்பு தின்கிறதாம். அதன் நாக்கை அறுப்பதற்கு தர்ப்பை போட்டிருக்கிறார்களாம்!" என்று கேலி பண்ணினார்கள். ஆனால் இப்போதோ க்ரஹண காலத்தில் அட்மாஸ்ஃபியரிலும், அதற்கும் மேலே இருக்கிற ஸ்ஃபியர்களிலும் அநேக contamination (அசுத்தம்), radiation ஆகியன உண்டாவதாகவும், கர்ப்பத்திலிருக்கிற சிசுவைக் கூட அது பாதிப்பதாகவும், அதனால் 'க்ரஹணத் தீட்டு' என்று அந்தக் காலத்தில் சாப்பிடாமல் இருக்கணும் என்று வைத்ததில் ரொம்ப அர்த்தமிருப்பதாகவும், இந்த பாதிப்பை counteract பண்ணும் [எதிர்த்துப் போக்கும்] சக்தி தர்ப்பைக்கு இருக்கிறதென்றும் எழுதுகிறார்கள்.

எல்லாருக்கும் எல்லா ஸயன்ஸையும் சொல்லிக் கொடுத்துவிட்டால் ஒவ்வொருத்தனும் 'ஆடம் பாம்(ப்)' பண்ணி வைத்துக் கொள்வதில்தான் முடியும் என்றுதான், கெடுதல் வராமலிருப்பதற்கு நாம் பண்ணவேண்டியதை மட்டும் சொல்லி, அதன் காரணத்தை, "ராஹுப் பாம்பு ஸூர்யனை முழுங்கிற்று" என்பது போலக் கதா ரூபமாகப் பாமர ஜனங்களுக்குச் சொன்னார்கள் என்று ஒரு கட்சி. இதைக்கூட நான் முழுக்க ஸரி என்று சொல்லமாட்டேன். எல்லாருக்கும் விஞ்ஞான மர்மம் தெரிந்துவிட்டால் அனர்த்தமாகும் என்று நினைத்தது வாஸ்தவம். ஆனால் அதற்காகத்தான் விஞ்ஞான உண்மைகளுக்குப் பதில் கதைகளை இட்டுக்கட்டிச் சொன்னார்களென்பது ஸரியில்லை. இம்மாதிரிக் கதைகளும் நிஜம் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். பகவானின் லீலையில், நமக்கு ஸாத்யமாகத் தோன்றாத என்னென்னவெல்லாம் நடக்குமோ? நமக்கு எப்படித் தெரியும்?

தங்களுடைய லிமிடெட் ஸர்க்கிளைத் தாண்டி நாலெட்ஜ் (அறிவு) வெளியே பரவக் கூடாதென்ற [சுயநலக் கும்பலின் கொள்கை] தான் நம் பூர்விகர்கள் இம்மாதிரி ஸயன்ஸ் உண்மைகளைக் கூறாமல், கதையிலே போர்த்தி மூடி வைத்ததற்குக் காரணம் என்றும் சிலர் குற்றம் சொல்கிறார்கள். இது ரொம்பத் தப்பாகும். மனஸ் கட்டுப் படாதவர்களுக்கு அறிவை மட்டும் கொடுப்பது அனர்த்தத்தில்தான் முடியும். பெரும்பாலான ஜனங்கள் மனஸ் கட்டுப்படாதவர்களாகத்தான் இருப்பார்கள். ஸயன்ஸ் ஸகல ஜனங்களுக்கும் பரவி முன்னேறிக் கொண்டேயிருக்கும்போது, அந்த முன்னேற்றத்துக்கு எதிர் ratio-வில் (விகிதாசாரத்தில்) லோகத்திலே தர்மம் பின்னே போய்க்கொண்டேயிருப்பதை நாம் பிரத்யக்ஷமாகப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறோம்? இதை அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே போஜன் 'ஸமராங்கண ஸூத்ர'த்தில் சொல்லியிருக்கிறார். அதிலே ஏரோப்ளேனைப் பற்றிக்கூட 'வ்யோமயானம்' என்று சொல்லி, ஆனாலும் அதன் theory-ஐ மாத்திரம் கொஞ்சம் கொடுத்துவிட்டு, "இதைச் செய்யும் procedure-ஐ இங்கே விஸ்தாரம் பண்ணாததால் அது தெரியாதாக்கும் என்று நினைக்க வேண்டாம். நன்றாகத் தெரியும். ஆனாலும் புஸ்தகத்தில் எல்லாருக்கும் தெரியும்படியாக எழுதி வைத்து விட்டால், அதனால் லோகத்துக்கு நன்மையைவிடக் கெடுதியே ஜாஸ்தி உண்டாகும் என்றுதான் இங்கே சொல்லவில்லை" என்று காரணம் காட்டியிருக்கிறார். அவர் சொன்னதிலுள்ள உண்மையை நாம் கண்கூடாகப் பார்த்து விட்டோம்! ரண பூமியில் மட்டும் யுத்தம் என்றில்லாமல் நாடு நகரமெல்லாம் குண்டு போட்டு World War நடந்ததற்குக் காரணம் விமானப் படையெடுப்புத் தானே? ஹ்ருதயம் சுத்தியாவதற்கு முந்தி புத்திமட்டும் விருத்தியானால் அனர்த்தந்தான் என்பதை ஸமயாசாரங்கள் எடுபட்டுப்போய் ஸயன்ஸ் மட்டும் அபிவிருத்தியாதிக் கொண்டிருக்கிற இக்காலத்தில் நன்றாகப் பார்க்கிறோம். இதனால்தான் சுத்தர்களான நல்ல கல்ச்சருள்ளவர்களுக்கென்று மாத்திரம் நம் பூர்விகர்கள் அநேக விஷயங்களை வைத்துவிட்டனர்.

ஸமீப காலமாக நம் சாஸ்திர விஷயங்களில் பல ஸயன்ஸுக்கு ஒத்து வருகின்றனவென்று கண்டு கொண்டதில் படிப்பாளிகள் கொஞ்சம் அதனிடம்

கௌரவ புத்தி காட்டத் தொடங்கியிருக்கிறார்களென்று சொன்னேன். ஸயன்ஸ் கொஞ்சம் விருத்தியாயிருந்தபோது கேலி செய்தார்கள். இப்போது அதிக வளர்ச்சி அடைந்தபின் சில அம்சங்களைக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னம் ஸயன்ஸ் விருத்தியாக ஆக இன்னம் பல சாஸ்தீரிய ஸமாசாரங்களுக்கும் scientific basis இருப்பதாகக் கண்டுபிடிப்பார்கள்.

9.9-விஞ்ஞானத்துக்குக் கட்டுப்பட்டதல்ல

ஆனால் நான் என்ன சொல்கிறேனென்றால், இந்தவரைக்கும் இது ஸந்தோஷக்குரியதுதான் என்றாலும், நம் ஆசார அநுஷ்டானங்கள் பூராவையும் ஸயன்ஸின் எல்லைக்குள் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது ஸரியில்லை என்கிறேன். ஸயன்ஸுக்கோ, நம்முடைய ஸோஷல் ஐடியாலஜிக்கோ, வேறெதற்கோ சாஸ்திரம் agree-ஆக வேண்டும் [ஒத்துப்போக வேண்டும்] என்கிற எண்ணமே தப்பு என்பது என் அபிப்ராயம். சாஸ்திரத்தின் ஸத்யம் அதன் சொந்தப் பிரமாணத்திலேயே இருக்கிறது. அது ரிஷிகள் கொடுத்த super-science [நம் விஞ்ஞானத்துக்கு அதீதமான உயர் விஞ்ஞானம்] . பாக்கி எல்லாவற்றுக்கும் இது பிரமாணமே தவிர, அவற்றின் basis-ல் (அடிப்படையில்) இதை ஒப்புக் கொள்வதென்பது தலைகீழ்ப் பாடம். நம்முடைய சிற்றறிவில் தோன்றும் social concept -களை [ஸமூஹக் கருத்துகளை] நாம் சாஸ்திரப்படி மாற்றிக்கொள்ள வேண்டுமேயன்றி, சாஸ்திரம் நம்முடைய 'கான்ஸெப்டு' க்கு வளைந்து கொடுக்க வேண்டுமென்று நினைப்பது தப்பு.

சாஸ்திரத்திலே நிறைய ஸயன்ஸ் இருக்கிறது வாஸ்தவம். அதனாலேயே அது முழுக்க ஸயன்ஸுக்கு உடன்பட்டாகிவிட வேண்டும் என்று ஆகாது. முன்னே கேலி செய்த விஷயங்களில் பல இப்போது விஞ்ஞான ரீதியில் அர்த்தமுள்ளவை என்று அறிகிற அடக்கம் நமக்கு வரவேண்டும். "நமக்குத் தெரிந்த 'த்ருஷ்ட'த்தோடு, தெரியாத, தெரிய முடியாத 'அத்ருஷ்ட'மும் இருக்கிறது; அதிலேதான் நம் நிறைவிருக்கிறது; இந்த 'அத்ருஷ்ட'த்தைச்

சொல்லும் சாஸ்திரங்களை அநுஸரித்து நடந்துதான் நம் பூர்விகர்கள் பக்தியிலும் ஞானத்திலும் நிறைந்து லோகமெல்லாம் புகழும்படியாக இருந்தார்கள்; அதை விட்டதிலிருந்துதான் நாம் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் எத்தனையோ முன்னேறியுங்கூடக் கொஞ்சமும் நிறைவேயில்லாமல் திரிந்துகொண்டு, லோகமும் நம்மை மட்டந்தட்டும்படியாக ஆகிக்கொண்டு வருகிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற எல்லாமே நிஜம் என்ற நம்பிக்கை பெற வேண்டும்.

நமக்குத் தெரிகிற ஸயன்ஸ், வைத்ய சாஸ்திரம் முதலானஹற்றுக்காகத்தான் ஆசாரம் என்றால் சாஸ்திர விதிகளை இவற்றின்படி மாற்றிக் கொண்டால் என்ன என்ற எண்ணம் வரும். சாணி போட்டு மெழுகுவது அது anti-septic என்பதற்காக மட்டுந்தான் என்று வைத்துக் கொண்டுவிட்டால், அப்புறம் நம் பூஜை மாடத்தையோ அல்லது யாகசாலையையோ ஏன் சாணிக்குப் பதில் ஃபினாயில் அல்லது கார்பாலிக் ஆஸிட் போட்டு அலம்பக் கூடாது என்று கேட்கத் தோன்றும். மணையில் உட்கார்ந்து கொண்டுதான் வைதிக கர்மா பண்ணணும் என்பது மந்திரத்தின் எலக்ட்ரிஸிடி நம்மை விட்டுப் போகப்படாது என்பதற்காக மட்டுமே என்று வைத்துக் கொண்டால் அப்புறம் மணைக்குப் பதில் ரப்பர் குஷனில் உட்கார்ந்து கொள்ளலாம், பவித்ரத்துக்குப் பதில் gloves போட்டுக் கொள்ளலாம் என்றெல்லாம் 'லாஜிக'லாக ஒப்புக் கொள்ள வேண்டிவரும்.

இதைச் சொல்லும்போது எலக்ட்ரோ-மாக்னடிஸ தியரி உள்பட எல்லாம் நம் முன்னோர்களுக்குத் தெரிந்திருந்ததை நினைத்து ஆச்சர்யமாயிருக்கிறது. லோகம் முழுக்க எலக்ட்ரிஸிடி நிறைந்திருக்கிறது; மநுஷ்ய சரீரம் எண்ணம் இதுகளில்கூட எலக்ட்ரிக் கரென்ட் ஓடிக் கொண்டிருக்கிறது என்று இப்போதுதான் நம் ஸயன்டிஸ்ட்கள் கண்டுபிடித்திருக்கிறார்களென்றால் இதை எத்தனையோ ஆயிரம் வருஷம் முந்தியே நம் சாஸ்திரக்காரர்கள் தெரிந்து வைத்துக் கொண்டுதான் நம்மிடம் சேர்கிற மின்ஸார சக்தி வெளியே போகாமல் bad conductor -களாலான [மின்சாரத்தைக் கடத்தாதவையான] வஸ்துக்கள், உபகரணங்கள் முதலியவற்றையும், மின்ஸார சக்தியை

கிரஹித்துக் கொள்ளும் good conductor -களாலான [மின்சாரக் கடத்துவிகளாலான] உபகரணங்கள், பாத்திரங்கள் முதலியவற்றையும் சொல்லியிருக்கிறார்கள். உட்காருகிற மணை மாதிரியே யாகத்தில் ஹோமத்துக்குப் பிரயோஜனப்படுகிற கரண்டி bad conductor -ஆன மரத்தாலானதாகத்தான் இருக்க வேண்டும். மறு திசையில் செப்புப் பாத்திரம், செப்பு விக்ரஹம், பட்டு வஸ்திரம் முதலியன good conductor -கள்.

'வாழாது வாழ்ந்தாலும் வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது' என்பார்கள். ' இதெல்லாம் சுத்த மூட நம்பிக்கை என்று இருபது, முப்பது வருஷம் முந்தி சொல்லி வந்தார்கள். இப்போதோ, 'மநுஷ்ய சரீரத்தில் எலெக்ட்ரோ-மாக்னடிஸ் வேவ்'களுக்கு மூலஸ்தானம் brain (மூளை) தான். உலகத்தை எடுத்துக்கொண்டால் அதன் 'மாக்னடிக் ஃபீல்டி'ன் மூலஸ்தானம் North Pole [வட துருவம்]. ஆகையால் நம் தலையை வடக்குப் பக்கம் வைத்துப் படுத்துக்கொண்டால் மூளையின் சின்ன காந்த சக்தியும் ஒன்றுக்கொன்று 'க்ளாஷ்'ஆகி, மூளை பாதிப்புக்கு ஆளாகிவிடும் என்று ஸயன்டிஸ்ட்கள் சொல்கிறார்கள். அதே ஸமயம் ஜபம், தியானம் பண்ண வடக்குப் பார்த்து உட்காருவது நல்லதென்று சொல்லியிருக்கிறது. தூக்கத்தில் புத்தியும் மனஸும் நமக்கு வசப்படாமல், தன்னையும் மீறித் தூக்கம் நம்மை வசப்படுத்தி ஓய்ச்சலில் அடித்துப் போடுகிறது; அப்போது புத்தி களைத்துக் கிடக்கிறது; அல்லது நம் வசத்திலில்லாததால் கன்னா பின்னா என்று கனவுகளைக் கல்பித்துக் கொள்கிறது. இம்மாதிரி ஸமயத்தில் இந்தச் சின்ன மாக்னட்டை, லோகத்தின் பெரிய மாக்னட்டுக்கு நேரே பிடித்தால் தாறுமாறாய்விடும். ஆனால், ஜப, த்யான காலத்தில் நாம் மனஸை அப்படியே அடக்கி வசப்படுத்த முடியாதவர்களாயிருந்தாலுங்கூட, அப்படிப் பண்ண வேண்டும் என்ற லக்ஷ்யமாவது நமக்கு இருக்கிறது. ஈஸ்வரன் விஞ்ஞானக் கருவிகளுக்கு த்ருஷ்டமாயுள்ள மின்ஸார காந்த சக்தியாய் மட்டுமில்லாமல், நம் லக்ஷ்யத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு அருள் செய்கிறவனாயும் இருப்பதால் த்யான காலத்தில் அதே காந்த சக்தி நமக்கு நல்ல 'பவரை'க் கொடுக்கும்படிப் பண்ணுகிறான். ஷாக் அடிக்கிற எலெக்ட்ரிஸிடியைக்கொண்டே நாம் எத்தனையோ நல்லதைப்

பெறவில்லையா? அந்த மாதிரி பிராணசக்தி நம் தேஹத்திலுள்ள சக்கரங்கள் வழியே போகிறதிலும் சயனநிலை, த்யானத்தில் உட்காரும் நிலை ஆகியவற்றுக்குள் ரொம்ப வித்யாஸமுண்டு. அதுவும் தவிர, வடக்கே மேருவில் இருக்கிற யோகிகள், ஞானிகள் ஆகியோரின் அநுக்ரஹ wave - ஐயும் அந்தப் பக்கம் பார்த்து ஜபம் பண்ணும்போது சற்று ஸுலபமாக கிரஹிக்கலாம். இப்படி ஒருத்தரின் உள்தன்மை, அன்பு முதலானவை வெளியே பரவுவது, தந்தியும் ஃபோனும் இல்லாமலே மனஸுக்கு மனஸ் தொடர்பு கொள்கிற 'டெலிபதி' இவற்றையும் விஞ்ஞான பூர்வமாக ஒப்புக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

வடக்குப் பார்த்து ஒன்றைப் பண்ணுவது, இன்னொன்றைப் பண்ணாததற்கு இத்தனை அர்த்தமிருக்கிறது!

ஆனால் சாஸ்திரத்தில் எலெக்ட்ரோ மாக்னெடிஸத்தைப் பற்றிச் சொல்லாமல்தான் விட்டிருப்பார்கள். புராணத்தில் பார்த்தால், இதற்குக் கதையும் சொல்லியிருக்கும். வாழாது வாழ்ந்த எவனோ ஒருத்தன் வடக்கே தலை வைத்துக்கொண்டு படுத்திருந்தான், அதனால் அவனுடையே மேன்மையே படுத்துப் போச்சு என்றுதான் கதையில் இருக்குமே தவிர விஞ்ஞான தத்வம் சொல்லியிருக்காது. முன்னேயே சொன்ன மாதிரி ஒரு சுத்தி எத்தனையோ நல்லதற்கு பிரயோஜனப்படுகிறது என்றாலும் அதைக் குழந்தை கையில் கொடுக்கக்கூடாது என்கிறமாதிரி, விஞ்ஞான தத்வங்களையும் அதைப் பிரயோஜனப்படுத்தும் கார்யக் கிரமங்களையும் பொது ஜனங்களுக்குச் சொல்லக்கூடாது என்றேதான் இப்படிப் பண்ணியிருக்கிறது.

அந்தப் புராணக் கதையும் நிஜம் என்றே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஆஸ்திகர் கட்சி. லோகத்துக்குத் தெரிகிற ஸயன்ஸும், அதோடு தத்வமும் கதை புராணங்களும் ஸ்தாபிக்கிற (ஸயன்ஸுக்குத் தெரியாத) ஸத்யமும் சேர்ந்துதான் சாஸ்திரம்.

முன்னே தெரியாதிருந்த உண்மைகள் ஸயன்ஸுக்கு இப்போது தினந்தினம் புதிசு புதிசாகத் தெரிகிறபோது, முன்னே பரிஹாஸம் பண்ணின அநேக

ஆசாரங்களை அதுவே சிலாகிக்க ஆரம்பிக்கிறது. பல் தேய்க்காமல் bed-coffee; வெள்ளைக்காரன் மாதிரி நித்ய ஸ்நானமில்லாமலிருப்பது; எப்போது பார்த்தாலும் உடம்பை மூடி thick துணியில் ஸூட்டும், கோட்டும் போட்டுக் கொண்டிருப்பது இதெல்லாம் நம் நாட்டு சீதோஷ்ணம், அதையொட்டி ஏற்படும் ஜீர்ணசக்தி முதலியவற்றுக்குப் பொருந்தாதவை என்று படிப்பாளிகள் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் பண்ணினால் அழுக்கு, வியர்வை இத்யாதிகளால் வியாதிகள் வரும் என்கிறார்கள்.

ஆனால் வியாதி வராமலிருப்பதற்கு மட்டுமில்லை சாஸ்திரம்; கர்ம வியாதியைப் போகப் பண்ணுவதற்காகப் புண்ய மருந்தைத் தரவே அது இருக்கிறது என்பதை மறக்கவே கூடாது. ஆரோக்யம் முதலான காரணங்களுக்காகத்தான் ஆசாரம் என்றால், ஒரு ஆசாரம் அநாரோக்யத்தை உண்டு பண்ண ஹேது இருப்பதாகத் தோன்றினால் அதை விட்டுவிடத் தோன்றும். தொத்து நோயுள்ளவர் உள்படப் பலர் கசகசவென்று கூடும் இடங்களுக்குப் போய்விட்டு வந்தால் ஸ்நானம் செய்வது ஆரோக்ய ரீதியில் நல்லது என்பதை நினைத்தோ ஸ்நான ஆசாரத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோமென்றால், இதற்கு விலக்காக ரதோத்ஸவத்தில் எத்தனை கூட்டத்தோடு இடித்துக் கொண்டு தேரிழுத்து விட்டுத் திரும்பினாலும் ஸ்நானம் பண்ணக்கூடாது என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பது நம் ஹைஜீன் ஸயன்யோடு உதைத்துக் கொள்ளும். எத்தனை பாசி பிடித்திருந்தாலும் திருக்குளத்தில் ஸ்நானம் பண்ணணும், எத்தனை அழுக்கானாலும் ஒரு மஹானின் பாத தீர்த்தத்தைப் புரோக்ஷணம் பண்ணிக்கணும், பாகவதர்கள் சாப்பிட்டு எழுந்த எச்சில் இலையில் விழுந்து புரளணும் என்பது போன்ற ஆசாரங்களை ஆரோக்யத்துக்காகவே ஆசாரம் என்றால் விட்டு விடும்படி ஆகும். அதனால், 'புண்யத்துக்குத்தான் ஆசாரம், அந்தப் புண்யம் நம் புத்திக்கும் ஸயன்ஸுக்கும் பிடிபடாது' என்பதை நன்றாக மனஸில் வாங்கிக் கொள்ள வேண்டும்.

பிறத்தியாரை ரொம்பவும் தொட்டுக் கொள்ளாமலிருப்பது, செத்த வீட்டில் சாவுத்தீட்டு என்று எதுவுமே சாப்பிடாமலிருப்பது, தீட்டுக்காக ஸ்நானம் செய்து, துணிமணிகளைத் தோய்த்துப் போடுவது முதலியனவெல்லாம்

வியாதித் தடுப்புக்கு எத்தனை உபகாரமானவை என்று டாக்டர் கிங், ஐ.எம்.எஸ் (ஐ.ஏ.எஸ். மாதிரி, ஐ.எம்.எஸ் என்று ஆல் இண்டியா மெடிகல் ஸ்ர்வீஸ் இருந்தது. அதைச் சேர்ந்தவர் இவர்) , ஸானிடரி கமிஷனராயிருந்தவர், ஏகமாகக் கொண்டாடி எழுதியதுண்டு.

அவர் நாளில் பௌதிகமான ஜீன்ஸ் [ஜீவ நுண்ணணு] பாக்டீரியா, வைரஸ் [விஷக்கிருமி] இதுகளைப் பற்றி மாத்திரம் தெரிந்ததைக்கொண்டே அவர் இப்படிக் கொண்டாடியிருக்கிறார். ஆனால் அதற்கப்புறம் ஸைகலாஜி, பாராஸைகாலஜியெல்லாம் ரொம்பவும் 'டெவலப்' ஆகி மநுஷனுக்கு மநுஷன் எண்ணம், குணம் இவற்றை பொருத்துக்கூட வித்யாஸமான waves [அதிர்வலைகள்] , aura [ஒளி வளையம்] ஆகியன இருப்பதாக ஏற்பட்டிருப்பதிலிருந்து, மைத்வம் என்ற பெயரில் எல்லாரையும் தொட்டுக் கொண்டும் தீட்டுப் பார்க்காமலும் பல பட்டடையாகக் குழப்பினால் அவரவர்களுடைய பிரத்யேகமான வளர்ச்சிக் கிரமம் பாதிக்கப்படும் என்று இன்னம் நன்றாகத் தெரிகிறது. ஒருத்தன் படுக்கையில் இன்னொருத்தன் படுத்துக் கொள்ளக் கூடாது, ஒருத்தன் வேஷ்டியை இன்னொருத்தன் கட்டிக் கொள்ளக் கூடாது, ஒருத்தனுடைய தீர்த்த பாத்திரத்தில் இன்னொருத்தன் குடிக்கக்கூடாது என்கிறதெல்லாம் இப்படி 'பெர்ஸனல் மாக்னடினஸ'த்தை (மனோசக்தியை) க் காப்பாற்றிக் கொள்வதற்குத்தான்.

மாதவிடாய் என்கிறோமே, அதில் பெண்களைத் தனித்து வைத்துச் தீட்டுச் சொல்வதில் பௌதிக அசுசி [தூய்மைக்குறைவு] ஒரு பங்கு என்றால், பௌதிகத்துக்குத் தெரியாத அசுசி இன்னொரு பங்கு. இது பாப-புண்ய விஷயம். இந்திரனின் பிரம்மஹத்திப் பாபத்தில் ஒரு பங்கு ஸ்திரீகளிடம் ரஜஸ்ஸாகப் போகிறது என்று சொல்லியிருக்கிறது. இது 'ஆரா', 'வேவ்'களில் கூடத் தெரியாது.

அவரவர் மனோசக்தியை வெளியே விடாமல் ரக்ஷித்துக் கொள்வது பற்றிய நவீன ஸயன்ஸ் கொள்கையைச் சொல்லும்போது ஒன்று நினைவு வருகிறது. கச்சம் போட்டுக் கட்டிக் கொள்வது என்று வைத்திருக்கிறதல்லவா? இதைப்பற்றி ஒருத்தர் எழுதியிருந்தார். வஸ்திரத்தின் நுனி வெளியே பார்க்க

இருந்தால் இதை உடுத்திக் கொண்டிப்பவரின் மனோசக்தி வேவ்கள் வெளியே போய்விடுகிறதாம். கச்சமாக மடித்து உள்ளே சொருகிக் கொண்டுவிட்டால் இப்படி விரயமாவதில்லை என்று சொல்லியிருந்தார். இதைத் தெரிந்து கொண்டுதான் துருக்கர்கள்கூட லுங்கியை ஓரம் தைத்துக் கட்டிக் கெள்கிறார்கள் போலிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நாளுக்கு நாள் நமக்கு அநேக ஆசாரங்களின் உள்ளர்த்தம் ஸயன்ஸ்படி புரிந்துகொண்டு வருவதாலேயே இப்போது நமக்குப் புரியாத, இனி என்றைக்குமே ஸயன்ஸினால் புரிந்துகொள்ள முடியாத மற்ற எல்லா சாஸ்திர விதிகளையுங்கூட ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

"கங்கா, கங்கா என்று இந்த ஹிந்துக்கள் நமஸ்காரம் பண்ணுகிறார்களே, அப்படி இதில் என்னதான் இருக்கிறதென்று ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் எங்களுக்கு ஆச்சர்யமாயிருந்தது. காலராக்காரன் ஒருத்தன் பிணத்தை கங்கையில் எங்கே இழுத்து விட்டிருந்ததோ அந்த இடத்திலிருந்தே ஜலத்தை எடுத்துப் பரிசோதனைப் பண்ணிப் பார்த்தோம். மாய மந்திரம் மாதிரி அந்த ஜலத்தில் ஒரு காலராக் கிருமி கூட இல்லை" என்று ரிஸர்ச் செய்தவர்கள் ரொமப வருஷம் முந்தி ரிபோர்ட் கொடுத்திருந்தார்கள். ஸந்தோஷமான விஷயந்தான். ஆனாலும் நாம் 'கங்கா, கங்கா' என்று நமஸ்காரம் பண்ணுவது அவள் வியாதிநாசினி என்பதற்காக இல்லை. பாபநாசினி, ஸம்ஸார நாசினி என்பதற்காகத்தான். பாக்டீரியா-வைரஸ் மாதிரி பாப-புண்யமோ, ஸம்ஸாரம்-மோக்ஷம்-நரகம் இவையோ ஸயன்டிஸ்டின் 'தியரி'க்குள்ளும் `டெஸ்ட் ட்யூபு'க்குள்ளும் என்றைக்குமே வராது.

இதைப் புரிந்து கொண்டால், விஞ்ஞான ரீதியில் பரிஹாரம் பண்ணிவிட்டதால் ஒரு வஸ்துவுக்கு தோஷம் போய்விட்டது என்று நினைக்க மாட்டோம். இதை எதற்குச் சொல்கிறேனென்றால் இப்போது எவர்ஸில்வர் என்று ஒன்று ரொம்ப நடமாடுகிறது. ஸ்வாமி தீபம் உள்பட கலசமாக வைக்கிற குடம் உள்பட எல்லாம் அதில் வந்தவிட்டது. இத்தனை காலம், இரும்புப் பாத்திரம் உதவாது என்ற சாஸ்திர விதியை அநுஸரித்து வந்தவர்களும் இப்போது எவர்ஸில்வரை உபயோகிக்கிறார்கள். "இரும்பு

கூடாது என்றதற்குக் காரணம் அது துரு பிடிக்கக்கூடும் என்பதுதான்; அதனால் அதில் ஆரோக்கிய ஹானி உண்டாக்குகிற ஹேது உள்ளது என்கிறதுதான். ஆனால் அந்த இரும்பை இப்படி எவர்ஸில்வராக 'ப்ராஸஸ்'பண்ணிவிட்டபின், அதில் துரு பிடிப்பதற்கேயில்லை. அது health hazard ஆகாது. இரும்பின் தோஷத்திற்குப் பரிஹாரம் பண்ணிவிட்டதால் அதை உபயோகிக்கலாம்" என்று சொல்கிறார்கள். துருவுக்காகத்தான் இரும்பு கூடாது என்று இவர்களாகவே அநுமானம் பண்ணிக்கொண்டு இப்படி எவர்ஸில்வரை சாஸ்திரோக்தமானதாக ஆக்கிவிட நினைக்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் இரும்பு கூடாது என்றது துருவுக்காக அல்ல; அல்லது துருவுக்காக மாத்திரம் அல்ல. அது பாபகரமானது, ஆஸுர [அசுரத்தனமான] சக்திகளையும், சனைச்சரன் மாதிரி உக்ர க்ரஹங்களின் சக்தியையும் நம்மிடம் இழுத்து வரும் என்பதால்தான் கூடாது என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. எவர்ஸில்வரிலும் இந்த தோஷம் போய்விடாது.

இதேமாதிரி, ஹோமத் திரவியங்கள் அட்மாஸ் ஃபியரிக் பொல்யூஷனைப் போக்குவதைவிட முக்யமாக, ஆஸுர சக்திகளைத் துரத்தி திவ்ய சக்திகளைக் கொண்டு வருவதற்கே ஏற்பட்டவை. அதனால் வறட்டிக்கும், ஸமித்துக்கும் பதிலாக அவற்றைவிட வீரியத்தோடு ஏதாவது anti-pollution கெமிகலைக் கண்டுபிடித்தாலும் இவற்றைக் கொண்டு ஹோமம் பண்ணுவதற்கில்லை!

ஸைகலாஜிகலாக அநேக சாஸ்திர விதிகளை 'அப்ரீஷியேட்' பண்ணலாம் என்கிறார்கள். பால், நெய், தயிர், சாணம், மூத்திரம் எல்லாவற்றாலும் நலன் விளைவிக்கும் பசுவை மாதாவாக பாவிப்பது psychologically satisfying [மனோதத்வப்படி திருப்தி தருவது] என்கிறார்கள். அதுவும் வாஸ்தவந்தான். ஆனால் பசுவின் divinity [தெய்வத்தன்மை] 'ஸைகாலஜி'க்கு அப்பாற்பட்ட விஷயம். இந்த 'டிவினிடி'க்காகத்தான் அதற்கு முக்யமாகப் பூஜை. மற்ற தேசங்களில் உள்ளவர்கள் மாதிரி பால், நெய், தயிர் இவற்றின் பிரயோஜனத்தைத் தெரிந்துகொண்டது மட்டுமின்றி நம் பூர்விகர்கள் சாணி, பசு மூத்திரம் இவற்றின் சுத்தி செய்யும் சக்தியையும் தெரிந்துகொண்ட பெருமை ஒரு பக்கமிருக்கட்டும். ஆனால் இந்த ஐந்தையும் 'பஞ்சகவ்யம்' ('கோ' என்றால் பசு. 'கவ்யம்' என்றால் பசு ஸம்பந்தமுள்ளது. 'பஞ்ச கவ்யம்'

என்பது பசு ஸம்பந்தப்பட்ட ஐந்து) என்று சேர்த்து ஒருத்தரைச் சாப்பிடச் சொல்லி அவரை சாப்பிடச் சொல்லி அவரை சுத்தி பண்ணுகிறபோது அது சரீர சுத்திக்காக (physical purity -க்காக) மட்டுமில்லை; ஆத்மசுத்திக்காகவே! பாபத்தைப் போக்கிப் புண்யத்தை உண்டுபண்ணுகிற சக்தியும் பஞ்ச கவ்யத்துக்கு இருக்கிறது. மந்த்ர பூர்வமாக அதை ப்ராசனம் பண்ணுவதால் [உட்கொள்வதால்] இந்த சக்தி இன்னம் விருத்தியாகிறது. " புண்யாஹ வாசனம் " என்று புண்ய ஸம்பந்தப்படுத்தித் தான் பஞ்சகவ்யத்தை வைத்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, மெடிகல் ஸயன்ஸ், ஸைகாலஜி எல்லாவற்றிலும் அதிஸூக்ஷ்மமான விஷயங்களைத் தெரிந்துகொண்டிருந்த அந்தப் பூர்வ காலப் பெரியவர்கள் எந்த லாபரட்டரியும், இன்ஸ்ட்ருமென்டும் இல்லாமல் இத்தனை ஞானமும் பெற்றார்கள் என்றால் அது எதனால்? ஈஸ்வரப் பிரஸாதமாக அவர்கள் பெற்ற மனோசக்தியால்தான். அவர்களுடய தபஸையும், நியமத்தையும் பார்த்து பகவானே ஸயன்ஸுகளுக்குள் வராத அநேக விஷயங்களை அவர்களுக்குத் தெரியப்பண்ணியிருக்கிறார்கன். அவனே அவர்கள் முன் பிரஸன்னமாகி தெரியப்படுத்தியிருக்கலாம்; அல்லது அவர்களுக்கு instinctive -ஆக [உள்ளுணர்ச்சியாக] , அல்லது அதற்கும் மேலே intuitive -ஆக [[உள்ளார்ந்த ஸத்யதர்சன சக்தியே intuition என்பது] இந்த உண்மைகள் தெரியும்படிப் பண்ணியிருக்கலாம். இவற்றையும் பிரயோஜனப்படுத்தி அவர்கள் மேலே மேலே தபோ நியமங்களை அநுஷ்டித்து ஸித்தி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஸகல ஞானமும் பெற்றுச் சொன்னவற்றில் நவீன விஞ்ஞானம் ஆச்சரியப்படுகிற கருத்துக்கள், அதனால் ஒப்புக்கொள்ள முடியாத கருத்துக்கள் இரண்டுமே இருக்கின்றன; நம் அறிவுக்கு ஏற்றவை, ஏற்காமல் மூடக் கொள்கையாய்த் தோன்றுகிறவை இரண்டும் இருக்கின்றன. நம்முடைய அறிவு எத்தனையோ ஆராய்ச்சி பண்ணி எவ்வளவோ உபகாரங்களை வைத்துக்கொண்டு கண்டுபிடிப்பதை அந்தப் பெரியவர்கள் அநாயஸமாகத் தெரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தே, நம் அறிவுச் சக்தியோடு ஈஸ்வர மர்மங்கள் முடிந்து விடவில்லை என்று அறிவு பெற வேண்டும். அந்த மர்மங்களைத் தெரிந்துகொண்டவர்கள்

சொல்வதில் பலதை மூடநம்பிக்கை என்பதுதான் மூடத்தனம், இது நம்முடைய அல்ப அறிவிடம் நமக்கிருக்கிற மூடநம்பிக்கைதான் என்று தெளிவு பெற வேண்டும்.

9.10-ஆத்ம திருப்திக்கே ஆசாரம்

பசுவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். பசுவின் முகத்தில் மஞ்சள் குங்குமமிட்டு கொம்பிலே குஞ்சலம் கட்டி, கழுத்திலே மாலைகள் போட்டு மணிகள் கட்டினால் பார்க்க ரொம்ப அழகாகத்தானிருக்கிறது. நமக்குப் பல தினுஸில் உபகாரம் பண்ணும் பசுவைப் போற்றுவதில் psychological satisfaction இருப்பது போல இப்படி அந்த கோமாதாவை அலங்காரம் பண்ணிப் பார்ப்பதில் artistic satisfaction [கலையுணர்வுத் திருப்தி] -ம் உண்டாகிறது. ஆனாலும் பசுவுக்கு அர்ச்சனை பண்ணுவது என்றால் அப்போது அதன் முகத்திலே பண்ணாமல் பிருஷ்ட பாகத்திலே [வால் புறத்திலே] தான் அர்ச்சிக்க வேண்டும். நமக்கு அது பிடிக்கிறதா, பிடிக்கவில்லையா, இப்படிப் பண்ணுவதற்குக் காரணம் உண்டா, இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை. இப்போது நமக்கு ஒவ்வொன்றாகக் காரணம் தெரிகிற அநேக ஆசார விதிகளை ஏற்படுத்தின ரிஷிகள், காரணமில்லாமலா, `பசுவின் முகத்தில் பூஜை பண்ணாதே, பின்பக்கம் பண்ணு; அங்கேதான் லக்ஷ்மி வாஸம் பண்ணுகிறாள்'என்று சொல்வார்கள்? நம்பிப் பண்ண வேண்டும். அப்போது அங்கே வாஸம் பண்ணும் லக்ஷ்மி தெரிவாள். ஸைகலாஜிகலாவோ, வேறு விதங்களிலோ நம்மை 'ஸாடிஸ்ஃபை' பண்ணாவிட்டாலும் ஸரி, நாம் சாஸ்திரங்களுக்கு அடங்கி, அடி பணிந்து, அதன் பிரகாரம்தான் செய்ய வேண்டும். இந்த எல்லா ஸாடிஸ்ஃபாக்ஷன்களையும்விட ஆத்ம-ஸாடிஸ்ஃபாக்ஷனுக்காகத்தான் சாஸ்திராசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுதான் எக்காலத்துக்குமான 'ஸாடிஸ்ஃபாக்ஷன்'. மற்ற 'ஸாடிஸ்ஃபாக்ஷ'னெல்லாம் அடுத்த நிமிஷமே பறந்து போய் 'டிஸ்ஸாடிஸிஃபாக்ஷனில்' கொண்டு விடுபவை தான். ஆத்மா நிறைந்து, திருப்தியாய், ஸாடிஸ்ஃபை ஆகவேண்டுமென்றால் பாபத்தைப் போக்கிக் கொண்டு புண்யத்தை ஸம்பாதித்துக் கொண்டால்தான் முடியும்.

இதற்காக நம்முடைய மற்ற ஸாடிஸ்பாக்ஷன்களைத் தியாகம் பண்ணிக் கஷ்டப்படவும் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

கோவிலுக்குப் போகிறோம். வழியிலே பிரஸவ ஆஸ்பத்திரியில் ஸஹோதரிக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது. குழந்தையைப் பார்க்க ஆசையாய்த்தானிருக்கும். ஸஹோதரியும் ரொம்ப ஸந்தோஷப்படுவாள். ஸைகலாஜிகல் ஸாடிஸ்ஃபாக்ஷன், மநுஷ்யாபிமானம் இவற்றைக் கொண்டு பார்த்தால் பிரஸவ ஆஸ்பத்திரிக்குள் போகத்தான் வேண்டும். ஆனால் அங்கே போய்வந்தபின் ஸ்நானம் பண்ண முடிந்தால்தான் கோவிலுக்குப் போகலாம். ஸ்நானம் பண்ணாமல் பிரஸவத் தீட்டோடு கோவிலுக்குப் போகப்படாது. 'கோவிலில் விசேஷமாச்சே, போகத்தான் வேணும்' என்றால், இப்போது நமக்கு ஸ்நானம் பண்ண வசதி இல்லாவிட்டால், பிரஸவித்த ஸஹோதரியைப் பார்க்காமலேதான் போக வேண்டும். அந்தத் தியாகம் பண்ணத்தான் வேண்டும். சாஸ்திரம் மநுஷ்யாபிமானமில்லாதது என்று குற்றம் சொல்வது நியாயமில்லை. அப்படிச் சொன்னால் அந்த ஆஸ்பத்திரியில் அமலாகிற வைத்ய சாஸ்திரத்தையும் குறை சொல்லத்தான் வேண்டும். ஏன்? அங்கே ஆபரேஷன் தியேட்டரில் நம்மை உள்ளே விடுவார்களா? நமக்கு ரொம்பவும் பிரியமான பந்துவுக்குப் பிராணாபத்தான ஆபரேஷன், அப்போது பக்கத்திலிருக்க வேண்டும். இரண்டு மணி-மூன்று மணி பெரிய ஆபரேஷன் நடக்கிற வரை இன்னது நடக்கிறது என்று தெரியாமல் வெளியிலே திக்கு திக்கென்று உட்கார்ந்திருக்க முடியாது என்றால் டாக்டர் ஒப்புக் கொள்வாரா? **உடலின் க்ஷேமத்தைக் குறித்து**டாக்டர் சொல்வதை ஒப்புக்கொண்டு, அவர் சொல்வது கடுமையாக இருந்தாலும் அவருடைய நல்லெண்ணத்தை மதித்து, அவரைத் திட்டாமல் தியேட்டருக்குள் போகாமலிருக்கிறோமென்றால் (நம் ஸைகலாஜிகல் ஸாடிஸ்ஃபாக்ஷனை ஸாக்ரிஃபைஸ் பண்ணுகிறோமென்றால்) அதே ஆஸ்பத்திரிக்கு, பிற்பாடு ஸ்நானம் பண்ணும் வசதி இருந்தாலொழியப் போகக்கூடாது என்று உயிரின் க்ஷேமத்தைக் கருதி சாஸ்திரகாரர் சொல்வதையும் திட்டாமல் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

'மற்ற தேசங்களில் பிரஸவத் தீட்டு பார்க்கிறார்களா, பஹிஷ்டா [மாதவிடாய்] விதிகளை அநுஸரிக்கிறார்களா? இன்னம் நம்முடைய மற்ற ஆசாரங்கள், ஸம்ஸ்காரங்கள் இதுகளைப் பின்பற்றுகிறார்களா?' என்று கேட்பதில் அர்த்தமில்லை. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் இப்படியிருக்கிற மற்ற எல்லா தேசங்களும் ஆத்ம ஸம்பந்தமான ஞானத்திலும், அப்படிப்பட்ட ஞானத்தை ஸம்பாதித்துக் கொண்டவர்களிலும் நம் தேசத்தைவிட ரொம்பவும் பின்தங்கியிருந்து வந்திருக்கின்றன என்று அவர்களே ஒப்புக்கொள்வதுதான். நித்ய சிரேயஸ் வேண்டும், ஈஸ்வரனை அடைய வேண்டும், ஆத்மஞானம் பெற வேண்டும் என்றால், அந்த தேசம்-இந்த தேசம், அந்தக் காலம்-இந்தக் காலம் என்று கால, தேசங்களைச் சொல்லிக் கொண்டிருக்காமல் சாஸ்திரப்படி செய்தால்தான் ஸித்தி கிடைக்கும்.

அதுவும் தவிர லோகத்திலேயே இந்த பாரத தேசத்தைத்தான் ஈஸ்வரன் கர்மபூமியாக வைத்திருக்கிறான். ஒரு வீடு என்றால் அதில் சமையலறை, பூஜையறை, படுக்கையறை என்று வெவ்வேறாக இல்லையா? ஒரு ஃபாக்டரி என்றால் அதில் யந்திரசாலை, நிர்வாஹஸ்தர் ஆஃபீஸ், கான்டீன் என்று தனித்தனியாக இல்லையா? இவற்றில் ஒன்றில் செய்வதை இன்னொன்றில் செய்வார்களா? அப்படி பகவான் லோகத்தில் வைதிக கர்மாநுஷ்டானத்துக்காக பாரத பூமியைத்தான் வைத்திருப்பதால் இங்கே மாத்திரம் இத்தனை சாஸ்திரங்களும் ஆசாரங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இதிலே கடுமையாகத் தோன்றுவதும் நம்முடைய நித்ய ஸௌக்யத்தை உத்தேசித்துக் கருணையினால் சொன்னதுதான்.

நித்ய ஸௌக்யமான மறுமையின்பத்தோடு இம்மையின்பத்தையும் அது மறுமைக்கு பாதகமாக இல்லாதவரையில் சாஸ்திரங்கள் அளிக்கத்தான் செய்கின்றன. நோய் நொடியில்லாமலிருக்க வேண்டும்;ஜனங்களெல்லாம் ஸௌஜன்யமாகக் கூடி வாழ வேண்டும்; தப்பு தண்டாக்களில் மாட்டிக்கொண்டு கஷ்டப்படக் கூடாது என்று இம்மைப் பயன்களைக் கருதியும் அநேக ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பலர் நினைக்கிறபடி ஒரே

நிர்தாக்ஷிண்யமாயில்லாமல், ஸைகலாஜிகலாகவும், மற்ற ரீதியிலும் அநேக இடங்களில் விட்டுக் கொடுத்தும் விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

9.11-ஆசாரங்களில் பாகுபாடு: குறள் தீர்ப்பு

எல்லோருக்கும் இத்தனை ஆசாரங்களை வைக்காமல் பிராம்மண ஜாதிக்கு மாத்திரம் வைத்ததே இந்த ரீதியில்தான். இதைத்தான் புரிந்து கொள்ளாமல் பக்ஷபாதமென்று சிலர் சொல்கிறார்கள். சாஸ்திரங்களைச் செய்தவர்கள் பக்ஷபாதிகளாக இருந்திருந்தால் தங்கள் ஜாதிக்கு மட்டும் விதிகளைக் குறைத்து 'லைஸென்ஸ்'தான் கொடுத்துக் கொண்டிருப்பார்களே தவிர, **ஜாஸ்தியாக்கிக்** கட்டிப் போட்டிருப்பார்களா?

தமிழ்நாட்டுக்கு தர்மத்தைச் சொன்னவர்களில் மூலபுருஷராகச் சீர்திருத்தக்காரர்கள், பகுத்தறிவுக்காரர்கள் உள்பட ஸகலராலும் ஒப்புக்கொள்ளப்படும் திருவள்ளுவர் என்ன அபிப்பராயப்படுகிறார்? எல்லாருக்கும் ஒரே ஆசாரம் என்றில்லாமல், தனித்தனிக் குலாசாரம் என்பது உண்டு; அது பிராம்மணனுக்கே அதிகம்; பிராம்மணனின் பிரம்மயண்யமே அவனுடைய பிரத்யேகமான குலாசாரத்தால் ஏற்படுவதுதான் என்று அவர் தீர்மானமாக அபிப்ராயப்படுகிறார்.

ஒழுக்கம் என்பதே ஆசாரம்; அது உள்குணம், வெளிநடத்தை, வெளிச் சின்னம் எல்லாம் அடங்கியது என்று சொன்னேனல்லவா? இந்த ஆசாரத்தைப் பற்றியொழுகுவது பற்றி "ஒழுக்கம் உடைமை" என்று திருக்குறளில் ஒரு அதிகாரம் (பத்துக் குறள்கள்) பண்ணியிருக்கிறார், அதை ஜெனரலாக, எல்லாருக்கும் 'அப்ளை' ஆவதாகத்தான் ஆரம்பித்துக்கொண்டு போகிறார். ஒழுக்கந்தான் மநுஷ்யனுக்கு உயர்வைத் தருவது; அதனால் பிராணனைவிட முக்யமானதாக ஒழுக்கத்தை, ஆசாரத்தை, ரக்ஷிக்க வேண்டும் என்று முதல் குறளில் சொல்கிறார்.[1] அப்புறம் [மூன்றாவது குறளில்] உயர்ந்த ஒழுக்கமுள்ளவனே உயர்குடி, அதாவது உயர் ஜாதிக்காரன்; ஒழுக்கம் கெட்டவன் தாழ்பிறப்புக்காரன்[2] என்று அவர் சொல்வதைப் பார்த்தால் ஒருவனுடைய குணத்தையும் நடத்தையையும் வைத்துத்தான் ஜாதியே தவிர,

பிறப்பினாலே அல்ல என்ற இக்கால அபேத வாதம் மாதிரித் தோன்றுகிறது. ஆனால் இப்படியில்லை என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகிற மாதிரியே அடுத்த குறளைப் பண்ணியிருக்கிறார்கள்.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

'பார்ப்பான்' என்றால் பிராம்மணன். ஞானதிருஷ்டியால் ஸத்யத்தை தரிசனம் பண்ணுவதால் அவன் "பார்க்கிறவன்"- "பார்ப்பான்". ரிஷிகளை seer (see-r) என்று இங்கிலீஷில் சொல்வதும் இதே அர்த்தம்தான். "ஓத்து" என்று இங்கே சொல்லப்படுவது வேதம். ஓதப்படுவது - அத்யயனம் பண்ணப்படுவது - எதுவோ அது ஓத்து.

இந்த (இப்போது சொன்ன) குறளுக்கு என்ன அர்த்தமென்றால் ஒரு பிராம்மணன் வேதத்தை மறந்துபோய் விட்டால்கூடப் பரவாயில்லை; மறுபடியும் அத்யயனம் பண்ணிக் கற்றுக்கொண்டு விடலாம் - "பார்ப்பான் ஓத்து மறப்பினும் மறுபடியும் ('மறுபடியும்' என்பது 'அண்டர்ஸ்டுட்') கொளல் ஆகும்" என்று prose-order பண்ணிக்கொள்ள வேண்டும். அதாவது, வேதம் மறந்துபோனாலும் மறுபடி கற்றுக் கொண்டு விடலாம்; கற்றுக் கொளலாகும். ஆனால் அவன் ஒழுக்கத்திலிருந்து, அதாவது ஆசாரத்திலிருந்து வழுவிவிட்டால் அவனது பிராம்மண ஜன்மாவே கெட்டுப்போய்விடும், அதாவது வீணாகிவிடும். "ஒழுக்கம் குன்றப் பிறப்பு (அதாவது 'த்விஜன்ம விசேஷம்' என்கிற பிராம்மண குடிப்பெருமை) கெடும்" என்பது prose-order நவீனர்கள், 'ஆசாரமே இருக்க வேண்டியதில்லை; Vedas, Upanishads என்று லெக்சர் பண்ணிவிட்டால் போதும்; அப்படிப் பண்ணும் எல்லாரும் பிராம்மணர்தான்' என்கிறார்களென்றால், திருவள்ளுவரோ, "பிராம்மணனுக்கு வேதமே மறந்து போய்விட்டால் கூட பாதகமில்லை; மறுபடி கற்றுகொண்டு விடலாம். ஆனால் அவன் மாத்திரம் ஆசாரஹீனனாக ஆனானோ, அதோடு அவனுடைய பிரம்மண்யமே போச்சு" என்கிறார். **"ஆசார ஹீநம் ந புநந்தி வேதா:"** என்ற சாஸ்திர அபிப்ராயத்தை அப்படியே echo பண்ணுகிறார். தமிழ்மறை என்ற குறளைக் கொடுத்த பெரியவர். எத்தனை வேதம் படித்திருந்தாலும் ஆசாரத்தை விட்டவன் வேதத்தினால் பலனடையமாட்டான்.

ஒரு பக்ஷிக் குஞ்சுக்கு இறக்கை முளைத்தவுடன் அது அந்த நிமிஷம் வரை இருந்த கூட்டைத் திரும்பிகூடப் பார்க்காமல் பறந்து விடுவதைப்போல, ஆசார ஹீனன் படித்த வேத வேதாந்தமெல்லாம் அவன் சாகிறபோது அவனைப் புண்ய லோகத்தில் சேர்க்காமல் அவனைத் திரும்பிகூடப் பார்க்காமல் போய்விடும் - என்றெல்லாம் தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைத்தான் திருவள்ளுவரும் ரத்னச் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஒழுக்கத்தால்தான் ஒருத்தனுக்கு உயர்வு என்று ஜெனரலாகச் சொல்லிவிட்டு, உடனேயே இப்படி பிராம்மணனின் ஒழுக்கத்தை ஸ்பெஷலாகச் சொன்னதால் அவர் நம் கால அபேதவாதிகளில் ஒருத்தரில்லை என்று காட்டிக் கொண்டு விடுகிறார். மற்ற எல்லாரையும் விடப் பிராம்மணனுக்கு ஆசாரம் விசேஷமானது என்பதை ஒப்புக் கொண்டுதான் இங்கே தனியாக அவனைப் பற்றி மட்டும் சொல்கிறார்.

"பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" என்பதை இன்னொரு தினுஸிலும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். அதாவது, பிராம்மணன் தன்னுடைய பிறப்பொழுக்கமான, அதாவது பிராம்மணர்களுக்கு மாத்திரம் உரியனவான ஆசாரங்களில் குன்றிப்போனால் உலகமே கெட்டுப் போகும். கெடும் என்று அர்த்தம் பண்ணலாம். இன்னோரிடத்தில்[3] இவரே ஒரு தனி மநுஷ்யனுக்கு உண்டாகிற கெடுதலாயில்லாமல், ஒரு தேசத்துக்கே ஏற்படும் க்ஷாமங்களைச் சொல்லும்போது "அறுதொழிலோர் நூல் மறப்பர்" என்கிறார். அதாவது 'ஷட்கர்ம நிரதர் எனும் பிராம்மணர் வேதத்தை மறந்து போவார்கள்' என்கிறார். ஆனதால் பிராம்மணன் வேதாத்யயனத்தை விடுவதாலோ, வேறு தப்புப் பண்ணுவதாலோ அவனும், அவனுடைய ஜாதியும் மட்டுமின்றி லோகமே கெட்டுப்போகும் என்ற கருத்து உடையவர் திருவள்ளுவர் என்று தெரிகிறது. எனவே இங்கேயும் "கெடும்" என்பதை "அவன் தன் அந்தணப் பிறப்புக்குரிய ஆசாரவொழுக்கத்தில் குன்றினால் உலகமே கெடும்"என்று அர்த்தம் செய்து கொள்ளலாம். அங்கே அறுதொழிலோர் மறைநூல் மறப்பதே உலகுக்குத் தீமை என்றவர் இங்கே, மறையை மறந்தால் கூடப் பரவாயில்லை, அந்தத் தீமையை விடப் பெரிய ஹானி என்னவென்றால் அவன் குலாசாரத்தை, பிறப்பொழுக்கத்தை, விடுவதுதான் என்கிறார். வேதமே

வேண்டாம், ஒழுக்கம் போதும் என்று சொல்கிற கோஷ்டியில் அவர் இல்லை. வேதம் போனால் லோகத்துக்குக் கஷ்டம் ஏற்படும் என்றே அபிப்ராயப்படுகிறவர். வேதத்தை memorise பண்ணி (மனப்பாடம் செய்து) , புஸ்தகம் எழுதி, பிரஸங்கம் பண்ணிவிட்டால் போதும், ஆசாரம் வேண்டாம் என்ற கோஷ்டியிலும் இல்லை. இரண்டும் வேண்டாம் என்ற கோஷ்டியிலும் இல்லை. இரண்டும் வேண்டும் என்கிறார். இரண்டில் அத்யயனத்தை விடுவதைவிட ஆசாரத்தை விடுவதே பெரிய கஷ்டத்தைக் கொடுக்கும் என்கிறார். ஸரியாகப் பார்த்தால், அத்யயனத்தை அடியோடு விட்டு விடுவதை அவர் கொஞ்சங்கூட ஒப்புக்கொள்ளாதவர் என்று தெரியும்.**தாற்காலிகமாக மறந்துபோவதைத்தான்** சொல்கிறார். 'மறப்பினும்' என்கிறாரே தவிர 'இழப்பினும்', `விடினும்' என்று சொல்லவில்லை. வேதத்தை விட்டே விட்டால் லோகத்துக்கு அனர்த்தம்தான்.

மறந்துபோன நிலையில்கூட, `அது மறந்ததால் பரவாயில்லை, அந்த மறந்த நிலை அப்படியே நீடித்துவிட்டுப் போகட்டும்; பிராம்மணன் ஆசாரத்தோடே இருந்து விட்டால் அதுவே போதும்' என்கிறாரா? இல்லை. வேதத்தை மறந்தவன் அதை மறுபடியும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றே சொல்கிறார். 'மறப்பினும், ***ஓத்துக் கொளல் ஆகும்'***, அதாவது, மறுபடி கற்றுக்கொள்ள முடியும் என்கிறார். முடிகிற விஷயமென்றால் அப்படிப் பண்ணவேண்டுமென்பதே உள்ளர்த்தம். மறையை மறந்தவன் மறையை மறந்தாலும் குலாசாரத்தை மறவாமல் பின்பற்றிக்கொண்டு, பிறகு மறந்துபோன மறையையும் மீண்டும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பரம சாஸ்திரீயமாக, ஸநாதன நெறிப்படி திருவள்ளுவர் நினைத்து உபதேசம் பண்ணியிருக்கிறார்.

இதிலிருந்து முதலில் சொன்னாரே, ஒருவனின் உயர்ந்த ஒழுக்கத்தை வைத்தே ஒருத்தனுக்குக் குடிமை - உயர்குடித் தன்மை-என்றாரே, அதற்கும் ஸோஷலிஸமாக இல்லாமல் சாஸ்திரபூர்வமான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம். எந்தக் குலமும், ஜாதியும் தனியாக உயர்ந்தது, தாழ்ந்தது என்று சாஸ்திரத்திலில்லை. பல லோக கார்யங்கள் ஸமூஹத்தில் விதரணையாகப் பங்கீடாக வேண்டும் என்ற உசந்த அபிப்ராயத்தில் உண்டான வர்ணாச்ரம

ஏற்பாட்டில் எந்த ஜாதியும் எந்தக் குலமும் அதற்கான தொழிலை அநுஸரித்து அதற்கென்று ஏற்பட்ட ஒழுக்கத்தைப் பின்பற்றினால் உசத்திதான். அப்படிப் பண்ணுகிறவன் உசந்தவன்தான். இதே அபிப்ராயத்தில் தான் திருவள்ளுவரும் இந்த (ஸோஷலிஸ ஸமத்வம் மாதிரித் தெரிகிற) குறளைப் பண்ணியிருக்கிறார், உண்மையில் அவர் என்ன mean பண்ணுகிறாரென்றால் 'ஒருவன் தன்குலத்துக்கான ஒழுக்கத்தோடு இருப்பதுதான் அந்தக் குலத்தில் உயர்வை அவனுக்குத் தருகிறது. அந்த ஒழுக்கம் கெட்டவனானால் இழி பிறவியனாகி விடுகிறான்' என்பதே. இப்படி அர்த்தம் புரிந்துகொண்டால்தான் இதற்கு logical sequence -ஆக [தர்க்கரீதியில் தொடரிழையாக] எல்லாருக்குமே அவரவர் ஆசாரம் முக்யமானாலும், பார்ப்பனனுக்கு அது மிகமிக முக்கியமானது, அவனுக்கே சிறப்பாக ஆசாரங்கள் அதிகம் அமைந்துள்ளன என்ற அடிப்படையை ஒப்புக் கொண்டு,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்

என்று குறள் பண்ணிக்கொண்டு போயிருப்பதன் பொருத்தத்தைப் புரிந்து கொண்டு ரஸிக்க முடியும்.

இப்படியே சொல்லிக்கொண்டுபோய், ஒழுக்கம் என்பது பிரத்யக்மான த்ருஷ்ட பலனைத் தருவது மட்டுமில்லை; அத்ருஷ்டமாக நல்லொழுக்கமே புண்யம் என்பதாகி, என்றோ ஒரு காலத்தில் நல்லதைத் தரும்; தீய ஒழுக்கம் பாபம் என்பதாகி எந்நாளும் கஷ்டத்தைத் தரும் என்ற வைதிகக் கருத்தை வெளியிடுகிறார்[4]

---

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.

2. ஒழுக்கம் உடைமை குடிமை_ இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்.

3.“கொடுங்கோன்மை” என்ற அதிகாரத்தின் கடைசி குறள்.

4. **நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

என்றும் இடும்பை தரும்.

9.12-ஆசாரமும் வர்ணாச்ரமங்களும்

ஸகல ஜனங்களும் இதுகள்தான் ரூல் என்று ஒரே விதமான ஆசாரங்களை வைக்காமல், அவரவருக்கும் ஜன்மாப்படி குல வழக்காக வந்துள்ள தொழிலையொட்டியும், அவன் படிக்கிற பால்ய தசையிலிருக்கிறானா கல்யாணம் பண்ணிக்கொண்டு குழந்தை குட்டி பெற்றுக் கொண்டு குடித்தனம் பண்ணும் ஸ்டேஜில் இருக்கிறானா, இதுகளை விட்டுப்விடப் பக்குவமாகிற நிலையிலிருக்கிறானா, அதற்கும் மேலே பரமாத்ம தியானம் தவிர வேறு வேண்டாம் என்கிற ஸ்திதிக்குப் போயிருக்கிறானா என்பதையொட்டியுமே ஒவ்வொரு தொழில், ஒவ்வொரு ஸ்டேஜுக்கும் ஏற்றதாக ஆசாரங்களை நம் சாஸ்திரங்கள் வித்யாஸப் படுத்திக் கொடுத்திருக்கின்றன. தொழிலையொட்டி ஏற்பட்டது வர்ண தர்மம்; ஒருத்தர் எந்த தசையிலிருக்கிறா ரென்பதையொயட்டி ஏற்பட்டது ஆச்ரம் தர்மம். இரண்டையும் சேர்த்து “வர்ணாச்ரம”ங்களைப் பொருத்து ஆசாரங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறோம். இது invidious discrimination -ஆக [பக்ஷபாதமாக]ப் பண்ணினதே அல்ல. அவனவனையும் அவனுடைய நிலையிலிருந்தே உயர்த்திக் கொண்டு போகவும், அதே சமயம் ஸமூஹம் பூராவையும் சீராக அபிவிருத்தி பண்ணிக்கொண்டு போகவுமே இப்படி, யாரைவிட அறிவிலும் பூததயையிலும் பெரியவர்கள் இல்லையோ அப்படிப்பட்ட ரிஷிகள் சாஸ்திரங்கள் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம் மதத்தின் யுகாந்தரமான ஜீவசக்திக்கும் இதுவே உயிர் நிலையாயிருந்திருக்கிறது*.

உடம்பால் கடுமையாக உழைக்க வேண்டியவர்களுக்கு ஆசாரக் கட்டுப்பாடுகளையும் அதிகம் போட்டு இறுக்காமல், கொஞ்சம் ஸ்வதந்திரமாக விட்டு, பிராம்மணன் மாத்திரம் ஸௌக்யங்களைத் தியாகம் பண்ணி நிரம்ப

ஆசாரக் கட்டுப்பாடுகளை அநுஸரித்து 'ஐடியல் நிலையை முடிந்த மட்டும் வாழ்ந்து காட்ட வேண்டுமென்று சாஸ்திரங்கள் வைத்திருக்கின்றன.

---

*இது தொடர்பாக " தெய்வத்தின் குரல்" முதற்பகுதியில் 'தர்மங்களில் பாகுபாடு', 'வர்ண தர்மம்', 'அஹிம்சை' முதலிய உரைகளும், இரண்டாம் பகுதியில் 'வேதம்' என்ற உரையில் 'பிராம்மணரல்லாதார் விஷயம்' என்ற உட்பிரிவும், 'நாற்பது சம்ஸ்காரம்' என்ற உரையில் 'சிலருக்கு ஏன் இல்லை?' என்ற உட்பிரிவும் பார்க்க.

9.13-ஆதர்ச நிலையும் நடைமுறை ஸாத்தியமும்

ஸமூஹத்தில் ஸகல வர்க்கத்தினருக்கும் 'ஐடியல்' தர்மங்களை வைத்தால் ஒருவரும் அதைப் பின்பற்றாத நிலைதான் ஏற்படும் என்பதைப் புரிந்துகொண்டு நம் சாஸ்திரம் 'ரூல்'களை வித்தியாஸப்படுத்திக் கொடுத்திருக்கிறது. இதைக் கண்கூடாக மற்ற மதங்களின் விஷயத்தில் பார்க்கிறோம்.

யுத்தம் க்ஷத்ரிய தர்மமென்றும், அஹிம்ஸை பிராம்மண தர்மம் என்றும் வைத்த நம் மதஸ்தரைவிட, 'ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தையும் காட்டு'என்று எல்லாருக்கும் பொதுவாக வைத்தவரின் மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஜாஸ்தி யுத்தம் செய்து, தேசம் தேசமாக, கண்டம் கண்டமாகத் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பி, அணுகுண்டு வரையில் கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள்! 'க்ரைஸ்ட், புத்தர் மாதிரி பிரேமையை, அஹிம்ஸையை நம் மூல புருஷர்கள் எங்கே சொன்னார்கள்?' என்று நாமே சொல்லிக் கொண்டிருந்தாலும் historical fact [சரித்ர உண்மை] நாம்தான் பரம ஸாத்விகர்களாக, சாந்தர்களாக, எல்லா மதஸ்தரையும் அரவணைத்துக் கொண்டு போகிறவர்களாக இருந்திருக்கிறோமென்பது. இப்போதும் அந்த அணுகுண்டுக்காரர்களையே நாம் அஹிம்ஸா மார்க்கத்தால்தான் வெளியேறி ஸ்வதந்திரம் பெற்றதாகவும் பெருமையடித்துக் கொள்கிறோம். ஐடியலை

எல்லோருக்கும் ரூலாக வைக்காமல், குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வைப்பதாலேயே அதை அவர்கள் தனிப் பெருமிதத்தோடு, கவனத்தோடு ரக்ஷிக்கிறார்கள். இப்படிச் சிலர் இருப்பதைப் பார்த்து இந்த உத்தம உதாரணத்தாலேயே அந்த ஐடியலைத் தங்களுக்கு ரூலாகக் கொள்ளாதவர்களுங்கூட ஓரளவுக்கு அதைத் தாமாகவே எடுத்துக் கொண்டு பின்பற்றி, ஸமூஹம் முழுவதிலுமே அதன் 'ஸ்பிரிட்' பிரகாசிக்கும்படிப் பண்ணுகிறார்கள். இதனால்தான் மற்ற மத ஸமூஹங்களைவிட நம் ஸமூஹமே ஆதியிலிருந்து தர்ம வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து வந்திருக்கிறது.

திருஷ்டாந்தமாக, ஐடியல் அஹிம்ஸையை ஸகலருக்கும் வைத்த புத்தரின் மதத்தில்தான் இன்றைக்கு ஹிந்துக்களைவிட ஜாஸ்தி 'நான்-வெஜிடேரியன்'கள் இருக்கிறார்கள்! ஹிந்து மதத்தில் பிராம்மணனைத் தவிர மற்றவர்களுக்கு மாம்ஸ போஜனம் கூடாதென்று ரூலே இல்லாமலிருந்தும் இங்கேதான் ஜாஸ்தி வெஜிடேரியன்கள் என்பதாகயிருக்கிறது! பௌத்த மதஸ்தர்களிலோ இன்று பிக்ஷுக்கள் உள்பட எல்லோருமே மாம்ஸம் சாப்பிடுபவர்களாக இருப்பதை அந்நிய தேசங்களில் பார்க்கிறோம்.

பலவிதமான தொழில்களில் ஈடுபட்டுள்ள எல்லாருக்கும் ஏகப்பட்ட ஆசாரங்களைக் கொடுத்துக் கஷ்டப்படுத்தக்கூடாது என்ற தாக்ஷிண்யத்தினாலேயே ஜாதி ஆசாரங்கள் என்று வித்யாஸமாகப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஆரம்பித்தேன். அது திருக்குறளில் கொண்டு விட்டு விட்டது. நல்ல விஷயந்தான். திருவள்ளுவர் பரம வைதிகர் என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழவு முதலான தொழிலைச் செய்கிறவனிடம், `இத்தனை கவளத்துக்கு மேல் சாப்பிடாதே; அதுவும் இத்தனை நேரத்துக்கு முந்தியும் சாப்பிடாதே, இன்ன நேரத்துக்குப் பிந்தியும் சாப்பிடாதே; ஏகாதசியில் காயக் காயக் கிட; மூன்று வேளையும் குளி' என்றெல்லாம் பிராம்மண ஆசாரத்தைச் சொன்னால் அவன் எத்தனை கஷ்டப்படுவான்? இப்படி நல்லெண்ணத்தின் பேரில் சொன்னதையே,

‘பிராம்மணனுக்கு மாத்திரம் நிறைய ஆசாரமென்றால், அவன் மட்டும்தான் புண்யலோகம் போகும்படியாகப் பக்ஷபாதம் பண்ணியிருப்பதாகவே அர்த்தம்’ என்கிறார்கள்.

‘அஹிம்ஸையானது சித்த சுத்திக்கு ரொம்பவும் உபகாரம் பண்ணுகிறது என்கிறீர்கள். ஆனால் பிராம்மணனுக்கு மட்டும் அஹிம்ஸை விதி கட்டாயமானது, மற்றவர்களுக்கு இல்லை என்கிறீர்கள். அப்படியானால் பிராம்மணன் மாத்திரம் சித்த சுத்தி பெற்றால் போதும் என்று பக்ஷபாதம் பண்ணினதாகத்தானே ஆகிறது? ‘எருவுக்குத் தகுந்த பயிர்; உணவுக்குத் தகுந்த உயிர்’ என்று சொல்லிவிட்டு, பிராம்மணனுக்கு மட்டும் அஹிம்ஸா மரக்கறி போஜனம், மற்றவர்களுக்கு மாம்ஸம் பரவாயில்லை என்றால் இது ‘டிஸ்க்ரிமினேஷன் ‘ இல்லாமல் வேறென்ன?’ என்று கேட்கலாம்.

அஹிம்ஸா போஜனத்தால் ஸத்வ குண அபிவிருத்தி ஏற்படுவதைக்கொண்டு அதைச் சித்த சுத்திக்காகப் பொதுவில் விதிதித்திருக்கிறது. ஆனால் பகவானின் லீலையில் இந்த லோகத்திலேயே தர்ம ரக்ஷணார்த்தம் ராஜஸ, தாமஸ காரியங்கள்கூட நடக்க வேண்டியிருக்கிறது தப்பு செய்கிறவனைத் தண்டிக்க வேண்டியிருக்கிறது. தர்மத்துக்காக யுத்தம் பண்ணிகொன்று குவிக்கவும் வேண்டுமென்று தானே பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணினார்? இது ராஜஸ குணம்தான். உழுவது, கொத்துவது, வெட்டுவது முதலான கார்யங்களை ஸமூஹ க்ஷேமத்துக்காகப் பண்ண வேண்டியிருக்கிறது. இப்படிக் கடுமையாக உழைப்பவர்கள் அடித்துப் போட்டாற்போல தூங்கவேண்டும். இது தாமஸம்தான். ஆனாலும் லோக க்ஷேமார்த்தமாக ஏற்பட்ட இந்தக் கார்யங்களைச் செய்யும்படிப் பிறப்பினாலேயே ஈஸ்வராக்ஞை பெற்றிருப்பவர்கள் இந்த ராஜஸ தாமஸங்களை மேற்கொள்வதால் அது அவர்களுக்கு தோஷமாகாது.

ஸமூஹத்துக்காகச் செய்வதால் அந்தத் தியாகத்தினாலேயே, செய்கிற கார்யம் புண்யமாகிறது. இவர்கள் ராஜஸ, தாமஸ குணத்துக்கு அநுகூலமான அசைவ போஜனம், பழையது மாதிரி ஆசார விரோதமான சாப்பாட்டு தினுசு

முதலியவற்றைச் சாப்பிடுவதிலுள்ள தோஷங்கூட அவர்களால் ஸமூஹத்துக்கு ஏற்படுகிற உபகார புண்யத்தில் அடிபட்டுப் போய்விடும்.

"எருவுக்கு தகுந்த பயிர். உயிரும் பயிர் மாதிரிதான். அதனால் ஆஹார விஷயத்தில் ரொம்ப கவனம் வேண்டும். உயிர் என்றால் சரீரம் மூச்சு விடுவது மட்டுமில்லை. மநுஷ்யனுக்கு மனஸில் உயர்வு இல்லாவிட்டால் அவன் உயிரிருந்தும் பிணம்தான். மனஸில் உயர்வுதான் ஜீவனுக்கு உயிர்நாடி" என்பெதல்லாம் ஸரிதான். ஆனால் மனஸின் உயர்வை சரீரத்தில் செலுத்தி ஸமூஹத்துக்கான பலதரப்பட்ட கார்யங்களையும் பண்ணவேண்டியிருக்கிறதே! ஒருத்தன் தர்ம ரக்ஷணத்துக்காகக் கத்தியைப் பிடித்துக் கொண்டு சண்டை போட வேண்டியிருக்கிறது. தர்மரக்ஷணை என்பது மனஸின் உயர்த்தி. அதுவே இவனுடைய கார்யத்தில் வருகிறபோது யுத்தம் என்று ஹிம்ஸை மாதிரி ஆகவேண்டியிருக்கிறது. ஆனால் இவன் ஜன ஸமூஹம் தர்மத்தில் அழிவடையாமல் காப்பாற்றுகிற உயர்ந்த நோக்கம் கொண்டவன். **"க்ஷதாத் கில த்ராயதே"*** – ஜன ஸமூஹம் துஷ்டர்களால் அழியாமல் காப்பாற்றுகிறான் அல்லவா? -அதனாலேயே க்ஷத்ரியன் என்று இவனுக்குப் பெயர். இந்த உயர்ந்த நோக்கம் இவனுக்குப் பெயர். இந்த உயர்ந்த நோக்கம் இவனுக்கு இருப்பதால், இவனுக்கு யுத்தத்தில் உத்ஸாஹமும் நல்ல சரீரக் கட்டும் ஏற்படுவதற்காக மது மாம்ஸாதிகளை ஓரளவு சாப்பிட்டுவிட்டுப்போகட்டும். அது அவன் சூழ்நிலையில் அவனுக்குரிய தொழிலால் அவன் பெறுகிற ஆத்ம வளர்ச்சியைக் கெடுக்காது என்றிப்படி சாஸ்திரம் வைத்திருக்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட க்ஷத்ரியர்களிலும் ராஜரிஷிகள் என்று கொண்டாடும்படியாக அஹிம்ஸா தர்மம் முதலான எல்லாவற்றிலும் சிரேஷ்டர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். அஹிம்ஸை என்றவுடனேயே நினைவுக்கு வருகிற புத்தர், மஹாவீரர் இரண்டு பேருமே க்ஷத்தரியர்கள்தானே? புராண இதிஹாஸங்களைப் பார்க்கும்போது அநேக ராஜாக்கள் விருத்தாப்பியத்தின் போது ராஜ்யத்தைப் புத்திரனிடம் ஒப்படைத்துவிட்டு, காட்டுக்குப் போய் தபஸ் பண்ணினார்களென்று தெரிகிறது. அப்போது இவர்கள் சாக போஜனம்தான் பண்ணியிருக்க வேண்டும். 'ஐடியல்'

ஒன்று எல்லாருக்கும் விதியாயில்லாமல் ஒரு பிரிவுக்கு மட்டும் ரூலாக இருந்ததால், தானாகவே மற்றவர்களுக்கும் அதில் பற்றுதல் ஏற்பட்டு அவர்களும் அதை எடுத்துக்கொண்டு, அந்த ஐடியல் ரூல் மற்றவர்களிடமும் பிரகாசித்ததுதான் இதற்குக் காரணம்.

தேசத்தில் பொருளாதார ஸுபிக்ஷம் ஏற்பட வேண்டாமா? இதற்குச் சிலபேர் வியாபாரம், வியவஸாயம், கோரக்ஷை [பசு வளர்ப்பு] செய்ய வேண்டும். வியாபாரத்துக்காகக் கடல் கடந்தும் போக வேண்டியிருக்கும். அப்போதுதான் பொருளாதார மேம்பாடு தேசத்துக்குக் கிடைக்கும். அருளை முக்யமாகச் சொன்னாலும் பொருளையும் வேதமதம் மறக்கவில்லை. அதற்கு எவ்வளவு இடமோ அதைக் கொடுத்துத் தானிருக்கிறது, நாலு புருஷார்த்தத்திலேயே 'அர்த்தம்' இருக்கிறது; அறம், பொருள் என்கிறது அதுதான். லோக வாழ்க்கையை ஹிந்துமதம் அலக்ஷ்யப்படுத்துகிறது என்று சொல்வது நியாயமே யில்லாத குற்றச்சாட்டு. நம் மதத்தில் பொருள் வளர்ச்சிக்கென்றே நாலு வர்ணத்தில் ஒன்றை வைத்திருக்கிறது. ஸமூஹத்தில் பொருள் வளர்ச்சியை உண்டாக்குவதான தர்மத்தைப் பண்ணும் இவனுக்கு வைச்யன் என்று பெயர். 'விச்', 'விச்வம்', 'வைச்யன்' எல்லாவற்றுக்கும் 'ரூட்' ஒன்றுதான். இவன் லோகம் பூராவும் போய்ப் பொருள் தேடி வரவேண்டியவன். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது இவனுக்கு வைத்த தர்மம். இவனுக்காகக் கடல் வாணிப்பத்தைப் பெருக்கித் தந்ததில் க்ஷத்ரியர்களான ராஜாக்களுக்கும் பெருமை ஏற்பட்டது. ஸமுத்ரத்தில் பல நாட்கள் போக வேண்டியவனை, பல தேசங்களுக்குப் போக வேண்டியவனை வெஜிடேரியனாகத்தான் இருக்க வேண்டுமென்றால் முடியமா? இவனுடைய சூழ்நிலை, காரியம் இவற்றைப் பொருத்து இவனுக்கும் சாக போஜனந்தான் என்று வைக்காமல் இவனால் ஸமூஹம் பெறுகிற உதவியினாலே இவனுடைய மாம்ஸ போஜன தோஷம் போகட்டுமென்று generous -ஆக இவனுக்கு 'ரூல்' போட்டிருக்கிறது. ஆனாலும் என்ன பார்க்கிறோம்? வைச்யர்களில் வடக்கே அநேக ராஜ்யங்களின் பனியாக்கள், தெலுங்கர்களான கோமுட்டிகள், தமிழ் நாட்டுச் செட்டிமார்களில் சுத்தசைவர்கள் ஆகியோர் வெஜிடேரியன்களாகவே இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆதியில் பல தேசங்களுக்குப் போய் நன்றாகச்

செல்வம் ஸம்பாதித்து வந்தபின் வைச்யர்களும் வயஸுக்காலத்தில் ஊரோடு ஸெட்டில் ஆனபோது, தாங்களாகப் பிரியப்பட்டு இங்கே ஐடியலாக பிராம்மணன் பின்பற்றிய அஹிம்ஸா போஜனத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ராஜாக்களைப் போல வ்ருத்தாப்யத்தில் காட்டுக்குப் போய்விடவில்லை. வீட்டிலேயேதான் இருந்து கொண்டிருந்தார்கள். அதனால் இவர்களுடனேயே வஸித்து வந்த இவர்களுடைய பின்தலைமுறையினருக்கும் இவர்களுடைய ஆஹார நியமம் இளவயஸ தொட்டே வந்திருக்கிறது. அதனால் அப்புறம் இவர்களுக்கு சைவபோஜனமே பிறந்தநாள் தொட்டுக் குலவழக்காகியிருக்கிறது.

இப்படியேதான் நாலாம் வர்ணத்திலும் உடல் வருந்தி உழைத்து ஸமூஹத்துக்கு உபகாரம் பண்ண வேண்டிய அவனுக்கு அவனுடைய சூழ்நிலையில் வெஜிடேரியனிஸத்தை வைக்காமல் விட்டிருக்கிறது. ஆனால் காலப்போக்கில் அந்த வர்ணத்தாரிலேயே பலர் உடம்பு வேலைசெய்கிறவர்களாக இல்லாமல், வியாபாரம் வியவஸாயம் முதலியவற்றில் ஈடுபட்டு வளர்ச்சி அடைந்தபோது, தாங்களாகவே சைவ ஆஹாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வடக்கேயும் சரி, தெற்கேயும் தஞ்சாவூர் ஜில்லாவில் அநேக வேளாளர்கள், திருநெல்வேலியில் பிள்ளைமார் போன்றவர்களும் சரி, பிராம்மணன்கூடத் தோற்றுப்போய் விடுவான் என்கிற அளவுக்குப் பரம சுத்தமான மரக்கறி போஜனம், வ்ரதாநுஷ்டானம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் 'ஆப்ஷன'லாகச் சிலருக்கு வெஜிடேரியனிஸத்தில் பிடித்தம் ஏற்படுவதற்குக் காரணம் நாலு வர்ணங்களில் பாக்கியுள்ள பிராம்மணனுக்கு அதைக் 'கம்பல்ஸரி'யாக வைத்திருப்பதுதான். இவன் வேதத்தை ஓதியும் ஓதவித்தும் ரக்ஷிக்க வேண்டியவனாதலால் மந்திர சுத்தியை முன்னிட்டுப் புலால் உண்ணக்கூடாது என்று வைத்தார்கள். இதன் திரை கடல் ஓடியும் திரவியம் சேர்க்கவும் கூடாது என்று ரூல். இவனுக்கு தரித்ரந்தான் சாஸ்திரம் விதித்திருப்பது. இவன் அந்நிய தேசங்களுக்குப் போகப்படாது. போனால் பிரஷ்டனாகி விடுவான். ஏன்? வேதரக்ஷணத்தின் purity கெட்டுப்போய் விடுகிற ஹேது உண்டாகிவிடும் என்பதால்தான். வெளிநாடுகளுக்குப் போனால்

அவற்றின் பழக்கவழக்கங்கள் இவனுக்கு ஏற்பட்டுவிடும். ஸ்வதர்மமான பழக்கவழக்கம் போய்விடும். வெளி தேசத்துக்குப் போய்விட்டுத் திரும்பிவந்து, இப்படிப்பட்ட விதேசப் பழக்கங்களை ஸ்வஜாதி பந்துக்களிடம் கலந்து, அவர்களால் ஆகிற வேத ரக்ஷணையைக் கெடுத்துவிடப் போகிறானே என்றுதான் பிரஷ்டம் பண்ணச் சொன்னது.

இவனுக்குக் கம்பல்ஸரியாக வைத்த அநேக ஆசாரங்களும் வ்ரதாநுஷ்டானங்களும் மற்றவர்களையும் ஆகர்ஷித்து அவர்கள் ஒரு ஸ்டேஜுக்குப் பிற்பாடு ப்ரியப்பட்டு தாங்களும் அவற்றை adopt பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியே [அதாவது வர்ணப் பாகுபாடு போலவே] தான் பிராம்மணனுக்கான ஆச்ரம விபாகமும், பால்ய தசையில் இருக்கிறவனைப் பட்டினி கிடக்கச் சொல்லலாமா என்று பிரம்மச்சாரிக்கு ஆஹாரத்தின் அளவில் கட்டுப்பாடு பண்ணாமல் விட்டிருக்கிறது. அளவில்தான், quantity -யில்தான்; quality -யில் இல்லை. அவனும் சுத்த வெஜிடேரியன் ஆஹாரந்தான் சாப்பிட வேண்டும். ஆனாலும் வ்ரதம், உபவாஸம் என்றில்லாமல் நிறையச் சாப்பிடலாம். இவன் செய்யவேண்டிய வித்யாப்யாஸத்தையும் குருகுலவாஸத்தையும் பொருத்து இவனக்கென்று தர்மங்கள். கிருஹஸ்தனக்கென்று பல தர்மங்கள். அதற்கு வேறாக ஸந்நியாஸிக்கு ரூல்கள். குழந்தை குட்டிகளைக் காப்பாற்றுவது, பத்தினியின் கற்பை ரக்ஷிப்பது, குடும்பத்தின் மானத்தைக் காப்பாற்றுவது எல்லாமும் க்ருஹஸ்தனின் கடமையில் வரும். ஸமூஹத்துக்கு ஆற்றவேண்டியதாகவும் இவனுக்குப் பல பொறுப்புகள் இருக்கின்றன. உத்யோகம், சொத்து முதலியன இல்லாத ஸந்நியாஸிகளையும் இவன்தான் ஆதரிக்கிறான். இப்படி மற்றவர்களின் ரக்ஷணையைச் செய்யும்போது அவர்களுக்காக fight பண்ணவும் [போராடவும்] ஸந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அதனால்தான் இவனுக்கு அஹிம்ஸையை ‘ஸ்டரிக்ட்’ ஆக வைக்கவில்லை. அஹிம்ஸா போஜனத்தைச் சொல்லியிருந்தாலும், துஷ்டர்களை தண்டிப்பது, பூச்சி பொட்டுகளை அடிப்பது ஆகியவையெல்லாம் கிருஹஸ்தனுக்கு அநுமதித்திருக்கிறது. லோகம் நன்றாக இருக்க இவன் யாகம் பண்ண வேண்டியவனாயிருப்பதால் அதில் பலியையும் அநுமதித்திருக்கிறது.

ஸந்நியாஸி விஷயம் வேறு. அவனுக்குப் பெண்டாட்டி, பிள்ளைகுட்டி இல்லை. ஸமூஹ விசாரமும் இல்லை. லோகம் எப்படிப் போனாலும் அதைப் பற்றி அவனுக்குப் பொறுப்பு ஒன்றுமில்லை. பரமாத்ம சிந்தனையாகவே இவன் இருப்பதால், பிரேம ஸ்வரூபமான அந்தப் பரமாத்மாவின் அருள் தன்னால் இவன் வழியே ஸர்வஜனங்களுக்கும் பாய்ந்து நல்லது செய்ய வேண்டுமே தவிர, இவனாகக் கார்யத்தில் இறங்கி ஸமூஹத்துக்கு எதுவும் செய்ய வேண்டுமென்பதில்லை. இவன் பரமாத்மாவை அடைகிறதேதான் ஸமூஹத்துக்கும் செய்கிற உபகாரம். அதனால் இவனுக்கு துஷ்ட சிக்ஷணம், யாகம் ஆகிய எதையும் கடமையாகக் கொடுக்கவில்லை. பரிபூர்ண அஹிம்ஸா தர்மமே இவனுடைய தர்மம் என்று வைத்திருக்கிறது. ஹிந்து மதத்தின்படி ஒரு தினுஸிலும் ஹிம்ஸைக்குக் காரணமாக இல்லாமல், 'ஒரு இலையைக் கூடக் கிள்ளக்கூடாது' என்கிற அளவுக்குத் தீவிரமான அஹிம்ஸைக்கு அதிகாரியாக வைத்திருப்பது ஸந்நியாஸியைத்தான்.

இப்படி வர்ணமென்றும் ஆச்ரமமென்றும் தர்மங்களைப் பிரித்துக் கொண்டதால்தான் மற்ற எந்த மதஸ்தர்களாலும் முடியாத மிக மிக உயர்ந்த கொள்கைகளை நம் மதஸ்தர்களில் ஏராளமானவர்கள் அநாதிகாலம் தொட்டு அழியாமல் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். மற்ற மத புருஷர்களின் உபதேசத்தையே இன்றைக்கு இருக்கிற நம்மவர்கள் எடுத்துக் கொண்டு, ஆனால் அவர்களைப்போல் ஆத்ம ஸம்பந்தமாகவும் இல்லாமல், பெரும்பாலும் அரசியல் நோக்கத்திலேயே, "எல்லாரும் ஒன்றுதான், எல்லாரும் எல்லாக் காரியங்களையும் செய்யலாம்" என்று ஆரம்பித்து ஒவ்வொரு உயர்ந்த கொள்கையாக விட்டுவிடும்படிப் பண்ணி, தர்மத்தில் குழப்பம் உண்டாகி வருகிறார்கள்.

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்பதிலே இப்படி அதிகார பேதம் பண்ணி எவனோ ஒருத்தனுக்கு பரம உத்தம தர்மத்தை விதியாக வைக்கிற தாத்பரியம் அடங்கியிருக்கிறது. அத்தனை பேரும் நல்லவனாகத்தானிருக்க வேண்டுமென்றால் முடியாது; ஒரு நல்லவன் இருந்தாலே அவனை உத்தேசித்து அத்தனை பேரும் மழை பெய்துவிடுகிறது என்று பழமொழி சொன்னார்கள். ஸமூஹத்தில் ஒரு பிரிவு

உத்தம தர்மத்தை அநுஷ்டித்தாலே போதும், அதன் பலன் அத்தனை பிரிவுகளையும் சேர்ந்துவிடும். சிலருடைய அநுஷ்டானத்தாலேயே ஸகலருக்கும் தர்ம மழை, அன்பு மழை, ஆண்டவனுடைய அருள் மழை கிடைத்து விடும்படியாக வர்ணாச்ரம விபாகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அவனவன் எந்தக் கர்மத்திலிருக்கிறானோ அதற்கேற்க அவனவன் தர்மம், ஆசரணைகள் இருக்கும். ஒவ்வொருதனுக்கும் தன்னுடைய கர்மத்தை மனஸில் காமம், க்ரோதம் அதிகம் இல்லாமல், அதாவது ஆசை-த்வேஷம் அதிகமில்லாமல், செய்யவேண்டும். இப்படிச் செய்தால் முதலில் வெளிப்பார்வைக்கு ஹிம்ஸை முதலானவை ஸ்வதர்மமாக இருக்கிறவனுக்குக்கூடப் போகப்போக அஹிம்ஸை முதலான தர்மங்களில், உயர்ந்த பண்புகளில், உயர்ந்த கொள்கைகளில் தானாகப் பிடிப்பு உண்டாகி அவற்றை அநுஸரிக்கத் தொடங்கி விடுவான். பிரத்யக்ஷமாக நம் தேசத்தில் இப்படி நடந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்.

கீதாதி சாஸ்திரங்களில், "மநுஷ்யனாய்ப் பிறந்தவர்கள் தத்தமது கர்மாவில் கண்ணும் கருத்துமாயிருந்தே உயர்ந்த ஸித்தியை அடைகிறார்கள். தன்னியல்பாகப் பக்குவமாகி இதைவிட உயர்ந்த தர்மத்துக்கு போக வேண்டுமேயொழிய, பிறரது தர்மம் எத்தனை உசத்தியானதாய்த் தோன்றினாலும் அபக்குவ நிலையில் அதற்குப் போவதால் ச்ரேயஸ் வந்துவிடாது. ஸ்வதர்மத்தில்தான் ச்ரேயஸ். ஸ்வதர்மத்தைப் பண்ணியே செத்துப்போனாலும்கூட அதுதான் ச்ரேயஸ்" என்றெல்லாந்தான் சொல்லியிருக்கிறது.

ஸ்வே ஸ்வே கர்மண்பிரத: ஸம்ஸித்திம் லபதே நர: |

[கீதை 18.45]

ச்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் |

[கீதை 18.47 ; 3.35]

ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: |

[கீதை 3.35]

இப்படியாக அதிகார பேதப்படி நாலு வர்ணத்தையும் நாலு ஆச்ரமத்தையும் ஒட்டி ஏற்பட்டிருக்கும் வித்யாஸமான தர்மங்களைத்தான் பின்பற்ற வேண்டுமே தவிர, எல்லாருக்கும் ஒன்றுதான் தர்மம் என்று பண்ணப்படாது என்பதிலேயே நம் சாஸ்திரங்கள் உறுதியாயிருக்கின்றன.

மேல் பார்வைக்கு இப்படி பண்ணின ஹிந்து சாஸ்திரகாரர்கள் கருணையில்லாதவர்கள் என்றும், எல்லோருக்கும் ஒரே தர்மத்தைச் சொன்ன புத்தர், ஜீஸஸ் போன்றவர்கள்தான் கருணையுள்ளவர்கள் என்றும் தோன்றினாலும், நடைமுறையில் பார்த்தால், அவர்கள் அத்தனை பேருக்கும் வைத்த உத்தம தர்மங்களைப் பண்ணுகிறவர்கள் நம்முடைய ஹிந்து மதத்தில்தான் கணிசமாக இருக்கிறார்களே தவிர, அவர்களுடைய சொந்த மதஸ்தர்களில் மிகப் பெரும்பாலோர் இவற்றைக் கழித்துக் கட்டியிருப்பதையே பார்க்கிறோம். பலனைப் பார்த்தால், லோகத்துக்கு உண்டான நலனைப் பார்த்தால், நம்முடைய சாஸ்திரங்களைச் செய்த ரிஷிகளையும் மநு முதலான பெரியவர்களையுந்தான் கருணையுள்ளவர்களென்று சொல்ல வேண்டும்.

---

*காளிதாசரின் 'ரகுவம்சம்' 2.53.

9.14-அதிகார பேதமின்மையின் தோஷங்கள்

அதிகாரபேதம் பண்ணி வைக்காதவர்கள்தான் தங்கள் மதஸ்தர்களுக்கு அநேக தோஷம் ஏற்படுவதற்கு இடம் கொடுத்து விட்டிருக்கிறார்கள். எப்படியென்று சொல்கிறேன். முதலாவது தோஷம், ஸகல ஸாமானிய ஜனங்களாலும் இந்தக் கடுமையான நெறிகளைப் பின்பற்ற முடியாததில் அவர்கள் இவற்றிலிருந்து விலகிப் போவதால் தங்களுடைய மதக் கொள்கையை விட்ட தோஷத்துக்கு ஆளாகிறார்கள்.

இப்போது அஹிம்ஸையை உதாரணம் சொன்னேனே, அதுமாதிரி இன்னொன்றும் சொல்கிறேன். ஸத்யத்துக்குக்கூட (அதிகாரி பேதமில்லாவிட்டாலும்) ஸந்தர்ப பேதம் இருப்பதை நம் சாஸ்திரங்கள் அங்கீகரிக்கின்றன. ஸத்யத்தைச் சொல்வதே ஒரு நிரபராதிக்குக் கெடுதலை உண்டாக்குமானால் அப்போது வாக்கு ஸத்யத்தைவிட, பூதஹிதத்தைச் செய்யும் பிரமைதான் பெரிய ஸத்யம் என்பது நம் சாஸ்திரம். திருஷ்டாந்தமாக, பத்துப் போக்கிரிகள் ஒரு பெண்ணைத் துரத்திக்கொண்டு வந்து, அவர்கள் நம்மிடம், "அந்தப்பெண் எங்கே போனாள் தெரியுமா?" என்று கேட்டால், அந்த ஸந்தர்ப்பத்தில் "தெரியாது" என்று சொல்வதுதான் ஸரி என்பது நம் மதக் கோட்பாடு. எல்லாரும் எப்போதும் நிஜமே பேசவேண்டும் என்று சொல்லும் மதங்களிலிருப்பவர்கள் இம்மாதிரி ஸமயத்தில் அந்தப் பெண்ணைக் காட்டிக் கொடுத்துவிடும்படியாகவே ஆகும். இல்லாவிட்டால் மதக் கொள்கையை மீறின பாவம் வந்துவிடும்!

டிப்ளமஸி' என்பதற்காக ராஜாங்கத்தார் அநேக உண்மைகளை மறைக்கும்படியாகவும், மாற்றிச்சொல்லும்படியாகவும் ஏற்படுவதுண்டு. இப்படிச் செய்யாவிட்டால் தேசத்துக்கு ஹானி உண்டாகும்; அல்லது சட்டத்தை நடத்துவதற்கு அவசியமான ஸர்க்கார் என்ற அமைப்பிலேயே விரிசல் ஏற்பட்டுவிடும். காந்தி மாதிரியானவர்கள் இதெல்லாம்கூடத் தப்பு என்று சொன்னாலும், அப்புறம் நமக்கு ஸ்வதந்திரம் வந்த பிற்பாடு, சில விஷயங்களிலாவது 'காந்தீயன் ஸத்யம்' ஒப்புக் கொள்ளாத 'டிப்ளமஸி' யை அநுஸரிக்கும்படிதான் ஆகியிருக்கிறது. மத புருஷர்களுக்கெல்லாம் மேலேதான் இப்போதும் காந்தியைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செய்கிறது அவர் கொள்கைக்கு வேறாய் இருக்கிறது என்னும்போது 'ஹிபாக்ரிஸி' என்ற தோஷம் ஏற்படுகிறது. டிப்ளமஸியில் ரொம்பவும் கீழ் லெவல்களுக்கு War-time-ன் [உலக யுத்தத்தின்] போது போன அநேக அந்நிய தேச ராஜாங்கங்கள் அவர்களுடைய மதங்கள் சொன்ன ஸத்யக் கொள்கையை மீறியே போயிருக்கின்றன. நம் தேசத்திலோ 'அர்த்த சாஸ்திரம்' என்றுள்ள ராஜரீதியில் முதலிலேயே ராஜதந்திரம் என்பதாக அவசியமான ஸந்தர்ப்பத்தில் இப்போது சொல்கிற 'டிப்ளமஸி'யை அநுமதித்திருப்பதால்,

நம்முடைய ராஜாக்களுக்கு ஸந்தர்ப நெரிசலில் ஸத்யத்தை ஒளிக்க வேண்டியிருந்தபோது சாஸ்திர விரோதமாகப் போகிற தோஷமோ, ஹிபாக்ரிஸி தோஷமோ ஏற்படவில்லை. இன்னின்ன ஸந்தர்ப்பத்தில் ஸத்யத்துக்கு விலக்கு தரலாம் என்று வகைப்படுத்தி வரம்புகட்டி சாஸ்திரத்தில் வைத்துவிட்டதாலேயே அவற்றில் மட்டுமே அப்படிச் செய்வது, மற்றவற்றில் பரம ஸத்யமாக நடந்து கொள்வது என்று நம் ராஜாக்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இப்படி விதிவிலக்காகச் சிலதைச் சொல்லாமல், விதிவிலக்கே கிடையாது என்று வைத்த தேசங்களிலோ, ஏதோ சிலதில் என்றில்லாமல், அநேக விஷயங்களில் ஸத்ய விரோதமாகப்போன ராஜாக்களும் ராஜாங்கங்களும் தோன்றுவதும், – கிளர்ச்சி, புரட்சி என்று ஏற்படுவதுமாய் இருந்திருக்கிறது. ஹிஸ்டரியைப் பார்த்தால் தெரியும். ஆனால் இந்த அம்சத்தைக் கவனிக்காமலே அர்த்த சாஸ்திரம் பண்ணின சாணக்கியனைக் கபடி, தந்திரசாலி unscrupulous என்றுகூட விமர்சிப்பதைப் பார்க்கிறோம்!

லக்ஷ்ய நிலையை எல்லோருக்கும் நடைமுறையாக வைப்பதில் இரண்டாவது தோஷம் என்னவென்றால், தாங்கள் மதத்தின் கொள்கைக்கு விரோதமாகப் பண்ணுகிறோமென்று இருக்கக்கூடாது என்பதற்காக, இப்படி விரோதமாகப் போகிறவர்கள் மூலக்கொள்கையையே தங்களுக்கு ஸாதகமாகத் திரித்து அர்த்தம் பண்ணுவது! "நீங்கள் எப்படி மாம்ஸம் சாப்பிடலாம்?" என்று பௌத்தர்களிடம் ஹிந்துக்கள் கேட்டபோது அவர்கள் தங்களுடைய மதக்கொள்கையையே திரித்து, "பிராணிக்கு நாங்கள் நேராக ஹானி செய்யக்கூடாது என்பதுதான் எங்களுடைய புத்தர் சொல்லும் அஹிம்ஸா தர்மம். நாங்கள் ஹானி உண்டாக்காமலே வேறெவனோ கசாப்புக்கடைக்காரன் விற்பதை நாங்கள் சாப்பிடுவதில் அஹிம்ஸைக்கு தோஷமில்லை"என்று சொல்வதுண்டாம். இப்படிப் பலபேர் சொல்லிச் சொல்லி ஒரு மதத்தின் மூலக் கொள்கைக்கு விரோதமாகப் பண்ணுவதே அதன் கொள்கையாகப் பிற்பாடு ஆகிவிடுகிறது; அதாவது மதத்தின் ரூபமே திரிந்து போகிறது. இது எல்லாவற்றையும்விடப் பெரிய தோஷம்.

இத்தனை தோஷங்களும் நமக்கு வராமல், அதிகாரி பேதம் செய்து தர்மங்களை வித்யாஸப்படுத்திக் கொடுத்திருக்கும் நம் மத சாஸ்திரங்கள் நம்மையும் ரக்ஷித்து, உத்தம தர்மங்களையும் திரியாமல் ரக்ஷித்து வந்திருக்கின்றன. நாமோ அதிகாரி பேதமே வேண்டாம் எல்லாம் ஸமம் என்கிறோம். அதோடு நமக்குப் பிடித்த இந்த அபேத வாதம் தான் நம் மதத்தின் மூலக் கொள்கையே; அதில் ஜாதி வித்யாஸமே கிடையாது என்று சொல்லி, அதற்கு 'நல்ல பெயர்' உண்டாக்குகிறோம்! இதுவும் மூல மதத்துக்கு விரோதமாகப் போவதோடு நிற்காமல், இந்தப் போக்குத் தான் மதத்தின் ஒரிஜினல் ரூபமே என்று திரித்துக் காட்டும் தோஷத்தில் சேர்ந்ததுதான்.

எடுத்துச் சொல்வதற்கு எவருமில்லை! சொன்னால் புரிந்து கொள்வார்கள்; ஆயிரத்தில் ஒருவராவது ஒப்புக் கொள்வார்கள்; சற்று முன் நான் சொன்ன 'நல்லார் ஒருவர் உளரேல்' கொள்கைப்படி இந்த அளவுக்காவது நான் திருப்திப்படலாம் என்றுதான் இவ்வளவும் சொல்வது.

"அவனவன் தனக்கான கர்மாவைக் கண்ணும் கருத்துமாய்ப் பண்ணினாலே உயர்ந்த ஸித்தியை அடைகிறான். என்னும் ஸ்வதர்மப்படி பண்ணும் கர்மா ஈச்வரனுக்கு அர்ச்சனையாகி அவனுக்கு சித்தியை தருகிறது" என்று பகவான் தீர்மானமாக சொல்லியிருப்பதை [கீதை 18.45-46] மறந்து இப்போது மதாபிமானமுள்ளவர்களே சீர்திருத்தம் பேசுகிறார்கள். அவரவர் கர்மாவைப் பொருத்தே ஆசாரம் மாறுவதால் இங்கே கர்மா என்கிறபோது அதிலேயே அதைச் செய்பவனுக்கான ஆசாரமும் அடங்கி விடுகிறது.

9.15-விதி விலக்கில்லாமையின் விளைவுகள்

சாஸ்திர விதிகள் சிலவற்றுக்கு சாஸ்திரத்திலேயே விலக்குத் தந்திருப்பதும் மநுஷ்ய மனோபாவத்தைப் புரிந்து கொண்டு, நீக்குப்போக்கோடு அதை அபிவிருத்தி அடையப்பண்ணுவதற்குத்தான். ஸத்யம், அஹிம்ஸை மாதிரியான பெரிய தர்மங்களை, கொள்கைகளைக்கூட அதைவிடப் பெரிய ஸத்யமான ஒன்றுக்காக, ஒரு நிர்பந்தத்தில் கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும் நம் சாஸ்திரம் இடம் தருகிறது. 'விட்டு கொடுப்பது' என்று வெளியிலே

தோன்றினாலும், உள்ளே பார்த்தால் இதுதான் உண்மையில் தர்மத்தின் 'லெட்டரை 'மட்டுமில்லாமல் 'ஸ்பிரிட்'டைக் காப்பாற்றிக் கொடுப்பது என்று தெரியும். திருஷ்டாந்தமாக ஒரு அபலை ஸ்த்ரீயைப் போக்கிரிகளிடமிருந்து ரக்ஷிக்க வேண்டியபோது 'வாய் ஸத்ய'த்துக்கு ஒரு 'அமென்ட்மென்ட்' போட்டு

"ஸத்யம் பூதஹிதம்"

- எது ஜீவ ஜந்துக்களுக்கு நல்லது பண்ணுமோ அதுதான் ஸத்யம் - என்று அதன் ஸ்பிரிட்டைக் காட்டி சாஸ்திரமாக எழுதி வைத்தார்கள்.

எதற்கும் 'எக்ஸெப்ஷன்' உண்டு. இதைப் பார்க்காமல் ரொம்பவும் தீவிரமாக ஒரு ரூலை ஒருவர் சொன்னால் அப்புறம் அவரே அதற்கு மாறாகப் பண்ண வேண்டிய எக்ஸெப்ஷனலான ஸந்தர்ப்பம் வருகிறபோது என்னவோ போலாகிறது.

காந்தி ஒரேயடியாக அஹிம்ஸை, அஹிம்ஸை என்றார். அவரே ஒரு ஸமயம் ஒரு கன்றுக்குட்டி உயிர் போகாமல் ரொம்பவும் அவஸ்தைப்பட்டபோது அதற்கு ஒரு 'பாய்ஸன்' மருந்தைக் கொடுத்து உயிர் போகும்படிப் பண்ணினார். அவர் ஏற்கெனவே தீவிர அஹிம்ஸாவாதம் பண்ணியதாலேயே அப்போது பல பேர், "அப்பேர்ப்பட்டவர் இப்படி கோஹத்தி பண்ணிவிட்டாரே!" என்று கண்டனம் தெரிவித்தார்கள்.

இன்னொன்று கூடப் பண்ணினார். ஒரு ஸமயம் தேசத்திலே பெரிய பஞ்சம் வந்தது. அப்போது எல்லா மாகாணத்துப் பிரதிநிதிகளும் அப்போதிருந்த டில்லி ராஜாங்கத்திடம் ஜாஸ்தி உணவுப்பண்ட உதவி வேண்டுமென்று ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்கள். காந்தியும் அங்கே 'அட்வைஸ் 'பண்ணுவதற்காக இருந்தார். அப்போது அவர் சென்னை மாகாணத்திலிருந்தவர்களும் இப்படிக் கேட்கிறதைப் பார்த்து, "சுற்றி ஸமுத்ரம் இல்லாத யு.பி.க்காரர்கள், எம்.பி.க்காரர்கள்தான் அழுகிறார்களென்றால், மூன்று ஸமுத்ரங்களும் மூன்று பக்கம் சுற்றிக் கொண்டிருக்கிற, 'மெட்ராஸ் ஸ்டேட்'டைச் சேர்ந்த நீங்களும் கூடச்சேர்ந்து அழுவதாவது?" என்றாராம்!

என்ன அர்த்தமென்றால், "ஸமுத்ரத்தில்தான் நிறைய மத்ஸ்யம் கிடைக்குமே, பிடித்துத் தின்னுங்களேன்!" என்று அர்த்தம்.

அவர் போனவிட்டு [காலமான பிறகு] நேருவானால் "பாகிஸ்தான் 'அக்ரஷன்' (ஆக்கிரமிப்பு) செய்தால் நாம் படையெடுப்பதற்கு பாபுவிடமிருந்தே அநுமதி வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்!

சாஸ்திர ரூல் டிஸ்க்ரிமினேஷன் செய்கிறது என்று சொல்லிக்கொண்டு எல்லாருக்கும் பொது ரூல் பண்ணினவர்கள் தங்கள் ரூலில் சாஸ்திரம் காட்டுகிற நீக்குப் போக்குக்கூட இல்லாமல் ரொம்பவும் தீவிரமாக ஆரம்பிப்பதையும் கடைசியில் சாஸ்திரம் சொல்கிறபடியே அதிகாரபேதம், ஸந்தர்ப பேதம் பார்த்து அதை இளக்கிக் கொள்ளும்படியாவதையும் பார்க்கிறோம். அல்லது இளக்கிக் கொள்ளாதபோது அந்த ரூலை அவர்களுடைய 'ஃபாலோயர்'கள் காலக்கிரமத்தில் அடியோடு விட்டுவிடும் படியாகிறது. இவற்றைக் காட்டுவதற்காகவே புத்தரையும் காந்தியையும் சொன்னேன். புத்தர் அவதாரந்தான் காந்தி என்றுகூடச் சொல்கிறார்களே!

எதையும் எல்லாருக்கும் பொதுவாய் வைப்பதற்கில்லை என்பதால் வர்ணாச்ரமப்படி தர்மாசாரங்களை வித்யாஸமாய் வைத்திருக்கிறது. எதையும் எல்லா ஸந்தர்பத்துக்கும் பொதுவாக வைப்பதற்கில்லை என்பதால் அதற்கு விலக்குத் தந்து 'ஆபத் [து] தர்மம்', 'யாத்ரா தர்மம்' என்றெல்லாமும் சாஸ்திரங்கள் 'ரிலாக்ஸ்' பண்ணியிருக்கின்றன. இதெல்லாம் கூடாது என்று நல்ல எண்ணத்தோடேயே மாற்றினாலும் அது நடைமுறையில் ஸரியாய் வருவதில்லையென்பதற்கு திருஷ்டாந்தமாகத் தான் இந்த இரண்டு பேரையும் சொன்னேன். அவர்களைக் குற்றம் சொன்னதாக அர்த்தமில்லை. தனி வாழ்க்கையில் ரொம்ப சுத்தர்களாக இருந்துகொண்டு, நல்ல தியாகிகளாக ஸர்வ ஜன க்ஷேமத்தையே நினைப்பவர்களாக இருந்த இந்த இரண்டுபேர்கூட நம் வைதிக வழிக்கு வித்யாஸமாகச் செய்தபோது அவர்கள் நினைத்தபடி நல்லது நடக்கவில்லை, அவர்களாலேயே அந்தக் கொள்கைகளைத் தீவிரமாக நடத்திக் காட்ட முடியவில்லை என்று நான் எடுத்துக் காட்டினது, இவர்கள் பண்ணினது தப்பா ஸரியா என்று இவர்களை

'இன்டிவிஜுவலாக' [தனி மநுஷ்யர்களாக] வைத்து முடிவு செய்வதற்காக இல்லை; அப்படியானால் நான் செய்கிறவை ஸரியா, தப்பா என்றும் சர்ச்சை செய்ய வேண்டிவரும். அதனாலே இங்கே இன்டிவிஜுவலைப் பற்றிப் பேச்சில்லை. அந்த வாதம் வேண்டாம். 'சாஸ்திரம்' என்கிறதில் சொல்லியிருக்கிற அதிகார பேதமும், அதையொட்டி ஏற்படுகிற ஆசார அநுஷ்டான பேதமும் ஸரியா தப்பா என்று எடைபோட்டு, அதை மாற்றி வேறு விதமாய் பண்ணப்போனால் கடைசியில் இப்படிப் புதிசாகப் பண்ணினது பூர்ணமாக நடைமுறைக்கு ஸாத்யப்படாமல் போவதைத்தான் பார்க்கிறோம் என்று நிதர்சனமாகக் காட்டவே இந்த இரண்டு பேர் செய்யததை ஒரு எக்ஸாம்பிளாகக் காட்டினேன். நல்ல அறிவும், அன்பு மனஸும், ஸ்வய நல நோக்கமில்லாத குணமும் கொண்ட இரண்டு பேர் செய்ததே ஸரிப்பட்டு வரவில்லை என்பது சாஸ்திரத்தின் பெருமையை 'அன்டர்லைன்' பண்ணிக் காட்டுவதற்காகச் சொன்னதேயன்றி, அவர்களுக்குக் குறைவு சொல்வதற்காக அல்ல. வேறு யாரைச் சொல்லியிருந்தாலும் இவர்களைப் போல எல்லாருக்கும் தெரிந்தவர்களாக இருக்க முடியாது என்பதால் இந்த இரண்டு பேரைச் சொன்னேன்.

பார்ஸிகளையும், ஜைனர்களையும் போலச் சின்ன கம்யூனிடிகளாக இருந்தால் ஒரே ரூலை அதைச் சேர்ந்த எல்லாருக்கும் பொதுவாக வைத்தாலும் அதை அத்தனை பேரும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நடக்க முடிவதைப் பார்க்கிறோம். பௌத்தத்தை விட ஜைனர்களுக்கு அஹிம்ஸையில் இன்னும் 'ஸ்ட்ரிக்ட்' ரூல் இருந்தாலும் அவர்கள் அதிலிருந்து விலகவில்லையென்று பார்க்கிறோம். இதற்கு வித்யாஸமாக, ஏராளமான ஜன ஸமூஹத்தைப் பெற்றிருந்தும் எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக மற்ற எந்த மதஸ்தரையும் விட உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்களாக நம்முடைய மதஸ்தர்கள் இருந்து வந்திருக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் அதில் ஐடியல் ரூல், ஸாமான்ய ஜனங்களுக்கு ஸாத்யமான நடைமுறை வழி ஆகிய இரண்டிற்கும் இடம் கொடுத்து, ஐடியலைச் சிலருக்கு மட்டும் 'கம்பல்ஸரி'யாக்கி அதன் மூலமே அது மற்றவர்களையும் 'இன்ஃப்ளுயென்ஸ்'

பண்ணி அவர்களிடமும் கணிசமான அளவு 'ஆப்ஷன்'லாகப் பரவும்படி நம் சாஸ்திரங்கள் வசதி பண்ணிக் கொடுத்திருப்பதுதான்.

9.16-ஆசாரத்தில் நீக்குப்போக்கு

வர்ணதர்மம், ஆச்ரம தர்மம், ஆபத் தர்மம், யாத்ரா தர்மம் என்று வித்யாஸமாக இருப்பதைப் போலவே பிரதேசத்தைப் பொருத்தும் கொஞ்சம் கொஞ்சம் வித்யாஸமாகப் போக சாஸ்திரம் இடம் கொடுத்திருக்கிறது. சீதோஷ்ணத்தில் இருக்கும் வித்யாஸத்துக்கும் ('ஹிமாலயன் ரீஜ'னுக்கும் ராஜஸ்தான் பாலைவனத்துக்கும் எத்தனை வித்யாஸம்?) , இந்தப் பெரிய தேசத்தில் ஒவ்வொரு பிரதேசத்தில் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வந்து மோதின அந்நிய தேசக் கலாசாரத்தின் செல்வாக்குக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தும் பிராந்திய ரீதியில் ஆசார அநுஷ்டானங்களில் சில வித்யாஸங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை தேசாசாரம் என்கிறோம். Basic - ஆக [அடிப்படையில்] ஒரே சாஸ்திரந்தான் என்றாலும், சில விஷயங்களில் பிரதேச ஆசாரங்கள் என்று மாறுபட்டு அங்கங்கே இருக்கின்றன. அங்கங்கே உள்ளவர்களில் பரம சிஷ்டர்களும் அந்த 'ரீஜனல்' ஆசாரப்படிதான் செய்கிறார்கள்.

புருஷர்கள் எல்லாருக்கும் தேசம் பூராவும் பஞ்ச கச்சம்தான். பெங்காலி பாபு அதைச் சொருகாமல் அப்படியே விட்டாலும் இது ஒரு சின்ன 'டி..ஃபரன்ஸ்'தான். ஆனால் ஸ்திரீகளைப் பார்த்தால் நம் ஊரிலேயே அய்யருக்கும் ஐயங்காருக்கும் கட்டு வித்யாஸம். கன்னட தேசத்தில் ஒரு மாதிரி. மஹாராஷ்டிரத்தில் வேறே ஒரு தினுஸு. இதிலெல்லாமே கச்சம் உண்டு. வடக்கேயோ ஸ்திரீகள் உடுத்துவதில் கச்சம் போடுவதில்லை. அங்கே குஜராத், யு.பி., காஷ்மீர், பெங்கால் ஒவ்வொன்றிலும் ஸ்திரீகளுக்கு வெவ்வேறு கட்டு இருக்கிறது. இங்கேயே மலையாளத்தில் கச்சமில்லாமல் 'முண்டு' என்று உடுத்துகிறார்கள். இதெல்லாம் அந்தந்த தேசாசாரமாக மதிக்கப்படுகின்றன. ஸமீப காலத்தில் உண்டாக்காமல் நெடுங்காலமாக ஒரு

'ட்ரெடிஷனாக' வந்து அங்கங்கேயுள்ள சாஸ்திரஜ்ஞர்களும் அநுஸரித்த எதற்குமே சாஸ்திர ஸம்மதமுண்டு.

இப்படியே குலாசாரம் என்று ஒன்று. இதில் குடும்பங்களுக்கிடையில் வித்யாஸமான வழக்கங்களைப் பார்க்கிறோம். ஸாதாரணமாக ஒரு கல்யாணத்தில் இது நன்றாகத் தெரியும். 'பிள்ளையாத்தில்' இப்படி இப்படி வழக்கமாம். அப்படித்தான் செய்யணும்' என்பார்கள். நாந்தி, விரதம், கன்யாதானம், பாணிக்ரஹணம், மாங்கல்யதாரணம், ஸப்தபதி, பிரவேச ஹோமம், ஔபாஸனம் முதலியன எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் பெரும்பாலும் இருக்கும். இதிலேயுங்கூட யாரார் எந்த ஸூத்ரமோ அதன்படி வித்யாஸம் இருந்தாலும் இந்தப் பெயருள்ள சடங்குகள் எல்லாருக்கும் 'காமன்' தான். ஆனால் இது தவிரப் பல விஷங்களில் வித்யாஸம் இருக்கும். திவஸச் சமையலில் கூட இன்ன இன்ன சேர்க்கலாம், சேர்க்கக்கூடாது என்பதற்கு குலாசாரப்படி வித்யாஸம் இருக்கிறது.

ஒரே ரூலில் எல்லாரையும் கட்டிப் போடுவதில் ஏற்படும் சிரமங்கள் இல்லாமலிருக்கவே இப்படி தேசம், காலம், இடம் போன்றவற்றிக்கு நெகிழ்ந்து கொடுத்து ஆபத் தர்மம், யாத்ரா தர்மம், தேசாசாரம், குலாசாரம் ஆகியன ஏற்பட்டிருக்கின்றன.

ஆபத் தர்மம், யாத்ரா தர்மம் என்று நடு நடுவே சொன்னேனே இவை தாக்ஷிண்யத்தின் பேரில் ஏற்படுத்தினவை. சிலவிதமான ஸந்தர்ப்பங்களில் ரொம்ப 'ஸ்ட்ரிக்'டாக சாஸ்திர ரூல்படி செய்ய முடியாமலிருக்கும் போது ரூல்களை 'ரிலாக்ஸ்' செய்து கொடுத்து இந்த ஆபத் தர்மம், யாத்ரா தர்மம் முதலியவற்றை சாஸ்திரமே அநுமதித்திருக்கிறது.

வெளியூர்களுக்குப் போகிறபோது எல்லா ஆசாரங்களையும் அநுஷ்டிக்க முடியாவிட்டாலும், முடிந்த மட்டும் பண்ணுவதே போதும் என்று யாத்ரா தர்மத்தில் இருக்கிறது. ஸ்வக்ஷேத்ரத்தில் [தன் ஊரில்] ஸ்வக்ருஹத்தில் [சொந்த வீட்டில்] அத்தனை ஆசாரங்களையும் பின்பற்றத் தான் வேண்டுமென்றாலும், வெளியூரில் அவற்றில் பாதி பண்ணினாலும் போதுமானது என்றுகூட இருக்கிறது. செங்கல்பட்டில் வீடு, மெட்றாஸில்

ஆஃபீஸ்;இல்லாவிட்டால் எப்போதும் டூரில் போகிற வேலை என்று இருக்கும் இக்காலத்தில் இம்மாதிரி 'லீனியன்ட் ரூல்'களைச் சொல்வதற்கே பயமாயிருக்கிறது! இருக்கிற ஆசாரத்தையும் ஜனங்கள் விட்டு விடுவதற்கு நானே வழி சொல்லிக் கொடுத்த மாதிரி ஆகிவிடக் கூடாதே! யாத்திரையையும், வெளியூர் வாஸத்தையும் சாஸ்திரம் நினைத்தது உத்யோக நிமித்தமாக, உதர நிமித்தமாக அல்ல. ஏதோ க்ஷேத்ராடனம், அல்லது ஒரு கல்யாணம், இல்லாவிட்டால் பந்துக்களின் மரணம் இம்மாதிரி காரணத்துக்காக எப்போதாவது பிரயாணம் பண்ணுவதைத்தான் சாஸ்திரகாரகர்கள் நினைத்தார்களே தவிர ஜீவனோபாயத்துக்காக நித்யப்படி யாத்திரை செய்வதையல்ல.

பூர்ண உபவாஸம் முடியாவிட்டால் பழம், பால் சாப்பிடலாம்; பக்வான்னத்துக்கு [நன்றாக ஜலத்தில் வெந்த உணவு வகைகளுக்கு] உள்ள சேஷ தோஷம் தைலபாகத்துக்கு [எண்ணெய் அல்லது நெய்யில் வறுத்த பக்ஷணம், வறுவல் முதலானவற்றுக்கு] இல்லை; மடிக்குறைவானவர்களிடம் தீர்த்தம் வாங்கிச் சாப்பிடும்படி நிர்பந்தம் ஏற்பட்டால் அதில் கொஞ்சம் மோரைத் தெளித்துக் கொண்டால் தோஷ பரிஹாரம் - என்றெல்லாம் பல exemption கொடுத்திருப்பது தாக்ஷிண்ய நோக்கில்தான். பலஹீனர்களிடமுள்ள கருணையாலேயே அவர்களுக்கு விரத உபவாஸங்கள் வேண்டாம், "நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்று வைத்திருக்கிறது.

இதேமாதிரி ஆபத்துக் காலத்தில் அநேக ஆசாரக் கட்டுப்பாடுகளைக் தளர்த்திக் கொடுத்து ஆபத் தர்மம் என்பதாக ஏற்படுத்தியிருக்கிறது. அப்போதுங்கூட எங்கே அடியோடு முடியவில்லையோ அங்கேதான் ஆசாரத்தைத் தளர்த்தலாம். முடிந்த இடத்தில் பின்பற்றத்தான் வேண்டும். திருஷ்டாந்தமாக உபநிஷத்திலேயே* ஒரு கதை வருகிறது.

---

* சாந்தோக்யாபநிஷத் 1.10

9.17-முடிந்தவரை பூர்ண ஆசாரம்

இடியும் மழையுமாகக் குருதேசம் ஒரு ஸமயத்தில் பாழாய்ப் போயிருந்தது. அன்ன ஆஹாரம் கிடைக்காமல் எல்லாரும் கஷ்டப்பட்டார்கள். சாக்ராயண உஷஸ்தர் என்று ஒரு ரிஷி. அவரும் அவருடைய இளம் மனைவியும் அலைந்து திரிந்துகொண்டு போய் யானைப் பாகர்கள் வசிக்கிற ஒரு கிராமத்தை அடைந்தார்கள். யானைகளுக்கென்று பூர்வத்தில் தான்யம் சேமித்து வைத்திருப்பார்களல்லவா? யானையின் தீனியில் துளிப் பாகம் மநுஷ்யனுக்குப் போதுமே! அதனால் அங்கே கொஞ்சம் தான்ய நடமாட்டம் இருந்தது. எவனோ ஒரு யானைப்பாகன் 'குல்மாஷம்' என்கிற தான்யத்தை (கொள்ளு என்று நினைக்கிறேன்) தின்று கொண்டிருந்தான். பிராணனை ரக்ஷித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆபத்-கால தர்மப்படி அவனிடம் உஷஸ்தர் அந்தக் கொள்ளில் கொஞ்சம் யாசித்துப் பெற்றார். யானைப்பாகன் அதை அவர் சாப்பிட்டவுடன் குடிப்பதற்காகத் தான் குடித்துக்கொண்டிருந்த ஜலத்திலிருந்தே கொஞ்சத்தைக் கொடுத்தான். "உச்சிஷ்டத்தை [ஒருவர் உண்டு மிகுந்ததை] வாங்கிக்கொள்ள மாட்டேன்" என்று ஆசார விதியைக் காட்டி உஷஸ்தர் ஜலம் வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார். "கொள்ளு மாத்திரம் உச்சிஷ்டமில்லையா? அதை வாங்கிக் கொண்டீரே!" என்று யானைப்பாகன் கேட்டான். அதற்கு அவர், "அதை வாங்கிச் சாப்பிட்டிராவிட்டால் என் பிராணனே தேஹத்தில் தங்கியிருக்காது. பிராண ரக்ஷணை அவச்யம் என்ற பெரிய தர்மத்துக்காக, அதைவிடச் சிறிய உச்சிஷ்ட தர்மத்தை விட்டேன். இப்போது தீர்த்தமில்லாமல் என் பிராணன் போய்விடாது. சாப்பிட்ட வாய்க்குத் தீர்த்த பானம் இன்பமாகத்தானிருக்குமென்றாலும் இப்போது நான் உன்னிடம் ஜலம் வாங்கிக் குடித்தேனானால் அது எனக்கு இன்பம் தருகிற காமத்துக்காகத்தான் ஆகுமேயன்றி சாஸ்திரோக்தமான ப்ராண ரக்ஷணை என்ற தர்மத்துக்கு ஆகாது. ஆகையால் வேண்டாம்" என்றார்.

தர்ம-அர்த்த-காம-மோக்ஷம் என்று நாலு சொல்கிறோம். ஆசாரத்தில் அர்த்த-காமங்கள், இம்மை நலன்கள் யாவும் அடக்கமானாலும், இவற்றை விடவும்

அது தர்மத்தையே முக்யமாகக் கொண்டு மோக்ஷத்தை லக்ஷ்யமாகக் கொடுக்கிறது என்பதையும் இது புரிய வைக்கிறது.

பெண்கள் தினமும் ஸ்நானம் செய்து ஈரத் தலையோடு கஷ்டப்பட வேண்டாம் என்ற தாக்ஷிண்யத்தினால்தான் விசேஷ தினங்களைத் தவிர மற்ற நாட்களில் அவர்கள் தலையில் மஞ்சள் ஜலம் புரோக்ஷித்துக் கொண்டாலே போதும் என்று சாஸ்திரம் சொல்கிறது. கர்ப்பம் நன்றாக வளர்ந்தபின் ஒரு கர்ப்ப ஸ்த்ரீ எந்த விரதம் இருந்தாலும் பலிக்காது என்பதுகூட அவள் அந்த ஸ்திதியில் விரதோபவாஸங்களால் காயக்கிலேசம் பண்ணிக் கொள்ள வேண்டாமென்ற கருணையால்தான். குழந்தைப் பிராயத்திலும், வாலிபப் பிராயத்திலும் ஒருவனைப் புஷ்டியாக வளரவிட வேண்டுமென்றுதான் பிரம்மசாரிக்கு விரத உபவாஸங்கள் சொல்லாமல், ஸாத்விக உணவாக எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாமென்று வைத்திருக்கிறது. வியாதியஸ்தருக்கும் அநேக விதிகளிலிருந்து விலக்குக் கொடுத்திருக்கிறது.

தாக்ஷிண்யத்துக்காக principle -ஐ (கொள்கையை) விட்டுவிட்டார்கள் என்று அர்த்தமில்லை. ஆசார அநுஷ்டானத்தில் நாம் எத்தனை நம்பிக்கை வைத்திருந்தாலும் இம்மாதிரி அவை ரொம்ப சிரம ஸாத்யமாகிற போது மாத்திரம் பகவானே கருணையினால் அவற்றை 'ஓவர்லுக்' பண்ணிவிடுவான்; சிரமதசை முடிந்த பிற்பாடு நாம் அவற்றை உரியபடி அநுஷ்டிக்கத்தான் வேண்டும் என்பதே தாத்பரியம். குறிப்பிட்ட சில ஸமயங்களில் சில ஆசாரங்களைத் தளர்த்திக் கொடுத்திருக்கிறது என்பதனால் அதையே எக்காலத்துக்கும் நடைமுறையாக்கிக் கொண்டு விடக்கூடாது. ஒன்று முடியாதபோது அதற்குப் பதிலாக (substitute-ஆக) , இரண்டாம் பக்ஷமாக (secondary-யாக) இன்னொன்றைச் சொல்லியிருக்கும். இதற்கு 'கௌணம்' என்று பெயர். 'கௌண' ஆசாரத்தையே மூலமான 'முக்ய' அல்லது 'ப்ரதான' விதிக்குப் பதில் எப்போதும் அநுஷ்டிப்பதென்பது முறையாகாது. 'முக்ய விதி', 'பிரதான விதி' என்பது ஜெனரல் ரூல். 'கௌண விதி' என்பது Subsidiary Rule .

சில ஸமயங்களில் ‘முக்ய’த்தையும் பண்ணிவிட்டு ‘கௌண’த்தையும் அதோடு பண்ணுவது விசேஷிக்கப்படுகிறது. உதாரணமாக ஸ்நானம் என்றால் ஜலத்துக்குள் முழுகி அழுக்குப்போகக் குளிப்பதுதான். ஆனால் உடம்பு ஸரியில்லாத போது அப்படிப் பண்ண வேண்டாமென்று ‘கௌண’மாகத் தலைக்கு விட்டுக் கொள்ளாமல் கழுத்துவரை குளித்தால் போதும், ‘டெம்பரேச்சர்’ இருந்தால் இடுப்புவரை குளித்தாலே போதும், அதுவும் முடியாவிட்டால் ஈரத்துணியால் துடைத்துக் கொண்டாலும் ஸரி, ரொம்பவும் தாபஜ்வரமானால் இது கூட வேண்டாம், தலையோடு கால் விபூதியைப் பூசிக்கொண்டாலே ஸ்நானம்தான் என்றெல்லாம் சாஸ்திரங்களில் flexible-ஆக [நெகிழ்ந்து கொடுத்து] விதி செய்திருக்கிறது. நன்றாகத் தலைக்கு ஸ்நானம் பண்ணின பிற்பாடும், அதாவது ‘ப்ராதன’ அல்லது ‘முக்ய’ விதியை அநுஸரித்த பின்னும் இப்படி (‘முழு நீறு பூசிய’ என்று பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிற மாதிரி) தலையோடு கால் விபூதி பூசிக் கொண்டு ‘கௌண’ ஸ்நானமும் பண்ணலாம். ஆனால் நல்ல ஆரோக்ய ஸ்திதியிலிருக்கும் போது குளிக்காமல் விபூதி ஸ்நானம் மட்டும் பண்ணினால் போதுமென்று இருக்கப்படாது.

9.18-ஸ்நான வகைகள்

ஸ்நானத்தில் ஐந்து தினுஸு சொல்லியிருக்கிறது. இவற்றில் ‘ஸ்நானம்’ என்றவுடன் நாம் நினைக்கிறபடி ஜலத்தை மட்டும் கொண்டு குளிப்பது ‘வாருணம்’- வருண பகவான் ஸம்பந்தமுள்ளது. இதை ‘அவகாஹ’மாக, அதாவது நாம் ஜலத்திக்குள் இறங்கி, முழுகிப் பண்ணினால் தான் ‘முக்ய’ ஸ்நானம் பண்ணினதாக ஆகும். பாத்திரத்தில் வைத்துக்கொண்டு மொண்டு தலையில் விட்டுக் கொள்வது கூட இரண்டாம் பக்ஷம்தான். அதற்கப்புறந்தான் ‘கௌண’ மாக கழுத்துவரை, இடுப்புவரை என்பதெல்லாம். ஆக ஐந்து ஸ்நானங்களில் ஜலத்தால் செய்கிற வாருணம் ஒன்று.

விபூதி ஸ்நானம் என்று இப்போது சொன்னதற்கு ‘ஆக்நேயம் ‘என்று பேர். அக்னி ஸம்பந்தமுடையது என்று அர்த்தம். அக்னியில் பஸ்மமாக்கித்தான்

விபூதி கிடைப்பதால் அதற்கு பஸ்மா என்றே பெயரிருக்கிறது. ஜலம் விட்டுக் குழைக்காமல் விபூதியை வாரிப் பூசிக் கொள்வதை 'பஸ்மோத்தூளனம்' என்றே சொல்கிறோம்.

பசுக்கள் செல்கிறபோது கிளம்புகிற அவற்றின் குளம்படி மண்ணை ரொம்பவும் புனிதமாகச் சொல்லியிருக்கிறது. அதற்கு 'கோ தூளி' என்று பெயர். பாலக்ருஷ்ணனே இப்படித்தான் நீல மேக ச்யாமள காத்ரத்தில் பசுக்களின் தூள் சந்தனப் பொடி தூவினாற் போலப் படிந்து "கோதூளீ தூஸரித"னாக இருந்தானாம். ஒரு பசு மந்தை போகிற போது, அவை கூட்டமாகப் போவதாலேயே காற்றின் சலனம் அங்கே ஜாஸ்தியாகி, குளம்படி மண் நிறையக் கிளம்பும். இந்த கோதூளி நம்மை அபிஷேகம் பண்ணும்படியாக அங்க போய் நின்று கொண்டால் அதுவும் ஐந்தில் ஒருவகை ஸ்நானமாகும். இதற்கு 'வாயவ்யம்' என்று பெயர் - வாயு என்கிற காற்றின் ஸம்பந்தமுடையது என்று அர்த்தம். காற்றால்தானே தூளி பறக்கிறது?

அபூர்வமாக வெய்யில் அடிக்கும்போதே மழையும் பெய்வதுண்டல்லவா? அந்த மழை ஜலம் தேவலோகத்திலிருந்து வருகிற தீர்த்தத்துக்கே ஸமானம். அதனால் அந்த ஜலத்தில் குளிப்பதற்கு 'திவ்யஸ்நானம்' என்று பெயர். எப்போதாவது இப்படி வெய்யிலோடு மழை பெய்துவிட்டால் உடனே நாம் அதில் போய் நின்றுவிட வேண்டும்.

மந்திர ஜலத்தைப் புரோக்ஷித்துக் கொள்கிறோம். தலையோடு கால் விட்டுக் கொள்ளாமல் அதை விரலால்தான் தெளித்துக் கொள்கிறோம். "ஆபோ ஹிஷ்டா" என்று ஸந்த்யா வந்தனத்தின்போது, அதாவது முக்கிய ஸ்நானமாக நன்றாகக் குளித்துவிட்டே செய்கிற ஸந்த்யாவந்தனத்தின்போது, இப்படி மந்திரஜல ப்ரோக்ஷணமும் செய்து கொள்கிறோம். பூஜை, ஹோமம், யாகம் முதலானவற்றிலும் கலசம் வைத்து அதிலுள்ள ஜலத்தை அபிமந்திரித்துக் கடைசியில் வாத்தியார் [புரோஹிதர்] தர்ப்பைக் கட்டால் அதை எல்லாருக்கும் தெளிக்கிறார். இதுவும் ஐந்து ஸ்நானங்களில் ஒன்று. இதற்கு 'ப்ராஹ்மம்' என்று பெயர். "ப்ரம்மம்" என்றால் வேதம், வேத மந்திரம் என்பது ஒரு அர்த்தம். அதனால் அபிமந்திரிக்கப்பட்ட தீர்த்தப் புரோக்ஷணத்துக்கு "ப்ராஹ்ம

ஸ்நானம்" என்று பெயர் கொடுத்திருக்கிறது. மந்திரம் சொல்லக் கூடாதவர்களுக்கு பகவந்நாமா இருக்கிறது என்று முன்னேயே சொன்னேன். நாமமெல்லாமே மந்திரந்தான்.

பார்க்கப்போனால் எல்லா ஸ்நானமுமே ப்ராஹ்மம்தான்! எந்தக் காரியமானாலும் அந்தக் காரியத்தை மட்டும் பண்ணாமல் அதோடு மந்திரத்தையும் சேர்த்து ஈஸ்வர ஸ்மரணையோடு, ஈஸ்வரார்ப்பணமாகப் பண்ணுவதாகத்தானே அத்தனை ஆசாரங்களும் ஏற்பட்டிருக்கின்றன? அவற்றிலே சிறப்பாக வருணனையோ, வேறு ஒரு தேவதையையோ மந்திரபூர்வமாக ஒரு கும்பத்தில் ஆவாஹனம் பண்ணிப் பிறகு அந்த ஜலத்தை ப்ரோக்ஷித்துக் கொள்வது 'ப்ராஹ்மம்' என்று பெயர் பெற்றிருக்கிறது.

உடம்பு அசக்தமாய் எந்த விதத்திலும் வாருண ஸ்நானம் செய்ய முடியாதவர்களுக்கு இந்த மந்திர தீர்த்த ப்ரோக்ஷணமே அதனிடத்தில் 'கௌண' ஸ்நானமாகிறது.

பஞ்சபூதங்கள் என்னும் ஐம்பூதங்கள் - ஐந்து ஸ்நானங்கள் என்று பார்க்கிறபோது, வாருணம்தான் அப்பு; ஆக்நேயம் (விபூதி) என்பது தேயு; கோதூளி என்கிற வாயவ்யம் வாயு. இவை தவிர ப்ராஹ்மம், திவ்யம் என்று இரண்டு சொன்னேன். பஞ்ச பூதங்களில் பிருத்வியும் ஆகாசமும் விட்டுப் போயிருக்கின்றன. மந்தரங்களெல்லாம் ஆகாசத்தில்தான் சப்த தன்மாத்ரையாக வியாபித்திருக்கின்றன; அவற்றையே ரிஷிகள், யோக சக்தியால் நமக்குப் பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தங்களை பஞ்சபூதங்களில் ஒவ்வொன்று ஆச்ரயித்திருப்பதாகச் சொல்லும்போது சப்தத்துக்குத்தான் ஆகாசம். இங்கே சப்தம் என்பது வேத மந்திரமே. ஆனதால் மந்திர தீர்த்தப் புரோக்ஷணமான 'ப்ராஹ்ம ஸ்நானம்' ஆகாச ஸம்பந்தமானது எனலாம். வெய்யிலின்போது பெய்யும் மழையான 'திவ்ய'மும் வானுலகிலிருந்து - தேவலோகத்திலிருந்து - வருவதாகக் கருதப்படுவதால் ஒருவகையில் ஆகாச பூதத்தின் ஸம்பந்தமுடையதே. பிருத்வி பாக்கி இருக்கிறது. 'வாயவ்யம்' என்று சொன்னதில் கோதூளியில்

தானே நிற்கிறோம்? காற்றினால் எழுப்பப்பட்டு அந்தத் தூளி நம்மேல் படிவதால் அதற்கு 'வாயவ்யம்' என்று பேர் இருந்தாலும், வாஸ்தவத்தில் நம்மை அபிஷேகிக்கிற வாஸ்துவான குளம்படி மண் என்பது பிருத்விதான். ஜெனரல் ரூலான வாருண ஸ்நானத்திலும் சுத்திக்காகத் தேய்த்துக் கொள்ளும் மிருத்திகை [புற்றுமண்] பிருத்விதான். இப்படியாக ஐம் பூதங்களுக்காக ஐந்து ஸ்நான வகைகள். முடிவில் எதுவானாலும் ஆத்மாவைப் பாபம் போகக் குளிப்பாட்டுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஸ்நானம் ஐந்துவகை என்பது மட்டுமில்லை. அவற்றில் 'முக்ய' ஸ்நானமான நீராடலுக்கே ஐந்து அங்கங்கள் சொல்லியிருக்கிறது.

ஸங்கல்பஸ் ஸூக்தபடநம் மார்ஜநம் ச (அ)கமர்ஷணம் |
தேவதா தர்ப்பணம் சைவ ஸ்நானம் பஞ்சாங்க உச்யதே ||

முதலில் 'ஸங்கல்பம்' எந்தக் கர்மாவானாலும் பாபப் பிராயச் சித்தமாகவும் பரமேஸ்வரப் ப்ரீதிக்காகவும் இதைப் பண்ணுகிறேன் என்று ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். முன்னேயே சொன்னபடி வேத ஸூக்தங்களைச் சொல்வது 'ஸூக்த படனம்'. 'மார்ஜனம்' என்பது 'ஆபோ ஹி ஷ்டா'முதலிய மந்திரத்தால் முதலில் ஜலத்தைப் புரோக்ஷணம் கொள்வது. அப்புறம்தான் உள்ளே முழுகி ஸ்நானம் செய்ய வேண்டும். அப்போது மூன்று தடவை அகமர்ஷண ஸூக்தத்தை ஜலத்துக்குள்ளிருந்து ஜபிக்க வேண்டும். இதுதான் ஸ்லோகத்தில் கூறப்படும் 'அகமர்ஷணம்' அதற்குப் பொழுதில்லாமல் இக்கட்டு ஏற்பட்டால், காயத்ரியை முதலில் பாதம் பாதமாகவும், அப்புறம் முழுக்கச் சேர்த்தும், அதாவது, மொத்தம் மூன்று தடவை ஜபிக்க வேண்டும். ரொம்பவும் அவஸரம், தவிர்க்கவே முடியாது என்றால் பிரணவத்தை மூன்றுமுறை சொன்னாலும் போதும். இதையே தினப்படி ஆக்கிக்கொண்டுவிடக் கூடாது! இது சோம்பேறித்தனத்திலும், அடங்காமையிலுந்தான் சேர்க்கும். அவஸர ஸமயத்திலும், ஆபத்து காலத்திலும் "ஐயோ, பூர்ணமாக ஆசாரப்படி பண்ண முடியவில்லையே!" என்கிற நிஜமான தாபத்தோடு கௌணமாக ஆசாரத்தைக் குறைத்துக் கொண்டு பண்ணினால்தான், பகவான் அந்தத் தாபத்தையே மெச்சிப் பூர்ண

பலன் தருவானாதலால், மற்றக் காலங்களில் இப்படிப் பண்ணினால் அதை மன்னிக்க மாட்டான். ஸ்நானம் முடித்தவுடன் ஜலத்திலிருந்து கொண்டே தேவ, ரிஷி, பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். இதுதான் ஐந்தாவது அங்கமான தர்ப்பணம்.

குளியல் என்று ஸாமான்யமாகத் தோன்றுகிற காரியத்துக்கு இத்தனை லக்ஷணங்களும் விதிகளும்! இப்படியே ஒவ்வொன்றுக்கும்.

வாழ்க்கையம்சங்களில் இண்டு இடுக்கு விடாமல் பல் தேய்ப்பதிலிருந்து ஆரம்பித்து, புத்ரோத்பத்தி பண்ணுவது, ஒரு பிரேதத்தை டிஸ்போஸ் பண்ணுவது உள்பட – இது சின்னது, இது பெரிசு, இதுதான் ஆத்மார்த்தமானது, இது லோக ஸம்பந்தமானது என்று பிரிக்காமல் எல்லாவற்றையும் ஆத்ம ஸம்பந்தமாக்கிக் கணக்கில்லாமல் ஆசார விதிகளைக் கொடுத்திருக்கிறது.

'ஸ்நானம்' என்று ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் இவ்வளவு வகை சொன்னேன். அதற்கு முதலில் தூர்வை, மிருத்திகை முதலியவற்றைத் தரித்துக் கொள்ள வேண்டுமென்று முன்னே சொன்னேன். ஸ்நானம் செய்வதற்கு இன்னம் அநேக ரூல்கள் இருக்கின்றன. வெளி சுத்தத்துக்கு மாத்திரமென்றால் அழுக்குப் போக நன்றாகத் தேய்த்துக் குளித்தால் மட்டும் போதுமென்று விட்டு விடலாம். உள் சுத்தத்துக்குமானதால் நமக்குத் தெரியாத, புரியாத (பிடிக்காத கூடத்தான்!) ரூல்களையும் இப்படி சுத்தியான ரிஷிகள் கொடுத்துள்ள சாஸ்திரப்பிரகாரம் follow பண்ண வேண்டும். உதாரணமாக ஒரு ஆற்றிலே ஸ்நானம் செய்யும்போது பிரவாஹத்துக்கு அபிமுகமாக, அதாவது ஸூரியனைப் பார்க்க நின்று கொண்டு குளிக்கணும். க்ரஹணம், ஆசௌசம் (சாவுத் தீட்டு) , ஸூதகம் (பிரஸவத் தீட்டு) முதலியவற்றில் அஸ்தமனத்துக்கு அப்புறம் குளத்தில் ஸ்நானம் செய்ய நேர்ந்தால் எப்படி ஸூர்யனுக்கு அபிமுகமாகப் பண்ணுவது? இம்மாதிரி விஷயங்களைக் கூட சாஸ்திரகாரர்கள் யோசித்து ராத்திரியில் தடாக ஸ்நானம் செய்கிறவர்கள் கிழக்கு அல்லது வடக்குப் பார்த்துச் செய்ய வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். அகத்தில் கிணற்றடியில், பாத்ரூமில் மொண்டு விட்டுக் கொண்டு ஸ்நானம் பண்ணுகிறவர்களும் கிழக்குப்

பார்க்கவே பண்ண வேண்டும். பொதுவாக எந்தக் கர்மாவுக்குமே எடுத்தது கிழக்கு. பித்ரு கர்மாவுக்கு மட்டும் தெற்கு.

எந்தத் திக்கைப் பார்த்துப் பண்ணணும், எப்படி உட்காரணும் (பத்மாஸனத்திலே தியானம்; சப்பளாம் கொட்டிக்கொண்டு மற்ற காரியங்கள்; ஆசமனம் பண்ணும் போது, குந்திக்கொண்டு); கையை எப்படி வைத்துக் கொள்ளணும் (ஸங்கல்பத்தின் போது தொடையில் வலது உள்ளங்கையை இடது உள்ளங்கைக்கு மேலே; பிராணாயாமத்தில் மூக்கின் இன்ன பக்கத்தை இன்ன விரலால் பிடித்துக் கொள்ளணும் என்பது; ஆசமனத்தில் எந்த விரலை மடக்கி, எந்த விரலை நீட்டணும் என்கிறது) - இப்படி அநேகம். ஒவ்வொன்றுக்கும் அளவு (ஆசமனத்துக்கு உளுந்து முழுகுகிற அளவு ஜலம். தர்ப்பணத்துக்கு ஒரு மாட்டுக் கொம்பு பிடிக்கிற அளவு ஜலம் - 'கோச்ருங்க ப்ரமாணம்') என்று இருக்கிறது. கையில் இடுக்கிக் கொள்ள, கீழே போட்டுக் கொள்ள எத்தனை தர்ப்பை, தர்ப்பணத்துக்கு எத்தனை எள்ளு, ஹோமத்துக்கு ஆஜ்யமோ [நெய்யோ] , ஹவிஸோ என்ன அளவு; எந்தெந்த வஸ்துவை எந்தெந்தப் பக்கம் பார்த்து வைக்கணும் என்று ரொம்ப ரொம்ப detailed -ஆக, minute -ஆக, elaborate -ஆக [அம்சம் அம்சமாக, நுணுக்கமாக, விஸ்தாரமாக] ஆசார விதிகளை சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பழகினால், இத்தனையும் ஸுலபத்தில் வந்து விடும். முடியுமா என்று மலைத்தால்தான் மலைத்துக் கொண்டே நிற்கும்படியாகும்! ஒரு காரை ஓட்டுவது என்றால் எத்தனை தினுஸு ஸ்விட்ச், ப்ரேக், கியரைப் பழக்கத்திலே ஸரளமாகக் கையாள முடிகிறது? அநுபவஸ்தர்களான ச்ரௌதிகள் ஒரு யஜ்ஞத்தைப் பண்ணும்போது எப்படி டக், டக்கென்று அத்தனை விதிகளின்படியும் அநாயாஸமாகப் பண்ணிக் கொண்டு போகிறார்களென்று பார்த்தால் தெரியும். ஈடுபாடு இருந்து விட்டால் எதுவும் முடியும்.

9.19-ஈடுபாடு, சிரத்தை

ஈடுபாடு, சிரத்தை இந்த இரண்டும் இரண்டு நேத்ரங்கள் மாதிரி. சிரத்தை என்றால் ரொம்பவும் அக்கறையாக, கவனமாகச் செய்வது என்று பொதுவில்

அர்த்தம் செய்து கொள்கிறோம். கவனக்குறைவாக இருந்தால் 'அசிரத்தையாயிருக்கிறான்' என்கிறோம். சிரத்தை என்றால் நம்பிக்கை, Faith என்று முக்யமான அர்த்தம். புத்தி பூர்வமாக நிரூபிக்கக்கூடியவற்றிலும், பிரத்யக்ஷமாகப் பலனைத் தருவதிலும் 'நம்பிக்கை' என்ற ஒன்றுக்கு இடமில்லை. இவற்றின் கீழ்வராத அத்ருஷ்ட, ஆத்மார்த்த விஷயங்களில் பெரியோர்கள் - மெய்பொருளைக் கண்டுணர்ந்த முன்னோர்கள் - ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற ஆசார, அநுஷ்டானங்களில் நம்பிக்கை ரொம்பவும் அவசியம். பகவான் "ச்ரத்தாவான் லபதே ஞானம்" - சிரத்தையுள்ளவன்தான் ஆத்மாவைப் பற்றிய அறிவு பெறுகிறான் - என்கிறார் [கீதை 4.39]. 'ச்ராத்தம்' ('ச்ரார்த்தம்' என்று தப்பாக 'ர்' போட்டுச் சொல்லுகிறார்களே, அது) என்றாலே ச்ரத்தையோடு செய்யப்படுவது என்றுதான் அர்த்தம். காரணம் கேட்காமல், நம்பிச் செய்ய வேண்டும். ஸயன்ஸ்படி ஸரியாய் வருகிறது, மனோதத்வத்துக்கு ஏற்றதாயிருக்கிறது. ஆரோக்யத்துக்கு உகந்ததாயிருக்கிறது என்றெல்லாம் காரணம் பார்த்துக் கொண்டு ஆசாரங்களை ஏற்பது என்றால், அநேக ஆசாரங்களுக்கு இன்று நாமுள்ள அறிவு வளர்ச்சி நிலையில் இப்படிப்பட்ட காரணங்களைக் காட்ட முடியாமலும் இருக்கும். அதனால் அவற்றைத் தள்ளி விடுவது என்றால் ஒரே அநாசாரத்தில்தான் முடியும். சிலதைப் பண்ணுவது, சிலதை விடுவது என்பது பாதிக் கிணறு தாண்டுகிற கதைதான்.

இது அவநம்பிக்கை யுகம் என்றே வர்ணிக்கிறார்கள். "தெரியாதவற்றை எப்படி நம்புவது?" என்று கேட்கிறார்கள். நமக்கு நேராகத் தெரியாத அதி ஸூக்ஷ்மமான விஞ்ஞான தத்வங்களையும் ரிஷிகள் எப்படியோ தெரிந்து வைத்துக்கொண்டு அநேக ஆசாரங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தோமல்லவா? இப்போது நாம் வைத்திருக்கும் லாபரட்டரி, கருவிகள் ஆகியன இல்லாமலே இப்படித் தெரிந்து கொண்டிருந்தவர்கள்தான், அதாவது மர்மமானதையெல்லாம் தெரிந்து கொள்ள அதீந்திரிய சக்தி பெற்றிருந்தவர்களேதான், நம் விஞ்ஞானத்திலே வராத ஆசாரங்களையும் சொல்லியிருக்கிறார்களென்பதால், இது நிஜமாயிருப்பதால் அதுவும் நிஜமாகத்தான் இருக்கும் என்று நம்பலாம். ஆசாரங்களில் 'த்ருஷ்ட'த்தில்

தெரிகிற உண்மையே 'அத்ருஷ்ட'மும் உண்மையாய்த் தானிருக்க வேண்டுமென்பதற்கு ஸாக்ஷியாயிருக்கிறது.

நம்புவதற்கு இன்னொரு காரணம் சொல்கிறேன். ஸத்யமே பரம தர்மமென்று அத்தனை சாஸ்திரங்களும் சொல்கின்றன. பொய் சொல்வது மஹா பாபம் என்றும் அதற்காக எப்பேர்ப்பட்ட நரகாவஸ்தைகள் பட்டாக வேண்டுமென்றும் சாஸ்திரகாரர்கள் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னவர்களே, பொய்யாக 'இது பாவம், இது புண்யம்' என்று அத்ருஷ்டம் என்ற பெயரில் எதையாவது சொல்லித் தப்பித்துக் கொண்டுவிடலாம் என்று விதிகளை எழுதிவைத்திருக்க முடியுமா? தங்களுக்கு ஏதோ ஒரு Grace-ல் reveal-ஆகியிருந்தாலொழிய [தெய்வ கிருபையில் வெளிப்பட்டிருந்தாலொழிய] அல்லது intuition-ஆக ஹ்ருதயத்திலிருந்து ஸத்யம் ஸ்புரித்திருந்தாலொழிய, ***"ஸத்யான் நாஸ்தி பரோ தர்ம:"*** (ஸத்யத்துக்கு மேலே எந்த தர்மமுமில்லை) என்று சொல்கிற சாஸ்திரகாரர்கள் எந்த ஒரு விதியையும் செய்திருக்கமாட்டார்கள்.

என்னென்னமோ கொஞ்சங்கூட புரியாததாகவும் அநேக சாஸ்திர விதிகள் இருக்கிறதே என்று யோசிக்கக் கூடாது. இந்தப் புஸ்தகத்தை ஒரு புரட்டுப் புரட்டினால் எனக்கே கொஞ்சம் தலை சுற்றுகிற மாதிரிதான் இருக்கிறது![1]. இதவ்வளவும் செய்கிறது ஸாத்யமா என்று இருக்கிறது. நான் மடாதிபதி. ஆசாரங்களை அநுஷ்டிக்க எனக்கு வசதி நிறைய உண்டு. நீங்களே [வசதி] செய்து கொடுக்கிறீர்கள். எனக்கே முடியுமா என்று இருந்தால், இந்தக் காலத்தில், டவுன் லைஃபில் மாட்டிக் கொண்டிருக்கிற உங்களைப் பற்றி என்ன சொல்வது? ஆனாலும் அவரவரும் முடிந்த மட்டும், utmost பிரயத்னம் பண்ணனும்; பாக்கியும் முடியவில்லையே என்று மனஸாரப் பச்சாத்தாபப் படணும்; 'ரிடயர்' ஆன விட்டாவது இன்னம் எவ்வளவு ஜாஸ்தி பண்ண முடியுமோ அவ்வளவு பண்ணனும் என்று த்ருட ஸங்கல்பம், சபதமே பண்ணிக் கொள்ள வேண்டும். அப்போது பரமேச்வரன் நாம் ஸின்ஸியராகக் கார்யத்தில் அநுஷ்டிக்கிற ஆசாரங்களை மட்டுமில்லாமல், மனஸில் ஸின்ஸியராக நினைக்கிறதையும், மொத்தத்தில் சாஸ்திரத்தில் நமக்குள்ள சிரத்தையையும் பார்த்து நம்மைக் கை தூக்கி விடுவான்.

1. தர்ம சாஸ்திர நூல் எதையோ புரட்டியபடி ஸ்ரீ பெரியவர்கள் இதையும், இனித் தொடர்ந்து வருவதையும் சொல்கிறார்கள். நூலின் பெயர் தெரியவில்லை.

9.20-ஆசார விதிகளில் சில

இன்னதுதான் ஆசாரத்தில் வருகிறது, இன்னது இல்லை என்று சொல்ல முடியாமல், ஸகல விஷயங்களையும பற்றி இதில் [கையிலுள்ள புஸ்தகத்தில்] போட்டிருக்கிறது. சிலதைப் பார்த்தால் நவீன நாகரிக்காரர்களுக்குச் சிரிப்பாக வரும்! [புஸ்தகத்தை முன்னும் பின்னுமாகப் புரட்டிப் படித்த படியே:]

நெருப்பை வாயால் ஊதப்படாது.

புருஷன் தீபத்தை அணைக்கக் கூடாது.

பொம்மனாட்டி பூசணிக்காயை உடைக்கக் கூடாது -

நெருப்பை வாயால் ஊதினால் சாம்பலோ, கெரஸின் புகையோ லங்க்ஸுக்குள் போய்விடும் என்று முதல் ரூலுக்குக் காரணம் சொன்னால், மற்ற இரண்டுக்கும் இப்படிப்பட்ட காரணம் ஒன்றும் தெரியவில்லை. நெருப்பை வாயாலே ஊதப்படாது என்பதற்குக்கூட சாஸ்திரம் சொல்கிற காரணம், வாயால் ஊதுவதால் எச்சில் காற்று அக்கினி பகவான் மேலே பட்டு அபசாரமாகி விடும் என்பதுதான்.

[புஸ்தகத்தைப் பார்த்தபடி] இன்ன நாட்களில் தான் [a]க்ஷௌரம் [க்ஷவரம்] பண்ணிக்கலாம்;

இன்னின்ன நாளில்தான் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாம் -

இதற்கெல்லாம் "காரணம்"என்று தேடினால் ஒன்றும் கிடைக்காது.

[புஸ்தகத்தைப் படித்தவாறு:] நகத்தைக் கிள்ளப்படாது.

எச்சில் பண்ணக் கூடாது -

இதெல்லாம் 'பெர்ஸனல் ஹைஜீன்'.

[மீண்டும் புஸ்தகம்:] சூதாடக் கூடாது;

மதுபானம் கூடாது -

இவற்றில் ethics (நன்னெறி) , ஆரோக்யம், குடும்ப வாழ்க்கையின் நன்மை எல்லாமே ஆசாரம் என்ற ரூபத்தில் வந்து விடுகின்றன.

[புஸ்தகம்:] விவாஹ காலம், யாத்ரா காலம் தவிர மற்ற ஸமயங்களில் பெண்டாட்டியோடு சேர்ந்து சாப்பிடக் கூடாது.

மத்யான்ன வேளையில் பால் சாப்பிடக்கூடாது. ராத்திரியில் தயிர் கூடாது; மோருக்கு தோஷமில்லை -

இது டாக்டர்களும் ஒப்புக் கொள்வதுதான் என்று இதிலேயே போட்டிருக்கிறது.

[புஸ்தகத்தைப் பார்த்து:] நார்மடி, பட்டு, சால்வை முதலானவற்றைத் தோய்க்காவிட்டாலும் [துவைக்கா விட்டாலும்] எப்போதும் அவை மடிக்கு உதவும். ஆனாலும் பல தடவை கட்டிக்கொண்டு அவை வியர்வையாய், அழுக்காய் ஆகிவிட்டால் அமாவாஸ்யை அல்லது த்வாதசி தினத்தில் பயற்றம் கஞ்சி சேர்த்த ஜலத்தில் துவைக்கலாம். இதனால் மடி போகாது.

9.21-பட்டுத் துணி

இங்கே பட்டைப்பற்றி என் அபிப்ராயத்தைச் சொல்ல வேண்டும். [அது] உங்களுக்கே தெரிந்திருக்கும். ஒரு முழப் பட்டுக்காக நூற்றுக்கணக்கில் பட்டுப் பூச்சிகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது. இதனாலே "அஹிம்ஸா பரமோ தர்ம": என்கிற பெரிய ஆசாரத்துக்கு பங்கம் வந்து விடுகிறது. அதுவும் தவிர, பட்டு விலையும் ரொம்ப ஜாஸ்தியிருப்பதால் பட்டுப் புடவை மோஹத்தால் குடும்பப் பொருளாதாரமே சீர் கெடுகிறது. இதிலே வசதியிருக்கிறவர்களைப் பார்த்து வசதியில்லாதவர்களும் 'காப்பி' பண்ணப்

பார்ப்பதால் ரொம்பவும் கஷ்டம், கடன், கஸ்தி உண்டாகிறது. இந்தக் காரணங்களை உத்தேசித்துத் தான் பட்டு கூடாது என்று நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். ரொம்ப அத்யாவசியமானால், வெளியூரிலோ, மழைக் காலத்தில் நாள் கணக்காகப் பெய்து கொண்டிருப்பதால் வஸ்திரம் காயாது என்பதாலோ, மடி வஸ்திரம் எப்போதும் ரெடியாய் இருந்தால் நல்லது என்றால் அப்போது 'அஹிம்ஸாப் பட்டு' என்பதாகப் பூச்சியைக் கொல்லாமலே நெய்கிற பட்டு வஸ்திரங்களை உபயோகப் படுத்தலாம். வழக்கமான பட்டின் 'நைஸ்', "ஷைனிங்' எல்லாம் அஹிம்ஸாப் பட்டுக்கு இல்லைதான். என்றாலும் ஜீவகாருண்யத்தை உத்தேசித்து இதைத்தான் உபயோகப்படுத்த வேண்டும்.

[மறுபடியும் புஸ்கத்தைப் படித்த வண்ணம்:]

அதிதிக்குப் போடாமல் சாப்பிடக் கூடாது; வாசலில் நின்றுகொண்டு தெருக்கோடி வரையில் யாராவது வெளி மநுஷ்யர்கள் சாப்பாட்டுக்கு வருவார்களா என்று பார்த்து விட்டுத்தான் போஜனம் பண்ண உட்கார வேண்டும்.

அதிதி, அப்யாகதர் என்று இரண்டு வகை உண்டு. அதிதி என்பது நமக்குத் தெரியாதவர்; தானாகவே வந்தவர். அப்யாகதர் தெரிந்தவர்; நாம் கூப்பிட்டு வந்தவர் இரண்டு பேருக்கும் அன்னம் போட வேண்டும் -

இதிலே மநுஷ்யாபிமானமே ஆசாரமாக ஆகியிருக்கிறது. ஈகையில்லாமலிருப்பது நன்னெறிப்படி தப்பு என்பது மட்டுமில்லை. அது அநாசாரமும் கூட.

[புஸ்தகம் பார்த்து:] கால் அலும்பித் துடைத்துக் கொண்டுதான் படுத்துக்கொள்ள வேண்டும்.

கார்த்தாலே பல் தேய்த்துவிட்டு இத்தனை தடவை கொப்பளிக்கணும் போஜனம் முடிந்தபின் இத்தனை தடவை கொப்பளிக்கணும்; என்றெல்லாம் கணக்கு -

இப்படிக் கொப்பளிப்பதே நம்முடைய தொண்டை கழுத்து முதலிய gland -களின் சுரப்பு எழுந்தவுடனும் சாப்பிட்டவுடனும் ஆரோக்ய ரீதியில் எப்படியிருந்தால் ஹிதமோ அப்படி இருப்பதற்கு உதவுகிறது என்று குறிப்புப் போட்டிருக்கிறது.

பல் தேய்க்காமல் bed-coffee குடிப்பது அநாசாரத்துக்கு அநாசாரம்; அநாரோக்யத்துக்கு அநாரோக்யமும். ஒரே எச்சில் ப்ரஷ்ஷை பல நாளுக்கு வைத்துக் கொள்ளாமல் அன்றன்றும் ஒரு குச்சியால் தேய்த்துவிட்டு அதைப் போட்டு விட வேண்டும். ஆலங்குச்சி, வேலங்குச்சி இதற்கு எடுத்தது என்பதால்தான் 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்பது.

இப்படியெல்லாம் நன்றாகப் பல் தேய்க்கணும், ஏப்பம் வரும் வரை கொப்பளிக்கணும் என்று போட்டிருக்கிற சாஸ்திரத்திலேயே சிராத்தம் முதலான தினங்களில் குச்சி போட்டுப் பல் தேய்க்காமல் வாயைக் குழப்பிக்கொண்டு கொஞ்சம் கொப்பளிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. ஆசாரமென்றாலே சௌசமென்று சொல்லிவிட்டு இதென்ன அசுசியாயிருக்கிறதே என்று நினைக்கக் கூடாது. சிராத்தத்தில் ஸ்நானம், மற்ற மடி ஸமாசாரங்களை ஏகமாகச் சொல்லியுள்ள அதே சாஸ்திரத்தில்தான் இப்படிச் சொல்லியிருக்கிறது என்பதாலேயே இதற்கு நமக்குத் தெரியாத காரணமிருக்க வேண்டுமென்று புரிந்து கொள்ள வேண்டும். நமக்குத் தெரியும்படியாகவும் ஒரு காரணம் இந்தப் புஸ்தகம் போட்டவர் சொல்லியிருக்கிறார். அதாவது நன்றாகப் பல் தேய்த்து, நாக்கை வழித்துக் கொண்டு, அப்புறம் கொப்பளித்தால் பித்த நீரெல்லாம் வெளியே வந்துவிடும்; மற்ற நாட்களில் அப்படி வர வேண்டியது தான்; ஆனால் இப்படிப் பித்தநீர் வந்தவுடன் பசி எடுத்து விடும்; மற்ற தினங்களில் அப்போது பாலோ, மோரோ, கஞ்சியோ பானம் பண்ணிக் கொள்ளலாம். ஆனால் சிராத்த தினத்தில் ஒட்ட ஒட்டக் கிடக்க வேண்டும். அன்றைக்கு ரொம்பவும் லேட்டாக அதாவது மத்யான்னம் ஒரு மணிக்கு மேலே அபரான்ன காலத்தில் தான் சிராத்த கர்மா ஆரம்பித்து, அப்புறம் அதை முடித்து போஜனம் பண்ண வேண்டுமாதலால் அதுவரை பசி எடுக்காமலிருக்கவே பித்த ஜலமும் வெளியே போக வேண்டாமென்று பல் தேய்க்கிறதை இப்படி relax

செய்திருக்கிறது என்று எழுதியிருக்கிறார். அதாவது இதுவும் தாக்ஷிண்யத்தோடு ஆசாரம் பண்ணிக் கொடுத்திருப்பதில் சேரும்.

[புஸ்தகத்தைப் புரட்டி:] எந்தெந்த உறவுக்காரர்கள் செத்துப்போனால் எத்தனையெத்தனை நாள், அல்லது நாழி தீட்டு; செத்துப் போய் எத்தனையோ நாழி அல்லது நாள் கழித்துத்தான் தகவலே கிடைக்கிறதென்றால் அதுவரை தீட்டு காக்காததற்கு என்ன பிராயசித்தம் என்கிற ஆசௌச விதிகளும்; இதே மாதிரி குழந்தை பிறந்தால் இன்னின்ன பந்துக்களுக்கு இத்தனை நாள் தீட்டு என்கிற ஸூதக விதிகளும் பக்கம் பக்கமாகப் போட்டிருக்கிறது.

இந்த இரண்டு தீட்டுக்கும் இடையே வித்யாஸங்கள் இருக்கின்றன. இந்த இரண்டுக்குமே வித்யாஸமாக க்ரஹண காலத் தீட்டைப் பற்றிப் போட்டிருக்கிறது. மற்ற தீட்டுகளில் ஜபம் கூடாது என்றால், க்ரஹண காலத்தில் ஜபம் பண்ணுவதற்கு வீர்யம் அதிகம்; அது அபரிமிதமாகப் பலன் தரும்.

எந்த தேசத்திலும் இல்லாதபடி ரொம்பக் கடுமையாக தீட்டுக்களை, அதிலும் சாவுத் தீட்டைச் சொன்ன அதே சாஸ்திரம், ஒரு பிள்ளை விவாஹ காலத்தில் ஸங்கல்பம் செய்து கொண்டு கங்கணம் கட்டிக் கொண்டு விட்டபின் அந்தச் சடங்கு சேஷ ஹோமத்தோடு முடிகிற வரையில் அவனுக்கு சொந்த மாதா பிதாக்கள் மரணமடைந்தால் கூடத் தீட்டுக் கிடையாது என்றும் சொல்கிறது.

இப்படியெல்லாம் விசித்ரமாக ஏகப்பட்டவை போட்டிருக்கிறது.

[புஸ்தகத்தைப் புரட்டி] இளநீரை வெண்கலப் பாத்திரத்தில் வைத்தால் அது கள்ளுக்கு ஸமமாகிவிடும் -

இதற்கு 'கெமிகல் ரியாக்க்ஷன்' ஏதாவது காரணமாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லலாம். ஆனால் அது மட்டும் காரணமாயிருக்க வேண்டுமென்பதில்லை.

9.22-சாஸ்திர கர்மாவும் ஸிந்தெடிக் வஸ்துக்களும்

‘கெமிகல்’ என்றதால் மனஸில் தோன்றுகிற ஒன்றைச் சொல்கிறேன். இந்த நாளில் இயற்கையான வஸ்துக்களுக்குப் பதில் அதே பலனைத் தருகிற பொருள்களைக் கெமிஸ்ட்ரி மூலம் ‘ஸிந்தெடிக்’காகப் பண்ணுகிறார்கள். இம்மாதிரி இப்போது சாஸ்திர கர்மாக்களில் பிரயோஜனப்படுகிற திரவியங்களின் பலனைத் தருகிற கெமிகல்களையும் பண்ணலாம். அதனால் அந்த கெமிகலைக் கர்மாவில் பிரயோஜனம் பண்ணிவிடக் கூடாது. ஏனென்றால் இரண்டும் ஒரே பலனைத் தருவதுதான் என்று இவர்கள் சொல்லும்போது த்ருஷ்ட பலனைத்தான் சொல்கிறார்கள். அதைவிட முக்யமான அத்ருஷ்ட பலன் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற த்ரவியத்துக்குத்தான் உண்டே தவிர, த்ருஷ்டமாக அதே பலனுள்ள மற்ற எதற்கும் கிடையாது. ‘ஸிந்தெடிக்’காக (செயற்கையாக)ச் செய்ததுதான் என்றில்லை; இயற்கையாகவே உண்டாகிறவற்றில் கூட சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றை ‘ஸப்ஸ்டிட்யூட்’ பண்ணக்கூடாது. சாஸ்திரத்திலேயே ‘ஸப்ஸ்டிட்யூட்’ சொல்லியிருக்கிற அம்சங்களில் மாத்திரம் ஒன்றுக்குப் பதில் அதிலேயே சொல்லியிருக்கும் இன்னொன்றை உபயோகப்படுத்தலாம்.

வெளியிலே நமக்குத் தெரிகிற பலன் ஒன்று என்பதால் வஸ்து ஒன்றாகிவிடுமா? கல்கண்டும் படிக்காரமும் பார்வைக்கு ஒரே மாதிரியிருந்தாலும் ஒன்றாய்விடுமா? ருசி, பௌதிகமான குணங்கள் இவற்றைக் கொண்டு இவை இரண்டும் வேறே வேறே என்று தெரிந்து கொள்கிறோம். இந்த பௌதிக விஷயங்கள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியிருக்கிறவைகளும்கூட, பௌதிகாதீதமான ரீதியில் வேறே வேறேதான் என்றும் சாஸ்திரகாரர்கள் கண்டுபிடித்து, இது மாதிரி வஸ்துவில் கூட இதைத்தான் சேர்க்கலாம், இது கூடாது என்கிறார்கள். ஒரே மாதரிக் காய்கறிதான் என்றாலும் சிராத்தத்தில் பீன்ஸ் சேர்க்காதே, அவரைக்காய் சேர் என்கிறார்கள்; மிளகாயும் உறைப்பு, மிளகும் உறைப்பு என்றாலும் மிளகாய் சேர்க்காதே, மிளகு சேர் என்கிறார்கள்.

[புஸ்தகத்தைப் பார்த்து] தீட்டுக் காலத்தில் எந்த விரதமும் இருந்து பலனில்லைதானென்றாலும், அப்போதுங்கூட ஏகாதசி வந்தால் உபவாஸம் இருக்கத் தான் வேண்டும்.

ஒரு நாளில் த்வாதசி எத்தனை நாழிகையிருக்கிறதோ அதில் எட்டில் ஒரு பாகத்துக்கு 'ஹரிவாஸரம்' என்று பெயர். இதற்குள்ளேயே பாரணை (முதல் நாள் இருந்த ஏகாதசி உபவாஸத்தை முடித்து போஜனம் பண்ணுவது) செய்து விடவேண்டும். இதற்காக, வழக்கமாக மாத்யான்ஹிக காலத்திலேயே (காலை ஆறு மணிக்கு ஸூர்யோதயமானால் காலை 10-48 லிருந்து பகல் 1-12 வரை மாத்யான்ஹிகமாகும்) பண்ண வேண்டிய மாத்யான்ஹிகம், வைச்வதேவம் முதலானவற்றை த்வாதசியன்று மாத்திரம் முன்னாலேயே பண்ணி விடலாம் என்று relax செய்திருக்கிறது. ஆனால் த்வாதசியன்று திவஸம் வந்தால் அதை அபரான்னம் என்பதாக (பிற்பகல் 1-12 லிருந்து 3-36 வரை) மாத்யான்ஹிகத்துக்கு அப்புறம் வருகிற காலத்தில்தான் பண்ண வேண்டும். அதன் பிறகே பாரணை.

ரொம்பவும் சிரத்தையோடு செய்வதால் சிராத்தம் என்றே பெயருள்ள திவஸத்துக்கு இப்படி முக்யத்வம் கொடுத்திருக்கிறது. தீட்டுக் காலத்தில்கூட ஏகாதசிப் பட்டினி இருக்கணுமென்று சொன்னேனல்லவா? ஆனால் ஏகாதசியன்று திவஸம் வந்தால் அன்று பித்ருசேஷமாக அன்னம், பலவித காய்கறிகளுடன், எள்ளுருண்டை அதிரஸம் முதலிய பக்ஷணங்களுடனும் சாப்பிடத்தான் வேண்டுமென்று வைத்திருக்கிறது. மாத்வர்கள் ஏகாதசிக்கு ரொம்பவும் உயர்வு தந்திருப்பதால் அன்றைக்கு திவஸம் செய்வதில்லை.

[புஸ்தகத்தைப் பார்த்தவாறு] த்வாதசிப் பாரணையில் ஆத்திக் கீரை, சுண்டைக்காய், புளிக்குப் பதில் எலுமிச்சை, நெல்லி முள்ளி அவசியம் போஜனம் செய்ய வேண்டும். ஒரு நாள் பட்டினிக்குப் பின் உடம்பில் ஜீர்ண நீர்கள் நல்லபடி சுரப்பதற்கு இந்த ஆஹாரமே உதவுகிறதென்று dieticians (சமையல் விஞ்ஞானிகள்) சொல்வதாகவும் இதில் போட்டிருக்கிறது.

[புஸ்தகம் பார்த்து:] பிராம்மணர்கள் என்றுமே வெங்காயம், உள்ளிப்பூண்டு சாப்பிடக்கூடாது. மற்றவர்களும் விரத தினங்களில் சாப்பிடக்கூடாது. மந்திர

ரக்ஷணையை முன்னிட்டே பிராம்மணருக்கு இங்கே கூடுதல் நியமம். பிரத்யக்ஷத்திலேயே வெங்காயத்தால் காம உணர்ச்சி ஜாஸ்தியாவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாகப் [புஸ்தகத்தில்] போட்டிருக்கிறது. இதே மாதிரி சாஸ்திரத்தில் சிறப்பித்துக் கூறப்படும் தூதுவளையைச் சாப்பிடுபவர்களுக்கு இந்திரிய நிக்ரஹம் சற்று ஸுலபமாக ஏற்படுவதும் பிரத்யக்ஷத்தில் தெரிகிறது.

நோய் வந்த காலத்தில் பூண்டு சேர்த்த மருந்து மற்றும் ஆசார விருத்தமான [முரணான] சரக்குகளைச் சாப்பிட சாஸ்திரமே தாக்ஷிண்யத்தோடு அநுமதிக்கிறது. ஆனால் பிற்பாடு பஞ்சகவ்யாதி புண்யாஹவாசனம் பிராயசித்தமாகச் செய்து கொள்ளச் சொல்கிறது.

[புஸ்தகத்தைப் புரட்டி:] ரொம்பவும் ஜீவதயையோடு இங்கே ஒரு ஆசாரம்! வாசலில் ஒருத்தன் பசி என்று நிற்கிறபோது, அவனுக்குப் போடாமல் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அந்த சாதம் மாம்ஸத்துக்கு ஸமம்; அப்போது குடிக்கிற தீர்த்தம் கள்ளுக்கு ஸமம்.

ரிது காலத்தில் ஒரு ஸ்த்ரீ எப்படியிருக்க வேண்டும் என்பது முதலான மாதவிடாய்த் தீட்டுக்களைப் பற்றி நிறையப் போட்டிருக்கிறது.

9.23-தீட்டால் விளையும் தீமை

தீட்டும் மடியும் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால் 'ஸுபர்ஸ்டிஷன்' என்கிறார்கள். ஆனால் தீட்டுக் கலப்பதால் என்னென்ன உத்பாதங்கள் உண்டாகுமென்று சாஸ்திரத்தில் போட்டிருக்கிறதோ அதெல்லாம் கண்ணுக்குத் தெரியும்படியாக இப்போது உண்டாகி வருவதைப் பார்க்கிறோம். தனி மனிதனின் வியாதி வக்கை, மஹாக்ஷேத்திரங்களிலும் விபத்து, natural calamities — இயற்கையின் சீற்றம் - என்கிற வெள்ளம், வறட்சி, பூகம்பம் எல்லாமே மடித் தப்பான காரியங்கள் அதிகமானபின் விருத்தியாகிக் கொண்டிருப்பதைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். அப்படியும் அந்த effect-க்கு [விளைவுக்கு] இந்த cause [காரணம்] என்று ஒப்புக்

கொள்ளமாட்டோமென்றால், இதுதான் எனக்குப் பெரிய ஸூபர்ஸ்டிஷனாகத் தெரிகிறது.

9.24-உணர்ச்சிப் பூர்வமான விஷயங்கள்

'ஸென்டிமென்ட' லாக [உணர்ச்சிப் பூர்வமாக] மனஸை உறுத்துகிற விஷயங்களையும் ஆசாரங்களில் சொல்லியிருக்கிறது. இன்னொருத்தர்மேலே நம் கால்பட்டுவிட்டால், புஸ்தகத்தை மிதித்துவிட்டால் நமக்கே என்னமோ குற்றம் பண்ணினாற்போலத் தோன்றுகிறது. பெரியவர்களாக இருக்கிறவர்கள் வருகிறபோது நாம் உட்கார்ந்திருந்தாலோ, படுத்திருந்தாலோ, அவர்களுக்கு எதிரே காலை நீட்டிக் கொண்டிருந்தாலோ, நமக்காகவே உள்ளே ஏதோ அபசாரம் பண்ணிவிட்டது போலத் தோன்றுகிறது. நல்ல லக்ஷ்மீகரமாக ஒரு ஸுமங்கலி நாம் காரியத்தை ஆரம்பிக்கும்போது வந்தாலோ, வெளியே கிளம்பும்போது எதிர்ப்பட்டாலோ ஒரு மனநிறைவு உண்டாகிறது. இதெல்லாமே சாஸ்திரமாகவும் வந்து விடுகின்றன.

இதே ஸமயத்தில் அமங்கலியானவர்கள் ரொம்பவும் வருத்தப்படும் படியாகவும் அவர்களை ஒதுக்கி வைத்து விதிகள் [புஸ்தகத்தில்] போட்டிருக்கிறது. தாங்கள் நல்ல வைராக்யத்தோடு, ஈஸ்வர ஸ்மரணை தவிர வேறே பந்த பாசம் இல்லாமல் ஜீவித்துக் கடைத்தேற வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் இப்படி ஒதுக்கி வைத்திருக்கிறார்களென்று அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சாஸ்திரத்தில் ஒற்றைப் பிராமணன் எதிரே வந்தால் அபசகுனம் என்றுந்தானே சொல்லியிருக்கிறது? இதன்படி ஒரு பெரிய வேத கனபாடிகள் தனியாக எதிரே வந்தாலும் அபசகுனம் என்றுதானே ஆகிறது? அதனால் இதெல்லாம் நம் புத்தி பூர்வமாக ஸமாதானம் சொல்கிற ஸர்க்கிளுக்குள் இல்லை.

9.25-மந்திர பூர்வமாய் தெய்வ நினைவோடு காரியம்

மனோ, வாக், காயம் என்கிறபடி மனஸால் பகவத் ஸ்மரணம், வாக்கினால் மந்திரம், காயத்தால் காரியம் மூன்றையும் சேர்த்துத்தான் ஆசாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மந்திரம் அல்லது பகவந் நாமம் இல்லாமல் காரியத்தைப் பண்ணுவதில் பிரயோஜனம் இல்லை. மநுஷ்யன் செய்கிற காரியத்தில் அநேகம் எல்லா ஜீவ ஜந்துக்களுந்தான் செய்கின்றன. ஒரு கிருமியிலிருந்து ஆரம்பித்து எந்த ஜீவராசியும் சாப்பிடத்தான் செய்கிறது. அப்படியே மநுஷ்யனும் செய்தால் மநுஷ்ய ஜன்மா எடுத்து என்ன பிரயோஜனம்? அதனால்தான் இவன் பிராணாஹுதி செய்து, கோவிந்த நாமாவைச் சொன்னபடிச் சாப்பிடவேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. மீன்கூடத்தான் ஸதாவும் ஜலத்திலேயே முழுகியிருக்கிறது. அதனால் அது ஸ்நானம் பண்ணி மடியாயிருக்கிறதாகி விடுமா? மந்திரவத்தாகக் குளித்தால்தான் அது ஸ்நானமாகும். அல்லது கோவிந்தா, கோவிந்தா என்றோ, இஷ்ட தெய்வத்தின் நாமத்தைச் சொல்லிக் கொண்டோ ஸ்நானம் செய்யவேண்டும். இப்படி எல்லாமே காரியமாக மட்டுமில்லாமல் மனஸும் வாக்கும் ஈச்வரனிடம் செலுத்தப்பட்டுச் செய்யப்படுவதுதான் ஆசாரம்.

மீனைப் பற்றிச் சொன்னதால் ஒன்று வேடிக்கையாய் ஞாபகம் வருகிறது. மடி, மடி என்று எச்சில், துப்பல் ரொம்பவும் பார்க்கிற சாஸ்திரத்திலேயே ரொம்பவும் மடித் தப்பு மாதிரித் தோன்றுகிற சிலவற்றைப் பூஜார்ஹமாக [பூஜைக்கு உரியதாக] உயர்வு கொடுத்துச் சொல்லியிருக்கிறது. தேனீயுடைய எச்சில்தான் தேன். 'வண்டெச்சில்' என்றே அதற்கு ஒரு பேர். பட்டுப்பூச்சியின் எச்சில் இழைதான் பட்டு. கன்றுக்குட்டி எச்சில் பண்ணி ஊட்டின பிறகு கறப்பதே பால். புண்ய தீர்த்தங்களிலும் மத்ஸ்யங்கள் வாழத்தான் செய்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் ஈச்வரராதனையிலேயே பிரயோஜன படுத்துகிறோம்.

இப்படி சாஸ்திரத்திலேயே சாஸ்திரத்தின் பொதுவிதிக்கு மாறாகவும், அதைத் தளர்த்திக் கொடுத்து relax பண்ணியும் சில விதிகள் இருக்கின்றன. இப்படியிருக்கிறதே என்று நாமும் மேலே மேலே விலக்குகளைச் சேர்த்துக்

கொண்டு போவது, தளர்த்திக் கொண்டு போவது என்பதாக ஸ்வதந்திரம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

9.26-மூல சாஸ்திரமும், மாறான ஸம்பிரதாயமும்

பொதுவான சாஸ்திராசாரம் இருக்கும்போதே, அதற்குள் வித்யாஸமாகச் சில குலாசாரங்கள், ஸம்பிரதாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மூல சாஸ்திரத்தில் இருப்பதற்குக் கூடுதலாகவும், சில சின்ன அம்சங்களில் அதற்கு மாறாகவும்கூட நீண்ட காலமாகவே நல்ல சிஷ்டர்ககள் உள்பட பலரும் அநுஸரிக்கிற அநேக ஸம்பிரதாயங்கள் எப்படியோ ஏற்பட்டிருக்கின்றன.

ஒன்றுக்கொன்று வித்யாஸமான இந்தப் பல ஆசரணைகளைக் குலாசாரம், தேசாசாரம் என்ற பெயர்களில் பிற்கால தர்ம சாஸ்திரங்களே ஒப்புக் கொண்டிருக்கின்றன என்றும், சாஸ்திரத்தில் நிரம்ப பயபக்தியுள்ள பூர்விகர்கள் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட மாறுதல்களும் செய்யப்பட்டிருப்பதால், அவர்களுக்கு இப்படிப் பண்ணாலமென்று ஏதோ ஒரு திவ்யாக்ஞை கிடைத்துத்தான் மாறுதல் செய்திருப்பார்களென்று வைத்துக் கொண்டு, அந்தப்படியே நாமும் பண்ணிக்கொண்டு போகலாம் என்றும் சொன்னேன். இதனால் இப்போது நாமும் தலைக்குத் தலை தோன்றின மாதிரியெல்லாம் மாற்றிக்கொண்டு போகலாம் என்று அர்த்தமாகாது. நாம் பண்ணுகிற மாறுதல், இப்போதெல்லாம் 'கான்ஷன்ஸ்', 'மனஸ்ஸாக்ஷி' என்று பெரிசாகச் சொல்கிறார்களே அதன்படி நமக்குத் திருப்தியாயிருந்து விட்டால் மட்டும் போதாது. அதற்குப் பரமேஸ்வரனின் அங்கீகாரம் இருக்கிறது என்று நமக்கு நிச்சயமாகத் தெரிய வேண்டும்.

குலாசாரம், தேசாசாரம் என்று நமக்குத் தெரிந்து அநேக தலைமுறைகளாக வந்திருப்பவை மூல சாஸ்திரங்களுக்குக் கொஞ்சம் வித்யாஸமாகப் போகிற இடங்களில் கூட அவற்றின் வழியிலேயே நாமும் போவதில் தப்பில்லை என்று நான் சொன்னாலும், இப்போது ரொம்பவும் சாஸ்திரக்ஞர்களாக இருக்கப்பட்ட சிலபேர், "ஸித்தாந்தம், அதை வைத்து உண்டான ஆத்மார்த்தமான அநுஷ்டானங்கள், சின்னங்கள் ஆகியவற்றில்

குலாசாரப்படியே பண்ணவேண்டுமென்றாலும், இவ்வளவு ஆத்மார்த்தமாக இல்லாத விஷயங்களுக்காக தேசாசாரம், குலாசாரம் என்ற பெயர்களில் ஆதி வைதிகாசாரத்துக்கு வித்யாஸமாகப் போவது ஸரியில்லைதான். மூலத்தைத் தான் ஸ்ட்ரிக்டாக ஃபாலோ பண்ணணும்" என்று தைரியமாக ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறதிலும் ஸாரம் இல்லாமலில்லை. தேசாசாரம், குலாசாரம் முதலியவற்றைப் பற்றிச் சற்றுமுன் நான் சொன்னதற்கு ஒரு sub-clause போட்டால் தேவலையென்று இப்போது தோன்றுகிறது: அதாவது, ஒரு ஸித்தாந்தத்தோடு சேராமலே மூல சாஸ்திரத்துக்கு மிகவும் வித்யாஸப் பட்டிருக்கிற சில பழக்கங்கள் பல தலைமுறைகளாகவே ஏதோ காரணங்களுக்காக ஒரு ஸம்பிரதாயமாக வளர்ந்து வந்திருந்தால்கூட இவற்றை ஒரிஜனல் சாஸ்திரப் பிரகாரமே திருத்தினால்தான் தேவலை என்று தோன்றுகிறது உதாரணமாக:

மூன்று தலைமுறைகளுக்குப் பொதுவான மூதாதையில்லாவிட்டால்தான் உறவுக்காரர்களுக்குள் கல்யாணம் பண்ணலாம் என்று சாஸ்திரத்திலிருக்கிறது. ஆரோக்யத்தின்படி consanguinous marriage (ரத்த பந்துக்களுக்குள் விவாஹம்) பற்றிச் சொல்கிறவர்களும் சாஸ்திரம் சொல்வது ஸரியே என்கிறார்கள். ஆனாலும் நம் தக்ஷிண தேசத்தில் நீண்ட காலமாகவே பரம வைதிகக் குடும்பங்களில் கூட அத்தான்-அம்மங்காள், அம்மாஞ்சி-அத்தங்காள் என்று அத்தை, மாமா ஸந்ததிகளுக்கிடையே, – அதாவது இரண்டாவது மூதாதையான தாத்தாவே பொதுவாயிருக்கிற உறவு முறையில் -சாஸ்திரத்துக்கு முரணாகக் கல்யாணம் பண்ணிக்கொண்டுதான் வருகிறார்கள். இன்னம் ஒரு படி மேலே போய் மாமா-மருமாளே பண்ணிக் கொள்வதையும் சில இடங்களில் பார்க்கிறோம். 'இதென்ன அநியாயம்?' என்று வடக்கத்திக்காரர்கள் கேட்கிறார்கள். வடக்கே குளிர்காலத்தில் குளிர் மிகவும் அதிகமாயிருப்பதாலும், அநேக துருக்கர் ஆட்சியின் இன்ஃப்ளுயென்ஸ் எத்தனையோ நூற்றாண்டுகளாக அதிகமாக இருந்திருப்பதாலும் நம்மை விட அவர்கள்தான் ரொம்ப ஆசார ஹீனமாக, பூஜாரிகூட சட்டை போட்டுக்கொண்டும், ஸாதுக்கள்கூட ஹுக்கா குடித்துக்கொண்டும்

இருந்தாலும், இந்தக் கல்யாணக் கொள்வினை-கொடுப்பனையில் அவர்கள்தான் நம்மை விட சாஸ்திரோக்தமாக இருக்கிறார்கள்.

வேறு சில விஷயங்களிலும் அவர்கள் நம்மைவிட வைதிகம். எனக்கே ஆசாரம் சொல்லிக் கொடுக்கிற வடக்கத்திக்காரர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். ஸமீபத்தில்[2] நடந்த ஒன்று சொல்கிறேன். கோரக்பூரில் 'கல்யாண கல்பதரு' பத்திரிகை நடத்துகிறார்கள். அந்த கீதா ப்ரெஸ்காரர்கள் பக்த கோஷ்டியோடு தக்ஷிணத்துக்கு யாத்ரை வந்திருந்தார்கள். நானூறு, ஐநூறுபேர் இருக்கும். காஞ்சீபுரத்துக்கும் வந்தார்கள். அன்றைக்கு எனக்கு மௌன தினம். மா மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். தர்சனத்துக்கு வந்தார்கள். பிரஸாதமாகக் கல்கண்டு தந்தேன். அப்போது பல பேர் என்னவோ தயங்கி தயங்கி வாங்கிக்கொள்கிற மாதிரி இருந்தது. நான் பாட்டுக்குக் கொடுத்துக்கொண்டே போனேன். ஒரு பெண் மட்டும் இப்படித் தயக்கதோடு வாங்கிக் கொள்வது என்றில்லாமல், அதை வாங்கிக் கொள்ளவே இல்லை. பளிச்சென்று, "யஹ் காம் மேம் நஹி ஆதா; கோயி தூஸ்ரா ப்ரஸாத் தீஜியே" என்று சொல்லிவிட்டாள். அதாவது, "இது ஒரு காரியத்துக்கும் பிரயோஜனப்படாது; வேறே ஏதாவது பிரஸாதம் தாருங்கள்" என்றாள். உடனே எனக்கு மற்றவர்கள் ஏன் தயங்கினார்கள் என்று காரணம் புரிந்துவிட்டது. முன்னெல்லாம் சர்க்கரை ஆலைகளில் கரும்பைச் சுத்தமாக்கிக் கல்கண்டு பண்ணுவதற்கு மாட்டு எலும்புகளை உபயோகப்படுத்தி வந்தார்கள். அதனால் அது ஸ்வாமி நைவேத்யமாகவும் பிரஸாதமாகவும் இருப்பதற்கில்லை என்று வடக்கே வைத்திருக்கிறார்கள். [1934-36ல்] நான் வடக்கே யாத்ரை பண்ணினபோது இதைத் தெரிந்து கொண்டு சேர்க்கக் கூடாது என்று வைத்திருந்தேன். அப்புறம் கொஞ்சம் வருஷத்துக்குப் பிற்பாடு ஆலைக்காரர்கள் சிலர் இப்போதெல்லாம் எலும்பை உபயோகபடுத்தாமலே வேறு தினுஸில் ப்ராஸெஸ் பண்ணுவதாகத் தெரிவித்தார்கள். அதிலிருந்து மறுபடி கல்கண்டு சேர்ப்பது என்று ஆரம்பித்தேன். ஃபாக்டரிகளின் பழைய முறையை நினைத்துத்தான் இப்போதும் இந்த வடக்கத்தி கோஷ்டி கல்கண்டை 'அக்ஸெப்ட்' பண்ணிக்கொள்ள முடியவில்லை; ஆனாலும் 'ரிஃப்யூஸ்' பண்ணினால்

ஸ்வாமிஜிக்கு மரியாதைக் குறைச்சலாச்சே என்று 'ரிலக்டன்ட்'டாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெண்ணானால் ஆசார்யனைவிட ஆசாரந்தான் முக்கியம் என்று (ஆசார்யர்கள் ஒருத்தர் போய் இன்னொருத்தர் என்று வந்து கொண்டேயிருக்கிறார்கள்; ஆசாரம்தானே என்றைக்கும் சாச்வதமாக, இத்தனை ஆசார்யர்களுக்கும் basic-ஆக இருக்கிறது என்று) தைரியமாக: 'இது வேண்டாம்; வேறே கொடுங்கோ' என்று சொல்லி விட்டாளென்று புரிந்து கொண்டேன். மௌனமானதால் அப்போது ஒன்றும் எக்ஸ்ப்ளைன் பண்ணவில்லை. நம்மைவிடச் சிலதில் வடதேசக்காரர்கள் சாஸ்திரோக்தமா யிருக்கிறார்களென்பதற்காகச் சொன்னேன்.

இப்படியேதான் பிரம்மசர்ய காலத்திலிருந்து அங்கேதான் கச்சம் போட்டு வேஷ்டி உடுத்துகிறார்கள். குருகுலத்தில் ஸமாவர்த்தனம் ஆனதும் – அதாவது படிப்பு பூர்த்தியானதுமே - கல்யாணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் பஞ்சகச்சமும் மேல் வேஷ்டியும் ஒருத்தனுக்கு உண்டு என்பதுதான் சாஸ்திரம். இப்போது குருகுலவாஸமென்பதே போய்விட்டதென்றாலும் எங்கேயாவது நாலு பசங்கள் பாடசாலைகளில் அத்யயனம் பண்ணுவதாவது இருக்கிறதல்வா? தக்ஷிண தேசத்தில் இப்படிப்பட்ட பாடசாலைப் பசங்கள் கூடப் படிப்பு முடித்தபின், கல்யாணமாகும் வரையில் முன்தலைமுறைகளிலும் இப்படித்தானிருந்திருக்கிறது. மற்றப் பிராந்தியங்களிலெல்லாம் ஸகல வர்ணத்தாருமே கச்சமில்லாமல் வேஷ்டி கட்டுவதில்லை என்று வைத்துக் கொண்டிருக்க, தமிழ் நாட்டிலும் மலையாளத்திலும் மாத்திரம் பிராம்மணன் உள்படத் 'தட்டுச்சுற்று' என்று ஒன்றுக் கட்டிக் கொள்வதாயிருக்கிறது. இதுவும் அசாஸ்திரீயமே; அநாசரமே.

சாஸ்திரங்களில் சொன்னதற்கு மாறாகச் 'அச்சான்யம்' என்ற பேரில் சிலவற்றைப் பின்பற்றுவதாக ரொம்ப காலமாகவே ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. உதாரணமாக: தாயார் தகப்பனார் உள்ளவர்கள் பூணூலைத் தோள் மாற்றிப் போட்டுக்கொண்டால் பார்க்க அச்சான்யமாயிருக்கிறது. இதனால் பிரம்மயஜ்ஞத்தில் மாதா-பிதா உள்ளவர்கள்கூட, தங்கள் வம்சத்தின் நேர் மூன்ற மூதாதைகளைத் தவிர்த்து, வேத சாகா-ஸூத்ர முன்னோர்களுக்கு பூணூலை மாற்றிப் போட்டுக்கொண்டு தர்ப்பணம் பண்ணத்தான்

வேண்டுமென்று சாஸ்திரத்தில் இருந்தாலும், அப்படிச் செய்யாமலிருக்கிறார்கள்.

கல்யாணமாகாத அக்கா இருக்கிறபோது தம்பிக்குப் பூணூல் போடக்கூடாது; ஒரு வீட்டில் மூன்று பிரம்மச்சாரி இருக்கக்கூடாது என்கிற மாதிரி வெறும் ஸென்டிமென்டில் தோன்றிய வழக்குகளை ஏதோ பெரிய சாஸ்திர விதி மாதிரி ஃபாலோ பண்ணிக்கொண்டு, வாஸ்தவத்திலே சாஸ்திரத்தில் கண்டிப்பாக உபநயனத்துக்குச் சொல்லியுள்ள வயசு வரம்பை மீறுகிறார்கள். இம்மாதிரி ஸநாதன வைதிக மதத்தின் 'ஸ்பிரிட்'டுக்கே வித்யாஸமாகச் செய்வதையெல்லாம் மாற்றினால்தான் தேவலை.

'ஸதாசாரம்' என்பதற்கு லக்ஷணம் சொல்கிற போதே அது ச்ருதி-ஸ்மிருதிகளின் மூல நூல்களுக்கு விரோதமில்லாமலிருக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

யஸ்மிந் தேசே யத் ஆசார: பாரம்பர்ய: க்ரமாகத: |
ச்ருதி-ஸ்ம்ருத்-யவிரோதேந ஸதாசாரஸ்-ஸ உச்யதே ||

பரம்பரையாக, வழி வழி, அநேக ஸத்துக்கள் வெவ்வேறு தேசங்களிலோ, ஒரு தேசத்தின் வெவ்வேறு சீமைகளிலோ எப்படி வாழ்ந்திருக்கிறார்களோ அந்த முறைக்கு 'ஸதா சாரம்' என்று பெயர் என்று broad-minded-ஆக (விசால மனஸோடு) இங்கே லக்ஷணம் கொடுக்கிறபோதே ஆனாலும் நம் தேசத்தில் எந்தச் சீமையானாலும் இந்த ஆசாரங்கள் ச்ருதி ஸ்மிருதிகளுக்கு அவிரோதமாக அதாவது பொதுவான வேதத்திற்கும், மூல தர்ம சாஸ்திரங்களுக்கும் விரோதமாகப் போகாதவையாக இருக்க வேண்டுமென்றும் நிபந்தனை போட்டிருக்கிறது: **ச்ருதி-ஸ்ம்ருத்-யவிரோதேந.** சாஸ்திரங்களில் அது போடுகிற விதிக்கு மாறாக அதுவே விலக்கு தருகிற இடத்தில் மட்டுந்தான் நாமும் விலகிப் போகலாம்; மற்றபடி, மூலப்படிதான் செய்ய வேண்டும். செய்வது என்பது தற்போதைய வாழ்க்கை முறையில் ஸாத்யமோ ஸாத்யமில்லையோ; மனஸிலாவது மூல சாஸ்திர நூல்தான் 'அதாரிடி' என்ற எண்ணம் வேண்டும், அந்தப்படி பண்ணத்தான் நம்மால் முடிந்த அளவு முயலவேண்டும்.

1 இவ்விஷயமாக "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் "பிரம்மசரியம்" என்ற உரையில் 'சாஸ்திர விதியும் பொது வழக்கும்' என்ற உட்பிரிவும் பார்க்க.

2 1956-ல் நடந்ததாக இருக்கலாம்.

9.27-கேள்வி கேட்காமல்

விவாஹத்தில் கங்கணம் கட்டிக்கொண்டு தீக்ஷை பண்ணிக்கொண்டுவிட்ட வதூவரர்களுக்கு [மண மக்களுக்கு] சாவுத் தீட்டு கூட கிடையாது என்று சாஸ்திரமே சொல்கிறது. யஜ்ஞ தீக்ஷிதனுக்கும் ஏறக்குறைய இப்படியே அது தான் போட்ட கண்டிப்பான ஆசௌச ரூலுக்குத் தானே 'எக்ஸம்ப்ஷன்' தருகிறது. ரதோத்ஸவத்திலே எந்த ஜாதியார், எந்த வியாதிஸ்தர் மேலே இடித்து மோதிக்கொண்டு தேர் இழுத்தாலும் விழுப்பாகாது: வீட்டுக்கு வந்தபின் ஸ்நானம் செய்யக் கூடாது என்று சாஸ்திரத்தில் இருக்கிறது. வடக்கே 'ஹோலி'யிலும் இப்படியே தீட்டுக் கிடையாதென்று வைத்திருக்கிறார்கள். 'க்ளீன்லினென்ஸ்'ஸுக்காகத்தான் சாஸ்திரம் ரூல்களைக் கொடுத்திருக்கிறது என்று வைத்துக்கொண்டுவிட்டால், "தேர்த் திருவிழாவுக்குப் போய்விட்டு வந்த பின்பு கசகசவென்று இருக்கிறதே, குளித்தால்தான் க்ளீன்லினெஸ்" என்று தோன்றி ஸ்நானம் செய்யப் போவோம். அது தப்பு. **சுத்தத்துக்கும்** அநேக ஆசாரங்கள் உதவியாயிருக்கிறதென்பதால் **சுத்தத்துக்காகவே** எல்லா ஆசாரமும் என்று ஆக்கிக் கொள்வது சரியில்லை. 'Cleanliness next to godliness' என்று தான் அவர்களும் [மேல் நாட்டினரும்] சொல்கிறார்கள்: தெய்வாம்சமாக இருக்கிறதற்கு அடுத்தபடி – ஒரு படி கீழேதான் – சுத்தமாயிருப்பதென்பது என்கிறார்கள். அதனால் தெய்வ ஸம்பந்தமாக நம்மைச் சேர்க்கிறதையே முக்ய நோக்கமாய்ஆசாரங்கள் கொண்டிருப்பதால், இதற்காக 'க்ளீன்லினெஸ்'ஸை அதுவிடச் சொல்கிற இடங்களில் விடவேண்டியதுதான். நமக்குத் தெரிகிறபடி சுத்தமோ இல்லையோ, ஆத்ம பரிசுத்தியை

'அல்டிமேட்'டாக [இறுதியாக] உத்தேசித்தே ஆசாரங்கள் ஏற்பட்டிருப்பதால் அந்த லக்ஷ்யத்தை அடைய அது விதிக்கிற விதத்தில் தான் நடக்க வேண்டும். அதனால் அசுத்தம், அநாரோக்யம் ஏற்பட்டாலும் சரி, அது நவீனக் கொள்கைகளுக்கு அநாகரிகமாக இருந்தாலும் சரி, ஸயன்ஸுக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்துவராவிட்டாலும் சரி, கேள்வி கேட்காமல் அதற்கு அடங்கித்தான் நடக்கணும்.

9.28-இம்மை நலன்களும் தருவது

பொதுவாக ஆசாரங்கள் வெளிச் சுத்தம், ஆரோக்யம், ஸமூஹத்தின் ஸௌஜன்யம், குடும்ப வாழ்வின் ஒழுங்கு எல்லாவற்றையுங்கூடத் தருவதாக - அதாவது இம்மையிலும் ஸௌக்யம் தருவதாகவேதான் உள்ளன. அதனால் தான், ***"சாஸ்த்ராய ச ஸுகாய ச"*** என்பது. ஆசார வாழ்க்கை நடத்துவது சாஸ்த்ரத்துக்கு சாஸ்த்ரமும்; ஸௌக்யத்துக்கு ஸௌக்யமும்' என்று அர்த்தம். இம்மை நலன்கள் எல்லாம் ஆசாரமாயிருப்பவர்களுக்குக் கிட்டும் என்பதற்கு சாஸ்திர வாக்யமே இருக்கிறது:

ஆசாராத் லபதே ஹ்யாயு: ஆசாராத் ஈப்ஸிதாம் ப்ரஜா: |
ஆசாராத் தனம் அக்ஷய்யம் ஆசாரோ ஹந்த்-யலக்ஷணம் ||

-'ஆசாரத்தினால் தீர்க்காயுஸ் லபிக்கிறது; ஆசாரத்தினால் நமக்கு எப்படி இஷ்டமோ அப்படிப்பட்ட ஸந்ததி உண்டாகிறது; ஆசாரமாயிருப்பதால் குறையாத செல்வச் செழிப்பு ஏற்படுகிறது; ஆசாரம் குரூபத்தையும் போக்குகிறது'. இப்படி 'மெடீரியல் பெனி்ஃபிட்'களைக்கூட ஆசாரத்துக்குப் பலனாகச் சொல்லியிருக்கிறது. சரீர லாவண்யங்கூட ஆசாரத்தால் உண்டாகிறதாம். ஆசார அநுஷ்டானங்களை அப்யஸிப்பவர்களின் தேஹத்திலேயே ஒரு காந்தியும் தேஜஸும் 'ஆசாரக்களை' என்று ஏற்பட்டு விடுவதால், காது, மூக்கு எப்படியிருந்தாலும் அந்த ரூபத்தைப் பார்த்தவுடன் மதிப்பும், பிரியமும் உண்டாகி விடுவதையே இப்படிச் சொல்லியிருக்கிறது.

'ஆசாராத் தனம் அக்ஷய்யம் – குறையாத செல்வம் ஆசாரத்தால் உண்டாகிறதென்றால் இரண்டு விதமாய் அர்த்தம் செய்து கொள்ளலாம். பக்தி,

ஞானம், விவேகம், வைராக்யம் முதலான ஆத்மார்த்தமான செல்வம் தான் என்றைக்கும் குறைவுபடாத 'அக்ஷய்யம் தனம்' என்று சொல்லலாம். அல்லது 'மெடீரியலாக'வே கூடப் பணப் பற்றாக்குறை எந்நாளும் இல்லாமலிருக்க ஆசாரம் உதவுகிறது என்று சொல்லலாம்.

இதற்கு நிரம்பப் பணம் கொழுத்திருப்பது என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளாமல் இன்னொரு விதத்தில் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம். வரவு ஜாஸ்தியாகிவிட்டால் மாத்திரம் ஸுபிக்ஷமாகிவிடுமா? நிறையப் பணம் இருப்பதாலேயே நிறையத் தப்பு வழிகளில் போய்க் கஷ்டப்படுவதாக ஆவதையும் பார்க்கிறோமே! இரண்டு கையாலும் ஸம்பாதனை செய்தாலும் அதைவிட ஜாஸ்தி செலவுகளில் மாட்டிக்கொண்டு, கடன், கஸ்தி, ஓவர் டிராஃப்ட் என்று அவஸ்தைப்படுபவர்களைப் பார்க்கிறோமே! குடி, ரேஸ் என்று உடம்பும் கெட்டு குடும்ப வாழ்க்கையும் கெட்டுப் போகிறதும் பணக்காரர்களில்தான் அதிகம் பார்க்கிறோம். அதனால் நமக்கு வேண்டும் ஸுபிக்ஷம் வரவு ஜாஸ்தியாவதால் கிடைக்காது; செலவு குறைந்து வரவுக்கு அடங்கியிருப்பதுதான் ஸுபிக்ஷம். ***"ஆன முதலுக்கதிகம் செலவானால்"*** எத்தனை வரும்படி இருந்தாலும் ***"மானமழிந்து மதிகெட்டு"*** என்று எல்லா அனர்த்தமும் ஏற்படத்தான் செய்யும்.

ஆசாரமாயிருப்பதால் வேறென்ன பிரயோஜனம் ஏற்படுமோ ஏற்படாதோ செலவிலே சிக்கனம் உண்டாவது நிச்சயம். காஃபி அநாசாரம்; கிளப் [ஹோட்டல்] அநாசாரம்; ஸினிமாவும் கூத்தும் சாஸ்திர ஸம்மதமானதில்லை; குடிக்கக்கூடாது; சூதாடக் கூடாது (ரேஸ், சீட்டு எல்லாம் சூதுதான்); என்ன 'மொஸெய்க்' போட்டாலும் சாணி போட்டு மெழுகக்கூடிய ஸாதாத் தரைக்கு ஸமதையாகாது; ஆசார அநுஷ்டானங்களுக்கு ஹானியாக இருப்பதால் வெளியூர்களுக்குப் போய்வருவதை 'மினிமைஸ்' பண்ணிக் கொள்ள வேண்டும் - என்றெல்லாம் சாஸ்திரோக்தமாக வாழ்கிறபோது, இந்த இனங்களில் ஏற்படுகிற அத்தனை செலவும் மிச்சம். ஆசாரமாயிருக்கிற ஒருவனுக்கு இந்த அநாசாரங்களில் ஆசை வந்து இவனே ஒரு க்ளப்புக்கோ ஸினிமாவுக்கோ போனால்கூட, பஞ்சகச்சமும் குடுமியுமாய் இவன் வருவதைப் பார்த்து அங்கேயிருக்

கிறவர்களே இவனைக் கேலி செய்து திரும்பிப் போகும்படிப் பண்ணிவிடுவார்கள். ட்ரெஸ் ஒன்றை எடுத்துக்கொண்டால் இப்போது இங்கிலீஷ் மோஸ்தர்களுக்காக, அப்புறம் லான்டிரிக்காக எத்தனை செலவு? ஏதோ ஒரு வேஷ்டி, துண்டு என்று வைத்துக்கொண்டுவிட்டால் எத்தனை மிச்சம்?

9.29-ஆசாரமும், அலுவலக நடைமுறையும்

ஆ.ஃபீஸுக்குக்கூடச் சட்டை போட்டுக் கொள்ளாமல்தான் வருவோம் என்று அத்தனை பேரும் உறுதியாய் இருந்தால் இந்தக் குடியரசு யுகத்தில் ஸர்க்கார் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஷர்ட்டிங், டெய்லர், லான்ட்ரி – எல்லாச் செலவும் மிச்சம். காந்தி நாலு முழு வேஷ்டியும், துண்டுமாகவே 'கிங் எம்பரர்' வரைக்கும் போகவில்லை? ஸ்வதேசி உடுப்பு வந்து, இதில் நான் ஆசைப்படுகிற மாதிரி பட்டு மோஹமும் போய்விட்டால், செலவு ரொம்ப மட்டுப்படும். தோய்க்காவிட்டால் மடியில்லை. ஸூட் தினமும் தோய்க்க முடியுமா? பார்வைக்கு அது எத்தனை சுத்தமாக இருந்தாலும் அநாசாரம்தானே? வேர்வைதானே? [அருகிலிருப்பவர் ஏதோ குறுக்கிட்டுக் கூற அதைக் கேட்டு அவரிடம் சிறிது விசாரணை செய்துவிட்டுப் பெரியவர்கள் தொடர்கிறார்கள்:] இப்போது ஏதேதோ செயற்கைத் துணி தினுஸுகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதனால் கால் சராய்கூட தினமும் நாமே தோய்த்துப் போட்டு விடலாம். உடனேயே காய்ந்து விடும், பிழிந்தால் கூட அதிலே மடிப்பு விழுவதில்லை, அதனால் லான்ட்ரிக்கும் போட வேண்டியதில்லை என்று இவர் சொல்கிறார். ஆனால் இம்மாதிரி (artificial) செயற்கை வஸ்திரமே சாஸ்திர ஸம்மதமானதில்லை. பருத்தியாகவோ, பட்டாகவோதான் இருக்க வேண்டும். நானோ பட்டும் வேண்டாமென்று சொல்லி அந்தச் செலவும் இல்லாமல் பண்ணுகிறேன். இப்போது கோல்-தாரிலிருந்து பண்ணுகிற அநேக அநாசார வஸ்துக்கள்தான் - ப்ளாஸ்டிக் இதில் சேர்ந்ததுதான் - ஸர்வ வியாபகமாயிருக்கின்றன. நம் சரீரத்தின் மேலேயே இம்மாதிரி உடுப்புப் போட்டுக் கொள்வது ஆசாரத்துக்கு தோஷம்தான். [முதலில் குறுக்கிட்டவர் மீண்டும் ஏதோ கூறியதன் மீது]

இவரே சொல்கிறார், இம்மாதிரி துணி வழியாகக் காற்று உள்ளே போகிறதில்லை, நம் சீதோஷ்ணத்தில் இது ஆரோக்யத்துக்கு உகந்ததில்லை என்று சில டாக்டர்கள் சொல்கிறார்கள் என்று.

அநேக மாஸங்கள் வெய்யிலும் புழுக்கமுமாகவே உள்ள தக்ஷிணத்தில் சட்டை அவசியமேயில்லை. குளிர் காலத்திலுங்கூட நன்றாகத் துண்டைப் போர்த்திக் கொண்டுவிட்டால் போதும். சால்வைக்கு விழுப்பு தோஷமே கிடையாது; போர்த்திக் கொள்ளலாம். இப்படி [ஷர்ட் போட்டுக் கொள்வதென்று] வழக்கமாய் விட்டதேயென்றால், அந்த வழக்கமும் புதிதாக ஒன்றரை நூற்றாண்டில் ஏற்பட்டதுதானே? ஜனங்கள் ஏகோபித்து மனஸ் வைத்து விட்டால் எந்த வழக்கத்தையும் மாற்றி விடலாம் ராஜாங்கம், அல்லது கம்பெனிகளில் அதிகார ஸ்தானத்திலிருப்பவர்கள் ரூலை மாற்றும்படிப் பண்ணி விடலாம்.

ட்ரெஸ் விஷயம் மாத்திரமில்லை. சாஸ்த்ரீயமான வேறு சில விஷயங்களிலும், ஆ்ஃபீஸ் அநுமதிக்காதே, 'ஆஃபீஸ் நடைமுறை இதற்கு இடம் கொடுக்காதே' என்று சொல்கிறார்கள். 'ஏகாதசியில் வ்ரதம் இரு என்கிறீர்களே! ஆஃபீஸில் லீவு தருவார்களா? எப்படிப் பட்டினிக் கிடந்து கொண்டே வேலை பார்ப்பது? அமாவாஸ்யைக்கு யதோக்தமான காலத்தில்தான் தர்ப்பணம் பண்ணுவது என்றால் ஆஃபீஸுக்கு லேட்டாகி விடுமே' என்றெல்லாம் கேட்கிறார்கள். நான் சொல்கிறேன்: ஸகல ஜனங்களும் ஏகாதசி உபவாஸமிருப்பது, சாஸ்திர காலப்படி அமாவாஸயை தர்ப்பணம் பண்ணுவது என்று தீர்மானமாகச் செய்து காட்டினால், தன்னால் ராஜாங்கத்தில் லீவு விட்டுவிடுவார்கள். ஜனங்கள் கிளம்பினால் எல்லாம் ஸரியாய்விடும். அநாவசியத்துக்கெல்லாம் கிளம்பி, தாங்கள் சொல்கிற மாதிரி ஸர்க்காரோ கம்பெனி முதலாளிகளோ செய்யும்படிப் பண்ணவில்லையா? அந்த ரைட், இந்த ரைட், ஸ்ட்ரைக், டெமான்ஸ்ட்ரேஷன் என்று - அந்த டே, இந்த டே என்று கொடியைப் பிடித்துக்கொண்டு சுத்தப் போகிறோம், சத்தம் போடப் போகிறோம் என்றால் லீவ் விடவில்லையா? நமக்கு நிஜமாக சிரத்தையும் தைரியமுமிருந்தால் எதையும் நடத்திக்கொண்டு விடலாம். வெள்ளைக்காரன் நாளிலேயே ஸர். டி. முத்துஸ்வாமி அய்யர் மாதிரிப் பரம

ஆசாரமாயிருந்துகொண்டே ஜட்ஜ் பதவி வரை வஹித்தவர்களில்லையா என்ன?

நம்பிக்கையோடு சுத்தராக, சிஷ்டராக ஒருத்தர் இருக்கிறாரென்றால் இன்றைக்கும் லோகம், தான் எத்தனை கெட்டுப் போனாலும் அவருக்கு ஒரு ரெஸ்பெக்ட் கொடுக்கத்தான் செய்கிறது. மற்ற ட்ரெஸ், உடுப்புகளில் எத்தனை வசீகரமிருந்தாலும் அதிலே ஜனங்களுக்கு இல்லாத பக்தியும் மரியாதையும் நல்ல ஆசாரசீலராயிருக்கிற ஒருவர் ஸ்நானம் பண்ணிவிட்டு பட்டை பட்டையாக விபூதியோ நாமமோ போட்டுக்கொண்டு எதிரே வந்தால் ஏற்படுகிறது. ஆசாரத்துக்கொன்று ஒரு காந்தி உண்டாகிறது. அது யாரையும் [அப்படிப்பட்டவர்களுக்கு] நமஸ்காரம் பண்ண வைக்கிறது.

9.30-அனைவரும் வைதிகராகுக!

எல்லா ஜனங்களும் ஆசாரமாயிருப்பதென்றால் தான் ஆசாரம் நிற்குமே தவிர, யாரோ வைதிகர்கள் என்று சிலர் ஆசாரமாயிருப்பதென்றால் அவர்களைத் தனி ஜாதி என்று பிரித்து அவர்களுக்கு மாத்திரமே சாஸ்திரம் என்கிற மாதிரி ஆகிவிடும். எனவே அனைவரும் அவரவருக்கான ஆசாரப்படி நடக்கப் பிரயாஸைப்படவேண்டும். முக்கியமாக, பிராம்மணனுக்குத்தானே நிறைய ஆசாரங்கள் வைத்திருக்கிறது? அதனால் அந்த ஜாதியில் பிறந்த எல்லாரும் ஆசாரங்களை நன்றாக அநுஷ்டிக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும். தக்ஷிணை வாங்கிக் கொண்டு கர்மாக்களைப் பண்ணி வைக்கிறவர்கள்தான் வைதிகர்கள் என்று வைக்கிறபோது, தக்ஷிணையை உத்தேசித்துத்தான் வைதிகமாக இருக்கிறது என்று ஏற்படுகிறது! இப்படி ஒரு ஜீவனோபாயத்துக்காகவே அவர்கள் ஆசாரமாயிருக்கவேண்டி ஆகும்போது அதில் அநுஷ்டான சுத்தத்தையோ, சக்தியையோ, தன்னால் ஒரு ரெஸ்பெக்ட் கமான்ட் பண்ணும் [மரியாதையை ஈர்க்கும்] தேஜஸையோ எதிர்பார்ப்பதற்கில்லை. அதனால்தான் 'வைதிகப் பிச்சு' என்று கேலி பண்ணுகிற மாதிரி ஆகிறது. நான் அவர்களைக் குறை சொல்கிறேனென்று நினைக்கக் கூடாது - வேறே எந்தத் தொழிலுக்கும், க்ளப்பில் தட்டுத்

தூக்குவதற்குக்கூட, இன்னம் ஜாஸ்தி வரும்படி கிடைக்கிற போது, இவர்களாவது க்ருஹஸ்தர்கள் தங்களுடைய செலவினங்களில் கடைசி 'அயிட்ட'மாக மூக்கால் அழுது கொண்டு தருகிற தக்ஷிணையில் ஜீவனம் நடத்தத் துணிந்து, ஊர்ப் பரிஹாஸத்தையும் தாங்கிக்கொண்டு, யாதாயாதம் அலைந்து கொண்டு பௌரோஹித்யம் [புரோஹிதத் தொழில்] செய்து, வேதகர்மா இந்த தேசத்தை விட்டுப் போயே விடாமல் காப்பாற்றித் தருகிறார்களேயென்று அவர்களுக்கு நன்றி சொல்லவே வேண்டும். ஆனாலும் எந்தத் துறையானாலும் அது ஆத்மார்த்தமாக இல்லாமல் உதர போஷணார்த்தமாக நடத்தப்படும்போது அதனுடைய ஜீவசக்தி குன்றிப்போய் விடுகிறது. அதனால் தான் இப்போது [கர்மாக்களைப்] பண்ணி வைக்கும் சாஸ்திரிகளையே வைதிகர்கள் என்று வைக்கிறபோது, நான் முன்னே சொன்ன மாதிரி ஆசார சீலர்களுக்கு உள்ள காந்தியால் மற்றவர்கள் மதிப்பைப் பெறுவது என்பது இல்லாமல் போகிறது. நேர்மாறாக ஆகிறது. நான் எல்லா சாஸ்திரிகளையும் சொல்லவில்லை. ஸமூஹத்தின் மதிப்பைப் பெற்று நல்ல சிஷ்டர்களாகவும், தேஜஸ்விகளாகவும், சுத்தமான அநுஷ்டாதாக்களாகவும் அங்கங்கே சாஸ்திரிகள் இல்லாமல் போகவில்லை. ஆனால் மொத்தத்தில், பண்ணி வைக்கும் வாத்தியார்களும், வெறுமனே தக்ஷிணை மட்டும் வாங்கிக்கொள்பவர்களும் அல்லது திவஸம் திங்களில் போஜனத்துக்கு மாத்திரம் போகிறவர்களுமே வைதிகர்கள் என்றாகியிருக்கிற இன்றைய - துர்த்தசையில் 'வைதிகன்' என்றாலே 'இன்பீரியாரிடி காம்ப்ளெக்ஸ்' [தாழ்வுணர்ச்சி] ஏற்படுவதாகத்தானிருக்கிறது.

ஆகையால் ஸம்பாத்யம் முதலான இதர நோக்கங்கள் தெரிந்தோ தெரியாமலோ இல்லாமல், சாஸ்திரத்துக்காகவே சாஸ்திரம், ஆசாரத்துக்காகவே ஆசாரம், வைதிகத்துக்காகவே வைதிகம் என்று எல்லாரும் ஆகவேண்டும். நான் சாஸ்திரப் பிரகாரம் நடக்கிறேனென்றால் இது காரணார்த்தம். இல்லாவிட்டால் எனக்கு பிழைப்பு நடக்காது. உபாத்யாயம் பண்ணுகிறவர்களும் இதே மாதிரிதான். இதையெல்லாம் genuine என்று சொல்ல முடியாது. இப்படி வேறு காரணங்களுக்காக என்றில்லாமல் எல்லாரும் ஆத்ம சுத்தி ஒன்றுக்காகவே சாஸ்த்ரோக்தமாயிருந்தால்தான் அது

நிஜமானதாக இருக்கும். பூர்வத்தில் நமக்கு லோகம் முழுவதிலுமே எல்லாத் துறைகளிலும் பெருமை வாங்கித்தந்த அதன் நிஜ சக்தி அப்போதுதான் இன்றைக்கும் பேசும்! நம்முடைய தேசத்தின் ஜன ஸமூஹம் முழுக்கவுமே வைதிக ஸமூஹம் என்று ஆகவேண்டும். அதில் குறிப்பாக வேத ரக்ஷணத்துக்கென்றே ஏற்பட்ட ஜாதியில் அத்தனை பேரும் வைதிகர்களாக வேண்டும். இப்படி எல்லாருக்கும் ஸதாசாரமும் அநுஷ்டானமும் வேத சாஸ்திரப்படி யார் யாருக்கு எவையோ அவை இருந்துவிட்டால் உசத்தி-தாழ்த்தியும் கோப-தாபமும் ஓடியே போய்விடும். இப்போது emotional integration [உணர்ச்சி பூர்வ ஒருமைப்பாடு] என்று பேச்சில் பிரமாதமாகச் சொல்லிக்கொண்டே, எலெக்க்ஷனுக்கு நிறுத்தி வைப்பதானாலும், காலேஜ் அட்மிஷனானாலும், உத்யோகமானாலும் எதிலுமே ஜாதியையேதான் பார்த்து, இன்டெக்ரேஷனுக்கு நேர்மாறாகப் பண்ணி வருகிறார்கள். நான் சொல்கிறேன்: இந்த 'இமோஷனல்', 'கிமோஷனல்' என்பதெல்லாமே ஏதோ இமோஷனல் ஜோடனையாகத் தான் நிற்குமே தவிர ஸ்திரமாக நின்று பலன் தராது. உணர்ச்சியால் 'இன்டெக்ரேஷன்' என்பது நடக்காத காரியம். ஸதாசாரத்தால்தான் 'இன்டெக்ரேஷன்' ஏற்பட வேண்டும். எல்லாரும் ஸதாசாரம் என்ற தர்ம நெறிக்குள் கட்டுப்பட்டு வரும்போதுதான் தன்னால் கட்டுக் கோப்பான ஒரு ஸமூஹமாக இறுகுவார்கள்.

9.31-உடனே செய்ய வேண்டியது!

'எல்லாரையும் வைதிகமாயிரு என்றால் இந்தக் காலத்தின் போக்கில் நடக்கிற காரியமா? நடக்காததைச் சொல்லிப் பிரயோஜனம் என்ன?' என்று கேட்டால் நடக்கிற அளவுக்கு ஒன்று சொல்கிறேன். இதையாவது உடனேயே செய்ய ஆரம்பித்து விடவேண்டும்.

ஸமூஹத்தில் ஒட்டாமல் தனியாக வைதிகர்கள் ஒரு சின்ன கோஷ்டியிருப்பதாகவும், அவர்களும் இன்ஃபீரியாரிடி காம்ப்ளெக்ஸோடு அப்படியிருப்பதாகவும் இருக்கிற ஸ்திதி மாறுவதற்கு இந்த ஒன்றைச் சொல்கிறேன். அதாவது மற்றவர்கள் முழுக்க வைதிகமாகப் போகாமல்

லௌகிகமான ஸ்கூல், காலேஜ் என்றே பசங்களை விடட்டும். தாங்களும் ஆ∴பீஸோ, கம்பெனியோ, சொந்த பிஸினெஸ்ஸோ (அது ரொம்பவும் துராசாரமாக இல்லாத வரையில்) என்ன தொழில் பண்ணுகிறார்களோ அப்படியே பண்ணட்டும். ஆனாலும் பசங்களை தினம் ஸாயந்திரம் ஒரு மணி, ஸ்நானம் பண்ணி மடி கட்டிக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக்கொண்டு ஒரு பொது இடத்தில் ஒன்றாகக் கூடி கொஞ்சமாவது வேதாப்யாஸம் பண்ணுவதற்கும் ஸ்தோத்திரங்கள் கற்றுகொள்வதறகும் ஒவ்வொரு பேட்டையிலும் ஏற்பாடு செய்யவேண்டும். பிராம்மணரல்லாதாருக்கும் வேதாப்யாஸம் தவிர மற்ற தினுஸில் மதாபிமானம், தெய்வ பக்தி உண்டாகும் படியான ஏற்பாடுகளைப் பண்ணவேண்டும். நீராடுவது, நீறு பூசுவது (அல்லது திருமண் இடுவது), தேவார திருவாசக திவ்ய பிரபந்தங்களை ஓதுவது என்று வைத்துக் கொள்ளாலம். சின்ன வயஸிலிருந்தே இப்படி நம் மதாநுஷ்டானங்களில் பிடிப்பை உண்டாக்கிவிட வேண்டியது அவசியம். ஸகல ஜாதிக் குழந்தைகளுக்கும் ஸம்ஸ்கிருதமும் கற்றுக்கொடுத்துவிடவேண்டும். அத்தனை சாஸ்திரங்களும் அந்த பாஷையில்தானே இருக்கின்றன? ஆனபடியால், நம் சாஸ்திரங்களைப் பார்த்து அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ளக்கூடிய பாஷா ஞானத்தை நம் மதத்துக் குழந்தைகள் எல்லோருக்கும் உண்டாக்கிவிட வேண்டும்.

இப்படி இளவயசுக்காரர்கள் முழுக்க வைதிகாசாரப்படிதான் நடப்பது என்றில்லாவிட்டாலும், அதை மட்டமாக நினைக்காமல் அதில் மரியாதை வைத்து முடிந்த மட்டும் சில ஆசரணைகளைப் பின்பற்றும்படிப் பண்ணினால்தான் அடுத்த தலைமுறையில் முழு வைதிகர்களாகப் போவதற்கு வெட்கப்படாமல் சில பசங்களாவது வருவார்கள்; பௌரோஹித்யம் தங்களோடு போகட்டும் என்று நினைக்கிற இன்றைய சாஸ்திரிமார்கள் பிள்ளைகளை அந்தத் தொழிலில் விட முன்வருவார்கள்.

இப்படி ஒரு ஸ்நானம், மடி, அத்யயனம், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஸ்தோத்ரங்கள் படிப்பது, எல்லோருமாகக் கோவிலுக்குப் போய் தரிசனம் பண்ணுவது, பஜனை பண்ணுவது என்று ஆரம்பித்து விட்டால், தானே கெட்ட ஆசாரங்கள் குறைய ஆரம்பித்து விடும். நாம், ‘இங்கே போகாதே, இதைத்

தின்னாதே' என்று கண்டிப்புப் பண்ணினால்தான் அங்கேயே போவது, அதையே தின்பது என்று முரண்டிக்கொண்டு தப்பிலேயே புத்தி போகும். இப்படிக் கண்டிப்பதற்குப் பதில் வைதிகமான, தெய்வ ஸம்பந்தமான சில காரியங்களில் பழக்கிவிட்டால், அப்புறம், "நாம் அந்த இடங்களுக்குப் போனால், அந்த வஸ்துக்களைத் தின்றால், 'நீ கூடவா இங்கே வந்திருக்கே? இப்படிச் செய்யறே?' என்று அந்த இடத்துக்காரர்களே கேட்பார்களே!" என்ற லஜ்ஜையால் பசங்கள் தாங்களாகவே ஸரியாயிருப்பார்கள். டிஸிப்ளின் பழக்கத்தால் வரவேண்டுமேயொழிய, உபதேசத்தால் அல்ல.

பசங்களுக்குச் சொன்னது வயசு வந்தவர்களுக்குந் தான். அவர்களும் டென்னிஸ் கோர்ட், ஸினிமா, கச்சேரி என்று போவதைக் குறைத்துக்கொண்டு இதே மாதிரி வைதிகமான, தெய்வ ஸம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொண்டு, இயன்ற மட்டும் ஆசாரங்களை அநுஷ்டிக்க வேண்டும். ரிடையர் ஆன பிற்பாடாவது, எக்ஸ்டென்ஷன், ரி-எம்ப்ளாய்மென்ட், சொந்த பிஸினஸ் என்று போகாமல் நம்முடைய ஆசாரங்களை அநுஷ்டித்துக் கொண்டு சாஸ்திரோக்தமாக வாழப் பார்க்க வேண்டும்.

உடனே செய்யவேண்டியது.

எல்லாரையும் வைதிகமாயிரு என்றால் இந்தக் காலத்தின் போக்கில் நடக்கிற காரியமா? நடக்காததைச் சொல்லிப் பிரயோஜனம் என்ன?' என்று கேட்டால் நடக்கிற அளவுக்கு ஒன்று சொல்கிறேன். இதையாவது உடனேயே செய்ய ஆரம்பித்து விடவேண்டும்.

ஸமூஹத்தில் ஒட்டாமல் தனியாக வைதிகர்கள் ஒரு சின்ன கோஷ்டியிருப்பதாகவும், அவர்களும் இன்ஃபீரியாரிடி கமாப்ளெக்ஸோடு அப்படியிருப்பதாகவும் இருக்கிற ஸ்திதி மாறுவதற்கு இந்த ஒன்றைச் சொல்கிறேன். அதாவது மற்றவர்கள் முழுக்க வைதிகமாகப் போகாமல் லௌகிகமான ஸ்கூல், காலேஜ் என்றே பசங்களை விடட்டும். தாங்களும் ஆஃபீஸோ, கம்பெனியோ, சொந்தோ பிஸினெஸ்ஸோ (அது ரொம்பவும் துராசாரமாக இல்லாத வரையில்) என்ன தொழில் பண்ணுகிறார்களோ அபபடியே பண்ணட்டும். ஆனாலும் பசங்களை தினம் ஸாயந்திரம் ஒரு மணி,

ஸ்நானம் பண்ணி மடி கட்டிக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக்கொண்டு ஒரு பொது இடத்தில் ஒன்றாகக் கூடி கொஞ்சமாவது வேதாப்யைஸம் பண்ணுவதற்கும் ஸ்தோத்திரங்கள் கற்றுகொள்வதறகும் ஒவ்வொரு பேட்டையிலும் ஏற்பாடு செய்யவேண்டும். பிராம்மணரல்லாதாருக்கும் வேதாப்யாஸம் தவிர மற்ற தினுஸில் மதாபிமானம், தெய்வ பக்தி உண்டாகும் படியான ஏற்பாடுகளைப் பண்ணவேண்டும் நீராடுவது, நீறு பூசுவது (அல்லது திருமண் இடுவது) , தேவார திருவாசக திவ்ய பிரபந்தங்களை ஓதுவது என்று வைத்துக் கொள்ளாலம். சின்ன வயஸிலிருந்தே இப்படி நம் மதாநுஷ்டானங்களில் பிடிப்பை உண்டாக்கிவிட வேண்டியது அவசியம். ஸகல ஜாதிக் குழந்தைகளுக்கும் ஸம்ஸ்கிருதமும் கற்றுக்கொடுத்து விடவேண்டும். அத்தனை சாஸ்திரங்களும் அந்த பாஷையில்தானே இருக்கின்றன? ஆனபடியால், நம் சாஸ்திரங்களைப் பார்த்து அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ளக்கூடிய பாஷா ஞானத்தை நம் மதத்துக் குழந்தைகள் எல்லோருக்கும் உண்டாக்கிவிட வேண்டும்.

இப்படி இளவயசுக்காரர்கள் முழுக்க வைதிகாசாரப்படிதான் நடப்பது என்றில்லாவிட்டாலும், அதை மட்டமாக நினைக்காமல் அதில் மரியாதை வைத்து முடிந்த மட்டும் சில ஆசரணைகளைப் பின்பற்றும்படிப் பண்ணினால்தான் அடுத்த தலைமுறையில் முழு வைதிகர்களாகப் போவதற்கு வெட்கப்படாமல் சில பசங்களாவது வருவார்கள்; பௌரோஹித்யம் தங்களோடு போகட்டும் என்று நினைக்கிற இன்றைய சாஸ்திரிமார்கள் பிள்ளைகளை அந்தத் தொழிலில் விட முன்வருவார்கள்.

இப்படி ஒரு ஸ்நானம், மடி, அத்யயனம், ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஸ்தோத்ரங்கள் படிப்பது, எல்லோருமாகக் கோவிலுக்குப் போய் தரிசனம் பண்ணுவது, பஜனை பண்ணுவது என்று ஆரம்பித்து விட்டால், தானே கெட்ட ஆசாரங்கள் குறைய ஆரம்பித்து விடும். நாம், 'இங்கே போகாதே, இதைத் தின்னாதே'என்று கண்டிப்புப் பண்ணினால்தான் அங்கேயே போவது, அதையே தின்பது என்று முரண்டிக்கொண்டு தப்பிலேயே புத்தி போகும். இப்படிக் கண்டிப்பதற்குப் பதில் வைதிகமான, தெய்வ ஸம்பந்தமான சில காரியங்களில் பழக்கிவிட்டால், அப்புறம், "நாம் அந்த இடங்களுக்குப்

போனால், அந்த வஸ்துக்களைத் தின்றால், `c கூடவா இங்கே வந்திருக்கே?இப்படிச் செய்யறே?’என்று அந்த இடத்துக்காரர்களே கேட்பார்களே!”என்ற லஜ்ஜையால் பசங்கள் தாங்களாகவே ஸரியாயிருப்பார்கள். டிஸிப்ளின் பழக்கத்தால் வரவேண்டுமேயழிய, உபதேத்தால் அல்ல.

பசங்களுக்குச் சொன்னது வயசு வந்தவர்களுக்குந் தான். அவர்களும் டென்னிஸ் கோர்ட், ஸினிமா. கச்சேரி என்று போவதைக் குறைத்துக்கொண்டு இதே மாதிரி வைதிகமான, தெய்வ ஸம்பந்தமான விஷயங்களைத் தெரிந்துகொண்டு, இயன்ற மட்டும் ஆசாரங்களை அநுஷ்டிக்க வேண்டும். ரிடையர் ஆன பிற்பாடாவது, எக்ஸ்டென்ஷன், ரி-எம்ப்ளாய்மென்ட், சொந்த பிஸினஸ் என்று போகாமல் நம்முடைய ஆசாரங்களை அநுஷ்டித்துக் கொண்டு சாஸ்திரோக்தமாக வாழப் பார்க்க வேண்டும்.

9.32-கட்டுப்படுவதன் பயன்

சாஸ்திரமென்றால் ஒரே கட்டுப்பாடாயிருக்குமே என்று பயப்படக்கூடாது. “ஸ்வதந்திர யுகம் என்று சொல்லிக்கொண்டு ஸ்வயேச்சைப்படி கட்டையறுத்துக் கொண்டுபோய் என்ன கண்டோம்? ஏதோ அவ்வப்போது, ஒரு பெரிய மரக்கிளை காற்றில் ஆடுகிறபோது, அதன் விஸ்தாரமான நிழலில் துளிப்போல, இரண்டு இலை இடுக்கால் ஸூர்ய வெளிச்சம் விழுகிற மாதிரி, எப்போது பார்த்தாலும் இனம் தெரியாமல் பாரமாக மனஸை அழுத்திக் கொண்டிருக்கிற துக்க இருட்டில் இந்த ஸ்வாதந்திரியப் போக்கினால் இரண்டு கீற்று ஸந்தோஷ ரச்மி துளி நேரம் ஆட்டம் போட்டுவிட்டுப் போவதைத் தவிர சாச்வத ஸௌக்யத்துக்கு, நிரந்தர நிம்மதிக்கு இந்த ஸ்வதந்திரத்தாலோ, ஸயன்ஸ் டிஸ்கவரிகளாலோ, பொருளாதார அபிவிருத்தியாலோ நம்மால் என்ன ஸாதித்துக்கொள்ள முடிந்திருக்கிறது? துக்கத்தின் மூலத்தைக் கண்டுபிடித்து நிவிருத்தி பண்ணிவைக்க ஸ்வதந்திரத்துக்கும் ஸயன்ஸுக்கும் ஸாமர்த்யம் உண்டா? பாபத்துக்குப் பரிஹாரம் செய்ய இவற்றால் முடியுமா? பாபத்தையும் துக்கத்தையும்

போக்கிக்கொண்டு நிம்மதியாக நிறைவாக வாழ்ந்த நம் பெரியவர்களெல்லாம் சாஸ்திராசாரங்களை நன்றாக அநுஷ்டித்துத்தானே அந்த நிலையை அடைந்திருக்கிறார்கள்?" என்று யோசித்துப் பார்த்தால், வாஸ்தவத்தில் எதை இப்போது ஸ்வந்திரமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அதுதான் கட்டு என்று தெரியும். இதுதானே நம்மை நித்ய ஸுகத்தின் பக்கம் போகவிடாமல், புண்யத்தின் பக்கம் போகவிடாமல் துக்கத்திலும் பாபத்திலுமே கட்டி வைத்திருக்கிறது?

இதேமாதிரி, கட்டாகத் தெரிகிற சாஸ்திரங்கள் வாஸ்தவத்தில் கட்டுமில்லை. நிஜ ஸ்வதந்திரமான மோக்ஷத்துக்கு வழி பண்ணுவது அதுதான். 'தொம்பங் கூத்தாடி' என்பார்கள். 'ஸ்தம்பக் கூத்தாடி'என்பதுதான் அப்படித் திரிந்து வந்திருக்கிறது. ஸ்தம்பம் என்பது தூண். மாஜிக் ஷோவில் தொம்பங் கூத்தாடி வருவான். அநேகத் தூண்களில் ஒன்றில் அவனை ஏகப்பட்ட கட்டுப் போட்டுக் கட்டி வைத்திருக்கும். ஒரு திரையால் சொடக்குப் போடுகிற நாழி அவனை மறைத்துவிட்டுத் திரையை எடுப்பார்கள் அந்த க்ஷண காலத்துக்குள் அவன் எப்படியோ அத்தனை கட்டுக்களையும் அவிழ்த்துவிட்டு அந்தத் தூணிலிருந்து விடுபட்டு, அதோடு மட்டுமில்லாமல் இன்னொரு தூணில் அதே மாதிரி அவ்வளவு கட்டுக்களையும் போட்டுக் கொண்டு காணப்படுவான். அவனுக்கு அப்படி ஒரு தந்திரம் தெரியும். முதலில் கட்டினபோது கை, கால்களை ஒரு மாதிரி அகட்டி [அகற்றி] வைத்துக்கொண்டிருப்பான்; திரை போட்டவுடன் அவற்றை குறுக்கிக் கொள்வான் உடனே கட்டுத் தளர்ந்து விடும். அது கீழே விழுவதற்குள் மறுபடியும் அதே மாதிரி அகட்டிக்கொண்டு இன்னொரு தூணுக்குப் போய்விடுவான். இப்படித் தன் அங்கங்களைக் குறுக்கிக் கொள்வதாலேயே, அவற்றுக்கு மேலே போட்ட கட்டு விரிகிற மாதிரிதான் சாஸ்திரக் கட்டுக்குள்ளும். அஹங்காரத்தை மேலேயிருந்து கட்டுவது சாஸ்திரம். நாமே உள்ளுக்குள்ளிருந்து நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக நம்மைப் பக்குவப்படுத்துவதற்கே இந்தக் கட்டு. மணி முடிச்சாக ஒரு கட்டு விழுந்து அதை அவிழ்க்க முடியாமல் ஆகிறபோது என்ன செய்வார்களென்றால் அந்தக் கட்டை விட இறுக்கமாக இன்னொரு கயிற்றால் சுற்றுவார்கள். சுற்றுவார்களே தவிர இதை (இரண்டாவது

கயிற்றை) முடிச்சாகப் போட மாட்டார்கள். இப்படி இறுக்குகிற போது கட்டுப்படுகிற வஸ்து முன்னைவிடக் குறுகுமாதலால், முதலில் மணி முடிச்சு விழுந்த கயிறு இப்போது அதற்குத் 'தொளதொள' என்று ஆகிவிடும். அதனால் முடிச்சை அவிழ்க்காமலே அந்தக் கயிற்றை அப்படியே எடுத்துப் போட்டு விடலாம். அப்புறம், முடிச்சுப் போடாமல் இப்போது இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற கயிற்றையும் விட்டுவிடலாம். அப்போது வஸ்து ஒரு கட்டுமில்லாமல் ஸ்வதந்திரமாய்விடும்! அஹங்கார மனஸ் நம்மைக் கட்டிப் போட்டுப் படுத்துகிற பாட்டில் ஸம்ஸார பந்தம் மணி முடிச்சாய் விழுந்திருக்கிறது. இப்போது, இதைவிட இறுக்கம் மாதிரித் தெரிகிற ஆசாரக் கட்டுக்களைப் போட்டுக் கொண்டால் அப்புறம் இரண்டு கட்டும் போய் நிஜமான ஆத்ம ஸ்வதந்திரத்தை அடையலாம்.

கர்மா என்றாலும், பக்தி என்றாலும், ஞானம், யோகம் என்று எந்தப் பெயரைச் சொன்னாலும் ஸாதனா மார்க்கங்களெல்லாம் மனஸைக் கட்டுப்படுத்துகிற ஒரே லக்யத்துக்காக ஏற்பட்டதுதான். வாழ்க்கையில் ஒவ்வொன்றும் சாஸ்திரத்தைப் பார்த்து ஆசாரமாய்ப் பண்ண வேண்டும்; பூஜை புரஸ்காரந்தானென்றில்லை - பல் தேய்ப்பதிலிருந்து ஆரம்பித்து எல்லாவற்றுக்கும் சாஸ்திர ரூல்படி செய்ய வேண்டும் என்று ஆரம்பித்தால், நமக்குத் தெரியாமலே, நம் மனஸ் போகிறபடிப் பண்ணாமல் அதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து விடுவோம்.

ஆசாரம் சிக்கனத்துக்கு ரொம்ப உதவுகிறது என்ற பாயின்ட் இங்கேயும் வருகிறது. இப்போது மனஸில் எழும்புகிற பலதரப்பட்ட ஆசைகளுக்காகத்தானே செலவெல்லாம் செய்கிறோம்? கண்டதைச் தின்னத் தோன்றுகிறது, ஸினிமா ஆசை, டிரஸ் ஆசை என்று இவற்றுக்காகத்தானே செலவு செய்கிறோம்? இந்தச் செலவுக்கெல்லாம் நிறைய ஸம்பாத்யம் இருந்தால்தான் முடிகிறது என்பதால்தானே எத்தனை துராசாரமான தொழிலானாலும் எந்த அநாசார தேசத்தில் வேண்டுமானாலும் போய்ப் பண்ணுவது என்று ஆகியிருக்கிறோம்? " ஐயோ இதைத் தின்பது பாபம்: இதைப் பண்ணுவது பாபம்" என்று சாஸ்திரங்களைப் பார்த்துப் பார்த்து மனஸின் ஆசைகளையெல்லாம் குறைத்துக்கொண்டு விட்டால் இத்தனை

செலவுக்கு அவசியமில்லை. உள்ளூரோடு எத்தனை எளிய வாழ்க்கை வாழலாமோ அதற்குரிய ஸம்பாத்தியம் தருகிற ஒரு தொழிலைப் பார்த்துக்கொண்டு, நிம்மதியாக இருந்து கொண்டிருக்கலாம். வேண்டாத பொழுதுபோக்குகள், அலைச்சல்கள் இல்லாததால் தெய்வ சிந்தனையும் ஆத்ம விசாரமும் பண்ண நிறைய டயமும் கிடைக்கும். ஒரு சேஞ்ஜ் பண்ண வேண்டும். வெளி லோகத்தைப் பார்க்க வேண்டுமென்றால் ஷேக்த்ராடனம், தீர்த்தாடனம் செய்யலாம். கோஷ்டியாக பல பேர் சேர்ந்து யாத்ரை போனால் அதிலே வேறெந்தப் பொழுதுபோக்குக் கேளிக்கையிலும் கிடைக்காத ஆனந்தம் கிடைக்கும். பஜனை ஹரிகதா ச்ரவணம், உத்ஸவம் இவற்றின் ஆனந்தம் ஸினிமாவிலும் நாவலிலும் கிடைக்கிற ஸந்தோஷத்துக்கு எத்தனையோ மேலானதாகத் தெரியும்.

9.33-ஆசாரம் குறித்த நூல்கள்

இரண்டு தலைமுறையாகவே ஆசாரங்கள் எடுபட்டு வருகின்றன. அதனால் இப்போது சாஸ்திரப் படிப் பண்ணுவதென்றால் எங்கள் அகத்துப் பெரியவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கத் தெரியவில்லையே என்பீர்கள். உங்களுக்கு யார் உபாத்யாயமோ அல்லது நல்ல ச்ரௌதிகளாக ஊரில் யார் இருக்கிறாரோ (ஒவ்வொரு ஜாதிக்கும் அததன் தர்மாசாரங்கள் தெரிந்த பெரியவர் இல்லாமல் போகமாட்டார்) அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். புஸ்தகங்கள் இருக்கின்றன. எல்லாம் ரொம்ப detailed-ஆகப் போட்டு வைத்யநாத தீக்ஷிதீயம் என்று இருக்கிறது. அத்தனை பெரிசாக வேண்டாமென்றால் ஸோமதேவ சர்மாவின் புஸ்தகம் இருக்கிறது. முத்துஸ்வாமி அய்யர் என்றும் ஒருத்தர் தர்ம சாஸ்திரச் சுருக்கம் எழுதியிருக்கிறார்*.

பழந்தமிழ் நூல்களும் நம்முடைய வைதிக ஸமயாசாரங்களைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கின்றன. 'ஆசாரக்கோவை' என்றே ஒன்று இருக்கிறது. திருக்குறள் தொடங்கி 'அவ்வை பாடல்கள்', 'நன்னெறி', 'அறநெறிச் சாரம்' முதலான நூல்கள் நீதிகளையும் தர்மங்களையும் பொதுவாகச் சொல்லிக்

கொண்டு போகும்போதே, அன்றாட வாழ்க்கையில் அநுஷ்டிக்க வேண்டிய வைதிகாசாரங்களுக்கும் அங்கங்கே குறிப்புக் காட்டிக்கொண்டு போகும். நீதி சாஸ்திரக் கருத்துக்களை அப்படியே மொழி பெயர்த்து 'நீதி வெண்பா' என்றும் இப்படியொரு புஸ்தகமிருக்கிறது. பழந்ததமிழ் நாட்டில் எந்த அரசனைப் பற்றியும் புராணத்திலோ, இலக்கியத்திலோ, சாஸனங்களிலோ சொல்லும்போது அவன் மநுநீதிப்படி மறைவழி வருணாச்சிரமங்களை முறை பிறழாமல் நன்றாகப் பரிபாலனம் செய்து வந்தானென்று தப்பாமல் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப் பொதுப்படையாக வைதிகாசாரங்களைச் சொல்வதோடு நிற்காமல் நித்யப்படி வாழ்க்கையில் ஒவ்வொரு கார்யமும் எப்படி சாஸ்திராசாரப்படிப் பண்ணவேண்டும் என்று விளக்கிச் சொல்வதற்கே ஏற்பட்டதுதான் நான் சொன்ன " ஆசாரக்கோவை". தமிழிலே உயர்ந்த இலக்கிய ஸ்தானம் கொடுத்துப் போற்றும் நூல்களில் பதினெண் கீழ்க் கணக்கு என்று பதினெட்டு புஸ்தகங்கள் உண்டு. இந்தப் பதினெட்டில் ஒன்றுதான் திருக்குறள். இன்னொன்று ஆசாரக் கோவை. தமிழ் மக்கள் அதைப் பார்த்தால் ஆசாரங்கள் அத்தனையும் தெரிந்துகொண்டுவிடலாம்.

---

* ஹிந்து சமய ஆசார வழக்குகளைப் பற்றித் தற்போது கீழ்க்கண்ட தமிழ்ப் புத்தகங்கள் கிடைப்பதாகத் தெரிகிறது. (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

1. "ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் "வைத்யநாத தீக்ஷிதீயம்" (ஆறு பகுதிகள்)

2. "கௌதம தர்ம ஸூத்ரம்"

3. "போதாயன தர்ம ஸூத்ரம்"

இவற்றின் பதிப்பாளர் வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை கும்பகோணம்.

4." தர்ம சாஸ்திரச் சுருக்கம்" ஆர். முத்துஸ்வாமி அய்யர்; பதிப்பாளர் கே. எம். நாகராஜ அய்யர், கீழ்விடையல், கருப்பூர், கொடவாசல் போஸ்ட், தஞ்சை மாவட்டம்.

5. "ஸதாசாரம்" - ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா, பதிப்பாளர் பவானி புக் ஸெண்டர், 19, ஸ்டேஷன் ரோட், சென்னை-600 033.

6. (சைவமானது) "நித்யகன்ம நெறி" - கிடைக்குமிடம் தருமபுரம் ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை.

7. (வைஷ்ணவமானது:) "ஸ்ரீவைஷ்ணவ நித்யானுஷ்டானக் கிரமம்" - பதிப்பாளர்: " லிஃப்கோ பதிப்பகம்", தி.நகர், சென்னை-600 017.

9.34-அந்நாள் பெருமையும் இந்நாள் சிறுமையும்

நம்முடைய முன்னோர்கள் எப்படி ஆரோக்யமாகவும், தேஜஸோடும், புத்திப் பிரகாசத்துடனும், மந்திர சக்தியுடனும், ஆத்ம சாந்தியுடனும் எல்லாரும் கொண்டாடும் படியாக இருந்திருக்கிறார்கள்; இப்போதுள்ள நாமோ எத்தனை வியாதி வக்கையோடு, ஒரு பவிஷுமில்லாமல், புத்தி மங்கி, மந்திர சக்தி என்கிறவரை போகாமல் ஸாதாரண புருஷ சக்திகூட இல்லாமல் எப்போதும் அசாந்தியோடு இருந்து வருகிறோம் என்பதைப் பார்த்து, அவர்கள் பின்பற்றி வந்த சாஸ்த்ராசரணைகள் கஷ்டமாயிருக்கிறதென்று நாம் விட்டு விட்டதுதான் நமக்கு அதைவிட எவ்வளவோ பெரிய நித்ய கஷ்டத்தைத் தந்திருக்கிறதென்று புரிந்து கொண்டு, அவற்றை இப்போதிலிருந்தாவது அநுஸரிக்க ஆரம்பிக்க வேண்டும். முதலில் கொஞ்சம் சிரமமாயிருந்தாலும் பழக்கிக்கொண்டு ஆசாரமாக வாழ ஆரம்பித்து விட்டால், கொஞ்ச நாளிலேயே நம் சாஸ்திரங்கள் க்ஷேமத்துக்கும் ஸௌக்யத்துக்கும் ஏற்பட்டனவேயன்றிக் கஷ்டம் உண்டு பண்ணுவதற்கல்லவென்று தெரிய ஆரம்பித்துவிடும். விடிய ஐந்து நாழிகைக்கு முன்னாலே எழுந்து, ஸ்நானம் பண்ணி அருணோதய காலத்தில் அர்க்யம் கொடுத்து, ஸூர்யோதயம் வரை காயத்ரீ ஜபம் செய்து, அதன்பின் ஔபாஸனம், பூஜை, மாத்யான்ஹிகம், வைச்வதேவம், அதிதி ஸத்காரம் பண்ணி ஸாத்விகமான ஆஹாரத்தைச் சாப்பிட்டு, இப்படியே ஸாயங்காலமும் ஸ்நானம் செய்து ஸந்தியா வந்தன அர்க்யம் ஸூரியன் மேலைவாயில் விழும் போது கொடுத்து அப்புறம் நக்ஷத்ரம் தெரிகிறவரை காயத்ரீ பண்ணி, அக்னி ஹோத்ரம், தேவாலய தர்சனம் அல்லது ஸத்கதா

சிரவணம் எல்லாம் செய்தால் எப்படி வாழ்க்கையிலேயே ஒரு நிறைவு இருக்கிறது; இப்போது அழுக்குப் பிடித்து அழுமூஞ்சியாயிருப்பது போய் எத்தனை சுசி ருசியுடன் ப்ரஸன்னமாயிருக்க முடிகிறது – என்று தெரியும். வேண்டாத காரியங்களைப் பண்ணி அலுத்து அப்படியும் அதில் குறையே இருப்பதால் நிம்மதியாகத் தூங்கக்கூட இல்லாமல் துஸ்-ஸ்வப்னம் கண்டுகொண்டு, ஏழு எட்டு மணிவரை எழுந்திருக்க முடியாமல் படுத்துக் கொண்டிருப்பது என்றில்லாமல் வேண்டிய கர்மாக்களையே பண்ணுவதால் தெளிவோடும் திருப்தியோடும் ஸுகமாக நித்ரை செய்து, மறுநாள் பஞ்ச பஞ்ச உஷத்காலத்திலேயே பளிச்சென்று எழுந்திருந்து அன்றைய 'ரொடீனை'ச் சுருசுருப்பாகக் கவனிக்க முடிகிறது என்று தெரியும்.* ஆத்மாவும் நிறைந்து, ஆரோக்ய த்ருடகாத்ரமும் பெற்று சாந்தியாக ஸந்துஷ்டியாக நம் பூர்விகர்கள் வாழ்ந்து இந்த ஆசார அநுஷ்டான பலத்தால்தான்.

அவருவரும் எத்தனைக்கெத்தனை தீட்டுக் கலக்காமல் personal purity-ஐக் காத்துக்கொண்டு அதனாலேயே ஸொஸைட்டியையும் 'ப்யூராக' இருக்கப் பண்ணினார்களோ அத்தனைக்கத்தனை நாம் விழுப்பும் தீட்டுமாயிருந்து கொண்டு, நமக்குத்தான் ஸமூஹ உணர்ச்சியும் ஸஹோதரத்வமும் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டே நாளுக்கு நாள் நம்மையும் அசுசியாக்கிக் கொண்டு ஸமூஹத்தையும் கெடுத்துக் கொண்டு வருகிறோம். லான்டரித் துணியை நாள் கணக்கில் தோய்க்காமல் போட்டுக்கொண்டு, ரயில், பஸ் என்று போவதில் ஒருவிதமான தீட்டு பாக்கியில்லாமல் சேர்த்துக்கொண்டு, க்ரமமாய் ஸ்நானம் கிடையாது என்று ஆக்கிக்கொண்டு, நினைத்த ஹோட்டலில் கண்ட ஆஹாரத்தைத் தின்று கொண்டு, தர்ம விருத்தமான ஸினிமாவிலும் நாவலிலும் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறோம். இப்படியிருப்பதில் நம்மைப் பற்றி நாமே, `மாடர்னாக இருக்கிறோம். மூட சாஸ்திரங்களை விட்டுவிட்டு புத்திமான்களாக முன்னேற்றம் கண்டு வருகிறோம்' என்று பெருமைப்பட்டுக் கொண்டாலும், கொஞ்சம் யோசித்தால் நமக்கு யதார்த்தம் புரியாமல் போகாது. யதார்த்தம் என்ன? தேஹ ஆரோக்யம், திரவிய ஸுபிக்ஷம், திருப்தி, மேதை, காந்தி, கௌரவம், தெய்விகமான அநுபவம் எல்லாவற்றிலுமே நாம் நம்

பூர்விகர்களைவிட ரொம்பவும் கீழே போய்க் கொண்டிருக்கிறோமென்பதுதான். பாழுங் கிணற்றில் நன்றாக விழுமுன் இப்போதாவது நாம் கண் விழித்து நம்முடைய சாஸ்திர வழியிலே போக ஆரம்பிக்க வேண்டும். நாம் சிரமப்பட்டு புதுசாகப் பண்ணிக்கணும் என்றில்லாமல் பூர்விர்களே நமக்கு ரெடி-மேடாக, கல்லையும் கான்க்ரீட்டையும் விட உறுதியான, குண்டு குழி விழாத பாதையாகப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். “நாமாகப் புதுசாகப் பண்ணுகிறோம்” என்ற பெருமைக்காக அழிவுப் பாதையில் போகாமல், இந்த ஆசாரப் பாதையில் போய் நம்மை ரக்ஷித்துக் கொள்வோம். நம் ‘கைங்கரியம்’ நம்மோடு நிற்கவில்லை. நாம் கெட்டதோடு வரப்போகிற ஸந்ததிகளையும் கெடுத்து வைத்திருக்கிறோம். நாம் தந்த துணிச்சலில் அவர்கள் நாம் எப்படி பூர்விகர்களை உதாஸீனம் செய்தோமோ அதைவிட உக்ரமாக நம்மையும் தூக்கியெறிந்துவிட்டு, நம்மைவிடவும் ஸ்வயேச்சைப்படி வெறியாட்டம் நடத்த வழிகோலிவிட்டோம். கண் கெட்டபின் ஸூர்ய நமஸ்காரம் என்கிற நிலைக்குக் கிட்டதட்டப் போயாச்சு; இன்னும் போயேயாகிவிடவில்லை என்பதால் - ச்வாஸம் வாங்கும்போதுகூட ‘ஆக்ஸிஜன்’ கொடுத்துப் பிழைத்த கேஸ்கள் இருக்கின்றவே; அப்படி ஆக்ஸிஜன் கொடுத்துப் பார்க்க நாம் ஆரம்பிக்க வேண்டும். இத்தனை கேவல ஸ்திதியை, கஷ்ட தசையை அடைந்ததிலிருந்தே, விடுபட்டாக வேண்டுமென்ற நல்லறிவு பெற்று, அதற்காக ஊக்கமாக முயற்சி தொடங்க வேண்டும். மற்ற தேசங்கள் திண்டாடுவதைவிட, அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே பண்ணி நாமும் திண்டாடுவது அவர்களைவிட நமக்குத்தான் பெரிய அவமானம். ஏனென்றால் அவர்களுடைய முன்னோர்கள் நம்முடைய பூர்விகர்கள் நமக்குக் கொடுத்திருப்பதுபோல் இப்படிப்பட்ட ஆசாரங்களைக் கொடுத்திருக்கவில்லை. ஆசாரங்களைப் புஸ்தகத்தில் எழுதிக் கொடுத்திருப்பது பெரிசில்லை; அதை அவர்களே எத்தனையோ ஆயிரம் தலைமுறை வாழ்ந்துகாட்டி, இது நடைமுறை ஸாத்யந்தான் என்று நன்றாக நிரூபித்துவிட்டுப் போயிருக்கிறார்களே, அதுதான் பெரிசு.

---

*"தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதயில் "கிருஹஸ்தாச்ரமம்" என்ற உரையில் "அந்தணனின் அன்றாடம்" என்ற உட்பிரிவும் பார்க்க.

9.35-உயிருதாரணத்தால் உண்டான சாஸ்திரம்

இப்போது நான் சொன்ன விஷயத்தை இன்னம் கொஞ்சம் எக்ஸ்ப்ளெயின் பண்ண வேண்டும். வாழ்ந்து காட்டுவது, புஸ்தகம் எழுதுவது என்று இரண்டு சொன்னேன். நம் ஆசார, அநுஷ்டானங்களுக்கு ஏகப்பட்ட சாஸ்திர புஸ்தகங்கள் இருக்கின்றன. ஆனாலும் இதிலே நன்றாகத் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அந்த கிரந்த கர்த்தாக்கள் அந்தப் புஸ்தகங்களில் இது இது ரூல் என்று எழுதிவைத்ததற்குப் பிறகே அதைப் பார்த்து அப்படியப்படி ஜனங்கள் பண்ணினார்களா, வாழ்ந்து காட்டினார்களா என்றால் அதுதான் இல்லை. அந்த கிரந்த கர்த்தாக்களுக்கும் முன்னாலிருந்தே இந்த ஆசார அநுஷ்டானங்களை அவர்களுடைய பூர்விகர்களும் வாழ்க்கையில் அநுஸரித்துத்தான் வந்திருக்கிறார்கள். அதைத்தான் பின் ஸந்ததியாரை உத்தேசித்துப் புஸ்தகத்தில் எழுதி வைத்தார்கள். அதாவது சாஸ்திரத்தைப் பார்த்து வாழ்க்கை நடத்தவில்லை. வாழ்க்கையில் நடத்தப்பட்டதையே சாஸ்திரத்தில் எழுதினார்கள். மநுஸ்மிருதி முதலான எந்த ஸ்மிருதியைப் பார்த்தாலும் ஸரி, ஆபஸ்தம்ப-ஆச்வலாயன ஸூத்ரங்களைப் பார்த்தாலும் ஸரி, அநேக தர்ம சாஸ்திரங்களில் சிதறிக் கிடக்கும் ரூல்களைத் திரட்டிக் கொடுக்கும் நிபந்தன க்ரந்தங்களைப் பார்த்தாலும் ஸரி அந்த மநுவோ, ஆபஸ்தம்பரோ, ஆச்வலாயனரோ, நிபந்தன க்ரந்தம் பண்ணினவரோ தாங்களாக ஒரு சின்ன 'ரூல்' கூடப் பண்ணினதாகச் சொல்லிக் கொள்ளவில்லை; ஏற்கனவே இருக்கிற ரூல்களைத் திரும்பச் சொல்கிறதாகவே ஸ்பஷ்டமாக ஏற்படும்.

இது ஒரு பெரிய ஆச்சர்யம். "ஸநாதன தர்மம்" என்ற வார்த்தைக்கு முற்றிலும் பொருத்தமாக, புஸ்தகங்கள் தோன்றுகிறதற்கு முன்பே நம்முடைய தர்மாசார வாழ்க்கை தோன்றிவிட்டது! முதல் முதலில் யார் இப்படி பஞ்ச கச்சத்தை ஏற்படுத்தினது? நெற்றிக்கு இப்படி இப்படி

இட்டுக்கொள்ள வேண்டும் என்று 'இனாகுரேட்' பண்ணினது யார்? எந்தக் காரியமானாலும் ஆசமனம் பண்ணுவதற்கு, நெற்றியில் குட்டிக் கொள்வதற்கு 'ஆரம்ப விழா' என்று என்றைக்காவது யாராவது செய்தார்களா? ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. ஆதிக்கும் ஆதிக்கும் ஆதியிலிருந்தே இப்படியெல்லாம் பண்ணியிருக்கிறார்கள். இந்த லோகத்தையெல்லாம் ஸ்ருஷ்டித்திருக்கிற ஒரு மஹாசக்தியை எப்போதும் தொட்டுக்கொண்டவர்களாக அந்த ஆதி புருஷர்கள் இருந்ததால், இந்த லோக வாழ்க்கைக்கு எது நல்லது, இதற்கும் நல்லதாக இருந்து கொண்டே இதிலிருந்து விடுவித்து நித்யானந்தத்தில் சேர்க்கக் கூடியதாக உள்ளது எது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு, அப்படியே வாழ்ந்து காட்டியதுதான் நம்முடைய தர்மங்களாகவும், நீதிகளாகவும், ஆசாரங்களாகவும், அநுஷ்டானங்களாகவும் ஆகி சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

இந்த ஸநாதன தர்ம மார்க்கத்தை, ஆசார அநுஷ்டானப் பாதையைப் போட்டவர் யார்? பேர் சொல்லத் தெரியாது. குறிப்பாக யாரையும் காட்ட முடியாது. ஆனால் பாதை மட்டும் இருப்பது தெரிகிறது. இதனால்தான் நான் ஹிந்து தர்மத்தை, "ஒற்றையடிப் பாதை" என்று சொல்வது*. ஒற்றையடிப்பாதை பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. ஆனால் யார் போட்டார் என்று கேட்டால் சொல்லத் தெரியுமா? தார் ரோடு, கப்பி ரோடுக்கெல்லாம் சொல்லலாம். இந்த கவுன்சிலர் திட்டம் போட்டார்; இந்தக் கமிஷனர் ஸாங்க்ஷன் பண்ணினார்; இந்தக் கன்ட்ராக்டர் வேலை எடுத்துக் கொண்டார்; இந்தத் இந்தத் தொழிலாளிகள் வேலை செய்தார்கள் என்று மற்ற ரோட்களுக்கெல்லாம் காரணமான ஆளைக் காட்டலாம். ஒற்றையடிப் பாதைக்கு மட்டும் முடியாது. அது 'ப்ளான்' பண்ணி, 'மெஷர்மென்ட்' பார்த்து, சம்பளம் கொடுத்துப் போட்டதல்ல. யார் என்று குறிப்பாகச் சொல்லத் தெரியாமல் அநேக ஜனங்கள் நடந்து நடந்தே உண்டானது அது. ரோட் போட்ட பிறகு அதில் ஜனங்கள் நடக்கிறார்களென்றால் இதுவோ ஜனங்கள் நடந்ததாலேயே ஏற்பட்ட பாதை! புஸ்தக ரூலால் ஏற்படுத்தும் வாழ்க்கை முறை இல்லை; வாழ்க்கை முறையால் ஏற்பட்ட புஸ்தக ரூல்!

மற்ற மதாசாரங்கள், ஸ்தாபனங்களின் சட்ட திட்டங்கள் சிலரால் உத்தேசிக்கப்பட்டு, ப்ளான் பண்ணிப் போட்டவை. அதுதான் தார் ரோடு மாதிரி நன்றாயிருக்கிறது என்று தோன்றலாம். 'அதிலேதான் வேகமாக கார் ஸவாரி முடிகிறது, உம்முடைய ஒற்றையடிப் பாதையில் முடியுமா?' என்று கேட்கலாம். ஆனால் நன்றாயிருக்கிற அதற்குத்தான் வருஷா வருஷம் ரிப்பேர் பார்த்தாக வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் குண்டும் குழியும் விழுகிறது. ஒற்றையடிப் பாதையோ ரிப்பேராகிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஜனங்கள் நடக்க நடக்கத் தார் ரோட் தேய்கிறது என்றால், ஒற்றையடிப் பாதையோ அவர்கள் நடக்க நடக்க இன்னம் உறுதியாகவும் பளிச்சென்றும் ஆகிறது. அதாவது ஜனங்கள் வாழ்ந்து காட்டும்போது, எவரோ சிலர் 'ப்ளான்' பண்ணினதாக உள்ள வழிமுறைகள் அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் நசித்துப் போகின்றன. இப்படித்தான் பழங்கால கிரேக்கர் மதம், ஹீப்ரு மதம், கன்ஃபூஷியஸ் மதமெல்லாம் எடுபட்டுப்போய்விட்டன. ஆனால் நம்முடைய சாஸ்திர ஆசரணைகளோ வழி வழியாக ஜனங்கள் அநுஷ்டிக்க அநுஷ்டிக்க மேலும் மேலும் பிரகாசம் பெற்றிருக்கின்றன. கார் ஸவாரி மாதிரி இங்கே சேரவேண்டிய இடத்துக்கு வேகமாகப் போய்ச் சேர முடியாமலிருக்கலாம்; நின்று நிதானமாக, படிப்படியாகத்தான் 'எவல்யூஷன்' ஆகி goal வரும்; ஆனால் நிச்சயமாக வரும். தார் ரோடில் போகிற கார் வேகமாகப் போனாலும் goal-ஐ அடையுமா என்பதே ஸந்தேகம். வேகமாகப் போவதாலேயே அதற்கு விபத்து வந்துவிடுகிறது. அதோடு கூட ரோடும் குண்டு குழி விழுந்து ரிப்பேராகிறது! ரோட் இப்படி ஆவதால் கார் ஸவாரியிலும் பெரிய ஆபத்துக்கே இடமிருக்கிறது. ஒற்றையடிப் பாதையில் ஒரு நாளும் ஆக்ஸிடென்ட் ஏற்படாது.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தார் ரோடு மேடு பள்ளம், குறுகல் வழி முதலானதுகளில் சுற்றிச் சுற்றித்தான் போகும். ஒற்றையடிப்பாதையோ குறுக்கு வழி அதனால், தார் ரோடில் சுற்றி வளைத்துக் கொண்டு காரில் போய் ஒரு இடத்தை அடைகிறதற்குள், ஒற்றையடிப் பாதையில் நடந்து போயே அந்த இடத்தை அடைந்து விடலாம். நவீன ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறதையே ஒப்புக் கொண்டாலும் குறைந்த பக்ஷம் ஐயாயிரம்

வருஷமாக (3000 B.C. — Vedic Civilisation என்கிறார்கள்) , நூற்றுக்கணக்கான தலைமுறையினர் நடந்த வழியை நாம் விட்டு விட்டு, நாம் கெட்டது போதாதென்று பின் ஸந்ததியினருக்கும் கெடுதலை உண்டாக்கியிருக்கிறோம். ஜனங்கள் நடக்காமலேயிருந்தால் ஒற்றையடிப்பாதை மூடிப்போய் விடுமல்லவா? இந்தத் தலைமுறையினரான நாம் நம்முடைய சாஸ்திர மார்க்கம் வருங்காலத்தவருக்குத் தெரியாமலே மூடிப் போகிற மாதிரிப் பண்ணும் பெரிய தோஷம் நமக்கு ஏற்படாமல் கருணாமூர்த்தியான பகவான் தான் காப்பாற்ற வேண்டும். இப்போதாவது நாம் இந்த விஷயங்களை ஆலோசித்து, நம் முன்னோர்கள் சென்ற வழியிலே திரும்பி, ஆசார அநுஷ்டானங்களை நடத்தி மேன்மை அடைய ஈசன் நமக்கு நல்லறிவைக் கொடுப்பானாக!

---

* `ஆசாரம்'என்ற முந்தைய உரையில் "ஒற்றையடிப் பாதை"என்ற பிரிவும் பார்க்க.

10-ஆசாரமும் ஆஹாரமும்

10.1-ஹாரமும் ஆஹாரமும்

ராஜா ஒருத்தன் இருந்தான். அவனுக்கு ஒரு குரு. அவர் நல்ல மஹான். அடிக்கடி அரண்மனைக்குப் போய் உபதேசம் பண்ணிவிட்டு வருவார். அப்படி ஒரு நாள் காலம்பற [காலையில்] போனவர் நீண்டநேரம் அநேக விஷயங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்ததால் மத்யான்னம் வந்துவிட்டது.

"இங்கேயே பிக்ஷை பண்ணிவிட்டுப் போகணும். ஆசார நியமத்தோடு, தனியாகப் பண்ணிப் போட ஏற்பாடு செய்கிறேன்" என்று ராஜா ரொம்பவும் கேட்டுக் கொண்டான்.

அவனுடைய பிரார்த்தனையை மறுக்க முடியாமல் மஹான் அரண்மனையிலேயே போஜனம் செய்தார்.

அப்போது நல்ல வெயில் வேளை வந்துவிட்டதாலும், பஞ்ச பக்ஷ்ய போஜனம் பண்ணினதில் அவருக்குக் களைப்பாக இருந்ததாலும் அங்கேயே கொஞ்ச நேரம் இளைப்பாறினார்.

அவர் சிரம பரிஹாரம் பண்ணிக்கொண்ட அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு முத்து மாலை அவர் கண்ணில் பட்டது. அது ராஜாவுடையது. விலை உயர்ந்த முத்தாலானது.

நல்ல வைராகியான அவருக்கு எதனாலோ அன்றைக்கு அந்த முத்தாஹாரத்தைப் பார்த்தவுடன் அதை எடுத்து வைத்துக்கொண்டு விடவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ரொம்ப 'ஸ்ட்ராங்க்'-ஆக உண்டாயிற்று.

பக்கத்தில் யாருமில்லாததால் சட்டென்று அதை எடுத்து வஸ்திரத்துக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு விட்டார்.

ஸாதாரண மனிதர்கள் பண்ணினாலே திருட்டு என்பது பாவம், குற்றம். மஹானாக, ராஜ குருவாக இருந்தவர் கொஞ்சங்கூட மனஸை உறுத்தாமல் இப்படிப் பண்ணிவிட்டு, தாம் பாட்டுக்கு ஆச்ரமத்துக்குத் திரும்பிப் போய்விட்டார்!

சித்தே [சற்று] நாழி ஆன அப்புறம் ஹாரம் திருட்டுப் போய்விட்டதென்று அரண்மனையில் தெரிந்தது. ஒரே பரபரப்பு. எங்கே பார்த்தாலும் தேடினார்கள். யாரையும் விடாமல் சோதனை பண்ணிப் பார்த்தார்கள். ஆனால் வாஸ்தவத்தில் அது காணாமல் போனதர்க்குக் காரணமான குருவை மட்டும் எவரும் கொஞ்சங்கூட சந்தேஹப்படவில்லை. ஏனென்றால் அன்னிக்கு [அன்றைக்கு] வரையில் அவர் அவ்வளவு சுத்தராயிருந்தவர்.

'பழி ஓரிடம் பண்டம் ஓரிடம்' என்று யார் யாரையோ பிடித்து, மரியாதை ஸ்தானத்திலிருந்தவர்களை வாயால் கேட்டும், ஆள்-படைகளை அடித்து

உதைத்தும் ‘என்கொயரி’, ‘இன்வெஸ்டிகேஷன்’ நடத்தினார்கள். தடையம் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் போச்சு. அன்று ராத்திரி முழுக்க குருவுக்கு ஸரியாகத் தூக்கமேயில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததால் அல்ல. மத்யானம் பண்ணினது போதாது என்று ராத்திரியும் ஏதோ கன்னா பின்னா எண்ணம். அது வேணும் - இது வேணும் என்கிற ஆசை தோன்றிக்கொண்டிருந் ததாலேயே தூக்கம் வரவில்லை!

பெரிய சாப்பாடு சாப்பிட்டுவிட்டு, ராத்ரி பூரா தூங்காததால் ஜீர்ணக் கோளாறு ஏற்பட்டது. மறுநாள் முழித்துக் கொள்கிறபோதே வயிற்றிலே ‘கடமுடா’ பண்ண ஆரம்பித்தது. பேதி பிடித்துக் கொண்டது; அஞ்சு தடவை, ஆறு தடவை ‘போய்’ ரொம்ப பலஹீனமாய்விட்டது. நல்ல வெயில் வேறு வந்துவிட்டது.

ஆனாலும் இப்படி உடம்பு ஆயாஸப்பட்டுப் போனாலும் பேதியானதிலிருந்தே அவருடைய மனஸுக்கு ஒரு தெளிவு ஏற்படத் தொடங்கியிருந்தது. முதல் நாள் உண்டான கெட்ட எண்ணமும், ஆசைகளும் கொஞ்சங்கொஞ்சமாக விலகிக் கொண்டே வந்தன. இப்போது இனிமேலே ‘போவதற்கு’ எதுவுமேயில்லை என்கிற மாதிரி உடம்பு கிழித்த நாராக ஓய்ந்துபோன ஸ்திதியில் அவருடைய வழக்கமான உசந்த மனஸே அவருக்குத் திரும்பிவிட்டது.

அந்த வெயிலிலே, உடம்பு ஓய்ந்து போன நிலையிலேயே முத்து மாலையை எடுத்துக்கொண்டு அரண்மனைக்கு ஓடினார்.

ராஜாக்கிட்டே போய், அந்த ஹாரத்தைக் கொடுத்தார்.

"என்ன காரணமென்றே தெரியவில்லை. நேற்றைக்கு மத்யான்னத்திலிருந்து என் புத்தி கெட்டுப்போய்க் கிடந்தது. அந்தக் கெட்ட ஆவேசத்தில் நான்தான் இந்த மஹா பாவத்தைப் பண்ணினது. ஸந்நியாஸியானவன், சிஷ்யன் என்று தன்னை ஆஷ்ராயித்திருக்கிரவனுடைய ஸொத்தை, அவன் போட்ட ஆஹாரத்தையும் சாப்பிட்டுவிட்டு உடனே அபஹரிக்கிற பாபத்தைப்

பண்ணிவிட்டேன். திருடனை எப்படித் தண்டிக்க வேண்டுமோ அப்படி எனக்கு சிக்ஷை பண்ணு. அதோடு இன்னம் பல பேரை இதுவரை ஸந்தேஹப்பட்டு நீ தண்டிக்கும்படியாகவும் கண்டிக்குபடியாகவும் நேர்ந்ததற்கும் நான் காரணமானதால் அதெல்லாவற்றையும் சேர்த்து வைத்து எனக்குச் சிக்ஷை கொடு. என்னால் எத்தனை நிரபராதிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டு விட்டதென்பதில் எனக்கு உண்டாயிருக்கும் வேதனை அப்போதுதான் தீரும்" என்று ராஜாவிடம் சொன்னார்.

ராஜா சிரித்தான். "உங்கள் சிஷ்யன் என்கிறதாலேயே உங்களுடைய அநுக்ரஹத்தில் எனக்கும் ஏதோ கொஞ்சம் அறிவு உண்டாயிருப்பதால் என்னால் உண்மையை ஊகிக்க முடிகிறது. நீங்கள் இப்போது சொன்னமாதிரி ஒரு நாளும் நடந்திருக்க முடியாது. உங்களுடைய பரம தயாளத்தினால்தான் நீங்கள் இப்படிக் கதை சொல்லுகிறீர்கள். நிஜத் திருடன் என்ன தண்டனை கிடைக்குமோ என்ற பயத்தில் அப்புறம் உங்களிடம் வந்து, 'சரணாகதி, காப்பாற்ற வேண்டும்' என்று காலில் விழுந்திருப்பான். தஞ்சம் என்று வந்தவனைத் தாங்கித்தானாக வேண்டும் என்று கருணையில் அவனுக்கு அபயம் தந்துவிட்டு, இப்போது நீங்களே குற்றத்தைச் செய்ததாகக் கதை சொல்லுகிறீர்கள். நீங்கள் குற்றத்தை ஒத்துக்கொண்டாலும், நீங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்" என்றான்.

மஹான் ரொம்பவும் மறுத்தார். மன்றாடினார். "நானாகப் பண்ணின குற்றப்படி நான் திருடன். இப்போது நீ அந்தக் குற்றத்தை மறுத்து, நான் பொய் சொல்கிறேன் என்பதாக இன்னொரு விதத்தில் என்னைக் குற்றவாளி ஆக்குகிறாய்! வேண்டாமப்பா. என்னைத் தண்டி! அதுதான் என் மனஸை ஆற்றும். குரு சொல்லைக் கேட்க வேண்டியதும், குருவுக்கு ஸந்தோஷம் தருவதைச் செய்வதும்தானே சிஷ்யனின் தர்மம்?" என்றார்.

ராஜா யோசித்தான். அப்புறம் சொன்னான் "எனக்குச் சொல்லவே வாய் கூசினாலும் நீங்கள் விடாப்பிடியாகச் சொல்வதால் நீங்கள்தான் ஹாரத்தை எடுத்ததாக வைத்துக்கொள்ளப் பார்க்கிறேன். ஆனாலும் குற்றம் ஒன்றாகவே இருந்தாலும் எந்தக் காரணத்துக்காக அது பண்ணப்பட்டது என்பதையும்

ஆராய்ந்து அதை ஒட்டியே ஒரே குற்றத்துக்கு வேறு வேறு சிக்ஷைகளை நீதி சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. எப்படியாகப்பட்டவர், என்ன மாதிரியான ஸந்தர்பத்தில், எந்த விதமான நோக்கத்துக்காகக் குற்றம் செய்தார் என்று கவனித்தே தீர்ப்புச் செய்ய வேண்டும். (ஸர்க்கம்ஸ்டன்ஸ், மோடிவ் பார்த்தே ஸென்டென்ஸ் பண்ண வேண்டும் என்றுதானே இப்போதும் லா இருக்கிறது?) அதனாலே, மஹானான தாங்கள் இப்படியொரு கார்யம் பண்ணினீர்களென்றால் எந்தக் காரணத்தின் மேலே அப்படிப் பண்ணினீர்கள் என்று தெரிந்து கொள்ளாமல் தண்டிக்கிறதற்கில்லை. முதல் தடவை குற்றம் பண்ணினவர் தாமே அதை ஒத்துக்கொண்டு, திருட்டுக் குற்றமானால் பொருளையும் ஒப்புவித்து விடுகிற பக்ஷத்தில் தண்டிக்காமலே விட்டுவிடலாம் என்றும் சாஸ்திரம் இடம் தருகிறது" என்றான்.

"இப்படியெல்லாம் சொல்லி என்னை நீ அடியோடு தண்டிக்காமல் விடப்படாது. எத்தனையோ காலமாக நீதி பரிபாலனம் செய்து வந்திருப்பதால் நீதான் காரணத்தைக் கண்டுபிடித்து, கொஞ்சமோ நஞ்சமோ அதற்கான சிக்ஷையைத் தரவேண்டும். ஏனென்றால் இந்தத் திருட்டு புத்தி எனக்கு எப்படி வந்தது என்பதற்கு எனக்கு எந்தக் காரணமும் தெரியவில்லை" என்று குரு சொன்னார்.

அதற்கு ராஜா, "உங்களைப் போன்ற ஒரு மஹானே தன் சொந்த விஷயமான ஒன்றில் காரணம் தெரியவில்லை என்னும்போது மற்றவர்கள் யார் அதை ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடியும்? தாங்களே தீர்கமாகச் சிந்தனை செய்து சொன்னால்தானுண்டு" என்றான்.

"ஸரி, நேற்றைக்குக் கெட்டுப் போயிருந்த புத்தியை இன்றைக்காவது தெளிவித்து, கெட்டதற்குத் தண்டனை வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற புத்தியைத் தந்திருக்கிற பகவானைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு பார்க்கிறேன்" என்று அந்த மஹான் சொல்லி, ஈச்வரத் தியானம் பண்ணினார்.

கொஞ்ச நேரத்துக்கு அப்புறம், "ஆமாம்; இப்போதுதான் காரணம் கொஞ்சம் புலப்பட ஆரம்பித்திருக்கிறது. நேற்றைக்கு வழக்கத்துக்கு வித்யாஸமாக ஏதாவது நடந்ததா என்று பார்த்தால், நீ பிரியத்தின் பேரில் நிர்பந்தம்

செய்ததால் நான் இங்கே சாப்பிட்டது ஒன்றுதான் தெரிகிறது. அதற்கப்புறந்தான் இந்த பாப காரியத்தில் என் புத்தி பிரவேசித்திருக்கிறது. அதோடு அப்புறமும், ராத்ரிகூட, மனஸ் கேட்டே கிடந்தது. ஆனால் இன்றைக்கு அதிஸாரம் மாதிரி பேதியாக ஆகக் கொஞ்சங் கொஞ்சமாகத் தெலிவு ஏற்பட்டு, பண்ணின தப்பு புரிந்துவிட்டது. இப்போது இதற்குக் காரணமும் ஊஹித்துக் கொள்ள முடிகிறது. நேற்றுச் சாப்பிட்ட அன்னம் வயிற்றில் இருந்தவரையில் மனஸு கேட்டுப்போயிருந்திருக்கிறது; இன்றைக்கு தெய்வ ஸங்கல்பத்தால் அதிஸாரம் உண்டாகி, அது வெளியே போகப் போகக் கெட்ட எண்ணமும் வெளியேறியிருக்கிறது என்று தோன்றுகிறது. இதிலிருந்து சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி **அன்ன தோஷத்தால்தான் குணதோஷம் ஏற்பட்டிருக்கிறது** என்று அநுமானிக்கத் தோன்றுகிறது. அநுமானத்தை ஊர்ஜிதம் பண்ணிக் கொள்வதற்கு நீ வேண்டுமானால் நேற்று அன்னமாகப் பக்குவம் பண்ணின அரிசி முதலானதுகள் எங்கேயிருந்து வந்தது என்று விசாரணை பண்ணிப் பார்" என்றார்.

அன்னம் என்பதில் ப்ரோடீன், கார்போஹைட்ரேட், வைடமின் முதலியன மட்டும் இல்லை. அதைச் சமைத்தவர், தான்யமாகவும் பச்சைக் காய்கறியாகவும் அதை விலைக்கோ தானமாகவோ கொடுத்தவர், அதைப் பயிர் பண்ணியவர் ஆகியவர்களுடைய குணதோஷங்களும் அந்த அன்னத்தில் ஸூக்ஷ்மமாக டெபாஸிட் ஆகி, சாப்பிடுகிறவனுக்குள் போகிறது. இவர்கள் தோஷமுடையாவர்களாயிருந்தால் சாப்பிடுகிறவனையும் அந்த தோஷம் தொற்றிக்கொள்ளும். இதுதான் அன்ன தோஷம் என்பது.

ராஜா உடனே உக்ராண மணியக்கரனுக்குத் தாக்கீது அனுப்பினான். முதல் நாள் குருவுக்குச் சமைத்துப் போட்ட அரிசி எங்கேயிருந்து வந்தது என்று விசாரித்துத் தெரிவிக்கும்படி உத்தரவு போட்டான்.

மணியக்காரன் பூரா விவரங்களையும் விசாரணை பண்ணித் தெரிவித்தான். என்ன தெரிவித்தானென்றால்: சிலநாள் முந்தி ஒரு பெரிய கொள்ளைக்காரன் கடைத்தெருவில் ஒரு பெரிய மளிகைக் கடையிலிருந்து ரொம்ப உசந்ததான

ஸன்ன சம்பா மூட்டைகளைத் திருடி, அப்புறம் ராஜ ஸேவகர்களிடம் பிடிபட்டுவிட்டான். அவனோடு, அரிசி மூட்டையும் கைப்பற்றப்பட்டது. அப்புறம் அவனுக்குச் சிக்ஷையும் விதிக்கப்பட்டது. ஆனாலும் உடைமைக்கு (அரிசிக்கு) ஸொந்தக்காரன் அதை ராஜாங்கத்திலிருந்து திரும்பி வாங்கிக் கொள்வதற்கான due date ஆகியும் எதனாலோ ஆஜராகவில்லை. அதனால் சட்டப்படி அந்த அரிசி அரண்மனைப் பண்டகசாலையில் சேர்க்கப்பட்டுவிட்டது. நேற்றுவரை பிரயோஜனப்படுத்தாத அந்த அரிசியைத்தான் நல்ல ரகமாயிருக்கிறதே, முதல் முதலில் குருவுக்கு நைவேத்யம் பண்ணினால், பாக்கியெல்லாம் அவருடைய பிரஸாதமாகுமே என்று நினைத்து நேற்று பாகசாலைக்காரர்கள் அவருக்குச் சமைத்துப் போட்டார்களாம்.

மணியக்காரன் ராஜாவுக்கு இந்த விவரங்களைத் தெரிவிக்க, ராஜா மஹானுக்குச் சொன்னான்.

இரண்டும் இரண்டும் நாலு என்கிற மாதிரி அந்த மஹானுக்கு எப்படித் திருட்டுப் புத்தி உண்டாச்சு என்பது தெரிந்து விட்டது. திருட்டுச் சொத்தை ராஜ தர்மப்படி ராஜா ஸ்வீகரித்தாலும் அது மஹானுடைய ஸாத்விக ஸந்நியாஸ தர்மத்துக்கு விரோதமானதால் அவரை 'அஃபெக்ட்' பண்ணிவிட்டது. ஆனாலும் அவர் மனஸறிந்து குற்றம் பண்ணாததாலும், அவருடைய பூர்வ சரித்ரம் சுத்தமானதாலும் பகவனே அப்புறம் அவருக்கு அதிஸாரம் உண்டாகுமாறு பண்ணி அவருடைய உடம்பில் அந்த அன்ன ஸத்து ரத்தமாய்ச் சேராமல் வெளியேறும்படிச் செய்து, தோஷத்தைப் போக்கிவிட்டான்.

ராஜாவிடம் குரு, "பார்த்தாயா? இதனால்தான் ராஜாவின் அன்னம் கூடாது என்ற சாஸ்திர நியமப்படி நான் இருந்தேன். நீ பிடிவாதம் பிடித்தாய் என்பதால் நான் விட்டுக் கொடுத்ததில் இத்தனை வினை வந்து சேர்ந்தது.

"எப்படி ஒருத்தனுடைய வியாதியின் அணுக்கள் இன்னொருத்தன் சரீரத்தில் பரவி அந்த வியாதி இவனுக்குத் தொற்றிக் கொள்கிறதோ அப்படியே, கெட்ட எண்ணத்துடன் செய்த கார்யங்களில் ஸம்பந்தப்பட்ட வஸ்துவில் அதைச்

செய்தவனின் மானஸிகப் பரமாணுக்கள் ஒட்டிக் கொண்டிருக்குமாதலால், அந்த வஸ்து இன்னொருத்தனுக்கு உள்ளே போனால், இவனுக்கும் அந்தக் கெட்ட எண்ணம் தொற்றிக் கொள்ளும். நேற்றுச் சாப்பிட்ட அரிசியில் படிந்திருந்த திருட்டுக் குண பரமாணுக்கள் எனக்குள்ளே போனதன் விளைவைப் பார்த்ததிலிருந்து இது எவ்வளவு உண்மையென்று நிரூபணமாகிறது" என்றார்.

காரணத்தைப் பார்த்தே குற்றத்துக்குத் தண்டனை தரவேண்டுமென்ற ராஜா, அவரை நிர்ப்பந்தப்படுத்திச் சாப்பிட வைத்த தான் ஒரு மஹானுக்குப் பக்குவம் செய்யும் உணவு எப்படியிருக்க வேண்டுமென்று கவனிக்காததாலேயே இப்படி ஏற்பட்டதால் குற்றம் தன்னுடையதே என்றான். அவரை 'அப்ஸால்வ்' பண்ணிவிட்டான். அது அறியாமையால் அவன் செய்ததே, நல்லெண்ணத்துடனும் குருபக்தியாலும் அவன் செய்ததே என்பதாலும், அவன் பச்சாதாபப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாலும் குற்றமாகாது என்று குருவும் அவனை க்ஷமித்து விட்டுவிட்டார்.

10.2-உணவும், அதனுடன் தொடர்பு கொண்டோரும்

இப்படித் கதை போகிறது. இதிலே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் சாப்பாட்டோடு ஸம்பந்தப்பட்டவர்களின் குண-தோஷங்கள் சாப்பிடுகிறவனை பாதிக்கின்றன என்பதே. அந்த குரு மாதிரியே நாமும் தெரியாத்தனத்தால்தான் தோஷமுள்ளவர்களின் ஸம்பந்தம் கொண்டதைச் சாப்பிடுகிறவர்களாயிருப்போம். உங்களை ஒருத்தர் சாப்பிடக் கூப்பிடுகிறார்; அல்லது க்ளப் [ஹோட்டல்] , கான்டீன் எதிலாவது எவனோ சமைத்து, எவனோ 'ஸர்வ்' பண்ணுவதை நீங்கள் சாப்பிடுகிறீர்களென்றால், இவர்களுடைய குணமென்ன, தோஷமென்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாதுதான். ஆனால் இப்படிப்பட்ட நிலையில் நாம் சாப்பிடுவதால், அந்த மஹானை பகவான் மன்னித்து நல்ல புத்தியைத் தந்தது போல் நமக்கும் பண்ணி விடுவான் என்று நினைத்து விடக் கூடாது! அப்படிப்பட்ட மஹானையுங்கூட ஒரு நாளெல்லாம் அன்ன தோஷம்

சறுக்கித்தான் விட்டது. அவரே சிஷ்யன் ஸொத்தை அபஹரிக்கிற பாபத்தை முதலில் செய்யத்தான் செய்தாரென்றால், அவர் மாதிரியில்லாமல் ஸாதாரண ஆஸாமிகளாக உள்ள நம் கதி இதைவிட எவ்வளவோ மோசமாகுமென் றுதான் அறிவு பெற வேண்டும்.

தெரியாமல்தான் அநேகத் தப்புப் பண்ணுகிறோம்; வாஸ்தவம். ஆனால் தெரிவிக்கிறதற்குத்தான் சாஸ்திரங்கள் இருக்கின்றனவே, அவற்றை ஏன் பார்க்கக் கூடாது? நமக்கு அநேக விஷயங்கள் ஸ்வயமாகத் தெரியாதபடி ஈஸ்வரன் நம் கண்ணை மூடித்தான் வைத்திருக்கிறானென்றாலும், அவனே கண்ணைத் திறக்கப் பண்ணுவதற்காக அநேக மஹான்கள் மூலம் சாஸ்திரங்களையும் கொடுத்திருக்கிறான் அல்லவா? வேறே எத்தனையோ கார்யங்களைச் செய்யும் நாம், கண்ட கண்ட விஷயங்களைப் படிக்கும் நாம், நாம் செய்ய வேண்டியது என்ன, செய்யவேண்டாதது என்ன என்று ஈஸ்வராக்ஞையாகப் பெரியவர்கள் கொடுத்திருக்கிற தர்ம சாஸ்திரங்களைப் பார்க்க மாட்டேன் என்று இருந்து கொண்டே, "தர்மாதர்மம் தெரியாமல் தப்புப் பண்ணினதற்காக பகவான் தண்டிப்பானா?" என்று கேட்டால் அது நியாயமேயில்லை.

இதுவரையில் உங்களுக்கு தெரியாவிட்டாலும் இதோ இப்போது உங்களுக்குத் நான் சொன்னதலிருந்து ஆஹாரத்தினால் எப்படி குண-தோஷங்கள் உண்டாகின்றன என்று தெரிந்து விட்டதல்லவா? அதனால் [விடாமல் சிரித்தவாறு சொல்கிறார்] இதுவரை ஆஹார சுத்தத்தைப் பார்க்காததற்காக உங்களை பகவான் மன்னித்திருந்தாலும் இனிமேலே மன்னிக்க மாட்டான்!

இன்னொரு ஆர்க்யுமென்ட் கூட தொற்று நோய்க்காரன் என்று தெரியாமல் ஒருத்தனுடன் பழகினாலும், 'தெரியாதவனாச்சே' என்று நோய்க்கிருமி இவனை விட்டு விடுகிறதா? அந்தக் கிருமி நம் கண்ணுக்குத் தெரியாமல் 'மைக்ரோஸ்கோப்'புக்குத் தெரிகிறதென்றால், 'மைக்ரோஸ்கோப்'புக்கும் தெரியாமல் ஞானிகளுக்கே தெரிகிறவைதான் மானஸிகப் பரமாணுக்கள் - நல்ல, கெட்ட எண்ணங்களின் வெளி ரூபங்கள். இதுகளும் கிருமி மாதிரிதான்

தெரிந்தவனா, தெரியாதவனா என்று பார்க்காமல் பரவுகின்றன என்று ஆர்க்யுமென்ட்.

சுத்தமான ஆஹாரம் என்பது இரண்டு விஷயங்களைப் பொருத்தது. ஒன்று, ஆஹாரமாக ஆகிற வஸ்துக்கள் - தானியம், காய்கறி முதலான பதார்த்தங்கள் - ஸ்வயமாக சுத்தமானவையாயிருக்க வேண்டுமென்பது. அதாவது வெங்காயம், முள்ளங்கி மாதிரி மனஸைக் கெடுக்கிறவையாக அவை இருக்கப்படாது. இதைப் பற்றி அப்பறம் சொல்கிறேன். இரண்டாவது, அந்த ஆஹாரம் நம் இலையில் வந்து விழுகிற வரையில் அதில் ஸம்பந்தப்பட்டவர்கள் சுத்தர்களாயிருக்கவேண்டும்.

இந்த இரண்டாவது அம்சத்தை emphasize செய்வதற்காகத்தான் ராஜா-குரு கதை சொன்னேன். ஏற்கனவே உள்ள கதைதான்.

ஒரு விஷயத்தை 'ஓவ'ராகவே மிகைப்படுத்தி சொன்னால்தான் அதில் உரிய அளவுக்காவது கவனம் செலுத்துவார்கள் என்கிற ரீதியில்தான் இந்தக் கதை உண்டாகியிருக்கிறதென்று தோன்றாலாம். கதையில் குருவுக்குப் போட்ட போஜனத்தோடு முதல் ஸம்பந்தமுள்ளவர்கள் அதைச் சமைத்துப் பறிமாறின அரண்மனை சிப்பந்திகள்; இரண்டாம் ஸம்பந்தம், குருவுக்கு பிக்ஷை பண்ண நினைத்த ராஜாவுடையது; மூன்றாவதாகத்தான் திருடனின் ஸம்பந்தம் அதற்கு வருகிறது. அவனுடைய எண்ணம் அதில் ஒட்டிக்கொண்டிருந்ததென்றால், அதோடு இன்னம் நாலாம் ஐந்தாம் ஸம்பந்தங்களுள்ள மளிகைக் கடைக்காரன், விவஸாயி ஆகியவர்களின் குண-தோஷமும் அதிலே ஒட்டிக்கொண்டுதானே இருக்கும்? இதையெல்லாம் ஆராய்ச்சி பண்ணிச் சாப்பிடுவதென்றால் பட்டினிதான் கிடக்க வேண்டும் போலத் தோன்றுகிறது! ரிஷிமூலம், நதிமூலம் என்கிறமாதிரி நாம் சாப்பிடுகிற அரிசியை, கடுகை, வெண்டைக்காயை எவன் எப்படிப் பயிர் பண்ணி, எவன் எப்படி மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்தானென்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்க முடியுமா?

முடியாதுதான். இதனால்தான் சாஸ்திரத்திலேயே வஸ்துவுக்கே உள்ள நேர்த் தோஷத்தைக் கவனிக்கச் சொல்லிவிட்டு அதில் ஸம்பந்தப்பட்டவர்களில்

மற்றவர்களை ஓரளவு தள்ளிவிட்டுக் கடைசியில் அதோடு ஸம்பந்தப்படுகிற இரண்டு பேரை மட்டும் முக்யமாகக் கவனிக்கச் சொல்லியிருக்கிறது. ' Raw - ஆக (கச்சாப் பொருளாக) அரிசி, மற்ற தான்யங்கள், காய்கள் முதலானவை எங்கேயிருந்து வேண்டுமானாலும் வந்துவிட்டுப் போகட்டும். நாம் காசு கொடுத்து அதை வாங்குகிறபோது, இப்படி அதற்காக நாம் ஒரு தியாகத்தைப் பண்ணிவிடுவதால், அதில் படிந்திருக்கிற மானஸிகப் பரமாணுக்கள் நம்மைத் தொடாது. அல்லது நம் சொந்த வயலிலோ, நாம் இருக்கிற வீட்டுத் தோட்டத்திலோ அவை விளைந்து வருகிறபோது அதன் பொருட்டு நாமே செலவழிக்கிறோம், உழைக்கிறோம், நம் எண்ணத்தையும் கவனத்தையும் கொடுக்கிறோம் என்பதால் அவை raw-ஆக உள்ள போது நம்மைப் பாதிக்காது என்று வைத்துக் கொள்ளலாம். ஆனாலும், "பச்சைத் தானியத்தையும் கறிகாயையும் நாம் புஜிப்பதற்கு யோக்யதையாக வேக வைத்தோ, பொறித்தோ, அரைத்தோ சாப்பாடாக ஆக்கும் சமையல்காரன் யார், அப்புறம் அதை எடுத்து நமக்குப் பரிமாறுவது யார் என்று பார்த்துக்கொள். இந்த இரண்டு பேர் ஸாத்விகமாக இருந்தால்தான் அந்த ஆஹாரம் நம் சித்தத்துக்கு நல்லது செய்யும்" என்று சாஸ்திரம் சொல்கிறது. கெட்டியாக இருக்கிற தானியத்திலும் பச்சைக் கறிகாயிலும் வியவஸாயி, வியாபாரி ஆகியவர்களுடைய எண்ணம் 'இம்ப்ரெஸ்' ஆவதைவிடச் சமையற்கார், பரிசாரகர் ஆகியவர்களின் எண்ணம் வெந்து குழைந்த ஆஹாரத்தில் நன்றாகப் பதிந்துவிடும் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்!

கெட்டதைப் போலவே நல்லதும் ஆஹாரத்தில் ஸம்பந்தப்பட்டவர்களைப் பொருத்து உண்டாகிறதும் உண்மைதான். பழங்காலத்தில், அதாவது பிராம்மணர்கள் உத்யோகத்துக்குப் போக ஆரம்பித்ததற்கு முந்தி, அவர்கள் தானமாகத்தான் எல்லாம் பெற்று வந்தார்கள். அரிசி வாங்கக்கூட அவர்களுக்கு 'ஐவேஜி' கிடையாது. ஆனாலும் அவர்களுக்கு தானம் பண்ணினவர்கள் மரியாதையோடும் பிரித்தோடும் அர்ப்பணம் பண்ணினதால் அந்த நல்ல எண்ணத்தின் சக்தியில், வஸ்துக்களுக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருக்கக் கூடிய தோஷம் 'ந்யூட்ரலைஸ்' ஆகியிருக்கிறது. கதை ராஜாவும் பக்தியோடுதான் அர்ப்பணம் செய்தான்; ஆனால் அந்த ஆஹாரம்

ஏன் மஹானின் புத்தியைக் கெடுத்தது? ஏனென்றால், ராஜதர்மபடி யாரும் உரிமை கோராதது விலைகொடுத்து வாங்காவிட்டாலும் ராஜாவைச் சேரலாமாயினும், உரிமை உடைமை இதுகளே இல்லாத ஸத் புருஷர்களின் தர்மத்தோடு அது ஒட்டாது. இதிலே இன்னொன்று: நிலச் சொந்தக்காரன், உழவன் ஆகியவர்களிலிருந்து ஆரம்பித்து ஆஹாரத்தைப் பரிமாறுகிறவர் வரையில் பொதுவாக எல்லாரும் ஸாமான்ய ஜனங்களுக்குள்ள ஸாமான்ய குணதோஷங்களுள்ளவர்களாகவே இருப்பார்கள். சற்றுமுன் சொன்னாற்போல இதில் நல்லதும் கெட்டதும் ஒன்றையொன்று ந்யூட்ரலைஸ் செய்து கொண்டுவிடும் என்றே வைத்துக் கொள்ளலாம். ஆனால் கதையிலே ஸாதாரணமாக எவரும் செய்யக்கூடிய தோஷமாக இல்லாமல், எங்கேயோ எவனோ மட்டும் செய்கிற பெரிய குற்றமாகவே உள்ள திருட்டு என்கிற மஹாதோஷமும் சேர்ந்திருக்கிறதல்லவா? அதை ராஜாவின் நல்லெண்ணம் கூட ந்யூட்ரலைஸ் செய்ய முடியாதுதான். குருவின் தபஸும் அதற்கு அரை நாளாவது அடங்கித்தான் போயாக வேண்டியிருந்திருக்கிறது.

பழைய காலத்தில் ஸாதாரணமாக பொது ஜனங்களின் குணத்தில் நல்லது ஜாஸ்தியிருந்தது. அப்படியிருந்தபோதே அதில் எங்கே கெடுதல் இருந்து விடுமோ என்பதால் ஆஹார சுத்தியில் அதில் ஸம்பந்தப்பட்டவர்களின் சுத்தத்தையும் கவனி என்று ரூல் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது, நம் நாளில் - சொல்ல வருத்தமாகத் தான் இருக்கிறது - சாஸ்திரங்களை விட்டு, மனம் போனபடி பண்ணுவது என்று நாம் எதற்கும் துணிந்து காரியங்களைச் செய்து வருவதில், நல்லது-கெட்டதுகளை நிறுத்துப் பார்த்தால் ஒன்றுக்கொன்று ந்யூட்ரலைஸ் ஆகாமல், கெட்டதுதான் தூக்கலாக நிற்கும் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அதனால் நல்லதில் போகவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருந்தால் ஆஹார விஷயத்தில் ஜாக்ரதையாகத்தான் இருக்க வேண்டும்.

பக்வம் பண்ணாத பச்சை வஸ்துக்களைக்கூட சராசரித் தப்புத் தண்டாக்களைவிட ஜாஸ்தியாகப் பண்ணினவர்களிடமிருந்து

வாங்காமலிருக்கப் பார்க்க வேண்டும். Smuggle பண்ணினது, ப்ளாக் மார்க்கெட்காரனுடையது இவையெல்லாம் கூடாது.

சமைக்கிறவர், பரிமாறுகிறவர் இரண்டு பேரும் யாரென்று பார்த்துக்கொள்ள வேண்டியது ரொம்ப அவசியமாகும். பொதுவாகச் சொல்கிறது என்னவென்றால் ஒரு தாயாரோ, பத்தினியோ சமைத்துப் பரிமாறுகிறாளென்றால் அதை போஜனத்துக்கு யோக்யமான ஸாத்விக ஆஹாரம் என்று வைத்துக் கொள்ளலாம் என்பதே. அவளுடைய பொதுக்குணம் பொல்லாததாக இருந்தாலுங்கூட புத்ரனிடம், பதியிடம் மட்டும் பிரியமே வைத்து அவன் நன்றாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறவளாகத் தான் இருப்பாளாதலால் அவள் கை அன்னம் ஸாத்விகமானது என்று வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்பட்டிருக்கிறது.

10.3-முக்குணங்களும் உணவும்

ஸாத்விகம் என்று ஒரு வார்த்தை சொன்னேன். போஜனம் என்பது**உடம்பை வளர்ப்பதற்கு மட்டுமல்ல. உள்ளத்தை வளர்த்துகொள்வதற்கும் உதவும்படியாக அதைப் பண்ணிக்கொள்ள வேண்டும்** என்பதாலேயே சாஸ்திரங்களில் ஆஹாரத்தைப்பற்றி அநேக நியமங்கள் சொல்லியிருக்கிறது. ஆசாரங்களில் மிகவும் முக்யமானவையாக ஆஹாரத்தைப் பற்றிய விஷயங்களே வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஸாரமான தாத்பர்யம் ஸத்வ குணத்தை விருத்தி செய்யும்படியாக ஆஹாரம் இருக்க வேண்டும் என்பதுதான். கோப தாபமில்லாமல், காம மோஹங்களில்லாமல், பதட்டப்படாமல், அதற்காக ஒரேயடியாக மந்தமாகிச் சோம்பியும் வழியாமல், சாந்தமாகவும் பிரியமாகவும் இருந்துகொண்டே நல்ல சிந்தனா சக்தியுடனும் க்ரியா சக்தியுடனும் இருப்பது தான் ஸாத்வகுணம், ஸாத்விகம் என்பது. ஒரே பதட்டம் காம க்ரோதாதி உணர்ச்சி வசப்படுவது இவை எல்லாம் ரஜஸ் - ரஜோ குணம் அல்லது ராஜஸ குணம் என்பது. ஒரே ஸோம்பல், தாமஸ குணம். இப்படி மூன்று குணங்கள். உணர்ச்சிமயமாக, ஓவர்-இமோஷனலாக, தடாபுடா என்று தாறுமாறாகக் காரியம் பண்ணுவது ரஜஸ். அது ஒரு

'எக்ஸ்ட்ரீம்' [கோடி] . ஒரே 'டல்'லாக, எதற்கும் பிரயோஜனமில்லாமல் புத்தியில்லாமல் கார்ய சக்தியுமில்லாமலிருப்பது தமஸ் - இன்னொரு 'எக்ஸ்ட்ரீம்'. இரண்டுக்கும் நடுவே ஸமநிலையில் 'பாலன்ஸ்டாக' இருப்பது ஸத்வம். மனஸின் எழுச்சி ரஜஸ்; தாழ்ச்சி தமஸ்; ஸம நிலை ஸத்வம். எண்ணம் காரியம் இதுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற ஸத்வத்தையும்விட உசந்த ஒரு நிலை உண்டு. அங்கே மனஸ் (எண்ணம்) , சரீரம் (காரியம்) இதுகளை ஒருத்தன் அடியோடு கடந்துவிடுவான். தமஸ் மனஸின் தாழ்ச்சி என்றால், இது மனஸின் வீழ்ச்சி! தமஸிலே தூங்குவான்; இதிலே ஸமாதி நிலைமை அநுபவிப்பான். என்ன வித்யாஸமென்றால், தூங்குகிறவனுக்குத் தன்னைத் தெரியாது; ஸமாதியிலிருக்கிறவனும் வெளியில் பார்த்தால் தூங்குகிறாற்போலத் தானிருந்தாலும் அவனுக்குத் தன்னை நன்றாகத் தெரியும்; தான் ஒன்றுதான் இருக்கிற எல்லாமும் என்று தெரியும். இப்படியிருக்கிறவன், நாமெல்லாம் சின்னதாக 'நான்', 'நான்' என்று எதையோ சொல்லிக்கொண்டு அதற்காக இத்தனை ஹிம்ஸையும் பட்டுக்கொண்டிருக்கிறோமே, அந்த 'நானை'ப் பற்றின நினைப்போ, அரிப்போ கொஞ்சங்கூட இல்லாமல், ஈஸ்வரன் கைக்கருவியாக, லோக கல்யாணத்துக்காக ரஜோகுணக்காரனைவிட நிறையச் சிந்தித்து, நிறையக் காரியமும் பண்ணுவான். நாம் பட்டுக்கொண்டு, அடிப்பட்டுக்கொண்டு பண்ணுவதை விட ஜாஸ்தியாகவும் சவரணையாகவும் இவன் பட்டுக் கொள்ளாமலே பண்ணிவிடுவான். ஸத்வ-ரஜஸ்-தமஸ்களை முக்குணமென்றும், இப்போது சொன்ன மூன்றும் கடந்த நிலையை குணாதீத ஸ்திதி என்றும் சொல்லியிருக்கிறது. கீதையில் பகவானும் த்ரிகுணங்களைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லி அர்ஜுனனிடம் ***"நிஸ்த்ரைகுண்யோ பவ"*** - "மூன்று குணங்களும் இல்லாதவனாக, அவற்றுக்கும் மேலே போ" என்கிறார் [2.45] . ***"குண த்ரய விபாக யோகம்"*** என்றே [கீதையில்] ஒரு அத்யாயம். அதிலே ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் ஒவ்வொன்றின் நேச்சரும் என்ன என்று சொல்கிறார். அப்புறம் ***"தைவாஸுர ஸம்பத் விபாக யோகம்"*** என்று வருகிற அத்யாயத்தில் தெய்வ குணம் என்பதற்கு விளக்கமாக அவர் சொல்வதெல்லாம் ஸத்வமாயும் குணாதீதமாயும், அஸுர குணம் என்பது ரஜோ-தமோ குண இயற்கைகளாகவுந்தான் இருக்கிறது.

இதற்கப்புறம் சிரத்தையிலும் மூன்று தினுஸு உண்டு என்று விஸ்தரிக்கிற "ச்ரத்தா த்ரய விபாக யோக"த்திலும் ச்ரத்தையில் மநுஷ்யர்கள் மூன்று விதமாகப் பிரிந்திருப்பது முக்குணங்களில் அவர்களிடம் எது தூக்கலாக இருக்கிறது என்பதைப் பொருத்ததுதான் என்கிறார். அவர்கள் பண்ணும் பூஜை, யஜ்ஞம், தபஸ், தானம் எல்லாவற்றிலுமே இதிது ஸத்வம், இதிது ரஜஸ், இதிது தமஸ் என்று சொல்லிக் கொண்டு வரும்போது நடுவில் அவர்கள் போஜனம் பண்ணும் ஆஹாரத்துக்கும் வருகிறார்.

இங்கே ஸத்வ குணத்தவரால் ஸத்வகுண அபிவிருத்திக்காகச் சாப்பிடப்படும் ஆஹாரம் எப்படியிருக்கும் இதே மாதிரி ரஜோ, தமோ ஆஹாராதிகளின் லக்ஷணமென்ன என்றெல்லாம் சொல்கிறார். பகவான் கீதையில் சொல்கிறதில் போஜனத்தின் இரண்டாவது அம்சமான, அதில் ஸம்பந்தப்பட்ட மநுஷ்யர்களைப் பற்றிய பேச்சு இல்லை. போஜன வஸ்துவின் லக்ஷணத்தை, அது எப்படிப்பட்ட பதார்த்தமாயிருக்க வேண்டுமென்பதைத் தான் சொல்கிறார்.

'ஸாத்விகம்' என்றதை உங்களுக்குப் புரிய வைப்பதற்காக த்ரி-குணங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன். அவற்றிலே உசந்தது ஸத்வம். மனஸ் கொந்தளிக்காமல் கட்டுப்பட்டு, அமைதியாகவும் அன்பாயும் இருக்கிற உசந்த நிலை. இதைவிட உசந்தது குணாதீத, மனோதீத ஸ்திதி என்றாலும் அது நமக்கு எட்டாக் கை. நாம் முதலில் ஸத்வகுணிகளாக ஆகித்தான், அப்புறம் அது பழுத்து குணாதீத நிலைக்குப் போகணும்.

'ஸத்வ'த்தைக் குறித்த எல்லாவற்றுக்கும் 'ஸாத்விகம்' என்று பெயர். சுத்த ஆஹாரம், சுத்த ஆஹாரம் என்று பல தடவை சொன்னேனே, அது 'ஹைஜீன்'படி ஸுகாதாரமாகப் பண்ணி, க்ளீனான கப், ஸாஸரில் பரிமாறுவது மட்டுமில்லை; சுத்த ஆஹாரமென்றால் ஸத்வ ஆஹாரம் என்றே அர்த்தம். ஸத்வ குணத்தைத் தரும்படியான ஸாத்விக ஆஹாரமாக அது இருக்க வேண்டும்.

10.4-சமைப்பவர், பரிமாறுபவர்

சமைக்கிறவர், பரிமாறுகிறவர் ஆகியவர்களுடைய சுத்தமான பிரேமையால் ஆஹாரம் ஸாத்விகமாகிறது. தாயார், பத்தினி இவர்களுடைய கைச் சாப்பாடு இந்தக் காரணத்தால் உசந்தது என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும் இதிலே அநேக கேள்வி வருகிறது. ஜெனரலாக அவர்களுக்குப் பதி, புத்ராளிடம் பிரேமை உண்டு என்றாலும் சமைக்கிறபோதும், பரிமாறுகிறபோதும் இந்தப் பிரியந்தான் அவர்கள் மனஸில் ரொம்பியிருக்கிறதா என்ன? எதையாவது நினைத்துக்கொண்டு, யாரையாவது திட்டிக்கொண்டு, எரிச்சல் பட்டுக்கொண்டு, அலுத்துக் கொண்டு அவர்கள் சமைத்திருக்கலாம். அப்போது அதன் 'எஃபெக்ட் 'சும்மா விடுமா? கதையிலே ராஜாவும், அவனுடைய மடப்பள்ளிக்காரர்களும் பிரியத்துடனும், பக்தியுடனும் பண்ணிப் போட்டுங்கூட, சாப்பிட்டவரோ மஹானாயிருந்த போதிலும் அரிசி எவனிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்டதோ அவனுடைய திருட்டுக்குணம் தான் போஜனத்தில் 'ரிஃப்ளெக்ட்' ஆயிற்று என்பதிலிருந்து நாம் இன்னும் டைரக்டாக ஸம்பந்தப்பட்ட சமையல்கார, பரிசாரகர் விஷயத்தில் - அவர்கள் அம்மாவாகவோ, அகத்துக்காரியாகவோ இருந்தால்கூட - ஜாக்கிரதை பண்ணிக்கொள்ள வேண்டுமென்றாகிறது.

ஸ்தோத்ரங்களையோ பகவன் நாமாவையோ சொல்லிக்கொண்டுதான் ஒரு ஸ்திரீ அரிசி பொறுக்குவதிலிருந்து, காய்கறி நறுக்குவதிலிருந்து ஆரம்பித்து அரிசி களைந்து உலையில் போட்டு, அது பக்குவமாகிப் பரிமாறுகிற வரையில் இதைத் தொடர்ந்து செய்யணும்; சாப்பிடுகிறவனும் "கோவிந்த கோவிந்த" என்று சொல்லிக் கொண்டே சாப்பிடணும்; இப்படிச் செய்தால் போஜனத்தின் ஷட்ரஸத்தோடு - அறுசுவையோடு - நாமரஸமும் சேர்ந்து அதன் தோஷத்தையெல்லாம் போக்கிவிடுமென்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வாஸ்தவந்தான், நாமாவுக்கு இல்லாத சக்தி எதற்கும் இல்லை. அது ஸர்வ பாப பரிஹாரம், ஸகல தோஷ நிவ்ருத்திகரம் என்பதெல்லாம் வாஸ்தவந்தான். ஆனாலும் சொல்கிறவர் எந்த அளவு 'கான்ஸென்ட்ரேஷ'னோடு சொல்கிறாரென்பது முக்யமாச்சே! தினந்தினமும் சொல்வதில் மனஸ் கலக்காமல் மெகானிகலாக ஆகிவிடக் கூடாதே!

இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்தால் குழப்பமாயிருக்கிறது. 'ஸாத்விக ஆஹாரமென்றால் கிளப் (ஹோட்டல்) கூடாது, கான்டீன் கூடாது என்று ஸ்வாமிகள் சொல்வாரென்று எதிர்பார்த்தோமானால், அவர் இன்னும் ஒரு படி மேலே போய் அகத்து மநுஷ்யர்கள் சமைத்துப் போடுவதற்கும் தோஷம் கொண்டு வந்து விட்டாரே!' என்று தோன்றும்.

க்ளப், கான்டீன், ஹாஸ்டல், மெஸ் இதுகள் எதையும் நான் ஒப்புக் கொள்வதற்கில்லை. நானென்றால் என்ன? சாஸ்திரம் சொல்கிறதை, சாஸ்திரஜ்ஞர் சொல்கிறதைத்தான் நான் ஒப்பிக்கிறேன். சாஸ்திரம் ஒப்புக்கொள்கிறதை நான் ஒப்பிக்கிறேன்! க்ளப்பிலும் ஹாஸ்டலிலும் ஹைஜீன் சுத்தமே இருக்குமா என்பது ஸந்தேஹந்தான். வெளியிலே எல்லாம் 'நீட்'டாக இருந்தாலும் உள்ளே எத்தனை அசுத்தமிருக்குமோ? இதிலே சுத்தமாயிருக்கிறதென்றே வைத்துக் கொண்டாலும் ஆசார சுத்தி, பண்ணுகிறவர்களின் மனஸ் சுத்தி என்பது இங்கெல்லாம் கொஞ்சங்கூட இருக்காது. பகவத் ஸ்மரணையோ, நாம் நன்றாயிருக்க வேண்டுமென்ற பிரேமையான எண்ணமோ, ஆசார அநுஷ்டானமோ துளிகூட இல்லாத எவனோ சமைத்துப் போடுகிறதைச் சாப்பிடுவதில் ஒரு நல்லதும் வராது. வேறே எந்தத் தொழிலும் கிடைக்காமல்தான் அநேகமாக இதற்கு வருவானாதலால் அவனுக்குப் புத்தியும் அதிகமிருக்காது. இந்த நாளில் எல்லாரையும் பிடித்து ஆட்டுகிற பொருளாசை, ஸினிமா (காமம்) , பாலிடிக்ஸ் (க்ரோதம்) இவற்றில்தான் அவன் தோய்ந்து போனவனாயிருப்பான். அதனால் இவன் கைச் சாப்பாடு நல்லது பண்ணாதது மட்டுமில்லாமல் கெடுதலே பண்ணும்.

மனஸ் சுத்தம், வெளி சுத்தம் இரண்டையும் இணைக்கிற ஆசாரத்துக்கு க்ளப்பிலும், மெஸ்ஸிலும் ஏது இடம்? ஒரே எச்சில், துப்பல்தான். தினம் ஒரு தட்டில் - பல பேர் சாப்பிட்ட தட்டில் - தின்னணும். கோமயம் [சாணி] போட்டு எச்சில் இடுவதைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியுமா? டேபிள், நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பரிஷேசனம், ப்ரணாஹுதி[1]பண்ணலாமா? ப்ராணாஹுதிக்கு 'ஸெர்வர் 'கவனமாக அபிகாரம்[2]பண்ணுவானா? `ஏதோ தின்றோம்; இந்த மாம்ஸ பிண்டத்தை வளர்த்தோம்; ஜிஹ்வா சாபல்யத்தை

[நாக்கின் சபலங்களை] அதனால் தீர்த்துக் கொண்டோம்' என்றால் [சாஸ்திர விதி] எதுவும் வேண்டாம். ஆனால் இதற்காகவா ஈஸ்வரன் ஆறறிவுள்ள மநுஷ்யனாக நம்மைப் படைத்திருப்பது? இப்படித்தானென்றால் மிருக ஸ்ருஷ்டியோடேயே நிறுத்திக் கொண்டிருக்கலாமே!

---

1. உண்ணு முன் அன்னத்தைத் தீர்த்தத்தால் அபிமந்திரித்து, பிராண தேவதையர் ஐவருக்கும் அர்ப்பணம் செய்வது.

2. அன்னத்தின் மீது நெய் விடுதல்.

10.5-பதார்த்த சுத்தம்

ஆஹாரத்தை தயாரிப்பவர்களின் சுத்தத்தைப் பற்றித்தான் இத்தனையும் சொன்னேன். இதற்குமுன் ஆஹாரம் எதனால் ஆக்கப்படுகிறதோ, அந்தப் பதார்த்த சுத்தம் ரொம்ப அவசியமாயிற்றே! இன்ன பதார்த்தங்களைத்தான் சாப்பிடலாம், இன்னது கூடாது என்ற பொது விதி; அதற்கப்புறம், பித்ரு தினத்தில் இன்னின்ன தான் சமைக்கலாம் சாப்பிடலாம், விரத தினத்தில் இப்படியிப்படி உபவாஸமிருக்க வேண்டும், இது தவிர இன்ன மாஸத்தில் இது சாப்பிடக்கூடாது என்றெல்லாம் வேறு விதிகள் இருக்கின்றன. இந்த பதார்த்த சுத்தி க்ளப்பிலும் மெஸ்ஸிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகவேயிருக்கும்.

வீட்டிலே நாம் பதார்த்த சுத்தியை அமல் பண்ணுவது அவ்வளவு கஷ்டமில்லை. நம் நாக்கை கட்டி விட்டால் ஈஸியாக இதைப் பண்ணிவிடலாம். அப்படியொன்றும் நம் சாஸ்திரத்தில் ஒன்றையுமே தின்காமல் காயக் காயக் கிடக்கும்படியாகவும் நிர்ப்பந்தப்படுத்தி விடவில்லை. ஒரு வேளைச் சாப்பாடு, ஒரு வேளை பலகாரம் என்றால்கூட ருசியாகப் பல வகைகள் இருக்கின்றன. தள்ளுபடியில்லாத கறிகாய்களே எத்தனையோ இருக்கின்றன. தேஹ புஷ்டி, ஸத்வபுத்தி இரண்டும் தருபவையாக இவை இருக்கின்றன. ஸாம்பார், ரஸம், கறி, கூட்டு, பச்சடி, துகையல் என்று

எத்தனையோ வகைகள் சாஸ்திர ஸம்மதமாகவே இருக்கின்றன. இட்லி, தோசை, பொங்கல், அடை, உப்புமா, ஸேவை என்று பலகார தினுஸுகளும் ஏராளமாக இருக்கின்றன. இது ஒவ்வொன்றிலும் எத்தனையோ 'வெரெய்டி'. இட்லியில் குடலை இட்லி, ரவா இட்லி என்றெல்லாம் தினுஸுகள் இருக்கின்றன, பஜ்ஜி, வடை, வடாம், அப்பளாம் மாதிரியானவை வேறு. பக்ஷணங்களோ கேட்கவே வேண்டாம். ஒவ்வொரு பண்டிகைக்கும் ஒரு பக்ஷணம். வெறும் சீடை, வெல்லச் சீடை, முறுக்கு, என்று கோகுலாஷ்டமிக்கு. பிள்ளையார் சதுர்த்தியா?- அதிலே பிள்ளையார் அளவுக்கு முக்யம் மோதகம்! ஸங்க்ராந்திக்குச் சர்க்கரைப் பொங்கலை வைத்தே 'பொங்கல்' என்றே பேர். தீபாவளிக்கு எத்தனை 'ஸ்வீட்' உண்டோ, உப்பு தினுஸு உண்டோ தின்றுதான் ஆகவேண்டுமென்று நரகாஸுரன் கிருஷ்ணபரமாத்மாவிடம் வரமே வாங்கிக் கொடுத்திருக்கிறான்! நவராத்திரி என்றால் சுண்டல். அம்பாளுக்குப் பௌர்ணமி பூஜையா? சர்க்கரைப் பொங்கல், வடை, சித்ரானங்கள். ஸுப்ரமண்யருக்குத் தேனும் தினைமாவும். தினைப்பாயஸங்கூட உண்டு. ராம நவமிக்குப் பாயஸம், பானகம், வடைப்பருப்பு. வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி, ஷஷ்டி மாதிரி உபவாஸமிருக்கிற வ்ரத தினங்களை விட சுசி ருசியாக, தினுஸு தினுஸாகச் சாப்பிடுகிற பண்டிகைகள் தான் ஏராளமாக இருக்கின்றன. சாஸ்திரம் சொல்கிறபடி உஷத் காலத்திலிருந்து மாத்யான்ஹிகம் வரையில் நன்றாகக் கர்மாக்களை உழைத்துச் செய்துவிட்டு அப்புறம் இப்படிப் புஷ்டியாகச் சாப்பிடுவதால் அது நன்றாக உடம்பில் ஒட்டவும் ஒட்டும். சாஸ்திரோக்தமாக மூன்று மணிக்கு மேலே சிராத்தம் முடிந்தால்கூட அப்புறம் ஆரோக்யமாகவும், ருசியாகவும் மிளகு சேர்த்த அநேக வியஞ்ஜனாதிகளோடு, எள்ளுருண்டை அதிரஸம் என்று நல்ல போஜனம் இருக்கிறது. மற்ற தினங்களில் மத்யான்னம் வரையில் ஒட்ட ஒட்டக் கிடக்கணும் என்றில்லை. மோர், பால், பழங்கள் எடுத்துக் கொள்ளலாம். இதை ரொடீனுக்குக் கொண்டு வந்து விட்டால் பகலில் மட்டும் ஒரு போஜனம், ராத்ரியில் பலகாரம் என்று ஸுலபமாகப் பழக்கிக்கொண்டு விடலாம். சும்மா சும்மா சாப்பிடுவது உடம்புக்கும் நல்லதில்லை, ஆத்மாவுக்கும் நல்லதில்லை. பஞ்ச கோசங்களில் அன்னமயம்தான் முதல். அதிலிருந்து பேரின்பம் என்கிற

ஐந்தாவதான ஆனந்தமய கோசத்துக்குப் போக வேண்டுமே தவிர அதோடேயே நின்று விடக் கூடாது.*[1] அதுவும் ஒரு கோசமாக இருப்பதால் அதை அடியோடு அலக்ஷ்யம் பண்ணி நிந்திக்கவும் கூடாது. "அன்னத்தை நிந்திக்கப் படாது; நிறைய அன்னத்தை விருத்தி பண்ணு" என்றெல்லாம் உபநிஷத்தே சொல்கிறது. அதற்காகக் கண்ட வேளைகளில், கண்டதை, கண்ட பேர் கையிலிருந்து வாங்கித் திண்ணவேண்டுமென்று அர்த்தமில்லை. வசனமே இருக்கிறது, ஒரு வேளை சாப்பிடுபவன் யோகி, இரண்டு வேளை சாப்பிடுபவன் போகி, மூன்று வேளை சாப்பிடுபவன் ரோகி என்று. இப்போது இத்தனை வேளைதான் என்று கணக்கேயில்லாமல் ஹோட்டலைக் கண்ட இடத்தில் கா∴பி, டிபன் என்று போகிறதற்கு ஏற்க எல்லாருக்கும் இத்தனைதான் வியாதி என்று கணக்கில்லாமல் ஆயிருக்கிறது!

குடியரசு யுகம் என்பதற்கு ஸரியாக எல்லாவற்றிலுமே 'க்வாலிடி'யைவிட 'க்வான்டிடி'தான் முக்யமென்றாகியிருப்பது ஆஹார விஷயத்திலும் நடந்திருக்கிறது! எங்கே பார்த்தாலும் ஹோட்டல் வைத்து எதையாவது தின்னச் சபலம் ஏற்படுத்தியிருக்கிறதே தவிர, அந்த வஸ்துவின் தரத்தைப் பற்றிக் கவலையேயில்லை.

இந்தத் தரம் 'க்வாலிடி', ருசியில் மட்டுமில்லை. பதார்த்தம், சமைத்துப் போடுகிறவர்கள் என்ற இரண்டின் ஸாத்விகம்தான் ஆஹாரத்தின் 'க்வாலிடி'யை நிர்ணயிப்பவை. இதில் சமைத்துப் போடுகிறவர்களைச் சொல்லும்போது தாயாரும், பத்தினியும் பண்ணினதானால் பரவாயில்லை என்று வழக்கிலிருப்பதைச் சொல்லிவிட்டு, உடனே அவர்களும் நல்ல தெய்வ நினைப்போடு பண்ணிப் போடா விட்டால் பிரயோஜனமில்லை என்று Veto [எதிர்வோட்டு] மாதிரியும் ஒன்று போட்டு விட்டேன்! சாப்பிடுகிற நாம் வேண்டுமானால் "கோவிந்தா கோவிந்தா" என்று சாப்பிடலாம். சமைத்துப் பரிமாறுகிற பெண்டுகள் தெய்வ நினைப்போடுதான் அப்படிப் பண்ணும்படியாக நாம் எப்படிக் 'கம்பெல்' செய்ய முடியும்? இப்படித்தான் சொல்லிக் கொண்டுபோய் உங்களையெல்லாம் 'அப்போ ஸ்வாமிகள் என்னதான் பண்ணணும் என்கிறார்? பட்டினி கிடக்கச் சொல்கிறாரா?" என்று நினைக்கும்படிப் பண்ணினேன்.

"க்ளப்பும் கூடாது, அகத்து மநுஷ்யர்களும் கூடாது என்றால்?" என்பதுதானே 'கொஸ்ச்சின் மார்க்' (கேள்விக் குறி) ?

இதற்கு பதில் சொல்வதுதான் என் முக்கிய உத்தேசம். 'ஸ்வயம் பாகம்'- அவனவனும் தன் ஆஹாரத்தைத் தானே சமைத்துக்கொள்ளணும் - என்பது தான் பதில். இதைப் பற்றி அப்புறம் சொல்கிறேன். இப்போது, ஏற்கனவே இதுவரை தொட்டும் தொடாமலும் விட்ட முதல் அம்சமான பதார்த்த சுத்தத்தை இன்னும் கொஞ்சம் சொல்லி விடுகிறேன். ஆஹாரத்தில் எது ஸாத்விகம், எது ராஜஸம், எது தாமஸம் என்று கீதையில் பதார்த்தத்தை வைத்து பகவான் சொல்லியிருப்பதைச் சொல்கிறேன்.

ஆயுஸ்-ஸத்வ-பலாரோக்ய-ஸுக-ப்ரீதி-விவர்தநா: |
ரஸ்யாஸ்-ஸ்நிக்தாஸ்-ஸ்திரா-ஹ்ருத்யா ஆஹாராஸ்-ஸாத்விக ப்ரியா: ||
(17.8)

ஸாத்விகர்களுக்குப் பிரியமான ஸத்வ ஆஹாரம் ஆயுஸ், புத்தி, பலம், ஆரோக்யம், ஸௌக்யம், ஸந்தோஷம் இவற்றையும் விருத்தி பண்ணுவதாக இருக்கும். அதிலே நல்ல ரஸமும், பசையும் இருக்கும். வறட்டு வறட்டு என்றில்லாமல் மிருதுவாக இருக்கும் என்று அர்த்தம். அதற்காக ஒரே கொள கொளா என்று நீர்த்து ஓடாமல் ஸ்திரமாயும் இருக்கும். பார்க்கிறதற்கும் சாப்பிடுகிறதற்கும் ரம்யமாயிருக்கும்.

ராஜஸ உணவு எப்படியிருக்கும்?

கட்-வம்ல-லவணாத்யுஷ்ண-தீக்ஷ்ண-ரூக்ஷ-விதாஹிந: |
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:க-சோகாமய ப்ரதா: || **(17.9)**

துக்கத்தையும் சோகத்தையும் வியாதியையும் ராஜஸ ஆஹாரம் உண்டாக்கிவிடும். அது எப்படியிருக்குமென்றால் கசப்பாக (கடு) , புளிப்பாக (அம்ல) , உப்பாக (லவண) , உறைப்பாக (தீக்ஷ்ண) , துவர்ப்பாக (ரூக்ஷ) இருக்கும். ருசியிலே இப்படி இருப்பது மாத்ரமில்லாமல் 'அத்யுஷ்ண' என்று பகவான் சொல்லியிருக்கும்படி (ரொம்பக் கொதிக்கக் கொதிக்கச்) சாப்பிட்டாலும் ராஜஸ குணந்தான் வளரும். வயிற்றிலே எரிச்சல் எடுத்து

‘அல்ஸர்’ என்கிறார்களே, இதையும் ராஜஸ ஆஹாரம் உண்டாக்குகிறது என்பதால் “விதாஹிந:” என்கிறார்.

`அறுசுவை என்று சொல்வதில் தித்திப்பு நீங்கலாகப் பாக்கி ஐந்தையும் பகவான் இங்கே ராஜஸம் என்று சொல்லி விட்டாரே! உப்பு, புளி, மிளகாய் இல்லாமலே சாப்பிட முடியுமா? துவர்ப்பு உடம்புக்கு நல்லது கசப்பு ஞான விருத்தி என்றும் சொல்வதுண்டே!’ என்றால் இந்த ஐந்திலே எதையும் அதியாகச் சேர்த்துக் கொள்ளாமல் மிதமாகப் பிரயோஜனப்படுத்த வேண்டுமென்றே பகவான் சொல்வதாக வைத்துக் கொள்ளணும். ரொம்பவும் ஞான வைராக்யமாகப் போகும்போது உப்பு, புளி, மிளகாயை அடியோடு தள்ளி விடுவதுதான் நல்லதென்றாலும், கீதை ஸாமான்ய மநுஷ்யனையும் அவன் இருக்கிற இடத்திலிருந்தே கொஞ்சங் கொஞ்சமாக உசத்திக்கொண்டு போவதால், உப்பு, புளிப்பு, உறைப்பு, துவர்ப்பு, கசப்பு முதலானதுகளை அளவாக, மிதமாகச் சேர்த்துக் கொள்வது என்று வைத்துக் கொள்ளணும். எந்த ‘எக்ஸ்டரீ’முக்கும் - போகாமல் மத்தியில், மிதமாக போவதைத்தான் பகவான் எல்லா விஷயத்திலுமே விதித்து இதே கீதையில் பேசியிருக்கிறார். ஒரேயடியாகத் தின்னக்கூடாது. முழுப்பட்டினியும் போடக் கூடாது; ஒரே தூக்கமாய்த் தூங்கப்படாது, கொட்டு கொட்டென்று ராப்பூரா முழித்துக் கொண்டும் இருக்கப்படாது; எல்லாக் காரியத்திலேயும் மிதமாயிருக்கணும்; அப்படிப் பட்டவன்தான் யோகியாக முடியும் என்று அங்கே சொல்கிறார்[*2]. அதையே இங்கேயும் ‘அப்ளை’ பண்ணி, (ஆஹாரத்தின்) அளவில் மிதமாயிருக்கணும் என்ற மாதிரியே, அதன் ருசியிலும் மிதமான உறைப்பு, புளிப்பு முதலானவை உள்ளதாக போஜனம் செய்ய வேண்டும் என்று வைத்துக் கொள்ளணும்.

ராஜஸ ஆஹாரத்திலே தித்திப்பைச் சொல்லவில்லை. ஸாத்விகத்திலும் தித்திப்பு என்று நேராகச் சொல்லாவிட்டாலும் ரஸம் நிறைந்தது (ரஸ்யா:) என்றதால் தித்திப்புத்தான் நாக்கில் வைத்தவுடன் உமிழ்நீர் சுரக்கப் பண்ணுவதால், அதையே குறிப்பதாகக் கொள்ளலாம். அதற்காக தித்திப்பு மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருந்தால் ஸாத்விகம் என்று நினைத்துவிடக் கூடாது. ஏனென்றால், ஸாத்விக ஆஹாரத்தின் மற்ற லக்ஷணங்களைச்

சொல்கிறபோது அது ஆயுஸ், ஆரோக்யம், பலம் எல்லாம் தருவது என்கிறார். வெறும் தித்திப்பு மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலோ 'டயாபெடிஸ்', எலும்புருக்கி முதலான வியாதிகள் வருவது பிரத்யக்ஷமாயிருக்கிறது. அதோடு கூட எல்லாவற்றிலும் மிதம் வேண்டும் என்பதே கீதையின் உபதேசமாயிருப்பதாலும் தித்திப்பு மட்டுமே சாப்பிட வேண்டும் என்று அது சொல்லியிருக்க முடியாது. அப்படியானால் ராஜஸ ஆஹாரத்திலே தித்திப்பு நீங்கலாக ஏன் மற்ற ஐந்தை மாத்திரம் சொன்னாரென்றால், ஒன்று [ஒரு காரணம்] தோன்றுகிறது. பண்டிகை நாட்களில்தான் பாயஸம், மற்ற தித்திப்பு பக்ஷயம் சாப்பிடுகிறோமே தவிர, பெரும்பாலான ஏனைய நாட்களில் தித்திப்பு நீங்கலாக மற்ற ஐந்தையும்தானே நாம் போஜனத்தில் சேர்த்துக் கொள்கிறோம்? அதனால் இந்த ஐந்தை மட்டும் அவர் குறிப்பிட்டிருக்கலாம். அதோடு, உப்பு, உறைப்பு புளிப்பு பிடித்தவர்கள் அப்படிப்பட்ட ஆஹார தினுஸுகளை மிதமிஞ்சிச் சாப்பிடுவதுபோல் தித்திப்பை புஜிக்க முடியாமல், தானே அது திகட்டிப் போய் விடுகிறது.

கொஞ்சமாக சாப்பிட்டாலே புஷ்டியும் சித்த சுத்தியும் தருகிற பால், மோர், வெண்ணெய், பழங்கள் முதலியவையும் ஸாத்விகமானவையே.

எந்தப் பதார்த்தமானாலும் அதி உஷ்ணமாகச் சாப்பிட்டால் ராஜஸம் என்கிறார். உடம்பிலே படபடப்பு, நரம்பு ஆடிப்போவது, அதேபோல உணர்ச்சியும் ஜாஸ்தியாவது இதற்கெல்லாம் ரொம்பவும் சூடான ஆஹாரம் காரணமாகிறது.

அதி உஷ்ணம் ராஜஸத்தை அதிகரிக்கிறதென்றால் ஆறிக் குளிர்ந்தது தாமஸத்தை வளர்க்கிறது என்கிறார். தாமஸ ஆஹாரத்துக்கு அவர் தருகிற லக்ஷணங்கள்:

யாத-யாமம் கத-ரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் |
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸ ப்ரியம் || **(17.10)**

யாமம் என்றால் ஜாமம், அதாவது மூன்று மணி. சமைத்து மூன்று மணிக்கு மேல் ஆன ஆஹாரம் "யாத யாமம்"- காலம் கடந்தது. அது தாமஸம். ஜலம் விடாததானால் இது 'டேஸ்ட்' போய் 'கத-ரஸ'மாகிவிடும். காய்ந்துபோன

பழங்களும் ‘கத-ரஸ’த்தைச் சேர்ந்ததுதான். ஜலம் விட்டதனால், பழையது மாதிரி, இட்லி மாவு மாதிரி இது புளித்துப் போயிருக்கும். இதுதான் ‘பூதி’ என்று ச்லோகத்தில் சொல்லியிருப்பது. ஊசிப்போன வியஞ்ஜனம், அழுகிப்போன பழம் எல்லாம் ‘பூதி’. தீய்ந்து போனது, சிக்குப் பிடித்தது ஆகியனவெல்லாம் ‘பர்யுஷிதம்’. நம்மை விட வயஸிலும் வர்ண-ஆசிரமங்களிலும் குறைவாக இருப்பவர்கள் சாப்பிட்டபின் மீந்தது ‘உச்சிஷ்டம்’. இந்த நாளில் ஃபாஷன் என்று எச்சில் பண்ணிச் சாப்பிடுவதும் ‘உச்சிஷ்டம்’தான். இதெல்லாம் தாமஸப் போக்கை உண்டாக்குவதே.

உச்சிஷ்டமபி சாமேத்யம். ‘அமேத்யம்’ என்றால் மலம் என்றே அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம். நேர் அர்த்தம் யஜ்ஞத்துக்கு, அதாவது ஈஸ்வர ஆராதனத்தில் நிவேதனமாக வைப்பதற்கு லாயக்கில்லாதது என்று அர்த்தம். பழையதை, கள்ளை - ஏன் ஸோடா, ஐஸ்க்ரீம், பிஸ்கெட், ஓவல்டின் முதலானதுகளைகூட - நைவேத்யமாக வைப்போமா? எதுவோ ஒன்று இதெல்லாம் பகவானுக்கு அர்ப்பணிக்கத் தகுந்ததல்ல என்று நம் மனஸில் தடுக்குகிறதே! அப்படிப்பட்ட எல்லாம் அமேத்யம்தான். புளியும் காரமும் சேர்ந்த புளியஞ்சாதம் முதலான ராஜஸ ஆஹார தினுஸுகளைகூட மனஸ் உறுத்தாமல் நைவேத்யம் பண்ணுகிறோம் என்பதை இங்கே நினைத்துப் பார்க்கத் தோன்றுகின்றது. தாமஸம் அதற்கும் ஒரு படி கீழே.

---

1. *அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என்பவை தைத்திரீயோபநிஷத்து கூறும் ஐந்து கோசங்களாகும்.

2. * **கீதை அத்** 6, ச்லோ. 16-17. மேலே மேற்கோள் காட்டிள்ள ‘கட்-வம்ல’ ச்லோகத்தில் உஷ்ணமான உணவுக்கு மட்டுமே ‘அதி’ சேர்த்து, அத்யுஷ்ணம் ஸாத்விகமாகாது எனக் கண்ணன் கூறும் போதிலும் அதற்கு ஆதி சங்கரர் பாஷ்யம் செய்கையில், ச்லோகம் கூறும் மற்ற சுவைகளும் ‘அதி’யாக ஆகாத உணவினை உட்கொள்ள வேண்டுமென்பதே உட்பொருள் எனக் கூறியுள்ளார். இதுவேதான் இங்கு நமது ஸ்ரீபெரியவர்கள் கூறுவதும்.

10.6-நியமத்தில் வேறுபாடுகள்

பொதுவாக இப்படிச் சொன்னாலும், பழையது, நீராஹாரம் முதலானவை தாமஸமாகச் சொல்லப்பட்டாலும், உழைக்கிற குடியான ஜனங்களுக்கு விலக்கு இல்லை. வியாதியஸ்தர்களுக்கும் சில நிஷேத வஸ்துக்களை [தள்ளும்படியான வஸ்துக்களை]ப் பரவாயில்லையென்று அநுமதித்திருக்கிறது. உடம்பு ஸரியானவிட்டு இதற்காகப் பஞ்சகவ்யம் சாப்பிட்டு ப்ராயசித்தம் செய்து கொள்ளும் படியும் சொல்லியிருக்கிறது. எட்டு வயஸுக்குக் கீழேயும் எண்பது மேலேயும் போனவர்களுக்கு ரொம்பவும் ஆஹாரக் கட்டுப்பாடு வேண்டுமென்பதில்லை என்றே கூட சாஸ்திரம் சொல்வதுண்டு. நியாயமாகப் பார்த்தால் எண்பது வயஸுக்கு மேலே ஜீர்ண சக்தியும் குறைந்து, இச்சைகளும் குறைந்து அவர்கள் தாங்களாகவே ரொம்ப நியமமாக இருக்கத்தான் பிரியப்பட வேண்டும். அப்படியில்லாதபோது 'நப்பாசையும் நாக்கு ருசியும் போகாத இப்படிப்பட்டவர்கள் எப்படியும் ஜன்மாவைக் கழித்துக்கொள்ளப் போவதில்லை; அதனால் இந்தக் கிழ ஜீவன்களை கடைசிக் காலத்தில் ஏன் கட்டுப்படுத்திக் கஷ்டம் கொடுக்க வேண்டும்?' என்றே 'ஸிம்பதி'யில் விட்டு விட்டதாகத் தோன்றுகிறது.

எல்லாருக்கும் எல்லா நியமமும் என்று வைக்காமல் நீக்குப் போககோடு வர்ணாச்ரமங்களையொட்டி வெவ்வேறு விதமாகவும், வெவ்வேறு டிகிரியிலும் வைத்துதிருப்பதுதான் நம் மதம் உலகத்திலேயே மிகவும் பழங்காலத்தி லிருந்து இன்றுவரை அமரமாக இருந்து வருவதற்கு காரணம். ஆஹாரத்திலும் இதைப் பொருத்து பிராம்மணனுக்குச் சொன்ன அளவு கட்டுப்பாடு மற்றவர்களுக்குச் சொல்லவில்லை. மது, மாம்ஸாதிகள், பழையது எல்லாங்கூட க்ஷத்ரியர், நாலாம் வர்ணத்தவர் ஆகியவர்களுக்கு அளவோடு அநுமதிக்கப்பட்டிருக்கிறது. அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டியது முக்யம்.

உடம்பால் கடுமையாக உழைக்கிறவனுக்கு ஆசாரக் கட்டுப்பாடுகளையும் கடுமையாக வைத்துக் கஷ்டப்படுத்தாமல் கொஞ்சம் ஸ்வதந்திரமாக விட்டு, பிராம்மணன் மாத்திரம் ஆசாரக் கட்டுப்பாட்டில் கடுமையாக இருந்துகொண்டு

ஸௌக்யங்களைத் தியாகம் பண்ணி, 'ஐடியல்' நிலையைக் காட்ட வேண்டுமென்று சாஸ்திரங்கள் வைத்திருக்கின்றன.

சிலர் மாத்திரம் பூரணமாக 'வெஜிடேரியனிஸம்' முதலான நியமங்களைப் பின்பற்றுவதாலேயே, நம் நாட்டில் மற்றவர்களும் அவர்களைப் பார்த்துப் பித்ரு தினம், விரத தினம் முதலான நாட்களிலாவது மாம்ஸம் சேர்ப்பதில்லை, மதுபானம் பண்ணுவதில்லை என்றெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அநேக ஜாதிக்காரர்கள் அறுபது, எழுபது வயஸு ஆன பிற்பாடு சுத்த சைவமாகிறார்கள்.

10.7-யதார்த்தத்துடன் லக்ஷயத்தின் இசைவு

ஐடியல்' விடாமல் 'ப்ராக்டிக்'லில் போனால்தான் இரண்டும் நிற்கும்; முடிவாக நல்ல பக்குவம் ஏற்பட்டு எல்லாரும் ஐடியலுக்குப் போவார்கள். ஐடியலையே ஸர்வத்ர ஜனங்களுக்கும் ப்ராக்டிகலாக்கப் பார்த்தால் ஐடியல் அடியோடு போய்விடுவதாகத்தான் ஆகும்.

'ஸாத்விக ஆஹாரந்தான் ஐடியல்; மது மாம்ஸம் வேண்டாமென்றுதான் இப்போதில்லா விட்டாலும் முடிவிலாவது ஆக்கிக் கொள்ள வேண்டும்' என்று இதர ஜாதியினரும் உணரும்படியாக நம் தேசத்தில் ஆசாரங்கள் அமைந்து, நடத்தப்பட்டிருக்கின்றன.

வெஜிடேரியனிஸம் என்ற ஐடியல் நம் தேசத்தில் ஒரு குறிப்பிட்ட குலாசாரமாக மாத்திரம் இருப்பதாலேயே, அதைப் பார்த்து, சாஸ்திரத்தின் 'கம்பல்ஷன்' இல்லாமல், தாங்களாகப் பிரியப்பட்டு வேறுவித குலாசாரமுள்ளவர்களும் அதை எடுத்துக்கொண்டு, ஐடியல் மேலும் மேலும் ப்ராக்டிஸில் பரவுவதைப் பார்க்கிறோம். "நாங்கள் இரண்டு தலைமுறையாக சுத்த சைவமாயிருக்கிறோம்" என்று இதரர்கள் பெருமையோடு சொல்லிக்கொள்வதைக் கேட்கிறோமென்றால், அதற்கு முந்தி அசைவமாயிருந்தவர்கள் தாங்களாகவே சைவ ஆஹார நியமத்தில் மதிப்பு வைத்து மாறியிருக்கிறார்களென்று தானே அர்த்தம்? இன்னும் சிலபேர்,

"வீட்டில் அன்னிய பதார்த்தம் சாப்பிடுவார்கள்; ஆனால் நம்ம கிட்டயே அந்த வாடை வரக் கூடாது" என்று பெருமைபட்டுக் கொள்ளும்போது, எப்படி ஒரு ஐடியலைச் சிலருக்கு மட்டும் விதியாக வைக்கிறபோது, அது மற்றவர்களில் சிலரையும் அந்தப்படி தாங்களாக இஷ்டப்பட்டுச் செய்ய 'என்கரேஜ்' பண்ணுகிறது என்று தெரிகிறது.

எதைப்பற்றியுமே, சொல்வது ஜாஸ்தியாகி விட்டால் அப்புறம் செய்வது அந்த அளவுக்குக் குறைந்து கொண்டுதான் வருகிறது. செய்யாததற்குப் பதில் சொல்லித் தீர்த்து விடுகிறமாதிரி வெறும் பேச்சாயும், எழுத்தாயும் மட்டுமே, எது காரியத்தில் நடக்க வேண்டுமோ அது நின்று விடுகிறது! காந்தி யுகத்திலிருந்து அஹிம்ஸை, non-violence என்று ஓயாமல் பேச்சாயிருந்தாலும் இப்போதுதான் எல்லாவித ஹிம்ஸைகளும் தேசத்தில் ஜாஸ்தியாகிக் கொண்டு வந்திருக்கிறது; தலைமுறை தலைமுறையாக வெஜிடேரியனிஸமே பின்பற்றி வந்த பிராம்மணப் பசங்கள் கூட இதர பதார்த்தம் சாப்பிடுவதான அநியாயம் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது.

பௌத்தத்தில் ஆதியில் இப்படித்தான் மனஸ், வாக்கு, காயம் மூன்றாலும் யாரும் எந்த உயிருக்கும் ஹிம்ஸை விளைவிக்கக் கூடாது என்று பொது ஜனங்கள் எல்லோருக்கும் நிறையச் சொல்லிவந்தார்கள். அஹிம்ஸைக் கொள்கை (doctrine of non-violence) சொல்லிக் கேட்க நன்றாகத்தான் இருக்கும். ஆனால் ஸர்வ ஜன ஸாத்யமாக நடைமுறைக்கு வருமா என்பதுதான் கேள்வி. பிற்பாடு பௌத்தம் விரிவாயும் ஆழமாயும் பரவின சீனா, ஜப்பான் முதலான தேசங்களில்தான் நம் தேசத்து மாம்ஸ போஜனக்காரர்கள் கூட நிஷித்தம் என்று ஒதுக்குகிற தவளை, பாம்பு முதலானது உள்பட எல்லாப் பிராணிகளையும் ஜனங்கள் பிடித்துத் தின்று கொண்டிருக்கிறார்கள். கசாப்புக் கடைக்குப் போவதில் ஏதோ நூற்றில் ஒரு பங்கு யாகத்தில் பலியானதற்கு "ஐயையோ அக்ரமம் பண்ணுகிறார்களே!" என்று புத்தர் அழுதார், வைதார். 'லோக க்ஷேமார்த்தமாகச் சில சக்திகளைப் பிரீதி பண்ணவே யஜ்ஞம்' என்று அவருக்குப் புரிய வைக்க அந்த நாளில் யாருமில்லை போலிருக்கிறது. அவர் கண்டனம் செய்த யஜ்ஞப் பிராம்மணாள் வம்ச பரம்பரையாக வெஜிடேரியன்களாக இருந்து வருவது பிரத்யக்ஷம்;

அவருடைய follower s-ல் [பின்பற்றுபவர்களில்] வெளிதேச பிக்ஷுக்கள் உள்பட மாம்ஸத்திலும் ரொம்பவும் நிக்ருஷ்டத்தை [கீழானதை] போஜனம் பண்ணுவதும் பிரத்யக்ஷம்!

இதிலே ஒரு வேடிக்கை சொல்கிறேன். வெளிதேசத்தில் பௌத்தம் பரவின பிறகுதான் என்றில்லை; நம் தேசத்திலேயே எல்லாருக்கும் ஸ்ட்ரிக்ட் அஹிம்ஸா தர்மம் என்று புத்தர் பண்ணியதில் அந்த மதஸ்தர்கள் எல்லோரும் நேர்மாறாகத்தான் அசைவ போஜனம் செய்ய ஆரம்பித்தார்கள். பிராம்மணனைத் தவிர இதரர்களுக்கெல்லாம் மாம்ஸ போஜனத்தை அநுமதித்திருக்கிற நமது மதத்தில் ஸந்நியாஸிகள் கண்டிப்பாக வெஜிடேரியன்களாகத்தான் இருக்க வேண்டும் என்று விதித்து, அப்படியே ஸ்ட்ரிக்டாகப் பின்பற்றப் படுவதாயிருக்க, ஸர்வ ஜனங்களுமே பரிபூர்ண அஹிம்ஸா தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டும் என்ற பௌத்தத்திலோ அந்த மதத்தைச் சேர்ந்த ஸந்நியாஸிகளான பிக்ஷுக்கள் கூட மாம்ஸ போஜனம் செய்வதாக ஆகிவிட்டது. இது இன்றைக்கு ஏற்பட்ட விஷயமில்லை. ஆயிரத்து முந்நூறு வருஷத்துக்கு முந்தி மஹேந்திரப் பல்லவன் எழுதின "மத்த விலாஸ ப்ரஹஸனம்" என்ற ஹாஸ்ய நாடகத்திலேயே ('ப்ரஹஸனம்' என்பதை farce , satire என்று சொல்லலாம்) இதைக் கேலியாகச் சொல்லியிருக்கிறான் ஆனால் ரொம்ப ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறான். அந்த ட்ராமாவிலே ஒரு காபாலிகன் பிச்சை வாங்குகிற கபாலம் காணாமல் போய் விடுகிறது, அது எங்கே போயிருக்கும் என்று யோசிக்கிற போது, "அந்தக் கபாலத்திலே பக்குவம் பண்ணின மாம்ஸம் இருந்ததல்லவா? அதனால் அதை ஒன்று, ஏதாவது நாய் இழுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்;இல்லாவிட்டால் எவனாவது புத்த பிக்ஷு அமுக்கிக் கொண்டு போயிருப்பான்!" என்று காபாலிகன் சொல்வதாக வருகிறது. அப்புறம் அந்த நாடகத்தில் ஒரு புத்த பிக்ஷுவே வருகிறார். அவரும் தனக்குத் தானே ஸந்தோஷமாகப் பேசிக்கொள்கிறபோது, "தனதாஸன் என்கிற வியாபாரிதான் எனக்கு எவ்வளவு நல்ல பிக்ஷை செய்து வைத்தான்! எத்தனை ருசியும், வாஸனையும், வர்ண விசித்திரமுமான மத்ஸ்ய மாம்ஸங்களை ஆஹாரமாகப் போட்டான்!" என்று சொல்லிக் கொள்வதாக வருகிறது.

பௌத்தர்கள் காஞ்சிபுரத்தில் நிறைய வாஸம் பண்ணிய காலத்திலேயே அங்கேயிருந்த ஆண்டு கொண்டிருந்த ராஜா இப்படி ஒரு ட்ராமாவில் எழுதுகிறான் என்பதிலிருந்து அது அப்போதிருந்த வழக்கத்தையே படம் பிடித்துக் காட்டுகிறது என்றுதானே அர்த்தம்?

அஹிம்ஸையை பௌத்தர்கள் போலப் பெரிசாக பிரகடனம் பண்ணாத நம் மதத்தில் ஸந்நியாஸிகள் ஸொப்பனத்தில்கூட மாம்ஸத்தை நினைக்க முடியாத போது, "எல்லோருக்கும் அஹிம்ஸா தர்மம்" என்று வானளாவச் சொன்ன அந்த மதக்காரர்களில் ஸந்நியாஸிகள்கூட இப்படியிருந்தால் ஹிந்துக்கள் சும்மாயிருப்பார்களா? இதைப்பற்றி அவர்களைக் கேட்டுப் பரிஹாஸம் பண்ணாமலிருப்பார்களா? "அஹிம்ஸை என்கிறீர்கள், ஆனால் இப்படிப் பண்ணுகிறீர்களே!" என்று கேட்டபோது அவர்கள், "எங்கள் புத்தர் பிராணிவதை கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆஹாரத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் அவர் சொன்னபடிதான் செய்கிறோம். நாங்களாக எந்தப் பிராணியையும் கொல்வதில்லை. எவனோ குருவிக்காரன், வேடன், கசாப்புக் கடைக்காரன் கொன்று விற்பதைத்தான் வாங்கித் தின்கிறோம். அதனால் எங்களுக்கு ஜீவஹிம்ஸை தோஷம் இல்லை!" என்று ஸாமர்த்தியமாகச் சொல்வார்களாம்.

இவர்களை நினைத்துக் கொண்டுதான் திருவள்ளுவர் ஒரு குறள் பண்ணியிருக்கிறாரென்று தோன்றுகிறது.

தினற் பொருட்டால் கொல்லா(து) உலகு எனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல் [-குறள் : 256]

'ஏதோ கசாப்புக் கடைக்காரன் மாம்ஸத்தை விற்கிறானே, அவன் பிழைப்பு நடந்துவிட்டுப் போகட்டும்' என்றுதான் தாங்கள் அதை வாங்கிச் சாப்பிடுகிற மாதிரிச் சொல்லி அல்லவா இந்த பௌத்தர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்? இதுவா நிஜம்? அவன் கொன்று விட்டானே என்கிறதற்காகவா இவர்கள் தின்கிறார்கள்? இவர்கள் தின்கிறார்கள் என்பதற்காகத்தானே அவன் கொல்கிறான்?" என்று திருவள்ளுவர் நினைத்திருப்பார் போலிருக்கிறது. "ஊன் தின்னுபவர்கள் இருப்பதால்தான் அதற்காக ஒருத்தன் பிராணிகளை அடித்து

விலைக்கு விற்பது என்று ஏற்பட்டிருக்கிறது. ஊன் தின்னாதவர் இருந்தால் கசாப்புக் கடையே தோன்றியிருக்காது" என்ற கருத்தை வைத்தே ஒரு குறளைச் செய்து தம்முடைய உயர்ந்த நூலில் அதைச் சேர்த்து விட்டார். இவர்கள் அடித்துத் தின்னாவிட்டாலும், இவர்கள் தின்னுகிறார்கள் என்றேதான் இன்னொருத்தன் அடிப்பதால் அவன் பண்ணுகிற ஜீவஹிம்ஸை தோஷம் இவர்களைத்தான் சேரும் என்று சொல்லாமல் சொல்லி விட்டார்.

வள்ளுவர் மாதிரியான பெரியவர்கள் என்ன சொன்னாலும் அவர்கள் [பௌத்தர்கள்] அப்படியேதான், தாங்களாக அடிப்பதில்லை, ஆனால் இன்னொருத்தன் அடித்ததைத் தின்னுவது என்று தொடர்ந்தும் செய்து வந்தார்கள். இதனால் பிற்பாடு புத்தமதம் இங்கே [இந்தியாவில்] மறைந்து பர்மா, ஸிலோன் [ஶ்ரீலங்கா] , மலேயா முதலிய தேசங்களில் நிலைப்பட்டபோது ஒரு விசித்ரமான 'டெவலப்மென்ட்' உண்டாயிற்று. இந்த தேசங்களோடு நமக்கு ரொம்ப காலமாக ஸமுத்ர மார்க்கமாகத் தொடர்பு வந்திருக்கிறதல்லவா? இதனால் பிற்காலத்தில் தஞ்சாவூர் நாகப்பட்டினத்திலிருந்து ராமநாதபுரம் கீழ்க்கரை வரையில் கடற்கரை ஓரமாகத் துருக்கர்கள் நிறையக் குடியேறி வஸிக்க ஆரம்பித்தபோது, "இந்த பர்மா, ஸிலோன் பௌத்தர்கள் தாங்களே பிராணிவதை செய்கிறதற்கில்லையென்பதால், `எவன் அடித்துக் கொண்டு வந்து நிற்பான்'? என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம்தான் இதைத் தொழிலாக நடத்த ஆரம்பித்து விட்டால் என்ன?" என்று யோசனை பண்ணி அந்தத் தேசங்களுக்குப் போய்க் கசாப்புக் கடைகள் வைத்தார்கள். நிறையப் பணம் பண்ணிக் கொண்டு திரும்பி வந்தார்கள். இவர்கள் அந்த தேசங்களைப் பற்றிச் சொல்லிக் கேட்டதன் மேலேதான் ராமநாதபுரம் கீழ்க் கரைக்குப் பக்கத்திலுள்ள நகரத்தார்கள் அங்கே முதலில் வட்டிக்கடை வைக்கப்போனார்கள் என்று சொல்வதுண்டு. "வட்டி வாங்கக்கூடாது" என்று குரானில் இருப்பதால் துருக்கர்கள் அங்கே வட்டிக்கடை வைக்கவில்லை.

நம் தேசத்திலேயுங்கூட புத்தர், அசோகன் முதலானவர்களே வாழ்ந்து, பௌத்தமதம் ரொம்பவும் அநுஷ்டானத்திலிருந்த பிஹாரிலும், உ.பி.யின் சில பகுதிகளிலுந்தான் இன்றைக்கு ரொம்பவும் அதிகமாக 'நான்-வெஜிடேரியன்'கள்

இருப்பது. பெங்காலில் வருஷத்தில் ஆறு மாஸம் கங்காதி நதிகள் பிரவாஹமாய் உடைப்பெடுத்துக் கொண்டு, காய்கறித் தோட்டங்கள் அழுகிப்போய் விடுமாதலால், ஒரு compelling necessity -யின் [நிர்பந்த தேவையின்] மீது அங்கே ஸகல ஜாதியாரும் பிரவாஹத்தில் யதேஷ்டமாகக் கிடைக்கும் மத்ஸ்யத்தை 'ஜலபுஷ்பம்' என்று மறக்கறிப் பெயரைச் சொல்லிக் கொண்டு சாப்பிட்டாலும், மற்ற தினுஸான மாம்ஸங்களை பெங்காலி பிராமணர்களும், அவர்களுடைய ஆசாரத்தைத் தாங்களாக follow பண்ணும் மற்றவர்களும் தொடமாட்டார்கள். பிஹார், அதைச் சுற்றியிருக்கிற பிரதேசங்களில் இப்படியில்லை. பெங்காலில் பிராமணர்கூட மத்ஸ்யம் சாப்பிடுவதை நான் 'ஜஸ்டிஃபை' பண்ணுகிறேனென்று அர்த்தமில்லை. ஆனால் சிலதை 'ஜஸ்டிஃபை' பண்ண முடியாவிட்டாலும், `ஏதோ தொலைகிறது' என்று கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாமல்லவா? இதற்குக்கூட இடமில்லாமல், necessity -யின் compulsion -ஏ இல்லாமல் சில இடத்தில் பூர்வத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்தத்தில் அஹிம்ஸா நியமத்தை எல்லோருக்கும் பொதுவாக விதி செய்திருந்ததேதான்! எதிலுமே 'எக்ஸ்ட்ரீ'முக்குப் போனால் அப்புறம் நேர்மாறாகத்தான் நடக்க ஆரம்பித்துவிடும்.

இப்போது நடைமுறை ஸாத்யம் எதுவோ அதிலே ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி ஐடியலை ஸாத்யமாகப் பண்ணிக் கொள்வதுதான் நடக்கக் கூடியது; அதுதான் புத்திசாலித்தனம். அப்படித்தான் நம் சாஸ்திரம் வழி பண்ணிக் கொடுக்கிறது.

பதார்த்தம், அதை நமக்கு ஆஹாரமாகப் பண்ணிப் போடுகிறவர்கள், ஆகிய இரண்டும், ஸாத்விகமாக இருக்க வேண்டும் என்பதே ஐடியல். அதை ஸர்வ ஜனங்களும் gradual -ஆக ஸாதித்துக் கொள்ள வேண்டும். ஸகலருக்கும் இதிலே இப்படியொரு ஆர்வமும், ஊக்கமும் பிறப்பதற்காக பிராம்மண ஜாதியார் மட்டும் பிறந்ததிலிருந்தே எப்பொழுதும் இந்த லக்ஷ்ய நிலையை யதார்த்தத்தில் அநுஷ்டித்துக் காட்ட வேண்டும். பிராம்மணனின் ஸ்வதர்மத்தில் அத்யாபனம், அதாவது பிறத்தியாருக்குப் போதனை பண்ணுவது ஒன்றோ இல்லையோ? இப்படி டீச்சிங் பண்ணுவது என்பது

இவன் ஸகல வித்யைகளையும் தான் கற்று மற்ற ஜாதியினருக்கும் 'டீச்' பண்ணுவதோடு நின்றுவிடவில்லை; சிரம ஸாத்யமான ஐடியல் நிலையைத் தான் பரமத் தியாகியாகப் பிரத்யக்ஷத்தில் நடத்திக் காட்டி இந்த வாழ்க்கை உதாரணத்தாலும், வாயால் சொல்லாமலே மற்றவர்களுக்கு உயர்ந்த லக்ஷியங்களை 'டீச்' பண்ணுவதுதான் மற்ற 'டீச்சிங்'கை விடவும் முக்யமானது. சாஸ்திரங்கள் இப்பேர்ப்பட்ட பளுவான ஸமூஹப் பொறுப்பை பிராமணனுக்கே தந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளாமல், அது அவனுக்குத்தான் ரொம்ப சலுகை, ஸௌகர்யம் எல்லாம் தந்து உசத்தி வைத்திருப்பதாகக் குற்றம் சொல்கிறார்கள்.

பரம பவித்ரமான வேத மந்த்ரங்களை பிராம்மணன் ரக்ஷித்துத் தர வேண்டியிருக்கிறது என்பதால் அப்படிப்பட்ட சரீரத்துக்குள் மது, மாம்ஸாதிகள் போகப்படாது என்று விதி பண்ணி வைத்திருக்கிறது.

10.8-`சைவ` உணவு

ஆஹார விஷயத்தில் பதார்த்த சுத்தியைப் பார்க்கும் போது ஐடியல் என்பது அஹிம்ஸா போஜனம்; சாக உணவு, மரக்கறி உணவு என்கிற வெஜிடேரியனிஸம். 'புலால் மறுத்தல் 'என்று திருக்குறள் முதலானவற்றில் வலியுறுத்தியிருப்பது இதைத்தான்.

`சைவம்', என்று வெஜிடேரியனுக்கு ஏன் பேர் என்றால், தமிழ் தேசத்தைப் பொருத்தவரை பெரும்பாலும் அப்பிராமணர்களாக இருக்கப்பட்டவர்களில் சைவர்களே வெஜிடேரியன்களாக இருந்ததுதான். மாம்ஸம் மட்டுந்தான் என்றில்லை; வெஜிடேரியன் ஆஹாரத்திலுங்கூட சித்தசுத்திக்கு உதவாததாக இருப்பதை நல்ல ஆசார சீலர்களான சைவர்கள் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். 'முக்காயம் தள்ளியவர்கள்' என்று அவர்களைச் சொல்வதுண்டு. காயம் என்றால் உடம்பு அல்லவா? உடம்பு ஊன்தானே? முக்காயம் என்கிற மூன்றுவித ஊன் என்ன? இல்லை; இங்கே அப்படி அர்த்தமில்லை. ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்கிற மூன்றுதான் முக்காயமா? – என்றால் அப்படி அர்த்தமில்லை. முக்காயம்

என்று இங்கே சொன்னது வெங்காயம், உள்ளிக்காயம் (அதாவது பூண்டு) , பெருங்காயம் என்ற மூன்றுதான். மாம்ஸமாயில்லாவிட்டாலும் இதுகளுங்கூட ராஜஸ, தாமஸ குணத்தைக் கொடுப்பவை என்பதால் இவற்றையும் சைவர்கள் தள்ளிவிடுவார்கள். காயம் என்பது ஊனை, மாம்ஸத்தைக் குறிப்பதால் இங்கே 'முக்காயம்' என்பது சிலேடையாகவு மிருக்கிறது!

ஒரு வேடிக்கை! தக்ஷிணத்தில் 'சைவம்' என்றால் வெஜிடேரியனிஸம். வடக்கிலோ 'வைஷ்ணவம் 'என்றால்தான் வெஜிடேரியனிஸம். தெற்கேதான் சிவன், அம்பாள் இவர்களை ஸெளம்யமாக, சாந்த ஸ்வரூபமாக வழிபடுவது. வடக்கே ருத்ரனாக 'கால பைரவ்' என்றும், காளி, துர்கை, இப்படியும்தான் ஆராதிக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் அங்கே வல்லபாசார்யார், ராமாநந்தர், சைதன்யர் என்றெல்லாம் செல்வாக்கோடு தோன்றியிருக்கிற பெரியவர்களும் முழுக்க ராமாநுஜ ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும், பெரும்பாலும் ஃபிலாஸஃபியில் அதைத் தொட்டுக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். பரம அஹிம்ஸாவாதிகளான வடக்கத்திக்கார ஜைனர்களும் இந்த மதாசாரியர்களால் தாய் மதத்துக்குத் திரும்பியபோது வைஷ்ணவர்களாகவே ஆகி, அஹிம்ஸா போஜனத்தைத் தொடர்ந்து வந்திருப்பதால் அங்கே வைஷ்ணவ ஆஹாரம் என்பதே 'வெஜிடேரியனிஸம்' என்று ஆகிவிட்டிருக்கிறது.

தெற்கே 'அன்பே சிவம்' என்பது கொள்கை. அதோடு இங்கே ஜைனர்களைப் பெருவாரியாக ஹிந்து மதத்துக்குத் திருப்பினவர் சைவ ஸமயசாரியாரான ஞான ஸம்பந்தமூர்த்திகள். இங்கே வெஜிடேரியனிஸமே சைவம் என்றிருப்பது நியாயம்தான்.

வடக்கே வல்லபாசாரியார் காலத்தில்தான் ஜைனர்கள் ஹிந்துக்களாக மாஸ்-கன்வெர்ஷன் ஆனது ஜாஸ்தி. (கன்னட தேசத்தில் ராமாநுஜாசாரியாரின் செல்வாக்கால் இப்படியே ஜைன ராஜா உள்பட அந்த மதஸ்தர்கள் ஹிந்துக்களாக, வைஷ்ணவர்களாக ஆகியிருக்கிறார்கள்.) வல்லபாசாரியாரின் ஸித்தாந்தத்தைச் சேர்ந்தவர்களுக்குப் 'புஷ்டி மார்க்கிகள்' என்று பெயர்.

குஜராத்தைச் சுற்றி இப்படி அவருடைய ஸித்தாந்தத்தைத் தழுவிய, அதுவரை ஜைனர்களாயிருந்த, வைசியர்களுக்குப் 'புஷ்டி மார்க்கி பனியா' என்று பெயர். வாணிஜ்யன், வாணியன் என்பதே 'பனியா' என்பது. இவர்கள் குங்குமப் பூவால் நாமம் போட்டுக் கொள்பவர்கள்; துளஸிமணி மாலை தவறாமல் போட்டுக் கொண்டிருப்பவர்கள். காந்தி அவர்களில் ஒருவர்தான். பூர்வ கால ஜைன பாரம்பரியத்தால்தான் அவர் ஒரேயடியாய் அஹிம்ஸை, அஹிம்ஸை என்றது.

"தன் உடம்பு கொழுக்க வேண்டும் என்பதற்காக இன்னொரு உயிரின் உடம்பைக் கொலை பண்ணித் தின்கிறவனிடம் அருள் எப்படி உண்டாகும்?" என்று திருவள்ளுவர் "புலால் மறுத்தல்" அதிகாரத்தில் கேட்கிறார்.

தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் ?

இவனிடம் அருள்தன்மை இல்லாவிட்டால் இவனுக்கு மட்டும் எப்படி ஈஸ்வரன் அருள் பண்ணுவான்? அருள், அன்பு என்று சொல்லிக்கொண்டு மாம்ஸ போஜனமும் பண்ணுவதென்றால் அது ஒன்றுக்கொன்று பொருந்தாததாகத்தான் தோன்றுகிறது. ஒரே ஒரு ஈஸ்வரன்தான் அம்மையும் அப்பனுமாக இருக்கிறான். அவனுக்கே நாம் இத்தனைபேரும் (மநுஷ்யர்கள் மட்டுமில்லை. மிருகம், பக்ஷி எல்லாமும்தான்) குழந்தைகள் என்றால் அப்புறம் ஒரு மநுஷ்யன் மிருகம், பக்ஷி இவற்றை ஆஹாரம் பண்ணுவது ப்ராத்ரு ஹத்திதான் [உடன் பிறப்பைக் கொலை செய்வதுதான்]. 'நான்-வெஜிடேரியனிஸ'த்தை ஆதரித்தால் ஸர்வஜீவ ஸஹோதரத்வம் என்பதற்கு அர்த்தமில்லாமல் போகிறது.

10.9-மரக்கறியில் ஹிம்ஸை இல்லையா?

இப்படிச் சொன்னால் உடனே திருப்பிக் கொள்கிறார்கள். "மிருகம் பக்ஷி மட்டும்தானா? மரம், செடி, கொடி, பயிர் இவையும் ஈசன் குழந்தைகள்தான். அவற்றுக்கும்தான் உயிரும், உணர்ச்சிகளும் இருக்கின்றன. ஜகதீஷ்சந்திர

போஸ் முதலியவர்கள் சொல்லியிருக்கிறார்களே! அதனால் சாக உணவு என்பதும் ஜீவஹத்திதான்" என்கிறார்கள்.

இதற்கு நான் ஸமாதானம் சொல்லியாக வேண்டும். ஜே.ஸி. போஸுக்கு எத்தனையோ யுகம் முந்தியே வேதாதி சாஸ்திரங்கள் பயிர், பச்சை, மரம், மட்டை எல்லாம் உயிருள்ளவை என்று சொல்லித்தான் வந்திருக்கின்றன. ஆனாலும் ஈஸ்வர நியதியில் நல்லது போலவே கெட்டது, ஸௌக்யம் போலவே கஷ்டம் எல்லாமும் சேர்ந்து சேர்ந்துதான் இருக்கிறது. 'இன்ஸ்டிங்க்டிவ்' ஆகவும் [உள்ளுணர்ச்சிப் பிரகாரமும்] , தேஹத்தின் இயற்கையான தன்மையைப் பொருத்தும் சிங்கம், புலி முதலான பிராணிகள் ஜீவஹிம்ஸை பண்ணித்தான் ஜீவிக்க வேண்டும் என்று ஈஸ்வர நியதியே இருக்கிறது. மநுஷ்யன் விஷயத்தில் மாத்திரம் இவன் எதையும் ஆலோசித்துத் தெளிந்து முடிவு எடுக்கும்படியாக அறிவு விசேஷத்தை [ஈசன்] கொடுத்திருக்கிறான். அதனால், இந்த பிரபஞ்ச நாடகத்தில் இவன் முழுக்கவும் நல்லதுதான் வேண்டும், ஸௌக்யம்தான் வேண்டும் என்று பண்ணிக்கொள்ள முடியாமல் 'நேச்சர்' என்ற பெயரில் ஈஸ்வரன் கட்டிப் போட்டாலும், இப்படிக் கட்டிப்போட்ட கயிறு நீளுகிற எல்லைக்குள்ளாவது இவன் கூடியமட்டும் கெட்டதைத் தள்ளி நல்லதையும், கூடியமட்டும் கஷ்டத்தைத் தள்ளி ஸௌக்யத்தையும் தேடி அடைய வேண்டியவனாக இருக்கிறான். எதையோ தின்று தானாக வேண்டும். இல்லாவிட்டால் சாக வேண்டியதுதான் என்ற necessity இவனுக்கு இருக்கிறது - இயற்கை அப்படிக் கட்டி வைத்துருக்கிறது. எங்கேயோ லக்ஷத்தில் ஒருத்தனாக லோக வாழ்க்கையைப் பொருட்படுத்தாமலே உதறி விட்டுப் போகிறவனைத் தவிர மற்ற எல்லாரும் இந்த யதார்த்தத்தை அநுஸரித்துத்தான் போகணுமே தவிர, 'சாலஞ்ஜ்' பண்ணி முடியாது. 'ஸரி, எதையோ தின்னத்தான் வேண்டுமென்றால், கூடியவரை கெடுதலை, கஷ்டத்தை உண்டாக்காமல் அமைத்துக்கொள்ளக்கூடிய ஆஹார முறை என்ன?' என்று பார்ப்பதே இவன் செய்ய வேண்டியது. இருப்பதில் குறைச்சலான ஹிம்ஸை தருவது பயிர் பச்சைகளையும் காய்கறிகளையும் சாப்பிடுவதுதான்.

பயிர்கள் நன்றாக முற்றிச் சாய்ந்த பிற்பாடுதான், அதாவது தாமே ஜீவனத்தை முடித்துக்கொண்ட பின்தான், தானியம் அடித்து எடுத்துக் கொள்கிறோம். காய்கறிகளைப் பறிப்பதால் செடியையே நாம் கொன்றுவிடவில்லை. கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்றவற்றை நாம் ஒரு கொடி செடியிலிருந்து எடுப்பதால் அந்தச் செடிக்கு நம் நகத்தைக் கிள்ளினால், அல்லது ரோமத்தைப் பிடுங்கினால் வலிக்கிற அளவுக்குத்தான் வலி உண்டாகும். அதோடுகூட மநுஷ்யனுக்கும் மிருகங்களுக்கும் pain (வலியுணர்ச்சி) என்று உண்டாவதைவிட, தாவர வர்க்கத்துக்கு 'ஸென்ஸிடிவிடி' [உணர்ச்சி நுட்பம்] குறைச்சலானதால் pain-உம் குறைச்சல் தான் என்றோ 'ரிஸர்ச்' பண்ணிச் சொல்கிறார்கள். அப்படியே ஸமூலம் கீரை மாதிரியானவற்றையும், கிழங்கு வகைகளையும் பிடுங்கி எடுத்து, அதாவது அவற்றை ஹதமே பண்ணிச் சாப்பிடும்போது கூட, நாம் அவற்றைப் பிடுங்காவிட்டாலும் எப்படியும் அவையே அதற்குப் பிறகுச் சில நாளில் வாடிவிடப் போகிறவைதான். ஆகவே இந்த அம்சங்களையும் நம் necessity-ஐயும் கருத்தில் கொண்டு பார்த்தால் சாக போஜனம்தான் comparative-ஆக மினிமம் ஹிம்ஸை உள்ளது என்று தெரிகிறது. அதனால் இதையே மநுஷ்யர்களாகப் பிறந்த நாம் ஏற்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஸந்நியாசிகளுக்குப் பூர்ண அஹிம்ஸை விதிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் நிமித்தமாகக் கறிகாயைப் பறித்து எடுக்கிற சின்ன வலிகூட தாவரங்களுக்கு உண்டாகக் கூடாது என்றும், அவர்கள் தாங்களாகவேதான் சாப்பிட வேண்டும் என்றும் விதித்திருக்கிறது. ' ஜீர்ண பர்ணாசிந : க்வசித் ' என்பது இதைத்தான். 'ஜீர்ணபர்ணம்' என்றால் சருகு. 'ஆசிந:' என்றால் ஆஹாரம் செய்கிறவர்கள். தானியங்கள் கூட முளைக்கிறதோ இல்லையோ? அதனால் அவற்றுக்குக் கரு இருப்பதாக அர்த்தம். அதை ஒரு ஸந்நியாஸி சாப்பிட்டால் கர்ப்பச் சேதந்தான், ஜீவஹத்திதான் என்று அதையும் தள்ளச் சொல்லி இங்கே 'ஐடியலை' ரொம்பவும் கடுமையாக வைத்திருக்கிறது. ஸந்நியாஸி ஒரு சாத்துக்குடியோ, கொய்யாப்பழமோ, விளாம்பழமோ சாப்பிடும்போதுகூட ஸர்வ ஜாக்கிரதையாக ஒரு விதையைக்கூடத் தின்றுவிடாமல் நீக்கிவிட்டுத் தான் சாப்பிடணும். இப்படி மஹரிஷிகள் சுத்தமான பழ ஆஹாரம்

சாப்பிட்டதுதான் நிஜமான 'பலஹாரம்'. 'பலம்' என்றால் 'பழம்'. இப்போது அன்னத்தை மட்டும் நீக்கி, தோசை, இட்லி, ஸேவையில் பல தினுஸு, 'தொட்டுக் கொள்ள' சட்டினி, ஸாம்பார், கொத்ஸு, மிளகாய்ப் பொடி என்று பல விதங்கள் என்பதாகச் சாப்பிடுவதைப் 'பலஹாரம்' என்று ஆக்கி கொண்டு அவஸ்தைப் படுகிறோம்! நிஜமான பலஹாரம் பண்ணினால் ஸத்வமும் சாந்தமும் உண்டாகும். காமம் (sex என்கிறார்களே அது) ரொம்பவும் கட்டுப்பட்டுவிடும். குடும்பக் கட்டுப்பாடு என்று தனியாக ஒன்று பண்ணவேண்டிய அவசியமே இராது.

'தாவரத்தை மட்டும் ஹிம்ஸிக்கலாமா?' என்பதற்கு இன்னொரு ஜஸ்டி∴பிகேஷன் இதில்தானிருக்கிறது. ஒரு பிராணியைக் கொலை பண்ணிவிடுவதுபோல ஆஹாரத்துக்காகத் தாவர வர்க்கத்தை நாம் அநேகமாகக் கொலை பண்ணுவதில்லை என்றும் அப்படியே அவற்றை ஹிம்ஸிக்க நேர்ந்தாலும், அப்போது கூட பிராணிகளுக்கு உள்ள அளவுக்கு வலியுணர்ச்சி அவற்றுக்கு ஏற்படுவதில்லை என்றும் சொன்ன ஸமாதானம் நாம் அவற்றை எப்படி affect பண்ணுகிறோம் [பாதிக்கிறோம்]?' என்பது வைத்துச் சொன்னது. இப்போது மாம்ஸ போஜனமும் சாக போஜனமும் நம்மை எப்படி affect பண்ணுகின்றன என்பதை வைத்தும் ஸமாதானம் சொல்கிறேன். நமக்குச் சித்தசுத்தியும், ஸத்வ குணமும் உண்டாவதற்கு மாம்ஸ போஜனம் உதவுவதில்லை. சரீரம் வேண்டுமானால் ஸ்ட்ராங்காக ஆகலாமே ஒழிய, தியானாதி அப்யாஸங்களுக்கு நான்-வெஜிடேரியன் ஆஹாரம் அநுகூலம் செய்வதில்லை; அதோடு 'கம்பேர்' பண்ணினால் சாக போஜனம்தான் ஆத்மாபிவிருத்திக்கு அநுகூலமாயிருப்பது. சாக போஜனத்திலும் ஆத்மாபிவிருத்தியை முன்னிட்டு தள்ளவேண்டிய பல பதார்த்தங்கள் இருந்தபோதிலும் மாம்ஸத்தைவிட இதுதான் மேலானதாக இருக்கிறது.

மனஸுக்கு ஸம்மதமாயிருக்கிறதா என்றுதான் யோசித்துப் பார்க்கலாமே! ஒரு ஆட்டையோ மாட்டையோ அது கதறக் கதற வெட்டுகிற மாதிரிதான் கீரையைப் பிடுங்கி நறுக்குவது நம் மனஸுக்குத் தோன்றுகிறதா? இந்த 'ஸைகாலஜிகல் ∴பாக்ட'ருக்கு ஒரு முக்கியத்வம் உண்டு. மாம்ஸத்திலேயே

ஒரு பிராணியின் ஊனைத் தின்னலாம், இன்னொரு பிராணியின் ஊனைத் தின்றால் நிஷித்தம் என்று வைப்பதற்கு [ஸைகாலஜிகல் தவிர] வேறே காரணம் இல்லை. 'அய்யய்யே! பன்றி மாம்ஸமா?' என்று ஹிந்துக்களில் மாம்ஸ போஜனிகள் முகத்தைச் சுளிப்பார்கள். ஆனால் அந்நிய தேசங்களில் அதையும் தின்னுகிறார்கள். இப்படியே 'நண்டையும், நத்தையும் கூடச் சீனாக்காரன் தின்னுகிறானே! என்று நம்மூர் நான்வெஜிடேரியன்களே அருவருப்புடன் சொல்கிறார்கள். அப்புறம், மாம்ஸம் தின்பதிலேயே 'gradation' வேறு. 'ஸைபருக்குச் சொல்கிறது* தான் சாப்பிடுவோம், மத்ஸ்யம் மட்டும்தான் சாப்பிடுவோம், மற்றபடி அசைவ வஸ்து எங்களிடம் வரக்கூடாது' என்பவர்கள் உண்டு. எதெதையோ பிடித்துத் தின்றாலும் எதனாலோ குதிரை மாம்ஸம் தின்றால் மட்டம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'வார்' [உலக யுத்தம்] நடந்தபோது எல்லாவற்றுக்கும் 'ஸ்கார்ஸிடி' உண்டான ஸமயத்தில் ஜெர்மனி தேசத்துக்காரர்கள் குதிரை மாம்ஸம் சாப்பிட ஆரம்பித்தார்கள். இதற்காக அவர்களை மாம்ஸ போஜனிகளேயான மற்ற எல்லா மேல்நாட்டுக்காரர்களும் மட்டம் தட்டிப் பரிஹாஸம் செய்தார்கள்.

இதே ரீதியில் சைவ உணவுக்காரர்கள் பொதுவாக அத்தனை அசைவ உணவுக்காரர்களையும் கேள்வி கேட்டு மடக்கலாம் என்று தோன்றுகிறது. நம் ஊர்க்காரர்களான அசைவர்கள் 'பருப்புத் தின்னி பார்ப்பான்' என்று ஸ்வாதீனமாகக் கேலி செய்கிறபோது, சைவமாகச் சாப்பிடுபவர்கள் என்னதான் பருப்பும், கிருப்பும் சாப்பிட்டாலும் ஏதோ பார்த்தால் வேண்டுமானால் 'கக்ஷுக், முக்ஷுக்' என்று தொந்தியும் தொப்பையுமாக ஆக முடியுமே தவிர, இது ஊளைச்சதைதானேயொழிய நல்ல கட்டுமஸ்தாக தேஹ பலம் பெற்றதாகாது என்ற அர்த்தத்தில் சொல்கிறார்கள். வெளி தேசத்துக்காரர்களோ இப்படி ஸ்வாதீனத்தின் மேல் இல்லாமல் இளக்காரமாகவே நம்மில் அங்கே போகிறவர்களிடம், "நீங்கள் என்ன காய்கறிகளையே தின்று கொண்டிருக்கிறீர்களே! உங்கள் தேசத்தில் எவ்வளவு மாம்ஸம் கிடைக்கும்? அத்தனையும் 'வேஸ்ட்' பண்ணிவிட்டு, நீங்களும் நோஞ்சான் பட்டாளங்களாக ஆகியிருக்கிறீர்களே!' என்று மட்டந்தட்டிக்

கேட்கிறார்கள். மற்றவர்களைவிட ஹிந்துக்களிலேயே அதிகம் வெஜிடேரியன்கள் இருப்பதால் தான் இவர்கள் வலுவிழந்து துருக்கர்கள், வெள்ளைக்காரர்கள் ஆகியவர்களிடம் தேசத்தைப் பறிகொடுத்தார்கள் என்று சொல்பவர்கள்கூட உண்டு. இந்த விஷயத்துக்கு அப்புறம் வருகிறேன். இப்போது மாம்ஸம் சாப்பிடாததற்காக நம்மைப் பரிஹாஸம் செய்கிற நான்வெஜிடேரியன்களிடம் நாம் எப்படித் திருப்பிக் கொள்ளலாம் என்று சொல்லிக் கொடுக்கிறேன். "மாம்ஸம் சாப்பிடுகிற நீங்களே சில மாம்ஸ தினுஸுகளைச் சாப்பிடுகிறவர்களைப் பரிஹாஸமும் செய்கிறீர்கள் அதுமட்டுமில்லை. மாம்ஸத்திலேயே உசத்தி, தாழ்த்தி ஆகிய இத்தனை வகைகளைச் சாப்பிடுகிறவர்களும் ஒரு முகமாகச் சேர்ந்துகொண்டு, இப்போதும் இந்த உலகத்தில் எங்கேயோ வனாந்தரங்களில் இருக்கிற ஆதிவாஸிகளில் சிலபேர் நரமாம்ஸம் தின்னுகிறார்களே, அவர்களை ரொம்ப ரொம்ப மட்டமாக நினைத்து 'நரமாம்ஸ பக்ஷிணி' (Cannibal) என்று தூற்றுகிறீர்கள். நரமாம்ஸத்தை விட்டு மற்ற மாம்ஸங்களைச் சாப்பிடுகிற நீங்கள் அந்த 'கானிபாலை' விட ரொமபவும் உயர்ந்தவர்கள் என்று பெருமை கொண்டாடிக் கொண்டால், எந்தப் பிராணியின் மாம்ஸத்தையுமே சாப்பிடாத நாங்கள் உங்களையும்விட உசந்தவர்கள்தானே? நீங்கள் எப்படி ஒரு பக்கம் நரமாம்ஸ போஜனத்தையும் கேலி பண்ணிக்கொண்டு இன்னொரு பக்கம் எங்களுடைய சாக போஜனத்தையும் மட்டந் தட்டுவது பொருத்தம்?" என்று அவர்களைக் கேட்க வேண்டும். "இந்தியர்கள் எல்லாரும் மட்டும் மாம்ஸம் சாப்பிட ஆரம்பித்தால், அங்கே உணவுப் பிரச்னையே வராது என்கிறீர்கள்; உங்கள் தேசங்களிலுந்தானே 'ஸ்கார்ஸிடி' சில ஸமயங்களில் வருகிறது? அதனால் - உங்களுக்குத்தான் எதையும் கெட்டுப் போகாமல் பாடம் பண்ணி வைக்க முடிகிறதே செத்த மனிதர்களையும், உபயோகமில்லாத கிழங்களையும் ஸரிப்படுத்திப் பக்குவம் பண்ணி .....?" என்று சொன்னாலென்ன என்றுகூடத் தோன்றுகிறது [சிரிக்கிறார்]

இன்னொன்று பழம் அழுகிறது; காய்கறிகள் கெட்டுப்போகின்றன என்றால் இவை துர்நாற்றமடிக்கத் தான் செய்யும். கழிநீரைக் கொட்டினால் அதுவும் துர்கந்தம் அடிக்கத்தான் செய்கிறது. ஆனாலும் இந்த நாற்றமெல்லாம்

ஒன்றுமே இல்லை என்கிற மாதிரி அல்லவா அந்நிய பதார்த்தங்களைச் சமைக்கிறபோது வயிற்றைப் புரட்டி எடுக்கிறது? அதுகள் அழுகி கிழுகிக் கெட்டுப் போனாலோ குடலையே பிடுங்கியெடுக்கிற மாதிரி காத தூரத்துக்குத் துர்வாடை! (இங்கே இன்னொன்றும் சொல்லணும். முட்டைகோஸ், பீட்ரூட் மாதிரியான இங்கிலீஷ் வெஜிடபிள்கள் கூடாது என்பதற்கும் இதிலேயே காரணம் தெரிகிறது. அந்தக் காய்கறிகளை வேக வைக்கிறபோதும், அந்தக் கழிவு நீரைக் கொட்டிய இடத்திலும் அந்நிய பதார்த்தம் போலவே வாடை வருவதைப் பார்க்கலாம்.)

---

* முட்டை

10.10-மரக்கறி உணவின் சிறப்புக்கள்

மநுஷ்யனின் மூக்குக்கு ஒத்துக்கொள்ளாதது மட்டுந்தானென்றில்லை. அவனுடைய வயிற்றுக்கு, ஜீர்ணக் கருவிகளுக்கு (digestive organs) க்கூட மாம்ஸ போஜனம் ஒத்துக்கொள்ளாததுதான் என்று இப்போது [1957 நவம்பரில் சென்னையில்] நடந்த World Vegetarian Congress-ல் பேசிய பலர் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 'கான்ஸ்டிட்யூஷனை', தேஹ வாகை வைத்து மாம்ஸத்தைத் தின்றால்தான் ஜீவிக்க முடியும் என்றிருக்கிற புலி, சிங்கம் மாதிரியான மிருகங்களின் இரைப்பை, குடல் முதலிய உறுப்புகளோடு மநுஷ்யனின் ஜீர்ண இந்திரியங்களை ஒப்பிட்டு, மநுஷ்ய தேஹவாகு மாம்ஸ போஜனத்துக்கு ஏற்பட்டதே இல்லை என்று இவர்கள் நிறையக் காரணம் காட்டியிருக்கிறார்கள்.

கான்ஸ்டிட்யூஷனலாக மாம்ஸம் சாப்பிடக் கூடாத மிருகங்களும் உண்டு. அவற்றுக்கு நமக்குள்ள 'புத்திசாலித்தனம்' இல்லாததால் அவை மாம்ஸத்தின் கிட்டேயே போவதில்லை. ஆடும், மாடும், மானும், குதிரையும், யானையும் தப்பித் தவறியாவது மாம்ஸம் தின்னுமா? ஆனால் மிருகங்களுக்கு இல்லாத ஆறாவது அறிவும் இருக்கிற மநுஷ்யன் எதை விலக்கி எதைக் கொள்ள

வேண்டும் என்ற வியவஸ்தயைப் புரிந்து கொள்ளாமல் மாம்ஸமானாலும் ஸரி, மற்ற ஆஹாரமானாலும் ஸரி, இரண்டையும் தின்னுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறான். மிருகங்களில் பூர்ணமாக மாம்ஸத்தைத் தள்ளியவையாகச் சிலது இருப்பதுபோலவே, மாம்ஸத்தைத் தவிர வேறே எதுவுமே தின்னாதவையாகச் சிலது இருக்கின்றன. நாய், பூனை, காக்காய், குருவி மாதிரிச் சிலதான் இரண்டு தினுஸையும் தின்பவை. மநுஷ்யன் இவற்றின் லெவலில்தான் இருப்பதா?

இதிலே பகவானும் கொஞ்சம் வேடிக்கை பார்க்கத்தான் செய்கிறான். 'மநுஷ்யக் குடலுக்கு மாம்ஸம் எடுத்ததில்லை' என்று இப்போது வெஜிடேரியன் ஸயன்ஸ் நிபுணர்கள் சொன்னாலும், மாம்ஸம் இவனுக்கு அடியோடு ஜெரிக்காமலே இருக்கும்படி பகவான் பண்ணவில்லையே! அப்படி இருந்தால் மாம்ஸ போஜனம் பண்ணவே மாட்டானல்லவா? இப்போது கல்லைத் தின்கிறானா? இரும்பைத் தின்கிறானா? இப்படியே மாம்ஸத்தையும் தள்ளியிருப்பானல்லவா? இவனுக்குக் கொஞ்சம் சிரமப்பட்டாவது ஜெரிக்கும்படியாகவும் பண்ணி, அதே ஸமயத்தில் அஹிம்ஸா ரீதியிலும், தன்னுடைய ஸத்வகுண அபிவிருத்தியையும் உத்தேசித்து எந்த ஆஹாரம் நல்லது என்று ஆராய்கிற அறிவையும் கொடுத்து, ஒன்றோடொன்று மோதவிட்டு வேடிக்கை பார்க்கிறான். இதிலே நாக்குதான் ஜயித்து, புத்தி தோற்றது என்று மநுஷ்யன் பண்ணிக் கொண்டால் இவனைவிட அசடு இல்லை.

மாம்ஸம் தின்றால்தான் பலம் என்கிற 'பாயின்ட்டு'க்கு வருகிறேன். இப்போது ரொம்பவும் பலத்தைக் குறிப்பிட வேண்டுமானால் என்ன சொல்கிறோம்? 'சிங்க பலம்', 'புலி பலம்' என்றா சொல்கிறோம்? 'யானை பலம்' என்றுதான் சொல்கிறோம். மற்றப் பிராணிகளுக்கு இல்லாத பலம் யானைக்கே இருக்கிறது. இந்த சக்தி மாம்ஸம் சாப்பிட்டா அதற்கு வந்திருக்கிறது? யானை அப்படிப்பட்ட பதார்த்தத்தைத் திரும்பிக்கூடப் பார்க்காதே! **'சுஷ்கைஸ் த்ருணைர் வநகஜா பலிநோ பவந்தி '** என்று பர்த்ருஹரி வசனம் இருக்கிறது. 'சுஷ்கம்' என்றால் ஈரம் வற்றிப்போனது. இஞ்சிக்கு ஈரம் போய் 'சுஷ்க'மானதைதான் 'சுக்கு' என்கிறோம். 'சுஷ்கம்' தமிழில் 'சுக்கம்' ஆகும்.

நெஞ்சில் ஈரம் இல்லாமல் பணத்தைக் கெட்டியாய் வைத்துக் கொள்பவனை 'ஆசாமி ரொம்ப சுஷ்கம்' என்கிறோம். இங்கே 'சுஷ்கை: த்ருணை:' என்றது காய்ந்த புல்லை. புல்லையும் தேங்காய் மட்டையையும் தின்றுவிட்டே யானை ஸகல மிருகங்களையும்விட பலமுள்ளதாயிருப்பதை இங்கே சொல்லியிருக்கிறது. இதிலே விசேஷம், இத்தனை பலம் இருந்தும் அது புலி, சிங்கம் மாதிரிப் பாய்ந்து ஹிம்ஸை பண்ணாமல் சாந்தமாயிருக்கிறது. அதற்குத் தேஹபலத்தோடு புத்தி பலம், ஞாபக சக்தி எல்லாமும் நிறைய இருக்கிறது. மநுஷ்யனுக்கு அடங்கி ஒத்துழைக்கிற பவ்ய குணமும் இருக்கிறது. மலையாளம், பர்மா முதலான இடங்களில் பெரிய பெரிய மரங்களைத் தூக்கிக் கொண்டுபோய் வேலை செய்வதெல்லாம் யானைதான். ஆனதால் வெஜிடேரியன் ஆஹாரத்தினாலேயே நல்ல பலமும், அதுமட்டுமின்றி புத்தி, பணிவு, ஸஹாய குணம் முதலான ஸத்வ அம்சங்களும் பெறலாமென்று தெரிகிறது.

ஸர்ப்பா: பிபந்தி பவநம் ந ச துர்பலாஸ்தே
சுஷ்கைஸ்-த்ருணைர் வநகஜா பலிநோ பவந்தி |
கந்தை: பலைர் முநிவரா: க்ஷபயந்தி காலம்
ஸந்தோஷ ஏவ புருஷஸ்ய பரம் நிதாநம் ||

"வெறும் காற்றையே உட்கொள்கிற பாம்பு அதனால் துர்ப்பலமாக இல்லை. வற்றின புல்லைத் தின்கிற காட்டு யானை மிகவும் பலமுள்ளதாயிருக்கிறது. கிழங்கையும் பழத்தையுமே சாப்பிட்ட முனிவர்கள் மரணத்தை ஜயித்து சிரஞ்ஜீவிகளாயிருக்கிறார்கள். ஆகையால் மனஸின் நிறைந்த திருப்திதான் ஒரு ஜீவனுடைய ஆயுராரோக்யாதிகளுக்கு மூலதனம்; சாப்பாடு இல்லை" என்று அர்த்தம். 'சாப்பாடு இல்லை' என்று ஸ்லோகத்தில் நேராகச் சொல்லாமல் தொக்கி நிற்கிறது.

எனக்கு அப்போது இளவயஸு. ப்ரொ:ஃபஸர் ராமமூர்த்தி என்று ஒருத்தர் இருந்தார். ராமமூர்த்தி ஸாண்டோ என்றே சொல்வார்கள். தெலுங்கர். ஸர்க்கஸ் கம்பெனி நடத்திவந்தார். நடத்தினது மட்டுமில்லை, அவரே ஸாண்டோவானதால் ஆச்சரியமான feats பண்ணிக் காட்டுவார். ஒன்று சொல்கிறேன்: தன் இடுப்பைச் சுற்றிப் பக்கத்துக்கு ஒன்றாக ஒரு Ford காரைக்

கயிற்றால் கட்டிக் கொண்டு, இரண்டின் என்ஜினையும் ஸ்டார்ட் பண்ணிவிடுவார். அப்படியே இரண்டுமாக அவரை நசுக்கித் தொகையல் பண்ணிவிடுமோ என்று ஜனங்கள் பிரமித்துப் பார்ப்பார்களாம். மநுஷ்யரானால் கொஞ்சங் கூட அலட்டிக் கொள்ளாமல், அந்த இரண்டு காரையும் இரண்டு உள்ளங்கையாலேயே மறித்துக் கொண்டு அவை ஓட முடியாதபடி நிறுத்தி வைத்திருப்பாராம். அவருடைய கம்பெனி கும்பகோணத்தில் 'காம்ப்' பண்ணியிருந்தபோது நான் வந்து ஸர்க்கஸ் பார்க்கவேண்டுமென்று ரொம்பவும் கேட்டுக் கொண்டார். மடத்தில் அப்படி ஸம்பிரதாயமில்லையென்று சொன்னதும், மடத்துக்குப் பின்னாடி விஸ்தாரமாக பூமி உண்டு, அங்கே தன் கோஷ்டியில் சில பேரோடு வந்து சில 'ஸர்க்கஸ் அயிட்டங்'களைப் பண்ணிக் காட்டினார். இப்படியும் ஒரு தேஹ பலமுண்டா என்று ஆச்சரியமாயிருந்தது. அவர் கதை எதற்குச் சொல்கிறேனென்றால் இப்படிப்பட்ட பலிஷ்டர் சுத்த வெஜிடேரியனாக இருந்தவர் என்பதற்காகத்தான். மஹா பலிஷ்டரான ஆஞ்ஜநேயரே சாகபோஜனியான வானரம்தானே?

ஏதோ டி.பி. மாதிரிச் சில உடம்பு [வியாதி]களுக்கு மாம்ஸாதிகளை டாக்டர்கள் ப்ரிஸ்க்ரைப் பண்ணினாலும் வயிற்று வியாதிகள், ப்ரஷர், ஹ்ருதய ரோகங்கள் என்றெல்லாம் ஏற்பட்டால் மாம்ஸத்தில் fat ஜாஸ்தி, அது கூடாது என்று நிறுத்தித்தான் விடுகிறார்கள். நான்வெஜிடேரியன்களுக்கு எந்த உடம்பு வந்தாலுமே சீக்கரத்தில் குணமாவதில்லை என்றுகூடச் சொல்வதுண்டு.

சாக போஜனத்துக்குப் பலம் இல்லாமலில்லை என்பதற்கு இன்னொன்றும் சொல்கிறேன். சிங்கம், புலி மாதிரி ரொம்பவும் பலமுள்ள எந்த 'கார்னிவோரஸ் அனிம'லை [மாம்ஸம் சாப்பிடுகிற மிருகத்தை] எடுத்துக் கொண்டாலும் அது ஆஹாரமாகச் சாப்பிடுகிற பிராணி எப்படியிருக்கிறது என்று பாருங்கள். இது [சாப்பிடப்படும் பிராணி] சாக பக்ஷிணியாகத்தானிருக்கும். மாம்ஸ பக்ஷிணிகளான சிங்கமும் புலியும் சாக பக்ஷிணிகளான ஆடு, மாடு, மான் போன்றவற்றைத்தான் தின்னும்; இன்னொரு மாம்ஸ பக்ஷிணியைத் தின்னாது. சிங்கமும் புலியும் ஒன்றை யன்று

அடித்துக்கொண்டு சாகலாம்; ஆனாலும் இவற்றில் ஒன்றின் மாம்ஸத்தை இன்னொன்று தின்னாது. இதிலிருந்து மாம்ஸ பக்ஷிணிகளின் பலத்துக்கும் (அவை தின்கிற சாக பக்ஷிணிகளின் த்வாரா) காரணமாயிருப்பது புல்லும், தான்யமும், மட்டையுந்தான் என்று தெரிகிறதல்லவா?

வெஜிடேரியனுக்கு ஆதரவாக இத்தனை சொன்னாலும் லோக ரீதியில் நாக்கு ருசி, தேஹபுஷ்டி என்று எதையோ நினைத்து நீண்டகாலமாக நான்-வெஜிடேரியனிஸமும் இருந்துதான் வந்திருக்கிறது. ஆதியில் இதையெல்லாம்விடப் பெரிய காரணம் ஒன்று இருந்ததாகப் படிப்பாளிகள் சொல்கிறார்கள். 'அப்போதெல்லாம் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் ஜன ஸமூஹங்கள் கூட்டங் கூட்டமாக இடத்தை விட்டு இடம் மாறிக் கொண்டேயிருந்தார்கள். ஆறு மாஸம், ஒரு வருஷம் என்று ஒரே இடத்தில் இருந்தால்தானே சாகுபடி செய்து அறுவடை பண்ணிச் சாப்பிட முடியும்? அந்தக் காலத்தில் 'அக்ரிகல்ச்ச'ரே (வ்யவஸாயமே) தெரியவும் தெரியாது. அதனால் வில்லையும் அம்பையும் வைத்துக் கொண்டு வேட்டையாடி மாம்ஸ போஜனம் செய்ய வேண்டியதாகவே இருந்தது. பாரம்பரியமாக அது மநுஷ்யனின் இயற்கையில் ஊறிப்போய்த்தான் பிற்காலத்தில் ஓரிடத்தில் 'ஸெட்டில்' ஆகி, `அக்ரிகல்ச்சர்' தெரிய ஆரம்பித்த பின்பும், கூடவே மாம்ஸ போஜனமும் தங்கி விட்டது' என்கிறார்கள். இது ஸரியோ, தப்போ, அவ்வளவு எனக்கு ஆராய்ச்சி தெரியாது. ஆனாலும் லோகம் பூராவும் மாம்ஸ போஜனம் விடாமல் இருந்து தான் வருகிறது. இதைத்தான் ஒப்புக்கொண்டு, – மனஸுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் யதார்த்த நிலைமையென்றிருக்கிறதே அதை ஒப்புக்கொண்டு - அதிலிருந்துதான் லக்ஷ்யமான ஆதர்ச நிலைமைக்குப் போக வேண்டுமென்று நம் சாஸ்த்ரகாரர்கள் வர்ணாச்ரம விபாகத்திலே இன்னின்னார் மாம்ஸ போஜனம் பண்ணலாம், இன்னின்னார் பண்ணக்கூடாது என்று வைத்தார்கள். சிலர் பண்ணலாம் என்று வைத்ததால் அப்படியேதான் அவர்கள் சாச்வதமாக பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டதாக அர்த்தமில்லை. இவர்களும் போகப்போக, வயஸு ஏற ஏற இதை விட்டு

விட்டு ஸாத்விகமான சைவ ஆஹாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு வழி வகுத்திருக்கிறார்கள்.

10.11-பூர்வ வழக்கும் கலிகால நடப்பும்

'ஆதியில் பிராம்மணர்கள் நான்-வெஜிடேரியன் களாகத்தான் இருந்தார்கள்; ரிஷிகள் அந்நிய பதார்த்தம் சாப்பிட்டிருக்கிறார்கள்' என்றெல்லாம் சொல்லக் கேட்கிறோம். இப்படிச் சொல்கிறவர்கள் சாஸ்திரங்களைப் பார்த்து அந்நிய பதார்த்தம் என்று எந்தெந்தப் பெயர்களைச் சொல்கிறார்களோ அதெல்லாமே அநேக காய்கறிகள், மூலிகைகள், தான்யங்கள் ஆகியவற்றின் பெயர்தான் என்று நம்மில் சாஸ்திராபிமானமுள்ள ஆசார சீலர்கள் காட்டுகிறார்கள். 'கல்யாண்', ***'கல்யாண் கல்பதரு'*** என்று கோரக்பூரிலிருந்து பத்திரிகை போடுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த விஷயமாக நிறைய எழுதி, எந்தக் காலத்திலும் எவருக்கும் நம் சாஸ்திரங்கள் மாம்ஸ போஜனத்தை அங்கீகரிக்கவேயில்லையென்று வாதம் பண்ணி வருகிறார்கள். அச்வமேதத்தில் ஒரு குதிரையை அங்க அங்கமாக ஆஹுதி பண்ணியதாக நாம் நினைப்பது கூட வாஸ்தவத்தில் அந்தந்தப் பெயருள்ள மூலிகையின் இன்னின்ன பாகத்தைப் போடுவதுதான் என்று எழுதியிருக்கிறார்கள்.

அப்படியே ஆதியில் ஸர்வஜனங்களும் நான்-வெஜிடேரியன்களாக இருந்ததாக வைத்துக்கொண்டாலும் கூட, சாஸ்திரத்திலேயே பூர்வயுகங்களிலிருந்த சில வழக்கங்கள், மநுஷ்யர்கள் அல்பசக்தர்களாகிவிட்ட இந்தக் கலிக்கு வர்ஜம் [தள்ளுபடி] என்று வைத்து, கலியில் வர்ணத்தில் பிராமணர்கள் சாக போஜனம்தான் பண்ண வேண்டும் ஆச்ரமத்தில் ஸந்நியாஸிகள் சாப்பாட்டிலே மாத்திர மில்லாமல் ஸகல விஷயங்களிலும் பூர்ண அஹிம்ஸை அநுஷ்டிக்க வேண்டும் என்று வைத்திருப்பதைத்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உபநிஷத் பாஷ்யத்தில் ஓரிடத்தில் ஆசார்யாள் சொல்லியிருக்கிறதிலிருந்து பூர்வ யுக புருஷர்களுக்கும் நமக்கும் சக்தியிலே ரொம்ப வித்யாஸமுண்டு என்று தெரிகிறது. பிருஹதாரண்யக [உபநிஷ] த்திலே, "அஹம் ப்ரஹ்மாஸ்மி - நானே பிரம்மம்தான் - என்று தேவர்களில் பலபேர் கண்டு

கொண்டு அப்படியே ஆனார்கள். ரிஷிகளிலேயும் அப்படி ஆனவர்கள் உண்டு. உதாரணமாக வாமதேவர், 'நானே மநுவாயிருந்தவன்; நானே ஸூர்யானாயிருந்தவன்' என்று சொன்னதெல்லாம் இப்படிப்பட்ட ப்ரம்மாநுபவத்திலேதான். ஆதிகாலத்திலிருந்த அந்த தேவர்களும், ரிஷிகளும் மட்டுந்தானென்றில்லை; இப்போதும் இந்தக் காலத்தில் நம்மிலிருக்கிற மநுஷ்யர்களில் கூட *'அஹம் ப்ரஹ்மாஸ்மி'* என்று ஒருவன் அறிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்டவனும் அவர்களைப் போலவே ஸர்வமும் ஆகிறான். இவனுடைய மஹிமையை குறைக்கத் தேவர்களாலும் முடியாது" என்ற அர்த்தத்தில் மந்திரங்கள் வருகின்றன*. 'இப்போதும்' என்று உபநிஷத் நாளில் சொன்னது ஆசார்யாள் இருந்த காலத்துக்கும் பொருந்துவதாக ஆசார்யாள் தம்முடைய பாஷ்யத்தில் காட்டி, எனவே வீர்யம் குறைந்த தற்கால ஜனங்களுக்குக்கூட ப்ரம்ம ஞானமும், அதனால் பெறுகிற மஹிமையும் ஸாத்தியந்தானென்று சொல்கிறார். அப்படிச் சொல்லும்போது, "நம் யுகத்தில் உள்ள மநுஷ்யர்கள் வீர்யத்தில் ரொம்பவும் குறைந்தவகளானதால் இவர்கள் ப்ரம்ம வித்தியோபாஸனையால் ஸர்வ **பா**வ ஸித்தி பெறுவதென்பது ஸாத்தியமில்லையென்று நினைத்துவிடப் போகிறார்களேயென்றுதான் இந்த மந்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்ம ஞானத்தைப் பற்றிய வரையில் மஹாவீர்யவான்களான வாமதேவாதிகளுக்கும் ஹீனவீர்யர்களான இக்கால ஜனங்களுக்குமிடையில் வித்யாஸமே இல்லை" என்கிறார். இப்படியாக, ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுவதில் வித்யாஸமில்லையென்று அவர் சொல்லும் போதே பூர்வ யுகத்துக்காரர்களை *"மஹாவீர்யர்கள்"* என்றும் தன் காலத்தவர்களை "அல்ப வீர்யர்" *"ஹீன வீர்யர்"* என்றும் சொல்வதால், மற்ற சக்தி ஸாமர்த்தியங்களில் இப்போதிருப்பவர்கள் முன் காலத்தவரை விடக் குறைந்தவர்கள்தான் என்பதை ஆதரித்திருப்பதும் தெரிகிறது. அதனால்தான் அந்த யுகத்துகாரர்களுக்கு உண்டான சில பழக்கங்களை நாம் அநுஷ்டிக்கக் கூடாது என்பது. ஆரோக்கியசாலி ஒருத்தன் விருந்து சாப்பிடுகிறான் என்பதால் வியாதியஸ்தனும் சாப்பிட்டால் ஜீர்ணமாகுமா? பூர்வத்தில் ரிஷிகள் மாம்ஸ போஜனம் பண்ணினதாகவே வைத்துக் கொண்டலும் (நான் வெறும் assumption -க்குத்தான் இப்படிச் சொல்கிறேன்) அவர்களுக்கு மாம்ஸத்தால்

கூட ராஜஸ, தாமஸ மனோவிகாரம் ஏற்பட முடியாதபடி அதை ஜீர்ணம் பண்ணிக் கொள்ளும் சக்தியும் (வயிற்றிலே ஜீர்ணம் பண்ணிக் கொள்வது மட்டுமில்லை; மனஸிலேயும் ஜெரித்துக் கொள்கிற சக்தி) இருந்தது; அப்படிப்பட்ட சக்தி இல்லாத நாம் அந்த மாதிரி பண்ணகூடாது என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்த யுகத்தில் ஆயிரும் வருஷம், பதினாயிரம் வருஷம் இருந்தார்கள்; லோகாந்தரங்களுக்கு சரீரத்தோடேயே போய்விட்டு வந்தார்கள்; மனோ சக்தியாலேயே என்னவோ ஆச்சர்யங்கள் பண்ணினார்கள் என்று படிக்கிறோமே! அதெல்லாம் செய்ய நமக்கும் சக்தி இருந்தால் அவர்கள் மாதிரியே நாமும் போஜனம் முதலானதுகளையும் வைத்துக் கொள்ளலாம்.

ஒரு த்ருஷ்டாந்தம் சொல்வதுண்டு. ஒரு காடு இருந்ததாம். அதன் பக்கத்தில் ஒரு பெரிய நதி, ஒரு சின்ன குட்டை இரண்டும் இருந்தனவாம். காட்டிலே தீப்பிடித்துக் கொண்டதாம். அப்போது பலமான காற்று சேர்ந்து கொள்ளவே எரிகிற சருகுகள், விறகுத் துண்டுகள், மண் எல்லாம் அடித்துக் கொண்டு வந்து குட்டையிலும் விழுந்ததாம்; நதியிலும் விழுந்ததாம். குட்டையை மண்ணும் செத்தையும் பாதி அடைத்தது என்றால் பாக்கி பாதி அப்படியே அந்த உஷ்ணத்தில் வற்றி, மொத்தத்தில் குட்டை இருந்த இடம் தெரியாமல் ஆகிவிட்டது. மஹா நதியில் விழுந்த குப்பைக் கூளங்களை, அவை பற்றி எரிந்து கொண்டிருந்தாலும் அதன் பிரவாஹமே அணைத்து அடித்துக் கொண்டுபோய் ஸமுத்ரத்தில் விட்டு இருந்த இடம் தெரியாமல் பண்ணிவிட்டது. குப்பை குட்டையை இல்லாமல் பண்ணிற்று; நதியோ குப்பையை இல்லாமல் பண்ணிவிட்டது. இந்த மாதிரியான தோஷமாகத் தெரிகிற சில பழக்க வழக்கங்கள் பூர்வ காலத்தில் வீர்யத்தோடிருந்தவர்களைச் சேர்ந்தபோது அந்த தோஷம் அவர்கள் சக்தியில் அடிபட்டுப் போயிற்று; பலஹீனர்களான நாம் அந்த வழக்கங்களை கைக்கொண்டாலோ தோஷம் நம்மை அடித்துப் போட்டுவிடும். அவர்களுடைய சக்தி நமக்கு இல்லாததால், கலியுகத்தில் எப்படி இருக்கணுமென்று அவர்கள் சட்டம் போட்டுக் கொடுத்திருக்கிறார்களோ அதற்கு அடங்கித்தான் நாம் நடக்கணும். 'அல்டிமேட்'டாக அஹிம்ஸா

போஜனத்துக்குப் போகத்தான் எல்லாரும் முயற்சி செய்யணும் என்பதே நமக்கான தர்மம்.

---

* ப்ருஹதாரண்யகோபநிஷத் 1.4.10

10.12-படிப்படியாக முன்னேற

ஒருகால் பூர்விகர்கள் மாம்ஸம் சாப்பிட்டிருந்தால் கூட அதற்காக நாமும் அதை லக்ஷ்ய நிலையாக வைத்துக்கொண்டுவிடக் கூடாது. அதே ஸமயத்தில் நெடுங்காலப் பழக்க வழக்கத்தால், குலாசாரத்தால் மாம்ஸ போஜனிகளாக இருக்கிற பிராம்மண-இதரர்களை எல்லாம் இன்றையிலிருந்தே சைவ ஆஹாரத்தை மேற்கொள்ளும்படியும் force பண்ணக்கூடாது. 'அல்டிமேட்'டாக மாம்ஸம் கூடாது; அதற்காக 'இம்மீடியட்'டாகவே எல்லாருக்கும் மாம்ஸம் கூடாது என்றும் நிர்பந்திக்கக் கூடாது. பழக்கத்தை ஒரே மூச்சில் மாற்றிக்கொள்ள முடியாது. அப்படிப் பண்ணுவது பலவித கஷ்டங்களை உண்டாக்கும். Total abstinence [பூர்ண விலக்கு] ஒரே நாளில் வந்து விட முடியாது. ஸ்டேஜ் ஸ்டேஜாகத்தான் அதற்கு டெவலப் பண்ணிக் கொண்டு போக வேண்டும். அதற்காக நாம் பிரசாரம் பண்ணி, ஊக்கமும் தரவேண்டும்.

முதலில் பண்டிகை நாள், விரத தினங்கள், தர்ப்பண திதி ஆகியவற்றில் 'மீட்' சாப்பிடுகிறதில்லை என்று இதரர்கள் வைத்துக் கொள்ளட்டும். அப்புறம் ஒரு மாஸத்தில் சில சில நாளில் சாப்பிடாமல் இருக்கட்டும். முதல் தேதியில் சாப்பிட வேண்டாம், தங்கள் நக்ஷத்ரத்தன்று வேண்டாம், குழந்தைகள் நக்ஷத்ரத்தில் வேண்டாம் என்கிறமாதிரி இப்படியே போய் கொஞ்சங்கொஞ்சமாக விட்டால் அப்புறம் பூர்ணமாக நிறுத்திக்கொள்வதில் சிரமமே தெரியாது. அப்போது அப்படிப் பண்ணிக் கொள்ளலாம்.

10.13-மரக்கறி உணவு முன்னிலும் தேவை

முன் காலங்களில் ஸர்வ ஜனங்களுக்கும் சாஸ்த்ராபிமானம், தெய்வத்திடம் பய பக்தி, அதனால் தப்புப் பண்ணுவதிலே பயம், அடக்க குணம் முதலியன இருந்தன. அதனால் ஸகல ஜாதியாருமே இன்றைக்கு இருப்பதைவிடக் கட்டுப்பாட்டுடன் (இந்திரிய நிக்ரஹத்தில் கூட இன்றைவிடக் கட்டுப்பாட்டுடன்) இருந்து வந்தார்கள். இப்போது ஸினிமா, ட்ராமா, நாவல் எல்லாம் ஸ்வதந்திரப் போக்கு என்று சொல்லி ஜனங்களைத் தறிகெட்டு அலையப் பண்ணியிருக்கிற மாதிரி அப்போதில்லை. இந்திரிய சாபல்யத்துக்கு இப்போது திரும்பின இடமெல்லாம் தீனி போட்டு வளர்ப்பது போல அப்போது இல்லை. அதனால் மது மாம்ஸாதிகள் சாப்பிடுபவர்கள் கூட அதிலே ஓர் அளவு, ஒழுங்கு வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இன்றைய ஜனங்கள் மாதிரி இல்லாமல் சரீரத்தால் நன்றாக உழைக்கவும் உழைத்தபடியால் அந்த ஸாமான்கள் அவர்களுக்கு தேஹ ரீதியிலோ, மனோ ரீதியிலோ கெடுதல் பண்ணவில்லை. ஆனால் இப்போதுள்ள பொது ஜனங்களின் ஸ்வபாவம், வேலை முறை எல்லாமே மாறி, சூழ்நிலையும் கெட்டுப் போயிருப்பதால் அந்தக் காலத்தைவிட இந்தக் காலத்தில் ஸகல ஜாதியாருமே மரக்கறி உணவுப் பழக்கத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக வளர்த்துக் கொள்வது நல்லது; கள்ளு குடி முதலியவற்றை விடுவதும் நல்லது.

அதோடு இப்போது ஆபீஸ், குடியிருப்பு எல்லாவற்றிலும் எல்லா ஜாதியாரும் முன்னைவிட நெருங்கி வாழும்படியாகியிருக்கிறது. பிராம்மணாசாரங்களை மற்றவர்கள் முடிந்தமட்டும் எடுத்துக் கொள்வதே இதுவரை வழக்கமாயிருந்திருக்க, இப்போது பிராம்மணன் மற்றவர்கள் பண்ணுகிற மாதிரித் தானும் செய்வதாக ஏற்பட்டிருக்கிறது! புலால் உணவுக்காரர்களுடன் நெருக்கமாக வாழ்வதால் மரக்கறி உணவுக்காரர்கள் அந்த வழக்கத்தை எடுத்துக்கொண்டு விடப் போகிறார்களே என்று பயமாக இருக்கிறது. அவ்வப்போது ஒவ்வோரிடத்தில் இப்படிக் கேள்வியும் படுகிறோம். ஆனால் இன்னமும் நிலைமை கை மீறி விடவில்லை. இந்தியாவில் மட்டும் எல்லா ஜாதி ஜனங்களும் .... நினைத்துப் பார்க்கவே கஷ்டமாயிருக்கிறது .... நான்-வெஜிடேரியன்களாகி விட்டார்களென்றால் லோகத்துக்கே ஒரு பெரிய 'ஐடியல்' நஷ்டமாகிவிடும். அப்புறம் அதை ஒரு காலத்திலும் ஈடு செய்யவோ

அதற்குப் பரிஹாரம் காணவோ முடியாது. இன்றைக்கும் நமக்கு ஏதாவது துளிப் பெருமை ஒட்டிக் கொண்டிருக்கிறதென்றால், அது லோகத்திலேயே மிகப்பெரிய ஜனஸமூஹம் வெஜிடேரியன்களாக உள்ள தேசம் நம்முடையதுதான் என்பதே. ஹிந்து என்றால் அஹிம்ஸாவாதி என்றே லோகத்தில் இன்னமும் பரவலாக நல்லபிப்ராயம் இருக்கிறது.

'ஹிந்து' என்ற வார்த்தை அந்நிய தேசத்தார் நமக்கு வைத்த பெயர்தான்*நம்முடைய சாஸ்திரங்களில் அந்தப் பேரைப் பார்க்கவே முடியாது. ஆனால் பிற்காலத்தில், வெளிதேசத்தார் வைத்த 'ஹிந்து 'என்ற பெயரையே ஸம்ஸ்கிருத 'ரூட்'டிலிருந்து வந்த மாதிரி நம்மவர்கள் அர்த்தம் பண்ணியிருக்கிறார்கள் - அதாவது " ஹிம்ஸாயாம் தூயதே ய: ஸ ஹிந்தூ(இ)த்யபிதீயதே" என்று! ஹிம்ஸையில் எவன் ரொம்பவும் துக்கப்படுகிறானோ அவனே ஹிந்து என்று இதற்கு அர்த்தம். இது சமத்காரமாகப் பண்ணியது என்றாலும் ஹிந்து மதஸ்தர்கள் அஹிம்ஸைக்காரர்கள் என்பதால்தானே இப்படி ஒரு 'டெ◌ஃபனிஷன்' கொடுக்க முடிந்திருக்கிறது? இந்தப் பெரிய கௌரவம் நமக்குப் போகப்படாது என்றால், முன்னைவிட எல்லா ஜாதியாரும் கலந்து கொண்டு வாழும்படியாக இருக்கிற இந்தக் காலத்தில் புலால் உணவுக்குப் பழக்கப்பட்டவர்களும் முன்னைவிட மரக்கறி உணவில் அதிக நாட்டம் கொள்வது நல்லதென்று தோன்றுகிறது.

---

* " தெய்வத்தின் குரல்"முதற்பகுதியில் "வைதிக மதம்"என்ற பிரிவில் 'பெயரில்லாத மதம்' என்ற உரை பார்க்க.

10.14-மதுவிலக்கு

சாஸ்திரப்படி விலக்க வேண்டியவற்றில் மற்ற ஆஹார வகைகள் நாளாவட்டத்தில்தான் சித்தத்தைக் கெடுக்கின்றனவென்றால், குடியோ உடனேயே ஒருத்தனின் புத்தியைக் கெடுத்துக் கேவலப்படுத்துவதைப் பார்க்கிறோம். அதனால் இதை முதலில் விட்டுத் தொலைக்க வேண்டும்.

இப்படி ஒரு வஸ்து உள்ளே போவதால் உடனே சித்தம் கெட்டுப் போவதாலேயே, விலக்க வேண்டிய மற்ற வஸ்துக்களும் கொஞ்சங் கொஞ்சமாக உள்ளே போய் காலக்ரமத்தில் சித்தத்தை பாதிக்கும் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டியதாகிறது. அதாவது சாஸ்திரம் சொல்கிறபடி ஆஹாரத்துக்கும் மனஸுக்கும் ஸம்பந்தமுண்டு என்று நிச்சயமாகிறது.

குடி கூடாது, அது புத்தியைக் கெடுக்கும், குடியையும் கெடுக்கும். முற்காலத்தில் குடிப்பதற்கு அநுமதி பெற்ற ஜாதியாரும் இப்போதைய 'ஸெட்-அப்'பில் அந்தப் பழக்கத்தை விடுவதுதான் நல்லதாகிறது. இதனால், காந்தீயவாதிகள் சொல்கிற மதுவிலக்கை ஆதரித்து ஸ்ரீமட தர்மத்தொண்டு ஸபையும் அறிக்கைகூட விட்டிருக்கிறது.

நாம் வேதத்தையும் அதை அநுஸரித்து ஏற்பட்டுள்ள தெய்வ வழிபாட்டு நூல்களான ஆகமத்தையும் பின்பற்றுகிற தமிழ் மதஸ்தர்கள். இந்த வேதம், ஆகமம் இரண்டுமே மதுவிலக்கை விதித்திருக்கின்றன. ஆதலால் மத ரீதிப்படி நாம் குடிக்காமலிருக்கவே கடமைப்பட்டிருக்கிறோம் என்று எடுத்துக்காட்டி இப்படி அறிக்கை விட்டு, துண்டு பிரசுரமாக விநியோகித்தோம். ஸமூஹப் பிரச்னையாகவும் குடும்ப வாழ்க்கை விஷயமாகவும் காந்தீயவாதிகள் சொல்லும் மதுவிலக்குக்கே, அந்தக் காரணங்களையும் ஒப்புக்கொள்வதோடு, மத உணர்ச்சியை முக்யமாக வைத்து இன்னம் weight கொடுத்து இப்படிச் செய்தோம். இதன்படி நடப்பதாக ஜனங்கள் ஸம்மதச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். அப்படிச் செய்கிறவர்களுக்கு மடத்துப் பிரஸாதம் அனுப்பவும் ஏற்பாடு செய்தோம்.

[ஸ்ரீ பெரியவர்கள் குறிப்பிடும் அறிக்கையின் வாசகம் பின்வருமாறு:

"வேதங்கள் 'கள்ளுண்ணாதே'என்று முரசறைகின்றன. ஆகமங்கள் தீக்ஷையைப் பற்றிச் சொல்லுமிடத்துக் கள்ளை விலக்குவதையே முதல் அறமாக உபதேசிக்கின்றன. ஆதலால், 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவ நூல்' என்னும் திருமூலர் வாக்குப்படி, வேதாகம மரபில் வந்த தமிழன் ஒவ்வொருவனும் கள்ளுண்ணாமைப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்விதம் பிரமாணமெடுத்துக் கொண்டு கீழ்க்காணும் பிரமாணப்

பத்திரிகையை ஆதீனத்துக்கு அனுப்புகிறவர்களுக்கு திருநீறு பிரசாதமோ, துளஸி பிரசாதமோ அனுப்பப்படும். திருநீறு அல்லது திருமண் இவைகளைத் தரிக்கும் அநுஷ்டான முறையை விளக்கும் உபதேச நூலும் அனுப்பப்படும்".

இதைக் கண்ணுறுபவர் அனுப்ப வேண்டிய பத்திரிகையின் வாசகம்: "நான் நமது வேதாகம விதிப்படி இன்று முதல் கள்ளைத் தொடுவதில்லை. இங்ஙனம் ஆதி சங்கராச்சாரியார் அவர்களுக்கு உறுதிமொழி கூறுகிறேன்."]

10.15-புகைத்தல்: ஸமூஹ விரோதச் செயல்

புகையிலையைப் பச்சையாய் சாப்பிடுவது, `புகை'யிலை என்றே அதற்குப் பெயர் இருப்பதற்கேற்க அதை நெருப்பில் புகைத்து இழுப்பது ஆகியவையும் அநாசாரம் என்று சாஸ்திரம் தள்ளியிருக்கிறது. உடம்புக்குக் கெடுதல், அதாவது அநாரோக்யம் என்று வைத்ய சாஸ்திரப்படி தள்ளினதையே சித்தத்துக்குக் கெடுதலைச் செய்யும் அநாசாரம் என்று தர்ம சாஸ்திரம் ஒதுக்கி வைக்கிறது. மாம்ஸத்தில் ஒருவிதமான கெடுதல், மதுவில் இன்னொருவிதமான கெடுதல் என்றால், புகை பிடிக்கிறதிலும் தனியாக ஒரு பெரிய கெடுதல் இருக்கிறது. அதாவது ஒருத்தன் இந்தக் கெட்ட காற்றை விடுகிற போது பக்கத்திலிருப்பவனுக்கு உள்ளேயும் போய் அது கெடுதல் பண்ணுகிறது. “நான் எப்படி வேண்டுமானாலும் கெட்டுப் போவேன்; என்னை யார் தடுக்கிறது?” என்று ஒருத்தன் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் “பிறத்தியானைக் கெடுப்பேன். அவன் இழுக்கிற காற்றை விஷமாக்குவேன். என்னை யாரும் கேட்கப்படாது” என்று எவனும் சொல்ல முடியாது. அதனால் ஸமூஹ நலனை உத்தேசித்து, பீடி, ஸிகரெட்தான் பெரிய விரோதி என்று அதைத் தடை செய்ய வேண்டும். ஆனாலும் எதனாலோ ‘ப்ரொஹிபிஷன்’ என்று மது விலக்கை மட்டும் விசேஷமாகச் சொல்லிவிட்டு, இதை [புகைப்பதை]த் தடுக்காமலிருக்கிறார்கள். ப்ரொஹிபிஷன் பிரசாரம் பண்ணுகிறவர்களில் சிலருக்கே இந்தப் [புகைக்கும்] பழக்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். குடிப்பதற்கு ஒரு stigma (அவப்பெயர் அடையாளம்)

இருக்கிறாற்போல புகைபிடிப்பதற்கு இல்லாமல் இது ஒரு ஃபாஷன் அடையாளமாகவே நினைக்கப்படுகிறது.

புகையிலை, பீடி, ஸிகரெட் சாஸ்திர ஸம்மதமல்ல. ஸத்வ ஆஹாரம் என்பதாக சாப்பாட்டிலே மட்டும் பண்ணிக்கொண்டுவிட்டு, புகைப்பழக்கம் வைத்துக் கொண்டால் பிரயோஜனமில்லை. ஸாத்விகாஹாரம் என்னும்போது மதுவையும் புகையிலையையும் தள்ளியே ஆக வேண்டும்.

10.16-காபி முதலிய பானங்கள்

ஸாதரணமாக இப்படிப்பட்ட தள்ளுபடி வஸ்துக்களுக்குத்தான் புத்தியைப் பிடித்து வசப்படுத்தி வைத்துக் கொள்கிற சக்தி இருக்கிறது. “அது இல்லாட்டா முடியாது” என்று என்னமோ பைத்தியம் பிடித்த மாதிரிப் பண்ணி, எந்த வேலையுமே ஓடாமல், இந்த மனோபளுவினாலேயே தலைவலி, அஜீர்ணம் என்றெல்லாம் இந்த வஸ்துக்கள்தான் உண்டாக்குகின்றன. அந்த வஸ்துவுக்கு இவன் அடிமை ஆகிவிடுகிறான். ‘Addict’ என்று சொல்கிறார்கள். ஏதோ ஒரு அளவு என்று நிறுத்திக் கொள்ள முடியாமல் எப்போது பார்த்தாலும் அந்த ஸாமானுக்கே ஆசை ஏற்படுகிறது. குடிப் பழக்கமுள்ளவன், புகையிலை மெல்லுகிறவன், அதையே ‘ஊதுகிறவன்’ எல்லாரும் இப்படித்தான். அபின், கஞ்சா முதலான லாஹிரி வஸ்துக்கள் எல்லாம் இப்படி மநுஷ்யனை அதே பைத்தியமாக அடிக்கிறவைதான்.

புத்தியைக் கெடுப்பதில் கள்ளு கஞ்சா அளவுக்குப் போகாவிட்டாலும், `அடிக்ட்’-ஆக அடிமைப்படுத்துகிற சக்தி காபி, டீக்கும் இருப்பதால்தான் அவை உதவாது என்பது. போதையை உண்டுபண்ணுவது - intoxicant – என்று இவற்றைச் சொல்ல முடியாவிட்டாலும், நரம்பை ஊக்குவிக்கிறவை - stimulant – என்பதால் தள்ளத்தான் வேண்டும். ‘ஸ்டிமுலேட்’பண்ணுவது அப்போதைக்குக் கிளுகிளுப்பைத் தந்து உத்ஸாஹப் படுத்தலாமானாலும், முடிவிலே இப்படி செயற்கையாகத் தூண்டப்பட்ட நரம்பு மண்டலம் பலஹீனம்தான் அடையும். காபியில் இருக்கிற ‘கஃபைன்’ விஷ வஸ்துவே என்று ஸகலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

டீயும் அநாசாரம்தான். என்றாலும் காபி போல அவ்வளவு மோசமில்லையாதலால், சுறுசுறுப்புக்கு ஏதாவது பானம் வேண்டத்தான் வேண்டும் என்கிறவர்கள் டீ வேண்டுமானாலும் கொஞ்சம் சாப்பிடலாம். இப்படிச் சொன்னதால், "பெரியவா டீ சாப்பிடச் சொல்றா" என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு விடக்கூடாது. காபி, டீ மாதிரி எதுவாவது இல்லாமல் முடியவே முடியாது என்று இருக்கிறவர்கள் டீ வேண்டுமானால் கொஞ்சம் சாப்பிட்டுக் கொண்டு, அதையும் படிப்படியாக விட வேண்டும்.

நல்ல வஸ்துவான பாலில் இந்த ஸாமான்களைக் கலந்து கெடுக்க வேண்டியதே இல்லை. அதிகாலையில் வெறும் பாலே சாப்பிடலாம். பகலில் மோராக்கிக் குடிக்கலாம். மோர்க் கஞ்சியாகவும் சாப்பிடலாம்.

வெறுமனே சொன்னால் போதாது என்று சந்திரமௌளீஸ்வரர் ஸாக்ஷியாக காபி, ஸினிமா, பட்டு மூன்றையும் விட்டுவிடுவதாக ஸத்யம் பண்ணிக் கொடுங்கள் என்று கேட்கிறேன். ஏன்? எத்தனை ஏழைக் குடும்பமானாலும் சோற்றுச் செலவைவிட ஜாஸ்தியாகக் காபி அல்லவா இழுக்கிறது? அகத்தில் சாப்பிடுவதோடு கண்ணில் படுகிற ஹோட்டலில் புகுந்தும் மூன்று வேளை, நாலு வேளை என்று குடிக்கப் பண்ணுகிறதே! எழுந்தவுடனேயே, பல் தேய்க்காமல்கூட பெட்-காபி, இல்லாவிட்டால் அந்தக் காபிப் பொடி வண்டலாலேயே பல் தேய்த்துவிட்டு அதை உள்ளேயும் தள்ளுவது என்பதாக, 'இதில்லாமல் ஜீவனில்லை' என்கிற அளவுக்கு இதற்கு நம் புத்திக்கு மேல் ஆதிக்யம் கொடுத்திருப்பது தப்புத்தானே? இந்த ஆதிக்யத்தினால்தான் இக்கால ஸந்நியாஸிகளுக்கு தண்ட, கமண்டலம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் 'ஸ்டவ்' இருந்தாக வேண்டுமென்று ஆகியிருக்கிறது! நெருப்பு கிட்டேயே போகப்படாது, சமைக்கவே கூடாது என்று விதிக்கப் பட்டிருக்கும் ஸந்நியாஸிகள் கூட, பிராம்ம முஹூர்த்தத்தில் எழுந்து தியானம் செய்வதானால் அதற்கு முந்தி காபி இல்லாமல் முடியவில்லை என்று தாங்களே 'ஸ்டவ்'வில் போட்டுக் குடிக்கிறதாக அல்லவா பார்க்கிறோம்? இதுதான் இன்றைக்கு நடக்கிற ஸ்வயம்பாக நியமம்! இப்படி ஒரு வழக்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பது தப்பு என்பதால்தான் நான் காபியை பலமாகவே கண்டிப்பது.

டின்னில் அடைத்து, பார்க்க 'நீட்'டாக என்னென்னவோ பான வகைகள் வந்திருக்கின்றனவே, அதிலெல்லாம் என்னென்ன வஸ்துக்கள் சேர்ந்திருக்குமோ? இவற்றிலும் சரி, இதே மாதிரி பார்க்க சுத்தமாக, அழகாக pack பண்ணி வருகிற பிஸ்கோத்து, பன், கேக் முதலானவற்றிலும் சரி, ஒரு வஸ்து இல்லாமலிருக்காது என்றுதான் ஸந்தேஹம்[1]. ஆனாலும் இதைக் கண்டுகொள்ள வேண்டாமென்று ஆசாரக் குலவழக்குள்ளவர்களும் இவற்றை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'அப்படியே அந்த வஸ்து இருந்தாலும் பரவாயில்லை. அது முழுக்க உயிர் வந்துவிட்ட ஜீவனில்லை' என்று துணிந்து ஸமாதானம் சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அதற்கு உயிர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அது நமக்குக் கெடுதி செய்யும் ஊன்தான். இவர்கள் சொல்லும் நியாயப்படி எந்தப் பிராணிக்குமே தானாக உயிர் போனபின் அதன் ஊனைத் தின்றால் தப்பில்லை என்றும் ஆகும். நீலகண்ட தீக்ஷிதர் என்ற மஹான்[2] மந்திரி பதவியை விட்டு வரும்போது திருமலை நாயகரிடம், "குக்குட சப்தமில்லாத ஒரு பிராந்தியத்தில் கொஞ்சம் பூமி கொடுத்தால் போதும்" என்று கேட்டு வாங்கிக் கொண்டு தாம்ரபர்ணிக் கரையில் பாலாமடை என்கிற அக்ரஹாரத்தை ஏற்படுத்தினாராம்! அந்த அஹிம்ஸா பாரம்பர்யத்துக்கு நாம் களங்கமுண்டாக்கக் கூடாது. நம் கண்ணுக்குத் தெரியாமல் எங்கேயோ ஃபாக்டரியில், பேக்கரியில் பண்ணுகிறவற்றில் என்னென்ன கலந்திருக்கிமோ! கைபடாமல் மிஷினேதான் பண்ணி 'பாக்கிங்'கும் செய்கிறது என்பதால் அது ஆசாரமானதாகி விடாது. நாமே அகத்தில் பார்த்து அரைத்து வைத்துக் கொள்கிற மாவுகளைப் போட்டுக் கஞ்சியாகக் குடிப்பதுதான் ஆசாரம். வியாதியஸ்தர்கள், வியாதிக்கப்புறம் தேற்றிக் கொள்ள வேண்டியவர்கள் மட்டும் சொஸ்தமாகி உடம்பு தெம்பு பிடிக்கிற வரையில் பாக்டரியிலிருந்து வருகிற மற்ற ஆரோக்யம் தரும் பான வகைகளை கரைத்துக் குடிக்கலாம். மருந்து மாதிரி இதற்கும் அந்தக் காலத்தில் மாத்திரம் விலக்கு தரலாம். அப்புறம் இதை நிறுத்தி விட்டு பஞ்சகவ்யம் சாப்பிட்டு சுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும்.

---

1. முட்டையைத்தான் ஸ்ரீ பெரியவர்கள் குறிக்கிறார்கள்.

2. பின்னால் வரும் 'மீநாக்ஷி' என்ற உரையில் நீலகண்ட தீக்ஷிதரைப் பற்றிய சில விவரம் காணலாம்.

10.17-பால் வஸ்த்துக்கள்

'பால் ரத்த ஸமானமல்லவா? அதனால் பால், அதிலிருந்து வருகிற தயிர், மோர், வெண்ணெய், நெய் எல்லாமே புலால் வகையைச் சேர்ந்ததுதான்' என்று சொல்லி இவற்றைத் தள்ளிவிடுகிற தீவிரவாதிகள் இருக்கிறார்கள். ஆனால் நமக்குப் பிரமாணம் சாஸ்திரந்தான் என்பதைப் பார்க்கும்போது, பாலையும் அதிலிருந்து உண்டாகும் வஸ்துக்களையும் ஸத்வாஹாரமாகவே சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதால் தள்ள வேண்டியதில்லை. ஒரு பதார்த்தத்தைத் தள்ளுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, அதிலே ஜீவஹிம்ஸை இருக்கக்கூடாது. இரண்டு, அது நம் சித்தத்தைக் கெடுக்கப்படாது. பாலைக் கறப்பதால் நாம் பசுவுக்கு ஹிம்ஸை பண்ணவில்லை. ஈஸ்வர ஸ்ருஷ்டியிலேயே, தான் ஈனுகிற குழந்தைகளுக்கு வேண்டிய அளவு பால் கொடுக்க மட்டுமில்லாமல் உபரியாகவும் மற்றவர்களுக்குக் கொடுக்கிற அளவுக்குப் பசுவுக்கே பால் சுரக்கிறது. அதன் பால் முழுவதையும் கன்றுக்குட்டியே குடித்தால் வயிறு முட்டிச் செத்துப்போய்விடும். யஜ்ஞாதிகளுக்காகவும் புஷ்டி வேண்டிய மற்ற ஜனங்களுக்காகவும் சேர்த்துத்தான் அது இத்தனை பாலைக் கொடுக்கும்படியாக பகவான் அதைப் படைத்திருக்கிறான். பால் தருவதால் நமக்கும் பசு தாய். அதனால்தான் "கோமாதா" என்பது. அச்வமாதா, கஜமாதா என்பதில்லை. அன்னையின் க்ஷீரத்தைச் சாப்பிடுவது மாம்ஸ போஜனமாகாது. கன்றுக்கு வயிறு நிரம்ப ஊட்டுக் கொடுத்தபின், பசு கஷ்டமில்லாமல் சுரப்பு விடுகிற வரையில் எஞ்சியுள்ள பாலைக் கறந்து நாம் எடுத்துக் கொள்வதில் தப்பேயில்லை. இதிலே பசுவுக்கு ஹிம்ஸை இல்லை. கறக்காவிட்டால்தான் பால் கட்டிக் கொண்டு மடி கனத்துக் கத்தும். இரண்டாவதாகச் சொன்ன சித்த விகாரம் க்ஷீரத்தால் உண்டாவதில்லை. பாலையும் அதிலிருந்து உண்டாகிற மற்ற பதார்த்தங்களையும் ஸாத்விகம் என்றே சொல்லியிருக்கிறது. சொல்லியிருப்பது மட்டுமில்லை. பரம

ஸாத்விகர்கள் பல பேர் இவற்றைச் சேர்த்துக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். முக்குண ஆஹாரங்களைச் சொன்ன பகவானே பாலையும் வெண்ணெயையும் திருடிச் சாப்பிட்ட நவநீத சோரனாகத்தானிருக்கிறான். ஈஸ்வரவனுக்குப் படிப் படியாய், குடம் குடமாய் பாலபிஷேகம் பண்ணிப் பார்த்து ஆனந்தப்படும்படி சாஸ்திரம் சொல்கிறது. தப்பான பதார்த்தமானால் சொல்லியிருக்குமா?

ஆகையால் க்ஷீரத்தையும் அதிலிருந்து உண்டாகிறவற்றையும் தள்ள வேண்டியதில்லை. அளவாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். Fat ஏறும்படியாகவோ, மந்தம் தட்டும் படியாகவோ சேர்த்துக் கொள்ளக்கூடாது.

பால் சேர வேண்டியவர்களுக்குச் சேரவிடாதது தான் தப்பு. எத்தனையோ ஏழைக் குழந்தைகள், துர்பலர்கள், நோயாளிகள் பாலுக்குப் பரிதவிக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பாலைக் காபி விஷமாக்கி மற்றவர்கள் மூன்று நாலு வேளை சாப்பிடுகிறார்கள். இதுதான் தப்பு. காபியால் குடிப்பவர்களுக்குச் சித்தவிகாரம் ஏற்படுவதோடு நியாயமாகப் பால் தேவைப்படுகிறவர்களுக்கு அதை இல்லாமல் செய்வது ஜீவ ஹிம்ஸையுமாகிறது. காபியை நிறுத்தவிட்டு அந்தப் பாலை ஏழைக் குழந்தைகளுக்கோ, பலஹீனமருக்கோ விநியோகம் பண்ணுவதென்று வைத்துக் கொண்டால் பெரிய புண்யமாகும்.

10.18-தாம்பூல தாரணம்

எப்போது பார்த்தாலும் குடிக்கணும், 'ஊதணும்' என்று இருப்பதுபோல வெற்றிலை போட்டுக் கொள்வதும் ஒரு 'ஹாபிட்' ஆகி, அதற்கு அநேகம் பேர் 'அடிக்ட்' ஆகிறார்கள். இதனால் நாக்குத் தடித்து, பசி மந்தித்துப் போய்விடுகிறது. இப்படி விடக்கூடாது. பார்க்கவே பிடிக்காமல், வாய் நிறைய வெற்றிலைச் சாற்றை வைத்துக் கொண்டு பேசுவது, நம் மேலே அது தெறிப்பது, தங்கள் மேலேயே ஒழுகுவது என்றெல்லாம் பண்ணுவது கௌரவமும் இல்லை; ஆசாரமும் இல்லை. பொடியும் இப்படித்தான். போகிற

இடமெல்லாம் [வெற்றிலை] துப்புவதும், [பொடி] சிந்துவதும் ஸிவிக் ஸென்ஸுக்கே [நாகரிகக் குடிமை உணர்வுக்கே] விரோதம்.

கிருஹஸ்தர்கள், முக்யமாக ஸுமங்கலிகள் அளவாக வெற்றிலை போட்டுக் கொள்வதில் தப்பேயில்லை. தாம்பூலம் கொடுத்து உபசரிப்பதே மங்களம் என்று இருக்கிறது. பூஜையிலும் தாம்பூலம் அர்ப்பணம் பண்ண வேண்டும். அது ஸௌபாக்ய சின்னம்; அதோடு ஜீர்ணகாரி, ரத்த சுத்தி. சுண்ணாம்பில் கால்ஷிய ஸத்து இருக்கிறது. இத்தனையிருந்தாலும் அது ஸாத்விகம் இல்லை. அதனால்தான் பிரம்மச்சாரி, ஸந்நியாஸி இருவருக்கும் அது கூடாது என்று வைத்திருக்கிறது. லோக வியவஹாரங்களைக் கவனிக்க வேண்டிய க்ருஹஸ்தர்களுக்கு ராஜஸ குணமும் இருக்கலாமென்றே தாம்பூல தாரணம் அநுமதித்திருக்கிறது. அதற்காக ராஜஸ குணம் மட்டுமே இருக்கும்படியாக ஓயாமல் தாம்பூல சர்வணம் பண்ணக்கூடாது. நல்ல பதார்த்தம், கெட்ட பதார்த்தம் எதுவானாலும் ஓயாமல் தின்னும் பழக்கமாகப் பண்ணிக் கொள்ளக்கூடாது. நம்மை நம் கன்ட்ரோலில் இல்லாமல் பண்ணித் தன் வசப்படுத்திக் கொள்வதாக எந்தப் பதார்த்தத்தையும் விட்டு விடக்கூடாது.

ஸாத்விக ஆஹாரத்தைச் சேர்ந்த தித்திப்புப் பதார்த்தங்கள், நெய் முதலானவை தாமாகவே ஓரளவுக்கு மேல் தின்ன முடியாமல் திகட்டிப் போய்விடுவதாலேயே நமக்கு நன்மை செய்கின்றன!

10.19-சாந்த லக்ஷ்யம் கெடலாகாது

பதார்த்த சுத்தியின் முக்யம் தெரிவதற்காக நிறையச் சொல்லிக்கொண்டு போனேன். மரக்கறி உணவின் விசேஷம் அது நமக்கு ஸத்வகுணம் அபிவிருத்தியாக உதவுவதோடு இன்னொரு ஜீவனுக்கு ஹிம்ஸை ஏற்படாமலும் செய்கிறது. லோகத்தில் இந்த லக்ஷ்யம் பரவப் பரவக் கொலை குறையும். சாந்த குணம் விருத்தியாகும். கொலைக் கேஸ்கள் வருகின்றனவே, இவற்றில் அபூர்வமாக எவனோ ஒருத்தன்தான் சாகபோஜனம் பண்ணுபவனாக இருப்பான்.

ஆக, லோகத்தில் சாந்தம் பரவ வேண்டுமென்றால் நாம் சாந்தர்களாக வேண்டும். இதற்கு நம் வாழ்க்கை முறைகள் நம்மை ஸத்வ குணமுள்ளவர்களாகப் பண்ண வேண்டும். சாப்பாட்டை வைத்துத்தான் ஜீவனம் என்றிருப்பதால் இப்படிப்பட்ட பழக்கங்களில் ஆஹார விஷயத்துக்கு ரொம்பவும் முக்கியத்வம் இருக்கிறது என்று புரிந்து கொண்டு பார்த்தால், உடம்பை மட்டுமின்றி உள்ளத்தையும் வளர்ப்பதாக உணவை அமைத்துக் கொள்ள நம் சாஸ்திரங்கள் போஜன விதிகளை ஏற்படுத்தித் தரும்போது அதிலே பிரயோஜனமாகும் பதார்த்தங்கள், அதோடு ஸம்பந்தப்பட்ட மநுஷ்யர்கள் என்ற இரண்டுக்கும் சொல்லி இருக்கும் லக்ஷணங்களின்படி, பதார்த்தம் இல்லாமல் மரக்கறி உணவாக இருக்க வேண்டுமென்று முடிவாகிறது. தங்களுடைய அஹிம்ஸா அநுஷ்டானத்தினாலேயே அநேக மஹான்கள் தாங்களிருக்கிற சுற்றுப்புறம் முழுதையும் அன்பு மயமாக்கியிருக்கிறார்கள்; அவர்களுடைய ஆச்ரமத்திலே பார்த்தால் 'பெண் சிங்கம் யானைகுட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கும்; கன்று குட்டிக்குப் புலி வழிகாட்டி அழைத்துக் கொண்டு போகும். எலிக் குஞ்சை பூனை ரக்ஷித்துக் கொண்டிருக்கும். பாம்புக்குட்டி மேலே வெயில் படாமல் மயில் தோகையை விரித்துக் குடை பிடித்துக் கொண்டிருக்கும்' என்றெல்லாம் காவ்ய, நாடகங்களில் படிக்கிறோம். இப்படிப் பிறத்தியாரின் பரஸ்பர விரோதத்தையும் போக்கடிக்கிற அளவுக்கு சாந்தத்தைப் பரப்பின பாரம்பர்யத்தை நாம் பாழாக்கி விடாமல் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமானால் மரக்கறி உணவில் நம் பற்றை வளர்த்துக் கொண்டால்தான் முடியும். மரக்கறி உணவிலுங்கூட காரம், புளிப்பு முதலியன ராஜஸம்தான்; பழையது போன்றவை தாமஸம். இப்படியே பூண்டு, வெங்காயம், முள்ளங்கி, முருங்கை போல் பல ஸத்வத்துக்கு விரோதமானவை.

10.20-அளவு முக்கியம்

பரம ஸாத்விக உணவானாலுங்கூட அளவு முக்கியம். ஒரு நாளைக்கு ஒரு சாப்பாடு, ஒரு பலகாரம் என்றிருப்பது நல்லது. இல்லாவிட்டால் இரண்டு சாப்பாடு, ஒரு டி்ஃபன் என்று இப்போது பெரும்பாலோர் வைத்துக்

கொண்டிருக்கிற மாதிரியே இருந்தாலும் ஒவ்வொரு வேளையும் மிதமாகச் சாப்பிட வேண்டும். வைத்ய சாஸ்திரம், தர்ம சாஸ்திரம் இரண்டின் பிரகாரமும் அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடணும்; கால் வயிற்றுக்குத் தீர்த்தம் குடிக்கணும்; மற்ற கால் வயிறு வாயுவுக்கு விட்டுவிடணும். தினசரி இரண்டு சாப்பாடு, ஒரு சிற்றுண்டி என்று வைத்துக் கொண்டாலும், சனிக்கிழமை, குருவாரம், ஸோமவாரம், (மாதா, பிதா இல்லாதவரானால்) அமாவாஸ்யை, இன்னம் அவரவர் குல தெய்வத்தைப் பொருத்து ஷஷ்டி, கிருத்திகை, சதுர்த்தி, பிரதோஷம் ஆகிய தினங்களில் ஒரு வேளை சாப்பாடு ஒரு வேளை பலகாரம் என்று வைத்துக் கொள்ள வேண்டும். ஞாயிற்றுக் கிழமையில் அஸ்தமனத்துக்கு அப்புறம் சாப்பிடக் கூடாது. அதனால் மத்யானம் சாப்பிட்டுவிட்டு, அஸ்தமனத்துக்கு முந்தியே பலஹாரம் பண்ணிவிட வேண்டும். பதினைந்து நாளுக்கு ஒருமுறை 'லங்கனம்', அதாவது முழுப் பட்டினி போடணும். அதுதான் ஏகாதசி உபவாஸம். அதைப் பற்றி அப்புறம் சொல்கிறேன்[1]. மற்ற நாட்களிலும் மித போஜனமே பண்ண வேண்டும்.

பசி என்கிறது ஒரு வியாதி மாதிரி. வியாதிக்கு மருந்து 'டோஸேஜ்' பிரகாரம்தானே சாப்பிடுவோம்? கொஞ்சங்கூட அதிகம் சாப்பிடமாட்டோமல்லவா? அதே மாதிரி பசி என்கிற வியாதிக்குச் சிகித்ஸையாக மருந்து மாதிரி உணவு உட்கொள்ள வேண்டும். இப்படித்தான் ஆசார்யாள் உபதேசம் பண்ணியிருக்கிறார்[2]. ***க்ஷுத் வ்யாதிச்ச சிகித்ஸ்யதாம்*** – அதாவது, பசி நோய்க்கு மருந்தே சாப்பாடு என்று ஆக்கிக்கொள்ளு. நாக்குக்காகத் தின்னாதே! ருசிருசியான அன்னமாகத் தேடாதே - ***ஸ்வாத்-வன்னம் ந து யாச்யதாம்***! விதி வசமாக எது கிடைக்கிறதோ அதிலே த்ருப்தியாயிரு- ***விதிவசாத் ப்ராப்தேந ஸந்துஷ்யதாம்*** என்று நல்வழி காட்டுகிறார்.

ருசிக்காகச் சாப்பிடும்போதுதான் அமித போஜனம் ஆகிறது. பசி என்று ஒன்றை வைத்து விட்டான்; அதைத் தீர்த்துத் தொலைத்துக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது என்பதற்காகவே சாப்பிடும்போது அளவு மீற மாட்டோம்.

அஜீர்ணம், மனஸுக்கு அசுத்தி இரண்டையும் வரவழைத்துக் கொள்ளாமலிருப்போம்.

---

1. "உபவாஸம்" என்ற உரை பார்க்க.

2. "ஸாதன பஞ்சகம்" என்றும் "ஸோபான பஞ்சகம்" என்றும் வழங்கும் உபதேசப் பாடலில்.

10.21-காலத்தைப் பொறுத்து நியமம்

பதார்த்த சுத்தியில் இன்னொரு விஷயம். காலத்தைப் பொருத்து ஸாத்விக பதார்த்தங்களில் சிலதையே சில காலங்களில் தள்ளச் சொல்லி விதித்திருக்கிறது. பால், தயிர் இரண்டும் ஸாத்விகம்தான். ஆனாலும் ராத்திரி வேளையில் தயிர் போட்டுக் கொள்ளக்கூடாது; மோராகப் பண்ணிச் சேர்த்துக் கொள்ளலாம். மத்யான்னத்தில் வெறும் பால் சாப்பிடக்கூடாது.

மற்ற நாட்களில், சேர்த்துக்கொள்ளும் அநேக பதார்த்தங்களை, கடலைப் பருப்பு, துவரம் பருப்பு, வெண்டைக்காய், பூசணிக்காய் போன்ற தப்பில்லாத வஸ்துக்களையே சிராத்த போஜனத்தில் தள்ளுபடியாக வைத்திருக்கிறது. அன்று பாகற்காயிலேயே நீளப் பாகல்தான் சேர்க்கலாமே தவிர மிதி பாகல் உதவாது.

இப்படியே சாதுர்மாஸ்யத்துக்கென்று சில போஜன நியமங்கள்.

10.22-சாதுர்மாஸ்யமும் அதில் போஜன விதியும்

சாதுர்மாஸ்யம் என்று நாலு மாஸங்கள். அந்த நாலு மாஸத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் 'ஸௌரமானம்', 'சாந்த்ரமானம்' என்ற இரண்டுவிதப் பஞ்சாங்கங்களைப் பற்றியும் சொல்ல வேண்டும். ஸூர்ய கதியைப் பொருத்தது, ஸௌரமான மாஸம். தமிழ் நாட்டில் அநுஷ்டிக்கப்படுவது

இதுதான். இதன்படி, ஸூர்யன் மேஷம், ரிஷபம் முதலான பன்னிரெண்டு ராசிகளில் என்றைக்கு பிரவேசிக்கிறானோ அன்றைக்கு சித்திரை, வைகாசி முதலான பன்னிரெண்டு மாஸங்கள் பிறக்கும். மறுபடியும் ஸூர்யன் மேஷப் பிரவேசம் பண்ணுவதே அடுத்த வருஷப் பிறப்பு. தேசத்தின் மற்ற பெரும்பாலான பகுதிகளில் சந்திரனின் கதியைப் பொருத்த 'சாந்த்ரமான' மாஸம் பின்பற்றபடுகிறது. அமாவாஸ்யை ஆனவுடன் வரும் பிரதமையிலிருந்து அடுத்த அமாவாஸ்யை வரையிலான காலம் ஒரு சாந்த்ரமான மாஸம். இதன்படி நம்முடைய (தமிழ்நாட்டினரின்) பங்குனி அமாவாஸ்யை ஆகி மறுநாள் பிரதமையன்று அவர்களுக்கு புதுவருஷத்தின் சித்திரை பிறந்துவிடும். 'யுகாதி' என்று அன்று தெலுங்கர், கன்னடஸ்தர் ஆகியோர் கொண்டாடுவார்கள். மலையாளத்தில் தமிழ் வழக்குத்தான். நம்முடையதான ஸூர்யனின் மேஷ ராசிப் பிரவேசத்தைத்தான் அவர்களும் 'விஷூ' என்று கொண்டாடுகிறார்கள். ஆனால் அந்த மாதத்துக்குச் சித்திரை என்று அவர்கள் பேர் சொல்லாமல் 'மேடம்' என்றே சொல்வார்கள். இப்படியே வைகாசியை 'எடவம்' (ரிஷபம்) , ஆனியை 'மிதுனம்' என்றெல்லாம் அந்தந்த ராசிப் பெயராலேயே சொல்வார்கள். நாம் சித்திரை, வைகாசி என்றெல்லாம் சொல்வது, நம்முடையது ஸௌரமான மாஸமானாலும் எதனாலோ பேர் மட்டும் சாந்திரமானக்காரர்களுடையதையே நாமும் எடுத்துக் கொண்டிருப்பதால்தான். அந்தப் பேர் – சித்திரை, வைகாசி முதலியன – அந்தந்த மாஸங்களில் பௌர்ணமியன்று சந்திரன் பெரும்பாலும் எந்த நக்ஷத்ரத்தில் உதிக்கிறதோ அதை வைத்தேயாகும்*. மலையாளத்தில்தான் சௌரமானத்திற்கு ஏற்க, ஒவ்வொரு மாஸமும் ஸூர்யன் எந்த ராசியில் ப்ரவேசிக்கிறானோ, அந்தப் பெயரையே மாஸப் பெயராக வைத்திருக்கிறது. ஆனால் அங்கே மேடம் (நம்முடைய சித்திரை) வருஷப் பிறப்பு இல்லை. 'சிங்கம்' என்கிற (நம் ஆவணி) மாஸம்தான் வருஷப் பிறப்பு.

நமக்குச் சித்திரை அமாவாஸ்யை ஆனவுடனேயே சாந்திரமானப்படி வைகாசி பிறந்துவிடும். இப்படியே நம் ஒவ்வொரு அமாவாஸ்யையும் ஆனவுடன் வரும் பிரதமையில் சாந்திரமானத்தின் அடுத்த மாஸம் பிறந்துவிடும். அந்தக் கணக்கின்படி ஒரு வளர்பிறையும், ஒரு தேய்பிறையும் சேர்ந்தால் ஒரு

மாஸம். இது வாஸ்தவத்தில் முப்பது நாட்களுக்குக் கொஞ்சம் குறைச்சல். அதனால் சாந்திரமானப்படி பன்னிரண்டு மாஸமும் சேர்ந்து 360 நாள் வராது. ஆனால் நியாயமாக 3651/4 நாள் சேர்ந்ததுதானே ஒரு வருஷம்? — அதாவது பூமி ஸூர்யனைச் சுற்றி வருவதற்கான காலம்? இந்த வித்யாஸத்தை ஸரிகட்டுவதற்காக மூன்று வருஷத்துக்கு ஒரு தரம் சாந்திரமானத்தில் 'மலமாஸம்' அல்லது 'அதிக மாஸம்' என்பதாக, பன்னிரண்டுடன் பதின்மூன்றாக இன்னொரு மாஸத்தைச் சேர்த்துக் கொள்வார்கள். அதில் சுப கார்யம் பண்ண மாட்டார்கள்.

'சாதுர்மாஸ்ய'த்தைப் பற்றிச் சொல்வதற்காக இந்த [ஸௌரமான, சாந்த்ரமான]ப் பேச்சு வந்தது. நம்முடைய ஆனி அமாவாஸ்யை ஆனவுடன் சாந்திரமானப்படியான ஆஷாட மாஸம் (ஆடி மாஸம்) பிறந்துவிடுகிறது. இந்த ஆஷாட மாஸ சுக்ல பக்ஷ ஏகாதசியன்று க்ஷீராப்திநாதனான பகவான் தூங்க ஆரம்பிக்கிறார். அதைத் தொடர்ந்து வருகிற ச்ராவண (ஆவணி) , பாத்ரபத (புரட்டாசி) , ஆச்வின (ஐப்பசி) மாஸங்களிலும் தூங்கியபடியே இருந்துவிட்டு, கார்த்திகை சுக்லபக்ஷ ஏகாதசியன்று விழித்துக் கொள்கிறார். ஆஷாட ஏகாதசியிலிருந்து கார்த்திக ஏகாதசி வரையிலான இந்த 'பீரியட்டி'ல் அடங்குகிற நாலு மாஸ காலத்துக்கே சாதுர்மாஸ்யம் என்று பெயர். (ஆஷாட பௌர்ணமாஸ்யைக்குத்தான் வியாஸ பூர்ணிமை என்றும் குரு பூர்ணிமை என்றும் பெயர். பொதுவாக, இந்த வியாஸ பூர்ணிமையிலிருந்தான் சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பிப்பதாக அபிப்ராயமிருக்கிறது. ஸரியாகச் சொன்னால் பூர்ணிமைக்கு முந்திவரும் த்வாதசியன்றே அது ஆரம்பித்து விடுகிறது.)

இந்த சாதுர்மாஸ்ய காலத்தில்தான் அநேகமாக முக்யமான பண்டிகைகள் எல்லாம் வருகின்றன. கோகுலாஷ்டமி, பிள்ளையார் சதுர்த்தி, நவராத்ரி, தீபாவளி, மஹாஷஷ்டி, கார்த்திகை எல்லாம் இந்த 'பீரியட்'டில் வருபவைதான். ஆனாலும் தக்ஷிணாயனத்தைச் சேர்ந்த இந்த நாலு மாஸத்தில் கல்யாணம், உபநயனம், கும்பாபிஷேகம் முதலான சுபகார்யங்களைப் பண்ணினால் பலனில்லை. எல்லா ஜனங்களுக்குமான பண்டிகைகள் சாதுர்மாஸ்யத்தில் வந்தாலும் தனி மநுஷ்யர்கள் அல்லது

ஆலயம் போலக் குறிப்பிட்ட ஒரு இடம் ஆகியவற்றுக்கான விழாக்களுக்கு இந்தக் காலம் ஏற்றதில்லை. இக்காலத்தில் அவரவர்களும் நியமமாகப் பூஜை முதலானவற்றைச் செய்து கொண்டு சாதுர்மாஸ்ய வ்ரதம் அநுஷ்டிக்க வேண்டும். இதிலே ஆஹார நியமம் முக்கியம்.

மற்ற காலங்களில் சுத்தமானதாக ஒத்துக் கொள்ளப்படும் ஆஹார பதார்த்தங்களிலும் இந்த நாலு மாஸங்களில் ஒவ்வொரு மாஸமும் ஒவ்வொரு வகையானது தள்ளப்பட்டிருக்கிறது. இதை ஆஷாட த்வாதசியிலிருந்து கார்த்திகை த்வாதசி வரையிலான நாலு மாஸமாக வைத்துக் கொள்வது ஒரு வழக்கம். இன்னொரு வழக்கப்படி ஆஷாடத்தை அடுத்து வரும் ச்ராவண மாஸத்தில் ஆரம்பித்து கார்த்திகை முடிய இருக்கும் நாலு மாஸத்தில் அநுஷ்டிப்பதாக இருக்கிறது. ச்ராவண மாஸம் பூராவும் காய்கறிகளே சாப்பிடக்கூடாது. குழம்பில்கூடத் 'தான்' (காய்கறி) போடக்கூடாது. அப்பளாம், வடாம், சுண்டல் மாதிரியானவற்றைத் 'தொட்டுக்கொண்டே' அந்த மாஸத்தைத் தள்ள வேண்டும். குழம்பேகூட புளியும் காய், மிளகாயும் காய் என்பதால் அவை இல்லாமல் மோரையும் இஞ்சியையும் போட்டே செய்ய வேண்டும். பாத்ரபத மாஸம் பூராவும் தயிரும் மோரும் சேர்த்துக் கொள்ளக்கூடாது. ஆச்வின மாஸம் முழுதும் பால் தள்ளுபடி. கார்த்திகை மாஸத்தில் நெய்யும், உளுந்து, துவரை, கடலை முதலான எந்தப் பருப்பு தினுஸும் சாப்பிடக் கூடாது. சாதம் அல்லது சப்பாத்தியுடன் வெறுமனே கறிகாய்களை மட்டும் வேக வைத்துச் சாப்பிடலாம்.

மாத்வர்கள்தான் தற்போது ஓரளவு இந்த சாதுர்மாஸ்ய ஆஹார நியமத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தினப்படி அகத்துச் சமையல் இதன்படி செய்யாவிட்டாலும் சாதுர்மாஸ்யத்தில் சிராத்தம் வந்தால் அந்த சிராத்த போஜனத்தில் அவர்கள் சாதுர்மாஸ்ய நியாயப்படி தள்ள வேண்டியதைத் தள்ளிவிடுகிறார்கள். மற்றவர்கள் எதையும் கவனிப்பதில்லை. ஆசார ஸம்பிரதாயத்தில் வந்துள்ள ஸந்நியாஸிகள் மட்டும் நியமத்தை அநுஸரிக்கிறோம். ஆனால் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதும் வர வர சாஸ்த்ரப் பிரகாரம் இல்லாமல் எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது.

* "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் "சிக்ஷா: வேதத்தின் மூக்கு" என்று உரையில் 'மாதப் பெயர்கள்' என்ற உட்பிரிவு பார்க்க

10.23-உப்பை விலக்குவது

எதெது அவசியம் என்று இருக்கின்றனவோ அவற்றையே ஒவ்வொரு ஸமயத்தில் தள்ள வேண்டியதாயிருக்கிறது. க்ருஹஸ்தன் பண்ணியே தீரவேண்டுமென்றிருக்கிற அத்தனை வைதிக கர்மாக்களையுமே ஒரு காலத்தில் தள்ளி விட்டு ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளச் சொல்லியிருக்கிறது! ஜீவிப்பதற்கு அவசியமான ஆஹாரத்தை மந்த்ரபூர்வமாக புஜிப்பதற்கு வழி சொன்ன சாஸ்திரங்களே ஆஹாரத்தைத் தள்ளிவிட்டு உபவாஸமிருக்க வேண்டிய காலங்களையும் சொல்கிறது. முழுக்க ஆஹாரத்தைத் தள்ளாவிட்டாலும் அதில் இன்னின்ன காலத்தில் இன்னின்ன பதார்த்தங்களைத் தள்ள வேண்டுமென்று அநேக விதிகளைச் சொல்லுகிறது. அதில் சில சொன்னேன். இதில் 'அலவணம்' என்று ஒன்று. சாப்பாட்டில் உப்புச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதே அலவணம். "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு, சில காலத்தில் உப்பு கூடாது என்றும் வைத்திருக்கிறது. உணர்ச்சி வேகத்துக்கு உப்பு காரணம். "மானம், ரோஷம் இல்லே? நீ உப்புப் போட்டுண்டு தின்றதில்லே?"என்று கேட்கிறோமல்லவா? ரொம்பவும் ஆத்ம மார்க்கத்தில் போகும்போது இந்த மானம், ரோஷம், மற்ற உணர்ச்சி வேகமெல்லாம் போகத்தான் வேண்டும். அதனால் ஸந்நியாஸி முதலியவர்கள் அலவணமாகச் சாப்பிட வேண்டும். டாக்டர்கள் ஒரு காரணத்துக்காக உப்பு கூடாது என்றால், சாஸ்த்ரமும் ஒரு காரணதுக்காக தள்ளுகிறது. 'வருண ஜபம்' முதலான வேத மந்த்ர ஜபங்களின்போது ஜபிக்கிறவர்கள் உப்புச் சேர்த்துக் கொண்டால் நிச்சயமாகப் பலன் கிடைக்காமலிருப்பதையும், அதுவே அவர்கள் அலவணமாய் இருந்தால் மழை பெய்கிறதையும் இந்தக் காலத்திலும் நிதர்சணமாகப் பார்க்கலாம்.

முருகன் சம்பந்தப்பட்ட செவ்வாய்க்கிழமை, ஷஷ்டி, கிருத்திகை முதலானவற்றில் குறிப்பாக அலவண நியமம் அநுஷ்டிக்கப்படுகிறது.

பதார்த்த சுத்தியில் ஜெனரலாக இருப்பதைத் தவிர குறிப்பிட்ட காலங்களில் மட்டும் குறிப்பிட்ட பதார்த்தங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு இதெல்லாம் திருஷ்டாந்தம்.

10.24-தம் உணவைத் தானே செய்வது

ஆஹாரத்தோடு ஸம்பந்த்ப்படுபவர்களின் சுத்தத்தைப் பற்றியும் சொன்னேன். ஸம்பந்தப்பட்ட வியவஸாயி, வியாபாரி ஆகியவர்களின் பரிசுத்தத்தை நாம் கவனிக்க முடியாவிட்டாலும், பண்ணிப் போடுபவர்களின் தன்மையை அவசியம் கவனிக்க வேண்டுமென்றேன். இதனால்தான் ஹோட்டல் கூடாது, ஹாஸ்டல் கூடாது என்கிறேன். அகத்திலுங்கூட தாயாரோ ஸம்ஸாரமோ பண்ணிப் பரிமாறினால் தோஷமில்லை என்று வழக்கமிருந்தாலும், நமக்கு நல்ல ஆத்மாபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் சாப்பிடுகிற ஆஹாரம் நன்றாக தெய்வ ஸம்பந்தமுள்ளதாக யிருக்கவேண்டுமாதலால், மற்றவர்கள் எவரும் அப்படி தெய்வ நினைப்போடுதான் சமைத்துப் போடுவர்கள் என்று நிச்சயமாக வைத்துக்கொள்ள முடியாததை முன்னிட்டு, வேறே யாரையும் எதிர் பார்க்காமல் அவருவரும் தன் சாப்பாட்டைத் தானே தயாரித்துச் சாப்பிட வேண்டுமென்று முடிவாக உத்தரவு போடத்தான் இத்தனையும் சொன்னேன். ‘ஸ்வயம் பாகம்’ என்பதாக இதை விசேஷித்துச் சொல்லியிருக்கிறது. இந்த ஸ்வயம்பாகத்தைத் தான் இப்போது முக்யமான topic ஆக எடுத்துக் கொள்ளப் போகிறேன்.

10.25-ஸ்வயம்பாகம்: புதுப்பாட்டு

‘ஸ்வயம்பாகம்’ என்றால் தானே சமைத்துக் கொள்வது என்று அர்த்தம். பாகம் என்றால் சமையல், Paakam என்று உச்சரிக்க வேண்டும்; bhaagam இல்லை.

ஸ்வயம்பாகத்தை விஷயமாக எடுத்துக் கொண்டதில் நான் வழக்கமாகப் பாடும் பாட்டுக்கு வித்யாஸமாகப் பாடப் போகிறேன். வழக்கமான பாட்டு பொம்மனாட்டிகள் காலேஜ், ஆபீ்ஃஸ் என்று போகாமல் அகத்திலேயே இருந்து சமைத்துப் போட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பது. இப்போது பாடப்போகிற புதுப் பாட்டு, புருஷர்களும் சமைக்கக் கற்றுக்கொண்டு, எல்லாருமே 'ஸ்வயம்பாகி'களாக வேண்டுமென்பது.

10.26-அன்ன ரஸத்தில் திவ்ய ரஸம்

ஸ்வயம்பாகத்தை நான் சொல்கிறதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. நாமே சமைத்துக் கொள்ளும்போதுதான் சமைகத்கிற நேரம் பூராவும் நாம் தெய்வ ஸம்பந்தமாகவே நாமாவைச் சொல்வது அல்லது ஸ்தோத்திரமோ ஸூக்தமோ சொல்வது என்று வைத்துக் கொண்டு, பதார்த்தத்தினால் ஸாத்விகமாக உள்ள ஒரு ஆஹாரம் அதோடு ஸம்பந்தப்படும் மநுஷ்யாளின் தப்பான எண்ணத்தால் கெட்டுப்போகாமல், மேலும் ஸாத்விகமாக ஆகும்படிச் செய்து கொள்ள முடியும்.

அடுப்பிலே உலை வைத்துவிட்டு அன்னம் பக்வமாகிறவரை அதன் பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டுதான் இப்படி நாமாவோ ச்லோகமோ சொல்லிக் கொண்டிருக்கணும் என்பதில்லை! அரிசியைக் களைந்து போட்டுவிட்டு நாம் பாட்டுக்கு ஜபமோ பாராயணமோ பண்ணிக் கொணடிருக்கலாம். இந்த ரஸம் தானே அன்னரஸத்தில் சேரும். அப்புறம் கால்மணியோ, அரைமணியோ எப்போது அது பக்குவமாகுமோ அப்போது போய் இறக்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் 'வெந்திருக்குமோ, வெந்திருக்குமோ?' என்று அதுவே ஜபமாக உட்கார்ந்திருக்கக் கூடாது! ஆரம்பத்தில் அந்த எண்ணம் வந்து கொண்டுதானிருந்தாலும், நாளாவட்டத்தில் தானாக ஒரு 'டயம் ஸென்ஸ்' உண்டாகி, அந்த நினைவு இல்லாமல் கால்மணியோ அரைமணியோ ஜபத்திலேயே கான்ஸென்ட்ரேஷனோடு இருக்க முடியும்.

பதார்த்த சுத்தியும், சமைக்கும்போது பகவத் ஸ்மரணத்தால் உண்டான சுத்தியும் சேர்ந்த ஆஹாரத்தை அப்புறம் பகவானுக்கு நைவேத்யம் பண்ணி இன்னம் சுத்தமானதாக ஆக்க வேண்டும். கடைசியில், சாப்பிடும் போது ***"கோவிந்த, கோவிந்த"*** என்று சொல்லிக்கொண்டே சாப்பிடணும். ***"மௌனேன போக்தவ்யம்"***- பேசாமலே சாப்பிட வேண்டும் என்பது விதி. 'பேசாமல்' என்றால் 'அதைப்போடு இதைப்போடு' என்காமல், எது இலையில் விழுகிறதோ அதைச் சாப்பிட வேண்டுமென்று அர்த்தம். மனஸுக்குள் கோவிந்த நாமோச்சாரணத்துடன் இப்படி போஜனம் பண்ண வேண்டும். கோவிந்த ரஸமாக உள்ளே போகிற அன்னத்தை, அங்கே ஜாடராக்னியாக இருக்கும் அவனே ஜீர்ணித்து தேஹ புஷ்டியோடு சித்த சுத்தியும் அருள்வான். கீதையில் [15.14] இப்படித்தான் சொல்லியிருக்கிறான்.

அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹ-மாச்ரித: |
ப்ராணாபாந-ஸமாயுக்த: பசாம்-யந்நம் சதுர்விதம் ||

ஆஹாரம் நாலு விதமானது ('அன்னம் சதுர்விதம்') . சாதம்போல மென்று சாப்பிடுவது 'காத்யம்'. 'கறுக் முறுக்'கென்று வறுவல் மாதிரிச் சாப்பிடுவது 'சோஷ்யம்'. அப்படியே பஞ்சாமிர்தம்போல, பல்லால் கடிக்க அவச்யமில்லாமல் விழுங்குவது 'லேஹ்யம்'. குடிக்கிறது 'பேயம்'. இந்த நாலையும் வயிற்றிலே உள்ள வைச்வாநர அக்னிதான் ஜீர்ணம் பண்ணுகிறது. ஐந்து பிராணன்களைக் கொண்டு ஜீர்ணித்த ஆஹாரத்தை வைச்வாநர சக்தியானது தேஹம் பூராவுக்கும் அனுப்புகிறது. அந்த ஐந்தில் பொதுவான ச்வாஸமான 'ப்ராண'னையும் கீழே நோக்கிப் போகிற வாயுவான 'அபான'னையும் இங்கே 'ப்ராணாபான' என்கிறார். "இப்படிப் பிராணிகளின் தேஹத்தில் வைச்வாநரனாக இருப்பது நான்தாண்டா!" என்கிறார்.

ப்ராணாஹுதி என்று வேத மந்திர அதிகாரமுள்ள எல்லோரும் சாப்பிடுவதற்கு முந்தி, அன்னத்தைச் சுற்றியும் அதன் மேலேயும் தீர்த்தத்தைத் தெளித்து, வ்யாஹ்ருதிகளாலும் காயத்ரீயாலும் அதைச் சுத்தி செய்த பிறகு, இந்தப் பஞ்சப் பிராணன்களுக்குத் தான் ஆஹுதி பண்ணுகிறார்கள். வெளியிலே அக்னி மூட்டி ஹவிஸ்ஸை ஆஹுதி கொடுப்பது மாதிரி சாப்பிடுவதையும்

உள்ளேயிருக்கிற அக்னிக்கு ஒரு குட்டி யஜ்ஞமாகவே வேதம் கொடுத்திருக்கிறது.

நமக்கு உள்ளேயிருக்கிற ஈஸ்வர சக்திதான் இந்த வேளை இந்த ஆஹாரம் நமக்கு லபிக்கும்படியாக அநுக்ரஹம் பண்ணியிருக்கிறது என்ற நினைப்போடு, இது நம் உடம்பில் ஒட்டும்படியாகவும் சித்தத்தை சுத்தம் பண்ணும்படியாகவும் அதுதான் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கணும் என்பதே தாத்பர்யம்.

நைவேத்யமானது ஈஸ்வரனுக்கு ; அந்த அன்னமும் ஈஸ்வரன்தான்; அது விழும் அக்னியும் அவனே; இந்த ஆஹுதி பண்ணுகிறானே, அதாவது சாப்பிடுகிறானே, இவனும் ஈஸ்வரன்தான்; இதனால் அடைகிற லக்ஷ்யமும் அவனேதான் – '***ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவிர் ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம்' ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம்**** 'என்று சாப்பாட்டு விஷயத்தைப் பூரா பூரா திவ்ய ரஸத்தில் கரைத்துவிட வேண்டும்.

தானே சமைத்துக் கொள்வது என்கிறபோது வேலையைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்குமாதலால் பல தினுஸு வ்யஞ்ஜனங்களைப் பண்ணிக் கொள்ளத் தோன்றாது. அதாவது நாக்கு ருசிக்காக அமித போஜனம் பண்ணிச் சித்தசுத்தியைக் கெடுத்துக் கொள்ளாமலிருப்போம்.

பகவத் ஸம்பந்தப்படுத்தி நாமாவோடு சமைப்பது, நிவேதனம் பண்ணுவது என்கிறபோது மாம்ஸாதிகளையும், மற்ற ராஜஸ தாமஸ ஆஹாராதிகளையும் பண்ணவே தோன்றாது. அதாவது தன்னால் வெஜிடேரியனிஸமும் இதில் வந்துவிடும். அந்நிய பதார்த்தங்கள் பக்குவமாவதற்கு நிறைய 'டயம்' பிடிக்குமாதலாலும், தானே சமைத்துக் கொள்கிறவனுக்கு அது வேண்டாமென்று தோன்றிவிடும். தர்ம சாஸ்திரத்தில் அஹிம்ஸை சொல்லியிருக்கிறது, யோக சாஸ்திரத்திலும் அதையே சொல்லியிருக்கிறது என்பதற்காகவெல்லாங்கூட அதைப் பின்பற்ற முடியாவிட்டாலும், 'தனக்கு டயம் ஸேவ் ஆகிறதே, வேலை ஸேவ் ஆகிறதே' என்பதனாலேயே ஸ்வயம்பாக நியமத்தில் வெஜிடேரியனியஸம் அநுஷ்டானத்துக்கு வந்துவிடும்! எப்படி வந்தாலென்ன? அப்புறம் இதவே

தர்மசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற புண்ணியத்தையும், யோக சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற சித்த சுத்தியையும் கொடுத்துவிடும்.

ஆஹார தினுஸுகள் [ஸ்வயம்பாகத்தில்] குறைந்து விடுகின்றன என்பதாலேயே செலவும் குறைந்து விடும். அதாவது எகானமிக்கு எகானமி.

இன்னொன்று : இன்னொருத்தர் சமைத்துப் போடுகிறபோது, நாக்கைத் தீட்டி வைத்துக்கொண்டு, 'இது உப்பு, அது உறைப்பு' என்று நோணாவட்டம் சொல்லத் தோன்றுகிறது. இதில் நமக்கும் அதிருப்தி; பண்ணினவர்களுக்கும் மனக்கிலேசம். நாமே செய்து கொண்டால் அந்தச் சமையல் எப்படி இருந்தாலும் தேவாம்ருதமாகத் தோன்றும். சாப்பிடுகிற வேளையில் 'எரி பிரி' என்றில்லாமல் ஸந்தோஷமாக, திருப்தியாக இருக்கும். ஆஹாரம் இதனாலேயே உடம்பில் ஒட்டி சித்தத்திலும் நல்லதைப் பண்ணும்.

பிறத்தியாருடைய மனோபாவம், 'பெர்ஸனல் மாக்னடிஸம்', 'ஆரா' என்றெல்லாம் பாரா-ஸைகாலஜிக்காரர்களும் சொல்கிற சக்தி சாப்பாட்டின் வழியாகப் பாய்ந்து ஒருத்தனுடைய 'ஆரா'வை பாதிக்காமல் அவனவனும் தன் கையாலேயே பொங்கிப் போட்டுக் கொண்டு தன் உள்பான்மையைக் காப்பாற்றிக் கொள்ள ஸ்வயம்பாகமே உதவி செய்கிறது.

இப்படி பல விதத்தில் நன்மை ஏற்படுகிறது.

'மேல்ஜாதி - கீழ்ஜாதி; என்ன ஜாதியார் யார் சமைத்ததைச் சாப்பிடலாம், சாப்பிடக்கூடாது' என்கிற பேச்சுக்கும் இடமில்லாமல் ஆகிவிடும். எந்த ஜாதிக்காரனானாலும் அவனுவனும் தன் கையாலேயே பொங்கிப் போட்டுக் கொள்வது; சொந்த மநுஷ்யாள், பத்தினியோ மாதாவோ சமைத்தால்கூட சாப்பிடுவதில்லை என்று நியமம் வைத்துக்கொண்டு விட்ட பின் மற்றவர்களில் யார் பண்ணிப் போட்டால் சாப்பிடலாம் அல்லது சாப்பிடக்கூடாது என்ற கேள்விக்கே இடமில்லையோல்லியோ?

---

* கீதை 4.24. இச் சுலோகத்தில் ஸ்ரீபெரியவர்கள் கூறாமல் விட்ட கடைசிப் பாதம் "ப்ரஹ்ம கர்ம ஸமாதிநா" என்பதாகும்

10.27-உடன் உண்பவர்கள்

இதைப்பற்றிச் சொல்லும்போது ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனென்று ஞாபகம் வருகிறது. ஆஹாரத்தோடு ஸம்பந்தப்பட்டவர் களைப்பற்றிச் சொல்லும்போது அதைச் சமைத்தவர்கள், பரிமாறுகிறவர்கள் ஆகிய இரண்டு பேரோடு கூட, கூடச் சாப்பிடுகிறவர்களையும் சொல்லியிருக்க வேண்டும்.

போஜனம் பண்ணும்போது நம்மோடு சாப்பிடுகிறவர்களுடைய குண தோஷங்களின் பரமாணுக்களும் நாம் சாப்பிடும் அன்னத்தில் ஓரளவுக்குச் சேர்கிறது. பரம சுத்தமாக இருக்கப்பட்டவர்களைப் பங்க்தி பாவனர்கள் என்று சொல்லியிருக்கிறது - அதாவது அவர்கள் உட்கார்ந்திருப்பதாலேயே அந்தப் பந்தி (பங்க்தி) யைச் சுத்தப்படுபடுத்தி விடுகிறார்களாம். அவர்களோடு நாம் போஜனம் பண்ணினால் அந்த ஆஹாரம் உள்ளே போய் நம் மனஸைத் தூயதாக்கும். இதே மாதிரி 'பங்க்தி தூஷக'ர்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறது. ரொம்பவும் தோஷமுள்ள இவர்கள் உட்கார்ந்திருப்பதாலேயே பந்தி முழுதும் அசுத்தி ஆகிவிடுகிறதாம்.

இது மட்டுமில்லை. சைவ போஜனமே பண்ண வேண்டிய ஜாதிக்காரன் அசைவ போஜனம் அநுமதிக்கப்பட்ட ஜாதியாருடன் சேர்ந்து சாப்பிட்டால் என்ன ஆகும்? அந்நிய பதார்த்தத்தில் இவனுக்கு ஒரு ஆசை உண்டானாலும் உண்டாகக் கூடுமல்லவா? நியமம் தப்ப இடமுண்டாகிவிடும் அல்லவா? 'ஸம பங்க்தி'யினால் ஸமத்வம் கொண்டு வருவதாகச் சொல்லிக்கொண்டு, கிழங்கையும், பழத்தையும் தின்றுகொண்டு கிடக்க வேண்டிய ஒரு ஸந்நியாசியை, முள்ளங்கி வெங்காய வாஸனை சபலப்படுத்துகிற பொதுப் பங்க்தியில் கொண்டு உட்கார்த்தி வைத்தால் அவனுடைய பெரிய லக்ஷ்யத்துக்கே அல்லவா ஹானி வந்துவிடும்? இம்மாதிரி ஒரு ஜாதிக்காரன், அல்லது ஆச்ரமக்காரனின் தர்மம் கெட்டுப் போவதால் பாதிக்கப்படுவது அவன் மட்டுமில்லை; இதனால் அவன் செய்கிற கார்யம் கெட்டு அவனால்

ஸமூஹத்துக்கு கிடைக்கிற நன்மையே போய்விடுகிறது என்பதைச் சீர்திருத்தக்காரர்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

ஸம பங்க்தி, ஹாஸ்டல்களின் காமன் மெஸ், கான்டீனில் ஒரே சமையற்கட்டிலேயே சைவ பதார்த்தம், அசைவ பதார்த்தம் இரண்டையும் சமைத்து அந்தப் பரமாணுக்கள் கலப்பது என்றெல்லாம் பண்ணியிருப்பது எல்லாரையும் பக்குவ ஸ்திதியில் ஒரேபோல் இறக்குகிற ஸமத்வத்தை சாதித்திருக்கிற அநேக சீர்திருத்தங்களில் ஒன்றாகத்தான் ஆகும்!

கேட்டால் இப்படியெல்லாம் சீர்திருத்தம் பண்ணினால்தான் ஒற்றுமை உண்டாகுமென்கிறார்கள். எனக்குச் சிரிப்புதான் வருகிறது - எல்லாரையும் சேர உட்கார வைத்து, நியமமில்லாத ஆஹாரதிகளைப் போட்டுவிட்டால், ஒற்றுமை உண்டாகிவிடும் என்பதைக் கேட்க! உலகத்தின் எல்லா தேசங்களையும் யுத்தத்தில் இழுத்துவிட்டு ஜன ஸமுதாயத்துக்கே பெரிய சேதம் விளைவித்த World War -க்குக் காரணமாயிருந்த ராஜாங்கங்களெல்லாம் யுத்தப் பிரகடனம் செய்வதற்கு முதல் நாள் வரையில் பரஸ்பரம் விருந்து கொடுத்துக் கொண்டு, இவருக்கு அவர் ‘டோஸ்ட்’, அவருக்கு இவர் ‘டோஸ்ட்’ என்று சேர்ந்து சாப்பிட்டுவிட்டுத்தான் மறுநாளே ஒருத்தர் தேசத்தை இன்னொருத்தர் நாசம் பண்ண ஆரம்பித்தார்கள் - ராணுவம், ஸிவிலியன் பாபுலேஷன் என்ற வியவஸ்தை இல்லாமலே! அப்படியும் ‘ஒற்றுமை’ ஸஹபோஜனத்தால் வந்துவிடும் என்று உபதேசம் செய்கிறார்கள்! ஏதோ தாற்காலிகமாக ஏற்படக்கூடிய அல்ப திருப்திக்காகவே இப்போது நடக்கும் இந்த தேக் கச்சேரிகளும், சிற்றுண்டி விருந்துகளும், கலப்பு போஜனங்களும் பிரயோஜனப்படுகின்றனவே தவிர இதனால் ஒற்றுமையோ, ஸௌஜன்யமோ உண்டாகி விடவில்லை என்பது இந்தப் புதுப் பழக்கங்கள் நம் தேசத்தில் ஏற்பட்டு பல வருஷங்களாகி, இன்னமும் தினந்தினம் ஸமூஹச் சண்டைகள் ஜாஸ்தியாகிக் கொண்டு தானிருக்கின்றன என்பதிலிருந்தே தெரிகிறது. பட்டம் பெறுவது மாதிரி ஸ்வய லாபத்தை உத்தேசித்து ஒரு ஏமாற்று வித்தையாகத்தான் இந்த விருந்து உபசாரங்கள் நடக்கின்றன. இதோடு போனால் கூடப் பரவாயில்லை. இந்த நவ நாகரிக விருந்துகள் தர்ம

நூல்களிலிருந்தும் வெகுதூரம் எட்டிப் போய்க் கொண்டிருப்பதால் ஆத்மார்த்தமாகவும் பெரிய நஷ்டத்தை உண்டாக்குகின்றன.

சாச்வத ஒற்றுமைக்கு வழி, சேர்ந்து உண்டு காட்டுவதல்ல; சேர்ந்து தொண்டு காட்டுவதேயாகும். நான் பல ஸமயங்களில் சொன்னதுபோல ஜாதி என்கிற பேச்சுக்கே இடமில்லாமல், ஸகல ஜனங்களும் சேர்ந்து ஸகல ஜனங்களுக்குமான தொண்டுகளைச் செய்வதால் தான் ஒற்றுமை வளரும். இந்தப் பொது ஸேவை பரிசுத்தமாக நடக்க முடியாதபடி அதிலும் அரசியலைக் கொண்டுவந்து விட்டு விட்டு, ஆசார சாஸ்திரத்தைச் சேர்ந்த ஆஹாராதி விஷயங்களில் அரசியல் அபேத வாதங்களைக் கலந்து தர்மங்கள் கெடும்படிச் செய்து வருகிறார்கள்.

அவனவன் தானே சமைத்துக் கொள்வதோடு, சாப்பிடும்போதும் பிறரின் பரமாணு எதுவும் சேராமல் தனியாகவே சாப்பிடுவது ச்லாக்கியம். ஸ்வயம்பாகம் பண்ணிக் கொள்கிறவர்களே சாப்பிடும்போது ஒருத்தருக்கு மேல் சேர்ந்தால், 'நீ என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?' என்று ஒருத்தரையருத்தர் கேட்டுக் கொண்டு நாக்குச் சபலத்துக்கு இடங்கொடுக்க வேண்டிவரும். ஆகையால் தனித்தனியாய்ப் பண்ணிக்கொள்வதைத் தனித்தனியாகவே சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். ஸமத்வமும் ஸோஷலிஸமும் வேறு துறைகளினால் ஏற்பட்டால் போதும்.

பொதுச் சமையல், ஸமபந்தி என்று 'சீர்திருத்தம்' பண்ணியதால் பிராணி ஹிம்ஸைதான் ஜாஸ்தியாயிருக்கிறது. தலைமுறை தத்வமாக மரக்கறி உணவையே கடைப்பிடித்த பலர் நான்-வெஜிடேரியன்கள் ஆகியிருக்கிறார்களென்றால் அதற்கு இந்த 'சீர்திருத்தம்' தான் காரணம்.

பஹுகாலமாக நான்-வெஜிடேரியன்களாகவே இருந்து வருகிற தேசங்களிலும் அங்கங்கே ஏதோ பத்து இருபது பேர் கஷ்டப்பட்டு வெஜிடேரியன்ஸாக இருந்து கொண்டு வெஜிடேரியனிஸத்தைப் பிரசாரப்படுத்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புதிசாக எதை ஏற்படுத்த முயல்கிறார்களோ அது ஏற்கெனவே நம்மிலே எத்தனையோ கோடிப் பேருக்குப் பாரம்பர்யமாக வந்திருந்தும், நாம் இருக்கிறதையும் அழித்துவிட்டு, லோகத்துக்கே

வழிகாட்டியாகச் செய்கிற லாபத்தை நஷ்டப்படுத்தி, `சீர்திருத்தம்' செய்கிறோம்! மநுஷ்யர்களாகப் பிறந்தவர்கள் தங்களுடைய status (அந்தஸ்து) என்கிறதை அதற்கு ஸம்பந்தமேயில்லாமல் சாப்பாட்டில் கொண்டு வந்து அதற்காக ஏற்படுத்துகிற ஸமத்வத்துக்காகப் பசு பக்ஷிகளாகப் பிறந்த அநேக ஜந்துக்கள் உயிரையே இழக்கும்படிப் பண்ணி வருகிறார்கள். காந்தீயத்தில் இந்த ஸமத்வம், அந்த அஹிம்ஸை இரண்டுமே இருக்கின்றன என்கிறார்கள்!

தானே தன் சாப்பாட்டைத் தயாரித்துக் கொள்வதிலுள்ள அநேக நல்ல பலன்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அதிலே எதிர்பார்க்க முடியாத இன்னொரு பிரயோஜனத்தைச் சொல்கிறேன்.

10.28-வேத வித்தை வளரவும் வழி

வேத வித்யாப்யாஸமே ஸ்வயம்பாகத்தால் வளரும். இதற்கும் அதற்கும் என்ன ஸம்பந்தம் என்று தோன்றலாம். சொல்கிறேன்: வடக்கே நான் போயிருக்கும் போது பார்த்திருக்கிறேன். ஒரிஸ்ஸா, பெங்கால், யு.பி. முதலிய இடங்களில் நம்மூர் மாதிரி வேத பாடசாலை என்றில்லாவிட்டாலும் ஸம்ஸ்க்ருத பாடசாலை என்று இருக்கும். நம்மூரில், தமிழ்நாட்டில் மொத்தம் ஏதாவது முப்பது நாற்பது பாடசாலைகள் நல்ல 'ஸ்ட்ரெங்க்த்'தோடு இருக்குமா என்கிறதே ஸந்தேஹமாயிருக்க, அங்கேயெல்லாம் இப்படிப்பட்ட ஸம்ஸ்க்ருத பாட சாலைகள் நூற்றுக்கணக்கில் இருந்தன. பாடசாலை என்பதே அங்கே 'டோல்' என்பார்கள். இந்த விஷயத்தில் ரொம்ப backward - ஆக இருக்கும் என்று நாம் நினைக்கிற அஸ்ஸாமிலேயே சுமார் இருநூறு டோல் இருக்கிறதென்று கவர்னர்* இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால் நம் பாடசாலைகளுக்கு நிறைய மூலதனம் இருக்கிறாற்போலவும் வடக்கத்திப் பாடசாலைகளுக்குக் கிடையாது.

ஆசாரம், ஸம்பிரதாயம் என்பதிலெல்லாம் நாம்தான் ரொம்ப மேல் என்று நாம் நினைத்துக் கொண்டிருந்த போதிலும், நம் பக்கத்தில் நிறைய மூலதனமிருந்தும் வேதபாடசாலைகள் தினக்ரமேண க்ஷீணித்துப் போகிறதேன், வடக்கே இத்தனை 'டோல்'கள் இப்படி நல்ல 'ஸ்ட்ரெங்கத்'தோடு

இருப்பதேன் என்று எனக்கு ரொம்ப நாள் புரியாமலிருந்தது. அப்புறம்தான் அவர்களையே கேட்டதில் புரிந்தது.

"மூலதனம் இல்லை என்கிறீர்கள். இத்தனை மாணவர்கள் எப்படியிருக்கிறார்கள்?" என்று கேட்டேன்.

"மாணவர்கள் இருப்பதற்கு மூலதனம் என்னத்துக்கு?" என்று எதிர்கேள்வி கேட்டார்கள்.

"ஃப்ரீயாக சாப்பாடாவது போட்டால்தானே வித்யார்த்திகள் சேர்வார்கள்?" என்றேன்.

"ஆமாம், சாப்பாடு போடவேண்டியதுதான். அதற்கு மூலதனம் வைப்பானேன்? கிரானாக்கார பனியாவோ, மார்வாரியோ இருக்கிறான். (கிரானா என்றால் பலசரக்குக் கடை.) ஸம்ஸ்க்ருதம் படிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு பசங்கள் போய்க் கேட்டால் அவன் ஆட்டமாவும் மக்கனும் கொடுத்து விடுகிறான். (மக்கன் என்றால் வெண்ணெய்.) அந்தந்த மாணவனே அந்த மாவைப் பிசைந்து தவ்வாவிலே போட்டு சுட்டு ரொட்டி பண்ணித் தின்று கொள்கிறான். அவ்வளவுதானே? 'மக்கன்' கிடைக்காவிட்டால் கூடச் சரி. அப்படியே நெய்யுமில்லாமல் சுக்கான் ரொட்டியாக வாட்டித் தின்று விடுவது எங்களுக்குப் பழக்கந்தான். தவ்வா கூட வேண்டுமென்பதில்லை. ரொட்டி மாவுருண்டையையே கொஞ்சம் தட்டி அப்படியே சுள்ளியிலே போட்டுவிட்டால் அது உப்பிக்கொண்டு வெந்துவிடும். அதைத் எடுத்துத் தின்பதும் வழக்கம்தான். கொஞ்சம் ஜாஸ்தி வசதியிருந்தால் பருப்பை வேகவைத்து ஒரு டாலும் பண்ணிக்கொண்டு விடுவோம். எத்தனையோ கிரானாக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கடைக்காரனும் ஒரு பையனுக்கு மாவு முதலானது கொடுக்க யோசிப்பதில்லை" என்று ரொம்பவும் ஸிம்பிளாகச் சொல்லி விட்டார்கள்.

இங்கே நம்மூரிலானால் பாடசாலை வைக்கிறோம் என்றாலே உக்ராணம், வெங்கலப் பானை, வாணலி, அண்டா, குண்டான், அரிசி மூட்டை, புளிப்பானை, அப்புறம் அஞ்சறைப் பெட்டி இத்யாதி வேண்டியிருக்கின்றன. நிர்வாஹம்

பண்ண மணியக்காரன், காவலுக்கு ஆள் இதெல்லாம் வேறே. எத்தனைதான் மூலதனமிருந்தாலும் இப்போதிருக்கிற இன்ஃபளேஷனிலும் விலைவாசி நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருப்பதிலும், சாப்பாட்டுக் செலவுக்கே கட்ட மாட்டேனென்று ஆகிறது. அப்புறம்தானே வாத்தியார் சம்பளம், பசங்களுக்கு 'ஸ்டைபென்ட் இதெல்லாம்? இந்தக் காரணத்தால்தான் பாடசாலைகளையே மூட வேண்டியிருக்கிறது.

அவர்கள் சொன்னதிலிருந்துதான், 'ஓஹோ! தக்ஷிணத்தில் வேதவித்யை க்ஷீணித்துப் போகிறதற்கே நம்முடைய அஞ்சறைபெட்டிச் சமையல்தான் காரணமா? நாக்கு ருசிக்காகவா நம் மதத்தின் வேரான வேதத்தை அறுத்திருக்கிறோம்?' என்று தெரிந்தது.

இத்தனை தினுஸு, காரமும் புளிப்புமாகச் சாப்பிட்டாலே பிரம்மசாரியாக இருக்கவேண்டியவனுக்கு நல்லதில்லை. "நீயே சமைத்துச் சாப்பிட்டுக்கொள்" என்று விட்டுவிட்டால் அவன் இந்த 'அஞ்சறை பெட்டி ஆஃபீஸ்' நடத்தவே மாட்டான். படிக்கணும், அநுஷ்டானம் பண்ணணும் என்பதால் அவனாகவே வடக்கே செய்கிற மாதிரி ஏதோ ஒரு தினுஸு, இரண்டு தினுஸு லேசான ஆஹாரமாக, ஸத்வப் பிரதானமானதாக, பண்ணிச் சாப்பிட்டுவிட்டுத் திருப்தியாயிருந்து விடுவான். பாடசாலைக்குப் பெரிய மூலதனம் வேண்டாம் என்றால், வேத வித்யையும் தன்னால் இப்போதிருப்பதைவிட நன்றாக வளரும்.

---

*1958 எப்ரலில் அப்போது கவர்னராயிருந்த அஸ்ஸாமியரான ஸ்ரீ விஷ்ணுராம் மேதி ஸ்ரீ ஸ்ரீ பெரியவாளை தரிசித்து உரையாடினார் சொன்னார்.

10.29-பிக்ஷையும் ஸ்வயம்பாகமும்

ப்ரம்மசாரிகள் பிக்ஷாசர்யம் பண்ண வேண்டும் (பிக்ஷை எடுத்துச் சாப்பிட வேண்டும்) என்று நான் சொல்லி வருவதற்கு[1*] இது [மாணவன் ஸ்வயம்பாகம் செய்து சாப்பிட வேண்டுமென்பது] விரோதமாயிருக்கிறதே என்று

தோன்றலாம். வித்யாப்யாஸ காலம் பூராவும் ஒரு பையன் பிக்ஷை எடுத்துச் சாப்பிடுவான், சாப்பிட வேண்டும் என்று நான் இந்தக் கால நிலைமையில் எதிர் பார்க்கவுமில்லை, நிர்பந்திக்கவுமில்லை. அப்படி ஒருத்தன் பண்ணினால் அது எனக்கு ரொம்ப ஸந்தோஷந்தான். ஆனால் அபூர்வமாய் எவனோதான் அப்படிப் பண்ண முடியும். பொதுவில் எல்லா மாணவர்களும் ஒரு வருஷமாவது பிக்ஷாசர்யத்துடன் குருகுல வாஸம் பண்ண வேண்டுமென்பதுதான் நான் சொல்வது. மீதி வருஷங்களில் அவனும் ஸ்வயம்பாகம் பண்ணிக் கொள்வது என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

க்ருஹஸ்தனான பிராம்மணன் பிறத்தியாருக்கு போதனை பண்ணி அதற்குத் தக்ஷிணை வாங்கும்போது தான்யமாகவும் கறிகாயாகவும் பச்சையாக்த்தான் (raw-ஆகத்தான்) வாங்கலாமே தவிர, பக்வம் பண்ணினதாக [சமைத்ததாக] வாங்கக் கூடாது; ஆனால் ஸந்நியாஸிக்கும் பிரம்மசாரிக்கும் மாத்திரம் பக்வ அன்னமே பிக்ஷையாக வாங்க ரைட் இருக்கிறது - ***யதிச்ச ப்ரஹ்மசாரிச்ச பக்வான்ன ஸ்வாதீனௌ உபௌ*** - என்று விதி இருக்கிறது. இதனால் யதி [ஸந்நியாஸி] யைப் போலவே பிரம்மசாரியும் பிக்ஷை வாங்கித்தான் சாப்பிட்டாக வேண்டுமென்று ஒரே தீர்மானமாக வைத்துவிட்டதாக அர்த்தமில்லை. இவர்கள் இரண்டு பேருக்கும் பிக்ஷை எடுக்க வேண்டும் என்று வைத்ததற்குக் காரணம் வேறு வேறாகும். யதி எப்போதும் ஆத்ம விசாரம் பண்ண வேண்டியவனாதலாலும், உடைமையே அவனுக்குக் கூடாதாகையாலும் சமையற்கட்டைக் கட்டிக்கொண்டு அழ விடமால் அவனுக்குப் பிக்ஷா நியமம் வைத்தார்கள். குறிப்பாக எவரோ ஒருத்தர் இரண்டு பேர் அவனுக்கு ஆஹாரம் கொடுப்பது என்று வைத்துக் கொண்டால் அவர்களுக்கு இவன் obliged-ஆகிவிடுவான் [கட்டுப்பட்டு விடுவான்] என்பதால் அப்படிக் கூடாது என்று ஏதோ நாலு ஐந்து வீடாக இன்றைக்குப் போன இடத்துக்கு நாளைக்குப் போகாமல், ஸமூஹம் பூராவிலிருந்தும் பிக்ஷை வாங்கிச் சாப்பிட வேண்டுமென்று வைத்தார்கள். தனியாக எவருக்கும் இவனைப் பராமரிக்கிற பொறுப்புப் பளுவைத் தராமல், ஸமூஹம் முழுவதற்கும் அதைப் பகிர்ந்து தரும் உத்தேசமும் இதில் அடங்கியிருக்கிறது. அதோடு கூட இவனுக்கு அக்னி ஸம்பந்தமேயிருக்க கூடாது. [ஸந்நியாஸ]

ஆச்ரமம் வாங்கிக் கொண்டவுடனேயே அக்னி ஹோத்ரம், ஔபாஸனம் முதலான எல்லா அக்னி கார்யமும் நின்று விடுகின்றன. சமையல் செய்வதென்றால் அக்னியில்லாமல் முடியுமா? இவன் அடுப்பு மூட்டிச் சமைக்கும்போது ஏதோ பூச்சிப் பொட்டு விழுந்து செத்துப் போனால், இவனுடைய ஆச்ரமத்தின் பரமதர்மமான அஹிம்ஸைக்கு ஹானியாய் விடும். இந்தக் காரணங்களை உத்தேசித்தே இவன் சமைத்த ஆஹாரத்தை பிக்ஷை வாங்க வேண்டும் என்று வைத்திருப்பது[2*].

பிரம்மசாரிக்குப் பிக்ஷை வைத்ததற்குக் காரணம் வேறு. விநயம் ஏற்பட வேண்டும், அப்போதுதான் வித்யை பலன் தரும் என்பதற்காகத்தான் வீடு வீடாகப் போய் அவனை பிச்சைக் கேட்கும்படியாக விதித்திருப்பது. அப்புறம் இவனுக்குச் சமைத்துப் போடுவதற்காக குருபத்தினியைச் சிரமப்படுத்த வேண்டாமென்றுதான், சமைத்த அன்னமாகவே பிக்ஷை வாங்கி வரலாம் என்று அநுமதித்திருப்பதும். அக்னி ஸம்பந்தமே கூடாது என்று ஸந்நியாஸிக்குக் கட்டுப்பாடு இருப்பது போல் பிரம்மசாரிக்குக் கிடையாது. அவன் தினமும் இரண்டு வேளையும் பண்ண வேண்டிய ஸமிதாதானம் என்பது அக்னி வளர்த்து அதில் ஸமித்தைப் போடுகிற சடங்குதான்.

ஆகையால் வித்யாப்யாஸ காலம் பூராவும் பிக்ஷாசர்யம் பண்ணுவது என்பது ஸாத்யமாகத் தெரியாத நம் காலத்தில், ஏதோ ஒரு வருஷமாவது அப்படி ஒரு பாடசாலை மாணவன் பண்ணிவிட்டு, மற்ற காலத்தில் ஸ்வயம்பாக நியமம் வைத்துக்கொள்ளலாமென்று என் அபிப்ராயம். எத்தனை மூலதனமிருந்தும் வேதப் படிப்புக்குப் போதவில்லை என்பதால் பாடசாலைகளை மூடி விடுகிற நிலைமை மாற வேண்டுமானால் செலவில்லாத ஸிம்பிள் ஆஹார வழக்கத்தை வித்யார்த்திகள் மேற்கொள்ளும்படி செய்ய வேண்டி இருக்கும்போது, ஸ்வயம்பாகம் என்று வைத்தாலே தன்னால் இப்படி ஏற்பட்டு விடுகிறது என்று பார்க்கிறேன்.

1.* பார்க்க: " தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில், "குருகுலவாஸம்" என்னும் உரை.

2.*தீவிரமான துறவறத்தில் சமைத்த உணவாயின்றி, தானே விழுகிற பழம், பத்திரம் ஆகியவற்றை மாத்திரம் உண்ண வேண்டும் என்று ஸ்ரீபெரியவர்கள் 'மறக்கறியில் ஹிம்ஸை இல்லையா?' என்ற பிரிவில் கூறியிருப்பதும் கருதற்பாலது.

10.30-வடதேச வழக்கின் உயர்வு

நாம் நம்மைவிட அநாசாரக்காரர்கள் என்று நினைக்கும் வடக்கத்திக்காரர்கள் தான் அநேக விஷயங்களில் நம்மைவிட நல்ல சாஸ்திர வழக்குகளை அநுஸரிப்பவர்களாயிருக்கிறார்கள். 'ஸ்வதந்திரம்' வந்த பிற்பாடு அங்கேயும் ரொம்ப க்ஷீண தசை என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் ஸமீப காலம் வரையில் நான் தெரிந்து கொண்டதில் அவர்களிடம் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆஹார விஷயம் அதில் ஒன்று. இத்தனை புளி, மிளகாய், பெருங்காயம் என்று நாம் வைத்துக் கொண்டிருப்பது போல அங்கேயில்லை. இதெல்லாம் ராஜஸத்தில் சேர்ப்பதுதான்.

இதில் பெங்காலை குறிப்பாகச் சொல்ல வேண்டும். "மத்ஸய்ப் பிராம்மணாள்" உள்ள ஊராச்சே என்றால் அது [மத்ஸ்யம் உண்ணும் பழக்கம்] முன்னேயே சொன்னாற்போல் ஒரு நிர்ப்பந்தத்தில் ஏற்பட்டது.

நாங்கள் பெங்கால் போயிருந்தபோது அவர்கள் ஆஹார வசதிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்போது பெரிய முகாமாக மடத்து ஜனங்கள் போயிருந்தோம். அவர்களும் சளைக்காமல் நாநூறு ஐநூறு பேர் சமைத்துச் சாப்பிடுவதற்கு வேண்டிய சாமான்கள் கொண்டு வந்து வைத்திருந்தார்கள். ஆனால் அதில் புளி இல்லை. புளி இல்லாமல் நமக்கு ஏது சாப்பாடு? குழம்பு, ரஸம் எதுவானாலும் அதுதானே முக்யம்? அவர்களுக்கோ கோதுமையும், டாலுக்குப் பருப்பும் இருந்தால் போதும், பெங்காலின் அரிசிச் சாதம் சாப்பிடுபவர்கள் தானென்றாலும் ரஸம், குழம்பு போட்டுக் கொள்ளாதவர்கள். அதனால் அவர்களுக்குப் புளியே தேவையில்லை.

நாங்கள் புளி வேண்டுமென்று கேட்டோம். உடனே எங்கேயோ நாலைந்து மைல் போய் அங்கேயிருந்த புளிய மரத்திலிருந்து கொஞ்சம் பச்சைக் காயைப் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவர்கள் கொண்டு வந்த ஸ்வல்பப் புளியங்காய் இங்கே மடத்திலே வைக்கிற அண்டா சாம்பாருக்கு ஸமுத்திரத்தில் பெருங்காயம் கரைக்கிற மாதிரிதான் ஆகியிருக்கும்.

"இத்தனூண்டை வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? இன்னும் ரொம்ப வேணுமே!" என்றோம்.

உடனே அவர்கள் பரிஹாஸமாக, ***"க்யா ஆப் இம்லீ காதே ஹை, யா சாவல் காதே ஹை?"*** (நீங்கள் புளியைச் சாப்பிடுகிறீர்களா, அல்லது அரிசி சாப்பிடுகிறீர்களா?) என்று கேட்டார்கள்!

பெங்கால் மாதிரி மத்ஸ்ய ஸம்பந்தங்கூட இல்லாமல் ராஜஸ்தானம், குஜராத், ஸௌராஷ்ட்ர, கட்ச் மத்யப் பிரதேஷ் ஆகிய ராஜ்யங்களில் எல்லா ஜாதியாரிலுமே மரக்கறி உணவுக்காரர்கள் ஏராளமாயிருக்கிறார்கள்.

டேராடன் மாதிரி இடங்களில் பிராம்மண கூலிக்காரன் முதுகிலே பெட்டி கட்டிக்கொண்டு அதில் வெள்ளைக்கார துரையை உட்கார்த்தி வைத்துக்கொண்டு போவான். ஆனால் வழியில் வாயிலே பச்சைத்தண்ணி விடமாட்டானாம். போக வேண்டிய இடத்துக்குப் போய் விட்டு, ஸ்நானம் பண்ணித் தன் ஆஹாரத்தைத் தானே சமைத்துத்தான் சாப்பிடுவான்.

தர்வான், வேலைக்காரி முதலியவர்கள்கூட யஜமான் வீட்டில் நாயாக உழைத்தாலும், அந்த வீட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடுவது கிடையாது என்பதே வடதேசத்து வழக்கம் ஜாதியில் உசத்தி, தாழ்த்தி சொல்லிக் கொண்டு "தாழ்ந்தவன் வீட்டில் உசந்தவன் சாப்பிட்டாலென்ன?" என்று கேட்டுக்கொண்டு எல்லாவற்றையும் குழப்பிப் பல பட்டடை பண்ணுவதுதான் சீர்திருத்தம் என்று இங்கே நாம் நினைக்கிறோமென்றால், அங்கே தாழ்ந்த நிலையில் உள்ள வேலைக்காரன்கூட உயரந்த நிலையிலுள்ள முதலாளி வீட்டில் சாப்பிடுவதில்லை என்றிருக்கிறான்! இப்படி ஜாதிக்காக இல்லாமல்

‘ஸ்வயம்பாகம்’ என்ற நியமத்துக்காக என்று வைத்துக் கொள்ளும்போது, சண்டையும் இல்லாமலிருக்கிறது.

வடக்கே ஸம்பந்திகள் வீட்டில்கூட ஜன்மத்திலேயே ஒரு நாளாகக் கல்யாண தினத்தன்று மட்டுந்தான் சாப்பிடுவார்கள்.

அவனவனும் தன்னை pure -ஆக வைத்துக் கொள்ளப் பாடுபட்டுக் கொண்டிருந்தாலே எல்லாருக்கும் க்ஷேமம். இதிலே ஒரு அங்கம்தான் பிறத்தியாரால் அந்த purity -க்கு கெடுதல் வந்துவிடப் போகிறதே என்று ஜாக்கிரதையாக, அவர்களுடைய ‘ரேடியேஷன்’ ஆஹாரத்தில் ஏற்படாமல், தன் சாப்பாட்டைத் தானே பண்ணிக் கொள்வது. சாப்பாட்டு விஷயத்திலே ஜாதி முதலான அம்சங்களுக்கு இடமேயில்லை. இந்த ஸமத்வத்துக்காக யார் சமைத்தாலும் எல்லாரும் சாப்பிட்டாக வேண்டுமென்று பண்ணி ஜனங்களின் personal purity -ஐ பாதிக்க வேண்டாம். “ஜாதி கூடாது” என்று ஆரம்பத்திலிருந்து இப்படி ஸம்பந்தமில்லாத விஷயங்களிலெல்லாங்கூட ஜாதியைக் கொண்டு வந்து அதில் அபேத வாதத்தை நிலை நாட்டுவதே எல்லாவற்றையும்விட முக்யம் என்பதாக விஷயம் தெரிந்துகொள்ளாமல் செய்து வருகிறார்கள்.

ஒருத்தர் சமைத்து இன்னொருத்தர் சாப்பிடுவது என்கிறபோது சாஸ்திரத்தைப் பார்த்தால் ஒரு விதமாயிருக்கிறது; சீர்திருத்தக்காரர்கள் சொல்வது இன்னொரு விதமாயிருக்கிறது. மேல்ஜாதி, கீழ்ஜாதி என்று தப்பாக நினைத்துக்கொண்டு, “நீ சாப்பிடலாம், நீ சாப்பிடக்கூடாது” என்று வித்யாஸம் பார்த்தால் சிலருக்குக் கஷ்டமாயிருக்கிறது. “இதிலே மேலும் இல்லை; கீழும் இல்லை அவரவர் காரியம் ஒழுங்காக நடப்பதற்காக அந்தந்தக் காரியத்துக்கு அநுகூலமாக நியமங்களை வித்யாஸம் செய்திருக்கிறது. வித்யாஸத்தை எடுத்தால் எல்லாம் கலந்து குழம்பிப் போய்விடும்” என்று நினைக்கிறவர்களுக்கோ ‘ஸமத்வம்’ என்று சொல்லப்படுகிறதைப் பின்பற்றினால் கஷ்டமாயிருக்கிறது. அதாவது எவர் பண்ணிப் போட்டாலும் எல்லாரும் சாப்பிடலாம் என்றால் சிலருக்குக் கஷ்டமாயிருக்கிறது. சாப்பிடக்

கூடாது என்றால் சிலருக்குக் கஷ்டமாயிருக்கிறது. கஷ்டம் என்கிறது சண்டையாக ஆகிறது.

காயத்துக்குத்தான் ஜாதியே தவிர சண்டைக்கா வைத்திருக்கிறது? அதுவும் சாப்பாட்டிலே சண்டை என்றால் வேதனையாயிருக்கிறது. இதற்கெல்லாம் ஒரே ஸொல்யூஷன் ஸ்வயம்பாகம்தான் என்று தெரிகிறது. மேல் ஜாதியா, கீழ் ஜாதியா என்ற கேள்விக்கே இடமில்லாமல், "The question does not arise" என்கிறாற்போல், இந்த விஷயங்கள் எழும்புவதற்கே இடமே தராமல், அந்தந்த ஜாதிக்காரனே சமைத்தாலும் சாப்பிடுவதில்லை, அம்மாவோ, அகமுடையாளோ பண்ணினால்கூடத் தொடுவதில்லை, அவனவனும் தன் கையால்தான் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று வைத்து விடுகிற நியமமே ஸொஸ்யூஷன்.

எவன் தொட்டுச் சாப்பிடலாம், எவன் பார்த்துச் சாப்பிடலாம், எவனோடு சாப்பிடலாம் என்கிற கேள்விகள் இருக்கிறவரையில் சாஸ்திரம் ஒன்றாகவும் சீர்திருத்தம் இன்னொன்றாகவும் இருந்துகொண்டு சண்டைதான் வரும். அதனால் எவனுமே தொடாமல் அவனவனே சமைத்துக் கொண்டு, எவனுமே பார்க்காமல், எவனோடும் சேர்ந்து உட்காராமல் தனித்தனியாகப் போஜனம் பண்ணி விடுவது உத்தமம். ' காகம் கரைந்துண்ணக் கண்டீர் ' என்கிறாற்போல் சேர்ந்து சாப்பிட வேண்டுமென்றிருந்தால் பழங்கள், பானங்களைச் சேர்ந்து சாப்பிடலாம். மற்றவர்கள் சமைத்துக் கொள்ள உணவுப் பண்டங்களாகக் கொடுப்பதே விருந்துபசாரந்தான்; அப்படிப் பண்ணலாம்.

இதுவரை தக்ஷிணத்தில் நம்மைவிடக் கடும் குலாசாரமுள்ளவர்களின் கையில், அல்லது பெர்ஸனலாக நம்மைவிட சுத்தமானவர்களின் கையிலிருந்து வாங்கிச் சாப்பிடலாம் என்று இருந்து வந்திருக்கிறது. வடக்கேயோ இதுவும் கூடாது. கிஸான் [குடியானவன்] ஆனாலும் பண்டிட் ஆனாலும் அவனவனே சமைத்துக்கொள்ள வேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலேயும் ஒரு நல்ல அம்சம் இருக்கிறது. நம்மைவிட சுத்தர்கள் கையில் சாப்பிடலாம் என்பதனாலேயே நாம்

அவ்வளவு சுத்தியாவதற்கு பிரயத்தனப்படாமலே இருந்து கொண்டிருக்கலாம் என்பதற்கும் இடம் கொடுத்துப் போகிறது. ஸ்வயம்பாகம் என்று வைத்து, நம்முடைய அசுத்தி நாமே பண்ணிக் கொள்கிற சாப்பாட்டினால் நமக்குள் மேலே மேலே போய்க்கொண்டேயிருக்கிறபோது தான், இப்படி நம்மைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது என்று நினைத்து நம்மை சுத்தப்படுத்திக் கொள்வதற்குப் பிரயத்னம் செய்வோம். "சாப்பாடு பண்ணிப் போடுகிறவனின் சுத்தம் சாப்பிடுகிறவனுக்குள் போகிறது; நாம் சுத்தனாக வேண்டும்; அதே ஸமயத்திலே நம் சாப்பாட்டை நாமே பண்ணிக்கொள்ள வேண்டும்" என்றால் அப்போது நாம் சுத்தமாக ஆவதற்கு முயற்சி பண்ணத்தானே செய்வோம்?

ஸ்வாமி பிரஸாதம், குருப் பிரஸாதம் தவிர ஸ்வயம்பாகம்தான் என்று ஆக்கிக் கொண்டுவிட வேண்டும்.

இதனால் ஒரு டிஸிப்ளினும் உண்டாகிறது. சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கவோ, அரட்டை, சீட்டு, ஸினிமா என்று போகவோ விடாமல் சமையல் வேலை என்று ஒன்று ஒருத்தனைக் கட்டிப் போடுகிறதல்லவா? இதில் தானே பண்ணிக் கொள்வதால் நிறைய தினுசு வேண்டாம் என்று நாக்கு டிஸிப்ளினும் வருகிறது. சமைத்ததில் ஸத்வ ரஸம் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்து அப்போது நாமஜபம் செய்கிற டிஸிப்ளின் வேறு. தானே பொங்கிப் போட்டுக் கொள்வது என்கிற, அல்பமாகத் தோன்றுகிற தர்மாசாரத்துக்கு இத்தனை நல்ல பலன்கள்!

"எப்படிக் கற்றுக் கொள்வது?" என்று புருஷர்களாய் பிறந்தவர்கள் பிரமிக்க வேண்டியதில்லை. "இப்படித்தான் இருக்கணும்" என்ற எண்ணம் வந்துவிட்டால், ஈஸியாக கற்றுக் கொண்டு விடலாம். பொம்மனாட்டிக் குழந்தைகள் சூட்டிகையாயிருந்தால், அரைத்துக் கரைத்து இத்தனை தினுஸோடும் சமைப்பதற்குப் பன்னிரண்டு வயஸுக்குள் கற்றுக் கொண்டு விடவில்லையா? 'வெரைய்டி' இல்லாமல் ஸிம்பிளாக ஒரு சப்பாத்தி அல்லது ஒரு பொங்கல், ஒரு தயிர் என்று ஆஹாரத்தை ஆக்கிக் கொண்டு விட்டால், நாலே நாளில் கற்றுக்கொண்டு விடலாம். என் அபிப்ராயம், பதினைந்தே நிமிஷத்தில் தயாரிக்கக்கூடியதாக ஏதாவது ஒரு ஸிம்பிள் ஆஹாரத்தைப்

புருஷர்கள் அத்தனை பேரும் தெரிந்து கொண்டு தாங்களே அதைப் பண்ணிப் போட்டுக் கொண்டு சாப்பிட வேண்டுமென்பது.

10.31-கல்வித் திட்டத்தில் சமையற்படிப்பு

ஜீவிக்கிறதற்கு basic-ஆக இருப்பது சாப்பாடு தானே? அதனால் இந்த ஸ்வயம்பாகத்துக்குத்தான் basic education-லேயே (அடிப்படைக் கல்விலேயே) முதலிடம் கொடுத்து ஆண், பெண் அனைவருக்கும் சமையல் அறிவைக் கொடுத்துவிட வேண்டும். ஆமாம் "சமய அறிவைக் கொடுக்கும்படியாக இப்போதிருக்கிற ஸெக்யூலர் எஜுகேஷனை மாற்ற வேண்டும்" என்கிற நான்தான் இப்போது எல்லாவற்றுக்கும் "முந்தி சமையல் அறிவைக் கொடுக்கணும். எல்லாரையும் சாப்பாட்டு ராமன் ஆக்கணும்" என்கிறேன். ஆஹாரத்தைப் பொறுத்துத்தான் குணங்களும் மனப்பான்மையும் உண்டாகிறதால், சமய ஞானத்தில் பிடிப்பு உண்டாவதற்கே சமையல் ஞானத்தை உண்டாக்க வேண்டியாதாகிறது!

படிப்பிலே அடிப்படை Three R's என்பார்கள். 'ரீடிங்' முதல் 'ஆர்', `ரைட்டிங்' இரண்டாவது 'ஆர்', `ரித்மெடிக்' ('அரித்மெடிக்'என்பது பேச்சில் 'ரித்மெடிக்' என்றாகும்) மூன்றாவது 'ஆர்'. நான் இதற்கெல்லாமும் அடிப்படையாக அடிப்படைக் கல்வியில் ஸ்வயம் பாகத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்கிறேன்.

நேரு "Kitchen religion" — "அடுப்பங்கரை மதம்"- என்று ஹிந்து மதத்தைப் பற்றி அடிக்கடி சொல்கிறார். அப்படிச் சொல்கிறபோது தாம் ஹிந்து மதத்தை ரொம்ப நன்றாகப் பரிஹாஸம் செய்கிறோம் என்று நினைக்கிறார். வாஸ்தவத்தில் அவர்தான் ஹிந்து மதத்தின் ஸாரத்தைப் புரிந்துகொண்டு அதற்கு ஸர்ட்டி..பிகேட் தருகிறார்! நம் மதம் Kitchen religion -தான்; அடுப்பங்கரை மதம்தான்!

வேதம்தான் நம் மதத்துக்கு ப்ராமண நூல். வேதத்துக்கும் சிரஸில் இருப்பது உபநிஷத். அதிலே ஒரு உபநிஷத்திலே, ஆத்மா, பிரம்மம் என்று நமக்குப்

புரியாத தத்வங்களைச் சொல்கின்றனவே, அந்த உபநிஷத்துக்களில் ஒன்றிலேயே* நம் மதத்தை அடுப்பங்கரையாகத்தான் ஆக்கி வைத்திருக்கிறது.

நாரதர் ஸநத்குமாரரிடம் போய் ஆத்ம வித்தையை உபதேசிக்கச் சொல்கிறார். அப்போது ஸநத் குமாரர், ***"ஆஹார சுத்தௌ ஸத்வ சுத்தி சுத்தி:"*** என்றுதான் முடிக்கிறார். உபநிஷத்திலேயே இந்த விஷயம் இருக்கிறது. "தூய உணவில் ஆரம்பி; அதுதான் குணம் தூய்மையாவதற்கு வழி. இப்படி சித்த சுத்தி ஏற்பட்ட பின்தான் படிப்படியாக ஈஸ்வர ஸ்மரணம், கட்டுக்கள் விடுபட்ட மோக்ஷம் எல்லாம் ஸித்திக்கும்" என்று ஸநத் குமாரரே Kitchen religion-ல்தான் உபதேசத்தைக் கொண்டுபோய் முடிக்கிறார். அந்த முடிவுதான் – ஆஹார சுத்திதான் – ஸாதனைக்கு ஆரம்பம் அடிப்படை.

அதனால், அடிப்படைக் கல்வி, ஆதாரக் கல்வி என்று பெரிசாகச் சொல்லிக்கொண்டு இப்போது செய்வதில் ஜீவாதாரமாக, எல்லாப் பண்புகளுக்கும் ஆதாரமாக இருக்கிற ஸ்வயம்பாக போதனையைச் சேர்த்து விட வேண்டும் என்கிறேன். அரசியல் தலைவர்களாகவும் ஸமூஹத் தலைவர்களாகவும் இருக்கப்பட்டவர்களும் ஆதாரக் கல்வியில் சமையல் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்கிறார்கள். ஆனால் எல்லாப் பசங்களுமாகச் சேர்ந்து எல்லாப் பசங்களுக்குமாகச் சமையல் பண்ணி, எல்லாருமாகச் சேர்ந்து சாப்பிட வேண்டும் என்கிறார்கள். இதிலே குணத்தின் அபிவிருத்திக்கு ஒன்றுமில்லை. ஒருவேளை கெடுதலே உண்டாகவும் இடமுண்டு என்பதால் நான் ஒவ்வொரு பையனும் தன் சாப்பாட்டைத் தானே பண்ணிச் சாப்பிட்டுக்கொள்ள வேண்டும் என்கிறேன். இது பெர்ஸனல் ப்யூரிடியால் ஸொஸைட்டியைக் காப்பாற்றுவதற்காகச் செய்ய வேண்டிய தர்மம்.

ஆதாரக் கல்வி மட்டுமில்லை, முதியோர் கல்வி என்று இன்னொரு பக்கம் நிறையச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அதிலும் சரி, ரொம்ப ஸிம்பளி∴பை பண்ணி பாக சாஸ்திரம் [சமையற்கலை] சொல்லிக் கொடுத்துவிட வேண்டும்.

பிறர் உதவியின்றி அவரவர் கார்யத்தை அவரவர் செய்து கொள்ளும்படியாக் கல்வித் திட்டத்தில் கொண்டு வந்துவிட வேண்டும் என்றுதானே ஸமூஹத்

தலைவர்கள் சொல்கிறார்கள்? ஆதலால் வாழ்க்கைக்கு முதலில் வேண்டிய அன்னத்தை அவனவனும் தயாரித்துக்கொள்ளும்படிச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் சேர்த்து ஒரே சமையல், ஜாதி வித்யாஸமில்லாமல் சமைத்து, எல்லாரையும் சேர்த்து உட்காரவைத்துப் போடுவதுதான் சீர்திருத்தம் என்று இவர்கள் சொன்னால், அதைவிட அவசியமான, முக்யமான சீர்திருத்தம் ஒவ்வொருவனும் தன் உணவைத் தானே தயாரித்துக் கொள்வதுதான். இவர்கள் ஸமூஹச் சீர்திருத்தம் என்று எதையோ நினைத்துப் போகிறார்கள். அந்த ஸமூஹம் என்பது பல தனி மநுஷ்யர்கள் கொண்டதுதானே? எனவே இந்தத் தனி மநுஷ்யர்களின் குணம் சீர்திருந்துவதுதானே எல்லாவற்றுக்கும் basic – ஆதாரம்? அதனால் ஆதாரக் கல்விலேயே ஸ்வயம்பாகம் சொல்லிக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

ஆண்களில் முதியவர்களுக்கும் சமையல் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்கு சாஸ்திரமே ஆதரவாயிருக்கிறது. சாஸ்திர வாக்கியம் ஒன்று இருக்கிறது: ***"பஞ்சாசத் வத்ஸராத் ஊர்த்வம் ந குர்யாத் பாணி பீடநம்"***. 'பாணி பீடநம்' என்றால் பாணிக்ரஹணம்; அதாவது கல்யாணம். 'பஞ்சாசத்' என்றால் ஐம்பது. ஐம்பது வயஸுக்கு மேலே கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது என்பது இந்த வாக்கியத்தின் அர்த்தம். முதல் பெண்டாட்டி தவறி விட்டால் ஐம்பது வயஸுக்கு அப்புறம்கூட இரண்டாம் கல்யாணம் செய்து கொள்கிறவர்கள், சமையலுக்கு ஆளில்லை என்ற காரணத்துக்காகவே அப்படிச் செய்வதுண்டு. ஸ்வயம்பாகம் தெரிந்து விட்டால் வானப்ரஸ்தத்துக்குத் போக வேண்டிய தசையில், சமையலை ஒரு காரணமாகச் சொல்லிக்கொண்டு, மறுபடி தாம்பத்தியத்துக்குத் திரும்புகிற ஆபாஸம் நடக்காமலிருக்கும். சாஸ்திரத்தை மீறின தோஷம் ஸம்பவிக்காமலிருக்கும். இப்படியேதான் பிரம்மச்சாரியாகவே இருக்க வேண்டுமென்று நினைக்கிறவர்களிலும் சிலபேர் ஓடி ஆடி அலைகிற மத்யம வயஸுவரை வீட்டில் அம்மா சமைத்துப் போட்டோ, ஹோட்டலிலோ சாப்பிட்டுக் கொண்டிருந்து விட்டு ஓய்ந்து உட்காருகிறபோது, 'அம்மா போயிட்டாளே, இப்போ முன்மாதிரி ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கமாட்டேனென்கிறதே' என்று சமையலுக்காகவே ('ஸஹ தர்ம'

இல்லை; தர்மத்துக்காக இல்லை; வயிற்றுக்காக, நாக்குக்காக) பிரம்மசர்யத்தை விட்டு விட்டுப் பெண் தேடிப் போகிற அஸங்கியமும் ஸ்வயம்பாக அநுஷ்டானம் இருந்துவிட்டால் ஏற்படாது.

முன்னெப்போதையும்விட, இப்போது அவனவன் ஊரோடு கிராமத்தோடு வேலை என்றில்லாமல், பக்ஷிகள் மாதிரி பூலோகத்திலே எங்கெங்கே வேலை உண்டோ அங்கேயெல்லாம் போகிறதென்று ஆகியிருக்கும் நிலையில் ஸ்வயம்பாகம் அத்யாவசியமாகிறது. சுத்தத்துக்குச் சுத்தம், ஸத்வத்துக்கு ஸத்வம்; அதோடு வெந்ததும் வேகாததுமாக ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுச் சின்ன வயஸிலேயே அல்ஸர், அது, இது என்று அவஸ்தைப் படாமலும் இருக்கலாம். பொங்கல், சின்னதாக ரொட்டி, இதைவிட லேசாக அடுப்புத் தணலிலே கோதுமை மாவுருண்டையைக் காய்ச்சி அதை அப்படியே வேகப் பண்ணுவது - என்று அவனவனும் பண்ணிக் கொண்டால் வியாதியே வராது. இப்போது கணக்கு வழக்கில்லாமல் வியாதிகள்தான் ஸர்வ வியாபகமாக இருக்கின்றன.

---

* சாந்தோக்ய உபநிஷத் - 7.26.2.

10.32-உணவு முறையில் உண்மைச் சீர்திருத்தம்

பத்து, இருபது ஸாமான் வைத்துக் கொண்டால் தான் சமையல் என்று நம் சீமையில் ஆகியிருப்பதை மாற்ற வேண்டும். இதுதான் சீர்திருத்தம். ஏதோ நிர்பந்தம் மாதிரி, ரஸம், கறி, கூட்டு, குழம்பு என்று பிரதிவேளையும் சாப்பிட்டாக வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இத்தனை வஸ்து இருப்பதால்தான் புளி ஜாஸ்தியாகிவிடுமோ, உப்பு ஜாஸ்தியாகிவிடுமோ ஸரியாகக் கொதி வந்துவிட்டதா என்றெல்லாம் ஸந்தேஹம்! வறுக்கிறதை எப்போது நிறுத்த வேண்டும், மாவு எப்போது கரைத்து விடணும், எவ்வளவு கரைத்து விடணும் என்றெல்லாம் யோஜனை! இந்த வேண்டாத சிரமங்கள் இல்லாமல் லேசான ரீதியில், 'லைட்'டாக

ஆஹாரத்தை ஆக்கிக்கொள்ள வேண்டும். பூரியைத் தட்டிப்போட்டு பாலை விட்டுக்கொண்டு சாப்பிடுவதானால் அதைப் பத்து நாட்களுக்குக்கூடக் கெடாமல் வைத்துக்கொண்டு வயிற்றுப் பாட்டைத் தீர்த்துக் கொள்ளலாம். வயிறு நன்றாக ரொம்பும். வியாதி வராது. சரீரத்துக்கே ஸௌகர்யம். நாள் கணக்கில் பிரயாணம் பண்ணும்போதுகூட, கண்ட இடத்தில் கண்டதைத் தின்னாமல், இந்த மாதிரிப் பற்றுப் படாத பூரி, ஸத்துமா இதுகளைக் கொண்டே காலம் தள்ளி விடலாம். அரிசியைக் களைந்து உலர்த்தி, சிவக்க வறுத்தெடுத்து அரைத்து வைத்துக் கொள்வதே ஸத்துமா. 'ஸக்து' என்பதே அதன் ஸரியான பெயர். ஆனால் உடம்புக்கு நல்ல ஸத்து தருவதாலும், ஸத்வகுணம் ஊட்டுவதாலும் அந்தப் பேரை ஸத்து [மா] என்று ஆக்கியிருப்பதிலும் அர்த்தம் இருக்கிறது! அதிலே மோரை விட்டோ, பாலை சாப்பிடலாம், கொஞ்சம் சாப்பிட்டால்கூட புஸ் என்று ஊறிக்கொண்டு பசியடங்கிப் புஷ்டியாயிருக்கும்.

'குக்கர்', 'கிக்கர்' கூட வேண்டாம். ஸுலபமாக, சீக்ரமாக அதில் நாலைந்து தினுஸைப் பண்ணிக் கொள்ள முடியலாம். ஆனால் நாக்கைக் கட்டுவதற்கு, ஸத்வ ஆஹாரத்தைத் தவிர மற்றவற்றுக்குப் போகாமலிருப்பதற்கு அது பிரயோஜனமில்லை. குக்கர் வந்தால் அப்புறம் அஞ்சறைப்பெட்டி, ரொம்பப் புளி, ரொம்பக் காரம் எல்லாம் கூடவே வரும். இது சித்தத்துக்குச் செய்கிற கெடுதலோடு உடம்புக்கும் கெடுதல் வந்து, பரிஹாரமாக மருந்து, அந்த மருந்திலே அநாசாரம், இந்த அநாசாரத்துக்குப் பரிஹாரம் என்று போய்க்கொண்டேயிருக்கும். செலவையும் சொல்ல வேண்டும். நிறைய வியஞ்ஜனம் என்றால் நிறையச் செலவாவதோடு, அப்புறம் டாக்டருக்காகவும் மருந்துக்காகவும் ஆகிற செலவு வேறே.

அதனால் ஒரு ஸாமான், இரண்டு ஸாமானை வைத்துக்கொண்டு, ஸாத்விகமாக, பெரியவர்கள் சொல்கிற மாதிரி 'மதுர'மாக 'ஸ்நிக்த'மாக லேசான ஆஹாரத்தைத் தானே தயார் பண்ணிச் சாப்பிட வேண்டுமென்பதை ஜன்ம விரதமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

'ஸ்நிக்தம்' [பசையுள்ளது] என்பதற்காக நெய் சொட்ட வேண்டுமென்று அர்த்தமில்லை. வறட்டு வறட்டு என்றில்லாமல் பாலிலோ மோரிலோ ஊறினதாக, அல்லது நெய்ப்பசை உள்ளதாக இருக்க வேண்டும் என்றே அர்த்தம். 'மதுரம்' என்றாலும் ஒரே தித்திப்பு என்று அர்த்தமில்லை. அரிசி, கோதுமை முதலான எந்தப் பதார்த்தமானாலும் அதற்கென்றே ஒரு தித்திப்பு உண்டு. இப்போதைய புளி, கார சமையலில் பதார்த்தத்தை ஓவராக வேகவைத்து, அதன் இயற்கையான ஸத்து க்ஷீணிக்கும்படிப் பண்ணுவதில் தித்திப்பு போய்விடுகிறது. பண்டத்தை விட்டு இயற்கையான தித்திப்பு போகாதபடியான ஆஹாரமாகச் சாப்பிட வேண்டுமென்று அர்த்தம்.

10.33-விருந்துபசாரம் எப்படி?

"அவனவனும் ஸ்வயம்பாகம் என்றால் அதிதி ஸத்காரம் (விருந்தோம்பல்) எப்படிப் பண்ணுவது? அதையும் பெரிய தர்மமாகச் சொல்லியிருக்கே!" என்றால் வருகிறவனுக்கும் அவனே சமைத்துக் கொள்வதற்கான பண்டங்களைச் கொடுத்துவிட்டாலே அது ஸத்காரம்தான். இப்போது துர்லபமாக எங்கேயோ இருக்கப்பட்ட ஸ்வயம்பாகிகள் இப்படித்தானே தாங்களே சமைத்துக் கொள்கிறார்கள்? இதையும் அதிதி பூஜையாகத்தான் சொல்லியிருக்கிறது. இப்படி யாத்ரிகர்களுக்குச் சமைத்த அன்னமாகப் போடாமல் மாவு, சர்க்கரை முதலான சரக்குகளை மட்டும் தருவதை வடக்கே 'ஸதாவ்ருத்தி' என்றே சொல்வார்கள். அவர்கள் சமைத்துப் போட்டாலும் ஏற்றுக் கொள்ளாமலே இப்படி 'ஸதாவ்ருத்தி'தான் வாங்கிக் கொள்வார்கள். நம் மடத்திலுங்கூடச் சாப்பிடுவதில்லை. ஆட்டா மாவு, நெய் முதலியன கொடுத்தால் மட்டும் வாங்கிக் கொண்டுபோய்த் தாங்களே சமைத்துக் கொள்வது என்று அநேக தேசாந்தரிகள் இருக்கிறார்கள். ஆகையால் ஸ்வயம்பாகத்தால் விருந்தோம்பல் போய்விடுகிறதென்று நினைக்க வேண்டாம்.

அப்படி, 'நம் கையால் கொடுத்து நேரே அவர்கள் குக்ஷியில் போகணும், அதுதான் உபசாரம்' என்று ஸென்டிமென்ட் இருந்தால் பால் அல்லது

மோரும், பழமும் கொடுக்கலாம். பழைய நாளில் திருடனுக்குக்கூட பால் சாதம் போட்டுவிட்டால் அப்புறம் அவன் திருடமாட்டான். நல்லெண்ணத்தை வளர்ப்பது பால். இப்போது பால் சாதமாக இல்லாமல் பாலோடு பழமாகக் கொடுக்கச் சொல்கிறேன்.

ஸ்கூலுக்குப் போகிறவர்கள், ஆ∴பீஸ் போகிறவர்கள், ரிடையர் ஆனவர்கள் ஆகிய எல்லாருமே - புருஷர்களைச் சொல்கிறேன் - இப்படிக் கால்மணியில் தயாரிக்கும்படியான சமையல் தெரிந்துகொண்டு அவரவர் பண்ணிச் சாப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

10.34-நிவேதனம்

பகவானுக்குக் காட்டிவிட்டுச் சாப்பிட வேண்டுமென்பது முக்கியம். வேறே பூஜை என்று பெரிசாகப் பண்ணாவிட்டாலும், நமக்குக் கையைக் கொடுத்து, அந்தக் கையாலேயே சமைத்துக் கொள்ளணும் என்ற புத்தியைக் கொடுத்து ஸ்வயம்பாகம் பண்ணிக் கொள்ள வைத்தவனுக்கு அதைக் காட்டி, நிவேதனமாக்கி அதில் இருக்கக் கூடிய கொஞ்ச நஞ்சம் தோஷத்தையும் போக்கிவிட வேண்டும்.

தெலுங்கு தேசத்தில் ஆயிரம் பேர் ஸமாராதனை என்று உட்கார்ந்தாலும், ப்ராணாஹுதி பண்ணுவதற்கு முன்னாடி ஒவ்வொருத்தனும் இஷ்ட தெய்வத்தை நினைத்து ஸ்வாமி நைவேத்யம் பண்ணித்தான் சாப்பிடுவான்.

வேறே மூர்த்தி, விக்ரஹம் இல்லாவிட்டாலும் பிரத்யக்ஷ பகவானாயிருக்கிற ஸூர்யனுக்காவது நைவேத்தியம் செய்யணும்.

அம்மா சமைக்கிறாள், ஸம்ஸாரம் சமைக்கிறாள் என்பதால் [புருஷர்கள் சமைக்கத்] தெரிந்து கொள்ளாமலிருந்தால் அப்புறம் எங்கேயாவது தனியாக வெளியே போய் இருக்கும்போது, அல்லது வீட்டிலேயே அவர்களுக்கு அஸந்தர்ப்பமாகிறபோது, கண்டதைத் தின்பதான கெட்ட பழக்கம் வந்துவிடுகிறது. ஸ்வயம்பாகம் தெரிந்து, தானே பண்ணிக் கொள்வது என்று கொஞ்சநாள் பழகி விட்டால் அப்புறம் பிறத்தியார் சாப்பாடு பிடிக்கவே

பிடிக்காது. கெடுதலான சாப்பாட்டுக் கிட்டேயே போகத் தோன்றாது. நாமே பண்ணிச் சாப்பிடுவதில் ஒரு pride-ஏ [பெருமிதமே] உண்டாகிவிடும். இப்போது நாக்கு எப்படி கண்டதற்குப் பறக்கிறதோ, அத்தனைக்கத்தனை ஸத்வ பதார்த்தங்களைத் தவிர மற்றதை நினைக்கவே நினைக்காது.

10.35-ஸாரமான பலன்கள்

இத்தனை நேரம் தொண தொணவென்று நான் சொன்னதன் ஸாரம் என்னவென்றால்: ஸ்வயம்பாகம் என்ற ஒரு சின்ன நியமத்தால் அநேக நன்மைகள் உண்டாகின்றன. ஒன்று - சித்த சுத்தி. இரண்டு தேஹ ஆரோக்கியம். மூன்று - செலவு மட்டுப்படுவது. நாலு - ஜாதிச்சண்டைக்கு இடமில்லாமல் பண்ணுவது. ஐந்து – ஐம்பது வயஸுக்கு மேல் கல்யாணம் கூடாது என்பது போன்ற சாஸ்திர விதிகளை அநுஸரிக்க முடிவது. ஆறு – நம்முடைய மஹா பெரிய தர்மத்துக்கே மூலமான வேத வித்யை வளர எட்டு – லோகத்தில் மற்றவர்களுக்கும் ஸாத்விக ஆஹார ஐடியலைக் காட்டிக் கொடுப்பது. லோகத்தில் சாந்தத்தைப் பரப்புவதற்குச் செய்கிற காரியத்தைவிடப் பெரிய நன்மையில்லை. இத்தனை பலன்கள்! எல்லாவற்றுக்கும் மேலே, 'இந்தக் குழந்தை சாஸ்திரப்படி பண்ணுகிறான். நாக்கைக் கட்டுகிறான்' என்று பகவானே கிருபை செய்வது. இப்படி ஈஸ்வராநுக்ரஹம் பெற்று, ஸகல ஜனங்களும் சிரேயஸ் பெறுவதற்காக அவரவரும் ஸ்வயம்பாக நியமம் வைத்துக் கொள்ள வேண்டியது. இதற்கு ஒரு ஆரம்பமாக இப்போதிலிருந்தே ஆ்ஃபீஸோ ஸ்கூலோ அதில் அன்றைக்கு, வாரத்தில் ஞாயிறு ஒரு நாளாவது ஸகலமான பேரும் ஸ்வயம்பாக வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

இத்தனை நான் சொன்னதிலிருந்து ஸ்வயம்பாகம் நல்லதுதான் என்று உங்களில் கொஞ்சம் பேருக்காவது நம்பிக்கை வந்திருக்கலாம். ஒன்றில் நம்பிக்கை வந்து, அது ஸாத்யமாகவும் இருந்துவிட்டால், அதைப் பண்ணிக் காட்ட வேண்டும். அதுதான் பெருமை.

10.36-புலன் நுகர்ச்சிகளுள் உணவின் முக்யம்

ஆஹாரம் என்றால் நாக்கால் சாப்பிடுவது மட்டுமில்லை. பஞ்ச இந்திரியங்களுக்கும் ஒவ்வொரு ஆஹாரம் உண்டு. பல காட்சிகளைப் பார்க்கிறோம். இது கண்ணுக்கு ஆஹாரம். பலவிதமான பாட்டு, பேச்சுகளைக் கேட்கிறோம். இது காதுக்கு ஆஹாரம். இப்படியே நாம் அநுபோகம் பண்ணுகிறதெல்லாம் நமக்கு ஆஹாரம்தான். இதில் எல்லாமே சுத்தமானதாய் இருக்க வேண்டும். மனஸைக் கெடுக்கிற காட்சிகளைப் பார்க்கப்படாது; மனஸைக் கெடுக்கிற பேச்சுகளைக் கேழ்க்கக் கூடாது; அநுபவிக்கிறதெல்லாம் ஈஸ்வர ஸாக்ஷாத்காரத்துக்கு உதவுகிறவையாகவே இருக்க வேண்டும்.

இப்படி பொதுப்படையாகச் சொன்னாலும், இந்தப் பலவிதப் புலன்-நுகர்ச்சிக்கான ஆஹாரங்களிலும் வாயால் நுகர்கிற ஆஹாரந்தான் முக்யமாக இருப்பதால் அதைப்பற்றி இவ்வளவு ஆசார விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுதான் ஸ்தூலமாக நமக்கு உள்ளே போய், தேஹம் முழுக்க ரத்தமாக வியாபிக்கிறது; இதுவே சித்தத்தையும் பாதிக்கிறது. ஒரு பக்கம் ஆஹாரமில்லாவிட்டால் மநுஷ்யன் ஜீவிக்கவே முடியவில்லையென்றால் இன்னொரு பக்கமோ அது மித ஆஹாரமாக இல்லாவிட்டால் தேஹத்துக்கும் ச்ரமம், மனஸுக்கும் அசாந்தி என்றாகிறது. வயிற்றிலே திணித்துக்கொண்டே போவதால் சாப்பாட்டுப் பொருளுக்கும் நஷ்டம், கார்யம் செய்ய முடியாமலும் நஷ்டம், இவற்றைவிட த்யானத்தில் மனஸ் ஈடுபடாமல் போவது பெரிய நஷ்டம். ஆகையால் “சோற்றால் அடித்த பாண்டம்” என்றே மநுஷ்யனுக்குப் பேர் இருப்பதால் இந்தப் பாண்டமும், இதற்கு உள்ளேயிருக்கிற மனஸும் நல்லபடியாக வளர்வதற்காக ரிஷிகள் காட்டிக் கொடுத்திருக்கும் போஜன விதிகளை மேற்கொண்டு நடத்திக்காட்ட வேண்டும். இதன் முக்யத்வமும் அவசியமும் எல்லோருக்கும் புரிவதற்குப் பரமேஸ்வரனைப் பிரார்த்தனை பண்ணிக் கொள்கிறேன்.

“Give us this day our daily bread” – ” இன்றைக்கு எங்களுக்கு உன் அருளால் சோறு கிடைக்கட்டுமப்பா!” என்று கிறிஸ்துவ மதத்திலும் பிரார்த்திக்கச்

சொல்லியிருக்கிறது. அதே சமயத்தில் “Man shall not live by bread alone” – “சோற்றைத் தின்று மட்டும் மநுஷன் வாழவில்லை” என்றும் பைபிள் சொல்கிறது. பக்தி, ஞானம், உயர்ந்த குணங்கள், உத்தமப் பண்புகள் ஆகியவற்றால்தான் மநுஷன் மநுஷனாக வாழ்கிறான் என்பது அர்த்தம். இந்த குண விசேஷங்கள் விருத்தியாகவும் ஆஹார நியமமே உதவுகிறது என்று நம் சாஸ்திரங்கள் காட்டுகின்றன.

தேஹ புஷ்டியை மட்டுமின்றி, ஞான வைராக்யங்களையும் அநுக்ரஹிக்கும் அன்னத்தை ஸாக்ஷாத் அம்பாளிடமிருந்து ஆசார்யாள் யாசித்ததைச் சொல்லி உங்கள் எல்லாருக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

அன்னபூர்ணே! ஸதாபூர்ணே! சங்கர ப்ராண வல்லபே |
ஞாந வைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி ||

11-உபவாஸம்

11.1-ஏகாதசிக்கு இரட்டை போஜனமா?

ஏகாதச்யாம் து கர்தவ்யம் ஸர்வேஷாம் போஜன த்வயம் |

—இது ஒரு ச்லோகத்தின் முதல் பாதி. இதற்கு என்ன அர்த்தம்? ***"ஏகாதச்யாம் து கர்தவ்யம் ஸர்வேஷாம்"*** என்றால் “ஸகல ஜனங்களாலும் ஏகாதசியன்று இன்னவாறு செய்யப்பட வேண்டும்” என்று அர்த்தம்.

என்ன செய்யப்பட வேண்டும்?

"போஜன த்வயம்" என்று ‘ஆன்ஸர்’ வருகிறது.

அர்த்தம் புரிகிறதோல்லியோ? ‘த்வயம்’ என்றால் இரண்டு. ‘போஜன த்வயம்’– இரண்டு தரம் சாப்பாடு.

"எல்லாரும் ஏகாதசியன்று இரண்டு தடவை போஜனம் செய்ய வேண்டியது" என்று அர்த்தமாகிறது.

இதென்ன? ஏகாதசி என்றால் பட்டினி, தண்ணீர்கூட இல்லாமல் நிர்ஜலமாயிருக்க வேண்டும் என்பார்கள். இங்கேயானால் ஒரு தடவை மட்டுமில்லை, இரண்டு தடவை – போஜன த்வயமாக - சாப்பிட்டாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறது?

இது விசித்ரமாக வார்த்தை விளையாட்டுப் பண்ணியிருக்கும் ச்லோகம். இதில் "போஜன" என்று வருகிறதே அதை "போ", "ஜன" என்று இரண்டு வார்த்தைகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஸரியான அர்த்தம் கிடைக்கும்.

"போ" என்றால் "ஓய்!" என்று கூப்பிடுவதாக அர்த்தம்.

"போ! ஜன!" என்றால் "ஓ, ஜனங்களே!" என்று எல்லா மக்களையும் கூப்பிடுவது.

இப்போது நான் சொன்ன ச்லோகத்துக்கு (பாதி ச்லோகத்துக்கு) என்ன அர்த்தமாகிறதென்றால்

"ஹே ஜனங்களே! ஏகாதசியில் எல்லாராலும் இரண்டு செய்யத் தக்கன - அதாவது இரண்டு கார்யம் செய்யத் தக்கன".

இரண்டு போஜனம் என்று அர்த்தம் இல்லை. இரண்டு காரியம் என்று ஆகிறது.

ஏகாதசியில் ஸகல ஜனங்களும் செய்யவேண்டிய தான அந்த இரண்டு காரியங்கள் என்ன?

அதைச் ச்லோகத்தின் பின் பாதி சொல்கிறது:

சுத்தோபவாஸ: ப்ரதம: ஸக்கதா ச்ரவணம் தத:

முதல் காரியம் உபவாஸம். இரண்டாவது காரியம் பகவத் கதைகளைக் கேட்பது.

ஏகாதச்யாம் து காத்வ்யம் ஸர்வேஷாம் போஜந த்வயம் |
சுத்தோபவாஸ: ப்ரதம: ஸக்கதா ச்ரவணம் தத: ||
சகல ஜனங்களும் ஏகாதசியன்று சுத்த உபவாஸமிருக்க வேண்டும்; ஈஸ்வர மஹிமைகளைக் கேட்க வேண்டும்.

11.2-உபவாஸம் எதற்காக?

சுத்த உபவாஸம் என்றால் முழுப் பட்டினி என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். 'உபவாஸம்' என்றால் 'கூட வஸிப்பது'. பகவனோடுகூட, அவனுக்குப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டு வஸிப்பதுதான் உபவாஸம். அன்றைக்கு வயிற்றில் ஒன்றையும் தள்ளாவிட்டால்தான் அப்படி அவனோடுகூட, கிட்டக்க வஸிக்க முடியும். மனஸ் அவன் கிட்டக்கவே கிடக்க வேண்டுமானால் அதற்கு முதலில் வயிறு வெறுமனே கிடக்கணும். சாப்பிட்டால் வயிற்றிலே 'கடாபுடா'. வேலைசெய்ய முடிவதில்லை. மனஸையும் எதிலேயும் நிறுத்த முடிவதில்லை. வயிறு அடைசலில்லாமலிருந்தால்தான் நன்றாகப் பிராணாயாமம் பண்ணி, மனஸை சுத்தி செய்துகொண்டு ஒருமுகமாக நிறுத்த முடியும். பெரிசாக மூச்சடக்கிக் கும்பகம் பண்ணவேண்டுமென்றில்லா விட்டாலும், தடைப்படாமல் தீர்க்கமாக ச்வாஸம் விடும்படியிருந்தால்தான் மனஸ் தியானத்தில் நிற்கும். வயிற்றில் கனம் இருந்தால் இப்படி ஃப்ரீயாக ச்வாஸிக்க முடியவில்லை. இதற்காகத்தான் உடம்பை நெற்றுப்போல ஆக்கிக்கொண்டு அதனால் ச்வாஸத்தை ஃப்ரீயாகவும் மனஸை லைட்டாகவும் பண்ணிக் கொண்டு நன்றாக ஈஸ்வர தியானத்தில் ஈடுபடும் பொருட்டு எப்போதுமே ஆஹாரத்தை லகுவாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், பக்ஷத்துக்கு ஒருநாள் சுத்தோபவாஸம் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் சாஸ்திரம் விதிக்கிறது.

இந்த உடம்புதான் 'நான்' என்று நினைத்துக் கொண்டிருப்பதால்தான் ஸதா இதற்கு ஸவரக்ஷணை பண்ணுவதையே கார்யமாக வைத்துக்கொண்டு, ஆத்மாவைக் கோட்டை விட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த தேஹாத்ம புத்தி போகணும். இதற்காகத்தான் சரீரத்துக்கு சிரமத்தை தருகிற உபவாஸங்களை

சாஸ்திரம் விதித்திருக்கிறது. உபவாஸங்களால் சரீரத்துக்கு ஏற்படுகிற சிரமங்களைச் சிரமமாகத் தெரியாமல் பழக்கிக் கொள்கிறோமென்றால், அப்போது தேஹத்தையே பிரதானமாக மதித்து அதன் ஸௌகர்யத்தையே கவனிக்கும் அபிமானத்தை விடுகிறோம் என்றுதானே அர்த்தம்?

'பசி எடுத்தாலும் பட்டினி கிடந்து; பழகு வம்பும் வீணும் பேசுவதில் ஸுகமிருந்தாலும் மௌனம் அநுஷ்டி; கண்ணை இழுத்துக் கொண்டு போனாலும் தூங்குவதில்லை என்று ராத்திரி பூரா விழித்துக்கொண்டு ஈஸ்வர ஸம்பந்தமாக ஏதாவது பண்ணிக்கொண்டிரு. இப்படியெல்லாம் பழகப் பழக தேஹாத்ம புத்தி போகும். சரீரம் எப்படியானாலும் சித்தம் பரமாத்மாவிடம் நிற்கும். இப்போது பிடித்தே பழக்கிக் கொள்ளாவிட்டால் மரண யாதனை என்று சொல்லுகிறார்களே, அந்தப் பெரிய ஹிம்ஸை சரீரத்துக்கு வரும்போது மனஸை எப்படிப் பரமாத்மாவிடம் செலுத்த முடியும்?' என்றுதான் சாஸ்த்ரங்கள் வ்ரத உபவாஸங்களை வைத்திருப்பது.

ஜீவிப்பதற்கு சாப்பாடு அவசியம்தான். இல்லாவிட்டால் உயிர் போய்விடும். ஆனால் சாப்பாடு கொஞ்சம் ஜாஸ்தியாகிவிட்டால்கூட உடம்புக்கு வியாதி வக்கைகள்தான். ஆரோக்கியத்துக்குக் காரணமான ஆஹாரமே லிமிட் தாண்டிவிட்டால் நோய்க்குக் காரணமாகிவிடும்.

மெஷின்கள்கூட விடாமல் வேலை செய்தால் கெட்டுப் போய் விடுகின்றன என்று அவ்வப்போது ரெஸ்ட் கொடுக்கிறார்கள். இப்படி வயிற்றுக்கும் ரெஸ்ட் கொடுத்தால் ஆரோக்யத்துக்கு ரொம்ப நல்லது.

உடம்பு என்று முழுசாக ஒன்றை எடுத்துக் கொண்டால் அதற்கு ஆறு நாள் வேலை கொடுத்தால் ஒருநாள் லீவ் தருவது என்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த உடம்புக்கு உள்ளே வயிறு முதலான உறுப்புக்கள் தனியாக வேலை பண்ணிக்கொண்டேயிருக்கின்றனவே! இவற்றில் ஹ்ருதயத்தையும் லங்க்ஸையும் கொஞ்சங்கூட 'ரெஸ்ட்' கொடுத்து வைக்க முடியாது. வயிற்றுக்குக் கொடுக்க முடியும்; கொடுக்கவும் வேண்டும். ஏனென்றால் ஸ்தூலமாக வெளியிலிருந்து வஸ்துக்களை வாங்கிக் கொண்டு அரைத்துக் கரைத்து ரொம்பவும் உழைப்பது அதுதான். எப்போது பார்த்தாலும் வேலை

செய்யும் கருவி அதுதான். எப்போது பார்த்தாலும் வேலை செய்யும் கருவி கெட்டு விடுவதுபோல் ஒரு வேளை மாற்றி இன்னொரு வேளை என்று ஓயாமல் வேலை பண்ணினால் ஜீர்ணக் கருவிகள் கெட்டுவிடும். ஆஹாரம்தான் ரத்தமாகி, பம்ப் ஆகும் போது மூளைக்குப் பாய்கிறது. அந்த மூளை ரொம்ப நுட்பமான அவயம். அதனால், அதற்கு இந்த ரத்த ஓட்ட 'வெய்ட்'டை அவ்வப்போது குறைக்க வேண்டும். இதற்கெல்லாம் உபவாஸம் உறுதுணை செய்கிறது.

ஆகவே உபவாஸமிருந்தால் ஆரோக்யம் போய்விடும் என்று தோன்றினாலும் உண்மையில் இதுதான் இருக்கிற ரோகங்களையும் போக்கும் பெரிய மருந்து; **லங்கனம் பரம ஔஷதம்** என்றே வைத்ய சாஸ்த்ர வசனம்.

லங்கனம் என்றால் பட்டினி என்று ஏன் அர்த்தம் பண்ணிக் கொள்கிறோம் தெரியுமா? அந்த வார்த்தைக்கு நேர் அர்த்தம் "தாண்டுவது" என்பதாகும். ஒரு வேளை சாப்பாடு இல்லாமல் அதைத் தாண்டிப் போய்விட்டால், skipping a meal என்று சொல்கிறது இதுதான், அதுவே லங்கனம்.

வைத்ய சாஸ்த்ரம் சொல்கிற லங்கனத்தையே மத நூல்களும் சொல்கின்றன திருவள்ளுவரும் இதைச் சொல்லியிருக்கிறார். அவ்வப்போது ஒரு வேளை, இரண்டு வேளை சாப்பிடாமலிருந்தால்தான் வயிற்றிலே ஏற்கனவே போட்டதில் துளிக்கூட ஜீரணமாகாமலில்லை என்று நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். இப்படி ஏற்கனவே சாப்பிட்டது முழுதும் ஜெரித்துப்போனதை ('அற்றதை') த் தெளிவாகத் தெரிந்துகொண்ட பிறகே ஒருவன் மறுபடி உண்பானானால் அப்படிப்பட்டவனுடைய உடம்புக்கு மருந்து எதுவும் வேண்டாம் என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

சாப்பாட்டினால்தான் ஆரோக்யம் என்று நாம் நினைத்தாலும் வியாதிக்கும் அதுதான் முதல் தோழன் என்பதற்கு ஒன்று சொல்கிறேன். ஜ்வரம் வந்தால் டாக்டர் முதல் கார்யமாக என்ன பண்ணச் சொல்கிறார்? 'சாப்பாட்டை நிறுத்து; கஞ்சி குடி; இல்லாவிட்டால் இன்னபானம் சாப்பிடு' என்றுதானே சொல்கிறார்?

எந்த நோயானாலும் அதற்குப் பத்தியமாக என்னென்ன சாப்பிடக் கூடாது என்றுதான் முக்யமாகக் கண்டிப்புப் பண்ணுவதிலிருந்தே வியாதிக்கு ஆதாரம் ஆஹாரம்தானென்று தெரிகிறது.

இப்படி சரீர ரீதியில் ஆரோக்யத்துக்கு நன்மை செய்கிற பட்டினியே அதைவிட ஆத்ம ஸம்பந்தமாக நல்லது செய்கிறது.

ஆஹாரங்களில் பல வகைகள் உடம்புக்குப் புஷ்டி தந்தாலும் மனஸைக் கெடுப்பவையாயிருக்கின்றன. ஸத்வ பதார்த்தமே சாப்பிட்டு வந்தாலுங்கூட உடம்புக்குள்ளே கெட்டியான சாப்பாடு ஒன்று போய் விழுந்தால் அது மனசை லேசாக்கி மேலே கிளம்ப விடாமல் கனமாகக் கீழே இழுத்துக்கொண்டுதானிருக்கும். இதனால்தான் நடு நடுவே சுத்தப் பட்டினி விதித்திருக்கிறது.

பட்டினி கிடக்கிறபோது மனசுக்குப் பரமார்த்திகமாகவும், பகவத் விஷயமாகவும் போய்த் தோய்ந்து நிற்கிற தன்மை உண்டாகிறது. இதனால்தான் பகவத் ஸ்மரணம் விசேஷமாக இருக்கவேண்டிய தினங்களில் பூர்ண உபவாஸமோ, ஒருபொழுதோ வைத்திருக்கிறது.

காந்திகூட ஆத்ம சுத்திக்காகவேதான் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லி அடிக்கடி பட்டினி கிடந்தார். அந்தச் சமயங்களில் தமக்குப் புத்தியிலே ஒரு தெளிவு ஏற்பட்டதாகவும் மனஸில் சுத்தி உண்டானதாகவும் சொல்லியிருக்கிறார்.

இப்படியாக உடல் நலத்தோடு உயிர் நலத்தையும் இம்மையோடு மறுமையையும் சேர்த்து ஆன்றோர்கள் உபவாஸ விதிகளைத் தந்திருக்கிறார்கள்.

அதோடு இப்படிப்பட்ட உபவாஸங்கள் எல்லா ஜனங்களாலும் அநுஷ்டிக்கப்பட்டால் உணவுத் தட்டுப்பாடு என்ற பிரச்னையே வராது.

முதலில் கஷ்டமாயிருந்தாலும் அப்யாஸத்தினால் சமாளித்து விடலாம். பக்தி பலத்தோடு, சங்கல்ப பலத்தோடு ஆரம்பித்தால் அதிலே தெரிகிற நல்ல பலனைப் பார்த்தே நாளுக்கு நாள் உபவாஸ நியமத்தில் ஈடுபாடு வலுக்கும்.

ஆரம்பத்தில் உடம்பை வாட்டுவது சிரமமாயிருந்தாலும் பிற்பாடு ஏற்படுகிற பெரிய இன்பத்துக்காக இதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

வ்ரதோபவாஸ நியமை: க்லேசித: ஸுகம் அச்நுதே |
இக்ஷு க்லேசாத் யதா (ஆ) நந்தம் ததா ப்ராப்நோதி தத் ஸுகம் ||
அதாவது, கரும்பைக் கசக்கிக் கிலேசப்படுத்துவதால்தான் கருப்பஞ்சாற்றை எடுத்துப் பானம் பண்ணுகிற இன்பம் கிடைப்பது போல, உடம்பைக் கிலேசப்படுத்துவதால்தான் உள்ளத்துக்கு ஸுக ரஸம் கிடைக்கிறது.

வியாபாரி முதலில் கையிலிருப்பதைச் செலவழித்துத்தான் பண்டங்கள் வாங்குகிறான். அப்புறம் அதை விற்று அதிகப் பொருள் சம்பாதிக்கிறான். அப்படியே உடம்பை முதலில் செலவழித்து, அப்புறம் அந்தச் செலவுக்கு மேல் பெரிய வரவு ஆத்மாவுக்கு சம்பாதித்துக் கொள்வதற்கே உபவாஸமிருப்பது.

சாப்பிடுகிற நாட்களிலும் பகவத் த்யானம் பண்ணுங்கள்; உபவாஸ நாளில் சாப்பிடாமலிருந்தும் த்யானம் பண்ணிப் பாருங்கள். தனக்கே வித்யாஸம் தெரியும். அந்த லாபத்துக்காக இந்த நஷ்டப் படலாம் என்று தெரிந்துகொள்வீர்கள். நான் நிறையச் சொல்வதைவிடப் பிரத்யக்ஷமாகப் பண்ணிப் பார்த்து விட்டாலே உபவாஸத்தின் அவச்யமும் பெருமையும் விளங்கிவிடும்.

வயிற்றை வற்றப் போடுகிற நாட்களில் மனசுக்கு த்யானாம்ருத போஜனத்தைக் கொடுத்துக் கொண்டால் எது பெரிய இன்பம் என்று தெரியும்.

சாப்பாடு இல்லாத வாய்க்கு அதைவிட ரஸம் சொட்டுகிற அவனுடைய நாமாமிருதத்தை, லீலாமிருதத்தை ஜபமாக, பஜனையாக, ஸ்தோத்ரமாக, பாராயணமாகக் கொடுத்துக் கொள்ள வேண்டும். காதுக்கு அம்ருத போஜனமாகக் கீர்த்தனையும், ஹரிகதையும் கிடைக்கப் பண்ணணும். ஏகாதசி புராண படநம்-ச்ரவணம் [படிப்பதும் கேட்பதும்] ரொம்ப விசேஷம்.

இதற்கெல்லாம் basic-ஆக, preliminary-யாகப் பண்ணவேண்டியது பட்டினி. அதைப் பண்ணினால்தான் இவற்றின் effect பூர்ணமாய்க் கிடைக்கும். அதனால்தான், ஆரம்பத்தில் சொன்ன ச்லோகத்தில் முதலில் 'சுத்தோபவாஸ'த்தை 'ப்ரதமம்' என்று சொல்லிவிட்டு அதற்கப்புறமே 'தத:' என்று இரண்டாவதாக 'ஸத்கதா ச்ரவண'த்தைச் சொல்லியிருக்கிறது.

11.3-உபநிஷத்தில் உபவாஸம்

உபநிஷத்திலேயே பட்டினி போட்டு வ்ரதம் இருப்பதைச் சொல்லியிருக்கிறது*. ஆத்மாவை அடைவதற்கு பிராம்மணன் அத்யயனம், யஜ்ஞம், தானம், தபஸ், உபவாஸம் முதலியவற்றை அநுஷ்டிக்கிறான் என்கிற இடத்தில் அது உபவாஸமிருப்பதைச் சொல்லியிருக்கிறது. **"அநாசகேந"** என்று உபநிஷத்தில் உபவாஸத்தைக் குறித்திருக்கிறது. 'அசனம்' என்றால் சாப்பாடு. 'ஆச' என்றால் சாப்பிடுவது. 'அநாசகேந' என்றால் 'சாப்பிடாமலிருப்பதால்'. 'சாப்பிடாமல் உபவாஸம் இருப்பதால் ஆத்மாவை அடைய முயல்கிறார்கள்' என்று உபநிஷத் சொல்கிறது.

---

* ப்ருஹதாரண்கம் - 4.4.22

11.4-ஆசார்யாள், கண்ணனின் மிதவாதம்

இதற்கு ஆசார்யாள் ரொம்பவும் ஃபிலஸா ஃபிகலாக பாஷ்யம் செய்துவிட்டார். "சாப்பாடு இல்லாமலிருப்பதென்றால் போஜன நிவ்ருத்தி என்று அர்த்தமில்லை. வெறுமே போஜனத்தை விட்டால் பிராணன்தான் போகுமே தவிர ஆத்ம ஞானம் வந்தவிடாது. அதனால் இங்கே 'அசனம்' (சாப்பாடு) என்று சொன்னது ஆசையநுபோகங்களைத்தான். காம நுகர்ச்சியை விடுமாறே இந்த மந்திரம் சொல்கிறது" என்று பாஷ்யம் பண்ணியிருக்கிறார்.

ஆனால் இம்மாதிரி ஆசை அற்று போவதற்கும் பட்டினி கிட்டினி கிடந்து வ்ரத உபவாஸமிருப்பது உதவத்தான் செய்கிறது. அதுவும் ஆசார்யாளுக்குத் தெரியாததில்லை. நம் மதத்தை மற்ற மதங்கள் அடித்துக் கொண்டுபோக இருந்தபோது மீட்டுக் கொடுத்தது அவர்தான். ஞான மார்க்கம் என்று த்யான விசாராதிகள் பண்ணுவதை மட்டுந்தான் அவர் மீட்டு ரக்ஷித்துத் தந்தார் என்றில்லை. நம்முடைய பூஜா பத்ததிகள், கோயில், குளம், உத்ஸவம், பண்டிகை, வ்ரதம் எல்லாவற்றுக்குமே புனர்ஜீவன் தந்தவர் அவர்தான். அதனால் இன்றைக்கு நாம் ஏகாதசி வ்ரதம் என்று ஒன்று இருக்கிறோமென்றால் அதற்குக் காரணமே அவர்தான். புராணானாம் ஆலயம் என்பதாக ஸகல புராணங்களுக்குமே உறைவிடமாக இருந்த ஆசார்யாள், புராணங்கள் தலைமேல் வைத்துக் கொண்டாடும் ஏகாதசி வ்ரதத்தை அவசியமில்லாதது என்று சொல்லவே மாட்டார்.

இங்கே அவர் சொல்வது என்னவென்றால், ஏகாதசி மாதிரி பக்ஷத்துக்கு ஒருநாள் சுத்தப் பட்டினி போடுவதையல்ல. "இனிமேலே சாப்பிடுவதேயில்லை" என்று உண்ணாவிரதம் இருந்து ஸாதனை பண்ணுவதைத் தான் சொல்கிறார். அந்த மாதிரி ஒரே தீவிரமாகப் போகிறதில் ஒன்றும் பிரயோஜனமில்லை. அவ்வப்போது ஒருவேளை, அல்லது ஒரே ஒரு நாள் பட்டினி போடுவது என்பது 'நேச்ச'ருக்கே அநுகூலமாக இருப்பது. ஒரேயடியாக 'சாகிற மட்டும் உண்ணாவிரதம்' என்றால் அது 'நேச்ச'ரை எதிர்த்துக்கொண்டு போவதாகும். அப்போது 'நேச்ச'ரும் பழி வாங்கும். உடம்பைச் சித்ரவதை பண்ணும். அந்த வதையை நினைத்துக்கொண்டு அதைச் சமாளிக்க யத்தனிப்பதிலேயேதான் மனஸ் போகுமே தவிர, ஸாதனா லக்ஷ்யத்தில் ஈடுபட்டு நிற்காது. இம்மாதிரி தன்னைத்தானே க்ரூரமாக வ்ருத்திக் கொள்கிற வழிகளை ஆசார்யாள் ஒப்புக் கொள்ளாததால்தான் இப்படிச் சொல்கிறார்.

கிருஷ்ண பரமாத்மாவும் எக்ஸ்ட்ரீம்களை வேண்டாம் என்றுதான் சொல்கிறார். '***நாத்யச்நதஸ்து யோகோஸ்தி ந சைகாந்தம் அநச்நத: ... யுக்தாஹார ... ஸ்ய யோகோ பவதி து:கஹா*** – பெருந்தீனி தின்கிறவனுக்கும் யோகம் வராது, ஒரேயடியாகப் பட்டினி கிடக்கிறவனுக்கும் யோகம் வராது,

யுக்தமான அளவு மிதமாய் சாப்பிடுகிறவனுக்கே யோகம் ஸித்தித்துத் துக்கத்தைப் போக்கும்" என்கிறார்*. ஒரேயடியாகப் பல நாள் சேர்ந்தாற்போல் உண்ணாவிரதம் கிடப்பது நம் சாஸ்த்ர ஸம்மதமல்ல. அது ஒரே ஓய்ச்சலில் கொண்டுவிட்டு, மனஸையும் சுத்தி பண்ணுவதற்குப் பதில் ஒரேயடியாகப் பலஹீனமாக்கிப் பைத்தியத்திலோ ஸ்மரணை தப்புவதிலோதான் கொண்டுவிடும். பகவத் ஸ்மரணையில் ஸ்டெடியாக நிற்கப் பண்ணாது. ஆனால் சாஸ்த்ரங்களில் சொன்னாற்போல் அவ்வப்போது ஒருபொழுதும், பதினைந்து நாளுக்கு ஒருமுறை சுத்தோபவாஸமும் இருப்பது மனஸை சுத்தமாக்கி, திவ்ய ஸ்மரணத்தில் பலப்படுத்தி நிறுத்தி வைக்கும்.

ரொம்பவும் தீவிரமாகவும், 'forced' ஆகவும் [வலுக்கட்டாயமாகவும்] உபவாஸாதிகளை அநுஷ்டித்தால் எல்லாம் சிதறிப் பிரயோஜனமில்லாமல் போய்விடும்; அதனால் gradual-ஆக (படிப்படியாக) ப் போக வேண்டும் என்பதுதான் நம் ஆசார்யாள், கீதாசார்யனான பகவான் இவர்களின் அபிப்ராயம். அவர்கள் சொன்ன context-ல் அடியோடு நிராகரிப்பது போல அழுத்திச் சொல்லும்படியாகிவிட்டது.

அதியாகப் போகக்கூடாது என்பதாலேயே போஜன நிவ்ருத்தியால் ப்ரயோஜனமில்லை என்று கொஞ்சம் அடித்தே ஆசார்யாள் சொல்லிவிட்டார்.

'பூணூல் ஒருத்தனை பிராம்மணனாக்கி விடவில்லை; ஒழுக்கம்தான் அப்படி ஆக்குகிறது 'என்று சொன்னால், உடனே உபநயன ஸம்ஸ்காரத்தை நிறுத்தி விட வேண்டும் என்று அர்த்தம் பண்ணிக்கொள்வதா? ஒன்று சிலாக்யமானது, ஆனால் அதைவிட சிலாக்யமாக இன்னொன்று இருக்கிறது என்றால் அப்போது இரண்டாவதை வலியுறுத்துவதற்காக முதலாவதைக் கழித்துக் கட்டுவது போல exaggerate பண்ணியே பேசுவது வழக்கம். 'பாயின்ட்' நன்றாக நம் மனஸில் தைப்பதற்காக இப்படிச் சொல்கிறது. பிராம்மணனுக்குப் பூணூல் முக்யமானாலும், அதைவிட ஒழுக்கம் முக்யம் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் பூணூலே வேண்டாம், ஒழுக்கம் போதும் என்பது. திருக்குறளில் ஆயிரம் யாகத்தைவிட ஒரு பிராணிக்குக்கூட ஹிம்ஸை செய்யாமலிருப்பது உசத்தி என்று சொல்லியிருப்பதும்

இப்படித்தான்[1] கீதையில் இனனோரிடத்திலும் ஒரு ஆசாரத்தின் முக்யத்வத்தை வலியுறுத்துவதற்காகவே இன்னொரு ஆசாரத்தை மட்டம் தட்டிக் கழித்துக் கட்டிப் பேசியிருக்கிறார். 'அக்னியை விட்டு விட்டதால் ஒருத்தன் ஸந்நியாஸி இல்லை; கர்மாவை விட்டுவிட்டதால் ஒருத்தன் ஸந்நியாஸி இல்லை; என்று அங்கே (பகவான்) சொல்கிறார்:

ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ ச ந நிரக்நிர் ந சாக்ரிய:[2]

ஸந்நியாஸிக்கு அக்னி ஹோத்ரம், ஒளபாஸனம், யஜ்ஞம் முதலான அக்னிகார்யம் எதுவும் கிடையாது. அவனுக்கு மற்ற பூஜை முதலான கர்மாக்களும், ஸமூஹக் கடமைகளுங்கூடக் கிடையாது. இது ஸகல சாஸ்திரங்களாலும் ஏற்படுத்தப்பட்ட ஸந்நியாஸாச்ரம தர்மமாகும். அப்படியிருக்க 'நிரக்னி' (அக்னியை விட்டவன், `அக்ரியன்' (கர்மா இல்லாதவன்) என்பதால் ஒருத்தன் ஸந்நியாஸி ஆகிவிடமாட்டானென்றால் எப்படி ஸரியாகும்?

இதற்கு ச்லோகத்தின் இன்னொரு வரியை, இதற்கு முந்தி வருகிற முதல் வரியைப் பார்க்க வேண்டும். அதிலே, **"அநாச்ரித: கர்ம பலம் கார்யம் கர்ம கரோதி ய:"** என்கிறார். தானாக எந்தக் கார்யம் வந்து வாய்த்தாலும் அதைத் 'தான் பண்ணுகிறோம்' என்ற உணர்ச்சியில்லாமல் பண்ணிக் கொண்டு, அந்தக் கர்மாவின் பலனைக் கொஞ்சங்கூடக் கருதாமல் இருப்பதுதான் உண்மையான ஸந்நியாஸ லக்ஷணம் என்பது பகவான் அபிப்ராயம். அதைத்தான் இந்த வரியில் சொல்லியிருக்கிறார். இப்படிக் கர்ம பலனில் அனாச்ரிதனாக இருந்துகொண்டு, எவன் வாய்த்த கர்மாவைப் பண்ணுகிறானோ 'அப்படிப் பட்டவனே ஸந்நியாஸி அவனே யோகி - ***"ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ ச"*** என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டு, அப்புறந்தான் அதற்கு இன்னம் வலுக்கொடுப்பதற்காக***, "ந நிரக்நிர் ந சாக்ரிய:"*** – நெருப்பை விட்டவனோ கர்மாவை விட்டவனோ இல்லை"என்கிறார்.

இதற்கு சரியாக அர்த்தம் பண்ணிக் கொண்டால், "ஸந்நியாஸ ஆச்ரமத்திலிருக்கிற ஒருவன் வெறுமே 'நெருப்பை விட்டேன், கர்மாவை விட்டேன்' என்று சொல்லிக்கொண்டே சொந்தப் பலனை உத்தேசித்து

வேலைகள் பண்ணிக் கொண்டிருந்தால் அது ஸந்நியாஸமே இல்லை" என்று பகவான் சொல்வதாகவே ஆகும். இவன் அக்னியை விடத்தான் வேண்டும். தான் கர்த்தா என்ற எண்ணத்தோடு கர்மா செய்வதை விடத்தான் வேண்டும்; ஆனாலும் இதைவிட முக்யம் பலனை எதிர்பார்க்காமல் பட்டுக் கொள்ளாமல் வாய்த்த கர்மாவைப் பண்ண வேண்டும் என்பதே அர்த்தம்.

உபநிஷத்திலே சொல்லியிருக்கிற "அநாசகேன" என்பதற்கு "போஜனத்தை விட்டு விட்டு" என்றும் அர்த்தந்தான். ஆனால் அதைவிட முக்யமான அர்த்தம் "இந்த்ரிய இச்சைகளைப் பூர்த்தி பண்ணிக் கொள்வதை விட்டுவிட்டு" என்பதேயாகும். இந்த அபிப்ராயத்துக்கு அழுத்தங் கொடுப்பதற்காகவே ஆசார்யாள், "போஜனத்தை விடுவது இங்கே தாத்பரியமில்லை" என்கிறார்.

அவ்வப்போது ஆஹாரத்தை நிறுத்துவது சரீரத்துக்கும் நல்லது. மனஸுக்கும் நல்லது.

ஆஹார நியமங்களில் இதனால்தான் ஸத்வ போஜனம் என்று சாப்பிடத்தக்கதான உணவு முறையை வைத்ததோடு, அந்த ஸத்வ போஜனமுமில்லாத பட்டினி தினங்களாக வ்ரத உபவாஸங்களையும் சொல்லியிருக்கிறது.

---

* பகவத்கீதை - 6.16-17

1. " தெய்வத்தின் குரல்"முதல் பகுதியில் "பரோபகாரம்"என்ற உரையும், இரண்டாம் பகுதியில் "வேதம்"என்ற உரையில் "ஜீவஹிம்ஸை செய்யலாமா?"என்ற உட்பிரிவும் பார்க்க.

2. கீதை - 6.1

11.5-பண்டிகை, வ்ரதம்; ஏகாதசிச் சிறப்பு

பகவத் பரமாகவே பண்டிகைகள் என்று சிலதை வைத்திருப்பதோடு வ்ரதங்கள் என்றும் சிலவற்றை வைத்திருக்கிறது. பண்டிகை என்பது நாம் ஆடை

ஆபரணங்களுடன் அலங்காரம் பண்ணிக்கொண்டு, பகவானுக்கு அலங்காரம் பண்ணிப் பூஜை செய்து, அவன் ப்ரஸாதமாக அறுசுவை உணவு சாப்பிட்டு ஆனந்தமாயிருப்பது – போகிப்பண்டிகை, தீபாவளிப் பண்டிகை மாதிரி. புது வஸ்த்ராதிகள், அலங்காரம், பஞ்சபக்ஷ்ய போஜனம் முதலியன இல்லாமல், வழக்கமாகச் சாப்பிடுகிற மாதிரிக்கூட இல்லாமல், நியமத்தோடு உபவாஸமிருந்து பூஜை பண்ணுவது வ்ரதம். க்ருத்திகை வ்ரதம், ஷஷ்டி வ்ரதம், சதுர்த்தி வ்ரதம், ரிஷிபஞ்சமி வ்ரதம், ப்ரதோஷ வ்ரதம், ஸோமவார வ்ரதம், ச்ரவண வ்ரதம், பயோவ்ரதம், இது எல்லாவற்றையும்விட ஸர்வஜன அநுஷ்டானமாக ஏகாதசி வ்ரதம் என்று பல ஏற்பட்டிருக்கின்றன. எல்லா மதங்களிலுமே feasting, fasting என்று இந்த இரண்டும் இருக்கின்றன.

மற்ற வ்ரத தினங்களிலோ பூஜைக்கு அப்புறம் ஒரு பொழுதாவது பலஹாரம் பண்ணலாமென்றிருக்கிறது. ஏகாதசியில்தான் பூர்ண உபவாஸம்.

மற்ற வ்ரதங்களைப் புராண, ஆகமங்கள் சொல்கின்றன. அதில் சிவபரமான புராணாகமங்கள் சொல்பவைகளை வைஷ்ணவர்கள் அநுஷ்டிக்க மாட்டார்கள்; வைஷ்ணவ கிரந்தங்களில் சொல்லியுள்ளதை சைவர்கள் செய்ய மாட்டார்கள். ஏகாதசியோவென்றால் ஒவ்வொரு sect மட்டும் எடுத்துக்கொள்ளும் புராண ஆகமங்களில் மட்டுமின்றி ஹிந்து என்று பெயர் இருக்கிற அத்தனை பேருக்கும் பொதுவான தர்ம சாஸ்திரங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் இதை ஸர்வஜன அநுஷ்டானமான வ்ரதம் என்று சொன்னேன்.

விஷ்ணு நித்ரை செய்து கொண்டிருந்தபோது லோகத்தை ஹிம்ஸை பண்ணிய ஒரு அஸுரனைக் கொல்வதற்காக அவருடைய சரீரத்திலிருந்தே ஸ்த்ரீ ரூபமாக ஒரு சக்தி வெளியே போய் ஸம்ஹாரம் செய்துவிட்டு வந்ததாகவும், விழித்துக் கொண்ட பகவான் அவளுக்கே ஏகாதசி என்று பேர் கொடுத்து இந்த ஏகாதசி வ்ரதத்தை ஏற்படுத்தினாரென்றும் பாத்ம புராணத்தில் கதை வருகிறது. மஹாவிஷ்ணு கூர்மமாகவும், தன்வந்திரியாகவும், மோஹினியாகவும் அவதாரங்கள் எடுத்து, க்ஷீராப்தியில் அம்ருதம் கடையப் பண்ணி அதை எடுத்துக் கொடுத்த நாளே ஏகாதசி என்பதாலும் அதைப் பொதுவில் விஷ்ணு ஸம்பந்தமுள்ளதாக நினைக்கிறோம். ஆனால் இந்த

அம்ருத மதன ஸமயத்தில் முதலில் உண்டான காலகூட விஷத்தைப் பரமேச்வரன் புஜித்ததை முன்னிட்டுத்தான் அன்று எவரும் சாப்பிடக் கூடாது என்று ஏற்பட்டிருப்பதாக சைவர்கள் சொல்வதுண்டு.

இப்படி சைவம், வைஷ்ணவம் இரண்டுக்கும் ஏற்கத் தக்கதாயிருப்பதோடு ஹிந்துவாகப் பிறந்தவனில் எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டவனாயினும், எந்த ஜாதியைச் சேர்ந்தவாயினும் ஸகலருக்குமான வாழ்க்கை விதிகளைப் போடுகின்ற தர்மசாஸ்த்ரமும் ஏகாதசி உபவாஸத்தை விதித்திருப்பது அதன் விசேஷத்தைக் காட்டுகிறது.

தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் உபவாஸ நாட்களைச் சொல்கிறேன். ஒவ்வொரு பக்ஷத்திலும் வரும் ஏகாதசியன்று முழுப்பட்டினி கிடக்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமை, அமாவாஸ்யை, பௌணர்மி ஆகிய நாட்களில் பகலில் மட்டும் போஜனம் செய்து இரவில் உபவாஸமிருக்க வேண்டும். ஒவ்வொரு பக்ஷத்திலும் அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் பகலில் சாப்பிடாமல், ராத்திரி மட்டும் ஆஹாரம் பண்ண வேண்டும்.

ராமநவமி, கோகுலாஷ்டமி, சிவராத்திரி ஆகியனவும் பூர்ண உபவாஸ தினங்களாகச் சொல்லப்ப்ட்டிருக்கின்றன. ஆனால் சிவராத்திரியில்தான் இதை ஓரளவுக்கு விதிப்படிச் செய்வதாகவும் மற்ற இரண்டு தினங்களில் பூஜைக்கு அப்புறம் சாப்பிடுவதாகவும் (கிருஷ்ண ஜயந்தி பூஜை ராத்ரியில் செய்யப்படுவதால் பலஹாரம் செய்வதாகவும் -இதில் ஏகப்பட்ட பக்ஷண தினுஸுகள் சேர்ந்துவிடும்) நடந்து விடுகிறது.

குருவார வ்ரதம் என்பது நடைமுறையில் பரவியிருக்கிறது.

தக்ஷிணத்தில் எல்லாவற்றையும்விட அதிக வழக்கிலிருப்பது சனிக்கிழமை வ்ரதம்தான். ரொம்பப் பேர் அன்று ராத்ரி போஜனம் பண்ணுவதில்லையென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேங்கடரமண ஸ்வாமியை உத்தேசித்து இந்த வ்ரதம் ஏற்பட்டிருக்கிறது. **"கலௌ வேங்கடநாயக:"** [கலியுகக் கடவுள் ஏழுமலையானே] என்பதற்கேற்க, அவரது வ்ரதமே வெகுவாக அநுஷ்டானத்திலிருக்கிறது – சாஸ்த்ரத்தில் அது இல்லாவிட்டாலும்.

இதேபோல ஸோமவார வ்ரதமும் இங்கே சைவர்களிடையேயும், ஸ்மார்த்தகளிடையேயும் ஓரளவு நிறையவே வழக்கிலிருக்கிறது. வடக்கேயோ சைவ வைஷ்ணவ வித்யாஸமில்லாமல் எல்லோருமே ஸோமவார விரதமிருக்கிறார்கள். அதனால்தான் லால்பஹாதூர் சாஸ்திரிகூட ரொம்பவும் உணவு நெருக்கடி ஏற்பட்டபோது எல்லாரும் திங்கட்கிழமை உபவாஸமிருப்பது என்று வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார். திங்கட்கிழமை ராத்ரி ராஜாங்க விருந்துகள் நடத்துவதில்லை என்றேகூட நிறுத்தி வைக்கப்பட்டது.

இப்படி ராஜாங்க ரீதியிலேயே ஸோமவார 'ஒரு பொழுது' விதிக்கப்பட்டதிலிருந்து, உபவாஸங்களுக்கு சாஸ்த்ரத்தில் சொன்ன பலன்களோடு உணவுப் பிரச்னையை குறைப்பதில் பங்கு இருக்கிறதென்பதும் புதிதாகத் தெரிய வந்திருக்கிறது. சாஸ்த்ரப் பிரகாரம் எல்லோரும் உபவாஸாதிகளை அநுஷ்டித்தால் உணவிலே நமக்கு எப்போதும் 'ஸர்ப்ளஸ்', ஏற்பட்டு, `எக்ஸ்போர்ட்' பண்ணி 'எக்ஸ்சேஞ்ச்' கூட நிறைய ஸம்பாதித்து விடலாம்!

சாந்த்ராயணம் என்னும் ஒரு வ்ரதம் உண்டு. உடம்பைப் போட்டு ரொம்ப வருத்திக் கொள்ளப்படாது தான் என்பது நம் மதக் கொள்கையானாலும், எத்தனை ஸாதனைகள் பண்ணியும் சித்த சுத்தி வராதவர்கள், தங்களுக்கு மற்றவர்களைவிட ஜாஸ்தியாயிருக்கிற பூர்வ பாப கர்மாதான் இப்படிப் பழி வாங்குகிறதென்று புரிந்து கொண்டு அதைக் கழிப்பதற்காக உடம்பை வருத்திக் கொண்டு சில அநுஷ்டானங்களைப் பண்ணும்படி சாஸ்த்ரம் விதிக்கிறது. இதற்கு 'க்ருச்ரம்' என்று பெயர். இப்படிப் பண்ணினால் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் அதற்குப் பதில் 'க்ருச்ர ப்ரதிநிதி'யாக இத்தனை ஆயிரம் காயத்ரி பண்ண வேண்டும் என்றும் இருக்கிறது. இப்படி 'ஸ்ப்ஸ்டிட்யூட்'டைச் சொல்லிவிட்டதால், இந்த 'ஸப்ஸ்டியூட்'டுக்கும் 'ஸப்ஸ்டிட்யூட்', அதற்கும் 'ஸப்ஸ்டியூட்' என்று போய், ஒரு கோதானம் பண்ணிவிட்டால் அது க்ருச்ரத்துக்கு ஸமானம் என்று ஆகி பசுவுக்குப் பதில் அதன் விலையைத் தக்ஷிணையாகத் தருவதாக ஆரம்பித்து, இந்தத் தக்ஷிணையையும் குறைத்துக் கொண்டே போய், தற்போது பரிஹாஸத்துக்கு

இடமாக, ஒரு பிராம்மணனுக்கு ஆறே காலணா தக்ஷிணை கொடுத்துவிட்டால் க்ருச்ரம் அநுஷ்டித்தாகி விட்டது என்று வைத்துக் கொண்டிருக்கிறோம்! பாப பரிஹாரமாக உடம்பை வருத்திக் கொள்வதற்காகவே சாந்த்ராயண விரதம் ஏற்பட்டிருக்கிறது. சந்திரகலை வளர்வது தேய்வதைப் பொறுத்து போஜனம் செய்யும் அன்ன கவளத்தின் எண்ணிக்கையை அமைத்துக் கொள்வதுதான் சாந்த்ராயணம்.

இதை ஆரம்பிக்கிற திதியையட்டி இரண்டு தினுஸுகள். ஒன்றை 'கட்டெறும்பு சாந்த்ராயணம்' என்றும், மற்றதை 'கோதுமை சாந்த்ராயணம்' என்றும் வேடிக்கையாகச் சொல்லலாம். கட்டெறும்பு எப்படியிருக்கிறது? தலை பெருத்து ஆரம்பிக்கிறது; அப்புறம் நடுவில் சிறுத்துத் தேய்ந்துவிடுகிறது; மறுபடி பின்பாதி பெருத்துக் கொண்டு போகிறது. இதே மாதிரி ஒரு தினுஸு சாந்த்ராயணத்தைப் பௌர்ணமியன்று ஆரம்பித்து, அன்று பதினைந்து கவளம் சாப்பிடவேண்டும். மறுநாளான க்ருஷ்ணபக்ஷப் பிரதமையன்று பதினாலு கவளம், அதற்கு மறுதினமான த்விதியை பதின்மூன்று கவளம் என்று இப்படியே குறைத்துக்கொண்டே போய் அமாவாஸ்யையன்று முழுப்பட்டினி கிடக்க வேண்டும்; அப்புறம் மறுதினமான சுக்லபக்ஷப் பிரதமையன்று ஒரு கவளம், த்விதியைக்கு இரண்டு கவளம் என்று ஏற்றிக் கொண்டே போய் பௌர்ணமியில் பதினைந்து கவளம் என்று முடிக்க வேண்டும்.

கோதுமை எப்படியிருக்கிறது? ஊகமுள் மாதிரி சிறுத்து ஆரம்பிக்கிறது. நடுவிலே பெருத்து மறுபடி சிறுத்து முடிகிறது. இதேபோல் சாந்த்ராயண நியமத்தை சுக்லபக்ஷப் பிரதமையில் ஆரம்பித்து, அன்றைக்கு ஒரே ஒரு கவளம் போஜனம் செய்யவேண்டும். அப்புறம் ஒவ்வொரு திதிக்கும் ஒவ்வொரு கவளம் கூட்டிக்கொண்டே போக வேண்டும்.பௌர்ணமியன்று பதினைந்து கவளமாகும். அதற்கு மறுநாளிலிருந்து கிருஷ்ணபக்ஷம் பூராவும் ஒவ்வொரு கவளமாகக் குறைத்துக் கொண்டே வந்து அமாவாஸ்யையன்று சுத்த உபவாஸத்துடன் முடிக்க வேண்டும்.

சாந்த்ராயணத்தில் முழுப்பட்டினி கிடக்கும் நாள் தவிர மற்ற தினங்களில் ஒரே வேளைதான் சாப்பிட வேண்டும் - அன்றைக்கு எத்தனைக் கவளமோ அந்தக் கணக்குப்படி.

விரதங்களைப் பொதுஜனங்கள் 'ஒரு பொழுது' என்பார்கள். அநேகமாக பகலில், அன்னம் சேர்த்துக் கொண்டு சாப்பிடுவதையும் இரவில் இட்லி, தோசை போன்வற்றைச் சாப்பிடுவதையும் வ்ரதாநுஷ்டானமாக நினைக்கிறார்கள். சாஸ்திரப் பிரகாரம், அன்னத்துக்கு பதில் இப்படி வயிறு நிறைய, நல்ல புஷ்டியுள்ள இட்லி, தோசை இத்யாதிகளைச் சாப்பிடுவது உபவாஸமாகாது. "பல (ஆ) ஹாரம்" என்று அதில் சொல்லியிருக்கிறபடி வெறும் பழங்களை மட்டும் சாப்பிடுவதுதான் நிஜமான உபவாஸம்.

11.6-ஏகாதசியின் ஏற்றம்

வ்ரதோபவாஸங்களில் உச்ச ஸ்தானத்தில் இருப்பது ஏகாதசி**.**

ந காயத்ர்யா: பரம் மந்த்ரம் ந மாது: பர தைவதம் |
ந காச்யா: பரமம் தீர்த்தம் நைகாதச்யா: ஸமம் வ்ரதம் ||

'காயத்ரிக்கு மேலே மந்தரமில்லை; அம்மாவுக்கு மேலே தெய்வமில்லை (தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை); காசிக்கு மேலே தீர்த்தமில்லை' என்று சொல்லிக் கடைசியில் 'ஏகாதசிக்கு ஸமானமாக வ்ரதுமெதுவுமில்லை' என்று முடிகிறது. மற்றதற்கெல்லாம் 'மேலே' ஒன்றுமில்லை என்பதால் அவற்றுக்கு 'ஸமமாக' ஏதாவது இருந்தாலும் இருக்கலாம் என்று ஆகிறது. ஆனால் வ்ரதங்களை எடுத்துக்கொண்டால், அவற்றில் ஏகாதசிக்கு 'மேலே' மட்டுமில்லாமல், அதற்கு 'ஸமமாக'க் கூட எதுவுமில்லையென்று ரொம்பவும் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறது.

அஷ்ட வர்ஷாதிக: மர்த்ய: அபூர்ணாசீதி வத்ஸர:|
ஏகாதச்யாம் உபவஸேத் பக்ஷயோ: உபயோ: அபி ||

என்று தர்ம சாஸ்த்ரம் கூறுகிறது. அதாவது மநுஷ்யராகப் பிறந்தவர்களில் எட்டு வயஸுக்கு மேல் எண்பது வயதுக்கு உட்பட்ட எல்லோரும் இரு

பக்ஷங்களிலும் வரும் ஏகாதசிகளில் உபவாஸம் இருக்க வேண்டும் என்று அர்த்தம். எந்த ஸம்ப்ரதாயக்காரன், எந்த ஜாதிக்காரன், ஆணா பெண்ணா என்ற வித்யாஸமில்லாமல், 'மர்த்ய', அதாவது மநுஷ்யராகப் பிறந்த எல்லோரும் ஏகாதசி உபவாஸம் அநுஷ்டிக்க வேண்டும் என்று இது சொல்கிறது. ரொம்பவும் கருணையோடு குழந்தைகளையும், தள்ளாத கிழவர்களையும் சிரமப்படுத்த வேண்டாமென்றுதான் எட்டு வயஸுக்குக் கீழே இருப்பவர்களுக்கும், எண்பது வயஸுக்கு மேலே போனவர்களுக்கும் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறது. அவர்கள் உபவாஸம் இருக்கக் கூடாது என்று கண்டிப்புச் செய்ததாக அர்த்தமில்லை. முடிந்தால் அவர்களும் இருக்கலாம். முடியவில்லை என்பதால் இல்லாவிட்டாலும் பாதகமில்லை என்று அர்த்தம். மஹாராஷ்டிரம் முதலிய இடங்களில் ஏகாதசியன்று பச்சைக் குழந்தைக்குக்கூட பால் கொடுக்காத தாய்மார்கள் இருந்திருக்கிறார்கள்; அந்தக் குழந்தைகளும் அவர்களுடைய நம்பிக்கையிலேயே நன்றாக இருந்திருக்கின்றன என்று சொல்வார்கள். இத்தனை 'எக்ஸ்ட்ரீம் டிஸிப்ளி'னை தர்ம சாஸ்திரகாரகர்களே எதிர்பார்க்கவுமில்லை; ரூலாகப் போடவுமில்லை.

பகவான் கை கொடுப்பான் என்று நம்பி தைர்யமாகப் பூர்ண நியமத்தோடுதான் ஆரம்பிக்க வேண்டும். அப்படியும் முடியாவிட்டால் வீம்பாகப் பட்டினி கிடந்து தேஹ ச்ரமத்தையும் மனஸ் கஷ்டங்களையும் வரவழைத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஏகாதசி தவிர மற்ற உபவாஸ தினங்களில் ஒரே பொழுது பலஹாரம் (சாஸ்த்ரீய பலஹாரத்தைச் சொல்லாமல், தோசை-இட்லி பலஹாரத்தைத்தான் சொல்கிறேன்) செய்யலாம். இன்னொரு பொழுது சாஸ்தீரிய பலஹாரமான பழம், பால் மட்டும் சாப்பிடலாம். முடியாதவர்கள் ஒருபொழுது அன்னம், ஒருபொழுது தோசை-இட்லி மாதிரி பலஹாரம் பண்ணலாம். ஆனால் முழு நியமப்படி மாற்றிக் கொள்ள முயற்சி பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஏகாதசியில் நிர்ஜலமாயிருந்தால் ரொம்பவும் ச்ரேஷ்டம். அது ரொம்பவும் கஷ்டமும். ஸாத்விகமான பானங்கள் மட்டும் பண்ணுவது அடுத்தபடி. அதற்கும் அடுத்தப்படி நிஜப் பலஹாரமாகப் பழத்தோடு பால் சாப்பிடுவது.

அப்புறம் ஒருவேளை மட்டும் பற்றுப்படாத ஸத்துமா, பூரி மாதிரியானவற்றைச் சாப்பிட்டு இன்னொரு வேளை பழம், பால் ஆஹாரம் செய்வது. இன்னம் ஒருபடி கீழே, ஒருவேளை பக்வமான, புஷ்டியான இட்லி, தோசை, பொங்கல், உப்புமா இத்யாதியும் இன்னொரு வேளை பால் பழமும சாப்பிடுவது.

இதற்கும் கீழே போகப்படாது. அதாவது ஒரு வேளைகூட அன்னம் சாப்பிடுவதாக இருக்கப்படாது. மற்ற உபவாஸங்களில் அதமபக்ஷமாக ஒரு வேளை அன்னம், ஒரு வேளை இட்லி தோசை என்று வைத்துக் கொள்ளும் அளவுக்கு ஏகாதசியைக் கொண்டு வந்துவிடக் கூடாது. ஏகாதசியில் அன்னத்தைச் சாப்பிட்டால் பிராயச்சித்தமே கிடையாது என்றிருக்கிறது. சிலவிதமான நோயாளிகள், பலஹீனர்கள், அன்னம் தவிர எதுவுமே ஜெரித்துக் கொள்ள முடியவில்லையென்று நிர்பந்தம் ஏற்பட்டால் சாதத்தை கஞ்சி வடிக்காமல் ஹவிஸ்ஸாகப் பண்ணி அதில் உப்பு, புளி, காரம் எதுவுமே சேர்க்காமல் ஒருவேளை மட்டும் ஸ்வல்பம் ஏகாதசியன்று சாப்பிடலாம். ரொம்பவும் அசக்தமானவர்களுக்குத்தான் இந்த relaxation. மற்றவர்களுக்கில்லை. அன்று ஒருவன் சாப்பிட்டால் அதில் ஒவ்வொரு பிடியிலும் நாயின் அமேத்யத்துக்கு ஸமமான பாவத்தைச் சாப்பிடுகிறான் என்று மிகவும் கடுமையாகவே சொல்லியிருக்கிறது: ***ப்ரதிக்ராஸம் அஸௌ புங்க்தே கிஷ்பிஷம் ச்வாந விட் ஸமம்.***

11.7-உபாவாஸமும் உழைப்பும்

"ஏகாதசிக்கு லீவில்லையே! சாப்பிடாமல் எப்படி வேலை பண்ணுவது?" என்றால், இதற்கு இரண்டு விதமாகப் பதில் சொல்கிறேன். ஒன்று: எல்லாரும் ஏகாதசி விரதம் இருப்பதென்று வைத்துக்கொண்டு சர்க்காரிடம் வலியுறுத்திக் கோரிக்கை விட்டால் அன்றைக்கு லீவே விட்டு விடுவார்கள். இரண்டு: இப்படிப் பதினைந்து நாளுக்கு ஒரு நாள் சாப்பிடாததால் வாஸ்தவத்தில் தெம்பு நாளுக்கு ஒரு நாள் சாப்பிடாததால் வாஸ்தவத்தில் தெம்பு குறையவே குறையாது. ஏதோ 'ஸென்டிமென்டலா'கத்தான் 'நாம் சாப்பிடவில்லையே,

நமக்கு சக்தி இருக்காது', என்று பயப்பட்டு அந்த பயத்தினாலேயே பலஹீனத்தை வரவழைத்துக் கொள்வதாயிருக்குமே தவிர வாஸ்தவத்தில் அன்றைக்கு நாம் மனஸைக் கொஞ்சம் உடம்பிலிருந்து விடுவித்துக் கொண்டு ஒதுங்கியிருந்தால், அன்றுதான் கூடுதலாக சக்தி, உத்ஸாஹம் எல்லாம் இருப்பதாகத் தெரியும். மற்ற தினங்களை விடவும் அன்று நறுவிசாக நிறைய வேலை செய்ய முடியும். மனமிருந்தால் வழியுண்டு. உடம்புக்குப் பல தோஷங்களிருந்தாலும் அதற்கு ஒரு பெரிய குணமுண்டு. அதாவது நாம் பழக்குகிறபடி கேட்கும். அதனால் ஆபீஸ் கார்யம் பண்ண முடியாதபடி ஏகாதசி உபவாஸம் எவரையும் அசக்தமாக்கி விடாமல் பழக்கிக் கொண்டு விடலாம். ஆனாலும் அன்று முழுக்க பகவத் பரமாகவே செலவழிக்க வேண்டுமென்பதற்காக வேண்டுமானாலும் எல்லாரும் சேர்ந்து டிமான்ட் பண்ணி லீவ் விடும்படியாகச் செய்யலாம்.

வருஷத்தில் எல்லா ஏகாதசியிலும் பூர்ண உபவாஸமிருக்க முடியாமல் ஒருவேளை பலஹாரம் பண்ணினாலும் ஒரே ஒரு ஏகாதசியாவது பூர்ண உபவாஸமாக முழுப் பட்டினி இருக்க வேண்டும். பீமனுக்குப் பசியே தாங்காதாம். அதனால் அவன் எல்லா ஏகாதசிகளிலும் சுத்த உபவாஸமிருக்க முடியாமல், வியாஸரைக் கேட்டு, இப்படி ஒரு ஏகாதசியில் பூர்ண உபவாஸம் இருப்பதற்கே பலன் உண்டு என்று வரம் வாங்கிக் கொண்டானாம். ஆனால் அந்த ஏகாதசி வைகுண்ட ஏகாதசி அல்ல.

இந்த தேசத்தில் எது எப்படியானாலும் வ்ரதோபவாஸங்களில் தலைசிறந்ததான ஏகாதசியை அநுஷ்டானத்தில் இருக்கப் பண்ண வேண்டும். ரொம்பவும் போற்றிப் பின்பற்றப்பட்டு வந்த இந்த மஹா தர்மம் இரண்டு மூன்று தலைமுறைகளில் கொள்ளை போயிருக்கிறது. இன்றைக்கும் எங்கேயோ இரண்டு மாத்வப் பாட்டிகள் ஏகாதசி சுத்தோபவாஸம் பண்ணுவதால்தான் இந்த மட்டுமாவது மழை கிழை பெய்து கொண்டிருக்கிறது.

11.8-மாத்வர்களின் தீவிர அநுஷ்டானம்

தர்ம சாஸ்த்ரமே விதித்த வ்ரதமாக ஏகாதசி இருப்பதால் மாத்வர், வைஷ்ணவர், ஸ்மார்த்தர் ஆகிய எல்லாருமே அதை அநுஷ்டித்தாலும் ரொம்பவும் தீவிரமாகக் கடைப்பிடிப்பது மாத்வர்தான்.

ஸாதாரணமாக வேத மந்திரங்களையே நேராகப் பிரயோஜனப்படுத்திச் செய்கிற கர்மாக்களுக்குத்தான் மதாநுஷ்டானங்களில் ப்ராதான்யம் [முதலிடம்] கொடுப்பது வழக்கம். நம் மதத்துக்கு மூல நூல் வேதம்தானே? அதோடு பித்ரு கர்மா, தேவ கர்மா என்ற இரண்டுக்குள் பித்ரு கர்மாவுக்குப் ப்ராதான்யம் கொடுத்து விட்டு அப்புறம்தான் தேவ கர்மாவைச் செய்ய வேண்டும். சிராத்தம் என்பது வேத மந்திரங்களாலேயே ஆகிற கர்மா. அதோடு அது பித்ரு கர்மாவும் ஆகும். ஏகாதசி உபவாஸத்தில் வேத மந்திரங்களுக்கு இடமில்லை. நாமஜபம், பஜனை ஆகியன பௌராணிகமும் தாந்த்ரிகமுமே ஆனவை. பூஜை பண்ணுவதில் மட்டுமே வேத மந்த்ரங்கள் கொஞ்சம் சேரும். ஏகாதசியை ஒரு உபவாஸமாக தர்ம சாஸ்த்ரம் சொன்னாலும் ச்ராத்தத்தைப் போல ஸ்மார்த்த கர்மாவாக விதிக்கவில்லை. அதோடு ஏகாதசி என்பது பித்ரு ஆராதனைக்கு அப்புறமே வருகிற தேவ ஆராதனைதான்.

ச்ராத்தம் என்பது ரொம்பவும் வைதிகமான ஸ்மார்த்த கர்மா. அதிலே பித்ரு சேஷமாக போஜனம் பண்ண வேண்டியதும் ஒரு அங்கம். ச்ராத்தம் பண்ணி விட்டுப் பித்ரு சேஷம் சாப்பிடாவிட்டால் தப்பு.

ஏகாதசியில் ச்ராத்தம் வந்தால் என்ன செய்வது? 'ச்ராத்தம் பண்ணிப் பித்ரு சேஷம் சாப்பிடத்தான் வேண்டும். ஏனென்றால் ஏகாதசி எவ்வளவு முக்கியமான தாயிருந்தாலும், அதைவிட வைதிகமான ச்ராத்தத்துக்குத் தான் இன்னமும் அதிக முக்யத்வம் தரவேண்டும்' என்று ஸ்மார்த்தர்களும், வைஷ்ணவர்களும் நினைக்கிறோம். அன்று ஏகாதசி உபவாஸ நியமத்தை விடுவதால் தோஷமில்லை; வேதக் கட்டளைப்படி பண்ணுவதால் நமக்குத் தப்பு வராது என்று நினைத்து ச்ராத்தம் பண்ணி போஜனம் செய்கிறோம்.

ஆனால் மாத்வர்கள் ஏகாதசியன்று ச்ராத்தம் செய்வதில்லை. இந்த வ்ரதாநுஷ்டானந்தான் முக்கியமென்று நினைத்து உபவாஸமிருக்கிறார்கள். ஆனால் அதற்காக சிராத்தத்தை விட்டுவிடுவதில்லை. ஏகாதசியன்று வருகிற

சிராத்தத்தை மறுநாள் த்வாதசியன்று செய்கிறார்கள். அதிலும் த்வாதசி ப்ராணை காலம்பறவே [இளங் காலையிலேயே] பண்ணிவிட வேண்டுமென்கிற புராண விதிக்காக, மத்யான்ன காலத்துக்கு அப்புறமே பண்ண வேண்டிய சிராத்தத்தை அன்று ரொம்ப முன்னதாகவே பண்ணி விடுகிறார்கள்.

தீட்டுக் காலத்தில்கூட ஏகாதசி உபவாஸமிருக்க வேண்டும் என்பதில் எல்லா ஸம்பிரதாயக்காரர்களும் ஒத்துப் போகிறார்கள். மற்ற எந்த உபவாஸத்துக்கும் இம்மாதிரி ஸூதக ஆசௌச* காலங்களில் பலனில்லாததால், அவற்றை அப்போது அநுஷ்டிக்க வேண்டியதில்லை என்றே விதி இருக்கிறது. ஏகாதசிக்கு மட்டும் விலக்கு.

---

* பிரஸவத் தீட்டு ஸூதகம், மரணத் தீட்டு ஆசௌசம்.

11.9-எல்லாம் வகுப்பாரும் ஏற்றம் பெற்றது

ராஜபோகம் என்றே சொல்வது வழக்கம். ராஜாக்கள் மது, மாம்ஸாதிகள் உள்பட ஓரளவுக்குச் சாப்பிடுவதற்கு அதிகாரம் பெற்றவர்கள். ஆனால் அவர்களும் ஏகாதசி உபவாஸத்தை நியமத்தோடு அநுஷ்டித்திருக்கிறார்கள். ஏகாதசி என்றவுடனே நாம் நினைக்கிற அம்பரீஷன், ருக்மாங்கதன் இரண்டு பேருமே க்ஷத்ரிய ராஜாக்கள்தான்.

கார்த்தாலே எழுந்தவுடன் குளிர்ந்த வேளையில், குளிர்ந்த மனஸோடு நினைத்து நமஸ்காரம் பண்ண வேண்டிய பரம பாகவதர்களைப் பற்றி ஒரு ச்லோகம் உண்டு.

ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக
வ்யாஸ (அ)ம்பரீஷ சுக சௌநக பீஷ்ம தால்ப்யான் |
ருக்மாங்கத (அ)ர்ஜுந வஸிஷ்ட விபீஷணாதீன்
புண்யான் இமான் பரம பாகவதான் ஸ்மராமி ||

இதிலே அம்பரீஷனும், ருக்மாங்கதனும் இடம் பெற்றதற்குக் காரணமே அவர்களுடைய ஏகாதசி அநுஷ்டானந்தான்.

ருக்மாங்கதன் தன் ராஜ்யத்தில் அத்தனை பேரையும் ஏகாதசி விரதம் இருக்கும்படியாகப் பண்ணினான். அதனால் ப்ரஜைகள் எல்லோரும் பக்தி ஞானங்களில் முன்னேறியதோடு நல்ல ஆயுர்-ஆரோக்யங்களுடனும் இருந்தார்கள் என்று நாரத புராணத்தில் இருக்கிறது.

ரொம்பவும் உச்சத்திலுள்ள ராஜாக்கள் மட்டுமில்லை. கைசிகன் என்று தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த பக்தர். இவரும் ஏகாதசி உபவாஸ நியமத்தால் உயர்வு பெற்றிருக்கிறார். 'கைசிக ஏகாதசி' என்றே ஒரு ஏகாதசிக்கு வைஷ்ணவர்கள் பெயர் சொல்வார்கள்.

11.10-ஏகாதசிகளின் பெயர்கள்

ஒரு வருஷத்துக்கு 365 நாளல்லவா? இதனால் இருபத்தநாலு பக்ஷத்துக்குமேல் சில நாட்கள் வருஷத்தில் எஞ்சி நிற்கும். இது காரணமாகச் சில வருஷங்களில் இருபத்தைந்து ஏகாதசிகள் வந்துவிடும். பாத்ம புராணத்தில் உத்தர காண்டத்தில் இந்த இருபத்தைந்துக்கும் தனித்தனிப் பெயர் சொல்லி, அதை அநுஷ்டிக்க வேண்டிய முறை, அதனால் பயனடைந்தவர்களின் கதை, ஆகியவற்றை விவரமாகச் சொல்லியிருக்கிறது.

தநுர்மாஸ (மார்கழி மாத) க்ருஷ்ணபக்ஷ ஏகாதசியன்று ஆரம்பித்திருக்கிறது. இதற்கு 'உத்பத்தி ஏகாதசி' என்று பெயர். அடுத்ததுதான் அந்த மாஸ சுக்லபக்ஷத்தில் வரும் பிரஸித்தமான வைகுண்ட ஏகாதசி. 'மோக் ஏகாதசி' என்று இதற்குப் பாத்ம புராணத்தில் பேர் கொடுத்திருக்கிறது. அம்ருதம் கடைந்தெடுத்தது அன்றுதான். க்ருஷ்ண பரமாத்மா கீதோபதேசம் என்று உபநிஷத்துக்களைக் கடைந்தெடுத்து ஞானாம்ருதமாகக் கொடுத்ததும் அன்றுதான் என்பதாலேயே அன்றைக்கு 'கீதா ஜயந்தி' என்று கொண்டாடுகிறார்கள். மூன்றாவது ஏகாதசி தை க்ருஷ்ண பக்ஷத்தில் வரும் 'ஸபலா'. நாலாவது அம்மாஸ சுக்ல பக்ஷத்தில் வருகிற 'புத்ரதா'. ஐந்தாவது

மாசி க்ருஷ்ண பக்ஷத்தில் வரும் 'ஷட்திலா'. ஆறாவது அம்மாஸம் சுக்லபக்ஷத்தில் வரும் 'ஜயா'. இப்படியே வரிசையாக பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாஸங்களில் 'விஜயா', 'ஆமலகீ', 'பாப மோசனிகா', 'காமதா', 'வரூதினீ', 'மோஹினி', 'அபரா', 'நிர்ஜலா'என்று எட்டு ஏகாதசிகள் வருகின்றன. பீமன் வருஷத்தில் ஒரே ஒரு தரம் சுத்தோபவாஸமிருந்தது 'நிர்ஜலா' என்ற இந்த ஆனி மாஸ சுக்லபக் ஏகாதசியன்றுதான். இதோடு பதினாலு ஏகாதசிகள் ஆகிவிட்டன. பதினைந்தாவதாக ஆடி க்ருஷ்ண பக்ஷத்தில், 'யோகினி' என்பது. அடுத்தது ஆடி சுக்ல பக்ஷத்தில் மஹாவிஷ்ணு சயனிக்க ஆரம்பிக்கிற சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில் வருகிற ஏகாதசி*. அதற்கு 'சாயினி' என்று பெயர். அப்புறம் ஆவணி, புரட்டாசி. ஐப்பசி மாஸங்களில் வரும் 'சாமிகா' 'புத்ரதா' (முன்னையே தையில் ஒரு 'புத்ரதா'வந்து விட்டது. இங்கே மறுபடியும் அதே பெயர்தான் போட்டிருக்கிறது) , 'அஜா', 'பத்மநாபா', 'இந்திரா', 'பாபாங்குசா' என்ற ஆறு ஏகாதசிகளின் போதும், கார்த்திகையில் க்ருஷ்ண பக்ஷத்திலே வரும் 'ரமா'என்ற ஏகாதசியின் போதும் பகவான் நித்திரை பண்ணிக் கொண்டேயிருக்கிறார். இருபத்து நாலாவதாக வருகிற கார்த்திகை சுக்லபக் ஏகாதசியன்று அவர் விழித்துக் கொள்கிறார். அதனால் அதற்தகு 'ப்ரபோதினி' என்றே பெயர் மறுநாளோடு சாதுர்மாஸ்யம் பூர்த்தி.

அதிகப்படியாக வரும் இருபத்தைந்தாவது ஏகாதசிக்கு 'கமலா' என்று பெயர்.

இப்படி நம் மதத்தில் சிறப்பித்துச் சொல்லியிருக்கும் ஏகாதசியில் எல்லாரும் வ்ரதாநுஷ்டானம் பண்ண வேண்டும். சாப்பிடாமல் இருப்பது வெறும் 'அநாசக' மாக இல்லாமல், பகவானோடு சேர்ந்து வாழும் 'உப-வாஸ'மாக ஆகவேண்டும். இதற்கு ஏகாதசியன்று நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பகவன் நாமத்தை ஜபமாகவோ, பஜனையாகவோ உச்சரிக்க வேண்டும்; எவ்வளவு அதிக நாழிகை பகவத் த்யானம் செய்ய முடியுமோ அவ்வளவு செய்யவேண்டும்; அன்றைக்கு ஸத்கதா ச்ரவணமோ, பாராயணமோ, இரண்டுமோ அவசியம் செய்யவேண்டும். பகவான் அல்லது பாகவதோத்தமர்களின் புண்ய சரித்ராம்ருதம் அன்று காது வழியாகக் கொஞ்சமாவது உள்ளே இறங்க வேண்டும். இப்படிச் செய்து

நல்லாரோக்யத்திலிருந்து பக்தி, ஞான, வைராக்யங்கள் வரையில் எல்லா நன்மைகளையும் அடைய வேண்டும்.

---

*அதற்கு மறுநாளான த்வாசியன்றே சாதுர்மாஸ்ய விரதத் தொடக்கம்.

11.11-நிறைவு பெறுவோம்

வைகுண்ட ஏகாதசி, மஹா சிவராத்ரி, கோகுலாஷ்டமி, ராமநவமி முதலிய விசேஷ நாட்களில் கூட நாம் வாயைக் கட்டாமல், வயிற்றைச் கட்டாமலிருந்தால் அது இந்த தேசத்தில் பிறந்த நமக்கு ரொம்பக் குறைவாகும். வயிறு குறைந்தாலும் மனஸ் நிறையும்படிப் பண்ணிக் கொள்வதே நமக்கு நிறைவு. அப்படிப் பண்ணிக் கொள்வதற்கான ஸங்கல்ப பலத்தை பகவான் எல்லாருக்கும் அநுக்ரஹிக்க வேண்டும்.

வியாதிக்கு மருந்து மாதிரி பசிக்குச் சாப்பாடு ரொம்பவும் அளவாகத்தான் போட வேண்டும். அதாவது பசியைத் தீர்த்துக்கொள்ளத்தான் ஆஹாரமே தவிர ருசியைத் தீர்த்துக்கொள்ள அல்ல என்று ஆசார்யாள் சொல்லியிருப்பதாகச் சொன்னேன். மற்ற வியாதிகளுக்கும் இந்த 'க்ஷுத் வியாதி'க்கும் ஒரு வித்யாஸம், தலைவலிக்கு மருந்து போட்டால் அது போய் விடுகிறது; மறுபடி என்றைக்கோ ஒரு நாள்தான் வருகிறது. ஜ்வரமும் இப்படித்தான். ஆனால் இந்தப் பசி வியாதி மட்டும் இப்போது மருந்து போட்டு ஸ்வஸ்தப்படுத்தி விட்டாலும், வேளை தப்பாமல் மறுபடி மறுபடி 'அட்டென்டன்ஸ்' கொடுத்துக்கொண்டேயிருக்கிறது! இப்படி இயற்கையை ஏவிவிட்டு ஈச்வரன் வேடிக்கை பார்க்கிறான். நமக்குப் பரீக்ஷை வைக்கிறான். நாம் பாஸ் பண்ணினால்தான் பெருமை. அவனுடைய அருள் துணையை நம்பி, நாம் ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு உறுதியாயிருந்தால், அவன் கைகொடுத்துப் பாஸ் பண்ண வைத்து, நல்லாரோக்யம், நல்ல ஆத்மாபிவிருத்தி முதலான ப்ரைஸ்களையும் கொடுப்பான்.

நம்முடைய த்ருட சித்தம் முக்யம். எங்கேயோ ஒரு இடத்துக்குப் போகிறோம். அவர்கள் விலக்கப்பட்ட பதார்த்தம் எதையோ உபசாரம் பண்ணிச் சாப்பிடச் சொல்கிறார்கள். அந்த ஸமயத்தில் தாக்ஷிண்யத்தாலோ, அவர்கள் தப்பாக நினைக்கப் போகிறார்களே என்றோ அதைச் சாப்பிட்டுவிடக் கூடாது. ப்ரின்ஸிபிளை விடக் கூடாது.

பெங்காலில் விதவைகள் எத்தனை கடுமையாக ஏகாதசி வ்ரதாநுஷ்டானம் பண்ணுகிறார்கள் என்பதைப் பார்த்து அதை நாமும் கொஞ்சமாவது 'எமுலேட்' பண்ண முயலவேண்டும். பெங்கால்காரர்கள் மத்ஸ்ய ப்ராம்மணர்கள்தான்; ஆனால் விதவைகளை அந்த ஸாமானைத் தொடமாட்டார்கள். அதோடு ஏகாதசியை அவர்களே மற்ற எவரையும் விடத் தீவிரப் பற்றுடன் அநுஷ்டிக்கிறார்கள். வாயில் சொட்டுப் பச்சைத் தண்ணி கூட விடாமல் அன்று வ்ரதமிருக்கிறார்கள். அங்கே கோடையில் கோட்டையடுப்பு மாதிரி ஊர் முழுக்க நெருப்புக் காற்று அடிக்கிற போதுகூட, வாய் அப்படியே உலர்ந்து வறண்டு ஒட்டிக் கொண்டாலும் அந்த விதந்துக்கள் சொட்டுத் தீர்த்தங்கூட விட்டுக் கொள்வதில்லை என்று பிடிவாதமாயிருப்பது வழக்கம். இதில் உஷ்ணம் தாங்காமல் அநேகம் பேர் செத்தே போனார்கள். இந்த மாதிரி விடக்கூடாது என்று பண்டிதர்களையெல்லாம் கூட்டி ஒரு ஸதஸ் நடத்தி சாஸ்த்ர ப்ரகாரமே கடுமையான உபவாஸ விதியைக் கொஞ்சம் இளக்கித் தர வழி இருக்கிறதா என்று பார்க்க முடிவு செய்தார்கள். 'மிஞ்சிப் போனால் ஏதாவது பானம், கீனம் பண்ணாலமென்று சாஸ்திரத்திலேயே இருந்தால்கூட நாங்கள் அன்று வாயில் எதையும் விட்டுக்கொண்டு முழுங்க மாட்டோம்; செத்தாலும் சாவோம்' என்று அந்த விதவைகள் சொல்லிவிட்டார்களாம். இதன்மேல் அந்தப் பண்டிதர்கள் சாஸ்திரங்களைப் பார்த்து, 'ஸரி, ஏகாதசியன்று வாயில் தீர்த்தம் விட்டுக்கொள்ள வேண்டாம்; காதில் விட்டுக் கொள்ளட்டும். அதனால் பிழைக்கிறவர் பிழைக்கட்டும்' என்று தீர்மானம் செய்தார்களாம். அத்தனை கடுமையான அநுஷ்டானம் அங்கே இருந்திருக்கிறது.

நாக்கை அடக்க முடியவில்லை என்று விடவே கூடாது. ஆப்பிளைச் சாப்பிட்டுத்தான் ஆடம் அடிமட்டத்துக்கு விழுந்துவிட்டான் என்கிறார்கள்.

Forbidden fruit மாதிரி நம் சாஸ்திரப்படி forbidden food எதையுமே சாப்பிடக் கூடாது. மீறினால் அது நம்மைக் கீழேதான் இறக்கும். இம்மாதிரி ஒரு 'டெம்ப்டேஷன்' உண்டாகிற சமயங்களில், 'இப்போது இது உசந்த ருசி என்று சாப்பிட்டாலும், சாப்பிடுகிற இந்த ஐந்து, பத்து நிமிஷங்களுக்கு அப்புறம் ருசி நாக்கில் நிற்கிறதா என்ன? இது உசந்த பதார்த்தம் என்று சாப்பிட்டாலும் இது என்ன சாச்வதமாக வயிற்றிலே இருந்துகொண்டு மறுபடி பசிக்காமலே பண்ணப் போகிறதா என்ன?' என்று நம்மை நாமே கேட்டுக்கொண்டு, கண்ட்ரோல் பண்ணிக் கொள்ள வேண்டும்.

இப்படி ஒரு நல்லறிவு உண்டாவதற்கு மறுபடியும் பகவானையேதான் வேண்டிக் கொள்கிறேன்.

12-மௌனம்

12.1-வாய் வேலை குறைய

வெளியிலே உள்ள விஷயங்களை நமக்குத் தெரிவிப்பவை ஞானேந்திரியங்கள். வெளியிலே உள்ள வஸ்துவைக் கண் பார்க்கிறது; சப்தத்தைக் காது கேட்கிறது;வாஸனையை மூக்கு மோந்து பார்க்கிறது;அனேக வஸ்துக்களை த்வக் (சர்மம்) ஸ்பர்சித்து அது கெட்டியா, கொள கொளவா, சொர சொரப்பா, வழவழப்பா என்றெல்லாம் தெரிவிக்கிறது; ருசியை வாய் (நாக்கு) அறிவிக்கிறது. இப்படி ஐந்து. இவ்வாறு வெளியில் உள்ள வஸ்துக்களின் ஒவ்வொரு தன்மையை அறிவிப்பதாக இல்லாமல், புதுக் காரியமாகத் தானே செய்கிற ஐந்து இந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் என்று இருக்கின்றன. கை அநேக கார்யத்தைப் பண்ணுகிறது. கால் நடக்கிறது. பாயுவும், உபஸ்தமும் மலம், சிறுநீர் ஆகியவற்றை விஸர்ஜனம் பண்ணுகின்றன. வாய் பேசுகிறது.

இதிலே என்ன பார்க்கிறோம்? வாய் ஒன்றுதான் கர்மேந்திரியமாகவும் இருக்கிறது, ஞானேந்திரியமாகவும் இருக்கிறது. ருசி பார்த்துப் பதார்த்தங்களின் சுவையை அறிவிக்கிற காரியம், பேசிப் பாடிச் சிரிக்கிற

காரியம் இப்படி இரண்டு வேலைகள் இந்த இந்திரியம் ஒன்றுக்குத்தான் இருக்கிறது. ஞானேந்திரியமாக இருக்கிறபோதேகூட அதற்கு மற்ற ஞானேந்திரியங்களைவிட வேலை ஜாஸ்தி. பார்ப்பது, கேட்பது முதலான கார்யங்களுக்குக் கண், காது முதாலன இந்திரியங்கள் ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணிக்கொண்டு வேலை செய்வதில்லை. வாய் ருசி பார்ப்பது மட்டும் அதோடு நின்றுவிடாமல், பார்த்த வஸ்துவைக் கடித்து மென்று உமிழ் நீரைச் சுரந்து முழுங்குகிற வேலையையும் செய்கிறது. (ருசி பார்க்கிற ஜிஹ்வாவை (நாக்கை) மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அதோடு பல், உதடு எல்லாம் சேர்ந்த வாயையே ஞானேந்திரியமாகச் சொல்லிக் கொண்டு போகிறேன்.)

ஆக, மற்ற எந்த அவயத்தையும்விட வாய்க்குத் தான் வேலை ஜாஸ்தி. ருசி பார்ப்பது, அதாவது சாப்பிடுவது, பேசுவது என்று அதற்கு இரண்டு காரியம் இருப்பதாலேயே, இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் பரமேஸ்வரன் அபிப்ராயமாக இருக்க வேண்டும். 'வயிற்றைக் கட்டி, வாயைக்கட்டி' என்கிறபோது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதுதான் தாத்பர்யம். ஆனால் நேர்மாறாகப் பண்ணுகிறோம். இரண்டு வேலையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கிறோம். வாய்தான் ரொம்ப over-worked! அமித போஜனமாக ஓயாமல் ஏதாவது சாப்பாடு, நொறுக்குத் தீனி, பானம் என்று உள்ளே தள்ளிக் கொண்டேயிருக்கிறோம். எப்போது பார்த்தாலும் வெட்டியாக ஏதாவது பேசிக்கொண்டேயிருக்கிறோம்.

இந்த இரண்டையும் ரொமபக் குறைத்துக் கொள்ள வேண்டும். 'கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக் கொள்ளாதே;ஸாத்விக ஆஹாரம் மட்டும் மிதமாகச் சாப்பிடு; அதுவுங்கூட இல்லாமல் அவ்வப்போது உபவாஸமிரு'என்கிறது சாஸ்திரம். இதேபோல, 'வாயில் வந்ததைப் பேசிக்கொண்டே போகாதே; அதனால் பிறத்தியானையும் கெடுக்காதே, பகவத் விஷயமாகப் பேசு, பாடு, பஜனை பண்ணு'என்று சொல்லிவிட்டு, உபவாஸத்தில் ஸாத்விகாஹாரம் கூடப் பண்ணப்படாது என்று வைத்திருக்கிற மாதிரியே, 'பகவத் பரமான பேச்சும் கீர்த்தனமுங்கூட இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக் கொண்டு மௌனமாக இரு' என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

இப்போது எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான். 'பேச்சாளார்கள்' என்றே பலர். ஒலிபெருக்கி வைத்து மீட்டிங்குகள். கல்யாணம், கார்த்திகை, வேறே விழாக்கள் என்று எங்கே பார்த்தாலும் 'லௌட் ஸ்பீக்கர்' வைத்து சத்தம். இந்த அவஸ்தையைப் பார்க்கிறபோது, மௌனம் அதை அநுஷ்டிக்கிறவனுக்குச் செய்கிற நல்லது ஒரு பக்கம் இருக்கட்டும், இது ஸமூஹத்துக்கே செய்கிற தொண்டு என்று தோன்றுகிறது.

இத்தனை வாதப் பிரதிவாதச் சண்டையும் பேச்சால் தானே? மௌனம் அநுஷ்டித்தால் அன்றைக்காவது சண்டை சச்சரவு இராது. "**மௌனம் கலஹம் நாஸ்தி**" இதுவும் ஒரு ஸமூஹ ஸேவைதான்.

சண்டை வராது என்பதாக ஒரு கெடுதலை இல்லாமல் பண்ணுவது மட்டுமில்லை; நல்லதுகளையும் உண்டாக்கிக் கொடுக்கிற சக்தி மௌனத்துக்கு உண்டு. ஸகல புருஷார்த்தங்களையும் பெற்றுத்தர அது உபாயம் என்பதால்தான் "**மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்**" என்று சொல்வது.

மனஸைக் கட்டுப்படுத்துவதற்கு வழியாக ஒவ்வோர் இந்த்ரியத்தையும் கட்டுப்படுத்தி வைக்கப் பழக வேண்டும். வாயைக் கட்டவேண்டும். அதாவது சாப்பாட்டிலும் கட்ட வேண்டும்; பேச்சிலும் கட்ட வேண்டும். ஏதாவது சொல்லி, நம்மை 'எக்ஸ்ப்ரெஸ்' பண்ணிக்கொண்டேயிருக்கவேண்டுமென்று இருக்கும் அரிப்பைக் கட்டுப்படுத்துகிற நெறிதான் மௌனம். இதை ஸாதித்தால் மனஸை அடக்குகிறதும் கொஞ்சங் கொஞ்சமாக ஸுலபமாகிவிடும்.

---

*இவ்விஷயமாக "தெய்வத்தின் குரல்" : முதற்பகுதியில் "கணக்காயிருக்கணும்" என்ற உரையும் பார்க்க.

12.2-முனிவன் இயல்பு மௌனம்

மனஸை அடக்கினவன்தான் முனி. 'முனிவனின் குணம் எதுவோ அதுதான் மௌனம்' என்பதே அந்த வார்த்தைக்கு அர்த்தம். முனிவனின் குணத்தில் பேசாமலிருப்பதுதான் தலை சிறந்தது என்று பொதுக் கருத்து இருந்திருப்பதால்தான் 'மௌனம்' என்றால் 'பேசாமலிருக்கிறது' என்று ஆகிவிட்டிருக்கிறது. மனஸை அடக்கினவனின் தன்மை என்றாலும், அதுவே நம் மாதிரி மனஸ் அடங்காதவர்கள் அந்த நிலையை அடைவதற்க்கு உதவுவதாகவுமிருக்கிறது.

பிரம்மஞானியான முனிவன் மௌனம், மௌனமாயில்லாமலிருப்பது என்ற இரண்டையும் விட்டு விடுகிறான் என்று உபநிஷத் சொல்கிறது*. முதலில் படித்துப் பண்டிதனாகி, ரொம்பவும் வாதங்கள் சர்ச்சைகள் பண்ணி ஸத்ய தத்வத்தைத் தெரிந்து கொள்கிறான். அப்புறம் பாண்டித்யம், பேச்சு எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒரே நிஷ்டையில் போய்விடுகிறான். அப்புறம் பிரம்ம ஞானியாகிறபோது மௌனத்தையும் விட்டு விடுகிறான், மௌனமில்லாமையையும் விட்டுவிடுகிறான் என்று உபநிஷத் சொல்கிறது. இப்படிச் சொன்னால் அது எப்படி ஸாத்யம்? ஒன்று பேச்சை விட்டு மௌனமாக வேண்டும்; அல்லது மௌனத்தை விட்டுப் பேச வேண்டும். இரண்டையுமே விடுவது என்றால் எப்படி முடியும்? அந்த ஞானியின் நிலைக்குப் போனால்தான் இது புரியும். அவனுக்குப் பேச வேண்டும் என்றோ, பேச வேண்டாமென்றோ எந்த சொந்த அபிப்ராயமும் ஆசையும் இருக்காது. லோகாநுக்ரஹத்துக்காக அவன் மூலம் உபதேசமாகப் பேச்சு வந்தாலும் அவன் தான் பேசுவதாக நினைக்க மாட்டான். அதைவிடப் பெரிய மௌன உபதேசத்தில் தக்ஷிணாமூர்த்தி மாதிரி அவனைப் பராசக்தி உட்கார்த்தி வைத்திருந்தாலும் 'நாம் மௌன வ்ரதம் என்று ஒன்று அநுஷ்டிக்கிறோம்' என்று அவன் நினைக்க மாட்டான். இதைத்தான் மௌனம், அமௌனம் இரண்டையும் விட்ட நிலை என்பது.

அது நமக்கு ரொம்ப தூரத்தில் இருக்கிற லக்ஷ்யம்.

நடைமுறையில் நாம் கொஞ்சம் மௌன உபவாஸத்தை அநுஷ்டிக்க ஆரம்பிக்க வேண்டும்.

* ப்ருஹதாரண்யகம் 3.5.1

12.3-மௌனத்துக்குரிய நாட்கள்

வயிற்று உபவாஸம் மாதிரியே இதற்கும் தர்ம சாஸ்திரத்தில் அநேக காலங்களை விதித்திருக்கிறது. "**மௌநேந போக்தவ்யம்**" என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். சாப்பிடுகிற காலங்களில் பேசப்படாது என்று அர்த்தம். வாய்க்கு உள்ள இரண்டு வேலைகளில் ஒன்றாகச் சாப்பிடும் போது, இன்னொரு வேலையான பேச்சையும் தரப்படாது. இப்படி விதித்தபோதே ருசியையும் கட்டுப்படுத்தியதாக ஆகிறது. மௌனமாக போஜனம் செய்யும் போது, 'இது வேண்டும், அது வேண்டாம். இதற்கு உப்புப் போடு, அதற்கு நெய் விடு' என்றெல்லாம் சொல்ல முடியாதல்லவா?

ஸோம வாரம், குருவாரம், ஏகாதசி முதலிய நாட்களில் ஒன்றில் மௌனம் அநுஷ்டிக்கலாம்.

ஸோமவாரம், குருவாரம் ஆ·ஃபீஸ் இருப்பதால் ஞாயிற்றுகிழமைகளில் மௌனமிருக்கலாம். பாதி நாளாவது இருக்கலாம்.

எத்தனையோ கார்யங்களை வைத்துக் கொண்டிருந்தார் காந்தி. ஒரு வீட்டிலே அப்பா என்றாலே எவ்வளவோ கார்யம் இருக்கும். அவரை தேசபிதா, Father of the Nation என்கிறார்கள். அப்படியிருந்தும் வாரத்தில் ஒருநாள் மௌனம் வைத்துக் கொண்டிருந்தார். 'மௌனமாயிருக்கக் கட்டுப்படி ஆகாது' என்று எவரும் சொல்ல முடியாதபடி அவர் ஒரு எக்ஸாம்பிள்.

மௌனமும், பட்டினியும் சேர்ந்தால், அதாவது வாய்க்கு இரண்டு காரியமுமே இல்லாமலிருந்தால் அன்று மனஸ் பாரமார்த்திகத்திலே நன்றாக ஈடுபடுவதை அநுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். அதனால் அவரவர் இஷ்ட தெய்வத்துக்காக சிவராத்ரியோ, ஷஷ்டியோ, ஏகாதசியோ பட்டினி

கிடக்கிறபோது மௌனமாகவும் இருக்கலாம். அம்பாளை உபாஸிக்கிறவர்கள் நவராத்ரி பூராவும் மௌனமிருப்பார்கள்.

நாம் பலவிதமான பேச்சுகளைப் பேசி கெட்ட விஷயங்களை விஸ்தாரம் பண்ணியும், பல பேரைத் திட்டியும் வாக்தேவியான ஸரஸ்வதிக்கு அபசாரம் பண்ணுகிறோம். இதற்குப் பிராயசித்தமாக ஸரஸ்வதியின் நக்ஷத்ரமான மூலத்தில் மௌனம் இருப்பதுண்டு*.

தினமுமே அரைமணியாவது மௌனமாக த்யானம் பண்ண வேண்டும்.

---

*ஸ்ரீசரணர்களே இவ்வாறு மூல நக்ஷத்ரம் தோறும் மௌனம் அநுஷ்டிப்பவர்கள்தாம்.

12.4-கண் விழிப்பது

வயிற்றுக்காக வாயைத் திறக்காத உபவாஸ நாட்களில் பேச்சுக்காகவும் வாயைத் திறக்கப்படாது என்பதோடு இன்னொரு நியமத்தையும் சேர்த்துக் கொள்வதுண்டு. வாயைத் திறக்கக்கூடாத அந்த நாளில் கண்ணை மட்டும் மூடக்கூடாது என்று நியமம்! இராப்பூராவும் கண் விழித்துக்கொண்டு, பகவத் சிந்தனை, கதை, கீர்த்தனை, பாராயணம் இதுகளிலேயே செலவழிக்க வேண்டும். வாயை மூடுவதாலேயே இப்படிக் கண்ணை மூடாமலிருக்கிற தெம்பு மன ஈடுபாடு இரண்டும் உண்டாகும். ('கண்ணை மூடக்கூடாது' என்பது 'தூங்கக் கூடாது' என்ற அர்த்தத்தில். நாள் முழுதும் கண்ணைத் திறந்துகொண்டே இருக்கணும் என்ற அர்த்தத்தில் இல்லை) , சிவராத்திரிக்கும் வைகுண்ட ஏகாதசிக்கும் ராக்கண் விழிப்பதை முக்யமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். விடிய விடிய ஸினிமா பார்த்து புண்யத்துக்கு ('புண்யத்தை' இல்லை) மூட்டை கட்டுவதாக வழக்கம் ஏற்பட்டிருக்கிறது! பிரதி ஏகாதசிக்குமே இந்த நியமம் சொல்வதுண்டு. ஏகாதசியில் செய்யவேண்டியது "போஜன த்வயம்" இல்லை, "போஜன த்ரயம்"; அதாவது

உபவாஸம், பஜனை என்ற இரண்டோடு 'ஜாகரணம்' என்று மூன்றாவதாக ராக்கண் முழிப்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுண்டு.

கீதையில் 'பட்டினி கிடக்கிறவனுக்கு யோகம் வராது'. தூங்காமலே இருக்கிறவனுக்கு யோகம் வராது ***(நாத்யச்னதஸ்து யோகோஸ்தி … ஜாக்ரதோ நைவ சார்ஜுந)*** என்று இருந்தாலும் அந்த ஜெனரல் ரூலுக்கு அநுகூலம் பண்ணுவதற்காகவே அதற்கு மாறாக ஒவ்வொரு புண்ய தினங்களில் பட்டினி கிடந்து கொண்டு, கண்ணைக் கொட்டாமல் விழித்துக்கொண்டு ஈச்வர ஸ்மரணம் பண்ண வேண்டும் என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. கிருஷ்ண பரமாத்மாவும் சாஸ்திரந்தான் ப்ரமாணம் ***(தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே)*** என்றவர்தான்.

12.5-தொடக்க நிலையும் முடிவு நிலையும்

மௌனம் என்றால் எந்த விதத்திலும் அபிப்ராயம் தெரிவிக்காமலிருக்க வேண்டும். வாயை மட்டும் மூடிக் கொண்டு ஏதாவது ஜாடை காட்டித் தெரிவித்துக் கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை. அவசியமானதற்கு மட்டும் எழுதி வேண்டுமானால் காட்டலாம். 'காஷ்ட மௌனம்'என்று மரக்கட்டை மாதிரி இருப்பதாக ஸங்கல்பித்துக் கொண்ட ஸமங்களில் ஜாடை காட்டுவது, எழுதிக் காட்டுவது எதுவுமே நிச்சயமாகக் கூடாது.

ஆரம்பத்தில் எல்லாக் காரியத்தையும், எண்ண ஓட்டத்தையும் விட்டு மௌனமாயிருப்பதென்றால் முடியாதுதான். அந்த நிலையில் சைகை, எழுதிக் காட்டுவது இவற்றோடாவது மௌனம் இருக்க ஆரம்பித்துவிட வேண்டியதுதான். என்ன ஜாடை காட்டினாலும், எழுதினாலும் பேசுகிற அளவுக்கு வளவளப்பும் வ்ருதாவும் இருக்காதல்லவா?ஸதா அரித்துக் கொண்டிருக்கிற நாக்கை எப்படியும் அன்றைக்குக் கட்டிப் போடுகிறோமல்லவா? அந்த மட்டுக்கும் நல்லதுதான். இப்படி ஆரம்பித்து, அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாகச் சித்த ஆட்டங்களை விட்டு விட்டு, மௌனம் என்றால் மனஸுக்குப் பரம சாந்தி என்று ஆக்கிக் கொண்டு, அப்படியே அலையில்லாத ஸமுத்ரம் மாதிரி ஆகிவிட வேண்டும்.

குறைபாட்டுடனாவது ஏதோ ஒரு இடத்தில் ஆரம்பித்து விட வேண்டும். அப்யாஸத்தினால் குறைகள் குறைத்து கொண்டேபோய் பூர்ண நிலை வரும்;நிஜ மௌனம் ஸித்திக்கும்.

இப்போது ஆரம்பிக்கிற மௌனம் ஈச்வர ஆராதனைக்கு ஒரு ஸாதனம். பிற்பாடு பூர்த்திஸ்தானத்தில் அந்த மௌனமே, 'ஈச்வரன் வேறேயாக இல்லை. அவனுக்குத் தனியாக ஆராதனை என்று பண்ணவேண்டியதில்லை' என்ற ஸாத்ய லக்ஷ்யமாக நிஜ ரூபத்தில் பிரகாசிக்கும். வாய் பேசவில்லை என்பது மட்டுமின்றி, கண் பார்க்கவில்லை, காது கேட்கவில்லை, எல்லாவற்றுக்கும் மேலே மனஸில் ஒரு எண்ணங்கூட எழும்பவில்லை என்று ஆகிவிடுவதுதான் அந்த லக்ஷ்ய ஸ்திதியான நிஜ மௌனம்.

நாம் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும்போதுகூட ஒரு எறும்பு மேலே ஊறினால் அதை அப்படியே தேய்த்து விடுகிறோம்; கொஞ்சம் குளிர்காற்று அடித்தால் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறோம்; பக்கம் மாறிப் படுக்கிறோம். காலமே (காலையில்) எழுந்திருக்கிற போது நமக்கே இது எதுவும் ஞாபகமிருப்பதில்லை. அதாவது இந்த விஷயங்கள் பூர்ணமாக நம் ப்ரக்ஞைக்கு எட்டாமலே இப்படியெல்லாம் பண்ணியிருப்போம். ஆனாலும் அந்தத் தூக்க நிலையில்கூட சரீராபிமானம் போகாததால்தான் சரீர ரக்ஷணைக்காக இந்தக் கார்யங்களைப் பண்ணியிருக்கிறோம். எந்தக் கார்யமானாலும் அதை மூளையின் டைரக்ஷனின் கீழே நரம்பு மண்டலம்தான் பண்ணுகிறது. அது உள்ளே இத்தனை சரீராபிமானம் ஊறியதாக இருக்கிறது. நம் இச்சையின் பேரில் 'வாலன்டரி'யாக இல்லாமல், தன்பாட்டுக்கு நரம்புகள் அநேக கார்யங்களைப் பண்ணுகின்றன. கழுத்து, இடுப்புப் பக்கங்களில் ஏதாவது நிமிண்டுகிற மாதிரிப்பட்டால் 'குறு குறு' என்று பண்ணிச் சிரிப்பாக வருகிறது. பயமாயிருந்தால் 'அல்ப ஸங்க்யை' வருகிறது;பெரிய கஷ்டம் வந்தாலோ வயிற்றையே கலக்குகிறது. ஒருத்தன் கொட்டாவி விட்டால் மற்ற பேரும் கொட்டாவி விடுகிறோம். இதெல்லாம் நரம்புகளின் 'இன்வாலன்டரி'க் கார்யங்கள்.

நிஜ மௌனத்தில் எப்படியிருக்கும்? உடம்பின் மேல் மலைப் பாம்பே போனாலும் தெரியாது. ஒரு reflex-ம் இருக்காது. குளிரோ, வெயிலோ எதுவானாலும் தெரியாமல் அடித்த சிலையாக நிஷ்டையில் இருப்பான். தேஹாத்ம புத்தி அடியோடு போய்விட்டதால், தேஹரக்ஷணை பண்ணிக்கொள்ள வேண்டுமென்று உள்ளூர இருக்கும் அபிமானம் இன்வாலன்ட்ரியாகக்கூட இல்லாமற்போய், அவனுடைய நரம்பு சலிக்கவே சலிக்காது. அவன்தான் எல்லாப் புலன்களையும் அடக்கி வெற்றி கண்ட 'ஜிதேந்திரியன்'.

நிஜ மௌனத்துக்கு நம்மைப் பழக்கிக் கொண்டோமானால், அப்படிச் செய்யும்போது நம்முடைய மநுஷ்ய வேகங்கள், பாவங்கள் எல்லாம் போய்விடும். உள்ளுக்குள்ளே இருக்கிற பொறி, பரமாத்ம ஜ்யோதிஸ்ஸின் பொறி, இப்போது நம்முடைய இந்திரிய ஜீவனத்திலே சாம்பலில் மூடிப்போனதுபோல் மங்கி இருக்கிற பொறி, மௌன ஸாதனையில் கண கண வென்று ஜ்வலிக்க ஆரம்பிக்கும். எந்தப் பரமாத்ம ஜ்யோதிஸ்ஸிலிருந்து இந்தப் பொறி வந்ததோ அதை நோக்கிப் போய் அதிலே கலந்து அதுவாகவே ஆகிவிடுவதற்காக அது மேலே மேலே ப்ராகசித்துக்கொண்டு போகும். இப்படி நடக்க நடக்க இப்போது நம்மிடம் பற்றியெரிகிற இந்திரிய வேகங்கள் தணிந்து மங்கி அணைந்து கொண்டே வரும். கடைசியில் ஏக ஜ்யோதிஸ்ஸாக, 'நிவாத தீபம்' என்கிறபடி, காற்றடிக்காத இடத்தில் உள்ள தீபமாக ஆத்மா மட்டுமே ப்ரகாசிக்கும். ஜீவாத்மா, பரமாத்மா என்ற பேதமில்லாத ஏக ஜ்யோதிஸ். அதுதான் மௌனத்தின் பூர்த்தி ஸ்தானம்.

ஜலத்தை கலக்குக் கலக்கு என்று கலக்கிக் கொண்டிருந்தால் அதற்குள்ளே இருக்கிற ஒரு முத்து எப்படித் தெரியும்? நாம் அநேக எண்ணங்களால் மனஸைக் கலக்கிக் கொண்டிருப்பதால்தான் உள்ளேயிருக்கும் ஆத்மா என்ற முத்து தெரியவில்லை. எண்ண அலைகளையெல்லாம் நிறுத்திவிடுவதுதான் நிஜ மௌனம். அதற்கு உபாயமாயிருப்பது இப்போது நாம் அநுஷ்டிக்க வேண்டிய வாய் மௌனம். யோக ஸாம்ராஜ்யத்துக்குள்ளே பிரவேசிப்பதற்கு முதல் வாசலே மௌனம்தான் என்று ஆசார்யாள் "விவேக சூடாமணி" யில் சொல்லியிருக்கிறார்: *யோகஸ்ய ப்ரதமம் த்வாரம் வாங்நிரோத :* (ச்லோ.367) .

12.6-சிந்தனையை நிறுத்துவது

வாய் மௌனத்தோடு, தினமும் கொஞ்ச நேரமாவது எதையும் நினைக்காமல், சிந்தனை தாரையை அடக்கி வைக்க வேண்டும். என்று சாஸ்திரம் சொல்கிறது ***"துர்ஷணீம் கிஞ்சித் அசிந்தயேத்".*** ஸாதிப்பது கஷ்டந்தான். இதற்கென்றே உட்கார்ந்தாலும், "எப்படி ஒன்றையும் நினைக்காமலிருப்பது?' ஒன்றையும் நினைக்காமலிருக்க வேண்டும்' என்ற நினைவுதானே இப்போதும் வந்து கொண்டிருக்கிறது?" என்று தோன்றும். மனஸ் எதையும் நினைக்காமலிருக்க வேண்டுமென்று பிரயாஸைப்படுவதும் மனஸின் ஒரு காரியம்தான். ***'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறம் அரிது'***என்று சொன்னது இதனால்தான். ஆனாலும் இப்படிப் பண்ண வேண்டும் என்ற பூர்ண ஈடுபாட்டோடு விடாமுயற்சியுடன் இதற்காக உட்கார்வது என்று ஆரம்பித்தால், ஈச்வர க்ருபையில் அந்த லக்ஷ்யம் கொஞ்சங் கொஞ்சமாகக் கைகூட ஆரம்பிக்கும். நாம் பண்ணக்கூடியது யத்தனம்தான். பலன் ஈச்வரன்தான் தரவேண்டும். அதனால் 'சும்மா' என்று தாயுமானவர் சொன்னபடி ஒரு சிந்தையும் இல்லாமல் உட்கார வேண்டும் என்ற தாபத்தோடு முயற்சியைத் தொடர்ந்து கொண்டே போனால், என்றைக்கோ ஒருநாள் அவன் ஸித்தியை அநுக்ரஹிப்பான்.

ஒன்றையும் நினைக்காமலிருக்க வேண்டும் என்பதற்காக ஸாதனை பண்ணும்போது ஒரு ஸ்டேஜில் சிலபேருக்கு மனஸ் சிறிது நேரம் காலியாகப் போய்விடுவதுண்டு. அதாவது அதில் எண்ணம் எழும்பாதுதான். ஆனாலும் அது ஆத்மாநுபவமாக இல்லாமல், வெறும் சூன்யமாக இருக்கும். மனஸின் ஓட்டம் நின்று விட்டாலும் ஆத்ம ஜ்யோதிஸ்ஸின் ப்ரகாசம் தெரியாத நிலையாயிருக்கும். இது ஞானம் இல்லாத நிலை. ஆத்மாநுபவம் என்பதோ பூர்ண ஞான நிலை. ஆத்ம 'ஜ்யோதிஸ்' என்றேனே, அப்படியானால் அது அக்கினி மாதிரி ஒரு ரூபத்தில் இருக்கும் என்றா அர்த்தம்? இல்லை. ஞானத்தைத்தான் இங்கே 'ஜ்யோதிஸ்' என்பது. அறிவொளி என்பது இதுதான். இங்கிலீஷிலும் ஞானம் வருவதை enlightenment,illumination என்றே சொல்கிறார்கள். இந்த அறிவு இன்னொன்றை ஆராய்ச்சி பண்ணித் தெரிந்து

கொள்ளும் அறிவில்லை. இது இன்னொன்றாக எதுவுமே இல்லாத தன்னைத் தானே தெரிந்து கொள்வதுதான். இப்படிப்பட்ட ஞானாநுபவம் இல்லாமலே, நல்ல தூக்கத்தில் ஒரு தினுஸு மாதிரி, ஒரு எண்ணமும் இல்லாமல் புத்தி வெறிச்சாகிவிடுகிற நிலை கொஞ்சம் நாழி ஏற்படலாம். அதற்காக பயப்படக் கூடாது. இது தாற்காலிகமாயிருப்பதுதான். ஆத்மாவோ, ஈச்வரனோ, அந்த எதுவோ ஒன்று தெரிய வேண்டும். என்ற தாபத்தை விடாமல், பிரார்த்தனை பண்ணிக்கொண்டு, தொடர்ந்து இந்தப் பிரயாஸையில் உட்கார்ந்து வந்தால் இந்த சூன்ய நிலையிலிருந்தே ஈஸ்வர பரமாக, ஆத்ம ஸம்பந்தமாக மாத்திரம் நினைக்கிற நிலைக்குப் போய் விடுவோம். From no-thought to God-thought. நினைப்பு இருக்கும்; ஆனால் இப்போதுள்ளதுபோல் இந்திரியப் பிடுங்கல் உள்ள நினைப்பாக இல்லாமல் துன்பக் கலப்பே இல்லாத பேரின்பமான ஈச்வர நினைப்பாக இருக்கும். அதற்கப்புறம் அந்த ஈச்வரனும் வேறேயாயில்லாத பரம ஞான நிலையில் எல்லா நினைப்புகளும், அவற்றுக்கு மூலமான மனஸும் கரைந்துபோய், நிறைந்த நிறைவான மௌனம் ஸித்திக்கும்.

பரப்பிரம்மத்தை மனஸாலும் வாக்காலும் பிடிக்க முடியாது. மனஸும் வாக்கும் அற்றுப்போன மௌனம் தான் அதை விளக்குவது!

*மௌந வ்யாக்யா ப்ரகடித பரப்ரஹ்ம தத்வம் **

பாஷா வ்யாக்யானத்தால் நெருங்க முடியாத பிரம்ம தத்துவத்துக்கு மௌனமேதான் பாஷையாகி வியாக்யானம் செய்கிறதாம்!

இப்போது நானா தினுஸான நினைப்பு, இப்படியில்லாமல் ஆக்கிக்கொள்ள மௌன அப்பியாஸம், அதிலே ஒரு நினைப்பும் இல்லாமல் சூன்யமாகப் போகிற நிலை, அப்புறம் ஈச்வரன் ஒருத்தனைப் பற்றியே நினைப்பு, முடிவிலே அவனையும் வெளியேயிருந்து நினைப்பதாக இல்லாமல் அவனாகவே ஆகிவிடுகிற நினைப்பற்ற பூர்ணத்வம்.

முதலிலிருந்தே அந்த சூன்யநிலை அதோடு முடிந்துவிடக் கூடாது என்பதில் கவனமாயிருந்து விட்டால் எல்லாம் ஸரியாகிவிடும். பூர்ண நிலைக்குப்

போய்விடலாம். முதலில் உண்டாகும் சூன்யத்தை 'லயம்'என்றும் முடிவில் உண்டாகும் பூர்ணத்தை 'ஸமாதி'என்றும் சொல்வார்கள்.

---

* ஆசார்யாளின் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்

12.7-ஈஸ்வர சிந்தனை

இது இரண்டுக்கும் நடுவே ஈச்வரனைக் கொண்டு வந்து விட்டேன். மனஸ் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டு காலியாகிறபோது இப்படி ஈச்வர ஸ்மரணம் என்பதாகச் செய்வது மறுபடி எண்ணங்களை உண்டாக்கிக் கொள்வதுதானே?' ஒன்றையும் நினைக்க வேண்டாமென்று ஸாதனை செய்ய ஆரம்பித்து, அப்படி நினைக்காமலிருக்கிற நிலை வரும்போது, இது சூனியமாகத்தானிருக்கிறதே தவிர ஸுகாநுபவமாக இல்லை என்பதால், இதை மாற்றி ஈச்வரனை நினைக்க ஆரம்பிப்பதில், மறுபடி தப்பு நினைப்புகளும் வருமாறு மனஸ் இழுத்துக்கொண்டு போய்விட்டால் என்ன பண்ணுவது? பூர்ணத்வம், நித்ய ஸுகாநுபவம் வராவிட்டால் போகட்டும். சூன்யமாகவே இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும். சூன்யமாகவே இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும். இந்த மனஸின் கன்னா பின்னா இழுப்பும், கெட்ட நினைப்புகளும் உண்டாக இடங்கொடுக்காமலிருந்தாலே போதும்'என்று தோன்றலாம்.

ஓரளவுக்கு மைன்ட் ஸ்டெடியாகி, நினைப்பில்லாமலிருக்கிற பக்குவம் பெற்றபின் அப்பியஸிக்க வேண்டிய ஈச்வர ஸ்மரணையைப் பற்றி இப்படிக் கவலைப்படவே வேண்டாம். அந்த ஸ்டேஜுக்கு அப்புறம் மனஸ் கெட்ட எண்ணங்களில் போகவே போகாது. ஒரு ஜீவன் ரொம்பவும் பிரயத்தனப்பட்டு எண்ணங்களை நிறுத்தித் தன்னிடம் மனஸைக் கொடுத்தபின் ஈச்வரன் அவனைக் கெட்டுப் போகும்படி விடமாட்டான். ஈச்வர பக்தியும் பிரேமையுங்கூட மனஸின் காரியந்தான் என்றாலும் இதற்கப்புறம் ஒருநாளும்

மனஸ் கெட்டதற்குப் போகாது; தன்னை அடியோடு கரைத்துக் கொள்கிற மௌனத்துக்கே போகும்.

துஷ்டர்களால் நமக்கு வழியில் ஆபத்து உண்டாகிறதென்று போலீஸ்காரனைக் கூப்பிடுகிறோம். அந்தப் போலீஸ்காரன் துஷ்டனை விரட்டிவிட்டு நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றியபின் நம்மையும் பயமுறுத்திக் தண்டிப்பானா என்ன? அல்லது தானும் நம்மோடோயே வீட்டுக்குள் வந்து இருந்து விடுவானா? நம்மை ஆபத்திலிருந்து ரக்ஷித்து வீட்டில் சேர்த்தபின் அவன் போய்விடுவான் அல்லவா? இம்மாதிரிதான் கெட்ட எண்ணம் போக ஈச்வரனை எண்ணுகிறோம். இந்த ஸ்மரணையாவது கெட்டதை விரட்டிவிட்டு, நம்மை அறம், பொருள் இன்பம், வீடு என்பதில் 'வீடு' என்கிறார்களே அதில் சேர்த்துவிட்டுத் தானும் போய்விடும். மனஸை வைத்துக்கொண்டு ஆரம்பிக்கும் பக்தி மனஸ் அற்றுப் போகும் ஞானத்தில் கொண்டு விட்டுவிடும்.

ஸஜ்ஜனங்களின் கூட்டுறவும் இப்படித்தான் எல்லா உறவும் அற்றுப்போகிற நிலைக்குக் கொண்டு விட்டு விடும். ஒரு விதமான பற்றும் இல்லாமலிருக்க வேண்டும் என்றால் அது உடனே ஸாத்யமாயில்லை. அதனால் கெட்ட ஸஹவாஸத்தை விட்டு ஸத்ஸங்கம் சேரவேண்டும். இதுவும் உறவுதான். ஆனால் ஒரு பழம் நன்றாகக் கனிந்தபின் தானாக இற்று விழுந்து விடுகிறமாதிரி , இது ஒருநாள் முடிந்துவிடும். இதைவிட உயர்ந்த ஏகாந்த அநுபவத்தில் சேர்த்துவிடும். ***"ஸத் ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்"*** என்று ஆசார்யாள் ('பஜகோவிந்த'த்தில்) சொல்கிறார்.

இப்படியே God-thoughtலிருந்து no-thought உண்டாகும். ஆனால் இது முதலிலிருந்த சூன்ய no-thought இல்லை;பரிபூர்ண ஸ்திதி; `தாட் 'எழுப்புகிறதற்கு இடமேயில்லாமல் ஞானம் பூர்ணமாக ரொம்பிய நிலை.

`ஸத்ஸங்கம்' என்பதற்கு இன்னொரு அர்த்தம் சொல்லலாம். ஸத்வஸ்து என்பது எக்காலும் மெய்ப் பொருளாயிருக்கும் ஆத்மா ஒன்றுதான். தேஹாத்ம புத்தியை நீக்கி அந்த 'ஸத்' தான நிஜ ஆத்மாவில் சேர்வதுதான் 'ஸத்ஸங்கம்'. ஸத்புருஷர்களின் ஸங்கத்தினால் ஏற்படும் நிஸ்ஸங்கத்வம்

கடைசியில் இந்தப் பெரிய 'ஸத்'தின் ஸங்கத்தைத்தான் உண்டாக்கித் தரவேண்டும். அப்போது "நான், நான்"என்று இப்போது நினைத்துக் கொண்டிருப்பது எதுவோ, நம்முடைய இத்தனை உபத்ரவங்களுக்கும் காரணம் எதுவோ, அது ஏக பரமாத்ம ஞானத்தில் அடிபட்டுப் போய், அந்த ஞான வஸ்துவின் பூர்ணானந்த ரூபமாகவே நாம் ஆகிவிடலாம. அது வேறே, நாம் வேறே என்று நினைக்கிறவரை 'நான்', 'எனது' என்கிற எண்ணங்கள் (அஹங்கார-மமகாரங்கள் என்பவை) இருந்து கொண்டேதான் இருக்கும். முதலில் ஸத்வஸ்துவை ஈச்வரன் என்று வேறேயாக வைத்தே அவன் கையில் இந்த அஹங்கார மமகார 'நானை'ப் பிடித்துக் கொடுத்தால் இது உபத்ரவம் பண்ணுவதை விட்டுவிடும். அப்புறம் அவன் வேறேயாக இருக்க வேண்டாம் என்று இதைத் தானாகவே உயர்த்தி, உணர்த்திக் காட்டி விடுவான்.

அதனால் ஒன்றையும் நினைக்காமல் மௌனமாயிருப்பதென்று முதலில் வாயின் மௌத்துடன் ஈச்வர ஸ்மரணை பண்ணுவதாக ஆரம்பிக்கப்பட வேண்டும். பரமாத்மாவை நம்முடைய இஷ்ட தேவதை எதுவோ அதுவாக பாவித்து இப்படி ஸ்மரிக்க வேண்டும். ஸாக்த் பராசக்தியாகவோ, உமாமஹேச்வரனாகவோ, லக்ஷ்மி நாராயணனாகவோ பாவித்து மௌனமாக த்யானம் பண்ண வேண்டும். அதற்கப்புறம் இந்த நினைப்பும் போவது அந்தப் பராசக்தியின் அநுக்ரஹத்தால் நடக்க வேண்டியபோது நடக்கட்டும். மௌனமாக ஈச்வர ஸ்வரூப த்யானமும், மனஸுக்குள்ளேயே நாம ஜபமும்தான் நாம் செய்ய வேண்டியது.

கண்டதை நினைத்துக் கொண்டிருப்பதிலிருந்து நேரே இப்படி ஈச்வர நினைப்புக்குப் போனாலும் போகலாம். அல்லது எந்த நினைப்பும் வராமலிருக்கும் படியாகக் கொஞ்சம் பழகிக் கொண்டுவிட்டு, அப்புறம் அது வெறும் ஜடஸ்திதியாக நின்று விடாமலிருப்பதற்காக அந்த கட்டத்தில் ஈச்வர பரமாக நினைக்க ஆரம்பிக்கலாம். இந்த கட்டத்தில் அது கொஞ்சம் பலமாகவே ஈச்வரனிடம் ஒட்டிக் கொள்ள ஆரம்பிக்கும்.

12.8-ஸமூஹ நலனுக்கும் உதவுவது

இத்தனை நாள்* நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்தேன். என்ன வைதிக கார்யங்கள் செய்ய வேண்டும், தர்மரக்ஷணத்துக்காக என்ன கர்மாநுஷ்டானங்கள் செய்ய வேண்டும், ஸமூஹத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாமே சொல்லிவந்தேன். இன்றைக்கு ஒரு மாற்றாக ஒன்றையுமே செய்யாமல் மௌனமாக இருக்கச் சொன்னாலென்ன என்று தோன்றிற்று. இதுவும் ஜீவனதர்மம்தான். கார்யங்களால் உண்டாகிற நன்மைகளைவிட இதுதான் பெரிய நன்மை. ஆத்மசாந்தி இதில்தானே கிடைக்கிறது? ஸமூஹத்துக்கும் இது பெரிய உபகாரந்தான். கெட்டதைப் பேசியும், பண்ணியும் ஸமூஹத்தைக் கெடுக்கமலிருக்கிறோமென்பதால் மட்டுமில்லை. இம்மாதிரி இந்திரியத்தைக் கட்டுப்படுத்துவதால் உண்டாகிற ஆத்மசக்திதான் ஸமூஹத்துக்கு மிகப்பெரிய க்ஷேமத்தை உண்டாக்குவது. அதனால், மக்களின் வாழ்க்கை முறையில் மௌனமாக, ஒரு கார்யமுமில்லாமல் அன்றன்றும் கொஞ்ச நாழி - அரைமணியாவது - உட்கார்ந்திருப்பதையும் சேர்த்துக் கொள்ளச் சொல்ல வேண்மென்று தோன்றியது.

---

* அதாவது 1957 அக்டோபரிலிருந்து 1958 ஏப்ரல் வரை சென்னையில் ஆற்றிய உரைகளில்.

12.9-மௌனப் பிரார்த்தனை

இன்றைக்கு இதை விஷயமாக எடுத்துக்கொள்ள அரசாங்கத்தாருடைய ஒரு அபிப்ராயம்தான் 'ப்ராவகேஷ' னாக (தூண்டுதலாக) இருந்தது. ஸமீபகாலமாக, பள்ளிக் கூடம் ஆரம்பிக்கும்போது மாணவர்களுக்கு 'ப்ரேயர்' இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதில் இரண்டுவித கருத்துக்கள் இருந்து வந்திருக்கின்றன. தலைவர்களில் சில பேர் தெய்வபக்தி உள்ளவர்களாகவும், சில பேர் அப்படியில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால்தான் அபிப்ராய பேதம். அப்புறம் தெய்வபக்தியில்லாதவர்களும் 'ஸ்கூல் ஆரம்பத்தில் 'ப்ரேயர்' என்பது நீண்டகால வழக்கமாக இருந்து வந்துவிட்டதே;

இதை எடுத்துவிட்டால் நான் ரொம்பப் பேரின் அதிருப்திக்குப் பாத்திரமாக வேண்டிவருமே!' என்பதால், ப்ரேயர் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும், இஷ்டப்பட்ட பசங்கள் பண்ணட்டும், இஷ்டமில்லாதவர்களுக்குக் கட்டாயமாக்க வேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் இதோடு பிரச்னை தீர்ந்து விடவில்லை. 'ப்ரேயர்' என்றால் எதை வைப்பது? இதுவோ மதச்சார்பில்லாத ஸெக்யூலர் அரசாங்கம். அநேக மதங்களைச் சேர்ந்த பசங்கள் சேர்ந்து படிக்கும்போது எந்த ஒரு மதத்தின் பிரார்த்தனையை மட்டும் வைத்தாலும் தப்பாகிவிடுமே என்று யோசித்தார்கள். முடிவாக இப்போது பசங்கள் எல்லாரும் பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னால் இரண்டு நிமிஷமோ மூன்று நிமிஷமோ மௌனமாகப் பிரார்த்தனை பண்ணிக் கொள்ளட்டும் என்று தீர்மானம் பண்ணியிருக்கிறார்கள்.

சின்னக் குழந்தைகளுக்கே இப்படி மௌனத்தை அவர்கள் சொல்வதால், நாமுந்தான் பெரிய குழந்தைகளுக்கும் மௌனத்தைப் பற்றிச் சொல்லாமே என்று தோன்றிற்று.

அவர்கள் மட்டும்தான் மாணவர்களா என்ன? நீங்கள், நான் எல்லோரும் மாணவர்கள்தான். லோகம் என்கிற இந்த பெரிய ஸ்கூலில் வாழ்நாள் பூராவும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய வித்யார்த்திகளாகத்தான் நாம் எல்லாருமே இருக்கிறோம்.

இன்றைக்கு நீங்கள் கற்றுக்கொண்டது மௌன வித்யை. '**மோனம் என்பது ஞான வரம்பு**'என்று பிரம்ம வித்யையாகவே அதைச் சொல்லியிருக்கிறது. ஜன்மா எடுத்ததற்கு இந்த ஜன்மாவில் நாம் என்னென்ன செய்ய வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் ஒன்றுமே செய்யாமல், பேசாமல், நினைக்காமல் இருக்க வேண்டுமென்று தெரிந்து கொள்வதுமாகும். மனஸ் போகிறபடியெல்லாம் நினைப்பது, வாயில் வந்தபடியெல்லாம் பேசுவது என்றால், பிற்பாடு ஜன்மாவின் பலனையே அடையவில்லை என்று துக்கப்படும்படியாகும். அதனால்தான் மனஸை அடக்கி மௌனமாயிருக்க வேண்டுமென்று தெரிந்து

கொள்வதே (அப்படிச் செய்வது அப்புறம் இருக்கட்டும்) உங்களுக்கு ஒரு வித்யா லாபம் என்று நினைத்துச் சொன்னேன்.

12.10-நான் கற்ற பாடம்

மெட்றாஸுக்கு வந்ததில் நானும் ஒரு பாடம் கற்றுக் கொண்டேன். மௌனத்தால் கிடைக்கிற சாந்த ஸௌக்யம் சாச்வதமாக நிலைத்து நிற்பது;அதாவது எத்தனை கஷ்டத்துக்கு நடுவிலும் கஷ்டம் தெரியாமல் ஆனந்தமாக இருக்கும்படிப் பண்ணுவது என்று சொல்கிறார்கள். கஷ்டமே இல்லாமலிருக்க வேண்டுமென்றால் முடியாது. கஷ்டம் இருக்கத்தான் வேண்டும். அப்போதுதான் கர்மா கழியும். ஆனாலும் அது கஷ்டமாகத் தெரியக்கூடாது. ஒரே ஒரு 'அயிட்டத்' திலாவது இதை நான் தெரிந்து கொண்டதற்கு மெட்றாஸ் வாஸம் ஸஹாயம் பண்ணியிருக்கிறது. இங்கே பூஜை பார்க்க வேண்டும் என்பதற்காக நீங்களெல்லாம் பக்தியோடு கும்பலில் தெரிந்து கஷ்டப்பட்டுக்கொண்டு மணிக் கணக்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். பூஜை பார்க்கிறபோது இத்தனை கஷ்டமும் மறந்து உத்ஸாஹம் உண்டாகி பாராயணம், பஜனை என்று ஆனந்தமாக ஆரம்பித்து விடுகிறீர்கள். மற்றவர்களுக்கும் இது நல்லதுதானே என்ற நல்லெண்ணத்தில்தான் இப்படிச் செய்கிறீர்கள். ஆனால் இதனாலேயே ரொம்பவும் சப்தமும், distraction -ம் (கவனச்சிதறலும்) ஏற்பட்டு விடுகிறது என்று சில பேருக்குத் தோன்றவே, "Silence Please!" என்று அட்டைகள் எழுதி மாட்ட ஆரம்பித்தார்கள். நான் அவற்றைக் கழற்றிவிடச் சொன்னேன் ஏன்?' இப்போதுதான் நமக்கு ஒரு பாடம் படித்துப் பாஸ் பண்ண ஸந்தர்ப்பம் வந்திருக்கிறது. இதை நழுவவிடக் கூடாது' என்று நினைத்துத்தான் கழற்றச் சொன்னேன். ஈஸ்வராநுக்ரஹத்தில், இப்போது எத்தனை சப்தமிருந்தாலும் நான் பாட்டுக்குப் பூஜையைப் பண்ணிக் கொண்டிருக்கப் பழகி விட்டேன்.

அதனால் இன்று மௌனத்தைப் பற்றிப் பேசினது எனக்கு ஸௌகர்யமாகப் பூஜையின்போது நீங்கள் பேசாமலிருக்கும்படிப் பண்ண வேண்டும் என்ற உத்தேசத்திலல்ல. உங்களுக்கே அதன் பிரயோஜனம்

ஏற்பவேண்டுமென்றுதான் சொன்னேன். இத்தனை நாள் உங்கள் இஷ்டப்படி பாடி, பேசி, பஜனை செய்தாகிவிட்டபடியால், இப்போது உங்களைப் பூஜையின்போது மௌனமாக மானஸிகமாகப் பிரார்த்தனை பண்ணிக் கொள்ளச் செய்வதில் நியாயமிருக்கிறதென்று தோன்றிற்று. சும்மாயிருக்கும் ஸுகத்தின் லேசமாவது உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டும் என்ற ஆசையில் சொன்னேன்

13-அளவறிந்து செயற்படுக

13.1-மிதத்துக்காகவே மிகைகள்

"விதவிதமாகப் பண்ணி மூக்கைப் பிடிக்கத் தின்னு" என்று ஒரு சாஸ்திரம்! பூஜா கல்பங்கள் என்று வழிபாட்டு முறைகளைக் கூறும் புஸ்தகங்கள் இப்படிச் சொல்வதாகத்தான் அர்த்தம்! அவற்றில் நைவேத்யம் பண்ணும்போது, ***"நைவேத்யம் ஷட்ரஸோபேதம்"*** என்று போட்டிருக்கும். ***"ஷட்ரஸோபேதம்"*** என்றால் அறுசுவையுடன் கூடிய போஜன தினுஸுகள். அத்தனை வித அன்னங்களையும், வியஞ்ஜனங்களையும், பக்ஷ்யங்களையும் ஸ்வாமிக்குக் காட்ட வேண்டும். அவனுக்கு வெறுமனே காட்டுவதுதான். ***"நிவேதயாமி"*** என்றாலே, ***"தெரிவிக்கிறேன்",*** அதாவது "இந்த ஆஹாரமெல்லாம் உனக்கு முன்னால் வைத்திருப்பதை உனக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுதான் அர்த்தமே தவிர, ***"உன்னைச் சாப்பிடப் பண்ணுகிறேன்"*** என்று அர்த்தமில்லை. எங்கேயோ நாமதேவர் மாதிரி ஒருத்தரால்தான் அவனைச் சாப்பிடப் பண்ண முடியும்; நாமெல்லாம் அவனுக்குக் காட்டிவிட்டு, தெரிவிக்கிறதோடு ஸரி. அவன் பார்வை பட்டதாலேயே அந்த நைவேத்யம் பிரஸாதமாகிவிடுகிறது. அதை நாம்தான் சாப்பிடுகிறோம். ஆனதால் சுசி ருசியாய் பல தினுஸு பண்ணி நாம் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று சாஸ்திரமே சொல்வதாக ஆகிறது!

இன்னொரு பக்கம் சாஸ்திரத்திலேயே அநேக உபவாஸங்கள், பழம் மட்டுந்தான் சாப்பிடலாம், ஜலங்கூடக் கூடாது என்றெல்லாம் கண்டிப்பு.

ஒரு பக்கம் வேத கோஷம், ராமாயண நவாஹம், பாகவத ஸப்தாஹம், ஹரிகதை, பஜனை, ஜால்ரா, சிப்ளா மிருதங்கம், "**கதயந்தச்ச மாம் நித்யம்**" என்று பகவானே சொன்னபடி[1] அவன் கதைகளையே ஓயாமல் பேசுவது பாடுவது, இன்னும் மிஞ்சினால் ஆனந்தக் கூத்தே ஆடுவது என்று அமர்ககளம் மேளதாளம், சேகண்டி, அதிர்வேட்டு.

இன்னொரு பக்கம் லோகமே போனாலும் போகட்டுமென்று மௌனமாக மூக்கைப் பிடித்தக் கொண்டு உட்கார்ந்து விடுவது.

ஒரு பக்கம் பலி, கிலி; யஜ்ஞத்தில் பசுவைக் கொடுப்பது.

இன்னொரு பக்கம் ரொம்பப் பிஞ்சாகப் புடலங்காயைப் பறித்துவிட்டால்கூடப் பாபமென்று பிராயசித்தம்.

ஒரு பக்கம் முனி, காட்டேரி என்று ஏகப்பட்டவை. அப்புறம் லௌம்யமாக தேவதா ரூபங்கள். பலவிதமான கலர். நாலு கை, எட்டு கை, பத்துக் கை, பதினெட்டுக் என்று அநேக மூர்த்திகள். மூஞ்சூரிலிருந்து யானை, சிங்கம் வரை வாஹனங்கள்.

இன்னொரு பக்கம் நிர்குணம், நாமம் ரூபம் இல்லை, பகவானுமில்லை, பக்தனுமில்லை என்று வேதாந்தம்.

ஒரே சாஸ்திரங்களே இப்படி ஒன்றுக்கொன்று வித்யாஸமாகச் சொன்னால் என்ன அர்த்தம்?

நமக்குத் தெரிந்த இடத்தில் ஆரம்பித்துத் தெரியாததற்குப் போகவேண்டுமென்று அர்த்தம். அப்படிக் கொண்டு போவதற்காகவே நமக்குத் தெரிந்தது, தெரியாதது என்று ரொம்ப வித்யாஸமுள்ளதாயிருக்கிற இரண்டையும் சொல்கிறது.

நமக்கு என்ன தெரிகிறது? த்வைத ப்ரபஞ்சந்தான். ஏகப்பட்ட ரூப வித்யாஸங்கள், குண வித்யாஸங்கள், மற்ற வித்யாஸங்கள் கொண்டதான த்வைதந்தான் நாம் இருக்கிற நிலை. பலவித ருசிகள், பலவிதக் காட்சிகள், பலவிதக் கேள்விகள், கோபம், தாபம், பிரேமை, சாந்தி, உக்ரம், ஸௌம்யம்

என்று பலவித உணர்ச்சி வேகங்கள், குண வித்யாஸங்கள், நாமம் ரூபம் இவைதான் நாம் இருக்கிற நிலையில் தெரிவது.

'நாம் இருக்கவேண்டிய நிலை என்ன? இப்போது நமக்குத் தெரியாததாக இனிமேல் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?' என்றால் அதுதான் இந்த த்வைதத் தோற்றத்துக்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற ஒன்றே ஒன்று - 'அத்வைதம்'என்று என்னமோ ஒன்று சொல்கிறார்களே அது. அங்கே ருசியில்லை, சப்தமில்லை, ரூபமில்லை, நாமமில்லை, குணமில்லை. ஆனால் இதற்கெல்லாம் காரணமானது இருக்கிறது.

தெரிந்ததையே தெய்வ ஸம்பந்தமுள்ளதாக்கித் தரவேண்டுமென்றுதான் 'நைவேத்யம் ஷட்ரஸோபதேசம்', ஹரிகதையும் பஜனை சத்தமும், உக்ர-ஸௌம்ய தேவதைகள், அவற்றுக்கு அநுகுணமான ஹிம்ஸை-அஹிம்ஸைக் கார்யங்கள்.

ஆனால் தெரிந்ததோடு மட்டும் நிற்கப்படாது, தெரியாததையும் கொஞ்சங் கொஞ்சமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் பட்டினி - ருசி இல்லாத ஸமாசாரம்; மௌனம் - சத்தமில்லை; நிர்குணப் பிரம்மம் - நாம ரூபமில்லாத ஸமாசாரம்.

இப்படி இரண்டு எக்ஸ்ட்ரீம்களைச் சொல்லிவிட்டால் மட்டும் ஸரிப்பட்டு வராது. இரண்டையும் link பண்ணுவதற்கு (இணைப்பதற்கு) ஒன்று செய்யவேண்டும். நாம் வாழ்கிற முறையில் எல்லா aspect-ம் இந்த link -ஐ reflect பண்ணும்படியாக (இந்த இணைப்பைப் பிரதிபலிக்கும்படியாக) வாழவேண்டும்.

இந்த 'லிங்க்' என்ன? அதுதான் மிதமாக இருப்பது. மாடரேஷன் என்கிறார்களே, அது. 'மிதவாதி'கள்என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். "உடனே பூர்ண ஸ்வராஜ்யம் வேண்டுமென்று அவஸரப்படக்கூடாது. அதே ஸமயத்தில் வெள்ளைக்கார ராஜாங்கத்துக்கு இத்தனை ஆதிக்யமும் இருக்கவிடக் கூடாது" என்பது அவர்கள் கட்சி. அவர்கள் சொன்னதில் உள்ள நியாயம் இப்போது ஸ்வதந்திரம் வந்துவிட்டு நமக்கே தெரிகிறது!

எதிலும் மிகையாகப் போகாமல் நடுநிலைமையில் இருப்பதுதான் மிதம். ‘மிதம்’ என்றால் ‘அளக்கப்பட்ட’, `அளவறிந்த’என்று அர்த்தம். Measured behaviour என்று சொல்லும்போதும் எதிலும் தீவிரமாகப் பறக்காமல், நிதானமாக, கவனமாகச் செய்வதைத்தானே என்பது measured குறிக்கிறது? Measured -தான் மிதம். ‘ஜ்யாமெட்ரி’ என்கிறோமே அது ‘ஜ்யா-மிதி’ என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தைதான். ‘ஜ்யா’ என்றால் பூமி. ‘மிதி’ என்பது ‘மிதம்’ தான் - அதாவது அளக்கிற விதிமுறை. யஜஞ்த்தில் வேதிகை நிர்மாணம் முலானதுகளுக்கு பூமியை அளப்பதிலிருந்தே ‘ஜ்யாமெட்ரி’ உண்டாயிற்று. ‘க்ஷேத்ரம்’ என்றாலும் பூமிதான். அதனால்தான் இதற்கு ‘க்ஷேத்ர கணிதம்’என்று பெயர் இருக்கிறது.

செய்கிற காரியம், பேசுகிற பேச்சு ஸம்பாதிப்பது, செலவழிப்பது, புத்தியை ஓடவிட்டு நினைப்பது, அலைவது, சாப்பிடுவது, ட்ரெஸ் பண்ணிக் கொள்வது, பொழுது போக்கு எல்லாவற்றிலுமே, ஒவ்வொன்றிலுமே ‘ஓவராக’ப் போய்விடாமல், மனஸ் எதற்கும் வசப்பட்டு விடாதபடி, அளவறிந்து measured -ஆக வைத்துக் கொள்வதுதான் மிதம். எல்லாவற்றிலும் இப்படிப் பண்ணுகிற பழக்கம் வந்துவிட்டால் சித்தம் ஸமநிலையில் பரம சாந்தமாக ஆவவதற்கு உதவும்.

பழக்கம் எப்படி வரும்?ஈஸ்வர க்ருபையில்தான் வரும். ‘அந்த க்ருபை எப்படி வரும்? ` என்றால், அதற்காகத் தான், அதை வருவித்துக் கொள்வதற்காகத்தான், இரண்டு ‘எக்ஸ்ட்ரீம்’களாக அநுஷ்டானங்களை சாஸ்த்ரங்கள் ஏற்படுத்திக் கொடுப்பது. நமக்குத் தெரிந்த நிலையில் ஒரு எக்ஸ்ட்ரீமாக பண்டிகை போஜனம், பாட்டு, கூத்து ஆகியவற்றையும், தினுசு தினுசுகளில் அபிருசி கண்ட நம் மனஸுக்கு ஏற்றபடி அநேக தெய்வங்கள் ஆகியவற்றையும் ஒரு பக்கம் சொல்லிக்கொண்டே, அதே ஸமயத்தில் இன்னொரு எக்ஸ்ட்ரீமான, உண்ணாத உறங்காத பேசா நிலையையும், நிர்குண ஏக பரமாத்மாவையும் ஞாபகப்படுத்திக்கொண்டேயிருப்பது. இப்படி இரண்டு எக்ஸ்ட்ரீம்களையும் மாறி மாறி அப்யாஸம் செய்கிறதாலேயே, தராசின் இரண்டு தட்டுகளிலும் ‘வெயிட்’ களைப் போடுவதால் அது ஸம

நிலைக்கு வருகிற மாதிரி மனஸு ஸமத்துக்கு வந்து, அதோடு வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மாடரேஷன் வந்துவிடும்.

ஒரு கயிற்றை 'தொய்யாமல் நில்லு' என்று வெறுமனே விட்டால் அது நிற்குமா? அதை இரண்டு பக்கம் இரண்டு கழியை நட்டு இரண்டு கோடிக்குமாக இழுத்துக் கட்டினால்தானே ஸம நிலையில் தொய்யாமல் நிற்கும்? அப்படித்தான் தானாக ஸம நிலைக்கு வராத நம் வாழ்க்கை முறையை அப்படி வரப் பண்ணவே இரண்டு கோடியாக இரண்டு வித எக்ஸ்ட்ரீம்களில் அநுஷ்டானங்களைக் கொடுத்துக் கட்டிப் போட்டிருக்கிறது. நேராக மாடரேஷனுக்குப் போகத் தெரியாததால், எக்ஸ்ட்ரீம்களை ஸமயாநுஷ்டானத்தில் கொடுத்து, அதன் வழியாக, நாம் வாழ்கின்ற முறை மாடரேஷனில் போகும்படிப் பண்ணியிருக்கிறது.

இதர மதங்களில் அஹிம்ஸை, அரூப த்யானம் என்று ஏதாவது ஒரு எக்ஸ்ட்ரீமை மட்டும் வைக்கிறபோது ஜனங்களால் அந்த பிகு தாங்காமல் fail ஆகிறார்கள். அப்படியில்லாமல் மாறுபட்ட இரண்டு எக்ஸ்ட்ரீம்களை நம் மதம் மாற்றிச் சொல்வதால், cha ஸீரீமீ-ல் ஆசை கொண்ட ஜீவ மனஸ் இஷ்டத்தோடு இப்படி மாற்றி மாற்றிப் பண்ணுகிறது.

ஸமயாநுஷ்டானம் என்று இப்படி ஒவ்வொரு ஸமயத்தில் பண்ணுவதாக மட்டுமில்லாமல், ஸதா கால வாழ்க்கைப்போக்காகவும் நெறியாகவும் பின்பற்ற வேண்டிய அஹிம்ஸை, பிக்ஷுத்வம் முதலானவற்றிலும் நம் மதம் மற்றவற்றைப்போல் ஒரே கண்டிப்பாக எல்லாருக்கும் லக்யத்தை விதிக்காமல் பிரித்துக் கொடுத்திருப்பதைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறேன். இதனாலெல்லாந்தான் நம் மதம், இத்தனை ஆசார சாஸ்த்ரமிருந்த போதிலும், மற்ற எல்லா மதங்களையும்விட flexible -ஆக (நெகிழ்ந்து கொடுப்பதாக) ஆகி, இதற்கு ஒரு சிரஞ்ஜீவித்வம் ஏற்பட்டிருக்கிறது.

ஸமயாநுஷ்டானங்களில் இப்போது நாம் இருக்கிற தசையில் நம் மதம் காட்டும் இரண்டு எக்ஸ்ட்ரீம்களில் பண்டிகைச் சாப்பாடு, பஜனைக் கூத்து, உருவ வழிபாடு இவற்றில் கிடைக்கிற ஆனந்தம் பட்டினியிலும்,

மௌனத்திலும், ஆத்ம த்யானத்திலும் கிடைப்பதில்லை. ஏதோ ஒரு பார்வையின் பேரிலும், 'இது பெரியவர்கள் காட்டும் வழியாச்சே' என்ற நம்பிக்கையின் பேரிலுந்தான் இப்போது நமக்குத் தெரியாதவையாக இருப்பவற்றுக்கான அநுஷ்டானத்தைப் பண்ண முடிகிறது. ஆனாலும் விடாமல் போனால் வாழ்க்கையில் மாடரேஷன் வரும்.

இப்படி மாடரேஷனில் நன்றாக் பழக்கப்பட்டு முதிர்ந்த நிலைமை, கனிந்த நிலைமை உண்டாகிறபோது, இப்போது எது நமக்குத் தெரியாததாக இருக்கிறதோ, இன்னொரு 'எக்ஸ்ட்ரீம்'ஆகத் தோன்றுகிறதோ, எதை நாம் ஏதோ ஒரு பாவனையின் பேரில்தான் கொஞ்சம் ஊகித்துப் பார்க்க மாத்திரமே முடிகிறதோ, அது - அதாவது பரமாத்வோடு ஏகமாக ஒன்றியிருக்கிற நிலை - எக்ஸ்ட்ரீமாக இல்லாமல், ஸஹஜமான எக்ஸ்பீரியன்ஸாக ஆகிவிடும்.

அளவறிந்து, எதிலும் ஓவராகப் போகாமல், மிதமாக மத்யமாகப் போகிறதைத்தான் பகவான் கீதையில் உபதேசித்திருக்கிறார்:

நாத்யச்நதஸ்து யோகோ (அ)ஸ்தி ந சைகாந்த-மநச்நத: |
ந சாதிஸ்வப்ந-சீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந || (6-16)
யுக்தாஹார-விஹாரஸ்ய யுக்த-சேஷ்டஸ்ய கர்மஸு |
யுக்த-ஸ்வப்நாவாபோதஸ்ய யோகோ பவதி து:கஹா || (6-17)

"பெருந்தீனி தின்கின்றவனுக்கும் யோகம் ஸித்திக்காது; ஒரே பட்டினி கிடக்கிறவனுக்கும் ஸித்திக்காது. எப்போது பார்த்தாலும் தூங்குகிறவனுக்கும் யோகம் வராது; தூக்கமேயில்லாதவனுக்கும் வராது. சாப்பாடு ஸஞ்சாரம், மற்ற காரியம் எல்லாவற்றிலுமே மிதமாக இருக்கிறவனுக்குத்தான் யோகம் ஸித்திக்கும்; ஸம்ஸார துக்கத்தைப் போக்கும்" என்கிறார். மிதமாக இருப்பதற்கு இங்கே பகவான் சொல்லும் வார்த்தை 'யுக்தம்' என்பதாகும். 'எப்படி யுக்தமோ அப்படிப் பண்ணுங்கள்' என்று நாம் கூடப் பேச்சில் சொல்கிறோம். 'யுக்தம்', 'யோகம்' என்ற இரண்டு வார்த்தையும் 'யுஜ்' என்னும் ஒரே தாதுவிலிருந்து வந்தவைதான். 'யுஜ்' என்றால் இணைப்பது. ஜீவாத்மாவைப் பரமாத்மாவோடு இணைப்பது யோகம். அப்படி இணைக்க வழியாக உள்ள மிதமான போக்கே 'யுக்தம்'.

எக்ஸ்ட்ரீமுக்குப் போவதுதான் மனஸின் நேச்சர். 'மிதமாயிரு' என்றால் அதனால் முடிவதில்லை. இதற்காகத் தான் சாஸ்திரங்கள், "இரண்டு எக்ஸ்ட்ரீம்களுக்கு மாறி மாறிப் போ"என்கிறது. "மிதமாகச் சாப்பிடு என்றால் நாக்கு கேட்கமாட்டேன் என்கிறதா? ஸரி, இதோ பண்டிகைகளைக் கொடுக்கிறோம்; இந்த நாட்களில் ஷட்ரஸோபேதமாகச் சாப்பிடு" என்கிறது. ஆனால் இதோடு விடாமல், ஈடுகட்டுகிறதற்கு வ்ரத உபவாஸ தினங்களையும் விதிக்கிறது. இப்படியே சில நாட்களில் "வாய் கொண்ட மட்டும் கத்து, ஆடு, பாடு" என்று விட்டுவிட்டு வேறே சில நாட்களில் "வாயைத் திறக்கவே திறக்காதே" என்று மௌனத்தை அநுஷ்டிக்கச் சொல்கிறது. இந்த எல்லாவற்றையுமே தெய்வ ஸம்பந்தப்படுத்திக் கொடுக்கிறது. பித்ரு கார்யம், பஞ்சாயதனம், வைச்வதேவ பலி, அது இது என்று பலதுகளுக்கு (பலவற்றுக்கு) வழிபாட்டைச் சொல்லும்போதே, 'காம்பன்ஸேட்' பண்ண "ப்ரஹ்மைவாஹமஸ்மி"[2] என்று மூக்கைப் பிடித்துக் கொள்ளவும் சொல்கிறது.

வாழ்க்கையம்சங்களில் தானாக மிதமாக இருக்க முடியாத மநுஷ்ய ஸ்வபாவதுக்கு இப்படி ஸமயாநுஷ்டானத்தில் இரண்டு எக்ஸ்ட்ரீம்களையும் அப்யாஸம் பண்ணுவதே மிதப்படுத்துவதற்கு வழியாக ஆகிறது. உபவாஸத்தால் விருந்தை 'பாலன்ஸ்' பண்ணுவது, மௌனத்தால் உத்ஸாஹக் கூத்தை 'பாலன்ஸ்' பண்ணுவது என்றிப்படி சாஸ்திரப் பிரகாரம் ஒரு எக்ஸ்ட்ரீமால் இன்னொன்றை 'பாலன்ஸ்' பண்ணுகிற பழக்கத்தால், வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் தராசு ஸமமாக நிற்கிற மிதமான நிலைமை, 'யுக்த'மான நிலைமை கைவரும். இரண்டு விதத்தில் மிகையாக மாறி மாறிப் பண்ணுவதாலேயே மிதம் வந்துவிடும்!

---

* இவ்வுரையை தெய்வத்தின் குரல் முதற்பகுதியில் சமூக விஷயங்கள் என்றி பிரிவிலுள்ள கணக்காயிருக்கணும் என்ற உரையுடன் இணைத்துக் கொள்ளலாம்.

[1] **கீதை** 10.9

[2] நான் பிரம்மாகவே இருக்கிறேன் என்ற அத்வைத வாக்கியம். ஸந்தியாவந்தனத்தில் இந்த அநுஸந்தானமும் அங்கமாகும்.

13.2-அளவறிந்து செய்தல்

எந்த சக்தியையும், திரவியத்தையும் விரயமாகச் செலவழிக்காமலும், அதே ஸமயம் ஒரேயடியாகப் பூட்டி வைத்துக்கொண்டு விடாமலும், தானும் ஸமூஹமும் பயனடையும்படி அளவறிந்து செலவழிக்கவும், காத்து வைத்துக் கொள்ளவும் வேண்டும். பயன்களில் பெரியதான ஈச்வர ஸாக்ஷாத்காரத்துக்குங்கூட அளவறிந்த இந்தப் போக்கு வழி செய்யும். ஸமநிலைக்கு வரவேண்டும். லெவலுக்கு வரவேண்டும். Water finds its level.ஜீவத்மா லெவலுக்கும வந்தால்தான் பரமாத்ம ஸமுத்திரத்தில் கலக்க முடியும். இதற்கு எதிலும் அளவு, மிதம் வேண்டும்.

அளவறிந்து எதையும் செய்பவரால்தான் பரம ஸத்யத்தை அறிய முடியும் என்பதைத்தான் திருமூலர்,

கணக்கறிந்தார்க்கன்றிக் காணவொண்ணாதது
கணக்கறிந்தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி (1.316)

என்று சொல்லியிருக்கிறார். அவர் பண்ணின நூலுக்குத் 'திருமந்திரம்' என்று பெயர். அதனால் இந்த வார்த்தைகள் மந்திரம் மாதிரியானவையாகும்.

அதிகமாகப் போகாமல் எல்லாவற்றிலும் கணக்காய் இருக்க வேண்டும். பேச்சு, எண்ணம், செய்கை, உணவு, உடை, செலவு எதிலானாலும் வாழ்க்கைக்கு எவ்வளவுதான் அத்யாவசியமோ அதோடு கணக்காய் நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது பண்ணுகிறமாதிரி விரயம் செய்யக்கூடாது. கணக்காயிருப்பதுதான் இஹம் பரம் இரண்டுக்கும் நன்மை செய்வது. மனநெறி இல்லாவிட்டால் பரம் எப்படி லபிக்கும்? அந்த மனநெறி, mental discipline வருவதற்கு வாழ்க்கையம்சங்கள் எல்லாவற்றிலும் கணக்காயிருந்து கட்டுப்படுத்திக் கொள்வதே உதவும்.

இப்போதைய நிலையில் ஸமயாநுஷ்டானங்களில் இரண்டு எக்ஸ்ட்ரீம்களிலும் போவதாலேயே இப்படிப்பட்ட அளவு, 'கணக்காயிருக்கிற' தன்மை உண்டாகிறது என்று சொன்னேன். ஆரம்ப நிலையில் நம்முடைய மதாநுஷ்டானம், 'கணக்கு' இரண்டுமே பக்வமாகாதவையாகத்தான் இருக்கும். ஆனால் நாளாவட்டத்தில் இவை ஒன்றுக்கொன்று போஷித்துக்கொண்டு, ஒன்றை மற்றது பக்வப்படுத்திக்கொண்டு போகும். அப்படிப் பக்வ ஸ்திதிக்குப் போகப்போக கணக்கறிந்து செய்வதே மனஸின் ஸமநிலை என்கிற உயர்ந்த பிரசாந்த ஸ்திதிக்கு கொண்டு விடும். பூர்ண பக்வநிலையிலோ தன்னியல்பாக நாம் செய்கிறதெல்லாமே அளவறிந்து, கணக்காக அமைந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

13.3-பலவித வரவு செலவுகளில் கணக்கு

கல்வியில் கணக்குக்கு எவ்வளவு முக்யத்வம் தந்திருக்கிறோம்? வாழ்க்கையிலும் தரவேண்டும். இப்போது ரூபாய்க் கணக்கு மட்டும்தான் முக்யமாயிருக்கிறது. எல்லா ஆபிஸிலும் அக்கவுன்ட் ஸெக்ஷன், அது தவிர அக்கவுன்டன்ட்-ஜெனரல் ஆபீஸ்கள் என்றே நிறைய இருக்கின்றன. பழைய காலத்திலிருந்து இப்படி ராஜாங்க ரீதாயாக வரவு செல்வுகளைக் கணக்குப் பார்க்கும் ஏற்பாடு இருந்து வந்திருக்கிறது. 'பெருங்கணக்கு' என்று பழைய நாளில் ஒரு உத்யோகஸ்தர் - அவர்தான் இந்நாளில் அக்கவுன்டன்ட்-ஜெனரல் என்கிறவர். இது உச்சத்திலுள்ள உத்யோகம். அடிநிலையில் இருந்தது, 'பெருங் கணக்கு' என்ற மாதிரி 'சிறுகணக்கு' இல்லை; இந்ச் சின்ன உத்யோகத்துக்குத்தான் 'கணக்குப்பிள்ளை' என்று பெயர். 'பிள்ளை' என்பது இங்கே 'சிறிய', 'சின்னது' என்பதைக் குறிக்கும்; பிள்ளை ஜாதி இல்லை. தென்னம்பிள்ளை, அணிற் பிள்ளை என்றெல்லாம் சொல்கிறபோது 'பிள்ளை' என்பது சின்னதைத் தானே குறிக்கும்? அப்படியே கணக்குப்பிள்ளை என்கிறவர் ராஜாங்க வரவு-செலவு பார்ப்பவர்களில் சிறிய ஊழியர். ஆனால் அவருக்கு எல்லா நுணுக்கமும் தெரிந்திருக்கும். அதனால்தான் முன்னெல்லாம் ஜில்லா கலெக்டராக ட்ரெயினிங் பண்ணுகிறவன் கூடக் கணக்குப் பிள்ளையிடம்தான் வேலை கற்றுக் கொள்ள ஆரம்பிக்க வேண்டுமென்று வைத்திருந்தார்கள்.

`இப்போது இதெல்லாமே பேப்பரில் (வரவுக்குச் செலவு) ஸரிகட்டுவதாகக் காட்டிவிட்டால் போதமென்று ஆகிவிட்டது; ஃபைனான்ஸ் மினிஸ்டரைப் பார்த்தால், அப்படி ஸரிகட்டாவிட்டால்கூடப் பரவாயில்லை; டெஃபிஸிட் ஃபைனான்ஸிங், (ரூபாய்) நோட்டுப் போட்டும், ஊரெல்லாம் உலகமெல்லாம் கடன் வாங்கியும் ஸரிக்கட்டினதாகக் காட்டினால் போதும் என்றாகி விட்டது'என்று சொல்லிக்கொள்கிறார்கள். மொத்தத்தில் இப்போது நவீன முறை என்று சொல்லி, கணக்கில்லாமல் ஆசைகளையும் தேவகளையும் பெருக்கி, அதற்காகச் செலவையும் பெருக்கி, மக்களையெல்லாம் கடனாளிகளாகவும், நிம்மதியில்லாதவர்களாகவும் செய்திருப்பதாகவே தெரிகிறது.

தேவை, வரவு, செலவு எல்லாவற்றிலுமே இப்படியில்லாமல், நாம் அவற்றை ஒரு கணக்குக்குக் கீழே கொண்டுவரவேண்டும்.

வரவு-செலவு என்பது பணம் ஒன்றில் மட்டுமில்லை. எல்லாவற்றிலும் உண்டு. நாம் வார்த்தையை அதிகம் விட்டால் எதிராளியிடம் வாங்கிக் கட்டிக்கொள்கிறோமே இதுகூட வரவு-செலவுதான். நாம் வாயால் விட்டது செலவு; வாங்கி கட்டிக்கொண்டது வரவு! நாம் அனவரதமும், தூங்கும்போதுகூடப் பண்ணுகிற காரியம் என்ன? மூச்சுவிடுவது. அதுகூட வரவு செலவுதான்!காற்றை உள்ளே வாங்கிக்கொண்டு வெளியே விடுவது வரவும் செலவுந்தான்! அதில் கூடக் கணக்கு வேண்டுமென்றுதான் ப்ராணாயாமம், மந்த்ர ஜபம், ஸோஹம் த்யானமென்று பல யோகங்களை வைத்திருப்பது. புசுக் புசுக்கென்று வேகமாக ச்வாஸித்தால் ஆயுசும் குறையும்; ஆத்மா சுத்தப்பட்டு சாந்த நிலைக்கு வருவதற்கான நாடி சமனமும் ஏற்படாது. அதனால் மூச்சுக்கூடக் கணக்காக விடணும் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 21,600 ச்வாஸமே விடணும் என்று கணக்கு. அதாவது ஒரு ச்வாஸத்துக்கு நாலு ஸெகன்ட் ஆகவேண்டும். நாம் அவசரமாகக் காரியம் செய்யும் போதும், கோபதாபத்திலும் காமம் முதலான உணர்ச்சி வேகங்களிலும், புஸ் புஸ்ஸென்று ஒரு ஸெகன்ட், இரண்டு ஸெகன்டிலேயே ஒரு ச்வாஸம் முடிந்துவிடும். அதற்காகத் தான், ஈடுகட்ட இன்னொரு எக்ஸ்ட்ரீமில் ரொம்ப நேரம் தீர்க்கமாக மூச்சையிழுத்து அடக்கி

வைத்து, நிதானமாக விட்டுப் பிராணாயாமம் பண்ணச் சொல்லியிருப்பது. ஆக இந்த சரீரத்துக்கான ஆயுஸ், சரீரத்துக்குள்ளே இருக்கிற ஆத்மாவின் நிறைந்த ஸமநிலையான ஸமாதிநிலை இரண்டுமே மூச்சு ஒரு கணக்காயிருப்பதில்தான் அடங்கியிருக்கிறதென்று தெரிகிறது.

வெளியில் காட்டுகிற அக்கவுன்டஸில் ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு ஸரிகட்டினதாகக் காட்டி விடலாம். ஆனால் "நமக்கு நாமே accountable -ஆக இருக்க வேண்டும்" என்கிறார்களே, அதில் எந்த தகிடுதத்தமும் செய்து ஜயிக்க முடியாது!நாம் செய்கிற அத்தனையையும் கர்ம ஸாக்ஷியாக ஒருத்தன் பார்த்துக் கொண்டிருக்கிறான்!அவனை ஏமாற்றவே முடியாது! பண்ணிய பாபத்துக்கெல்லாம் ஈடாக எதிர்த் தட்டில் புண்ய கர்மங்களை ஏற்றியாக வேண்டும். அந்தக் கணக்குப் புஸ்தகம் அவன் கையில் இருக்கிறது. நாம் நல்லது செய்வதில் கணக்கு வழக்கில்லாமலிருந்தால்தான் அவன் பாலன்ஸ்-ஷீட்டை ஸரி செய்ய முடியும். இப்படிக் கணக்கு வழக்கு இல்லாமல் புண்யம் பண்ணுவதற்கு மனநெறி முதலில் ஏற்பட வேண்டும். அது ஏற்படுவதுற்கு நம்முடைய பேச்சு, எண்ணம், நமக்கென்று பண்ணிக்கொள்ளும் காரியம், சொந்தச் செலவு. சாப்பாடு, ட்ரெஸ் எல்லாவற்றிலும் கணக்காயிருந்தால்தான் முடியும். இவை யாவற்றிலும் நாம் கணக்காயிருப்பது சாச்வத 'லாப' த்தை உத்தேசித்தே என்பதை மறந்து விடக்கூடாது. இப்போது நம் பர்ஸுக்குள் இருப்பதன் லாப நஷ்டத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் நாம் இனிமேலாவது புண்ய லாபம் - பாப நஷ்டம் பற்றி நினைத்து, அந்தக் கணக்குப் புஸ்தகம் ஸரி கட்டுவதற்கானவற்றைச் செய்ய வேண்டும்.

13.4-அபரிக்ரஹம்

நமக்காக ஸம்பாதனம் செய்துகொள்வது, செலவழித்துக் கொள்வது இரண்டிலுமே ரொம்பவும் கணக்காயிருப்பதுதான் இதற்கு அடிப்படை. இதைத்தான் 'அபரிக்ரஹம்' என்று பெரிய தர்மமாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. 'பரிக்ரஹம்' என்றால் உடைமை சேர்த்துக் கொள்வது; அப்படிச் சேர்த்துக் கொள்ளாமலிருப்பதே 'அபரிக்ரஹம்'நீ ஜீவிப்பதற்கு எது

அத்யாவச்யமோ அதற்கு அதிகமாக ஒரு துரும்புகூடச் சேர்த்துக் கொள்ளாதே'என்பதுதான் அபரிக்ரஹ தர்மம். இதை யோக சாஸ்திரத்தில் ஸாதகன் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய ஐந்து 'யம'ங்களிலேயே ஒன்றாகப் பதஞ்ஜலி (யோக ஸூத்ரத்தில்) சொல்லியிருக்கிறார். 'யமம்' என்றால் அடங்கி வைப்பது. மஹா பாபிகளையும் அடக்கி வைத்துத் தண்டிப்பதால் யமனுக்கு அப்படிப் பெயர். மனஸை அடக்குகிறதற்குப் பதஞ்ஜலி யோக ஸூத்ரம் எழுதினார். அதிலே ஐந்து யமங்களாக அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் (திருடாமை), பிரம்மசர்யம் ஆகியவற்றோடு அபரிக்ரஹத்தையும் சொல்லியிருக்கிறது. 'அது வேணும், இது வேணும்' என்று பொருளைச் சேர்த்துக் கொள்கிற ஆசை அடங்கணும் என்றே இதைச் சொல்லியிருக்கிறார். இந்த ஆசை அடங்கினால், பணத்தாசை, அதற்காக எந்த தேசத்துக்கு வேண்டுமானாலும் போய் என்ன தொழில் வேண்டுமானாலும் செய்யலாம் என்ற பறப்பு, எந்தப் பொய் புரளி வேண்டுமானாலும் பண்ணிப் பணம் பண்ணலாம் என்ற அரிப்பு எல்லாமே போய்விடும்.

மநு தர்மசாஸ்திரத்தில் ஐந்து தர்மங்களை அடிப்படையாகச் சொல்லுமிடத்தில் அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் இந்த மூன்றையும் சொல்லிவிட்டு நாலாவதாக 'சௌசம்' என்னும் சுத்தத்தையும், கடைசியில் இந்த்ரிய நிக்ரஹத்தையும் கூறியிருக்கிறார். 'பிரம்மசர்யம்' என்று பதஞ்ஜலி சொன்னதைக் கொஞ்சம் விஸ்தாரம் பண்ணினால் அதுவே இந்திரிய நிக்ரஹம். பதஞ்ஜலி சொன்ன அபரிக்ரஹத்துக்குப் பதில் மநு சௌசத்தைச் சொல்லியிருக்கிறார். தனக்கு அத்யாவச்யமானதற்கு அதிகமாக ஒன்றைச் சேர்த்துக் கொண்டால் அதுவே திருட்டுதான் என்று மநு நினைத்திருப்பார் போலிருக்கிறது. அதனால் 'அஸ்தேயம்' என்று (திருடாமையைச்) சொன்னதிலேயே அபரிக்ரஹமும் அடக்கம் என்று அவர் அபிப்ராயப்பட்டிருக்கலாம்.

திருட்டுக்குப் பல டெஃபனிஷன்! "**உள்ளங்கவர் கள்வன்**", "**சித்த சோர்**" என்றெல்லாம் பகவானுக்கே திருட்டுப் பட்டங்கள்! வரவு சிறுத்து செலவு பெருகினால் அதுவே ஒரு திருடு என்று வசனமிருக்கிறது. கீதையில் பகவான்

லோக வாழ்க்கைக்கானவற்றை தேவ சக்திகளிடமிருந்தே பெறுகிற மனிதனானவன் அவற்றை அவர்களுக்கு அர்ப்பணிக்காமல் அநுபவித்தால் அதுவே ஒரு திருட்டு தான் என்கிறார்*.

ஜீவாதாரத் தேவைக்கு ஜாஸ்தியாக எதைச் சேர்த்துக் கொண்டாலும் அது கொள்ளையடித்து வைத்துக் கொள்கிற தோஷம்தான் என்று கருதி, அபரிக்ரஹ தர்மத்தைப் பின்பற்ற முயலவேண்டும்.

நம்முடைய ஆசார்யாளும் "விவேக சூடாமணியி" ல் இதைச் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார். யோகத்தின் முதல் வாசல் மௌனம் என்று சொல்லிவிட்டு அடுத்ததாக அபரிக்ரஹத்தையே கூறுகிறார்:

யோகஸ்ய ப்ரதமம் த்வாரம் வாங்நிரோதோ (அ)பரிக்ரஹ:

ரூபாய் என்று ஒன்று ஏற்பட்ட நாளாகத்தான் சொந்தத்துக்கு ஜாஸ்தி சேர்த்து மூட்டை கட்டிவைத்துக் கொள்வது, தன்னுடைய துராசைகளுக்கே கன்னா பின்னா என்று செலவழிப்பது இதெல்லாம் அதிகமாகி, தானதர்மங்கள் பண்ணுவதற்கும், அபரிக்ரஹ தர்மத்துக்கும் ஹானி உண்டாகி வந்திருக்கிறது. ரூபாய் என்று ஒன்று இல்லாத நாள் உண்டா என்று தோன்றலாம். அப்படி ஒரு நாள் இருந்திருக்கிறது. ஆதியில் எல்லா இடத்திலும் barter என்று ஒரு பொருளுக்குப் பதில் இன்னொரு பொருளை 'எக்ஸ்சேஞ்ஜ்' (பரிவர்த்தனை) பண்ணிக்கொள்வதுதான் இருந்ததே தவிர ரூபாயோ ஸ்டெர்லிங்கோ டாலரோ இல்லை. அப்புறந்தான் ஒவ்வொரு சீமையிலும் ஸமுதாயங்கள் ஒரு அமைப்பாகக் கெட்டிப்பட்டு, அங்கங்கே ராஜாங்கம் தோன்றி ஒரு ஆட்சி முறையின் கீழே வந்த பிற்பாடு நாணயம், கரென்ஸி என்பது தோனறிற்று. எந்தப் பொருளானாலும் இதைக் கொண்டு மதிப்பை நிர்ணயம் பண்ணுவது ஸுலபமாயிருந்தது. கையடக்கமாக எடுத்துப் போகும்படியாகவும், வைத்துக் காக்கும்படியாகவும் இப்படி ஒன்றை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆனாலும் ஈஸ்ட் இண்டியா கம்பெனி ஆட்சி வருகிறவரை கூட நம் நாட்டில் எல்லா ஜனங்களிடையேயும் விசேஷமாக நாணயப் பழக்கம் இருந்துவிடவில்லை. மேல்மட்டங்களில் சில கார்யங்களுக்கு மட்டுந்தான் நாணய மாற்றத்தில் கொடுக்கல் வாங்கல் நடந்தது. ஒரு நாணயத்துக்கு நிஜமாகவே அதன் மதிப்பு

இருக்கும்படியாகத் தங்கம், வெள்ளி இவற்றிலேயே காசு இருந்தால், அதிமாகக் கிடைக்காத இந்த லோஹங்களில் அளவாகவே நாணயம் போடுவார்கள். அப்புறமதான் நாணயத்துக்கும் அதன் மதிப்புக்கும் ஸம்பந்தமேயில்லாமல் நிக்கல், செம்பு, வெறும் காகிதம் என்று ஏற்பட்டபின் இஷ்டத்துக்கு அச்சடித்து எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் விநியோகிப்பதாக ஆகிவிட்டது. இதற்கு முன்னாடி, ஸமீப நூற்றாண்டுகளில் கூட பொதுஜனங்களுக்கிடையே பண்ட மாற்று முறையில் தான் பெரும்பாலும் வியாபாரம் நடந்தது. அரசாங்கத்திற்குக்கூட விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு தான்யமாகவே தான் கொடுக்கப் பட்டு வந்தது. பாக்கி தான்யத்தைப் பணமாக்க முடியாது. வியவஸாய நாடு அல்லவா இது?இங்கே உற்பத்தியாகிற பண்டங்களில் தான்யம்தான் மிகவும் அதிகம். அநேகமாக ஒவ்வொருவனுக்கும் சொந்தமாகத் துண்டு நிலமாவது இருக்கும்; அல்லது வர்ணாச்ரம பரிபாலனம் ராஜாங்கக் கடமையாக இருந்ததால் தன் குலத்தொழிலைச் செய்கிற அநேகத் துறையினருக்கு ராஜமான்யமாக நிலமோ, தான்யமோ கிடைத்து வந்தது. தவிர பாக்கியை விற்றுப் பணம் பண்ணுவதற்குப் பெரும்பாலும் இடமில்லாமலே இருந்தது. அதனால் வருகிற போகிற யாத்ரிகர்களுக்கெல்லாம் அன்ன சத்திரம், கோயிலில் முக்குறுணி நாலுகுறுணி என்று நிவேதனம் பண்ணிப் பிரஸாதமாக விநியோகிப்பது, லக்ஷ பிராம்மண போஜனம் என்கிற மாதிரி தானதர்மம் என்றெல்லாம் செய்தே தீரவேண்டியிருந்தது. அப்புறம் பணமாய்ப் பண்ணிப் பாங்கில் போட்டுக் கொள்ளலாம் என்று ஏற்பட்ட பின்தான் தனக்கென்று எத்தனை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம் என்பதாக பரிக்ரஹத்தின் உச்சிக்குப் போய், தான தர்மம் என்பதையே அடைத்து விட்டதாக ஏற்பட்டிருக்கிறது.

அபரிக்ரஹத்துக்கு எங்கேயோ போகவேண்டியதில்லை. நாலைந்து தலைமுறைக்கு முன்னால் எப்படியிருந்தார்கள் என்று பார்த்தால் போதும். மண்பானை, கல்சட்டி, ஓலை, பாக்குப்பட்டை இதுகள்தான் அவர்களுடைய சொத்து. கருகமணிதான் நகை. நாலு கீற்றை வேய்ந்து கொண்டால் அந்தப் பர்ணசாலைதான் அரண்மனைக்கு மேலே. அரண்மனைக்காரனான திலீபன்

முதலான சக்ரவர்த்திகள் இப்படிப் பர்ணசாலைகளில் வசித்து வந்த வஸிஷ்டர் முதலானவர்களின் காலில்தான் வந்து விழுந்தார்கள்.

நம் ஸமீபகால முன்னோர்கள்கூட இப்படி எளிமையாயிருந்து கொண்டே நிம்மதியாகக் காலக்ஷேபம் நடத்தியிருக்கிறார்கள். இப்போது நாம் பணத்தாலும் உடைமைகளாலும் லக்ஷரிகளாலுந்தான் அந்தஸ்து என்று ஆக்கிக்கொண்டு, இதைத் தேடிக் கொண்டே போவதில் சீலங்களை இழந்து, சீலத்தாலேயே நம் முன்னோர்கள் எந்தச் சொத்துமில்லாமலும் பெற்றிருந்த ஸமூஹ கௌரவத்தையும் அடியோடு இழந்து, ரொம்பக் குறைந்தவர்களாக நிற்கிறோம்.

உடைமைகளைச் சேர்த்துக்கொள்ளக் கொள்ள பயந்தான் ஜாஸ்தியாகிறது. அபரிக்ரஹத்தின் நிம்மதி இங்கே ஒருகாலும் கிடைக்காது.

இதிலே நானே ஒன்று பண்ணிக்காட்ட வேண்டியதாயிருக்கிறது. எனக்குப் பட்டுப் பொன்னாடை போர்த்தி மரியாதை பண்ணுவது என்று ஒரு வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பக்திக்கு ஸ்தூலமாக அடையாளம் காட்டணுமென்ற எண்ணத்தில் பஹு காலமாகவே இப்படிப் பெரியவர்களுக்குப் பண்ணுவது என்று நடந்து வந்திருக்கிறது. அதெல்லாம் தேசம் ஸுபிக்ஷமாக ஸம்ருத்தியாக இருந்த காலம். பொன்னாடை மரியாதைக்குப் பாத்திரமான அந்தக் கால பூர்வாசார்யார்களுக்கும் நிரம்ப யோக்தை இருந்தது. அதைப் பார்த்து நானும் இந்த ரேஷன-நாள், ஸ்கார்ஸிடி-காலத்தில் பொன்னாடை அலங்காரம் பண்ணிக்கொள்வது ஸரியேயில்லை. ரொம்ப நாளாக எனக்கு இந்த அபிப்ராயமிருந்தபோதிலும், பிரியமாக "மரியாதை பண்ணுகிறோம்" என்று வருகிறவர்களைத் தடுத்தால் மனோ வ்யாகுலப்படுவார்களே என்று பேசாமலிந்து வந்திருக்கிறேன். ஆனால் இப்போது 'அபரிக்ரஹம்' என்று உங்களுக்கு நீட்டி முழக்கி உபதேசிக்கிறபோது, 'நாம் ஸந்நியாஸி;இப்படி ஐந்நூறு, ஆயிரம் விலைக்குச் சாதரா போர்த்திக்கலாமா?' என்று மனஸை உறுத்துவதால், குறிப்பாக இப்போது யாரும் சாதரா கொண்டு வராததால், இனிமேலே எனக்குப் பொன்னாடை போர்த்த வேண்டாமென்று எல்லாரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அபரிக்ரஹத்தில் எனக்கும் ஒன்று செய்யணும் என்ற ஆசையிருக்காதா?அதற்காக இதை ஆரம்பிக்கிறேன்.

ஒன்று ஞாபகம் வருகிறது. இங்கே (ஸ்ரீ மடத்தில்) நாங்களும் வித்வான்கள், புலவர்களுக்குப் பொன்னாடையோ சால்வையோ போர்த்தி ஸம்மானிப்பது என்று வழக்கிமிருக்கிறதல்லவா? அதன்படி உ.வே. ஸ்வாமி நாதய்யர் அழைத்துக்கொண்டு வந்திருந்த ஒரு தமிழ்ப் புலவருக்குப் போர்த்துவதற்காக சால்வை கொண்டு வரச் சொல்லி, ஸ்வாமிநாதய்யர் கையாலேயே அதை அவருக்குப் போடச் சொன்னேன். அந்தப் புலவரின் கொள்கைகள் சிலது எனக்குப் பிடிக்காது. இது அவருக்கும் தெரிந்திருக்கிறது. ஸ்வாமிநாதய்யர்தான் எங்கள் இரண்டு பேருக்கும் இருக்கிற மனோ வித்யாஸத்தைப் போக்கணும் என்று அக்கறை எடுத்துக்கொண்டு இரண்டு பக்கமும் பேசி அவரை அழைத்துக் கொண்டு வந்திருந்தார். இப்போது நான் அவருக்கு சால்வை போர்த்த வேண்டும் என்றவுடன் அவர், "பெரியவங்க என்னை இரண்டு விதமாகவும் போத்தணும், போத்தணும்" என்று பெரிசாக விஞ்ஞாபனம் பண்ணிவிட்டார்! போர்த்துவது, போற்றுவது இரண்டையுமே பேச்சிலே 'போத்துவது' என்றுதானே சொல்கிறோம்? அந்த அர்த்தத்தில்தான் அவர் சிலேடையாக, நான் சால்வை போர்த்தினால் மட்டும் போதாது மனஸில் பேதம் போய் அவரைப் போற்றவும் வேண்டும் என்று சொல்லிவிட்டார்!

என்னைப் போத்தறதுக்கு (போற்றுவதற்கு) இனிமேல் எவரும் பொன்னாடை போத்த (போர்த்த) வேண்டாம் என்று சொல்கிறேன்!

சொந்தச் சொத்து, சொந்தச் செலவு ஆகியவற்றில் கணக்காய் இருப்பதற்காக (இதவ்வளவும்) சொன்னேன். காந்தியும் இந்த அபரிக்ரஹத்தை ரொம்பவும் சொல்லி, அநுஷ்டானம் பண்ணியும் வந்தார். அப்புறம் இப்போது (1958ல்) விநோபாவும் சொல்லிக்கொண்டிருக்கிறார். தலைவர்கள் எனப்பட்டவர்கள் இந்த இரண்டு பேருக்கும் நமஸ்காரம் பண்ணிக் கொண்டே 'ஆப்போஸிட் டைரக்ஷனில்' தேசத்தை வேகமாக இழுத்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மேல் நாடுகளுக்கு நாம் பிற்பட்டு நிற்கவில்லை என்று 'ப்ராக்ரஸ்' காட்ட வேண்டாமா?

ராஜாங்கங்கள், அவற்றின் ஐடியாலஜிகள் எதுவும் சாச்வதமில்லை. ஸநாதன தர்மந்தான் சாச்வதம். சாச்வத ஸௌக்யத்துக்கு வழி காட்டுவதும் அதுதான். அதனால் அதைப் பார்த்து ஜனங்கள் வாழ்க்கையின் அம்சங்கள் எல்லாவற்றிலும் ஒரு அளவுக்கு, கணக்குக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டு இங்கே இந்த உலகத்திலேயே நிம்மதியும், அதோடு பாரமார்த்திகமான ச்ரேயஸும் அடைய வேண்டும்.

இதைப்பற்றி இன்னமும் பேசிக்கொண்டே போனால் நானே, சொல்கிறமாதிரி அளவறிந்து நிறுத்திக் கொள்கிறேனோ என்று ஸந்தேஹம் வந்துவிடும்!

---

*கீதை 3.12

14-வைதிக மத அம்சங்கள் - ஆயுர்வேதம்

14.1-உபவேதங்கள் எதற்கு?

'ஸாங்கோபாங்கமாக'ச் செய்வது என்று ஒரு வார்த்தை அடிபடுகிறது. ஒரு அம்சமும் விடமாமல், பூராவாக எந்த ஒன்றைச் செய்வதையும் 'ஸாங்கோபாங்கம்' என்கிறோம். 'ஸ அங்க உப அங்க' என்பதே ஸாங்கோபாங்கம். எல்லா அங்கங்களுடனும் துணை உறுப்புக்களுடனும் கூடியது என்று அர்த்தம். நம் மதத்துக்கு மூலமான வேத வித்யையை வைத்தே இந்த 'ஸாங்கோபாங்கம்' என்பது எல்லா விஷயங்களுக்கும் பரவியிருக்கிறது. வேத மதம் ஒரு வேதாமூர்த்தி என்று வைத்துக் கொண்டால் அதற்கு ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்னும் நாலு வேதங்களின் ஸம்ஹிதைகள், ப்ராம்மணங்கள், ஆரண்யகங்கள், இவற்றில் முடிவாய் வரும் உபநிஷத்துக்கள் ஆகியவைதான் முக்யமான உடம்பு மாதிரியும் அதற்குள் எங்கும் பரவியிருக்கிற உயிர் மாதிரி, ரத்தம் மாதிரியும்.

ஆக நாலு வேதமே முக்யமான ரூபம். இந்த ரூபத்துக்கு ஆறு அங்கங்கள். சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பன இந்த ஆறு அங்கங்களோடு கூடின நான்மறையை 'ஸாங்கமானது' எனலாம். 'ஸாங்க உபாங்கத்தில்' உப அங்கமாக, துணை உறுப்பாக இன்னம் நாலு இருக்கின்றன - அவற்றுக்கு மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்ம சாஸ்த்ரம் என்று பெயர். நாலு வேதம் ப்ளஸ் ஆறு அங்கம் ப்ளஸ் நாலு உபாங்கங்களைச் சேர்த்து வேதமத தேவதையின் ஸாங்கோபாங்கமான பூர்ண வடிவமாகக் கொண்டிருக்கிறோம். இப்படி மொத்தம் வருகிற பதினாலையும் 'சதுர்தச வித்யா', 'பதினாலு வித்யை'என்று சொல்வது வழக்கம்*2.

உப அங்கமாக இருப்பதோடு உபவேதமாகவே மேலும் நாலைக் கூட்டிப் "பதினெட்டு வித்யைகள், அஷ்டாதச வித்யா ஸ்தானங்கள்" என்று சொல்வார்கள் இந்த நான்கு உபவேதங்கள் ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம் என்பவையாகும்.

இந்த நாலு ஸமய ஸம்பந்தமாக (ரிலிஜியஸாக) , தத்வ விசாரணையாக (ஃபிலஸாபிகலாக) தெரியாமல் நடைமுறை வாழ்க்கை (ப்ராக்டிகல் லைஃப்) தப்பு தண்டா இல்லாமல் தனி மநுஷ்ய ரீதியிலும் ஸமூஹ, தேச, லோக ரீதியிலும் நடப்பதற்கு உதவுவதாகவே உள்ளன. அதனால் தான் பதினாலு தர்ம ஸ்தானங்களில் இவற்றைச் சேர்க்காமல் - அதாவது ஆத்மார்த்தமாக நேரே ஈடுபடுத்தும் தர்ம நூல்களில் சேர்க்காமல் - அறிவைத் தரும் பதினெட்டு வித்யா ஸ்தானங்களில் மட்டுமே சேர்ந்திருக்கிறார்கள். இவற்றுக்கு நீதிகளைச் சொல்லும் சட்ட நூல்களான தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ள அதாரிடி (அதிகாரத்தன்மை) கிடையாது. பலவிதமான விஷயங்களை மட்டும் தெரிவிப்பதால் வித்யா ஸ்தானமாக மாத்திரம் மதிக்கப்படுகின்றன.

ஆனாலும் இவற்றுக்கு வேதத்தின் அங்கம், உபாங்கம் என்று பெயர் கொடுப்பதைவிட உசத்தியாக, இதில் ஒவ்வொன்றுமே ஒரு துணை வேதம், supplementary வேதம் என்று பொருள்பட "உப வேதம்" என்று தெரிய பெயர் கொடுத்திருக்கிறது. ஏனென்றால் தர்மத்தின் அடிப்படையில் நின்றுகொண்டு

இந்த நாலையும் 'ப்ராக்டிகல் லைஃபி'ல் நடத்தினால் அதனால் ப்ராக்டிகல் லைஃபே ஐடியல் லைஃபாக மலர வழி ஏற்படும். அதாவது நாம் வாழ்கிற முறை எப்படி வாழ்ந்தால் உசந்த மநுஷ்ய லக்ஷணத்துக்கு உரிய உத்தமமான உபாயமாகுமோ அப்படி ஆகிவிடும். அப்படி ஆனால் அப்போது இந்த நடைமுறை வாழ்க்கையே, இம்மை என்பதே மறுமை என்கிற சாச்வத ஸௌக்யத்தை ஸம்பாதித்துத் தர வழி பண்ணுவதாகிவிடும். முடிவிலே பரமாத்மாவிடமே கொண்டு போய்ச் சேர்க்கும் படியாக வாழ்க்கைப் பாதையை ராஜ மார்க்கமாகப் போட்டுக் கொடுத்தவிடும்.

உங்களுக்கே இந்த நாலு என்ன என்பது புரிந்திருக்கும். ஆயுர்வேதம் என்பது வைத்ய சாஸ்திரம். தநுர்வேதம் யுத்த சாஸ்திரம். காந்தர்வ வேதம் என்பது ஸங்கீதம், நாட்டியம், நாடகம் முதலிய லளித கலைகள். அர்த்த சாஸ்திரம் என்பது பொருளாதாரத்தை அங்கமாகக் கொண்ட அரசியல்.

இந்த நாலில் ஒவ்வொன்றாலும் ஆத்மாவுக்கு எத்தனை ஹானி பண்ணிக் கொள்ளலாமோ அத்தனையும் பண்ணிக் கொள்வதுதான் நமக்குக் கண்கூடாகத் தெரிவது. வைத்ய சாஸ்திரத்தில் உடம்பைப் பேணிப் பேணித்தான் தேஹாத்ம புத்தியை விட்டுக் கொஞ்சங்கூட மேலே போகாமல் நிற்கிறோம்!யுத்தத்தால் ஆடம் பாம் (ப்) , ஹைட்ரஜன் பாம் (ப்) இவற்றைப் போட்டுப் பண்ணின அக்ரமம் போதாது என்று ஒவ்வொரு Power Block -க்கும் இவற்றைக் காட்டிக் காட்டியே Cold War என்று அத்தனை ஜனங்களையும் கிலியிலும், பரஸ்பர ஸந்தேஹத்திலும், த்வேஷத்திலும் பிடித்து வைத்திருக்கிற அக்ரமத்தைப் பார்த்து வருகிறோம். பாட்டும் கூத்தும் மநுஷ்யனை மிருகத்தின் மட்டத்துக்குக் கொண்டு விடுவதாக எத்தனை cheap -ஆகியிருக்கிறதென்பதையும் அநுபவித்து வருகிறோம். அரசியலா? அதைப்பற்றி நான் வாய் திறக்க வேண்டாம்.

இப்படி எதெல்லாம் பாரமார்த்திகத்துக்கு ரொம்பவும் விக்னம் உண்டாக்கும் ஹேது உள்ளதாக இருக்கிறதோ அதையெல்லாம் விட்டு ஓடு என்று சொல்லாமல், "அதுகளையும் சுத்தப்படுத்து. அதுகளையும் தர்மத்தில் ஊறப்போடு!எத்தனை களிம்பையும் பாசியையும் புளியிலும் எலுமிச்சைச்

சாற்றிலும் ஊறப் போட்டு அகற்றிவிடுகிற மாதிரி இவற்றையும் தர்ம வழியால் சுத்தப்படுத்திப் பளிச்சென்றாக்கி, தர்மத்துக்காகவே பிரயோஜனப்படுத்து, அழுக்குக் கண்ணாடி படத்தை மறைக்கிறதென்று கண்ணாடியை எடுத்தவிட்டால் படம் கெட்டுத்தானே போகும்?அதனால் அழுக்கை மட்டும் துடை. கண்ணாடியை எடுத்துவிட்டால் படம் கெட்டுத்தானே போகும் அதனால், அழுக்கை மட்டும் துடை. கண்ணாடியை எடுத்துவிடாதே. சரீரமும் அதற்கான வைத்யமும், யுத்தமும், பொழுது போக்குகளும், ராஜ நீதியும் ஆத்மாவை மறைக்கிற அழுக்குக் கண்ணாடியாக இருக்கிற நிலையை மாற்றி அவற்றையே ஆத்மாவை நன்றாக ரக்ஷித்து, பிரகாசமாகக் காட்டுகிற கண்ணாடியாக மாற்று"என்றே இதற்கு உபாயமாக நம் முன்னோர்கள் நாலு உபவேதங்களையும் கொடுத்திருக்கிறார்கள்.

'அத்வைதா, மாயா' என்று சொல்லிக்கொண்டு ஹிந்து மதம் நடைமுறை வாழ்க்கையையே கவனிக்காமல், பேடி மாதிரி அதிலிருந்து தப்பி ஓடச் சொல்கிறது என்று இதர மதஸ்தர்கள் சொல்வதுண்டு. இதைவிடத் தப்பான அபிப்ராயம் இருக்க முடியாது. அவர்களுடைய மதங்களையெல்லாமும்விட மிக மிக விரிவாகவும் ஆழமாகவும் நடைமுறை வாழ்க்கையின் ஸகல அம்சங்களையும் அலசி அது ஒவ்வொன்றிலும் ஒரு ஜீவன் எப்படிப் புகுந்து புறப்பட்டு தீரனாக ஜயசாலியாக வரவேண்டும் என்று விஸ்தாரமாக வழிகாட்டுவது நம் மதம்தான். அவதாரத்தின் உச்சியிலேயே ராமனையும் கிருஷ்ணனையும் வைத்துக் கொண்டு இன்றைக்கும் நாம் கொண்டாடுவது அவர்களுக்கே (இதர மதஸ்தர்களுக்கே) தெரியும். ராமனும் கிருஷ்ணனும் நடைமுறை வாழ்க்கையை விட்டு ஓடவில்லை; அதில் பூரா பூரா ஈடுபட்டு நடத்தினவர்கள் தான் என்று தெரியும்;' இதை விட்டுவிட்டு ஓடிப்போய் மூக்கைப் பிடித்துக்கொள்கிறேன்'என்று பிடிவாதம் பண்ணின அர்ஜுனனை பகவான் இழுத்துப் பிடித்து உட்கார வைத்து, காண்டீவத்தைக் கையில் கொடுத்து, "ம், போடு சண்டை" என்று கீதையில் சொன்னதும் தெரியும். ஆனாலும் criticise பண்ணுகிறார்கள். நாமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்!

தர்மத்துக்காக, தர்மத்தோடு இங்கே தநுர் வேதத்தை அப்யஸிக்கும்படி பகவான் அர்ஜுனனைத் தூண்டியிருக்கிறார். இப்படித்தான் ஒவ்வொரு உபவேதமும் தர்மார்த்தமாகப் பிரயோஜனப்படுத்தப்பட வேண்டியதாகும்.

மற்ற மதங்களில்தான் ஈச்வர ஸம்பந்தமானது என்று சிலதை மட்டும் சொல்லிவிட்டு மநுஷ்யனின் ராஜாங்கம், வாழ்க்கையம்சங்கள், ராணுவம், வைத்யம் முதலானவற்றைப் பற்றி எதுவுமே சொல்லாமல் விட்டு விட்டதால் நடைமுறையில்பெரிய கோளாறு உண்டாகி விட்டது. நடைமுறை வாழக்கைக்கு அவசியமான தொழில், சாப்பாடு, ஜாதை, கல்யாணம், படிப்பு முதலானவற்றுக்கும் கலைகளுக்கும் மத ஸம்பந்தமான தர்ம ஆதாரம் இல்லாததனாலேயே அந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் இவற்றில் ரொம்பவும் கோளாறாகப் போக இடம் ஏற்பட்டுவிட்டது. 'ஆத்ம ஸம்பந்தமானது'என்று தனியாகச் சிலதை வைத்துவிட்டதாலேயே அதற்குப் பெரும்பாலோர் போகாமல் நடைமுறை வாழ்க்கையோடு நிற்பதாகவும் இந்த நடைமுறையிலே சாஸ்திர ஒழுங்கு இல்லாததால் மனஸு போனபடி செய்ய இடமேற்படுவதாகவும்தான் ஆகியிருக்கிறது.

லோக வியாபாரத்தில் எல்லாத் துறைகளையும் நெறிப்படுத்தித் தரும் நம் மதத்தில் நாலு உபவேதங்களில் முதலாவதாக வருவது ஆயுர்வேதம்.

---

*1உபவேதங்களைக் குறித்து தெய்வத்தின் குரல் இரண்டாம் பகுதியில் வித்யாஸ்தானம் முடிவுரை என்ற உரையிலும் பார்க்க.

*2இப்பதினான்கில் ஒவ்வொன்றையும் குறித்த விரிவுரைகள் தெய்வத்தின் குரல் இரண்டாம் பகுதியில் காண்க.

14.2-'உப'வும் 'மூல'மும்

உபவேதங்களில் ஒவ்வொன்றையும் மூலவேதம் ஒவ்வொன்றிலிருந்து வந்ததாகச் ஸசொல்வதுண்டு. இதன்படி முதலாவதான ஆயுர்வேதம்

ரிக்வேதத்தைச் சேர்ந்தது*. ரிக் வேதத்துக்குப் 'புஷ்டியைத் தரவல்லது' என்று பொருள்படுவதான 'பௌஷ்டிகம்' என்றே ஒரு பெயர் உள்ளது. இரண்டாவதான தநுர்வேதம் யஜுர் வேதத்தையும், மூன்றாவதான காந்தர்வ வேதம் ஸாம வேதத்தையும், நான்காவதான அர்த்தசாஸ்திரம் அதர்வ வேதத்தையும் சேர்ந்தவை.

தநுர்வேதத்தில் அஸ்திரப் பிரயோகம் செய்யும் போது வாருணாஸ்த்ரம், ஆக்நேயாஸ்தரம், ப்ரஹ்மாஸ்த்ரம் போன்றவற்றை வருணன், அக்னி, பிரம்மா முதலிய அந்தந்த தேவதைகளுக்குரிய மந்திரத்தோடுதான் விட (எய்ய) வேண்டும். மந்த்ர சக்திதான் இங்கே ஆயுதத்தைவிட முக்யம். இந்த மந்த்ர ப்ரயோகங்களை அதர்வவேதம்தான் கூறுகிறது. ஆகையால் தநுர் வேதத்துக்கு அதர்வ ஸம்பந்தமும் இருப்பதாக ஆகிறது.

---

* ஆயுர்வேதத்தில் முக்யமான ஒரு சாஸ்திரகர்த்தரான ஸுச்ருதர் இதனை அதர்வ வேதத்தைச் சேர்ந்ததாகக் கருதுகிறார்.

14.3-வாஸ்து சாஸ்திரம்

ஸங்கீதம் ஸாமவேதம் என்கிற மாதிரியே சிற்பம், கட்டிட நிர்மாணம் (sculpture,architecture) என்கிறவை, இவற்றை அங்கமாகக் கொண்ட வாஸ்து சாஸ்த்ரம் ஆகியவையெல்லாம் சேர்ந்து ஒரு உபவேதமென்றும், இது அதர்வ வேதத்துக்கு ஸம்பந்தமுடையதென்றும் சுக்லா என்கிறவர், பஞ்சாபைச் சேர்ந்தவர் (ஸ்ரீமடம் நடத்திய) இளையாத்தங்குடி ஸதஸில் சொன்னார். ப்ருகு மாதிரியான வேதரிஷிகளே வாஸ்து சாஸ்த்ரம் பண்ணாயிருப்பதை அவர் காரணம் காட்டி, மற்ற எந்த உபவேதத்துக்கும் இப்படி வேதரிஷிகளின் நூல் இல்லை என்று சொன்னார்*. வாஸ்து சாஸ்திரம் என்பதுதான் எப்படி நகர நிர்மாணமும், அதிலுள்ள ஆலயம், அரண்மனை, தனி மநுஷ்யனின் வீடு ஆகியவற்றின் நிர்மாணமும் அமைய வேண்டுமென்று சொல்வது. வீடு கட்டும்போது மனை முஹூர்த்தம் என்று பண்ணும்போது வாஸ்து

புருஷனுக்குத்தான் பூஜை பண்ணப்படுகிறது. ஒரு ஊர் அல்லது ஆலயம், அரண்மனை வீடு, மண்டபங்கள், சத்திரம், வித்யாசாலை எதுவானாலும் அதை வாஸ்து புருஷன் என்று ஒரு நராகாரமாக வர்ணித்து அதில் தலைப்பாகம், உடம்பு, கால், கை என்றெல்லாம் அந்தந்தக் கட்டுமானத்திலுள்ள ஸந்நிதிகள், மண்டபங்கள், ரூம்கள் முதலியவற்றை வர்ணித்திருக்கும். வாஸ்து சாஸ்திரப் பிரகாரம் ஒரு ஊரில் கோயில்கள், குடியிருப்புக்கள், பொதுஸ்தலங்கள் முதலியவை அமையாவிட்டாலும், இப்படியே ஒவ்வொரு வீட்டிலும் அதன்படி அறைகள், கூடம், தாழ்வாரம் முதலியவை அமையாவிட்டாலும் துர்பிக்ஷம், வியாதி, சித்தவிகாரம் முதலியன ஏற்படும் என்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. இப்போது நாம் வாஸ்து சாஸ்த்ரப்படி எதுவும் செய்யாமல் இங்கிலீஷ் ஃபாஷனில் town planning, காலனி, வீட்டு நிர்மாணம் எல்லாம் செய்கிறோம். சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற அனர்த்தங்களையும் அநுபவித்து வருகிறோம்!

சிற்பக் கலை, கட்டிடக் கலை எல்லாமே வாஸ்து சாஸ்திரத்தில் வந்து விடுகிறது.

ஆனாலும் பொதுவான அபிப்ராயத்தில் அர்த்தசாஸ்திரம்தான் நான்காவதான உபவேதமாக நினைக்கப்படுகிறது.

---

*உபவேதங்களில் அர்த்தசாஸ்திரத்துக்குப் பதிலாக ஸ்தாபத்யசஸ்த்ர வேதம் என்ற சாஸ்திரத்தைச் சொல்வாருமுண்டு. இது அதர்வ வேதத்திலிருந்து கிளைத்ததாகச் சொல்வர். ஸ்தபதி எனும் கட்டிட, சிற்ப நிர்மாணிகரின் கருவிகளைக் குறித்ததே 'ஸ்தாபத்யசஸ்த்ர'மாதலால் இதுவே ஸ்ரீ B.N. சுக்லாவின் கூற்றுக்கு அடிப்படை எனத் தோன்றுகிறது. கட்டிடச் சிற்பம் மட்டுமின்றி அனைத்துக் கருவிகளையும் Mechanics பற்றிய என்பதே பொதுவில் ஸ்தாபத்யசஸ்த்ர சாஸ்த்ரமாகக் கொள்ளப்படுகிறது.

14.4-உடம்பை பேணுவது எதற்காக?

ஆயுர்வேதம் என்பது ஆயுஸ் விருத்திக்கு வழி சொல்லும் சாஸ்த்ரம். ஆயுஸ் குறைவது அநேகமாக வியாதியால்தானே? ஆகையினால், வியாதி வராமல் தடுக்கவும், வந்தால் குணப்படுத்தவும் வழி சொல்லும் வைத்ய சாஸ்த்ரமே ஆயுர்வேதம் எனப்படுகிறது.

ஆயுர்வேதம் தீர்க்காயுஸோடும், அப்படி இருக்கிற வரையில் சரீர ஸௌக்யத்தோடும் இருக்கும் வழிகளைச் சொல்லும் வைத்ய சாஸ்த்ரமாகும். அதாவது நம் ஆயுளை தீர்க்கமாக்கிக் கொள்வதற்கும் சரீரத்துக்கு வரும் வியாதிக் கஷ்டங்களை குறைத்துக் கொள்வதற்கும் மார்க்கத்தைச் சொல்ல இது ஏற்பட்டிருக்கிறது.

எதற்காகச் இப்படிச் செய்ய வேண்டும்? உடம்பைப் பேணி வளர்ப்பானேன்? எவ்வளவு பேணிவைத்துக் கொள்ளப்பார்த்தாலும் அது நிரந்தரமாயிருக்கப் போவதில்லையே? ஒருநாள் அழியத்தானே போகிறது? அழிவது, அழியவேண்டியது, என்ன பண்ணினாலும் அழிவை நிறுத்த முடியாதது, என்றைக்குப் போனால் என்ன? ஞானிகளாக இருப்பவர்கள் இந்த உடம்பு என்றைக்குப் போனாலென்ன என்றுதானே சொல்கிறார்கள்? இது இருக்கிற மட்டும் இந்திரிய இழுப்புத்தான், கர்மாவில் நுழைப்புத்தானென்பதால் இது போகாதா என்றே காத்துக் கொண்டிருந்தவர்களாகத் தானே மஹான்கள் இருந்திருக்கிறார்கள்?

அது இருக்கட்டும். மஹான்களின் கதையும், நிறுத்தி வைக்க முடியாமல் சாவு ஒன்று இருக்கும்போது சரீர ரக்ஷணை எதற்கு என்று நாம் 'இன்டெலச்சுவலாக'க் கேட்பதும் இருக்கட்டும். நடைமுறையில் என்ன செய்கிறோம்? மஹான்களின் வைராக்ய உணர்ச்சியும், நம் 'இன்டெலெக்டு' மா கை கொடுக்கின்றன? நம்முடைய ஸாமானிய உணர்ச்சியின்படிதானே செய்கிறோம்? அப்போது என்ன நினைக்கிறோம்? தேஹத்துக்குக் கொஞ்சம் அஸௌக்யமென்றால்கூட தேஹத்துக்குக் கொஞ்சம் அஸௌக்ய மென்றால்கூட அதைத்தானே பெரிதாக நினைத்து 'ஐயோ, அப்பா'என்கிறோம்? லக்ஷ ரூபாய் லாட்டரி விழுந்த ஸந்தோஷத்தைக்கூட ஒரு வயிற்று வலியோ, ஜலதோஷமோ விரட்டிவிடுகிறதே! இந்த அந்த வரவைவிடப்

பெரிசாக நினைக்கிறோம்? உடம்பெல்லாம் அழுகி, ஜீவனோபாயமே இல்லாமல் தெருவிலே நாற்றமடித்துக் கிடக்கிற ஒரு குஷ்டரோகி கூட, 'போகாதா இந்த உயிர்?" என்று புலம்பிக் கொண்டிருந்தாலும், அந்தப் பக்கம் ஏதாவது ஒரு லாரி, பஸ் ஏதாவது ஓரமாக வந்துவிட்டால், "நல்லது;அரை பட்டுச் சாவோம்" என்று கிடக்கிறானா? எப்படியோ அந்தண்டைதானே புரள்கிறான்? தோஹாத்ம புத்தி என்பது அவ்வளவு ஆழமாக நமக்குள் ஊறியிருக்கிறது! தொண்ணூறு தொண்ணூற்றைந்து வயஸு ஆகி நடைப்பிணமாகக் கிடக்கிறபோதும் மருந்து சாப்பிட்டு மரணத்தை ஒத்திப் போடப் பார்க்கவேண்டும், ஆயுஸை விருத்தி பண்ணிக்கொள்ள வேண்டும் என்றுதான் தோன்றுகிறது.

இது தன் சரீரத்தை ரக்ஷித்துக் கொள்வது. இன்னொன்று இருக்கிறது. நமக்கு ரொம்பவும் பிரியமாக பதி அல்லது பத்தினி, புத்ரர்கள் இருந்தால், நாம் போனாலும் நமக்கு வேண்டிவர்களான அவர்கள் தீர்க்காயுஸுடன் இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். "நம் கண்முன் அவர்கள் போகப்படாது" என்று வேண்டிக்கொள்கிறோம். அவர்களுக்கு உடம்புக்கு வந்து விட்டால் ராக்கண் முழித்து, எத்தனை வைத்யம் முடியுமோ அத்தனையும் பார்த்து, அதற்காக என்ன செலவானாலும் செய்கிறோம். பாபர் அல்லாவுக்கு வேண்டிக்கொண்டு தன் உயிரைக் கொடுத்தே ஹ§மாயூனை சாவிலிருந்து மீட்டார் என்று படித்திருப்பீர்கள்.

இப்படியாகத் தன்னுடையவும், தனக்கு வேண்டியவர்களுடையவுமான சரீரத்தை ரக்ஷிப்பதும், ஆயுஸை நீடித்துக் காப்பாற்றிக் கொள்ள முயல்வதும் ஸகலப் பிராணிகளுக்கும் ஆழமாக வேரோடிப்போன இயற்கையாயிருக்கிறது. மநுஷ்யன் மட்டுமல்ல; எந்தப் பிராணியுமே, ஒரு சின்ன புழுவும் எறும்புங்கூட ஜீவனை ரக்ஷித்து வைத்துக் கொள்ள எந்தப் பாடும் படத் தயாராயிருக்கிறது.

இயற்கையை முறித்துக் கொண்டுபோய் இசகு பிசகாக்கிக் கொள்ளாமல், இயற்கையை அநுஸரித்தே போய் அதை ஆத்மாவின் வழிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வளைத்துக் கொள்ளுவதுதானே நம் ஆன்றோர்கள் நமக்குத்

தந்துள்ள ஏற்பாடு? கல்யாணம், குழந்தை குட்டி பெறுவது, உத்யோகம் எல்லாவற்றையும் இயற்கை, நடைமுறை என்ற இரண்டுக்காகவும் ஒப்புக்கொண்டு இவற்றையும் சாஸ்த்ரோக்தமாகப் பண்ணிப் பக்வமாக்குவதுதானே அவர்கள் வகுத்துள்ள வழி? இதற்கேற்கவே வியாதிகளைப் போக்கிக்கொண்டு தீர்க்காயுஸுடன் வாழ்வதற்கான ஆயுர்வேதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

14.5-வைத்தியத்திலும் ஆன்மிக லக்ஷ்யம்

இது மட்டுமில்லை. இதுதான் முக்யமாக மேல் பார்வைக்குத் தெரிந்தாலும் உள்ளுக்குள்ளே இதிலும் பாரமார்த்திகமான லக்யத்தில் சேர்க்கிற ஒரு நோக்கம் இருக்கிறது.

எவ்வளவோ பாபம் பண்ணித்தான் இந்த ஜன்மாவை அடைந்து அலையாக அலைந்துகொண்டு, சாச்வத ஸௌக்யத்தை தெரிந்து கொள்ளாமல் உழன்று கொண்டிருக்கிறோம். இப்போதாவது புண்யங்களைப் பண்ணிப் பண்ணிப் பாபத்தைக் கரைக்க ஆரம்பிக்க வேண்டாமா? புண்ய கார்யங்களை, அநேக தர்மங்களைப் பண்ணியாக வேண்டும். அவற்றை இந்த உடம்பு இருக்கும்பொழுதுதான் செய்ய முடியும். சரீரம் இருந்தால் தான் பலவித பரோபகாரப் பணிகளைச் செய்யமுடியும். இருந்தால் மட்டும் போதாது. பலமுள்ளதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பிறருக்காக நிறைய 'ச்ரம் தான்' பண்ணிப் பாபத்தைக் கரைத்துக் கொள்ள முடியும். கர்மாவைக் கழிப்பதற்காக இடுப்பொடிய யாகம் பண்ணுவது, அல்லது நவாவரண பூஜை பண்ணுவது, நடந்தே திருப்பதி மலை ஏறுவது, நூற்றியெட்டு ஆயிரத்தெட்டு பிராணாயாமம் செய்வது, தியானம் செய்வது என்றால் இதற்கெல்லாம் வியாதியும் வக்கையும் இல்லாத சரீரமிருந்தால்தானே முடியும்? நாம் நோயும் நொடியுமாயிருந்தால் பிறத்தியாருக்கு வேறு எத்தனை கவலை? அவர்களை மெனக்கிட வைத்து எவ்வளவு சிரமம் கொடுக்கிறோம்?

நமக்கு தேஹ உபாதையிருக்கிறபோது ஈச்வர த்யானம் எப்படி ஒருமுகப்பட்டுப் பண்ணுவது? ஜ்வரம், பல் வலி என்று வந்தால் எப்படிப் பூஜை பண்ணுவது?

சரீரத்தில் சக்தி இல்லாவிட்டால், `சார்தாம்'என்று ஒவ்வொரு திக்கின கோடியிலும் ஒரு க்ஷேத்ரமாக ஏகப்பட்ட புண்ய ஸ்தலங்களையும் புண்ய நதிகளையும் கொண்ட இந்த தேசத்தில் எப்படி க்ஷேத்ராடன தீர்த்தாடனங்கள் செய்வது? உடம்பிலே வலி அசக்தமென்றால் ஜபம் செய்ய முடியுமா? யோகம் முடியுமா? நிஷ்டை எங்கே? ஞானம் எங்கே?

இப்படியாக, பரமாத்ம ஸ்மரணைக்காகவே சரீரத்துக்கு வியாதி - வராமல் preventive-ஆகவும், வியாதி வந்தால் ஸ்வஸ்தப்படுத்திக் கொள்வதற்காகவும் மருந்துகளையும், பத்யங்களையும், ஆஹார விஹார முறைகளையும், மற்ற ஸுகாதார விதிகளையும் சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு சாஸ்திரம் தேவைப்படத்தான் செய்கிறது. அதுதான் ஆயுர்வேதம். தர்ம சாஸ்திர விதிகளின்படி ஒருத்தன் சுத்தமான வாழ்க்கை நடத்தி விட்டாலே preventive; எந்த வியாதியும் வராது. ஆனாலும் வைத்ய சாஸ்த்ரமும் இதில் கொஞ்சம் செய்ய வேண்டியதாயிருக்கிறது.

வியாதியின் கஷ்டம் தீர்கிறது மட்டும் போதாது. வியாதியில்லாமல் தீர்க்க ஆயுஸுடனும் இருக்க வேண்டும். அதற்கு இந்த வைத்ய முறை வழி காட்டுகிறது என்பதால் தான் இதற்கு 'ஆயுர்வேதம்' என்று பெயர். 'எப்படியும் முடியப்போகிற ஆயுஸை எதற்கு விருத்தி பண்ணிக் கொள்ள யத்தனம் பண்ண வேண்டும்?' என்றால் இதற்கும் காரணம் சொன்னேன். உடம்பை வைத்துக்கொண்டுதான் புண்யம் பண்ணிப் பாபத்தைப் போக்கிக்கணும், தர்ம அநுஷ்டானம் பண்ணிக் கர்ம சேஷத்தைக் கழிச்சுக்கணும் என்று சொன்னேன். இப்போது நமக்கு வாய்த்திருக்கிற இந்த உடம்பு நசிக்கிறதற்கு முந்தியே அப்படி "இருவினையப்பு, மல பரிபாகம்" என்று (சைவ ஸித்தாந்திகள்) சொல்கிறபடி கர்மாவை ஈடுகட்டி மும்மலங்களை[1] அகற்றிக் கொள்ள வேண்டும்.

"ஏன் இந்த உடம்பு உள்ளபோதே, இன்னொரு ஜன்மா எடுத்து இன்னொரு உடம்பு வந்தால் அதை வைத்துக்கொண்டுதான் பண்ணுவோமே!" என்றால், அடுத்த ஜன்மாவில் வருகிற உடம்பு எப்படிப்பட்டதாயிருக்குமோ?" இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?" என்று மஹான்களே கதறியிருக்கிறார்களே? புண்ய கர்மாக்களைச் செய்ய எல்லா ஸௌகரியமும் பெற்றுள்ள மநுஷ்ய சரீரமாகத்தான் அடுத்த ஜன்மாவில் வாய்க்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்? மநுஷ்யப் பிறவியே லபித்தாலும் ஸத்கர்மா பண்ணுவதற்கு இப்போதிருக்கிற சக்தியும் புத்தியும் ஸௌகர்யமும் ஸந்தர்ப்பமும் surrounding -உம் அப்போது இருக்கும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்? இப்போது கர்மபூமியான இந்த தேசத்தில் பிறந்து, இத்தனை சாஸ்திரம், க்த்திரம், ஸ்தோத்திரம், அநேக ஸாதனா மார்க்கங்கள், ஆசார்யன், மஹான்களின் உதாரணம் எல்லாம் கிடைத்திருக்கிற மாதிரியே மறுபடியும் கிடைக்குமென்று சொல்லமுடியுமோ ஆனபடியால் இந்த ஜன்மத்திலேயே, இப்போது வாய்த்திருக்கிற இந்த தேஹத்தை வைத்துக் கொண்டே சித்த சுத்தியைப் பெற்று ஜீவன் முக்திய அடையப் பிரயத்னம் பண்ணவேண்டும்.

சக்நோதீஹைவ ய: ஸோடும் ப்ராக்-சரீர-விமோக்ஷணாத் |
காம-க்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர: ||
(கீதை 5.23)

என்றே பகவானும் சொல்லியிருக்கிறார். "சக்நோதி இஹைவ" என்று ஆரம்பிக்கிறார். 'இஹ ஏவ' என்பதே 'இஹைவ'என்றாயிருக்கிறது. 'இஹ ஏவ'என்றால் "இங்கே இருக்கிறபோதே" என்று அர்த்தம். அப்புறம் "ப்ராக்-சரீர-விமோக்ஷணாத்" என்கிறாரே, அதற்கு "இந்த உடம்பு போவதற்கு முன்னாடியே" என்று அர்த்தம். "இங்கேயே இந்த உடம்பு போகிறதற்கு முந்தியே எவன் காம-க்ரோதங்களால் உண்டாகும் சலனத்தைத் தாங்குவதற்கு, அதாவது அதுகளால் தான் பாதிக்கப்படாமல் அவற்றை அடக்கி ஆள்வதற்கு வலியவனாக ஆகிறானோ அவன்தான் யோக ஸித்தி பெற்றவன்; அவன்தான் நிஜ ஸுகத்தைக் கண்டவன்"என்ற கருத்தையே இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார்.

காமமும் க்ரோதமும் போகத்தான், அதாவது சித்தம் சுத்தியாகிறதற்குத்தான் இத்தனை புண்ய கர்மாக்கள், மதாநுஷ்டானங்கள். இந்த சரீரம் விழுகிறதற்கு முந்தியே, இதைக் கருவியாக வைத்துக் கொண்டே, இவற்றைப் பண்ணிப் பண்ணி, உயிரும் உடலும் பிரிவதற்கு முன் காமமில்லை, க்ரோதமில்லை என்று ஆக்கிக்கொண்டு விட்டால் அப்புறம் உயிர் பிரிகிறபோது பேருயிர் என்கிறார்களே, அதில் போய்க் கலந்துவிடலாம். மறுபடி உடம்பு எடுக்க வேண்டாம். அப்படிச் செய்யாமல் உயிரை விட்டால் மறுபடி அது மாட்டு உடம்பில் புகுந்து கொள்ளுமோ, ஆட்டு உடம்பில் புகுந்து கொள்ளுமோ நமக்குத் தெரியாது. ஆகையால் காம க்ரோதாதிகளைப் போக்கிக் கொண்டுவிட்டோம், மன மாசுகளை முழுவதும் துடைத்துதெடுத்துவிட்டோம் என்று தெரிகறவரை இந்த சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கான பிரயத்தனத்தைப் பண்ணத்தான் வேண்டும். நாம் பிரயத்தனம் பண்ணியும் அவன் ஆயுளை முடித்துவிட்டால் வேறு விஷயம். நம் கர்மா, அவன் லீலை அப்படி நடந்தால் நடந்துவிட்டுப் போகட்டும். அதில் நாம் பண்ணிக் கொள்கிறதற்கு எதுவுமில்லை.

'சாவு அவன் கையில்தானிருக்கிறது என்றால் அப்புறம் நம் அளவில் நாம் ஆயுளை நீடித்துக்கொள்ளப் பார்ப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது?'என்று கேட்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். அப்படிப் பார்த்தால், சாவு மட்டுந்தானா? நம்முடைய ஸகல விஷயங்களுமே, கல்யாணம், கார்த்திகை, உத்யோகம், ஸாதனை பண்ணுவது, நல்லது செய்வது, கெட்டது செய்வது எல்லாமே அவன் கையில்தானிருக்கிறது.

அந்த ஸூத்ரதாரி ஆட்டுவிக்காமல் நாம் என்னதான் பண்ண முடியும்? ஆனாலும் ஏதோ ஒரு விநோதமாக இதில் நமக்கே கொஞ்சம் ஸ்வயேச்சை, ஸ்வாதந்திரியம் இருந்து நாமாகப் புருஷ யத்தனம் பண்ணி இந்த மற்ற எல்லா விஷயங்களையும் நடத்திக் கொள்கிற மாதிரிதானே இந்த நாடகம் நடக்கிறது?அதனால் இதில், அவன் கையிலேயே இருக்கிற மற்ற எல்லா விஷயங்களிலும் நம் இஷ்டம், நம் பிரயாஸை இவற்றைக் கொண்டு நாமே செய்து கொள்கிற மாதிரிதான், மரணம் அவன் கையிலேயே இருந்தாலும் இந்தப் பிறவி நீங்குமுன் ஜனன மரணத்தைத் தாண்டுவதற்கான

யோக்யதையை நாமே ஸம்பாதித்துக் கொண்டுவிட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆயுஸ் ரக்ஷணை செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்காகவே உடம்பை ஜாக்ரதையாகக் காப்பாற்ற வேண்டும்.

இதற்கு உதவும்படியாகத்தான் அநேக ரிஷிகள் ஆயுர்வேத சாஸ்திரங்களைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

ஆயுர்வேதத்தில் இந்த விஷயம் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. "நாஸ்திகனுக்கு வைத்யம் செய்யாதே" என்று அதில் சொல்லியிருக்கிறது. அது இந்த உள்ளர்த்தத்தில்தான். கேட்கிறபோது, 'இதென்ன? கருணையில்லாமல் இப்படிச் சொல்லியிருக்கே!' என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் இப்படிச் சொன்னதே கருணையில்தான். வியாதியில்தான் கஷ்டம் தெரிகிறது. கஷ்டம் என்று வரும்போதுதான் எப்படியாவது மீள வேண்டுமென்ற தவிப்பில், 'கடவுள் இருப்பது நிஜமானால், வேத சாஸ்திரம் நிஜமானால் என்னை அவன் காப்பாற்றட்டும்; நான் அப்புறம் சாஸ்திரப்படி பண்ணுகிறேன்' என்று ஒரு நாஸ்திகன் பகவான் பக்கம் திரும்பத் தான் செய்வான். பகவானும் அவனை சொஸ்தப்படுத்தினாலும் படுத்துவான். அப்பர், கூன்பாண்டியன் மாதிரியானவர்கள் நாஸ்திகர்களானபோது, ஈச்வர ஸங்கல்பத்திலேயே அவர்களுக்கு வியாதி வந்து அப்புறம் ஈச்வர சக்தியிலேயே அவர்கள் குணமானதையும், அதனால் அநேகம் பேர் வேதத்துக்குத் திரும்பி ஆஸ்திகர்களாக ஆனதையும் பற்றிப் படிக்கிறோம். அந்தக் காலத்தில்தான் அப்படி நடந்தது என்றில்லை. இப்போதும் அநேக நாஸ்திகர்கள் வேங்கடாசலபதி, குருவாயூரப்பன், இல்லாவிட்டால் யாரோ ஒரு மஹான் அல்லது ஸித்த புருஷரின் அநுக்ரஹத்தால் ரொம்பவும் உக்ரமான ஏதோ ஒரு பிணி தீர்ந்ததில்தான் தெய்வநம்பிக்கை உள்ளவர்களாக மாறியிருக்கிறார்கள் என்று அவர்களே எழுதிப் படிக்கிறோம். வைத்தியமே இல்லை என்றால்தான் ஒரு நாஸ்திகன் பகவான் பக்கம் திரும்ப அதிகம் 'சான்ஸ்' உண்டு. பகவானுக்கும் இவனைக் காப்பாற்றுவதன் மூலம் இன்னம் அநேகரைத் திருப்பிக் கொள்ளும் 'சான்ஸ்' கிடைக்கும்! காப்பாற்றாவிட்டாலும் கடைசி காலத்தில் இந்த நாஸ்திகன்

அவனை நினைத்தற்காக அடுத்த ஜன்மாவில் ஆஸ்திக்ய புத்தி உள்ளவனாகப் பிறப்பிப்பான்.

வைத்தியம் செய்து வியாதியைப் போக்காததால் ஒரு நாஸ்திகன் கஷ்டப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதாகும் அல்லவா? இந்தக் கஷ்ட அநுபவத்தால் அவனுடைய பாபம் குறையும். இது ஒரு உபகாரந்தானே? பாபத்தைப் போக்கிக்கொள்ள அவன் வேறு எந்த அநுஷ்டானமும் பண்ணாதவனாச்சே!

நாஸ்திகனுக்கு வைத்யம் பண்ணி ஆயுஸை விருத்தி பண்ணுவதால் அவன் நாஸ்திக்ய பாபத்தையும் விருத்தி செய்து கொள்வதாகவே ஆகும். அவனால் ஊர் கெடுவதற்கும் ஜாஸ்தி வாய்ப்புத் தந்ததாகும். இந்த மஹா தோஷமெல்லாம் அவனுக்குச் சேர வேண்டாமென்ற கருணையால்தான் அப்படிச் சொன்னது. இந்த விஷயம் இருக்கட்டும்.

நான் சொன்னவற்றிலிருந்து என்ன ஏற்படுகிறதென்றால் மத ரீதியாகவும், வேதாந்த த்ருஷ்டியாகவும் பார்த்தால்கூட சரீர ஸம்ரக்ஷணம் அவசியந்தான். "தர்மத்தை ஸாதிப்பதற்குரிய கருவியாக இருப்பது இந்த சரீரமே அல்லவா? "**சரீரம் ஆத்யம் கலு தர்ம ஸாதநம்?**" என்றே காளிதாஸன் எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிறான்[2]. "சுவரை வைத்தே சித்ரமெழுதணும்" என்பது இதுவே. ஹோமத்துக்கு தர்ப்பையும் ஸமித்தும் நெய்யும் மற்ற ஆஹுதி திரவியங்களும் எப்படி ஸாதனமோ அப்படியே ஹோமம் பண்ணுகிற யஜமானனின் உடம்பு ஒரு ஸாதனம். இது இல்லாவிட்டால் எப்படி லோக க்ஷேமார்த்தம் வேத வேள்விகள் நடக்க முடியும்? இந்த வாழ்க்கையே ஒரு ஹோமமாகிறபோது அதிலே ஆஹுதிவாவதற்கே ரக்ஷித்துக்கொள்ள வேண்டிய ஸாதனமாக சரீரம் ஆகிறது.

'நெல்லுதான் முக்யம், உமியை உதறிவிட வேண்டும்; ஆத்மாதான் நெல்லுமணி, சரீரம் உமி மாத்திந்தான்' என்று ரொம்பவும் வேதாந்தமாகச் சொல்வதுண்டு. ஆனால் இந்த உமியையும் உதறிவிடாமல் ஹோமத்துக்கு என்று சேகரித்து வைக்கிறோம்! நெல்லை ஹவிஸ்ஸாக்கி ஆஹுதி பண்ணுகிறோமென்றால், அந்த ஆஹுதியை ஏற்றுக்கொள்கிற அக்னி

விருத்தியாவதற்காக உமியையே பிரயோஜனப்படுத்துகிறோம்! அந்த உமியைப் போலவே இந்த சரீரத்தையும் ரக்ஷிக்க வேண்டும்.

மொத்தத்தில் இதுவரை நான் சொன்னதில் என்ன ஏற்படுகிறதென்றால், சரீரம் எக் கேடு கெட்டாலும் பொருட்டில்லை என்று ஆத்மாவிலே ஆணி அடித்த மாதிரி நிற்கிற பக்வம் வருகிறவரை, அல்லது அடுத்த பக்ஷமாக எத்தனை உடம்புக்கு வந்தாலும் அதை கவனிக்காமல் ஈச்வர த்யானம் பண்ணுகிற 'ஸ்டெடினெஸ்' வருகிற வரை, உடம்பை வியாதி வக்கையில்லாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

மீமாம்ஸை என்று ஒரு சாஸ்திரம். அதிலே பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என்று இரண்டு பிரிவு[3]. பூர்வ மீமாம்ஸை கர்ம மார்க்கத்தையும் அதைச் சேர்ந்த தர்மாநுஷ்டானங்களையும், உத்தர மீமாம்ஸை ஞான மார்க்கத்தையும் சொல்பவையாகும். இந்த இரண்டுக்கும் சரீர ரக்ஷணை செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஸமாதியில் நிஷ்டை கூடுகிற ஸ்திதி உண்டாகிறவரை ஞானமார்க்கக்காரனும் அநேக ஞான நூல்களைப் படித்து ஆத்ம விசாரம் பண்ணுவதற்காக ஆரோக்யத்தைப் பேணிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

யோகத்தில் ராஜயோகம் பண்ணும்போது ஆஸனம், பிராணாயாமம் ஆகியவை நல்ல ஆரோக்யத்தையும் தருபவைதாம். ஹடயோகத்திலோ உடம்பை ஆச்சர்யமான சக்தி உள்ளதாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

---

[1]அணுவால் ஏற்படும் ஆணவ மலம், கர்மாவால் ஏற்படும் கார்மிக மலம், பேதப் பார்வையால் ஏற்படும் மாயா மலம் என்று மூன்று சைவ ஸித்தாந்தத்தில் கூறப்படுகிறது.

[2] 'குமாரஸம்பவம்' 5.33

[3] "தெய்வத்தின் குரல்" இரண்டாவது பகுதியில் "மீமாம்ஸை : கர்ம மார்க்கம்" என்ற உரை பார்க்க.

14.6-மணி, மந்திரம், ஔஷதம்

சரீர ரக்ஷைக்கு மூன்று வழி சொல்வார்கள் - மணி, மந்திரம், ஔஷதம் என்று. நவரத்தினங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வித வியாதிகளைப் போக்கும் குணமுண்டு. நவரத்தினங்களில் ஒவ்வொன்றும் நவக்ரஹங்களில் ஒவ்வொன்றுக்குப் பிரீதியானவையாகும். வியாதி என்பது கர்மாவால் ஏற்படுவதே என்றாலும் அந்தக் கர்மா ஒவ்வொரு கிரஹக் கோளாறாக ரூபம் எடுத்து உண்டாகிறது. ஆகையால் அதற்கு சாந்தியாக நவரத்தினங்களில் அந்த கிரஹத்துக்குரியதை மோதிரமாக, மாலையாகப் பண்ணிப் போட்டுக் கொள்வது, அந்த மணியால் மூர்த்தி பண்ணி அதற்கு அபிஷேகித்த தீர்த்தத்தைப் பானம் பண்ணுவது என்றெல்லாம் ஒரு வழி. இதுதான் 'மணி, மந்திர, ஔஷதம்'என்பதில் ' மணி'. நவரத்தினத்தை நவமணி என்றும் சொல்கிறோமல்லவா? மணிகளைப் போலவே ஸ்வர்ணம் ரஜதம் (வெள்ளி) , தாம்ரம், பாதரஸம் முதலான லோஹங்களைக் கொண்டும் சிகித்ஸை செய்து கொள்வதுண்டு.

மந்த்ர ஜபம், ஜ்வரஹரேச்வரர் கம்பஹரேச்வரர் என்றெல்லாம் வியாதிகளைப் போக்கவே உள்ள மூர்த்திகளுக்குரிய மந்த்ரங்களை ஜபிப்பது, ஸூர்ய நமஸ்காரம் கந்தரநுபூதி பாராயணம் முதலியவற்றால் நோயை குணப்படுத்திக் கொள்வது - ஆகியனதான் (மணி, மந்திரம் என்பதில்) இரண்டாவதான 'மந்த்ரம்'.

`ஔஷதம்'என்பது மருந்து மூலம் குணம் செய்து கொள்ளும் மருத்துவ சாஸ்திரம். வைத்தியம் என்பது இதைத்தான். ஓஷதி என்றால் மூலிகை. அதன் அடியாகப் பிறந்த சொல்தான் ஔஷதம். முக்யமாக மூலீகைகளை அதாவது பச்சிலைகளைக் கொண்டே மருந்துகளைச் செய்வதுதான் ஆயுர்வேதம். பவள பஸ்மம், முத்து பஸ்மம், தங்க பஸ்மம் ('பஸ்பம்' என்றே பொதுவில் சொல்கிறார்கள்) என்பது போல மணி, லோஹங்களை எப்போதாவது பிரயோஜனப்படுத்தினாலும் ஆயுர்வேதத்தில் முக்யமான மூலச்சரக்கு மூலிகைகள்தான்.

ஸித்த வைத்தியத்தில்தான் மணி, லோஹம், பாஷாணம், மற்ற தாதுப் பொருட்களைக் கொண்ட மருந்துகள் ஜாஸ்தி. ஸித்த வைத்யமும் நம் சாஸ்திர ரீதியானதுதான். ஆனால் வீர்யம் ஜாஸ்தி. தப்பினால் ரொம்பக் கெடுதல் உண்டாய்விடும். துளிப்போல சூர்ணம்தான் டோஸேஜ் ஆனாலும் potency (உள் சக்தி) மிகவும் அதிகம். அதனால் ஜாக்ரதையாக சிகித்ஸை செய்ய வேண்டும். அகஸ்தியர், தேரையர் முதலான ஸித்த புருஷர்கள் நமக்குப் புரியாத பரிபாஷையில் ஸித்த வைத்ய சாஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 'பவர்' ஜாஸ்தி என்பதாலேயே இப்படி எல்லாருக்கும் புரியாதபடி ஜாக்ரதை பண்ணி எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஸித்த வைத்தியம், ஆயுர்வேதம் இரண்டிலுமே மணி ஸம்பந்தமும் இருக்கிற மாதிரி, மந்திர ஸம்பந்தத்தையும் சேர்த்து மருந்தை மேலும் effective-ஆகப் பண்ணுவதுண்டு. நல்ல ஸம்பிரதாயத்திலே வந்த வைத்யர்கள் அநேக மந்த்ரங்களை ஜபித்தபடியே ஔஷதங்களைப் பண்ணி ஜபித்துத் தருவார்கள். த்ரயம்பக மந்த்ரம், அச்யுத-அநந்த-கோவிந்த என்ற நாமத்ரயம் (மூன்று திருநாமங்கள்) தன்வந்தரி, அச்வினி தேவர்கள், ஸூர்யன் முதலான மூர்த்திகளுக்கான மந்திரம், கவசம் முதலியவற்றை மருந்தோடு சேர்த்துக் கொள்வதுண்டு. அகஸ்தியர் ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கு உபதேசித்த "ஆதித்ய ஹ்ருதயம்" பிரஸித்தமாயிருக்கிறது. விஷக் கடிகளுக்கு என்ன மூலிகை, சிந்தூரம் (சித்த வைத்ய சூர்ணத்தை சிந்தூரம், செந்தூரம் என்று சொல்வார்கள்) கொடுத்தாலும் மந்திர ஜபம்தான் முக்யமாயிருக்கிறது. ஸர்ப்பங்கள் பயந்து நடுங்குகிற கருட பகவானைக் குறித்த மந்திரத்துக்கு விஷம் இறங்குவதில் ஆச்சர்யமான சக்தி இருக்கிறது. நம்முடைய ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி' யில் ஒரு ச்லோகத்தில்*[1] அம்பாளை ஸகல அவயங்களிலிருந்தும் அம்ருத ரஸ கிரணங்கள் பெருகுகிற சந்திர காந்த சிலா வர்ண மூர்த்தியாக த்யானம் செய்வதால் ஒருத்தன் கருடனைப் போலப் பாம்பு விஷத்தை சமனம் செய்கிற சக்தி பெற்று விடுகிறானென்றும், இப்படிப்பட்டவனுக்கு அம்ருத நாடி என்று உண்டாகி அதன்பின் இவனுடைய த்ருஷ்டிபட்டாலே பிறரின் ஜ்வரதாபம் இறங்கிவிடுமென்றும் சொல்லியிருக்கிறார். இந்த ச்லோக ஜபத்தாலேயே விஷம், ஜ்வரம்

முதலியவைகளை நிவ்ருத்தி செய்துவிட முடிகிறது. 'ஸௌந்தர்ய லஹறி'யின் வேறு பல ச்லோகங்களை ஜபிப்பதற்கும் இவ்வாறு பலவிதமான வியாதி நிவிருத்தி சக்தி இருக்கிறது. நாராயண பட்டத்திரி 'நாராயணீயம்'பண்ணியே அவருடைய வயிற்று உபாதை நீங்கியதால் அதையும் நோய் தீருவதற்காகப் பாராயணம் பண்ணுகிறார்கள். "**இருமலுரோக முயலகன் வாத**" என்று ஒரு திருப்புகழ உண்டு. அதுவும் ஸர்வ வியாதி நிவ்ருத்திக்காக ஜபிக்கப்படுகிறது. ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் கூன்பாண்டியனை ஸ்வஸ்தப்படுத்துவதற்காகச் சொன்ன திருநீற்றுப்பதிகத்தையும் பல ஆவிருத்தி ஜபித்து விபூதி இடுவதுதுண்டு. வியாதியஸ்தரே விபூதியில், அல்லது ஜலம், தேன், பால் போன்ற ஒன்றில் ஜபித்து அதை இட்டுக் கொள்வதோ பானம் பண்ணுவதோ உண்டு. அல்லது அவருக்கு ரொம்ப அசக்தமானால் அவருக்காக இன்னொருத்தர் பண்ணி, விபூதியானால் இட்டு விட்டு வாயில் போடலாம்;தேன், பால் போன்றவற்றை நோயாளி குடிக்கப் பண்ணலாம். 'மந்த்ர ராஜா'என்கிற காயத்ரியையும் இப்படி வியாதிகள் ஸ்வஸ்தமாவதற்கு ஜபிப்பதுண்டு.

விபூதிக்கு இதிலே தனியான சக்தி. நாட்டு ஜனங்களுகளுங்கூட என்ன உடம்பானாலும் "துண்ணூறு" என்று திருநீறு வாங்கி இட்டுக் கொள்வதையும் வாயில் போட்டுக் கொள்வதையும் பார்க்கிறோம். விஷயம் தெரிந்தவர்கள் பஞ்சாக்ஷர, ஷடக்ஷரங்களைச் சொல்லி தாரணம் பண்ணிக் கொள்வார்கள். திருச்செந்தூர் விபூதி ஸர்வரோக ஹரணமென்று ஆசார்யாளே ஸ்தோத்திரித்திருக்கிறார்*2. "பன்னீர் இலையில் வைத்துத் தரும் அந்த விபூதியை முழுங்கணும், இட்டுக்கணும் என்பதெல்லாங் கூட வேண்டாம். வெறுமே க்ஷணம் பார்த்தாலே போதும் - "**விலோக்ய க்ஷணாத்**" – fits, குஷ்டம், துர்வியாதிகள், ஜ்வரம், பைத்தியம், குன்மம், ஆவிசேஷ்டை எல்லாமே ஓடிப்போய்விடும் என்கிறார். பழநியாண்டவரின் மூர்த்தம் மூலிகைச் சாறுகளை இறுக்கிப் பண்ணியதே என்பார்கள். அதனால் அவருக்கு அபிஷேகமாகிற தீர்த்தம் முதலானவற்றையும் வியாதி நிவ்ருத்திக்குக் கொடுப்பதுண்டு. குருவாயூர் தைலம், திருச்சூர் நெய், இன்னம் அநேக க்ஷேத்ரங்களில் இப்படியே மருத்துவ சக்தி உள்ளதாகப் பிரஸாதம்

கொடுக்கிறார்கள். பிரஸாதமென்று ஸ்தூலமாகத் தராமல், `நடந்தே மலை ஏறுகிறேன்', `அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுகிறேன்', `மாங்கல்யம் சாத்துகிறேன்'என்றெல்லாம் வேண்டிக் கொண்டாலே வேங்கடரமண ஸ்வாமி தீராத வியாதியெல்லாம் தீர்த்து வைக்கிறார். பரமேச்வரனும் பவரோகம் என்னும் ஸம்ஸார வியாதியை மட்டுமின்றி, அந்த ஸம்மஸாரத்திலே வருகிற அநேக ரோகங்களைத் தீர்ப்பதற்காக 'வைத்யநாத ஸ்வாமி' என்றே பெயர் வைத்துக்கொண்டு வைத்தீச்வரன் கோயிலில் விளங்குகிறார். உப்பு, வெல்லம் கரைகிற மாதிரி வியாதி கரைவதால் அங்கே இவற்றைக் கரைப்பதாக வேண்டிக் கொள்வார்கள்.

பரமேச்வரனுக்குரிய பில்வ பத்ரம், பெருமாளுக்குரிய துளசி, அம்பாளுக்கு (முக்யமாக மாரியம்மனுக்கு) விசேஷமான வேம்பு - இந்த மூன்று இலைகளை ஒரே அளவு சேர்த்து தினந்தோறும் ஒரு பிடி தின்றுவிட்டால் போதும்;எந்த வியாதியும் வராது என்று ஒரு நாட்டு வைத்தியர் எழுதியிருக்கிறார்.

வேப்பங்காற்றே ரத்த சுத்தி உண்டாக்குவதென்றும் அதோடு கர்ப்பக் கோளாறுகளைப் போக்குவதென்றும், அரசமரக் காற்றுக்கும் கர்ப்பப் பை நோய்களை நிவ்ருத்தி செய்கிற சக்தி இருக்கிறதென்றும், அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் பண்ணி வைத்து, புத்ர ஸந்தானமில்லாதவர்கள் அதைப் பிரதக்ஷிணம் பண்ண வேண்டுமென்று வைத்திருப்பதில் இப்படி வைத்ய சாஸ்திரப் பிரகாரமே ஸந்ததி உண்டாவதற்குக் காரணம் தெரிகிறதென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

பூஜையில் தூபம் போடுவது, கர்ப்பூரம் கொளுத்துவது ஆகியனகூட disinfectant-ஆக (க்ருமி நாசினியாக) அநேக வியாதிகளைத் தடுக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள்.

அசையாத நம்பிக்கையாக பக்தி இருந்தால் அதனாலேயே ரோக நிவ்ருத்தி முதலான எதையும் ஸாதித்துக் கொண்டுவிடலாம்; அல்லது ரோகம், ஆரோக்யம் எதுவானாலும் வித்யாஸமில்லை என்கிற உசந்த நிலையை ஸம்பாதித்துக் கொள்ளலாம். இதிலே வைத்ய சாஸ்திரத்துக்குப் பிடிபடாத

மந்திரம், பிடிபடுகிற மூலிகைகள், வேம்பு துளஸி மாதிரியான மருந்துச் சரக்குகள் எல்லாமே கலந்து வரலாம்.

---

*[1]"கிரந்தீம் அங்கேப்ய" எனத் தொடங்கும் இருபதாவது ச்லோகம்

*[2]ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தில் 'அபஸ்மார' என்று தொடங்கும் 25-வது ச்லோகம்.

14.7-ஆயுர்வேதமும் மத ஆசரணையும்

ஆயுர்வேதம் என்று மெடிகல் ஸயன்ஸாகத் தனியே ஒன்றைப் பார்க்கும்போது அதற்கு இவ்வளவு தெய்வ ஸம்பந்தம் கிடையாது. ஆனாலும் அல்லோபதி (இங்கிலீஷ் வைத்தியமுறை) , யுனானி மாதிரி அடியோடு தெய்வ ஸம்பந்தமே இல்லாமலும் இல்லை. நாஸ்திகனுக்கு வைத்யம் பண்ணவேண்டாம் என்று இந்த சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதே அதற்கு ஒரு proof.

ஈச்வர த்யானத்தோடுதான், குறிப்பாக, பகவான் மஹாவிஷ்ணு அம்ருத கலசத்தைப் பாற்கடலிலிருந்து கொண்டு வந்தபோது எடுத்த தன்வந்திரி என்ற அவதாரத்தை ஆராதித்துத்தான் ஆயுர்வேதம் அப்யஸிப்பது வழக்கம்.

அதோடுகூட நம் மத சாஸ்திரங்களுக்கு மிகப் பெரும்பாலும் விரோதமில்லாமலே இருக்கிற வைத்ய முறை ஆயுர்வேதந்தான். இங்கிலீஷ் மருந்துகள், சிகித்ஸை முறை முதலியவற்றில் சாஸ்திரம் ஒப்புக்கொள்ளாத அநாசாரங்கள் ஏகப்பட்டவையாக வந்து சேரும். ஆயுர்வேதத்தில் இப்படி இல்லை. பூண்டு, கீண்டு மாதிரி ஏதோ ஒன்றிரண்டு தவிர அநாசார வஸ்துகள் பெரும்பாலும் ஆயுர்வேதத்தில் கலப்பதில்லை. இவற்றுக்கும் பிற்பாடு பிராயசித்தம், புண்யாஹவாசனம் சொல்லிப் பரிஹாரம் வைத்திருக்கிறது. ஆஸ்திகர்கள் இங்கிலீஷ் வைத்யத்துக்கு கூடியமட்டும் போகாமலிருப்பதுதான் சிலாக்யம். ஆயுர்வேதம் உடம்பில் பிடிக்க நாள் பிடிக்கிறது, இங்கிலீஷ்

மருந்தானால் உடனே ரிஸல்ட் தெரிகிறது என்கிறார்கள். நாளானாலும் மூலம் வரைக்கும் போய் ரோகத்தைப் போக்குவது ஆயுர்வேதம்; இங்கிலீஷ் வைத்யம் இப்படி இல்லை என்றும் விஷயம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். அநேகமாக தற்கால சாந்தியாகவே அல்லோபதி ஸரிப்படுத்துகிறது என்கிறார்கள். அதோடு இங்கிலீஷ் மருந்திலே ஒன்றை ஸரி செய்து கொள்ளப் போவதில், அது ஸரியானாலும், after-effect , side-effect என்றெல்லாம் வேறு பல உபத்ரவங்கள் உண்டாவது போல ஆயுர்வேதத்தில் உண்டாவதில்லை. வைத்தியம் ஆரம்பிக்கும்போது சில உபாதைகளைக் கிளறி விட்டாலும் அது நீண்டகாலக் கோளாறாகிவிட்டால் சீக்கிரத்திலேயே தணிந்து போய்விடும்.

வேத சாஸ்திரங்களுக்கு ஒத்துப் போவதாகவே நம்முடைய வைத்ய சாஸ்திரம் இருக்க வேண்டுமென்பது முக்யம். உடம்பைக் காப்பாற்றிக் கொள்வது முக்யம் என்பதற்காக வேத சாஸ்திர விருத்தமாக (விரோதமாக) ப் போகக்கூடாது. ஏனென்றால் இப்படி விருத்தமாகப் போனால் அதுதான் நாஸ்திக்யம்[*1]. நாஸ்திகனுக்குத்தான் வைத்யமே பண்ணக்கூடாதே!

ஸமய சாஸ்திரமும் ஆயுர்வேத சாஸ்திரமும் மிகப் பெரும்பாலும் ஒத்துப் போகின்றவையாகும். ஸமய சாஸ்திரம் முக்யமாக மநுஷ்யனின் மூன்று குணங்களான ஸத்வ, ரஜோ, தமோ குணங்களில் எதுவும் ஏறிப் போகாமல் ஒன்றையன்று ஈடுகட்டிக் கொண்டு 'ந்யூட் ரலைஸ்'பண்ணி மனஸை ஆடாமல் ஸமநிலைப்படுத்துவதற்காகத் தான் ஏற்பட்டது 'ஸாங்க்யம்' என்னும் தர்சனத்தில் (தர்சனம் என்றால், சுருக்கமாக, ஆத்ம சாஸ்த்ரம் என்று வைத்துக்கொள்ளுங்கள்) இதைப்பற்றி விரிவாகச் சொல்லியிருப்பது அடிப்படையில் வைதிக தர்மத்துக்கும் ஏற்புடையதுதான். க்ருஷ்ண பரமாத்மா கீதையில் இந்த முக்குணங்களைப் பற்றிப் பல அத்யயாங்களில் சொல்லியிருக்கிறார். ஸாங்க்யமும் யோகமும் கைகோத்துக் கொண்டு போகிற தர்சனங்களாதலால் யோக சாஸ்திரத்திலும் த்ரி குணங்களுக்கு 'இம்பார்டன்ஸ்' கொடுத்திருக்கிறது. இப்படி ஆத்ம வித்தைக்கு வேதோக்தமாக இருக்கிற ***ஸத்வ-ரஜோ-தமோ குண 'பாலன்ஸிங்'*** கேதான்

(ஸமநிலைப்படுத்துவதேதான்) நம்முடைய வைத்ய சாஸ்த்ரத்தில் கப-வாத-பித்த தாதுக்களின் 'பாலன்ஸிங்'ககா ஆகிறது!

ப்ரக்ருதி, மாயை, அவித்யை என்றெல்லாம் சொல்கிற ஜீவ-ஜகத் கோளாறுகளுக்கெல்லாம் முக்குணம் தான் காரணமாதலால் இதுகளை பாலன்ஸ் பண்ணி மனஸை ஸம நிலைக்குக் கொண்டு வந்துவிட்டால் எல்லாம் சாந்தமாக அடங்கிப் போகும் என்று வேதாந்தம் சொல்கிறதென்றால், அதையே ஆயுர்வேதம், 'சரீரக் கோளாறுக்கெல்லாம் கப-வாத-பித்தம் என்று மூன்று தாதுக்கள்தான் காரணம். இவற்றை ஒன்றுக்கொன்று ஈடுகட்டிவிட்டால் சரீரம் ஸௌக்யமாயிருக்கும்' என்கிறது. சித்தத்தை வைத்து வேதாந்தம் பேசுவதையே சரீரத்துக்குப் பொருத்தி ஆயுர்வேதம் பேசுகிறது. பிரகிருதியிலுள்ள இத்தனை ஆயிரம் க்ருத்ரிமத்துக்கும் மூலம் மூணே குணங்களில் அடங்கிவிடுகிறது என்கிறாற்போலவே சரீரத்துக்கு வருகிற இத்தனை ஆயிரம் நோய் நொடிகளுக்கும் மூலம் மூன்று தாதுக்கள்தான் என்று ஆயுர்வேதம் நிர்ணயம் பண்ணிவிடுகிறது.

கபம் என்பது உங்களுக்குத் தெரியும். சளி, க்ஷயம், ப்ளூரிஸி, நிமோனியா எல்லாம் அதனால் வருவதுதான். முக்யமாக ச்வாஸ கோசத்தைப் பற்றியது இது. ஆனால் ரக்த ரூபத்தில் சரீரம் முழுதும் வியாபிப்பது. வாதம் என்றாலும் வாயு என்றாலும் ஒன்றேதான். காற்று என்று அர்த்தம். பிடிப்பு, எலும்புகளில் வலி, முடக்கு, உடம்பு கனத்துப் போகிறது ஆகியவை எல்லாம் இதிலிருந்து உண்டாகிறவை. ரூமேடிஸம், ஆர்த்ரைடிஸ், அது, அது, இது என்று ஏதேதோ பேர் சொல்கிற வியாதிகளுக்கு வாதம்தான் காரணம். காற்று என்றவுடன் மூச்சு, அதனால் ச்வாஸ கோச ஸம்பந்தம் என்று தோன்றிவிடலாமாயினும், சரீரம் பூராவுமே நாடி சலனத்தில் வாயுவின் வியாப்தி (பரவுதல்) தான் ஏற்படுவதால் இதுவும் தேஹம் முழுவதையும் குறித்த தாதுதான். பித்தம் என்பது பித்த நீரை முக்கியமாகவும், ஜீர்ணத்தில் சுரக்கிற எல்லா நீர்களையுமே பித்த நீர் பாதிப்பதால் அவை அனைத்தையும் பற்றியதாகவும் கருதப்படுகிறது. அதனால் இது ஜீர்ண உறுப்புகளோடு நின்றுவிடுவது என்று அர்த்தமில்லை. ஜீர்ணித்த அன்ன ஸாரம் ரத்தமாகத்தானே ஆகி சரீரம் பூராவும் ஓடுகிறது? அதனால் பித்தத்தினால்

ஏற்படுகிற கோளாறுகளும் தேஹம் முழுவதையும் பாதிப்பதுதான். நாடி பார்த்தே மூன்றில் எந்த தாதுவின் கோளாறு என்று கண்டுபிடித்து ஸரி செய்ய ஆயுர்வேதம் வழி சொல்கிறது.

நமக்குக் குறிப்பாக சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தில் மட்டுமே இந்த ஒவ்வொரு தாதுவும் ஸம்பந்தப்படுவதாக தோன்றினாலும், இவை வாஸ்தவத்தில் தேஹம் முழுதிலும் வியாபித்திருப்பதால் தான் ஹ்ருதயம், மூளை, கண், காது, மூக்கு, வாய் உள்பட எந்தக் கோளாறானாலும் முதலில் தாது பார்த்தே ஆயுர்வேதத்தில் ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கிறார்கள்.

நம்முடை வைத்ய சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம் எல்லாம் வெளி நாடுகளுக்குப் பரவியபோது இதையே க்ரீஸ் முதலான தேசங்களில் நாலு தாதுக்களாக நாலு humour -கள் என்று ஆக்கினார்கள். முக்குணம், மூன்று தாது என்பதோடு பஞ்ச பூதக் கொள்கையையும் சேர்த்து அவர்கள் நாலு ஹ்யூமர் என்று வைத்துக் கொண்டார்கள். ஸூக்ஷ்ம அநுபவமுள்ளவர்களுக்கே புரியக்கூடிய ஆகாச பூதத்தை அவர்கள் விட்டு விட்டு மற்ற நாலு பூதங்களை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். நாலு ஹ்யூமர்களாக சரீரத்திலுள்ள தாதுக்களே ஒருவனின் குணத்தை நிர்ணயம் பண்ணுவதாகவும் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். phlegm – கபம், choler – பித்தம், melancholy -இதுவும் இன்னொரு தினுஸான பித்தம்தான், blood – அதாவது ரத்தம் என்பவை நாலு ஹ்யூமர்கள். ரத்த சுத்திகரிப்பு ச்வாஸத்தாலேயே நடப்பதால் ரத்தத்தை 'வாதம்'என்று வைத்துக் கொள்ளலாம். இவற்றைக் குணங்களோடு பொருத்தி ஒருத்தனுக்கு ':ப்ளெம்' (கபம்) ஜாஸ்தியிருக்கிறபோது அவன் எல்லாவற்றிலும் அசட்டையாக, மந்தமாக அடங்கியிருப்பானென்றும் (இதை 'ஸத்வம்' மாதிரி என்று வைத்துக் கொள்ளலாம்), `காலர்'அதிகமானால் ரொம்பக் கோபிஷ்டனாயிருப்பானென்றும் (இதுதான் ரஜோகுணம்) 'மெலங்கலி' அதிகமானால் அழுமூஞ்சியாக, சிந்தா க்ராந்தனாக இருப்பானென்றும் (இதைத் தமஸில் ஒருவிதம் எனலாம்), ப்ளட் ஜாஸ்தியானாலும் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டவனாயிருப்பானென்றும் (இதுவும் ரஜஸ்தான்) அவர்கள் வைத்துக் கொண்டார்கள்[*2].

முக்குணம், மூன்று தாது என்பதில் நம்முடைய புராதனமான வைத்ய சாஸ்திரம் வைதிக சாஸ்திரத்தோடு ஒத்துப் போகிறதென்று சொல்லிக் கொண்டிருந்தேன். இப்படியேதான் தர்ம சாஸ்த்ரோக்தமான பஞ்ச கவ்யமே வைத்ய சாஸ்த்ரோக்தமாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது. பாப பரிஹாரத்துக்காக தர்ம சாஸ்த்ரம் பசுவின் பால், தயிர், நெய், சாணம், மூத்ரம் ஆகிய ஐந்தையும் சேர்த்த பஞ்ச கவ்யத்தை உட்கொள்ளச் சொல்கிறது. அதையே வியாதிக்குப் பின் பலஹீன ஸ்திதியில் புதிதாக நோய்க் கிருமிகள் தாக்காதபடித் தடுப்பதற்காக வைத்ய சாஸ்திரத்திலும் சாப்பிடச் சொல்லியிருக்கிறது.

நம்முடைய வைதிக சாஸ்திரங்களில் பாபம் - புண்ணியம் என்று சொல்லியிருக்கிற இப்படிப்பட்ட பலவற்றையே ஆயுர்வேதத்தில் ஹிதம்-அஹிதம், அதாவது சரீரத்துக்கு நல்லது செய்வது-கெட்டது செய்வது என்பதாகச் சொல்லியிருக்கும். ஆசாரம் புண்யத்திலும் அநாசாரம் பாபத்திலும் சேர்ப்பதல்லவா? அதனால் நம்முடைய வைத்ய சாஸ்திரத்தில் பெரும்பாலும் அநாசாரம் அஹிதமானதாகத் தள்ளப்பட்டுத்தானிருக்கும். இதனால்தான், தவிர்க்க முடியாமல் அல்லோபதிக்குத்தான் போகவேண்டுமென்று இருந்தாலொழிய மற்ற உடம்புகளுக்கு ஆயுர்வேதப் பிரகாரமே நம்முடைய தர்மாசாரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் சிகித்ஸை செய்துகொள்ள வேண்டுமென்கிறேன். காட் லிவர், லிவர் எக்ஸ்ட்ராக்ட் என்று எடுத்ததெற்கெல்லாம் அநாசாரத்துக்குப் போக வேண்டாமென்கிறேன்.

---

*1 நாஸ்திகம் என்பது இறைவனை நம்பாமை என்பதைவிட வேத தர்ம முறைகளை நம்பாமை என்பதே எனும் விஷயம் குறித்து “தெய்வத்தின் குரல்”இரண்டாம் பகுதியில் “வேதம்”என்ற உரையில் “வேதமும் தமிழ்நாடும்”என்னும் உட்பிரிவில் பார்க்க.

*2 இந்தப் பாரா பெரும்பாலும் அடியார் ஒருவர் மொழிந்ததை ஸ்ரீசரணர்கள் பிறருக்கு எடுத்துரைத்ததாகும்.

14.8-சஸ்த்ர சிகித்ஸை

ஆபரேஷன்-ஸர்ஜரி என்பது-செய்துகொள்ள வேண்டிய வியாதி என்றால் இப்போது இங்கிலீஷ் வைத்தியத்துக்குத்தான் போகவேண்டுமென்றாகி விட்டது. இது இப்போதைய நிலையில் தவிர்க்க முடியாததுதான். ரொம்பவும் ஆசாரம் பார்க்கிறவர்கள்கூட 'காடராக்ட் மாதிரி ஏற்பட்டால் இங்கிலீஷ் வைத்ய முறையில் ஆபரேஷன்தான் பண்ணிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதிலே இப்போது நாம் ஒன்றும் பண்ணிக்கொள்வதற்கில்லையென்றாலும் முன்காலத்திலேயே நம்முடைய ஜாக்ரதைக் குறைவால் ஒரு தப்பு ஏற்பட்டுவிட்டதென்பது என் அபிப்ராயம்.

'ஸர்ஜரி' நம்முடைய வைத்ய முறையில் இல்லை என்று நாம் நினைக்கும்படி ஆக்கியிருப்பதுதான் தப்பு. வாஸ்தவத்தில் நம்மிடதான் ஆதியிலேயே, ஆயுர்வேத சாஸ்திரம் ஏற்பட்ட புராதன காலந்தொட்டே 'ஸர்ஜரி' என்பதான சஸ்த்ர சிகித்ஸை இருந்திருக்கிறது. ஆயுர் வேதத்துக்கு இரண்டு பெரியவர்கள் மூல புருஷர்கள். ஒருத்தர் சரகர், இன்னொருவர் ஸுச்ருதர். இவர்கள் எழுதிய ஸம்ஹிதைகள்தான் ஆயுர்வேதத்துக்கு மூல க்ரந்தங்களாக இருப்பவை. சரகர் என்பது பதஞ்சலியே எனத் தெரிகிறது. அக்னிவேச்ய ரிஷி எழுதியதைச் சரகர் விஸ்தாரம் செய்திருக்கிறார். வாக்படர் எழுதிய 'அஷ்டாங்க ஹ்ருதய'மும் ஆயுர்வேதத்துக்கு ஒரு அதாரிடி. தமிழ் பாஷையிலும் அநேக பிராசீன நூல்கள் ஸம்பிரதாயமாக வந்திருக்கின்றன. சரகர், ஸுச்ருதர் என்ற இருவரில் சரகர் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது பற்றிச் சொல்கிறார். ஸுச்ருதர் சஸ்த்ர சிகித்ஸை செய்து குணப்படுத்துவது பற்றிச் சொல்கிறார். Physician, surgeon என்று இப்போது இரண்டு பேரை சொல்கிறோம். மருந்து கொடுப்பவன் ஃபிஸீஷியன்; சஸ்த்ர சிகித்ஸை செய்பவன் ஸர்ஜன். எம்.பி.,பி.எஸ். என்பதில் இரண்டும் அடக்கம். 'எம்.பி.'என்றால் மருந்து கொடுக்கிறவன்; Medicine Bachelor*[1]. 'பி.எஸ்.'என்றால் ஆபரேஷன் பண்ணுகிறவன்: Bachelor of Surgery. ஆயுர்வேதத்தை நாம் ஜாக்கிரதையாகப் பூர்ண ரூபத்தில் காப்பாற்றி வந்திருந்தால் ஆயுர்வேத வைத்தியர்களும் M.B.,B.S. காரர்கள் மாதிரி மருந்து கொடுப்பதோடுகூட

சஸ்த்ர சிகித்ஸை செய்வதிலும் திறமை படைத்தவர்களாயிருந்திருப்பார்கள். ஆனால் சரக ஸம்ஹிதை பிரசாரத்தில் வந்திருக்கிறமாதிரி, ஸுச்ருதருடைய 'ஸர்ஜரி' நூல் வராததால் நஷ்டமடைந்திருக்கிறோம்.

இதிலே என்ன பரிதாபம் என்று சொல்கிறேன். 'என்ஸைக்ளோபீடியா ப்ரிட்டானிகா' என்ற வால்யூம்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதிலே ஒவ்வொரு ஸயன்ஸ், சாஸ்த்ரம், கலை பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கும். இருபது, முப்பது வருஷத்துக்கு ஒரு தடவை புதிசு புதிசாகத் தெரிய வருகிறவைகளையும் சேர்த்துத் திருத்தி அந்தப் புஸ்தகங்களின் புது எடிஷன்கள் போடுவார்கள். அதிலே எந்த ஸயன்ஸானாலும், சாஸ்திரமானாலும் அதைப் பற்றின சரித்திரமும் போட்டிருக்கும். அது எங்கே முதலில் தோன்றிற்று, எந்தக் காலத்தில் தோன்றிற்று, எந்தக் காலத்தில் எவர் அதை எந்தெந்தப் பிற தேசங்களுக்குக் கொண்டு போனார்கள் என்று விவரம் கொடுத்திருக்கும். அதிலே என்ன போட்டிருக்கிறதென்றால் ஸர்ஜரி என்ற ரணசிகித்ஸை வித்யை இந்தியாவிலேயே முதலில் தோன்றிற்று என்று இருக்கிறது. இங்கேயிருந்து அது அரேபியா வழியாக க்ரீஸ் தேசத்துக்குப் போனதாகவும், அங்கேயிருந்து இத்தாலிக்குப் பரவி, பிறகு ஐரோப்பா பூரா பிரசாரமானதாகவும் போட்டிருக்கிறது.

இது 'ஸுச்ருதம்' என்கிற சாஸ்திரத்தில் நவீன காலத்தில் ஆஸ்பத்திரிகளில் எத்தனை விதமான ரண சிகித்ஸை ஆயுதங்கள் உபயோகத்திலிருக்கின்றனவோ அத்தனையைப் பற்றியும் சொல்லபட்டிருக் கிறதாம். புதிதாகக் கண்டெடுத்த சுவடிகளைப் பரீக்ஷித்தும், ரிக் வேதத்திலிருந்து ஆரம்பித்து புராணம், காவியங்கள் முதலியவற்றிலுள்ள கதைகளில் ரோக நிவ்ருத்தி பற்றி, இருப்பவற்றை இதோடு பொருத்தியும் பல அறிஞர்கள் 'அநேக ஆச்சர்யமான ஸர்ஜரி நுணுக்கங்களெல்லாம் நம் பூர்விகர்களுக்கு நன்றாகத் தெரியும்' என்று காரணம் காட்டி எழுதி வருகிறார்கள். ரிக்வேதத்தில் வீராங்கனையாக இருந்த ஒரு ராணிக்கு*2 யுத்தத்தில் கால் போய், அதற்குப் பதில் அச்விநி தேவர்கள் என்ற தேவ வைத்யர்கள் இரும்புக் கால் வைத்ததாக வருகிறது. வால்மீகி

ராமாயணத்தில் அஹல்யையிடம் தப்பாக நடந்து கொண்ட இந்திரனுக்கு இந்திரியம் போய்விட்டதாகவும் அதற்குப் பதில் ஆட்டின் இந்திரியத்தைப் பொருத்தினார்களென்றும் வருகிறது. சயவனர், யயாதி முதலியவர்கள் வயோதிகம் போய் யௌவனம் அடைந்ததாக மஹாபாரதத்தில் இருக்கிறது. இப்படியிருக்கும் அநேகம் கதைகளை வைத்ய சாஸ்திரங்களில் சொல்லியிருப்பவற்றோடு சேர்த்து நன்றாக ஆராய்ச்சி பண்ணிப் பார்த்ததில், இவையெல்லாம் கற்பனை இல்லை. நிஜமாகவே நடந்திருக்க வேண்டும். ஏனென்றால் வைத்ய சாஸ்திரங்களில் நமக்குக் கிடைத்திருப்பதில் தெளிவாகவும் நுட்பமாகவும் சொல்லியிருக்கிறவற்றிலிருந்து அந்தக் காலத்திலேயே artifical limb surgery (செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் சஸ்த்ர முறை), transplanation (ஒருவர் உறுப்பை இன்னொருவருக்குப் பொருத்துவது) , 'காயகல்பம்' என்ற பெயரில் rejuvenation (ஒருவருடைய சதை முதலியவற்றையே எடுத்துப் பொருத்தித் தோற்றத்தை அழகாகும்படி மாற்றி அமைப்பது) எல்லாம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று ரிஸர்ச் ஸ்காலார்கள் எழுதுகிறார்கள்.

ஸெப்டிக் ஆகாமல் தடுப்பது ஸர்ஜரியில் முக்யம். ஆபரேஷன்போது வலி தெரியாமல் மயக்க நிலை மாதிரி இருப்பதும் முக்யம். இந்த இரண்டுங்கூடப் பூர்வ காலத்திலேயே தக்கபடி செய்யப்பட்டு வந்தன என்று காட்டியிருக்கிறார்கள். 'வாளால் அறுத்துச் சுடினும்' வைத்யனிடம் நோயாளி மனஸ்தாபப்படாத மாதிரி பகவான் எத்தனை சோதித்துக் கஷ்டப்படுத்தினாலும் அவனிடம் தனக்குப் பிரேமை போகமாட்டேனென்கிறது என்று (குலசேகர) ஆழ்வார் பாடியிருக்கிறார். இங்கே 'வாளால் அறுப்பது' தான் ஸர்ஜரி. அப்புறம் அதைச் 'சுடுவது' என்பது அது ஸெப்டிக் ஆகாமல் 'காடரைஸ்' பண்ணுவது.

இத்தனை இருந்தும், ஏதோ கட்டி, ராஜபிளவை என்றால் அறுப்பது தவிர பிற்காலத்தில் ஆயுர்வேதத்தில் சஸ்த்ர சிகித்ஸை ஏன் நஷ்டமாய் விட்டதென்றால் இரண்டு காரணம் தோன்றுகிறது. என்ன இருந்தாலும் ஆபரேஷன் என்பது ஆபத்துதான். அதனால் பின்னால் பாதகமான விளைவுகள், after-effects ஏற்படுவதும் அதிகம். எனவே கற்றுக்குட்டிகள்

கையில் கத்தியைக் கொடுப்பதாகவும், எடுத்ததற்கெல்லாம் இந்தக் காலத்தில் இங்கிலீஷ் வைத்தியத்தில் நடப்பதுபோல் அறுப்பது கிழிப்பதாகவும் ஆகிவிடக் கூடாதென்று மிகவும் ஜாக்ரதை பண்ணிச் சிலபேருக்கு மட்டும் கற்றுக் கொடுத்ததிலேயே நாளாவட்டத்தில் இதை வெகுவாக இழக்கும்படியாகி யிருக்கலாம். இன்னொரு காரணம்: அப்போது வைத்யர்கள் நல்ல அநுஷ்டாதாக்களாக இருந்து நல்ல தபோபலம் பெற்றவர்களாயிருந்ததால் அவர்களுக்கு ஹிமாசலம், பொதிகை மாதிரி எந்த மலையில் எந்தப் பொந்தில் என்ன மூலிகை இருந்தாலும் தெரிந்திருக்கிறது. எத்தனை கொடிய வியாதியானாலும், ஆழமான வ்ரணமானாலும் அதை குணம் செய்யவும் மூலிகையே போதுமானது என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஸைன்யமெல்லாம் பிரக்ஞை போய்க் கிடந்தபோது ஆஞ்ஜநேய ஸ்வாமி ஸஞ்ஜீவி பர்வதத்தைக் கொண்டு வந்தார்;அந்த மூலிகையின் காற்றுப் பட்ட மாத்திரத்திலேயே ஸேனை புது பலத்தோடு எழுந்துவிட்டதென்று படிக்கிறோமல்லவா? இப்படி மூலிகை வைத்தியத்தால் ஸௌக்யமாகவே எதையும் ஸ்வஸ்தம் செய்துவிடத் தெரிந்திருந்ததால்ன், ஆயுதத்தைப் போட்டு வெட்டிக் குடைந்து சஸ்த்ர சிகித்ஸை செய்வதை அவ்வளவாக மேற்கொள்ளாமல் இருந்து, இதனால் நாளா வட்டத்தில் அதை மறந்து விடும்படியாகியிருக்கலாமென்றும் தோன்றுகிறது.

மருந்து சாப்பிடுவது, ஆபரேஷன் என்ற இரண்டு மாத்திரமின்றி இன்னம் அநேக சிகித்ஸை முறைகளும் ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. 'லோபம்' என்று ஒன்று. ஆயின்மென்ட் பூசுவது. ப்ளாஸ்டர் போடுவது எல்லாம் 'லேபம்'தான். மலையாள வைத்யத்தில் இவை பின்பற்றப்படுகின்றன. 'வமனம்'என்பது வாந்தி பண்ண வைத்து குணம் செய்வது. 'விரேசனம்' என்பது இதே மாதிரி பேதியாக வைப்பது. 'ஸ்வேதனம்' என்பது வியர்த்துக் கொட்டப்பண்ணி அதன்மூலம் துர்நீர் வெளியே போகச் செய்வது. 'ஸ்நேஹனம்' என்பது எண்ணெய் தேய்த்து மயிர்க்கால் வழியே உள்ளுக்குள் மருந்தை இறக்குவது. இதுவும் மலையாள வைத்தயத்தில் நிறையக் காணப்படுகிறது. உள்ளே இருக்கும் கெடுதலை வெளியிலே கொண்டு வருவதற்காக ஆயுர்வேதத்தில் உள்ள பஞ்சகர்மம் என்ற ஐந்து

சிகித்ஸை முறைகளில் வமனம், விரேசனம் தவிர 'நஸ்யம்' என்பது மூக்காலே தும்ம வைத்து தோஷத்தை வெளிவரச் செய்வது;' அநுவாஸனம்', 'நிரூஹம்' என்ற இரண்டும் இருவிதமான எனிமா.

கண்ணுக்குத் தெரிகிற ரோகம் மாத்திரமின்றி குடல், மூளை இவற்றின் உள்ளுக்குள்ளேயிருப்பது, தோல் - எலும்பு -ரத்தம் (blood pressure) , டயாபெடீஸ், மனோவியாதி என்று கணக்கில்லாமலுள்ள அத்தனையையும் 'டயாக்னோஸ்'பண்ணி மருந்து தருவதற்கும் ஆயுர்வேதத்தில் வழி சொல்லியிருக்கிறது. இப்போது 'ஆயுர் வேதம்' என்றால் முக்யமாக 'ஓஷதி' என்கிற மூலிகை அடுத்தபடியாக 'ரஸ வர்க்கம்' என்கிற தாதுக்கள் (மினெரல் என்பவை) ஆகியவற்றால் செய்யும் மருந்துதான் என்றே நினைக்கிறோம். மரம், செடி, கொடி எல்லாமே ஓஷதி வர்க்கத்தில் வந்துவிடும். கந்தகம், பாஷாணம், லோஹங்கள் முதலியவை ரஸவர்க்கம்.

'காயகல்பம்' என்றால் சரீரத்தை அழியாமல் பண்ணிக் கொள்வது என்று கேள்விப்படுகிறோம். இப்படி சிரஞ்ஜீவியானவர்கள் எவருமில்லை என்பது பிரத்யக்ஷம். ஆனாலும் இப்படி காயஸித்தி பண்ணிக்கொண்டு பிற்பாடு இந்திரிய விரயம் ஏற்படாமல் சுத்தர்களாக, சாந்தர்களாக இருந்தவர்கள் மற்றவர்களைவிட வெகு நீண்ட காலம் நோய் நொடி இல்லாமலிருந்தார்களென்று தெரிகிறது. யோகம், தபஸ், ஞானாப்யாஸம் முதலியவை செய்வதற்கே உடம்பை த்ருடமாகவும், தீர்க்க காலமுள்ளதாகவும் வைத்துக் கொள்ள வேண்டுமென்று காரியஸித்தி பண்ணிக் கொண்டாலே ஜாஸ்தி பலன் தருவதாகவும், போக போக்யங்களைஅநுபவிப்பதற்காகப் பண்ணிக் கொண்டால் அவ்வளவு பலிக்கவில்லை என்றும் தோன்றுகிறது. காயகல்ப முறையில் ரஸாயன சாஸ்திரம் நிறைய வந்துவிடும். பசு மந்தையில் இருந்துகொண்டு செய்கிற ரஸாயன ஸேவைகள் வைத்ய ரீதியில் பயனுள்ளவையாகக் கொண்டு வந்துவிடுகின்றன.

மொத்தத்தில் காயஸித்தி முறைகள் தேஹத்தில் புது மாம்ஸம், ரத்தம் இவற்றை உண்டாக்கி, ஆயுஸை விருத்தி பண்ணுபவையாகும்.

*[1] M.B. என்பது Bachelor of Medicine என்று பொருள்படும் என்பதன் Medicinae Baccalaureus முதல் எழுத்துக்களாகும்.

*[2] கேலன் என்ற மன்னனின் மனைவியான விச்பலா.

14.9-ஆயுர்வேதத்தில் இதர ஸயன்ஸ்கள்

மினரல் தாதுக்களைக் கலந்தும் மருந்து செய்வதால் 'கெமிஸ்ட்ரி' என்ற ரஸாயன சாஸ்த்ரமும் நம் வைத்ய சாஸ்திரத்தில் வந்து விடுகிறது. 'கெமிஸ்ட்ரி' மட்டுமில்லை - இன்னம் ஏழெட்டு ஸயன்களும் Medical Science என்ற இது ஒன்றிலேயே அடங்கி விடுகிறதைப் பார்த்தால் ஆச்சர்யமாயிருக்கும். மூலிகைகளின் நேச்சரை தெரிந்து கொண்டே மருந்து பண்ண வேண்டும் என்பதால் தாவர தத்வ சாஸ்திரமான Botany -யையும் நன்றாகத் தெரிந்து சொல்லியிருக்கிறார்கள். மருந்துகளின் இன்னொரு மூலச் சரக்கான ரஸ வர்க்கங்களை பற்றி அறியப் போவதிலும் ரஸாயனம் (கெமிஸ்ட்ரி) வந்துவிடுகிறது. என்ன மருந்து கொடுக்க வேண்டும், அதில் என்ன ஸாமான்கள் சேர்க்க வேண்டும் என்று தெரிந்தால் போதுமா இது செலுத்தப்படுகிற தேஹத்தின் அமைப்பைப் பற்றி நன்றாகத் தெரியவேண்டுமல்லவா? நோயாளியின் தேஹ தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாமல் சிகித்ஸை எப்படி? இவ்வாறு Physiology -யும் சாஸ்திரத்தில் வந்து விட்டது. Veterinary என்கிற பிராணி வைத்தியமும் புராதனமாகவே நம்மிடமுண்டு. வீட்டுக்கு வீடு பசு, வியவஸாயத்துக்கு எருது, ஸைன்யத்தில் ரத கஜ துரகம் என்பதில் என்பதில் ஆனை குதிரை - இப்படிப் பல மிருகங்களை ஆரோக்யமாக காப்பாற்ற வேண்டியதை முன்னிட்டு ப்ராணி தத்வ சாஸ்திரமான Zoology -யையும் நம் பூர்விகர்கள் ஆயுர் வேதத்திலேயே சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். எந்த ஸத்யத்தையும் துளைத்துக்கொண்டு பார்க்கிற அதீந்திரிய சக்தியால் ரிஷிகள் இந்த எல்லா ஸயன்ஸ்களையும் தெரிந்து கொண்டு ஆயுர்வேதம் முதலான சாஸ்திரங்களில்

தெரிவித்திருக்கிறார்கள். கருணை மிகுந்த ரிஷிகள், பிராணிகளுக்கு மட்டுமில்லாமல், மரம் செடி கொடிகளுக்கு வருகிற நோய்களைக் கூடப் போக்க வேண்டுமென்று "வ்ருக்ஷாயுர் வேதம்" என்றே ஒரு சாஸ்திரம் செய்திருக்கிறார்கள். சரக்குகளை இன்ன விகிதத்தில் கலக்கணும், ஒவ்வொன்றும் இன்ன எடை இருக்கணும், நோயாளி இன்ன அளவு அதைச் சாப்பிடணும் என்று துல்யமாய் கணிப்பதில் கணிதமும் வந்துவிடுகிறது. இப்படி, பௌதிக சாஸ்திரம் என்கிற Physics -ஐத் தவிர பாக்கி முக்கியமான ஸயன்ஸ்களையெல்லாம் ஆயுர்வேதம் ஒன்றிலேயே அகப்படும்படியாகக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். வேறு சாஸ்திரங்களிலும் தனியாகவும் ஃபிஸிக்ஸையும் அலசி ஆராய்ந்து கொடுத்திருக்கிறார்கள். ஸர் P.C.ரே என்பவர் நம்முடைய பிராசீன சாஸ்திரங்களில் நவீன ஸயன்ஸ்கள் எல்லாவற்றுக்கும் மூலம் இருக்கிறதென்று ஆராய்ச்சி செய்து நிரூபித்திருக்கிறார். வெள்ளைக்காரர்களே ஒப்புக் கொள்கிறபடி குறைந்த பக்ஷம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட சரகம், ஸுச்ருதம் முதலிய க்ரந்தங்களில், `இந்த இருநூறு, முன்னூறு வருஷங்களில் நாங்கள் கண்டுபிடிக்கிறதற்கு முந்தி எவருக்குமே இந்த உண்மைகள் தெரிந்திருக்கவில்லை'என்று அவர்கள் சொல்லிக் கொள்ளும் நவீன ஸயன்ஸ்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

14.10-பத்தியம்

மற்றவர்கள் [வெளி நாட்டார்], நவீனர்கள் நம்முடைய ஆயுர்வேதத்தில் சிலாகித்துச் சொல்கிற ஒரு விஷயம், இதில் மருந்துகளைச் சொன்னதோடு மாத்திரமின்றி, அதைவிட முக்யமாகப் பத்தியங்களைச் சொல்லியிருப்பதாகும்.

`பத்யம்' என்றால் ஒரு வழியில் போகப் பண்ணுவது. பாதை, path என்பதெல்லாம் 'பதி'யிலிருந்து வந்ததுதான். ஆரோக்யப் பாதையில் செலுத்துவதற்காக ஏற்பட்டதே பத்தியம். மருந்து சாப்பிட்டால் மட்டும் போதாது. உடம்பு ஸரியாவதற்கு இன்ன ஆஹாரங்களை நீக்கிவிட்டு, இன்ன மட்டுமே இன்ன அளவில் சாப்பிட வேண்டுமென்பது முக்யம். இதுதான்

பத்தியாமயிருப்பது. இந்தப் பத்தியகளில் ஒன்றாக ஸகல ஜனங்களுக்குமே பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உபவாஸம் இருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறது. ஸகல ஜனங்களுமே அவ்வப்போது ஒரு வேளை, லங்கனம் போடுவது நல்லது; பக்ஷத்துக்கு ஒரு நாள் பூராவும் பட்டினியிருப்பது விசேஷம் என்று வைத்ய சாஸ்திரம் கருதுகிறது. இதையே ஏகாதசி சாஸ்த்ரமும் நம் பூர்விக வைத்ய சாஸ்த்ரமும் கை கோத்துக் கொண்டு போகின்றன என்பதற்கு இதுவும் உதாரணம்.

14.11-ஆயுர்வேதத்தைப் பின்பற்றக் காரணங்கள்

இந்தியாவிலுள்ள நாம் நம் தேசத்திலேயே ஏற்பட்ட ஆயுர்வேத முறைகளைத்தான் பின்பற்ற வேண்டுமென்பதற்கு ஒரு காரணம், அப்போதுதான் கூடியமட்டும் சாஸ்த்ர விரோதமான அநாசாரங்கள் சேராமலிருக்கின்றன என்பது. இன்னொரு காரணமும் உண்டு. அது இயற்கையாக அமைந்திருப்பது. அதாவது இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கி நடத்துகிற ஈஸ்வரனே ஸஹஜமாக ஏற்படுத்தி வைத்திருக்கிற அமைப்புகளைச் சேர்ந்தது. ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமான சீதோஷ்ணமிருக்கிறது. ஒவ்வொரு விதமான பயிர் பச்சைகள் விளைந்து அவற்றை அங்கே உள்ளவர்கள் அவர்களுடைய ஆரோக்யம், வியாதி இரண்டும் ஏற்படுகின்றன. அந்தந்த தேச சீதோஷ்ணமும் அங்கே கிடைக்கிற ஆஹார பதார்த்தங்களுந்தான் ஒவ்வொரு தேசத்தவருக்கும் 'ஸூட்'ஆகிறது என்பதைப் பார்க்கிறோம் அல்லவா? இப்படியே, அங்கங்கேயும் இந்த சீதோஷ்ணம், ஆஹாரம் முதலியவற்றை அநுஸரித்து அநாரோக்கியத்தைப் போக்கிக் கொள்ளவும் அங்கே உள்ளவர்களுக்கு ஒவ்வொரு வைத்யமுறை தோன்றுமாறு பகவான் புத்தி கொடுக்கிறான்; அந்த வைத்யத்துக்கு வேண்டிய சரக்குகள் அந்தந்த தேசத்தில் கிடைக்கும்படியாகவும் வைத்திருக்கிறான். ஸாத்விகர்களாக வாழ வேண்டிய நம் தேச ஜனங்களுக்கு நம்முடைய சீதோஷ்ணம் ஆஹாரம் முதலியவற்றுக்கு அநுஸரணையாக பச்சிலை, ரஸ வர்க்கம் என்றிப்படி ஸாத்விகமான மருந்துகளாலேயே வியாதி நிவ்ருத்தி ஏற்படுமாறு அவன் ஏற்படுத்தியிருக்கும் ஸஹஜமான அமைப்பிலே

இருக்கிறது. 'கர்ம பூமியிலுள்ளவர்கள் கர்மாநுஷ்டானத்துக்கு முதுகெலும்பாக இருக்கிற தர்மசாஸ்திரத்தை மீறாமலே சரீர ரக்ஷை, வியாதி, நிவ்ருத்தி, ஆயுர்விருத்தி முதலியவற்றைப் பெறட்டும்'என்றே நம் ரிஷிகளுக்கு ஆயுர்வேதம் ஸ்புரிக்கும்படியாக அநுக்ரஹித்திருக்கிறான். அந்தந்த தேசத்திலுள்ள ஜனங்களின் பக்வநிலைக்கு ஏற்க அவர்களுக்கு தேசாசார, மதாசாரங்களைக் கொடுத்து இவற்றுக்கு அநுஸரணையாகவே வைத்யமுறை முதலியவை அங்கங்கும் தோன்றும்படி செய்திருக்கிறான்.

வைத்யம் மட்டுமில்லை, 'சில்பம்' என்று வீடு வாசல் கட்டிக் கொள்கிற முறை, 'க்ருஷி'என்பதான வியவஸாய முறை எல்லாவற்றிலும் இப்படி ஒவ்வொரு தேசத்துக்கும் 'ஸ¨ட்'ஆகிற ஒன்று உண்டு. நாம் அநுஷ்டானங்களையே பண்ண முடியாமல் விட வேண்டியதாகிறது. Japanese method of agriculture பண்ணி நாலு மடங்கு மாசூல் காட்டுவேன் என்று போனால் நம் கையை மீறி அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி (பெருமழை அல்லது வறட்சி) என்று ஏற்பட்டு பஞ்ச நிலைமை உண்டாகிறது. நேச்சரை டிஸ்டர்ப் பண்ணக்கூடாது அதுவே ஏற்றத்தாழ்வுகளை பாலன்ஸ் பண்ண விட வேண்டும் என்று அறிவாளிகள் ஒரு பக்கம் சொல்கிறார்கள். இது மெடிகல் ஸயன்ஸ் உள்பட எல்லாவற்றிலும் ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டிய விஷயம்.

ஆயுர் வேதத்தின் ப்ரமாண நூலான 'சரக ஸம்ஹிதை' யிலேயே இந்த விஷயத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

யஸ்மிந் தேசே ‍ப யோ ஜாத:
தஸ்மை தஜ்ஜௌஷதம் ஹிதம்

ஒரு தேசம் என்றால் அதில் பல மநுஷ்யர்கள் உண்டாகிறார்கள். மநுஷ்யர்களைப் போலவே ஒவ்வொரு தேசத்திலும் மூலிகை முதலான மருந்துச் சரக்குகளும் உண்டாகின்றன. ஈஸ்வர நியதியில் இது ஏதோ குருட்டாம்போக்காக நடப்பதல்ல. இந்த தேசத்துக்காரனுக்கு இந்தச் சரக்கால் பண்ணின ஔஷதம்தான் எடுத்தது என்று இது காட்டுகிறது. இதைத்தான்,

"எந்த தேசத்தில் ஒருவன் பிறந்திருந்தாலும் அவனுக்கு அங்கேயே உண்டான சரக்குகளால் ஏற்பட்டதுதான் மருந்து" என்று சரகத்தில் சொல்லியிருக்கிறது.

14.12-ஆயுர்வேதம் ஆயுள் பெறட்டும்

இப்போது நம் நிலைமை எப்படி ஹீனமாயிருக்கிறதென்றால், நான் சொல்கிறேனே என்று நீங்கள் இத்தனை பேரும் ஆயுர்வேத வைத்யம் பார்த்துக் கொள்வது என்று ஆரம்பித்தால் இத்தனை பேரையும் 'ட்ரீட்'பண்ண வைத்தியர்களே கிடைக்கமாட்டார்கள்!' மெடிகல் டிகிரி' என்றாலே இங்கிலீஷ் வைத்தியப் படிப்புத்தான் என்று வைத்துப் பாடத் திட்டத்தில் ஆயுர்வேதத்துக்கு இடமே தராமல் நெடுங்காலம் நடந்துவிட்டதுதான் இதற்குக் காரணம். சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன் நிலைமை கொஞ்சம் மாறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அப்போது சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி உண்டாயிற்று. அவர்கள் ஒரு பக்கம் காங்கிரஸின் ஸ்வந்திரப் போராட்டத்தை ஆதரிக்காமலிருந்தார்கள்; இன்னொரு பக்கம், 'எல்லாத் துறைகளிலும் Brahmin domination (பிராம்மணனின் ஆதிக்கம்) ஏற்பட்டு விட்டது; இதைக் குறைக்க வேண்டும்'என்ற கொள்கையுடையவர்களாக இருந்தார்கள். இப்படியிருந்தாலும் அவர்களிலும் புத்திமான்கள், விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நிதானமாகக் காரியம் செய்கிறவர்கள் இருந்தார்கள். அவர்களில் பனகால் ராஜா ஒருத்தர். மாம்பலத்தில் இருக்கிற பார்க் அவர் பேரில் ஏற்பட்டதுதான். (தியாகராஜ நகர் என்று மாம்பலத்தைச் சொல்கிறதுகூட ஜஸ்டிஸ் பார்ட்டியைச் சேர்ந்த பிட்டி தியாகராஜ செட்டி என்பவர் பெயரில்தான்.) பனகல் ராஜா மந்திரியானவுடன் மற்ற விஷயங்கள் ஒரு பக்கமிருந்தாலும், 'வெள்ளைக்காரனிடமிருந்து ஸ்வதேச ஜனங்களான நம்மிடம் கொஞ்சம் அரசாங்கப் பொறுப்பு வந்திருக்கிறது; எனவே ஸ்வதேசியமாக ஏதாவது பண்ண வேண்டும்' என்று நினைத்தார். அவர் ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல படிப்புள்ளவராதலால் நம்முடைய பழைய சாஸ்திரங்களை (சாஸ்திரமென்றால் தர்ம சாஸ்திரமில்லை;பழைய ஸயன்ஸ்கள், கலைகள் ஆகியவை பற்றிய சாஸ்திரங்களைத் தான்) ஆதரிக்க வேண்டுமென்ற அபிப்ராயமுள்ள

வராயிருந்தார். நமது தேச ஔஷதிகள்தான் நமக்கு ஒத்துக்கொள்வதென்றும் இதர முறைகள் விபரீதம் பண்ணுவதென்றும் அவர் அபிப்ராயப்பட்டு, 'இப்படி ஆயுர்வேதம் க்ஷீணித்து வருகிறதே!' என்று அதற்கு உயிர் கொடுப்பதற்காக மெட்றாஸில் ஆயுர்வேத வித்யாசாலை ஆரம்பித்தார். இன்னம் சிறிது காலம் அவர் ஆட்சி இருந்திருந்தால் நம்முடைய கணிதம், பௌதிகம், ஜ்யோதிஷம் முதலான சாஸ்திரங்களுக்கு ஏற்றம் கிடைக்கப்பண்ணியிருப்பார். நான் இப்படிச் சொல்வதால் எனக்கு patriotic spirit (தேச விச்வாஸ உணர்ச்சி) இல்லை என்று வேண்டுமானாலும் நினைத்துவிட்டுப் போங்கள். patriotism, ஸ்வதேசியம் என்றே சொல்லிக் கொண்டிருந்தவர்கள் ஆட்சிக்கு வந்தபின் ஸ்வதேச வித்யைகள், அறிவு (அறிவியல்) சாஸ்திரங்களை உயிர்ப்பிக்க என்ன செய்திருக்கிறார்கள்? இங்கிலீஷ்காரர் காலத்தில் இருந்ததைவிட இப்போதுதான் ட்ரெஸ், நடைமுறைகள், out-look என்கிறார்களே அந்த மனோபாவம் ஆகிய எல்லாவற்றிலும் ரொம்பவும் இங்கீலீஷ்காரன் மாதிரியே பண்ணிக்கொண்டு வருகிறார்கள்!ஆயுர்வேதம் ஏதோ ஜஸ்டிஸ் ஆட்சியிலாவது கொஞ்சம் கடாக்ஷம் பெற்று விட்டதால் அதை முன்னுக்குக்கொண்டு வருவதாக ஆமை வேகத்தில் என்னவோ செய்து, அல்லோபதியோடு ஆயுர்வேதத்தையும் சேர்த்து என்று G.C.I.M. பட்டம் கொடுக்கிற வரை கொண்டு வந்திருக்கிறார்கள்[*1]. ஆனாலும் மற்ற அநேக சின்ன விஷயங்களைத் தடபுடல் படுத்துவது போலன்றி அரை மனஸாகப் பண்ணுவதால் இது ஒன்றும் விசேஷமாகப் பிரசாரமாகவில்லை. ஜனங்களுக்கும் நிஜமான ஸ்வதேசப் பற்று இல்லாததில் பனகால் ராஜா ஸ்வல்பமாக ஆரம்பித்தது, நாமே ராஜாங்க உரிமை பெற்றவுடனே எவ்விதம் பிரகாசமடைந்திருக்க வேண்டுமோ அப்படி ஆகவில்லை. இருந்தாலும் வெகு ஸமீப காலமாக அறிவாளிகளிடையே கொஞ்சம் விழிப்பு ஏற்பட்டிருப்பதால் இப்போது நிலைமை சற்று நல்ல திருப்பமடையலாமென்று தோன்றுகிறது.

மூன்று காரணங்களுக்காக ஆயுர்வேதத்தை ஆதரிக்கலாம். ஒன்று, இதில் அநாசாரம் ரொம்பக் குறைவு. இரண்டு, நம் தேச சீதோஷ்ணம், நம் ஜனங்களின் தேஹவாகு ஆகியவற்றுக்கு என்றே ஏற்பட்டதாதலால் வேண்டாத விளைவுகளை உண்டாக்கமலிருப்பது. மூன்று, செலவும்

குறைச்சல் - இது முக்கியமான காரணம். இன்னொன்று கூட வாய்க்கே ஆரோக்கியமாயிருக்கும். ஓமம், திப்பிலி மாதிரி சரக்குகளுக்கும் அநேக மூலிகைகளுக்கும் ஒரு தனி ருசி, மணம், விளக்கெண்ணெய் மாதிரி வயிற்றைப் புரட்டுவது, நிலவேம்பு மாதிரிக் கசப்பாகக் கசப்பதிலெல்லாங்கூட அநேக அந்நிய பதார்த்தங்களிலிருக்கிற துர்வாடை கிடையாது.

ஆதியில் ரணசிகித்ஸை தெரியாமலிருந்த வெளிதேசங்களுக்கு நம்மிடருந்தே அது போயிருக்க அப்புறம், 'ஆயுர்வேதத்தில் ரணசிகித்ஸை கூட உண்டா?' என்று நாமே கேட்கிற அளவுக்குப் போனது போல எல்லாப் பழைய அறிவு சாஸ்திரங்களையும் நாம் கோட்டை விட்டால் ஸ்வதேசி ராஜாங்கம் என்று ஸந்தோஷப்படுவதற்கு எதுவுமில்லாமல் போகும். Tribal Dance -ஐ (ஆதிவாஸிகளின் நடனத்தை) அந்நிய தேசப் பிரமுகர்கள் வரும்போது ஆடிக்காட்டி விட்டால் இதுதான் ஸ்வதேசிய கலாசாரத்தைக் காப்பாற்றிக் கொடுப்பது என்று ஆகியிருக்கிறது!

மெடிகல் ஸயன்யுக்கு உரிய பூர்ண லக்ஷணத்தோடு தேஹத்தின் தன்மை, வியாதிகளின் தன்மை, அவை எப்படி ஏற்படுகின்றன, ஏற்படாமலே எப்படி தடுப்பது ஏற்பட்டுவிட்டால் அப்புறம் எப்படி குணப்படுத்துவது, மருந்துச் சரக்குகளின் தன்மை என்ன என்றெல்லாம் தீர்க்கமாய் அலசி உண்டான நம் ஆயுர்வேதம் அவசியம் ரக்ஷிக்கப்பட வேண்டியதாகும். தேஹ ரக்ஷையைத் தருகிற அந்த சாஸ்திரத்துக்கே வியாதி பிடித்து மெலிய வைக்ககூடாது! மெடிகல் ஸயன்ஸாகப் பூர்ண ரூபத்தில் இருப்பதோடு மட்டுமின்றி, மற்ற ஸயன்ஸ்களும் இதில் கலந்திருப்பதை உத்தேசித்தும், இத்தனை ஸயன்ஸ்கள் இருந்த போதிலும், ஸயன்ஸ் என்றால் ஸமயாசாரத்துக்கு விரோதமாகத்தான் போக வேண்டுமென்றில்லாமல் நம் ஆசாரத்துக்கு ஏற்றதாகவும் ஆயுர்வேதம் இருப்பதால் அதற்கே ஆயுர் விருத்தியை நாம் உண்டாக்கித் தரவேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", "சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்" என்ற பழமொழிகள் ஆரோக்யமாயிருக்க வேண்டியதன் அவசியத்தைச் சொல்கிறவையே. கிராம வாழ்க்கையின் ஸுகாதாரமான

காற்றோட்டமும், எளிமையும் அநுஷ்டானங்களும் போய் நகர வாழ்க்கையின் பலவித நெரிசல்கள் ஏற்பட்டபின் வியாதிகள் அபரிமிதமாகப் பெருகி வருகின்றன. வைத்யத்தோடு ஈஸ்வரனைப் பிரார்த்தித்துத்தான் ஸரி செய்யணும். தெய்வ ஸம்பந்தமான பாராயண நூல்கள் பலவற்றிலும் 'பலச்ருதி'யில் "ரோகார்த்தீ முச்யதே ரோகாத்"[*2] என்பது போல ரோக நிவ்ருத்தியை ஒரு பலனாகச் சொல்லியிருப்பதால் மத ரக்ஷணைக்காகவே தேஹ ரக்ஷணையும் நம் நிலையில் அவசியந்தான் என்று தெரிகிறது. நம்முடைய கலாசாரத்தோடு ஒட்டிப்போகிற நம்முடைய பிராசீன வைத்ய சாஸ்திரப்படியே இந்த ரக்ஷணையைப் பெற்று எல்லோரும் ஸௌக்யமாய் வாழவேண்டும்.

[*1]1958-ல் இருந்த நிலையைக் கூறியது.

[*2] 'விஷ்ணு ஸஹஸ்ரநாம' பலச்ருதி. பலச்ருதி என்பது நூற்பயன்களைக் கூறும் பகுதியாகும்.

15-தநுர்வேதம்

15.1-ஏற்படக் காரணம்

ஆயுர்வேதம் சரீர பலத்தைத் தருவதற்காக ஏற்பட்டது. சரீர பலத்தைக் கொண்டு சண்டை போடுவதை ஒரு சாஸ்த்ரமாக விதிமுறைகளில் அடக்கித் தருவது தநுர்வேதம்.

அஹிம்ஸையும் ஸர்வ ஜன ப்ரேமையுந்தான் 'ஐடியல்' என்றாலும் ஸர்வ காலத்திலும், ஸர்வ தேசங்களிலும் ராஜ்யாதிபத்யத்தை விஸ்தரித்துக் கொள்கிற ஆசை, அதற்காகப் படையெடுப்பது, இரண்டு கட்சிகள் யுத்தம் பண்ணிக்கொள்வது என்றெல்லாம் நடந்து வந்திருப்பதால் போர்க் கலையையும் நியதிகளுக்குக் கட்டுப்பத்தி, ஒருத்தனுக்குக் ஆயுதப் பிரயோக முறைகளைச் சொல்லிக் கொடுப்பதற்கும், ஆயுதங்களைச் செய்வதற்குச்

சொல்லிக் கொடுப்பதற்கும் ஒரு சாஸ்த்ரம் தேவைப்படுகிறது. இதுவே தநுர்வேதம்.

வேதத்திலேயே தேவாஸுர யுத்தங்களைப் பற்றி வருகிறது. இந்த்ரன் வ்ருத்ராஸுனை வதம் பண்ணினது தான் தர்மம் அதர்மத்தை ஜயிப்பதற்குப் பெரிய ரூபமாக வேதத்தில் வர்ணித்திருப்பது. எந்த ஸ்வாமியைப் பார்த்தாலும் அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணியே அந்த ஸ்வாமிக்குக் கீர்த்தியும், அதை வைத்தே பெயர்களும் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். திரிபுர ஸம்ஹாரம், ஜலந்தராஸுர வதம், மது-கைடப வதம், கஜமுகாஸுர ஸம்ஹாரம், தாரகாஸுர பத்மாஸுர வதம், மஹிஷாஸுர வதம், சண்டமுண்ட ஸம்ஹாரம், பண்டாஸுர ஸம்ஹாரம், ராவண வதம், கம்ஸ வதம், நரகாஸுர வதம், கௌரவ ஸம்ஹாரம் என்றிப்படி ஈஸ்வரன், மஹாவிஷ்ணு, பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர், அம்பாள், ராம க்ருஷ்ணாதி அவதாரங்கள் என்று எந்த ஸ்வாமியைப் பார்த்தாலும் அஸுர ராக்ஷஸர்களோடு யுத்தம் பண்ணி ஜயித்ததுதான் அவர்களுடைய விசேஷப் பெருமையாயிருக்கிறது. புராரி, த்ரிபுராரி, முராரி, மஹிஷாஸுரமர்த்தினி என்று பெயர்கள் ஏற்பட்டிருப்பதும் இன்னாரை சத்ருவாகக் கொண்டு ஜயித்தார்கள் என்பதால் ஏற்பட்டதுதான். 'அரி' என்றால் சத்ரு. (த்ரி) புரங்களின் சத்ருவானதால் பரமேச்வரனுக்கு (த்ரி) புராரி என்று பேர். காமாரி, காலாரி, கஜாரி என்றெல்லாமும் ஈஸ்வரனுக்குப் பெயர்கள் - காமன், காலன், கஜாஸுரன் ஆகியவர்களைக் கொன்றதனால். (பிள்ளையார் வதைத்தது கஜாமுகா ஸுரனை;தாருகாவன ரிஷிகள் ஆபிசார யஜ்ஞத்தில் உண்டாக்கி அனுப்பிய அனுப்பிய கஜாஸுரனைப் பரமேச்வரனே வதம் செய்தார்.) முரன் என்று சத்ருவைக் கொன்றதால் கிருஷ்ணருக்கு முராரி என்று பெயர். 'மர்த்தனம்' என்றால் அப்படியே தொகையலாக (துவையலாக) ப் பிசைந்த மாதிரி சத்ருவை ஹிம்ஸித்து ஸம்ஹாரம் பண்ணுவது. காளிங்கன் மேல் நர்த்தனம் பண்ணியே இப்படி மர்த்தனம் பண்ணி, அப்புறம் 'பிழைத்துப் போ'!என்று அவனை விட்டிருக்கிறார் க்ருஷ்ண பரமாத்மா. 'மாதவன்'என்பதற்குப் பல அர்த்தங்களில் ஒன்று மது என்ற ராக்ஷஸனைக்

கொன்றவர் என்பது. 'மதுஸூதனன்' என்றும் அதனால்தான் பெயர். 'கேசவன்' என்பதற்கும் ஒரு அர்த்தம், கேசி என்ற அஸுரனைக் கொன்றவர் என்பது.

பிற தேச மைதாலஜிகள், `இலியட்'மாதிரியான பெரிய காவியங்களிலும் யுத்தம்தான் முக்யமாயிருக்கிறது.

"தர்மத்துக்காக யுத்தம் பண்ணு" என்று அர்ஜுனனை ஆண்டியாகப் போகாமல் தடுத்து பகவான் அநுக்ரஹித்த கீதைதான் இன்று ஞான நூல்களிலெல்லாம் சிகரமாயிருக்கிறது.

சரித்திரத்தைப் பார்த்தாலும் சந்த்ரகுப்தன், ராஜராஜன், ஸீஸர், நெப்போலியன் என்று ரொம்பவும் கொண்டாடப்படுபவர்களெல்லாம் பெரிய பெரிய யுத்தங்கள் செய்து ஸாம்ராஜ்யத்தை விஸ்தாரம் செய்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

காவியங்களும் இலக்கியங்களும் போற்றுகிற கதாநாயகர்களும் வீரதீர பராக்ரமசாலிகளாகவே இருக்கிறார்கள். மஹாவீரனாக, ஜயசீலனாக இருக்கிறவனைக் கொண்டாடுவதற்காகவே 'பரணி' என்று ஒரு இலக்கிய வகை ஏற்பட்டிருக்கிறது.

15.2-தண்டநீதி

இந்த வ்யவஹார லோகத்தில் தர்மத்தின் பொருட்டே தண்டநீதியும் அவசியமாகிறது. பிரஜைகள் பண்ணும் தப்புகளைத் தண்டிக்க போலீஸ், அந்நிய ராஜ்யங்களின் படையெடுப்பைத் தண்டிக்க மிலிடரி என்று இரண்டு விதத்தில் தண்டப் பிரயோகம் செய்ய வேண்டியதாகிறது. 'தண்டம்' என்பது ஒரு குச்சி. உபநயன ஸம்ஸ்காரமுள்ள மூன்று வர்ணத்தாருக்குமே ஆத்ம ஜயம், இந்த்ரிய ஜயம், மனோ ஜயம் செய்துகொள்வதற்காகத் தண்டம் உண்டு. இது உட்பகை. 'ஷட்-ரிபு' என்று உள்ளத்துக்கு ஆறு சத்துருக்கள் - கர்மம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்று இவற்றை ஜயிக்கணும். இவற்றைத் தவிர ராஜாவானவன் வெளியிலே தர்மத்தின் பகைவர்களாயுள்ள external enemies என்கிற குற்றவாளிகள், திருடர்கள், கொலைக்காரர்கள், அந்நிய தேசத்திலிருந்து படையெடுக்கிற ஸேனா வீரர்கள்

ஆகியவர்களையும் ஜயித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டியவனாயிருக்கிறான். இந்த வெளிப் பகையிலேயும் 'உள்', `வெளி'என்று இரண்டு!ராஜாவின் ஸ்வதேசத்திலேயே கலகம், கொலை முதலியவை செய்கிறவர்கள் 'உட்பகை'. அந்நிய ராஜ்ய ஆக்ரமிப்புக்காரர்கள் 'வெளிப்பகை'. அவற்றை அடக்குவதற்கு symbol -ஆக insignia -வாக (சின்னமாக) ராஜாவுக்கு ஒரு தண்டம் உண்டு. 'செங்கோல்' என்பது அதுதான். செம்மை என்பது நியாயத்தைக் குறிப்பது. ஆகையால் 'செங்கோல்' என்பது தர்ம நியாயமாக தண்டிப்பதையே குறிக்கும்; வெறும் க்ரூரத்தனத்தால் தண்டிப்பதையல்ல. தண்டம் என்பதிலிருந்துதான் தண்டனை என்று வந்திருக்கிறது. கண்டித்து அடக்கி வைப்பதைத் தண்டிப்பது என்கிறோம். உட்பகை, புறப்பகைகளைத் தண்டிப்பதில் க்ஷத்ரியனுக்கு என்று தநுர்வேதம் ஏறபட்டிருக்கிறது.

சண்டையும் ஹிம்ஸையும் வ்யவஹார உலகத்தில் அவசியமாயிருக்கிற தென்பதற்காக எல்லாரும் தேஹ பலத்துக்கு முக்யம் தந்து அதையே பெரிசாக வளர்த்துக் கொண்டு யுத்த அப்யாஸம் பண்ணவேண்டும் என்று நம் பூர்விகர்கள் வைக்கவில்லை. க்ஷத்ரிய ஜாதி என்கின்ற ஒன்றையே இதற்கு அதிகார புருஷர்களாக வைத்தார்கள்.

எல்லாக் கலைகளையும், சாஸ்திரங்களையும் கற்றறிந்து அந்தந்த ஜாதியாருக்கு உரியவைகளை அவரவருக்குக் கற்றுக் கொடுத்தது பிராம்மணன்தான். அவனுக்கு ஏற்பட்ட ஆறு தொழில்களில் ஒன்று இந்த அத்யாபனம், அதாவது teaching ஆகும். ஆனால் இவன் மற்ற ஜாதியாருக்கு யுத்தம், வியாபாரம் முதலிய எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கலாமே தவிர, தானே யுத்தம் பண்ணப்படாது. வியாபாரம் பண்ணப்படாது. வேதத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்க வேண்டியதே இவனுக்கான ஸ்வதர்மம். பரசுராமர், த்ரோணர் போலத் தாங்களே யுத்தம் பண்ணின பிராம்மணர்கள் exception-கள்தான் (விதிவிலக்கானவர்கள்தான்) . அவர்களை எதிராளிகள் இதற்காக ரொம்பவும் மட்டம் தட்டிப் பேசியிருப்பதையும் பார்க்கிறோம்.

ஜெர்மனியில் ஸகல ஜனங்களுக்கும் யுத்தப் பயிற்சி தந்ததில்தான் அவர்கள் மதோன்மத்தமாகி World War -ஐ உண்டாக்கிவிட்டார்கள். நம் சாஸ்திர ஏற்பாடு

இப்படி அல்ல. அதற்காக, அஹிம்ஸை என்று ‘ஓவ’ ராகப் போய் நம்மை பயந்தாங்கொள்ளிகளாகவும் தோற்றாங்குள்ளிகளாகவும் வைக்காமல் க்ஷத்திரியர்களுக்கு என்று தநுர்வேதத்தைத் தந்திருக்கிறார்கள்.

மற்ற அரசர்களால் தன்னுடைய தேசத்துக்கு ஹிம்ஸை நேரும்பொழுது செய்ய வேண்டிய தண்டோ பாயத்தைச் சொல்லுவது தநுர்வேதம். அதன்படி ஒரு அரசனானவன் எப்பொழுதும் சண்டை செய்யத் தயாராக இருக்க வேண்டும். இப்போது ராஜாங்கத்தில் சொல்லிக் கொள்கிறார்கள் - சீனா, பாகிஸ்தான் யார் வாலாட்டினாலும், `எங்களிடமும் military preparedness (ராணுவத் தயார் நிலை) இருக்கிறது’என்கிறார்கள். வாஸ்தவமாகவே தயாராயிருப்பது ஒன்று அப்படியில்லாவிட்டாலும் எதிரிக்கு தைர்யம் கொடுத்துப் போகக்கூடாதென்பதற்காகவும், நம் ஜனங்களே demoralise ஆகிவிடக்கூடாதென்பதற்காகவும் தயாராயிருப்பதாகச் சொல்லிக் கொள்வது இன்னொன்று. இது diplomacy என்ற ராஜ தந்திரத்தின் கீழ் வந்துவிடும். இரண்டு விஷயங்கள்:நாம் ஸேனைகளையும், ஆயுத ‘ஸ்டாக்’ கையும் ரொம்ப ஜாஸ்தி ஆக்கிக் கொண்டாலும் அப்படிச் சொல்லிக் கொள்ளக் கூடாது. அப்படி நமக்கு யுத்த வெறி அதிகம் என்று மற்றவர்கள் நினைக்கும்படி ஆகும். அதேமாதிரி, நமக்கு ஸேனாபலம், ஆயுதக் கையிருப்பு போதாவிட்டால் இதையும் சொல்லிக் கொள்ளக்கூடாது. சொன்னால் இது மற்றவர்களைப் படையெடுக்கத் தூண்டி விடுவதாகும். இந்த ‘டிப்ளமஸி’ ஸமாசாரங்கள் உபவேதத்தில் இன்னொன்றான அர்த்த சாஸ்த்ரத்தில் வருபவை.

தநுர்வேதப்படி ஒரு ராஜாவானவன் எப்போதும் யுத்தத்துக்குத் தயாராக இருக்க வேண்டும். துஷ்ட ராஜாக்கள் தன்னுடைய தேசத்தில் புகுந்து அலங்கோலம் பண்ணாமலிருப்பதற்காக அவன் அப்படி இருக்க வேண்டும். க்ஷத்ரியனான ராஜன் க்ஷத்ரிய வீரர்களைக் கொண்டே தேசத்தை இப்படி ரக்ஷிக்க கடமைப்பட்டிருக்கிறான்.

15.3-‘தநுர்‘ என்பது ஏன்?

ஆயுதங்கள் என்னென்ன. அவற்றை எப்படிப் பிரயோகம் பண்ணுவது என்பதே தநுர்வேதத்தில் முக்யமான விஷயம். இதற்கு ‘ஆயுர்வேதம்’ என்று பேர் இல்லாமல் ‘தநுர்வேதம்’ என்று ஏன் பேர் என்றால், தநுஸ்தான் ஆயுதங்களுக்குள் முக்யமானது. தநுஸ் என்றால் வில் என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

சுத்தி, கதை, சூலம் முதலியவற்றைக் கையிலே பிடித்துக் கொண்டு எதிரே கிட்டக்க இருப்பவனிடம் மட்டுமே யுத்தம் செய்யலாம். ஈட்டியைத் தூரத்திலிப்பவனிடமும் எய்து தாக்கலாமாயினும் அதோடு அந்த ஈட்டியே கைக்குத் திரும்பி வராமல் போனாலும் போய் விடும். தநுஸ் அப்படி இல்லை. அது கையைவிட்டுப் போகிறதில்லை. அதில் எத்தனை அம்பை வேண்டுமானாலும் பூட்டி, எய்து எத்தனையோ தூரத்தில் இருப்பவனையும் அடித்துத் தள்ளலாம். ஈட்டி நஷ்டம் மாதிரி இல்லை. அம்பு போவது. அம்பு ஈட்டிபோல அத்தனை பெரிசோ, கனமானதோ இல்லை. அது போகிறது பெரிய நஷ்டமில்லை. பலசாலியாக இருக்கிற ஒரு க்ஷத்ரியன் நூற்றுக்கணக்கான அம்புகளைக் கொண்ட அம்பறாத்தூணியை ஈஸியாகத் தோளில் தாங்கிக் கொண்டிருப்பான். ‘சரமாரி’ என்றே வார்த்தை இருக்கிறது - ஸுலபமாக, ஒரு அம்பு போனால் இன்னொன்று என்று மழை பெய்கிறமாதிரி விட்டுக் கொண்டேயிருக்கலாம். அத்தனை அம்புகளுக்கும் ஆதாரமாகப் பூட்டப்படும் தநுஸ் மாறாது.

15.4-அஸ்த்ரம் சஸ்த்ரம்

அஸ்த்ரம், சஸ்த்ரம் என்று ஆயுதங்கள் இரண்டு வகைப்படும். ஆயுதத்தின் சக்தி, அதைப் பிரயோகிக்கிறவனின் ஸாமர்த்யம் ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே சத்ருவை அடிப்பது சஸ்த்ரம். "எல்லா ஆயுதங்களுமே இப்படிப்பட்டவைதானே?" என்று தோன்றலாம். வாஸ்தவந்தான். தற்காலத்தில் ஆயுத சக்தி, அதைப் போடுகிறவனின் யுத்த தந்த்ரம் இந்த இரண்டு மாத்திரந்தான் யுத்தத்தில் வெளியாகிறது. ஆனால் முற்காலத்தில் இதோடு மந்த்ர சக்தியும் யுத்தத்தில் பிரயோஜனப்பட்டு வந்தது. மந்த்ர சக்தியோடு பிரயோகிக்கப்படும் ஆயுதமே அஸ்த்ரம். பெரிய ரிஷிகளாக அவதாரங்களாக, உத்தம புருஷர்களாக இருக்கப்பட்டவர்கள் மந்த்ரத்தைச் சொல்லி ஒரு தர்ப்பையை, புல்லைப் பிரயோகித்தால்கூட அது சத்ருவை ஸைன்யத்தோட கூண்டோடு அழிந்திருக்கிறது. ஆனாலும் பொதுவில் ஆயுதங்களிலேயே மந்த்ரங்களையும் சேர்த்து, அதாவது சஸ்த்ரங்களையே அஸ்த்ரங்தளாக்கித்தான் யுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த சஸ்த்ரங்களில் முக்கியமாயிருப்பதும் தநுஸ்தான். பிரம்மாவைக் குறித்த மந்திரசக்தி கொண்ட பிரம்மாஸ்த்ரம், விஷ்ணுவைக் குறித்த மந்த்ர சக்தியுடன் கூடிய நாராயணாஸ்த்ரம், பரமசிவனைக் குறித்த பாசுபதாஸ்த்ரம், இப்படியே தேவதைகளைக் குறித்த வருணாஸ்த்ரம், ஆக்நேயாஸ்த்ரம், கருடாஸ்த்ரம், நாகாஸ்தரம் என்கிறவைகளைப் புராண கதாபாத்ரங்கள் இந்த அஸ்த்ரங்களாக்கி விட்டதாகப் போட்டிருக்கிறது. இப்போது 'ஆட்டம் பாம் (ப்) 'போட்டவுடன் எத்தனை உத்பாதம் உண்டாயிற்றோ அதைவிட அதிகமாக இந்த அஸ்த்ர ப்ரயோகங்களின் போது உண்டானதாகப் புராணங்களிலிருந்து தெரிகிறது. "ஒரு ஆயுதத்தை வீசினானாம், உடனே ஆகாசம் வரை புகை எழும்பிற்றாம்! அக்னி ப்ரவாஹம் வந்து ஜலாசயங்கள் வற்றிற்றாம்!பட்சிகளே முதற்கொண்டு செத்து விழுந்ததாம்! கர்ப்பத்திலிருந்த பிண்டங்கூட சேதமாயிற்றாம்! இதெல்லாம் வெறும் புரளி" என்று புராண வர்ணனைகளை நம்பாமலிருந்தவர்களுக்கும் 'ஆட்டம் பாமி' ன் பவரும், ரேடியேஷனும் புராணத்தில் சொல்லியிருப்பது வாஸ்தவமாகவே இருந்திருக்கணும் என்ற

நம்பிக்கையை உண்டாக்கியிருக்கின்றன. ஒரு சின்னஞ்சிறிய அணுவைப் பிளப்பதால் பிறக்கும் சக்தியைவிட ஸகல ஸ்ருஷ்டிக்கும் பீஜமான மந்த்ர சப்தங்களைப் பிளப்பதில் உண்டாகும் சக்தி எவ்வளவோ அதிகமாகும்*.

ஒரு அஸ்த்ரத்துக்கு எதிராக இன்னொரு மந்திரத்தால் எதிர் அஸ்த்ரம் விடுவதுண்டு. இப்படி நாகாஸ்த்ரம் 'பவ'ரைக் காட்டாமல் நியூட்ரலைஸ் செய்வது கருடாஸ்த்ரம்; பாம்பை ஜயிப்பது கருடனில்லையா? அதனால் ஆக்நேயாஸ்தரத்துக்கு எதிர் வாருணாஸ்த்ரம்.

மந்த்ரசக்தி ஆயுத சக்தியைவிட எவ்வளவோ பெரிது என்பதாகக் காளிதாஸன் 'ரகுவம்ச'த்தில் திலீபன் வாய்மொழியாக அழகாகத் தெரிவிக்கிறான். குலகுருவான வஸிஷ்டரின் ஆச்ரமத்துக்கு ஸூர்யகுல ராஜனான திலீபன் போகிறான். அவர் அவனிடம் ராஜ்யத்தின் க்ஷேமத்தைப் பற்றி விசாரித்திக்கிறார். அதற்கு அவன், "தாங்கள் குல குருவாக இருந்து ஆசீர்வாதம் பண்ணிக் கொண்டிருக்கும் போது ராஜ்யத்தின் க்ஷேமம் எப்படிக் குறைவுபடும்? என்னுடைய அம்பு ஏதோ நேரே இருக்கிற சில பேரை அடிக்கிறது என்றால் தங்களுடைய மந்திரமோ எங்கெங்கேயோ இருக்கிற கெட்ட சக்திகளையெல்லாம் அடித்து, என் அம்பையே பிரயோஜனமில்லாமல் பண்ணி விடுகிறது. ராஜ்யம் நன்றாயிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என் க்ஷத்ர பலமில்லை. அந்த பலத்துக்கும் ஆதாரமாயிருக்கிற தங்களுடைய பிரம்ம தேஜஸ்தான்" என்கிறான்.

அஸ்த்ரத்தில் சஸ்த்ரம், மந்த்ரம் இரண்டும் சேர்ந்திருக்கிறது. க்ஷத்ரிய பலம், பிரம்மரிஷிகள் கண்டுபிடித்த மந்திரத்தின் சக்தி இரண்டும் சேர்ந்திருப்பதை நினைக்கும்பொழுது ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு ராஜாவும், பிராம்மணோத்தமர் ஒருவரும் சேர்ந்தாற்போல் ஒரே ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து கொண்டு ஆட்சி பண்ணினார்கள். அந்த ராஜாவின் பேர் அச்சுதப்ப நாயக். தஞ்சாவூரை ஆண்ட நாயக் வம்ச ராஜாக்களில் இரண்டாவதாக வந்தவன் அவன். அவனுடைய பிதா ஸேவப்ப நாயக். ஸேவப்பன் இந்த வம்சத்துக்கு முதல் ராஜாவாகத் தஞ்சாவூரில் புது ராஜ்யம் ஸ்தாபிப்பதற்குக் காரணமாயிருந்தவர் கோவிந்த தீக்ஷிதர் என்ற மஹான். அந்த

பிராம்மணோத்தமர் சொன்ன ப்ரகாரமே செய்துதான் ஸாமான்ய தசையில் இருந்த ஸேவப்பன் தஞ்சாவூரில் ராஜ்யம் ஸ்தாபித்து ராஜாவானது. ஸேவப்பனின் ஆயுஸ் முடிந்த பிற்பாடும் கோவிந்த தீக்ஷிதர் ஜீவ்யவந்தராயிருந்தார். ஸேவப்னின் புத்ரனான அச்யுதப்பன் அவரைப் பிரதம மந்திரியாக மட்டுமின்றி. 'குல கூடஸ்த புரோஹிதர்' என்று கௌரவம் கொடுத்து, உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருந்தான். எத்தனை உயர்ந்த ஸ்தானம் என்றால், 'அர்த்தாஸனர்'என்பதாக அவரை ஸிம்ஹாஸனத்திலேயே தன் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டிருந்தான். இந்தக் காட்சியைப் பார்த்து விட்டு ஒரு கவி சொன்னார்:

த்ரிநாமாத்யந்த நாமாநௌ மஹீக்ஷித் தீக்ஷிதாவுபௌ |
சஸ்த்ரே சாஸ்த்ரே ச குசலௌ ஆஹவேஷு ஹவேஷு ச ||

பகவானுக்கு த்ரிநாமா - நாம த்ரயம் என்ற மூன்று பெயர்கள் - முக்யம். அவற்றைச் சொல்லித்தான் ஆசமனம் பண்ணுவது, அச்யுத, அனந்த, கோவிந்த என்பதே அந்த நாமத்ரயம். இதில் முதல் ('ஆதி') நாமா 'அச்யுத'. முடிவு ('அந்த') நாமா 'கோவிந்த'. ஒரே ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிற இரண்டுபேரில் 'மஹீக்ஷித்' அதாவது பூபாலனம் பண்ணும் ராஜாவுக்கு 'ஆதி' நாமம் - **அச்யுதப்ப நாயக்**; இன்னொருத்தரான தீக்ஷிதருக்கு 'அந்த' நாமம் - கோவிந்த தீக்ஷிதர். இதிலே முதலாமவன் சஸ்த்ரத்தில் கெட்டிக்காரன்; இரண்டாமவர் சாஸ்த்ரத்தில் கெட்டிக்காரர். அவன் 'ஆஹவம்' என்ற யுத்த தந்த்ரத்தில் பெயர் வாங்கினவன்; இவர் 'ஹவம்' என்னும் யஜ்ஞ அநுஷ்டானத்தில் சிறந்தவர்:

சஸ்த்ரே சாஸ்த்ரே ச குசலௌ ஆஹவேஷு ஹவேஷு ச |

சஸ்த்ர சக்தி வெறும் முரட்டுத் தேஹபலமாய் மட்டுமில்லாமல் த்வேஷ குணத்தையும் கோபத்தையும் மட்டும் காட்டுவதாயில்லாமல், சாஸ்த்ரத்தோடு, தர்ம நெறிகளோடு சேர்ந்திருக்க வேண்டும். தெய்வ சக்தியும், ஞான சக்தியும் கூடிய பிரம்ம தேஜஸையே க்ஷத்ரிய பலம் ஆதாரமாக கொள்ள வேண்டும். இதெல்லாம் அர்த்த சாஸ்திரத்தில் வரும் விஷயங்கள். ராஜாவின்

புரோஹிதரையும் மந்திரிகளையும் பற்றி சொல்லும்போது இந்த விஷயங்கள் கூறப்பட்டிருக்கும்.

சஸ்த்ரம் என்பது தெய்வபலம் பெற்ற அஸ்த்ரமாவது பெரும்பாலும் தநுர்பாணங்களை வைத்துத்தான் என்று சொன்னேன். எத்தனையோ ஆயுதங்கள் இருக்கிறபோது யுத்த அப்யாஸ வித்யைக்கு ஏன் தநுர்வேதம் என்று பேர் இருக்கிறது என்பதற்குக் காரணம் தநுஸுக்கு உள்ள இப்படிப்பட்ட சிறப்புகள்தான்.

---

*சப்தம்-ஸ்ருஷ்டி குறித்த விளக்கம் "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற உரையில் "ஒலியும் படைப்பும்" என்ற உட்பிரிவில் உள்ளது.

15.5-தெய்வங்களின் வில்கள்

எல்லா ஸ்வாமிக்கும் தநுஸ் உண்டு. அந்த தநுஸுக்கு என்று ஒரு தனிப்பெயரும் உண்டு. பரமசிவன் கையில் வைத்திருக்கிற தநுஸுக்குப் 'பிநாகம்'என்று பெயர். அதனால் அவருக்கே 'பிநாகபாணி'என்று ஒரு பேர். த்ரிபுர ஸம்ஹாரத்தில் அவர் மேருவையே தநுஸாக வளைத்தார். மஹாவிஷ்ணுவுக்கு 'சார்ங்கபாணி'என்று ஒரு பேர் சொல்கிறார்கள். பலர் இப்படிப் பேர் வைத்துக் கொள்கிறார்கள். 'ஸ்ரீரங்கம்'மாதிரி 'சாரங்கம்'என்று நினைத்துக் கொண்டு 'சாரங்க பாணி'என்கிறார்கள். அது தப்பு. இதிலே 'ரங்கம்'எதுவுமில்லை. 'சார்ங்கம்'என்பதே சரி;சாரங்கம் அல்ல. சார்ங்கம் என்பது மஹாவிஷ்ணுவின் கையில் இருக்கப்பட்ட வில். பொதுவிலே சங்க-சக்ர-கதா-பத்ம ஆயுதங்களைச் சதுர்புஜங்களில் தரித்தவர் என்று சொன்னாலும், இதுகளைப் சார்ங்கம் என்ற வில்லும் அவருக்கு முக்யம். 'பஞ்சாயுத ஸ்தோத்ரம்'என்று அந்த நாலோடு இந்த ஐந்தாகவும் சேர்த்தே ஸ்தோத்ரம் இருக்கிறது*1. விஷ்ணுஸஹஸ்ரநாமக் கடைசி ஸ்லோகத்திலும்

சார்ங்கத்தைச் சேர்த்து ஐந்து ஆயுதங்களே சொல்லியிருக்கிறது. ***"தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்*** "நன்றாக வர்ஷிக்கட்டுமென்று ஆண்டாள் திருப்பாவையில் பாடியிருக்கிறாள்.

தேவர்கள் மஹாவிஷ்ணுவுக்கும் பரமேஸ்வரனுக்கும் பலப் பரீ¬க்ஷ பார்க்க நினைத்தார்கள். அவர்களும் சரியென்று விளையாட்டாக உடன்பட்டு தநுர்யுத்தம் பண்ணிக் கொண்டார்கள். அப்போது மஹாவிஷ்ணு சிவனுடைய வில்லைக் கொஞ்சம் பண்ணிவிட்டார். கொஞ்சம் பின்னமாய்ப் போன இந்த சிவ தநுஸ் விதேஹ ராஜாக்கள் வம்சத்திலே வந்து கடைசியாக ஜனகரிடம் இருந்தது. இதைத்தான் 'தநுர்பங்கம்'என்று ராமர் உடைத்து சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். (தநுர்பங்கம்) பண்ணின இடம் பீஹாரில் 'தர்பங்கா'என்று இருக்கிறது) ;அப்புறம் அவர்கள் அயோத்திக்குத் திரும்புகிற வழியில் பரசுராமர் ஆக்ரோசமாக எதிர்ப்பட்டு ஒரு வில்லை ராமர் முன்னாடி நீட்டி, "c ஏதோ சொத்தை வில்லை மிதிலையில் உடைத்துப் பெரிய பேர் வாங்கிவிட்டாயே!இப்போது இந்த தநுஸை நாண் பூட்ட முடிகிறதா பார். சிவ விஷ்ணுக்களின் தநுர் யுத்தத்தில் பழுதாகாமலிருந்த நாராயண தநுஸ் இதுதான்"என்றார். ராமர் அந்த தநுஸையும் அலாக்காக நாண் பூட்டி பரசுராமருடைய அவதார சக்தியையே அதற்கு லக்ஷ்யமாய் வைத்து க்ரஹித்துக் கொண்டுவிட்டார் - என்று ராமாயணத்தில் வருகிறது.

ராமச்சந்திரமூர்த்தி என்று நினைத்த மாத்ரத்தில் கோதண்டபாணியாகத்தான் தோன்றுகிறது. க்ருஷ்ணாவதாரத்தில் வில் வைத்துக்கொள்ளாவிட்டாலும் தன்னுடைய ஆத்ம ஸகாவான அர்ஜுனனுக்கு வில்லாளி என்பதாகவே ஏற்றம் கிடைக்கும்படி அநுக்ரஹித்திருந்தார். 'காண்டீவம்'என்பது அவனுடைய வில்லின் பெயர். 'காண்டீபம்'என்று சொல்வது தப்பு.

ஸாக்ஷ£த் பராசக்தியும் ராஜராஜேச்வரியாக இருக்கும்போது இக் தநுஸ் என்பதாகக் கரும்பு வில் வைத்துக் கொண்டிருக்கிறாள். மன்மதனுக்கும் இதுவேதான் ஆயுதம்.

தநுஸுக்கு இப்படி விசேஷமிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலே, இத்தனை தெய்வங்களாயும் ஆகியிருக்கிற நிர்குணப் பிரம்ம வஸ்துவை அடைவதற்கும்

உபநிஷத்திலேயே தநுர்வித்தை அப்யாஸத்தைத்தான் உபமானமாய் சொல்லியிருக்கிறது. சிஷ்யனைப் பார்த்து குரு, "ஸௌம்யா! உபநிஷத்திலேயிருக்கிற மிகப்பெரிய அஸ்திரமான, மஹாஸ்த்ரமான வில்லை எடுத்துக் கொண்டு அதிலே உபாஸனையாலே நன்றாகச் சாணை தீட்டி கூராயிருக்கிற அம்பைப் பூட்டி, அக்ஷரமான குறியை நோக்கி அதுவாகவே ஆகிவிடும் பாவனையோடு விடு"என்பதாகச் சொல்லியிருக்கிறது*2. இங்கே உபநிஷத்திலிருக்கிற மஹா அஸ்த்ரம் என்பது ஓங்காரம். அம்பு என்கிறது ஜீவனையேதான். குறியாகச் சொன்ன 'அக்ஷரம்'என்பதற்கு 'அழிவில்லாதது'என்று அர்த்தம்:பரப்பிரம்மம் தான் அது. ஜீவன் ஸாதனையால் தன் சித்தத்தை ஒரு முகமாகக் கூர் பண்ணி ஓங்காரத்தில் அதைப் பூட்டி, அதாவது ஓங்கார த்யானத்திலே ஈடுபட்டு அப்படியே பிரம்மத்தில் சேர்ந்து, அம்பு லக்ஷ்யத்தில் அப்படியே ஒன்றாய்ப் பதிந்து விடுகிற மாதிரி அத்வைதமாகிவிட வேண்டுமென்று அர்த்தம். இங்கே ஓங்காரம் தநுஸாகவே உவமிக்கப்படுகிறது.

----

*1. 'பஞ்சாயுத ஸ்தோத்ர'த்தில் பத்மத்துக்குப் பதில் 'நந்தகி'எனப்படும் கத்தி கூறப்படுகிறது. விஷ்ணு ஸஹஸ்ரநாமக் கடைசி ஸ்லோகத்திலும் சங்கு, நந்தகி எனும் வாள், சக்ரம், சார்ங்கவில், கதை ஆகியனவே கூறப்படுகின்றன.

*2. முண்டகோபநிஷத்:2.2.3

15.6-மூவகை ஆயுதங்கள்

சஸ்த்ரம் மூன்று வகைப்படும். முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம் என்பது அந்த மூன்று. விட்டுப் போவது முக்தம். 'முச்'என்ற தாதுவுக்கு விடுதல் என்று அர்த்தம்;அதிலிருந்து வந்தது முக்தம். ஸம்ஸாரத்தை நிரந்தரமாக விட்டுப் போவதுதான் 'முக்தி'. 'மோக்ஷம்'என்பதும் 'முச்'என்பதின் இன்னொரு ரூபமான 'மோச்'என்பதிலிருந்து derive ஆனதுதான். விடுதல் என்பதைச் சொல்வதாலேயே விடுதலை, வீடு என்ற பெயர்கள் தமிழில் முக்தியைச்

சொல்கின்றன. சிப்பியிலிருந்து தெறித்து விடுபடுவதாலேயே 'முக்தம்'என்று நவமணிகளில் ஒன்றுக்குப் பேர். முத்து என்கிறோம். முக்தியைத் தமிழ் நூல்களில் முத்தி என்றே சொல்லியிருக்கும். ஆயுதங்களில் கையை விட்டுப் போகிறவை, அதாவது கையிலிருந்து எறிகிறவை முக்தம். கல்லை iC அடித்தால் அது முக்தம்தான். பாணங்கள் முக்தமே. அமுக்தம் என்பது கையை விட்டுப் போகாமல் பிடித்துக்கொண்டே அடிப்பது - கத்தி, சூலம், வேல், ஈட்டி இவை இப்படித்தான். ரொம்பவும் உக்ரமான யுத்தத்தில் வேலையும் ஈட்டியையும்கூட அப்படியே தூக்கி எறிந்து தாக்குவதுண்டு. தநுர் பாணங்களில் தநுஸ் எப்போதும் அமுக்தமாகவே இருந்தகொண்டு பாணங்கள் முக்தமாயிருக்கின்றன. பாசம் முதலிய ஆயுதங்கள் உண்டு. பாசம் என்பது நுனியில் சுருக்குப் போட்ட கயிறு. அம்பாள் விக்ரஹங்களிலெல்லாம் பாசம், அங்குசம் என்பதில் இது இடது மேல் கையிலிருக்கும் பிள்ளையாரின் மேல் பக்க இடக்கையிலும் இருக்கும். இதிலே ஒரு நுனியைக் கையிலே அழுத்தமாக வைத்துக்கொண்டே இன்னொரு நுனியை ரொம்ப தூரத்துக்கு முக்தமாக iC சத்ருவின் குரல் வளையில் சுருக்குப் போட்டு இழுத்துவர முடியும். இது முக்தாமுக்தம். சில சக்ரங்கள் பண்ணப்பட்டிருக்கும் 'டெக்னிக்'கினாலும் அவற்றை ஒருத்தன் எய்கிற ஸாமர்த்யத்தாலும் சத்ருவை 'அட்டாக்'பண்ணிவிட்டு, போன டைரக்ஷனிலேயே திரும்பி, எய்தவனின் கைக்கே திரும்பி வந்துவிடும். இதுவும் முக்தாமுக்தம்தான். முதலில் விட்டுவிட்டான்;ஆனால் அப்புறம் கைக்கு வந்து விடுகிறது. Boomerang என்ற ஆயுதம் இப்படித்தான் குறியை அடித்தபின் விட்ட இடத்துக்கே திரும்பிவிடும் என்கிறார்கள்.

மஹா மந்திரங்களை எந்த பாணத்தில் வேண்டுமானாலும் சேர்த்து அஸ்திரமாக்குவது என்றில்லாமல் அதற்கென்றே ஒரு பாணத்தை அஸ்திரமாக அந்த மந்த்ர தேவதையிடமே பெற்ற புராண புருஷர்கள் உண்டு. இவர்கள் இப்படிப்பட்ட திவ்யாஸ்தரத்தைப் பிரயோகம் பண்ணும்போது அது லக்ஷ்யத்தை அடைந்து அடித்த பிறகு திரும்பவும் தங்கள் கைக்கே திரும்பி வருவதற்கும் மந்திர உச்சாரணம் பண்ணி வரவழைத்துக் கொண்டு விடுவார்கள். இல்லாவிட்டால் இன்னொரு தரம் அந்த அஸ்த்ரத்தை

ப்ரயோகம் பண்ணுவதற்கு இடமில்லாமல் போய்விடுமல்லவா?விட்ட அஸ்த்ரத்தைத் திரும்ப வாங்கிக் கொள்வதற்கு 'உபஸம்ஹாரம்'என்று பெயர். அது தெரியாதவன் திவ்யாஸ்த்ரங்களை விடப்படாது என்று ரூல். அஸ்த்ரத்தின் மஹா வீர்யம் தெரியாமல் ஒருத்தன் விட்டுவிட்டு, அது எதிர்பார்த்ததற்கு மேல் உத்பாதம் பண்ணுகிறதென்றால் அப்போது அவன் அதைத் திரும்ப வாங்கிக் கொண்டுவிட வேண்டும் என்றே லோக க்ஷேமத்தை உத்தேசித்து இப்படி ரூல் செய்திருக்கிறது. தற்காலத்தில்தான் இப்படி தர்மக் கட்டுபாடுகளே இல்லாமல், 'கண்டத்துக்குக் கண்டம்'ஏவுவோம். Inter Continental என்று பயங்கரமான அணுசக்தி குண்டுகளைக் கண்டுபிடித்து ஸ்டாக் பண்ணி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

15.7-படை வகைகள்

ரஜ-கஜ-துரக-பதாதி என்று ஸைன்யத்தில் நாலு வகை. இப்படிப் படையானது நாலு அங்கம் கொண்ட தாயிருப்பதால்தான் 'சதுரங்க ஸைன்யம்'என்பது. விளையாட்டுக்களில் ஒன்றுக்கும் சதுரங்கம் என்று பேர் இருக்கிறது. சொக்கட்டான், Chess என்பதெல்லாம் அதுதான், இதிலும் நால்வகைப் படை மாதிரியே காய்களை வைத்துக்கொண்டு அவற்றை இந்த ரீதியில்தான் நகர்த்தலாம் என்று விளையாட்டு போவதால் சதுரங்கம் என்று பேர் ஏற்பட்டிருக்கிறது.

ரத-கஜ-துரக-பதாதி என்பதில் ரதம் தேர்ப்படை, கஜம் யானைப்படை, துரகம் குதிரைப்படை, பதாதி காலாட்படை. ரதத்திலிருப்பவன் ரதத்திலிருப்பவனோடு, இப்படியே ஒவ்வொருவிதப் படையிலுமிருப்பவன் அதையே சேர்ந்த எதிராளியோடுதான் யுத்தம் பண்ண வேண்டுமென்று விதி.

இந்த நாளில் 'ஆர்மி'க்கு'டிவிஷன்'என்று பிரிவு இருக்கிற மாதிரி அந்த நாளிலும் கணக்கு இருந்தது. இத்தனை அ[a]க்ஷௌஹிணி கொண்ட ஸேனை என்பார்கள். ஒரு அ[a]க்ஷௌஹிணி*என்றால் நால்வகைப் படையிலும் எத்தனை யெத்தனை இருக்கணுமென்று கணக்கு உண்டு.

மஹாவீரர்கள்தான் ரதத்தில் இருந்துகொண்டு யுத்தம் செய்வார்கள். இப்படிபட்டவர்களில் ஒருத்தனாகவே இருந்துகொண்டு பதினாயிரம் பேரோடு யுத்தம் பண்ணும் திறமை பெற்றவனே 'மஹாரதன்'எனப்படுபவன். இந்த விஷயங்கள் மஹாபாரதத்தில் நிறைய வரும்.

யுத்த பூமியில் ஸைன்யத்தை அணிவகுத்து நிறுத்துகிறதில் பலவித டிஸைன்களின்படிச் செய்வார்கள். இவற்றுக்கு 'வ்யூஹம்'என்று பேர். கருட வ்யூஹம், பத்ம வ்யூஹம் என்றெல்லாம் கருடன், பத்மம் மாதிரியான ரூபம் வரும்படி ஸைன்யத்தை அமைத்திருப்பார்கள். உள்ளே போகப் போக ரொம்பச் சிக்கலான அமைப்பாக இருக்கும். இந்த வ்யூஹங்களைப் பிளந்து கொண்டு உள்ளே போய் யுத்தம் பண்ணி ஜயசாலியாகத் திரும்ப முடியும். அபிமன்யு க்ருஷ்ண பரமாத்மாவிடமிருந்து பத்ம வ்யூஹத்துக்குள்ளே பிரவேசிக்கிற முறையை மட்டும் தெரிந்து கொண்டு, அதிலிருந்து எப்படித் திரும்புகிறது என்று தெரிந்து கொள்ளாமலே கௌரவ ஸைன்யத்துக்குள் போய்த்தான் சத்ருக்களிடம் ஜீவனை இழந்தானென்று பாரதத்தில் இருக்கிறது.

நால்வகைப் படை தவிர கடற்படையும், கடல் யுத்த முறைகளும் உண்டு. இது Navy. Air Force என்கிற விமானப்படைதான் நவீன காலத்தைச் சேர்ந்தது. விமானங்கள் முற்காலங்களில் அபூர்வமாக தெய்வீக புருஷர்களாலும் அஸுரர்களாலும் மட்டுமே உபயோகிக்கப்பட்டு வந்தன. த்ரிபுராஸுரர்கள் ஒரு மாதிரி விமானப்படையெடுப்பு செய்தவர்கள்தான்.

----

* ஓர் அ[a]க்ஷௌஹிணி என்பது 21870 தேர்களும், அதே அளவு யானைகளும், அதைப்போல் மும்மடங்கான 65610 குதிரைகளும், ஐந்து மடங்கான 109350 காலாட்களும் கொண்டது.

15.8-கோட்டை

இதெல்லாம் யுத்த பூமியைச் சேர்ந்த விஷயம். நாடு, நகரம் முழுவதையுமே படையெடுப்பதிலிருந்து ரக்ஷிப்பதற்காக செய்த முக்யமான ஏற்பாடே கோட்டை கட்டுவது. ரொம்பப் பெரிசாக பலமாகச் செய்வது இது. அதனால்தான் 'என்ன கோட்டை கட்டிண்டிருக்கே?'என்று கேட்கிற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ராஜஸ்தான் ராணாக்கள் சித்தோரில் விசேஷமாகக் கோட்டைகள் கட்டினார்கள். சிவாஜியும் மஹாராஷ்டிராவில் நிறையக் கட்டியிருக்கிறார். அரண் என்று கோட்டை, அகழ் என்று அதைச் சுற்றி ஜலம் இருக்கும்படி வெட்டுவது முதலானவற்றில் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் சிறப்புப் பெற்றிருந்தார்கள். திருக்குறளில் 'அரண்'என்றே பத்துச் செய்யுள் கொண்ட ஒரு அதிகாரமிருக்கிறது. பொதுஜனங்களுக்கு யுத்த அபாயமில்லாமல் பெரிய காப்பாயிருந்தது அரண்தான். அதனால்தான் தர்மத்துக்கு அரண், ஸத்யத்துக்கு அரண் என்றெல்லாம் பெரியவர்களைக் கொண்டாடும்போது சொல்கிறோம்.

கோட்டைக்கு ஸம்ஸ்க்ருதத்தில் 'துர்கம்'என்று பெயர். 'ஸுலபத்தில் பிரவேசிக்க முடியாதது'என்று அர்த்தம். இஹத்திலும் பரத்திலும் பெரிய ர¬க்ஷயாக இருக்கிற அம்பிகையை 'துர்கா'என்கிறோம். வடக்கே 'துர்க்'என்று முடிகிற அநேக ஊர்கள் அங்கேயெல்லாம் பூர்வத்தில் கோட்டைகள் இருந்ததைக் காட்டுகின்றன. 'கட்' (gad) , 'காடா' (gada) என்று முடிகிற ஊர்களும் இப்படியேதான். தமிழ்தேசத்திலும் ஊத்துக்கோட்டை, புதுக்கோட்டை, செங்கோட்டை, பாளையங்கோட்டை என்று அநேக ஊர்கள் இருக்கின்றன. செஞ்சிக் கோட்டையும் வேலூர்க் கோட்டையும் 'டூரிஸிட் ஸென்டர்'களாக இருக்கின்றன. இவற்றிலே எத்தனையோ மர்மங்கள்;பண்டங்களும் மநுஷ்யர்களும் (முக்யமாகக் ஸ்த்ரீகள்) எதிரிகள் கையில் சிக்காமலிருப்பதற்காக நிலவறை என்று அண்டர்-க்ரவுண்டில் வைத்திருப்பது முதலான பல ஏற்பாடுகள்.

வ்யூஹம் மாதிரியே கோட்டையிலும் பல அமைப்பு முறைகள் உண்டு. கோட்டை நிர்மாணத்தாலேயே நாடு நகரத்துக்கு க்ஷேமம் உண்டாகும்படியாக அவற்றை சாஸ்த்ரவத்தாக, மந்த்ர பூர்வமாகப் பண்ணவும் வழி இருக்கிறது. 'சயனம்'என்பதாக வேதத்தில் யஜ்ஞங்களில் செய்த கட்டுமானங்களுக்கான

ரூல்களின் அடிப்படையிலேயே கோட்டை நிர்மாணம் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். மநுஷ்ய ஸாமர்த்யத்தோடு மந்த்ரங்களாலும், வைதிகமான வடிவமைப்புகளாலும் ஏற்படுகிற தெய்வ சக்தியும் கோட்டை அமைப்பதில் பிரயோஜனமாயிருந்திருக்கிறது. ஸ்ரீ சக்ரம், ஷட்கோணம், ஸுதர்சன சக்ரம் என்றெல்லாம் சொல்பவை கூடச் சிலவித வடிவமைப்பினாலேயே திவ்ய சக்தியைப் பெறுவதுதானே?இப்படி காஞ்சிபுர நகரத்தையே ஸ்ரீ சக்ர ரூபத்தில் ஆசார்யாள் புனர் நிர்மாணம் பண்ணித் தந்தாராம். கோட்டையிலும் இப்படி சக்ராகாரம், பத்மாகாரம் என்று பல டிஸைன்கள். கோவிந்த தீக்ஷிதர் தஞ்சாவூரில் புதிதாக காருடமாக (கருட ரூபத்தில்) கோட்டைக் கட்டச் செய்தாரம்.

கோட்டை பற்றிய இப்படிப்பட்ட அருமையான தத்வங்கள், செய்முறை எல்லாவற்றையும் இப்போது நாம் கோட்டை விட்டுவிட்டு நிற்கிறோம்!பழைய கோட்டை அத்தனையும் relic -ஆக (இடிபாடாக) நிற்க விட்டிருப்பது தான் நம் பெருமையாயிருக்கிறது!

15.9-மல்யுத்தம்

p வனத்துக்குப் பணமும் அவசியந்தான்;வைராக்யம், ஸந்நியாஸம் என்று உபதேசித்தால் நடைமுறைக்கும் பிரயோஜனமில்லையென்றே அர்த்த சாஸ்த்ரத்தைக் கொடுத்தாற்போலவே, சரீர பலத்தாலும் ஆயுத பலத்தாலும் ரக்ஷித்திக் கொள்ள வேண்டியதும் அவசியந்தான் என்றே தநுர்வேதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆயுதமில்லாமலே குத்துச் சண்டை, மல் யுத்தம் முதலியனவும் தன்னுடைய சரீர பலம் ஒன்றை மாத்திரமே கொண்டு செய்வதுண்டு. 'மல்லர்'கள் என்று மல் யுத்த வீரர்களைச் சொல்லுவார்கள். மஹாமல்லன், மாமல்லன் என்றே நரஸிம்ஹ வர்மா என்கிற பல்லவ ராஜா பட்டப் வைத்துக் கொண்டிருந்தான் "என்ன மல்லுக்கு நிற்கிறே?"என்று கேட்பதிலிருந்து இத பெரிய யுத்த தந்திரமாயிருந்தது தெரிகிறது. க்ருஷ்ண பரமாத்மா சாணூரன், முஷ்டிகன் என்பவர்களோடு மல் யுத்தம் பண்ணிக்

கம்ஸ ஸபையில் ஜயித்திருக்கிறார். ஜராஸந்தனோடு பீமஸேனன் மல் யுத்தந்தான் பண்ணி அவனைக் கொன்றான்.

15.10-தர்மயுத்தம்

தர்ம ரக்காகவே இப்படிப் பல தினுஸில் சரீரத்தைக் கொண்டும், ஆயுதத்தைக் கொண்டும் தன்னுடைய சரீரத்தையும், தன் நாட்டு மக்களின் சரீரத்தையும் ரக்ஷித்துக் கொள்வதற்கு தநுர்வேதம் வழி சொல்லிக் கொடுக்கிறது.

எந்தப் போர் முறையானாலும் இன்னின்ன ஒழுங்கு முறைகளின்படிச் செய்ய வேண்டும் என்று அதற்கு வ்யவஸ்தை பண்ணி 'தர்ம யுத்தம்'என்று வைத்திருக்கிறது. இதிலே பெரிய தர்மம், 'ஸேனைக்கும் ஸேனைக்கும்தான் சண்டை, யுத்த பூமியிலேதான் அந்த சண்டை நடக்க வேண்டும், மற்றப் பொது ஜனங்கள் எவரையும் தாக்கப்படாது, நாடு நகரங்களை பாதிக்கப்படாது'என்று வைத்ததுதான். தற்காலத்திலோ ஸிவிலியன் பாபுலேஷன், குழந்தைகள், ஸ்திரீகள் எவரானாலும் க்ரூரமாகக் கொன்று குவிக்கிற விமானப் படையெடுப்பும், குண்டு போடுவதுந்தான் போர்முறை என்றாயிருக்கிறது.

அத்து மீறிப் பண்ணினவர்கள்தான் முற்காலங்களில் நாடு நகரத்தில் புகுந்து நாசம் பண்ணியும், b வைத்தும், ஜலாசயங்களில் (நீர் நிலைகளில்) விஷம் கலந்தும், ஸ்திரீகளை மானபங்கம் செய்தும் யுத்தம் செய்தது. இவர்கள் ரொம்பவும் குறைச்சலே. துருக்கர்கள், முதலான அந்நிய தேசத்தவர்கள் இந்த மாதிரிம முறைகெட்ட கார்யங்களைச் செய்ய ஆரம்பித்த பின்தான் இங்கே இவை சற்றுப் பரவின. அவர்கள் இப்படி அக்ரமம் பண்ணின போதுகூட சிவாஜி முதலான ஹிந்து ராஜாக்கள் சத்ருக்களைச் சேர்ந்த ஸ்திரீகளுக்குக் கெடுதல் பண்ணாமல், காப்பாகப் பல்லக்கிலே ஏற்றிப் போக வேண்டிய இடத்துக்கு அனுப்பி வைத்துபக்கிறார்கள்.

பாபங்களிலும் பிராயச்சித்தமேயில்லாத சில மஹா பாபங்களுண்டு. இவற்றைப் பண்ணினவர்களுக்கு 'ஆததாயி'என்றுபேர். தர்ம யுத்தமாக சரீர-

ஆயுத பலங்களை மட்டும் காட்டி ஜயிக்காமல் நெருப்பு வைக்கிறவன், விஷம் வைக்கிறவன், நிராயுதபாணியாக இருப்பவனை ஆயுதத்தால் கொல்பவன், கொள்ளையடிக்கிறவன், நிலத்தைப் பிடுங்கிக் கொள்கிறவன், பரஸ்திரீயை அபஹறிக்கிறவன் ஆகியவர்களை ஆததாயிக்களின் லிஸ்டிலேயே சேர்ந்திருக்கிறது. இதிலிருந்தே தர்ம வியவஸ்தை நம் யுத்த முறையை எப்படிக் கட்டுப்படுத்தியிருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

முன்னேயே இன்னார்தான் இன்னாருடன் யுத்தம் செய்யலாம் என்ற கட்டுப்பாட்டைச் சொன்னேன். ஸம பலமுள்ளவர்களே யுத்தம் செய்துகொள்ள வேண்டும். சரணாகதி பண்ணுகிறவனை அடிக்கக் கூடாது. பயங்களியை விட்டுவிடணும். ஒரு font-ல் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தேவையின்போது சேர்ந்து கொள்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறவன் (stand-by) திடீரென்று புகுந்து ஒருத்தனை தாக்கக்கூடாது. ரொம்ப முடியாமல் சத்ரு கொஞ்சம் ச்ரம பரிஹாரம் செய்து கொள்கிறேனென்றால் அவனுக்கு அநுமதி தரவேண்டும். 'தீர்த்தம் குடிக்கிறேன்;கவசத்தை ஸரி செய்து கொள்கிறேன்;குதிரையை மாற்றிக் கொள்கிறேன்;புதுசாக ஆயுதம் கொண்டுவரச் செய்கிறேன்'என்றெல்லாம் சத்ரு சொல்லும்போது, அவன் அப்படிச் செய்கிறவரையில் தாக்கக் கூடாது. ஆயுதம் இழந்தவன், கவசம் உடைந்தவன் கவனக் குறைவாய் இருப்பவன், புறமுதுகு காட்டி ஓடுகிறவன் முதலியவர்களை ஒருபோதும் அடிக்கக் கூடாது.

சாரணர்கள் என்று ஒற்றர்கள், வேவுகாரர்கள் இருப்பார்கள்;ஸமாசாரம் கொண்டு வரும் தூதர்கள் இருப்பார்கள்;ஆயுதங்களைக் கொண்டுவந்து தருவதற்காகச் சிலபேர் இருப்பார்கள் உத்ஸாஹமூட்டுவதற்காக சங்கம், பேரி முதலான வாத்யங்களை வாசிப்பவர்கள் இருப்பார்கள். இவர்களையெல்லாம் தப்பித் தவறியும் தாக்கிவிடக் கூடாது. ராவணனுடைய சாரணர்கள், தூதர்கள் ஆகியவர்களை வானரங்கள் ஹிம்ஸிக்காதபடி ராமர் யுத்த தர்மத்தை அவர்களுக்குச் சொன்னதாக ராமாயணத்தில் இருக்கிறது.

யுத்த பூமியில்தான் சண்டையே தவிர, யுத்தம் முடிந்து திரும்பிப் பாசறைக்கும் போகிறபோது இரண்டு தரப்புக்காரர்களும் அன்போடுதான் பழக வேண்டுமென்று கூடச் சொல்வார்கள்.

இப்போது ஒரே அதர்ம யுத்தந்தான் Chemical War fare என்று ஜலத்திலும் அட்மாஸ்ஃபியரிலும் விஷத்தைச் சேர்ப்பது, scorch-earth என்று நிலத்தை சாகுபடிக்குப் பிரயோஜனமில்லாமல் எரித்துவிடுவது எல்லாமே ஸஹஜமாகச் செய்யப்படுகின்றன.

நமக்கு அர்த்தம், காமம் எல்லாமே அநுமதிக்கப்பட்டிருந்தாலும் தர்மம், மோக்ஷம் என்ற இரண்டாலும் இவற்றுக்கு இரண்டு பக்கமும் வரம்பு கட்டி தர்ம-அதர்ம-காம-மோக்ஷம் என்று வைத்துவிட்டதால் யுத்தம் உள்பட எல்லாமே அததுவும் லக்ஷ்யமாய் விடாமல், தர்ம வாழ்க்கை, வீட்டுப் பேறு என்ற லக்ஷ்யங்களுக்கு அநுகூலம் செய்யும் ஸாதனங்களாகவே ஒழுங்கு செய்யப்பட்டன. இப்படி தர்மத்தோடு இசைந்து செய்யும்படியாகவே ரிஷிகள் அமைத்துத் தந்த போர்க் கலைதான் தநுர்வேதம். பாரத யுத்தத்தின்போது, ஸந்த்யா வந்தனத்தில் அர்க்யம் தருகிற வேளை தப்பிப் போகிறதேயென்று ஸேநா வீரர்கள், ஜலத்தைத் தேடிக்கொண்டு போக அவகாசமில்லாததால் புழுதியையே எடுத்து அர்க்யம் தந்தார்கள் என்று வியாஸர் சொல்வதிலிருந்தே யுத்தம் எப்படி தர்மாசாரங்களோடு சேர்ந்திருந்தது என்று தெரிகிறது.

தமிழிலே அர்த்த புஷ்டியுடன் 'மறக் கருணை'என்று சொல்வார்கள். லோகத்தில் தர்மம் தழைக்க வேண்டும் என்ற உசந்த லக்ஷ்யத்துக்காவே கடுமையாக நடந்து கொள்வதுதான் மறக் கருணை. இந்த அடிப்படையில் அநுஷ்டிக்க வேண்டியதே தநுர்வேதம்.

16-காந்தர்வ வேதம்

16.1-உபயோகமில்லாதவன் உபயோகம்

அர்த்த சாஸ்திரம் இருக்கிறது. அது ஸமூஹத்தில் நாம் இருக்க வேண்டிய ஸ்தானத்தையும், பழக வேண்டிய முறைகளையும் தெரிவித்து daily life -க்கு (அன்றாட வாழ்க்கைக்கு) உபகாரம் செய்கிறது. வயிற்றைக் கழுவிக் கொள்ள வழிகாட்டுவதும் அதுதான். க்ருஷி சாஸ்த்ரம் என்பதாக உழவுத் தொழிலைச் சொல்லும் ஒன்று இருக்கிறது. பாக சாஸ்த்ரம் என்று சமையற் கலையைச் சொல்லிக் கொடுக்கவும் ஒரு சாஸ்த்ரம் இருக்கிறது. இவற்றால் நம் வயிறு நிரம்புகிறது. பகையைத் தீர்த்துக் கொள்ள யுத்த சாஸ்த்ரமான தநுர்வேதம் இருக்கிறது. சரீரத்துக்கு வரும் கஷ்டத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள ஆயுர்வேதம் உபகரிக்கிறது. இப்படியெல்லாம் வயிற்றுக்கும் ஆயுர்வேதம் உபகரிக்கிறது. இப்படியெல்லாம் வயிற்றுக்கும் உபயோகமில்லாமல், பகை, கஷ்டம் முதலியவற்றை நிவ்ருத்தி செய்து கொள்ளவும் ப்ரயோஜனப்படாமல் இருக்கிற ஒரு சாஸ்த்ரந்தான் இப்போது ஸப்ஜெக்டாக எடுத்துக் கொண்டிருக்கிற காந்தர்வ வேதம்.

நன்றாயிருக்கிறதல்லவா 'இன்ட்ரொடக்ஷன்' (விஷய அறிமுகம்)?

(இப்படிக் கேட்டபின் ஸ்ரீ பெரியவர்கள் சிறிது பொழுது பேசாமலே உட்கார்ந்திருக்கிறார்கள். பிறகு சிரித்துக் கொண்டு தொடங்குகிறார்கள்:)

ஒரு 'யுடிலிடி'யும் இல்லாத ஒன்றைத்தான விஷமாய் எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று நான் சொல்லிவிட்டு, உங்கள் reaction -காகத்தான் கொஞ்ச நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். இப்படி நான் சொன்ன விட்டும், 'இந்த மாதிரி உதவாக்கரை ஸமாசாரத்தைச் சொல்லவா உங்கள் பொழுதை வீணாக்குகிறீர்கள்?இதற்கு நாங்களும் எங்கள் 'டய'த்தை 'வேஸ்ட்'செய்து கொண்டு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கணுமா?'என்று உங்களில் யாரும் கேட்கவில்லை;எழுந்திருந்து போகவுமில்லை. ரொம்பவும் ஆர்வத்தோடு, 'அப்படிப்பட்ட யூஸ்லெஸ் ஸமாசாரம் என்னதான் தெரிந்து கொள்ளலாமே?'என்று நீங்கள் உட்கார்ந்திருப்பது உங்கள் முகத்திலிருந்தே தெரிகிறது. 'யூஸ்லெஸ்ஸான ஒன்றுக்கும் ஒரு சாஸ்த்ரம், அதைப்பற்றிச் சொல்லப் போகிறார்'என்பதாலேயே, ரொம்ப இன்டரெஸ்டிங்காகப் பொழுது போகும் என்று ஆவலாய் உட்கார்ந்திருக்கிறீர்கள். என்னைக் கேள்விக்

கேட்டோ, எழுந்திருந்து போயோ உங்களுடைய உண்மையான ரியாக்ஷனைக் காட்டினால் அது மரியாதைக் குறைச்சலாகுமே என்பதற்காக நீங்கள் உட்கார்ந்திருக்கவில்லையென்று நன்றாகத் தெரிகிறது. அப்போது பல்லைக் கடித்துக்கொண்டு வேண்டா வெறுப்பாய் உட்கார்ந்திருப்பீர்கள். இப்போதோ உங்கள் முகத்திலேயே 'க்யூரியாஸிடி'எழுதி ஒட்டியிருக்கிறது.

இதிலேதான் 'காந்தர்வ வேதம்'என்ற யுடிலிடி இல்லாத விஷயம் எப்படி ஒரு சாஸ்த்ரமாக, உபவேதமென்றே பெத்தப் பெயரிருப்பதாக ஏற்பட முடியும் என்பதற்கு ஆன்ஸர் இருக்கிறது.

'யுடிலிடி'என்பதாக நடைமுறை வாழ்க்கையில் ப்ரயோஜனம் உள்ளதாக இல்லாமலிருப்பதற்கும் மநுஷ்யனைக் கவர்கிற ஏதோ ஒன்று இருப்பது 'இது உபயோகமில்லாத ஸப்ஜெக்ட்'என்று நான் சொன்ன பிற்பாடும் நீங்கள் இதில் ஆர்வம் காட்டுவதிலிருந்தே 'ப்ரூவ்'ஆகிறது. இதைப்பற்றிக் கேட்பதால் உங்களுக்குப் பசி ரொம்பப் போகிறதில்லை, ரூபாய் வரப்போகிறதில்லை, பகையோ வியாதியோ தீரப்போகிறதில்லை. ஆனாலும் "ஸ்வாரஸ்யமாகப் பொழுது போகும்"என்பதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

இதிலிருந்து 'யுடிலிடி'இல்லாததிருந்தும் மநுஷ்யனின் அறிவும் மனஸும் எதையோ ஒன்றைப் பெற்று ஒரு நிறைவை, ஸந்தோஷத்தை அடைய முடியுமென்று தெரிகிறது. ப்ரத்யக்ஷமாக இதோ இத்தனை பேர், இந்த ராத்திரி வேளையில் எத்தனையோ கார்யத்தை விட்டுவிட்டு இதைப் பற்றி அறிகிறதற்காக உட்கார்ந்திருப்பதில் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

இரண்டாவது, இன்னொன்று தெரிவது, ஸ்வாரஸ்யமான பொழுதுபோக்கு மநுஷ்யனுக்கு அவச்யமாக, அத்யாவச்யமாக இருக்கிறதென்ற உண்மை, 'இது பணத்தைக் கொடுக்க வேண்டாம், வயிற்றை ரொப்ப வேண்டாம்;பொழுபோக உபயோகமாகிறதோ இல்லையோ? அதுபோதும்'என்ற எண்ணம் ஏற்படுவது இதனால்தான்.

இப்படிப் பொழுதுபோக்காக, மனஸுக்கு ஒரு நிறைவையும் உத்ஸாஹத்தையும் தருவதாக உள்ள ஸங்கீதத்தைத்தான் காந்தர்வவேதம் என்று பேர் கொடுத்துத் தந்திருக்கிறார்கள்.

----

* "தெய்வத்தின் குரல்"முதற்பகுதியில் "பண்பாடு"எனும் பிரிவிலுள்ள "ஸங்கீத லக்ஷ்யம் சாந்தமே", "இசை வழியே ஈச்வரானுபவம்", "காந்தர்வ வேதம்"என்னும் உரைகளும் பார்க்க.

16.2-ஸங்கீதம், நாட்டியம், நாடகம்

ஸங்கீதம் என்றால் பாட்டு என்று மட்டும் அர்த்தம் பண்ணிக் கொள்ளாமல், பாட்டு, டான்ஸ், ட்ராமா என்ற மூன்றும் என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். கீத வித்யை, ந்ருத்யம், நாடகம் என்று இந்த மூன்றுமே ஆதிகாலத்திலிருந்து அப்யஸிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஸினிமாவும் நாடகம் என்பதன் கீழ் வந்துவிடும். காந்தர்வ வேதத்தில் பெரிய 'அதாரிடி'யாக இருக்கப்பட்ட பரத சாஸ்த்ரத்தில் ஸங்கீதம், நாட்டியம் இரண்டையும் சேர்த்துத்தான் விவரித்திருக்கிறது. ஸங்கீதம் என்று இப்போது சொல்கிற பாட்டுக்கு பரதர்தான் ஆதியில் பூர்ணமாக விவரணம் கொடுத்தவர் என்று சொல்லி ம்யூஸிக் கான்ஃபரன்ஸ்களிலெல்லாம் அவரை நிறைய quote பண்ணுகிறார்கள். தியாகராஜ ஸ்வாமிகள்கூட தம் கீர்த்தனையில் அவர் பேரைச் சொல்லி நமஸ்காரம் பண்ணியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதே ஸமயத்தில் டான்ஸுக்கு 'பரத நாட்டியம்'என்றே பேர் போடுகிறார்கள். நடனக் கலைக்கான ரூல்களை பரத சாஸ்திரத்திலிருந்தே காட்டுகிறார்கள். கொஞ்ச காலத்துக்கு முந்தி பார்த்தோம். " 'ஸங்கீத நாடக அகாடெமி'என்று பேர் வைத்துக்கொண்டு அதெப்படி நாட்டியக்காரர்களையும் கௌரவிக்கிறீர்கள்? 'ஸங்கீத-நாட்ய-நாடக அகாடெமி'என்று பெயரை மாற்ற வேண்டாமா?"என்று சில பேர் கேட்டார்கள். அதற்கு அந்த ஸ்தாபனத்தார் கொடுத்த பதிலில்

"ஸங்கீதம் என்றாலே வாய்ப்பாட்டு, வாத்யம், நாட்டியம் மூன்றும் என்றுதான் பிராசீனமான 'டெ∴பனிஷன்'இருக்கிறது"*என்று காட்டியிருந்தார்கள்.

நாடகம் என்பதையும் இதே மாதிரி நாட்டியத்திலிருந்து பிரிக்க முடியாது. 'நட'என்ற வேர்ச் சொல்லிலிருந்துதான் நடனம், நாட்யம் என்ற இரண்டு வார்த்தைகளும், நாடகம் என்ற வார்த்தையும் வந்திருக்கின்றன. மூவ்மென்டைக் குறிக்கிற வார்த்தை அது. தமிழில் நடப்பது என்கிறோம். நடப்பதும், நடிப்பதும், ஆடுவதும், பாடுவதும் எல்லாம் கிட்டக் கிட்ட, ஒன்றையன்று தழுவி இருப்பவைதான். தமிழில் 'கூத்து'என்பது டான்ஸ், ட்ராமா இரண்டையும் குறிப்பதுதான். அம்பலக்கூத்தன், கூத்தப்பிரான் என்கிறபோது நடராஜா பண்ணுகிற நடனத்தைக் கூத்து என்கிறோம். தெருக்கூத்து என்கிறபோது நாடகம் என்பதைக் கூத்து என்கிறோம். நடிகன், நடிகை என்றால் தமிழில் ஸினிமா, ட்ராமாவில் ஆக்ட் பண்ணுகிறவர்கள் என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு மூலமாக ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள 'நடன்', 'நட'என்ற வார்த்தைக்கு டான்ஸ் பண்ணுகிறவர்கள், ஆக்ட் பண்ணுகிறவர்கள் என்று இரண்டு அர்த்தமும் இருக்கிறது. டான்ஸில் ஸங்கீதத்தோடு சேர்த்து நவரஸங்களை நடித்துக் காட்டுகிறார்கள். ஸீன், ட்ரெஸ், வேஷம் இல்லாமலே அப்படிச் செய்கிறார்கள். நாடகத்தில் அதே நவரஸங்களை வசனத்தில் நடித்துக் காட்டுவார்கள். இது யதார்த்தத்துக்கு இன்னம் கிட்டேயிருப்பது. அதனால் ஸீன், தத்ரூபமாக அந்தந்த பாத்ரத்துக்கான வேஷம் எல்லாம் போட்டுக்கொண்டு செய்கிறார்கள். இதெல்லாம் டான்ஸில் ரஸிகர்களே பூர்த்தி செய்து கொள்ளும்படி விட்டிருப்பதே அதன் விசேஷம். கால் கையால் 'மூவ்மென்ட்', 'இமோஷனல் மூவ்மென்ட்' (உணர்ச்சி அசைவு) ஒரு கதை அங்க அங்கமாய் 'மூவ்'ஆவது என்று நாட்டிய, நாடகங்களில் பலவித மூவ்மென்ட்கள் இருக்கின்றன. பாடுவதை இசை என்றும் வசனமாகப் பேசுவதை இயல் என்றும் சொல்கிறார்கள். 'இயல்'என்றால் இயல்பாக, அதாவது யதார்த்தமாக இருப்பது. இது எத்தனை நன்றாகயிருந்தாலும் ஸ¨க்ஷ்மமான கலா ரஸத்தால் இதைப் பூர்த்தி பண்ணிக் கொண்டால்தான் ரஸிக ஹ்ருதயத்துக்கு நிறைவு

ஏற்படுகிறது. அதனால்தான் நாடகத்திலும் நடுநடுவே பாட்டு, டான்ஸ் எல்லாம் வருகிறது. டான்ஸிலே பாட்டு வந்தாலும் பேச்சு வருவதேயில்லை.

பாட்டிலோ அங்க அசைவான டான்ஸ், பேச்சு இரண்டும் வராமலே அது பூர்ண ரஸத்தைக் கொடுத்து விடுகிறது. ஆலாபனை பண்ணுகிறபோது வார்த்தை, அதற்கான நவரஸ உணர்ச்சி பாவங்கள் இவைகூட இல்லாமலே உள்ளத்தை நிறைவு பண்ணிவிடுகிறது. அதனால் அதற்கு ரொம்பவும் விசேஷமிருப்பதாகத் தெரிகிறது.

கானம் பண்ணுவது, நடனம், நாடகம் மூன்றும் சேர்ந்து காந்தர்வ வேதம். இதனால் நமக்குப் பணம் வராது. வயிறு ரொம்பாது. இவற்றைக் கச்சேரி, ஸதிர் என்று பண்ணுகிறவர்களுக்கு, நடிகத்திறவர்களுக்கு, நடத்துகிறவர்களுக்குத்தான் வயிறு ரொம்புகிறது. பர்ஸ் ரொம்புகிறது. பார்க்கப்போகிற நாம் நம் வயிற்றுக்காக வைத்துக் கொண்டிருப்பதை அங்கே கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருகிறோம். 'யுடிலிடி'என்ற பாயின்டில் இப்படி நஷ்டப்பட்டாலும் மனஸுக்கு மகிழ்ச்சி, உல்லாஸம், உத்ஸாஹம், பொழுதுபோக்கு என்ற லாபம் கிடைப்பதால் இப்படிச் செய்கிறோம். இது மட்டும் 'யுடிலிடி'இல்லையா?கொத்தவரக்காய் வாங்கினால் சாப்பிடலாம். அதே காசுக்குப் பூ வாங்கி flower vase -ல் வைத்தால் சாப்பிட முடியாதுதான். இருந்தாலும் இதைப் பார்த்தால் நேத்ரானந்தமாயிருக்கிறது, மனம் குளிர்கிறது என்பதால் கொத்தவரக்காய் வேண்டாமென்று இந்த பொக்கேயை வாங்குகிறான் என்றால் இதற்கு 'யுடிலிடி'இல்லை என்று எப்படிச் சொல்வது?

அன்றாட அலுவல்களில், பொறுப்புகளில் அநுஷ்டானங்களில் அலுத்துக் களைத்துப் போகாமல் மனஸுக்கு உத்ஸாஹம் தரவேண்டியதுதான் என்றே உபயோகமில்லாததாகத் தோன்றுகிற பாட்டையும், கூத்தையும் பெரியவர்கள் 'காந்தர்வ வேதம்'என்று வைத்திருக்கிறார்கள். மற்றவற்றின் உபயோகத்தை நாம் உணர்வதற்கான உத்ஸாஹத்தைத் தரும் பெரிய உபயோகம் இவற்றுக்குத்தான் இருக்கின்றன. வாழ்க்கைப் போராட்டத்தில் நமக்கு ஏற்படுகிற பாரத்தை மறந்து கொஞ்ச நேரமாவது இறக்கிவைப்பது காந்தர்வ வேதம் செய்யும் பெரிய உபகாரம்.

----

* "கீதம் வாத்யம் நர்த்தனம் ச த்ரயம் ஸங்கீதம் உச்யதே"

16.3-பெயர்க்காரணம்

'**கா**ந்தர்வ வேதம்'என்று ஏன் பெயர் என்றால் கந்தவர்கள்தான் உத்ஸாஹம் கொடுக்கும் விஷயங்களிலேயே பொழுதைப் போக்கிக் கொண்டு, ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கிறவர்கள். நம் கண்ணுக்குத் தேவஜாதிகளில் ஒன்றாக கந்தர்வர்கள் இருக்கிறார்கள். நம் கண்ணுக்குத் தெரியாமல் மைகராஸ்கோப்புக்குத் தெரிகிற சின்னஞ்சிறிய க்ருமிகள் பல இருக்கின்றன. மைக்ராஸ்கோப்புக்கும் தெரியாமல் எலெக்ட்ரிஸிடி இருக்கிறது. நம் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளேயிருப்பதெல்லாம் எக்ஸ் ரேயில் தெரிகிறது. அதீந்த்ரிய த்ருஷ்டி, திவ்ய சக்ஷ§ஸ், ஞானப்பார்வை என்றெல்லாம் சொல்கிற உயர்ந்த பார்வையை உடைய ரிஷிகளுக்கும், யோகிகளுக்கும், ஸித்தர்களுக்கும் நம் கண், மைக்ராஸ்கோப், எக்ஸ்-ரே ஆகிய எதற்கும் தெரியாத கந்தர்வாதி ஜாதிகள் புலனாவார்கள்.

சித்ரங்களில் கந்தர்வர்களைப் போடும்போது அவர்கள் வீணாகானம் பண்ணிக்கொண்டும், புஷ்பம் சித்தரித்திருக்கும். இந்திரிய ஸௌக்யங்களைத் தரும் விஷங்களுக்கு கந்தர்வர்களையே அதிஷ்டான தேவதைகளாகச் சொல்லியிருக்கிறது. ஆனதால் இப்படிப்பட்ட இன்பத்தைத் தருகிற சித்ரக் கலை, கவித்வம், பல பாஷா ஞானம், செஸ் மாதிரி வீட்டுக்குள்ளே விளையாடுகிற விளையாட்டு (in-door games) , பந்து பாட்மின்டன் மாதிரி வெளியிலே ஆடுகிறவை (out-door games) , நாட்டிய நாடகங்களிலேயே ஒரு அம்சமான பொம்மலாட்டம், நிழலாட்டம், கரகாட்டம் இவை எல்லாவற்றையுங்கூட காந்தர்வ வேதத்தைச் சேர்ந்ததாகவே சொல்வதுண்டு.

16.4-அறுபத்துநாலு கலைகள்

சதுஷ்-ஷஷ்டி கலா அதாவது அறுபத்துநாலு கலைகள் என்று ஒரு கணக்குச் சொல்வதுண்டு. இந்தக் கலைகளாகக் கூட அம்பாள்தான் இருக்கிறாளென்பதால் அவளுக்கு ஸஹஸ்ர நாமத்தில் " **சதுஷ்-ஷஷ்டி கலாமயி** " என்று ஒரு நாமா இருக்கிறது. இந்த அறுபத்துநாலில் மேலே சொன்ன எல்லாம் வந்துவிடும்.

லலிதா ஸஹஸ்ர நாமத்துக்கு பாஸ்கர ராயர் என்கிறவர் பண்ணின பாஷ்யம் ரொம்பவும் முக்யமானது. அம்பாளுடைய அநுக்ரஹத்தால் எல்லாத் துறைகளிலும் ஆச்சர்யப்படும்படியான வித்வத் உள்ளவராக இருந்தவர் இந்த பாஸ்கர ராயர். இவர் அறுபத்துநாலு கலைகள் என்னென்ன என்று பல புராதன நூல்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தம்முடைய பாஷ்யத்தில் இன்னவென்று வரையறுத்துச் சொல்லியிருக்கிறார். வைதிக மதத்துக்கு ஆதாரமாயிருக்கிற வேதம், வேதாங்கம், உபாங்கம், உபவேதம் என்கிற பதினெட்டு வித்யாஸ்தானமுமே இந்தக் கலைகளில் வந்து விடுகின்றன. ஷட்தர்சனங்கள் என்பதைச் சேர்ந்த ஸாங்கியம், யோகம் முதலான ஆத்மார்த்தமான மற்ற சாஸ்திரங்களும் வந்துவிடுகின்றன. ஆனையேற்றம், குதிரையேற்றம் இவையும் வருகின்றன. மந்த்ர சக்தியால் பண்ணுகிற ஆகர்ஷணம், வச்யம், திரஸ்கரிணி என்ற கண்கட்டு வித்தை, இந்த்ர ஜாலம் என்னும் மாஜிக், பித்தளையைப் பொன்னாக்குகிற ரஸவாதம், வைத்யத்தை சேர்ந்த நாடி சாஸ்திரம், விஷத்தை இறக்கும் 'காருட சாஸ்திரம்', ரூப லக்ஷணத்தைக் கொண்டே ஒருத்தனின் குணத்தையும் வாழ்க்கைப் போக்கையும் நிர்ணயம் செய்யும் 'ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரம்', ரத்னப் பரீ¬க்ஷ முதலான பலவற்றை அறுபத்துநாலில் காட்டுகிறார். இதில் அழகுணர்ச்சி, ரஸிக மனஸ், இந்திரிய இன்பம் முதலியவைகளைப் பூர்த்தி பண்ணுவதாகவும் பல இருக்கின்றன. மாலை, வாஸனைப் பொடி, நகை நட்டு முதலியவை செய்வது, பின்னுவது எண்ணெய் தேய்ப்பது, பக்ஷிகளுக்குப் பேச்சுச் சொல்லித் தருவது, யௌவனம் உண்டாக்குவது, புதிர் போடுவது, ஒருத்தர் முடிக்கிற வார்த்தையையே இன்னொருத்தர் ஆரம்ப வார்த்தையாய் வைத்து 'அந்தாதி'பாடுவது (அந்த - ஆதி என்பதே அந்தாதி 'அந்த'- முடிவு;'ஆதி'- ஆரம்பம்), ஒருத்தர் ஒரு 'ஐடியா'வை ஒளித்துப் பாதி மாத்திரம்

சொல்லி விட்டுவிடுவதை இன்னொருத்தர் புரிந்து கொண்டு பாக்கியையும் சொல்லிக் கவிதையைப் பூர்த்தி செய்வதுதான் 'ஸமஸ்யா பூர்ணம்' - என்று இந்தக் கலைகளில் பல இருக்கின்றன. இவையும் காந்தர்வ வேதத்தில் வருவதாகவே வைத்துக் கொள்ளலாம். இப்படிப் பார்த்தால் 'ஜர்னலிஸம்'என்று தற்போது பஹு§ஜன வசீகரத்தோடு இருக்கிற பத்திரிகைத் தொழிலும் இதைச் சேர்ந்ததாக ஆகும். மொத்தத்தில் விசித்ரத்தைக் காட்டுவதெல்லாம் காந்தர்வ வித்தைகள் எனலாம். மாஜிக்தான் விசித்ரம் என்றில்லை. வார்த்தை விசித்ரமாய் பேசுவது, எழுதுவது, ஸ்வர தாள விசித்ரமாய் பாடுவதும் ஆடுவதும், ரஸ விசித்ரங்களைக் காட்டி நடிப்பது எல்லாமே விசித்ரந்தான்.

16.5-பொழுது போக்கும் புலன் கட்டுப்பாடும்

பிரத்யக்ஷத்தில் நாம் பார்ப்பதில் இப்படிப் பொழுது போக்கு, உத்ஸாஹம், pleasures of the senses என்று இருப்பவை எல்லாமே மநுஷ்யனை ரொம்பவும் இழுத்துக் கொண்டு போகிற சக்தி உள்ளவையாயிருக்கின்றன. 'இழுத்துக் கொண்டு'என்றால் மேலேயா என்றால் அப்படியுமில்லை. பாட்டு, கூத்து, ஸினிமா, ஸ்போர்ட்ஸ் நாவல், பத்திரிகைகள் எல்லாம் சாப்பாடு திகட்டிப் போகாமல் ஊறுகாய் மாதிரி, கர்மாநுஷ்டானங்களில் ஸ்ட்ரெயின் ஆகாமல் ரிலாக்ஸ் செய்யவே இருக்க வேண்டும் என்று மட்டுந்தான் சாஸ்திரங்களில் அநுமதித்திருப்பது. கடைசி பக்ஷமாகத்தான் இவற்றுக்கு நம் மனஸையும் பொழுதையும் பொருளையும் கொடுக்க வேண்டும். ஆனாலும் ஈஸ்வர மாயையில் எப்படியிருக்கிறதென்றால் கொஞ்சம் இதுகளில் இறங்கினாலும் இவை சுழலாக நம்மை ஒரேயடியாக இழுத்துக் கொண்டு போய் இவற்றுக்காகவே நாம் ஸகலத்தையும் அர்ப்பணம் பண்ணுகிற நிலைக்குக் கொண்டு நிறுத்துகின்றன.

இப்படியிருப்பதற்குக் காரணம் தற்போது நமக்குக் கர்மாநுஷ்டானம் ரொம்பவும் குறைந்து போயிருப்பதுதான். அநுஷ்டானம் நிறையச் செய்தோமானால் தன்னால் நல்லறிவு, சுத்தமான மனஸ், கட்டுப்பாடு, sense of

proportion (எதற்கு என்ன அளவு என்ற நிர்ணயமான அறிவு) எல்லாம் உண்டாகிவிடும். அதனால் பொழுது போக்கையே வாழ்க்கைப் போக்காக, அதிலும் வழுக்கி விடுகிற போக்காக ஆக்கிக் கொள்ளாமல் எந்த அளவோடு ருசித்து விட்டு நிறுத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி நிறுத்திக் கொள்வோம். இல்லாமலா இந்த தேசம் ஒரே ஸமயத்தில் ஆசார சீலங்களுக்கும் பெயர் எடுத்து அதே ஸமயத்தில் இத்தனை கலைகளுக்கும் களஞ்சியம் என்ற பெயரையும் பெற முடிந்திருக்கிறது?

விவேகத்தோடு அளவறிந்து இந்தக் கலைகளை அநுபவிக்காமல் அதியாகப் போனால் இவையே நம்மை ரொம்பவும் இறக்கி விடுகின்றன. ஜனரஞ்ஜகம் என்பதில் ஆடல், பாடல், எழுத்து எல்லாமே ரொம்பவும் கீழ்த்தரமாகி விடுகின்றன. விளையாட்டு மோஹம் மனிதனைப் பைத்தியமே ஆக்கி விடுகிறது. ஸினிமா ஸ்டார்கள் வந்து விட்டால் பகவானே தர்சனம் கொடுப்பதுபோல் ஆவேசமாகி விடுகிறார்கள். 'கூத்தாடி'என்பது திட்டு வார்த்தையாகத் தானிருக்கிறது என்பதிலிருந்தே இந்தக் கலைகளை எப்படித் தப்பாகப் பிரயோஜனப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று தெரிகிறது.

அநுஷ்டானமில்லாதபோது இந்திரியம் ஓடுகிறபடி ஓடவேண்டுமென்று தோன்றுகிறது. 'ஜனங்கள் இப்படிப்பட்ட சரக்குதான் கேட்கிறார்கள்'என்று அவர்கள் தலையில் பழியைப் போட்டுவிட்டு, கன்னா பின்னாப் பாட்டுப் பாடுகிறார்கள், புலன் வெறியைத் தூண்டிவிடுகிற ரீதியிலேயே எழுதுகிறார்கள், ஸினிமா எடுக்கிறார்கள், சித்திரம் போடுகிறார்கள். ஜனங்களும் அவர்கள் தலையில் பழியைத் திருப்பிப் போட்டு அவர்கள் இப்படிப்பட்ட சரக்குகளைத்தான் தருவதால் தாங்கள் அதையே எடுத்துக் கொள்ளும்படி இருக்கிறது என்கிறார்கள். இதிலே ஜனங்களைவிடக் கலைஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களாக இந்தக் கலைகளை அப்யஸித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் அதிகம் பொறுப்பிருக்கிறது. இப்போது கண்டதை எழுதியும், பாடியும், நடித்தும், படம் பிடித்தும் கீர்த்தி, தனம் எல்லாம் ஸம்பாதித்து விடலாம். ஆனால், 'இத்தனை ஜனங்களைக் கெடுத்ததற்கான தோஷத்தையும் கண்ணுக்குத் தெரியாமல் ஸம்பாதித்துக்

கொண்டிருக்கிறோம். நாளைக்கு இதற்காக நாம் ஒருத்தனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்'என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும்.

மளிகை ஸாமானில் கலப்படம் பண்ணினால் குற்றம்;குடி தண்ணீரைக் கெடுத்தால் குற்றம் என்றால் நேரே மநுஷ்யனின் ஆத்மாவையே கெடுப்பது இவற்றைவிடக் குற்றம்தானே?கலப்படத்துக்காக தண்டிக்கிறவன் நம் மாதிரி ஒருத்தன்தான். அவனிடமிருந்து தப்பியும் விடலாம். அல்லது லஞ்சம் கொடுத்து ஸரிப்படுத்திடலாம். ஆனால் தன் ஆத்மாவையும் கெடுத்துக் கொண்டு, மற்றவர்களையும் கெடுத்ததற்காக ஒருத்தனைச் சிக்ஷிக்கிறானே, அவனிடமிருந்து தப்பவே முடியாது! அவனை நாம் வசியம் பண்ணிக் கொள்ளவும் முடியாது!இந்த நினைப்பு இருந்து விட்டால் கலைகளில் ஈடுபட்டவர்கள் தப்பு வழிக்குப் போக மாட்டார்கள். தெய்வ நினைப்பு, பய பக்தி அநுஷ்டானம் இவை போனதில்தான் அடக்கம் போய்விட்டது; இந்திரியங்களின் வேகம் குறைவதால் ஏற்படுகிற பக்வம் வராமலே போகிறது. இதோடுகூடக் 'கலைஞர்கள்'என்று தாங்களாகவே தங்களுக்குக் கௌரவம் கொடுத்துக் கொண்டு பொதுஜனங்களும் அதில் மயங்கி இவர்களைக் கொண்டாடி முகஸ்துதி பண்ணுவதில் அஹம்பாவம் ஜாஸ்தியாகிவிடுகிறது. பழைய காலத்தில் போல, வித்வான்களைக் கூட்டி 'அரங்கேற்றம்'என்று செய்து, அவர்கள் ஒப்புக் கொண்டால்தான் ஒரு புஸ்தகத்தையோ, நாடகத்தையோ பிரசாரம் பண்ணலாம் என்றுமில்லாமல், 'கருத்து ஸ்வதந்திரம், எழுத்து ஸ்வதந்திரம், பேச்சு ஸ்வதந்திரம்'என்று வேறு ஏற்பட்டிருப்பதால், எதை வேண்டுமானாலும் ஆடிப் பாடி ஊரை வளைக்கலாமென்று நடந்து வருகிறது. சின்ன வயதிலிருந்தே மதக் கல்வி, மதாநுஷ்டானங்கள் இருந்தால் தான் ஸாத்விகம் ஏற்படும். அப்போதுதான் எத்தனை ஆட்டம், பாட்டம் இருந்தாலும் அதுகளும் முடிவில் உயர்ந்த ஸாத்விக லக்ஷ்யத்தில் சேர்ப்பதாக இருக்கும். முற்காலங்களில் இப்படித்தானிருந்தது. அநுஷ்டான ஸம்பந்தம் துண்டித்துப் போனபின்தான் ராஜஸ, தாமஸப் போக்குகளையே தூண்டிவிடுவதாக இந்தக் காந்தர்வ கலைகள் ஆகியிருக்கின்றன.

' Fine ' art, 'லலித' கலை என்றே இவற்றுக்குப் பெயர் சொல்கிறார்கள். இவை முரட்டுத்தனமான வேகங்களில் கொண்டுவிடுமானால் அந்தப் பேரே பொருந்தாது. நிஜமான fine art ஆனால் அது மனுஷ்யனை refine பண்ணுவதாகத்தான் இருக்க வேண்டும்...........

ஸங்கீதம் என்கிற இசையும், நிருத்யம் என்கிற ஆடலும், நாடகமும் காந்தர்வ வேதத்தைச் சேர்ந்த முக்யமான கலைகள்

16.6-அழகுணர்ச்சி ஆன்மாநுபவம்

நிருத்யம் என்பது உணர்ச்சிகளை அபிநயமாக நடித்துக் காட்டாமல் ஒரு தாளத்துக்கும் சொல்லுக் கட்டுக்கும் ஏற்பக் காலால் ஜதிகளைப் போட்டுக் கொண்டு, கைகளால் பல விசித்திரங்களைச் செய்து காட்டுவதே*என்றும், நாட்டியம் என்பது ஒரு பாடலுக்கு அர்த்தத்தை விளக்கி அபிநயம் செய்து நடித்துக் காட்டுவது என்றும் பாகுபாடு சொல்வதுண்டு.

வெறும் அங்கசர்யையால், அதாவது சரீர சேஷ்டையால் எப்படி நிருத்யத்தில் ஸந்தோஷம் ஏற்படுகிறது?அதில் ரஸபாவ வெளியீடு எதுவும் இல்லையே!-என்றால் இதுதான் மநுஷ்யனின் ஸௌந்தர்ய ரஸனையில் உண்டாகிற ஸௌக்யம். Aesthetic sense என்று சொல்வார்கள். அழகை உணர்ந்து கொள்வதிலேயே ஒருவிதமான ஆத்மானந்தம் உண்டாகிறது. இது அழகு, இது அழகில்லை என்று அந்தராத்மாவுக்குள் எதுவோ ஒன்று. எடை போட்டுச் சொல்லி, அழகாயிருப்பதில் நம்மைச் சொக்க வைக்கிறது. ஒரு நாய் குடுகுடு என்று ஓடினால் அது அழகாயிருக்கிறதென்று நமக்கு உள்ளே தோன்றவில்லை. அதுவே ஒரு யானை திம் திம் என்று ஆடி அசக்கிக் கொண்டு, தும்பிக்கையையும் காதுகளையும் அதற்கேற்க அசைத்துக் கொண்டு வருவதைப் பார்த்தால் பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஒரு காக்கா தவ்வித் தவ்வி நடந்தால் அதிலே ஒரு மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுவதில்லை. ஒரு ஹம்ஸம் ஒய்யாரமாகப் போனால் மனஸ் அதிலேயே ஈடுபட்டு நிற்கிறது. வெறும் அசைவுக்கு இப்படி ஒரு பவர். இப்படித்தான் ஜதிகள் என்று சுத்த நிருத்யத்தில் வெறுமே காலால்

அடிப்பதும், கையை அசைப்பதும், இடுப்பை ஒடிப்பதும் அதிலுள்ள define பண்ணமுடியாததான அழகு என்ற அம்சத்தால் நமக்கு ஆனந்தத்தை உண்டாக்குகின்றன. இந்த ஆனந்தத்தில் தூய்மையுமிருக்கிறது. அதுவே ஒரு கோமாளி கையையும் காலையும் ஆட்டி, ஒடித்துக் காட்டினால் அது ஹாஸ்யமாகத் தானிருக்கிறது. சில ஸமயத்தில் விரஸம் என்பதாகச் சித்தவிகாரம் ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. ஆகக்கூடி அங்கசர்யைக்கே பலவித உணர்ச்சிகளை உண்டாக்குகிற சக்தி இருக்கிறது. மலையாளக் 'கதகளி'யில்ஒரு தினுஸு பார்க்கிறோம். அதில் வாயால் எதுவும் பேசாமல் எல்லாரும் ஊமை போலவே ஆடுவார்கள். ஆனாலும் பலவிதமான மனோபாவங்களை கை, கால், புருவம், உதடு இவற்றின் அசைப்பினாலேயே தெரிந்து கொண்டுவிடுவோம்.

'கதைகளி'என்பதுதான் 'கதகளி' என்று நாம் சொல்வது. களி என்றால் தமிழில் களிப்பு;ஆனந்தம். களிப்பிலே டான்ஸ் ஆடத்தோன்றுகிறது. 'களிக் கூத்தாடுவது'என்கிறார்கள். அதனால்தான் அம்பலக் கூத்தனுக்குத் திருவாதிரை உத்ஸவம் பண்ணி ஸமர்ப்பிக்கிற நைவேத்யத்தைக் 'களி'என்கிறோம். மலையாளத்தில் களி என்றாலே கூத்து என்று அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள். ஒரு கதையைக் கூத்தாக ஆடிக் காட்டுவதற்கு 'கதைகளி'என்று பேர் வைத்தார்கள்.

மனோபாவத்தை வாயால் சொல்வது, அங்கத்தால் அபிநயித்துக் காட்டுவது, மனோபாவம் இன்னதென்று சொல்ல முடியாமலே போனாலும் வெறும் ராக ஆலாபனையாலும், தில்லானாவிலும் ஆனந்தத்தை உண்டாக்குவது என்று பலவிதம் இருந்தாலும் எல்லாம் 'அழகு' என்ற ஒன்றினால் ஆத்மாவுக்கு நிறைவு ஏற்படுத்துவதைச் சேர்ந்ததுதான்.

வெறும் தாள கதியை லயம் என்கிறார்கள் - ஏன்?அதற்கு நம் மனஸை அப்படியே லயித்திருக்கும்படிச் செய்கிற சக்தி இருக்கிறது. ம்ருதங்கம் வாசிக்கிறபடி வாசித்தால் அந்த ரஸாஸ்வாதத்தில் ஆத்ம லயிப்பு உண்டாகிவிடுகிறது. ச்ருதி, ராகம் எல்லாம் இப்படித்தான். வெறும் சப்தம் அதன் பலவிதமான அழகுகளால் ஹ்ருதயத்தில் ஆத்மானந்தத்தை

உண்டாக்குகிறது. இப்படிச் சொன்னால் என்ன அர்த்தமாகிறது?ஆத்மானந்தத்தைப் பரமாத்மா தவிர யார் தர முடியும்?அதனால் இந்தக் கலா ஸௌந்தரியமெல்லாம் கடைசியில் ஈஸ்வராம்சம்தான் என்று தெரிகிறது.

அத்தனை அழகுக்கும் ஆதாரம் ஈஸ்வரன்தானே?'ஸௌந்தர்ய லஹரி'என்றே ஆசார்யாள் அம்பாளின் அழகுப் பிரவாஹத்தைச் சொல்கிறார். இதனால்தான் ஸந்தியா வானத்தைப் பார்த்தால் மனஸில் ஒரு தெய்விகமான இன்பம் உண்டாகிறது. காரணம் கேட்டால் என்ன சொல்வது?புஷ்பத்தைப் பார்த்தால், ஒரு வார்த்தையும் அர்த்தமுமில்லாமல் குயிலும் கிளியும் கூவுகிறதைக் கேட்டால், சற்றுமுன் சொன்னது போல ஒரு மநுஷ்யனே இப்படி ஒரு வார்த்தையும் அர்ததமுமில்லாமல் ஒரு ராகத்தை ஆலாபனைப் பண்ணிக் கேட்டால் அது நெஞ்சைத் தொட்டு ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறது. ஆனந்தம் என்றால் சிரிக்கிறது என்று அர்த்தமில்லை. கண்ணிலே ஜலங்கூட வந்தாலும் வந்துவிடும். கண்ணன் குழலோசை என்று நினைத்துக் கொண்டாலே ஒரு உருக்கம் உண்டாகிறது. அழுகையானாலும் உருக்கமானாலும் அதிலே சுத்தமாக, சாந்தமாக, பவித்ரமாக எதுவோ ஒன்று ஆத்மாவைக் கவ்விக் கொள்கிறது. அது ஈஸ்வராம்சம்!அழகு என்பது அதுதான்!ஒரே அடுக்காய் ஹிமாலயத்தில் பனி மூடியிருப்பதைப் படத்தில் பார்த்தால்கூட ஆனந்தம் நமக்கு உள்ளேயும் அப்படி ஐஸ் மாதிரி ஜிலுஜிலுப்பு ஏற்படுகிறது. தாஜ்மஹாலைப் பூர்ணிமை நிலாவில் பார்க்கணுமென்றே தேசம் விட்டு தேசம் வருகிறான் - அழகுக்கு ஆத்மாநந்தத்தை உண்டுபண்ணும் சக்தி இருப்பதால்தான். இந்த சக்தி அதற்கு எப்படி இருக்கிறதென்றால் அதிலே உள்ள ஈஸ்வர ஸாந்நித்யத்தால்தான்.

(கீதையில்) விபூதியோக முடிவிலே பகவான் இதைத்தான் சொல்லியிருக்கிறார். 'விபூதி'என்றால் விபுவின் லக்ஷணம். 'விபு'என்றால் ஸர்வ வியாபி. ஸர்வ வியாபியாகவுள்ளவன் என்றால் எல்லாம் அவனே என்று அர்த்தம். ***"ந ததஸ்தி விநா யத் ஸ்யாந்-மயா பூதம் சராசரம் -*** என்னைத் தவிர சராசரத்தில் எதுவாவது ஒன்று உண்டோ என்றால் கிடையவே கிடையாது"என்கிறார். இப்படி எல்லாமாயிருப்பது அவன்தான்

என்று ரொம்பவும் ஞானிகளுக்குத்தான் தெரியும். கல்லு மண்ணு, நல்லது மாதிரியே கெட்டது, அழகானது மாதிரியே அவலக்ஷணமானது எல்லாம் அவன் தானென்று அபூர்வமாய் எங்கேயோ ஒரு ஞானிக்குத்தான் தெரியும். மற்றவர்கள் எப்படி தெரிந்து கொள்வது?அதற்காகத்தான், தான் ஸர்வ வியாபியான விபுவான போதிலும் சராசரி மநுஷ்யனுக்கு தன்னுடைய மஹிமை எதெது, யாரார் ஸ்ருஷ்டியில் ரொம்ப உயர்ந்தவையாக, உயர்ந்தவர்களாக இருக்கின்றனவோ, இருக்கிறார்களோ அங்கேதான் பிரகாசமாகத் தெரியும் என்று சொல்லி இப்படிப்பட்ட வஸ்துக்களையும் ஆஸாமிகளையும் ஒரு பெரிய லிஸ்டாக 'விபூதி யோகம்' என்று அத்யாயம் பூரா கொடுத்துக் கொண்டு போகிறார். எல்லாமான அவர் இன்னின்னதில் தாம் விசேஷமாகப் பிரகாசிப்பதாக லிஸ்ட் கொடுக்கிறார். எல்லாவற்றிலும் அவருடைய ஸாந்நித்யத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல், " **கேஷ§ ச பாவஷ§ சிந்த்யோ (அ) R பகவந் மயா** ?- ஏ பகவானே!என்னால் c எந்தெந்த வஸ்துக்களில் சிந்திக்கத் தக்கவனாக இருக்கிறாய்?"என்று அர்ஜுனன் கேட்டதையும் ஒட்டி, இப்படித் தன் விபூதி ஸ்பஷ்டமாக வெளிப்படுகிறவற்றை ஒரு லிஸ்ட் போட்டு கொடுக்கிறார்.

"பன்னிரண்டு ஆதித்யர்களுக்குள் நான் விஷ்ணு:ஜ்யோதிஸ்ஸுகளுக்குள் ஸ¨ர்யன்;நக்ஷத்ரங்களுக்குள் சந்திரன்;வேதங்களுக்குள் ஸாமம்;பதினோரு ருத்ரர்களுக்குள் சங்கரன்;மலைகளுக்குள் மேரு;ஸேநாதிபதிகளுக்குள் ஸ்கந்தன்;வார்த்தைகளுக்குள் ஓம்காரம்;மரங்களில் அச்வத்தம் (அரசமரம்) ;தேவரிஷிகளில் நாரதர்;மிருகங்களில் ஸிம்ஹம்;பக்ஷிகளில் கருடன்;ஆயுதபாணிகளுக்குள் ராமன்;நதிகளில் கங்கை;மாஸங்களில் மார்கழி;ரிதுக்களில் வஸந்தம்;விருஷ்ணி (என்கிற யது குலக்கிளை) வம்சத்தினரில் கிருஷணன்;பாண்டவரில் அர்ஜுனன்"என்று அந்தக் கிருஷ்ணனே அர்ஜுனனிடம் சொல்கிறார். இன்னும் அநேகத்தையும் சொல்லிவிட்டு முடிவாக ஒன்று சொல்கிறார்.

யத்யத் விபூதிமத் ஸத்-த்வம் ஸ்ரீமத் ஊர்ஜித் ஏவ வா *
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ச ஸம்பவம் **

அதாவது, "எதெது ஸ்ரீ உள்ளதாக, அதாவது லக்ஷ்மீகரமாக இருக்கிறதோ, எதெது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறதோ அதெல்லாம் என்னுடைய தேஜஸின் அம்சமாக உத்பவித்தது என்று தெரிந்துகொள்"என்று முடிக்கிறார்.

"ஸ்ரீ உள்ளது', லக்ஷ்மீகரமானது என்றால் அழகானது, மங்களமானது, நல்லது, மனஸுக்குத் தூய்மையான இன்பம் கொடுப்பது என்று அர்த்தம். இங்கே பகவான் தன்னுடைய விபூதி என்கின்ற மஹிமையானது மிகவும் சக்தி வாய்ந்த 'ஊர்ஜித'வஸ்துக்களில் இருப்பதாக மட்டும் சொல்லாமல், அழகு வாய்ந்த 'ஸ்ரீமத்'தான வஸ்துக்களிலும் இருப்பதாகச் சொல்லியிருப்பதே கவனிக்க வேண்டியது. பகவத் விபூதியான இந்த அழகுணர்ச்சியை வைத்துத்தான் காந்தர்வ வேதமானது உபவேதம் என்கிற பெருமைக்கு உரியதாக உண்டாயிருக்கிறது.

கண்ணுக்கு டான்ஸ், காதுக்குப் பாட்டு, மனஸுக்கு நவரஸங்கள் என்பதாக இந்த்ரிய ஸௌக்யங்களைத் தருவதாகத் தோன்றினாலும் இந்த வித்தைகள் ஸாமவேதத்தை அடிப்படையாகக் கொண்டு உண்டானவை என்பதனாலேயே இவற்றுக்குப் பெருமை ஏற்படுகிறது. வேதங்களுக்குள்ளே தாம் ஸாமமாயிருப்பதாகவும் பகவானே சொல்லியிருப்பதால் இன்னும் பெருமை!மற்ற உபவேதங்களுக்கு அவற்றுக்கு மூலமாயுள்ள வேதத்தோடு உள்ள ஸம்பந்தத்தைவிட காந்தர்வ வேதத்துக்கு ஸாம வேதத்தோடுள்ள ஸம்பந்தம் இன்னும் நெருக்கமாக எல்லோருக்குமே தெரிகிறது. ஸாமகானத்தின் ஸ்வரங்களிலிருந்துதான் ஸ்பத ஸ்வரமும் உண்டாயிருக்க வேண்டுமென்று ஸாமகானத்தைக் கேட்கிற எவருக்கும் தெரிகிறது. 'ஸாமகானம்'என்று பெயர் இருப்பதிலிருந்து அதுவே. ஸங்கீத வித்யையுடன் சேர்ந்தது தானென்று தெரிகிறது. லலிதா ஸஹஸ்ர நாமத்தில் ***"ஸாம கான ப்ரியாய நம :"*** என்று ஒரு பெயரைச் சொல்லிவிட்டு, உடனே இது அதன் கான விசேஷத்துக்காகத்தான் என்று தெரிவிக்கிறாற்போல் அடுத்ததாக "ஸ்வரமயாய நம:"என்ற நாமாவைக் கொடுத்திருக்கிறது. மஹாவிஷ்ணுவான ஸ்ரீக்ருஷ்ணன் தம்மை வேதங்களில் ஸாமம் என்று சொல்லிக் கொண்டிருப்பதாகவும் பார்த்தோம்.

இதிலிருந்தே ஸங்கீதம் முதலான காந்தர்வக் கலைகளுக்குள்ள தெய்விகத்தன்மை தெரியவரும். உபவேதங்களுக்குள் மநுஷ்யனை ரொம்பக் கீழான கேளிக்கைகளுக்கு இழுத்துச் செல்லக்கூடியது என்று தோன்றுகிற காந்தர்வ வித்யையேதான் அவனை ரொம்ப மேலே இழுத்துக்கொண்டு போய் அப்படியே ஈஸ்வரனோடு ஐக்யமாக்குவதற்கும் உதவுகிறது.

ஆக, அது தப்புக்குக் கொண்டு போகிறது என்றால் இதற்கான தப்பு அதனுடையதில்லை. நாம் அதைத் தப்பாகக் கொண்டு போகிறோம் என்றுதான் அர்த்தம். அதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்கிறபடிப் பிரயோஜனப்படுத்தாதது நம் தப்புதான். நெருப்பு இருக்கிறது. அதிலே ஆஹாரம் உண்டாக்கிக் கொண்டு சாப்பிடுவதற்காக வீட்டில் உண்டாக்குகிறோம்;ஹவிஸ்களை அர்ப்பணம் செய்வதற்காக மூட்டுகிறோம்;தீபாராதனை பண்ணி பகவானின் மூர்த்தி அழகில் ஈடுபடுவதற்கும் அது பிரயோஜனமாகிறது. நம் ஜாக்ரதைக் குறைவாலோ, புத்திக் குறைவாலோ, துணி மணி நெருப்புப் பிடிக்கவிட்டால் அல்லது நாமே நெருப்பிலே மாட்டிக் கொண்டால், அல்லது கோவிலில் b விபத்து உண்டாக்கி விட்டால் தப்பு நெருப்புடையதா என்ன?

----

* 'ந்ருத்தம்' என்பதே இப்படிப்பட்ட வெறும் ஆடல் என்றும், ஆடலுடன் பாவ அபிநயமும் சேர்ந்ததே 'ந்ருத்யம்'என்றும் மற்றொரு பாகுபாடு தெரியவருகிறது.

16.7-ஆழப் பதியும் ஆற்றல்

நவரஸங்களை ஈஸ்வரபரமாகச் சேர்த்து, தர்மத்தோடு சேர்த்து ராமாயணம், மஹாபாரதம், புராணங்களையும், மஹான்களுடைய சரித்ரங்களையும் நாடகமாகப் போட்டால் அதற்கு மனஸிலே புகுந்து வேலை செய்யும் சக்தி அதிகம். 'ஸோஷல் தீம்', அது, இது என்று கெட்டதற்கு நாடகக் கலையைப் பிரயோஜனப்படுத்துவது நம் தப்புத்தான். காந்தி சொல்லியிருக்கிறார், "ச்ரவண

பித்ருபக்தி நாடகம்"என்று சின்ன வயஸில் அவர் பார்த்த ட்ராமா அவர் மனஸில் ஆழப் பதிந்துவிட்டதாக. பித்ரு பக்தி பற்றி எத்தனை வியாஸம் படித்தாலும், உபதேசம் கேட்டாலும் இப்படி ஜீவனுள்ள பாத்ரங்கள் அதை நடித்துக் காட்டுவதில் ஏற்படுகிற மாதிரி deep impression உண்டாக்க முடியுமா?

பாரதக் கதை சொல்வதையும் பாரதக் கூத்தாடுவதையும்தான் பொது ஜனங்களின் தர்மாபி விருத்திக்கான மிகப் பெரிய பணியாகப் பழைய கால ராஜாக்கள் கருதி அதற்கு ஸகல வசதிகளும், மான்யங்களும் கொடுத்துப் பேணியிருக்கிறார்கள் - பல்வேறு இடங்களை, பல நூற்றாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகளைப் பார்த்தாலே தெரியும். காதால் கானத்தோடு கேட்கிறதற்குப் பேச்சையும் எழுத்தையும்விட அதிகம் சக்தி உண்டு. இதைவிடவும் 'visual art' என்பதாகக் கண்ணாலும் பார்ப்பதற்கு இன்னும் ஜாஸ்தி சக்தி இருக்கிறது. பேச்சு, பாட்டு ஆகியவற்றோடு சேர்ந்த நாடகம், பாட்டோடு மட்டும் சேர்ந்த நாட்டியம் ஆகிய இரண்டு காட்சிக் கலைகளுக்கு இப்படி விசேஷமான சக்தி இருக்கிறது.

"க்ருஷ்ண கர்ணாம்ருத"த்தில் ஒரு ஸ்லோகம்,
கஸ்தூரீதிலகம் லலாட பலகே வக்ஷஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவ மௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம்*
ஸர்வாங்கே ஹரிசந்தநம் ச கலயன் கண்டே ச முக்தாவளிம்
கோபஸ்த்ரீ-பரிவேஷ்டிதோ விஜயதே கோபாலசூடாமணி:**

என்று இருக்கிறது. பாலக்ருஷ்ணன் நெற்றியிலே கஸ்தூரிப் பொட்டும், மார்பிலே கௌஸ்துப மணியும், மூக்கு நுனியில் முத்துப் புல்லாக்கும், உள்ளங் கையிலே புல்லாங்குழலும், மணிக்கட்டிலே கங்கணமும், கழுத்தில் முக்தாஹாரமும், ஸர்வாங்கங்களிலும் சந்தனப் பூச்சும் தரித்துக்கொண்டு, இடையர் குலத்துக்கே முடிமணியாக கோபிகா ஸ்த்ரீகள் புடைசூழப் பிரகாசிக்கிறான் என்று இது வர்ணிக்கிறது. இதை வாயால் சொல்லி, காதால் கேட்டு மனக்கண்ணிலே சித்ரமாகக் கொண்டு வந்தால் ஏற்படுகிற ஆனந்தத்தை விடப் பன்மடங்காக ஒரு தேர்ந்த நடீயானவள் பக்தியுள்ளத்தோடு அபிநயம் பிடித்து ஆடிக் காட்டினால் உண்டாய்விடும்.

ராதையோ யசோதையோ கிருஷ்ணனுக்கு இப்படித் திலகமிட்டு, சந்தனம் பூசி, கங்கணம் ஹாரம் புல்லாக்கு முதலானவற்றைப் போட்டுவிடுவதாக பக்திக் கல்பனையில் அபிநயித்துக் காட்டினால் பரவசமாயிருக்கும்.

புல்லாக்கைப் பற்றிச் சொல்கிறேன். vFg ரூபங்களில் ரொம்ப அழகு லலிதாம்பிகை;புருஷர்களில் ரொம்ப அழகு ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி;இந்த இரண்டு பேரின் அழகும் சேர்ந்து, ஸ்த்ரீ புருஷ ஸௌந்தர்யம் முழுக்க வாய்ந்தவர் கிருஷ்ணர் என்று ஒரு ஸ்லோகமிருக்கிறது. இப்படி vFg லக்ஷணமும் அவரிடம் இருப்பதால்தான் நகைகளில் புல்லாக்கையும் சொல்லியிருக்கிறது.

இந்த நகைகளையும், இன்னும் இதில் சொல்லாமல் விட்ட மயில்பீலி, மகரகுண்டலம், பீதாம்பரம், தண்டை, கொலுஸு எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு ஆடிக் காட்டினால், இவற்றைச் சூட்டுகிற ராதையின் ப்ரேமை அல்லது யசோதையின் வாத்ஸல்யம், அதற்குப் பாத்திரமாகிற க்ருஷ்ணனின் குறும்பு, கருணை முதலான பாவங்கள் ஆகியவற்றையும் அபிநயித்துக் காட்டினால் நாம் அந்த க்ருஷ்ண லோகத்துக்கே போய்விட்ட உணர்ச்சியை உண்டாக்கி விடலாம். கோபிகா ஸ்திரீகள் மாத்திரமின்றி நாமும் புடைசூழ நமக்கு நடுவிலேயே பகவான் இருக்கிறாற் போன்ற அநுபவத்தை அடைந்துவிடலாம். க்ருஷ்ண கர்ணாம்ருதம் நேத்ராம்ருதமாகக் கண்ணுக்கும், ஹ்ருதயாம்ருதமாக உள்ளத்துக்கும் தித்திக்கும்.

நல்லது, கெட்டது இரண்டையும் மனஸில் ஆழப் பதிப்பதற்கு காந்தர்வ வித்யைகளுக்கு சக்தி இருக்கிறது. நாம்தான் புத்திசாலிகளாக இவற்றில் நல்லதை மட்டும் பெறும்படியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆபாஸமாகச் சித்திரம் போடலாம்;சிலை பண்ணி வைக்கலாம். அது மனஸைத் தீவிரமாகக் கலக்கத்தான் செய்யும். இதற்குப் பதில் ஒரு தெய்வ ரூபத்தைச் சித்திரமாகப் போட்டுப் பார்த்தால், ஸாக்ஷ£த் அம்பாளுக்கு ஒரு விக்ரஹம் பண்ணிப் பார்த்தால் எவ்வளவு பாராயணம், தியானத்திலும் உண்டாகாத பக்தியும் ஆனந்தமும் இதன் தர்சனத்திலேயே பெறலாம்.

ஸௌந்தர்ய லஹறி ஸ்லோகமிருக்கிறது;தேவராம், ஆழ்வார் பாசுரம், தாயுமானவர் பாடல் இப்படித் தமிழில் கணக்கு வழக்கில்லாமல் தெய்வ ஸம்பந்தமான அநுபவ வாக்குகள் இருக்கின்றன. இவற்றை வெறுமே படித்தாலே மனஸைத் தொடுகின்றன. ஆனால் பாவமறிந்து, அதற்குப் பொருத்தமாக ராகம் போட்டு கானம் செய்துவிட்டாலோ நம் கல் நெஞ்சுகூடக் கரைந்து போகிறது.

16.8-தேவார திவ்யப் பிரபந்த மரபுகள்

இதனால்தான் தேவாரகர்த்தாக்களான அப்பர், ஸுந்தரர், ஸம்பந்தர் முதலானவர்களே அவற்றை பண் என்கிற ராகங்களில் அமைத்து ஈஸ்வரார்ப்பணம் செய்திருக்கிறார்கள். இசையே வடிவானவன் என்று ஈஸ்வரனையே பல விதத்தில் ஸங்கீதத்தில் ஈடுபட்டவனாக வர்ணித்துமிருக்கிறார்கள். ஒரு பெரிய ட்ரெடிஷன் வேதங்களை ஸ்வரம் மாறாமல் எத்தனையோ யுகங்களாகக் காத்துக்கொடுத்து வந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டுக்கு ஒரு பெருமையாக இன்னொரு ட்ரெடிஷனில் ஓதுவாமூர்த்திகள் சுமார் 1,400 வருஷங்களாகத் தேவாரப் பண்களை மூல ரூபத்தில் காப்பாற்றிக் கொடுத்து வந்திருக்கிறார்கள். பூஜையிலேயே நீராஜனத்துக்குப் பிறகு ஓர் அங்கமாகப் பிரதேச பாஷைப் பாட்டுக்கள் பாட வேண்டுமென்றிருக்கிறது. அந்தப்படிக் கோவில்கள் தோறும் தேவாரம் ஓதும்படியாக சோழ ராஜாக்கள் மான்யம் கொடுத்து இந்த இசை மரபை வளர்த்து விட்டிருக்கிறார்கள்.

திவ்யப் பிரபந்தங்களும் பண்களில் பாடப்பட்டு வந்தவைதாம்;ஆனால் பிற்பாடு இப்போது சொல்கிற மாதிரி ராகமில்லாமல் ஏதோ ஒரு பிராஸத்தில் சொல்வதாக ஆகிவிட்டது என்று சொல்லி ஆராய்ச்சியாளர்கள் சான்றுகள் காட்டுகிறார்கள். வைஷ்ணவ ஆசார்யர்கள், 'இந்தப் பிரபந்தங்களைத் தமிழ் வேதம் என்று கொண்டாடினால் மட்டும் போதாது; எப்படி வேதமானது முழுக்கப் பாட்டாக இல்லாமல் இரண்டு மூன்று ஸ்வரங்களில் மட்டுமே ஏறி இறங்குகிற மாதிரி ஓதப்படுகின்றனவோ கிட்டத்தட்ட அப்படித்தான் இந்தத்

தமிழ் மறையையும் ஓதவேண்டும்'என்றே இப்படி மாற்றி ஏற்பாடு பண்ணியிருப்பார்களோ என்னவோ?

16.9-பக்தி உபசாரமாக

அதெப்படியானாலும் பூஜா பத்ததியிலேயே பகவானுக்குச் செய்கிற அறுபத்துநாலு உபசாரங்களில் ந்ருத்த-கீத-வாத்யங்கள் இவற்றை ஸமர்ப்பிக்கச் சொல்லியிருப்பதாலேயே இவையெல்லாம் தெய்விகமானவை என்று தெரிகிறது. வேத ஸ்வரங்களின் அடிப்படையிலேயே ஸங்கீத ஸப்த ஸ்வரங்களை ஏற்படுத்தியிருப்பதும், மந்த்ர சாஸ்த்ரத்திலுள்ள முத்ரைகளையே பரதநாட்டியத்திலும் வைத்திருப்பதுமே போதும், நம்முடைய காந்தர்வக் கலைகளுக்குள்ள உயர்ந்த தெய்விக ஸ்தானத்தைக் காட்டுவதற்கு.

நம் மனஸ் ரொம்பவும் சஞ்சல ஸ்வபாவமுள்ள தாகையால் தெய்வ ஸம்பந்தமான நூல்களை, ஸ்தோத்ரங்களை நாமே படிக்கும்போதும், சொல்லும் போதுங்கூட மனஸ் கொஞ்ச நாழிக்கு அப்புறம் வேறெங்கேயோ ஓட ஆரம்பிக்கிறது. ஆனால் இந்தச் சலன மனஸையும் இழுத்து அதிக நாழி தன்னில் தோய்த்து வைத்துக்கொள்ளும் சக்தி சில்ப, கீதக் கலைகளுக்கு இருக்கிறது. ஒரு அழகான சிற்பம், சித்ரம் என்றால் நீண்ட நாழி அதையே நாம் பார்த்துக் கொண்டிருக்கும்படிப் பண்ணுகிறது. "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து", "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்", "பொன்னார் மேனியனே"போன்ற பக்தி பரவசத்தில் பிறந்த அம்ருதவாக்குகளை நாமாகச் சொல்லும்போது அந்த அம்ருதத்தை அரை நிமிஷம் ஒரு நிமிஷந்தான் ருசி பார்க்க முடிகிறது என்றால் இவற்றையே அததன் பாவத்திற்கேற்க உருக்கமான ரக்தி ராகங்களிலோ, கம்பீரமாயிருக்கிற கன ராகங்களிலோ, இழைத்து இழைத்து, பலுக்கிப் பலுக்கி கானம் செய்தால் கால்மணி அரைமணி கூட ஒரு விருத்தத்தையே விந்யாஸம் செய்தாலும் அவ்வளவு நேரம் மனம் அதிலே தோய்ந்திருந்து தெய்வ ஸ்மரணத்தில் விலகாமலிருக்கிறது. அம்ருதத்திலேயே ஒரு தேவஜாதி மாம்பழத்தை ஊறப்போட்டு விட்டால் எப்படி அதை ரொம்ப நாழி கொஞ்சம் கொஞ்சமாக

ஆஸ்வாதம் பண்ணலாமோ அப்படி அம்ருத வாக்கு ஸங்கீதப் பழத்தில் ஊறும்போது ஆகிறது. அதனால் நாம் தப்பாகப் பிரயோஜனப்படுத்திக் கொள்வதால் கீதமும் நிருத்யமும் சித்த விகாரத்தை உண்டாக்குவதாயிருந்தாலும் வாஸ்தவத்தில் இவை நம்முடைய சலன சித்தத்தை ஈஸ்வரனிடம் நன்றாக நிறுத்தி, அப்புறம் அந்த லயப்பில் ஈஸ்வரன் என்றுகூட ஒன்று தெரியாமல் சித்தமே ஸமாதியில் நிறுத்தப்படுவதற்கு உபயோகமாகிறது. அலை பாயும் சித்தத்தை நிலை பாவ வைக்கக் கலை உதவுகிறது. அதனால்தான் பூஜையின் உபசாரங்களில் சேர்த்தார்கள்.

16.10-ஜாதிதர்மம்

ஈஸ்வரனுக்கு நாட்ய உபசாரம் நடக்க வேண்டுமென்பதில்தான் தேவதாஸிகள் என்று ஏற்பட்டது. 'தேவ தாஸி'என்பதற்கு நேர் தமிழ் 'தேவு அடியாள்'. ஈஸ்வரனின் அடிமை என்று அர்த்தம். அவனையே கல்யாணம் பண்ணிக் கொண்டதாகப் பொட்டு கட்டிக் கொண்டு அவனுக்கு ந்ருத்யோபசாரம் பண்ண வேண்டியவள். நடைமுறையில் இது வேறு எப்படியோ போய்விட்டது. தேவதாஸி தடுப்புச் சட்டம் என்றே ஸமீபத்தில் ஸர்க்கார் செய்ய வேண்டியதாகி விட்டது. தேசத்தின் ஒழுக்கத்தைக் காப்பாற்ற இப்படிச் சில கார்யம் பண்ண வேண்டியிருக்கிறது. ஆனாலும் சாஸ்த்ர பூர்வமாக விதித்த ஒரு உபசாரம் ஸ்வாமிக்கு நடப்பதற்கில்லாமல் ஆகிவிட்டதே என்றும் இருக்கிறது. தேச ஒழுக்கத்தைக் காப்பாற்றவோ வளர்க்கவோ வேறே செய்ய வேண்டியவைகளைச் செய்ததாகவும் காணோம். 'இழுக்கத்'தைத்தான் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தேவதாஸி ஒழிப்பு ஒரு பக்கம் பண்ணிக் கொண்டு, இன்னொரு பக்கம் கலை அபிவிருத்தி என்று குல ஸ்த்ரீகளையெல்லாம் மேடைக்கு ஏற்றி டான்ஸ் பண்ண வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய மநுஷ்யர்கள் வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம் மாதிரி பரத நாட்டிய அப்யாயமும் ஏற்பட்டு விட்டது. vFg ரூபத்திலே ஒரு ஸதஸிலே மேடை ஏறி, ஆடை

அலங்காரங்களோடு நவரஸங்களைக் காட்டி ஆடுகிறதென்றால் அதனால் ஸாதாரண மநுஷ்யர்கள் இருக்கிற ஸ்திதியில்....... நான் சொல்ல வேண்டாம். 'நமக்கு ரூபமிருக்கிறது, ஆடத் தெரிகிறது. ஸபையை வசீகரித்து அப்ளாஸ் வாங்க முடிகிறது என்றால் அப்புறம் 'ஏன் ஸினிமாவில் சேர்ந்து இன்னம் ஜாஸ்தி புகழ் வாங்கக் கூடாது?'என்று ஆசை உண்டாகிறது. குல ஸ்திரீகளுக்கு இப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டாகிப் பல பேரோடு நடிப்பது, ஜனரஞ்ஜகம் என்பதற்காக இறங்கிக் கொண்டே போவது என்றெல்லாம் ஆகின்றன. கலையை வளர்க்க வேண்டியதுதான். அதற்காக அதைவிட இந்த தேசப் பெருமைக்கு மூச்சாக இருக்கிற ஸ்த்ரீ தர்மத்தைப் பலி கொடுக்க வேண்டியதில்லை. இதையெல்லாம் யோசிக்காமல் ஸமூஹ சீர்திருத்தம், கலை வளர்ச்சி என்று செய்கிற கார்யங்கள் தேவதாஸிகள் என்று ஒரு ஜாதி மட்டும் தனியாயிருப்பானேன் என்று .... இப்போது எல்லாவற்றையும் 'டெமாக்ரடைஸ்'பண்ணிப் பார்ப்பதாகத் தானே இருக்கிறது?இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது.

எல்லாக் கலைகளையும், தொழில்களையும் ஒழுங்காக வளர்ப்பதற்குத்தான் வர்ண வியவஸ்தை, ஜாதி வியவஸ்தை ஏற்படுத்தப்பட்டது. ஏதாவது ஒரு ஜாதியில் வியவஸ்தை கெட்டிருந்தாலும் அதைச் சீர்படுத்தி அதற்கான தொழிலை அதனிடமே விட்டு வைப்பதுதான் பொது தர்மம் கெடமாலிருப்பதற்கு வழி. ஒரு ஜாதியில் தப்பு இருக்கிறது என்று ஜாதியை எடுத்து விடுகிறோம் என்றால் அந்தத் தப்பு ஸர்வ ஜன வியாபகமாக ஆவதில்தான் முடியும். இந்தக் காலத்தில் எதற் கெடுத்தாலும் ஜாதி போக வேண்டுமென்பதே முழக்கமாயிருந்தாலும், வாஸ்தவத்தில் ஸமூஹத்துக்கு அவசியமான ஒவ்வொரு தொழிலுக்கும் என்றே ஒவ்வொரு ஜாதி என்ற 'ஏற்பாட்டைப்போல் பொது ஸமுதாய கார்யம் சீராக நடைபெற ஒரு alternative -உம் இல்லை. தப்பு நடந்தாலும் அதுவும் ஒரு சின்ன வரம்புக்குள் localise ஆகிவிடும்;அதை ஸரி செய்து விடலாம். ஜாதியில்லை என்று எடுத்தால், கட்டியிலே பிடிக்கிற சீழ் இருந்த இடத்தோடு நிற்கும்படித் தடுத்து ஆபரேட் பண்ணாமல் அதை தேஹம் பூராவும் ரத்த ஓட்டத்தோடு சேர்த்துவிடப் பண்ணுகிற மாதிரிதான் ஆகிறது.

சாஸ்திரப்படி ஆயுர்வேதத்தை அப்யஸிக்க வேண்டிய வைத்யனுக்கு அம்பஷ்ட ஜாதி என்று பேர். இது எப்படியோ நாவிதனுக்கு ஸம்பந்தப்பட்ட பேராகப் பின்னாளில் வந்திருக்கிறது. இரண்டு தலைமுறைக்கு முன்கூட நாவிதர்கள் கையில் பட்டுப் போட்டு நாடி பார்த்து மருந்து சொல்லியும் வந்தார்கள். இப்படியே காந்தர்வ வேதத்தை அப்யஸிக்க வேண்டியவர்கள் பரத ஜாதியினர், பரத புத்ரர்கள் என்பவர்கள்.

பரத சாஸ்திரம் எழுதின பரத ரிஷியின் பெயரிலே ஏற்படுத்தப்பட்ட ஜாதி. இதிலே எத்தனையோ தர்ம வியவஸ்தைகள். நாடகத்தில் தம்பதிகளாகவோ பரஸ்பரம் பிரேமை கொண்டவர்களாகவோ இரண்டு பாத்திரங்கள் வருகிறார்களென்றால் அவர்கள் நிஜ வாழ்க்கையிலும் தம்பதியாகவே இருக்க வேண்டும். எவன் வேண்டுமானாலும் எவளோடு வேண்டுமானாலும் நடிக்கலாம் என்ற அநியாயம் கிடையாது. நாடகம் ஆரம்பிக்கும்போது அதை அறிமுகம் பண்ணுபவனும், நடத்தி வைப்பவனுமான ஸ¨த்ரதாரன் வருவான். இவனுக்குப் பெண்டாட்டியாக வருகிற 'நடீ'யைக் கூப்பிடுவான். நிஜ வாழ்க்கையில் இவனுக்கு ஸம்ஸாரமாயிருப்பவளேதான் உடனே ட்ராமாவிலும் வருவாள். இவனுக்கு அஸிஸ்டென்டாக 'பாரிபார்ச்வகன்'என்று ஒருவன் வந்தால், அப்போது 'பாரிபார்ச்விகா'வாக அவனுடைய பெண்டாட்டியேதான் வருவாள். நடன், நடி என்ற actor, actress இருவரும் வாஸ்தவத்திலேயே ஸதி பதிகளாக இருக்க வேண்டுமென்பது நாடக சாஸ்த்ர ரூல்.

ஒரு நாடகத்தில் ச்ருங்கார ரஸம் பிரதானமாக இருந்தாலுங்கூட அதிலே விகாரத்தை உண்டு பண்ணும் சேஷ்டைகளை ஸ்திரீயும் புருஷனும் மேடைமேல் நடித்துக் காட்டக்கூடாது என்பதே விதி. இம்மாதிரி ஸம்பவங்களை கதாநாயகி ஸகியிடம் சொல்வதாகவோ, ஸகி வேறு யாரிடமோ சொல்வதாகவோ, அல்லது கதாநாயகனின் தோழனான விதூஷகன் சொல்வதாகவோ வருமே ஒழிய, நடித்துக் காட்டுவதாக வராது.

தார்மிகமான இந்த அம்சங்களை எடுத்துக்காட்டி இந்தப்படிதான் இப்போதும் ஸினிமா, ட்ராமாவிலே செய்ய வேண்டுமென்று இளையாற்றங்குடி ஸதஸில் ஒரு தீர்மானம் போட்டோம். ஏதோ என் திருப்திக்குப் போட்டதோடு ஸரி!

புருஷனே பெண் வேஷமும் போட்டால் தப்பில்லை என்று ஐம்பது அறுபது வருஷத்துக்கு முந்தி நினைத்து அநேகமாக அப்படித்தான் ட்ராமா நடந்து வந்தது. பிராம்மண ஜாதியில் பிறந்த பலர் பிரமாதமாகப் பாடி, பேசி ட்ராமாவில் பிராபல்யமாக விளங்கி வந்தார்கள். ஆனால் தர்ம சாஸ்திரத்திலே பெண் வேஷம் போட்ட புருஷன், புருஷன் வேஷம் போட்ட பெண் இரண்டு பேரையும் பார்த்தாலே தோஷம் என்று சொல்லியிருக்கிறது. வாஸ்தவமாகவே ஸதிபதியாயுள்ள ஆணும் பெண்ணும் ட்ராமாவிலே ஜோடியாக வந்தால்தான் அவர்களை ரொம்பவும் ச்ருங்கார சேஷ்டிதமாக நடித்துக் காட்டப் பண்ணுவது பண்புக் குறைவான காரியமென்று கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் தோன்றும். ஆணே ஆணோடு நடிக்கிறான், அல்லது பெண்ணே பெண்ணோடு நடிக்கிறாள் என்றால் அவர்கள் தொட்டுக் கொள்ளும்படி விட்டால் கூடத் தப்பு ஒன்றுமில்லையே என்று நினைத்து, அப்படி விடத்தோன்றும். இது அவர்களுக்குத் தப்பில்லையானாலும், பார்க்கிற அத்தனை பேருக்கும் மனோவிகாரமுண்டாகத்தானே செய்யும்?இதனால்தான் ஆணே பெண் வேஷம் போடுவது, அல்லது பெண் ஆணாக நடிப்பது இரண்டுக்கும் இடம் கொடுக்கக் கூடாதென்று தர்ம சாஸ்த்ரம் வைத்து விட்டது. அதற்கு ஒரு ஜாதி என்று தொழில்களையெல்லாம் முறைகெட்டுப் போகாதபடி வரம்புக் கட்டிக் காப்பாற்றியிருக்கிறது.

இதன்படி பிராம்மணனாகப் பிறந்தவன் உள்பட மற்ற எந்த ஜாதியாரும் பாட்டு, நடனம், நடிப்பு முதலியவற்றைத் தொழிலாக நடத்தப்படாது. தன் ஆத்க்ஷேமத்துக்காக எவன் வேண்டுமானாலும் நாதோபாஸனை, மற்ற கலைகளின் உபாஸனை பண்ணிக் கொள்ளலாம். பக்த ஜனங்களுக்காக நாமகீர்த்தனம் பண்ணலாம். உஞ்சவிருத்தி பஜனை பண்ணலாம். மற்றபடி தொழிலாக வைத்துக்கொண்டு கச்சேரி பண்ணிப் பணம் வாங்குவது கூடாது. இதை ஜீவனோபாயத் தொழிலாகவே பண்ணிப் பணம், பரிசு, பட்டம் எல்லாம் வாங்க அதிகாரமுள்ளவர்கள் பரத ஜாதியினர்தான். நம் சீமையில் மேளக்கார

ஜாதி என்று சொல்வார்கள். இப்போது 'இசை வேளாளர்கள்'என்ற வார்த்தை பத்திரிகைகளில் அடிபடுகிறது. அந்த ஜாதிப் பெண்டுகள் கோயில்களில் ஆடினாற்போல, புருஷர்கள் தெய்வ ஸந்நிதானத்தில், உத்ஸவ பவனியில் மேளம் வாசிப்பது முக்யமாய் கருதப்பட்டது. ஸதிர் கோஷ்டிக்கே சின்ன மேளம் என்றுதான் பேர். நாயனம், தவில், ஒத்து, ஜால்ரா கொண்ட கோஷ்டி பெரிய மேளம் என்றும், நாட்யம் பண்ணுபவர்கள், நட்டுவனார், பாட்டுப் பாடுகிறவர், பக்க வாத்தியம் வாசிப்பவர்கள் ஆகியோரைக் கொண்ட ஸதிர் கோஷ்டி சின்ன மேளம் என்றும் சொல்லப் பட்டு வந்தன. இப்படிக் குறிப்பாக இரண்டு மேளத்தில் அந்தக் குறிப்பிட்ட ஜாதி அடங்கி விட்டதால்தான் போலிருக்கிறது, பிராம்மணன் வாய்ப்பாட்டு, வாத்யங்கள் முதலிய எல்லாம் கற்றுக்கொண்டு தொழில் செய்தாலும், இது தவிர ராஜாங்கம், கம்பெனி, மிலிடரி என்று ஒரு வேலை பாக்கியில்லாமல் எல்லாவற்றுக்கும் போனாலும் மேளம், நாயனம் மட்டும் வாசிப்பதென்று போகவில்லை போலிருக்கிறது!எனக்கே இவன் எப்படி இது ஒன்றை மட்டும் விட்டு வைத்திருக்கிறான் என்று புரியாமல் தானிருந்தது. இப்போது பேசிக்கொண்டு போகிறபோது தான் இப்படி ஒரு காரணம் இருக்குமோ என்று தோன்றுகிறது.

வாழ்க்கைத் தொழிலாக இன்னார் எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்தது ஸமூஹத்தில் போட்டா போட்டி இல்லாமலிருப்பதற்காகத்தான். அதனால் ஒன்று தாழ்ந்தது என்று ஆகிவிடாது. வயிற்று ஸம்பந்தமான 'தொழில்' என்பதோடு சேர்க்கமால் ஆத்ம ஸம்பந்தமாகப் பார்த்தால் கீத, வாத்ய, நிருத்யங்களுக்கு ரொம்ப உயர்ந்த ஸ்தானமுண்டு.

16.11-நாத மஹிமை

பரமேஸ்வரனையேதான் ஸங்கீதத்துக்கு மூலமாகச் சொல்லியிருக்கிறது. மௌன தக்ஷிணாமூர்த்தி மாதிரியே வீணாதர தக்ஷிணாமூர்த்தி என்று உண்டு;விக்ரஹங்களில் பார்த்திருக்கலாம். '**நாததநும் அநிசம் சங்கரம்** 'என்று தியாகராஜ ஸ்வாமிகள் செய்திருக்கிற க்ருதியில் பரமேஸ்வரனுக்கு நாதமே சரீரம் என்கிறார். 'தநு' என்றால் சரீரம். இதிலே

ஈஸ்வரனின் ஸத்யோஜாதம் முதலான ஐந்து முகங்களிலிருந்தே ஸப்த ஸ்வரங்களும் வந்திருக்கின்றன என்று சரணத்தில் சொல்லியிருக்கிறார்*1. ஐந்து முகத்திலிருந்து ஏழு ஸ்வரமென்றால் எப்படி என்று புரியாமலிருந்தது. வாஸுதேவாச்சார், (காரைக்குடி) ஸாம்பசிவய்யர், மஹாராஜபுரம், செம்மங்குடி முதலிய இத்தனை பேரையும் விசாரித்துப் பார்த்தேன். முதலில் அவர்களுககும் புரியாமல் தானிருந்தது. அப்புறம் ஸங்கீத சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்த்ததில், ஷட்ஜமும் பஞ்சமும் ('ஸ'வும் 'ப'வும்) பிரக்ருதி ஸ்வரங்கள் என்பதாக ஈஸ்வரனைப் போலவே ஸ்வயம்புவாக இருப்பவை என்றும், விக்ருதி என்ற செயற்கை ஸ்வரங்களான மற்ற ஐந்துமே பரமேஸ்வரனின் ஐந்து முகங்களில் ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொன்றாகத் தோன்றின என்றும் அர்த்தம் த்வனிக்கும் படிப் பிரமாணங்கள் அகப்பட்டன.

விக்ருதிகளான K, க, ம, த, நி-களில் ஒவ்வொரு ஸ்வரத்திலும் இரண்டு திநுஸு இருக்க ப்ரக்ருதியான ஸ, ப-வில் ஒவ்வொன்றேதான் இருக்கிறது.

ஷடஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பனவற்றின் முதல் எழுத்துக்களை வைத்தே ஸ-ரி-க-ம-ப-த-நி என்பது. ஏழு ஐந்துக்கள் இயற்கையாகப் போடும் சத்தத்தை வைத்தே இந்த ஏழு ஸ்வரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஷட்ஜம் என்பது மயிலின் நாதம். இந்த 'ஸ'வுக்கு அடுத்த 'ரி'யாக வருவது ரிஷபத்தின் கர்ஜனை. 'க' - ஆடு போடும் சத்தம். 'ம'-க்ரௌஞ்ச பக்ஷியின் கூவல். 'ப'-குயிலின் ஒலி. 'த' - குதிரைக் கணைப்பு. 'G' -யானையின் பிளிறல்.

சீக்ஷ£ சாஸ்த்ரத்தில் மூச்சு எந்தெந்த அவயவங்களில் பட்டு வேத அக்ஷரங்கள் உண்டாக வேண்டுமென்று சொல்லியிருப்பது போலவே, ஸங்கீத சாஸ்த்ரங்களில் ஒவ்வொரு ஸ்வரமும் அடி வயிற்றிலிருந்து உச்சந்தலைவரை எப்படியெப்படி ச்வாஸ சலனத்தால் உண்டாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இப்படி ஆறு அவயவங்கள் ஸம்பந்தத்தில் பிறப்பதே 'ஷட்-ஜம்'. நாபி, ஹ்ருதயம், கண்டம், ரஸனம் (நாக்கு) , நாஸி ஆகிய ஐந்திலே ஸப்த ஸ்வரத்தின் ஸுந்தர தேவதைகள் பிரகாசிப்பதாக தியாகையர் 'சோபில்லு'க்ருதியில் சொல்கிறார்.

நாதோபாஸனை என்பது ஒரு பெரிய மந்த்ர சாஸ்த்ர, யோக சாஸ்த்ர ஸாதனை. ஸ்வச்சமான நாதோபாஸனை என்பது ஓம்கார உபாஸனையேயாதலால் இது பரம வேதாந்த ஸாதனையுந்தான். நாதம், பிந்து, கலை என்று மூன்று பெரிய தத்வங்கள், " **நாத விந்து கலாதீ நமோ நம** "என்று திருப்புகழ் பாடுகிறோம். அந்தப் பெரிய விஷயங்களுக்கு நாம் இப்போது போகவேண்டாம். இதிலே நாதம் சிவ ஸ்வரூபம், பிந்து சக்தி ஸ்வரூபம், சப்தத்துக்கு மூலம் நாதம், ரூபங்களுக்கு மூலம் பிந்து - அதாவது ஒலி, ஒளி என்பதில் ஒலிக்கு மூலம் நாதம், ஒளிக்கு மூலம் பிந்து என்ற அளவுக்குத் தெரிந்து கொண்டால் போதும். முடிவில் ரூபங்களும் சப்தங்களிலிருந்து உண்டாகிறவைதான்*2. நாதம், சப்தம் என்கிறவற்றுக்கிடையே வித்யாஸமுண்டு. சப்தம் என்பது வெளியிலே வருகிற ஒலிகள் அவற்றிலே பல உண்டு. நாதம் என்பது எந்த சப்தமானாலும் அதற்கு ஆதாரமாயிருப்பது;அதுவே சப்தம் ஒடுங்கிறபோதும் சேர்கிற ஸ்தானம்.

வியாகரண சாஸ்த்ரத்தில் சப்தத்தையே ப்ரம்மமாக நிலைநாட்டியிருக்கிறது. இதற்கு சப்த ப்ராம்மமாக நிலைநாட்டியிருக்கிறது. இதற்கு சப்த ப்ரம்மவாதம் என்று பேர். பாஷை இலக்கணத்தைச் சொல்லும்போது இப்படி வையாகரணிகள் (வியாகரண சாஸ்திரக்காரர்கள்) அதை பிரம்ம ஸ்வரூபமாகச் சொல்லியிருப்பதையே இன்னொரு விதத்தில் ஸங்கீத சாஸ்திரக்காரர்களும் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸங்கீதத்திலே நாதப்பிரம்ம உபாஸனை, நாதோபாஸனை என்கிற இடத்திலும் நாதம் என்பது வெறும் ஆதார சப்தம் மட்டுமில்லை. பாடுகிறவன் ஒரு ஸ்வர ஸ்தானத்தை ச்ருதியோடு சுத்தமாக தீர்க்கமாகப் பிடித்து அது பூர்ணமாக ஓங்கி முடிந்து விழுந்து லயிக்கிற இடத்தில் அது ச்ருதியோடு கவ்வி அத்வைதமாகக் கரைந்து, நிறைந்து போகிறதே அதைத்தான் நாதம் என்பது. இந்த இடத்திலே பாடுகிறவனும் அதோடு கரைந்து நிறைந்து விடுவான். அவன் மட்டுமில்லை. கேட்கிற ஸஹ்ருதயர்களானவர்களும் அப்படியே சொக்கித் தன்னை மறந்து அந்த நாதத்தில் ஐக்யமாயிருப்பார்கள். இதிலே பெறுகிற ஆனந்தந்தான் ஆத்மானந்தம், பிரம்மாநந்தம் என்று மத சாஸ்திரங்களின் உச்ச லக்ஷ்யமாய்

சொல்லியிருப்பது. நாதம் பிரம்மத்துக்குக் கொண்டுபோகிறது, சப்தம் நாதத்துக்குக் கொண்டுபோகிறதென்றால் இதில் ஒன்றின் தன்மை இன்னொன்றுக்கு இல்லாவிட்டால் எப்படி முடியும்?அதனால்தான் சப்தமே பிரம்மம் என்று சொல்வதாக சாஸ்த்ரம் ஏற்பட்டிருக்கிறது. சப்த பிரம்ம வாதத்தில் சப்தம் நித்யமானது, பூர்ணமானது என்று இரண்டு லக்ஷணங்கள் சொல்லியிருக்கிறது. Time என்கிற காலத்துக்குக் கட்டுப்படாமல் இருப்பதுதான் 'நித்யம்'. Space என்னும் இடக் கட்டுப்பாடு இல்லாமல் எங்கும் பரவியிருப்பதுதான் 'பூர்ணம்'. இப்படி எக்காலத்திலும் எவ்விடத்திலுமாக நிறைந்திருப்பது சப்தம் என்று நம் பூர்விகர்கள் சொன்னதை இப்போதுதான் ஸயன்ஸ் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. பதினாயிரம் மைலுக்கு அந்தண்டை பாடுவதை இங்கே நாம் ரேடியோவில் கேட்கிறோமென்பதால், சப்தம் space -ல் எங்கும் வியாபகமாயிருப்பது prove ஆகிறது. இதோ இப்போது நான் பேசுவதை ஒருத்தர் டேப்-ரிக்கார்ட் பண்ணுகிறார்;க்ராமஃபோன் என்று ரிகார்ட் பண்ணுகிறார்கள். எத்தனையோ வருஷத்துக்கு அப்புறம் இந்த ரிகார்ட்களைப் போட்டாலும் சப்தங்கள் மாறாமலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. என்ன prove ஆகிறது?சப்தம் காலத்தால் நசிக்காமல் நித்யமாய் இருக்கிறது என்று நிரூபணமாய் விடுகிறதோல்லியோ?

பூர்விகர்களின் அதீந்த்ரிய சக்தியும் போய், நவீன ஸயன்ஸும் வராத காலத்திலே, 'சப்தம் நித்யமானது, பூர்ணமானது'என்றால் "இதென்ன பேத்தல்?நாம் எழுப்புகிற ஒலி இதோடு தீர்ந்துபோனதுதான். இதெப்படி நித்யம்?மிஞ்சினால் அது நூறு, இருநூறு கஜம் போகட்டும். பெரிய இடி இடித்தால்கூட நாலைந்து மைலுக்கு மேல் ஓசை போகிறதில்லை. இதை பூர்ணம் என்றால் எப்படி?" என்றுதான் தோன்றியிருக்கும். இப்போது ஸயன்ஸ் வந்து நம் சாஸ்த்ர அபிப்ராயத்தைக் காப்பாற்றிக் கொடுக்கிறது!

Time- space concept களுக்கு அதீதமாக இப்படி நித்யமாயும் பூர்ணமாயும் இருப்பதுதான் விபுத்வம்.

----

*1. ஸத்யோஜாதி பஞ்சவக்த்ரஜ ஸரிகமபதநீ வரஸப்தஸ்வர.

*2. "தெய்வத்தின் குரல்"இரண்டாம் பகுதியில் "வேதம்"என்ற கட்டுரையில் "ஒலியும் படைப்பும்"என்ற உட்பிரிவு பார்க்க.

16.12-அகண்ட சப்தமும், கண்ட சப்தமும்

ஆதியாய், அநாதியாய், ஸர்வ வியாபகமாய் இருந்து வருவது சப்தமே. நம்முடைய காது என்கிற இந்த்ரியத்தின் குறைபாட்டால்தான் நமக்கு அது புரியாமலிருப்பது. அதீந்த்ரிய சக்தி உள்ளவர்களுக்கு அகண்ட ஆகாசம் பூராவும் வியாபித்துள்ள சப்தம் அநுபவ ஸித்தியாகும். இப்போது நமக்குள்ள காதுக்குக் கேட்டாலே சப்தமிருப்பதாகவும், கேட்காவிட்டால் சப்தமில்லை என்றும் நாம் நினைக்கிறோம். நம் பார்வை, நம் கேள்வி இவற்றால்தான் அகண்டமாயுள்ள விஷயங்கள் கண்டிதமாக, குறுக்கப்பட்டதாக ஆவது. நம் பார்வையை வைத்துத்தான் ஸ¨ர்யன் உதயமானான், அஸ்தமித்தான் என்று சொல்வதுகூட. வாஸ்தவத்தில் ஸ¨ர்யன் இருக்கிற படியேதான் இருக்கிறான். பூமி அவனைச் சுற்றி வருவதால் நம் த்ருஷ்டியில்தான் உதயாஸ்தமனங்கள் ஏற்படுவது. இந்தப் பந்தலில் ஒரு த்வாரத்தின் வழியாக ஸ¨ர்ய வெளிச்சம் வந்தால்தான் அது நமக்கு எடுப்பாகத் தெரிகிறது. பந்தலுக்கு வெளியிலே இந்த சின்ன beam (ஒளிக்கற்றை) தானே விஸ்தாரமாகப் பிரகாசிக்கிறது?அங்கே நமக்கு இத்தனை ஸ்பஷ்டமாகத் தெரிவதில்லையே! அப்படித்தான் அகண்ட சப்தம் நமக்குப் பிடிபடுவதில்லை;அதைக் கண்டம் பண்ணினால் பிடிபடுகிறது.

இன்னொன்றுகூட. பந்தலிலே த்வாரம் வட்டமாயிருந்தால் உள்ளே விழுகிற வெளிச்சமும் வட்டமாயிருக்கிறது. த்வாரம் சதுரமாய், முக்கோணமாய் இருந்தால் வெளிச்சமும் அந்தந்த வடிவங்களையே எடுத்துக் கொள்கிறது. இதனால் ஒரு குழந்தை என்ன நினைக்குமென்றால், ஒளி என்பதே வட்டமாயோ, சதுரமாயோ, முக்கோணமாயோ தானிருக்கிறது என்று நினைக்கும். வாஸ்தவத்தில் ஒளிக்கு ஏது ரூபம்?ரூபம் என்றால் space -ல்

கட்டுப்படுவது. ஒலியும் ஒளி மாதிரி இந்தக் கட்டுப்பாட்டைத் தாண்டி பூர்ணமாயிருப்பது.

த்வாரத்தின் வழியே 45 டிகிரியில் ஸ¨ர்ய வெளிச்சம் வருகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள் - அப்போது நாமும் அந்த டிகிரியில் பார்வையைச் சாய்த்துப் பார்த்தால்தான் ஓட்டை வழியாக ஸ¨ர்யனைப் பார்க்க முடியும். வேறே டிகிரிக்களில் பார்த்தால் ஸ¨ர்யன் தெரியாது;நீல ஆகாசம்தான் தெரியும். ஆனால் அப்போது நம் பார்வையெல்லையிலுள்ள ஆகாசப் பகுதியில் ஒரு கழுகு பறந்தால் அப்போது அதன்மேல் ஸ¨ர்ய வெளிச்சம் தடுக்கப்பட்டுப் பிரதிபலிப்பதைப் பார்த்து, 'ஓஹோ, அங்கே ஒளி பரவியிருக்கிறது'என்று புரிந்து கொள்வோம். அதாவது அகண்டமாயிருப் பதைப் புரிந்து கொள்ள முடியாத நமக்கு அது புரிகிற மாதிரி குறுக்கித் தரவும் இன்னொரு உபகரணம் (agency) தேவைப்படுகிறது. உதாரணமாக, ரொம்பவும் புழுங்குகிறது என்று நாம் சொல்லும்போதுகூட நம்மைச் சுற்றி அகண்டமான வாயு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் MCP என்கிற ஒரு உபகரணத்தை 'ஏஜென்ஸி'யைக் கொண்டு அதைக் குறுக்கிக் கண்டமாக்கினால்தான் காற்று இருப்பது நமக்கு அநுபவத்தில் தெரிகிறது. இப்படி அகண்ட ஒளியில் அல்லது காற்றில் கழுகு, விசிறிபோல் ஏதோ ஒரு 'ஆப்ஜெக்ட்'குறுக்கிட்டு அதைத் துண்டித்தே நமக்குப் புரிய வைப்பதற்கு 'அபிகாதம்'என்று பெயர். 'அபிகாதம்'என்றால் அடிப்பது. அகண்டத்தை disturb பண்ணி நாம் புரிந்து கொள்ள வைப்பது அபிகாதம்.

சப்தமும் இப்படியேதான், அதன் அகண்ட ஸ்வரூபம் நமக்குப் புரிவதில்லை. கையை ஒன்றோடொன்று அடித்து 'அபிகாதம்'பண்ணினால் அப்போது நமக்கு சப்தம் கேட்கிறது. இப்படியே நம் தொண்டையிலுள்ள உறுப்புக்கள் பல தினுஸாக அசைந்து காற்றை அடிக்கிறபோது அகண்டக் காற்று கண்டமான சின்ன அலைகளாகி நாம் போடுகிற எல்லா சப்தங்களாகவும் வெளிப்படுகிறது. அகண்ட ரூபத்தில் சாந்த ஸமுத்ரமாக அடங்கியிருக்கிற நித்யமான சப்தத்தில் நம்முடைய தொண்டைக்குள் உள்ள உறுப்புக்களாலும், நாக்கு, பல், உதடு ஆகியவற்றாலும் 'அபிகாதம்'உண்டாக்கிப் பலவித ஒலிகளை ஏற்படுத்துவது ஸமுத்ரத்திலே பல குமிழ்களை உண்டாக்குகிற மாதிரியாகும்.

இதற்கு 'ஸ்போடம்'என்று பெயர் சொல்லியிருக்கிறது. 'ஸ்போடம்'என்பதற்குள்ள பல அர்த்தங்களில் ஒன்று கொப்புளம் உண்டாக்குவது. சாந்த சப்த ஸமுத்ரத்தில் பலவித ஒலிக் குமிழ்களை உண்டுபண்ணுவதால் இது ஸ்போடம்.

அபிகாதத்தால் உண்டாகிற சப்தத்துக்கு 'ஆஹத சப்தம்'என்று பெயர். 'ஆஹத'என்றாலும் 'அடிக்கப்பட்ட' என்றே அர்த்தம். இங்கே அடிப்பது, அடிக்கப்படுவது என்று இரண்டு இருந்தாக வேண்டும். அகண்ட சப்தமென்பது இப்படியில்லாமல், தன்னை அடித்து எழுப்ப இன்னொன்று இல்லாமலிருந்தால்தான் 'அகண்டம்', 'பூர்ணம்' என்ற லக்ஷணங்களுக்குப் பொருந்தியதாக இருக்க முடியும். இப்படி, அடித்து எழுப்பாமல், தன்னில் தானேயாய் உண்டாகி இருக்கிற அகண்ட சப்தம் வெளி ஆகாசத்தில் இருப்பது போலவே ஜீவனின் ஹ்ருதயாகாசத்திலும் இருக்கிறது. இங்கே நிலவுகிற பிராண சப்தத்தை 'அநாஹத த்வனி', அதாவது 'அடிக்காமலே உண்டாகிற ஒலி' என்று சொல்லியிருக்கிறது. பேச்சு, வாய்ப்பாட்டு, வாத்ய ஸங்கீதம் என்று எதுவானாலும் நாம் ஆஹதமாக ஸ்போடத்தின் மூலமே சப்தம் உண்டாக்குகிறோம்.

க, ங,ச, ஞ என்கிற மாதிரி அக்ஷரங்களாக இருக்கிற பல சப்தங்கள் உண்டாக்குவது ஒருவித ஸ்போடம். ஸப்த ஸ்வரங்கள் என்னும் சப்தங்களை உண்டு பண்ணுவது இன்னொரு வித ஸ்போடம். நாம் பேசும்போது ஸப்த ஸ்வரங்களோடு சேர்க்காமலே க, ங, ச, ஞ முதலான அக்ஷர ஒலிகளையும் உண்டு பண்ணுகிறோம். வீணை, ஃப்ளுட், ஃபிடில், நாயனம் முதலிய வாத்யங்களில் அக்ஷர சப்தமில்லாமல் ஸ்வர ஸ்தானத்தில் வெவ்வேறு ஒலிகளை மாத்திரம் உண்டாக்குகிறோம். அக்ஷர சப்தங்கள் கொண்ட பேச்சு மநுஷ்ய வர்க்கம் ஒன்றுக்கே உரித்தானது.

16.13-ஒலி விஞ்ஞானத்தில் பூர்விகரின் ஞானம்

மேலே சொன்ன வாத்யங்களையும் இன்னும் தாள வாத்யங்களான ம்ருதங்கம், கஞ்ஜிரா, கடம், தவில், ஜாலரா போன்றவற்றையும் எப்படிப்

பண்ணுவதென்று ஸங்கீத சாஸ்த்ர புஸ்தகங்கள் விவரமாகச் சொல்கின்றன. இதற்கு என்ன அர்த்தம்? அதைப் பண்ணினவர்களுக்கு எப்படியெப்படி அபிகாதங்கள், ஸ்போடங்கள் உண்டாகின்றன என்ற ஸயன்ஸ் நுணுக்கம் நன்றாகத் தெரியுமென்று அர்த்தம். வீணைத் தந்திகளின் நீளம், அவற்றின் பருமன், அதிலே உள்ள மெட்டுகளுக்கிடையே இருக்க வேண்டிய தூரம், ஒரு நாயனம் அல்லது புல்லாங்குழலின் துவாரங்கள் இருக்க வேண்டிய பரிமாணம், துவாரங்களுக்கு நடுப்பற (நடுவில்) இருக்க வேண்டிய தூரம் முதலியன 'ஸயன்டி:பிக்'காக இல்லாவிட்டால் அதில் ஸங்கீதத்துக்கான ஸ்வரங்கள் உண்டாக முடியாது. தாள வாத்யங்களில் ஸ்வர பேதங்களைக் காட்டும் சப்தமுமில்லை;க, ங, ச, ஞ மாதிரி சப்தமுமில்லை;ஆனால் லய வித்யாஸங்களைப் பரிமளிக்கக் காட்டுகிறதாகச் சில விதமான ஸங்கீதாம்சமுள்ள (musical value உள்ள) சப்தங்கள் அவற்றில் எழுப்பப்படுகின்றன. ஒரு ம்ருதங்கம் என்றால் அதில் வலது பக்கத்தில் ஒரு விதமான ஒலி. இடது பக்கம் வேறு ஒரு விதமானது. அதற்கு எப்படியெப்படித் தோல்கள் இருக்க வேண்டும், மருந்து இருக்க வேண்டும் என்றெல்லாம் ரூல்கள் இருக்கின்றன. ம்ருதங்கத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் மொத்தமான வாத்யத்துக்கும் எவ்வளவு நீள அகலங்கள் இருக்கவேண்டுமென்றும் திட்டமான கணக்கு இருக்கிறது. இப்படியே ஒவ்வொரு வாத்யத்துக்கும் இருக்கிறது. நாயனத்தில் இப்போதெல்லாம் ரொம்பவும் வழக்கத்திலிருப்பது இரண்டடிக்கு மேலே நீளமாக இருக்கிறதல்லவா?இதற்கு 'பாரி'நாயனம் என்று பெயர். இன்னொரு தினுஸும் உண்டு. அது சுமார் ஒரு முழத்துக்கு உட்பட்ட நீளமுள்ளதாகவே இருக்கும். அதற்கு 'திமிரி'நாயனமென்று பெயர். அதிலே ச்ருதி தூக்கலாக இருக்கும். நம் மடத்திலே வாசிப்பது திமிரிதான். 'திமிரி'க்கும் 'பாரி'க்கும் நடுபட்டதாக ஒரு தினுசும் (இடை பாரி என்று) உண்டு. இந்தப் பரிமாண நுணுக்கமெல்லாம் நன்றாகத் தெரிந்து ஸங்கீத நூல்களில் சொல்லியிருக்கிறது. எந்தெந்த வாத்யத்துக்கு என்னென்ன மரம், என்னென்ன தோல், என்னென்ன தந்தி என்றெல்லாம் வரையறை இருக்கிறது. அப்போதுதான் அதற்குரிய ஸுநாதம் உண்டாகும். வீணை, தம்புரா போன்ற வாத்யங்களில் குடமும் (தண்டி என்னும்) மற்ற பாகமும் ஒரே தாய் மரத்திலிருந்தே எடுத்துச் செய்ததாயிருக்க வேண்டும். ஏனென்றால்

அப்போதுதான் வாத்யம் முழுவதன் மர மெடீரியலும் ஒரே வயசுள்ளதாயிருந்து ஒரே சீரான ஸ¨க்ஷ்மமான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. யாழைப் பற்றி இத்தனை விவரம் தானென்றில்லாமல் பழந்தமிழ் நூல்களில் இருக்கிறது. அந்த யாழிலும் அடக்க முடியாத ஸங்கீத அம்சங்களைக் கொண்ட 'யாழ்மூரிப் பதிகம்' என்பதைத் திருஞான ஸம்பந்தர் பாடியிருக்கிறார். அவருக்கு அத்தனை ஸங்கீத சாஸ்திர ஞானமிருந்திருக்கிறது. ஆசாரியாளுக்கு எத்தனை ஆழமான ஸங்கீத ஞானமிருந்தது என்பது 'ஸௌந்தர்ய லஹரி'யிலுள்ள 'கலே ரேகாஸ்-திஸ்ரோ' என்ற ஸ்லோகத்திலிருந்து தெரிகிறது*1.

அக்ஷரஙளோடு சேராத சப்த ஸ்போடங்கள், அவற்றை உண்டாக்கக்கூடிய அபிகாதங்கள் ஆகியவற்றைப் பற்றிய பூரா அறிவும் இருந்தே ஸங்கீத சாஸ்த்ரகாரர்கள் இந்த வாத்யங்களைப் பண்ணுகிற முறைகளைத் தந்திருக்கிறார்கள். நாம் பேசும்போது அக்ஷரங்களோடு சேர்ந்த ஸ்போடங்களுக்குரிய அபிகாதங்களை இயற்கையாகவே (நாச்சுரலாக) அதன் டெக்னிக் என்ன என்று தெரியுமால் un conscious ஆக நம் தொண்டை, வாய் முதலானவற்றில் உண்டு பண்ணிவிடுகிறோம். ஆனாலும் மந்த்ரங்களைச் சொல்லும்போது பரிபூர்ண அக்ஷர சுத்தமிருக்க வேண்டும் ஏனென்றால் கண்டம் போல் தோன்றினாலும் இந்த மந்திரங்கள் அகண்ட ஆகாச சப்தத்திலிருந்தே ரிஷிகளின் திவ்ய ச்ரோத்ரத்தில் கேட்கப்பட்டு அவர்களால் நமக்குத் தரப்பட்டிருப்பவையாகும். அவற்றை உள்ளபடி perfect -ஆக உச்சரித்தால்தான் அந்த அகண்ட சக்தியின் பலனை அடையமுடியும். இப்படி சுத்தமாக அக்ஷரங்களை வரையறுத்துச் சொல்ல வேண்டுமென்பதற்காக இதைப்பற்றிய டெக்னிக்கை ரொம்பவும் ஸயன்டி∴பிக்காகச் சொல்வதற்காகவே வேதத்தின் அங்கங்களில் ஒன்றான சிக்ஷ£ சாஸ்த்ரம் என்பது ஏற்பட்டிருக்கிறது*2. அந்த சாஸ்த்ரம் அடிவயிற்றிலிருந்து ஆரம்பித்து இன்னின்ன மாதிரிக் காற்றுப் புரளும்படிப் பண்ணி, அது இன்னின்ன இடத்திலே பட்டு வாய் வழியாக இப்படியிப்படி வரவேண்டும் என்று அக்ஷரங்களை அப்பழுக்கில்லாமல் அக்யூரேட்டாக நிர்ணயம் பண்ணிக் கொடுத்திருக்கிறது. ஆக வைதிக மதத்தின் ஆதாரமான பதினெட்டு

வித்யாஸ்தானங்களில் வேதாங்கமான சிக்ஷ£ சாஸ்த்ரம் அக்ஷர சப்தங்களையும், உபவேதமான காந்தர்வ சாஸ்த்ரம் அக்ஷரம் கலக்காத ஸங்கீத ஸ்வரங்களையும் பற்றிய லக்ஷணங்களைத் தெரிவிக்கின்றன.

----

1. * "தெய்வத்தின் குரல்"முதற் பகுதியிலுள்ள "ஸங்கீத லட்சியம் சாந்தமே"என்ற உரை பார்க்க.

2. * பார்க்க :"தெய்வத்தின் குரல்"இரண்டாம் பகுதியில் "சி¬க்ஷ: வேதத்தின் மூக்கு"என்ற உரை.

16.14-புலன் வழியே புலனுக்கு அப்பால்

மந்த்ர சப்தங்களுக்கு எப்படிக் கண்டமாயிருந்து கொண்டே அகண்டத்தில் சேர்க்கிற சக்தியிருக்கிறதோ, அப்படியே ஸங்கீத சப்தங்களுக்கும் (சக்தி) இருக்கிறது. ஸ்வரஸ்தானம் ஒன்றை தீர்க்கமாக (கார்வையாக) ச்ருதி சேர நீட்டியோ, அல்லது கமகமாக நன்றாக இழைத்தோ மூர்ச்சனையின் உச்ச நிலையை ஸ்வச்சமாகத் தொட்டு விடுகிறபோது கண்டமே அகண்டாநுபவத்தில் சேர்த்து விடுகிறது.

இந்த அகண்டாநுபவம்தான் அத்தனை வேத, வேதாந்த, யோக, மந்திர, தந்திர சாஸ்திரங்களுக்கும் லக்ஷ்யமாயிருப்பது. இதை ஸாதித்துத் தரும் ஸ்தானத்தில் தான் ஓசையை, ஒலியை நாதப் பிரம்மம், சப்தப் பிரம்மம் என்று ஸாக்ஷ£த் பரமாத்மாவாகச் சொல்வது. அதை goal -ஆக நினைத்து, அதாவது காது என்ற இந்திரியத்தின் மூலம் மனஸின் இந்திரிய ஸுகத்துக்காக இன்றி, ஆத்ம ஸௌக்யத்தை goal -ஆகக் கருதி ஸங்கீத அப்யாஸம் பண்ணும்போது அது 'நாதோபாஸனை', 'நாத யோகம்'என்ற உசந்த பெயரைப் பெறுகிறது.

அர்த்தத்தோடு, அக்ஷரத்தோடு கலந்து மனமுருகிப் பாடும்போது பாடுகிறவருக்கும் கேட்கிற ஸதஸ் முழுதற்கும் பரமாத்மாவிடம் தோய்ந்து நிற்கிற பெரியதான இன்பம் கிட்டுகிறது. ஜபம், தபம், அஷ்டாங்க யோகம்,

தியானம் முதலானவை இந்திரிய ஸம்பந்தமில்லாதவையாகவும் ஸுலபத்தில் அப்யஸிக்க முடியாதவையாகவும் இருப்பவை. ஆனால் அவற்றின் பலனான அதே ஈஸ்வரானுபவம் இந்திரியத்துக்கு ஸௌக்கியமளிப்பதாகவும், ஸுலப ஸாதகமாகவும் உள்ள ஸங்கீதத்தால் கிடைத்துவிடுகிறது.

இந்திரிய விஷயங்கள் போல இருப்பவற்றாலேயே இந்திரியத்துக்கு அப்பாற்பட்ட ஆத்மானந்தத்தை, ஈஸ்வர ஸாக்ஷ£த்காரத்தை ஏற்படுத்தித் தருவது நம் மதத்தின் ஒரு சிறப்பு அம்சம். பூஜையில் செய்கிற பஞ்சோபசாரம் என்கிற கந்த, புஷ்ப, தூப, தீப, நைவேத்யங்கள் பஞ்சேந்திரிய ஸௌக்யத்தைத் தரக்கூடியவைகளால் ஆனதுதான். உபநிஷத்துக்களிலே பரமாத்மாவை ஓம்கார ஸ்வரூபமாக, ரஸ ஸ்வரூபமாக, ஜ்யோதி ஸ்வரூபமாகவெல்லாம் சொல்லியிருக்கிறது ஓம்காரம் கேட்கிற இந்திரியத்துக்கானது; ரஸம் ருசி பார்க்கிற இந்திரியக்கானது; ஜ்யோதிஸ பார்க்கிற இந்திரியத்துக்கானது. இந்திரிய ஸௌக்யங்களைச் சிற்றின்பம் என்கிறோமானாலும் பரமாத்ம ஸம்பந்தத்தோடு அநுபவிக்கும்போது இவையே பேரின்பம் தருகின்றன என்பதை உபநிஷத்துக்கள் பரமாத்மாவையே இன்பவடிவமாக,, ஆனந்த ஸ்வரூபமாகச் சொல்லும்போது நிலைநாட்டி விடுகின்றன. இந்திரிய நுகர்ச்சி வஸ்துக்களாகத் தோன்றுகிறவைகளிலும் ஈஸ்வர ஸாந்நித்யமிருப்பதை பகவானும் விபூதி யோகத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஈஸ்வரன் இல்லாத இடமில்லை என்றால், இவற்றிலும் அவனுடைய ஸாந்நித்யம் இருந்துதானே ஆகவேண்டும்?பகவான் தன் விபூதிகளைச் சொல்லும்போது, "ஜ்யோதிஸ்களில் நான் ஸ¨ர்யன்" என்னும்போது ஒளியாக இருப்பதைச் சொல்லிக் கொள்கிறார். இங்கே உஷ்ணமும் அவர்தானென்றாகிறது. அவரே "மாஸத்தில் நான் மார்கழி" என்கிறபோது பனியாகவும் குளிராகவும் இருக்கிறார். தான் ரிதுக்களுக்குள் இயற்கை இன்பம், இந்த்ரிய ஸௌக்யம் முழுவதும் தரும் வஸந்தமாக இருப்பதாகச் சொல்கிறார். இங்கே 'வஸந்தம்'என்பதற்கு 'குஸுமாகர' என்ற பெயரை பகவான் சொல்கிறார். அதாவது 'புஷ்பித்துக் குலுங்கச் செய்கிற ரிது' என்கிறார். புஷ்பத்தைச் சொன்னதால் ஸ்பர்சானந்தம், நேத்ரானந்தம்,

க்ராணானந்தம் என்னும் மூக்கின் இன்பம் மூன்றையும் சொன்னதாகி விடுகிறது. பூர்ணத்தை பின்னப்படுத்திப் பார்க்கும்போது நமக்கு எதெல்லாம் சிற்றின்பத்தை மாத்திரம் தந்து பேரின்பத்தைத் தடுக்கின்றனவோ அவற்றாலேயே ஈஸ்வர உபாஸனை செய்யும் போது அவை பூர்ணர்த்தில் நம்மைச் சேர்க்கும் பேரின்பத்துக்கு ஸாதனமாகும் என்பதே தாத்பரியம்.

சப்தமே பிரம்மம், ரூபமே பிரம்மம், ரஸமே பிரம்மம், கந்தமே பிரம்மம், ஸ்பரிசமே பிரம்மம் என்று இப்போதே நம்மால் முழுதும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும் இதைக் கொஞ்சம் ஞாபகாமாவது படுத்திக் கொண்டேயிருந்தால் ஒருநாள் பலன் தெரியாமல் போகாது. இவற்றிலே ஸங்கீதத்தில் மெய்மறந்து போய் துளித்துளியாவது சப்த ப்ரம்ம அநுபவத்தைப் பெறுவது மற்றதைவிட நமக்கே சற்று நன்றாகத் தெரிவதாயிருக்கிறது.

ஸங்கீத கலை என்பது கொஞ்சங்கூட கஷ்டமில்லாமல் மோக்ஷத்தையே வாங்கிக் கொடுக்கக் கூடியது. வீணா வாத்யம் ஒன்றை வைத்துக்கொண்டு ஸ்வரசுத்தியோடு கலந்து வாசித்து ஆனந்தமயமாக இருக்கக் கற்றுக்கொண்டு விட்டால் யோகம் பண்ண வேண்டாம், தபஸ் பண்ண வேண்டாம். ஸுலபமாக மோக்ஷத்தையே அடைந்து விடலாம். அதோடு யோகி யோகம் செய்தால், தபஸ்வி தபஸ் செய்தால் அவர்களுக்கு மட்டுமே ஆத்மானந்தம் உண்டாகிறது. ஸங்கீதம் ஒன்றில்தான், அதை அப்யஸிக்கிறவர் மட்டுமின்றி கேட்கிற எல்லோருக்குமே அதே அளவு ஆத்மானந்தம் உண்டாகிறது.

வாய்ப்பாட்டு, வீணை மாதிரி ஸ்வரங்களோடு சேர்ந்த ஸங்கீதம்தானென்பதில்லை;ம்ருதங்கம், ஜால்ராவில்கூட நல்ல லயசுத்தத்தோடு ஸுநாதம் கலந்து வந்து விட்டால் அது தெய்விக ஆனந்தத்தில் நம்மைச் செருகிவிடுகிறது.

16.15-வாத்திய, நாட்டிய வகைகள்

வாத்தியங்களில் தந்த்ரீ வாத்யம், ரந்த்ர வாத்யம், சர்ம வாத்யம், லோஹ வாத்யம் என்று நாலு வகைகள். தந்த்தீ என்றால் தந்தி. வீணை, தம்பூர், யாழ், வடக்கத்தி ஸிதார், ஸாரங்கி, மேல் நாட்டிலிருந்து வந்துள்ள பிடில் முதலியவை தந்த்ரீ வாத்யங்கள். ரந்த்ரம் என்றால் த்வாரம். புல்லாங்குழல், நாயனம், வடக்கத்தி ஷெனாய், மேல்நாட்டு க்ளாரினெட் முதலியன ரந்த்ர வாத்யங்கள். மற்ற வித வாத்யங்களில் கைவிரலால் மீட்டுவது, கையால் bow போடுவது, தட்டுவது முதலியவற்றால் ஸங்கீத ஒலி உண்டாகிறதென்றால் இந்த ரந்த்ர வாத்யங்களில் மட்டும் வாயினால் காற்றைச் செலுத்தி ஸங்கீதத்தை உண்டுபண்ண வேண்டியிருக்கிறது. ஹார்மோனியம்தான் கையால் இயக்கப்பட்டும் ஒருவித ரந்த்ர வாத்யமாக இருப்பது. அதிலே வாய்க்குப் பதில் காற்றைக் கொடுக்க bellows (துருத்தி) இருக்கிறது. ஃப்ளூட்டிலும், நாதஸ்வரத்திலும் த்வாரங்களைக் கை விரலால் மூடித் திறக்கிறோமென்றால், ஹார்மோனியத்தில் பில்லைகளை விரலால் அழுத்துவதும் எடுப்பதுமாக இருக்கிறது. 'ப்ரின்ஸிபிள்'ஒன்றுதான். சர்ம வாத்யம் என்பவை தோலைக் கட்டி அடித்து சப்தம் உண்டாக்குபவை. ம்ருதங்கம், தவில், நகரா, பேரிகை, கஞ்ஜிரா முதலியன சர்ம வாத்யங்கள். லோஹ வாத்யம் என்பதில் அதைச் செய்வதற்கு உபயோகப்படும் லோஹம் தான் முக்யம். மோர்ஸிங், ஜால்ரா, சேமக்கலம், மணி முதலானவை இதில் சேர்ந்தவை. இவை ஒரே ஒரு லோஹத்தால் மட்டும் ஆனவையாயிருக்கும். தந்தி, த்வாரம் எதுவும் இராது. மண்ணால் மட்டுமே ஆனது. கடம் பானைதான் அது. களிமண்ணிலேயே ஒரு தினுஸான china clay என்கிற பீங்கானால் ஆன கிண்ணங்களுக்கு ஜலதரங்கம் என்று பெயர். கிண்ணங்களில் ஜலத்தை விட்டு அவற்றின் ஓரத்தில் இரண்டு மெல்லிசான மூங்கில் குச்சியால் தட்டி ஸப்தஸ்வரங்களை உண்டாக்குகிறார்கள்.

வாத்யங்கள் பலவகை இருப்பதுபோல நாட்டியத்திலும் பல உண்டு. முக்யமாக தாண்டவம், லாஸ்யம் என்ற இரண்டு, புருஷர்கள் செய்வது, பௌருஷ கம்பீரம் நிறைந்தது தாண்டவம். ஸ்திரீகள் செய்வது, லலிதமாக இருப்பது லாஸ்யம். பரமேஸ்வரன் செய்வது தாண்டவம், சிவ தாண்டவம், நடராஜ தாண்டவம், ப்ரளய தாண்டவம், ஊழித் தாண்டவம் என்றெல்லாம்

சொல்கிறோம். அம்பிகை ஆடுவது லாஸ்யம். 'லாஸ்ய ப்ரியா', 'லயகரி' என்று 'லலிதா ஸஹஸ்ர நாம'த்தில் பெயர்கள் வருகின்றன.

16.16-தெய்வங்களின் தொடர்பு

ஸங்கீத, நாட்யக் கலைகளுக்கு தெய்வங்களோடேயே இப்படி ஸம்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறது. நடராஜமூர்த்தி போல லோகத்திலே எதுவும் கிடையாது என்று இன்று லோகத்திலிருக்கிற அறிஞர்களெல்லாரும் சொல்கிறார்கள். நம் தேசத்துக்கு ரொம்ப உசந்த 'ஸிம்ப'லாக வெளி தேசத்திலிருக்கிறவர்களுக்கு ஏதாவது 'ப்ரெஸன்ட்'பண்ணுவதென்றால் ராஜாகங்த்தினரே நடராஜ விக்ரஹம்தான் கொடுக்கிறார்கள். அந்நிய தேச ம்யுஸீயங்களுக்கு மில்லியன், இரண்டு மில்லியன் டாலர் விலைக்குப் போவது நம் கோவில்களிலிருந்து திருடின நடராஜாதானென்றால், அந்த நடராஜாவின் சிறப்பு முழுவதும் நடனத்தால் ஏற்படுவதுதான். நர்த்தன கணபதி, காளிங்க நர்த்தன மூர்த்தி, நடன ஸரஸ்வதி என்றெல்லாமும் நாட்டியமூர்த்திகளிருக்கின்றன.

வாத்யங்களை எடுத்துக் கொண்டாலும் ஒரே தெய்வ ஸம்பந்தந்தான். கலைத் தெய்வம் என்றே சொல்கிற ஸரஸ்வதி கையில் வீணை இருக்கிறது. வீணைதான் நம் ஸங்கீதத்துக்கே ஜீவநாடி என்பார்கள். அதனால் ஒவ்வொரு தெய்வத்துக்கும் உள்ள வீணைக்கென்று ஒரு பெயர் உண்டு. 'கச்சபி' என்பது ஸரஸ்வதியின் வீணை. 'விபஞ்ச்யா காயந்தீ' என்ற 'ஸௌந்தர்ய லஹரி'ஸ்லோகத்தில், ஸரஸ்வதியானவள் அம்பிகையின் ஸந்நிதியிலே சிவலீலைகளை வாயால் பாடிக்கொண்டே 'விபஞ்சி'வாசிக்கிறாள் என்று ஆசார்யாள் வர்ணித்திருக்கிறார். 'விபஞ்சி'என்பது வீணைக்கு ஒரு பொதுப் பெயர்.

நாரத கானம் என்பதாக ஸங்கீதத்தில் பரம உத்க்ருஷ்டமானதைச் சொல்கிறோம். த்யாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸங்கீத சாஸ்த்ர புஸ்தகத்தைக் கொடுத்து அநுக்ரஹித்தவர் நாரதர்தான். "நாரத குருஸாமி"என்று அவர் மேலேயே தியாகையர்வாள் பாடியிருக்கிறார். நாரதர் கையிலும் வீணை

இருக்கிறது. அந்த வீணைக்கு 'மகதி' என்று பேர். " **எம் இறை நல் வீணை வாசிக்கும்மே** " என்பதாக அப்பர் ஸ்வாமிகள் பரமசிவன் வீணாகானம் செய்து கொண்டிருப்பதைச் சொல்கிறார். கைலாஸத்துக்கு அடியிலே மாட்டிக் கொண்ட ராவணேச்வரன் அதிலிருந்து விடுபடுவதற்காகத் தன் சிரஸுகள், நரம்புகள் ஆகியவற்றை அறுத்து வீணை பண்ணி, அதில் ஸாமகானத்தை வாசித்தே ஈஸ்வரனைப் HgF பண்ணி மீண்டானென்று கதை. கிருஷ்ண பரமாத்மா என்றாலே அவரோடு இணை பிரிக்க முடியாததாகப் புல்லாங்குழல் வந்து விடுகிறது. வேணுகோபாலன், முரளீதரன் என்றெல்லாம் அவருக்குப் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ப்ரதோஷ ஸ்தோத்ரம் என்று ஒன்று உண்டு. அதிலே அத்தனை தெய்வங்களையும், கீத வாத்யங்களோடு ஸம்பந்தப்படுத்திச் சொல்லியிருக்கிறது. ஸாக்ஷ£த் பரமேஸ்வரன் ப்ரதோஷ காலத்தில் அம்பாளை ரத்ன பீடத்தில் உட்கார்த்தி வைத்துவிட்டு அவளுக்கெதிரே, கைலாஸ மலையிலே நடனம் செய்கிறானாம். அவனுடைய டான்ஸுக்குத்தான் ஆர்க்கெஸ்ட்ராவாக அத்தனை தேவர்களும் வாத்யம் வாசிக்க வந்திருக்கிறார்களாம். வாக்தேவியான ஸரஸ்வதி வீணை வாசிக்கிறாளாம், வீணைக்கு 'வல்லகி'என்று ஒரு பேர். அந்தப் பேரைதான் இங்கே சொல்லியிருக்கிறது. இந்த்ரன் புல்லாங்குழல் ஊதுகிறானாம். பிரம்மா ஜால்ரா போடுகிறாராம். லக்ஷ்மி வாய்ப்பாட்டுப் பாடுகிறாளாம். விஷ்ணு ம்ருதங்கம் வாசிக்கிறாராம். நந்திகேச்வரைத்தான் பொதுவில் ம்ருதங்கத்துக்கு சொல்வது வழக்கம்.

ஆனால் ப்ரதோஷ தாண்டவத்தின் போது நந்திகேச்வரர் யஜமானனின் லாவண்யத்தில் தன்னையே மறந்து போய்விட்டார் போலிருக்கிறது*1. அதனால் மஹாவிஷ்ணு ம்ருதங்கம் வாசித்திருக்கிறார். பரமேஸ்வரனோடு மஹாவிஷ்ணுவுக்கு எத்தனை விதமான உறவுகளிருக்கின்றன என்று நம் ஆசார்யாள் 'சிவாநந்தலஹரி'யில் "பாணத்வம் ரிஷபத்வம்" என்ற ஸ்லோகத்தில் அடுக்கிக் கொண்டு போகிறபோதும் அவர் சிவ தாண்டவத்துக்கு மத்தளம் கொட்டுவதை " **ம்ருதங்க வஹதா** "என்று குறிப்பிடுகிறார்.

ப்ரதோஷ நாட்யத்தில் அம்பிகையை சிவ தாண்டவத்தை வெறுமே பார்த்துக்கொண்டு ரஸிப்பவளாக மாத்திரம் சொல்லியிருக்கிறது. இந்த ஆனந்த தாண்டவத்தை மட்டுமின்றிக் கல்பப் பிரளயத்தில் எல்லாவற்றையும் தன்னில் ஒடுக்கிக் கொண்டு ஈஸ்வரன் ஸம்ஹார தாண்டம் செய்யும்போதும் அம்பாள் ஒருத்தி மட்டும் அழிந்து போகாமல் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று லலிதா ஸஹஸ்ர நாமத்தில் சொல்லியிருக்கிறது:

மஹேச்வர மஹா கல்ப மஹா தாண்டவ ஸாக்ஷிணீ.

அந்தப் பரதேவதையையே ஸங்கீத தேவதையாகச் சொல்லும்போது ராஜ மாதங்கி, ராஜ ச்யாமளா என்று பெயர். " **மீநாக்ஷி மே முதம் தேஹி ... ராஜ மாதங்கி** "என்று தீக்ஷிதர் பாடியிருக்கிறபடி மதுரையிலே நித்ய வாஸம் பண்ணுகிற மீநாக்ஷியானவள் பராசக்தி ஸங்கீதத்தின் அதி தெய்வமாக இருக்கப்பட்ட அவஸரம் (கோலம்) தான். காஞ்சீபுரத்தில் காமாக்ஷி கோயிலிலும் இவளுக்குத் தனி ஸந்நதி இருக்கிறது. 'ச்யாமளா தண்டகம்'இப்படி ஸங்கீதமூர்த்தியாக இருக்கப்பட்ட பராசக்தியைப் பற்றியதே. ' **நவரத்னமாலா** 'என்பதாக ' **ஓம்கார பஞ்ஜர சுகீம்** ' என்று ஆரம்பிக்கிற - ஸ்துதி ஒன்றைக் காளிதாஸன் செய்திருக்கிறான். அதுவும் இந்த ச்யாமளா தேவியைப் பற்றியதுதான். அதிலே இவளும் ஸரஸ்வதியைப் போலவே கையில் வீணை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. "வீணா ஸங்க்ராந்த காந்த ஹஸ்தாம்". நிறத்தில் மட்டும் அவளுக்கும் இவளுக்கும் நேர் வித்யாஸம். ஸரஸ்வதி நல்ல வெளுப்பு. இவளே சாம்பல் கறுப்பு. அதனால்தான் 'ச்யாமளா'என்று பெயர். இவளுடைய லாவண்யம் நிறைந்த கையின் நுனிவிரல் வீணையின் தந்திகளில் எப்போதும் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அவள் இப்படி இருக்கிறாளென்றால் நாமும் ஸங்கீத உபாஸனையால் அவளைப் பிடித்துவிடலாம் என்று அர்த்தம். நிறைய சாஸ்த்ராப்யாஸம் பண்ணி, யோகாதிகளால் சித்தத்தை நிறுத்தி வசப்படுத்த முடியாத நாமும் ஸ்வரங்களில் லயிப்பதால் மனஸை நிறுத்தி அவளுடைய சரணார விந்தத்தில் அதைக் கிடத்திவிடலாம். ஸுலபமாக அவள் கடாக்ஷத்தைப் பெற்றுவிடலாம்.

'ப்ரதோஷ ஸ்தோத்ர'த்தைப் போல அந்த ப்ரதோஷ கால நடராஜ தாண்டவத்தை வர்ணிப்பதாக 'சம்பு நடன அஷ்டகம்'என்று ஒன்று உண்டு. இது பதஞ்ஜலி பண்ணின ஸ்தோத்ரம். அவர் ஆதிசேஷன் அவதாரம். அவரைப் போலவே நடராஜாவோடு ஸதா இருக்கும் வ்யாக்ர பாதர் புலிக்கால் பெற்றவர். பாம்பு, புலி முதலான க்ரூர ஜந்துக்களையும் ஸங்கீத நாட்யங்கள் ப்ரேமையாய், சாந்தமாய் பண்ணிவிடுகிறதென்று அர்த்தம். இந்த 'அஷ்டக'ஸ்லோகங்களின் சொல்லமைப்பாலும், கதியாலும், சொல்கிறபோதே எதிரே நாட்டியம் நடக்கிறது போன்ற ப்ரமை தட்டும். இதை ப்ரதோஷ பூஜையில் ந்ருத்யோபசாரம் பண்ண வேண்டிய இடத்தில் வாஸ்தவமாகவே சந்த்ர மௌளீச்வரருக்கு நாட்டியமாக அர்ப்பணிக்க வேண்டுமென்று எனக்கு ஆசையாயிருந்தது. மடத்திலே ஸ்த்ரீகள் ஆடுவதற்கு இடமில்லை. அதனால், த்ரவியத்தையோ கீர்த்தியையோ முன்னிட்டதாயில்லாமல் பூஜாங்கமாக ஈஸ்வரனுக்கு ஸமர்ப்பணமாவதுதானே என்பதால் நம்முடைய ஆஸ்தான (ஸங்கீத) வித்வானையே*2 இந்த ஸ்தோத்திரத்துக்கு அபிநயம் பிடிக்கும்படி சொன்னேன். அவர் முதலில் பயந்தேபோய்விட்டார். 'எத்தனையோ வருஷம் நாட்ய சி¬க்ஷ சொல்லிக் கொண்டால்தானே இது வரும்?தமக்குப் பாட்டில் உள்ளது போல டான்ஸில் பரிசயமில்லையே'என்பதால் பயப்பட்டார்.

நான்தான் "ஒன்றும் பயப்பட வேண்டாம்!நடராஜாவை நினைத்துக் கொண்டு, குயவன் களிமண்ணைத் துவைக்கிற மாதிரி காலாலே பண்ணிக்கொண்டு, சொல்போகிற போக்கில் கையைக் காட்டிக்கொண்டு போ. ஸரியாய் வந்துவிடும்"என்று தைரியம் கொடுத்தேன். அப்படியே நன்றாக அமைந்தது. சிதம்பரத்திலே சுத்த மத்தளம் என்கிற 'ஸ்பெஷல் டைப்'மத்தளம் நடராஜாவுக்கு வாசிக்கப்படுகிறது. அதனால் இந்த சம்பு நடன அபிநயத்தின் போதும் இங்கே சுத்தமத்தளம் வாசிக்குமாறு ஏற்பாடு செய்தது. சங்க நாதத்தையும் சேர்த்துக் கொண்டது. இதனால் பூஜையிலேயே ஸாந்நித்யம் கூடுதலாகி விட்டாற்போல இருந்தது.

இதற்கெல்லாம் என்ன அர்த்தமென்றால் ச்ருதி-லய சங்கீதம், ந்ருத்யம் எல்லாமே உபஸனையாக அப்யஸிக்கப்பட்டால் நம்மை ஈஸ்வர ஸந்நிதானத்திலேயே கொண்டுபோய் நிறுத்திவிடும். முடிவிலே அந்த

ஸந்நிதானம் எங்கே இருக்கிறது?நம் ஹ்ருதயத்துக்குள்ளேயேதான். அதற்குள்ளே அடங்கி ஆத்மானந்தத்தை அடைய ஸங்கீதம் ஒரு வழி.

----

*1. நந்திகேச்வரரின் இரு கொம்புகளுக்கிடையேதான் ஈசன் ப்ரதோஷத் தாண்டவம் செய்வது.

*2. ஸ்ரீவாஞ்சியம் ராமசந்திரய்யர்.

16.17-இசையால் அன்பும், அமைதியும்

வேதாந்தத்திலே எல்லாம் உள்ளத்துக்குள்ளே ஹ்ருதய குஹையில் சாந்தத்தில் ஒடுங்கிவிடுவதாகச் சொல்லியிருக்கிறது. அந்த சாந்தத்திலே சேர்க்கத்தான் ஸங்கீதம் ஏற்பட்டிருக்கிறது*. சியாமளா என்று ஸங்கீத மூர்த்தியாகப் பராசக்தி இருக்கிறபோது அவளுடைய உள்ளம் அப்படியே குழைந்திருக்கிறது (ம்ருதுள ஸ்வாந்தாம்) ;அவள் பரம சாந்தையாக இருக்கிறாள் (சாந்தாம்) என்று காளிதாஸன் 'நவரத்னமாலா'வில் சொல்கிறார். உள்ளக் குழைவு என்பது ப்ரேமை, கருணை ஸங்கீதத்தினாலே ஆத்ம சாந்தம் உண்டான பிறகு, ஸகலமும் அந்த ஆத்மாவே என்பதால் எல்லாவற்றிடமும் அன்பு. பொங்குவதைத்தான் சாந்தாம், ம்ருதுள ஸ்வாந்தாம் என்று கவி சொல்கிறார். இந்த்ரிய இன்பமாயில்லாமல் ஆத்மானந்தத்தில் சேர்ப்பதாலேயே ஸங்கீதம் இப்படிப்பட்ட ப்ரேமையுள்ளத்தை உண்டாக்குகிறது. நினைத்துப் பார்த்தாலே மனம் குளிர்கிறது. அம்பிகை வீணையில் சப்த ஸ்வரங்களையும் மீட்டியபடி, அந்த ரீங்காரத்திலேயே சொக்கிப் பரம சாந்தையாக இருக்கிறாள்;அவளுடைய ஹ்ருதயம் புஷ்பம் மாதிரி மிருதுளமாக ஆகி கருணை மதுவைப் பொழிகிறது. இதை நினைக்கும்போது பக்தர்களுக்கும் மனம் குழைகிறது. பக்தியும், அன்பும், சாந்தமும் தன்னால் ஏற்படுகின்றன. வர்ணானதீதமான சாந்தத்தில், ஆனந்தத்தில் முழுகியிருக்கிற ஸங்கீத அம்பிகை நமக்கும் சாந்தம், ஆனந்தம், அன்பினால் குழைந்த மனம் முதலியவற்றை அநுக்ரஹிக்கிறாள்.

'ஸங்கீத மூர்த்தி' என்கிறபோது அவள் உத்தேசம் பண்ணி, அதாவது deliberate -ஆக இப்படிச் செய்கிறாளென்று தோன்றவில்லை. ஸப்த ஸ்வரங்களில் ரமிக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவள் வீணையை மீட்டுவதாகத் தெரிகிறது. ***" ஸரிகமபதநி ரதாம் "***என்று ஸப்த ஸ்ப்தஸ்வரானந்தப் படுபவளாகவே ஸ்லோகத்தில் ஆரம்பித்திருக்கிறது. அவள் அப்படி ஆனந்தப்பட்டால், லோகம் பூரா அவளுக்குள் இருப்பதால் லோகமும் ஆனந்தப்படுகிறது. இப்படி லோகம் ஆனந்தப்படுவதற்காகத்தான், லோகத்தில் ஆனந்தத்தை ஊட்டும் ஸங்கீதக் கலைக்கு அநுக்ரஹம் செய்வதற்காகத் தான் ஸப்த ஸ்வரங்களில் ரஸித்து அவளும் ஆனந்திக்கிறாள். இங்கே 'ஸரிகமபதநி'யில் களிப்பவள் என்று காளிதாஸன் சொல்லியிருக்கிறாற் போலவே தியாகையர்வாளும் ஈஸ்வரனை ***'நாத தநும் அநிசம்'*** கீர்த்தனத்தில் ***'ஸரிகமபதநி வர ஸப்த ஸ்வரவித்யாலோலம்'*** என்கிறார். நாம் உத்தேசிக்காவிட்டாலும் ஸப்தஸ்வரத்தில் ஹ்ருதயம் லயித்து இருந்துவிட்டால் சாந்த ரஸம் தானாக உண்டாகிவிடும். 'சாந்தாம்' என்று காளிதாஸன் சொன்னதையேதான் தியாகையர் க்ருதியில் 'விமல ஹ்ருதய' என்று சொல்லியிருக்கிறது. விமல ஹ்ருதயம் என்பது அதில் சாந்தி, ப்ரேமை இரண்டும் அடங்கியிருப்பதைக் குறிக்கிறது. அதாவது காளிதாஸன் 'ம்ருதுள ஸ்வாந்த' என்பதில், சொன்ன அன்பும் 'விமல ஹ்ருதய என்பதில் வந்துவிடுகிறது. 'ஸ்வாந்தம்'என்றால் 'ஹ்ருதயம்'தான். ஸங்கீதத்தால் சாந்தம் வரும். அதேபோல சாந்த ரஸத்திலே ஸங்கீதம் தானாக நிறைந்துவிடும். இதனால்தான் ஸதாசிவ ப்ரம்மேந்திராள் போன்ற மஹாஞானிகள் கூடப் பாடியிருக்கிறார்கள். ஸங்கீதத்துக்காகவே ஸங்கீதம், அல்லது ஆத்மாவுக்காக ஸங்கீதம் என்று பாடிக் கொண்டிருந்தால்தான் நிறைந்த சாந்தம் அதிலேயே ஏற்படும். 'ஸங்கீதம் அப்யஸித்தும் அசாந்தமாயிருக்கிறதே'என்றால் மனஸ் வேறு எதையோ ஆசைப்படுகிறது என்று அர்த்தம்.ஸங்கீதத்தைக் கொண்டு திரவியமோ புகழோ வேண்டும் என்ற ஆசையிருந்தால் பூர்ணபலன், அதாவது நிறைந்த சாந்தம் ஏற்படாது. அப்போதுங்கூட சில சில ஸமயங்களில் சாந்தம் உண்டாகும் - தேன் எடுத்தவன் புறங்கையை நக்கிக்கொண்டு ஏதோ கொஞ்சம் ருசி பார்ப்பது

மாதிரி. பாக்கி தேனை அவன் ரஸாஸ்வாதம் பண்ணுவதில்லை. அது கடைக்குப் விலைக்குப் போகிறது.

இப்படி ஸங்கீதத்தை விலை பண்ணுவது, அதனால் புகழ் எடுப்பது என்கிறபோதுகூட வித்வான்கள் அவ்வப்போது தன்னை மறந்து பாடுகிறார்கள்; நம்மையும் 'தன்னை மறக்க'ப் பண்ணுகிறார்கள். இதிலே கொஞ்சம் சாந்தம், ஸந்தோஷம் அடைகிறோம். தியாகையர் மாதிரி ஹ்ருதய பூர்வமாக அதிலேயே ஈடுபட்டு வேறு பிரயோஜனம் வேண்டாமென்று இருந்துவிட்டால் நிறைந்த சாந்தம், பேரானந்தம் எல்லையில்லாமல் கிடைத்துவிடும். நல்ல நாதோபாஸகர்களானால் ஹ்ருதயம் புஷ்பம் போல் ம்ருதுவாகிவிடும். தியாகையர், கோபாலகிருஷ்ண பாரதி போன்றவர்களிடம் பழகினவர்கள், அவர்களுடைய ஹ்ருதயம் கருணையோடு மிருதுவாக இருந்தது என்று எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கும் உத்தமமான பாகவதர்களிடம் பழகுகிறவர்கள் அவர்களுடைய மென்மையான மனஸைப் பற்றிச் சொல்கிறார்கள்.

----

* "தெய்வத்தின் குரல்"முதற் பகுதியில் 'ஸங்கீத லக்ஷியம் சாந்தமே'எனும் உரை பார்க்க.

16.18-நாத-நாட்டியங்களிலிருந்தே ஸ்ருஷ்டியும் முக்தியும்

சக்தி, சக்தி என்று சொல்லப்படுகிறவளே இப்படி அடங்கின ஸமுத்ரமாக சாந்தமாயிருக்கிறாற்போல, வேதாந்த சாந்த விசாரமாக இல்லாமல் ப்ராணசக்தியின் விழிப்பையும் எழுச்சியையும் நமக்குள் பூர்ணமாக ஏற்படுத்திக் கொண்டு அதன் மூலமே முடிவில் அத்வைத சாந்தத்தில் சேர்க்கிற ஒரு மார்க்கம் உண்டு. குண்டலிநீ யோகம் என்று பெயர். அதைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்வதானால்:முகெலும்பின் அடியிலுள்ள மூலாதாரம் என்பதிலிருந்து உச்சந்தலை வரையில் ஒரு முக்யமான நாடி இருக்கிறது. மூலாதாரத்தில் இருக்கிற பிராண சக்தியை இந்த நாடி மூலம்

உச்சந் தலையில் சேர்த்து விட்டால் அத்வைத முக்தி ஸித்திக்கும். இந்த நாடியில் ஆறு சக்ரங்கள் இருக்கின்றன. பிராணாயாமம், மந்த்ரம், தியானம் முதலானவற்றால், எல்லாவற்றுக்கும் கீழேயுள்ள மூலாதார சக்ரத்திலிருந்து மேலே உள்ள ஒவ்வொரு சக்ரமாகக் 'குண்டலிநீ'என்கிற ப்ராண சக்தியை ஏற்றிக்கொண்டு போக வேண்டும். இவற்றில் ஹ்ருதயத்துக்கு நேரே இருக்கிற சக்ரத்தில் பிராணனையும் மனஸையும் நிறுத்தும்போது அங்கே தானாகவே 'அநாஹதமாக'ஒலிக்கிற பிரணவ சப்தத்தைக் கேட்க முடியும். அதனால் இதற்கு அநாஹத சக்கரம் என்றே பெயர். ஒவ்வொரு சக்கரத்திலும் சிவ-சக்தி தம்பதி ஒவ்வொரு ரூபத்திலிருப்பார்கள். அந்தந்த சக்கரத்தில் அதற்கான ரூபத்தில் பரமேஸ்வர பராசக்திகளை த்யானம் செய்ய வேண்டும். இந்த விஷயங்களை 'ஸௌந்தர்யலஹரி'யில் நம் ஆசார்யாள் சொல்லிக்கொண்டு வரும்போது மூலாதார சக்ரத்தில் அம்பாள் ஈஸ்வரன் இரண்டு பேருமே நடனம் செய்பவர்களாக விளங்குகிறார்கள் என்று சொல்கிறார்*. வாஸ்யம் என்ற பெண்களுக்கான நடனத்தைச் செய்யும் 'ஸமயா'என்னும் ரூபத்தில் அம்பாள் இருக்கிறாளாம். நவரஸ மஹா தாண்டவம் - தாண்டவம் தான் புருஷர்களின் நடனம் என்று முன்னேயே சொன்னேன் அதைச் செய்கிற ஆனந்த பைரவர் என்ற மூர்த்தியாக ஈஸ்வரன் இருக்கிறாராம். இங்கே அவர் ஆடுவது ஊழிக்கூத்து என்ற ஸம்ஹார நடனமல்ல. ஊழியில் அழிந்த லோகத்தை மறுபடி ஸ்ருஷ்டி செய்வதற்காகவேதான், ஜனக-ஜனனியாக, அம்மா-அப்பாக்களாகத் தாங்களிருவரும் ஸகல லோகங்களையும் பெற்றெக்க வேண்டுமென்றேதான் இங்கே பரமேஸ்வரனும் பராசக்தியும் நர்த்தனம் செய்கிறார்களாம். தாயின் அன்பு மிளிர்கிற லாஸ்யத்தை அம்பிகையும், தகப்பனாக உலகை அடக்கியாளுவதற்குரிய காம்பீர்யம் நிறைந்த தாண்டவத்தை சிவபெருமானும் மூலாதார சக்ரத்தில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனந்த பைரவி என்று ஒரு ராகத்தின் பேர் சொல்கிறோமே, இங்கே ஆனந்த பைரவரின் சக்தியாக இருக்கப்பட்ட ஸமயா தேவியின் இன்னொரு பெயர்தான் அது.

நாதம், நடனம் இவற்றிலிருந்தே ஸ்ருஷ்டி என்று சொல்வதிலிருந்து இந்த காந்தர்வ வித்யைகளின் பெருமை தெரிகிறது. Vibration-களிலிருந்தே creation

(அதிரிவுகளிலிருந்தே படைப்பு) என்கிற ஸயன்ஸ் கொள்கையும் இதுவும் ஒன்றுதான். வைப்ரேஷன் (அதிர்வு) என்பதே ஆட்டம் தானே?சப்தத்தின் பலவிதமான ஆட்டம் ஸங்கீதம்; ரூபத்தின் பலவிதமான ஆட்டம் நாட்டியம். பூமி, ஸ¨ர்யன், சந்திரன், நக்ஷத்ரம், கிரஹம் எல்லாம் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டுதானிருக்கின்றன. சின்னதற்கெல்லாம் சின்னதான அணுவுக்குள்ளும் எலெக்ட்ரானும், ப்ரோடானும் நம்ப முடியாத வேகத்தில் நாட்டியம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டியம் நடக்காவிட்டால் அவை அணு என்ற ரூபமே பெறமுடியாது.

ஸ்ருஷ்டி இதிலிருந்துதான் பிறக்கிறது என்பதாலேயே ஸ்ருஷ்டியிலிருந்து விடுபடுவதற்கும் இதன் மூலத்துக்குப் போக வேண்டும் என்றுதானே ஆகிறது? அதனால்தான் கீத, வாத்ய, ந்ருத்யங்களையே மோக்ஷமார்க்கமாக அப்யஸிக்கச் சொல்லியருக்கிறது.

----

* த்வாதாரே மூலே என்று தொடங்கும் 41-வது ஸ்லோகம்.

16.19-கலைப் பெரியார்கள்

இதில் ஸித்தியடைந்தவர்கள் காந்தர்வ வித்யை குறித்து அநேக சாஸ்திரங்களைத் தந்திருக்கிறார்கள்;அநேகம் ஸாஹித்யங்களையும் மற்றவர்கள் பாடுவதற்குத் தந்திருக்கிறார்கள். பரத ரிஷியை முக்யமாகச் சொன்னாலும் வேறு அநேக ரிஷிகள் தெய்விக புருஷர்களும் இவர்களில் இருக்கிறார்கள். நாரதர், அகஸ்த்யர், மதங்கர், ஆஞ்சநேயர், நந்திகேச்வரர் போன்றவர்களை ஸங்கீத உபாஸகர்களாகவும், சாஸ்த்ரகாரகர்களாகவும் சொல்லியிருக்கிறது. 'ஹநும் தோடி'என்றே தோடி ராகத்துக்குப் பெயர். (கல்யாணி, சங்கராபரணம், பைரவி, ஷண்முகப்ரியா, ராமப்ரியா. கரஹரப்ரியா*என்றே தெய்வ ஸம்பந்தமாக அநேக ராகப் பெயர்கள் இருக்கின்றன.) நமக்குக் கிடைத்திருக்கிற சுவடிகளிலிருந்து சார்ங்க தேவர், ஸோமதேவர், ராமாமாத்யர், மந்திரியாகவும் அத்வைத சாஸ்த்ரத்தில்

கரைகண்டவராகவுமிருந்த கோவிந்த தீக்ஷிதர், அவருடைய புத்ரரான வேங்கடமகி முதலியவர்கள் சங்கீத சாஸ்த்ரத்துக்கு லக்ஷணங்கள், விவரணங்கள் கொடுத்து உபகரித்திருப்பது தெரிகிறது. மஹேந்த்ர வர்மா, ரகுநாத நாயக் போன்ற ராஜாக்களும் இப்படி உபகரித்திருக்கிறார்கள். குடுமியா மலையில் (புதுக்கோட்டைக்குப் பக்கம்) சங்கீத சாஸ்த்ரம் பற்றி மஹேந்த்ர பல்லவனின் ஸம்ஸ்க்ருதக் கல்வெட்டு இருக்கிறது. தற்போது நடைமுறையிலுள்ள வீணைக்கு 'ரகுநாத வீணை'என்று நாயக் ராஜாவை வைத்துத்தான் பெயர் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப் பல பேர் சங்கீதத்தில் நிறைந்த ஞானம், அநுபவம் பெற்றவர்கள்.

பூர்வத்தில் தேசம் பூராவுக்கும் ஒரே ஸங்கீத முறைதான் இருந்ததென்றும், முகாலய ஆட்சியில் வடக்கே எல்லாத் துறைகளிலும் foreign influences (விதேச அளாவல்கள்) அதிகமானபின் அங்கே ஹிந்துஸ்தானி ஸங்கீதமென்றும், தக்ஷிணத்தில் கர்நாடக ஸங்கீதமென்றும் பிரிந்ததாகவும் தெரிகிறது.

மெட்டமைத்து ஸாஹித்யம் செய்திருப்பவர்களில் சரித்ர காலத்திலே எண்ணூறு வருஷத்துக்குமுன் 'கீத கோவிந்தம்'இயற்றிய ஜயதேவரை முதலாவதாகச் சொல்கிறார்கள். அப்புறம் முக்யமாகச் சொல்வது புரந்தரதாஸ். 'கர்நாடக'சங்கீதம் என்றே அவரால்தான் பெயர் உண்டானதாக ஒரு அபிப்ராயம். இவர்கள் இருவரும் க்ருஷ்ண பரமாத்மாவைப் பாடியவர்கள். நாராயண தீர்த்தரும் 'க்ருஷ்ண லீலா தரங்கிணி'என்றே பாடியிருக்கிறார். ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் தமிழில் பண்ணியுள்ள 'க்ருஷ்ண கானம்'இப்போது பிரபலமாகி வருகிறது. பத்ராசல ராமதாஸ் முழுக்க ராமபரமாகவே கீர்த்தனைகள் செய்திருக்கிறார். நம் சங்கீதத்துக்கே முக்ய புருஷர்களாக 'த்ரிமூர்த்திகள்'எனப்படுகிறவர்களில் தியாகையரும் விசேஷமாக ராமார்ப்பணமாகவே பாடியிருக்கிறார். சிவன், அம்பாள் முதலானவர்கள் மீதும் சிற்சில க்ருதிகள் செய்திருக்கிறார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஐயனார், மாரியம்மனிலிருந்து ஆரம்பித்து ஒரு ஸ்வாமி விடாமல் அத்தனை தெய்வங்களையும் பாடியிருக்கிறார். சியாமா சாஸ்திரிகள் அம்பாள் ஒருத்தியையே பாடியிருக்கிறார். கோபாலக்ருஷ்ண பாரதியாரும்,

முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை முதலியவர்களும் சிவனையே, அதிலும் முக்யமாக நடராஜாவையே பாடினவர்கள். அருணாசலக் கவிராயர் 'ராம நாடகம்'என்று செய்திருக்கிறார். கிறிஸ்துவரான மாயவரம் வேதநாயகம் பிள்ளை ஸர்வமத ஸமரஸமாக ஏக பரமாத்மாவைக் குறிப்பிடும்படியான வேதாந்தப் பாடல்கள் பாடி வைத்திருக்கிறார். நம் காலத்திலும் பாண்டித்யம், பக்தி உள்ள ஸாஹித்யகர்த்தாக்கள் இல்லாமலில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை யாராயிருந்தாலும் தெய்வத்தைக் குறித்துத்தான் பாடல் இயற்றுவதென்றும், 'ஸெக்யூலர் தீம்'என்னும் லௌகிக விஷயமாக இயற்றுவதில்லையென்றும் இந்திய மரபு வளர்ந்து வந்திருக்கிறது.

X* கரஹரன் :கரன் என்ற அரக்கனை வதைத்த ஸ்ரீராமன்.

16.20-நாட்டு-தொழில்-வாழ்க்கைப் பாடல்கள்

நாட்டுப் பாடல்கள் என்று என்று ஒரு பிரிவு. இப்படியே நாட்டு மக்களுக்கென்று கூத்தும், பலவிதமான நடனங்களும் இருக்கின்றன - கரகம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரை. எதுவானாலும் ஈஸ்வர சம்பந்தம் எப்படியாவது வந்து சேர்ந்துவிடும். தெம்மாங்கு, காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து முதலானவை நாட்டுப் பாடல் வகைகள். உழுகிறவன், ஏற்றம் இறைக்கிறவன், படகு ஓட்டுகிறவன், பாரம் இழுக்கிறவன், தயிர் சிலுப்புகிறவள், நெல்லு குத்துகிறவள் எல்லாருமே பாடிக்கொண்டே தொழில் பண்ணுகிறார்கள், வேலையின் பளு நெரிக்காமல் வேலையை மனசுக்குப் பிடித்த மாதிரி மாற்றித் தருகிற மருந்தாகப் பாட்டு இருக்கிறது. பல பேர் பாடி ஆடிக்கொண்டு வேலை செய்கிறபோது ஜாஸ்தி வேலையும் நடக்கிறது. இந்தப் பாட்டுகளிலும் கொஞ்சமாவது தெய்வ ஸம்பந்தம் தொட்டுக் கொள்ளாமலிராது.

மனசுக்கு உத்ஸாஹத்தைக் கொடுத்து அதனாலேயே சிரமமான சரீர உழைப்பையும் சுலபமாக்கித் தருகிற ஆற்றல் இசைக்கு இருப்பது போலவே, எந்த உணர்ச்சியானாலும் அதை நன்றாக கிளறிவிட்டு நம் மனஸை விட்டுக் கொட்டும்படிப் பண்ணி, இதனால் அப்புறம் சாந்தியை உண்டாக்கும் ஆற்றலும் அதற்கு இருக்கிறது. சாந்தம் தரும் சக்திக்குத் தாலாட்டை த்ருஷ்டாந்தம் காட்டினால் போதும். எத்தனை துஷ்டத்தனம் பண்ணுகிற குழந்தையானாலும் காலில் போட்டுக் கொண்டோ தூளியில் போட்டோ தாலாட்ட ஆரம்பித்து விட்டால் அப்படியே மயங்கித் தூங்கிப் போய் விடுகிறது. ஸர்ப்பம்கூட ஸங்கீதத்தில் கட்டுப்பட்டு லயித்து நின்று விடுகிறது. ஆரம்பத்தில் தாலாட்டிலிருந்து அந்திமத்தில் பிலாக்கணம் வரையில் பலவிதமான பாட்டுக்கள். அநேகமாக இதெல்லாம் ஸ்திரீகளின் சொத்தாகவே இருக்கிறது. பாட்டிலேயே புராணக் கதைகளைச் சொல்லித்தான் தாயார்க்காரி குழந்தைகளை நல்வழியில் கொண்டுபோவது முன் கால வழக்கம். குழந்தை எழுந்திருக்கிறதற்கு முந்தியே அம்மாக்காரி 'ஷி ஃப்டு'க்குப் போய் விடுவதுதான் புது நாடகம்!கல்யாணம் கார்த்திகை என்றால் ஊஞ்சல் நலங்கு என்று பாட்டுக்கள். மங்கள காரியம் எதுவானாலும் மேளம் நாயனமில்லாமல் இல்லை. அதற்கு மங்கள வாத்யம் என்றே பேர் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்துக்கும் ரணபேரி, துந்துபி, 'மார்ச்'பண்ணுவதற்கென்று பாட்டுக்கள். National Song, தேசிய கீதம் என்று ரொம்பவும் மரியாதை கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். ஸ்வதந்த்ரப் போராட்டத்தில் ஜனங்களுக்கு ஸ்வதேச உணர்ச்சி மூட்டுவதற்கே தேசிய கவிகள் என்கிறவர்களின் பாட்டுக்களைத்தான் முக்யமாகப் பாடிப் பிரசாரம் பண்ணினார்கள். சந்தோஷம், துக்கம், வீரம் என்று எந்த உணர்ச்சியானாலும் பாட்டில் வெளிப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் முடிவாக சாந்தத்தில் சேர்க்கவே ஸங்கீதம். பரம ஸௌக்யத்தை ஸங்கீதத்தின் மூலம் அடைவதற்கே வழிகாட்டிய தியாகையர்வாள் 'சாந்தமுலேக ஸௌக்யமு லேது'என்று பாடினதால் சாந்தம்தான் சங்கீதத்தின் நிறைவான குறிக்கோள் என்று தெரிகிறது. ஈஸ்வர ஸ்மரணம்தான் அப்படிப்பட்ட நித்யமான சாந்தத்தைக் கொடுக்க வல்லதாகையால் சங்கீதம் பரமாத்மாவை மையமாகக்

கொண்டதாகவே நம்முடைய உயர்ந்த சம்பிரதாயத்தில் நெடுங்காலமாக வந்திருக்கிறது.

16.21-தேச கௌரவத்தை உயர்த்தும் கலை

இந்த லக்ஷ்யம் நமக்கு எந்நாளும் மறந்து போகக் கூடாது. இப்போது வெளி தேசங்களிலெல்லாம் நம்முடைய ஸங்கீதமும் நாட்டியமும் பரவி வருகிறது. அங்கே யுனிவர்ஸிடிகளில் இவற்றைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய பெரிய உலக ஸ்தாபனங்களில் நம்முடைய ஸங்கீதக் கச்சேரி வைத்துப் புகழ்மாலை சூட்டுகிறார்கள். இதிலே நமக்கு ஒரு ஆறுதல். என்ன ஆறுதலென்றால், ஆதியில் நமக்கு லோகத்தில் எதனால் பெரிய கௌரவம் இருந்ததோ அந்தப் பாரமார்த்திகமான பெருமை இப்போது ரொம்பவும் எடுபட்டுப்போய், மற்ற தினுஸிலும் பெருமை இல்லாமல் எல்லா தேசங்களிடமும் நாம் கப்பரை நீட்டுவதாகவும், அதிலே போட்டு உபகரிப்பவர்களிடமும் நம் ஸ்தானத்துக்கு eP 'உபதேசம்'பண்ணி அவர்கள் நம்மை நன்றியில்லாதவர்கள் என்று மட்டமாய் நினைக்கும்படியாகவும் காரியங்கள் நடந்து வருகின்றன. இப்படியிருக்கிறபோது நம்முடைய ஸங்கீத, நாட்டியக்காரர்களை அவர்கள் ரொம்பவும் கொண்டாடி, 'இந்தியாவில் உள்ள இந்தக் கலைகளைப் போல எங்கேயுமில்லை'என்று கற்றுக் கொள்வதற்கு முன்வருவதைப் பார்க்கும்போது, "நாம் பிக்ஷ£பாத்ரம் நீட்டுபவர்களாக மட்டுமில்லாமல் அவர்களுக்குப் போடுபவர்களாக இருக்கிற கௌரவம் இது ஒன்றால் தானே நமக்குக் கிடைத்திருக்கிறது?"என்று ஆறுதல் ஏற்படுகிறது.

16.22-லக்ஷ்யம் மறக்கலாகாது

கலை என்பதற்காகவே பரவட்டும், பரப்பட்டும்;சந்தோஷம்தான். ஆனாலும் ஆதியிலிருந்து இந்தக் கலைகளுக்கு எது லக்ஷ்யமாயிருந்ததோ அது மறந்து போகுமாறு விட்டுவிடக் கூடாது. ஈஸ்வரனிடம் கொண்டு நிறுத்துவதற்காகத்தான் இ ஏற்பட்டிருக்கின்றன என்ற நினைப்பு

போகக்கூடாது. சரபோஜி போன்ற ராஜாக்கள் கேட்டுக் கொண்டால்கூட, ராஜஸதஸில் போய்ப் பாடுவதில்லை, 'GF வேண்டாம்;ஈஸ்வர ஸந்நிதிதான் வேண்டும்'என்று வைராக்யமாயிருந்த தியாகையர்வாள் போன்ற மஹான்களின் 'ஐடியல்'எப்போதும் நினைவில் இருக்க வேண்டும். சாந்த ஸௌக்யத்தைத் தானும் அடைந்து, மற்றவர்களும் அடைவிக்கப் பண்ணுவதாகவே காந்தர்வ வேதத்தை அதற்கான உயர்ந்த ஸ்தானத்திலே வைத்துக் காத்துக் கொடுக்க வேண்டும்.

17-அர்த்த சாஸ்த்ரம்

வெயில், மழையால் உபத்ரவப்படாமலிருக்க வீடு வேணத்தான் வேண்டும். சரீரத்துக்குப் பசி முதலிய துன்பம் ஏற்படாமலிருக்க ஆஹாரம் வேணத்தான் வேண்டும். மானத்தை ரக்ஷித்துக்கொள்ள வஸ்திரம் வேணத்தான் வேண்டும். இப்படிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள பணம் வேணத்தான் வேண்டும். அதனால் மநுஷ்யாளுக்கு இதற்கான வழிகளைச் சொல்லித் தரத்தான் வேண்டும். அதுதான் 'அர்த்த சாஸ்திர' என்கிற நான்காவதான உபவேதம்.

ஆனால் அர்த்த சாஸ்திரத்தைப் பார்த்தால் அதில் பொருளாதாரத்தை, எகனாமிக்ஸைவிட அதிகமாக ராஜ நீதியை, ஸ்டேட்-க்ராஃப்ட், பாலிடிக்ஸ் ஆகியவற்றையே சொல்லியிருக்கும். திருக்குறளிலும் பொருட்பாலில் எடுத்தவுடனேயே அரசாட்சியைப் பற்றித்தான் வருகிறது. அப்புறம் பல அதிகாரங்களில் செங்கோல் ஆட்சியின் தன்மை, கொடுங்கோன்மை, நீதியோடு கூடிய தண்டனை முறை, அமைச்சர்கள்-ஒற்றர்கள்-தூதர்கள் பின்பற்ற வேண்டிய முறைகள், படை மாட்சி, கோட்டை கொத்தளங்களின் அவசியம், யுத்த தந்திரங்கள், வரி போட வேண்டிய நீதிகள் என்று ராஜாங்க விஷயங்களைப் பற்றியே நிறையச் சொல்லியிருக்கிறார்.

ஏனிப்படி என்றால், ஒரு மநுஷ்யன் ஆஹாரம், வஸ்திரம், வீடு, வயல், பணம் முதலிய 'அர்த்த'ங்களால் வாழ்க்கை நடத்த வேண்டுமென்னும்போது

அவனுக்கு இந்தப் பொருள்களை எல்லாம் தானே ரக்ஷித்துக் கொள்ள முடியாததால், ரக்ஷித்துத் தருவதற்கென்றே ஒரு பெரிய ஸ்தாபனம் தேவையாயிருக்கிறது. தேசமென்றிருந்தால் துஷ்டர்கள் இருக்கத்தான் இருப்பார்கள். அவர்கள் தாங்களாகப் பாடுபட்டு ஸம்பாதனம் பண்ணாமல் இன்னொருத்தனை அடித்துப் பிடித்து, கொலைகூடப் பண்ணி அவனுடைய உடைமையைக் கவரப் பார்ப்பார்கள். அப்படி விடக்கூடாது. அவனவனுக்கும் உடைமையைக் காப்பாற்றிக் கொடுக்க சக்தி வாய்ந்த ஒரு ஸ்தாபனம் தேவை. பலிஷ்டர்கள் பலஹீனர்களை இப்படியெல்லாம் கஷ்டப்படுத்தாமல், ஸாதுக்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியாதபடி கொலை, கொள்ளை, பெண்களை மானபங்கம் செய்வது என்றெல்லாம் செய்யாமல் தடுப்பதற்கு ஒரு அமைப்பு வேண்டும். அந்நிய தேசத்தினர் ஒரு தேசத்துக்குக் கூட்டமாக வந்து அதன் ஜனங்களைக் கஷ்ப்படுத்தி, அவர்களுடைய 'அர்த்தம்', மதம், கலாசாரத்தைச் சிதைத்துச் சேதம் பண்ணாமலும் தடுக்க வேண்டும். தடுத்தும், இந்த உள்நாட்டு-வெளிநாட்டு துஷ்டர்கள் கைவரிசையைக் காட்டிவிட்டால் அவர்களைத் தண்டித்து சி¬க்ஷ பண்ணுவதற்கும் அந்த அமைப்புக்கு அதிகாரமும், செல்வாக்கும், ஆள் பலமும் இருக்க வேண்டும். ஜனங்களுக்கு அர்த்தத்தை சேகரம் பண்ணிக் கொள்வதற்கும், லௌகிக ரீதியில் ஜீவனம் நடத்துவதற்கும் அதிகம் சொல்லித் தரவேண்டியதில்லை. self-interest -ல் அவர்களே கொஞ்சம் சொல்லிக் கொடுத்தாலும் இந்த விஷயங்களில் விருக்தி பண்ணிக்கொண்டு விடுவார்கள்.

பிறன் interest -ஐக் கெடுக்காமல், தங்களுடைய சாச்வதமான interest -ஐயும் கெடுத்துக் கொள்ளாமல் அவர்களை இவ்விஷயங்களில் கட்டுப்படுத்தவே சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது தர்ம சாஸ்திரத்தின் காரியம். அர்த்த சாஸ்த்ரம் என்று வருகிறபோது, இப்படி தனித்தனிப் பிரஜைகள் அர்த்தத்தைச் சேர்த்துக் கொள்விதைவிட, அத்தனை பிரஜைகளுமாகச் சேர்த்ததை ரக்ஷித்துக் கொடுப்பதற்கான ஸ்தாபனத்தைப் பற்றித்தான் நிறையச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு, அவர்களுடைய லௌகிக வாழ்க்கையைக் காப்பாற்றித் தருவதோடு அவர்களுடைய அத்யாத்ம வாழ்க்கை, கலாசாரம் இவற்றையும் பேணிக் காத்துத் தரும்

ஸ்தாபனமாயும் இதுவே இருந்துவிட்டால், அது இத்தானை பெரிய கார்யங்களை, ஒரு பெரிய தேச ரீதியில் இதற்காக நடத்த வேண்டிய நிர்வாஹங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றித்தானே விஸ்தாரமாகச் சொல்ல வேண்டியதாயிருக்கும்?ராஜாங்கம் என்பது இப்படிப்பட்ட ஸ்தாபனம் தானே? ஒவ்வொரு தேசத்திலும் இப்படித்தானே எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியே ராஜாங்கம் என்பதை ஏற்படுத்தி, ஜனங்கள் முறையான வழியில் தாங்கள் 'அர்த்தம்' தேடுவதற்குக் குந்தகம் இல்லாமலிருப்பதற்காகவும், தேடிப் பெற்ற அர்த்தத்தையும் அதோடு தங்கள் ஜீவனையும் உள் சத்துருக்களிடமிருந்தும் வெளி சத்துருக்களிடமிருந்தும் ரக்ஷித்துக் கொள்வதற்காகவும், தங்களுடைய தேசிய கலாசாரம், மதம் முதலியவற்றைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் வழி கண்டிருக்கிறார்கள் பின்னாடி பல ஸித்தாந்தங்கள் வந்து ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு ராஜாங்கமே மெஜாரிட்டியாயிருக்கிற பலிஷ்டர்களின் பக்கம் இருந்துகொண்டு துர்பலர்களாயிருக்கிற மைனாரிட்டிகளின் உடைமைகளை நியாயா நியாயம் அவ்வளவாகப் பார்க்காமல் பறிப்பதாகவும், தேசாசாரங்களைச் சிதைப்பதாகவும் ஆனாலுங்கூட வாயளவில், எழுத்தளவில் இப்படிப்பட்ட ராஜாங்கமும் ஸர்வஜனங்களையும் தர்மப்படி ரக்ஷிப்பதற்காகவும், தேச தர்மத்தையும் இப்படியே போஷித்துத் தருவதற்காகவும் தான் இருப்பதாகப் பிரகடனம் பண்ணிக் கொள்வது வழக்கமாயிருக்கிறது. இங்கே ஐடியாலஜி, கொள்கை என்பவை வந்து மோதுகிறபடியால் ஜெனரலாகச் சொல்கிறேன். அர்த்த சாஸ்திரத்தில் ராஜாங்கத்துக்கு, ஆட்சி முறைக்கு முக்யமான இடம் கொடுத்ததற்குக் காரணம் ராஜாங்கந்தான் தேச ஜனங்களின் 'அர்த்த'த்தை தர்மப்படி ரக்ஷித்துத் தருவதற்காக ஏற்பட்ட அமைப்பு என்பதால்தான்.

----

*1. "பஜகோவிந்த"த்தில்

*2. அறத்துப்பால் 25-37 அதிகாரங்களிலுள்ள 130 குறட்பாக்கள்

17.1-அர்த்த சாஸ்த்ரமும் தர்ம சாஸ்த்ரமும்

இந்தப் பெரிய ரக்ஷணையச் செய்வதற்குத்தான் அது அநேக சட்டங்களைப் போட்டுக் கொடுத்திருக்கிறது. இப்படி அர்த்த சாஸ்த்ரம் சட்டம் போடுவதற்கு முந்தியே உபவேதத்தைவிட உயர்ந்த ஸ்தானத்தில் கருதப்படும் வேத உபாங்கங்களிலேயே உள்ள தர்ம சாஸ்திரத்திலும் ராஜநீதியைப் பற்றி நிறையைச் சொல்லப்பட்டிருக்கிறது. மநு, யாஜ்ஞ்யவல்கியர் மாதிரியானவர்களின் ஸ்ம்ருதிகளில் வர்ணாச்ரம தர்மங்களை விவரிக்கும்போது க்ஷத்ரிய தர்மம், ராஜ தர்மம என்கிறவற்றில் தேச பரிபாலனத்துக்கான சட்டங்களும் வந்துவிடுகின்றன. மநு தர்மப்படி ஆட்சி நடத்துவதாகத்தான் எந்த ராஜாவும் - ஆதிகாலத்திலிருந்து தமிழ் நாட்டு அரசர்களும் - சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பின்னாடி வந்த அர்த்த சாஸ்திரத்தைவிட முன்னாடி வந்த தர்ம சாஸ்திரப்படி போவதைத்தான் முக்யமாகக் கருதி ஆட்சி முறை நடந்து வந்திருக்கிறது. ஏனென்றால் உபவேதங்கள் எல்லாமே கண்ணுக்குத் தெரிகிற இந்த லோக வாழ்க்கைக்கு எது லாபம் என்பதைத்தான் கருத்தில் கொண்டவை. பரலோக சிரேயஸ் என்ற நித்ய ஸௌக்யத்தைக் கருத்தில் கொண்டு ஆத்மாவின் மேம்பாட்டுக்கு வழி சொல்வது வேத உபாங்கங்களில் உள்ள ஸ்மிருதிகளும் மற்ற தர்ம சாஸ்திரங்களும்தான்.

அர்த்த சாஸ்திரம் முதலான உபவேதங்களும் வேத தர்மத்தின் ஆதாரத்தில் எழுந்தவைதான். ஆனாலும் பூராவும் அந்தத் தர்மப் பிரகாரமே போகும் என்று சொல்ல முடியாது. வைத்யம், அர்த்தம், பொழுதுபோக்குகள் என்று ஏதோ ஒரு ஸப்ஜெக்டை 'ஸ்பெஷலைஸ்' பண்ணுவதாக இவை அமைந்திருக்கின்றன. அதனால் இந்தக் கால இங்கிலீஷ் வைத்யத்தில் ஸ்பெஷலைஸேஷனைப் பற்றிச் சொல்கிற டி∴பெக்ட் உபவேதங்களுக்கும் வந்து விடுகிறது. காதுக்கு ஒரு வைத்தியர்;தொண்டைக்கு ஒரு வைத்தியர்;மூக்குக்கு ஒருவர்;'ஹார்ட்'டை மட்டும் பார்க்க ஒரு டாக்டர்;லங்க்ஸை மாத்திரம்

பார்க்க இன்னொரு ஸ்பெஷலிஸ்ட் என்று இருப்பதால் மொத்த கான்ஸ்டிட்யூஷனைப் பார்க்காமல் இப்படி ஒரே பிரிவில் ஸ்பெஷலைஸ் பண்ணி வைத்தியம் பண்ணுகிறபோது அந்தப் பிரிவிலுள்ள வியாதிக்கு மட்டும் மருந்து கொடுத்து குணம் பண்ணும் போதே வேறொரு பிரிவில் புது வியாதி வருகிறது;மொத்தத்தில் கான்ஸ்டிடயூஷன் பாதிக்கப்படுகிறது - என்கிறார்கள். இது மாதிரிதான் அர்த்தத்தை மாத்திரம் அபிவிருத்தி பண்ணுவது, ஆட்டம் - ஆட்டு முதலியவற்றை மட்டும் வளர்ப்பது என்று உபவேதங்கள் செய்கிறபோது இந்த எல்லாம் எதற்கு அங்கமாயிருக்க வேண்டுமோ அந்த தர்ம வாழ்க்கை என்ற பூரண விஷயத்தில் கவனக் குறைவு ஏற்பட்டு அதற்குப் பாதகமாகக்கூடப் போகும்படியான ஹேதுக்கள் உண்டாகிவிடுகின்றன.

அதனால்தான் ராஜாக்கள் அர்த்த சாஸ்திரத்தைப் பின்பற்றுவதைவிட மநு தர்ம சாஸ்த்ராதிகளை அநுஸரிப்பதையே விஷயமாகச் சொல்லிக் கொண்டார்கள். முடிவில் பார்க்கப் போனால் அர்த்த சாஸ்த்ரத்திலும் அது வேத தர்மத்தை அஸ்திவாரமாகக் கொண்டு, அதை நிலைநாட்டவே ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கும்.

தர்ம சாஸ்திரங்கள் மட்டுமின்றி உபாங்கங்களில் வருகிற புராண இதிஹாஸங்களிலும் ராஜநீதியைப் பற்றி நிறைய இருக்கிறது. இங்கெல்லாமும் தாற்காலிகமான 'அர்த்த'த்தைவிட, சாச்வதமான தர்மத்துக்குப் பிராதான்யம் கொடுத்தே அரசாட்சி முறை சொல்லப்பட்டிருக்கும்.

தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவே வியாஸ மஹரிஷி அநுக்ரஹித்த மஹாபாரதத்திலும், 'தர்ம விக்ரஹவான்'என்றே கியாதி பெற்ற ராமசந்திரமூர்த்தியின் கதையான ராமாயணத்திலும் ராஜநீதிகள் கொட்டிக் கிடக்கின்றன. மஹாபாரதத்தில் யுத்தத்துக்கு அப்புறம் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்ட தர்மபுத்ரருக்கு பீஷ்ம பிதாமஹர் சாந்தி பர்வா, ஆநுசாஸனிக பர்வா என்ற இரண்டு பெரிய பர்வங்களில் பண்ணுகிற உபதேசங்களில் ராஜ தர்மத்தைப் பற்றி ஏராளமாக வந்துவிடுகிறது.

காட்டுக்குப் போன ராமரைத் திரும்ப அழைத்து வருவதற்காக பரதன் சித்ரகூடத்துக்குப் போனபோது, எப்படி ராஜாங்கம் நடத்த வேண்டும் என்று ராமர் அவனுக்கு நிறைய உபதேசித்த விஷயம் ராமாயணத்தில் வருகிறது. 'ராமராஜ்யம்'என்ற தர்ம ராஜ்யத்தின் விதிகளையே இங்கே ராமர் சொல்லியிருக்க வேண்டும்.

இப்படி தர்மத்துக்காக ஏற்பட்ட நூல்களில் சொல்லியுள்ள ஆட்சிமுறைக்கு அப்புறம்தான் 'அர்த்த சாஸ்த்ரம்'என்றே உள்ளதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது அர்த்த சாஸ்த்ரம் என்றால் சாணக்யன் எழுதின ஒரு புஸ்தகந்தானென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அர்த்த சாஸ்த்ர புஸ்தகங்கள் பலவற்றில் ஒன்றுதான் அது. அதற்கு 'சாணக்ய நீதி'அல்லது 'சாணக்ய தந்த்ரம்' என்றே பெயர். இப்படியே 'சுக்ர நீதி'என்று சுக்ராசாரியார் செய்த அர்த்தசாஸ்த்ர நூல் ஒன்றும் இருக்கிறது. தர்மத்துக்கென்றே ஏற்பட்ட நூல்களின் அளவுக்கு அர்த்தசாஸ்திர புஸ்தங்களில் ஸத்யம், தர்மம், நியாயம், நேர்மை ஆகியவைகளை எதிர் பார்க்க முடியாது. ராஜ தந்த்ரம், ஸமயோசிதம் - diplomacy, expediency என்றெல்லாம் சொல்கிறார்களே, இவற்றைத் தவிர்க்க முடியாத கட்டங்களில் தர்ம நூல்களிலேயே கொஞ்சம் அநுமதித்துத்தானிருக்கும். அர்த்த சாஸ்திரத்திலோ இவற்றுக்கு இன்னும் அதிக இடம் கொடுத்திருக்கும். சில ஸந்தர்பப்ங்களில் அரசாங்கம் உள்ளதைச் சொல்லாமல் மறைக்கலாம் என்ற அளவுக்கு தர்ம நூல்கள் போகுமென்றால், அர்த்த சாஸ்திரமோ உள்ளதை இல்லையென்றே மறுக்கலாம், இல்லாததை உள்ளதாகச் சொல்லலாம் என்றுகூடச் சொல்லிவிடும். இப்படி அஸத்ய ஸம்பந்தம் வருவதால்தான், பாக்கி மூன்று உபவேதங்களுக்கு ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம் என்று பெயரிருக்க இதற்கு அர்த்தவேதம் என்றில்லாமல் இது ஒரு சாஸ்த்ரம் என்றே பெயர் இருக்கிறது. 'சாஸ்த்ரம்'என்றால் எந்த ஸப்ஜெக்டைப் பற்றியும் விதிகள் கொடுப்பதுதான்.

தர்ம சாஸ்திரத்தோடு உபவேதங்களில் வரும் ஸப்ஜெக்ட்கள் எது மாறுபட்டாலும் நாம் இதைத் தள்ளிவிட்டு தர்ம சாஸ்திரத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயுர்வேத வைத்யர் எவராவது தம் சுவடியிலிருந்து மேற்கொள் காட்டி சிராத்த தினத்தில்கூட ஒரு வியாதிக்கார

பிராம்மணன் பூண்டு லேஹ்யம் சாப்பிடலாம் என்று சொன்னால், அதைக் கேட்காமல், உயிர் போனாலும் போகட்டும் என்று தர்ம சாஸ்த்ரப்படி அதை அன்று ஒதுக்கத்தான் வேண்டும். இப்படியே அர்த்த சாஸ்த்ரக்காரர் தர்மத்தை விட்டு ஒரு ராஜா தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளச் சிலது செய்யலாமென்றால், இவற்றை 'டிப்ளமஸி'என்ற பெயரில்கூட தர்ம சாஸ்திரம் சொல்கிற ராஜதர்மம் ஒப்புக் கொள்ளாத இடத்தில் நாம் அர்த்த சாஸ்திரத்தைத் தள்ளி தர்ம சாஸ்த்ரத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரோக்யம், யுத்த ஜயம், கண்ணுக்குக் காதுக்கு இன்பம், அதிகாரம் என்று இந்த உபவேதங்களின் பலன் பிரத்யக்ஷத்தில் உடனே தெரிந்தால் தெரிந்துவிட்டுப் போகட்டும். தர்மாதர்மஙளின் பலன் அப்படித் தெரியாமல் அத்க்ருஷ்டமாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். அதற்காக நிரந்தரமானதை விட்டுத் தற்காலிகமானதைப் பிடித்துக் கொள்வார்களா?சரீரத்தைப் பல விதங்களில் ரக்ஷித்து ஸந்தோஷப்படுவதற்கு உபவேதங்கள் வழிசொன்னாலும், இந்த சரீரத்தைப் இப்படியே என்றைக்கும் ஸந்தோஷமாகக் காப்பாற்றித் தர அவற்றால் முடியுமா?சரீரம் போனவிட்டு தர்மா தர்மங்களுக்குத் தானே நாம் பதில் சொல்லியாக வேண்டும்?

உபவேதங்கள் தருகிற த்ருஷ்ட லாபங்களைவிட தர்ம சாஸ்திரங்கள் தரும் அத்ருஷ்ட லாபம்தான் உயர்ந்தது என்பதற்குப் பொது ஜன வசனமே அத்தாட்சியாயிருக்கிறது. நடைமுறை வாழ்க்கையில் த்ருஷ்டமாகவே அதாவது, கண்ணால் பார்க்கும்படியாகவே ஒரு பெரிய லாபம் கிடைத்துவிட்டால் "அத்ருஷ்டம் அடிச்சுது" என்றுதானே சொல்கிறோம்?ஆகையால் த்ருஷ்டத்தைத் தரும் அர்த்த சாஸ்த்ரம் முதலானதுகளும் அத்ருஷ்டத்தைத் தரும் தர்ம சாஸ்திரத்தின் காலில் விழ வேண்டியவைதான். 'தர்மார்த்த காம மோக்ஷம்'என்பதில் அர்த்தம் பெரும்பாலும் காமம் என்ற தற்கால ஸுகத்தைத் தருவதோடு முடிவதே. தர்மம்தான் நித்ய ஸுகமாயுள்ள மோக்ஷத்துக்கு உபாயம். அந்த தர்மத்தில் போவதற்கு அநுகூலமாகவே அர்த்தத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் இப்படிச் சொல்வதால், தற்காலத்தில் சிலர் நினைக்கிற மாதிரி சாணக்ய தந்திரம் முதலானவற்றில் ஜனங்களின் நன்மையையும், ஸத்யம் தர்மம் ஆகியவற்றையும் புறகணித்து ராஜாங்கத்துக்கு யதேச்சாதிகாரம் கொடுத்திருக்கிறது என்று தப்பாக நினைத்து விடக்கூடாது. தற்போது உலகத்தில் 'மானார்க்கி' (முடியரசு) உள்ள நாடுகள் உள்பட எல்லா தேசங்களிலும் யதேச்சாதிகாரம் இல்லாமல் ஸர்வ ஜன அபிப்ராயப்படி, ஸர்வ ஜன க்ஷேமத்துக்காகத்தான் அரசாட்சி நடத்தப்படுவதாக ஜனநாயகக் கொள்கை என்பதாக ஒன்று பேசப்படுகிறது. ஆனாலும் தினமும் ஒரு coup வருவதாகவும், கொஞ்ச காலத்திலேயே இந்த ராணுவ ஆட்சியும் போய் இன்னொரு மிலிடரி ஸர்க்கார் வருவதாகவும் தானிருக்கிறது. ஜனங்கள் நலனை முந்தி இருந்த ராஜாங்கம் கவனிக்கவேயில்லையென்றும், ஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்கள் ஸத்ய தர்மங்களை அடியோடு விட்டு விட்டு லஞ்சம், கையாலாகாத்தனம் இவற்றால் தேச வாழ்க்கையைக் கெடுத்து விட்டதாகவும் புது ஆட்சி ஏற்படுத்துபவர்கள் சொல்கிறார்கள். இப்போது நடக்கிற இத்தனை யதேச்சாதிகாரமோ, இப்போது பார்க்கிற இத்தனை inefficiency -யோ அர்த்த சாஸ்திரங்களில் அநுமதிக்கப் படவேயில்லை. இப்போது வாயினால் உசந்த ப்ரின்ஸிபிள்களைச் சொல்லிக்கொண்டே கார்யத்தில் ரொம்பவும் வேறு விதமாகச் செய்வதாக இருக்கிறது. அர்த்த சாஸ்த்ரங்களில் இப்படி வாயினால் ஒரேயடியாக தர்ம ஜோடனை பண்ணாமல், ஒரு ராஜாங்க நடத்துவதென்றால் அதில் ஒரு ராஜ்யத்தையே மேய்த்துக் கட்ட வேண்டியிருப்பதை முன்னிட்டும், மேலும் அந்நிய ராஜ்யங்களில் மோதல்களைச் சமாளிக்க வேண்டியிருப்பதை முன்னிட்டும், 'அநேக விஷயங்களை ரஹஸ்யமாகத்தான் வைத்திருக்க வேண்டும். சில விஷயங்களைக் கொஞ்சம் வேறே மாதிரித் தெரிகிற விதத்தில்தான் காட்ட வேண்டும்' என்ற practical necessity -யால் ரொம்வும் ஸத்ய தர்மம் பார்த்து முடியாது என்றே சில அம்சங்களில் காம்ப்ரமைஸ் பண்ணிக்கொண்டு போகும்படியாகச் சொல்லியிருக்கும். வார்த்தையில் ரொம்பவும் தர்ம ஜோடனை பண்ணாவிட்டாலும், கார்யத்தில் அதில் சொல்லியிருக்கிற அளவுக்கே ராஜாக்கள் விட்டுக்கொடுத்து ராஜ்ய பாரம்

பண்ணினதால், இக்காலத்தில் கார்யத்தில் நடக்கிற அதர்மமும் யதேச்சாதிகாரமும் அப்போதெல்லாம் நடந்ததேயில்லை.

17.2-சாஸ்வத சட்டமும், தாற்காலிக மாறுதல்களும்

எடுத்ததற்கெல்லாம் தன்னிஷ்டப்படிச் சட்டம் செய்ய இடமுள்ளபோதுதான் யதேச்சசாதிகாரத்துக்கு இடம் கொடுத்துப் போகும். பழைய காலத்தில் 'மானார்க்கி'தான் நடந்ததென்றாலுங்கூட ராஜாக்களுக்கு இப்படி நினைத்த மாதிரியெல்லாம் சட்டம் செய்ய 'அதாரிடி'இருக்கவில்லை என்பது தெரியாததால்தான் 'க்ரிடிஸைஸ்'செய்கிறார்கள். க்ரிடிஸைஸ் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய விஷயமென்னவென்றால், அடிப்படைச் சட்டங்கள் யாவும் தர்ம சாஸ்திரத்திலும் அர்த்த சாஸ்திரத்திலும் எழுதி வைக்கப்பட்டவையாகவே இருந்துவிட்டன. சாச்வத வாழ்க்கைக்கு ஒரு துணை உபாயமாக இந்த தார்மிகச் சட்டங்கள் இருப்பதால் இவையும் சாச்வதம்தான் என்ற நம்பிக்கையும் பிடிப்பும் எல்லா ராஜாக்களுக்கும் இருந்தன. வைதிகத்தையும், ஆஸ்திக்யத்தையும், தர்மத்தையும் விருத்தி செய்வதே ராஜாவின் பொறுப்பு என்று சின்ன வயஸில் குருகுல வாஸத்திலேயே அரச குமாரர்களுக்கு ஆழமாக போதிக்கப்பட்டிருந்தது. 'இந்த சாச்வத ஸத்யங்களைப் பழைய சாஸ்திரங்களின் சட்டங்களையே சாச்வதமாகப் பின்பற்றினால்தான் அடைய முடியும்;கொஞ்சமும் ஸ்வயநலம் கலக்காமல், லோகத்தின் நிரந்தர க்ஷேமத்திற்கென்றே ரிஷிகள் கொடுத்துள்ள விதிகளை அவர்களுடைய நிலைக்கு எவ்வளவோ கீழே உள்ள நாம் மாற்றப்படாது'என்று ஒரு ராஜா வித்யாப்யாஸத்தின் போதே 'கன்வின்ஸ்'பண்ணப்பட்டிருப்பான். அதனால், இந்த சாஸ்திரங்கள், நடைமுறைத் தேவைகள் ஆகிய இரண்டையும் நன்றாயறிந்த மந்திரிகளின் துணையுடன் அவன் ஆட்சி பண்ணும்போது கால, தேச, வர்த்தமானங்களின் நிர்ப்பந்தத்தினால் சாஸ்திரச் சட்டங்களில் எங்கே மாறுதல் தேவைப்படுகிறதோ அங்கே மட்டும் கொஞ்சம் பண்ணிப் புது 'ரூல்' போடுவான். மாறுதல் என்றால் முழுக்க change பண்ண மாட்டான்; கொஞ்சம் modify மட்டும் பண்ணுவான். சாஸ்திரத்திலேயே அவ்வப்போது வருகிற

ராஜாவின் discretion -க்கு (ஸமயோசித புத்திக்கு) என்று விட்டிருக்கிற இனங்களில்தான் சட்டம் போடுவான். 'தேர்ச் சக்கரம் பாதையை விட்டுக் கொஞ்சங்கூட விலகாத மாதிரி மநு தாமத்தை விட்டு விலகாமலே திலீபன் ஆட்சி பண்ணினான்'என்று காளிதாஸன் சொல்வது*அக்காலத்தில் பொதுவாக எல்லா ராஜாங்கத்தின் நடைமுறையையும் reflect பண்ணுவதுதான்.

'ஸெக்யூலரிஸம்' என்பதை இப்போது நடத்துகிற மாதிரி நடத்துகிறபோது சாச்வத தர்மத்தைப் பற்றி நினைக்க இடமேயில்லை. மாறிக்கொண்டேயிருக்கிற நடைமுறை வாழ்க்கை நலனை, மாறி மாறிப் பலவிதமாக நினைக்கிறவர்கள் ரக்ஷித்துக் கொடுப்பதே ராஜாங்கம் என்று ஆகிறபோது, சட்டங்களும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. தார்மிகச் சட்டங்கள் எத்தனையோ ஆயிரம் வருஷங்கள் இந்த தேசத்தில் மாறாமல் பின்பற்றப்பட்டிருக்க, 'அர்த்தம்' என்கிற தற்காலிக விஷயத்தையே லக்ஷ்யமாகக் கொண்ட இன்றைய ஜனநாயக அரசாங்கங்களின் சட்டங்கள் அவ்வப்போது ஆட்சிக்கு வருகிறவர்களின் இஷ்டப்படி தினம் தினம் மாறுகின்றன.

புரோஹிதர், குலகுரு, மந்திரி-அமாத்யர்-ஸசிவர் என்கிற பலவிதமான ஆலோசகர்களைக் கலந்து கொண்டும், ஒவ்வொரு ஸமுதாயத்துக்குமான பிரதிநிதிகளைக் கொண்ட ஸபைகளின் அபிப்ராயங்களைக் கருத்தில் கொண்டும், ஏற்கனவே ஏற்பட்டுள்ள ராஜநீதி சாஸ்திரச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டும்தான் ராஜாக்கள் ஆண்டார்களே தவிர, யதேச்சாதிகாரம் பண்ணவேயில்லை. ஸ்தல ஸ்தாபன ஆட்சி என்று இப்போது வார்த்தையில் சொல்கிறபடி நிஜமாக அங்கங்கே பஞ்சாயத்து ராஜ்யம் நடந்தது பழங்காலத்தில்தான். ஸ¨பர்வைஸர் மாதிரிதான் ராஜா மேற்பார்வை பார்த்து வந்தான். யுத்தம், ராணுவ ஸமாசாரத்தில்தான் மத்ய ராஜாங்கத்துக்கு அதிகாரம் நிறைய இருந்தது. கோயில் குளம் கட்டுவது, சிஷ்டர்களையும் வேத வ்யுத்பன்னர்களையும், பல கலைகளைச் சேர்ந்தவர்களையும் மானியம் தந்து ஆதரிப்பது முதலானவையே 'ஸிவில்' விஷயங்களில் ராஜாவின் முக்ய கார்யமாயிருந்தது. மற்ற 'ஸ்வில்'

விஷயங்கள் ஸ்தல ஸ்தாபானங்களின் ஆலோசனைகளை முக்யமாகக் கொண்டே கவனிக்கப்பட்டன.

அவ்வப்போது ஆட்சி செய்யும் ராஜாக்கள் பழைய ஆதாரச் சட்டத்தை அநுஸரித்தே அவசியமான இடத்தில் புது ரூல் போடலாம் என்பது அக்காலத்தில் பின்பற்றியமுறை. அவ்வப்போது ஆட்சியதிகாரத்திலிருப்பவர்கள், தங்களுக்கு இஷ்டமானபடி, தங்களுக்கு அநுகூலமானபடி எப்படியெல்லாம் அபிப்ராயப்படுகிறார்களோ, அப்புறம் இந்த ஐடியாலஜியையும் எப்படியெல்லாம் மாற்றிக் கொள்கிறார்களோ அதன்படி 'லா'க்கள் பண்ண வேண்டும் என்பதற்காக, இதற்கு அநுகூலமாக ஆதாரச் சட்டத்தையே மாற்றிவிட வேண்டுமென்பது இப்போதைய நடைமுறை! வருஷா வருஷம் கான்ஸ்டிட்யூஷனுக்கு அமென்ட்மென்ட்! இது ஜனநாயகம்! பழைய முறை யதேச்சாதிகாரம்!

----

*"ரகுவம்சம்"1.17

17.3-அரசனுக்கிருந்த கட்டுப்பாடுகள்

விஷயம் தெரியாமலே குற்றம் சாட்டுகிறார்கள். அப்பனுக்குப் பின் பிள்ளைக்குப் பட்டம், அதிலும் தலைப் பிள்ளைக்குப் பட்டம் என்று law of primogeniture -படி ராஜ்யாதிகாரம் போனதால் தகுதிக்கோ, பிரஜைகளின் ஸம்மதத்துக்கோ இடமில்லாமலே அக்கால முடியரசு நடந்தது என்று இப்போதைய குடியரசுவாதிகள் சொல்வதும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுதான். இப்போது தான் வயஸு ஒன்றைத் தவிர ஜனநாயகப் பிரதிநிதிளுக்கு எந்தத் தகுதியும் வைக்காமல் விட்டிருக்கிறது. நம்முடைய கான்ஸ்டிட்யூஷனை (அரசியல் நிர்ணயச் சட்டத்தை) நிறைவேற்றிய ஸபைக்கு அக்ராஸனராயிருந்த ராஜேந்திரப்பிரஸாதே இதை ஆக்ஷேபித்துப் பார்த்தார். "சட்டத்தைப் பற்றி விவாதிக்க வேண்டிய வக்கீல்களுக்கும¢ தீர்ப்புக் கொடுக்க வேண்டிய ஜட்ஜ்களுக்கும் அநேக க்வாலி·பிகேஷன்கள் வைத்திருக்கிறோம்.

ஆனால் அந்தச் சட்டங்களைப் போட்டு நிறைவேற்றுகிற எம்.எல்.ஏக்களுக்கும் எம்.பிகளுக்கும் ஒன்றும் வேண்டாமென்றால் கொஞ்சங்கூட ஸரியாயில்லையே"என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனாலும் அவர் சொன்னதற்கு கான்ஸ்டிட்யூவென்ட் அஸெம்ப்ளி ஒத்துக்கொள்ளவில்லை.

பழைய நாளில் ராஜாக்களுக்கு நிரம்ப யோக்யதைகளை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது. குருகுலவாஸம் பண்ணி ஸகல சாஸ்திரங்களையும் தெரிந்து கொள்வார்கள்;தநுர்வேத அப்யாஸம் பண்ணுவார்கள்.

தர்மத்திலும், பண்பிலும் உயர்ந்தவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். ராஜாவாகி வெளி சத்ருக்களை ஜயிப்பதற்கு முந்தி அவன் காமம், க்ரோதம் முதலான ஆறு உள் சத்ருக்களையும் ஜயிருத்திருக்க வேண்டுமென்பது சாஸ்திரம்.

தகுதி எதுவும் போதாமல் துன்மார்க்கத்தில் போன அஸமஞ்ஜன் மாதிரியான ராஜகுமாரர்களையும், ராஜாவான பிறகும் யதேச்சாதிகாரமாகத் தன் மனஸுப்படி பண்ணின வேனன் போன்றவர்களையும் ஜனப் பிரதிநிதி ஸபையினர் ஒழித்தே கட்டியிருக்கிறார்கள்.

Primogeniture (தலைப் பிள்ளைக்குப் பட்டம்) என்பதால் அவனுக்கு யோக்யதாம்சமில்லாவிட்டாலும் அப்படிக் கட்டலாமென்று அர்த்தமில்லை. எவனைவிட யோக்யதையுள்ளவர் இருக்க முடியாதோ அப்படிப்பட்ட ராமசந்திர மூர்த்திக்கே பட்டம் கட்டுவதற்கு முன்னால் தசரதன் ஸபையைக் கூட்டி அப்படிப் பண்ணலாமா என்று அபிப்ராயம் கேட்டிருக்கிறான்!

சூரபத்மன், மஹிஷாஸுரன், ராவணன், துர்யோதனன் மாதிரியானவர்கள் கூடப் பேருக்காவது மந்த்ராலோசனை என்று ஒன்று நடத்தித் தானிருக்கிறார்களென்று புராணங்களிலிருந்து தெரிகிறது. ஸாக்ஷ£த் ராமர் வானரங்களைக் கலந்தாலோசித்து விட்டுத்தான், சரணாகதி என்று வந்த விபீஷணனை அங்கீகாரம் பண்ணியிருக்கிறார்.

ரகுவம்சம் ஒன்றைப் பார்த்து விட்டால் போதும். வரிசையாக ஸ¨ர்ய வம்ச ராஜாக்களைப் பற்றிச் சொல்கிற அந்தக் காவியம் தர்ம சாஸ்திரம் மட்டுமின்றி அர்த்த சாஸ்திரக் கொள்கைகளும் பெருமளவுக்கு அமலுக்கு வந்துவிட்ட காலத்தில் எழுதப்பட்டதுதான். அதனால் அதில் சொல்லியிருப்பவை பிற்கால ராஜ தர்மக் கருத்துக்களே எனலாம். சிலது இப்போது நினைவுக்கு வருவது சொல்கிறேன்.

வண்டானது எப்படிப் புஷ்பத்துக்கு வலி தெரியாமல் தேனை எடுத்துக் கொள்கிறதோ, அப்படித்தான் ராஜை பிரஜைகளுக்குக் கொஞ்சங்கூட சிரமம் தெரியாமல், அவர்களுடைய மலர்ச்சி குன்றாமலே வரி வசூலித்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது சாஸ்திரம். இதை இன்னொரு உவமையால் இன்னும் அழகுபடுத்திச் சொல்லியிருக்கிறான் உவமைக்கே பெயர் பெற்ற காளிதாஸன். 'ஸ¨ர்யன் எப்படி முதலில் பூமியிலிருந்து ஜலத்தை உறிஞ்சிக்கொண்டு அப்புறம் அதை பூமிக்கே மழையாகப் பொழிகிறானோ அப்படி திலீபன் பிரஜைகளிடமிருந்து வசூலித்ததைப் பிறகு அவர்களுடைய நலனுக்கேயான காரியங்களில் செலவிட்டான்' என்கிறான் (1.18) . லோகத்துக்கு ஒரு ப்ரயோஜனமுமில்லாமல் எங்கேயோ ஸமுத்திரத்தில் இருக்கிற உப்பு ஜலத்தை ஸ¨ர்யன் இழுத்து, அப்புறம் உலகுக்கு பயனாகிற சுத்த ஜலமாக அதை வர்ஷிக்கிறானல்லவா?இப்படித்தான் ஸமுதாய க்ஷேமத்துக்கு வராத செல்வத்தை ராஜா வரியாய் வசூல் செய்து பிறகு அதன் க்ஷேமத்துக்கே செலவிட்டான் என்று அர்த்தம்.

தங்களுக்கெல்லாம் ரக்ஷகனாக இருக்கப்பட்ட ராஜாவிடம் எல்லா ஜனங்களுக்கும் ஒரு மரியாதை இருந்தால்தான் அவனுடைய சட்டத்துக்குக் கட்டுப்படுவார்களென்றே அவனுக்குப் பொதுக் கண்ணோட்டத்தில் அந்தஸ்தை ஏற்படுத்தித் தருவதற்காக அரண்மனையும், 'ராஜபோகம்'என்கிற ஸௌகர்யங்களும், ஆனை குதிரைகளும், ஆபரணங்களும் கொடுத்திருப்பது. ஆனால் இப்படிச் சொந்தச் சொத்தை விருத்தி செய்து கொள்வதற்காகவே அவன் வரி போட்டான் என்று நினைத்தால் அது தப்பு. 'Welfare State - கருத்து'அப்போதும் உண்டு என்று மேலே சொன்னதலிருந்து தெளிவாகிறது.

'ரகு'வம்சம் என்றே பெயர் ஏற்படச் செய்த ரகுவைப் பற்றிக் காளிதாஸன் (4, 5 ஸர்கங்களில்) சொல்கிறான்: உள்நாடு, வெளி நாடுகளையெல்லாம் ஜயித்து ஏராளமான செல்வக் குவியலோடு திரும்பிய ரகு 'விச்வஜித்' என்ற யாகம் செய்து அத்தனை செல்வத்தையும் தக்ஷிணையாகவும் தானமாகவும் கொடுத்து விடுகிறான். ஏராளமாக ஈட்டிய நிதிகளால் தன் சொந்தச் சொத்தை அவன் ஜாஸ்தி பண்ணிக் கொள்ளாதது மட்டுமில்லை; ஏற்கனவேயிருந்த சொத்துக்களைக்கூட தானம் பண்ணி விடுகிறான்!கௌத்ஸர் என்ற பிராம்மணர் வருகிறபோது அவனிடம் அதிதிக்கு அர்க்யம் கொடுக்கக்கூடாத் தங்கத்திலோ வெள்ளியிலோ கிண்ணம், உத்தரிணி முதலானவைகள் இல்லாமல் மண்ணாலான பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போனானாம்!இப்போதானால் தினமும் ஏதாவது மந்திரி, எம்.எல்.ஏக்கு எப்படிப் புதிசு புதிசாக பங்களாக்கள் முளைக்கின்றன என்று யாராவது கேள்வி எழுப்புவதாகப் பார்க்கிறோம்!

'ராஜா'என்ற வார்த்தைக்குக் காளிதாஸன் (4.12-ல்) கொடுக்கிற டெஃபனிஷனே அவன் ஜனங்கள் மீது யதேச்சாதிகாரம் பண்ணாமல் ஸர்வ ஜனங்களுக்கும் பரமப் பிரியனாக இருந்தானென்பதுதான். '**ராஜா ப்ரக்ருதி ரஜ்ஞநாத்** 'என்பதுதான் அந்த டெஃபனிஷன். 'ப்ரக்ருதி'என்றால் 'பொது ஜனங்கள்'. 'ரஜ்ஞநாத்' என்றால் 'மகிழப் பண்ணுவதால்'. பொது மக்களை மகிழப் பண்ணுவதாலேயே, 'ரஞ்ஜ்'என்ற 'ரூட்'டியிலிருந்து 'ராஜ்'என்ற வார்த்தை உண்டானதாகக் காட்டியிருக்கிறான்.

பவபூதி என்று இன்னொரு மஹாகவி. அவர் எழுதின 'உத்தர ராம சரித' நாடகத்தில் ராமர், "நான் பொது ஜனங்களைப் HgF பண்ணுவதாக எதையும் தியாகம் பண்ணத் தயார். என்னுடைய ஸ்நேஹம், தயை ஸௌக்யம் எதையும், ஏன் ஸாக்ஷ£த் ஸீதையையுங்கூட ஜனங்களுக்காக நான் பரித்யாகம் பண்ணும்போது அதனால் எனக்கு வ்யஸனம் உண்டாகாது"என்று சொல்வதாக வருகிறது*1. இதிலே கவிநயம் என்னவென்றால், இதைத் தொடர்ந்தே, ஜனங்கள் ஸீதையைப் பற்றி ஸந்தேஹப்பட்டார்கள் என்பதற்காக அவளுடைய பரிசுத்தத்தைப் பற்றி த்ருடமாகத் தெரிந்திருந்தும் ராமர் அவளைப் பரித்யாகம் செய்கிறார்.

இதற்கு முன்னாடியும் லங்கையில் ராவண வதமானவுடன் ஸீதை எத்தனையோ ஆர்வத்தோடு அவரைச் சேர வந்தபோது, அவருக்கும் அவளிடம் எத்தனையோ ப்ரியமும் நம்பிக்கையும் இருந்தபோதிலும், ராஜா என்றால் யார் அபிப்ராயத்தையும் பொருட்படுத்தாமல் மனஸு போனபடி இருக்கலாம் என்றில்லாமல் அவன்தான் லோகத்தின் அபிப்ராயத்துக்கு ரொம்பவும் மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று காட்டுவதற்காக, வானரங்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் எதிரே அவளைத் திரஸ்காரம் பண்ணினார். அப்புறம் அவள் அக்னிப் பிரவேசம் பண்ணி, அக்னியே அவளது பதிவ்ரத்யத்தைப் பற்றி அத்தனை ஸேனைகளும் அறியச் சொன்ன பின்தான் ஏற்றுக் கொண்டார். அதற்கப்புறமும் அயோத்திக்கு வந்தபின் அங்கே ஏதோ கசமுச என்ற பேச்சு எழுந்தது என்பதற்காக ஸாக்ஷ£த் மஹாலக்ஷ்மியான ஸீதையை அவர் வனத்துக்கு அனுப்பினாரென்றால், 'மானார்க்கி'என்பது யதேச்சாதிகாரமோ ஸர்வாதிகாரமோ இல்லவே இல்லை என்றுதானே தெரிகிறது?

ராமசந்திரமூர்த்தி ஸீதா தேவியிடம் வைத்திருந்த ப்ரியத்துக்கு அளவேயில்லை. அவர் ஏகப் பத்னி வ்ரதர். ஆனால் ராஜாக்கள் ஏக பத்னி வ்ரதர்களாகத்தானிருக்க வேண்டுமென்று கட்டுப்பாடில்லை. யுத்தம், வேட்டை, தீர்ப்பு சொல்வது, மந்திராலோசனை, கோவில் திருப்பணி என்று அவனுக்கு ரொம்ப வேலை இருந்ததால் அவனைக் கொஞ்சம் ஸுகபுருஷனாக விட்டு வேலை நெரிசல் மனஸில் இல்லாமல் பண்ண ஸம்பிரதாயம் அநுமதித்திருக்கிறது. அதனால்தான் நாட்டியம், அந்த:புரம், கேளிக்ருஹம் என்றெல்லாம் அவனுக்கு உல்லாஸ விஷயங்களை அநுமதித்திருப்பது. மற்ற ராஜ்யங்களிடம் நல்லுறவை உண்டாக்கிக் கொள்வதற்கு ஒரு வழியாயும் ஒரு ராஜா அந்த ராஜ்யங்களின் ராஜகுமாரிகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதுண்டு. இப்படியெல்லாமிருந்தாலும் இந்தச் சின்ன இன்பங்களிலேயே அவர்கள் முழுகிவிடவில்லை; இதற்காக தேசக் கடமையையோ, தங்களுடைய ஆத்மாபிவிருத்தியையோ விட்டுவிடவில்லை. அர்த்த சாஸ்த்ரத்தில் சாணக்யன் ஒரு ராஜாவின் daily routine -ஐ (அன்றாட அலுவலை) வகுத்துக் கொடுத்திருக்கிறான். அதிலே ஒரு நாளைப்

பதினாறாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு ட்யூட்டியைச் சொல்லிய்ருக்கிறான். இந்தப் பதினாறிலே ஏதோ மூணு நாலுதான் நித்ரை, கேளிக்கை முதலானவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியெல்லாம் ராஜ்யபாரக் கடமைகள்தான். ராத்ரியும் பகலும் இந்த டயம்-டேபிள்படியேதான் ராஜாக்கள் தங்கள் தர்மத்தைச் செய்ததாக 'ரகுவம்சத்'திலும் அங்கங்கே வருகிறது. ராத்ரியிலும் கூடத் தூங்காமல் ராஜாக்கள் மாறுவேஷத்தில் ரோந்து போனதாக எவ்வளவு கதைகளில் கேட்கிறோம்? நடைமுறையில் இல்லாத ஒன்று இப்படி அநேகக் கதைகளில் அரசனின் ஒரு அவசியமான அலுவலாக வரமுடியுமா?

கேளிக்கைகள் அநுமதிக்கப்பட்டிருந்தாலும் ஜெனரலாக ராஜாக்களுக்குச் சிறு வயஸிலிருந்து ஏற்பட்டிருந்த சாஸ்திர அப்யாஸத்தால் அவர்கள் அதற்குக் கொடுத்திருந்த அளவுக்கு மேலே போகாமல் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடனேயே இருந்திருக்கிறார்கள். ராமர் அயோத்யாவாஸிகள் அவ்வளவு பேரையும் தம்மோடு வைகுண்டத்துக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டாரல்லவா?இதற்கு முந்தி அவர் தம் பிள்ளைகளில் குசனைக் குசாவதி என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்ட ராஜ்யப் பகுதிக்கும், லவனை சராவதி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கும் ராஜாக்களாக நியமித்திருந்தார். அவரோடு அயோத்யா புரியே சூன்யமாய் விட்டதல்லவா? அதனால் அதன் அதிதேவதை குசனால் அயோத்திக்கு புதுக் களை ஊட்டச் செய்யவேண்டுமென்று நினைக்கிறாள். அவனிடம் வேண்டுகோள் விடுப்பதற்காக ஒரு நடு ராத்ரியில் குசாவதியிலிருந்த அவனுடைய சயன க்ருஹத்துக்குள்ளேயே ஆவிர்பவிக்கிறாள்.

தீடீரென்று தன் அறைக்குள்ளே யாரோ முன்பின் தெரியாத ஸ்த்ரீ வந்திருப்பதைப் பார்த்தவுடன் குசன், "c யார்? எவருடைய பத்னி?இப்படிப் பாதி ராத்ரியில் இங்கே வந்திருப்பது என்ன உத்தேசத்தில்?ரகுவம்சம்சத்தவர்களான நாங்கள் இந்திரியக் கட்டுப்பாடு பண்ணிய 'வசி'க்கள்; பரஸ்திரீகளிடம் எங்கள் நோக்கம் போகவே போகாது என்று தெரிந்துகொள்"என்கிறான் (16.8) குசன் வாய்மொழியாக ராஜா எப்படியிருக்க வேண்டுமென்ற ஐடியலையே இங்கே கவி சொல்லியிருக்கிறாரென்பது தெளிவு.

சாணக்யரும் அர்த்தசாஸ்திரத்தில் ஸ்தரீ மோஹம், தன மோஹம், அதிகக் கோபம் முதலிய குணங்களைக் கொண்டிருந்த அரசர்கள் அதோகதியே அடைந்திருக்கிறார்களென்பதற்கு உதாரணங்களைக் காட்டி, ராஜாக்களுக்கு நல்ல சாஸ்த்ரப்யாஸமும், தங்களுடைய கடுமையான ட்யூட்டிகளைத் தளராமல் ஆற்றுவதற்கான ஒழுக்கக் கட்டுப்பாடும் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

ராஜா தன் ஸௌகர்யத்தை மட்டும் கவனித்துக் கொண்டானே தவிர ஜனங்களுக்கு ஸௌகர்யங்களைப் பண்ணித் தரும் Welfare State -கொள்கை அக்காலத்தில் இல்லை என்று நினைப்பது ஸரியே இல்லை. சாலை போடுவது, அணை கட்டுவது (கல்லணை ஆயிரம் வருஷத்துக்கு மேலாக இன்றும் ஒரு என்ஜினீயரிங் அதிசயமாக இருக்கிறது!) Public Works என்ற மற்றப் பொது மராமத்துக்கள், ஆதுரசாலை என்று ஆஸ்பத்திரி வைப்பது இப்படியாக ஸமூஹ நலக் காரியங்களுக்கு ஆதிகாலத்திலிருந்தே தனித்தனி டிபார்ட்மென்ட்களும் அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். வாஸ்தவத்தில் அப்போதுதான் பிரஜைகளின் நிஜமான க்ஷேமத்துக்கானதை ராஜாங்கம் செய்தது. ஏனென்றால் தற்கால ராஜாங்கங்கள் மாதிரி மேலே சொன்னவற்றோடு முற்கால ராஜா நின்றுவிடாமல் பிரஜைகளை தர்மத்தில் கொண்டு போவதற்கும் பொறுப்பெடுத்துக்கொண்டு அதற்கானவற்றைச் செய்தான். ஜனங்களின் சாச்வத க்ஷேமத்துக்காக யாகாதிகள் பண்ணினான், கோயில்கள் கட்டினான், உத்ஸவாதிகள் நடத்தினான், மஹாபாரதம் முதலிய கதைகளை எல்லா ஜனங்களுக்கும் பிரகடனம் பண்ணினான். ஸத்துக்களான சிஷ்டர்களுக்கு கௌரவம் கொடுத்து அவர்களுடைய ஜீவ்ய உதாரணம் எல்லா மக்களிடமும் பிரகாசித்து அவர்களுக்கும் அந்த வழியில் தூண்டுதலாக இருக்கும்படிப் பண்ணினான்.

இங்கே நான் ஸத்துக்கள், சிஷ்டர்கள் என்று யாரைச் சொல்கிறேனோ அவர்கள்தான் ராஜாக்களைக் கையில் போட்டுக்கொண்டு, தாங்கள் ஸௌகர்ய வாழ்க்கை நடத்துவதற்காகவே அவனை ஆட்டி வைத்தார்கள் என்றும் ஒரு குற்றச்சாட்டு கொஞ்ச காலமாக அடிபடுகிறது. அதாவது பிரம்ம தேஜஸ் என்பதைச் சொல்லிக்கொண்டு க்ஷத்ரிய ராஜாவுக்கு மேலே பிராம்மணன்தான்

உட்கார்ந்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தான் என்று வாதம். உண்மையில் அந்தக் கால பிராம்மணன் எத்தனை எளிமையாக, ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருந்தான் என்று தெரியாததால் இப்படிச் சொல்கிறார்கள். 'மஹா தந்த்ர சாலி எதையும் செய்யத் துணிந்தவன்'என்று நினைக்கப் படுகிற சாணக்யனே, சந்திரகுப்த மௌரியனைச் சக்கரவர்த்தி ஸ்தானத்துக்குக் கொண்டுவந்து அவனுடைய பூர்ண விச்வாஸத்தையும் பெற்றிருந்த போதிலும், பாடலிபுரத்தில் அரண்மனைக்குப் பக்கத்திலே தனக்கு மாளிகை கட்டிக்கொண்டு போக்யத்தில் மிதிக்கவில்லை. ஊருக்கு வெளியிலே ஒரு குடிசை போட்டுக்கொண்டு, கந்தையைக் கட்டிக்கொண்டு, கஞ்சி காய்ச்சிக் குடித்துக் கொண்டுதான் கிடந்தான். இப்படியே புரோஹிதர்களான வஸிஷ்டர் போன்றவர்களும் நகரத்துக்கு வெளியிலே பர்ணசாலையில் வெகு எளிமையான வாழ்க்கைதான் நடத்தி வந்தார்கள். அவர்களாக ராஜீய விஷயங்களில் தலையிட்டு அபிப்ராயம் சொல்லி 'ஆட்டி வைத்ததாக' ஸாக்ஷியே இல்லை. ராஜாக்கள்தான் ஏதாவது 'ப்ராப்ளம்' என்றால் அரண்மனையை விட்டு அவர்களிடம் போய் அவர்களுடைய புத்திமதியையும் அநுக்ரஹத்தையும் கோரியிருக்கிறார்கள்.

ராஜாவுக்கு எத்தனை பொறுப்போ அதைவிடக் கடுமையாகத்தான் பிராம்மணன் தனக்கும் அன்றாடக் காரியங்களை வைத்துக்கொண்டு லோக க்ஷேமார்த்தம் தன்னைச் சக்கையாகப் பிழிந்து கொண்டானே ஒழிய, தனி சலுகை, வசதி எதுவும் பெறவில்லை*2.

ராஜாவுக்கும் சட்டத்துக்கு முன்னாடி எந்தச் சலுகையும் இல்லை. கன்றின் மேலே தெரியாமல் தேரை ஏற்றி அதை ராஜகுமாரன் கொன்று விட்டானென்பதற்காக அவனுடைய தகப்பனாரான மநுநீதிச் சோழன் அவனையே பதிலுக்குத் தேர்க்காலில் பலி கொடுக்கப் போயிருக்கிறான்!

ராஜாவுக்கு அப்போது இருந்த பொறுப்பும் அதைப்பற்றி அவன் கொண்டிருந்த விசாரமும் இப்போது ராஜாங்கம் நடத்துகிறவர்களுக்கு இன்னதென்றே தெரியாது. ஏனென்றால் பழைய நாள் ராஜா பிரஜைகளின் தர்ம வாழ்க்கைக்கும் பதில் சொல்லவேண்டியவனாயிருந்தான். 'அவர்களுடைய

பாபம் அவர்களை நல்வழிப் படுத்தத் தவறிய தன்னையே வந்து சேரும்'என்று அவனுக்கு போதிக்கப்பட்டிருந்தது - "**ராஜா ராஷ்ட்ர க்ருதம் பாபம்**"என்பது சாஸ்திரம். அதாவது ஒரு தேசத்திலிருக்கப்பட்ட பிரஜைகள் பண்ணும் பாவமெல்லாம் அவர்களை ஆளும் ராஜைவைத்தான் சேரும் என்று அர்த்தம். இதற்கு Converse -ஆக ஒரு ராஜா தப்புப் பண்ணினால் அது தேசம் முழுவதையும் தாக்கும், இயற்கையையே சீற வைத்துப் பெரிய உத்பாதங்களை உண்டாக்கிவிடும் என்றும் சொல்லி அவனை தர்மத்துக்கு பயந்து நடக்கும்படியாகப் பண்ணினார்கள்.

திருக்குறளில் இதையெல்லாம் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறது. கொடுங்கோல் ஆட்சியில் ஜனங்கள் விடுகிற கண்ணீரே ராஜாவின் செல்வத்தையெல்லாம் அழித்துவிடும் ஸைன்யம் மாதிரி; ஆட்சிமுறை தப்பினால் பருவ மழை தப்பிப் பஞ்சம் வந்துவிடும்;பால் வளம் போய்விடும்;பிராம்மணர்களுக்கு வேதம் மறந்துபோய், வேத வேள்விகளால் நடக்கும் அத்தனை லோக க்ஷேமமும் போய்விடும் என்றெல்லாம் திருவள்ளுவர் எச்சரித்திருக்கிறார்*3.

ராஜா ஒரு தேசத்தில் எப்படி சீலத்தைக் கட்டி ஆளவேண்டும் என்பதற்கு ஐடியலைக் காளிதாஸன் திலீபனுடைய ராஜ்யத்தில் காட்டுகிறான். திலீபனுடைய ராஜதானியில் உத்யானவனத்துக்குப் போகிற வழியிலேயே பெண்கள் ராத்திரி வேளையில் அவர்கள் பாட்டுக்கு மயங்கித் தூங்கிக் கொண்டிருப்பார்களாம். "அந்தப் பெண்களுடைய வஸ்திரங்களை த்லீபனுடைய ஆட்சியிலே வீசிய காற்றுகூட அசைத்ததில்லை. அப்படியிருக்க மநுஷ்யனாகப் பிறந்த எவனாவது அவர்கள் பக்கம் கை நீட்டி இருக்க முடியுமா?" என்று கவி கேட்கிறான் (6.75) .

மக்கள் மட்டுமின்றி மாக்கள் என்கிற விலங்குகள், செடி கொடிகள், பயிர் பச்சை எல்லாவற்றிடமும் ராஜாக்களுக்கு மிகுந்த பரிவு இருக்க வேண்டுமென்பது சாஸ்திரம். வேட்டையாடுவதில்கூட வரம்பு உண்டு. க்ரூரமான பிராணிகளைத்தான் வேட்டையாடலாம் என்று அநேக ராஜாக்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். யாகம் என்று சொல்லிக்கொண்டுகூட அதில்

ஏராளமாகப் பிராணி வதை பண்ணினால் பாபம்தான் என்று பாகவத்தில் பிராசீனபர்ஹிஸின் கதையில் சொல்லியிருக்கிறது. புறாவுக்காக CH தன்னுடைய உடம்பையே அறுத்துக் கொடுத்தான், பாரி வள்ளல் முல்லைக்கொடி படருவதற்காகத் தன்னுடைய தேரைத் தொடுத்தான் என்று படிக்கிறோம்.

'சாகுந்தல'த்தில் ஒரு அரசன் ஸகல உயிரிகளிடமும் எவ்வளவு பிரியத்துடனும், 'ஸிம்பதி'யுடனும் இருக்க வேண்டுமென்பது தெரிகிறது.

கண்வருடைய ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்கள் துஷ்யந்தனைப் பார்க்க வந்திருப்பதாக அவனுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் அவன், ஏதாவது பெரிய தப்பு நடந்திருந்தாலோ, அல்லது கஷ்டம் ஏற்பட்டிருந்தாலோ அன்றி ஆச்ரமவாஸிகள் ராஜ ஸமூஹத்துக்கு வரமாட்டார்களே என்று நினைக்கிறான். அப்போது அவன் தனக்கு தானே, 'ரிஷிகளின் தபஸுக்குக் குந்தகமாக ஏதாவது அஸம்பாவிதம் நடந்திருக்குமா?அவர்களுடைய வனத்திலே ஸ்வயேச்சையாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற ஸாது மிருகங்களை யாராவது ஹிம்ஸை பண்ணியிருப்பார்களா?அல்லது என்னுடைய தவறு எதனாலாவது செடி, கொடிகள் புஷ்பிக்காமலும், பழுக்காமலும் போயிருக்குமா?'என்று சொல்லிக் கொள்வதாக வருகிறது (5-வது அங்கம்) .

ராமர் தன்னுடைய ராஜ்யத்தில் ஒருவனுக்குப் புத்ர சோகம் ஏற்பட்டுபோது, அது வர்ணாச்ரம தர்மங்களைத் தான் ஸரியாகப் பரிபாலனம் பண்ணாததன் விளைவே என்று காரணத்தைக் கண்டுபிடித்து அப்படி தர்மம் மீறினவனை சிக்ஷித்திருக்கிறார்.

சாகுந்தலத்தின் ஆரம்பத்திலும் ராஜாக்களுக்கு வர்ணாச்ரம அநுஷ்டானத்தி லிருந்த நம்பிக்கையைக் காட்டுவதாக ஒரு கட்டம் வருகிறது. சகுந்தலையைப் பார்த்தவுடன் துஷ்யந்தன் மனஸில் பிரேமை உண்டாகி விடுகிறது. அவளுடைய ஸகிகள் அவளைப் பரிஹாஸம் செய்ததிலிருந்து அவள் கல்யாணமாகாதவள்தான் என்று அவனுக்குத் தெரிகிறது. அதனால் தனக்குப் பிரேமை உண்டானதில் தப்பு இல்லை என்று நினைக்கிறான்.

ஆனால் உடனேயே, 'இவள் கண்வ மஹரிஷியின் புத்ரி என்றல்லவா தெரிகிறது?அப்படியானால் பிராம்மணப் பெண்ணாக அல்லவா இருக்க வேண்டும்?அவளிடம் க்ஷத்ரியனான என் மனஸ் போகப்படாதே?ஆனாலும் என் மனஸ் அவளிடம் போகிறதே!ஸத்துக்களின் (அந்த:கரணம்) தப்பு செய்யவே செய்யாது. அதனால் இவள் பிராம்மணப் பெண்ணாக இருக்க முடியாது'என்று முடிவு பண்ணுகிறான். அவன் சகுந்தலையின் பிறப்பைப் பற்றி ஒரு விதமாக அநுமானம் பண்ணி, தான் அவளைப் பிரியப்படுவது வர்ண தர்மத்துக்கு விரோதமாக இராது என்று தீர்மானிக்கிறான். அவன் பண்ணின அந்த அநுமானம் தப்பாகப் போனாலும், வாஸ்தவத்தில் சகுந்தலை கண்வரின் வளர்ப்புப் பெண்தானே? க்ஷத்ரியராய்ப் பிறந்த விச்வாமித்ரருக்கும் அப்ஸர ஸ்த்ரீயான மேனகைக்கும் பிறந்தவள்தானே சகுந்தலை?இங்கே ஸத்துக்கள் எனத் தக்கவர்களாகவே ராஜாக்கள் இருக்க வேண்டுமென்றும், அவர்களின் அந்த:கரணம் தன்னையறியாமல்கூட வைதிகமான வர்ண விபாகங்களுக்கு வித்யாஸமாகப் போகாது என்றும் கவி உணர்த்துகிறார்.

ராஜாக்களுக்கு இவ்வளவு பொறுப்பும், பொறுப்புத் தவறுவதால் பாபத்துக்கு ஆளாகிவிடக் கூடாது என்ற பயமும் கவலையும், இதனாலேயே தர்மராஜ்ய பரிபாலனத்தில் ஆழ்ந்த கவனமும் ஈடுபாடும் இருக்கும் படியாகத்தான் தர்ம சாஸ்திரம் மட்டுமின்றி அர்த்த சாஸ்திரமும் ராஜநீதிகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

கஜானவை எப்படியாவது ரொப்பிக் கொண்டு விடுவதில் அக்கால ராஜக்கள் குறியாக இருக்கவேயில்லை. இதற்கு நிரூபணமாகக் காளிதாஸன் சாகுந்தலத்தில் ஒரு ஸீன் எழுதியிருக்கிறான் (6-வது அங்கம்)

கடல் வாணிபம் செய்கிற ஒருவன் கப்பல் உடைந்து முழுகிப் போய்விட்டதாயும், அவனுக்கு ஸந்ததியில்லாததால் அவனுடைய சொத்து பூராவும் கஜானவைச் சேர்ந்து விடுவதாயும் துஷ்யந்தனுக்கு GF மாதிரி ஒரு 'நோட்'அனுப்புகிறார். உடனே துஷ்யந்தன் அத்தனை செல்வத்தையும் ஆர்ஜிதம் செய்துகொண்டு விடலாமென்று பறக்காமல், 'பெரிய வியாபாரி என்றால் பல கல்யாணங்கள் பண்ணிக் கொண்டிருப்பானே அப்படியிருந்தால்

அவனுடைய பெண்டாட்டிகளில் எவளாவது கர்ப்பமாயிருக்கிறாளா என்று விசாரிக்க வேண்டும்'என்கிறான். அவன் நினைத்ததுபோலவே செத்துப்போன வியாபாரியின் ஒரு ஸம்ஸாரம் கர்ப்பவதியாயிருக்கிறாளென்று தெரிகிறது. "அப்படியானால் சொத்து கஜானாவைச் சேராது;கர்ப்பத்திலிருக்கிற குழந்தையைத்தான் சேரும்"என்று துஷ்யந்தன் தீர்ப்புப் பண்ணுகிறான்.

பொருளாசையில்லாத தர்ம நியாயத்தோடு ராஜாக்களின் ஆழ்ந்த மநுஷ்யாபிமானத்தைக் காட்டுவதாகவும், அதோடுகூட தர்மத்தை மீறாமலிக்கிற பண்பைப் பிரதிபலிப்பதாகவும் அப்போது துஷ்யந்தன் ஒரு கார்யம் பண்ணுகிறான். பதியை இழந்தவர்கள், புத்ரனில்லாதவர்கள் யாவருக்கும் ராஜாவே ஆதரவாயிருர்ரவேண்டுமென்று நினைத்து ஒரு பிரகடனம் பண்ணுகிறான். அதிலே 'எந்த பந்து காலமானவருக்கும் அந்த பந்துவாக நானேயிருப்பேன்'என்கிறான். பதியை இழந்தவர்களிடம் இப்படிச் சொல்வது அஸம்பாவிதம் என்பதால் உடனேயே, 'தர்மத்துக்கு மாறாக இல்லாத உறவு முறைகளில் மாத்திரமே"என்று ஒரு கண்டிஷன் சேர்க்கிறான். சாணக்யனும் இக்கால Welfare State -ன் லக்ஷணங்களாகச் சொல்லப்படும் அநாதைகளின் ரக்ஷணையை ராஜாவின் கடமையாகச் சொல்லியிருக்கிறார். ஏழைகள், கர்ப்பிணிகள், அநாதைகள், வயஸானவர்கள், வியாதியஸ்தர்கள் ஆகியவர்களை ராஜாங்கம் ரக்ஷித்தாக வேண்டுமென்கிறார்.

----

* 1. உத்தர ராம சரிதம்:2.12

* 2. இவ்விஷயமாக தெய்வத்தின் குரல் இரண்டாம் பகுதியில் "கிருஹஸ்தாச்ரமம்" என்ற உரையில் "அந்தணனின் அன்றாடம்" என்ற பிரிவும், "ஜாதிமுறை" என்ற உரையில் "ஒரு பெரிய தப்பபிப்ராயம்" என்ற பிரிவும் பார்க்க.

* 3. திருக்குறள் பொருட்பாலில் 'கொடுங்கோன்மை'என்ற அதிகாரம்

17.4-முக்யமான இரு அரசக் கடமைகள்

இப்படி ராஜாவுக்கு, ராஜாங்கத்துக்குப் பல கார்யங்களையும் கௌரவமான பண்புகளையும் கொடுத்திருந்தாலும் அர்த்த சாஸ்த்ரமானது இவற்றில் இரண்டை மிகவும் முக்யமானவையாகச் சொல்லியிருக்கின்றன. இதுவரை சொன்னவையெல்லாம் அநேகமாக ரக்ஷணையில் வருகிறவை. இப்போது சொல்லப்போகிற இரண்டும் சிக்ஷணையில் வருபவை. ரக்ஷிப்பதற்கு அங்கமேதான் தார்மிகமாக சிக்ஷிப்பது. பயிரை வளர்க்க வேண்டுமானால் களையைப் பிடுங்கி எறியத்தான் வேண்டும். உள்நாட்டில் குற்றம் பண்ணுகிறவர்களுக்குத் தண்டனை கொடுத்து சிக்ஷிப்பது, வெளிநாட்டு எதிரி ராஜாவையும் ஸைன்யத்தையும் யுத்தத்திலே சிக்ஷிப்பது என்ற இரண்டும் ராஜாவின் கார்யங்களில் தலையான இடம் பெறுகின்றன.

17.5-உள் நாட்டு தண்டநீதி

ஆனாலும் சிக்ஷிப்பதை, அதாவது தண்டிப்பதை எடுத்த எடுப்பில் சொல்லியிருக்கவில்லை.

உள்நாட்டுப் பிரஜைகளை பொறுத்தமட்டில் ராஜா அவர்களை ஸன்மார்க்கத்தில் செலுத்துவதற்காக எதுவுமே பண்ணாமல் அவர்கள் தப்புப் பண்ணினால் மாத்திரம் தண்டிப்பது என்று வைத்துக்கொள்ளவில்லை. இந்த நாளில் அரசாட்சி முறைக்கும் பிரஜைகளின் நன்னெறிகளை அபிவிருத்தி செய்வதற்கும் நேர் ஸம்பந்தமில்லாதது போல அக்காலத்தில் இல்லை. ஜனங்கள் அவரவர் தர்மத்தை அநுஸரிப்பதற்கு ராஜா எல்லா விதத்திலும் ஊக்க, உத்ஸாஹங்களைக் கொடுத்து வந்தான். ஸத்துக்களைக் கொண்டு நிறைய தர்மப் பிரசாரம் செய்தான். அந்தந்த ஜாதி நாட்டாண்மை அதிலுள்ளவர்களை ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டிருக்கும்படியாகப் பண்ணினான். ஆலயத்தை ஸமூஹத்துக்கு மத்ய ஸ்தானமாக ஆக்கி, ஜனங்கள் ஈஸ்வர பக்தியால் தர்மிஷ்டர்களாக இருக்கும்படிப் பண்ணினான்.

இப்படி நேராக தர்ம ரக்ஷணை பண்ணினதாலேயே, அப்படியும் அவர்கள் கெட்டுப் போகிறபோது அவர்களை இந்த நாள் 'ஸ்டான்டர்ட்'படிக் கடுமையாகவே சிக்ஷித்தான்.

குற்றவாளிகளிடம் கூடுதலாக தயா தாக்ஷிண்யம் காட்டுவது குற்றங்களுக்கு ஊக்கம் தருவதே ஆகும் என்பதுதான் சாஸ்திர அபிப்ராயம். இப்போதுதான் 'பெர்ஸுவேஷன்'என்பதால் நயமான முறையிலே அவர்களாக மனம் மாறித் திருந்தப் பண்ணணுமென்று நிறைப் பேசுகிறார்கள். ஸாதாரண மநுஷ்ய நேச்சர் இருக்கிற லக்ஷணத்தில் இப்படி எவராவது திருந்தினதாக இவர்களால் காட்ட முடியுமா என்பதே கேள்வி!ஜெயிலில் ஸௌகர்யமெல்லாம் பண்ணிக் கொடுப்பது என்றால், வெளியிலே வேலை வெட்டி இல்லாமல் திண்டாடுகிறவர்களுக்கு, 'அங்கே (ஜெயிலுக்கு) போய் நாம் பாட்டுக்குத் தின்று கொண்டு, தூங்கிக்கொண்டு இருக்கலாமே!'என்று தான் தோன்றும். தர்ம ரக்ஷணைக்கென்று டைரக்டாக ஸர்க்கார் எதுவும் செய்யாமல், அதே ஸமயத்தில் அரசியல்வாதிகள் தங்களுக்கும் தங்களுடைய கொள்கைகளுக்கும் ஸமூஹத்தில் முக்யத்வத்தை உண்டாக்கிக் கொண்டுவிட்டதால் தர்ம பீடங்களின் செல்வாக்கும் தர்ம சாஸ்திரங்களின் அதாரிடியும் மங்கிப்போய் ஜனங்கள் தர்மத்துக்குப் பயப்பட வேண்டும் என்ற உணர்ச்சியை இப்போது ரொம்பவும் இழந்துவிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவர்கள் குற்றம் செய்வது நாச்சுரல்தான் என்று வேண்டுமானால் இந்தக் காலக் குற்றவாளிகளை ரொம்பவும் தண்டிக்காமல் விடுவதற்கு நியாயம் சொல்லலாம்!ஆனால் முற்காலத்தில் பிரஜைகள் தர்மத்தை அநுஸரிப்பதற்கு ராஜாங்கம் ரொம்பவும் ஆதரவாயிருந்தது, அதற்கானவற்றைப் பண்ணிக் கொடுத்த போதும் அவர்களில் சிலர் தப்பான வழியில் போனால் அங்கே தாக்ஷிண்யம் காட்ட இடமில்லைதானே? அதனால்தான் கடுமையான தண்டனைகளைச் சொல்லியிருக்கிறது. இப்படியிருந்தால்தான் அப்போது மொத்த ஸமுதாயம் நல்லபடி இருந்தது;நல்ல ஜனங்கள் துஷ்டர்களினால் கஷ்டத்துக்கு ஆளாகாமல் நிம்மதியாக வாழ்க்கை நடத்தினார்கள்;மொத்தத்தில் நம் தேசம் லோகத்திலேயே நன்னெறிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது என்பதைக்

கவனித்தோமானால் ராஜதண்டம் சாஸ்திரப்படிதான் செயல்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்வோம்.

மெகஸ்தனிஸிலிருந்து ஆரம்பித்து நம் தேச நிலைமையைப் பற்றி அவ்வப்போது இங்கே வந்து எழுதி வைத்திருக்கிற அயல் நாட்டவர்கள் எல்லோரும் ஒருமுகமாக இங்கே ஜன ஸமூஹத்தில் காணப்பட்ட ஒழுக்கத்தையும் நல்ல குணத்தையும் ஸ்தோத்திரிக்கிறார்களென்றால் அதற்கு ராஜசி¬க்ஷ முறையும் ஒரு காரணமாகும். இப்போது நம் ஜன ஸமுதாயம் எப்படி இருக்கிறது என்றும் நமக்குத் தெரியும். ஆனாலும் தண்டநீதி சாஸ்த்ரத்தைக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

பெர்ஸுவேஷன் ஸாத்விகமாகத் திருத்துவது என்றெல்லாம் இக்காலத்தில் பேசினாலும், யுத்தம் வந்தால், அல்லது பொருளாதாரத்திலோ பொலிடிகலாகவோ நெருக்கடி வந்தால் அப்போது 'எமர்ஜென்ஸி'என்று பிரகடனம் செய்கிறபோது முதல் கார்யமாகத் தண்டனை விதிப்பதைத்தானே கடுமையாக்குகிறார்கள்?ஆக எடுத்துச் சொல்லித் திருத்துவதைவிட தண்டிப்பதுதான் தேசத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் ஏற்பட உதவும் என்று ஒப்புக் கொண்டதாகத்தானே ஆகிறது?

அநேக உயர்ந்த நோக்கங்களுக்காகவே தர்ம, அர்த்த சாஸ்திரக்காரர்கள் தண்டனையைக் கடுமையாக வைத்திருந்தார்கள். ஒன்று குற்றம் என்பது ஒருவனால் இன்னொருவனுக்கு அல்லது ஸமூஹத்துக்கே ஏதோ ஒரு விதத்தில் ஏற்படும் கஷ்டந்தானே? இப்படித் தான் கஷ்டத்தைக் கொடுத்தால் அப்போது ராஜா அதைவிடப் பெரிய கஷ்டத்தைத் தனக்குத் தண்டனையாகக் கொடுப்பானென்ற பயமிருந்தால்தான் ஒரு பிரஜை ஒழுங்காயிருப்பான். பத்து ரூபாய் திருடுவதால் ஒருத்தனுக்குத் தான் கொடுத்த கஷ்டத்துக்குப் பதிலாக நாலு மாஸம் ஜெயிலில் கஷ்டப்படணும் என்றால்தான் திருடமாட்டான். இரண்டாவது நோக்கம், கடுமையான தண்டனையாது குற்றம் பண்ணுகிற ஒருவன் இனிமேல் அப்படிப் பண்ணாமலிருக்கும்படி செய்வதோடு மற்றவர்களும் இவனைப் பார்த்து அந்த மாதிரிப் பண்ணாமலிருக்கச் செய்து ஒரு ஸமூஹ ர¬க்ஷயாகிறது. மூன்றாவது நோக்கம் ஆத்ம ஸம்பந்தமானது.

அதாவது பாபம், பாப பரிஹாரம் என்ற விஷயங்கள் வந்து விடுகின்றன. குற்றம் பண்ணுவது பாபம், அது குற்றவாளியை நரகத்துக்குத் தள்ளும். என்னென்ன குற்றத்துக்கு நரகத்தில் என்னென்ன மஹா பயங்கரமான தண்டனைகள் என்று சாஸ்திர, புராணங்களில் விவரமாகச் சொல்லியிருக்கிறது. ராஜ தண்டனை பெறுவதனால் ஒரு குற்றவாளி இந்தப் பாபத்திலிருந்தும், நரகாவஸ்தையிலிருந்தும் விடுபடுகிறான். அந்த (நரக லோக) சித்ரவதையுடன் 'கம்பேர்'பண்ணினால் ராஜா தரும் தண்டனை ரொம்ப லேசானதுதான். இப்படி அரசன் தரும் சி¬க்ஷயே குற்றவாளிக்கு ஆத்ம க்ஷேமத்தைக் கொடுக்கும் பாபப் பிராயசித்தமாகிறது.

17.6-பிராம்மணனுக்குப் பக்ஷபாதமா

இங்கே ஒரு விஷயம் சொல்ல வேண்டும். ராஜாவுக்கு பிராம்மணனைத் தண்டிக்க மட்டும் அதிக 'ஜூரிஸ்டிக்ஷன்' (ஆணையெல்லை) கொடுக்கப்படவில்லை. பிராம்மணனுக்குத் தரும் தண்டனை கடுமைக் குறைவாகவே இருக்கும். இதைப் பார்க்கிறபோது, 'e quality before law' - சட்டத்துக்கு முன் ஸமத்வம் - இல்லாமல், சலுகையே தரக்கூடாத ஒரு விஷயத்தில் சலுகை தந்து அநியாயம் செய்திருப்பதாகத் தோன்றலாம். அப்படித் தோன்றினால் அது நியாயந்தான். ஆனாலும் இதன் காரணத்தைப் புரிந்து கொண்டால் இதிலே அநியாயப் பக்ஷபாதமில்லை என்று தெரியும். இப்போது 'பிராயச்சித்தம்'என்று சொன்னேனே, அதுதான் காரணம்.

குற்றவாளிக்கு ராஜ தண்டனையே பிராயச்சித்த கர்மா ஆகிறது என்றேன். பிராம்மணன் வேத மந்த்ர ரக்ஷணையையே வாழ்க்கையாகக் கொண்டவன் ஒருநாள்கூட அவனை விட்டு இந்த வாழ்க்கை ஆசாரம் போகப்படாது. அப்படிப் போனால் அது தேச க்ஷேமத்துக்கே கெடுதல். ஜெயிலில் போட்டால் அவன் எப்படித் தன் ஆசாரங்களுக்குப் பங்கமில்லாமல் மந்திர ரக்ஷணை பண்ண முடியும்?அல்லது கண்ணை வாங்கி, காலை வாங்கி அவனைத் தண்டித்தால் அப்போதும் அவனால் ஆகிற வேத ரக்ஷணம் அல்லவா கெட்டுப் போகும்?வேத தர்மம் இருக்க வேண்டும் என்பதற்குத் தான் ராஜாங்கம்

இருப்பதே. அதுவே தன் லக்ஷ்யத்துக்கு ஹானி செய்யலாமா?அதனால்தான் ராஜசி¬க்ஷயை பிராம்மணனுக்கு ரொம்பவும் குறைத்துச் சொல்லியிருப்பது. ஆனால் அதற்காக அவனை வெறுமே விட்டு வைத்துவிடவில்லை. மந்த்ர ரக்ஷணைக்காக ஏற்பட்ட அவனுக்கு ஒவ்வொரு குற்றத்துக்கும் தண்டனையாக மந்திர பூர்வமாக ரொம்பவும் கடுமையான பிராயச்சித்த கர்மாக்களை சாஸ்த்ரமே கொடுத்திருக்கிறது. ராஜ தண்டனை இல்லாவிட்டாலும் அவனுடைய ஸமூஹத்துக்கான ஸபை அவனை விசாரித்து இப்படிப்பட்ட பிராயச்சித்தங்களை ரொம்பவும் ஸ்ட்ரிக்ட்டாக விதித்து, பலவிதக் குற்றங்களுக்கு ஜாதி ப்ரஷ்டமே பண்ணிவிடுவதென்று வைத்து அவனை அப்படிப்பட்ட குற்றங்களை மனஸாலும் நினைத்துப் பார்க்க முடியாமல் தடுத்தது. ராஜதண்டனையிலிருந்து பெருமளவுக்கு பிராம்மணர்கள் விலக்குப் பெற்றிருந்தால் அவர்கள் ஒழுங்கு தப்பிக் குடிகாரர்களாகவும், காமுகர்களாகவும், கொள்ளை லாபக் கூட்டமாகவும் போய்விடாமல் ஸமீப காலம்வரை மற்ற எல்லா ஸமூஹங்களாலும் ரொம்பவும் மரியாதைக்குரியவர்களாகவும், உதாரணமாகப் பிறருக்கு வழிகாட்டுபவர்களாகவுந்தானே கருதப்பட்டிருந்திருக்கிறார்கள்?இதிலிருந்தே அவர்களை அர்த்த சாஸ்திரம் நடத்திய விதம் ஜஸ்டி ைபை ஆகிவிடுகிறதல்லவா?இந்த விஷயம் இருக்கட்டும்.

17.7-தர்ம அபிவிருத்தியே அஸ்திவாரம் வர்ணதர்ம பரிபாலனம்

ஜெனரலாக ஜனஸமூஹத்தைப் பார்க்கிறபோது ராஜதண்டனையே குற்றவாளிக்குப் பிராயச்சித்த கர்மாவாகி, அவனுடைய பாபத்தைப் போக்கும் உபகாரத்தைச் செய்கிறது. இதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். குற்றவாளி ஒருவன் தண்டனை பெறாமல் தப்புவதற்கு விட்டுவிட்டால் அது ராஜாவுக்கே பாபமாகும் என்றும் சொல்லியிருக்கிறது; **ராஜா ராஷ்ட்ர க்ருதம் பாபம்** :குடிகளின் பாவம் மன்னனைச் சேரும். **யதா ராஜா ததா ப்ரஜா** :'அரசன் எவ்வழி குடிகள்

அவ்வழி'என்று சொல்லி ஒரு பக்கம் அவனை தர்மிஷ்டனாக இருக்கப் பண்ணுவதோடு இன்னொரு பக்கம் குடிகள் தீய வழிபோனால் அந்தத் தீமை அரசனையே சேரும் என்று சொல்லி, இதனாலும் அவனைத் தேசத்தில் தர்மம் நிலைக்கப் பண்ணவேண்டும் என்பதில் விசாரத்துடன் ஈடுபடுமாறு பண்ணியிருக்கிறது.

ராஜ தண்டனையால் குற்றவாளிக்குப் பாபம் போகிறது என்பது போல இன்னொன்றைச் சொல்லி விடுகிறேன். யுத்த பூமியில் பிராணத் தியாகம் பண்ணுவதால் ராஜாவுக்கும், ஸேனா வீரர்களுக்கும் புண்ணியம் உண்டாகிறது என்று சொல்லியிருக்கிறது. போரில் உயிரிழந்தவர்கள் வீர ஸ்வர்க்கமடைவார்கள் என்று சொல்லியிருக்கிறது. ராஜாவுக்கு அநேக ஸௌக்ய போகங்களைக் கொடுத்திருப்பதற்குக் காரணமே அவன் இப்படித் தன் உயிரைப் பணயமாக வைத்து தேசத்தை ரக்ஷிக்கிறானென்பதுதான். இந்த விஷயம் இருக்கட்டும். தண்ட நீதியையும் தர்மத்தையும் பற்றிப் பார்ப்போம்.

குற்றம் செய்கிற எண்ணமே மநுஷ்யனை விட்டுத் தானாகப் போகும்படிச் செய்ய ஸமயாசாரம், பக்தி, ஞான மார்க்கம், காம மார்க்கம், யோகம் முதலியவை இருக்கின்றன. அவற்றின் கட்டுப்பாடுகளில் ஜனங்கள் வராதபோது பயத்தின் மூலம்தான் குற்றம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்றாகிறது. ஸமயாசாரியர்கள், ஞானிகள், பக்திமான்கள், யோகஸித்தர்கள் முதலியவர்கள் முதலில் சொன்ன வழியில் ஸாத்விகமாக மக்களை நல்வழி நடக்கச் செய்கிறவர்கள். அந்த ஸாத்விகம் உறைக்காதவர்கள் குற்றம் பண்ணும்போது ராஜா ராஜஸிகமாகத் தண்டனை தர வேண்டியதாகிறது. தேசத்தில் நல்ல நிலைமை, தர்மம், புண்ணியமிருக்க வேண்டுமானால் குற்றம் போனால்தானே முடியும்? அதோடு ஸாது ஜனங்களுக்கச் சோரபயம், கொலைகாரர்களிடம் பயம் முதலியன இல்லாமல் நிம்மதியாக வாழும்படியான நிலையையும் ராஜாதானே அளிக்க வேண்டும்?அதனால்தான் அவனுக்கு தண்ட அதிகாரத்தைக் கொடுத்திருப்பது.

இதற்குள்ள முக்யத்வத்தால் அர்த்த சாஸ்த்ரத்துக்கே 'தண்டநீதி'என்று ஒரு பெயர் வழங்குகிறது. அர்த்த சாஸ்திரம் என்பதற்கு cF சாஸ்திரம், ராஜநீதி

சாஸ்திரம், நயசாஸ்திரம் என்றெல்லாமும் பெயர்கள் உண்டு. 'நயம்'என்றால் 'பாலிஸி'என்று அர்த்தம். தண்டநீதி என்பதே ஜாஸ்தி வழங்குகிற பெயர்.

ஒரு பக்கம் தர்மஜ்ஞர்களை அரசனானவன் போஷித்து அவர்கள் மூலம் தர்மங்களை உபதேசமாகவும், புராணப் பிரவசனங்களாகவும், அவர்கள் நடத்திய சீலமான வாழ்க்கையுதாரணத்தாலும் 'பெர்ஸுவேஷன் மெத'டில் பிரசாரம் பண்ணிக்கொண்டுதானிருந்தான். இந்த நாளில் இந்த அம்சங்களை அரசாங்கப் பொறுப்பிலிருந்து அடியோடு துண்டித்து விட்டிருப்பது போல அப்போது இல்லை. இப்படி சாந்தமாகச் சொல்லி தர்மம் பதியாத போது, அதர்ம காரியங்கள் நடந்தபோது தண்டோபாயத்தை ப்ரயோகித்தான். இப்போது தண்டோபாயத்தை லீனியன்டாகப் பண்ண வேண்டும் என்று ஒரு பக்கத்தில் சொல்லிக் கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம் போலீஸும் கோர்ட்டும்தான் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகின்றன. முற்காலத்தில் தர்மக்ஞர்களைப் போஷித்து ராஜா விருத்திபண்ணினதால் போலீஸும் கோர்ட்டும் மினிமமாகவே இருந்தன;கோயில் கட்டுவதே ராஜாவின் முக்ய காரியமாய் இருந்தது. சாஸ்திர மார்க்கப்படி நடந்து சிஷ்டர்களாக, தர்மிஷ்டர்களாக இருக்கிறவர்கள் அந்த நல்ல வழியில் போய் ஞானம் அடைவதற்கு அநுகூலமாக அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்து கொடுப்பதுதான் அர்த்த சாஸ்திரத்தில் அஸ்திவாரமாகச் சொல்லியிருப்பது. அஸ்திவாரம் பலமாய் இருந்து, மேலே போகும் கட்டிடத்தில் பழுது ஏற்பட்டால் ஸுலபமாய் அதை ஸரி செய்து விடலாம். இந்தக் காரியத்தைத்தான் அன்றைக்கு தண்டோபாயம் செய்து வந்தது. இதனால்தான் காவல் நிலையங்களும், நியாய ஸ்தலங்களும் அப்போது குறைவாக இருந்து கோவில்களும், அன்ன சத்திரங்களும், யஜ்ஞசாலைகளும் நிறைய எழும்பின. இப்போது அஸ்திவாரம் போடாமல் கட்டிடம் எழுப்புவதில், இத்தனை ஆயிரம் போலீஸ் ஸ்டேஷன்கள் இருந்தும் இவற்றுக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு ஏராளமானவர்கள் நூதன நூதன ஸாமர்த்தியத் திருட்டுகள், மோசடிகள், கொலைகள், வியபசாரக் குற்றங்கள் முதலியன பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை ஆயிரம் கோர்ட்டுகள் இருந்தும், ஆயிரக் கணக்கில் 'கேஸ்'கள் 'பெண்டிங்'காக இருக்கின்றன என்று 'பெஞ்சு'க்களின்

எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே போயும் பைஸலாகாத வழக்குகளின் எண்ணிக்கையும் ஏறிக்கொண்டே போகிறது. பொது ஜனங்களுக்கோ பயம் போகவில்லை;'ஸெக்யூரிடி'இல்லை. தர்ம பரிபாலனம் என்ற அஸ்திவாரத்துக்கு எதுவும் பண்ணாமலே அதர்மத்துக்கு மட்டும் சி¬க்ஷ, அதுவும் ரொம்ப தாக்ஷிண்யத்தோடு சி¬க்ஷ என்றால் வேறே எப்படி இருக்கும்?

ஜாதி நாட்டாண்மை என்பதும் அக்காலங்களில் ராஜாவின் தண்ட ப்ரயோகத்தை ரொம்ப தூரம் குறைத்து உதவிற்று. ஒவ்வோரு ஜாதியாரும் பண்ணும் அநேக தப்புக்கள் அந்தந்த ஸமூஹ நாட்டாண்மைக்காரர்களாலேயே விசாரிக்கப்பட்டு வந்ததால், அந்த அளவுக்குக் கோர்ட்டின் வேலை குறைந்தது. போலீஸ் மாதிரி இல்லாமல் ஜாதி நாட்டண்மையிடம் அந்தந்த ஸமூஹத்தாரும் 'நம்முடையது'என்ற அந்நியோந்நிய பாவம் கொண்டிருந்தார்கள். அதனால் அதன் கட்டுப்பாடுகளுக்கு அவர்கள் இஷ்டபூர்வமாகவே அடங்கி நடந்ததில், தாங்களாகவே அநேகம் தப்பு தண்டாக்களைப் பண்ணாமல் ஒழுங்காயிருந்தார்கள்.

வர்ணாச்ரம தர்மங்களைப் பரிபாலிப்பது ராஜாவின் கடமையாக இருந்ததற்கு இதுவும் ஒரு துணைக் காரணம். ஒவ்வொரு தனி மநுஷ்யனுக்கும் தன் தொழிலைப் பற்றிய நிம்மதி, தன் வாழ்க்கை முறையைப் பற்றிய நிர்ணயமான அமைப்பு ஆகியன வர்ண விபாகத்திலே இருந்து, அதே ஸமயத்தில் அவன் தெய்வ பக்தியுள்ளவனாகவும் ஸாதுக்களிடம் விச்வாஸமுள்ளவனாகவும் இருந்தபடியால், தனக்குரிய மதாநுஷ்டானங் களைப் பண்ணிக்கொண்டு, ஸௌகிகத்தில் திருப்தியாயிருந்த தோடு (அப்படி இருந்ததாலேயே) ஆத்மாபிவிருத்தியும் அடைந்து வந்தான்.

இப்படி எல்லாத் தொழில்களும் சீராகப் பங்கீடு பண்ணப்பட்டிருந்தால் மொத்த ஸமுதாயத்திலும், அதாவது தேசம் பூராவுக்குமாக நடக்க வேண்டிய அநேக கார்யங்களிலும் ஏறுமாறு இல்லாமல், போட்டி பொறாமை இல்லாமல், குழப்பமில்லாமல் எல்லாம் சீராக நடந்து நாடு முழுதும் பொருளாதாரத்தில் நல்ல நிலையிலும்;மனநிலையில் ஸர்வஜன ஸௌஜன்யத்துடனும், இந்த

ஸெளஜன்யத்தில் உண்டான நிம்மதியில் கலைகள், பண்பாடு இவற்றில் மேன்மையுள்ளதாகவும், எல்லாவற்றுக்கும் மேலே ஆத்ம லக்ஷ்யத்தில் சிறந்த சிறந்த அபிவிருத்தி கொண்டதாகவும் இருந்து வந்திருக்கிறது. இப்படி எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக, மற்ற உலக நாடுகள் எதையும்விட நம் தேசமானது ஸமூஹ ஸெளஜன்யம், பொருளாதாரம், கலாசாரம், ஆத்மிகம் எல்லாவற்றிலும் ரொம்ப உன்னத ஸ்தானத்திலிருந்ததை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள். மற்ற நாடுகளிலில்லாததாக இங்கே என்ன இருந்து இப்படிப்பட்ட உயர்வை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று பார்த்தால், இங்கே நாகரிக ஸமுதாய வாழ்க்கையும் ராஜாங்கமும் ஏற்பட்ட நாளாக ஜனங்களாகவே ப்ரியப்பட்டும், ராஜாங்கத்தின் தலைமையான கடமையாகப் பரிபாலிக்கப்பட்டும் அநுஸரித்த வர்ணாச்ரம தர்மங்களைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

ஆனாலும் முன்பு வர்ண தர்மத்தைப் போஷிப்பதிலேயே ராஜா பெருமைப்பட்டானென்றால், இப்போது அரசியலிலோ ஸமூஹ வாழ்விலோ ஆனா ஆவன்னாவே caste less society - "ஜாதியில்லாத ஸமூஹம்"என்பதாகத் தானிருக்கிறது!அந்தந்த ஜாதிக்குண்டான தொழிலை அவரவர் செய்யாமலும், அதற்குரிய ஆசார அநுஷ்டானங்களைக் கடைபிடிக்காமலும் ஜாதிகளை மட்டும் விடாமல் வைத்துக் கொண்டிருப்பது மஹா தப்புதான் - ப்ராணன் போனபின் பிணத்தைக் கட்டிக் காக்கப் பார்க்கிறது போலத்தான்!இதில் நாம் சீர்திருத்தக்காரரோடு பெர்ஸன்ட்டும் ஒதுப்போவோம். ஆனால் இந்தத் தொழில் பாகுபாடே தப்பு, ஆசார அநுஷ்டானங்களையே இதற்காக வித்யாஸமாய் வைப்பது தப்பு என்று அவர்கள் வாதிப்பதை நாம் கொஞ்சங்கூட ஒப்புக் கொள்வதற்கில்லை. தொழில் பாகுபாடும், ஆசாரங்களை சாஸ்த்ரப்படி அவாளவாள் பின்பற்றுவதும் மாறி இப்போதுள்ள நிலைமை ஏற்படவிட்டதுதான் தப்பு என்று விவேகத்தோடு புரிந்துகொள்ள வேண்டும். 'இப்போது எல்லாம் அடியோடு குன்றிப் போய்விட்ட ஸ்திதியில் பழையபடி பண்ணுவது ஸாத்யமா?'என்றால், எனக்குத் தெரியாது. ஸாத்யமில்லை என்று விடாமல் இப்போதாவது எங்கே எவ்வளவு முடிகிறது என்று பார்த்து அங்கே அந்த அளவுக்குப் பழைய வழிக்குத் திருப்பத்தான் பாடுபடணும்.

ஹிஸ்டரியைப் பார்த்தால் தெரியும் - 2500 வருஷத்துக்கு முன் புத்தர் வந்தபோதும், அப்புறம் 1300 வருஷத்துக்கு முன் சமணமே பல்லவ ராஜ்யம் பாண்டிய ராஜ்யம் எல்லாவற்றிலும் மஹேந்திரவர்மா, நெடுமாற பாண்டியன் ஆகிய ராஜாக்களின் போஷணையில் செல்வாக்குடன் இருந்தபோதும் உதயனாசார்யார், குமாரிலபட்டர், ஆசார்யாள், அப்பர், ஞானஸம்பந்தர் முதாலனவர்கள் தோன்றியதால் மறுபடி வர்ணாச்ரம வேத மதமே வந்துவிட்டது. நான் அடிக்கடி சொல்கிற மாதிரி, பொது ஜனங்கள் பெரிசாக மதக் கொள்கை என்று ஆராய்ந்து கொண்டிருக்காமல் தங்கள் பக்தியைப் பெறத்தக்க மஹான்கள் தோன்றும்போது, 'இவர் சொல்கிற ஸித்தாந்தம்தான் ஸரியாயிருக்கும்'என்று அவர் வழிக்குப் போயிருக்கிறார்கள் என்பதும் வாஸ்தவந்தான். ஆனாலும், ஏற்கெனவே தாங்கள் இருந்த வழியில் ஏதோ அதிருப்தி இருந்தாலொழிய, புதிதாகப் போவதில் அது நிவ்ருத்தி ஆகிறதாகத் தெரிந்தாலொழிய இப்படி மாறியிருக்கமாட்டார்கள் என்பதும் வாஸ்தவம். நுணுக்கமாக மதக் கொள்கைகள் தெரியாவிட்டாலும் அதன் விளைவாகப் பரவலாக ஏற்படுகிற பலனைத் தெரிந்து கொண்டே மாறியிருக்கிறார்கள்.

அதனால் புத்தரும் ஜினரும் (மஹாவீரரும்) ஜாதிகளை எடுத்துப் போட்டுவிட்டு எல்லாரையும் ஒன்றாகப் பண்ணினதில் பொது ஜனங்கள் 'ஆஹா'என்று அப்போதைக்கு திருப்திப்பட்டு அந்த வழிகளில் கொஞ்சம் போனாலும், நாளாவட்டத்தில் இந்த ஏற்பாட்டில் தங்களுக்கு 'ஸ்டேட்டஸ்'இருப்பதாகத் தெரிந்திருந்துங்கூட, அதிலே தனி வாழ்க்கை, ஸமூஹ வாழ்க்கை இரண்டுமே சீராக அபிவிருத்தியாவதற்கு இடமில்லையென்று கண்டு கொண்டுதான் மனப்பூர்வமாக, எந்த கம்பல்ஷனும் இல்லாமலே வைதிக வழிக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். இப்படி இரண்டு மூன்று முறை 'பட்டு'க் கொண்டதை நினைத்துப் பார்த்தாவது இப்போதுள்ள அறிவாளிகள் அந்தப் பூர்வ வழியை எப்படி மறுபடி அதன் உண்மை ஸ்பிரிட்டுடன் ஏற்படுத்தலாம் என்பதற்கு ஆலோசனை செய்ய வேண்டும். அதம பக்ஷமாக, எல்லா தர்மத்துக்கும் வாழ்க்கை ஐடியல்களுக்கும் பிராம்மண ஜாதியைப் பொறுப்பாக்கியிருப்பதால் அதொன்றையாவது சாஸ்த்ர ப்ரகாரம் இருக்கப் பண்ணப் பிரயத்தனம் ஆரம்பிக்க வேண்டும்*.

இந்த ஏற்பாடு பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் நாம் 'இண்டியன் கல்ச்சர்'என்று பெருமைப்படும் நாகரிகத்தைக் கொடுத்துள்ள ரிஷிகள், ஞானிகள், பக்தர்கள், மதத் தலைவர்கள், கவிகள், சில்பிகள், நம்முடைய விஞ்ஞான சாஸ்திரங்களைக் கொடுத்தவர்கள் ஆகிய எல்லாருமே வர்ணாச்ரமத்தைப் போற்றியவர்கள் தான் என்பதிலிருந்து அது தப்பான வழியாயிருக்க முடியாது என்று அறிவு பெறவேண்டும். இவர்களில் பிராம்மணர்கள் மாத்திரமில்லாமல் மற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களும் வர்ணாச்ரம ஏற்பாட்டைக் கொண்டாடித்தானிருக்கிறார்கள். அப்பிராமணபராயிருந்து, சோழ ராஜாவுக்கு மந்திரியுமாக இருந்த சேக்கிழார் ஒருத்தர் போதும் - அவர் சொல்ல வந்தது பக்தர்கள் கதையைத்தான். அதிலே எத்தனையோ பேர் அப்பிராம்மணர்கள். இவர்களைப் பிராம்மணர்களும் போற்றுகிறார்கள். ஆனாலும் சேக்கிழாரோ எப்படியாவது இடம் ஏற்படுத்திக் கொண்டு வைதிக மரபுகளைச் சொல்லிச் சொல்லி எந்த ராஜாவானாலும் அவன் வர்ணாச்ரம பரிபாலனம் செய்ததைச் சொல்லாமலிருப்பதில்லை.

ராஜாவுக்கு இதிலே நிரம்ப முக்யமுண்டு - நாடு முழுவதற்கும் பொறுப்பு அவன்தானே?

ராஜா வர்ணதர்ம பரிபாலனப் பொறுப்பை எடுத்துக் கொண்டான். அதே ஸமயத்தில் வர்ணதர்மம் தேசத்தில் குற்றங்களைப் பெருமளவுக்குக் குறைத்து, அதனால் அவனுடைய cF தண்டப் பொறுப்பையும் வேலையையும் ரொம்ப தூரம் குறைத்து உதவியது. நிச்சயமாகத் தனக்கு ஒரு தொழில் உண்டு, நிர்ணயமான ஒரு வாழ்க்கை முறை உண்டு என்று வர்ண விபாகத்தில் ஏற்பட்டிருந்தால் இப்போது உண்டாயிருக்கிற போட்டிகளுக்கு அப்போது இடமில்லை. போட்டி இருக்கிற போதுதான் பொறாமை உண்டாகிறது. பகை ஏற்படுகிறது. மோதல், அடிதடி, கிளர்ச்சி ஏமாற்றுவது, லஞ்சம், திருட்டு, கொலையே பண்ணுவது என்றெல்லாம் குற்றங்கள் பெருகவும் இடம் ஏற்படுகிறது. இதெல்லாமில்லாததால் பழைய நாள் ராஜாவுக்குக் காவல் செய்கிற போலீஸ் பொறுப்பும், நியாயம் வழங்கி தண்டனை விதிக்கிற ஜுடிஷியல் பொறுப்பும் நிரம்பக் குறைந்தன.

வர்ணாச்ரம பரிபாலனம் என்பது அவனுடைய முக்யமான பொறுப்பாயிருந்த போதிலும் அது அவனுக்குப் பெரிய ப்ரயாஸையோ வேலையோ தருகிற பொறுப்பாயில்லை. ஏனென்றால் ஜனங்கள் தாங்களாகவே இந்த நியதிக்குக் கட்டுப்பட்டுத்தானிருந்தார்கள். அபூர்வமாக எங்கேயாவது யாராவதுதான் மீறிப் பண்ணுவதாயிருந்தது. நேரே பொது ஜனங்களிடம் தொடர்பு வைத்துக் கொண்டு, ரொம்பவும் வசீகரணமுள்ளவராயிருந்த புத்தர் மாதிரியான ஒருவர் வர்ணாச்ரம அதிகார பேதங்கள் கூடாது என்றபோதுகூட, இதற்காக popular uprsing (வெகுஜனக் கிளர்ச்சி) எதுவும் நடந்ததாக (நம் சரித்ரத்தை எவ்வளவோ திரித்து எழுதியிருக்கும்) வெள்ளைக்காரர்கள் கூடச் சொல்லக் காணோம்!நம்முடைய பொதுஜனங்கள் நல்ல புத்திசாலிகளாக இருந்தும் இத்தனை ஆயிரம் வருஷத்தில் இந்த ஏற்பாட்டை எதிர்த்ததாகவோ, அப்புறம் ராஜா அவர்களை அடக்கினதாகவோ ஒரு திருஷ்டாந்தங்கூட இல்லை.

தங்களுக்கு எத்தனையோ ஸாதகமாயிருந்த புத்தமதத்தை மூட்டை கட்டி அனுப்பி விட்டு, இப்போது கொடுமையானவர்களாக வர்ணிக்கப்படுகிற ஸநாதனிகளின் மதத்துக்குத்தான் ஜனங்கள் திரும்பியிருக்கிறார்கள். வர்ண விபாகத்தில் தங்களுக்குப் பெர்ஸனலாக ஒரு நிம்மதியும், ஸமூஹ வாழ்வுக்கு ஒரு ஸ்டெபிலிடியும் இருப்பதாக அவர்கள் கண்டிருந்தாலன்றி இப்படிப் பண்ணியிருப்பார்களா?

வர்ணாச்சரம ஏற்பாட்டினால் அக்கால ராஜாக்களுக்கு, இப்போதுள்ள ராஜாக்களுக்கு முக்கியாமாயிருக்கிற போலீஸ், ஜுடீஷியரி வேலைகள் பெருமளவுக்கு இல்லாமலிருந்ததால், இப்போது இதற்காக ஆகிற செலவும் கால விரயமும் அவர்களுக்கு இல்லை. அதனால் ராஜாக்கள் தங்கள் பொழுதையும் பொருளையும் வேறே நல்ல இனங்களில் ஈடுபடுத்த முடிந்தது. கோர்ட்டுக்குப் பதில் கோவில் கட்டினார்கள்;கோரக்ஷணம் செய்தார்கள்;அன்ன சத்திரம் கட்டினார்கள்;தான தர்மம் செய்தார்கள்;கனபாடிகளுக்கு ச்ரோத்ரியம் கொடுத்து, வேதத்தில் அதிகாரமுள்ளவர்கள் இவர்களிடமிருந்து தர்மங்களைத் தெரிந்துகொள்ளப் பண்ணினார்கள்;உடுக்கு அடித்து பாரதம் சொல்கிற பூசாரிக்கு மானியம் விட்டு அதே தர்மத்தை இவனிடமிருந்து பாமர ஜனங்களும் தெரிந்து கொள்ளப் பண்ணினார்கள். ப்ரஜைகளின் வயிற்றுக்

குறையைப் போக்குவதும், தர்ம அபிவ்ருத்தியுமே அரசனுடைய கார்யங்களாயிருந்தன.

ஜனங்கள் கோவிலுக்கும் தர்மோபதேசம் நடக்குமிடங்களுக்கும் போய்ப் போய் சாந்தர்களானார்கள். சட்டத்தை மீறாமல், ஸாத்விகர்களாக, எல்லோருடனும் ஸமாதானமாக வாழ்ந்தார்கள். இந்த ஸமாதானத்தை ஜாதி தர்மம் காப்பாற்றி வந்தது.

இக்காலத்தில் கோவிலுக்கும், தர்மம் தெரிந்து கொள்வதற்கும் போவது குறைந்து ஜனங்கள் கோர்ட்டுக்குப் போவது அதிகமாயிருக்கிறது. எங்கும் இடிந்த கோயில்களும் இடியாத கோர்ட்டுகளும் காணப்படுகின்றன.

இப்போது 'வெல்ஃபேர் ஸ்டேட்'வைக்கிற கோர்ட்களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் போவதற்கு முதல்படியாக, தினந்தோறும் வளர்ந்து வருகிற ஸினிமாக் கொட்டாய் (கொட்டகை) க்குப் போய் அநேக தினுஸான தப்புகளைத் தெரிந்துகொண்டும், இந்திரிய சபலத்தால் உடல் கெட்டும் வருகிறார்கள். அக்ரமத்துக்கு ஏற்பட்ட ரேஸ் கோர்ஸ் மாதிரியானவற்றிலும் கூட்டம் வழிகிறது. அபக்ஷ்ய பக்ஷணம் செய்வதற்காக க்ளப்களும் (ஹோட்டல்களும்) ஜனங்களை இழுக்கின்றன. எல்லாம் போதாது என்று உரிமை, ஸமத்வம் என்று சொல்லிக்கொண்டு ஜனங்களை த்வேஷத்திலும், போட்டியிலும், சோம்பேறித் தனத்திலும் தூண்டிவிடுவதற்கு அரசியல் கூட்டங்களின் ஆகர்ஷணமும் சேர்ந்திருக்கிறது. மொத்தத்தில் உடம்பும், மனஸும் கெட்டு, சித்த சாந்தி போய். ஸமூஹ ஸமாதானம் போய் - இவற்றின் total effect ஆக - குற்றங்கள் பெருக எத்தனை வாய்ப்பு உண்டோ அத்தனையும் விருத்தியாகி வருகின்றன.

தர்ம அஸ்திவாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் 'வெல்ஃபேர்'மாளிகை எழுப்பினால் இப்படித்தான் ஆகும்!தர்மசாரமில்லாதபோது எங்கே பார்த்தாலும் கிளப் என்றால் நியமமில்லாமல் சாப்பிட்டு தேஹம், புத்தி இரண்டையும் கெடுத்துக் கொள்வார்களே தவிர, நிஜமான வெல்ஃபேரை அடையமாட்டார்கள். தார்மிகக் கட்டுப்பாடு இல்லாதபோது எழுத்து ஸ்வதந்திரம், கருத்து ஸ்வதந்திரம் என்கிறவற்றால் பத்திரிகைகளும், ஸினிமாக்களும்

கெட்டதில்தான் சேர்க்கும். ஆஸ்பத்திரிகள் தினந்தினம் வைத்து, புதுப்புது ட்ரீட்மென்ட் தருகிறார்களென்றால், துன்மார்க்கத்தில் போனாலும் கெட்ட வியாதி வராமல் தடுத்துக்கொண்டு விடலாம் என்றுதான், தர்மத்துக்குப் பயப்படுவதற்குப் பழக்கப்படாத ஸமூஹம் நினைக்கும். 'கிராமம் விடாமல் பாங்கு வைத்து கடன் தருகிறோம்'என்றால் எத்தனை லஞ்சமும், பித்தலாட்டமும் உண்டோ அத்தனையும் செய்து கடன் வாங்கி, இப்போது தர்ம விரோதமாக வந்திருக்கிற பலவற்றுக்காகச் செலவு செய்வதற்கு ஊக்கம் தந்ததாகவே ஆகும். பெரிய வெல்ஃபேர் எதுவென்றால் தர்மந்தான்.

அந்த தர்மம் தெய்வ பக்தியாலும், மதப் பற்றாலுந்தான் ஜனங்களிடையே நன்றாய் வேர் பிடித்து வளரும். இந்த ஆதாரக் கொள்கையின் மேலே வகுத்த அர்த்த, தர்ம சாஸ்திரங்கள் நம் நாட்டுக்குச் செய்து வந்த நிஜமான நன்மையை அந்த ஆதாரத்தை வெட்டிவிட்ட எந்தப் புது அரசியல் முறையும் ஐடியாலஜியும் உண்டாக்கித் தர முடியாது. ஆனாலும் இப்போது தினந்தினம் லோகத்தில் ஏற்பட்டு வருகிற சீரழிவையும் ஒழுக்கக் குறைவையும் பிரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருந்தும், 'பழைய ஏற்பாட்டில் தாக்ஷிண்யமில்லை, மநுஷ்யாபிமானமில்லை'என்று குறை சொல்கிறார்கள்!

திருக்குறள், திருவள்ளுவர் என்று ஓயாமல் சொல்வதாயிருக்கிறது. திருவள்ளுவர் பொருட்பாலில் ராஜ தர்மத்தைச் சொல்கிற இடத்தில் 'பெரியாரைப் பிழையாமை'என்றே ஒரு அதிகாரம் பண்ணியிருக்கிறார். ராஜாக்கள் மஹான்களை ஆச்ரயித்து அவர்களுடைய மனம் குளிரும்படியாகப் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் அகஸ்தியரிடம் அபசாரப்பட்டுக் கொண்ட இந்த்ரனே பதவி போய்த் திண்டாடியது போல ஆகிவிடும் என்று எச்சரித்திருக்கிறார்:

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

தர்ம சாஸ்திரங்களைக் கேட்காவிட்டால் ராஜா கேடுதான் அடைவான் என்பதை நேராக அப்படிச் சொல்லாமல் ஸ்வாரஸ்யமாக மாற்றி, அரசனைப்

பார்த்து, "கேடுதான் அடையவேண்டுமென்று ஆசையாயிருந்தால் சாஸ்திரப்படி கேட்காமல் பண்ணு"என்கிறார்.

" கெடல் வேண்டின் கேளாது செய்க. "

ஆக, தர்ம அஸ்திவாரத்தின் மேலே மஹான்கள் காட்டுகிற வழியிலேயே அரசாட்சியை நடத்த வேண்டுமென்பதுதான் திருவள்ளுவர் காட்டும் நெறி.

எது நிஜமான தாக்ஷிண்யம், எது நிஜமான மநுஷ்யாபிமானம் என்று யோசித்துப் பார்ப்போமானால், எது தேசத்தில் தர்மத்தை நிலைக்கப் பண்ணி, நல்ல ஜனங்களுக்கு துஷ்டர்களிடம் பயமில்லாமல் ஸெக்யூரிடியைக் கொடுக்கிறதோ, அதோடு எதுதான் குற்றம் பண்ணினவனையும் இனிமேல் அப்படிப் பண்ணாமல் கட்டுப்படுத்துகிறதோ அதுதான் நிஜமான தாக்ஷிண்யமும் மனிதாபிமானமுமாகும்.

ஒருத்தன் ஏதோ ஹிம்ஸை பண்ணினானென்றால் ஜனங்களிலேயே இன்னொருத்தன் அப்போது அவனை பதிலுக்கு ஹிம்ஸை பண்ணி ஹிம்ஸையை இரண்டாக்குகிறானென்றால் அதுதான் தப்பு. இங்கே பெர்ஸனலாக த்வேஷம், கோபதாபம் உண்டாகின்றன. ஆனால் ராஜாங்கம் என்ற ஸ்தாபனம் ஹிம்ஸை செய்த ஒருவனை பெர்ஸனல் காரணமில்லாமல், தர்மத்தின் பொருட்டு சிக்ஷித்து அவனுக்கு ஹிம்ஸை தருவது இப்படியல்ல. அவனால் இனிமேல் ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய ஹிம்ஸையைப் போக்கவே இந்த சி¬க்ஷ. சி¬க்ஷ என்பது முன்பு அவன் குற்றம் பண்ணினான் என்பற்காக மாத்திரமின்றி, இனிமேல் அவனைக் குற்றம் பண்ணாமலிருக்கச் செய்வதற்குமாகும். ஒரு பைத்தியம் கல்லை எறிந்தால், அது நம் குழந்தையாகவே இருந்தாலும் ரூமில் தள்ளிப் பூட்டவில்லையா?அப்படியே திருட வேண்டும் என்ற பைத்தியம் பிடித்திருப்பவனை, ஃபோர்ஜரி பண்ணுகிற பைத்தியமுள்ளவனை, இப்படி அநேகப் பைத்தியம் உள்ளவர்களை ராஜாங்கம் ஜெயிலில் போட வேண்டியதாகிறது. ஹிம்ஸையைக் குறைக்கவே ஹிம்ஸிக்க வேண்டியதாகிறது.

-------------* இவ்விஷயமாக "தெய்வத்தின் குரல்"முதற்பகுதியில் "வர்ண தர்மம்"என்ற உரையும் தொடர்ந்து வரும் சில உரைகளும், இரண்டாம் பகுதியில் "ஜாதி முறை"என்ற உரையும், குறிப்பாக அதில் "நான் சொல்வதன் நோக்கம்"என்ற உட்பிரிவும் பார்க்க.

17.8-வெளிநாட்டு விஷயத்தில் தண்டநீதி

வெளிநாட்டு ராஜாவால் ஜனங்களுக்கு ஹிம்ஸை உண்டாகாமல் ரக்ஷிப்பதும் ராஜநீதியில் முக்யமான அம்சம். லோகத்தில் எந்த தேசமானாலும் ஆதிகாலத்திலிருந்தே ராஜாக்கள் மற்ற நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்காகப் படையெடுத்து யுத்தம் செய்வது என்று ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நான் ந்யாயாந்யாயங்கள் சொல்லப் போவதில்லை.

ஒரு வெள்ளைக்காரர்*என்னிடம், அர்த்த சாஸ்த்ரத்தில் ஒரு காரணமும் இல்லாமல் ஒரு அரசன் பிற அரசர்கள் மேல் படையெடுத்து ராஜ்ய விஸ்தாரம் பண்ண வேண்டுமென்று சொல்லியிருப்பதை இப்போதுள்ளவர்கள் பின்பற்றலாமா என்று கேட்டார். அது ஏதோ அந்த நாள் நடைமுறை. அதுவும் இது தர்ம ஸம்பந்தமாயிருப்பதைவிட அர்த்த ஸம்பந்தமாகவே சொல்லப்பட்ட வழி. அதற்கு சாச்வத validity (செல்லுபடித்தன்மை) இருப்பதாகக் கொள்ளவேண்டியதில்லை என்று பதில் சொன்னேன்.

எப்படியோ, ராஜா என்றால் ஏக சக்ராதிபத்யத்துக்கு முயற்சி செய்ய வேண்டுமென்பது ஸ்திரப்பட்டுவிட்ட fact -ஆக எல்லா நாட்டிலும் பின்பற்றப்பட்டதை மட்டுமே கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வேதாந்தத்தில் இது மண்ணாசை, பெண்ணாசைகளின் கீழேதான் வருமானாலும், அந்த வேதாந்தம் ராஜாவைப் பொருத்த மட்டில் அவனுடைய முதுமையில் வானப்ரஸ்த ஆச்ரமம் போக வேண்டியபோதுதான் இந்த ஆசைகளை விட வேண்டும் என்று அவனுக்குச் சொல்கிறது. தர்ம சாஸ்திரம் ராஜாவை யுத்தத்துக்குப் போகாமல் கட்டுப்படுத்தி வைக்கவில்லையானாலும் அவனை யுத்தத்தில் தூண்டிவிடவுமில்லை. அர்த்த சாஸ்திரங்களோ, வெளி

ராஜாவால் தன் நாட்டுக்கு ஹிம்ஸை ஏற்படும்போது மாத்திரம் டி.ஃபென்ஸில் (தற்காப்புக்காக) யுத்தம் செய்வது, அல்லது அந்நிய தேசங்களில் அதர்மம் அதிகம் இருக்கிறது என்பதற்காக அங்கே தர்மத்தை நிலைநாட்ட மாத்திரம் படையெடுத்துப் போய் யுத்தம் செய்து தர்ம ஆட்சியை ஏற்படுத்துவது என்றெல்லாமில்லாமல், பொதுவாகவே ராஜாவானவன் தன் ராஜ்யத்தை விஸ்தாரம் பண்ணிக் கொண்டு ஸார்வ பௌனமாக, சக்ரவர்த்தியாகப் பிரகாசிக்க வேண்டும் என்பதற்குத் தூண்டுதல் தருவதாக இருக்கின்றன.

ஆனாலும் ராஜ்ய விஸ்தரிப்பு என்பதற்காக எடுத்தவுடனேயே யுத்தத்துக்குப் போகும்படி அர்த்த - தர்ம சாஸ்திரங்கள் சொல்லவில்லை. உபாய சதுஷ்டயம் என்பதாக நாலு வழிகளைச் சொல்லி, நாலாவதாகவே யுத்தத்தை வைத்திருக்கிறது. மற்ற தேசங்களின் போக்கோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது நமக்குப் பெருமை தருகிற விஷயமாகும். கேள்விமுறை இல்லாமல் அரசர்கள் ரத்தக் களரி பண்ணுவது பிற தேசத்தவர்களின் வழக்கம்.

உபாய சதஷ்டயம் என்பவை ஸாமம், தானம், பேதம், தண்டம், என்னும் நாலாகும்.

ஒரு ராஜா தானாக ராஜ்யத்தை விஸ்தாரம் பண்ணும்போதும், இன்னொரு ராஜா இவன்மேல் படையெடுக்க உத்தேசிக்கிறபோதும், இரண்டு ஸமயத்திலும் இந்த நாலு உபாயங்களை ஒன்றபின் ஒன்றாகத் கடைபிடிக்க வேண்டும்.

முதலில் அன்போடு பழகி அதனால் ஒரு ராஜாவை அடங்கி வரும்படிப் பண்ணமுடியுமாவென்று பார்க்க வேண்டும். வேண்டியவர்களைக் கொண்டு அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லச் செய்ய வேண்டும். மனஸில் சாந்தியோடு பிரயத்னம் செய்ய வேண்டும். இதுதான் ஸாமம்.

இரண்டாவது தானம். அதாவது நமக்குப் பிரியமான பொருளை அவனுக்குக் கொடுத்து, என் ராஜ்யத்தோடு சேர்ந்துவிடுகிறாயா என்று கேட்பது. அல்லது அவன் படை எடுத்து வந்தால் இப்படிக் கொடுத்து, திருப்தி பண்ணி அவனைத் திரும்பிப் போகப் பண்ணுவது. ராஜ்யத்தில் ஒரு சின்னப் பகுதியைச்

சண்டையில்லாமலே கொடுப்பது, அல்லது தன தான்யங்களைக் கொடுப்பது, இல்லாவிட்டால் ராஜகுமாரியை எதிராளி ராஜாவுக்கோ, ராஜகுமாரனுக்கோ கன்யாதானம் செய்து கொடுத்து அவனோடு சண்டையில்லாமல் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது - இதெல்லாமல் தானோபாயத்தில் வரும். உள்ளன்பின் சக்தியால் மனஸை மாற்றுவதைவிட, பொருளைத் தந்து விரோதத்தைப் போக்கிக் கொள்வது கீழ்தான் என்பதால் ஸாமத்துக்கு அப்புறம் தானத்தைச் சொல்லியிருக்கிறது. நிஜமான பிரியம் இருக்குமானால், நம்முடையதெல்லாம் அவனுடையது அவனுடையதெல்லாம் நம்முடையது என்ற எண்ணம் வந்துவிடுமாதலால், என்னுடையதில் கொஞ்சம் உனக்குத் தருகிறேன் என்ற பேச்சு வராது. தானம் என்கிறபோது ஒற்றுமை போய் வேறுபாடு வந்துவிட்டதாகவே அர்த்தம்.

பேதம் என்பது இன்னம் கீழே. ஸாதாரணமாக நம் வாழ்க்கை விஷயங்களில் பேதோபாயத்தைப் பின்பற்றவே கூடாது. பேதமும் தண்டமும் ராஜாங்கத்துக்கு மட்டும் அநுமதிக்கப்பட்டிருக்கும் வழி தனி மநுஷ்யர்களுக்கல்ல. எதிராளியைச் சேர்ந்திருப்பவர்களிடம் பிளவு உண்டாகும்படிப் பண்ணி, இதனால் அவனுக்கு ஆதரவு குறையுமாறு செய்து, சக்தி குன்றிப்போன ஸ்திதிக்கு அவனைக் கொண்டு வந்து, இப்போது எனக்கு அடங்குகிறாயா என்று கேட்டுக் கப்பம் கட்ட வைப்பது பேதோபாயம். Divide and rule (பிரித்து ஆளுவது) என்பதில் divide பண்ணுவது (பிரிப்பது) பேதம். இது கெடுதலான உபாயந்தானென்றாலுங்கூட, அர்த்த சாஸ்திரத்தில் இதிலும் ஒரு தார்மிகக் கட்டுப்பாடு வைத்திருப்பதைக் கவனிக்க வேண்டும். அதாவது எதிராளியின் சக்தியைப் பேதோபாயத்தால் குறைத்தவுடனேயே அவன் மேல் படையெடுத்து ஹதாஹதம் பண்ணி ஜயித்துவிட முடியும்தான் என்றாலும், அப்படிச் சண்டைக்குப் போகாமல், பலம் குறைந்த அந்த ஸ்திதியில் அவனாகப் பணிந்து வருகிறானா என்று பார்த்துவிட்டே, வராவிட்டால் யுத்தம் செய்ய வேண்டும் என்று வைத்திருக்கிறது.

யுத்தந்தான் நாலாவதான தண்டம். உள்நாட்டுக் குற்றவாளிகளுக்குப் பலவிதமான தண்டனைகள் மூலம் தண்டம். வெளி ராஜாவுக்கு யுத்தத்தின் மூலம் தண்டம். இரண்டுக்கும் இடையில் அநேக வித்யாஸங்களிருந்தாலும்

ஹிம்ஸிப்பது, சிக்ஷிப்பது பொது அம்சம். ஃபிஸிகலாக பலத்தைக் காட்டுவது இரண்டுக்கும் பொது.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உள்நாட்டு விஷயத்தில் கூட இந்த நாலு உபாயமும் இருப்பதாகத் தெரிகிறது. ஸத்துக்களைக் கொண்டு வாழ்க்கை உதாரணத்தாலும், உபதேசத்தாலும் தர்மங்களை ஸாத்விகமாகப் பரப்புவது ஸாமம். மான்யம், டைட்டில், சலுகைகள் தருவது தானம். ப்ராஸிக்யூஷன் (அதாவது ராஜாங்கம்) குற்றவாளியைச் சேர்ந்த ஒருவனையே அப்ரூவராக ஆக்கிக்கொண்டு குற்றத்தை நிரூபணம் செய்வது பேதம். தண்டனைதான் தண்டம்.

----

* ஜே. டபிள்யூ. எல்டர்

17.9-தோற்ற ராஜ்யத்திடம் உதாரம்

தண்டோபாயத்திலும் அநேக தர்மங்கள் உண்டு.*

ஜயித்த ராஜ்யம் ஜயிக்கப்பட்ட ராஜ்யத்தை நடத்தும் விதத்திலும் அர்த்த சாஸ்த்ரம் மிகவும் கௌரவமான பண்புகளை விதித்திருக்கிறது. ஒரு ராஜா வெளி ராஜ்யத்தை ஜயித்த பின் அதை முழுக்கவும் தன் ராஜ்யத்திலேயே ஜெரித்துக்கொண்டு விடக்கூடாது. அதன் 'இன்டிவிஜுவாலிடி'குன்றிவிடாதபடி அதைத் தனியாகவே விட்டிருக்க வேண்டும். 'அந்த ராஜ்ய ஜனங்களின் அன்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமாயிருப்பவர்களிடமே அதன் நிர்வாஹத்தை விடவேண்டும். அவர்களுடைய ஸமயாசாரம் என்னவோ, கலாசாரம் என்னவோ, வாழ்க்கை முறையும் ஸம்பிரதாயங்களும் என்னவோ அவற்றுக்கெல்லாம் மாறுதலாக எதையும் திணிக்கவே கூடாது'என்ற இப்பேர்ப்பட்ட உத்தமமான கொள்கைகளைத் தர்ம சாஸ்திரம் மட்டுமின்றி, ரொம்பவும் பொல்லதவராக வர்ணிக்கப்படுகிற சாணக்யருங்கூடத் தம்முடைய அர்த்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

ராஜ்ய விஸ்தரிப்பின் மூலம் பலாத்காரமாகவோ, அதைவிட நீசமான வசியங்களாலோ ஜயிக்கப்பட்ட ஜனங்களுக்குள் சாதுர்யமாக பேதங்களை உண்டு பண்ணுவதாலேயே அவர்களைத் தங்கள் மதத்துக்கு இழுப்பது மற்ற நாட்டவரின் வழக்கம். இப்படி ஒரு ஜயித்த ராஜா ஜயிக்கப்பட்டவர்களை மத மாற்றம் செய்வதை நம் சாஸ்த்ரம் கொஞ்சங்கூட ஆதரிக்கவில்லை. யாஜ்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதி

*யஸ்மிந்தேசே ய ஆசாரோ வ்யவஹார குல vFF : *
தத்தைவ பரிபால்யோ (அ) ஸௌ யதாவசம் உபாகத : ***

என்றகிறது. அதாவது ஜயித்த ராஜா வசப்படுத்திக் கொண்ட தேசத்தில் என்னென்ன ஆசார-வ்யவஹாரங்களும் குல வழக்குகளும் இருக்கின்றனவோ அவற்றை அப்படியேதான் ரக்ஷித்துக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானமாகச் சொல்லியிருக்கிறது.

அர்த்த சாஸ்த்ரத்திலும் அந்தந்த தேசாசாரமே தழைக்கும்படியாக அதை ஜயிக்கும் ராஜா செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஜயித்த ராஜா அந்த ராஜ்யத்தின் முடிவான நிர்வாஹத்தைத் தன் கையில் வைத்துக் கொண்ட போதிலும், 'டொமினியன் ஸ்டேடஸ்'போல அதற்கும் ஓரளவு ஸ்வதந்த்ரம் தந்து, அந்த நாட்டவரின் அன்பையும் மதிப்பையும் பெற்ற அத் தேசத்தவன் ஒருவனின் பொறுப்பிலேயே விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. மநு இன்னம் ஒரு படி மேலே போய் பழைய ராஜாவின் பந்துக்களிடமே இந்தப் பொறுப்பைத் தரவேண்டுமென்கிறார். அநேக ஸந்தர்ப்பங்களில், தோற்ற ராஜாவிடமேயோ அல்லது அவன் யுத்தத்தில் செத்துப் போயிருந்தால் அவனுடைய பிள்ளையிடமேயோ இந்தப் பரிபாலனப் பொறுப்பு கொடுக்கப்பட்டதுண்டு. ராமர் வாலியைக் கொன்றபின் ஸுக்ரீவனை ராஜாவாக்கினாலும், வாலியின் பிள்ளையான அங்கதனுக்கு யுவராஜ அந்தஸ்து தந்திருக்கிறார்;லங்கையை ஜயித்தவுடனோ அதைத் தான் ஆளாமல் விபீஷணனுக்குப் பட்டம் கட்டியிருக்கிறார்.

தோல்வியடைந்த ராஜ்யம் ஜயித்த ராஜாவுக்குக் கப்பம் என்று வருஷா வருஷம் ஒரு தொகை செலுத்த வேண்டும். தன் ராஜ்யத்தை விஸ்தரித்துக்

கொள்வதற்காக அது யுத்தத்துக்குப் போகப்படாது. Defence, Foreign Affairs (பாதுகாப்பு, வெளி வியவஹாரம்) என்ற இரண்டிலும் அது ஜயித்த ராஜ்யத்துக்கு முற்றிலும் அடங்கியே நடக்க வேண்டும். மற்றபடி internal administration என்கிற உள்நாட்டு நிர்வாஹத்தில் அநேக விஷயங்களில் அது ஸ்வதந்திரமாக நடக்கலாம்;பெரிய, முக்யமான ஸமாசாரங்களில் மாத்திரம் ஜயித்த ராஜாவுக்குச் சொல்லி விட்டு அவனுடைய அங்கீகாரம் பெற்றே நடவடிக்கை எடுக்கணும். நம் தேசம் தவிர மற்ற தேசங்களில் ஜயித்தவர்கள் தோற்றவர்களிடம் இவ்வளவு 'ஜெனர'லாக நடப்பதை எதிர்பார்க்க முடியாது.

----

* யுத்தம் செய்வதில் ஏற்பட்டுள்ள இந்த தார்மிக வரம்புகளைப் பற்றி "தநுர்வேதம்"என்ற உரையில் காண்க.

17.10-அந்நியக் கொள்கைகள் ஆறு

அந்நிய ராஜ்யங்களிடம் ஒரு ராஜா கடைப்பிடிக்க வேண்டிய ஆறு கொள்கைகளை 'ஷாட்குண்யம்'என்று அர்த்த சாஸ்திரங்கள் வகுத்துக் கொடுத்திருக்கின்றன. ஸந்தி, விக்ரஹம், யானம், ஸ்தானம் (அல்லது ஆஸனம்) , ஸம்ச்ரயம், த்வைதீபாவம் என்பனவே இந்த ஷட்குணங்கள். 'ஸந்தி'என்பது ஸ்நேஹ உடன்படிக்கை, ஸமாதான உடன்படிக்கை செய்துகொண்டு ஒற்றுமையாயிருப்பது. ஸந்தி செய்துகொண்டுள்ள ராஜ்யங்களைத் தற்காலத்தில் allies (நேச நாடுகள்) என்கிறோம். 'விக்ரஹம்'என்பது விரோத நாடாகவே கருதி யுத்தம் செய்வது. 'ஸ்தானம்'அல்லது 'ஆஸனம்'என்பது இந்தக் காலத்தில் சொல்கிற neutrality (நடுநிலைமை) , non-alignment (கூட்டுச்சேராமை) என்று சொல்லலாம். 'யானம்'என்பது Cold-war மாதிரி - அதாவது, ஆக்சுவலாக யுத்தப் முஸ்தீபுகள் மட்டும் பண்ணிக் காண்பித்துக் கொண்டிருப்பது, 'ஸம்ச்ரயம்'என்பது நம்மைவிட பவிஷ்டனான இன்னொரு ராஜாவிடம் ஸ்நேஹ பாவத்துடன் போய், அவனை ர¬க்ஷயாகக் கொண்டு வேறொரு சத்ரு ராஜாவை எதிர்ப்பது.

First World War -ல் இப்படித்தான் ஆஸ்ட்ரியா ஜெர்மனியையும், வேறேதோ ஒரு சின்ன தேசம்*ரஷ்யாவையும் ஸம்ச்ரயமாக அடைய அந்த இரண்டு சிறிய ராஜ்யங்களின் சண்டை பெரிய உலக யுத்தமாகவே ரூபமெடுத்து விட்டது. '**த்வைதீபாவம் '** என்பது ஒரு ராஜ்யத்தோடு யுத்தம் போடுவதற்காகவே, அதற்குப் பக்கத்திலுள்ள ராஜ்யம் அதோடு சேர்ந்துவிடாமல், முன்கூட்டி அதைத் தனக்கே ஸ்நேஹிதமாக ஆக்கிக் கொண்டு ஸமாதான உடன்படிக்கை செய்து கொள்வது. ஸ்நேஹத்துக்காக ஸ்நேஹமில்லாமல் காரியத்துக்காக ஸ்நேஹம். டிப்ளமஸி (ராஜதந்த்ரம்) என்பது டூப்ளிஸிடியாகவே (இரண்டு விதமான ஸ்டான்டர்டுகளில் ஏமாற்றுதலாகச் செய்வதாகவே) ஆகிவிடுவதற்குத்தான் ***' த்வைதீபாவம் '*** என்று பெயர் கொடுத்திருக்கிறது என்றும் சொல்கிறார்கள். முன்னேயே சொன்னாற்போல டூப்ளஸிடி என்பது தர்ம சாஸ்திரத்துக்கு ஸம்மதமில்லாமல் அர்த்த சாஸ்திரம் மட்டுமே சற்று அநுமதித்துள்ள விஷயந்தான். அதனால் இதற்கு நாம் மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை.

----

* ஸெர்பியா

17.11-அரசாங்கத்தின் அங்கங்கள்

ஷாட்குண்யம்' என்று '்ஃபாரின் பாலிஸி'யின் ஆறு அம்சங்களைச் சொல்கிறபோது இதெல்லாவற்றுக்கும் அடிப்படையான ராஜ்யம் என்பதற்கே உள்ள 'ஸப்தாங்கம் (அல்லது 'ஸ்ப்த ப்ரக்ருதி') என்கிற ஏழு அம்சங்களைப் பற்றி நினைவு வருகிறது. ஸ்வாமி, அமாத்ய, ஸுஹ்ருத், கோச, ராஷ்ட்ர, துர்க, பல - என்பவையே இந்த ஏழு. 'ஸ்வாமி'என்றால் ராஜா. உடைமையாளன் என்பதுதான் ஸ்வாமி என்பதற்கு நேர் அர்த்தம். ராஜ்யத்தை தனதாக உடையவனாதலால் ராஜா ஸ்வாமி எனப்படுகிறான். 'அமாத்யா'என்றால் மந்திரி. 'ஸுஹ்ருத்'என்றால் நண்பர்;அதாவது நேச நாடுகள். 'கோச'என்பது கஜானா;பொன், மணி மட்டுமின்றி தேசத்தின்

விளைச்சலையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். 'ராஷ்ட்ரம்'என்பதுதான் நாடு - அதாவது குடிமகள். 'துர்க'என்றால் கோட்டை. 'பல'என்பது ராணுவம்.

திருவள்ளுவர் இதில் ஸ்வாமி எனப்படும் ராஜாவை மத்தியில் வைத்து, அவனுக்கு இருக்க வேண்டிய ஆறு அங்கங்களாகப் பாக்கி ஆறையும் 'பொருட்பால்'முதல் குறளிலேயே சொல்லியிருக்கிறார்.

படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

'உடையான்'என்பதுதான் உடைமையாளனான ஸ்வாமி. ஸரியாக இப்படிப் பதப் பிரயோகம் செய்திருக்கிறார். 'படை'என்பது பலம் என்கிற ஸைன்யம். 'படை பலம்'என்று சேர்த்தே சொல்கிறோம். 'குடி'என்பதே 'ராஷ்ட்ரம்'என்னும் மக்கள். 'கூழ்'என்பது விளை பொருள் அதாவது கோசம். 'அமைச்சு'தான் அமாத்யர். 'நட்பு'என்பது ஸுஹ்ருத். 'அரண்'தான் துர்கம். பாரத நாகரிகமாக தர்ம அர்த்த சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதைத்தான் தமிழ் மறை தந்தவரும் அக்ஷரத்துக்கு அக்ஷரம் எதிரொலித்துச் சொல்லியிருக்கிறார்.

17.12-ஸாரம் இதுவே

அர்த்த சாஸ்திரத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதென்றால் அது மேலெழப் பார்க்கிறபோது 'அர்த்தந்தான் எல்லாவற்றுக்கும் மேலே'என்று சொல்வதாகத் தோன்றினாலும் ஆழப் போகும் போது தர்மத்தை eP அர்த்தத்துக்குப் போகப்படாது என்று சொல்வதாகவே தெரியும்.

எடுத்துக்கொண்ட விஷயத்துக்குக் கூடுதலாகவே சிறப்புத் தருவது என்ற வழக்கத்தில்தான் அர்த்தத்தை அர்த்த சாஸ்த்ரத்தில் விசேஷிப்பது. ராஜாவின் போஷணையில்லாவிட்டால், தர்மிஷ்டர்களையும் ஞானிகளையும் துஷ்டர்களிடமிருந்து அவன் ரக்ஷிக்காவிட்டால் ஒரு தேசத்தில் தர்மம் ஏது, ஞானம் ஏது?இதைக் காட்டியே, 'பொதுவாக நாலு புருஷார்த்தங்களில் அர்த்தமானது காமத்துக்கு மட்டுமே அநுகூலம் என்று நினைக்கப்பட்டாலும், அதுதான் மற்ற இரண்டான தர்மம், மோக்ஷம் இவற்றுக்கும் ஆதாரம்'என்று

சாணக்யன் கூறுகிறார். மஹாபாரதத்தில் கூட க்ருஹஸ்தன் பி¬க்ஷ போட்டுத்தான் ப்ரம்மசாரியும், ஸந்நியாஸியும் வாழவேண்டியிருப்பதால் நாலு ஆச்ரமங்களில் க்ருஹஸ்தாச்ரமந்தான் பிரதானம் என்று இருக்கிறது. ஆனால் இப்படிச் சொன்னதாலேயே பிரம்மசர்யமும் ஸந்நியாஸமும் நிச்சயம் இருக்க வேண்டும் என்று அது அபிப்ராயப்படுவது போல், சாணக்யனும் தர்மம், மோக்ஷம் என்ற புருஷார்த்தங்களை வேண்டுபவரே என்று தெரிகிறது.

அர்த்த சாஸ்த்ரத்தைச் சார்ந்துதான் மற்ற மூன்று புருஷார்த்தங்களும் நிற்க முடிகிறது என்பதைப் போலவே இன்னொன்றும் சொல்லலாம். வேத ரக்ஷணத்திலிருந்து ஆரம்பித்து எல்லா வித்யைகளையும், அவற்றை அப்யஸிப்பவர்களையும் போதிக்கிறவர்களையும் ராஜாங்கம்தான் ரக்ஷித்து வளர்த்துத் தந்ததால் நம் ஸநாதன ஸமயத்தின் ஆதாரமான பதிநாலு தர்மப் பிராமணங்களுக்கும் அர்த்த சாஸ்திரம்தான் கவசம் என்றாகிறது.

பதினெட்டு வித்யா ஸ்தானங்கள் என்கிறபோது, நாலு உபவேதங்களில் இதைத் தவிர உள்ள ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் ஆகியவற்றுக்கும் ராஜாங்க ஆதரவு அவசியமென்பது மட்டுமின்றி ராஜாவோடேயே இந்த மூன்றுக்கும் நெருங்கின ஸம்பந்தமிருக்கிறது. யுத்தத்திலே அம்படி, விஷக் காயங்கள் முதலியன ஏற்படுமாதலால் இவற்றை குணப்படுத்துவதற்காக ராஜாவுக்கு ஆயுர்வேத ஞானம் இருக்க வேண்டும். மூலிகை வைத்யம், ஸர்ஜரி ஆகியன ராஜாவுக்குத் தெரிய வேண்டும். உள்ளே போய் உடைந்துபோன ஆயுத முனைகளை எடுப்பதற்கென்றே 'சல்ய சாஸ்த்ரம்'என்று ஆயுர்வேதத்தில் ஒரு பிரிவு இருக்கிறது. தநுர்வேதம் அவனுக்காகவேதான் முக்யமாய் ஏற்பட்டது. Parton of Arts -ஆக (கலைகளின் போஷனாக) இருக்க வேண்டியதும் ராஜாவின் கடமை. இதனால் காந்தர்வ வித்யையில் அவனுக்கு ஸம்பந்தம் வந்து விடுகிறது. போஜன், விக்ரமாதித்யன், மஹேந்திரவர்ம பல்லவன், கிருஷ்ணதேவராயர், ஸமீப காலத்துச் சின்ன ஸம்ஸ்தானாதிபதிகளான எட்டையபுரம் ராஜா போன்றவர்கள் உள்பட எல்லா ராஜாக்களும் கவிகளையும், சில்பிகளையும் ஸங்கீத-நாட்ய வித்வான்கள் விதுஷிகளையும் நிரம்ப ஆதரித்தவர்களாகவே

இருந்திருக்கிறார்கள். தாங்களும்கூட அவர்களில் ஒருவராக இருந்திருக்கிறார்கள்.

அர்ஜுனன் விராட தேசத்தில் ந்ருத்யாசாரியனாக இருந்திருக்கிறான். உதயனன் வீணை வாசித்து மதயானையை அடக்கியிருக்கிறான். இதிஹாஸ, புராண, காவ்யங்களில் இப்படி எத்தனையோ!ராமருடைய கல்யாண குணங்களை (அயோத்யா காண்ட ஆரம்பத்தில்) விவரித்துக்கொண்டே வரும்போது, ஸங்கீதம் முதலான காந்தர்வ வித்யைகளில் அவர் லோகத்திலேயே முதல்வராக நிற்கிறவர் என்று சொல்லியிருக்கிறது: *காந்தர்வே ச புவி ச்ரேஷ்ட :*

சரித்ர காலத்துக்கு வந்தாலும் மஹேந்திரவர்மா 'சித்திரக்காரப் புலி'என்றே ஒரு பட்டப் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறான். 'மத்த விலாஸ ப்ரஹஸனம்'என்று அவன் ஹாஸ்ய நாடகமும் எழுதியிருக்கிறான். குடுமியாமலையில் ஸங்கீதத்தைப் பற்றிய சாஸ்த்ரத்தைக் கல்வெட்டில் பொறித்திருக்கிறான். ராஜ ராஜ சோழன் 'ராஜவித்யாதரன்'என்று ஒரு பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறான். (வித்யாதரர்களும் காந்தர்வ ஜாதி போலத்தான்.) தஞ்சாவூர் பெரிய கோவிலில் ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து முதலியன நடக்கச் செய்திருக்கிறான். ஸமீப நூற்றாண்டுகளில் காந்தர்வ வித்யை தஞ்சாவூர் சீமையில் பெரிய மறுமலர்சசி பெற்றதற்குக் காரணமே நாயக் ராஜாக்களும் சரபோஜி முதலான மஹாராஷ்டிர ராஜாக்களும் கொடுத்த ஆதரவுதான்.

ராஜாவானவன் ஸகல சாஸ்த்ர பாராங்கதனாக (பாராங்கதன் என்பதற்குக் 'கரை கடந்தவன்' என்று நேர் அர்த்தம்) இருக்கவேண்டுமென்பதில் அவன் காந்தர்வக் கலைகளை நன்றாக அப்யஸித்து, ஆதரித்து வளர்க்க வேண்டுமென்றும் ஏற்பட்டிருந்தது.

அம்பாளும் ஈஸ்வரனும் ஜீவனின் உள்ளே இருக்கும் ஆறு சக்கரங்களில் ஒன்றில் இரட்டை ஹம்ஸங்களாக உள்ளபோது அந்த ஹம்ஸங்கள் ஸம்பாஷிப்பதிலிருந்துதான் பதினெட்டு வித்யா ஸ்தானங்களும் உண்டாயின என்று ஆசார்யாள் "ஸௌந்தர்ய லஹரி"யில் சொல்கிறார்: **யதாலாபாத்**

அஷ்டாதச குணித வித்யா பரிணதி :*- இது அத்தனையிலும் வல்லவனாக அரசன் இருக்க வேண்டும்.

இப்படியாக அநேக சாஸ்திரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியவனாகவும் அத்தனை சாஸ்திரங்களையும் ரக்ஷித்துத் தர வேண்டியவனாகவும் இருக்கிற அரசனை முக்யமாக உருவாக்குவது அர்த்த சாஸ்திரம்தான் என்பது அதற்குப் பெருமை.

அஸுர குரு சுக்ரர் மட்டுமின்றி தேவகுரு ப்ருஹஸ்பதியும் ஆட்சிமுறை பற்றி சாஸ்த்ரம் செய்திருக்கிறார். நாலு புருஷார்த்தங்களையும் பற்றி பிரம்மாவின் பேரிலேயே உள்ள ரொம்பப் பெரிய நூலில் ராஜநீதியை மட்டும் விசாலாக்ஷர் "வைசாலாக்ஷம்"என்று சுருக்கி, அப்புறம் இதை ப்ருஹஸ்பதி மேலும் சின்ன தாக்கினார் என்று தெரிகிறது. ஸ்ம்ருதிகளில் வரும் ராஜநீதியை மேதாதிதி (மநுஸ்ம்ருதிக்கு விளக்கம் எழுதியவர்) , விஜ்ஞானேச்வரர் ('மிதாக்ஷரி'எழுதியவர்) ஆகியவர்கள் மேலும் தெளிவு செய்து இன்றைக்கும் 'லா'வில் மதிக்கப்படுவதாகச் செய்திருக்கிறார்கள்.

முதலில் சொன்னதை மறந்துவிடக் கூடாது. இந்த அர்த்த சாஸ்திரம் தர்ம சாஸ்திரத்துக்கு ஏற்கத்தக்கதாக உள்ளபோதுதான் அதற்குப் பிராமாண்யம் (அதாவது 'அதாரிடி') உண்டு. இதை சாணக்யன் வாயாலேயே கேட்கிறோம். "எங்கேயாவது தர்ம சாஸ்திரத்துக்கும் நடைமுறை வழக்குகளுக்கும் வியவஹாரங்களுக்கும் இடையிலே வேறுபாடு இருந்தால் அரசனானவன் தர்மத்தின் ஆதாரத்தைக் கொண்டே அதன்படி முடிவெடுக்க வேண்டும்"என்று அவர் சொல்கிறார். **தர்மோ ரக்ஷதி ரக்ஷித** :- தர்மத்தை ரக்ஷித்தால், அது அப்படி ரக்ஷிக்கிறவனை ரக்ஷிக்கும். ராஜா தர்மத்தைத் தான் பரிபாலித்து, தர்மத்தினால் தன்னைப் பரிபாலித்துக் கொள்ள வேண்டும் என்பதே முடிவாக அரசனுக்கு ஏற்பட்ட விதி.

---

* ச்லோகம் 38

18-பண்பாடு - கவி சாதுர்யம்

18.1-வார்த்தை விளையாட்டு

நாம் தினந்தினமும் உபயோகப்படுத்துகிற வார்த்தைகளையே கவிகளும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனாலும் நம்முடைய பேச்சிலே கிடைக்காத அலாதியான நயம் அவர்களுடைய எழுத்திலே உண்டாகிவிடுகிறது. நவ ரஸங்களிலும், உயர்ந்த பக்தி பாவங்களிலும் உத்தமமான எண்ணங்களிலும் நம்மைக் கொண்டுபோய்ச் சொருகி ஆனந்தத்தை உண்டாக்குகிற சக்தி கவிகளுக்கு இருக்கிறது. அலங்காரம் (இதைத் தமிழில் அணி என்று சொல்வார்கள்;அப்படி அலங்காரம்) பண்ணினால் எப்படி ஸுமாராக இருக்கிற பெண் கூட அழகாக ஆகிவிடுகிறாளோ அதே மாதிரி இந்தக் கவிகள் நாம் ஸாதாரணமாக உப்புச் சப்பில்லாமல் உபயோகிக்கிற வார்த்தைகளையும் கருத்துக்களையும் தங்களுடைய சாதுர்யத்தால் அலங்காரம் பண்ணி அழகான கவிதைகளாக, காவியங்களாக ஆக்கிவிடுகிறார்கள். உவமை, உள்ளார்த்தம் த்வனிக்கச் சொல்லாமல் சொல்வது, இரண்டு அர்த்தத்தில் ச்லேஷை (சிலேடை) பண்ணுவது என்பதாகப் பல நகைகளைப் போட்டு, லளிதமான சப்தங்களை உடைய வார்த்தைகளால் தலை வாரி, புடவை கட்டி கவிதைக் கன்னிகையை நல்ல ஸௌந்தர்யவதியாகச் செய்துவிடுகிறார்கள்!அதனால் கவிதையை அழகுபடுத்தும் விதிகளைத் தரும் சாஸ்த்ரத்துக்கு ***'அலங்கார சாஸ்த்ரம்'*** என்றே பெயர். தமிழிலும் உவமை அணி, சிலேடை அணி என்றெல்லாம் 'அணி'என்றே சொல்கிறோம்!தமிழில் உள்ள அணிநூலுக்கு ***"தண்டியலங்காரம்"*** என்றே பேர். தண்டி என்பவர் ஆயிரத்து இருநூறு வருஷத்துக்கு முந்தி காஞ்சீபுரத்தில் இருந்த ஸம்ஸ்கருதக் கவி;கவிதா சாஸ்த்ரத்தைப்பற்றி ஸம்ஸ்க்ருதத்தில் ***"காவ்யாதர்சம்"*** என்ற புஸ்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புஸ்தகத்தை base பண்ணி, பெரும்பாலும் அதையே தழுவி எண்ணூறு வருஷத்துக்கு முன்பு தமிழ் நாட்டில் ஒருவர் எழுதியதுதான் தண்டியலங்காரம்.

கவிகள் அழகுபடுத்துவதில் இரண்டு தினுஸு. அபிப்ராயங்களின் உயர்வினால், அவற்றை வெளியிடும் வார்த்தை நயத்தால் நம் நெஞ்சைத் தொடும்படி, உள்ளத்தை உருக்கும்படி கவிதை பண்ணி அதனால் படிக்கிறவனும் உத்தமமான உணர்ச்சிகளைப் பெறும்படியாகவும், உயர்ந்த கருத்துக்களைச் சிந்திக்கும்படியாகவும் செய்வது ஒன்று. இன்னொன்று வார்த்தைகளை, சப்தங்களை விசித்ரமாகவும் விநோதமாகவும் சொல்லி விளையாட்டுப் பண்ணி நாம் அதில் பிரமித்து, குதூஹலித்து, ஸந்தோஷப்படும்படி செய்வது. இதிலே மனஸை உருக்கும்படியாகவோ அறிவில் நமக்கு சாச்வதமாக உயர்வு தரும்படியாகவோ எதுவும் இருக்காது. ஆனாலும் ஒரு அபிப்ராயம் நம் மனஸில் நன்றாகப் பதிவதற்கு இது உதவுகிறது. அதோடுகூட, வார்த்தையை வைத்துக்கொண்டு கவிகள் என்ன வித்தை பண்ணியிருக்கிறார்கள் என்று பார்த்து ரஸிக்கிறபோது, அநேக வேடிக்கை வித்தைகளைப் பார்த்து நம்முடைய வாழ்க்கைக் கஷ்டங்களை மறந்து ஆனந்தப்படுவது போன்ற ஒரு இன்பம் ஏற்படுகிறது.

அதனால் மஹாகவிகளும்கூட அபூர்வமாக அங்கங்கே இப்படிப்பட்ட வார்த்தை விளையாட்டுகளை - Word Play என்றே இங்கிலீஷிலும் சொல்வதைச் - செய்திருக்கிறார்கள். ஒரு அர்த்தமும் ஸரியாகத் தெரிவிக்கத் தெரியாமல் கன்னாபின்னா என்று நாம் வார்த்தைகளைச் சொல்கிறோமென்றால், அதே வார்த்தைகளை அவர்கள் நூதன நூதனமாக அர்த்தம் கொடுக்கும்படிச் சொல்வதைப் பாராட்டத்தானே வேண்டியிருக்கிறது?அதனால் இவற்றுக்குச் 'சித்ரகவிதை'என்று பேர் கொடுத்து வைத்திருக்கிறது. சித்ர கவிதையில் வார்த்தை விளையாட்டால் அர்த்தத்தில் சாதுர்யம் செய்வதை அர்த்த-சித்ரமென்றும், சப்தஜாலம் மட்டும் செய்வதை சப்த-சித்ரமென்றும் சொல்வார்கள்.

---

* பண்பாட்டைக் குறித்த விஷயங்கள் அநேக உரைகளில் விரவி வந்துள்ளன. குறிப்பாக "காந்தர்வ வேதம்"எனும் உரையை இப்பகுதியிலும் கொள்ளலாம்.

18.2-கன்னா பின்னா

"கன்னா பின்னா" என்பதையே ஒரு புலவர் நூதன அர்த்தம் கொடுத்து அழகு பண்ணியிருக்கிறார்.

அவர் ராஜஸபையில் இருந்தவராம். கவிவாணர்களுக்கு ராஜா யதேஷ்டமாகக் பொன்னும் பொருளும் கொடுப்பானாம். அதைப் பார்த்து ஒரு பாமரனுக்கு நாமும் ஒரு கவி பண்ணி ராஜாவுக்கு அர்ப்பணம் செய்து ஸம்பாவனை வாங்க மாட்டோமா என்று இருந்ததாம். நான் சொன்ன அந்தப் புலவரிடம் போய், "எனக்காக நீங்கள் ஒரு கவிதை எழுதிக் கொடுங்கள், அதை ராஜாவுக்கு என்னுடையதாக நான் அர்ப்பணம் செய்து பிழைத்துப் போகிறேன் என்று கேட்டுக்கொண்டானாம்.

போனால் போகிறது என்று பல கவிகள் இம்மாதிரிப் பாமர ஜனங்களுக்காகவும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். காளிதாஸன்கூட இப்படி உபகரித்ததாகக் கதைகள் உண்டு.

இந்தக் கவியும் அப்படி நல்ல மனஸுள்ளவர். ஆனாலும் இவர் அந்த ஆளுக்குக் கவிதை எழுதித் தராமல், என்ன செய்தாரென்றால், "நீ உன் வாயில் என்ன வந்தாலும் அதை ராஜாவுக்கு முன்னாடி சொல்லு. கன்னா பின்னா என்று உளறிக் கொட்டினாலும் பரவாயில்லை, நான் அதற்கு மிகவும் உயர்ந்த அர்த்தம் இருப்பதாக வியாக்யானம் செய்து, உனக்கு ராஜா நல்ல ஸம்பாவனை கொடுக்கும்படிப் பண்ணுகிறேன் என்றாராம்.

ராஜஸபைக்கு அந்த ஆள் வந்தான். *"கன்னா பின்னா"* என்ற இரண்டு வார்த்தைகளையே கிளிப்பிள்ளை போலச் சொன்னான்.

ஸதஸிலே இப்படி ஒருத்தன் பேத்துகிறானே என்று ராஜாவுக்கு மஹாகோபம் வந்துவிட்டது.

அவனைப் புலவர் சட்டென்று ஸமாதானம் பண்ணினார். "இவர் மஹா பெரிய வித்வான். உங்களை எத்தனை உயர்த்தி ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்

தெரியுமா? 'கன்னா' என்றால் 'கர்ணா' என்று உங்களைக் கூப்பிடுவதாக அர்த்தம். ('கர்ணன்' என்பது 'கன்னன்' என்றும் ஆகும். கர்நாடகம் என்பதைக் கன்னடம் என்கிறோமல்லவா? அந்த மாதிரி) தான தர்மம் செய்வதில் நீங்கள் கர்ணனுக்கு ஸமமான வள்ளல் என்பதாலேயே 'கன்னா'என்று கூப்பிடுகிறார். 'பின்னா' என்றால் 'பின்னால் வந்தவரே' என்று அர்த்தம். கர்ணனுக்குப் பின்னால் பிறந்தது யார்? தர்மங்களுக்கெல்லாம் உறைவிடமாக, ஸத்வ ஸம்பன்னராக இருந்த தர்மபுத்ரர் அல்லவா?அந்த தர்மபுத்ரனுக்கு நீங்கள் நிகரானவர் என்று சொல்கிறார்"என்று வியாக்யானம் பண்ணினாராம்.

ராஜா ஸந்தோஷப்பட்டு அந்த ஆளுக்கு அக்ஷரலக்ஷம் கொடுத்தானாம்.

உயர்ந்ததான ஒரு ரஸாநுபவத்தின் பேரில் இல்லாமல் வெறும் புத்திசாதுர்யத்தில் பிறப்பதுதான் இது மாதிரியான வார்த்தை விளையாட்டுக்கள் என்றாலும், இவற்றுக்கு உள்ள ஆகர்ஷணத்தால் காளிதாஸன், மாகன், காளமேகம் போன்ற மஹாகவிகள் மட்டுமின்றி, மஹர்ஷிகளாக மஹாஞானிகளாக பக்த சிகாமணிகளாக இருந்து கொண்டே காவ்யங்களை, ஸ்தோத்ரங்களை அநுக்ரஹித்திருக்கும் வியாஸாசார்யாள், நம்முடைய (சங்கர) ஆசார்யாள், அப்பைய தீக்ஷிதர், ஞானஸம்பந்தர் முதலியவர்களும் எப்போதாவது கொஞ்சம் இப்படி விளையாடியிருக்கிறார்கள்.

18.3-பாரத குட்டுகளில் ஒன்று

வியாஸாசார்யாளில் ஆரம்பிக்கிறேன். பிள்ளை யாரில்தானே ஆரம்பிக்க வேண்டும்?அதனால், "மஹா பாரதம்" பண்ணும்போது பிள்ளையாரையே கொஞ்சம் பிரமித்து யோசிக்குமாறு பண்ணுவதற்காக வ்யாஸர் செய்த 'பாரத குட்டு' ஸ்லோகமொன்றில் ஆரம்பிக்கிறேன்*.

பாரத ஸ்லோகங்களைப் பண்ணி வ்யாஸர் சொல்லிக் கொண்டே போகப் பிள்ளையார் மேருமலைச் சிகரத்தில் அதைத் தம் தந்தத்தால் எழுதிக்கொண்டே போனார். 'டிக்டேட்'பண்ணின வியாஸருக்குத்தான்

அலுப்பும் சலுப்புமாகிவிட்டது - பிள்ளையார் எழுதுகிற ஸ்பீடுக்கு ஈடு கொடுக்க முடியாமல்!ஸாதாரணமாக ஒருத்தர் வாயால் சொல்லிக்கொண்டு போகிற அதே வேகத்தில் அதை எழுத முடியாது. அதற்காகத்தான் இப்போது பேசினது பேசினபடி verb atim report கொடுப்பதற்காக 'ஷார்ட் ஹான்ட்'கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு நேர்மாறாக விக்னேஸ்வருடைய பிரபாவம் இருக்கிறது!அவர் எழுதுகிற ஸ்பீடுக்குச் சரியாக ஸாக்ஷ£த் வியாஸ மஹரிஷியாலேயே ஸ்லோகங்களைக் கவனம் பண்ண முடியவில்லை. முதலில் அவர் பிள்ளையாரிடம் பெரிசாகக் 'கண்டிஷன்'போட்டார். "நான் பாட்டுக்கு கிறு கிறு என்று ஸ்லோகங்களைப் பண்ணிக்கொண்டே போவேன். நீ மெதுவாக எழுதினால் நான் நிறுத்தி நிதானமாகச் சொல்லும்படி ஆகிவிடும். அப்படிச் சொன்னால் என் impiration flow (பிரதிபா சக்தியின் பொழிவு) கெட்டுப் போய்விடும். ஆகையால் நான் சொல்கிற வேகத்துக்கு ஸமமான வேகத்தில் உன்னால் எழுத முடிந்தாலே சொல்லுவேன்"என்றார். இப்படி அவர் சொன்னவுடன் பிள்ளையாரும் பதிலுக்குச் 'சாலஞ்ஜ்'பண்ணுகிற மாதிரி, "நான் எழுத ஆரம்பித்தேனானால் என் கை நிற்காமல் அது பாட்டுக்கு விரு விரு என்று ஓடிக்கொண்டே இருக்கும். நான் இப்படி எழுதுவது க்ஷணங்கூட நிற்காதபடி நீர் ஸ்லோகத்தை மடமட என்று பண்ணிக்கொண்டே போவீரா?"என்றார். "முடியும்"என்று வியாஸர் சொன்னார்.

இப்படி இவர்கள் பரஸ்பரம் 'சாலஞ்ஜ்'பண்ணிக் கொண்டு, வியாஸர் மடை திறந்த மாதிரி மஹாபாரத ஸ்லோகங்களைப் பண்ணிச் சொல்லிக்கொண்டே போக, மஹா கணபதி அதே வேகத்தில் அவற்றை எழுதிக்கொண்டு போனார். ஒரு ஆயிரம் ஸ்லோகம் ஆனவுடன் வியாஸருக்குத்தான் மூச்சு முட்டியது. ஓட்டப் பந்தயத்தில் மெதுவாகப் பார்வதி பரமேஸ்வராளைப் பிரதக்ஷிணம் பண்ணியே ஸுப்ரம்மண்ய ஸ்வாமியை ஜயித்த பிள்ளையார், இந்தப் பந்தயத்திலே எழுத்தை வேக வேகமாய் ஓட்டி வியாஸரை ஜயித்துவிடுகிற கட்டத்துக்கு வந்துவிட்டார். பிள்ளையார் ஜயித்து விட்டால் அப்புறம் எழுதமாட்டார். அவரைத் தவிர யார் வியாஸருக்கு ஈடு கொடுத்து எழுத முடியும்?அதனால் அவரையே தமக்கு 'ரைட்டர்'ஆக இருத்திக் கொள்ள

வியாஸர் ஒரு யுக்தி பண்ணினார். "c வெறுமே மெகானிகலாக எழுதிக் கொண்டு போனால் போதாது. ஸ்லோகங்களின் அர்த்தத்தை நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டு, நான் கேட்கிறபோது 'எக்ஸ்ப்ளெயின்'பண்ண வேண்டும்"என்றார். ஞான ஸ்வரூபமான பிள்ளையாரும், "ஆஹா, அப்படியே"என்றார். இதைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டு வியாஸர் என்ன பண்ணினாரென்றால் ஒவ்வொரு ஆயிரம் ஸ்லோகம் ஆகி அவருக்கு ஆயாஸமாகிக் கொஞ்சம் ஆச்வாஸம் பண்ணிக்கொள்ள வேண்டி வரும்போதெல்லாம், ரொம்பவும் சிக்கலாகப் பதங்களைப் போட்டு பின்னி ஒரு ஸ்லோகத்தைப் பண்ணிவிடுவார்.

அந்த ஸ்லோகத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது, பதம் பதமாக அர்த்தம் புரிந்தாலும், சேர்த்துப் பார்த்தால் ஒன்றும் அர்த்தமே ஆகாமல் ஒரே குழப்பமாயிருக்கும். வியாஸர் அந்தப் பதங்களை எப்படி ஸந்தி பிரித்துச் சொல்லுகிறாரோ, அப்படியே வைத்துக் கொள்ளாமல் எழுத்துக்களை முன் பின்னாக மாற்றி வேறு விதத்தில் பதங்களை அமைத்துக் கொண்டால்தான் அர்த்தம் புரியும். இந்த மாதிரி ஆயிரம் ஸ்லோகத்துக்கு ஒன்றை அவர் கடினமாக, 'காம்ப்ளிகேடட்'-ஆக ரொம்பவும் வார்த்தை வார்த்தை விளையாட்டுடன் சொன்னவுடன் கணபதி அரை க்ஷணம் யோசித்துப் பார்த்து புரிந்து கொள்வார் அந்த அரை க்ஷணத்தில் வேத வியாஸ பகவானும் ஆச்வாஸமடைந்து மேற்கொண்டு கவனம் பண்ணச் சக்தி பெற்றுவிடுவார்.

இதனால் மஹாபாரதத்தில் ஆயிரத்துக்கு ஒரு ஸ்லோகம் நமக்கெல்லாம் லேசில் அர்த்தம் புரியாமல் மண்டையை உடைக்கும். இவற்றுக்கு 'பாரத குட்டு' என்றே பேர்!லக்ஷம் கிரந்தம் (ஸ்லோகம்) கொண்ட பாரதத்தில் இப்படி நூறு 'குட்டுக்கள்'இருக்கின்றன. அதில் ஒன்றே ஒன்று - ஸாம்பிளுக்கு சொல்கிறேன்.

பஞ்ச பாண்டவர்கள் விராட தேசத்தில் மாறு வேஷம் போட்டுக்கொண்டு அஜ்ஞாதவாஸம் செய்கிற ஸமயம். ஒரு வருஷம் இப்படித் தங்கள் அடையாளம் தெரியாதபடி அவர்கள் பூர்த்தி செய்துவிட்டால், கௌரவர்கள் அவர்களுடைய ராஜ்யத்தை (முன்பு சூதாட்டத்தின் போது பாண்டவர்கள்

இழந்த ராஜ்யத்தை) திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்பது ஒப்பந்தம். இப்போது பன்னிரண்டு வருஷ வனவாஸம் முடிந்து, அப்புறம் ஒரு வருஷ அஜ்ஞாத வாஸமும் பூர்த்தியாகிற கட்டம் வந்துவிட்டது. எப்படியாவது அவர்களை அதற்குள் அடையாள கண்டு பிடித்து மீண்டும் அவர்கள் ராஜ்யம் பெறமுடியாதபடிப் பண்ணி விடவேண்டும் என்று துர்யோதனன் நினைத்தான். நாலா திசைகளிலும் அவன் வேவுகாரர்களை அனுப்பி 'ஸ்பை' பண்ணினதில், விராட நகரத்தில்தான் பஞ்ச பாண்டவர்கள் இருக்கக் கூடும் என்று தடயம் கிடைத்தது. ஒளிந்து கொண்டிருப்பவர்களை எப்படி அம்பலப்படுத்துவது என்று யோசித்து ஒரு சூழ்ச்சி பண்ணினான். பஞ்ச பாண்டவர்களுடைய விச்வாஸ குணம் துரியோதனனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் விராட ராஜாவுக்குத் தாங்கள் ஏதாவது ஹிம்ஸை கொடுத்தால், அங்கே அஜ்ஞாதவாஸம் செய்யும் பாண்டவர்கள் ராஜாவை ரக்ஷிக்க வருவார்கள்;அப்போது அம்பலப்படுத்தி, மறுபடி அவர்களுக்கு ராஜ்யமில்லாமல் செய்து விடலாம் என்று நினைத்தான். இதன் மேல் கௌரவ ஸேனை விராட ராஜ்ய எல்லைக்குள் வந்து அங்கே இருந்த பசு மந்தைகளையெல்லாம் பிடித்து ஓட்டிக்கொண்டு போக ஆரம்பித்தது. பாரதத்தில் இந்த கட்டத்துக்கு 'கோஷ யாத்ரா'என்று பெயர். 'கோஷம்'என்றால் இடைச்சேரி. இது விராட பர்வத்தில் வருகிறது.

இப்படி துர்யோதனாதியர் மாடு பிடித்தபோது அவர்களோடு யுத்தம் செய்வதற்காக விராட ராஜ குமாரனான உத்தர குமாரனை பிருஹந்நளை என்ற vFg வேஷத்திலிருந்த அர்ஜுனன் தேரோட்டி அழைத்துக் கொண்டு வருகிறான். யுத்த பூமிக்கு வருவதற்கு முன் பெரிசாக வீரப் பிரதாபம் பேசிய உத்தரகுமாரன் பீஷ்ம-த்ரோணாதியரை பார்த்தவுடனேயே தொடை நடுங்கிக் கொண்டு, "யுத்தமே வேண்டாம்;திரும்பிப் போய் விடலாம்" என்று ஆரம்பித்துவிட்டான். அப்போது அர்ஜுனன் வேஷத்திலேயே, பாணங்களைப் போட ஆரம்பித்தான்.

"இத்தனை ஆச்சர்யமாக சர வர்ஷம் பொழிகிற இந்தப் பெண் யார்?"என்று பீஷ்மர் அதிசயப்படுகிறார். அப்போது அவரிடம் அந்தப் பெண் யார் என்பதைப் பற்றி த்ரோணர் பதில் சொல்கிறார். இந்த பதில் 'பாரத குட்டு'க்களில் ஒன்றாகும்.

அர்ஜுனன் எப்படி வெளிப்படத் தெரியாமல் அஜ்ஞாதமாக இருந்தானோ, அப்படியே அவனைப் பற்றிச் சொல்லும் த்ரோண வசனமான ஸ்லோகத்துக்கும் அர்த்தம் வெளிப்படத்தெரியாமல் புதிர் மாதிரி இருக்கிறது அந்த ஸ்லோகம்:

நதீஜலம் கேசவநாரி கேது : நகாஹ்வயோ நாம நகாரிஸ¨நு :
ஏஷாங்கநா வேஷதர : கிரீடி ஜித்வா வயம் நேஷ்யதி சாத்ய காவ :

'நதீ ஜலம்'என்றால் 'ஆற்றுத்தண்ணீர்'. 'கேசவநாரி கேது'என்றால் 'கேசவனுடைய ஸ்த்ரீயின் அடையாளம்'. 'நகம்'என்றால் 'மலை'அல்லது 'மரம்'. 'நகாஹ்வயோ நாம'என்பதற்கு 'நகம் என்று பேர் உள்ளவன்'என்று அர்த்தம். 'நகாரிஸ¨நு:'என்றால் 'நகத்தின் விரோதிக்குப் பிள்ளை'. 'ஏஷாங்கனா வேஷதர:கிரீடி'என்பதில் 'ஏஷ அங்கனா'என்பது 'ஏஷாங்கனா'ஆகியிருக்கிறது. 'ஏஷ அங்கனா வேஷதர:கிரீடி'என்றால் 'கிரீடம் வைத்துக் கொண்டிருக்கிற இந்தப் பெண் வேஷக்காரன்'என்று அர்த்தம். 'ஜித்வா என்றால் ஜயித்து. 'வயம்'என்றால் 'நாங்கள்'. 'நேஷ்யதி'என்றால் 'கொண்டு போகிறான்'. 'ச அத்ய'என்பது 'சாத்ய'என்றாயிருக்கிறது. 'ச'என்றால் 'மேலும்'. 'அத்ய'என்றால் 'இப்போது'. 'காவ':என்றால் 'பசுக்கள்'.

இப்படித் தனித்தனியாக வார்த்தைகளுக்கு அர்த்தம் இருந்தாலும், எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு அர்த்தமும் ஏற்படமாட்டேன் என்கிறதே!எல்லா வார்த்தைகளையும் சேர்த்தால் என்ன ஆகிறது?"கிரீடம் வைத்துக் கொண்டிருக்கிற இந்தப் பெண் வேஷக்காரன் ஆற்றுத் தண்ணீர்;கேசவனுடைய ஸ்திரீயின் அடையாளம்;மலை அல்லது மரம் என்று பேர் உள்ளவன்;மலை அல்லது மரத்துக்கு சத்ருவின் பிள்ளை;நாங்கள் ஜயித்து, மேலும் பசுக்கள் கொண்டு போகிறான்"என்று ஒரே அபத்தமாக இருக்கிறது. நாட்டியம் சொல்லிக் கொடுக்கும் பெண்ணான பிருஹந்நளை கிரீடமே வைத்துக் கொள்ளததால் 'கிரீடி'என்பது தப்பு. அதுவுமில்லாமல் 'கிரீடி'என்பது ஆண்பால். 'கிரீடினி'என்றிருந்தால்தான் பெண்ணைக் குறிக்கும். அர்த்த ரீதியிலும் தப்பாக, வியாகரண ரீதியிலும் தப்பாகக் கன்னா பின்னா என்று ஸ்லோகம் இருக்கிறது.

இப்படிச் சொன்ன பின்னலாக இருக்கிற ஸ்லோகத்தை நன்றாக யோசித்து அக்கு வேறு ஆணிவேறாக அக்ஷரங்களைப் பிரித்து, வேறு தினுஸில் பதச் சேர்க்கை செய்தால் அர்த்தம் ஏற்பட்டுவிடும். மஹாபுத்திமான்கள் மட்டுமே ரொம்பப் பிரயாஸைப்பட்டு கண்டுபிடிக்க முடியும். பிள்ளையாருக்கு அரை நொடியில் அர்த்தமாகி விட்டது.

அந்த அர்த்தம் என்ன?

அதை அறிந்துகொள்வதற்கு ஸ்லோகத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் உள்ள பதங்களை வேறு விதமாகப் பிரித்துக்கொள்ளவேண்டும்.

முதலில் வருகிற 'நதீ-ஜலம் கேசவ-நாரி-கேது'என்பதை, 'நதீஜ-லங்கேச ('லம்கே'என்பது ஸம்ஸ்கிருதத்தில் 'லங்கே'என்று ஆகும்) -வநாரி-கேது'என்று பிரித்துக் கொள்ள வேண்டும். 'சுக்கு, மிளகு, திப்பிலி'என்பதை 'சுக்குமி, ளகுதி, பிலி'என்று பிரித்து எவனோ மருந்துக் கடையில் கேட்டு அடிவாங்கிக் கொண்ட கதையாக நாம் தப்பாக ஸந்தி பிரித்ததில்தான் ஒரு அர்த்தமும் ஏற்படாமல் போயிற்று. வேண்டுமென்றே வியாஸர் பதங்களைத் தப்பாகப் பிரித்துச் சொன்னாலும் விக்னேஸ்வரர் ஸரி செய்து கொண்டார்.

இதற்கு என்ன அர்த்தம்?

'நதீஜ' என்றால் 'நதிக்குப் பிறந்தவரே!'என்று அர்த்தம். கங்காதேவியின் புத்ரரான பீஷ்மரை, 'நதீஜ'என்று த்ரோணர் கூப்பிடுகிறார்.

'நதீஜ' என்று பீஷ்மரை த்ரோணர் கூப்பிட்டு மேலே என்ன சொல்கிறார்?'லங்கேச வநாரி கேது:'- 'லங்கேச'என்றால் 'லங்கேச்வரனான ராவணனுடைய';'வந அரி'- வநாரி'. 'வநாரி என்றால் வனத்தின் சத்ரு, அல்லது வனத்தை அழித்தவர். லங்கேச்வரனுடைய அசோகவனத்தை அழித்த ஆஞ்ஜநேய ஸ்வாமியைக் குறிப்பிடுகிறார். "கேது:"என்றால் இங்கே 'கொடி'என்று அர்த்தம். ஆஞ்ஜநேயரைத் தன் கொடியாகக் கொண்டவன் என்பதே 'லங்கேச வநாரி கேது:' என்பதன் அர்த்தம். அர்ஜுனனுடைய கொடியில் ஆஞ்ஜநேய ஸ்வாமியின் ரூபம் போட்டிருக்கும். ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியிடம் யுத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா பண்ணப்போகிற

கீதோபதேசத்தைக் கேட்பதற்காக முன்கூட்டியே அர்ஜுனனின் த்வஜத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டார்!

"நகாஹ்வயோ நாம" என்றால் மரம் அல்லது மலை என்ற பெயருள்ளவன் என்றேனல்லவா? யோசித்துப் பார்த்தால் 'லங்கேச வநாரி கேது'என்பது அர்ஜுனனைக் குறிப்பிடுவதுபோல் இதுவும் அவனை அடையாளம் காட்டுவதுதான் என்று தெரியும். இங்கே 'நகம்'என்றால் மரம் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். 'அர்ஜுனன்'என்றால் வெள்ளை வெளேர் என்று இருக்கிறவன் என்பது பொது அர்த்தம். 'அர்ஜுனம்'என்று மருத மரத்துக்கும் பேர். மருத மரத்தை ஸ்தல விருக்ஷமாகக் கொண்ட ஸ்ரீசைலம், திருவிடைமருதூர், திருப்புடைமருதூர் ஆகிய க்ஷேத்ரங்களுக்கு ***மல்லிகார்ஜுனம், மத்யார்ஜுனம், புடார்ஜுனம்*** என்றே ஸம்ஸ்கிருதத்தில் பேர். "நகாஹ்வயோ நாம"என்றதால் 'அர்ஜுன என்ற மரத்தின் பெயருள்ளவன்' என்று ஸ¨சனை பண்ணினதாகிறது.

அப்புறம் 'நகாரிஸ¨நு என்றால் மரம் அல்லது மலையின் விரோதியுடைய பிள்ளை என்று சொன்னேனல்லவா? இங்கே 'நகம்'என்றால் மரம் என்று இல்லாமல், மலை என்று அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். மலைக்கு சத்ரு யார் என்றால் இந்திரன். ஆதி காலத்தில் மலைகள் இறக்கைகளோடு பறந்து கொண்டிருந்தனவாம். இந்திரன்தான் வஜ்ராயுதத்தால் அந்த இறக்கைகளை வெட்டி மலைகளை இருந்த இடத்தோடு கிடக்கும்படிச் செய்தானாம். இப்படி நகரமுடியாமல் ஆனபிறகுதான் மலைக்கு அசலம், அகம், நகம் என்றெல்லாம் பேர் ஏற்பட்டது. 'சலம்'அல்லது 'கம்'என்றால் அசைவது, போவது. ஒரு வார்த்தைக்கு முன் 'அ'அல்லது 'ந'போட்டால் opposite meaning தரும் எதிர்சொல்லாகி விடும். அதனால் அசலம், அகம், நகம் என்றால் அசையாதது என்று பொருள் பட்டு மலையைக் குறிப்பதாகிறது. மலைகளின் இறக்கையை வெட்டின சத்ருவான இந்திரனுடைய குமாரன்தான் 'நகாரிஸ¨நு:'. குந்திக்கு இந்திரப் பிரஸாதத்தால் பிறந்தவனே அர்ஜுனன்.

"ஏஷ அங்கனா வேஷதர:கிரீடி"என்பதற்கு மேலெழுந்தவாரியாகப் பார்த்து, 'கிரீடம் வைத்துக் கொண்டிருக்கிற இந்தப் பெண் வேஷதாரி' என்று அர்த்தம்

சொன்னது சரியில்லை. 'கிரீடி' என்றால் பொதுப் படையாகக் கிரீடம் வைத்துக்கொண்டிருக்கும் எவரையும் குறிக்கும் common noun -ஆகக் கொள்ளக்கூடாது. அப்படிக் கொண்டால்தான் 'பிருஹந்நளை கிரீடமே வைத்துக் கொள்ளவில்லையே. எப்படி கிரீடி என்று சொல்லலாம்?'என்ற கேள்வி வருகிறது. அதனால் இங்கே 'கிரீடி'என்பதை ஒரு ஆசாமியை மட்டும் குறிப்பிடும் proper noun -ஆகக் கொள்ளவேண்டும். அர்ஜுனனக்குத்தான் 'கிரீடி'என்றே ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அவனுடைய வீரத்தை மெச்சி இந்திரனே முடிசூட்டிக் 'கிரீடி' என்ற டைட்டிலையும் கொடுத்தான்.

'கிரீடி'என்பதை அர்ஜுனன் என்று புரிந்து கொண்டுவிட்டால், அவன்தான் பெண்வேஷம் போட்டுக் கொண்டு விராட ராஜ குமாரனுக்கு ஸாரத்யம் செய்கிறவன், ஹநுமாரைக் கொடியாகக் கொண்டவன், அர்ஜுன விருக்ஷத்தின் பேர் படைத்தவன் பேர் படைத்தவன், மலைகளின் சிறகை வெட்டின இந்திரனுடைய புத்திரன் என்றெல்லாம் தெளிவாகி விடுகிறது.

கடைசியில் மட்டும் இன்னம் தெளிவாகவில்லை. 'ஜித்வா வயம் நேஷ்யதி சாத்ய காவ:'என்றுதானே கடைசியில் ஸ்லோகம் முடிகிறது?இதற்கு 'நாம் ஜயித்து, மேலும் இப்போது பசுக்கள் கொண்டு போகிறான்'என்று தாறுமாறாக அர்த்தம் ஏற்படுகிறது. இதையும் நன்றாக ஆலோசனை பண்ணி, ஸ்லோகத்தின் ஆரம்பத்தில் செய்தது போலவே வேறு தினுஸில் பத விபாகம் பண்ண வேண்டும். அதாவது 'ஜித்வா-வயம்-நேஷ்யதி-சாத்ய-காவ:' என்று வியாஸ்ர் சொன்னதை, "ஜித்வா- (அ) -வ-யம்-நேஷ்யதி சாத்யகா-வ:" என்று வேறு வேறு தினுஸாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இப்படிப் பண்ணிக்கொண்டால் ஏற்படுகிற அர்த்தம்: (கிரீடியான இந்த அர்ஜுனன்) 'ச அத்ய'- மேலும், இப்போது 'யம்'-எவனை, அதாவது துர்யோதனனை; 'ஜித்வா'- ஜயித்து;'வ:'- உங்களுடைய;"கா:"- பசுக்களை;'நேஷ்யதி'- ஒட்டிப் போகப் போகிறானோ;'தம்'- அவனை, அதாவது அந்த துர்யோதனனை ('யம்'- 'எவனை'என்று முதலில் வந்தால், பிற்பாடு 'தம்'- 'அவனை'என்று நாமாக வருவித்துக் கொள்ள இலக்கணம் இடம் கொடுக்கிறது.) 'அவ'- காப்பாற்றுங்கள்.

அதாவது ஸ்லோகத்தின் முழு ரூபத்துக்கும் ஏற்படுகிற அர்த்தம் என்னவென்றால் - த்ரோணாசாரியார் பீஷ்மாசார்யாரிடம் சொல்கிறார்:"கங்கா நதியின் புத்திரரே!ராவணனின் அசோகவனத்தை அழித்த ஆஞ்ஜநேய ஸ்வாமியைக் கொடியில் கொண்டவனும், அர்ஜுனமரப் பெயருள்ளவனும், மலையின் சத்ருவான இந்திரனுக்குப் புத்திரனும், vFg வேஷதாரியுமான இந்தக் கிரீடியாகிய அர்ஜுனன் இப்போது எந்த துர்யோதனனை மேலும் ஜயித்து நீங்கள் பிடித்துள்ள பசுக்களை மீட்டு ஓட்டிக் கொண்டு போக வந்திருக்கிறானோ, அந்த துரியோதனனை ரக்ஷியுங்கள்"- என்பதாகும்.

நாம் இத்தனை நாழி மண்டையை உடைத்துக் கொண்டாலே புரிகிற அர்த்தம் பீஷ்மருக்கு உடனே புரிந்து விட்டது. ஏனென்றால் அவர் புத்திமான். நைஷ்டிக பிரம்ம சர்யத்தால் அவருக்கு அபார புத்தி தீக்ஷண்யம் இருந்தது. (பிள்ளையார், ஆஞ்ஜநேயர், பீஷ்மாசாரியார் என்று மூன்று சுத்த பிரம்மசாரிகளை நினைக்கிற புண்யம் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது.)

இந்த மாதிரி அநேக 'குட்டு'க்களை அநாயாஸமாக உடைத்துக்கொண்டே பாரதத்தை எழுதி பாரத தேசத்துக்கு உபகரித்தவர் விநாயகர். குட்டை உடைத்தவருக்கு நெற்றியில் குட்டிக்கொள்கிறோம்!

----

*'குட்டு' என்ற பதத்தின் விளக்கம் இப்பகுதி முதல் உரையான "பிள்ளையார் சுழி"யில் "எழுத்துப்பணியில் விநாயகர் தொடர்பு"என்ற உட்பிரிவில் காண்க

18.4-சிவசக்தியரே சிவ-விஷ்ணுக்களாக

இவ்வாறு பதம் பிரிப்பதில் எழுத்துக்களை வேறு தினுஸாகச் சேர்ப்பதிலேயே அர்த்தம் மாறுவதாக ஒன்று காளிதாஸன் ஸ்லோகத்தில் சொல்வதுண்டு. பிரஸித்தி பெற்ற "வாகர்த்தாவிவ" ஸ்லோகத்திலேயே இரண்டாவது அடியில் வேறு விதமாக ஸந்தி பிரித்துப் புது அர்த்தம் சொல்லப்படுகிறது.

'ரகு வம்ச'த்தில் மங்கள ஸ்லோகமாக (நூல் தொடக்கத்தில் கூறப்படும் கடவுள் வணக்கமாக) வருகிற இந்த ஸ்லோகம் போன தலைமுறையில் நூற்றில் தொண்ணூறு பேருக்குத் தெரிந்திருக்கும்.

*வாகர்தாவிவ ஸம்ப்ருக்தௌ வாகர்த - ப்ரதிபத்தயே ***
*ஜகத : பிதரௌ வந்தே பார்வதீ - பரமேச்வரௌ ****

'சொல்லும் பொருளும் போல் இணைந்திருப்பவர்களும், உலகங்களுக்கெல்லாம் தாய் தந்தையருமான பார்வதி-பரமேஸ்வரர்களைச் சொல் பொருள் ஆகியவை பற்றிய அறிவு உண்டாகும் பொருட்டு வணங்குகிறேன்'என்பது அர்த்தம்.

இதிலே முடிவில் வரும் 'பார்வதீ-பரமேஸ்வரௌ'என்பதைப் 'பார்வதீப-ரமேச்வரௌ'என்று வேறு விதமாகவும் பிரிப்பதுண்டு. இப்படிச்சொன்னால் 'பார்வதீ-பரமேஸ்வரர்களை வணங்குகிறேன்'என்பதற்குப் பதில் 'பார்வதீபதியான பரமேஸ்வரனையும் ரமாபதியான மஹா விஷ்ணுவையும் வணங்குகிறேன்'என்று அர்த்தம் மாறிவிடும். 'மாறிவிடும்'என்றால் முதலில் சொன்னது இல்லை என்று அர்த்தமில்லை. பார்வதி பரமேஸ்வரர்களையும் சொல்லி அதோடு மஹாலக்ஷ்மி-மஹாவிஷ்ணுக்களையும் சேர்த்துக் கொண்டதாகிவிடும். அதனால் அர்த்தம் 'மாறிவிட்டது'என்பதைவிடக் 'கூடிவிட்டது'என்பதே பொருத்தம்.

'ப'என்று சொன்னாலே 'பதி'தான். 'அதிபதி'என்பதை 'அதிப' (தமிழில் 'அதிபன்') என்றாலே போதும். 'ந்ருப' (நிருபன்) என்று ராஜாவைச் சொல்கிறோம். 'ந்ரு'என்றால் 'நர'. நரஸிம்ஹம் என்பதை ந்ருஸிம்ஹம் என்றும் சொல்வதுண்டு. நரபதிதான் 'ந்ருப'என்பவன். 'பார்வதீப'என்றால் பார்வதீபதியான ஈஸ்வரன். 'ரமேஸ்வர'என்றால் ரமைக்கு ஈசனாக, நாயகனாக இருக்கப்பட்ட விஷ்ணு. 'பார்வதீப-ரமேஸ்வரௌ'என்றால் 'சிவ-விஷ்ணுக்களை'என்று அர்த்தம்.

'பார்வதீ-பரமேஸ்வரௌ'என்று வைத்துக் கொண்டால் சிவ-சக்திகளைச் சொன்னதாகிறது. 'பார்வதீப-ரமேஸ்வரௌ'என்று அதையே ஒரு எழுத்து பின்னே தள்ளிப் பிரித்துக்கொண்டால் சிவ-விஷ்ணுக்களாகிவிடுகிறது.

இதிலே பெரிய தத்வம் இருக்கிறது. சக்தியேதான் புருஷ ரூபத்தில் இருக்கிற போது விஷ்ணு சிவம் எப்போதும் புருஷனாகச் சொல்லப்படும் நிர்குண வஸ்து. லோக வ்யவஹாரத்துக்காக அவர் ஸகுணமான சக்தியோடு சேர்ந்திருக்கும்போது சக்தி vFg ரூபத்தில் அம்பாளாக இருந்தால் அவளை இடது பாதியில் வைத்துக் கொண்டு அர்த்தநாரீஸ்வராக இருப்பார். அந்த ஸகுண சக்தியே புருஷ ரூபத்தில் விஷ்ணுவாயிருந்தாலும் அவரை அதே இடது பாதியாக வைத்துக்கொண்டு சங்கரநாராயணராக இருப்பார். விஷ்ணு அம்பாள் ஸ்தானத்தில் ஈஸ்வரனுக்குப் பத்தினியாக இருப்பவர். " **அரி அலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே** " என்று அப்பர் ஸ்வாமிகள் சொல்கிறார். ஆகையால் 'உலகத்தின் தாய் தந்தையான் சிவ-விஷ்ணுக்களை'என்று அர்த்தம் செய்து கொண்டால் அதில் தப்பேயில்லை. இவர்களைத் தாய் தந்தையாகக் கொண்டு பிறந்தவர்தான் சாஸ்தா*.

இதிலே இன்னொரு விசேஷம், மஹாவிஷ்ணு என்ன இருந்தாலும் புருஷ ரூபத்திலிருப்பதால் மஹாலக்ஷ்மியோடு சேர்த்து நினைத்தாலே மனஸுக்கு நிறைவு. ராமாநுஜ மதத்துக்கு "ஸ்ரீ வைஷ்ணவம்"என்று தாயாரான ஸ்ரீயை முதலிலும் அப்புறம் விஷ்ணுவையும் சொல்லியே பெயர் வைத்திருக்கிறது. ஈஸ்வரனையும் அம்பாளோடு சேர்த்து ஸாம்பமூர்த்தியாக நினைத்தால் தான் நிறைவு ஏற்படுகிறது. 'பார்வதீப-ரமேச்வரௌ'என்கிறபோது பார்வதி, ரமா இருவரும் வந்துவிடுகிறார்கள். ஆக ஆரம்பத்தில் நல்ல வாக்கு, நல்ல அர்த்தம் இவற்றைப் பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும்போதே பார்வதி ஸமேதரான ஈஸ்வரன், லக்ஷ்மி ஸமேதரான விஷ்ணு என்று இரண்டு ஜோடி திவ்ய தம்பதிகளையும் ஸ்மரித்து, நமஸ்கரிப்பதான பெரிய மங்களம் உண்டாகிறது. ஒரு எழுத்துக்கூட மாறாமல், பதச் சேர்க்கையில் மட்டும் ஒரு எழுத்தை இடம் தள்ளியதால் அர்த்தத்தில் இவ்வளவு பெரிய மாறுதல்;அல்லது கூடுதல்;அதாவது லாபம்!

பெரிய லாபம் சைவம், வைஷ்ணவம் என்று பேதமில்லாமல் அவை இரண்டையும் சொல்லையும் பொருளையும் போலப் பிரிக்க முடியாமல் சேர்த்து விடுவது!

----

* 'பிதரௌ'என்பது இரண்டு தந்தையர் என்றும் பொருள்படுவதாதலால் சிவன், விஷ்ணு இருவரையும் லோக பிதாக்கள் என்பதாகவும் கொள்ளலாம்.

18.5-"அறியாதவன்": வார்த்தை விளையாடல்

சைவ-வைஷ்ணவ ஸமரஸ பாவத்தில் தமிழ் தேசத்தில் சொல்கிற பாபுலர் வசனத்தில்கூட இப்படிச் சின்ன வார்த்தை விளையாட்டு செய்து பெரிய அர்த்த லாபத்தை உண்டாக்குவதுண்டு.

"அரியும் சிவனும் ஒண்ணு;அறியாதவன் வாயிலே மண்ணு; என்பது நம் எல்லோருக்கும் தெரிந்தது. இதிலே 'அறியாதவன்' என்பதில் வல்லின 'றி'யை இடையினமாக மாற்றி, 'அரியாதவன்' என்று சொல்வார்கள். 'ஹரி'யாகிய 'யாதவ' குலக் கண்ணன் என்று அர்த்தம். அவன் வாயிலே மண்ணைப் போட்டுக்கொண்டுவிட்டு யசோதைக்கு லோகம் முழுவதையும் காட்டினான் அல்லவா? அதைத்தான் ***''அரி யாதவன் வாயில் மண்ணு"*** என்பது.

"ஸரி. அரியும் சிவனும் ஒன்று என்று சொல்லிவிட்டு, இப்படி ஒன்று - இவர்களிலே ஹரி லோகம் முழுவதையும் காட்டினவன் என்று - எதற்காகச் சொல்லவேண்டும்?"

எதற்காகவா? இதிலேயும் பெரிய தத்வம் இருக்கிறது. ஒரே பிரம்மம்தான் ஹரி, சிவன் இரண்டு பேரும். அதனாலே அவர்கள் ஒன்றேதான். ஆனால் அந்த ஒரே பிரம்மத்தை நிர்குணம், ஸகுணம் என்று இரண்டு நிலைகளில் நாம் பாவிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்த இரண்டில் லோக வ்யவஹாரம் அடிப்பட்டுப்போன நிர்குணம்தான் சிவன். லோக வ்யவஹாரத்தை நடத்தும் ஸகுணமே ஹரி. மண்ணைத் தின்று லோகம் முழுவதையும் தன் வாயில் அடங்கியிருப்பதாக அவன் காட்டினபோது இந்த உண்மையைத்தான் உருவகப்படுத்தியிருக்கிறான். 'அரி யாதவன் வாயில் மண்ணு'என்று சொல்லி இதை ஞாபகப்படுத்திவிட்டால், முதல் வரியில் சொன்ன 'அரியும் சிவனும்'

என்பதில் விட்டுப்போன சிவன் நிர்குணம் என்பதையும் சொன்னதாகி விடுகிறது.

'றி'யை 'ரி'யாகக் கூட மாற்றாமல் 'அறியாதவன்'என்ற ஒற்றை வார்த்தையை 'அறி யாதவன்'என்று இரண்டாகப் பண்ணிக்கொண்டாலே போதும்!'அறி, யாதவன் வாயிலே மண்ணு'என்றாலே, 'அரியும் சிவனும் ஒண்ணானாலும் இவர்களில் யாதவனாக வந்து மண்ணைத் தின்னவன் ஸகுண ப்ரமம் என்று அறி; அதனால் இன்னொருவன் நிர்குணம் என்றும் அறி' என்று அர்த்தமாகிவிடும்.

18.6-ஓர் எழுத்தை எடுப்பதில் அர்த்த விநோதம்

ஒரே ஒரு எழுத்தை ஒரு ஸ்லோகத்தில் அது வருகிற இடங்களிலெல்லாம் எடுத்துவிடுவதால், நிந்தா ஸ்லோகமாக இருப்பது பெரிசாகப் புகழும் ஸ்தோத்ரமாக மாறி விடுகிறது.

"ஸீதா-ராவண ஸம்வாத ஜரீ" என்று சாமராஜ நகர் ராம சாஸ்த்ரி என்பவர் எழுதியிருக்கிறார். காசி சௌகம்பா ப்ரசுரத்தார் அச்சுப் போட்டிருக்கிறார்கள். அதில் பதினெட்டாவது ஸ்லோகம், ஸீதையும் ராவணனும் பேசிக் கொள்வதாக அமைந்திருக்கிறது ஸ்லோகம்.

ராவணன் ஸீதையிடம் ராமனை ஒரேயடியாக நிந்தித்து ஸ்லோக ரூபத்தில் திட்டுக்கிறான். அதற்கு பதிலாக ஸீதை,

" கல ! தம் அஸக்ருந்-மா ஸ்ப்ருச கிரா "

என்கிறாள். "போக்கிரியே! இப்படி அவரை உன் வார்த்தையால் திருப்பித் திருப்பித் தொடாதே!என்று அர்த்தம்;மேம்போக்கான அர்த்தம்.

'கல'- போக்கிரியே!'தம்'- அவரை; 'கிரா'- வார்த்தையால்; 'அஸக்ருத்'- திருப்பித் திருப்பி; 'மா ஸ்ப்ருச'- தொடாதே!

ராவணன் வாயால் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியைப் பற்றி பேசுவது அவரை எச்சிலால் தொடுகிறாற்போல் ஸீதாதேவிக்கு அபசாரமாகப்பட்டது போலிருக்கிறது!

இது மேம்போக்கான அர்த்தம் என்றால், உள்ளே பூந்து (புகுந்து) பார்த்தால் என்ன அர்த்தம்? அப்போது, 'தம்'என்றால் 'அவரை' என்று அர்த்தமில்லை. 'தம் கிரா'என்றால் 'த என்ற எழுத்துள்ள வார்த்தையால்'என்று அர்த்தம் ஏற்படும். "போக்கிரியே!" என்று ராவணனைக் கூப்பிட்டு, "திருப்பித் திருப்பி 'த'காரம் உள்ள வார்த்தையால் (ராமரைத்) தொடாதே" என்பதாகப் பொருள் உண்டாகும்*.

அவன் ராமனை என்னென்னவோ நிந்தித்தானே, அந்த வார்த்தைகளில் 'த' நிறைய வருகிறது. "அந்த 'த'வை யெல்லாம் எடுத்துப்போட்டு விடு. போட்டுவிட்டுப் படித்துப் பார்த்தாயானால் தெரியும்" என்று உள்ளார்த்தம்.

அவன் சொன்ன நிந்தா ஸ்லோகம் என்ன?அதில் வருகிற 'த'காரத்தையெல்லாம் நீக்கிவிட்டால் அதன் அர்த்தம் என்னவாகும்?

அதல்பம் நித்ராளு : ரஜநிஷு குவாக் துர்கததம :
மஹா காதர்யாட்யோ மநஸி விதுத-ப்ரோஜ்வலயசா
வதாந் மாம்ஸாதாநாம் பஹு விமதலாபௌ ஜனகஜே
கதம் ஸ்லோக்யோ ராம :

என்பது ராவணன் சொன்னது.

இதில் கடைசி வரியிலேயே ஸீதை சொன்ன பதிலும் சேர்ந்து, அது முழு வரியாகி ஸ்லோகம் பூர்த்தி அடைகிறது.

கதம் ஸ்லோக்யோ ராம : கல தம் அஸக்ருந் மா ஸ்ப்ருச கிரா **

ராவணன் சொன்னதற்கு என்ன அர்த்தமென்றால் :"ஏ ஜனக புத்ரியே!ராமன் ராத்ரியில் படுத்துக் கொள்கிறானே, அவனுக்கென்று ஒரு படுக்கை உண்டா? (பெரிய திண்டுகள் போட்டுக்கொண்டு ஏக போக்யங்களோடு காமுகனான ராவணன் சயனம் செய்ததை ஸுந்தர காண்டத்தில் வர்ணித்திருக்கிறது. ஸ்ரீராமரோ இந்த ஸமயத்தில் தபஸ்வியைப் போல ஜடாமுகடதாரியாக

காட்டில் கட்டாந்தரையில் சயனம் செய்து வந்தார். அதைத்தான், 'ஒரு படுக்கைக்குக்கூட வக்கில்லாதவன்' என்று இடித்துக் காட்டுகிறான்.) ராமனுக்கு நல்ல வார்த்தை பேசவராது. (இவனிடம் சரணாகதி பண்ணி ஸமாதானமாகப் பேசி தூது அனுப்பாததால் இப்படிச் சொன்னான் போலிருக்கிறது! அல்லது இவனுக்கு நல்ல வார்த்தை பேசத் தெரியாததால் தர்மங்களையே ஸதாவும் பரம அன்போடு பேசிக்கொண்டிருப்பவரை இப்படித் தூற்றியிருப்பான்.) ராமன் தீன நிலையில் ரொம்ப ரொம்பக் கீழே போய்விட்டான். (பரதன் அர்ப்பணம் செய்த ஸாம்ராஜ்யத்தை வேண்டாமென்று தள்ளிவிட்டு, தானாகவே ஸத்யத்துக்காக வனவாஸத்தை மேற்கொண்டவரை, மனநிலையில் எப்போதும் ராஜாவாக இருந்தவரை இப்படிச் சொன்னான்.) ராமன் மஹா பயந்தாங்கொள்ளி. (இது முழுப் பொய்.) என்றைக்கோ ராஜ குமாரனாயிருந்தபோது அவனுக்குக் கொழுந்து விட்டெரிந்த கீர்த்தியெல்லாம் இப்போது போயே போய்விட்டது. ஏதோ சில ராக்ஷஸர்களை அசட்டுத்தனமாகக் கொன்று ஏகப்பட்ட விரோதிகளை ஸம்பாதித்துக் கொண்டுவிட்டான். இவன் எப்படி உயர்ந்தவனாவான்?"

'ராம:'- ராமன் ('ராம:'என்பது நாலாம் வரியில் வருகிறது.) 'ரஜநிஷ§ - இரவில்;'அதல்பம்'-படுக்கை (கூட) இல்லாமல்;'நித்ராளு:'- தூங்குகிறவன். 'குவாக்'- கெட்ட வாக்கே உள்ளவன். 'துர்கத தம:'- துர்த்தசையில் ஸ¨பர்லேடிவ் டிகிரிக்குப் போனவன்! 'மநஸி'- மனஸிலே;'மஹா காதர்யாட்ய:'- ரொம்பவும் கோழைத்தனம் மண்டிக்கிடக்கிறவன். 'விதுத ப்ரோஜ்வல யசா:'- பெரிசாகப் பிரகாசித்த புகழெல்லாம் போய் விட்டவன். 'மாம்ஸாதானாம்'- மாம்ஸ பக்ஷிணிகளான ராக்ஷஸர்களை;'வதான்'- கொன்றதால்;'பஹு§ விமத லாபௌ'- மாறுபட்ட மனமுடையவர்களை (சத்ருக்களை) மிகவும் அதிகமாக்கிக் கொண்டுவிட்டவன். (இப்படிப்பட்டவன்) 'கதம்'- எப்படி; 'ச்லாக்ய:'- சிலாகிக்கத் தக்கவனாவான்?'ஜனகஜே'- ஜனக புத்ரியே! (என்று ஸீதையைக் கூப்பிடுகிறான்.)

இந்த ஸ்லோகத்தில் ராமனைப் பற்றி அவன் சொல்லும் முதல் மூன்று வரிகளில் வரும் 'த'வை எல்லாம் எடுத்துவிட்டுப் பார்க்கலாம். ஆரம்ப

'அதல்பம்' என்பது 'அல்பம்' என்றாகும், இப்படியே 'துர்கததம'வில் இரண்டு 'த'காரமும் போய் 'துர்கம'என்றாகும்.

அல்பம் நித்ராளு : ரஜநிஷ்ஜ குவாக் துர்கம :
மஹாகார்யாட்யோ மநஸி விது ப்ரோஜ்வல யசா :
வதான் மாம்ஸாதாநாம் பஹுஜவிமலபௌ.....

இதற்கு என்ன அர்த்தம்?"ராமர் ராத்ரியில் ரொம்பவும் ஸ்வல்பமாகவே தூங்குகிறவர். (லோகத்தில் திருட்டுப் புரட்டு இல்லாமல் ரக்ஷிக்க வேண்டிய ராஜ வம்சத்தினர் மிகவும் குறைவாகவே தூங்க வேண்டும் என்பது சாஸ்த்ர லக்ஷணம். தூக்கத்தை ஜயித்தாலேயே அர்ஜுனனுக்கு 'குடாகேசன்' என்று ஒரு பேர். 'குடாகம்' என்றால் தூக்கம், சோம்பேறித்தனம்.) கெட்டவார்த்தையால் அண்டவே முடியாதவர். (" நி சொன்ன நிந்தை மொழிக்கு அவர் எட்டாதவர்" என்று ஸீதை சொல்லாமல் சொல்கிறாள். அவன் 'குவாக்', 'துர்கதம' என்று இரண்டு வசவுகளைச் சொன்னான். இப்போது அது 'குவாக்-துர்கம' என்பதாக ஒரே பாராட்டு வார்த்தையாகிறது. 'கெட்ட வாக்கால் எட்ட முடியாதவர்' என்று அர்த்தம்.) பெரிய கார்யங்களைப் பற்றிய ஸங்கல்பங்கள் நிறைந்த மனமுள்ளவர். (இன்னாருக்கு சி¬க்ஷ,, இன்னாருக்கு ர¬க்ஷ, இப்படியிப்படி தர்மங்களை நிலை நிறுத்திக் காட்டணும் என்று லோகத்தையே தழுவுவதாக பகவதவதாரத்துக்கு உரிய பெரிய ஸங்கல்பங்களைக் கொண்டவர்.)

சந்திரன் எப்படி ஸகலர் மனஸையும் கண்ணையும் குளிரப் பண்ணிக் கொண்டு எங்கேயும் கீர்த்தியோடு இருக்கிறானோ அப்படியிருப்பவர். ராக்ஷஸர்களைக் கொன்றதால் ரொம்பவும் தூய்மையான பிரகாசத்தைப் பெற்றுவிட்டவர்"- இப்படி அர்த்தம் ஒரே ஸ்தோத்ரமாய் மாறிவிடுகிறது.

'ரஜநிஷ்ஜ அல்பம் நித்ராளு:'- இரவில் ஸ்வல்பமே தூங்குபவர். 'குவாக் துர்கம:'- கெட்ட வாக்கால் அண்டுதற்கரியவர். ***'மநஸி மஹா கார்யாட்ய:'-*** மனஸில் பெரிய கார்யங்கள் நிரம்பியிருப்பவர். 'விது ப்ரோஜ்வல யசா:'- சந்திரன்போல ஜ்வலிக்கின்ற புகழை உடையவர். ***'மாம்ஸாதாநாம் வதாந்'-***

ராக்ஷஸர்களை வதம் செய்ததால்;'பஹு விமலாபெள (பஹுவிமல ஆபெள) '- மிகவும் நிர்மலமான ப்ரகாசம் பெற்று விட்டவர். ('ஆபா'என்றால் ப்ரகாசம்.)

----

* ஸம்ஸ்க்ருதத்தில் 'த'விலேயே நான்கு வித ஒலிகள் இருப்பதில் முதலான 'த' மட்டும் இங்கு குறிப்பிடப்படுகிறது.

18.7-"கன்னம் அதிகம்"

ஒரு ஸ்லோகத்தில் வருகிற அத்தனை 'த'வையும் தட்டிவிடும்படி ஸீதை சொன்னாள். காளிதாஸனோ ஒரே ஒரு புள்ளியைத் தட்டிவிட்டே ஒரு ஸ்லோகத்தின் ரஸத்தை ஒரே தூக்காகத் தூக்கிவிட்டான்.

பவபூதி என்று ஏறக்குறைய காளிதாஸனுக்கு ஸமதையாக ஒரு மஹாகவி. அவனுடைய காலத்திலேயே இவரும் இருந்தார் என்றும், இந்த இரண்டு பேருக்கும் போட்டி, மூக்கறுபட்டது என்றெல்லாமும் கதைகள் இருக்கின்றன. நான் சொல்லப் போகிற கதை அப்படிப்பட்டதில்லை. ஒருவர் அபிப்ராயத்தை இன்னொருவர் கலந்தாலோசித்துத் தாம் எழுதியதைத் திருத்திக் கொண்டதாக இந்தக் கதை.

உத்தர ராமாயணத்தை "உத்தர ராம சரிதம்"என்று ஹ்ருதயத்தை கவ்விக்கொள்ளுகிற மாதிரி பவபூதி நாடகமாக எழுதி அந்தச் சுவடியைக் காளிதாஸனுடைய 'அப்ரூவ'லுக்காக எடுத்துக்கொண்டு போய்ப் படித்தார். காளிதாஸன் தனக்கு ப்ரியமான ஸ்த்ரீ தாம்பூலம் மடித்துக் கொடுக்க கொடுக்க அதை ருசி பார்த்துக்கொண்டே உத்தரராம சரிதத்தையும் ருசித்துக்கொண்டு போனான்.

அதிலே முதல் ஸீனில் ராமர் தண்டகாரண்யத்தில் ஸீதையோடு தாம் கழித்த ஆனந்தமான நாட்களைப் பற்றிய நினைவுகளைச் சொல்கிறார். அதனிடையில், "எப்படிப் பொழுது போச்சு என்றே எங்களுக்குத் தெரியாமல் ராத்ரி நேரம் இவ்வாறு பேச்சில் போய்விடும்"என்று வருகிறது.

" அவிதித-கத-யாமா ராத்ரிரேவம் வ்யரம்ஸீத் "

இந்த வரியை பவபூதி படித்தவுடன் காளிதாஸன் "சுன்னம் ஜாஸ்தி" என்றான். அவனுக்குத் தாம்பூலம் கொடுத்துக் கொண்டிருந்தவள், 'ஜாஸ்தி சுண்ணாம்பு வைத்துக் கொடுத்துவிட்டோம்; அதைத்தான் சொல்கிறார்' என்று நினைத்துக்கொண்டுவிட்டாள். அவளுக்கெதிரே தான் பவபூதிக்கு அட்வைஸ் பண்ணுவது மரியாதை இல்லை என்பதால் வேண்டுமென்றேதான் காளிதாஸன் இப்படி பூடகமாகச் சொன்னது. மேதையானதால் பவபூதிக்குப் புரிந்துவிட்டது. ஸுன்னம் என்றால் ஸைஃபர், அல்லது புள்ளி. 'ராத்ரிரேவம்'என்பதில் 'ம்'என்று உள்ள புள்ளியைத்தான் காளிதாஸன் ஜாஸ்தி என்று சொல்வதை அவர் புரிந்துகொண்டு*இந்த நுட்பமான கரெக்ஷனை ரொம்பவும் கொண்டாடி, ஸுன்னத்தை எடுத்தவிட்டு 'ராத்ரிரேவ'என்று மாறிவிட்டார். ***'ராத்ரிரேவம் வ்யரம்ஸீத்'*** என்றால் 'ராத்திரி இவ்வாறு போச்சு'. ***'ராத்ரி ரேவ வ்யரம்ஸீத்'*** என்றால் 'ராத்ரிதான் முடிந்தது' என்று அர்த்தம். அதாவது 'ஸீதையும் தானும் பேசுகிற பேச்சு அப்போதும் முடிந்திருக்காது; ராத்ரி மட்டுமே முடிந்திருக்கும்' என்று வ்யங்கியமாக (உள்ளுறை பொருளாக) ராமர் சொன்னதாக ஆகிவிடும்!

பவபூதியிடம் காளிதாஸன் 'அநுஸ்வாரம் ஜாஸ்தி'என்று சொன்னதாகப் பொதுவிலே சொல்வார்கள். அநுஸ்வராம் என்றால் 'ம்'. ஆனால் இப்படி வெளிப்படையாகச் சொன்னானென்பதைவிட இரண்டு அர்த்தம் தருமாறு 'ஸுன்னம் ஜாஸ்தி'என்று சிலர் சொல்லுகிற கதை அந்த இருவருடைய ஸ¨க்ஷ்ம ரஸனைக்கும் பொருத்தமாயிருக்கிறது.

இப்படிக் காளிதாஸன் சொல்லியிருந்தால் அவன் ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவனாயிருக்க வேண்டும். ஏனென்றால் தெலுங்கு பாஷையில்தான் 'ஸுன்னம்'என்று இந்த இரண்டு அர்த்தமும் கொடுக்கும்படியான வார்த்தை இருக்கிறது. இது ஒன்றை மாத்திரம் கொண்டு தெலுங்கன் என்று சொல்லக்கூடாதென்றால் இன்னொன்று சொல்கிறேன். 'ராமகிரி'என்ற இடத்திலிருந்துதான் காளிதாஸனின் 'மேக ஸந்தேச'காவ்யத்தில் வரும் யக்ஷன் மேகத்தை தூது அனுப்பினானென்று இருக்கிறது. **மத்ய ப்ரதேஷில்**

நாக்பூருக்குப் பக்கத்திலிருக்கிற ராம்டேக்தான் ராமகிரி என்று அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் ஆந்திராவிலும் நாகலாபுரம் தாண்டி ஒரு ராமகிரி இருக்கிறது.

----

* 'வம்'என்பது தேவநாகரி லிபியில் 'வ'என்ற எழுத்துக்குமேல் புள்ளி வைப்பதாகும். க்ரந்த லிபியில் 'ம்'என்பது ஸைஃபரைப் போலவே வட்டமாயிருப்பதாகும்.

18.8-மாலை மாற்றம்

விகடகவி', 'குடகு' முதலிய வார்த்தைகளை திருப்பிப் படித்தாலும், 'விகடகவி', 'குடகு' என்றே இருக்கும். 'மலையாளம்' என்பதை இங்கிலீஷில் Malayalam என்று எழுதினால் திருப்பிப் படித்தாலும் அதே ஸ்பெல்லிங் வரும். இப்படிப்பட்ட வார்த்தைகளை Palindrome என்கிறார்கள்.

காசியாத்திரை ஹிந்துவாகப் பிறந்தவர்களுக்கு முக்யமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு கயா ச்ராத்தம், த்ரிவேணி என்கிற ப்ரயாகையில் ஸ்நானம், பித்ரு கார்யம் எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. இதையும் பாலின்ட்ரோமாகச் சொல்வதுண்டு. காசிக்கு காசிகா என்றும் பெயர். இது பின்னிருந்து முன்னாகவும் 'காசிகா' தான். 'கயா ப்ரயாக' என்பதும் இப்படியே*1.

இப்படி ஒரு வார்த்தையைத் தலைகீழாகப் படிப்பதைப் பெரிய விளையாட்டாகப் பண்ணி காவ்ய ரஸத்தைப் பற்றியே ரஸமாக ஒரு ஸ்லோகம் இருப்பதாக ஒரு பண்டிதர் சொன்னார். 'ஸாக்ஷரா'என்றால் வெறுமே படிப்பறிவு மட்டுமுள்ளவர்கள் என்று அர்த்தம். அதாவது வறட்டு வறட்டு என்று நிறையப் படித்திருப்பார்கள். இலக்கியச் சுவையில் ஊறியிருக்க மாட்டார்கள். 'ஸரஸ'என்றால் இலக்கியச் சுவையில், காவ்ய ரஸத்தில் ஊறியவன் என்று அர்த்தம். ரஸம் அறிகிற பக்வ மனஸ்

இல்லாமலிருக்கிறவன் அந்தப் படிப்பு நெறியிலிருந்து மாறினால் குணம்கெட்ட ராக்ஷஸனாகி விடுவான்; ஆனால் ரஸிகனோ எப்படி வெளியிலே மாறினாலும் அவனுடைய உயர்ந்த ரஸிகத்தன்மை போகவே போகாது என்பது அந்த ஸ்லோகத்தின் தாத்பர்யம்

ஸாக்ஷரா, ஸரஸ என்ற வார்த்தைகளைத் திருப்பிப் போட்டே இந்த தாத்பர்யத்தை ஸ்லோகம் நிலைநாட்டிவிடுகிறது. 'ஸாக்ஷரா'வைத் திருப்பிப் படித்தால் 'ராக்ஷஸா'!'ஸரஸ'வோ திருப்பிப் படித்தாலும் 'ஸரஸ'வேதானே?

இப்படி இரண்டு பக்கமாகப் படித்தாலும் ஒரே போல வருவதை "கத ப்ரத்யாகதம்"என்கிறார்கள். மாகன் என்ற மஹாகவி ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தையாயில்லாமல் ஒரு பெரிய வாக்யமே இப்படிச் செய்திருக்கிறான். மஹாலக்ஷ்மி பகவானைப் பரம அன்போடு ஆலிங்கனம் செய்து கொள்வதைத் தெரிவிக்கும்படியான வாக்யம்: ***தம் ச்ரியா கநயாநஸ்தருசா ஸாரதயாதயா யாதயா தரஸா சாரு ஸ்தநயாநகயா ச்ரிதம்*** *2 ('சிசுபாலவதம்'- 19.88) .

திருஞானஸம்பந்தர் ஸாக்ஷ£த் பரதேவதையின் க்ஷீரத்தைப் பானம் பண்ணியதால் குழந்தையாக இருந்து கொண்டே எத்தனை விதமான செய்யுள் வகை உண்டோ அத்தனையிலும் வர்ஷிக்கிறாற்போலக் கொட்டினவர். பாலின்ட்ரோமாகவே முழுச் செய்யுள் செய்வதற்கு 'மாலை மாற்று'என்று பேர். மிகவும் கஷ்டமான இந்த 'மாலை மாற்று'வகையில் பதினோரு இரட்டை வரிச் செய்யுள்களை ஞான ஸம்பந்தர் அநுக்ரஹித்திருக்கிறார்.

படித்தால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கும். முதல் அடி இப்படி இருக்கிறது.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா
கடைசியிலிருந்து திருப்பிப் படியுங்கள்;அதுவே வரும்.

ஏதோ துளி அர்த்தம் பண்ணிப் பார்க்கலாம். முதலில் பதங்களைப் புரிகிறபடி பிரித்துக்கொள்ளலாம்.

யாம் ஆமா ? c ஆம் ஆம். மாயாழீ ! காமா ! காண்நாகா !
காணாகாமா ! காழீயா ! மாமாயா ! c மாமாயா !

'யாம் ஆமா?'என்றால் அற்ப மநுஷ்யர்களான எங்களால் எது பண்ணவும் முடியுமா என்று அர்த்தம். 'நி ஆம், ஆம்'என்றால் மஹாசக்தனான நி எதுவும் பண்ண முடியும், நிச்சயமாய் முடியும் என்று அர்த்தம். 'மாயாழீ'என்று பரமேஸ்வரனைக் கூப்பிடுகிறார். பெரிய யாழைக் கையிலே வைத்து வீணாதர தக்ஷிணாமூர்த்தியாக ஈஸ்வரன் மீட்டிக்கொண்டிருப்பதால் 'மாயாழீ'என்கிறார். அப்பரும் 'எம் இறை நல்வீணை வாசிக்கும்மே'என்று சொல்லியிருக்கிறார். 'காமா' என்பது 'பேரழகனே'என்று கூப்பிடுவது. 'காணாகா'அதாவது 'காண்நாகா'என்றால், 'காணும்படியாக நாகாபரணம் போட்டுக்கொண்டிருப்பவனே'என்று அர்த்தம். 'காணாகாமா'என்றால் 'காமனைக் கண் காணமுடியாதபடி எரித்துவிட்டவனே!''காழீயா'அதாவது 'சீர்காழியில் கோயில் கொண்டிருப்பவனே!'- அதுதான் ஸம்பந்தமூர்த்திகள் அவதாரம் பண்ணின ஸ்தலம். 'மாமாயா' என்றால் 'மஹாலக்ஷ்மீபதியான மாயா ஸ்வரூபமான விஷ்ணுவே'என்று அர்த்தம். தெய்வக் குழந்தையின் வாயாலேயே இங்கே சிவ-விஷ்ணு அபேதம் வருகிறது. அப்பர் ஸ்வாமிகளின் திருத்தாண்டகத்திலும் சிவபெருமானையே த்ரிமூர்த்தி ஸ்வரூபமாக ***"நாரணன் காண் நான்முகன் காண்*** "என்று வர்ணித்திருக்கிறது. கடைசியில் 'நி மாமாயா'என்று முடிகிறதே. இங்கே நி என்றால் 'you' இல்லை. 'நீ'என்றால் 'நீக்கு'என்று அர்த்தம். எதை?'மாமாயா'- 'மா'என்றால் 'பெரிய';'கனாந்த காரமான'என்றும் சொல்கிறார்கள். "ஒரே இருட்டாயுள்ள மாயையை நீக்கு"என்று பிரார்த்திக்கிறார்.

---

*1. தேவநாகரி, க்ரந்த LH ஆகிய வடமொழிக்கான எழுத்துக்களில் 'ப்ர'என்பது ஒரே எழுத்தாதலால் இப்படி வரும்.

*2. 'தம்', 'ச்ரி', 'ஸ்த'என்பவை ஒரே அக்ஷரமாக வடமொழியிலிருப்பதால், இதைத் திருப்பிப் படித்தாலும் நேராகப் படிக்கும் வாசகமே வரும்.

18.9-ஒரே எழுத்தாலான ச்லோகம்

இங்கே யா, மா, நி, j, கா, ணா என்ற ஆறே எழுத்துக்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் செய்யுள் செய்திருக்கிறது.

'சப்த சித்ர காவ்யம்'என்பதாக இப்படி சில அக்ஷரங்களை வைத்துக்கொண்டே சப்த ஜாலம் பண்ணுவதில் ஒன்று ஸம்ஸ்கிருதத்தில் சொல்கிறேன்.

மித்ராத்ரிபுத்ர நேத்ராய த்ரயீசாத்ரவ சத்ரவே -
கோத்ராரி காத்ர-ஜத்ராய கோத்ராத்ரே தே நமோ நம : **
இது ஈஸ்வரன், விஷ்ணு இருவருக்கும் பொருந்துமாறு செய்த ஸ்லோகம்.

'மித்ர அத்ரி புத்ர நேத்ர' என்றால் மித்ரன் என்ற ஸ¨ர்யனையும், அத்ரி புத்ரனான சந்திரனையும் இரு கண்களாகக் கொண்டவன். சிவன், விஷ்ணு இரண்டு பேரையுமே இவ்விதம் ஸ¨ர்ய-சந்திரர்களை நேத்ரமாகக் கொண்டவர்களென்று சொல்வதுண்டு. ***'த்ரயீ சாத்ரவ சத்ரு'*** என்றால் வேத சத்ருக்களான அஸுரர்களின் சத்ரு. இதுவும் இருவருக்கும் பொருந்துவதே. ***'கோத்ராரி கோத்ரஜ த்ர'*** என்றால் மலைகளுக்கு சத்ருவான இந்திரனுடைய குலத்தில் பிறந்த தேவர்களை ரக்ஷிப்பவர். சிவன் விஷ்ணு இருவரும் இந்த டெ·பனிஷனுக்கும் ஆன்ஸர் பண்ணுகிறார்கள். ***"கோத்ராத்ரே தே நமோ நம:"*** என்றால் "பசுவைப் பாலிக்கிற உனக்கு மறுபடி மறுபடி நமஸ்காரம்" என்று அர்த்தம். பசுபதியான பரமேஸ்வரன், கோபாலனான மஹாவிஷ்ணு இருவருந்தான் இவ்வாறு நமஸ்காரத்துக்குப் பாத்திரமாகிறார்கள்!

இதையெல்லாம் விட அர்த்தம் சொல்ல ரொம்பக் கடினமாக, ஒரே ஒரு எழுத்தை வைத்தே ஒரு ஸ்லோகம் 'சிசுபால வத'த்தில் மாகன் பண்ணியிருக்கிறான். ஸீதை 'த' (ta) வை எடுக்கச் சொன்னாளென்றால், இவன் 'த' (da) ஒன்றை வைத்தே முழு ஸ்லோகம் செய்திருக்கிறான். சொல்வதற்கே சிரிப்பாக இருக்கிறது!

தாததோ துத்ததுத்தாதீ தாதாதோ துததீததோ :*
துத்தாதம் தததே துத்தே ததாத தததோதத :**

கொடுக்கிறவர்களுக்குக் கிருஷ்ண பரமாத்மா தானும் அருளைக் கொடுக்கிறார்;கொடுக்கமால் கெடுக்கிறவர்களுக்குத் தானும் கொடுக்காமல் கெடுதலே செய்கிறார் என்பது தாத்பர்யம்.

18.10-கூட்டுவதும் குறைப்பதும்

பசுவின் வால் குச்சத்தில் நடுவிலிருந்து ஒவ்வொரு ரோமமாக எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்துக் கொண்டு வருகிறதோ அப்படி ஒரு வார்த்தை ஒவ்வொரு எழுத்தாகக் குறைந்துகொண்டே வருமாறு சித்ர கவிதை எழுதுவதுண்டு. பசு வாலை வைத்து இதற்கு 'கோபுச்ச யதி'என்று பெயர்.

முத்துஸ்வாமி தீக்ஷிதரும் கவிகளைப் போல இரண்டு மூன்று கீர்த்தனங்களில் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார். 'மாயே'என்ற தரங்கிணி ராக க்ருதியில் ***'ஸரஸகாயே, ரஸகாயே, ஸகாயே, அயே'*** என்று பிரயோகம் பண்ணியிருக்கிறார். 'ஸரஸகாயே' என்றால் 'அன்பும் அழகும் கொண்ட மேனியாளே'. 'ரஸகாயே' என்றால் (உபநிஷத் வாக்யப்படி) ரஸ ஸ்வரூபமாயிருப்பவுள். 'ஸகாயே' என்றால் அரூபமாய் மட்டுமில்லாமல் ரூபமும் கொண்டிருப்பவள். 'அயே' என்றால் குழந்தை அம்மாவைக் கூப்பிடுகிற மாதிரி பராசக்தியைச் செல்லமாகக் கூப்பிடுவது.

இதேபோல ஆனந்த பைரவியில் ***'த்யாகராஜ யோக வைபவம்'*** என்று ஆரம்பித்து, அடுத்ததாக இதிலே 'த்ய'வை த்யாகம் பண்ணி, ***'அகராஜ யோக வைபவம்'*** (அகராஜன் என்றால் மலையரசனான ஹிமோத்கிரி) , அதற்கப்புறம் 'ராஜயோக வைபவம்', 'யோக வைபவம்', 'வைபவம்', 'பவம்' (பவஸகாரத்திலிருந்து கடத்துவிக்கிறவனுக்கே 'பவன்' என்றும் ஒரு முக்யமான நாமா உண்டு) , 'வம் 'என்று முடிக்கிறார். 'வம்'என்றால் அம்ருத மயமாயிருப்பவன்.

இந்தப் பாட்டிலேயே அநுபல்லவியில் இதற்கு எதிர்வெட்டாக, ஒரு சின்ன வார்த்தையில் ஆரம்பித்து ஒவ்வொரு எழுத்தாகச் சேர்த்துக்கொண்டே

போகிறார். இதற்கு ***'ஸ்ரோதோவாஹம்'*** என்று பேர். சின்னதாக ஒரு ஓடை ஆரம்பித்து அதிலே ஒவ்வொன்றாகப் பல சின்னச் சின்ன நதிகள் சேர்ந்து அது பெரிசாகப் போவதுதான் 'ஸ்ரோதோவாஹம்'. தீக்ஷிதர் இப்படிச் செய்திருக்கிறார். 'சம்' (மங்களம் என்று அர்த்தம்) என்பதில் ஆரம்பித்து, 'ப்ரகாசம்', 'ஸ்வரூப ப்ரகாசம்' என்றிப்படியே 'சிவ சக்த்யாதி ஸகலதத்வ ஸ்வரூப ப்ரகாசம் 'என்கிற வரைக்கும் போயிருக்கிறார்*1.

பாமரன் ஒருவன்கூட "கவயாமி, வயாமி, யாமி" என்று கோபுச்ச யதியில் கவி பண்ணினதாகக் கதை இருக்கிறது.

போஜராஜா மஹாரஸிகனாக, கவிதை ஆர்வமுள்ளவனாக இருந்தான். அதனால் தன் ராஜதானியான தாரா (இப்போதைய தார்) நகரத்தில் கவி பண்ணத் தெரியாத ஒருத்தரும் இருக்கப்படாது, அவர்கள் கிராமத்துக்குப் போய்விட வேண்டும் என்று உத்தரவு போட்டான். ஸேவகர்களை விட்டு, தலைநகரிலே கவி பாடத் தெரியாமல் யார் இருந்தாலும் ராஜ ஸபைக்கு இழுத்துக்கொண்டு வரும்படி சொன்னான். அவர்கள் ஊர் பூரா தேடினதில் அத்தனை பேரும் கவி பாடிக் கொண்டிருந்தார்களாம். போஜனக்கிருந்த ஸரஸ்வதி ப்ரஸாதத்தால் அவனுடைய ராஜதானியில் இப்படி அவளுடைய விலாஸம் ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. எனவே கொடுமையாகத் தோன்றுவதான அப்படிப்பட்ட உத்தரவைப் போடவும் அவனுக்கு 'ரைட்' இருந்தது, ந்யாயம் இருந்தது என்று தெரிகிறது.

கடைசியில் தேடிப் பிடித்து, கவி பாடத் தெரியாமலிருந்த ஒருத்தனே ஒருத்தனான ஒரு சேணியனை - துணி நெய்கிறவனை - ஸபைக்கு இழுத்துக்கொண்டு போனார்கள்.

"உனக்குக் கவி பாட வராதா?" என்று போஜராஜன் அவனைக் கேட்டான்.

ராஜாவைப் பார்த்தான் சேணியன். ஸரஸ்வதி கடாக்ஷம் நர்த்தனம் பண்ணுகிற அந்த முகத்தைப் பார்த்தவுடனேயே சேணியனுக்குள்ளே கவித்வ சக்தி பாய்கிற மாதிரி இருந்தது. உடனே தன்னையறிமால்,

" காவ்யம் கரோமி நஹி சாருதரம் கரோமி
யத்நாத் கரோமி யதி சாருதரம் கரோமி "

என்று கவிதையாகவே பதில் சொல்ல ஆரம்பித்தான். அதாவது, "ஓ, கவி கட்டுகிறேனே! ஆனாலும் ரொம்ப நன்றாகக் கட்டுவேன் என்று சொல்ல முடியாது. ப்ரயத்தனம் பண்ணிப் பார்த்தேனேயானால் ரொம்ப அழகாகவே கூடக் கட்டினாலும் கட்டிவிடுவேன்" என்று சொன்னான்.

கவித்வ தாரை உள்ளே சுரக்க ஆரம்பித்துவிட்ட தென்றாலுங்கூட, முதல் முதலாகக் கவி பண்ணும்போது மிக உயர்வாகப் பண்ண முடியும். என்று சொல்லிக் கொண்டுவிடக்கூடாது. அதே ஸமயத்தில் எப்போதுமே ஏதோ ஸுமாராகத்தான் பண்ண முடியும் என்றும் விட்டுக் கொடுத்துவிடாமல் கான்ஃபிடன்ஸோடு, ராஜாவுக்கும் உத்ஸாஹம் தரும்படிச் சொல்ல வேண்டும் என்று இப்படி இரண்டு அடி சொன்னான். இதை நாலடி ஸ்லோகமாக முடிக்கவேண்டுமென்று அடுத்த இரண்டடியை ஆரம்பித்தவுடனேயே ப்ரதிபா சக்தி பொங்கிக் கொண்டு வந்தது. 'ஹை க்ளாஸ் பொயட்ரி'என்னும்படியாகவே அந்தப் பின்பாதி அமைந்துவிட்டது.

பூபால-மௌலி மணிரஞ்ஜித-பாதபீட
ஹே ஸாஹஸாங்க கவயாமி வயாமி யாமி **

என்று ப்ராஸம், கீஸம் போட்டுத் தடதடவென்று முடித்து விட்டான். "அநேக ராஜாக்களின் கிரீடங்களிலுள்ள ரத்னங்களின் ஒளியால் சிவப்பாகச் செய்யப்பட்ட பாத உடையவனே! (அதாவது இதர ராஜாக்கள் போஜனின் அடியில் தங்கள் முடி படக் கிடக்கிறார்களாம்! அந்த முடிகளிலுள்ள கிரீட ரத்னங்களால் அவனுடைய பாதபீடம் சிவப்பாகிவிட்டதாம்!) "ஸாஹஸச் செயல்களே ஸஹஜமாகிவிட்டவனே!நான் '**கவயாமி** :' கவி பாடுகிறேன் ' **வயாமி** ': நெசவு பண்ணுகிறேன். ('வயனம்'என்றால் நெய்வது; weaving என்பது இதே தாதுவில் உண்டானது தான்.) 'யாமி' :போய்விட்டு வருகிறேன்", என்று கிளம்பி விட்டான்.

'கவி பாடாவிட்டால் ராஜ தண்டனை கிடைத்திருக்கும். நல்லவேளை, ஏதோ அத்ருஷ்ட வசத்தால் பாடியாய்விட்டது. தண்டனைக்குத் தப்பினோம். இன்னம்

பாடச் சொன்னால் வருமோ வராதோ? அதனால் ஸம்மானத்துக்குக் காத்துக்கொண்டிருக்காமல் முதலில் திரும்பிப் போய்ச் சேருவோம்' என்றுதான் " **யாமி** - போறோம்பா"*2 என்று கிளம்பிவிட்டான்.

இங்கே 'கவயாமி வயாமி யாமி'என்பது கோபுச்சம்.

---

*1. 'ஸ்ரீவரலக்ஷ்மி'என்னும் ஸ்ரீராக க்ருதியிலும் 'ஸ்ரீ ஸாரஸபதே, ரஸபதே, ஸபதே, பதே'என்று கோபுச்ச யதியைக் கையாண்டிருக்கிறார்.

*2. அள்ளித்தரும் போஜனின் ஸம்மானமின்றியே செல்ல வேண்டியிருப்பதில் அந்தச் சேணியனுக்கு இருந்திருக்கக்கூடிய தாபம் அவ்வளவும் த்வனிக்க ஸ்ரீ பெரியவர்கள் இந்த "போறேம்பா" சொன்னதை இங்கே தெரிவிக்க முடியாவிட்டாலும் வார்த்தையிலாவது "போகிறேனப்பா"வைப் "போறேம்பா"வாகத் தருகிறோம்

18.11-இருபொருளில் ஒரே சொல்

ஒரே வார்த்தைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தமிருப்பதை வைத்துப் பலவிதமான ச்லேஷை (சிலேடை) கவிதைகள் பண்ணப்பட்டிருக்கின்றன.

நம்முடைய ஆசார்யாளே இப்படி ஒன்று செய்திருக்கிறார். பவானி என்ற வார்த்தை பெயர்ச் சொல்லாயிருக்கிறபோது அம்பாளின் பேர். அதே 'பவானி' என்பது வினைச்சொல்லாயும் இருக்கிறது. இங்கே 'பவானி' என்பதற்கு 'ஆகிறேன்'என்று அர்த்தம். இந்த இரண்டு அர்த்தங்களையும் வைத்து விளையாடி ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் "பவானி த்வம் தாஸே" என்று ஸ்லோகம் சொல்லியிருக்கிறார்*.

ஆசார்யாளையே அவருடை சிஷ்யரான தோடகர் "பவ ஏவ பவான்"என்று ஸ்துதிக்கிறார். இங்கே "பவான்"என்றால் "தாங்கள்", "பவ" என்றால் சிவபெருமான். "தாங்கள் சிவபெருமானே" என்று அர்த்தம்.

புதுக்கோட்டையில் பவாநி நாய்க் என்று ஒரு திவான் இருந்தார். மஹாராஷ்டிர ப்ராம்மணர். மிகவும் தர்ம சீலர். முக்யமாக வித்வான்களை விசேஷமாக ஆதரித்தவர். அவர் நடத்தின வித்வத் ஸதஸில் 'மன்னார்குடிப் பெரியவாள்'என்றே மரியாதையாகச் சொல்லப்பட்ட ராஜு சாஸ்த்ரிகள்கூடக் கலந்து கொண்டிருக்கிறார். 'சாடு' என்பதாகத் தனி மநுஷ்யர்களின் குணங்களைச் சிறப்பித்து ஸ்லோகங்கள் சொல்வதுண்டு. இம்மாதிரி பவாநி நாய்க்கை ஸ்தோத்ரிக்கும் ஒரு ஸ்லோகத்திலும் 'பவாநி'என்பதை noun -ஆகவும் verb -ஆகவும் இரண்டு அர்த்தத்தில் சொல்லியிருக்கிறது. "பவாநி உத்தம என்பதற்குப் பெரிதாக வ்யாகரண விதி செய்து ஸ்தாபிக்க வேண்டியதில்லை. இந்த பவாநியைப் பார்த்தாலே போதும்"என்று பொருள் தரும்படி அந்த ஸ்லோகம் இருக்கிறது.

தன்மை first person என்று ஒருத்தன் தன்னையே 'நான்'என்று சொல்வதை ஸம்ஸ்க்ருதத்தில் 'உத்தமபுருஷன்' என்பார்கள். 'நீ' என்கிற முன்னிலை, second person என்பதை 'மத்யம புருஷன்' என்பார்கள். 'அவன்' என்கிற படர்க்கை, third person -ஐ 'ப்ரதம புருஷன்' என்பது. உத்தம புருஷன் என்றால் உசந்த குணங்களுள்ளவனென்றும், மத்யம புருஷன் என்றால் ஸாமான்ய ஆஸாமியென்றும் இன்னொரு அர்த்தம் இருக்கிறதல்லவா? இதை வைத்து பண்ணியிருக்கிறது! "பவாநி" (ஆகிறேன்) என்பது 'உத்தம புருஷ'னான first person தானே?

இதேபோல இன்னொரு ஸ்லோகம்: வேங்கடராம சாஸ்த்ரி என்று நூற்றைம்பது வருஷத்துக்கு முந்தி வித்வான் இருந்தார். ஸாதாரணமாக (நான் சொல்வதைத் தப்பாக நினைக்கக் கூடாது) வித்வான்களென்றால் வாங்கிக் கொள்பவர்களாகத்தான் இருப்பார்களே தவிர கொடுப்பவர்களாக இருப்பதில்லை! பல பேரைப் பற்றிக் கேள்வியும் படுகிறோம் :"என்னவோ தான தர்மம் என்று ப்ரமாதமாக உபந்நியாஸம் செய்கிறார்! இப்படிப் பண்ணியே எவ்வளவோ பங்களா, டெபாஸிட் எல்லாம் சேர்த்துக் கொண்ட பிறகும், பிறத்தியாருக்குத்தான் உபதேசம் செய்கிறாரே தவிர, தான் ஒரு காசுகூட ஒரு தர்மத்துக்கும் கொசுக்கமாட்டேன் என்கிறாரே" என்று சொல்லுகிறார்கள். நம் காலத்தில் இதற்கு விதி விலக்காக இருந்த ஒரு சில

பேர்களில் தேதியூர் (ஸுப்ரஹ்மண்ய) சாஸ்திரிகளை முதலில் சொல்ல வேண்டும். இவர் மாதிரியே ஒரு எக்ஸெப்ஷனாக அந்த நாளில் வேங்கடராம சாஸ்திரிகள் இருந்திருக்கிறார்.

அவர் இருந்தது இருக்கட்டும். இப்போது கொஞ்சம் grammar சொல்லித் தருகிறேன். ' **தேஹி** ' என்ற வார்த்தை அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும். 'கொடு'என்று யாசிக்கிற வார்த்தை. ஸெகன்ட் பெர்ஸனாக உள்ள ஒருத்தரைப் பார்த்துக் கேட்பது 'தேஹி'. அதாவது இது மத்யம புருஷன். 'தத்', 'தா'என்பது இதற்கு 'ரூட்'. 'To give' என்று அர்த்தம். 'நி கொடு' என்பதற்கு 'தேஹி'. 'நான் கொடுக்கிறேன்' என்பதற்கு இதே ரூட்டிலிருந்து 'தத்யாம்' என்று சொல்ல வேண்டும். இது ஃபர்ஸ்ட் பெர்ஸன் என்கிற உத்தம புருஷன்.

வேங்கடராம சாஸ்திரிகள் மற்ற வித்வான்களுக்கும் பண்டிதர்களுக்கும் நிறைய ஸம்மானம் செய்து ஆதரித்தவர். அதனால் அவர்களில் ஒருவர் அவரைப் பற்றிப் புகழ்ந்து ஒரு ஸ்லோகம் செய்தார். அதிலே நான் மேலே சொன்ன 'க்ராமர்' ஸமாசாரங்களை ரஸமாகச் சேர்த்திருக்கிறார். என்ன சொல்கிறாரென்றால்: ஸரஸ்வதி இதுவரை ரொம்பவும் வ்யாகுலப்பட்டுக் கொண்டிருந்தாள் எதற்காக? 'தான் வெறும் ஸாதாரண மநுஷ்யர்களான மத்யம புருஷர்களையே ஆச்சரயிக்க வேண்டியிருக்கிறதே!' என்றுதான் வியாகுலப்பட்டுக் கொண்டிருந்தாளாம். வித்வான்களை ஸரஸ்வதி ஆச்ரயிப்பதாகவும், தனிகர்களை லக்ஷ்மி ஆச்ரயிப்பதாகவும் சொல்வது வழக்கம்." 'நடுத்தரப் பேர்வழிகளையே நாம் அடைய வேண்டியதாயி ருக்கிறதே" என்று இதுமட்டும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஸரஸ்வதி இப்போதுதான் கவலை போய் ஸந்தோஷம் அடைந்திருக்கிறாள். ஏனென்றால் இப்போது அவள் ஆச்சரயிருப்பவர்களில் வேங்கடராம சாஸ்த்ரிகள் என்ற உத்தம புருஷர் ஒருத்தர் இருக்கிறாரல்லவா?" என்று சொல்கிறார்.

'தேஹி, தேஹி, தேஹி' என்றே போய்க் கொண்டிருந்தவர்கள் மத்யம புருஷ வாக்யத்தைச் சொன்னவர்கள்; அப்படிப் போய்க்கொண்டிருந்த பண்டித ஸமூஹத்திலே வாரிக்கொடுப்பவராக, "நான் கொடுக்கிறேன்;

வாங்கிக்கொள்ள வாருங்கள்" என்று 'தத்யாம்' சொன்னவர் வேங்கடராம சாஸ்த்ரி. உத்தம புருஷ வாக்யத்தைச் சொன்னவர் இவர்தான்!

அவரவர் சொன்ன வார்த்தைக்கு 'க்ராமர்'படி இருக்கிற பேரே அவரவருடைய குணத்தையும் காட்டுவதாக இருக்கிறதென்பதை வைத்து இந்த ஸ்லோகம் சமத்காரமாகத் செய்யப்பட்டிருக்கிறது.

ஏதாவந்தமநேஹஸம் பகவதீ பாரத்யநைஷீதஹோ
யா தேஹீதி ப மத்யமேந புருஷேணாத்யந்தகிந்நா ஸதீ *
ஸ்ரீமத் வேங்கடராம நாமக ஸுதீ தௌரேய-மாஸாத்யஸா
தத்யாமித்யதுநோத்தமேந புருஷேணாநந்தமாவிந்ததி **
(ஏதாவந்தம் அநேஹஸம் பகவதீ பாரதி அநைஷீத் அஹோ
யா தேஹி இஹி மத்யமேந புருஷேண அத்யந்த கிந்நா ஸதீ*
ஸ்ரீமத் வேங்கட்ராம நாமக ஸுதீ தௌரேயம் ஆஸாத்யஸா
தத்யாம் இதி அதுநா உத்தமேந புருஷேண ஆநந்தம் ஆவிந்ததி**)

அஹோ - அய்யோ பாவம்! **ஏதாவந்தம் அநேஹஸம்** - இந்தக் காலம் வரையில்; **தேஹி இதி** - 'தேஹி' என்கிற; **மத்யமேந புருஷேண** - மத்யம புருஷர்களால்; **அத்யந்த கிந்நா ஸதீ** - ரொம்பவும் மனக்லேசம் கொண்டவளாகி; **பகவதீ பாரதி** - ஸரஸ்வதி தேவி; **அநைஷீத்** - தளர்ந்து depressed ஆகியிருந்தாள். (**நி** - என்பது ஒரு அபிப்ராயத்திற்கு அழுத்தம் கொடுக்கிற ஒற்றையெழுத்து வார்த்தை.) **அதுநா**- இப்போது; **ஸ்ரீமத் வேங்கடராம** - மரியாதைக்குகந்த வேங்கடராமர் என்னும்; **நாமக** - பெயர் கொண்ட; **ஸுதீ** - ஸத்வித்வானை; **தௌரேயம்** - (ஸரஸ்வதியானவள்) தன்னைத் தாங்கும் ஆச்ரயமாக; **ஆஸாத்யஸா** - அடைந்து; **தத்யாம் இதி** - 'தத்யாம்' என்கின்ற; **உத்தமேந புருஷேண** - உத்தம புருஷனால், **ஆநந்தம்** - ஆனந்தத்தை; **ஆவிந்ததி** - அநுபவிக்கிறாள்.

----

* விவரம் "தெய்வத்தின் குரல்"முதற்பகுதியில் "பவானித்வம்"என்ற உரையில் காண்க

18.12-த்ரிபுர ஸம்ஹார ச்லோகம்

நாலீகாஸநம் ஈஸ்வர : சிகரிணாம் தத்-கந்தரோத்தாயிநோ
*கந்தர்வா : புநர்-ஏதத்-அத்வ-பதிகௌ சக்ரே ச தத்-தாரக :**
பத்ரீ-தத்-ப்ரபு-வைரிணாம் பரிப்ரூடோ ஜீவா ச யஸ்யாபவத்
*ஜீவாந்தேவஸதாம் ரிபு-க்ஷய-விதௌ தேவாய தஸ்மை நம :***

இப்படியாகப் பரமேஸ்வராம்சமான அப்பைய தீக்ஷிதர் பரமேஸ்வரனின் த்ரிபுர ஸம்ஹாரத்தைப் பற்றி ஸ்லோகம் செய்திருக்கிறார்.

என்ன அர்த்தமென்றால்: "ஜீவாவின் சிஷ்யர்களுடைய விரோதிகளின் ஸம்ஹாரத்தின்போது எந்த தேவனுக்கு சிகரங்களின் ஈஸ்வரன் நாலீகாஸனமாகவும், அதன் (நாலீகாஸனத்தின்) கண்டத்திலிருந்து வெளிவந்தவை கந்தர்வர்களாகவும், அவர்களுடைய (கந்தர்வர்களுடைய) மார்க்கத்தில் செல்லும் இரண்டு யாத்ரிகர்கள் சக்ரமாகவும், அதை (சக்ரத்தை) தரிக்கிறவர் பத்ரீயாகவும், அந்த பத்ரீக்கு ப்ரபுவின் சத்ருக்களுடைய தலைவன் ஜீவாவாகவும் பயனாயிற்றோ அந்த தேவனுக்கு நமஸ்காரம்"இப்படி அர்த்தம்.

அர்த்தமாவது? ஒரு அர்த்தமும் ஆகவில்லையே?ஜீவாவாவது, நாலீகாஸனமாவது, பத்ரீயாவது!ஒன்றுக்கொன்று என்ன ஸம்பந்தம்? ஜீவா சிஷ்யர் ஸம்ஹாரத்தில் பத்ரீ சத்ருத் தலைவன் ஜீவாவாக ஆவதாவது?மஹாபெரியவராகச் சொல்லப்படும் அப்பைய தீக்ஷிதரா இப்படித் தலைகால் புரியாமல் பண்ணியிருக்கிறார்?

இரண்டு அர்த்தமுள்ளதாகப் பல வார்த்தைகள் இருக்கின்றன அல்லவா? இவற்றை உபயோகித்து வார்த்தை விளையாட்டுப் பண்ணுவதில் அப்பைய தீக்ஷிதர் ரொம்ப நெருடலாகச் செய்த ஸ்லோகமே இது. வேதாந்தத்துக்கு மூலப்ரமாணமாக இருக்கப்பட்ட 'ப்ரஹ்ம ஸ¨த்ர'த்தின் ஆரம்ப பாகத்துக்கு அவர் 'ந்யாய ரக்ஷ£மணி' என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார். அதிலே ' **தத்-ஹேது வ்யபதேசாச்ச** ' **(1.1.14)** என்று வரும் ஸ¨த்ர விரிவுரையிலே இந்த ஸ்லோகம் வருகிறது. எதற்காக என்பதைப்

புரியவைப்பது இப்போது அவசியமில்லை. 'ஏதோ ஒரு intellectual exercise இதிலும் குஷி இருக்கிறது'என்றுதானே சமத்கார ஸ்லோகங்களைப் பார்க்கிறோம்? அப்படிப்பட்டதான ஸ்லோகத்தைப் பற்றி மாத்திரம் சொல்கிறேன்.

இதில் ஒரு வார்த்தையை முதலில் பெயர்ச் சொல்லாகச் சொல்லியிருக்கும். உடனே 'அதன்', 'அதற்கு', என்கிறாற்போல relative pro noun , adjectival pro noun என்பதாகவெல்லாம் அதே வார்த்தையைப் பற்றி 'தத்', 'ஏதத்'என்று மறுபடி வரும். இப்படி மறுபடி அந்த வார்த்தை வரும்போது, வார்த்தை அதுவேதான் என்றாலும் அர்த்தம் வேறாக இருக்கும்.

இப்படி ஐந்து வார்த்தைகளை இரண்டு அர்த்தத்தில் இந்த ஸ்லோகத்தில் சொல்லியிருக்கிறது. 'நாலீகாஸநம்' என்பது ஒன்று. நாலீகம் என்றால் பாணம், தாமரை என்று இரண்டு அர்த்தம். அதனால் பாணத்தை வைத்து இழுக்கிற ஆஸனமாயுள்ள தநுஸுக்கு நாலீகாஸநம் என்று பேர். தாமரையில் உட்கார்ந்திருக்கும் பிரம்மாவுக்கும் நாலீகாஸநர் என்று பேர். 'கந்தர்வ'என்பது இரண்டாவது வார்த்தை. அதற்கு தேவ ஜாதியான கந்தர்வர் என்பதோடு, குதிரை என்றும் ஒரு அர்த்தம். 'சக்கரம்' என்பது மூன்றாவது வார்த்தை. அது தேர்ச் சக்கரத்தையும், இன்னொரு அர்த்தத்தில் விஷ்ணுவின் கையிலுள்ள சக்ராயுதத்தையும் குறிக்கும். நாலாவது வார்த்தை 'பத்ரீ' என்பது. இதற்கு பாணம் என்றும் பக்ஷி என்றும் இரண்டு அர்த்தம். இரண்டு அர்த்தமுள்ள ஐந்தாவது வார்த்தை 'ஜீவா'என்பது - நாண்கயிற்றுக்கு ஜீவா என்று பெயர்;தேவகுருவான ப்ருஹஸ்பதிக்கும் 'ஜீவ' என்று ஒரு பெயர்.

இரட்டை அர்த்த வார்த்தைகளைத் தவிர ஒற்றை அர்த்தமுள்ளதிலேயே புரியாததாயிருக்கிறவற்றைப் பார்ப்போம். சிகரங்களின் ஈஸ்வரன் என்பது மேரு பர்வதம். நர்லீகாஸனத்தின் கண்டத்திலிருந்து வெளிவந்தவை என்பது பிரம்மாவின் வாக்கிலிருந்து வந்த வேதங்கள். கந்தர்வர்களுடைய மார்க்கம் என்பது ஆகாச iF. அதிலே யாத்ரை பண்ணும் இருவர் ஸ¨ர்ய சந்திரர்கள். சக்ரத்தை தரிப்பவர் மஹா விஷ்ணு. பத்ரீக்கு ப்ரபு பக்ஷிகளின் ராஜனான கருடன். அந்த ப்ரபுவின் சத்ருக்கள் ஸர்ப்பங்கள். ஆகையால் சத்ருக்களின்

தலைவன் என்பது ஆதிசேஷனை, தமிழில் அர்த்தம் சொல்லும்போது முதலில் 'ஜீவாவின் சிஷ்யர்கள்'என்று சொன்னது ஸ்லோகத்தில் கடைசியில் வருகிறது. இது ப்ருஹஸ்பதியின் சீடர்களான தேவகணத்தைக் குறிக்கும். இவர்களுடைய விரோதிகளின் ஸம்ஹாரம் என்பது த்ரிபுரா ஸுரர்களின் ஸம்ஹாரத்தைத் தான்.

இந்த அர்த்தங்களை ஞாபகமாக மனஸில் வைத்துக்கொண்டு, இரண்டு அர்த்தமுள்ள ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றும் இரண்டு இடங்களில் வரும்போது முதலில் ஒரு அர்த்தத்தையும், மறுபடி வருகையில் இன்னொரு அர்த்தத்தையும் எடுத்துக் கொண்டால், இந்த puzzle பண்ணுகிற ஸ்லோகத்துக்கு 'மீனிங்' வரும். "ஜீவா என்கிற பிருஹஸ்பதியின் சீடர்களான தேவர்களின் சத்ருக்களான த்ரிபுரரின் ஸம்ஹாரத்திலே எந்த தேவனுக்கு (மஹாதேவன் என்கப்பட்ட பரமேஸ்வரனுக்கு) மேரு பர்வதம் நாலீகாஸனம் என்னும் வில்லாகவும், நாலீகாஸனர் என்ற பெயரையே கொண்ட பத்மாஸனரான பிரம்மாவின் கண்டத்திலிருந்து வந்த வேதங்கள் 'கந்தர்வ'என்று பொருள்படும் குதிரைகளாகவும், கந்தர்வ ஜாதியின் மார்க்கமான ஆகாசத்தில் செல்லும் இரு யாத்ரிகர்களான சந்த்ர-ஸ¨ர்யர்கள் தேர்ச் சக்ரமாகவும் சக்ராயுதபாணியான மஹாவிஷ்ணு பத்ரீ என்னும் பாணமாகவும், பத்ரீ என்றே பெயர் கொண்ட பக்ஷிகளின் ராஜாவான கருடனின் சத்ருக்களுக்குத் தலைவனான ஆதிசேஷன் ஜீவா என்னும் நாண்கயிறாகவும் பயனாயினவோ அந்த மஹாதேவனுக்கு நமஸ்காரம்."

அர்த்தமாகிவிட்டதல்லவா?த்ரிபுர ஸம்ஹாரத்திலே ஈஸ்வரனுடைய ரத சக்கரங்கள் ஸ¨ர்யனும் சந்தரனுமே!அந்த ரதத்தில் வேதங்களையே அச்வ ரூபத்தில் பூட்டியிருந்தது. ஈஸ்வரன் அப்போது மேரு பர்வதத்தை தநுஸாக்கி அதற்கு நாண்காயிறாக ஆதிசேஷனைப் பிடித்துக் கட்டி, ஸாக்ஷ£த் மஹாவிஷ்ணுவையே அம்பாகத் தொடுத்திருந்தார்.

இந்தப் புராண விஷயங்களை வேதாந்த வ்யாக்யான புஸ்தகத்தில் தர்க்க வ்யாகரண ரீதியாக தத்வத்தையும் வார்த்தையையும் விளக்கும் பொருட்டுச்

சமத்கார கவிதையாக தீக்ஷிதர் கொடுத்திருக்கிறார். கவிதை என்பது இத்தனை சாஸ்திரங்களையும் இணைத்து, அவற்றுக்குக் கைகொடுக்கிறது!

18.13-வேற்று பாஷைகளில் ஒரே சொற்றொடர்

ஒரு பாஷையில் இரண்டர்த்தம் த்வனிக்க ஒரு வார்த்தையைச் சொல்வதே 'இருசொல்லங்காரம்'என்கிறோம். மந்த்ர, தந்த்ர சாஸ்திரங்களில் மிகுந்த வ்யுத்பத்தியுடன் விளங்கியவரும், அம்பாளை நினைத்த மாத்திரத்தில் தர்சிக்கும் சக்தி பெற்றவரும், 'லலிதா ஸஹஸ்ர நாம'த்துக்கு அந்த ஸஹஸ்ர நாமம் உள்ளளவும் ப்ரகாசிக்கக் கூடிய பாஷ்யத்தை எழுதியவருமான பாஸ்கரராயர் இரண்டு வேறு பாஷைகளில் ஒரே சொற்றொடர் வெவ்வேறு பொருள் கொடுப்பதை வைத்து ஹாஸ்யமாக ஒரு கவிதை செய்திருக்கிறார். புதிர் போடுகிற மாதிரி நம்மையே விடை கேட்டிருக்கிறார்.

ந ஸ்யாத் சேத் இதி வாக்யஸ்ய
*கோ (அ) ர்த்த : கஸ்மிந் பிக : ப்ரம :**
ஆந்துரீ கீர்வாண பாஷாப்யாம்
*ஏகமேவோத்தரம் வத ***

"தெலுங்கு பாஷையில் 'இல்லையானால்' என்று அர்த்தம் கொடுக்கவேண்டும்; ஸம்ஸ்கிருதத்தில், 'எதனிடத்தில் குயில் என்ற பிரமை உண்டாகுமோ அது' என்று அர்த்தம் கொடுக்க வேண்டும்; இவ்வாறு இரண்டு பாஷைகளில் இரண்டு அர்த்தம் கொடுக்கக்கூடியதாகவுள்ள ஒரே வார்த்தையைச் சொல்லு"என்று ஸ்லோக ரூபமாகக் கேள்வி கேட்கிறார்.

நீங்களே யோசித்து பதில் சொல்லுங்கள் என்று நான் quiz நடத்தப் போவதில்லை!அதனால் நானே அவர் சொன்ன பதிலையும் சொல்லி விடுகிறேன்.

" **காகபோதே** " என்பதே பதில்

'இல்லாவிட்டால்', 'இல்லையானால்' என்பதற்குத் தெலுங்கிலே 'லேகபோதே', 'காகபோதே' என்று சொல்வார்கள்.

குயில் காக்காய்க் கூட்டிலே கொண்டு போய்த் தன் முட்டையை வைத்துவிடும்;காக்காய் அதைத் தன் முட்டை என்றே நினைத்துக் குஞ்சு பொரித்துவிடும். அந்தக் குஞ்சும் காக்காய்க் குஞ்சு போலத்தான் இருக்கும். அது சத்தம் போட ஆரம்பிக்கிறபோதுதான் வித்யாஸம் தெரியும். முட்டையை வைத்துவிட்டு வந்த குயில் அது பொரிந்ததா என்று பார்ப்பதற்காக அப்புறம் போய்ப் பார்க்கும். கூட்டிலே காக்காய் முட்டை, குயில் முட்டை இரண்டுந் தான் கலந்து பொரிந்து குஞ்சுகள் வெளிவந்திருக்கும். அதிலே எது காக்காய், எது குயில் என்று வித்யாஸமே தெரியாது. அதனால் குயில் காக்காய் குஞ்சையே தன்னுடையது என்று தப்பாக நினைத்துவிடும். இப்படித் தப்பாக நினைப்பதுதான் ப்ரமை என்பது.

'காக போதே' என்று ஸம்ஸ்க்ருதத்தில் சொன்னால் 'காக்காயின் குஞ்சிடத்தில்'என்று அர்த்தம். 'காகம்' என்றால் காகம், 'போதம்' என்றால் குஞ்சு.

"குயில் என்ற ப்ரமை எதனிடத்தில் உண்டாகும்?" என்று கேட்டால் இதற்குப் பதில் என்ன? "காக்காய்க் குஞ்சிடத்தில்" என்பதுதான். அதை ஸம்ஸ்க்ருதத்தில் சொன்னால் 'காகபோதே'. அந்த 'காகபோதே' என்ற வார்த்தைக்கே ஆந்த்ரா பாஷையில் 'இல்லாவிட்டால்' என்று அர்த்தம்.

18.14-ஏகாம்ரர் - எண்களில்

ரொம்ப விசித்ரமாய் கவி பாடுவதில் காளமேகப் புலவரைத் தமிழில் தலைமை ஸ்தானத்தில் வைத்திருக்கிறார்கள். "இம் என்பதற்கு முன்னே எழுநூறு எண்ணூறு என்று கவிதைகளைக் கொட்டிவிடுவேனாக்கும். நிறைய ஜலம் முட்டிக்கொண்டு கறுப்பாயிருக்கிற ஒரு காளமேகம் மழையைக் கொட்டுவதுபோலக் கவிதைகளை கொட்டுகிற காளமேகமாக்கும் நான்" என்று அவரே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நினைத்தே பார்க்கமுடியாதபடி நூதன நூதனமாக எதையாவது சொல்லி அந்தக் கருத்துக்கு இசைய இவர் கவிபாட வேண்டும் என்று மற்ற கவிகள் பந்தயம் வைத்திருக்கிறார்கள். கொஞ்சங்கூடச் சளைக்காமல் அத்தனை பந்தயத்திலும் அவர் ஜயித்திருக்கிறார்.

நமக்குக் இந்தக் காஞ்சீபுரம், இதிலே 'ஒரு மா'என்பதாக ஒரே ஒரு மாம்பழத்தைப் பழுக்கவிட்டுக் கொண்டிருக்கும் ஏகாம்ரம் (**ஏக** - ஒரு; **ஆம்ரம்** - மா) என்றால் கிட்டின உறவு மாதிரி. அதனால் அது ஸம்பந்தமாக ஒரு காளமேகக் கவிதை பார்க்கலாம்.

'ஒரே ஒரு மா' என்கிற போது அதைவிடக் குறைச்சலில்லை என்று ரொம்பச் சின்னதாக ஒரு நம்பரைச் சொன்னாற்போலிருக்கிறது. நான் சொல்லப் போகிற கவிதையிலோ எல்லாமே ஒன்றுக்கும் சின்ன நம்பர்களாக வரும்.

"ஒன்றைவிடச் சின்ன பின்னங்களாக முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்று இருக்கிற எண்ணிக்கைகளையெல்லாம் குறிப்பிட்டு ஏகாம்ரநாதர் ஸம்பந்தமாக ஒரு வெண்பா பண்ணிக் காட்டும்"என்று மற்ற கவிகள் சாலஞ்ஜ் செய்தார்கள்.

'ஆக கவித்வம்'என்பதாக உடனுக்குடன், கவி பாடும் வல்லமையை அகிலாண்டேச்வரியின் அநுக்ரஹத்தால் பெற்றருந்த காளமேகம் கொஞ்சங்கூட யோசிக்காமல் பாடிவிட்டார்

முக்காலும் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கால ரைக்கால்கண் (டு) அஞ்சாமுன் - விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரைஇன் றோது .

இதிலே முக்காலிருந்து, கீழரை வரை உள்ள எல்லா எண்களும் வந்துவிடுகின்றன. ஆனால் எல்லாம் வேறே அர்த்தத்தில்!

வ்ருத்தாப்யமும், யமபயமும், வியாதியும், சாவும் வருவதற்கு முன்பு, கச்சி ஏகம்பனை இப்போதிலிருந்தே ஸ்தோத்ரம் பண்ணு;'இன்று ஓது'என்பது வெண்பாவின் தாத்பர்யம்.

'முக்கலுக்கு ஏகா முன்'என்றால் இரண்டு காலோடு மூன்றாவது காலாகக் கழியைப் பிடித்துக் கொள்ளும் காலம் வருவதற்கு முந்தி என்று அர்த்தம். 'முன்னரையில் வீழா முன்' என்றால் 'முன்னுச்சி மயிரில் நரை ஏற்புவதற்கு முந்தி'. 'முன்னுரை' என்பதில் 'நரை', 'அரை' இரண்டும் வந்து விடுகின்றன. 'அக்காலரைக்கால் கண்டு' என்பதில் கால், அரைக்கால் இரண்டும் வருகின்றன. 'அந்தப் பொல்லாத காலனின் அடிச் சுவடியைக் கண்டு' என்பது இதற்கு அர்த்தம். 'யமன் வருகிற தடயத்தைப் பார்த்து பயப்படுவதற்கு முன்'என்று தொடர்ந்து போகிறது. வயோதிகத்தில் கபம், ச்லேஷ்மம் என்று விக்கலும் இருமலும் ஏற்படும். 'அதற்கு முன்'என்கிறார் - 'விக்கி இருமாமுன்'. இங்கே 'இருமா' என்ற எண்ணிக்கை வந்து விடுகிறது. மாகாணி என்பதும் ஒரு எண். காணிப் பரப்புக்கும் பெரிசாக ஊருக்கு வெளியிலே ருத்ரபூமி (மயானம்) என்று விட்டிருப்பார்கள். அதைத்தான் 'மாகாணி'என்று கவி சொல்கிறார்.

'மாகாணிக்கேகா முன்'ருத்ர பூமிக்குப் போய்ச் சேருவதற்கு முன்னாலே. 'ஒருமா'என்ற இலக்கத்தையே ஏக ஆம்ரமான ஒருமா ஆக்கிக் கொண்டு விடுகிறார். காஞ்சீபுரத்தில் இந்த ஒரு மாவின் கீழே வஸிக்கிறவரைத்தான் 'கச்சி ஒரு மாவின் கீழரை'என்கிறார். அவரை, இப்பவே பிடித்து ஸ்தோத்ரம் செய்:

"இனறோது".

ஏகத்துக்குக் கீழ்ப்பட்ட நம்பர்களால் ஏகாம்ரரைப் பற்றிய நினைப்பில் கொண்டு சேர்த்து விடுகிறார்!

18.15-கஞ்சி வரதர்

காஞ்சீபுரத்தில் வரதராஜா 'பேரருளாளப் பெருமாள்' என்று விசேஷமாக, விளங்கிக்கொண்டிருக்கிறார். அவரைப் பற்றி ப்ரஸித்தமாக இருசொல்லலங்கார ஹாஸ்யத் துணக்கு இருக்கிறது.

"கஞ்சி வரதப்பா!" என்று காஞ்சீபுர வரதராஜாவை நினைத்து, வியாதியில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஒருத்தர் வாய்விட்டு அரற்றினாராம்.

பக்கத்திலே ஒரு சாப்பாட்டு ராமன் இருந்தான். அவனுக்குக் கொஞ்ச நாளாக ஜ்வரம். டாக்டர், 'சாதம் சாப்பிடக்கூடாது. கஞ்சி வேண்டுமானால் கொஞ்சம் குடிக்கலாம்'என்று கண்டிப்புப் பண்ணியிருந்தார். "கஞ்சி எப்போ வரும்? எப்போ வரும்?" என்று அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

அதனாலே, பக்கத்திலே இருந்தவர், "கஞ்சி வரதப்பா" என்று சொன்னதை, "கஞ்சி வருகிறது அப்பா" என்று அவர் சொல்லுகிறாரென்று நினைத்து விட்டான். ஆள் யாரும் வரக்காணோமே என்பதால், "எங்கே வரதப்பா?" என்றானாம்!

18.16-கஞ்சி குடிக்காத காமாக்ஷி

காஞ்சீபுர மத்தியில் ராணியாக இருக்கிற அம்பாளையும் கஞ்சி ஸம்பந்தப்படுத்தி ஒரு இருசொல்லங்காரக் கவிதை இருக்கிறது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அதற்கு அர்த்தம் என்னவென்றால்: காமாக்ஷியம்பிகை கஞ்சி குடிக்க மாட்டாள். ஏதோ கம்பைப் பொங்கிச் சோறாகப் போட்டாலும் சாப்பிடமாட்டாள். காய்கறி, அவியல், கூட்டு, ஊறுகாய் என்று ஏதாவது வியஞ்ஜனங்களையாவது இஷ்டப்பட்டு சாப்பிடுவாளா என்றால் அதுவும் மாட்டாள். அஞ்சு தலை பாம்புக்கு (பாம்புக்கு மரியாதை கொடுத்து 'பாம்பார்' என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் செய்யுளில் 'அரவம்' என்றில்லாமல் 'அரவார்'என்று வருகிறது. இப்படிப்பட்ட ஐந்துதலைப் பாம்புக்கு அம்பாள்) ஆறாவது தலையாக மானஸிகமாக ஆகிறாளாம்!

கஞ்சி குடியாளே கம்பஞ்சோ றுண்ணாளே
வெஞ்சினங்க ளென்றும் விரும்பாளே - நெஞ்சுதனில்
அஞ்சுதலை யரவாருக் (கு) ஆறுதலை யாவாளே
கஞ்சமுகக் காமாட்சி காண்

கஞ்ச முகம் என்றால் தாமரைப் பூப்போலவுள்ள முகம். அம்பாள் முகம் அப்படி இருக்கிறது. கஞ்சி குடிக்காதவள், எதுவும் சாப்பிடாமல் கஞ்சத்தனமாயிருக்கிறாள் என்கிற மாதிரியும் த்வனிக்கிறது!

ஸரி, அம்பாளைப் பற்றி இப்படி ஏதோ அல்ப விஷயங்களைச் சொல்லி அப்புறம் ஆறுதலைப் பாம்பு என்று விஷமாக முடித்தால் என்ன அர்த்தம்?

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உங்களுக்கே புரிந்து விடும் - சிலதாவது.

'கஞ்சி குடியாள் 'என்றால் காஞ்சீபுரத்தில் குடி கொண்டிருப்பவள் என்று அர்த்தம். 'கம்பஞ்சோறு உண்ணாள்' என்றால் ஏகம்பன் என்றும் கம்பன் என்றும் சொல்லப்படும் ஏகாம்ரநாதனுக்கு நைவேத்யமாகிற சோற்றை உண்ணாதவள் என்று அர்த்தம். சிவாலயங்களில் முதலில் ஈஸ்வரனுக்கு நைவேத்யம் பண்ணிவிட்டு அப்புறம் அதையேதான் அவன் பிரஸாதமாக அம்பாள் முதலான மற்ற எல்லா தெய்வங்களுக்கும் நைவேத்யம் செய்வார்கள். மதுரையிலே மட்டும் மீனாக்ஷிக்கு முதலில் செய்துவிட்டு அப்புறந்தான் ஸுந்தரேஸ்வரர் உள்பட மற்ற எல்லோருக்கும்! காஞ்சிபுரத்திலே நூற்றெட்டு சிவலாயங்கள் இருந்தபோதிலும் ஒன்றிலாவது அம்பாள் ஸந்நதியில்லாமல், அந்தப் பராசக்தி எல்லா மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரப்ரஹ்ம ஸ்வரூபிணியாக காமாக்ஷி என்று தனிக்கோயிலில் வாஸம் செய்கிறாள்*. அங்கே அவளுக்கென்றே தயார் செய்கிற நைவேத்யம்தான் அவளுக்கு அர்ப்பணம் செய்யப்படுகிறது. ஏகாம்ரேச்வரர் நைவேத்யம் அவளுக்கு வருவதில்லை. இதனாலே அவள் "கம்பஞ்சோறுண்ணாளே!"

அவள் பரம ப்ரேமையே ஒரு ரூபமாக ஆனவள். நாம் பண்ணுகின்ற தப்புகளுக்கு, அபசாரங்களுக்கு நம் மேல் அவளுக்கு எத்தனையோ கோபம் கோபமாக வர வேண்டும். ஆனால் அவளுக்குக் கோபித்துக் கொள்வது என்றால் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை. 'வெஞ்சினங்கள் ஒன்றும் விரும்பாளே'என்றது இப்படி வெம்மையாக, அதாவது ரொம்ப உஷ்ணமாக, சினம் கொள்வதில் அவளுக்கு இஷ்டமே இல்லை என்று, அவளுடைய தயையை, க்ஷமையை (மன்னித்தருளும் மனப்பான்மையை) தெரிவிக்கிற

வாசகமாக ஆகிறது. ' **வ்யஞ்ஜனம்** ' என்பதை தமிழ்ப் பாட்டில் 'வெஞ்சினம்' என்று சொல்லலாம்.

அப்படிச் சொல்லும்போது, கஞ்சி காமாக்ஷிக்கு வியஞ்ஜனமில்லாமல் சுத்தான்னம் மட்டும் நிவேதிக்க வேண்டுமென்று இருக்கிற அபிப்பிராயத்தை இந்தப் பாட்டு சொல்லுவதாகவும் ஆகும். அரவார் என்றால் ஹரனான சிவனைச் சேர்ந்த அடியார் என்று அர்த்தம். சிவபெருமானுக்குத் ஐந்து முகங்கள் உண்டு. அதனால் அவர் 'அஞ்சுதலை அரன்' ஆகிறார். அவரை மனஸிலே வைத்து உபாஸிக்கிறவர்கள் 'நெஞ்சுதனில் அஞ்சுதலை யரவார்'. 'ஆறுதலையாவாள்' என்றால் 'ஆறுதலை அளிக்கிறவள்', "ஆறுதலாக இருப்பவள்" என்று அர்த்தம். நெஞ்சத்தில் ஈஸ்வரனை உபாஸிக்கிறவர்களுக்கு ஸம்ஸாரக் கஷ்டம் தெரியாமல் ஆறுதலாக இருப்பவள் அம்பாள்.

'நெஞ்சுதனில் அஞ்சுதலை அறிவார்க்கு'என்கிற பாடத்தை வைத்துக்கொண்டால் 'மனஸிலே பயத்தை உடையவருக்கு 'அம்பாள் அதைப் போக்கி ஆறுதல் தருகிறாள் என்று ஆகும். "அஞ்சுதலை"- அஞ்சுதல், அச்சப்படுதல் என்பதை.

----

* இதற்கான விருத்தாந்தத்தை "தெய்வத்தின் குரல்" முதற்பகுதியிலுள்ள "காமாக்ஷியின் சரிதை" என்ற உரையில் காண்க.

18.17-தாளும் கோளும்

காமாக்ஷி ஸகல கஷ்டத்தையும் நிவ்ருத்தி பண்ணிப் பரமானந்தத்தை அளிக்கிறவள். நமக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கு ஜ்யோதிஷ ரீதியில் நவக்ரஹங்களைத் தானே காரணமாகச் சொல்கிறார்கள்? இந்த நவக்ரஹ பாதிப்பு எதுவும் அவள் பாதத்தை ஸ்மரிக்கிறவருக்கு ஏற்படாது என்று பொருள் படுமாறு 'மூக பஞ்சசதி'யில் வார்த்தை விளையாட்டுப் பண்ணி ஒரு ஸ்லோகம் இருக்கிறது.

"மூக பஞ்சசதி" என்பது ஞானம், பக்தி, சாக்த சாஸ்த்ர தத்வங்கள், காவ்ய ரஸம் எல்லாம் சேர்ந்ததாகக் காமாக்ஷியைப் பற்றி மூகர் என்பவர் அநுக்ரஹித்துள்ள ஐநூறு ஸ்லோகம் கொண்ட ஸ்தோத்ரம். இவற்றிலொன்று தான் நவக்ரஹங்களில் ஒவ்வொன்றின் தன்மையும் அம்பாளின் சரணாவிந்தத்தில் இருப்பதாகச் சொல்லும் ஸ்லோகம்.

ததாநோ பாஸ்வத்தாம் அம்ருதநிலயோ லோஹிதவபு:
*விநம்ராணாம் ஸௌம்யோ குருரபி கவித்வம் ச கலயந் **
கதௌ மந்தோ கங்காதர-மஹிஷி காமாக்ஷி பஜதாம்
*தம: கேதுர்-மாத: ஸ்தவ சரணபத்மோ விஜயதே ***
(பாதாரவிந்த சதகம்-59)

ப்ரகாசிப்பதாலே 'பாஸ்வத்தாம்'என்று அந்தப் பாதத்தைச் சொல்கிறார். நவக்ரஹங்களில் முதலில் வரும் ஸ¨ர்யனின் தன்மை இதுதானே?'பாஸ்கரன்'என்றே அவனுக்கு ஒரு பேர். அம்பாள் சரணத்திலிருந்து அம்ருதம் கொட்டுகிறது. இதை 'அம்ருத நிலய:'- என்கிறார். யோகிகள் சிரஸின் உச்சியில் அவளுடைய பாத பத்மத்தின் அம்ருதம் பெருகுவதில் அப்படியே 'உச்சி குளிர்ந்து 'இருப்பார்க்ள். 'சரணாம்ருதம்' என்றே சொல்வது வழக்கம். இதேபோல அம்ருதம் பெருக்குகிற தன்மை சந்த்ரனுக்கு உண்டு. அதனால்தான் 'ஸுதாகரன்' என்று பெயர். 'லோஹிதவபு:'என்று ஸ்லோகத் இருப்பதற்கு 'சிவந்த ரூபமுள்ளது'என்று அர்த்தம். சிவப்பாயிருப்பதுதான் செவ்வாய். 'விநம்ராமாணாம் ஸௌம்ய:'- அந்தப் பாதத்திலே போய் நமஸ்காரம் பண்ணுகிறவர்களுக்கு அது ஸௌம்யமாயிருக்கிறது. மனஸுக்குப் பரமஹிதமாக, ம்ருதுவாக, சாந்தமாக இருப்பதெல்லாம் ஸௌம்யம். உக்ர தேவதை என்பதற்கு ஆப்போஸிட்டாக ஸௌம்ய தேவதை என்கிறோம். நேர் அர்த்தம் என்ன? 'ஸோம'என்ற சந்திரனிலிருந்து உண்டானதே 'ஸௌம்யம்'. நிலவு போலக் கோமளமாக, சாந்தமும் ஹிதமும் தருவதாக இருப்பதையெல்லாம் இதனால் ஸௌம்யம் என்கிறோம். ஸோமனுக்குப் புத்ரனாக உண்டானவன் புதன். அதனால் அவனுக்கு ஸௌம்யன் என்று பேர். அம்பாள் பாதம் 'குருரபி'- 'குரு:அபி' என்கிறார். 'குருவானதும்கூட' என்கிறார். குரு என்றால் குணவிசேஷத்தால் பெரியது

என்று அர்த்தம். அதோடுகூட அந்தப் பாதம் க்ஷணகாலம் பட்டுவிட்டால் திருவடி தீ¬க்ஷயினாலே ப்ரஹ்மஞானமே ஸித்தித்துவிடும். இப்படி ஞானம் தருவதாலும் அது குருவாயிருக்கிறது. குரு என்றால் வியாழன், குருவாரம் என்றே அந்தக் கிழமைக்குப் பேர். 'கவித்வம் ச கலயந்'- கவித்வத்தையும் அநுக்ரஹித்துவிடுகிறது அம்பாள் பாதம். அம்பாளுடைய பாத தீர்த்தம் மூகனையும் (ஊமையையும்) கூட மஹாகவியாக்கிவிடுகிறதென்று ஆசார்யாளே சொல்லியிருக்கிறார்*. இப்படி அவளருளால் அருட்கவியாகி, ஒரு காலத்தில் தாம் மூகனாயிருந்ததை லோகமெல்லாம் அறிய வேண்டுமென்பதால் 'மூகர்'என்றே பெயர் வைத்துக் கொண்டவர்தான் இந்த ஸ்லோகத்தைப் பண்ணியிருப்பவரே! நவக்ரஹங்களில் கவித்வகாரகன் வெள்ளிக்கிழமைக் சூரிய சுக்ரன்.

குரு என்று வெறுமே சொன்னால் எப்படி அது தேவகுருவான ப்ருஹஸ்பதியைத்தான் குறிக்குமோ அப்படியே 'கவி'என்று வெறுமே சொன்னால் அது அஸுர குருவான சுக்ராசாரியாரைத்தான் குறிப்பிடும். கவித்வ சக்தி அருளுவதால் அம்பாளின் பாதம் சுக்ரனாக இருக்கிறது. 'கதௌ மந்த:'மிக மெதுவான நடை உள்ளது அம்பாள் பாதம். 'மந்தன்'என்று சனிக்கு பேர். அது ரொம்ப மெதுவாக ஸஞ்சாரம் செய்யும் க்ரஹம். 'சனீச்வரன்'என்று சொல்வது தப்பு. மற்ற க்ரஹம் எதற்கும் இல்லாத 'ஈஸ்வர'ப் பட்டம் இதற்கு மட்டும் வருவதற்கு நியாயமில்லை. 'சனைச்சரன்'என்பதே சரியான வார்த்தை. 'சனை:'- மெதுவாக, 'சர'- ஸஞ்சரிப்பவன். அதைச் சுருக்கி சனி என்கிறோம். 'பஜதாம் தம:கேது:'- அம்பாள் பாதம் தன்னை பஜிக்கிறவர்களின் தமஸுக்கு உலை வைக்கும் தூமகேதுவாக இருக்கிறது. தமஸ் என்றால் இருட்டு. துக்கம், அஞ்ஞானமெல்லாம்தான் பெரிய இருட்டு. தமஸ் என்று ராஹ§வுக்கும் பெயர். கேது என்பது ஒன்பதாவது க்ரஹமென்று எல்லோருக்கும் தெரியும்.

ஸ்லோகத்தில் ராஹ§வின் தன்மை மாத்திரம் நேரே அம்பாள் பாதத்துக்கிருப்பதாகச் சொல்லாமல், ஆனாலும் 'தமஸ்'என்ற வார்த்தையை வைத்து, மற்ற எட்டு க்ரஹங்களையும் நேரே அந்தச் சரண ஸம்பந்தப் படுத்திச் சொல்லியிருக்கிறது.

----

* "ஸௌந்தர்ய லஹரி"-ஸ்லோ 98

18.18-கொசுவும் கேசவனும்

லோகத்திலே ஒரு விஷயம் பாக்கியில்லாமல் எல்லாவற்றையும் பற்றி இப்படி அநேக கவிதைகள் சமத்காரமாக இருக்கின்றன. பரமாத்மாவிலிருந்து ஆரம்பித்து ஒரு சின்னக் கொசுவரையில் எதைப்பற்றியும் அர்த்த சித்ரமாகவும் சப்த சித்ரமாகவும் கவிகள் விநோத விநோதமாகப் பண்ணியிருக்கிறார்கள்.

பரமாத்மா, கொசு இரண்டையும் குறிப்பிடுவதாகச் சிலேடை செய்துகூடக் கவி இருக்கிறது. ஒரு அர்த்தப்படி ஸாக்ஷ£த் மஹாவிஷ்ணுவைக் குறிக்கும்;இன்னொரு அர்த்தப்படி கொசுவைக் குறிப்பிடும்:

சக்ர-ப்ரமண-கரத்வாத்
குத்ருஷ்டிபிர்-தூரவர்ஜ்யமாநத்வாத் * *
ச்ருத்யந்த-கேலநத்வாத்
மசக த்வாமேவ மாதவம் மந்யே **

'***சக்ர ப்ரமண கரத்வாத்***'- சுற்றிக்கொண்டேயுள்ள சக்ரத்தைக் கொண்ட கரத்தை உடையவர் மஹாவிஷ்ணு. சக்கரவட்டமாகச் சுற்றும் காரியத்தை ஓயாமல் செய்வது கொசு. 'கர'என்பது விஷ்ணுவைக் குறிக்கும் போது 'கை'என்று பொருள்படும். கொசுவைக் குறிப்பிடும் 'செய்வது'என்று பொருள்படும்.

'***குத்ருஷ்டிபி : தூர வர்ஜ்யமாநத்வாத்***'- கெட்ட நோக்குடையவர்களால் நெருங்க முடியாமல் தூரத்தில் விலகியிருப்பவர் பகவான். 'குத்ருஷ்டிபி:'என்றால் 'கண் வலிக்காரர்களால்'என்றும் இன்னொரு அர்த்தம். கொசு என்றாலே கண்நோவுள்ளவர்கள் தூர ஓடி விடுவார்கள்.

'***ச்ருத்யந்த கேலநத்வாத்***'- '*ச்ருதி*' என்றால் வேதம். 'ச்ருத்யந்தம் 'என்றால் வேதாந்தமாகிற உபநிஷத். உபநிஷத்திலே பகவான் ஆனந்தமாக

விளையாடுகிறார். கொசுவைக் குறிப்பதாகக் கொள்ளும்போது, 'ச்ருதி'என்றால் காது. காதுநுனி 'ச்ருத்யந்தம்'. கொசு நம்முடைய காதோரத்தில் வந்து 'ஒய்ங்'என்று சப்தம் பண்ணிக் கொண்டு விளையாடி ஹிம்ஸை பண்ணுகிறது!

'மசக!த்வாம் ஏவ மாதவம் மந்யே'- 'ஏ கொசுவே!உன்னையே நான் மாதவனாக நினைக்கிறேன்' என்று முடிக்கிறார்.

'சக்ர ப்ரமணம் பண்ணுவது, குத்ருஷ்டிக்காரர்களை தூரப்போகப் பண்ணுவது, ச்ருச்யந்தத்தில் விளையாடுவது என்ற காரியங்களை நி செய்கிறபடியால், ஏ கொசுவே!உன்னையே மஹாவிஷ்ணுவாக நினைக்கிறேன் - **மசக** ! **த்வாமேவ மாதவம் மந்யே** !'

இப்போது இங்கேயும் கொசு பாட ஆரம்பித்து விட்டது. எல்லாருக்கும் தூக்கமும் வந்துவிட்டது. இது வரையில் வேடிக்கை கேட்டதில் இரண்டும் தெரியவில்லை. இப்போது தூங்க வேண்டும் என்று படுத்துக் கொண்டால் கொசு ஹிம்ஸைதான் தெரிய ஆரம்பிக்கும். அனந்த சயனமாகப் படுத்துக்கொண்டு தூங்குகிற பகவான்தான் அந்த கொசு ரூபத்தில் வந்து காதிலே ரீங்காரம் பண்ணுகிறார் என்று நினைத்துக்கொண்டால் கொஞ்சம் ஹிம்ஸையை மறக்கலாம். கொசுத் தொல்லையில் தூக்கம் வராவிட்டால் இந்த கவித்வ விசித்ரங்களை நினைத்துக் கொண்டு கொஞ்சம் நிம்மதி பண்ணிக் கொள்ளலாம்.

19-தெய்வ தத்வம் ; தெய்வங்கள்

19.1-ஈசனின்றி இயற்கை இயங்குமா?

இதோ நான் உட்கார்ந்து கொம்டிருக்கிற மணையைப் பார்ததவுடன் இதைப் பண்ணின ஒருத்தன் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறீர்கள். அதோ அங்கே, இதோ மரத்தால் ஆனதுதான் - 'ஆனது 'என்ன? மரத்திலிருந்தே விழுந்ததுதான் - ஒரு கிளை கிடக்கிறது. அதைப் பார்த்தவுடன் ஒரு தச்சன்

பண்ணியிருப்பதாக யாரும் நினைப்பதில்லை. ஏன்? இந்த மணையை ஒரு சீராக, ரெக்டாங்கிளாக (நீள் சதுரமாக) இழைத்திருக்கிறது. பூமியின் தூசு தும்பு படாதபடி, பூச்சி பொட்டு ஏறாதபடி இதிலே கீழே கட்டைகள் அடித்திருக்கிறது. இம்மாதிரி இதிலே ஒரு ஒழுங்கு ஏற்பட்டிருப்பதாலும், உட்கார உபயோகமாகணும் என்ற பர்பஸில் (நோக்கத்தில்) இந்த மணையில் இந்த ஒழுங்கை உண்டாக்கியிருப்பதாலும் இதற்கு ஒரு கர்த்தா இருக்கணும் என்று முடிவு செய்கிறோம். ஜடமான ஒரு மரப் dv தானாகத் தன்னை ரெக்டாங்கிளாக இழைத்துக் கொண்டு, கட்டை அடித்துக் கொண்டு மநுஷ்யாள் உட்காரணும் என்ற பர்பஸை ஃபுல்ஃபில் பண்ணும்படியாக (நோக்கத்தை நிறைவேற்றுவதாக) ரூபம் கொள்ள முடியாது என்பதால் புத்தியுள்ள ஒரு ஜீவன்தான் இதைச் செய்திருக்கணும் என்று தீர்மானிக்கிறோம்.

அங்கே கிடக்கிற கிளையோ முண்டும் முடிச்சுமாக இருக்கிறது. இந்த மணையில் இருக்கிற 'ஆர்டர்'அதில் இல்லை; அது எந்த பர்பஸையும் ஃபுல்ஃபில் பண்ணவுமில்லை. ஆகையால் அதிலே ஒரு ஜீவனின் புத்தி விலாஸத்தை நாம் நினைப்பதில்லை.

அந்த மரத்துக்கு அடியிலே மாவடு அது பாட்டுக்கு ஆர்டருமில்லாமல், பர்பஸுமில்லாமல் உதிர்ந்து கிடந்தால், யாரோ அதைக் கொட்டினதாக நாம் நினைப்பதில்லை. தானே விழுந்திருக்கிறது என்றே புரிந்து கொள்கிறோம். அதுவே, அந்த மாவடுவையந்யெல்லாம் அங்கே குவித்து வைத்திருந்தால், குவிப்பு என்ற ஆர்டரில் மாவடுக்களை அமைத்த ஒருவன் இருந்தாகணும்;அவன் அதை வீட்டுக்குக் கொண்டு போவது, அல்லது விலைக்கு விற்பது, அல்லது ஃப்ரீயாக விநியோகிப்பது என்ற ஏதோ ஒரு பர்பஸுக்காக குவித்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறோம்.

ஆர்டர் இல்லாமலேகூட பர்பஸ் இருப்பதுண்டு. ஒரு வீட்டில் துணிமணி, பாத்திரம், பண்டம், புஸ்தகம், கிஸ்தகம் எல்லாவற்றையும் வாரி இறைத்து ஒரே டிஸ்-ஆர்டராக இருந்தாலும் திருடி விட்டு ஓட்டம் பிடிக்க வேண்டும் என்ற பர்பஸுக்காகத் திருடர்கள் இப்படிப் பண்ணியிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்கிறோம்.

மொத்தத்தில் ஆர்டரோ, பர்பஸோ, இரண்டுமோ இருந்துவிட்டால் அது புத்தியுள்ள ஒரு ஜீவ சக்தி பண்ணின காரியம்;ஜடமே பண்ணிக் கொண்டதில்லை என்று 'இன்ஃபர்' (அநுமானம்) செய்கிறோம்.

இப்போது யாரும் பண்ணினதாகத் தோன்றாத அந்தக் கிளை, அதற்கு மூலமான தாவர வர்க்கம் பற்றிக் கொஞ்சம் ஆலோசிக்கலாம். முண்டும் முடிச்சுமாயிருக்கிற அந்தக் கிளைக்குள், நமக்குள் ரத்தக் குழாய் ஓடுகிற மாதிரி பூமிக்குள்ளிருந்து ஜலத்தை உறிந்து எடுத்துக்கொண்டு போகிற அதி நுட்பமான குழாய்கள் ஆச்சரியமான ஒழுங்கோடு, அதாவது ஆர்டரோடு, நேற்றைக்கு அது மரத்தில் அங்கமாயிருந்த வரையில் வேலை பண்ணிக் கொண்டிருந்தன - மரம் வளர வேண்டும் என்ற பர்பஸுக்காக! இந்த இரண்டு முடிச்சிலே ஸில்க் மாதிரி துளர் உண்டாகிறது. இலையில் ஓடுகிற நரம்புகளில் எத்தனையோ ஆர்டர்; அது 'க்ளோரோஃபில்' என்கிற பச்சையான ஜீவஸத்தை உண்டுபண்ணும் பர்பஸையும் ஸெர்வ் பண்ணுகிறது. முண்டு முடிச்சிலேதான் பரம மிருதுவான புஷ்பம் உண்டாகிறது.

தாவர வர்க்கத்தில் பூச்செடி, பழமரம் என்று இரண்டு சொல்கிறோம். பூச்செடி பழம் கொடுக்கமலிருக்கலாம். ஆனால் பழ மரத்துக்குப் பூ இல்லாமலில்லை - அத்தி, பலா மாதிரி அபூர்வமான வனஸ்பதி ஜாதி தவிர.

இந்த பூச்செடி, பழமரம் என்ற இரண்டும் எத்தனை ஸாமர்த்தியமாக தங்கள் தங்கள் இனத்தை விருத்தி பண்ணிக் கொள்கின்றன என்று பார்த்தால் ஆச்சர்யமாயிருக்கிறது. பூச்செடியில் அழகாகப் புஷ்பம் உண்டாகிறது. அதன் டிஸைன்களில் அலாதி ஆர்டர். அதுமட்டுமில்லை. பர்பஸும் இருக்கிறது. மநுஷ்யனின் ரஸிக உணர்ச்சியைப் பூர்த்தி செய்வதோடு செடிக்கே பயன் தருகிற பெரிய பர்பஸ்!இந்த அழகிலேதான் தேனீ வசீகரமாகி வந்து தேன் குடிக்கிறது. அதற்கு ஆஹாரம் கொடுக்கிற பர்பஸுக்குள்ளேயே ரஹஸ்யமாக, அதைவிடப் பெரியதான சொந்த பர்பஸும் ஃபுல்ஃபில் ஆகிறது. தேனீ செய்கிற மகரந்த பரிவர்த்தனையினால்தான் இந்தச் செடி இனவிருத்தி பெறுகிறது. இப்படி இதிலே ஜட வஸ்து பண்ணவே முடியாததான, ரொம்பவும் புத்திபூர்வமான 'ட்ரிக்' இருக்கிறது!

இன்னொரு வேடிக்கை கூட: ரொம்புவும் வர்ண விசித்திரமில்லாத பூவாகச் சிலது உண்டாகின்றன;அவை தேனீயை ஆகர்ஷணம் பண்ணுவதற்காக ஏகப்பட்ட வாஸனையை வைத்துக் கொண்டிருக்கின்றன. ஸுகந்தம் நிறைய இருக்கிற மல்லிகை, மகிழ், சம்பங்கி, மனோரஞ்சிதம் மாதிரிப் புஷ்பங்களில் கலர் விசித்திரம் இல்லை. கலர் விசித்திரம் நிறைய இருக்கும் கனகாம்பரம், துலுக்க சாமந்தி, காகிதப்பூ வகைகள் முதலியவற்றில் வாஸனை இல்லை. தேனீயை இழுக்க ஏதோ ஒரு ட்ரிக் போதும், இரண்டும் வேண்டாம் என்று இதிலே ஒரு எகானமி (சிக்கனம்) வேறே! (ரோஜா மட்டும் விதி விலக்கு.) ஜடவஸ்து இப்படியெல்லாம் கெட்டிக்கார ப்ளான் போட்டு அதன் பிரகாரம் பண்ண முடியுமா?

இன்னொரு வேடிக்கை கூட!நேச்சர், இயற்கை என்று சொல்வதில் நிறைய 'வெரைய்டி', தினுசு தினுசாகப் பார்க்க வேணடும் என்கிற காவிய புத்தி யதேஷ்டமாகத் தெரிகிறது. வாஸனைப் பூ கலர்ப்பூ வித்யாஸம் போலவே கார்த்தாலே பூக்கிறது, ராத்திரி பூ என்று ஒரு வித்யாஸம். இதிலே ராத்திரி பூக்கிறதுதான் அந்த வேளையில் கண்ணுக்குத் தெரியவேண்டுமே என்பதால் வெள்ளை வெளேரென்று மல்லிகை ஜாதிகள், பன்னீர்ப் பூ ராமபாணம் என்கிற நில சம்பங்கி இப்படி இருக்கின்றன!

ஒரு அணுவுக்குள் மத்ய ந்யூக்ளியஸைச் சுற்றிப் பரமாணுக்கள் பஹு§ வேகத்தில் ஓடிக் கொண்டிருப்பதிலிருந்து ஸ¨ர்யனைச் சுற்றி க்ரஹங்கள் ஓடுகிறவரை ஒவ்வொன்றும் மாறுதலில்லாமல் விதி ப்ரகாரம் நடப்பதைப் பார்க்கும்போது வெறும் ஜட சக்தியான ஒரு இயற்கையால்தான் இதெல்லாம் ஆகிறதென்று தோன்றிவிடுகிறது. ஆனால் இப்படி அணுவிலிருந்து அண்ட கோளங்கள் வரை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக, வெவ்வேறாகத்தானே விதிகள் ஏற்பட்டிருக்கின்றன? இப்படி எத்தனை வெரையட்டியான விதிகள்? அது மாத்திரமில்லை. ஒவ்வொரு வர்க்கத்திற்கும் ஒரே விதி என்று இருக்கும்போது கூட, அதற்குள்ளேயே விதி விலக்கு என்று ஒவ்வொன்று மாறுதலாகவும் இருந்து விடுகிறதே! த்ருஷ்டாந்தமாக இப்போது சொன்ன வ்ருக்ஷவர்க்கத்திலேயே ஒரு மாறுதலாகப் பூ இல்லாமல் காய்க்கிற வனஸ்பதி வகையும் இருக்கிறதே! இதையெல்லாம் ஆலோசிக்கும்போது

இயற்கை என்பது ஏதோ ஜட சக்தி இல்லையென்றும், ரஸ வைசித்ரியத்தில் குதூஹலிக்கிற ஜீவனுள்ள ஒரு மஹா பெரிய புத்தி சக்திதான் என்றும் தெரிகிற தோல்லியோ?.........

பழமரம், பூச்செடி என்று இரண்டு சொல்லி, பூச்செடி எத்தனை ஸாமர்த்தியமாக ஸந்ததியை விருத்தி பண்ணிக் கொள்கிறதென்று சொன்னேன். பழமரத்தில் மநுஷ்யனுக்கு ருசியான பழம் கிடைக்கிறது. இது ஒரு பர்பஸ். இதற்குள் திரிசமனாக இன்னொரு பர்பஸ். இதே மாதிரிப் பழம் பின் ஸந்ததிக்கும் கிடைக்க வேண்டும் என்ற நம்முடைய ஸ்வய ஸம்பந்த லாபத்துக்காகப் பழத்துக்குள் இருக்கிற கொட்டையை நடுகிறோம்; இதிலேயே அந்த மரம் தன் ஸந்ததியை விருத்தி பண்ணிக் கொள்கிற அதன் ஸ்வய லாபமான பெரிய பர்பஸும் ஃபுல்ஃபில் ஆகிறது.

இப்படி ஆலோசித்துப் பார்த்ததில் என்ன தெரிகிறது? "ஜடவஸ்து தானாக order -ஐ (ஒழுங்கை) purpose -ஐ (நோக்கத்தை) ஏற்படுத்திக்கொள்ள முடியாது; அதனால் மரத்தை மணையாகப் பண்ண ஒரு தச்சன் இருக்க வேண்டும்"என்ற நம்முடைய premises -ன் (அடிப்படைக் கொள்கையின்) படியே, அந்த மரத்தைப் பண்ணவும் ஒரு மஹா பெரிய தச்சன் இருந்தாக வேண்டும் என்று தெரிகிறது!நாம்பண்ணுவதைவிட இன்னும் பெரிய ஆர்டரோடு, இன்னம் பெரிய பர்பஸ்களுக்காக இந்த மரம் இருக்கிறதால், நம்மைவிட மஹா கெட்டிக்காரனான தச்சன் அவன் என்றும் தெரிகிறது!நாம் செய்கிறதையெல்லாம் அப்பட்டமாகக் காட்டி, டெமான்ஸ்ட்ரேட் பண்ணுகிறோமென்றால் நம்மைவிடப் பரமாத்புதங்களைப் பண்ணும் அவனோ இத்தனையையும் பரம ரஹஸ்யமாகப் பண்ணித் தன்னுடைய ஸூக்ஷ்மமான ரஸாநுபவத்தைக் காட்டுவதோடு, பண்ணுகிற தன்னையே ஒளித்துக் கொண்டு நம்முடைய கெட்டிக்காரத்தனத்தையெல்லாம் அசட்டுத்தனமாக்கி விடுகிறான்!

மநுஷ்யன் தின்னாத வேப்பம் பழம் என்றால் அதைத் தின்ன ஒரு காக்கா ஜாதியை அதோடு பிணைக்கிறான். அந்த காக்கா மநுஷ்யனைப் போலக் கொட்டையை நட்டு அந்த விருக்ஷத்தின் இன விருத்தியை செய்யாது என்பதால் அது எச்சமிட்டே கொட்டை வேறே இடத்தில் (இந்த மரத்தின்

நிழலில் வாடாமலிருப்பதற்காக வேறே இடத்தில்) முளைக்கும்படிப் பண்ணுகிறான்.

நாம் வெளியே விடுகிற கார்பன்-டை-ஆக்ஸைடை மரம் உள்ளே இழுத்துக் கொள்வது; அது பதிலுக்குத் தருகிற தித்திப்புப் பழத்தை நாம் சாப்பிடுவது; அதையே நாம் எருவாக மாற்றி மறுபடி அதற்குத் தருவது என்றிப்படி பல இனங்களை, ஜீவ-சடங்களை, ஒன்றுக் கொன்று உபயோகமாகக் கோத்துக் கோத்து வைத்திருக்கிறான்.

இப்படியே எண்ணி முடியாத மர வர்க்கங்கள், மலைகள், ஸமுத்ரங்கள், லோகங்கள், நக்ஷத்ரங்கள், க்ரஹங்கள் எல்லாமும் அத்யாச்சரியமான ஒழுங்கோடு ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து ஏராளமான உத்தேசங்களைப் பூர்த்தி பண்ணிக் கொண்டிருப்பதை நினைத்துப் பார்த்தால், இயற்கை, இயற்கை என்று ஜடமாகச் சொல்லப்படுவது ஜீவ சைதன்யமான ஈஸ்வர லீலைதான் என்று எப்படித் தெரியமால் போகும்?

19.2-நவநீத கிருஷ்ணன்; வடபத்ரசாயி

நவநீதம்' என்றால் புதுசாக எடுத்தது என்று அர்த்தம். 'நவ'-புதுசாக; 'நீதம்'-எடுக்கப்பட்டது. புத்தம் புதுசாகக் கார்த்தால வேளையில் பசும் பாலில் உறை குத்தி ஸாயங்காலமே அந்தத் தயிரைச் சிலுப்பி எடுக்கிற வெண்ணெய்தான் நவநீதம். முதல் நாள் ராத்ரி உறைகுத்தி மறுநாள் வெண்ணெய் எடுக்கிறது 'பழம் பற்று' என்கிற மாதிரிதான். ரா வேளையில் ஸ¨ர்யனுடைய பரிசுத்தி செய்கிற வெளிச்சம் இல்லாததாலேயே ராத் தங்கின பண்டம் அவ்வளவு ச்லாக்யமில்லை என்பது.

நாமெல்லாம் பசுக்கள். நம் மனஸு வெள்ளை வெளேரென்று பாலாக இருக்கணும். அப்போதுதான் கன்னங்கரேலென்று இருக்கிறதால் கிருஷ்ணன் என்றே பேர் வைத்துக்கொண்டவன் நம்மிடம் வருவான். அது வெறுப்பைத் தருகிற கறுப்பு அல்ல; மோஹத்தை உண்டாக்குகிற மேகத்தின் கறுப்பு. கனச்யாம், கனச்யாம் என்கிற போது 'கன' என்றால் 'மேகம்' என்றே அர்த்தம்.

'கார்வண்ணன்' என்று சொல்வார்கள். மேகம் எத்தனைக்கெத்தனை கறுப்போ அத்தனைக்கத்தனை அதிக ஜலத்தைக் கொட்டும். அந்த ஜலம் கறுப்பாகவா இருக்கிறது? இப்படிப் பரம ப்ரேம தாரையைப் பிரவாஹமாகக் கொட்டுகிறவனே கிருஷ்ணன். அடர்ந்த மேகத்திலிருந்தே மஹா ஜ்யோதிஸ்ஸான மின்னல்கள் தோன்றுகிற மாதிரி, ஞானப் பிரகாசம் பளிச்சுப் பளிச்சென்று வெட்ட கீதாசாரியனாக இருக்கிறான் அந்தக் கொண்டல் வண்ணன். இப்படியே அவன் வெளியிலே கபடும் சூதும் மாயமுமாகத் தெரிந்தாலும் நாம் மனஸைப் பால் வெளுப்பாக்கிக் கொண்டால் பரம சுத்தமான ப்ரேமையோடு நம்மைப் பாலிக்க, கோபாலனாக வருவான்.

அப்படியே அந்தப் பாலை எடுத்துக் குடிப்பதில்லை அவன். அது தயிராகி அதிலிருந்து புத்தம் புது வெண்ணெய் எடுத்தாகணும். அந்த நவநீதத்தை உண்ணத்தான் வருவான்; அதுவும் திருட்டுத்தனமாக!

பக்தி தாபத்திலே வெள்ளை மனஸைக் காய்ச்சினால் அது பொங்கும். அப்புறம் இந்த உணர்ச்சி வேகம் அடங்க அதைக் கொஞ்சம் ஆற்றி சாந்தத்தை உறை குத்தணும். பால் ஓடுகிறதுபோல, ஆடுகிறதுபோலத் தயிர் ஓடுவதில்லை, ஆடுவதில்லை. அப்படியே கெட்டியாக, சாந்தமாக இருந்து விடுகிறது. அவனுக்கு சாந்தமும் வேணும்; லீலையின் சலனமும் வேண்டும். அப்போதுதான் முடிவிலே சாந்தத்திலேயே எல்லா சலனமும் அடங்கியிருப்பதும், அத்தனை சலனத்துக்கும் அடிப்படையாக சாந்தமே இருந்து கொண்டிருப்பதும் தெரியும். உபநிஷத்தே "ச்யாமாத் சபளம் சபளாத் ச்யாமம்" என்று இரண்டையும் சேர்த்துச் சொல்கிறது*.

அதனால் ஓடாமல் ஆடாமல் சாந்தமாக இருக்கிற தயிரைப் போட்டுக் கடை கடை என்று கடைய வேண்டியிருக்கிறது. ஹ்ருதயப் பானைக்குள் இருக்கிற தயிரில் ஸத்யத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை (இதை ஞான விசாரம், ஆத்ம விசாரம் என்பார்கள்) மத்தாகப் போட்டு, ஒருமுக சிந்தனை என்ற கயிற்றால் கடைந்தால் பூர்ணத்வம் என்ற வெண்ணெய் வரும். அதைத் துளிக்கூடப்

பழகாகவிடாமல், அது நவநீதமாக இருக்கிறபோதே வந்து எடுத்துக்கொண்டு விடுவான். பூர்ணத்வம் இந்த நம்முடைய சரீரப் பானைக்குள் எப்படி இருக்க முடியும்? அதனால் பூர்ணனான அவனிடமே போய்விடும். தனியாக நாம் என்று இல்லாமல் அவனுக்குள் அவனாகவே போய்விடுவோம் என்று அர்த்தம்.

திருட்டுத்தனமாக எடுத்துக் கொள்கிறான் என்று ஏன் சொல்ல வேண்டும்? பகவான் ஸாதாரண அதிதி மாதிரி வந்தால் அவனை வேறாயாக வைத்து ராஜோபசாரம் பண்ணி conscious -ஆகத்தானே (புத்தி பூர்வமாகத்தானே) வெண்ணெயைத் தருவோம்? அப்படி புத்தி பூர்வமாக நம்மை அவனிடம் சரணாகதி பண்ணிக் கொள்ள நமக்கு அப்போது புத்தி வருமோ, வராதோ? 'சரணாகதி பண்ணுகிறேன்' என்கிறபோதே அப்படிச் சொல்கிற ஒரு 'நான்' தனியாக வந்துவிடுகிறதே! இதனால்தான் நமக்குத் தெரியாமல் நாம் un conscious -ஆக இருக்கிற போதே நம்மை எடுத்துக் கொண்டால்தான் உண்டு என்று திருடனாக வருகிறான்.

வெண்ணெய் பரப்பிரம்மம் மாதிரி. சுத்த ஸத்வ வெளுப்பாக இருப்பது. துளி உருக்கினால், அந்த வெளுப்பும் போய் ஸ்படிகம் மாதிரி colourless ஆகிவிடுகிறது. 'வெண்ணெய்' என்பதில் 'வெண்' என்கிற அடையாளமும் போய் 'நெய்' மாத்திரம் நிற்கிற நிலை. எந்தக் கலரிலும் அது சேராது. அதன் ருசியும் இப்படித் தான். மதுரம், மதுரம் என்று சொன்னாலும் வெண்ணெய் வாஸ்தவத்தில் தித்திப்பு இல்லை - சர்க்கரை, தேன் மாதிரி இல்லை. ஷட்-ரஸம் என்கிற ஆறு சுவைகளில் அது எதுவும் இல்லை. அதன் கலர், ருசி எல்லாம் சாந்தம் என்றுதான் சொல்ல வேண்டும். ஸம்ஸார ஆட்டம் போக, எதிர்த் திசையில் பலவிதமான ஸாதனைகளில் அழுகை, மயிர்க்கூச்சு, பாட்டு, நர்த்தனம் என்று ஒரே ஆட்டமாக ஆட்டிச் சிலுப்பிய பின் உண்டாகிற இந்தப் பரம சாந்தத்தை நாம் அடைகிறபோது நம்மை நாமறியாமலே தனக்குள்ளேயே கொண்டுபோய் வைத்துக்கொள்கிற பரமாத்மாதான் கிருஷ்ணன்.

வெண்ணெய் ஜலத்திலிருந்து கொண்டே அதில் ஒட்டாமலிருக்கிற மாதிரி - பால் ஜலத்தோடு அப்படியே கலந்துவிடும்; அப்படியில்லாமல் வெண்ணெய் தனியாக மிதக்கிறதே, அந்த மாதிரி - நாம் லோகத்திலிருந்து கொண்டே அதில் ஒட்டாமலிருந்தால் நம்மை அவன் எடுத்து அப்படியே முழுங்கித் தனக்குள் வைத்துக் கொண்டு விடுவான். ஆக நம் உள்ளம்தான் அவனுக்கு வேண்டிய வெண்ணெய். 'நவநீத சோர்', சித்த சோர் என்று இரண்டு விதமாயும் அவனையே சொல்வதால் என்ன ஏற்படுகிறது? நம் சித்தம்தான் அவன் அபஹரிக்கக்கூடிய நவநீதமாக மாறவேண்டும் என்றே ஏற்படுகிறது.

இப்படி ஒரே திருட்டு விளையாட்டு, பரக்கப் பரக்க ஒவ்வொரு இடைச்சி வீட்டுக்குள்ளும் ஓடி, உறியிலே ஏறி தாழி உடைத்து நிர்தூளி பண்ணுகிற விளையாட்டு செய்கிறவனே ஸா ... துக் குழந்தையாக ஆலிலை மேலே படுத்துக்

கொண்டிருக்கிறது! கோகுலத்திலா இப்படி ஆலிலைப் படுக்கைப் போட்டு வைத்திருந்தது? இல்லை. க்ருஷ்ணனாக மதுராவிலே அவதாரம் பண்ணி நடத்தின கதையில் அவன் ஆலிலைப் படுக்கையில் படுத்துக் கொள்ளவில்லை. வேறே எப்போதோ மார்க்கண்டேயருக்குத் தன் மாயா விலாஸத்தைக் காட்டுவதற்காக ப்ரளயத்தைக் காட்டினான். அந்த ப்ரளய வெள்ளத்திலே தான் ஒரு ஆலிலை மேலே படுத்துக்கொண்டு குழந்தையாக தர்சனம் தந்தான்.

ஆல மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டு ஞானோபதேசம் பண்ணுகிறவர் பரமேஸ்வரன்; வட வ்ருக்ஷ மூல நிவாஸி.மஹாவிஷ்ணு ஆலிலை மேலே படுத்துக் கொண்டு ஞான உபதேசக்கு நேர் ஆப்போஸிட்டாகத் தோன்றும் மாயா விலாஸத்தைக் காட்டுகிற வட பத்ரசாயி. மாயா விலாஸத்தைக் காட்டியே ஞானம் கொடுத்து விடுகிறார்! ப்ர-லயம் என்பதாக அத்தனை மாயா லோகமும் ஸ்ருஷ்டியும் தன்னிலே லயித்துப் போய் விடுவதைத் தானே காட்டுகிறார். மாயையிலிருந்து நம்மை விடுவித்து முக்தி தரவே இப்படி தர்சனம் தருகிறார். அதனால்தான் இந்த அவஸரத்திலே (ரூப பேதத்திலே)

அவரை 'முகுந்தன்' என்பது 'முகுந்தன்' என்றால் 'முக்தி தருகிறவன்' என்று அர்த்தம்.

கராரவிந்தேந பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேசயந்தம்.
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயாநம் பாலம் முகுந்தம் மநஸா ஸ்மராமி..

'தாமரைப் பூ மாதிரி இருக்கிற கால் கட்டை விரலைத் தாமரைப் பூ மாதிரியே இருக்கிற கையினால் பிடித்திழுத்து தாமரைப் பூ மாதிரி இருக்கிற வாய்க்குள்ளே போட்டுக் கொண்டு ஆலிலை மேல் சயனித்திருக்கும் குழந்தை முகுந்தனை முழு மனஸோடு ஸ்மரிக்கிறேன்' என்று அர்த்தம்.

கால் கட்டை விரலை எதற்காக வாயில் போட்டு கொண்டு சப்ப வேண்டும்?

மாந்தாதா என்று ஸ¨ர்ய வம்சத்தில் ராமருக்கு ரொம்பவும் முந்தி ஒரு ராஜா இருந்தார். அவர் நேராக அவருடைய தகப்பனாரிடமிருந்து பிறந்து விட்டார். அதனால் அவருக்கு பால் கொடுப்பதற்கு அம்மா இல்லை. அந்த ஸமயத்தில் இந்த்ரனே, "நான் கொடுக்கிறேன் - மாம் தாதா" என்று சொல்லிக் குழந்தையின் கைக் கட்டை விரலை எடுத்து அதன் வாய்க்குள் வைத்தான். மநுஷ்ய சரீரத்தில் ஒவ்வொரு அங்கத்திலும் ஒரு தேவதை வஸிப்பதில், கைக்கு உரிய தேவதை இந்த்ரன்தான். தான் சாப்பிட்டிருக்கிற அம்ருதம் இந்தக் கையின் கட்டை விரலால் குழந்தையின் வாய்க்குப் போகும்படி இந்த்ரன் அநுக்ரகித்தான். அநேகக் குழந்தைகள் வாயில் விரல் போட்டுக் கொள்வது அதனால்தான்.

ஆனால் இங்கே பகவான் வாயில் போட்டுக் கொண்டிருப்பது கைக் கட்டை விரல் அல்ல; கால் கட்டை விரல். அவர் சரீரத்தில் இன்ன இடமென்றில்லாமல் தலையோடு கால் அம்ருத மயமானவர். 'அம்ருதவபு:' என்றே (விஷ்ணு) ஸஹஸ்ரநாமத்தில் பெயரிருக்கிறது. அதனால் இந்திராதி தேவர்கள் கையால் செய்வதைத் தாம் காலால் செய்ய முடியும் என்று காட்டுகிறாற்போலக் கால் விரலைச் சப்பிக் கொண்டிருக்கிறார். "சாப்பிடுவது ப்ரம்மம், சாப்பிடப்படுவது ப்ரம்மம், சாப்பாடு போடுவதும் ப்ரம்மம்" என்பது மந்த்ரம். அந்த உண்மையையும் நிரூபித்துக் காட்டுகிறார். தன் விரலைத்

தானே வாயில் எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிட்டும் கொள்கிறார். அப்படியே சாப்பிடவில்லை; சப்புகிறார்; சப்பிடுகிறார்!

இடது கால் கட்டை விரல்தான் அவர் சப்புவது. நடராஜாவின் தூக்கிய திருவடியும் இடதுதான்.

பகவானைப் போல சரீரம் பூரா அம்ருதமயமாக நாம் இல்லாவிட்டாலும் நமக்கும் இடது பக்கத்தில் சந்த்ரநாடி என்று ஒன்றை அவர் அநுக்ரஹித்திருக்கிறார். சந்த்ரன் அமிருதம் பெருக்குகிறவன். அநுஷ்டானம், யோகஸாதனை செய்தால் சந்த்ர நாடியிலே அம்ருதம் ஓடுவது தெரியும். அதைக் காட்டவுந்தான் இடக்கால் கட்டை விரலை ருசி பார்க்கிறார்.

கால் மட்டமானது, இடது பக்கம் மட்டமானது என்றெல்லாமில்லாமல் எல்லாம் உசத்தி, எல்லாம் அம்ருதம் என்று காட்டுகிறார்.

இப்படித் அவருக்குள்ளேயே அம்ருதம், அவரே அம்ருதமாயிருந்தும் வெளியேயிருந்து வெண்ணெயைத் திருடிச் சாப்பிட்டுவிட்டு அடி வாங்கிக்கொண்டு அதற்காகப் பொய் சொல்லிக்கொண்டு இருந்திருக்கிறாரென்றால், இது மட்டத்திலும் மட்டமான நம்முடன் விளையாடி லீலாம்ருதமும் ப்ரேமாம்ருதமும் கொடுக்க வேண்டும் என்ற க்ருபாம்ருத ஸாகரமாக அவர் இருப்பதால்தான்!

எப்போதோ ப்ரளயத்தில் வடபத்ரசாயியாக வந்தவனை நவநீத க்ருஷ்ணனாக எப்படிச் சொல்லலாம்? யோசித்தால் இதற்குக் காரணம் தெரிகிறது. மஹா விஷ்ணுவுக்கும் க்ருஷ்ண பரமாத்மாவுக்கும் துளிக்கூட வித்யாஸமே சொல்லப்படாது. 'அவதாரம்' என்று சும்மாவுக்காகத்தான் சொல்லுகிறது; அவர் அசல் மஹாவிஷ்ணுவேதான்: "க்ருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்"1.இன்னம் சொல்லப் போனால், மஹாவிஷ்ணு என்று சொல்வதுங்கூட அவரைக் குறுக்குவதுதான்! அவரே தம்மை2 "ஆதித்யானாம் அஹம் விஷ்ணு:" - 'ஆதித்யர்களுக்குள் நான் விஷ்ணு' என்கிற மாதிரி "ருத்ராணாம் சங்கரச்சாஸ்மி"-'ருத்ரர்களில் நான் சங்கரன்' என்று சிவ ரூபமாகவுந்தான் சொல்லிக் கொள்கிறார். "ராமன், ஸ்கந்தன் எல்லாமே நான்தாண்டா"

என்கிறார். 'நான் நான்' என்று எல்லோர் ஹ்ருதயத்தில் இருப்பதும் தான் தான் என்றே ஆரம்பிக்கிறார். "என்னையன்றி சராசரம் எதுவும் கிடையாது" என்று ஸாக்ஷ£த் பரப்ரஹ்ம ஸ்வரூபமாகவேதான் தம்மை தெரிவித்துக் கொள்கிறார். அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா என்றே அவரைச் சொல்வதும், ***"பூர்ணம் ப்ரஹ்ம ஸநாதநம்"*** என்பதும்.

ஆகையால் பால ரூபத்திலே வந்து மனஸைக் கொள்ளை கொள்வது முக்கியமாக க்ருஷ்ணருடைய கார்யமாயிருப்பதால், இப்படிப் பச்சைக் குழந்தையாய் அவர் பச்சையிலை மேலே மனமோஹனமாக மிதக்கிறபோது அவரை க்ருஷ்ணனாகவே நினைக்கிறோம்.

அம்ருதத்தை உண்டு காட்டுவதாலேயே நமக்குள்ளே அவர் அம்ருதத்தை ஊட்டி விடுவதால் நாம் சாவிலிருந்து விடுபட்டு அமரத்தன்மை பெறுகிறோம். அதனாலேயே அவரை இந்த ரூபத்திலே அமரமான முக்தி நிலையைத் தரும் முகுந்தனாகச் சொல்லுவது. இந்த முகுந்த நாமாவும் முக்யமாக க்ருஷ்ணனுக்குத்தானுண்டு.

"பீஷ்ம முக்தி ப்ரதாயகாய நம" என்று அவருக்கு அஷ்டோத்தர (சத) த்தில் அர்ச்சனை பண்ணுகிறோம். ராமர் கூடத்தான் ஜடாயுவுக்கு மோக்ஷம் தந்தார்.

ஆனாலும் முகுந்தன் என்றாலே க்ருஷ்ணன் என்று ஏன் ஆக வேண்டும்? ஏன் அப்படி என்றால், க்ருஷ்ண பரமாத்மாதான் அதி பால்யத்திலே அவரை மனஸறிந்து கொல்லணும் என்று வந்த பூதனை; அப்புறம் கடைசியிலே, அவருடைய அவதார காரியம் பூர்த்தியான முடிவு கட்டத்திலே, அவர் மேலே அறியாத்தனத்தால் அம்பு போட்டு அவர் சரீர யாத்ரையை முடிக்கும்படிப் பண்ணின ஜரா என்கிற வேடன்; இரண்டுக்கும் நடுவிலே அவரை பொது ஸபையில் வாயில் வந்தபடியெல்லாம் தூஷித்த சிசுபாலன் ஆகியவர்களுக்குக்கூட முக்தி அளித்த பரம க்ருபாமூர்த்தி.

ஒரு அவஸரத்திலே வெண்ணெய் தின்கிறார் - ம்ருக வர்க்கத்திலே மிக உயர்ந்த பசு தருகிற பால் காய்ந்து (அதாவது முதிர்ந்து) தயிராகி அப்புறமும் கனிந்து முதிர்ந்து கடைசியில் நவநீதமாகிறது. இதை ஆஹாரம்

பண்ணுகிறார். ஆஹாரம் மாதிரியே சயனமும் ஒரு ஆதாரத் தேவை. இவற்றை அசனம், சயனம் என்பார்கள். அசனம் நவநீதம். சயனம் ஆலிலை. (இப்போதும் அசனத்தை விடாமல் கால் கட்டை விரலால் ருசி பார்க்கிறான்!)

ம்ருக வ்ர்க்கத்தில் பசுபோல தாவர வர்க்கத்தில் ஆல் உயர்ந்தது. 'ந்ய்க்ரோதம்' என்பதும் 'வட வ்ருக்ஷம்' என்பது போல அதற்குப் பெயர். ஸஹஸ்ரநாமத்தில் 'ந்யக்ரோதன்' என்பது மஹாவிஷ்ணுவின் பெயராக வருகிறது. கயா ச்ராத்தம் என்று முக்யமாகச் சொல்லி 'அக்ஷய வடம்' என்று ஆலமரத்துக்குக் கீழே பிண்டம் போடுவதையே விசேஷித்திருக்கிறது. இது கர்ம காண்டம். மௌனத்தினால் ஆத்மாவை அநுபவிக்கும்படி அநுக்கரஹிக்கின்ற தக்ஷிணாமூர்த்தியும் அந்த மரத்தின் கீழேதான் இருக்கிறார். இது ஞான காண்டம். இப்படி ஆல் இரண்டிலும் முக்யமுள்ளதாயிருக்கிறது. கர்மா எத்தனை உசத்தியானாலும் மாயா ஸம்பந்தமானது. அதனால்தான் மார்க்கண்டேயருக்கு மாயா தர்சனமும் பண்ணுவித்து, பரம ஞானத்தையும் கொடுக்கிற போது பகவான் இரண்டுக்கும் பொதுவான வட வ்ருக்ஷத்தின் பத்ரத்திலே வந்து படுத்துக் கொண்டார். ஆதிசேஷனின் மேலே லக்ஷ்மிநாயகனாக, பிரம்மாவின் பிதாவாக சயனிப்பவர் ஆலிலை மேல் பாலனைப் போல வந்தார்.

பசுவின் முதிர்ந்த ஸாரத்தை இவனுடைய ஆஹாரமான வெண்ணெய் காட்டுகிறதென்றால், ஆல விருக்ஷத்தின் ஆரம்ப ஸ்தானத்தை இலை காட்டுகிறது. முதலில் இலை. அப்புறம்தான் பூப்பது காய்ப்பது பழுப்பது எல்லாம்.

ஸாரஸாரமாக முதிர்ந்த நவநீதத்திலிருந்து இளசான வடபத்ரம் வரை எல்லாம்

அவருடை ரேஞ்ஜில் இருப்பவைதான் - தான் நிறைந்திராத லெவலே இல்லை - என்று காட்டுகிறார்.

ஆலிலைக்கு ஒரு விசேஷமுண்டு. அதிலே ஜீவஸாரம் ரொம்ப அதிகம். அதனால்தான் அது எத்தனை வாடினாலும் மற்ற இலைகள் மாதிரி

வற்றிப்போய் நெறுங்குவதில்லை. சரகாகிறபோதுகூட மெத்தென்றே இருக்கும். அதனாலேயே பகவான் குழந்தையாக வருகிறபோது அதி ஸொகஸாக உள்ள தனக்கு மெத்தையாக அதை 'சூஸ்' பண்ணிக் கொண்டிருக்கிறான். மரத்திலிருந்து வாடி உதிர்ந்த ஒரு ஆலிலையின் மேல் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்தால் போதும், மறுபடி அது பசுமை பெற்றுவிடுவதைப் பார்க்கலாம். அவன் எப்போதும் வாடாத வதங்காத ஆத்மா. 'ப்ரணவம்' என்றாலும் எப்பவும் 'நவம்'; சாப்பிடுவது 'நவநீதம்'! பகவான் ஜரா மரணம் கடக்கப்பண்ணி எப்பவும் யௌவனமாக வைத்திருக்கும் அம்ருத நிலையைக் கட்டைவிரலைச் சப்பிக் காட்டுவதால் மாத்திரமின்றி, ஸூக்ஷ்மமாய் இந்த வட பத்ர சயனத்தாலேயே சூசிப்பித்து விடுகிறான். வட வ்ருக்ஷ மூலத்தில் உட்கார்ந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தியின் மாறாத யௌவனமும் அஜர, அமரத் தன்மையைக் காட்டுவதுதான். அதைவிட இளைய குழந்தையாகவே, ஆலங் கொழுந்தைப் போலவே தானும் கொழுந்துப் பிராயமாக, 'ஆயர்தம் கொழுந்தே!' என்று (தொண்டரடிப் பொடி ஆழ்வாரால்) பாடப்பட்டவன் இருக்கிறான். வேர் ஆடாமல் அசையாமலிருப்பதுபோல, 'வ்ருட்ச இவ ஸ்தப்த:' என்று ச்ருதி சொன்னபடி*2 ஞான காம்பீர்யத்தோடு தக்ஷிணாமூர்த்தி இருக்கிறார். இவனோ ஒரு இலை கொஞ்சம் காற்றானால்கூட சலசல என்று ஆகிறதுபோல ஒரே விளையாட்டாய் விளையாடிக் கொண்டு ப்ரேம ஸௌகுமார்யத்தோடு இருக்கிறான்.

ஆல விருக்ஷத்துக்கு எத்தனையோ உபயோகங்கள். ஒரு பெரிய ஸைன்யமே அதன் கீழே தண்டு இறங்கலாம். பரோபகாரத்துக்கு அது ஒரு ரூபகம். அத்தனாம் பெரிய மரத்துக்கு இத்தனூண்டு விதை. இந்த அணு மாத்ர விதையில் அந்தப் பெரிய மரமே இருப்பது, அணுவில் அணுவாயுள்ள பரமாத்மாவே அகண்ட ப்ரம்மாண்டமாயும் இருக்கிறார் என்பதை நினைப்பூட்டுகிறது. எல்லா மரத்துக்குந்தானே இப்படி என்றாலும் மற்ற மரங்களைவிடவும் விஸ்தாரமாக வளர்கிற ஆலுக்குத்தான் அவற்றின் விதைகளைவிடவும் சின்ன விதையாயிருக்கிறது. மற்ற மரம் போல ஆலுக்கு எவரும் விதை ஊன்றுவதில்லை. அதுவாகவே எப்படியோ முளைத்துக்

கொள்கிறது. இது ஈஸ்வரன் ஸ்வயம்பு, தான்தோன்றி என்ற தத்வ விளக்கமாய் இருக்கிறது. தானே விழுதுவிட்டுத் தன்னைத் தாங்கிக் கொண்டு, அந்த பலத்தில் மேலும் மேலும் விஸ்தாரமாகிக் கொண்டே போகிறது. அடையாற்றில் ஆல மரத்தைப் பார்க்கவே கூட்டம் கூட்டமாகப் போகிறது. ஈஸ்வரன் பிறர் தாங்குதல் வேண்டாத நிராலம்பன் என்பதற்கு இது எடுத்துக்காட்டுப் போல இருக்கிறது. ஒரு பாகம் பட்டுப் போனாலும் மற்ற விழுதுகள், விழுதிலிருந்து தோன்றும் விழுதுகள் என்ற பிற பாகங்கள் பசுமையாக இருந்து கொண்டே இருப்பதால் ஈஸ்வரனின் நித்யத்வத்தையும் காட்டியதாகிறது. ஒரே தாயும் தந்தையுமான அவனிடமிருந்தே ஸகல ஜீவ ஜகத்துக்களும் விஸ்தாரமாயிருப்பதற்கு த்ருஷ்டாந்தம் போல வட வ்ருக்ஷமானது ஒரே தாய் மரத்திலிருந்து விஸ்தாரமாகிக் கொண்டே போகிறது.

இப்படியாக, ஸம்ஸார ஸாகரத்தில் அலை பாய்கிற நமக்கு ஆலிலையைக் காட்டி நிலையான நித்யத்வத்தை, நிராலம்ப தத்வத்தை உணர்த்துகிறான் வடபத்ரசாயி.

மரத்தைவிட எத்தனையோ அகன்ற அகண்ட தத்வம் அவன். அந்த மரம் எத்தனை பெரிசாயிருந்தாலும், எத்தனை காலமிருந்தாலும் அதன் பரப்புக்கு எல்லை உண்டு. அதன் காலத்துக்கும் முடிவு உண்டு. அவனோ முடிவேயில்லாத அகண்டன், அனந்தன். ஆனாலும் இந்த மஹா ப்ரபாவத்தை மறைத்துக்கொண்டு, நாம் அவனை எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சுகிற விதத்தில் ஸரள

ஸ்வபாவத்துடன் கூடிய குழந்தையாக இருக்கிறான். "ஒண்ணும் கவலைப்படாதேயப்பா! என் மாதிரி குழந்தை உள்ளத்தோடு இரு. ஸம்ஸார வெள்ளத்திலேயே அப்போது நி அலையில் அடி படாமல் உன் பாட்டுக்கு ஆனந்தமாக, அதை ஒரு விளையாட்டாக எடுத்துக் கொண்டு மிதந்து கொண்டிருக்கலாம்" என்று சொல்லாமல் சொல்கிறான். சிலுப்புவதாலே கொந்தளிக்கிற மோரிலே வெண்ணெய் பட்டுக் கொள்ளாமல் மிதப்பதுபோல

ஸம்ஸார ஸாகரத்தில் அவனே வெண்ணெய்க் கட்டியாக மிதப்பது, நாமும் அப்படி ஆக வேண்டும் என்று நம்மை நினைக்கச் செய்வதற்குத்தான்.

நாம் ஏதோ இருக்கிற அசட்டு ஸ்திதியில் நமக்குத் தெரிந்த அளவில், ஆனால் பக்தி ச்ரத்தா விச்வாஸங்களோடு, அந்தக் குழந்தையை சவுடால் பண்ணும் திருட்டுக் குழந்தையாகவும், சாந்தமாகச் சயனித்துக் கொண்டிருக்கிற ஆலிலைக் குழந்தையாகவும் ஸ்மரிக்க ஆரம்பித்துவிட்டால், ஸ்மரிக்க ஸ்மரிக்க நம் மனஸின் சொர சொரப்பு, வாடல், வதங்கல் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் போய் வட பத்ரம் மாதிரி எப்போதும் பசுமையாய், எப்போதும் மிருதுவாய் ஆகும். அப்போது அவனே வந்து இந்த மனஸிலும் சயனித்துக் கொண்டு விடுவான். ***'வட பத்ர சாயி, க்ஷீராப்தி சாயி, ஸ்ரீரங்கசாயி'*** என்றெல்லாம் கூப்பிட்டு, ***"ரமதாம் மநோ மே"*** என்று பிரார்த்தனை செய்கிறபோது அவனை நம் மனஸிலே வந்து சயனித்துக் களிக்கும் படியாகத்தான் வேண்டுகிறோம்.

அதனால்தான் (அந்த ப்ராத்தனை ஸ்லோகம்) ஸத்-சித்த சாயி - 'ஸாது ஜனங்களில் சித்தத்தில் சயனிப்பவன்' - என்று ஆரம்பித்திருக்கிறது*3அந்தக் குழந்தையின் மெத்து உடம்பு, மாறாத பால்ய சரீரம் நம் மனஸிலே பட்டால் இதுவும் அப்படி ஆகிவிடும். இதன் அழுக்கும், கெட்ட ருசி எல்லாமும் போய் வெள்ளை வெளேரென்று சாந்த மதுரமான வெண்ணெயாகிவிடும். இப்படி நம்மைத் தன்னுடைய ஸ்மரணையால் குழைத்துக் குழைத்து ("குழைத்த பத்து" என்றே மாணிக்கவாசகர் பண்ணியிருக்கிறார்) தொண்டைக்குக் கொஞ்சங்கூட ச்ரமம் தராமல் விழுங்கக்கூடிய வெண்ணெயாக ஆக்கினபின் அவன் அப்படியே உட்கொண்டு விடுவான். அவனுக்குள்ளேயே போய் ஸ்வஸ்தமாய் இருந்துவிடலாம்.

முதலிலே பண்ண வேண்டியது அவன் ஸ்மரணை. அதனால் நம்முடைய உள்ளத்தை வெளுப்பான பாலாக்கிக் கொண்டால், பால் ஸமுத்ரத்தில் படுத்துக் கொண்டிருப்பவனே நம்முடைய பிரேமை அலை மோதும் உள்ளத்தில் தானே வெண்ணெய்க் கட்டியாக வந்து மிதப்பான். அப்புறம் நம்மையும் வெண்ணெயாக்கித் தனக்குள் வைத்துக் கொண்டு விடுவான்.

----

*1.சாந்தோக்யம் 8.13.1.

1. பாகவதம் 1.3.28

2. அடுத்து வரும் கண்ணனின் கூற்றுகள் கீதையில் விபூதியோகம் எனும் பத்தாம் அத்யாயத்தில் வருவன.

*2.மஹாநாராயணோபநிஷத் 12.3.3

3.ஸச்சித்த சாயீ புஜகேந்த்ர சாயீ நந்தாங்க சாயீ கமலாங்க சாயீ

க்ஷீராப்தி சாயீ வடபத்ர சாயீ ஸ்ரீரங்க சாயீ ரமதாம் மநோ மே**

(ஆசார்யாள் அருளியதாகக் கருதப்படும் ஸ்ரீரங்கநாதஷ்டகம் கடைசி ஸ்லோகம்:)

19.3-சிவ நாம மஹிமை! சிவன் தரும் மஹிமை

சிவ நாமாவைச் சிறப்பித்து சைவமான புராண ஆகமங்களிலோ, தேவார திருவாசகங்களிலோ சொல்லியிருந்தால் அதில் பெரிய விசேஷமில்லை. வைஷ்ணவ நூலில் சொல்லியிருந்தாலே விசேஷம். சிவ மஹிமையைத் தீவ்ர வைஷ்ணவர் சொல்லியிருந்தால்தான் விசேஷம்.

இந்த இரண்டு விசேஷங்களும் சிவனுக்கும் சிவ நாமத்துக்கும் இருக்கின்றன.

விஷ்ணுவின் மஹிமைகளை, சரித்ரங்களை எல்லாவற்றுக்கும் மேலானவை என்று ஸ்தாபிக்க ஏற்பட்டது பாகவதம். அதில் நடுவிலே தாக்ஷ£யணியின் கதை வருகிறது. அந்தக் கதைக்கு நடுவிலேதான் தாக்ஷ£யணியின் வாக்கிலேயே சிவ நாமாவின் மஹிமையைச் சொல்லியிருக்கிறார், பாகவதத்தை அநுக்ரஹித்துள்ள சுகாசார்யாள். அவர் ப்ரஹ்ம ஸ்வரூபம். சுகப்ரஹ்மம் எனப்படுபவர். அவர் சொல்வதற்கு தனி மதிப்பு உண்டு. அவர் இப்படி எடுத்துச் சொல்வதற்கு மூலமாக இந்த மஹிமையைச்

சொன்னவளோ தாக்ஷ£யணியாக வந்த ஸாக்ஷ£த் பராசக்தி !அதுவும் எப்படிப்பட்ட ஸந்தர்பத்தில் சொன்னாள்?

தகப்பனார் தக்ஷன் யஜ்ஞம் செய்கிறான் என்ற அபிமானத்தால் அவன் அழைக்காமலே அதற்கு வந்தாள், அவனுடைய புத்ரியானதால் தாக்ஷ£யணி என்று அழைக்கப்பட்ட தேவி. ஸதி என்பதுதான் அவளுடைய (இயற்) பெயர். ஹிமவானின் புத்ரியான பார்வதியாக வருவதற்கு முன்னால் அம்பாள் எடுத்த அவதாரம் இது. பரமேஸ்வரன், "அழையா விருந்தாளியாகப் போக வேண்டாம்" என்று நல்ல வார்த்தை சொல்லியும் கேட்காமல் தாக்ஷ£யணி தகப்பனாரின் யாகத்துக்கு வந்தாள்.

பரமேஸ்வரன் யாரையும் மதிப்பதுமில்லை, அவமதிப்பதுமில்லை என்று தன்பாட்டில் ஞானியாக விலகியிருந்தவர். 'ப்ரஜாபதி'என்று ஜனங்களுக்கு நாயகர்களாக ப்ரம்மா ஸ்ருஷ்டித்த ப்ரம்ம புத்ரர்களில் தக்ஷன் ஒருவன். அவனுக்கு எப்போதும் தன் ஆ..பீஸ், அதாரிடிகளைப் பற்றிய கர்வமுண்டு. எல்லோரும் தனக்கு நமஸ்காரம் பண்ணவேண்டும் என்று எதிர்பார்ப்பான். மற்றவர்கள் பண்ணவும் பண்ணினார்கள் ஈஸ்வரன் பண்ணவில்லை. அதனால் அவரை இவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் ப்ரம்மாவின் வாக்குக்குக் கட்டுப்பட்டு ஸதியை அவருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து அவளைக் கைலாஸத்துக்கு அனுப்பி வைத்தான். அதோடு பெண்-மாப்பிள்ளை உறவைக் கத்தரித்து விட்டான். பெரிய யாகம் செய்தபோதுகூட ஒரு தேவர் பாக்கியில்லாமல் முப்பத்து முக்கோடி பேரையும் கூப்பிட்டவன் பெண்ணையும் மாப்பிள்ளையையும் இன்வைட் பண்ணவில்லை.

யஜ்ஞவாடத்தில் ஈஸ்வரனைத் தவிர அத்தனை பேரையும் கூப்பிட்டு உட்கார்த்தி வைத்திருப்பதைப் பார்த்தவுடனேயே மஹா பதிவ்ரதையான தாக்ஷ£யணிக்கு "ஏண்டா வந்தோம்?" என்று பொங்கிப் பொங்கிக் கொண்டு வந்தது. அதற்கப்புறம் தக்ஷன் அவளை ப்ரியமாய் வரவேற்காததோடு, சிவ த்வேஷமாகவே நிந்தை பண்ணிப் பேச ஆரம்பித்தவுடன் அவளால் துக்கத்தையும் கோபத்தையும் தாங்கவே முடியவில்லை.

இங்கேயிருந்து போய்விடலாமா? போவது என்றால் எங்கே? பதியின் க்ருஹத்தைத் தவிர பத்னிக்கு வேறே இடம் ஏது? அங்கே போகலாமா? ஏன், என்ன யோசனை? போகவேண்டியதுதானே? போனால், 'நான் சொல்லச் சொல்லப் போய் உனக்கும் அவமானத்தை தேடிக் கொண்டு எனக்கும் அவமானம் வாங்கி வைத்து விட்டு இங்கே ஏன் திரும்பி வந்தாய்?' என்று பரமேஸ்வரர் கோபிப்பாரோ என்பதால் யோசனையா? இல்லை. அவர் அன்பே ஒரு ஸ்வரூபமாக வந்திருப்பவர். என்னிடம் பரிவு தவிர எந்த உணர்ச்சியும் காட்டத் தெரியாதவர். அவர் இப்படிக் கேட்கமாட்டார். ஆனால் என் மனஸே கேட்கும்; குத்திக் குத்திக் கேட்கும். இன்னொன்று: அவர் எதுவும் நடக்காதது போல ஹாஸ்யமாக, பரிஹாஸமாக, என்னிடம் ஸல்லாபம் செய்யும் போதே நடுவில் 'தாக்ஷ£யணி' என்று என்னைக் கூப்பிட்டுவிட்டால்? அதைவிட ஒரு தண்டனை வேண்டுமா? சிவநிந்தை செய்யும் பாபியின் பெண்ணாயிருப்பதால் ஏற்பட்ட பேரல்லவா அது? அவருடைய நாமம் எத்தனை உத்க்ருஷ்டமானதோ அத்தனை நிக்ருஷடமான இவனுடைய பேரைச் சொல்லி, இவனுக்குப் பெண்ணாய் நான் பிறந்தேனென்பதை ஞாபகப்படுத்தும் இந்தப் பேரை நான் வைத்துக் கொள்ள வேண்டியிருப்பதை விடப் பெரிய தண்டனை இல்லை. அதைவிட, இவனால் ஏற்பட்ட இந்த சரீரமே போய்விடட்டும்! எங்கே போவது என்று யோசித்தோமே!இந்த சரீரத்தையே விட்டுவிட்டுப் போய் ஆத்மாவாகிய அவரிடம் கலந்து விடுவோம்!'என்று தியாக ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு விட்டாள்.

யஜ்ஞ குண்டத்துக்குப் பக்கத்திலேயே அம்பாள் ஈஸ்வர த்யானம் பண்ணிக்கொண்டு யோகாக்னியில் சரீரத்தை அர்ப்பணம் செய்து முடிந்து போய்விட்டாள் என்பது பாகவதக் கதை. சைவ புராணங்களில் யஜ்ஞ குண்டத்திலே விழுந்து பஸ்மீகரமாக்கிக்கொண்டு விட்டாளென்று இருக்கிறது.

இப்படி பாதிவ்ரத்யத்துக்காக, அம்பாள் ப்ராணத் தியாகம் செய்கிறதற்கு முந்தி கோபாக்னி கொழுந்து விட்டெரிய தக்ஷனைப் பார்த்துக் கொஞ்சம் பேசினதாக பாகவதத்தில் வருகிறது. அதன் நடுவில்தான், 'சிவன் என்றாலே இவன் கரிக்கிறானே!' என்று நினைத்து அவனிடம் அந்த நாம மஹிமையை அம்பாள் சொல்வது வருகிறது.

அம்பாள் வாக்கு என்பதாலேயே அதற்கு மிகுந்த ஏற்றம் உண்டு. அதுவும் இந்த ஸந்தர்ப்பத்திலே சொன்னது என்பதால் இன்னமும் மேலே, இதற்குமேல் ஒன்றில்லை என்ற உச்சிக்கு அந்த வாக்கு போய்விடுகிறது.

முன்காலத்தில் யாராவது உடன்கட்டை ஏறினால் அவளுடைய வஸ்த்ரம் எரியாமலே இருக்கும். ப்ரத்யக்ஷத்தில் பார்த்துப் பலபேர் சொல்லியிருக்கிறார்கள். அந்த வஸ்த்ரத்தை வைத்து ஆராதனை செய்வார்கள். இப்படிப் பல வீடுகளில் தலைமுறைகளாக அந்த வஸ்த்ரம் வந்திருக்கிறது. தன்னையே த்யாகம் பண்ணிக் கொள்வதால் அந்த ஸ்திரீகள் ஆத்ம ஞானியின் நிலையிலிருப்பவர்கள், அம்பாளின் அம்சம் பெற்றவர்கள் என்று பூஜிக்கப்படுகிறார்கள். அப்படியானால் அந்த அம்சங்களுக்கெல்லாம் மூலமான அம்பிகையே பதியை நிந்தை செய்தவனுடைய புத்ரியாக ஏற்பட்ட பெயரும் தேஹமும் இருக்கப்படாது என்ற தீவ்ரமான பதிவ்ரதா பாவத்தில் தன் தேஹத்தை பரித்யாகம் பண்ணிக் கொள்கிற நிலையில் சொன்ன வாக்கு ஸஹகமனம் செய்கிறவர்களின் வஸ்திரத்தைவிட எத்தனை மேலானது?

அம்பாள் இங்கே ஸஹகமனம் செய்யாவிட்டாலும் அப்படிச் செய்வதற்கே 'ஸதி'- இங்கிலீஷிலே suttee - என்றுதான் அவள் பேரை வைத்திருக்கிறது. 'பாதிவ்ரத்யத்துக்காக சரீரத்தைப் பொசுக்கிக் கொண்டு விடுவது'என்ற கொள்கை இரண்டுக்கும் பொதுவாயிருப்பதால் இவ்வாறு பேர் ஏற்பட்டிருக்கிறது.

ஸதி-பதி என்பதாகவே தம்பதியைச் சொல்வதும் 'ஸதி'என்றாலே ஐடியல் பத்னி என்ற அபிப்ராயத்தில் தான். ஆசார்யாள் " **ஸதி ஸதீநாம் அசரமே** " என்கிறார்1. "பதிவ்ரதைகளுக்குள் முதன்மை ஸ்தானம் கொண்ட ஸதியே!"என்று அர்த்தம்.

அப்படிப்பட்டவள் ப்ரணாத்யாகம் பண்ணுகிற ஸந்தர்ப்பத்தில் சொன்னதைவிடப் பெரிய ஸத்யமில்லை. அந்த ஸத்யத்துக்கு விலையே இல்லை என்ன சொன்னாள்?

யத்-த்வயக்ஷரம் நாம கிரேரிதம் ந்ருணாம்
ஸக்ருத் ப்ரஸங்காத் அகம் ஆக ஹந்தி தத் *
பவித்ர கீர்த்திம் தம் அலங்க்ய-சாஸநம்
பாவந்-அஹோ த்வேஷ்டி சிவம் சிவேதர :**2

கடைசி வார்த்தை ' **சிவேதர** :'- 'சிவனுக்கு இதரமானவர்'. அதாவது சிவனாக இல்லாமல் அதற்கு மாறுபட்டவராக இருக்கிறவர். இப்படி 'சிவேதரன்'என்று அம்பாள் சொல்வது தக்ஷனைத்தான். ' **பவாந்** ' - 'தாங்கள்'என்று ரொம்ப மரியாதை த்வனிக்கிறாற்போலவே அவனைக் கூப்பிடுகிறாள். ஈஸ்வரனே தனக்கு மரியாதை பண்ணவேண்டுமென்று எதிர்பார்ப்பவனாதலால் பரிஹாஸமாக 'பவாந்' என்று சொல்லி அவனை 'சிவேதரன்'என்கிறாள். இதில் நிரம்ப அர்த்த புஷ்டியிருக்கிறது.

சிவ என்பதற்கு மங்களமாக, சுபமாக இருக்கிற அத்தனையையும் அர்த்தமாக, synonym -ளாக (ஸம்ஸ்க்ருத நிகண்டுவான) அமர (கோச)த்தில் சொல்லியிருக்கிறது " **ச்வ** : **ச்ரேயஸம், சிவம், பத்ரம், கல்யாணம், மங்களம், சுபம்** ."அந்த சிவத்துக்கு இதரனாக ஒருத்தன் இருக்கிறானென்றால் அவன் ஒரு ச்ரேயஸுமில்லாதவன், அமங்கள, அசுப ஸ்வரூபம் என்றுதானே அர்த்தம்?

அப்பைய தீக்ஷிதர் எழுதியுள்ள அத்வைத க்ரந்தமொன்றுக்குப் 'பரிமளம்'என்று பேர். அத்வைதத்தை ஆக்ஷேபிக்கிற ஒருவர் இதற்குக் கண்டனம் பண்ணி எழுதினார். இந்த விஷயத்தை அப்பைய தீக்ஷிதர் கேட்டவுடன் மூக்கைப் பிடித்துக் கொண்டாராம். பரிமளம் என்றால் அதற்கு மூக்கைப் பிடித்துக் கொள்ளத்தானே வேண்டும்?

சிவம் - அதாவது பரம மங்களம் - பிடிக்காது என்று தக்ஷன் பெருமைப்பட்டுக் கொண்டால் அவன் ஒரே அமங்களன், அகல்யாணன், அசுபமானவன் என்றுதானே அர்த்தம்? தாக்ஷ£யணி என்ற பேரே தண்டனை என்று நினைத்தவள் தக்ஷனுக்கு 'சிவேதரன்' என்று பேர் வைத்தே தண்டிக்கிறாள்!

"ஐயையோ ('அஹோ')! இப்படி சிவனை த்வேஷிக்கிற சிவேதரனாயிருக்கிறாயே! ஒரு தப்புக் கண்டுபிடிக்க முடியாமல் பரம

பவித்ரமாயுள்ள கீர்த்தி பொருந்தியவரல்லவா அவர் (**பவித்ர கீர்த்திம்**) ?அவருடைய கட்டளையாலல்லவா ஸகல தேவதைகளும் தங்கள் தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள்?யாரும் அவர் கட்டளையை மீறினதில்லையே (**அலங்க்ய சாஸனம்**) !நீதான் அதிசயமாக அவரை மீறிப் போகப் பார்க்கிறவன்"இப்படியெல்லாம் அம்பாள் சொல்கிறாள். இது ஸ்லோகத்தின் பின்பாதி. முன்பாதியில்தான் சிவ நாமாவின் பெரிய பெருமையைச் சொல்கிறாள்

யத்-த்வயக்ஷரம் நாம கிரேரிதம் த்ருணாம்
ஸக்ருத் ப்ரஸங்காத் அகம் ஆக ஹந்தி ...

' த்வயக்ஷரம் நாம '- 'இரண்டே இரண்டு அக்ஷரம் உள்ள சிவ நாமா'. பஞ்சாக்ஷரமாக அதற்கு முன்னாடிப் ப்ரணவம், பின்னாடி 'நம':சொல்லணுமென்றுகூட இல்லை. அவ்வளவு ச்ரமம் வேண்டாம். இரண்டெழுத்தைச் சொன்னாலே போதும். ' **சிவ சிவ** எனகிலர் **தீவினையாளர்** 'என்றுதான் 'திருமந்திர'த்தில் கூட இருக்கிறது;பஞ்சாக்ஷரமாகச் சொல்லவில்லை. "த்வயக்ஷரம் நாம கிரா" என்றால் 'இரண்டே அக்ஷரமுள்ள நாமமான வார்த்தை'. இந்த வார்த்தையானது மனிதர்களால் சொல்லப்பட்டால் ('ந்ருணாம் ஈரிதம்'- மநுஷ்யர்களால் சொல்லப்பட்டால்) .

எப்படிச் சொல்ல வேண்டும்?ஸ்நானம் பண்ணி, மடி பண்ணிக் கொண்டு, மூச்சை கீச்சை அடக்கி ரொம்பவும் நியமமாகச் சொல்ல வேண்டுமா?

ஊஹ¨ம், அதெல்லாம் வேண்டியதில்லை. ***' ஸக்ருத் ப்ரஸங்காத் '-*** ஏதோ ஒரு தடவை பேச்சுக்கு நடுப்பற, எத்தனையோ அரட்டை அடிக்கிறபோது ....

சிவனை நினைத்து, மனஸைச் செலுத்தி புத்தி பூர்வமாக, 'அவன் பேர்'என்று சொல்ல வேண்டியதுகூட இல்லை. அகஸ்மாத்தாக ஏதோ பேச்சுக்கு நடுப்பற அந்த இரண்டெழுத்து வந்துவிட்டால்கூடப் போதும்!'சிவப்பு''அரிசி வடாம்'என்கிற மாதிரி எதையோ சொல்லிக் கொண்டு போகும்போது இந்த இரண்டெழுத்து வந்து விட்டால் கூடப் போதும் ...

இவ்வாறு அது அகஸ்மாத்தாக ஒருதரம் சொல்லப்பட்டால்கூட என்ன பண்ணிவிடுகிறது?

அகம் ஆசு ஹந்தி

' **அகம்** ' - பாபத்தை;' **ஆசு** '- உடனே, தத்க்ஷணமே;' **ஹந்தி** '- அழித்துவிடுகிறது.

பேச்சுக்கிடையே ஏதோ ஒரு தரம் 'சிவ'என்ற இரண்டு அக்ஷரத்தை அகஸ்மாத்தாகச் சொல்லிவிட்டாலும் அதுவே ஸமஸ்த பாபத்தையும் போக்கிவிடும்.

ஸத்தியங்களுக்கெல்லாம் மேலான ஸத்யமாக, ப்ராண த்யாக ஸமயத்திலே ஸாக்ஷ£த் பரதேவதை சொன்னதாக சுகாசார்யாள் வாயினால் வந்திருக்கிற வாக்யம் இது.

'சிவசிவ என்று சொல்லாதவன் தீவினையாளன்'என்றால் துஷ்கர்மா பண்ணினவன், அதாவது பாபி என்று அர்த்தம். அப்படியானால், சிவ நாமா சொல்லிவிட்டால் பாபம் போய்விடும் என்றுதானே அர்த்தம்?

தெரிந்தும் தெரியாமலும் எவ்வளவோ பாபம் பண்ணி விட்டோம். அதுதான் மேலே போக முடியாதபடி பெரிசாகத் தடை செய்கிறது. சிவநாமா சொல்லி விட்டால் அந்தத் தடை போய்விடும் அப்புறம் மோக்ஷ பர்யந்தம் எல்லாம் ஸித்தியாகிவிடும்.

மற்ற மதஸ்தர்களில் சிலர், "உங்கள் மதத்தில் பாபத்தைப் பரிஹரிக்க வழி இல்லை. எங்களிடம் இருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் தெளிக்கிறோம். பாபமெல்லாம் போய்விடும். ஆகையால் எங்களிடம் வாருங்கள்"என்கிறார்கள்.

நம் மதத்தில் பாப பரிஹாரத்துக்கு வழி சொல்லாதது மாதிரி இவர்கள் கூப்பிடுகிறார்கள். நமக்கும் ஒன்றும் மத விஷயம் தெரியாததால் இங்கேயிருந்து அங்கே போகிறவர்களும் இருக்கிறார்கள். வாஸ்தவத்திலோ, நம்முடைய மதத்தில் இத்தனை கர்மாநுஷ்டானம் விதித்திருப்பது பாபம் போகத்தான். ***" மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா*** " என்றுதான் எந்தக்

கர்மாவுக்கும் முதலில் ஸங்கல்பம் பண்ணுகிறோம். 'துரிதம்'என்றால் பாபம்தான். பக்தி மார்க்கம் பாபத்தைப் போக்கத்தான். பக்தி முதிர்ந்து ப்ரபத்தி (சரணாகதி) ஆகும். பகவான் கீதையைப் பூர்த்தி பண்ணும்போது, "சரணாகதி பண்ணு. உன்னை ஸகல பாபங்களிலிருந்து விடுவித்து விடுகிறேன். **ஸர்வ** ***பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி*** "என்று ஸத்யம் பண்ணித் தந்திருக்கிறார். அவரை நம்பாமல் நாம் இன்னொருத்தரிடம் போக வேண்டியதில்லை.

தர்மம், ஞானம் எதுவானாலும் பாபத்தைப் போக்குவதே. **தர்மேண பாபம் அபநுததி** என்று (மஹா நாராயண) உபநிஷத்தே சொல்கிறது (79.7) . அந்த உபநிஷத்திலுள்ள ஸ¨க்தங்களில் அநேகம் பாப நிவிருத்தியைத்தான் திருமபத் திரும்ப ப்ரார்த்திக்கின்றன. "பாபிகளில் நி மஹா பாபியானாலும் ஞான ஓடத்தினால் அந்தப் பாபத்தைக் கடந்து விடுவாய்"என்று கீதையில் (4.36) பகவான் சொல்கிறார்.

கர்மாநுஷ்டானம், தர்மாநுஷ்டானம் ப்ரபத்தி, ஞான ஸாதனை எல்லாவற்றையும்விடப் பரம ஸுலபமாக, நாம் தெரிந்தும் தெரியாமலும் ஜனமாந்தரங்களாகப் பண்ணியுள்ள பாபத்தைப் போக்கிக் கொள்ள இங்கே பாகவதம் வழி சொல்லிவிட்டது. சிவ நாமோச்சாரணம்தான் அது.

அதனால் இனிமேல் "உங்கள் பாபத்தைக் கழுவி விடுகிறோம்" என்று நம்மைக் கூப்பிடுபவர்களிடம் "எங்களிடம் பாப பரிஹாரத்துக்கு இருக்கிறது போன்ற ஸுலபமான உபாயம் யாரிடமுமே இல்லை. அதனால் முதலில் நீங்கள் எங்களைக் கூப்பிடும் பாபத்தைப் பரிஹாரம் பண்ணிக்கொண்டுவிட்டு அப்புறம் வாருங்கள்"என்று சொல்லுவோம்!

---

1. 'ஸௌந்தர்ய லஹறி'ஸ்லோ 96

2. பாகவதம் 4.4.14

19.4-வேதத்தில் சிவநாமத்தின் ஸ்தானம்

விலையுயர்ந்த ரத்னமொன்று நம்மிடமிருந்தால் வீட்டிலே எங்கே வைப்போம்?வாசல் புற ரூமில் வைப்போமா? தோட்டத்தைச் சேர உள்ள ரூமில் வைப்போமா?ரொம்பவும் காபந்தமாக மத்தியில் இருக்கிற ரூமில் இரும்புப் பெட்டியில்தான் வைப்போம். அப்படியே வேதத்தில் ஜீவரத்னமான சிவநாமத்தை ரொம்பவும் ஜாக்ரதைப்படுத்தி வைத்திருக்கிறது. நாலில் மத்தி இரண்டாவது. நாலு வேதங்களில் இரண்டாவது யஜுஸ். அதர்வவேதத்தைச் சேர்க்காமல் ரிக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்றை மட்டும் 'த்ரயீ'என்பதுண்டு. அப்போதும் ரிக்குக்கும் ஸாமத்துக்கும் நடுவில் வருது யஜுஸே. யஜுஸிலேயே சுக்ல யஜுஸ், க்ருஷ்ண யஜுஸ், என்று இரண்டு இருப்பதால் நாலு வேதத்தை நாலு வேதத்தை ஐந்து என்று ஆக்கினாலும் ரிக், சுக்ல யஜுஸ், க்ருஷ்ண யஜுஸ், ஸாமம், அதர்வம் என்ற ஐந்தில் நட்ட நடுவாக வருவது மூன்றாவதான க்ருஷ்ண யஜுஸ்தான் இந்த க்ருஷ்ண யஜுர் வேதத்தில் மத்ய பாகம் அதன் நாலாவது காண்டம். அந்தக் காண்டத்தின் மத்யம் ஐந்தாவது ப்ரச்னம். இதிலேதான் நடுவில் ஸ்ரீ ருத்ர ஸ¨க்தம் என்படுவதில் நடுநாயகமாக பஞ்சாக்ஷரம் வருகிறது. அந்த பஞ்சாக்ஷரத்துக்கும் மையமாக 'சிவ'என்ற த்வயக்ஷரம் இருக்கிறது.

உடம்பை மெய் என்கிறோம். அதிலே இருக்கிற பரமாத்மாவை மெய்ப்பொருள் என்பார்கள். ஸத்வஸ்து என்று வேதாந்தத்தில் சொல்வதைத் திருவள்ளுவர் அப்படியே தமிழில் 'மெய்ப்பொருள்'என்கிறார். வேதங்களையெல்லாம் ஒரு சரீரமாக - மெய்யாக - வைத்துக் கொண்டால் அதில் உயிராக, மெய்ப்பொருளாக இருப்பது சிவநாமா. உயிர் என்னும் பரமாத்மா இருக்கும் ஸ்தானம் ஹ்ருதயம் என்றால், அந்த ஹ்ருதயம் சரீர மத்தியில்தான் இருக்கிறது. இதைத்தான் ஞானஸம்பந்தரும் சொல்கிறார்.

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது

நாத (ன்) நாமம் நமச்சிவாயவே

வீட்டுக்கு நடுவே காபந்தாக இருக்கும் ரத்னம் போல வேத சரீரத்தின் நடுவே அதன் ஜீவரத்னமாக உயிர் கொடுத்துக்கொண்டு சிவ நாமாவாகவே பரமாத்மா

இருக்கிறார். இந்த அபிப்ராயத்தையே அப்பைய தீக்ஷிதர் ப்ரஹ்ம தர்க்க ஸத்வத்தில் (ஸ்லோ. 27) " **யஜ்-ஜீவ ரத்நம் அகிலாகம லாலநீயம்** "என்கிறார்

19.5-அனைவருக்குமான நாமம்

அவ்வைப் பாட்டி செய்திருக்கிற நூல்களில் 'நல்வழி'என்பது ஒன்று. என்ன ஜாதி, என்ன மதம் என்றெல்லாம் கேட்காமல் மநுஷ்யராகப் பிறந்த எல்லாருக்குமான நீதிகளை அதில் சொல்லியிருக்கிறது. இப்படி நூலில், " **சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க் (கு) அவாயம் (அபாயம்) ஒரு நாளுமில்லை** " என்று வருகிறது. அதனால் சிவநாமம் ஸகல ஜனங்களுக்கும் ஏற்பட்டது என்று தெரிகிறது. ஜாதி ப்ரஷ்டம் பண்ணி வைக்கப்பட்ட சண்டாளன்கூட சிவநாமம் சொல்ல வேண்டுமென்றிருக்கிறது. ஸ்ரீருத்ரத்தில் பரமேஸ்வரனை நாய், நாய் தின்னுகிறவன் உள்பட எல்லாமாகச் சொல்லியிருப்பதாலேயே அவனுடைய நாமா எல்லோருக்கும் ஸொத்து என்று தெரிகிறது.

19.6-வைஷ்ணவர் கூறும் பெருமை

ஸ்ரீமத் விஷ்ணு பாகவத்தில் சிவ நாமாவின் பெருமை வந்திருப்பது போலவே ஸ்ரீவைஷ்ணவர்கள் ரொம்பவும் போற்றி மரியாதை செய்கிற ஒருவரும் அந்த நாமாவுக்கு உரியவரான பரமேஸ்வரனின் உயர்வைச் சொல்லியிருப்பதாக எனக்கு ஒரு அபிப்ராயம். அவர் என்னமோ சிவனை மட்டந் தட்டினதாகத்தான் கதை சொல்கிறவர்கள் சொன்னாலும் எனக்கு அப்படித் தோன்றவில்லை.

அவர் ராமாநுஜாசார்யாருக்கு மிகவும் முக்யமாக இருக்கப்பட்ட சிஷ்யர்களில் ஒருவர். கூரத்தாழ்வார் என்று பேர். பேர் என்றால் அப்பா அம்மா வைத்தது இல்லை. ஸ்ரீவத்ஸாங்கர் என்பதே அவர் பேர். தமிழில் திருமறுமார்பன் என்பார்கள். காஞ்சீபுரத்துக்குப் பக்கத்திலுள்ள கூரத்தைச் சேர்ந்தவராதலால் கூரத்தாழ்வார் என்று பெயர் வந்தது.

ராமாநுஜர் காலம் வரையில் அநேகர் சிவன், விஷ்ணு இருவரையும் உபாஸிப்பவர்களாக இருந்தார்கள். ஒரு ஊர் என்றாலே அதில் 'ஈசான்யம்'என்கிற வடகிழக்கில் என்கிற வடகிழக்கில் ஈஸ்வரன் கோவிலும் மேற்கில் பெருமாள் கோவிலும் இருக்க வேண்டுமென்று விதி. அப்படியிருப்பதில் அநேகமாக எல்லாரும் கார்த்தாலே பெருமாள் கோவில், ஸாயர¬க்ஷ சிவன் கோவில் என்று போவார்கள். கொஞ்சம் கொஞ்சம் தீவ்ரமாக சிவனையே சொல்கிறவர்கள், விஷ்ணுவையே சொல்கிறவர்கள் என்று இருந்தாலுங்கூட ஒன்றை இழிவு பண்ணி ஒதுக்கி இன்னொன்றை மாத்திரம் உயர்த்தி வைக்க வேண்டும் என்கிற அபிப்ராயம் இல்லாமல் இருந்தது. இப்படி இருக்கிறபோது ராமாநுஜர், 'விஷ்ணுவைத் தவிரக் கடவுள் இல்லை; தேவதாந்தரமே கூடாது'என்பதை ஒரு மதமாகவே பண்ணி, சிவன் கோவிலுக்குப் போகப்படாது என்று பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

அப்போது ஆட்சி பண்ணிய சோழராஜாவும் வித்வான்களும் இதைப்பற்றி ஆலோசித்தார்கள். ராமாநுஜர் சொல்வதற்கு என்ன சாஸ்த்ர ஆதாரம் என்று அவரையே கூப்பிட்டுக் கேட்போம் என்று முடிவு பண்ணினார்கள். இதற்காக வித்வத் ஸதஸ் கூட்ட ஏற்பாடாயிற்று. அப்போது தலைநகராயிருந்தது கங்கைகொண்ட சோழபுரம். கும்பகோணத்துக்கு வடக்கே பத்து மைலில் இருப்பது. ராமாநுஜாசாரியார் ஸ்ரீரங்கத்தில் இருந்தார். இங்கிருந்து அங்கே ராஜா ஆள் அனுப்பினான்.

ஆள் போய் விஷயத்தைச் சொன்னான். அப்போது ராமாநுஜரோடு கூட இருந்த கூரத்தாழ்வார், "ஸ்வாமி! ராஜாவோ சைவன்; சிவாலயங்கள் கட்டியிருப்பவன். தாங்களானால் சிவன் கோவிலுக்குப் போகப்படாது என்கிறீர்கள். அதனால் உங்களை அழைத்து தண்டனை கொடுப்பதற்கே ***'வித்வத் ஸதஸ்'*** என்று சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறான். வருகிற ஆபத்து எனக்கு வரட்டும்; தங்களுக்கு வேண்டாம். தாங்கள் என்னுடைய வெள்ளை வேஷ்யைக் கட்டிக்கொண்டு சோழராஜ்யத்தை விட்டே போய்விடுங்கள். தங்களுக்காக நான் தங்களுடைய காஷாயத்தைப் போட்டுக்கொண்டு, நான்தான் தாங்கள் என்று சொல்லிக்கொண்டு ராஜாவிடம் போகிறேன்"என்றார்.

அப்படியே செய்தார்கள். ராமானுஜர் ராத்திரியோடு ராத்ரியாக முதலில் ஸ்ரீரங்கத்துக்கு இருபத்தெட்டு மைலிலுள்ள திருநாராயணபுரத்துக்கும், அப்புறம் அங்கிருந்து ரொம்ப தூரத்துக்கு அப்பாலுள்ள மைஸ ¨ர் திருநாராயணபுரத்துக்கும் போனார். கூரத்தாழ்வார் கங்கைகொண்ட சோழபுர ஸதஸ்ஸுக்கு வந்து சேர்ந்தார்.

அங்கே கூடியிருந்த வித்வான்கள், 'சிவன் மாதிரி, சிவனுக்கு ஸமமாக விஷ்ணுவோ, இன்னொரு தெய்வமோ இருக்கிறது' என்று வேண்டுமானால் மற்ற தெய்வங்களை இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டும்;ஆனால் தெய்வங்களுக்குள் உசத்தி-தாழ்த்தி சொல்வதாவது? சிவனைவிட விஷ்ணு உசத்தி என்றால் எப்படி? அப்படித்தான் என்றால் சாஸ்த்ரங்களைக் காட்டி நிரூபிக்கட்டும் என்று தீர்மானித்தார்கள். அதனால் ***"சிவாத் பரதரம் நாஸ்தி",*** அதாவது 'சிவனுக்கு மேலே உயர்ந்த பொருள் இல்லை'என்று ஓலையில் எழுதினார்கள். வித்வான்களுக்கு ஓலையை அனுப்புவது;இந்த அபிப்ராயத்தை ஒப்புக்கொண்டால் அவர்கள் கையெழுத்துப் போடட்டும்;ஆக்ஷேபித்தால் சாஸ்த்ரம் காட்டி விளக்கட்டும் என்று முடிவு செய்தார்கள்.

கூரத்தாழ்வாரிடம் ஓலை காட்டப்பட்டது.

அவர் அதிலே என்னவோ எழுதித் திருப்பிக் கொடுத்தார். என்ன எழுதினார் என்றால், கையெழுத்துப் போடவில்லை ***"அஸ்தி த்ரோணம் அத : பரம் "***என்று எழுதியிருந்தார்.

"சிவனுக்கு மேல் உசத்தியான ஒன்று இல்லை" என்றுதானே ஓலையில் முதலில் எழுதப்பட்டிருந்தது? அதற்கு மேல் த்ரோணம் இருக்கிறது" என்று இவர் இப்போது எழுதினதிற்கு அர்த்தம். "அஸ்தி த்ரோணம் அத:பரம்"என்றால் "அதற்கு (சிவனுக்கு) மேலானதாக த்ரோணம் இருக்கிறது" என்று அர்த்தம்.

'சிவ' என்றால் ஈஸ்வர நாமா என்பது மட்டுமில்லை. அதற்கு இன்னொரு அர்த்தம், 'மரக்கால்' என்பது. மரக்கால் - படி - ஆழாக்கு என்பதில் மரக்காலுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் 'சிவம்' என்று பெயர். மரக்காலைப்விடப்

பெரிய அளவு ஒன்று உண்டு. தமிழில் அதற்குப் பதக்கு என்று பேர். ஸம்ஸ்க்ருதத்தில் இது 'த்ரோணம்' எனப்படும்.

'சிவ' என்பதற்குப் இரண்டு அர்த்தமிருப்பதில் இவர் சிலேடையாக 'சிவபெருமான்' என்பதைத் தள்ளிவிட்டு, 'மரக்கால்' என்பதாக எடுத்துக்கொண்டு, 'ஏன் மரக்காலும் மேலே எதுவும் இல்லாமல்? பதக்கு இருக்கே!' என்று எடுத்துக்காட்டி எழுதிவிட்டார்.

"ராஜ ஸமூஹம்; அநேக வித்வான்கள் கூடியிருக்கிற கௌரவமான ஸதஸ்; அதிலே ஸீரியஸாக சாஸ்த்ரார்த்தங்களைக் கட்டாமல் குறும்பாக, 'மரக்காலை விடப் பதக்கு பெரிசு' என்று இவர் எழுதியிருக்கிறாரே!" என்று எல்லாருக்குமே இருந்தது. ராஜாவுக்குக் கோபம் வந்து, கடுமையாக சி¬க்ஷ பண்ணினான் என்று கதை போகிறது.

எனக்கென்ன தோன்றுகின்றதென்றால் கூரத்தாழ்வார் குறும்பு பண்ணவில்லை; சிவனே கதி என்று உபாஸிக்க கூடியவர்களும், வேதத்திலுள்ள ருத்ர ஸ¨க்தமுமே ஒப்புக்கொள்ளும்படியான ஒரு உண்மையைத் தான் "அஸ்தி த்ரோணம் அத: பரம்" என்பதில் உள்ளார்த்தமாக வைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

'சிவ' என்பதற்கு அவர் இரண்டர்த்தம் பண்ணிக் கொண்டதாகத்தான் இதுவரை நினைக்கப்பட்டிருக்கிறது. மரக்கால் என்று அர்த்தம் பண்ணினார் என்று நினைத்தே ராஜா சிக்ஷித்தான். எனக்கோ, 'அஸ்தி த்ரோணம் அத:பரம்' என்பதில் 'சிவ' என்பதற்குப் பரமசிவனுக்கு வேறாக இன்னொன்றை (மரக்காலை) அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டாம்;' த்ரோணம் 'என்பதற்குத்தான் பதக்கு என்றில்லாமல் வேறே அர்த்தம் செய்து கொள்ளணும் என்று தோன்றுகிறது.

என்ன அர்த்தம்?

த்ரோணம் என்றால் தும்பை என்றும் அர்த்தம். பரமேஸ்வரனுக்கு மிகவும் ப்ரீதியான பூ அது. பத்ரங்களில் பில்வம் மாதிரி, புஷ்பங்களில் எந்தக் கடையிலும் விலைக்கு விற்காததான ஊமத்தை, எருக்கு, தும்பை

இதுகள்தான் சிவபெருமானுக்கு ரொம்பவும் உகந்தவை. அப்பைய தீக்ஷிதரைவிட ஒரு சிவபக்தர் கிடையாது. அவர் 'ஆத்மார்ப்பண ஸ்துதி' என்று செய்திருக்கிறார். இதற்கு 'உன்மத்த பஞ்சாசத்' என்றும் காரணப்பெயர் உண்டு*.

அர்க்க-த்ரோண-ப்ரப்ருதி குஸுமை : அர்ச்சநம் தே விதேயம்
ப்ரப்யம் தேந ஸ்மரஹர பலம் மோட்ச ஸாம்ராஜ்ய லக்ஷ்மி :*

என்கிறார். "பரமேஸ்வரா! உன்மேலே எருக்கையும் த்ரோணத்தையும் (தும்பையையும்) அர்ச்சனை பண்ணி விட்டால் போதும், அது ஒருத்தனுக்கு மோட்ச ஸாம்ராஜ்யம் என்ற பரம ச்ரேயஸைப் பலனாகக் கொடுத்து விடுகிறது" என்கிறார்.

சிவனுக்கு மேலே தும்பைப் பூ அர்ச்சனை செய்த பூ விழுகிறது. அவனுக்கு மேலே போய் அது உட்கார்ந்திருக்கிறது. சிவலிங்கத்தின் உச்சியில் ஒரு தும்பைப்பூவை வைத்து விட்டால், அப்போது அது அவனுக்கு மேலே, அவனைவிட உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறது!ஆகையால் "சிவனுக்கு மேலே உயர்வாக எதுவுமில்லை; சிவாத் பரதரம் நாஸ்தி" என்றால் எப்படி ஸரியாகும்?அதுதான் மேலே த்ரோண புஷ்பம், இத்தனூண்டு பூ வெள்ளை வெளேரென்று பரம நிர்மலமாக, அத்தனை பெரியவனுக்கும் மேலே இருக்கிறதே!" இருக்கிறது" என்பதை அடித்துச் சொல்லவே "அஸ்தி" என்று ஆரம்பித்து, "அஸ்தி த்ரோணம் அத:பரம்"என்றதாகத் தோன்றுகிறது.

'தரம்' என்றால் ஒன்றைவிட இன்னொன்று comparative degree -ல் உயர்ந்தது என்று அர்த்தம். 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்றால் சிவனைவிடப் பரமாக (உயர்ந்ததாக) கம்பேரடிவ் டிக்ரியில் சொல்ல எதுவும் கிடையைது என்று அர்த்தம்.

சிவனுக்கு 'மேலே'தும்பை இருக்கிறது என்று வேண்டுமானால் அது இருக்கும் பொஸிஷனைக் கொண்டு சொல்லலாமே தவிர, சிவனோடு கம்பேர் பண்ணி அதாவது அவருடைய குணத்தோடும் மஹிமையோடும் ஒப்பிட்டுப் பார்த்துத் தும்பை அவரைவிட உசத்தி என்று எப்படிச் சொல்லமுடியும்?

அதுவும் முடியும். வேதமந்த்ரமான ஸ்ரீருத்ர வாக்யமே இதற்கு ஆதரவாயிருக்கிறது. அதிலே முடிகிற இடத்திலே இப்படி வருகிறது:"இதோ என்னுடைய இந்தக் கை இருக்கிறதே, இதுவுமே பகவான்தான், பரமசிவன்தான். இல்லை, பகவானுக்கும் மேலே - '**பகவத் தர** :'என்று கம்பரேடிவ் 'தர'த்தையே சொல்லியிருக்கிறது!

எப்படி இந்தக் கை பகவானைவிட உசத்தி?

எப்படியா?" இது அவனை அபிமர்சனம் பண்ணுகிறதோ இல்லையோ, அதனால்தான்"என்று ச்ருதியே சொல்கிறது.

'அபிமர்சனம்' என்றால் நன்றாகத் தொடுவது. பூஜையின் போது அவனை நன்றாகத் தொட்டுத் துடைத்து, சந்தனமிட்டு, அர்ச்சனை பண்ணுவது இந்தக் கைதானே? இப்படி அவனைத் தொட்டுவிட்டால் போதும், அவன்மேலே போய் விழுந்துவிட்டால்போதும், அவன் காலிலே சித்தே (சிறிதே) கிடந்தால் போதும் - அவனுடைய ஸ்பரிசம் படுகிறதே, அப்போது அவன் தன்னுடைய குணம், மஹிமை எல்லாவற்றையும் தானாக இருந்துகொண்டு எவ்வளவு காட்டுகிறானோ அதைவிட ஜாஸ்தியாகவே தன்னை ஸ்பரித்துக் கொண்டிருப்பவனுக்குக் கொடுத்துவிடுவான்;தான் பகவான் என்றால் தன்னை ஸ்பர்சிப்பது 'பகவத்தரம்' என்று ஆக்கிவிடுவான்!

அதனால் ஒரு தும்பைப்பூ அவனுடைய தலை மேல் ஏறி உட்காரணும் என்று கூட இல்லை, அவனுடைய காலிலே அர்ச்சிக்கப்பட்டுக் கிடந்தாலுங்கூட சிவத்தன்மையிலே அது சிவனைவிட 'மேல்':' **சிவாத் பரதரம்** 'தான்.

இந்த அபிப்ராயங்களை மனஸில் வைத்துக் கொண்டே, ஆனாலும் தன்னுடைய ஆசார்யனுடைய அபிப்ராயத்துக்கு வேறேயாக வெளிப்படச் சொல்லக் கூடாது;சொல்லாமல் அவருக்காக என்ன தண்டனையானாலும் வாங்கிக் கொள்வது என்றே கூரத்தாழ்வார் இரண்டு அர்த்தத்தில் ***"அஸ்தி த்ரோணம் அத:பரம்"*** என்று சொன்னதாக வைத்துக் கொள்ளலாம்.

ஒரு சின்னஞ்சிறிய பூவாக இருந்தால்கூட ஸரி, தன்னிடம் அது வந்துவிட்டது என்றால் அதைத் தன்னிலும் உசத்தியான மஹிமையுள்ளதாகப்

பண்ணிவிடுகிற ஒளதார்யம் (உதார குணம்) உடையவர் பரமசிவன் என்பது அந்த வைஷ்ணவர் வார்த்தையால் தெரிவதாக எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் இப்படி அவனை எப்போ பார்த்தாலும் தொட்டுப் பூஜை பண்ணிக்கொண்டிருக்க முடியுமா? எல்லோருக்கும் அந்த ஸௌகர்யம் கிடைக்குமா? இந்த ஸாதாரணத் தும்பை கூட எல்லா மாஸத்திலும் கிடைக்காதே? அதனாலே அவனை ஸ்பரிசித்து, ஒட்டிக் கொண்டு, கட்டிக்கொண்டு இருப்பதெல்லாம் வாக்கால்தான் பண்ணியாகணும். இந்த நாக்கிலேதான் அவன் நாமாவை வைத்துக் கட்டிக்கொண்டு அதன் மூலம் அவனை ஹ்ருதயத்தில் இறக்கிக்கொண்டு அங்கே அவனோடு ஒட்டிக்கொண்டு இருக்கவேண்டும். நாமா சொல்ல எந்த ஸௌகர்யமும் வேண்டாம், உபகரணமும் வேண்டாம், நியமமும் வேண்டாம்.

அதனால் இத்தனை பாபம் பண்ணிவிட்டோமே என்று அழவே வேண்டாம். பாபத்தை ஒரே க்ஷணத்தில் த்வம்ஸம் பண்ணும் வஸ்து இருக்கிறது. அதை எங்கேயோ போய்த் தேடிப் பெற வேண்டியதில்லை. நாமே உண்டு பண்ணிக்கொண்டு விடலாம். கஷ்டமே இல்லை. இரண்டே எழுத்து. தேஹத்தில் உயிர் போலவும், கோயிலில் மஹா லிங்கம் போலவும், வேதங்களின் மத்தியில் ஜீவரத்னமாயிருக்கும் அதை நாம் என்ன பண்ணவேண்டும்? பெரிசாக த்ரவ்யம் சேர்த்து அபிஷேகம் பண்ணணுமா? தினுஸு தினுஸாய் நைவேத்யம் செய்யணுமா? மாலைகள், நகைகள் சாத்தணுமா? ஒன்றும் வேண்டாம். ஓயாமல் வேண்டாத விஷயங்களில் புரண்டு கொண்டிருக்கிற நாக்கைக் கொஞ்சம் அதற்காகப் புரட்டினால் போதும்!

மநுஷ்யனுக்கு மட்டும் இது birth right (பிறப்புரிமை) !வேறு எது எதற்கோ பர்த்-ரைட் சொல்கிறோம்!இதுதான் எல்லாவற்றுக்கும் மேலே! வாக்கு என்று ஒன்றை மநுஷ்யனுக்கு மாத்திரம் தந்திருப்பது இதற்காகத்தான்!இதைச் செய்யாவிட்டால், 'வாக்கால் செய்யக் கூடியதை இவன் செய்யவில்லை; இவனுக்குப் இதைக் கொடுத்துப் பிரயோஜனமில்லை' என்று பரமேஸ்வரன் அதைத் திரும்ப வாங்கிக் கொண்டு அடுத்த ஜன்மாவில் வேறே மாதிரி உருட்டி விடுவார்!இதைச் சொல்லிவிட்டாலோ ஜன்மாவே இல்லை. பாவம்

எல்லாம் பறந்து போய்விடும். மோக்ஷச ஸாம்ராஜ்ய லக்ஷ்மியை இந்த நாமா கொடுத்துவிடும்.

பரமேஸ்வர ஸ்வரூபத்தை நாம் பார்க்க முடியுமா? விக்ரஹமாக வைத்தால்கூட எப்போதும் பார்க்க முடியுமா?இந்த நாமா இருக்கிறதே, இதுவும் ஸாக்ஷ£த் அவனேதான். இதை நினைத்த மாத்திரத்தில் நம்மிடம் வரும்படிப் பண்ணிக் கொண்டுவிடலாம்.

அதனால் எப்பொழுதெப்பொழுது முடிந்தாலும் 'சிவ'என்று இரண்டு அக்ஷரங்களைச் சொல்லி லோகமெல்லாம் சிவம், மங்களம், கல்யாணம் தழைக்கச் செய்ய வேண்டும்.

----

* காரணம் என்ன என்ற சுவையான விளக்கம் பிற்பகுதிகளிலொன்றில் வெளியாகலாம்.

19.7-மீனாக்ஷி

அம்பாள் ஸ்தோத்திரங்கள் என்று சொன்னால் உடனே இரண்டு நினைவுக்கு வருகின்றன. ஒன்று 'லலிதா ஸஹஸ்ரநாமம்', மற்றது 'ஸௌந்தர்ய லஹரி'.

அம்பாள் ரூபங்களில் பிரஸித்தமாகக் காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாக்ஷி , காசி விசாலாக்ஷி என்ற மூன்றைச் சொல்கிறோம்.

'காமாக்ஷி, காம தாயினீ' என்று ஸஹஸ்ர நாமத்தில் வருகிறது. ஸௌந்தர்ய லஹரியில் காமாக்ஷியின் பெயர் வராவிட்டாலும், அதில் த்யான ஸ்லோகம் மாதிரி அம்பாளை வர்ணிக்கிற 'க்வணத் காஞ்சீ தாமா 'என்ற ஸ்லோகத்தில் காமாக்ஷியின் ஸ்வரூபத்தைத்தான் - தநுர், பாண, பாச, அங்குசங்களுடன் சதுர் புஜையாகக் காமாக்ஷி எப்படியிருக்கிறாளோ அப்படிப்பட்ட ஸ்வரூபத்தைத்தான்- சொல்லியிருக்கிறது. பேர் சொல்லாவிட்டாலும் சிலேடையாக ஊரைச் சொன்ன மாதிரி, 'காஞ்சீ தாமா'

என்று வருகிறது. 'காஞ்சீ தாமா' என்றால் ஒட்டியாணப் பட்டை என்று அர்த்தமானாலும் காஞ்சீபுரத்தின் நினைவும் வருகிறது.

மீனாக்ஷியின் பெயர் ஸஹஸ்ரநாமத்தில் வருகிறதா என்று பார்த்தால் வரவில்லை. 'ஸௌந்தர்ய லஹரி'யில் நம் ஆசார்யாள் அவளை வர்ணனை பண்ணியிருக்கிறாரா என்று பார்த்தால், இங்கேயும் காணோம்!

ஏன் இப்படி இருக்கிறது என்று ஆச்சரியமாக இருக்கிறது.

லோகத்துக்கெல்லாம் பிரஸித்தமாக, வர ப்ரஸாதினியாக இருக்கப்பட்டவள் மீனாம்பிகை. காருண்யத்தோடு ஆதிபத்ய சக்தியும் சேர்ந்திருக்கிறவள் மீனாக்ஷி. ஆறு மாஸம் தன்னிடம் செங்கோல், ஆறு மாஸம் ஸுந்தரேச்வரரிடம் செங்கோல் என்றிப்படி லோக முழுவதற்கும் ராஜ்யபாரம் பண்ணுகிறவள். நித்தியப்படி பூஜை, நைவேத்யம் முதலியவற்றைப் பார்த்தாலோ, ஈஸ்வரனுக்கு அவள் ஸரி ஸமானம் மட்டுமில்லை, அவனைவிட ஒருபடி மேலே என்று தோன்றுகிறது. பூஜை, நைவேத்யம் எல்லாம் முதலில் அவளுக்குப் பண்ணிவிட்டு அப்புறம்தான் ஈஸ்வரனுக்குப் பண்ணுவது என்று மதுரையில் மட்டும் மாறுதலாக வழக்கம் இருக்கிறது.

த்வாதசாந்தம் என்று சாக்த தந்த்ரம் சிறப்பிக்கும் தத்வ ஸ்வரூபமாயிருப்பது மதுரை..... இங்கே ஒன்று நினைவு வருகிறது.

நான் ராமேச்வரத்திலிருந்தபோது, "த்வாதசாந்தம்"என்று ஒருவர் வந்திருந்தார். அவருடைய தகப்பனார் பிள்ளை பிறக்கணுமென்று மதுரையில் ப்ரார்த்தனை பண்ணி அவர் பிறந்திருந்தாராம். அதனால் அவருக்கு ஊர்ப் பேரே வைத்துவிட்டார்கள் - சிதம்பரம், பழநி, திருமலை என்றெல்லாம் வைக்கிற மாதிரி. நான் பக்கத்திலிருந்த பண்டிதரிடம் 'த்வாதசாந்தம்' என்றால் என்ன என்று கேட்டேன். ராமேச்வர சங்கர மண்டபத்தில் ஆசார்யாள் ஸ்தோத்திரித்துள்ள த்வாதச (பன்னிரண்டு) ஜ்யோதிர் லிங்கங்களைச் செதுக்கியிருக்கிறது. பண்டிதர் அதை நினைத்துக்கொண்டோ என்னவோ, "த்வாசத லிங்கங்களில் தெற்குக் கோடியில் இருக்கும் ராமேச்வர ராமநாதர்தான் த்வாதசாந்தம்" என்றார். அது ஸரியில்லை.

மூலாதாரத்திலிருந்து பிரம்மரந்திரம் வரை ஷட்-சக்ரம் (ஆறு சக்ரம்) என்று பொதுவில் சொல்கிறோம். இன்னும் ஸ¨க்ஷ்மமாக அலசிக்கொண்டு போகிறபோது, கடைசியில் வரும் ஆஜ்ஞா சக்ரத்திற்கும் ஸஹஸ்ரார சக்ரத்திற்கும் நடுவிலேயே பன்னிரண்டு ஸ்தானங்கள் சொல்லியிருக்கிறது. அவற்றில் உச்சியில் ஜீவ-ப்ரம்ம ஐக்கிய ஸ்தானமாக இருப்பதுதான் த்வாதசாந்தம்.

'த்வாதசாந்தம் 'என்று தந்திர சாஸ்திரங்களில், யோக சாஸ்திரங்களில் உச்சி நிலையாகச் சொல்லியிருப்பது மதுரைதான் என்று சொல்லி, மதுரை ***"த்வாதசாந்தக்ஷேத்ரம்"*** என்பார்கள். இங்கே லோகத்தின் ப்ரம்மரந்திரத்தில் ப்ரம்மானந்த ஸ்வரூபிணியாக மீனாக்ஷி இருக்கிறாள்.

பெரிய பெரிய கோபுரங்கள், பிராகாரங்களுடன் வெள்ளைக்காரர்களும் பார்த்துப் பிரமித்துக் கொண்டாடும்படியான ஆலயம் மீனாக்ஷிக்கே ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற சிற்பச் செல்வங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. மற்ற க்ஷேத்ரங்களில் ஈஸ்வரன் பேரிலேயே கோவிலைச் சொல்லி அதில் இன்ன அம்பாள் ஸந்நிதி இருக்கிறது என்பார்கள். ரொம்பவும் சக்தியோடு, ஜீவகளையோடு பாலாம்பாள், கல்பகாம்பாள், மங்களாம்பாள் முதலிய தேவீ மூர்த்தங்கள் இருக்கிற கோயில்களைக்கூட வைத்யநாத ஸ்வாமி கோவில் (அல்லது முத்துக் குமார ஸ்வாமி கோவில்) , கபாலீச்வரர் கோவில், கும்பேச்வர ஸ்வாமி கோவில் என்றுதான் சொல்கிறோம். ஆனால் மதுரையில் மட்டும் ஸுந்தரேச்வரர் கோவில் என்று சொல்வதில்லை. மீனாக்ஷியம்மன் கோவில் என்றுதான் சொல்கிறோம். அங்கேதான் ஸுந்தரேச்வரர் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் பண்ணியிருக்கிறார். ஸுந்தரேச்வரரை ஸ்தோத்திரம் பண்ணி, விபூதி மஹிமையாலேயே ஞான ஸம்பந்தர் பாண்டிய ராஜாவின் வெப்பு நோயைத் தீர்த்து, அதுவரை ஜைனனாக இருந்த அவனை சைவனாக்கினார். இப்படி நம் தேசத்தில் மறுபடி வைதிக மதம் நன்றாக ஸ்தாபிதமாவதற்கே ஸுந்தரேச்வரர் தான் காரணமாயிருந்திருக்கிறார். ஆனாலும் அவர் பெருமையை எல்லாம் ஒன்றுமில்லை என்று பண்ணிக்கொண்டு அம்பாள் மீனாக்ஷியே அங்கே முக்யமாயிருக்கிறாள். மீனாக்ஷியம்மன் கோயில் என்றே சொல்கிறோம்.

காஞ்சீ மண்டலத்தில் ஈஸ்வரன் கோவில்கள் எதிலும் அம்பாள் ஸந்நதியே இல்லாமல் இருக்கிறது. அதற்கு எதிர்வெட்டாக அம்பாள் மட்டும் ஈஸ்வரன் இல்லாமல் காமாக்ஷி கோவிலில் இருக்கிறாள்!அதனால் அதைக் காமாக்ஷியம்மன் கோவில் என்பதில் ஆச்சரியமில்லை. சைவாகமங்களின்படி ஈஸ்வரனின் ஆலயமாகவே உள்ள மதுரையில் 'மீனாக்ஷியம்மன் கோவில்'என்று பெயர் ஏற்பட்டிருப்பதுதான் விசேஷம்!ஜம்புகேச்வரத்தில் அகிலேண்டச்வரி ஆலயம் என்று சொல்கிற வழக்கம் இருந்தாலும், ஊருக்கே 'ஜம்புகேச்வரம் 'என்பதாக ஸ்வாமி பெயர்தான் ஏற்பட்டிருக்கிறது!

மீனாக்ஷியை ஆதி காலத்திலிருந்து அநேக மஹான்களும் கவிகளும் ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள்.

'ச்யாமளா தண்டகம்'என்று காளிதாஸன் செய்திருக்கிற பிரஸித்த ஸ்துதியில் சொன்ன ச்யாமளர்தான் மீனாக்ஷி. ச்யாமளா, மாதங்கி, மந்த்ரிணி என்றெல்லாமே மந்திர தந்திர சாஸ்த்ரங்களில் மீனாக்ஷிக்குப் பேர். ஸங்கீதத்துக்கு அதிதேவதையாக எப்போதும் மாணிக்க வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறவள் அவள். கானாம்ருதத்தாலேயே மோக்ஷ£ம்ருதத்தை ஸாதித்துத் தருகிறவள்.

குறிப்பாக "ச்யாமளா தண்டக"த்தில்

மாதா மரகத ச்யாமா மாதங்கீ மதசாலிநி *
குர்யாத் கடாக்ஷம் கல்யாணீ கதம்பவநவாஸிநீ **

என்று வருவது, மரகதப் பச்சையாக ஜ்வலிக்கிற மீனாக்ஷியைச் சொல்வதாகவே இருக்கிறது. 'கதம்ப வனம்'என்பதுதான் மதுரை. 'கடப்ப வனம்'என்று தமிழில் சொல்வார்கள்.

" ஓங்கார பஞ்ஜர சுகீம் " என்று ஆரம்பிக்கிற 'நவரத்ன மாலிகை'யிலும் அம்பிகையை ஸங்கீத தேவதையாகத்தான் காளிதாஸன் வர்ணித்திருக்கிறான். "ஓங்காரம் என்ற கூட்டிலிருக்கும் கிளி" என்று அம்பிகையை வர்ணிக்க ஆரம்பிக்கிறான். மதுராபுரியில் மீனாக்ஷி

வீணாதாரிணியாக இல்லாமல், கிளியைத்தான் கையில் வைத்துக்கொண்டிருக்கிறாள்!

'மீனாக்ஷி பஞ்சரத்னம்'என்று ஆசார்யாளும் பண்ணியிருக்கிறார்.

பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டும் - தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

என்ற ஞானஸம்பந்தர் ஈஸ்வரனைப் பாடுகிறபோதுகூட 'பாதிமாது'என்று முதலில் ஈஸ்ரவனுடைய அர்த்தாங்கனாவாக இருக்கிற அவளைத்தான் சொல்லியிருக்கிறார்.

இப்படிப் பல கவிவாணர்கள் அம்பாளைப் பாடியிருக்கிறார்கள். குமரகுருபரர் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்'என்று, ஸாக்ஷ£த் ஜகன்மாதாவைக் குழந்தையாக வைத்து ஸ்தோத்திரித்திருக்கிறார். அதைக் கோவிலிலேயே அரங்கேற்றம் பண்ணினார்கள். அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த திருமலை நாயகரின் அக்ராஸனத்தில் அரங்கேற்றம் நடந்தது. குமரகுருபரர் பாட்டுகளைச் சொல்லிக் கொண்டு வரும்போதே திடீரென்று அங்கே அர்ச்சகருடைய பெண் குழந்தை வந்து, திருமலை நாயகரின் கழுத்தில் போட்டுக்கொண்டிருந்த முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபரரின் கழுத்திலே போட்டுவிட்டதாம். 'இதென்னடா, இந்தப் பெண் இப்படிப் பண்ணுகிறது?' என்று எல்லோரும் பிரமித்துப் போயிருக்கும்போது அந்தப் பெண் அப்படியே கர்ப்பக்ருஹத்துக்குள் போய் அந்தர்தானமாகி விட்டதாம்!அப்போதுதான் எல்லோருக்கும் மீனாக்ஷியே இந்த ரூபத்தில் வந்து குமரகுருபரருக்கு பஹ§மானம் பண்ணிவிட்டுப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது.

தமிழில் 'அங்கயற் கண்ணி' என்று அம்பாளைச் சொல்வார்கள். 'அம்'என்றால் அழகிய, 'கயல்'என்றால் மீன். மீன் போன்ற அழகிய கண்ணுள்ளவள், மீனாக்ஷி என்று அர்த்தம். 'அங்கச்சி, அங்கச்சி' என்றே மதுரையில் எந்தப் பெண்ணையும் கூப்பிடுவது இதானால்தான்.

இதே திருமலை நாயகரிடத்தில் பிரதம மந்திரியாக இருந்த நீலகண்ட தீக்ஷிதர் என்ற பெரியவரும் அம்பாளைப் பற்றி 'ஆனந்த ஸாகர ஸ்தவம்'என்று செய்திருக்கிறார். பரமசிவ அம்ச பூதரான அப்பைய தீக்ஷிதரின் தம்பி பேரர் இந்த நீலகண்ட தீக்ஷிதர். பக்தி, பாண்டித்யம், குணம், சீலம் எல்லாவற்றிலும் பெரியவர். அவர் இந்த ஸ்தோத்திரம் பண்ணினதைப் பற்றி ஒரு விருத்தாந்தம் உண்டு.

பாண்டிய ராஜாக்களின் காலாத்திலிருந்து மீனாக்ஷி கோவிலுக்குத் திருப்பணிகளும், ஏராளமான திருவாபரண ஸமர்ப்பணங்களும் நடந்து வந்திருப்பதைப் போலவே திருமலை நாயகரும் நிறையச் செய்தார். நீலகண்ட தீக்ஷிதரின் மேற்பார்வையில் அப்போது 'புதுமண்டப' நிர்மாணம் நடந்து வந்தது. அதில் வைப்பதற்காக ஸுமந்திரமூர்த்தி ஆசாரி என்ற சில்பி, பத்னிகள் ஸமேதமாக நாயகருடைய சிலையையும் பண்ணினார். பட்டத்து ராணியின் சிற்பத்தைப் பண்ணும்போது வலது முழங்காலுக்கு மேலே ஒரு சில்லு தெறித்துப்போய்விட்டது. என்ன பண்ணினாலும் அந்த மூளி தெரியாமல் மறைக்க முடியாத தினுஸில் இது நடந்துவிட்டது. ரொம்பவும் அழகாக உருவான சிற்பத்தில் இப்படி ஏற்பட்டுவிட்டதே என்று துக்கப்பட்டுக்கொண்டு ஆசாரி (நீலகண்ட) தீக்ஷிதரிடம் போய் அழுதார்.

தீக்ஷிதர் ஏதோ கொஞ்சம் தீர்க்கமாக யோசனை பண்ணினார். அப்புறம் "அப்பா அழாதே! நீ பண்ணின சிலை தத்ரூபமாக இருக்க வேண்டுமென்றுதான் இம்மாதிரி சில்லு தெறித்துப் போகும்படி அம்பாள் பண்ணியிருக்கிறாள். அதனால் அது இருக்கிறபடியே இருக்கட்டும். அப்படியே மண்டபத்தில் வைத்துவிடலாம்" என்று சொல்லிவிட்டார்.

ராணிக்கு அந்த இடத்தில் மச்சம் இருந்திருக்கிறது. தீக்ஷிதருக்கு இது ஸ்புரித்ததால்தான், flash ஆனதால்தான் அப்படிச் சொன்னார். ஸாமுத்ரிகா லக்ஷணப்படி உத்தம ஸ்திரீகளுக்கு இம்மாதிரி மச்சம் இருக்கவேண்டும் என்பதன் படியே ராணிக்கும் இருப்பதைத் தெரிந்து கொண்டார்.

ஆசாரியும் அதேபோலச் சிலையை மண்டபத்தில் வைத்துவிட்டார். இப்போதும் ஏழு பத்தினிகளோடு இருக்கிற திருமலை நாயகர் சிலையில் பட்டமஹிஷியின் சிற்பத்தில் இந்த பின்னம் இருக்கிறது.

வேலைகளை மேற்பார்வையிட நாயகர் வந்தார். ராணியின் சிலையைப் பார்த்துவிட்டு ஆசாரியிடம், "ஏன் இந்த மூளியைச் சரி பண்ணாமலே வைத்திருக்கிறீர்?" என்று கேட்டார்.

"அந்த இடத்தில் அம்மாதிரி இருப்பதுதான் சரியென்று ஐயா தீக்ஷிதர் சொன்னதால்தான் அப்படியே விட்டுவிட்டேன்"என்று ஆசாரி சொன்னார்.

நீலகண்ட தீக்ஷிதரை 'ஐயா தீக்ஷிதர்' என்றே ஸகலரும் சொல்வார்கள். தஞ்சாவூரில் நாயக் ராஜாக்களுக்குப் பிரதம மந்திரியாயிருந்த கோவிந்த தீக்ஷிதருக்கு 'ஐயன்' என்கிற பெயர் வழங்கினதுபோல், மதுரையில் மந்திரியாக இருந்த நீலகண்ட தீக்ஷிதருக்கு 'ஐயா' என்ற பெயர் இருந்தது.

ராணிக்கு இப்படி மச்சம் இருப்பது தீக்ஷிதருக்கு எப்படித் தெரிந்தது என்று நாயகருக்கு ஸந்தேஹம் வந்துவிட்டது. மஹா கோபமும் வந்துவிட்டது. உடனே அவரைக் கைது பண்ணி அழைத்துக்கொண்டு வரும்படி அவருடைய கிருஹத்துக்கு ஸேவகர்களை அனுப்பினார்.

அப்போது தீக்ஷிதர் கிருஹத்தில் மீனாக்ஷியைத் தான் பூஜை பண்ணிக்கொண்டிருந்தார். வேளை கெட்ட வேளையில் ஸேவகர்கள் வந்திருக்கிறார்கள் என்ற உடனேயே அவருக்கு அம்பாள் கிருபையால் என்ன காரணம் என்று புரிந்துவிட்டது.

தீபாராதனைக் கர்ப்பூரத்தை, அப்படியே ஐஸை வைத்துக்கொள்கிற மாதிரித் தம் கண்களில் அழுத்திக் கொண்டுவிட்டார்.

ஈஸ்வராநுக்ரஹத்தில் அப்பர் ஸ்வாமிகளுக்குச் சுண்ணாம்புக் காளவாயே 'மாசில் வீணையும் மாலை மதியமு'மாக இருந்சாற்போல, மீனாக்ஷியின் கருணா கடாக்ஷத்தால் தீக்ஷிதருக்குக் கண்ணைச் சுட்டெரித்துக் கொண்டதும் ஜில்லென்றுதான் இருந்தது!

அப்படியே வாசலுக்கு வந்து, "ராஜா எனக்கு என்ன தண்டனை தர வேண்டுமென்று நினைத்தாரோ அதை அவருக்குச் சிரமம் இல்லாமல் நானே பண்ணிக் கொண்டு விட்டேன் என்று சொல்லுங்கள்" என்று ஸேவகர்களிடம் சொன்னார்.

அவர்கள் அப்படியே போய்ச் சொன்னவுடன் நாயகர், "இத்தனை பெரிய மஹானைத் தப்பாக நினைத்து அபசாரம் பண்ணி விட்டாமே!" என்று ரொம்பவும் பச்சாத்தாபம் கொண்டார். மாணிக்கவாசகரைத் தண்டித்ததற்காக இதே மதுரையில் அரிமர்த்தன பாண்டிய ராஜா எத்தனை துக்கப்பட்டாரோ அத்தனை துக்கப்பட்டார் திருமலை நாயகர்.

உடனே தீக்ஷிதரின் வீட்டுக்கு ஓடோடி வந்தார். தாம் பண்ணின அபசாரத்துக்கு மன்னிப்பு வேண்டினார்.

உத்தம குணமுள்ள தீக்ஷிதர், "நீ ஸந்தேஹப்பட்டது நியாயம்தானே? எவருக்கும் ஏற்படக் கூடிய ஸம்சயம் தானே இது?" என்று பெரும்போக்காகச் சொல்லி மன்னித்து விட்டார்.

"என்னை நீங்கள் மன்னித்தது பெரிதில்லை. ஆனால் நீங்கள் இப்படிக் குருடராக இருக்குமளவும் என் மனஸ் எப்படி ஸமாதானப்படும்? அது என்னை உறுத்திக் கொண்டேதான் இருக்கும். எப்படியாவது நீங்கள் மறுபடியும் கண்பார்வை பெற்றால்தான் எனக்கு நிம்மதியாகும்" என்று நாயகர் ரொம்ப மன்றாடினார்

அப்போதுதான் தீக்ஷிதர் இந்த 'ஆனந்த ஸாகர ஸ்தவ'த்தைப் பாட ஆரம்பித்தார். பரம துக்கமான ஒரு ஸந்தர்ப்பத்தில் லோக ஜனங்களின் ப்ரதிநிதியாக துக்கத்தோடு ப்ரலாபிக்கும்போதே உள்ளூர அம்பாளுடைய அருள் என்கிற ஆனந்த ஸாகரத்தில் மிதந்துகொண்டு பாடினார். கர்மம், பக்தி, ஞானம் முதலான எல்லாவற்றுக்கும் மேலாக 'அவள் விட்ட வழி' என்று பிரபத்தி (சரணாகதி) பண்ணுவதையே அதிலே விசேஷமாகச் சொல்லியிருக்கும். அம்பாளை எதிரே வைத்துக்கொண்டு பேசுகிற மாதிரி இருக்கும். திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கலாம் போல ஒரு

இடத்தில், ***" சரணம் ப்ரபத்யே மீனாக்ஷி விச்வ ஜநநீம் ; ஜநநீம் மமைவ "***என்று வரும் (ஸ்லோ 32) 'ஸகல லோக மாதா எனக்குங்கூட மாதா'என்று விநயமாகச் சொல்கிறார். 'அவளே கதி என்று சரண் அடைகிறேன்'என்கிறார்.

நூறுக்கு மேல் ஸ்லோகமுள்ள இந்த ஸ்துதியில் முதல் பாதியில் இப்படி பிரபத்தி தர்மத்தை விளக்கவிட்டு, 'ஸௌந்தர்ய லஹரி'யில் முதல் பாதியில் சாக்த தத்வங்களைச் சொல்லிவிட்டு இரண்டாம் பாதியில் தேவியைக் கேசாதிபாதம் வர்ணிக்கிறமாதிரி, தீக்ஷிதரும் இரண்டாம் பாதியில் அம்பாளைப் பாதாதி கேசம் வர்ணிக்கிறார். இந்த வர்ணனை ஆரம்பத்தில்தான், 'ஸௌந்தர்ய லஹரி'யில் அதன் தலைப்பு வருகிறது போலவே 'ஆனந்த ஸாகர'என்ற இந்தத் தலைப்பும் வருகிறது.

இதிலே ஒரு இடத்தில், ***" த்ரஷ்டாஸ்மி கேந ததஹம் து விலோசநேந ?"- "*** (உன் சரணங்களை எனக்குக் காட்டினாலும் கூட) அதை நான் எந்தக் கண் கொண்டு பார்ப்பேன்?"என்று வருகிறது (ஸ்லோ 61) மேலே சொன்ன விருத்தாந்தம் நிஜம் என்பதற்கு இது internal evidence (உட்சான்று) .

இப்படி பாடி முடித்ததும் அம்பாள் அவருக்குப் பார்வை கொடுத்துவிட்டாள். திருஷ்டி விசேஷத்தினாலேயே 'மீனாக்ஷி' என்று பெயர் பெற்றிருப்பவள் தீக்ஷிதருக்கு மீளவும் திருஷ்டியை அநுக்ரஹம் பண்ணிவிட்டாள்.

ஆனாலும் அதோடு ராஜ ஸேவகம் போதுமென்று அவர் ராஜிநாமா பண்ணிவிட்டுத் தாம்ரபரணி தீரத்தில் பாலாமடைக்குப் போய்ச் சிறிது காலம் வாஸம் செய்து விட்ட ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு ஸித்தாயாகி விட்டார். அதனால் அவ்வூருக்கு 'நீலகண்ட ஸமுத்ரம்' என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த நீலகண்டரே அநுபவித்த ஸமுத்ரம், ஸாகரம், ஆனந்த ஸாகரம் எதுவென்றால் மீனாக்ஷியின் அநுக்ரஹம்தான்.

இப்படி இருக்கிறது மீனாக்ஷியின் பெருமை. மிகவும் உயர்ந்தவர்களாக இருக்கிற குமர குருபரர், நீலகண்ட தீக்ஷிதர் ஆகியவர்களுக்கு மட்டுமில்லாமல், 'இந்த அம்பாளுக்கு என்ன சக்தி இருக்கிறது?' என்று கேலி

பண்ணின ஒரு வெள்ளைக்கார கலெக்டருக்கு*1 கூடப் பரம கருணையோடு அநுக்ரஹம் பண்ணியிருக்கிறாள். அந்த துரை படுத்துக் கொண்டிருந்த பங்களாவின் மீது இடி விழ இருந்த போது தூக்கத்திலிருந்தவனை எழுப்பி வெளியேறும்படி எச்சரிக்கைப் பண்ணிக் காப்பாற்றியிருக்கிறாள். அப்புறம் அவன் பரம பக்தனாகி அம்பாளுக்குத் திருவாபரணம் - stirrup என்பதான குதிரை மீது ஏற உதவும் அங்கவடி - பண்ணி அர்ப்பணம் செய்திருக்கிறான்.

இப்படி ஆதியிலிருந்து இன்று வரை மஹிமையோடு இருந்து கொண்டிருக்கிற மீனாக்ஷியை, கண்ணழகை வைத்தே பெயர் பெற்றிருப்பவளை, தேவி ஸ்தோத்திரங்களுக்குள் இரண்டு கண்கள் மாதிரி இருக்கும் ஸஹஸ்ரநாமத்திலும் ஸௌந்தர்ய லஹரியிலும் சொல்லவில்லை என்றால், குறையாக, ஏமாற்றமாக இருக்கிறது.

ஆனால் நன்றாக கவனித்துப் பார்த்தால் குறை நிறையாகிறது. இரண்டிலுமே மீனாக்ஷியை நேராகச் சொல்லாவிட்டாலும் ஸ¨சனையாகச் சொல்லித்தான் இருக்கிறது. உடைத்துச் சொல்லாமல் ஸ¨சனையாகச் சொன்னதாலேயே அவளுக்கு ஜாஸ்தி விசேஷம் என்று தோன்றுகிறது

அது எப்படி?

எப்போதுமே ஸ்தூலத்தைவிட ஸ¨க்ஷ்மத்துக்குத் தானே மதிப்பு ஜாஸ்தி?அதனால் வெளிப்படையாகச் சொல்வதைவிட மறைத்துச் சொல்லுவதில்தான் மஹிமை ஜாஸ்தி.

விலை உயர்ந்த ரத்தினம் இருந்தால் அதை எல்லார் கண்ணும் படும்படியாகப் போட்டு வைப்பார்களா?பெட்டிக்குள் வைத்து, அதை இன்னொரு பெட்டியில் போட்டு, வீட்டின் உள்ளறையில்தானே பத்திரப்படுத்தி வைப்பார்கள்? அப்படித்தான் மீனாக்ஷியை ஸஹஸ்ர நாமத்திலும் ஸௌந்தர்யலஹரியிலும் ரஹஸ்யமாகச் சொல்லியிருப்பதாலேயே அவளுக்கு விசேஷ மதிப்புக் கொடுத்ததாகிறது.

ரொம்பவும் ப்ரியமானவர்கள், ரொம்பவும் மரியாதைப்பட்டவர்கள் ஆகியோரின் பெயரைச் சொல்வதில்லையல்லவா? இப்படித்தான் பாகவத்தில் கூட

ராதையின் பெயரைச் சொல்லாமலே ஒரு இடத்தில் மட்டும் ஸ¨சனையாகக் கோடி காட்டியிருக்கிறது என்று சொல்வதுண்டு. ராதாகிருஷ்ண பக்திக்காரர்கள் கிருஷ்ணனைவிட ராதை ஒரு படி உசத்தி என்பார்கள். கிருஷ்ணனே அவள் காலில் விழுந்து பிரணய கலஹத்தை (ஊடலை) த் தீர்த்திருப்பதை எடுத்துக் காட்டுவார்கள். அத்தனை உசந்தவள் பேரை மண்டையிலடித்த மாதிரி சொல்லக்கூடாதென்றுதான் பாகவத்தில் ஒரு இடத்தில் மட்டும் மறைமுகமாகச் சொல்லி அதோடு விட்டிருக்கிறது என்கிறார்கள்*2.

இம்மாதிரி மீனாக்ஷியை ஸஹஸ்ரநாமம், ஸௌந்தரியலஹரி இரண்டிலும் நேராகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லியிருப்பதாலேயே அவளுக்கு ஏற்றம் கொடுப்பதாகத்தான் ஏற்படுகிறது

சரி, 'லலிதா ஸஹஸ்ரநாமம்'மீனாக்ஷியை எங்கே சொல்கிறது? என்ன சொல்கிறது?

ஆரம்பத்தில் அம்பாளை வர்ணித்துக் கொண்டு வரும்போது **வக்த்ர லக்ஷ்மீ பரீவாஹ சலன் மீநாபலோசநா** என்று ஒரு நாமாவைச் சொல்கிறது. ***"வக்த்ர லக்ஷ்மீ"*** என்றால் (அம்பாளுடைய) முககாந்தி. அது ஒரு பெரிய பிஹவாஹமாக இருக்கிறது, 'பரீவாஹம்' என்றால் பிரவாஹம். இப்படி முக தேஜஸ் பெருக்கெடுத்து ஓடுகிறது என்றால் நீர்பெருக்கில் மீன் இருக்க வேண்டுமே!இந்த காந்தி ஸமுத்திரத்தில் எங்கே மீன்?

நீண்டு நீண்டு விளங்கும் அம்பாளுடைய நேத்திரம் இருக்கிறதே அதுதான் மீன். லோசனம் என்றால் கண். (லோகனம் என்றால் பார்ப்பது. பார்க்கப்படுவதால் தான் 'லோகம்'என்றே பேர். தமிழிலும் 'பார்'என்றால் நோக்குவது, உலகம் என்ற இரண்டு அர்த்தமும் ஏற்படுகிறது. இங்கிலீஷ் look என்பதும் 'லோக'ஸம்பந்தமுள்ளதுதான்.) மீன் மாதிரி வடிவத்தில் இருக்கிற லோசனம் - **மீநாப லோசநம்** . ரூபத்தில் மீன் மாதிரி இருப்பது மட்டுமின்றி, பிரவாஹத்தில் மீன் இருக்க வேண்டும் என்ற நியாயத்தின்படியும் ஸௌந்தர்ய ப்ரவாஹமான அம்பாள் இப்படிப்பட்ட கண்ணை

உடையவளாயிருக்கிறாள். 'மீனாக்ஷி'என்று அப்பட்டமாகச் சொல்லாமல் 'மீநாப லோசநா'என்று சொல்லியிருக்கிறது.

ஆகக்கூடி ஒரு குறை தீர்ந்தது.

'ஸௌந்தர்யலஹரி'யில் என்ன வருகிறது?அதில் அம்பாளின் கண்களை அநேக ஸ்லோகங்களில் ஒன்றில் (56) முதலிரண்டு வரிகள்:

தவாபர்ணே கர்ணே ஜபநயன பைசுன்ய சகிதா :
நிலீயந்தே தோயே நியதம் அநிமேஷா : சபரிகா :

அபர்ணே - அபர்ணா என்ற பெயருடைய அம்பிகையே! **தவ** - உன்; **கர்ணே** - காதில் (காதிடம்) ; **ஜபநயன** - பேசுவது போன்ற கண்கள்; **பைசுன்ய சகிதா :** - (தங்களைப் பற்றிக்) கோள் சொல்கின்றன என்று பயமடைந்தவையான; **சபரிகா** :- பெண் மீன்கள்; **அநிமேஷா** :- கண் மூடாதவையாக; **தோயே** - ஆற்றுக்குள்; **நிலீயந்தே** - முழுகி விடுகின்றன (என்பது) , **நியதம்** - நிச்சயம்.

மீன் ஏன் எப்போதும் ஆற்றின் மேல் மட்டத்தில் நீந்தாமல் உள்ளுக்குள்ளேயே நீந்திக்கொண்டிருக்கிறது? இதற்கு இங்கே ஆசார்யாள் ஒரு காரணம் கல்பிக்கிறார். காதளவோடும் அம்பாளின் கண்களை மீன்கள் பார்த்தன. லோகத்தில் ஒரு புல் பூண்டு புழு பூச்சிகூட விட்டுப் போகாமல் ஜகன்மாதா விழிகளை ஸகல திக்குகளிலும் திருப்பிக்கொண்டிருக்கிறாள். அப்போது ஒவ்வொரு சமயம் அவை கண்கோடிக்கு வரும்போது காதைத் தொட்டுவிடும் போலிருக்கிறது. அப்போது அவை காதிடம் ரஹஸ்யம் பேசுகிற மாதிரி மீன்களுக்குத் தோன்றுகிறது என்ன ரஹஸ்யம்?உருவத்தில் இந்த மீன்கள் அம்பாளுடைய அந்தக் கண் மாதிரித்தான் இருக்கின்றன. ஸமஸ்த லோகாநுக்ரஹத்துக்காக எந்த ஜீவனும் விட்டுப் போய் விடக் கூடாது என்று, அந்தக் கண்கள் ஓயாமல் சஞ்சரிப்பதைப் பார்த்துக் 'காப்பி'அடிக்கிறது போலத்தான் இந்த மீன்களும் ஓயாமல் ஒழியாமல் சஞ்சரித்துக் கொண்டேயிருக்கின்றன. இதனால்தான் மீன்களுக்கு பயம் வந்து விடுகிறது. அம்பாளுடைய கண்கள் அவளுடைய காதிடம், "மீன்கள் என்னோடு போட்டி போடுகின்றன" என்று ரஹஸ்யமாகக் கோள் சொல்கின்றனவோ என்று

பயம்!கண்களுடைய பெடிஷனைக் கேட்டு மஹா பராசக்தியானவள் இந்த அல்ப ஜந்துவான மீன்கள் மேல் ஆன் எடுக்க வந்து விட்டால்?இந்த பயனத்தில்தான் நீர் மட்டத்தின் மேல் பரப்பில் நீந்தாமல் அவை உள்ளுக்குள் மறைவாக முழுகிவிடுகின்றன!

தோற்றுப்போன துரியோதனன் மடுவுக்குள் போய் ஒளிந்து கொண்ட மாதிரி, அம்பாளின் கண்ணழகுக்குத் தோற்றுப் போன மீன்கள் ஜலத்தின் உள்மட்டத்துக்குப் போய்விடுகின்றன!

'சபரிகா': என்றால் பெண் மீன்கள் என்று அர்த்தம். 'பைசுன்ய' என்றால் கோள் சொல்லுவது;'கோழி மூட்டுவது'என்கிறோமே அது!'சகிதா': என்றால் பயத்தில் நடுங்கிக்கொண்டிருக்கிறவை என்று அர்த்தம். 'பைசுன்ய' என்பதற்கு அஸ¨யை என்று பொருள்கொண்டால், காதளவோடும் கண்களைப் பார்த்து மீன்களே அஸ¨யை, பயம் இரண்டும் அடைந்தன என்றாகும். அம்பாளின் கண்ணோடு யுத்தம் செய்தால் வடிவழகு, சஞ்சரிக்கும் ஸாமர்த்தியம் இரண்டிலுமே தோற்றுப் போய் விடுவோம் என்றே மத்ஸ்யங்கள் ஜலத்துக்குள் அஜ்ஞாத வாஸம் ஆகி விடுகின்றன. மதுரையில் மீனாக்ஷி ஆலயப் பொற்றாமரைக் குளத்தில் மீனே இருப்பதில்லை. காரணம் 'அவளுடைய கண்ணழகில் வெட்கி அது அங்கே தலைகாட்டுவதே இல்லை'என்று வழக்கு ஏற்பட்டிருக்கிறது.

அம்பிகையின் நேத்ரங்களுக்கு மத்ஸ்யத்தை ஒப்புவமை சொல்லி, அது ஒளிந்து கொண்டதாகவும் கூறுகிற 'ஸௌந்தர்ய லஹரி'ஸ்லோகத்தில் ஆசார்யாள் மீனாக்ஷியைத்தான் ஒளிந்து ஸ¨சனையாகக் குறிப்பிடுகிறார்!

இரண்டாவது குறையும் தீர்ந்தது. மீனாக்ஷி என்ற அவஸரத்தை பரமோத்தமான இரண்டு தேவீ ஸ்தோத்ரங்களும் அறிவிக்கின்றன என்று ஆகிவிட்டது.

ரூபம், சாஞ்சல்யம் (சஞ்சல ஸ்வபாவம்) இவற்றில் கண்ணுக்கும் மீனுக்கும் ஒற்றுமை இருப்பது மட்டுமின்றி அம்பாளின் கண்ணை மீனாகச் சொல்வதில் ஒரு தத்வ விசேஷமும் இருக்கிறது.

ஆடு, மாடு, மனிதர்கள் முதலிய இனங்கள் குட்டிகளை, குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கின்றன. Mammal என்ற இவற்றைச் சொல்கிறார்கள். பக்ஷிகள் குஞ்சுக்குப் பால் கொடுப்பதில்லை. 'மம்மல்' மாதிரியில்லாமல் இவை முட்டையிட்டு, அடைகாத்து, குஞ்சு பொரிக்கின்றன. அப்புறம் பால் கொடுக்காமல் புழு பூச்சிகளைக் கொண்டு வந்து ஊட்டி வளர்க்கின்றன. மீன் என்ன பண்ணுகிறது?முட்டைதான் போடுகிறது. ஆனால் அடைகாக்கிறதில்லை. அப்புறம் குஞ்சுக்குப் பால் கொடுப்பதில்லை;வேறு ஆஹாராதிகளைக் கொண்டு வந்து ஊட்டுகிறதுமில்லை. பின்னே என்ன பண்ணுகிறது என்றால்:இதைப்பற்றி Zoology (பிராணி இயல்) , Biology (உயிரியல்) -காரர்கள் என்ன சொல்லுவார்களோ சொல்லிவிட்டுப் போகட்டும் - நீண்ட கால பொது நம்பிக்கைப்படி, கவி மரபுப்படி (poetic tradition படி) - தாய் மீன் தன் கண்ணால் முட்டையைப் பார்த்துப் பார்த்தே குஞ்சு பொரித்துவிடும். அப்புறமும் தன் கண் பார்வையாலேயே அதற்குப் பசியாற்றிப் போஷித்துவிடும் தாய் மீனானது இப்படித் திருஷ்டியாலேயே சிசு ரக்ஷணை பண்ணிவிடுகிறது என்பது ஐதிஹ்யம் (ஐதீகம்) .

ரூபத்தில் மட்டுமில்லாமல், திருஷ்டி மாத்திரத்தால் குழந்தைகளை ரக்ஷிக்கிற குணத்தாலும் அம்பாளின் நேத்திரம் மீனாக இருக்கிறது. அம்பாளின் குழந்தைகள் யார்?எல்லாருந்தான்; எல்லாமுந்தான். ஈஸ்வரனையேகூட அவள் குழந்தைதான என்று ஒரு பாவத்தில், தத்வார்த்தமாகச் சொல்லியிருக்கிறது. புல் பூண்டிலிருந்து ஆரம்பித்து பிரம்மாதிகள் வரை எல்லாரையும் தன் கடாக்ஷஅம்ருதத்தால் நனைத்து நனைத்தே உய்விக்கிற பரம கருணையுள்ள லோக ஜனனிதான் மீனாக்ஷி. மீன் போல் ரூபமுள்ள அவளுடைய கண்ணின் திருஷ்டி பட்ட மாத்திரத்தில், மீன் குஞ்சுக்குத் தாயாரின் திருஷ்டியாலேயே வயிறு நிறைந்துவிடுகிற மாதிரி நம் மனஸ் நிறைந்து விடுகிறது. அவளுடைய கடாக்ஷமே ஞானப் பாலாக உயிரை, அறிவை வளர்த்து உய்வித்துவிடுகிறது.

" **அநிமேஷா** :"- 'கண்ணைக் கொட்டாமல்'என்று 'ஸௌந்தர்ய லஹரி'ஸ்லோகத்தில் மீனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. (கண் கொட்டுகிற நாழி தான் 'நிமிஷம்'என்பது. அதுதான் மதுரை மருதையாகிறது போல்

'மினிட்'ஆயிற்று.) மீன் தூங்குவதில்லை என்று traditional belief (மரபு வழி நம்பிக்கை) அதற்கே ஆசார்யாள், கண்களின் கோழிப் பெடிஷனைக் கேட்டு அம்பாள் எங்கே தன்னோடு சண்டை போட ஜலத்தின் அடி மட்டத்திற்கும் வந்து விடுவாளோ என்றுதான் அங்கேயும் மீன் கண் கொட்டாமலே alert -ஆக (உஷாராக) இருந்து கொண்டிருக்கிறதென்று காரணம் கல்பிக்கிறார்! மீனாக்ஷியும் கண்ணைக் கொட்டுவதில்லை. கொட்டினால் அந்த fraction of a second -ல் (விநாடித் துகளில்) தன் கடாக்ஷ£ம்ருதம் குழந்தைகளுக்கு இல்லாமல் போய்விடுமோ என்பதால் எப்போதும் விழிப்போடு லோகத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறாள்.

மீனாக்ஷிக்கும் மீனுக்கும் இன்னொரு ஸம்பந்தம். வைகைக்குப் பூர்வத்தில் க்ருதமாலா என்று ஸம்ஸ்க்ருதப் பேர் இருந்திருக்கிறது. இங்கே இருந்த வைவஸ்வத மநுவுக்காகத்தான் பகவான் மத்ஸ்யாவதாரம் பண்ணினார். இதைச் சொல்லி நீலகண்ட தீக்ஷிதர் 'சிவலீலார்ணவ'த்தில் வேடிக்கை பண்ணியிருக்கிறார். "பிரளயத்தில் மாட்டிக் கொண்ட வேதத்தை மீட்பதற்காக மஹா விஷ்ணு மீனாய் அவதரித்துத் தேடித் தேடிப் பாடுபட்டார். மீனாக்ஷியான உன் சரணாரவிந்தத்தையோ அந்த வேதமே தேடிக் கொண்டிருக்கிறது"என்கிறார்!

ஆவிஷ்ய கிந்நம் நிகமாந் அசேஷாந்
அமீ ந மீநம் ப்ரதமம் ஸ்மராம :*
ஆவிஷ்யமானம் நிகமை-ரசேஷை :
அம்ப ஸ்நுமஸ்தே வயமாக்ஷி மீநம் *

மதுரையிலே வேதம் நிரம்பியிருக்கிறது. "சேரர் தலைநகரான வஞ்சியில் உள்ளவர்களும், சோழர் தலைநகரான உறையூரில் உள்ளவர்களும் கோழி கூவி எழுந்திருப்பார்களென்றால், பாண்டியர் தலைநகரான மதுரையிலுள்ள நாங்கள் வேத ஒலி கேட்டே எழுந்திருப்போம்" என்று 'பரிபாடலி'ல் இருக்கிறது.

நான் மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம வின்றுயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே.

அம்பாள் இங்கே பெரிய கோபுரம் கட்டிக் கொண்டிருக்கிறாள். கோபுரம் என்பதென்ன?ஸநாதன தர்ம விருஷத்தின் பழம். அதற்கு வேர் எது?வேதம்தான். இத்தனை உயர கோபுரப் பழமென்றால் அதற்கேற்க அத்தனை ஆழமாக வேத வேரும் போயிருக்கிறது மதுரையில்!அம்பாள் அங்கே வேத ஸ்வரூபிணியாக ஜ்வலிக்கிறாள், நாத ஸ்வரூபிணியாக, ஸங்கீத ஸ்வருபிணியாக இருப்பதோடு.

மீனாக்ஷியின் அம்ருத கடாக்ஷம் படுகிற இடமெல்லாம் மதுரமாகிறது. மதுரத்துக்கு, இனிமைச் சுவைக்கு பெயர் போனது அமருதம்தானே? ஜீவஜந்துகள் மதுரம் ஆவது என்றால் என்ன?அன்பு மயமாவது என்றுதான் அர்த்தம். பரிபூர்ணத்வம் அடைவதே ஜீவனுக்கு மதுரம். கட்டைக் கசங்காய் கடைசியில் பக்குவமாகிற போது கனிந்து மதுரமாவதுபோல், அநேக துர்குணங்கள் கொண்ட நாம் கனிந்து மாறிக்கொண்டேபோய்ப் பக்குவமாகிப் பெறுகிற பூர்ண நிலைதான் நமக்கு மதுரம். அப்படிப்பட்ட பூர்ணத்வ மதுரத்தை நமக்குத் தருவது மீனாம்பிகையின் கடைக்கண். லோகத்தில் இருக்கிறபோதே நிறைவைத் தந்து, அப்புறம் இந்த லோகம், ஸம்ஸார பாசம் இல்லாமல் மோக்ஷ£னந்தம் தருகிறது.

முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு அப்பேர்ப்பட்ட அநுக்ரஹத்தை மீனாம்பிகை செய்தாள். தீபாவளி அமாவாஸ்யை அன்று அம்பாளுக்குப் பூஜை பண்ணிவிட்டு '**மீனாக்ஷி** 'என்று அவர் மனமுருகிப் பாடிக் கொண்டே போனார். பச்சைப் பசேல் என்று பரம குளிர்ச்சியாகப் பிரகாசிக்கிற அம்பாளின் ஸ்வரூபத்தை 'மரகதச் சாயே' என்று சொல்லி, ***' மீனலோசனீ, பாசமோசனீ'*** என்ற வார்த்தைகளை அவர் கானம் பண்ணிக் கொண்டிருக்கிறபோதே அவருடைய ஸம்ஸார பாசத்தை அம்பாள் நீக்கித் தன் பாதாரவிந்தத்தில் சாச்வதமாகச் சேர்த்துக் கொண்டு விட்டாள். ஸங்கீதத்துக்கே

அதிதேவதையாக இருக்கப்பட்ட மீனாக்ஷி தீக்ஷிதரின் நாதோபாஸனைக்குப் பலன் தந்துவிட்டாள்.

இப்படிப் ஜீவனுக்குப் பூர்ணத்வம் என்ற மதுரத்தைத் தரும் மீனாக்ஷியின் மதுரகடாக்ஷம் விசேஷமாகப் பரவியிருப்பதால்தான் அவளுடைய க்ஷேத்ரத்துக்கே மதுரை என்று பெயர் இருக்கிறது. அம்பாளின் கடைக்கண் அமுது அலை அலையாகப் பரவியிருப்பதால் அது மதுரையாகிறது. அலையடித்துப் பரவுகிறதென்றால் அப்போது அவளுடைய காடக்ஷத்தை அநுக்ரஹ ஸமுத்ரம் என்று சொல்லவேண்டும். முதலில், ஸமுத்ரத்தில் மீன் இருக்கிற மாதிரி அம்பிகையின் முக காந்திக் கடலில் கண் மீன்கள் துள்ளுகின்றன என்று பார்த்தோம். இப்போது பார்த்தால் முகலாவண்ய ஸமுத்ரத்துக்குள் இருக்கிற இந்த நேத்திர மீனுக்குள்ளும் ஒரு ஸமுத்ரம் - அருட்கடல் - இருக்கிறதென்று தெரிகிறது!

அவள் எங்கேயோ இருக்கிறாள், கடாக்ஷம் மட்டும் நம் மேலே படுகிறது என்று இல்லை. தாய் தன் மடியில் குழந்தையை அன்பாகப் போட்டுக் தாலாட்டிக் கொண்டிருப்பதுபோல அவளுடைய கடாக்ஷத்திலேயே அவளுடைய மடியில் கிடப்பதான ஆறுதலும் அவளுடைய வாத்ஸல்யம் நிறைந்த வாக் அமுதத்தை கேட்பதான தாபசாந்தியும் குழந்தைகளான நம் இத்தனை பேருக்கும் கிடைக்கிறது. மீனின் கடாக்ஷமே மீன் முட்டைக்குத் தன்னை அடைகாக்கிற அணைப்பு ஸ்பரிசமாகவும், தாயார் ஊட்டும் க்ஷீரமாகவும் இருக்கிறமாதிரி மீனாக்ஷியின் கடாக்ஷமே நம்மை அணைத்து ரக்ஷித்து ஞானப்பால் ஊட்டிவிடுகிறது. அவள் ஒரு மூர்த்தியாக நின்று, அவளுக்குக் கிட்டே ஸ்தூலமாக இருக்கும் மதுரை வாஸிகள் பாக்யசாலிகள்.

என்னை 'தர்சனம்'என்று எதுவோ ஒன்று பணணுவதற்காக மீனாக்ஷி நகரவாஸிகளான நீங்கள் இவ்வளவு பேர் வந்து ஸந்தோஷப்படுகிறீர் களென்றால், அவளுக்குக் கிட்டவே வாழ்கிற உங்கள் இத்தனை பேரையும் தர்சனம் பண்ணுவது எனக்கும் ஆனந்தமாக இருக்கிறது*3. இப்படி நாம் பரஸ்பரம் மனம் கனிந்து பிரீதியோடு இருப்பது ஸாக்ஷ£த் மீனாம்பிகை வர்ஷிக்கும் பேரானந்தத்தில் ஒரு துளிதான். இது லோகம் முழுக்க,

எல்லையில்லாத அவளுடைய மாத்ருத்வத்தில் அடங்கியுள்ள அத்தனை உயிர்களுக்கும் பரவி, லோகம் முழுவதம் அவளுடைய கடாக்ஷ£ம்ருதம் பூர்ணமாகப் பொழிந்து, அதனால் எங்கேயும் பேரானந்தம் நிரம்பியிருக்கும்படியாக அவளுடைய சரணாவிந்தங்களிலேயே பிரார்த்தனை செய்வோம்.

மதுராபுரி நாயிகே நமஸ்தே
*மதுராலாப சுகாபிராம ஹஸ்தே **
மலயத்வஜ பாண்ட்ய-ராஜகந்யே
*மயி மீனாக்ஷி க்ருபாம் விதேஹி தந்யே ***

(மதுராபுரிக்கு நாயகியே!மதுரமாகக் கூவும் கிளியை ஏந்தி எழிலுற்ற கரத்தை உடையவளே!மலயத்வஜ பாண்டிய மன்னன் மகளே!ஸகல ஐச்வர்யமும் நிறைந்தவளே!உனக்கு நமஸ்காரம். எனக்கு உன் க்ருபையை அருளுவாய்!)

மீனாக்ஷியின் புகழை இப்படிப் பாடிப் பாடியே, லோகம் முழுவதும் அவள் குழந்தைகள் என்பதில் ஒரு பேதம், ஒரு த்வேஷம் இல்லாமல், அத்தனை பேரும் சிந்தனையிலும் செயலிலும் ஒற்றுமையுடன் வாழ்க்கையை ஆனந்தமாய் நடத்துவோம்.

---

*1. ரோஸ் பீட்டர்

*2. கோபியரோடு ஆடிக்களித்த கண்ணன் திடீரென மறைந்த போது கோபிகள் அவனை தேடிச் செல்கையில் அவன் ஒரே கோபிகையை மட்டும் உடன் அழைத்துச் சென்றதற்கான தடயத்தைக் காண்கிறார்கள். இவளே ராதை. ஆயினும் நேராகப் பெயர் சொல்லாமல் அவர்கள் "இவளால் கண்ணன் விசேஷமாக ஆராதிக்கப்படுகிறான்" ("அநயா (ஆ) ராதிதோ நூநம்") என்னும்போதே ராதா நாமத்தைக் குறிப்பாலுணர்த்தி விடுகிறார்கள் (10.30.28) .

*3.1961 ஏப்ரலில் மதுரை விஜயத்தின்போது அந்த நகர வாஸிகளைப் பற்றி அருளிய வாசகம்

20-மங்களாரத்தி

20.1-ஸீதாராமருக்கும் பக்கபலம்!

பலமில்லாதவருக்கு பலம் ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி தான்: ***" நிர்பல் கே பல் ராம் ".*** ஆபத்து வந்து சாய்கிற ஸமயத்தில் யார் வந்து தாங்கிக்கொண்டு பலம் தர முடியும்?ராமன்தான்!" ***ஆபதாம் அபஹர்த்தாரம் "***1என்கிறோம். ***" அக்ரத ப்ருஷ்டதச்சைவ பார்ச்வதச்ச மஹாபலௌ "***2 - அதாவது, நமக்கு முன்னேயும் பின்னேயும் இரண்டு பக்கங்களிலும் நம்மைச் சூழ்ந்து கொண்டு ஸதாவும் நம்மை ரக்ஷிக்கிற மஹாபலவான் யார்? அந்த ராமன்தான். நமக்குத் துளி ஆபத்து வருகிறதென்றாலும், அம்பை விடுவதற்கு ஸித்தமாகக் கோதண்டத்தின் நாண்கயிற்றைக் காதுவரை இழுத்தபடி நம்மைச் சூழ்ந்திருக்கிறான். அவனை விட்டு விலகாத லக்ஷ்மணனும் அவனோடேயே இருந்து கொண்டிருப்பான். - ***" ஆகர்ண பூர்ண தந்வாநௌ ரக்ஷேதாம் ராம லக்ஷ்மணௌ***"3. ஆனால் இப்படிப்பட்ட புருஷ ச்ரேஷ்டர், வீரராகவன், விஜயராகவன் என்றே பேர் பெற்ற மஹா வீரர் ஆஞ்ஜநேயரைத் தமக்குப் பக்கபலமாகக் கொண்டதால் தான் அவதார கார்யத்தைப் பண்ண முடிந்ததாகக் காட்டியிருக்கிறார்!

மநுஷ வேஷம் ப்ரமாதமாய்ப் போட்டவர் அவர். ஸீதையை ராவணன் கொண்டு போய் எங்கே வைத்திருக்கிறான் என்று தெரியாத மாதிரியே நடித்தார். சொல்லி முடியாத துக்கப்பட்டார். அப்போது அவள் இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்துச் சொல்லி அவருக்கு உத்ஸாஹமும், தெம்பும், பலமும் தந்தது யார் என்றால் ஆஞ்ஜநேய ஸ்வாமிதான்.

ஸீதையைப் பிரிந்து இவர் பட்ட துக்கத்தைவிட இவரைப் பிரிந்து ஸீதை பட்ட துக்கம் கோடி மடங்கு. ப்ரிய பத்னி பக்கத்தில் இல்லையே, தன்னைப் பிரிந்து அவள் கஷ்டப்படுவாளே என்ற கஷ்டம் மட்டுந்தான் ராமருக்கு. ஆனால் அவளுக்கோ இதோடு ராக்ஷஸ ராஜ்யத்தில் மஹா காமுகனால் சிறை வைக்கப்பட்டிருப்பதான மஹா கஷ்டமும் சேர்ந்திருந்தது.

'அபலா'என்றே ஸ்திரீக்குப் பெயர் ஸாக்ஷ£த் ஜகன்மாதாவான மஹாலக்ஷ்மி ஸீதையாக வந்து அபலையிலும் அபலையாக அசோகவனத்தில் படாத கஷ்டப்பட்டு, அந்தக் கஷ்டத்துக்கு முடிவு ப்ராணனை விடுவதுதான் என்று சுருக்குப் போட்டுக்கொள்ள இருந்தபோது அவளுக்கு உத்ஸாஹத்தை, தெம்பை, பலத்தைத் தந்தது - ஆஞ்ஜநேயர்தான்.

அவர் செய்த அரும் செயல்கள் ஒன்றில்லை, இரண்டில்லை. ஆனால் இதற்கெல்லாம் சிகரமாக எதைச் சொல்லலாமென்றால் இந்த லோகம் முழுவதற்கும் ஸ்ரீயைக் கொடுத்து, ஸெளபாக்யத்தைக் கொடுத்து அநுக்ரஹிக்கும் தாயார் மனம் குலைந்து மட்கிக் கிடந்தபோது ஆஞ்ஜநேய ஸ்வாமி காய்ந்த பயிருக்கு மழையாகப் போய் அவளுக்கு உயிரும் உத்ஸாஹமும் தந்தாரே அதுதான். " **ஜானகீ சோக நாசநம்** "என்று இதைத்தான் சிறப்பித்துச் சொல்கிறோம்.

அஞ்ஜாநாநந்தனம் வீரம் ஜானகீ சோக நாசநம்

அஞ்ஜனை என்று யாரோ ஒரு வாநர ஸ்த்ரீக்குப் புத்ரராய் அவதாரம் பண்ணி அவளுக்கு ஆனந்தம் கொடுத்தார். இது பெரிதில்லை. எந்தப் பிள்ளை, அவன் என்ன துஷ்டத்தனம் செய்பவனாயிருந்தாலும், அம்மாவுக்கு மாத்திரம் ஆனந்தம் தருகிறவனாகத்தான் தோன்றுவான். அதனால்தான் பிள்ளையை 'நந்தனன்'என்பது. தசரத நந்தனன், தேவகி நந்தனன் மாதிரி அஞ்ஜநா நந்தனன். இது பெரிசில்லை. அந்த அம்மாவுக்கு மாத்திரமில்லாமல் லோகஜனனிக்கு, லோகமுள்ளளவும் வரப்போகிற அத்தனை அம்மாகளுக்கும் ஐடியலாக இருக்கும் ஸீதம்மாவுக்கு மகத்தான சோகம் ஏற்பட்டபோது அதைப் போக்கினாரே, அதற்குத்தான் நாம் அவருக்கு நமஸ்காரம் பண்ணிக் கொண்டேயிருக்கணும்.

ஸீதைக்குள் சோகாக்னி ஜ்வாலை விட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய ஜீவனை வற்றப் பண்ணிக் கொண்டிருந்தது. ராவணன் ஹநுமார் வாலில் நெருப்பு வைத்ததாகச் சொல்கிறார்களே, உண்மையில் அந்த நெருப்பாலா அவர் லங்கா தஹனம் செய்தார்?இல்லவே இல்லை. அந்த

நெருப்புக்குள்ளேயே இன்னொரு நெருப்பை அவர் சேர்த்துக்கொண்டு இதனால்தான் ஊரை எரித்தார். ஸீதையின் சோகாக்னிதான் அது.

ய : சோக வந்ஹிம் ஜநாகாத்மஜாயா :
***ஆதாய தேநைவ ததாஹ லங்காம் ****1

"ஜநாகாத்மஜா"என்றால் ஜானகி. "சோக வந்ஹி" என்றால் துயரமாகிற அக்னி. அவள் இருந்தது அசோக வனம்;அவளுக்குள் இருந்தது சோக வந்ஹி! "தேநைவ"- அதனாலேயே, இந்த சோகாக்னியாலேயே; "லங்காம் ததாஹ"- லங்கையை எரித்தார்.

'ஆஞ்ஜநேயருக்கு வாலில் நெருப்பை வைத்தும் கொஞ்சங்கூட அவரை அது சுடவில்லை. ஸீதையின் அநுக்ரஹத்தால் அப்படியிருந்தது'என்று மாத்திரம் நமக்குத் தெரியும். ஆனால் ஊரையெல்லாம் எரிக்கிற பெரிய சக்தி அதற்கு வந்ததே அவளுடைய சோகத்தைத் தான் ராவணன் நெருப்பு என்ற ரூபத்தில் வைத்ததால் தான்!ஆஞ்ஜநேயர் வாலில் நெருப்பு வைக்கணும் என்ற எண்ணம் அவனுக்கு ஏன் வந்தது?அவனுக்கு அந்த எண்ணம் வருகிற ஸமயத்தில் ஸீதை அதற்கு மேலும் சோகாக்னியில் வாடினால் ப்ரபஞ்சமே தாங்காது என்ற கட்டம் வந்தது. அது எப்படியாவது வெளியே வந்து செலவாகும்படிச் செய்ய வேண்டும். அதை யாராவது தாங்கிக் கொண்டு வெளியிலே விட்டுவிட வேண்டும். யாரால் தாங்கமுடியும்? ஆஞ்ஜநேய ஸ்வாமியைத் தவிர யாராலும் முடியாது. இதனால்தான் அவரைத் தண்டிக்கணும் என்று ராவணனுக்குத் தோன்றினபோது ஈச்வர ஸங்கல்பத்தால், 'வாலில் நெருப்பு வைத்தாலென்ன?'என்று தோன்றிற்று. இப்படி ஆஞ்ஜநேயர் ஜநகாத்மஜாவின் சோக வந்ஹியை வாங்கிக் கொண்டே லங்கையை அதனால் தஹனம் செய்தார். அது ஸாதுக்களை, ஸஜ்ஜனங்களைக் கஷ்டப்படுத்தாமல் துஷ்டர்களை மட்டும் தண்டிக்கும்படிச் செய்தார்.

அந்த அக்னி அவளுடைய சோகமாயிருந்ததால் தான் அவளுடைய பதிக்குப் பரம் ப்ரியராக, பக்கபலமாக இருந்தவரைச் சுடாமல் அவருக்கு மாத்திரம் ஜில்லென்று இருந்தது.

ராமருக்கு ஆஞ்ஜநேயர் செய்த மஹா உபகாரம் ஸீதை இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துச் சொன்னது. ஸீதைக்கு அவர் செய்த மஹா உபகாரம் ராமர் எப்படியும் வந்து அவளை மீட்டுக்கொண்டு போவார் என்று அவள் உயிரைவிட இருந்த ஸமயத்தில் சொன்னது. இவ்வாறு இரண்டு பேரும் பலமே போனாற்போல இருந்தபோது பலம் தந்திருக்கிறார்.

ஆனால் இந்த இரண்டையும் அவர் எதைக்கொண்டு, எதன் பலத்தில் பண்ணினார்?

ராமநாம பலத்தினால்தான் பண்ணினார்!

அவர் ஸமுத்ரத்தைத் தாண்டிப் போனதால்தான் ஸீதையைக் கண்டுபிடிக்க முடிந்தது.

எப்படித் தாண்டினார்?

"ராம ராம"என்று சொல்லிக்கொண்டு அந்த நாமத்தின் சக்தியில்தான் தாண்டினார்.

ஸீதை ப்ராணனை விட இருந்த பொழுது அவளை எப்படிக் காப்பாற்றினார்?"அம்மா தாயே, உயிரை விடாதே!"என்று காலில் விழுந்தால்கூட அவளைத் தடுத்திருக்க முடியாதே! 'இதுவும் ராக்ஷஸ மாயை;ராவணன் செய்கிற சூது' என்றுதானே நினைத்திருப்பாள்? மாரீச மான் அநுபவத்துக்கு அப்புறம் அவளுக்கு எல்லாமே ராக்ஷஸ மாயையாய்த்தான் தெரிந்தது. அவளுக்கு அப்படித் தெரிந்தது என்பது ஆஞ்ஜநேயருக்கும் தெரிந்தது. (பரம சுத்த ப்ரம்மசர்யத்தால் ஸ்படிகம் மாதிரியாக ஆன அவருடைய மனஸில் யார் நினைப்பதும் பளிச்சென்று தெரிந்துவிடும்.) ஸீதை ப்ராண ஹானி செய்துகொள்ள இருந்த கட்டத்தில் என்ன செய்தார்? "ராம ராம "என்று நாமாவைத்தான் சொல்ல ஆரம்பித்தார். "ராம" என்றால், அதுவும் ஆஞ்ஜநேய ஸ்வாமியின் வாயால் சொன்னால், எந்த மாயையும் ஓடி விடாதா? அவளுடைய சோக வந்ஹியை நாமாம்ருதத்தைத் தெளித்துக் கொஞ்சம் சமனம் செய்தார். இப்படி அம்ருதத்தைத் தந்தவருக்கு அக்னியே ஜில்லென்றிருக்க அவள் அநுக்ரஹித்தாள்!

ஆஞ்ஜநேயரால்தான் தாங்கள் காப்பாற்றப் பட்டது போல் ராமரும் சீதையும் சொல்லிக் கொண்டார்கள். ஸீதையின் ப்ராணனை ரக்ஷித்துக் கொடுத்தது, ஸீதைக்கும் மேல் தமக்கு ப்ரியமான லக்ஷ்மணன் மூர்ச்சையாய் விழுந்தபோது ஸஞ்ஜீவி கொண்டுவந்து அவனை எழுப்பினது முதலானவற்றுக்காகத் தாம் ஆஞ்ஜநேயருக்குத் தீர்க்கமுடியாத நன்றிக்கடன் பட்டிருப்பதாகவே ராமர் எப்போதும் சொல்வார். "ஆஞ்ஜநேயருக்கு எப்படி என்ன ப்ரத்யுபகாரம் பண்ணுவோம், பண்ணுவோம்?" என்றே ஸீதைக்கும் ஸதா இருந்தது.

இரண்டு பேருமாகச் சேர்ந்து என்ன பண்ணினார்களென்றால்;

அயோத்திலே கோலாஹலமாகப் பட்டாபிஷேகம் ஆனவுடன், ராமர் பல பேருக்குப் பல பரிசு தரும்போது ஒரு முக்தாஹாரத்தை ஸீதைக்குப் போட்டார். அவள் அதைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு, சுற்றியிருந்த அத்தனை பரிவாரங்களையும் பார்த்துவிட்டு ராமரையும் அர்த்த புஷ்டியோடு பார்த்தாள். இரண்டு பேரும் பரிபூர்ண ஐகமத்யம் (ஒரே சித்தம்) கொண்ட தம்பதி. அதனால் அவர்கள் மனஸுக்கு மாத்திரம் தெரிகிற மாதிரி ஆஞ்ஜநேயரை அந்தப் பெரிய ஸதஸிலே கொண்டாடுவதற்கு ஒரு ப்ளான் போட்டுக் கொண்டார்கள்.

ஸீதை ராமரைப் பார்த்த பார்வையாலேயே முக்தாஹாரத்தை அந்தப் பரிவாரத்திலே யாருக்குக் கொடுக்கலாம் என்பதற்கு அவருடைய அபிப்ராயத்தைக் கேட்டுவிட்டாள். உடனே ராமர், "பராக்ரமம், புத்தி, பணி எல்லாம் எவனுக்குப் பூர்ணமாக இருக்கிறதோ, அவனுக்கே கொடு"என்றார். பாராட்டிதழ் ('ஸைடேஷன்') படித்தவுடன் 'அவார்ட்'கொடுக்கிற மாதிரி, பேரைச் சொல்லாமலே ராமர் இப்படிச் சொன்னவுடன் ஸீதை மாலையை ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்துவிட்டாள்!

"ஹநுமானுக்குக் கொடு" என்று ராமர் நேராகச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் 'அவருக்கு மட்டுமென்ன ஸ்பெஷல் அவார்ட்?' என்று மற்றவர்களுக்குத் தோன்றலாம். ஆனால் இன்னார் என்று பெர்ஸனலாகப் போகாமல், ஆப்ஜெக்டிவ்-ஆகப் பல உசந்த யோக்யதாம்சங்களைச் சொல்லி

அவற்றை உடையவனுக்கு அவார்ட் கொடுத்தால் யாரும் கேள்வி கேட்க முடியாது. அதனால்தான் உத்தமமான யோக்யதை எல்லாம் ஹநுமாரொருத்தரிடமே பூர்ணமாக ரொம்பியிருந்ததால் ராமர் இப்படி ஸாமர்த்யமாகச் சொன்னது.

பட்டாபிஷேக கட்டத்திலே இப்படி ஆஞ்ஜநேயருக்கு இரண்டு பேருமாகச் செய்ததற்கு ஈடு எதுவும் இல்லை.

ஒரு பெரிய மலைக்கு மேலே சந்திரிகையில் தாவள்யமாயிருக்கும் ஒரு மேகம் படிந்தால் எப்படியிருக்குமோ அப்படி அந்த முத்து மாலை ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பெரிய சரீரத்திலே புரண்டது.

முதல் முதலாக அவரை ரிச்யமுக பர்வதத்தில் பார்த்தவுடனேயே ராமசந்திரமூர்த்தி, இவரால்தான் இனி ராமாயணம் நடந்தாக வேண்டும் என்று தீர்மானம் பண்ணி விட்டார். அப்போது ஹநுமாரை ஸஹாயமாகப் பெற்றிருந்து ஸுக்ரீவன் பெண்டாட்டியை இழந்து வாலியிடம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். ராமர் இன்னார் என்று வேவு பார்த்து, அவர் நல்லவர், சக்தி உள்ளவர் என்று தெரிந்ததால் அவரைத் துணையாகக் கொண்டு வாலியை ஜயிக்க வேண்டும் என்பதற்குத்தான் ஹநுமாரை அவரிடம் அனுப்பியிருந்தான். இப்படிப்பட்ட நிலையில் ஸந்தித்தபோதிலும் ராமருக்கோ தனக்கே பலமாக இருக்கப் போவது இந்த ஹநுமார்தான் என்று தெரிந்துவிட்டது. அவரே ஈஸ்வரனாகயிருந்து பூர்வத்தில் பண்ணின ஸங்கல்பம்தானே இப்படியிப்படி இந்த ராமாயண நாடகம் நடக்க வேண்டுமென்று?

அதனால் இவர்களை யார் என்ன என்று ஆஞ்ஜேநேயர் விசாரித்த தினுஸிலேயே அவர் இவர் பெருமையை எடை போட்டு, "நவ வ்யாகரண பண்டிதன், சொல்லின செல்வன்" என்றெல்லாம் லக்ஷ்மணனிடம் ஏகமாகப் புகழ்கிறார். "ஏதோ வாக்குவன்மை படைத்தவன் தான் என்று நினைத்துவிடாதே!இவன் ஸர்வ வல்லமையும் படைத்தவன். இந்த லோகம் ஒரு தேர் என்றால் அதற்கு அச்சாக இருக்கிற ஆணி இவன்தான். இப்போது தெரியாவிட்டாலும் உனக்கே இதன் உண்மை நாள் தெரியும் பார்"என்கிறார்.

" ஆணியிவ்வுலகுக் கெல்லாம்..... பின்னர்க் காணுதி மெய்ம்மை "* 2
என்கிறார்.

அது KS சாபத்தால் ஹநுமார் தம் பலத்தை மறந்திருந்த ஸமயம். அதனால்தான் இவரைத் துணையாகக் கொண்டிருந்தும் ஸுக்ரீவன் ராஜ்யம், தாரம் எல்லாம் இழந்திருந்தது. 'சீக்கிரமே ஜாம்பவான் இவர் பலத்தை இவருக்கு நினைவுப்படுத்தி KS சாபம் போகும்படி செய்யப் போகிறார். அப்புறம் ஹநுமார் ஸாகர தரணம், லங்கா தஹனம் முதலான பெரிய காரியங்களைச் செய்யப் போகிறார்' என்பது ராமருக்குத் தெரியுமாதலால் "பின்னர் காணுதி மெய்ம்மை"- 'இவனுடைய மஹா ப்ரபாவத்தால் லோகமாகிய தேரையே நடத்திக்கொண்டு போகக் கூடியவன் என்கிற உண்மையை நீயே பின்னால் பார்ப்பாய்'என்று லக்ஷ்மணனுக்குச் சொல்கிறார்.

ராமாயணமே ஒரு லோகம் - ஸப்த காண்டமுடைய ஸப்த லோகமும்!இந்த ராமாயணத் தேர் ஓடாமல் நின்று போகிற ஸந்தர்பம் - ஸீதை காணாமல் போய், அவள் எங்கே இருக்கிறாள் என்றே ராமருக்குத் தெரியாமல் திரிந்து கொண்டிருக்கிற ஸந்தர்பம். அப்போது ஆஞ்ஜநேயரைப் பார்த்தவுடன் அவரை ராமர் தேருக்கு அச்சாணியாக முடுக்கிக் கொண்டுவிட்டார்!உடனே சர சர வென்று தேர் ஓட ஆரம்பிக்கிறது!பஹு§காலம் ஓய்ந்து கிடந்த ஸுக்ரீவன் வாலியிடம் சண்டைக்குக் கிளம்புவது, ராமர் வாலிவதம் செய்வது, வானரர்கள் சீதையைத் தேடுவது, கண்டு பிடிப்பது, ஸேதுபந்தனம், ராம ராவண யுத்தம், பட்டாபிஷேகம் என்று கிடுகிடுவென்று ஓட ஆரம்பித்துவிடுகிறது! இத்தனையிலும் பெரிய பங்கு ஹநுமாருக்குத்தான்!

அதுவரை, அதாவது ராமாயணத்தில் பேர் பாதி ஆகிறவரை, இவர் யாரென்றே தெரியாது. கிஷ்கிந்தா காண்டத்தில்தான் வருகிறார். உடனே இவர்தான் கதாநாயகருக்கும் மேலே என்பது போல் முக்யமாய் விடுகிறார்!அடுத்ததான ஸுந்தர காண்டம் முழுக்க இவர் பிரதாபமும், இவருடைய லீலையுமே!ராமாயணத்தில் ஸர்வ கார்ய ஸித்தி என்று ஸகலராலும் பாராயணம் செய்யப்படுவது எது என்றால் ராமருடைய பெருமைகள் தெரிகிற

பாக்கி ஆறு காண்டமில்லை;ஆஞ்ஜநேய ப்ராபவமே விஷயமாயுள்ள ஸுந்தர காண்டம்தான்!அப்படி இவரைப் பார்த்தவுடனேயே "ராமாயணத் தேரை இனிமேல் நீயே கொண்டுபோ"என்று ராமர் கொடுத்து விட்டார். தம்முடைய நாமாவை அவர் மூலம் வெளியிட்டே ஸீதை உயிரை விடாமல் காப்பாற்றினார். தம்முடைய நாமாவினாலேயே அவர் பரம ஸுலபமாக ஸமுத்ரத்தைத் தாண்டச் செய்தார். தாமே லங்கைக்குப் போகிற போதோ கஷ்டப்பட்டு அணை கட்டிக்கொண்டு அதன்மேல் நடந்துதான் போனார்!

"தாம் செய்வதெல்லாம் ராமர் போட்ட பிச்சையே!ஸீதாதேவியின் அநுக்ரஹ லேசமே!"என்றுதான் ஆஞ்ஜநேயர் நினைத்தார். 'ஸாகர தரணமும், லங்கா தஹனமும் தன் காரியமென்று லோகம் கொண்டாடுகிறதே!நிஜத்தில் அவருடைய நாமம் - தாரக நாமமல்லவா தரணம் பண்ணுவித்தது? அவளுடைய சோகமே அல்லவா தஹனம் பண்ணிற்று?" என்றே நினைத்தார். தங்கள் கார்யத்துக்கு நம்மையும் ப்ரயோஜனப்படுத்திக் கொண்டார்களே என்று ஸீதாராமர்களிடம் ஒரே நன்றி தீர்க்க முடியாத நன்றிக்கடன் பட்டிருப்பதாகவே நினைத்தார்.

நமக்கானால், நன்றி வாங்கிக் கொள்வதில் போட்டி!'நாம் பல பேருக்கு உபகரித்தோம். யாரும் ஸரியாக நமக்குத் திருப்பவில்லை'என்று அபிப்ராயம்!ஸீதா-ராமர்களுக்கும் ஆஞ்ஜநேயருக்குமோ பரஸ்பரம் மற்றவரால்தான் தங்களுக்கு பலம், அவருக்குத் தாங்கள் ப்ரத்யுபகாரமே பண்ணி முடியாது என்று அபிப்ராயம்.

இது ராமாயணத்திலே நமக்கு ஒரு பெரிய பாடம்.

மஹாபலம் பொருந்தின ஆஞ்ஜநேயர் அந்த பலத்துக்கெல்லாம் மூலம் ராமசந்திரமூர்த்தியே என்று, தமக்கு எத்தனை பலமோ அதைவிட அதிகம் பணிவுடன், விநயத்துடன் இருந்தார். பலமும் பணிவும் ஸாதாரணமாக நேரெதிராக இருப்பவை. இவரிடமோ இரண்டும் மாக்ஸிமமாக இருந்தன. நமக்கு பலமும் இல்லை;பணிவும் இல்லை. அவரைப் போல நல்ல கார்யங்களை ஸாதிப்பதற்கான பலத்தை நமக்குத் தந்து, ஆனால் அந்த பலத்தினால் அஹங்காரப்படாமல் அது ராமனின் பிரஸாதமே என்று

உணர்ந்து அதை ராமார்ப்பணமே செய்யும் புத்தியை நமக்கெல்லாம் அவர் அநுக்ரஹிக்க வேண்டும்.

மங்களம்

1,2,3 :'த்வாதச நாம பஞ்ஜரம்'உத்தர பாகம்.

*1. "உல்லங்க்ய ஸிந்தோ : ஸலிலம்"எனும் ஹநுமார் குறித்த ஸ்லோகம்.

*2. கம்ப ராமாயணம், கிட்கிந்தா காண்டம், 'அநுமப் படல'த்தில் 'மாணி ஆம் படிவம்'எனும் பாடல்.

